வாழ்கவென்றால்செந்தூரந்தனையெடுத்துவளமானவெள்ளியது நாற்றுக்கொன்று, தாழ்கவேதானுருக்கிகொடுத்தாயானால் தப்பாது மாற்றுபனிரெண்டதாகும், மூழ்கவேயுடந்தனக்குயேகாதப்பாமூதுலகில் நவகண்டர்செய்யும்வேலை, வேழ்விமுகர்தானிருந்து வம்பாள் பூசைமேதினியில்செய்துமல்லோவெடுத்திடாயே. ௯௯௧

எடுத்திடவே வேமமதுயென்னசொல்வேன் வெழிலானவைப்பதுவும்பிறவித்தங்கம், கொடுத்திடவேசெம்பதனில்நாற்றுக்கொன்று கொற்றவனேதானுருக்கிகொடுத்தபோது, தடுத்திடாவர்ணத்துசேர

டகமுமாகும்நாக்கானசெம்பதுவுந்தன்கச்செம்பாம், கெடுத்திடாசமு
சாரிக்கானவேதைகேசரத்திலிருந்தவருஞ்செப்பலாமே. ௯௯௨

காயகற்பம்.

செய்யவேபுலிப்பாணிமைந்தாகேளு செயலானமார்க்கமதுயின்
னஞ்சொல்வேன், தூய்யகல்லவங்கிராந்தசெந்தூரத்தை துப்புரவாயு
ண்டவர்க்குபலனே வையகந்தன்னாயுகமிருக்கலாகும்வாகான
செந்தூரமதித்தமார்க்கம், வெப்புகழ்வாசிபைத்தான் மேல்நோக்
காது மேனியதுசிவப்பேரி மின்னுமாமே. ௯௯௩

பின்னுமேதேகமதுசெந்தாழைவீசும் மிக்கானவாசியதுகிழ்நோ
க்காகும், பன்னவேநெடுங்காலமிருக்கலாகும்பாங்கான தூலமது வழி
யாதப்பா, சொன்னதொருகாலாங்கிநாதர்வாக்கு துப்புரவாய்வைய
த்தில்பொய்யாதப்பா, நன்னயமாய் ஞானமென்றபொருள்தான்கா
ட்டும் நாதாந்தசெந்தூரவேதைதானே. ௯௯௪

நூற்பெருமை

காணவேபுலிப்பாணிமைந்தாகேளு காசினியில்திக்கெட்டுங்கண்
டுவந்தேன், தோணவேசினபதிதன்னிற்சென்று தோற்றமுடன்கா
லாங்கிநாதர்பக்கல், வேணபடிசமாதிமுகந்தானிருந்து வெகுகாலமகி
மையெல்லாங்கண்டுவந்தேன், ஆணவங்கள்தானொடுங்கிகுளிகைபூண்
டுவப்பனேநாற்றிசையுஞ்சுற்றினேனே. ௯௯௫

சுற்றினேன்மலைவளங்கள்யாவுங்கண்டேன்சந்தானேசாத்திரங்
கள்சமாதிகண்டேன், எத்திசையும்பதினெண்பேர் நவகோடிதானும்
வெழிலானகற்பத்தெண்முனிவரோடும், புத்தியுள்ளயிதிகாசபுராண
ம்யாவும்புகழானசித்தமுனியாயுர்வேதம்,பத்தியுடனாராய்ந்துவுளவு
கண்டுபோங்கானசாத்திரத்தைப்பாடினேனே. ௯௯௬

பாடினேன்போகரேழாயிரந்தான் பாங்கானகாண்டமதுசத்த
காண்டம், தேடினேன் போகமதுவட்டவேதைதெளிவானஜாலங்கள்
கருவுமார்க்கம்,நீடியதோர்பிறப்பிறப்புருபாவர்ணம்கெடிதானயிந்திர



மாம்ஜாலப்போக்கு, கூடியதோர்மந்திரமாந் தந்திரபோக்கும் குறிப்
பான மாற்றமது வமைத்திட்டேனே. ௯௯௭

அமைத்தேனே முதற்காண்டந்தன்னிலப்பா வப்பனேயோகிக
ளுக்கானமார்க்கம், இமைப்பொழுதும் தவப்பொழுது மழியாவண்
ணம் நீடாழியுலகுமதுமுடிவுமட்டும், நமையான அத்வீதஞானந்தன்
னில்தபோதனர்கள்ரிஷிகள்முதல்கூறுவண்ணம், சுமைபோன்றஞான
மெனும்வடிவந்தன்னை சூட்சமுடன் கொட்டிவைத்தேன் கூர்ம்ம
பாரே. ௯௯௮

பாரேதான்வெய்தனதுகாண்டமேழு பான்மையுடன்கண்டவர்
க்குயெல்லாஞ்சித்தி, நேரேதான் பன்னீராயிரத்துக்கொப்பாய் நேர்
மையுள்ள வகத்தியனார்கூறும்நூலில், வேறேடுஞ் சொல்லியதோர்
ஞானமார்க்கம்வேதாந்தசின்மயத்தைவெளிபதாக்கி, கூறோடுமுதற்
காண்டந்தன்னிலேதான் கூறினேன்சங்கையறக்கூறினேனே. ௯௯௯

கூறினேன்போகரேழாயிரந்தான் குருவான நூலிதுதான்சத்த
காண்டம், மீறியதோரின்னூலுக்கெந்நாளும் மேதினியில்செய்தவ
ர்களாருமில்லை, தேறியதோர்கும்பமுனி பன்னீராயிரந்தான்சிறப்
பானநூலென்றேசெப்பலாகும், ஆறியதோர் போகரேழாயிரந்தான்
வப்பனேமுதற்காண்டம் முற்றதாமே. 1000

போகர்சத்தகாண்டம்-௭௲

௧-வது, காண்டம்,

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

மஹாமகுத்துவம்பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# சத்தகாண்டம்-எஅ.

## இரண்டாவது காண்டம்.

---

### காப்பு.

ஆதிபராபரத்தினிட கிருபைபோற்றி
அன்பானவடிமுடியும நந்திகாப்பு
சோதிபாமுச் சுடரினருளேகாப்பு.
சூட்சமாஞ்சதாசிவத்தின் பொருளேகாப்பு
பாதிமதிசடையணிந்த பரமன்காப்பு
பத்தியுடன்முத்திதரு முதல்வன்காப்பு
ஓதியதோர்வாணிசரஸ் வதியேகாப்பு
ஓங்காரத்துள்வட்டத் தொளிகாப்பாமே. க

காப்பானயேழுலட்சங்கிரந்தந்தன்னில் கருவாகவொளித்து வைத்தசூட்சமார்க்கம், காப்பானவைப் புடனேசினவைப்பு காரமாங் குடோரிமுதல்கண்டாராய்ந்து, காப்பானகளங்குகளும் கன்னப்பேர க்கும் களிம்பானசெந்தூரக் காடெல்லாந்தான், காப்பானசெயநீர்கள் பூநீர்யாவும் கடையானதிராவகமு மெழுகுமாமே உ

ஆமேதான் மெழுகுடனே தயிலமார்க்கம் அழகான வஞ்சனமா மையின்போக்கும், தாமேதானதர்வணத்தின் யெழுத்தின் போக்கும் தாக்கானமூலிகையின் சாபப்போக்கும், வேமேதான் வெகுகோடிகா லகற்பம் விருப்பமுடனுண்டுபின் காட்சியெல்லாம், நாமேதானறிவத ற்குயாவுஞ்சொன்னோம் நாதாக்களடிவணங்கி நவின்றிட்டேனே. ங

நவின்றிட்டேனேழுலட்சஞ் சிறந்தப்போக்கைநயமுடனேநாட் டுளோர்க்கறியவென்று, புவின்றிட்டேனேழாயிரக்காண்டமாக பூட்

டினேன்சத்தகாண்டம் பண்பதாக, தவின்றிட்டேனிக்காண்டமிரண் டாங்காண்டம் தருமானபோக்குகளுமனந்தஞ்சொன்னேன், கவின்றி ட்டபோக்ரிஷி சொன்னநூலில்கருவானநூலிதுதான்முதநூல்தானே

வாதலிங்கவைப்பு

தானான பெருநூலேழாயிரந்தான் தாக்கானசினமுடன்வைப்பு மார்க்கம், போனான குருசொன்ன நீதிமார்க்கம் குறிப்பானதைபரகஞ் செய்பார்கந்தான், வேனான லிங்கமதி வைப்புமார்க்கம் வெளிதாகக்கூ றுகிறேன்மைந்தாகேளு, பானானபடிகாரம்கெந்திதானும் பளிங்கான ரசமுடனே மதியுமாமே. ௫

மதியானபூரீநுகாரந்தானு மாக்கமாமூவருப்புகாரத்தோடே, ததியானவருவகைசெயநீராலே தன்மைபெறவெண்சாமமரைத்துப் போடு, பதியானசெம்பினிடபாத்திரத்தில் பதிவாகத்தாள்கொட்டி சட்டிமூடி, விதிபோலேமுப்பொழுதுயெரித்தாயானால் விளையுமடாலி ங்கமென்ற கம்பியாச்சே. ௬

கம்பியாமேற் பதங்கலிங்கமாச்சு காட்டுமேநீமுறவல் நடுவிலா ச்சு, தும்பிபோல்திறமுடைய பாண்டந்தானுங் கொட்டியென் பாஷா ணந்தானுமாச்சு, தம்பமென்றலிங்கமது வெள்ளிசெம்பில் தாக்காக பத்துக்குவொன்றுபோடு, அம்பொன்னுமாற்றதுவு பொன்பாகும் அப்பனேலிங்கமது குருவுமாச்சே. ௭

லிங்கசெம்பு

குருவானலிங்கமதை செப்புதன்னில் கொடுத்துமே சரியெடை யாய்நூறிப்போடு, கருவானவெள்ளியிலேபத்துக்கொன்றுகருத்தாகத் தானுருக்கி யெடுத்துப்பாரு, உறவானமாற்றதுவு மெட்டதாகுமுந்த மலேயத்திலொன்று தங்கஞ்சேர்த்து, பருவாகத் தகடடித்துப்புடத் தைப்போடு பாங்கானதங்கமது பிறக்கும்பாரே. ௮

பாரப்பா தங்கமென்ன சொல்லப்போமோ பழுப்பான பசுந்தங் கம்யென்னசொல்வேன், கூறப்பாசிவயோக நிலையில்நின்றுகும்பித்து ரேசகத்தைமாறிக்கொண்டு, சேரப்பாகடு நிலையைமையம்பற்றி சிறக் கவேசுழிமுனையை நிறுத்திக்கொண்டு, பாரப்பாதவ நிலையைக்கைவி டாமல் பக்குவமாய்வாசியோகம் பாருபாரே. ௯

பார்க்கையிலே தேகமதுக் கற்பமுன்னு பச்சை யென்றவில்வ மது இதழியாகும், சேர்க்கையுடனிதபொன்றுமிளகுவொன்றுசி ப்பாகக்காலையிலேவுண்ணவேண்டும், நீர்க்கமுடன் சாளொன்றுக்கதி



கமாக நிறமுடனேமிளகதனை யேத்தவேண்டும், ஆர்க்கமுடன்மண்ட லந்தானுண்டுபாரு அப்பனேதேகமது பொன்னும்பாரே. ௰

பொன்னானதேகமது கற்றானாகும் போகுமேநரை திரையும்பூ தலத்தில், மன்னானகண்ணிரண்டு மொளியேவிசமயக்கமில்லை யென் னானுங்கோதிப்புமில்லை, கன்னான மாய்கையதுயற்றுமேதான் கால னுக்கு நாளதுவுமிடங்கொடாமல், எந்நாளுமூலமதில்வாழ்வீரென்று யியம்பினார்போகரிஷி யெழிலாய்த்தானே. ௧௧

சிடிகைலேதை.

தானானநாகமென்ற சிறுகண்ணாகம் தனியானசாரமுட னிதுப் பைநெய்யில், வேனாகவேழுதரமுருககிச்சாய்க்க வெழிலானசட்டை தள்ளிசுத்தியாச்சு, கோனானதாளகமும் வீரனென்று கொடிதான கெவுரியுடன்துருசுவொன்று, பானாகவோர்நிறையா யெடுத்துக்கொ ண்டு பாங்கானநாகத்திற் சரியாய்க்கூட்டே. ௧௨

கூட்டியேதானுருக்கி கிராசமீவாய் குருவானநாகமது கட்டிப் போகும், தாட்டிகமாய்வெள்ளிக்கு நேரானகம் தாக்குவாய்த்தானு ருக்கிஊதிப்போட்டு, மாட்டுவாய்முன்சொன்ன லிங்கசெப்பு மார்க்க முடன்வெள்ளிதனில் பத்துக்கொன்று, வாட்டமாய்த் தானுருக்கி யெடுத்துப்பாரு மகத்தானவர்ன்னமதுமேவும்பாரே. ௧௩

பாரனசெம்புதனில்வர்னமுண்டாய்ப் பாங்கானநாகத்தை வேதி க்கும்பார், கூராகவிரண்டிலொன்று தங்கஞ்சேர்த்து குறிப்பாகத்தக டடித்துப் புடத்தைப்போடு, வீரானமாற்றதுவும் விஷம்போலேறிமி த்கானவெட்டரையுமாகும்பாரு, காருககாலிக்கு முப்புக்கேகா கன மான செம்பிலிடவேகந்தானே. ௧௪

லிங்ககுரு.

வேகமாம்லிங்க மொருபலமொன்றுகு மிக்கான முலைப்பாலரை சுருக்குதாக்கு, பாகமாமெனுமிச்சம்பழச்சார் சாமம்பசுவான மேனி ச்சார் சாமந்தாக்கு, பூகமாங்தேனுமோர் சாமந்தாக்குபுற்பனமா மெ ருமைப்பால்சாமந்தாக்கு, சாகமல்மேதிப்பால் சாமந்தாக்கு சாரவே ராட்டாணைசாமமாமே. ௧௫

மு சாமந்தான் சுருக்கிடவேகட்டியாகும்சங்கமாய்வயமதுவும்பொ டிகாலாகும், தாமந்தான்றுளசுமுங்கால்தானாகும்தனியானகெந்தியது ம்பதால்தானாகும், வேமந்தான்சிங்கியதுகால்தானாகும் வெடியான வுப்ப திப்

துவும்கால்தானுகும், ஆமந்தான் சிற்றண்டக்கருவலாட்டி. அப்பனே லிங்கத்திற் கவசம்போடே. ௧௬

போடவே ரவிதனிலேகாயப்போடு பொங்கமுடன்சீலைபதுவே முஞ்செய்து, நீடவேபூப்புடமாமுமியிற்போடு நெடிதான லிங்கமது கட்டியாடும்,கூடவே வெள்ளிசெம்பில்பத்துக்கொன்றுகுறிப்புடனே யுருக்கிப்பார்மாற்றாகும், தேடவேசீவனத்துக்குறுதிமெத்த சிறப்பாகயூகியபின் னெடுத்துக்கொள்ளே. ௧௭

கொள்ளவேமாற்றதுவு முறுதிமெத்தகூறவே யிடைக்கிடைதான்தங்கஞ்சேர்த்து, விள்ளவே சீவனத்தைசெய்துகொண்டு விரிவான சாத்திரத்தை யறிந்துகொள்வாய், தள்ளவே பொய்சூது கள்ளுக்கு தாழ்மையாயெளியோரைப்போலவாழ்ந்து, மெள்ளவே துன்பசாகரத்தைவிட்டு மெதுவாக துவாதசாந்தத்தில்நில்லே. ௧௮

நில்லவேகருமான மின்னமொன்றுநெடிதானலிங்கமதுபலந்தானுகும், புல்லவேவங்கமது பலந்தானென்று புகலவேதாளகமும்பலந்தானென்று,முல்லவே முலைப்பாலால் நாலுசாமமரைக்கமாய்தானரைத்துக்கவசித்தேதான், வெல்லவே லிங்கமதுக்கங்கிபூட்டி விருப்பாக ரவிதனிலே காயப்போடே. ௧௯

காயவேரவிதனிலே யுலர்ந்தபின்பு கருவாக சாண்குழியில் புடமேபோடு, மாயவேயுமிப்புடமாம் லகுப்புடந்தான் மயங்காமல் தான் போடகட்டிப்போகும், சாயவேகவசமது நீக்கிப்பாரு சட்டமுடனுருகியது கட்டிநிற்கும், பாயவேவெள்ளி செம்பில்பத்துக்கொன்று பாச்சடாமாற்றதுவு மாறதாமே. ௨0

ஆறுனமாற்றதுவுமென்னசொல்வேன் அகாராசிவயோகம்காணலாச்சு, பாரானதங்கமது நேரேசேர்த்து பரிவாகத் தகடடித்துப்புடத்தைப்போடு, கூறானபட்டதங்கஞ்சேர்த்துருக்ககுசலமாம்மாற்றதுவும் பத்ததாகும், பேறானலிங்கமது குருவினாலே பிலத்துதடாவாதவித்தைநிசமதாச்சே. ௨௧

நிசமானவாதவித்தைக்கைக்குள்ளானால்நிச்சயமாம் விட்டகுறைவாய்த்ததென்பார்,குசமானவிதியாளி சாதியாவான்கும்பகத்தை சேர்ந்துகொண்டு கூர்மைசொல்வான்,தசமானமூலத்தை யிருத்திக்கொண்டு தாக்கியேசதாநித்தம் நிஷ்டைசெய்வார், வசமானநிஷ்டையிலே யிருந்துகொண்டு வாதிப்பான்சண்டாளர்க் கிடங்கொடானே. ௨௨

இடங்கொடான் கோடிபேரனுகினாலும் இயலானது வாதத்தி லிருந்துகொண்டு, மடமுடனேசிவாலயங்கள் கட்டுவான்பார் மகத்தா



னசித்தர்கட்கு தொண்டுபண்ணி, திடமுடனேயவர்களிடங்கோடிகாலந்தான் தெரிசித்துவிருப்ப முடனியாவுங்கேட்டு, சடமதற்குகாயசித்தியேத்தவென்று சதாகாலம் நிஷ்டையிலே நிற்பர்தானே ௨௩

லிங்ககுரு.

தானான லிங்கமது பலந்தானென்று சார்வானசினமுடனண்டமொன்று, வேனவெடியுப்பு பலந்தானென்று வெடியானவீரமதை சேர்த்துமேதான், பானான முட்டையின்கருவினாலே பதயாகத்தானரைத்துக்கங்கி பூட்டி, மானனரவிதனிலே காயப்போடு மகத்தான மண்மறைவில் புடத்தைப்போடே. ௨௪

போடவே பத்துமுறை முன்போல்தானே போக்கான் சரக்கெல்லாம்மொன்றாய்க்கூட்டி, தேடவே தானரைத்துக் கவசஞ்செய்து தெளிவாக மண்மறவிற்புடத்தைப்போடு, நாடவேசாண்குழியில் வரட்டிநாலாம் நலமாகப்புடம் போடக்கட்டிப் போகும், வாடவே கவசத்தைநீக்கிநீக்கி வண்மைபெறப்போடுவது வலுமைபாரே. ௨௫

வலுவானலிங்கமது குருவுமாச்சு வரிசைபெற வெள்ளி செம்பில்பத்துக்கொன்று, சுலுவாகக்கொடுத்துருக்கி யூதிப்போடுசூட்சமாமாற்றதுவு மாறதாகும், மலுவாகத்தங்கமதுக்கிடையேசேர்த்து மதிப்புடனே தானுருக்கிப்புடத்தைப்போடு, மெலுவான மாற்றதுவு மதிகங்காண மேன்மைபெறகும்பகத்தில் நின்றுகொள்ளே. ௨௬

கொள்ளவேயேகசாதனத்தைப்பாரு குறிப்புடனே யெப்போதும்லாசிபாரு, மெள்ளவேமுப்பூவையறிந்துபாரு மேன்மையாம்ஞானத்தைமேவிப்பாரு, உள்ளவேமனவாக்குக் காயம்பாரு உற்பன்மாயவஸ்தை முதலுளவுபாரு, தள்ளவேமோகத்தையகற்றிப்போடுசதானந்தம்நிஷ்டையிலே தனித்துநில்லே. ௨௭

நின்றுமேதுஷ்டர்களையகலத்தள்ளி நிட்சயமாய் கருவிகரணாதியெல்லாம், வென்றுமேயாராய்ந்து மேலுக்கேறி வேதாந்தவிளக்கொளியைமேவிப்பாரு, குன்றுமேலிருந்தாலும் குறைவுமுண்டோ கூறவே கும்பகத்திலிருந்துக்கொண்டு, கன்றுதான்தாய்தனையேதேடினாற்போல்கடுகவே சின்மயத்தையறிந்து கொள்ளே. ௨௮

லிங்ககுரு.

பூ அரியவேயிருளதனைப் போக்கடிக்கஅப்பனேசூரியன்வந்துதித்தாற்போல, முறியவேலிங்கமது பலந்தானுகுமுசியாதகூடனதுபலம்தானுகும், தெரியவேயிரண்டுருவ மொன்றாய்ச்சேர்த்து தேய்த்திடகிப்

வேமெழுகது போலாட்டி மைந்தா, கரியவேலிங்கத்திற் கங்கிபூட்டி
கசகாமல்நீபதனில் வாட்டிடாயே. ௨௯

வாட்டவே யிந்தமுறைபத்து மாற்கம்வரிசைபெற நெருப்பதனி
ற்றீயாலாட்டு, சீட்டமுடன்லிங்க மதையெடுத்துப்பாரு நிறையானக
ட்டியதுவுறுதிநிற்கும், தேட்டமாஞ் செயநீரில் சுருக்குதாக்கு தெளி
வாகலிங்கமது வுருக்குபோலாம், முட்டமாம்லிங்கமது கருக்குருவு
மாச்சுமுசியாதுவர்ணமது கண்கொள்ளாதே. ௩௦

லிங்ககுரு அறுவகைசெயநீர்

கண்ணவேதரு கடனேகாரமாகும் கடிதானவெடியுப்பு சினர்
தானும், நண்ணவேயுப்புடனே சாரமாகும் நலமானசாரசத்துதானரா
தாரம் பண்ணவேசெயநீராய் செய்துகொண்டு பாங்கான லிங்கத்திற்
சுருக்குதாக்கு, எண்ணவேசெயனீரின் போக்கையாவும் மென்ன
சொல்வோம்நாதாககள் போக்குநானே. ௩௧

போக்கான போக்கிதுவே பென்னசொல்வேன் பூட்டினோர்மங
ங்களிதிக்குள்ளாச்சு, தாக்கானவண்ட பிண்டமிதனுலர்ச்சு துறை
கோடி தொந்தங்கள்கோடாகோடி, தாக்கானவிதியாளி பறிவானல்
லால் தனியானவிஞ்ஞானறிவாரோதான், வாக்கானவிணருடன் வாய்
பேசாதே வழிவிட்டுவழிபோவான் மடையன்தானே. ௩௨

மடையனும் நூல்பார்த்தே னென்பான்பாருமகத்தானசகியங்
களனேகமுண்டு, இடையனைப்போல்தோள்கொண்டு வாட்டையேத்தி
வாடெங்கேயென்று சொன்னகதையைப்போல, தடையன்றிபலநூல்
கையேந்தியேதான் சதாகாலம்வா சித்துப்பலந்தானென்ன, விடையி
ன்றி நுட்பங்களறியார்மாண்பர் வீணிலேலவாதிகளாய்த்திரிவார்தாமே.

இரிந்துமே கும்பல்கும்பலாகக்கூடி திறமுடனே சாஸ்திரத்தின்
நுட்பங்காணார், பரிந்துமே போகிபடஞ்சொல்லமாட்டார் பக்குவமா
ய்தொழில்முறையைக் கேட்கமாட்டார், எரிந்துமேதெரிந்தவர்போல்
யாவும்பேசி யெழிலான சாஸ்திரத்தை தாறுமாறாய், வரிந்துமே தலை
யேடுகோப்பேடுந்தான் வரிசைமுதல்குறிநோக்கமறியார்தாமே. ௩௪

கந்திலிங்ககாரசாரலோக குரு.

நோக்காரங்கண்போன குருட்னுக்கு நுணுக்கமார்தடிகொடுத்
தகதையைப்போல, சூக்கமாமலிங்கமொருபலமேவாங்கி சுருகிபெற
முலைப்பாலில்சுத்திசெய்து, நீக்கமாமயமதுவும் பலந்தானென்று
மானவெள்ளியது பலந்தானென்று, பாக்கயாந்தாளகமும் பலந்தா
னென்று பஞ்சவர்ணசிங்கியது பலந்தானென்றே.



ஒன்றானவங்கமது பலந்தானென்று ஓகோகோ குருகடனேகாரக்
க்கட்டி, தன்றான அபிரியதுபலந்தானென்று நயமானநாகமது பலந்
தானென்று, குன்றாமல்பொடியதுவாய் மைந்தாமைந்தா குமுறவே
யெலுமிச்சன்பழச்சாற்றாலே, பன்றாகபாகுபோலரைத்துக் கொண்டு
பாங்குபெறலிங்கத்திற்கங்கிபூட்டே. ௩௫

பூட்டியேசுண்ணாம்பு சீலைசெய்து புகழ்ச்சியாய்சட்டிக்குள்மணை
ல்தான்றப்பி, வாட்டமாய்மணல்நடுவில் வைத்துமூடி வாகாகத் தானெ
ரிப்பாய்கமலம்போல, பூட்டமாய் நாற்சாமம்யெரித்துவாங்கியொங்க
முடன்சுண்ணாம்புக் கவசம்நீக்கி, நாட்டமுடன்வச்சிரமாங்குகையில்
வைத்து நலமாகவுருக்கிடவேகளங்கமாமே. ௩௭

களங்கானகாரசாரலோகந் நன்னைக்கருவாகவோட்டில்வைத்து
திப்பாரு, வளமான வெள்ளியிடை நின்றுமேதான் வாகாகமாற்றுவு
மேழதாகும், மனமுடனே நாலுக்குத்தங்கஞ் சேர்த்து மாசற்றபுடம
டாவன்னிமீறும், தளமானயோகதனில் நின்றுக்கொண்டு சதாநித்தம
யேஸ்பரியைபூசிப்பாயே. ௩௮

லிங்ககுருகாயாதிகற்பம்.

பூசிப்பாய்கட்குடத்திலீக்கண் மொய்க்கும் புகழானமும்மலத்தி
ன்தன்மைபோலும், ஆசிப்பாய்புழுவினால் சூழ்ந்ததேகம் மெய்யினைக
டைத்தேறக்காயகற்பம், நேசிப்பாய்லிங்கமது பலமேவாங்கி நெடிதா
னபொடிதலையின் மூலியாலே, மாசிப்பாய்தேங்காயின்பிரமாணந்தான்
மதிப்பாகக்கவசமதுமாட்டிடாயே. ௩௯

மாட்டவேபச்சரிசிதன்னிலேதான் மார்க்கமுடன் பாண்டமதுக்
குள்ளேபோட்டு, வாட்டமாய்லிங்கத்தைப் பொதித்துமூடி வரிசைபெ
றதான்சணமத்துசாதத்தன்னை, நீட்டமாய்மண்டல மிப்படியேசெய்து
திறமாகத்தானருந்தக் காயம்பொன்னும், தேட்டமாம் லிங்கத்தைத்
தேனிலுண்ணு தேகமதுகற்றூணுமாகுந்தானே. ௪௦

தேன்கற்பகாயம்.

தானானபிள்ளையழு சத்தங்கேட்டுத் தாவுடனேபால் கொடுக்குந்
தாயைப்போல, வேனானபோகரிஷி யிறக்கம்வைத்து விருப்பமுடன்
தானுரைக்குங்காயகற்பம், பானானதேனதுவும் படிதானெட்டு ப்பாங்
காகவளந்து மொருபாண்டமிட்டு, கோனானமேல்மூடி சீலைசெய்து
வப்புடனேபூமிக்குள்புதைத்திடாயே. ௪௧

புதைத்துமே நீரட்டிமண்டலந்தான் பொங்க முடன்தானெடு
ப்பாய் சதாமட்டும், சிதைத்துமே மண்டலமுங் கடந்தபின்பு தெளி

வாகத்தேனதுவுங்கட்டிப்போகும், பதத்துடனேதானெடுத்துக்காலை மாலைபதாமல்மண்டலந்தான் மூன்றேயாகும், மிதத்துடனே பலமது வாய்கொண்டுவந்தால் மிக்கானதேகமதுபிறகலாச்சே. சஉ

ஆச்சப்பாதேகமது கல்லாகும் அப்பனே வாசியதுமேலே றுது, மூச்சப்பாவாசியது கீழேநோக்க முறுதுடனேதாதுகளுமவலு த்துப்போகும், பேச்சப்பா யில்லைபாபிராணாயாமம் போனகும்பகத் திலிருந்துக்கொண்டு, மாச்சப்பா மாய்கைதனைவிட்டொழித்து மகத் தானகேசரத்தில் நின்றுவாடே. சங

ஆடையிலேசித்தர்களுமுனிவர்தாமும் அங்ஙனவேயோடிவந்து வதிதங்கேட்பார், மேடையிலே யிருந்துமங்கே வங்கென்றானி மிக்க தொருகேள்விக்கு விடையுஞ்சொல்லி, கூடையிலே பிராயணபந்தன னிற்சென்று குப்புவாய்படுத்திருந்துபிணம்போற்பேசி, பாடையிலே போமட்டும் பராபரியையுன்னிப் பதாம்புயத்தை யடைவதுதான் பான்மையாமே. சச

## காந்த காயாதிகற்பம்.

பன்மையாய்கடல் தனிலேவிழ்ந்தபேருக்கு பருந்தொப்பங்கைத னிலேகிட்டினாற்போல், மேன்மையாய் போகரிஷி மனமுவந்து மேதி னியில்காயாதிகற்பஞ்சொல்வேன், காண்மையாம்சதலூசிகாந்தந்தன் னைகளிப்புடனேபலமெடுத்துக்கல்வமிட்டு, வான்மையாய்தாளமு(ங்)ம் விராகனென்று, வாகானபாஷாணம் விராகனென்றே. சரு

ஒன்றானகெவுரியது விராகனென்று ஒளிவானசிங்கியது விராக னென்று, குன்றானவீரமது விராகனென்று குறிப்பானபூரமதுவிராக னென்று, தன்றானலிங்கமதுவிராகனென்று தாக்கானருடனதுவிராக னென்று, பன்றான துரிசுபதுவிராகனென்றுபாங்கானசூதமது விராக னென்றே. சசு

சூதமுடனாகமது விராகனென்று சூட்சமாந் துத்தமது விராக னென்று, நாதமாங்கெந்தியதுவிராகனென்றுநலமானகாரமது விராக னென்று, கீதமாங்குடோரியது விராகனென்றுகெடியானசீனமது விராகனென்று,வேங்கமாங்கருடக்கல்விராகனென்றுவிரைவான கரு மாவும் விராகனென்றே. ச௭

ஒன்றாகவிவையெல்லாங்கல்வமிட்டுவுத்தமனேமலைத்தேனில் ன்னிலாட்டு, குன்றும்ல்நாற்சாமமாட்டியேதான் குமுறவேவச்சிர ங்குகையில்லைத்து, பன்றுகச்சிலைபது வலுவாய்ச்செய்து பாங்கு



னேரவிதனிலேகாபவைத்து, நன்றாகயுலைமூட்டி மூசைவைத்துலமா கமூசையதுவூதிடாயே. சஅ

வன்றியேவச்சிரமாங்குகையேதன்னைவுடைத்துப்பார் உத்தமனே யென்னசொல்வேன், நீதிபாங்காந்தமது சத்தேயாகிநிலைத்துதடாகா யத்துக்குபிநமாச்சு, வாதியேகெந்தகமும் ரசமுமூட்டி வரிசைபெற பொற்றலையின்சாற்றினாலே, ஆதியாமுப்பூவில் குருவுஞ்சேர்த்து அப் பனேநாற்சாமமரைத்திடாயே சகூ

அரைத்துமேகாசி யென்றதேமருக்கேத்தி அடவாகமூன்றுநாளெ ரித்துமேதான் நிரைத்துமேயாறவிட்டுயெடுத்துப்பாருகெடிதானசெ ந்தூரகுப்பிவைப்பு, பரைத்துமேசெந்தூர மண்டலந்தான் பாங்காக கொண்டிடவே காயம்பொன்னாம், நிரைத்துமேநரைதிரையு மற்றுப் போகும் தெளியுமேதேகமதுகற்றாணாமே. ரு0

கற்றாணாங்காயத்தை நிறுத்திக்கொண்டு கடந்தவெளி முப்பா ழாம்மதிகடந்து, பற்றாணமாயு சாகரத்தைவிட்டுப்பதிவாகமேலேறி கும்பகத்தில்நின்று, வெற்றிபெற சின்மயத்தை மிகவிரும்பிவெளியா னசெகசோதிதன்னைக்கண்டு,பற்றியேபராபரத்தினடியைக்காணபரா பரிமணித்தாலைப்பணிந்துபோற்றே. ருக

போற்றவே தாலிப்பொன்னேளிதத்தைப்பொலிவானவிசுவகரி மியறியான்பாரு, ஏற்றவேவுன்னெளிமை யறிவாரார்தான் யெழிலா னசித்தர்முனியறிவாரப்பா, மாற்றவேசிவனத்துக்கிடமதாகமகாகோ டிரிஷிதேவர்கைமறைப்பு, ஆற்றவேகூடாது யொருவருலும் அப்ப னேநாமுனக்குவுரைவோம்பாரே. ருஉ

## போகர்நாகவேதை.

பாரேதான்நாகமது பலமஞ்சாகும் பதிவானயிலுப்பைசெய்யில் கத்திசெய்து, நேரேதான்கிண்ணமதுகுடம்போல்செய்துநேரானதா சிளமுஞ்சரியாய்க்கொண்டு, சீரேதான்பழச்சாற்றால் மைபோலாட்டி க்கறப்பா கக்கிண்ணிக்குவாங்கிபூட்டி, வாரேதான்கிண்ணத்தில்குகா சன்வளமாகவாய்மட்டும்நிறையவாரே. ருங

சிறைபவேசட்டியிலே மணலதான்கொட்டி கெடிதானகிண்ணம தைமணல்மேல்வைத்து, அறையவேயெலுமிச்சம் பழச்சாற்றன்னே அப்பனேவுருக்கிடவே, மண்டலந்தான், கரையவேதாளகத்தின்வங்க வாசால் கடிதான நாகமதுக்கட்டிப்போகும், முறைபோலசூதமதுவி டையேசேர்த்து முயற்சியாய்குகையிலிட்டுவுருக்கிடாயே. ருச

உருக்கியே கெந்தியது பாதிசேர்த்து வுற்பனமாமேருவென்ற குப்பிக்கேற்றி, நெருக்கியேநாற்சாம மெரித்தபோது நிலையானசெந்தூரமென்னசொல்வேன், பருக்கியே வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று பரங்நாகக்கொடுத்திட்டேவமாற்று பத்தாம், பெருக்கியே சிவயோகந்தன்னிற்சென்று பேரின்பலாபமென்றவிதியைத்தேடே. ருரு

தேடவேசித்தர்களு முனிவர்தாமும்தெளிவுடனேமறைப்பெல்லாம்தெரிவிப்பார்பார், கூடதேயோகத்துக்குறுதி சொல்வார்குறியானவாசி பீடகத்தைச்சொல்வார், நாடவே நாலுயுகமகிமைசொல்வார் நாதாக்கள் மறைப்பினுடமார்க்கஞ்சொல்வார், பாடவேபோகரிஷிமர்மமெல்லாம் பாடிவைத்தேன் சத்தகாண்டந்தன்னிற்றானே. ருசு

கயாதிகற்பம்.

தானேதானுப்பிட்ட பாண்டந்தானும் தப்பாததானுளுக்குந்தன்மைபோல, வேலென்றகாயமது நில்லாதப்பா வெகுசுருக்குமேதினியிலார்தானின்றார், நாமொன்று காயாதிற்கபஞ்சொல்வோம்நலமானகையானின்சார்தனுழி, யோமென்றபொன் மூசட்டைசார்தானுழி போற்றதேயாவரைச் சார்தான்கூட்டே. ருஎ

கூட்டவேதலைச்சுருளிசாற்தானுழி கொடிதானசிறியாளின்சாற்தானுழி, நீட்டலே கொடிவேலிச்சாற்கானுழி செடிதானபுனல்முருங்கைச்சார்தானுழி, பூட்டவேநறு தாளிச்சார்தானுழி புகலவேவெள்ளறுகுச்சார்தானுழி, மாட்டவேபுளி யாரைச்சார்தானுழி மதிப்புடனேசெங்கடுக்காய்ச் சாற்தான்கூட்டே. ருஅ

சாறான தழுதாழைச்சாற்தானுழி தாக்கான குமரிச்சாற்தானுழி, மாரானவழுதலையின்சாற்தானுழி மதிப்பானகாசானின்சாற்தானுழி, வேரான்விஷப்பாகல்சாற்தானுழி வெடிப்பான கொமட்டியின்சாற்தானுழி, கூறானபொடு தலையின்சாற்தானுழி குறிப்பானமாமதலையின்சாற்தான்சேரே. ருகூ

சேர்க்கவேபசும்பாலைச் சாற்தானுழி சிவப்பானசெம்பசலைசாற்தானுழி, தீர்க்கவே தைவேளைச் சார்தானுழிதிரமானவாதண்டைச்சாற்தானுழி, பார்க்கவேமுசல் மூலிச்சாற்தானுழி பாங்கானபழுபாகல்சாற்தானுழி, பூர்க்கவேநெரச்சியில் சாற்தானுழி போக்கான தக்காளிச்சார்தான் பூட்டே. சு0

பூட்டயிலே விதுவெல்லாம் பாண்டத்திட்டுப் பொங்கமுடனிது நேரேயெண்ணை சேர்த்து, மாட்டுவாய் கடைசக்குசொல்லக்கேளு



மகத்தானகிராம்புடனேயேலந்தானும், நீட்டுவாய்சுக்குடனேமிளகு சேருநெடிதானவலம்புரியின் மாசிக்காயும், தேட்டவே மதுரமுடன் கோஷ்டந்தானும் தெளிவானதிப்பிலியும் ரோசனையுமாமே. சுக

ஆமேதான்பாங்கியுடபட்டைதானும் அடவீனமாசிக்காய்தான் றிக்காயும்,வேயேதான்குரோசானியோமந்தானும் விரைவானமுட்டியுடன்கடுகுரோணி, தாமேதான்வாய்விளங்கம் லவங்கப்பட்டை தயவானவால்மிளகு சித்ரமூலம்,நாமேதான் வசம்புடனே சித்தரைத்தை கலமானசாதிக்காய்தானுங்கூட்டே சுஉ

கூட்டியேவகைவகைக்குப்பலந்தான்காலாம்குறிப்புடனேதானிடித்துச்சூரணித்து, பூட்டியேபெண்ணை யுடமூலிசேர்த்துப் புகழாக மூன்றுமொன்றாய் ஒக்கக்கூட்டி, யாட்டியேபசும் பாலுங்கூடச்சேர்த்துமதிப்பாக மெழுகுபதந்தன்னிற்காய்ச்சி தாட்டியால் சீசாவில்தானடைத்துச் சாங்கமாய்நெல்லாவிக்குள்ளேவையே. சுங

வைக்கவேமண்டலந்தான் கொள்ளவேண்டும்வகையாககாசிடைதானருந்தவேண்டும்,மெய்க்கவேபுளிபுகையுந்தள்ளவேண்டும் மேன்மைபெறபத்தியந்தானிருக்கவேண்டும், சொக்கவேபெண்மாய்கைநீக்கவேண்டும் சூட்சாதிசூட்சத்தை யறியவேண்டும், புக்கவேவாசியைத்தானிறுத்தவேண்டும் புகழானதேகமது பொன்னும்பாரே. சுச

பொன்னாகும்நரைதிரையு மற்றுப்போகும் போகாதுசடலமதாகல்தூணாகும், மன்னாகேள் மூப்பதுவும் வகலும்பாரு மைந்தனேவாலையதுயாவாய்நீயும், பன்னவே மூச்சதுவுங்கீழே நோக்கும் பாங்கான முனைமூக்குப்பிடரிதன்னில், என்னவேமூச்சதுவுமேவும்பாரு எழிலானசுழிமுனையு மாருந்தானே. சுரு

மாறுமேசுழி முனையும்விந்துதானே மாறாமல்மேல்மூலத்தொடுங்கும்பாரு, கோறுமே திரிகோணவட்டத்துள்ளே குறிப்பாகச் சிவர்த்துமாவைக்காணலாகும், நீறுமேரவிமேநேர் மதிதாநிற்கும் நெடிதானவாகாசம்பிரமபீடம், பாருமேமுத்திவழிக் காணலாகும் பதிகடந்த ஞானியாம் யோகியாமே. சுசு

யோகியாமுனைமூக்கு மத்திபத்தில் யொளிவீசுமோரி தழத்தாமரையின்மேலே, போகியாம்வினையத்திலூடுதாக்கி புகட்டவேவங்குலந்தானின்றுசென்றால், சாகியாம்ரவிமதியுமொன்றாய்க்கூடும் சாங்கமாய்க்கோட்டைவிட்டுவுடலுய்யாது, வேகியால்காதுபொரிமிகவேக்காடு விலங்கவேயோகத்துக்குறுதியாச்சே. சுஎ

ஆச்சப்பாமுத்திவழிகாணலாச்சி அடவானநினைவுதடுமாறல்கண்டிப்பாய்,பேச்சப்பாமிகப்பேச்சுபேசினக்கால் பிராணயோகநிலைகாண

லாமோ, மூச்சப்பாபிரளாது வடானத்தின்மேல் முடியானவபானத்தில் மலமேகுற்றம், நீச்சப்பாவுதரத்தில்நாடிதானும் நெடிதானமூலவலை நீக்கும்பாரே. ௬௮

பாரேதான்மையைந்தும்போக்கிவிட்டால் பசியேதுஞானத்தின் சுவையேகாட்டும், சீரேதான்கலபமறிந் துண்ணவேண்டும் சிறப்பான வியாதிதன்னைத்தீர்க்கவேண்டும், நேரேதான்ரேசகத்தை நிறுத்தவேண்டும் நெடிதானகும்பத்தைமாற்றவேண்டும், கூரேதான்பூரகத்தைச் சாரவேண்டும் கூசாமல்காலூன்றிசெபத்திடீரே. ௬௯

செபிக்கவேநெற்றியிலே விபூதிபூசி சிறப்பான வஷ்டாங்கயோகஞ்சென்று, லபிக்கவேபலநூலுங் கற்றுக்கொண்டு லோசித்துயோகத்தைப்போற்றிக்கொண்டு, குபிக்கவேபம்பரத்தி னாட்டினாற்போல் குடங்கொண்ட வெண்ணெயது தண்ணீராமோ, தபிக்கவே நாய்போலக்கெட்டலைந்து சதாகாலங்காசினியிலுழல்வார்தாமே. ௭௰

தாமேதான்பசுவுக்குஞானமார்க்கம் தாக்குடனேயோதினாலறிவுமுண்டோ, வேமேதான்கரைகடந்தஞானிதானும் வெளியானசற்குருவின்முன்னேவந்து, போமேதான்சொன்னாலுந்தெரியாதொன்றும் புகட்டினாலென்னபலன்தானுண்டாமோ, நாமேதான்சொன்னபடியேயாயிரத்தில் நலமானநுட்பமெல்லாம்நாட்டினேமே. ௭௧

நாட்டினேன்நுட்பமெல்லாமுலகத்தோர்க்கு நலமாகக்கொட்டிவிட்டேன்பிசகுமல்ல, காட்டினேன் பிள்ளைகளும்பிழைக்கவென்று கருத்தறியாப்போனாலாலென்னசெய்வேன், பூட்டினேன் பிழைக்கவென்றுமைந்தாகேளு பிசகாமல்சொல்லிவிட்டேன் ஞானமார்க்கம், மாட்டினேனவர்களை மறுத்தாலுந்தான் மறுக்காலுந்தழைப்பது போலாகும்பாரே. ௭௨

பாரேதானவரவர்கள் குணம்போலாகும் பாங்கான கற்பகத்தைச்சார்ந்தாலென்ன, சீரேதான்பலநூலுங் கற்றாலென்ன சிவயோகந்தன்னிலேசென்றாலென்ன, நேரேதான்தத்துவங்களறிந்தாலென்ன நெடிதானவாசியைத்தானிறுத்திலென்ன, கூரேதான்அஷ்டசித்துக்கொண்டாலென்ன குணமில்லைபூவுலகிலொன்றுங்காணே. ௭௩

## தாளகவேதை.

காண்வேதாளகத்தின்வேதைகேளு கடிதானதாளகமோர் பலமதாகும், மாணவே சுண்ணும்புக்கவசஞ்செய்து மதிப்புடனே பனங்கள்ளிற்சாமம்நாலு; நீணவேதாளித்துச் சத்திசெய்து நெடிதானதா



கத்தையெடுத்துப்பாரு, வேணவே அருசதுவும் நேரேயொக்கவிரைவாகப்படிசாற்று லரைத்துப்பூசே. ௭௪

பூசியேயரவிதனிலே காயப்போடு பொங்கமுடன் சுண்ணும்புச்சீலைசெய்து, வீசியேகுக்குடமாம்போடயியம் விளைவானவங்கமதுவென்னசொல்வேன், வசியேகாந்தமதியமாச்சு உற்பனமாந்தாளகத்தின்வேதையாச்சு, மாசில்லாவங்கமது நேரேகுதம் மாட்டாவிருந்து முமாட்டித்தீரே. ௭௫

மாட்டவேயறுவகை செயநீர்தன்னால் மதிப்புடனே நாற்சாமமரைத்துமேதான், நீட்டவேமேருவெண்நகுப்பிக்கேற்றிநெடிதாகவெண்சாமம்மெரித்துப்போடு, கூட்டவேயாறவிட்டுயெடுத்துப்பாருநெடிதானசெந்தூரமுருக்கம் பூப்போல், நீட்டவேவெள்ளிசெம்பில்பத்துக்கொன்றுதிறமுடனேகொடுத்துருக்கமாற்றுமே. ௭௬

ஆமேதான்செம்பதனையூதிப்போடு அப்பனேமாற்றதுவுமின்னும்பாரு, தாமேதான் பத்திலொன்று தங்கஞ்சேர்த்து தாக்காகப்புடம்போட மாற்றெட்டாகும், வேமேதான் சிவபதத்தி லிருந்துகொண்டு வெளியான செகசோதிதன்னைக்கண்டு, போமேதான்பராபரியைமனதிலெண்ணி போற்றடாகுருபதத்தைப்பணிந்துநில்லே. ௭௭

நில்லவே சுவாதிஷ்டானர் தன்னிற்சென்றுநிலையானகும்பகத்திலிருந்து கொண்டு, புல்லவேபிராணைப் தன்னிற்சென்றுபோற்றவே நிர்வாணிரூபிதன்னை, மல்லவேசதாகாலம் போற்றிசெய்து மக்கமென்னுஞ்சாகரத்தையகற்றிப்போடு, வெல்லவேவேதாந்தந்தன்னிற்சென்று விரையுடனேசொரூபமிலே சார்ந்துதேறே. ௭௮

## காயகற்பசமாதி.

சார்ந்துமேவுப்பிட்ட பாண்டம்போலதட்டழிந்துபோகுமேதேகந்தானும், கூர்ந்துமேதேகமது கல்லாணுகும் குறியானகாயமதுகற்பஞ்சொல்வேன், தேர்ந்துபார்செங்கடுக்காய் நிதமுமூன்றுதெளிவாணமண்டலந்தானுண்டபோது, ஆர்ந்துமே சுவாசமதுநேழுநோக்கு மகத்தார்க்குண்டதியி னூணுக்கம்பாரே. ௭௯

நணுக்கமாம் சதாசிவத்தின் பெருமைபாரு நனிநாக்குமூக்குமூணிரசுதானும், கணுக்கமாமகுண்டலியைவாசிபற்றிக்கதிரொளியைக்காணுதற்குலக்கோயில்லை, பணுக்கமாம்நேசகபூரகத்தில்தானும்பார்க்கவே மதிலயத்தை நூணிநிற்கும், அணுக்கமாம்காயமதுயிறுமெப்போதும் தன்பசாகரத்தைவிட்டுத் தலைவாய்வில்லே. ௮௰

மெய்ஞ்ஞானோபதேசங்களாவன.

துலைவானதசம்பொன்னைக் கோடாகோடி துறையாகத்தேடியெ ன்னபலந்தானென்ன, நிலையானதேகமதுபோகும்போது நேரானகடு களவுசெம்பொன்றானும், கலையானபொன்னதுவுந் தன்னோடெக்கக டைசியிலே யாதொன்றுங் கண்டதில்லை, மலையானசாத்திரத்தி னோப தேசம் மார்க்கமுடனறிவதற்கு வகைதான்கேளே. அக

கேளேதான் சார்புநூலறியவேண்டுங்கொடியானவஷ்டாங்கம்பா ர்க்கவேண்டும், மீளேதான்தத்துவத்தின் மூலமார்க்கம்மிக்கானசடா தாரக்குநவின்மார்க்கம், பாளேதான்குண்டலியின்வாசிமார்க்கம் பாங் கானவாறுதாரத் தின்மார்க்கம், சூளேதானோங்காரக் குளிகைமார்க்கம் சுடரொளியின்சின்மயத்தின் மார்க்கந்தானே. அஉ

லிங்கப்போக்கு.

தானானலிங்கமதுசுத்திசெய்து தாக்கானவைங்கோலத் தயிலத் தாலே, வேனாசச் சுருக்கிடவேகட்டிப்போகும் வெகுநிலாகவங்கம தைவிதுபோற்செய்து, பானுவிரண்டையுந் தானுருக்கிப்பாரு பாங் கானமணிபோலக்கட்டியாகும், தேனானமணியதனை யுடைத்துக்கொ ண்டு தெளிவாகவெள்ளிசெம்பில்தன்னிற்றூக்கே. அங

தாக்கவேகரி யோட்டி யூதிப்போடு தளுக்கறவேகசடுதானகன் றுபோகும், நோக்கவே மாற்றதுவுமாறதாகும் நொடிதானயேமவித் தைசொல்லப்போமே, தேக்கவேபத்திலோர் தங்கஞ்சேர்த்து தெளி வறவேதகட்டித்துப் புடத்தைப்போடு, நோக்கவேபரியதுவுஞ்சேர் ந்துமல்லோ நொடிதானமாற்றதுவுமெட்டதாமே. அச

எட்டானமாற்றதுவுங்காணமாட்டார்யெழிலானவிஞ்சிதின் னுங் குரங்கைப்போல், வட்டாகமயங்கியல்லோ யேங்கிநிற்பார்வரிசைபெ றகருமானமின்னமொன்று, இட்டமுடன்சொல்லுகிறேன்மைந்தாகே ளு தெளிவானதானகமுப் பலந்தானொன்று, இட்டமாய்சுண்ணாம்பு மபூநீர்தானும் நெடியானவமுரியினாலாட்டித்தீரே. அரு

நீர்க்கவேதாளகத்துக்கங்கிபூட்டிதிறயானமணல்மறைவிற்புடத் தைப்போடு, மார்க்கமாய்ப்புடம்போட்டியமாகும் மகத்தமன யீயமது யென்னசொல்வேன், பார்க்கவே சூதமதுசரிநேரொக்கப்பாங்காகத் தானாட்டிசெயநீர்தன்னால், மூர்க்கமாய்நாற்சாம மரைத்துமேதான் முனையானமகமேருக்குப்பிக்கேற்றே. அசு

ஏற்றவேசாமமதுபனிரெண்டாகும்யெழிலானசெந்தூரமென்ன ட்சொல்வேன், மாற்றவேவெள்ளி செம்பில்பத்துக்கொன்று வரிசை



பெரத்தானுருக்கி ருருவொன்றீய, காற்றமுடன்செம்பதுவும் நீங்கி யேதான், நலமான வெள்ளியதுமாற்றுகாணும், தோற்றவே பத்தி லோர்தங்கஞ்சேர்த்து சருதிபெறத்தகட்டித்துப்புடத்தைப்போடே.

போடவேமாற்றதுவு மிகுதியாகிப் பொங்கமுடன் னெட்டரை யுங்காணும்பாரு, கூடவேசிவயோகந் தன்னிற்சென்று கும்பகத்தில் மீதிருந்துபாய்ச்சலாகி, நீடவேசமாதிந்நம் வாசியோகம் நெடியான பூரணத்தில்சேசித்தேதான், மாடவேயோகத்தைசாதித்தேறுமகத் தானரேசகத்தில்மருவிப்பாரே. அஅ

மருவியதோர்வாலையதுபிர்ம்மபீடம் மகத்தான புவனையதுகரு வித்ரரம், மருவியதோர்திரிபுரைதான்கபாலபீடம் மகத்தானவஷ்டா ங்கந்தன்னிற்சென்று, கருவியதோர்ஞானத்தின்மார்க்கங் கண்டுகரு வானவெட்டவெளிதன்னிற்சென்று, உருவியதோர்பரபிரமந்தன்னிற் புக்கிவுத்தமனேலகிரியிலேபோற்றில்லே. அகூ

போற்றவேமனோன்மணியாள் நிர்த்தஞ்செய்வாள் பொங்குமுட னின்னமொருமார்க்கங்கேளு, ஆற்றவே பாஷாணம்பலமைந்தாகு ம ப்பனேசுக்கான்றன் கல்லைத்தானும், தூற்றவே திருகுகள்ளிப்பாலா லாட்டிதூய்மைபெறக் கவசித்துக்காயவைத்து, மாற்றவே சட்டியி லேமணல்தான்கொட்டி மறவாமல்மணலையுந்தான்மேலேமூடே. கூய

மூடியேசட்டிகொண்டுசீலைசெய்து முப்பதியாய்த் தானெரிப்பா ய்கமலம்போல, ஓடியேநாற்சாமமெரித்துப்போது வுயர்வானபற்பமது மென்னசொல்வேன், நாடியே பற்பமதுதன்னைவாங்கி நலமாகவெள் ளிசெம்பில்பத்துக்கொன்று, தேடியேவுருக்குமுகந்தன்னிலீய தெளி வானமாற்றதுவும்காணும்பாரே. கூக

காணவேகரியோட்டி யூதிப்போடு கருதானவெள்ளியது கனக மாகும், தோணவே நாலுக்கோர்தங்கஞ் சேர்த்துச் சிறப்பாகத்தகட டித்துப்புடத்தைப்போடு, மாணவேதங்கமது யிறக்கும்பாரு மகத்தா னவேதையிதுகளுக்குவேதை, நீணவேசீவனத்தைசெய்து கொண்டு நெடிதானசாத்திரத்தையறிந்துபாரே. கூஉ

பாரேதான்கோடிபொருளிருந்துமென்ன பாருலகில்வெகுநாளா ய்வாழ்ந்துமென்ன, சீரேதான்மனமகிழ்ச்சிகொண்டுமென்ன சிறப்பா னமாளிகையுங்கட்டியென்ன, நேரேதான்வாசியோகஞ்செய்துமென் னநெடிதானமலைகளிலேயிருந்துமென்ன, கூரேதான்ரிஷிசித்த ராயு மென்ன சூவலயத்தில்காயமதுயிருக்கப்பாரே. கூங

### காயகற்பம்.

இருக்கவேயுகார்தவரை யிருக்கவேண்டும் மெழிலானகாயத் தைநிறுத்தவேண்டும், பொருக்கவே மனமாசைவெறுக்கவேண்டும் பூதலத்திற்காயகற்பமருந்தவேண்டும், வருக்கவே வாலுழுவைத்தயி லத்தாலே வாகாககாயத்தை இருத்தலாகும், தருக்கவேவெகுகோடி காலமட்டும் தரணியிலேதானிருந்துவாழலாமே. ௯௪

வாழலாம்பேய்ப்பானவாழ்வை நம்பிவகைதெரியாபசகளெல்லா ங்கூட்டங்கூடி, வாழலாமென்றுசொல்லிவாதந்தேடிவையகத்திற்சுட் டிறந்தோர் கோடாகோடி, வாழலாமென்றுமல்லோபொருளைத்தேடி வையகத்தில்மோசங்கள்மிகவும்பண்ணி, வாழலாம்புக்கோடிகால மட்டும்வாழவேதேகமதைநிலையென்றுரே. ௯௫

நிலையென்றபிஞ்சுதின்றகுரங்கைப்போல விளித்தேதங்கிநின்ற திறல்பயனுண்டாமோ, நிலையானபத்தியமுமில்லாவிட்டால் சோரான மோட்சவழிக்கேகலாமோ, நிலையானகாயத்தைநிறுத்தவேண்டும்நெ டுங்காலம்யோகநிலையதியவேண்டும், நிலையானபதவிதனையடையவெ ன்று நீனிலத்திலெப்போதும்யோகம்பாரே. ௯௬

### இலிங்கவேதை.

பார்க்கவேலிங்கமொருபலமேதனுக்குபாங்கானமுலைப்பாலில்சுத் திசெய்து, ஏர்க்கவேவீரமென்றசெயநீர்தன்னால் லெழிலாககாற்சாம ஞ்சுருக்குகாக்கு, நீர்க்கவேவெள்ளிபோல்கட்டியாகும் தெளிவான லிங்கமதுவுருகியாடும்,வேர்க்கவேவங்கமதை வெட்டைசெய்து விரை வாகலிங்கமுடனகஞ்சேரே. ௯௭

சேரவேநாகத்தைபொன்றுப்கூட்டிசெழிப்புடனேசெந்தூரஞ் செய்யலாகும், கூரவேவெள்ளியதுவாராதாகும் குணமானசெம்பதுவு மூன்றதாகும், நேரவேமூசையிட்டுவுருக்கின்றுய் சோரனகண்விட்டு வாடும்போது, தீரவேசெந்தூரம்வொன்றுபோட திறமுடனேமாற்ற துவுங்காணுந்தானே. ௯௮

தானானகளங்குதன்னையோட்டில்வைத்து தகமைபெறவூதிடவே தெளிவதாகி,வேனுனரவிமதியுமொன்றுய்ச்சேர்ந்து விரைவாணமாற் றதுவுமிகுதியாகும், கோனுன்குருவருளால்வாதசித்திக் குணமாகி சின்மயமும்வெளியாய்த்தோன்றும், பானுசிவயோகந்தன்னிற்செ ன்றுபாருலகில்வாழுவதுபான்மையோர்க்கே. ௯௯

பான்மையாம்லாகிரியைநீக்கவேண்டும்பூசங்கானமோகமதைதவி ர்க்கவேண்டும், மேன்மையாஞ்சின்மயத்தைப்பூசித்தேதான் மேலான



கருவிகாணுதியெல்லாம், வான்மையாமடிமுடியுங்கண்டுமேதான்வா குடனேபராபரியைநிர்த்தஞ்செய்து, துன்மைபெற வஷ்டாங்க யோ கஞ்சென்று தறைகோடிமுடிவுமட்டுந் துலவாய்நில்லே. ௪௦௦

### சூட்சமுப்பூமார்க்கம்.

தில்லவேசித்திராப்பர்வந்தன்னில் நெடிதானபூரணையில்சாமநே ரம், கல்லானகளர்மண்ணு மூவர்மண்பூமி கடிதான மலைச்சாரல்தன் னிற்சென்று, புல்லானமணற்றாரு யாவுமாய்க்கு போக்கானசவுட்டு மண்தன்னைப்போக்கி, வல்லானகிட்டணைகள்யாவும்செய்து வளமாக மூங்கல்தனையாப்புமாச்சே. ௪௦௧

ஆச்சப்பா மூன்காராப்பேயாச்சு அப்பனே நடுச்சாமம் கதி போலுப்பாம், பேச்சப்பாவொன் நில்லைபூநீர்பூச்சும் போன கற்ப மது பூநீராகும், மூச்சப்பாமுன்சொன்ன பூநீராமே முன்னிரைத்த செந்நீருமளவாய்க்கொண்டு, கார்சப்பாகலசமது நீபம்போல கண் கொள்ளாயுப் புதுவுமபூநீராமே, ௪௦௨

ஆமேதான்பூநீரின் மார்க்கங்கேளு அப்பனேசினமது பலந்தா னென்று, காமேதான்வெடியுப்பு பலமொன்று தாக்கான இந்து ப்புபலமொன்று, சேமேதான்வீரமது பலமொன்று மிக்கானது டனதுபலமொன்று, காமேதான்சொன்னபடியெல்லாங்கூட்டி நல மாகத்தானரைப்பாயுமிநீர்த்தானே. ௪௦௩

### லிங்ககுரு.

தானானசரக்கதனைதசப்பங்காக்கிச் சார்பானலிங்கமதுக் கந்தி பூட்டி, வேனுக ரவிதனிலேகாயவைத்து விருப்பமுடனோட்டில் வை த்துசீலைசெய்து, கோனுனகுக்குடத்தி லிறங்கிக்கட்டும் குருவான வெ ள்ளிசெம்பில்பத்துக்கொன்று, மானுக கொடுத்திடவே வுருக்கிப்பா யும் மாசற்றகளங்கதுவுமாகும்பாரே. ௪௦௪

பாரேதானோட்டில்வைத்தூதிப்போடு பழிப்பான மாற்றதுவு மெட்டதாகும், சீரோதானுனுக்கோர் தங்கஞ்சேர்த்துசிறப்பாகப் புட ம்போடமாற்றுகாணுய், கூரேதான் வணிகரிடஞ்சென்றுமாறிநூறிப் பானசிவயோகந்தன்னிற்சென்று, நேரேதான்நிர்த்தமுடன்மாயிபூசை நேர்ப்பாகசெய்து சிவசொத்தையுண்ணே. ௪௦௫

உண்ணையிலே வஷ்டாங்கந்தன்னிற்சென்றுடைத்தமனே அரமனை த்துங்கைவிடாமல், எண்ணையிலே யெளியார்போல் மனதிலெண்ணி

ஏற்றமாங்கெர்வாதையகற்றித்தள்ளி, நண்ணபிலேசிவவேடம்பூண்டு கொண்டு காதாக்களடிவணங்கி நானிலத்தில், திண்ணேபிலேவொதுங் கிருந்துயோகம்பார்த்து தேவியாமனேன்மணியைப்போற்றிடாயே.

போற்றவேமேருகிரிதன்னிற்சென்றுபுகழானசித்தர்வர்க்கம்பா வுங்கண்டு, ஆற்றவேயுந்தனது வுள்ளந்தன்னில் வடக்கியதோர் கரு விகாணுதியெல்லாம்; சிற்றமுடனலர்பாதம் பணிந்துபோற்றிச் செ ழிப்புடனேதாமுரைத்த வதிசங்கேட்பீர், கூற்றனுமேசாகைற்றியுந் தன்மீது குருவினதுகடாட்சம்வைத்து ரட்சிப்பாரே. ௧௦௭

நாகவேதை.

இரட்சிக்கவின்னமொரு கருமானங்கேள் இபலானநாகமதுபல ந்தாஞென்று, இரட்சிக்கசெந்தகமும் பலந்தானென்று செழிலான மஞ்சனிடகருவாலாட்டி, இரட்சிக்கசெந்தகத்தைதயிலமாக்கி செழி லானதயிலமதைநாகந்தூவ்வி, இரட்சிக்கநாகமது கட்டிப்போகும் இப்லானநாகத்தின் வேதையாமே. ௧௦௮

வேதையாமதிரனிலே சரியாய்க்கூட்டி வேடிக்கைசிமிட்டுவித் தைவாதலேகளு, ரதையாம்கரியோட்டி ஊதிப்போடு பாக்கானவெ ள்ளியதுமாற்றுகாணும், நீதியாம்வெள்ளியதுவெட்டதாகும்திலபா ணசெய்பதுவு மொன்று கூட்டி, மாதையாந்தாஜுருக்கி யெடுத்துப் பாரு மகத்தானமாற்றதுவு மேழதாமே ௧௦௯

ஏழானவெள்ளிக்குயிரண்டுதங்க மேற்றமாக்கடித்துப்புட த்தைப்போடு, சாழானதங்கமது நேரேசேர்ந்து சரியானதன்னிறம் போலாகும்பாரு, மாழானபிரமவித்தை வாதவித்தை வாய்க்குமோ எல்லோர்க்கும்வாய்க்கு மோசொல், பாழான துக்கசாகாதலைவிட் டுப் பதருமல் பதாம்புயத்தை பணிந்துநில்லே. ௧௧௦

பணியவே கன்றுக்குப்பால்கொடுத்த பழங்கதையாய்போல்யா ரும்பரிந்துபார்த்து, துணியவேபோகரிஷிசொன்னநூலில்துறைகோ டியுகோடி தொந்தங்கோடி, அணியவே வொவ்வொன்றுமாராய்ந் தேதான் அப்பனேசெய்திடி லோயெல்லாஞ்சித்தி, கனியவே கால ங்கிபாதம்போற்றி கருதினர் போகரிஷிகருதினரே. ௧௧௧

உப்புக்கட்டுசெந்தூரம்.

கதவுவேவுப்பதுதானவேயொன்றாகும்தனமானபுலியாரைச்சா ரைவாங்கி, திருத்தமாய்த்தானரைத்துப்பில்லைதட்டி திறமாகரவிதனி லேகாயப்போடு, பருதமாம்குக்கிடத்தில்புடத்தைப்போபோங்கான



செந்தூரமாகும்பாரு, வெருதமாமிப்படியே பத்துமுறைபோடு வெ ளியானசூதத்தைக் கூடச்சேரே. ௧௧௨

சேர்த்துமே பேனிச்சார்தன்னுலாட்டி சிறப்பாகபத்து முறை யிப்படியேபோடு, கார்த்துமேயாறவிட்டுயெடுத்துப்பாரு கனமான செந்தூரஞ்சொல்லப்போமோ, தீர்த்துமே செந்தூரந்தானெடுத்து திகழானவெள்ளிசெம்பில் பத்துகொன்று, பார்த்துமேதாஜுருக்கிக் கொடுத்துப்பாரு பாங்கானமாற்றதுவுங் காணும்பாரே. ௧௧௩

மாற்றுன வெள்ளிக்கு நேரேதங்கம்மதிப்புடனேதான்சேர்த்து வுருக்கிப்பாரு, தூற்றுன திரைநீக்கி சிவந்ததங்கம்துரை கோடிசென் றூலும்பழுதாகாது, காற்றான கானகந்தன்னிற்சென்று கருமூலிவிஷ மூலியாவும்பார்த்து, சோற்றுன அருந்தியென்னுங் காயந்தன்னை சுக ம்பெறவேசாதித்துக் கற்பங்கொள்ளே. ௧௧௪

கொள்ளவேநாயாதி கற்பங்கொண்டால் கோடிவரை யுகம்கோ டியிருக்கலாகும், தள்ளவே மாய்கைதனை யறுக்கவேண்டும் சமுசார தொல்லைதனைவெறுக்கவேண்டும், மெள்ளவே சிவயோகங் காணவே ண்டும் மேலான பதாம்புயத்தை நண்ணவேண்டும், உள்ளவே வாசி யைத்தா னிருத்தவேண்டு முத்தமனே போகரிஷி யுரைத்ததாமே.

உலகவாதி.

ஆமென்ற வுலகத்தோர்வாதந்தேடி ஆராய்ந்துசரக்குகளைப் பா ர்த்துப்பார்த்து, போமென்றுபிதனுலே சீவனங்கள்பண்ணிப் புல்லர் கள்தானெட்டுபேர் பத்துபேர்கூடி, காமென்றயோசனைதான்மிகவும் பண்ணிக்கலங்குகின்ற சாத்திரத்தில் மறைத்துப்போட்டார், நாமெ ன்றசெயநீரில் பார்ப்பதென்று நலமாகச்சாறுவிட்டு அரைப்பார் பாரே. ௧௧௫

அரைத்துமேபுடம் போட்டுப்பணியில்வைத்து ஆகாகாசெயநீர் தானுச்சுதென்பார், நிரைத்துமே புடம்போட்டுச் சாக்கைகட்டி நே ராகவாச்சதென்றுலோகத்தீய்ந்து, கரைத்துமேசெம்பையிட்டுக்காரீ யக்குத்திகசடகற்றியூதியே யுரைத்துப்பார்த்து, மறைத்துமே நால் மாற்று ஆச்சதென்று மயங்குவாருலகத்துச் சண்டிதானே. ௧௧௬

சண்டிகள்தான்மெத்தவுண்டுவுஉத்தமாண்பர் தருகுரும்பனதி லொருவன் டொன்னைச்சேர்த்து, மண்டியேகடைதனிலேவுரைத்துக் காட்டிமனதுநொந்து புண்ணுகிப்போட்டபொன்போய், தண்டியே ஒருகாசு ரண்டுகாசு சார்பாகப்பின்னென்றுபார்ப்போமென்று,மண் டியோன்போட்டே னீபோடென்று மயிர்பிடித்துச் சண்டையிட்டு வழக்கம்பாரே. ௧௧௭

வழக்கிட்டுச் சண்டைகொண்டுபின் ஞெருவன்வந்து வாதிபொருபரதேசியந்தானப்பா, வழக்கிட்டு தொழில்செய்து கடையில்விற்றுன் நான்பார்த்தேன்வெகு சளுவுமீயும்பாரு, அழுக்கிட்டு ஒன்றோடே ஒன்றைச்சேர்த்து அமர்த்தியவர்புடமபோடப்புகைத்துபோயி, பழுக்கிட்டிப்படியேசாருமட்டும் புலம்பியிறந்துண்டவர்கள் கோடியாமே. ககசு

இறந்திட்டார்சித்தர் சர்வாதிஞானி யியல்பான சாத்திரத்தை ஆராய்ந்துபார்த்து, மறந்திட்டார் கருவையெல்லா மனதிலெண்ணி மகத்தானபெரியோர்க்குத் தொண்டுபண்ணித், திறந்திட்டார் குருசொன்னமொழியைத்தானுஞ் சிவயோகமார்க்கத்தின் வழியிற்சென்று, அறந்திட்டார்ஆத்தாளைக்கேட்டுக்கேட்டு அவள்சொன்னபடி செய்வார் பெரியோர்தானே. கஉ0

பெரியோர்களென்றுசொன்ன மொழியேதக்குப்பேரின்பச்சாத்திரத்தி லுரைத்ததாலே, பெரியோர்களாவதுவு மேதாலென்றால் பொய்மறந்து மெய்யுரைத்த பிரதாபத்தாலே, பெரியோர்களானதென்ன யோகநிஷ்டை போனகற்பமுண்டு காயசித்திசெய்தார், பெரியோர்கள் குருபதத்தைமறவாமலென்றும் பேசாமலூமையைப போலிறுப்பர்பாரே. கஉக

பாரப்பாபிர்மூட வாதிகட்குப் பலியாது யெமமெ:ர்ற வித்தைதானும், கோப்பா பொய்சொல்லும்புலையருக்கு நிச்சயமாய்க் காணுகிற யோகமெய்மெய்யாம், சோப்பாகாமமென்ற காமிகட்குந்தானும் செயலானகாயசித்திசோபம்பொய்யாங், தாரப்பாகுருசொன்னமொழிமாளையிந்த துட்டருக்குச்சகல நூல்களெல்லாம் பொய்யே. கஉஉ

பொய்யென்ற வார்த்தையதுசொன்னுனில்போக்கோடேபெழுசென்மபுலையனுவான், பொய்யென்றுகாயசித்தியென்றுசொன்னுல் பிறந்திடுவான்கழுதையென்றசென்மமாகப், பொய்யென்றுயோகத்தைச்சொன்னானேல் புழுவானபாழ்நரகில் வீழ்வான்பாவி, பொய்யென்றபூசையைத்தான் தூசித்தோர்க்கும் போகமூவேழுவங்கிஷம் பாழாமே. கஉங

பாழாகும் வஸ்துசுத்திபானைத்தன்னைப்பதையாமற்சொன்னோர்க்குஅல்லலுண்டாம், கூழாகுங்கஞ்சிக்கி யங்கிஏங்கிக் கொடிதானபெருவயிறனலையெய்தி, மீளாகுங் குணமுவலிசித்துகொண்டு மிகையெய்திநகையெய்தி விடுமோ தாறும், நாளாக பிரப்புண்டு கொடுப்பார் கைபார்த்து நமனுக்குப்பகையாகி நரகெய்துவாரே. கஉச



சகஸ்திரசத்து.

எய்தமே சகஸ்திரமாஞ் சத்துசேரு இதமான அக்கினியிலபால் தானல்லோ, கொய்தமே பெருக்கம்பால் சேரையொன்று கோழிமுட்டை வெண்கருவுஞ்சமனுப்கூட்டி, பைதமேவெண்காரம் பலந்தானைந்து பசருகின்றகெந்தகந்தான் பளமுப்பது, தைதமே துரிசியது பலமுமூன்று நாட்டிடுவாய்தாளசமும் பலமும்ரண்டே. கஉரு

ரண்டெல்லாம்பொடிபண்ணிப் பாலிற்போடு நேர்ப்பானயந்திரெய்சேரவிட்டு, பண்டெல்லாமயச் சட்டிக்குள்ளே வார்த்துப் பருவமாயடுப்பேற்றி யெரித்துவாங்கிக், கொண்டெல்லாங் குழம்பானபதத்திற்கிண்டிக் கொட்டியேகலபத்திற் கட்டிவைத்துத், துண்டெல்லாஞ்சகஸ்திரமாம் வேதையிலே போட்டுத் தாவளவரை யெண்சாமம் விலைகட்டே. கஉசா

விலைகட்டிச் சரவுலையிற்போட்டிழு மேலானசத்தெல்லாங் கமூன்றவிழும், கல்லைகட்டிசத்தெல்லாம்பொருக்கிக்கொண்டு கறடெடுத்துத்தயிலத்தி லரைத்துஊது, இல்லைகட்டி ஐந்துதாமூதலூது சிறப்பாகச்சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து மூல்லைக்கட்டிக் காரமிட்டு வுருக்கிஞக்கால் முத்துபோல்வெள்ளுப்பாகுஞ் சந்தாகும்பாரே.

சத்தெடுத்துப் பலமொன்று நிறுத்துக்கொண்டுதங்கமது நாலுக்கு ஒன்றாயிட்டு, பத்தெடுத்துநாகமது அரைப்பலந்தான் போட்டுபரிவாகவுருக்கியொன்றாய்ச் சூதம்போட்டுக் கொத்தெடுத்துக் கெந்தகத்தைரண்டுபலம்போட்டுக, குழிப்பாகக்கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி, மத்தெடுத்துஅந்திமல்லிச் சாற்றாலாட்டிவகையாகப்பொடி பண்ணிக் குப்பிக்கேற்றே. கஉஅ

குப்பிக்கே யேற்றிடுவாய் வாலுகையில்வைத்துக் கூசாமற்பனிரண்டுசாமந்தீப்போடு, குப்பிக்கேசூரியன்போற்சிவந்துகாணுந் துடியாகப்பணவிடைதான் தேனிலுண்ணு, சிப்பிக்கேவுடலைப்போல்கனசட்டைதள்ளுந்தேசியைப்போல் நடப்பதற்கு லெருவுண்டாகும், அப்பிக்கே ஆயிரத்துக்கொன்றேயீய மருமமென்றமறுகு மறிந்துகொள்ளே. கஉகூ

அண்டசத்து.

கொள்ளென்ற அண்டோடுசெத்து பண்ணவிக்குள் பிரணிதநால் போக்கிப்படித் தானென்று, அள்ளென்ற ரோமமதுயல்ந்தாளப்பத்து அப்பனே அண்டத்தின்மேலேசுத்தி, தள்ளென்றசெபுடத்தி னீற்றி

க்கொண்டு நபவாகப்பற்பத்தைக் கவஞ்செய்ய,முள்ளென்றமுசலெ லும்புத் தூள்தான்பத்து முயற்சியா யெருக்கம்பால் விட்டூட்டே.

ஆட்டியே யைந்நாளில்லைபண்ணி அழகான பூப்புடத்தில் தயிலம்வாங்கிப், பூட்டியேகலயத்திற் கட்டிவைத்துப்பொறித் தெடு த்த முட்டைத்தோல் பலமும்பத்து, நீட்டியேகல்வத்திற் பொடியா ப்பண்ணி மினைவாகவெண்காரம்பலமுமைந்து, தீட்டியேவீரமது பல மும்ரண்டு சிறப்பாகக்கூடவிட்டுத் தயிலத்தாலாட்டே. கஙக

ஆட்டியே மூன்றுநாள்வில்லைகட்டி அசங்காமல்சாவுலையி லைந்து தாமுது, பூட்டியேசத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு பொரிக்கார மிட்டுருக்கி யொன்றாய்ச்சேர்த்து, வாட்டியே ஒன்றுக்கு நாலுதங்க மருவிநின்ற வுருகையிலே கூடவிட்டுத், நீட்டியே நாகமிட்டுச் சூத மிட்டுச் சிறப்பாகக்கெந்தியிட்டுக் களங்கமாமே. கஙஉ

ஆமிர்தக்களங்கெடுத்து நவலோகத்தி லந்நூற்றுக் கொன்றிட வேயைம்பத்தைந்து, வாமிர்தப்பொன்னதும் பச்சைபோல்காணும் வாப்பாகக்குப்பியிலே செந்தூரித்துண்ணு, சேமிர்தச்சடந்தானும் பச்சைநிறமாகுந் தேகமென்றால் பொற்சிலைபோ லழுந்திக்கானும், காமிர்தக்கற்பாந்தகோடிகாலங் காலனுமே யணுகாமல சித்தியாமே.

நாகபற்பம்.

சித்தியாம்வெகு சனுக்கு நாகபற்பம் திறமாகக்கேளுங்கள் மா ணுக்கரே, பத்தியாம்நாகமது பலந்தான்பத்து பகுகின்ற இலுப் பைநெய்யில்சாரம்போட்டு, முத்தியாமூவா றுதரந்தானசாய்த்துமுறி யாமல் தகடுதட்டிப்புளியிலே போல்நறுக்கிக், கத்தியாங்குடுகொரு பலந்தானைந்து காரமாமிளகாயும் பலமுமஞ்சே. கஉச

அஞ்சான அயினைந்து பலமுந்தாக்கி அழகானஎலிமிச்சம்பழச் சாறுவிட்டு, தஞ்சானமூன்றுநாள் நேயமுடனரைத்துதடியாகவழி த்தெல்லாம் குழம்பாய்வைத்து,பிஞ்சானதகட்டுக்குப்பூசபூச போர கவாகையுடபட்டைவாங்கி, தஞ்சானதிடித்துவனருயத்தகடுவைத் துசார்பாகமேல்மூடி புடத்தைப்போடே. கஙு

மூடியேசீலைசெய்து அவிர்புடமாப்போடுமுயற்சியாப்பத்து விசைபோட்டெடுத்து, ஆடியே விளக்கெண்ணெய்விட்டுருக்கி அப்ப னைகாதத்தைக் கிண்ணிபண்ணிக்கொண்டு, நாடியேகிண்ணியிரை ரு தமப்பா நலமானதாளகமுஞ்சரியாய்க்கூட்டி, தேடியேதேடிசார்விட் டரைத்து சிறப்பாகக்கிண்ணிதனி லுள்ளேபூசே. கஙகூ



பூசியேவாலுகையில் சட்டிவைத்துப் பொருந்தவேமணல்விட்டு அடியிற்றனும், தேசியேயதின் மேலேயுப்புவிட்டு கினைவாகக்கிண்ணி தனைப்பதித்துவைத்து, தேசியேயெலுமிச்சம் பழச்சாறுதானுஞ் சிற ப்பாகவரியிட்டுச் சுறுக்குப்போடு, மாசியே பதினைந்துநாள் தானிவை மறவாமல்போட்டிடு வாயிரவுபகல்தானே. கஙஎ

தானகுமெலுமிச்சம் பழச்சாறுதானுஞ் சாதகமாய்வற்றவற்றச் சுறுக்குப்போடு, பானதும்பதினைந்துநாள்தான்சென்றால் பக்குவமா யெடுத்துவைப்பாய் பீங்கானுக்குள், கானதுமல்லிகைப் பூப்போல கிற்கும் கசடற்றசெம்பிலே நூற்றுக்கொன்று, கோனகுமெழுகிலெ ட்டிகொடுத்தாபானல் குறையாதுபனிரண்டு மாற்றுமாமே. கஙஅ

வெள்வங்கபற்பம்.

ஆமப்பாதரிசியது பலமுமொன்று அழகானதாளகமும் பலமு மொன்று, வேமப்பாகள்ளிப்பால்வார்த்தரைத்து விளங்கவேமூன்று நாளாகுமட்டும், தாமப்பா குன்றிபோலுண்டைபண்ணி தாக்கான வெள்ளியம்பலந்தானுலு, போமபபாகுகையில்நின்றுவுருகும்போது போக்கானவுண்டையெல்லாங் கிராசம்போடே கஙகூ

போட்டுடனே யுண்டை யெல்லாமானபின்பு பொடிபண்ணிச் சாரத்தூள்மேலேபோட்டு, ஆட்டுடனே சற்றுமுஞ்சாற்றில்சாய்த்து அடவாகயேழுதரமுருக்கிச்சாய்ப்பாய், பூட்டு டனேவங்கத்தில் சம னாய்வெள்ளி பொலிவாக வுருக்கியல்லோ கிண்ணிவார்த்து, மாட் டுடனே கிண்ணியிடை சூதம்விர மருவியதோர் வெள்ளை யென்ற பாஷாணங்களே. கசo

காணிந்தமருந்தெல்லாங் கல்வத்திட்டு கடிதானயெருக்கம்பால் வார்த்தாட்டிப், பூணிந்தமருந்தைக் கிண்ணிக்குள்பூசிப் போான வாலுகையின் மேலேவைத்து, ஆணிந்தவடுப்பேற்றிப்பட்சமொன்று ஆறுமலெரியிட்டு அப்பால்வாங்கித், தோணிந்தப்பீங்கானிலெடுத்து வைத்து சூட்சமாங்குருவாகும் நூற்றுக்கொன்றீயே. கசக

ஈவதுதான் வங்கத்திற்செம்புதனி லெடுத்துப்பாரியபத்துஐய் ந்துமாற்று, ஆவதுதான்சூதமது வெள்ளியாகு மதிகமாம் பித்தளை யும் வெள்ளியாகும், போவதுதானேமவித்தையிதுதானப்பா பூட்டி னேன் தொந்தங்க ளனேகங்கோடி, தேவதுதான்வெள்ளி வித்தை சுருக்குமெத்த சிவசிவாசித்தர்சொன்னார் கரைகாணேனே. கசஉ

கரைகாணுச்சாத்திரங்கள் மெத்தவுண்டு காரணமாங்காலாங்கி நாயனார்தாமும், கிரைகாணரேழுலட்சம்விரித்துச்சொன்னார் கேய்ம்

பாகவிரிவையெல்லாம் பிரித்துப்பார்த்து, உரைகாணச் சூத்திரமாய்ச்சுருக்கு அப்பாயுற்பனமாக் தொழில்வகையெல்லாஞ்சொன்னேன், பரைகாணுயென்னாலைப் பொய்யென்றெண்ணில் பாழாகும் நரகத்திலெப்துவாரே. கசந

எய்துவார்ரவிகோடி நரகத்தில்தானு மேனமென்ற பிறப்பாகச் சபிப்பாளாத்தாள், அய்துவார்வாதம்பொய் யென்றுசொன்னா லாகாக வங்கிஷங்கள்குடும்ப மெல்லாம், நய்துவார்நரகெப்தி வறுமையாகும் நாகாக்கள் பெரியோர்க ளிட்டசாபங், நொய்துவாராணலுந்தீர்க்கக்கூடா கொடுஞ்சத்திரிஷிபிட்டசாபம்வாறே. கசச

## தரிசிகட்டு.

வாறனவுப்பிறுட செயநீர்தன்னால் வாதாக தருசுதனை யட்டிமைந்து, சேறனகுளம்பு பதந்தன்னிலாட்டிச் சிறப்பாக வுண்டைக்குச்சாரந்தன்னை, கூறுகக்நவசமது செய்தமைந்தா குணமாகாவிதனிலேதாபமைத்து, காறுனகுக்குடமாம் வைத்தூதீறு காவலாகச்சூதமதைக் கொல்லும்பாறே. கசரு

சொல்லுமே சூதமதுமாண்டுதானல் செட்டான கோடிவித்தையாடலாகும், வெல்லுமேசூதக்திற்கெந்திரெட்டி னைவாரத்தாய்சேர்த்துசெயநீர்கன்னால், புல்லுமேநாற்சாமமலாத்தபோதுபுகழானமகவானையடக்கும்பாரு, கெல்லுபோல்பில்லையது செய்துமேதான் சிறப்பாகரவியில்வைத்துக் காயப்போடே. கசசு

போடவேயில்லையது காய்ந்தபின்பு பொலிவாகஓட்டில்வைத்துச்சீலைசெய்து, நீடவேதளவாயாஞ்சட்டிதன்னில் நெடிதாகவுப்பதனை நிரம்பக்கொட்டி, சூடவேவகலதனைவோட்டில்வைத்து சூட்சமுடன் தானெரிப்பாய்நாலுசாமம், சாடவே ஆறவிட்டுமறுநாள்திறை சட்டமுடன்றுதெறிபாய்க் கமலந்தானே. கசஎ

கமலமாமேழுநாளெரிப்பாய்மைந்தாகருணைபெறதியாறியெடுத்துப்பாரு, அமலமாஞ்செந்தூரமென்னசொல்வேன் அப்பனை கண்கொள்ளாவேதையாகும், தமலமாய்வெள்ளிசெம்பில், பத்துக்கொன்றுதாக்கடா மாற்றதுவும் பத்தேயாகும், புமலமாம் பசுந்தங்கமிதுக்கொப்பாமோ பூதலத்திலாச்சிரிமிதுவேதையாமே. கசஅ

வேதையாங்குடவனிலேமாற்றெட்டாகும்வெளிபானதனிச்செம்பில் மாற்றேழுமெத்த, பாதையாயின்னம் வெகுவேதையோடும் பாங்கானசெந்தூரஞ்சொல்லப்போமோ, நீதையாம்பிதமென்றுருகளித்



தை நிலைத்துதடாயேயமமென்றவித்தையாகும், மேதையாஞ்சிவயோகம்நிலைக்கப்பாரு மேதினியில்லாசனுய்வாழலாமே. கசகூ

தானனகுருவுடைய பதத்தைப்போற்றி சூழசயங்களிருந்ததெல்லாங்கேட்டுக்கேட்டு, கோனனகுருசொல்லவாதம்பாரு குருவில்லாதிருந்தாக்கால் நூலைப்பாரு, ஆனனநூலல்லால்வாதம்பார்த்தா லனுகாதுவாதமொன்றுந்தலைகீழாகும், தேனனசூதத்தின்சாமமட்டுந்தியங்கியோகாசெய்திமாளுவானே. கருO

## குளிகைசாரணை.

மாளாமற்கனமானகற்பமுண்ணு மாயியைத்தான்பூசைபண்ணுமயக்கம்போக, தாளாமல்வாசியைத்தான் பூட்டிவாங்கிச் சதாசித்தம் குருபதத்தில்சரணம்பண்ணு, ஆளாமல்பலத்தில்மனதையூணு ஆனந்தமாவதற்குஅமுதமுண்ணு, மீளாமற்கெவனத்திலேற வென்றால்விடுஞ்சூதம்பசிக்குண்ணமருந்துகேளே. கருக

கேளுநீ யானையென்ற சூதராசன் கெவனத்திற் பறக்கின்றமார்க்கமெல்லாம், வேளுநீபரிசத்திலேமமாக விளங்கியதோர் பகலிரவுமொன்றாய்க்காட்ட, தாளுநீநிமைக்குமுன்னேகோடிகாதஞ் சஞ்சரித்து அடுக்கெல்லாந் தாண்டியேற, மீளுநீயட்டமாசித்தியாடமிருந்துவட வாக்கினிபோல்பசியுண்டாக்கே. கருஉ

ஆக்குவதுசூதமதுகுகையில்நின்ற அமளியாயுறுகையிலே பூநாகசத்தை, நோக்குவதுசமனாகக்கொடுத்துவாங்கி நேராகப்புடமிட்டுவிடுவித்தாக்கால், தேக்குவதுசூதமென்றரா சாவுக்குச்சிவனுண்டஆலம்போல்பசியுண்டாகும், நீக்குவது அரசனைப்போல் நினைத்ததெல்லாம்வெல்லும் நேரிட்டகெந்திசத்தையிட்டுத்தாண்டே. கருங

தாண்டியேபின்னுபாசங்களெல்லாமூட்டுதனித்தபின்புமூலிகைக்குச்சத்தையூட்டு, தீண்டியபின்நவலோகமிட்டுத்தீரு திறமாகப்புடத்தையிட்டு நவாவிட்டிணமூட்டு, வேண்டியபின்தனித்த தங்கச்செம்பையூட்டுமேலானமணிபார்த்த வருணனைப்போலாகும், தூண்டியேயிவ்வளவுங் கடந்துபோச்சுகமான செம்பையினிச் சொல்லக்கேளே.

## குகைக்குள்பூசமருந்து.

சொல்லவேகுகைக்குள்ளேமருந்துபூசத் துடியானசிலைகெந்திமிளைக்காந்தம், கொல்லவேபூநாகமிவைதானைந்து கொடிதாகச்சமபாகம்நிறுத்துக்கொண்டு, கல்லவேகஞ்சாவின்விரையினுக்க கலாவே

ரோமத்தின்றயிலம்வார்த்து, பல்லவேமூன்றுநாளாட்டியாட்டிப் பக்
குவமாய்ரோமத்தின்றயிலம்வாரே. ௧௫௫

வார்த்துமேயரைத்துநன்றாய்குகையிற்பூசிவாகாகக்கட்டினதோ
ர்சூதம்வைத்து,வர்த்துமேவுருகையிலேபூநாகசத்தைஇரமானசூதத்
தினிடையேதாக்கு, போர்த்துமேபுடந்தானுஞ்சொல்லக்கேளுபுகழா
னவாளசத்தைசித்திரமூலன், கோர்த்துமேதொடையோடு முள்ளங்கி
தாழை கொடி தானநாயுருவிவமூரிகூட்டே. ௧௫௬

கூட்டுபூரசோடுதேவதாளி கொடிக்கள்ளிபுன முருங்கைசதா
க்கள்ளி, பாட்டுயெள்ளோடுடாறுவிசெனச்சமகத்தானபதினேந்தும்வெ
வ்வேறேவாங்கித், தீட்டுமெவ்வேறாய்ச்சுட்டுசாம்பல் திறமாகவகை
வகையாய்ப்படிவளர்த்துபோட்டு, மூட்டுபாண்டத்திற்கொட்டியுமூ
த்திரந்தான்பதினேந்துபடியும்வாரே. ௧௫௭

படியைந்துகோமியத்தைக்கூடவாரு பாங்கானகழுதையொடுகு
திரையானே, செடியைந்தாஆடோடுநாலுங்கேளு கிலவராமாயமூரிபடி
யைந்துவாரு, கொடியைந்துபடிதானும் நற்பதாச்சு கூசதேசாம்ப
லுந்துங்கரைத்துவைத்து, தெடியைந்துமூன்றுநாள்தெளிவைவாங்கி
ச்சிறப்பாகவடுப்பேற்றியெரித்திடாயே. ௧௫௮

எரித்திடவே குழம்புபோல்வருதல்கண்டு இணங்கவேறுபடிகா
ரம்சத்திலுப்பு, அரித்திட்டுக்கல்லுப்புசத்திசாரம்ஆதிபாம்நவச்சார
ம்வெட்சாரந்தான், பொரித்திட்டவெங்காரஞ்சவர்க்காரந்தான்புகழா
னவெந்தியுப்புவளயலுப்பு,சரித்திட்டுகடல்நுரையுமன்னபேதிசார்பா
னதுரிசியொடுபூரேறுதானே, ௧௫௯

புடத்துக்குராசன்.

தானுனவகைக்கொன்று பலமுமைந்து சார்பாகப்பொடிபண்ணி
க்குழம்பிலிட்டுப், பானுளபாஷாண நிலையைக்கேளு பரிவானகெந்தி
யொடுசங்குசுண்ணம், தேனுணவிரமொடு வகைக்குமொரு பலந்தான்
சிறக்கவேளருக்கம்பால்படிதான்வாரு, கானுனகுழம்புதனிலொக்கவி
ட்டுக் கலரவேயடுப்பெரித்துமெழுகுபோல்வாங்கே. ௧௬0

வாங்கியேபீங்கானில் பதனம்பண்ணி வளமானசெற்குழியில்பு
தைத்துவைத்து, பாங்கியேபட்சத் திற்பிறகுவாங்கிப் பார்க்கையிலே
சடாசனென்றுபேராம்,தேங்கியேகோபமாம்ருத்திரனுருஞ்சிங்கமா
ங்கொடுஞ்சூரவசுரனாகும், கோங்கியேகொடுங் காலவிஷமதாகும் கு
ளிகைக்குப்புடந்தானுஞ்சருக்காம்பாரே. ௧௬௧



பாரென்றபுடந்தானுஞ் சாத்திரத்திலுள்ளே பலபுலவாய்சொன்
னார்கள்நாதாக்கள்சித்தர், நேரென்றதிருமூலர் ஆயிரத்தில்சொன்னார்
சேர்பானகாலங்கிசொல்லக்கேட்டுத், தேனென்றவேழாயிரத்திற்று
ன்திறத்துசொன்னேன் சிறப்பானசாரணைதான்செய்யுமார்க்கம் வா
னென்றஆகாசவீதியோடிலா வங்காமல்சிறுபிள்ளையோடுங்காணே.

காணிந்தச்சூதம்நின்றுவுருகும்போது கலங்காதேசம்பாதிஞ்சத்
தையூட்டு, பூலுந்தாசம்பத்துசத்துப்பத்து பொலிவாகவுருகையிலேபு
டம்பொன்றுநீட்டு, ஆணிந்தசத்துடாகமெல்லா மப்பனேபலபலவா
வர்ணங்காணும், தோணிந்தச்சூதத்தைநிறுத்துப்பார்க்கத் துடியாகம
ணியிடையேநிற்குமென்னே. ௧௬௩

என்னவேபுடத்துக்குயேதுறப்பு சனுடபுடந்தானுந்தோற்று
ப்பேரூ, மன்னவேமனித்தாயார் சொல்லைபானும் வகைவகையாய்ச்
சோதித்துயானுங்கண்டேன், கன்னவேயுபரசங்கள் நூற்றிரண்டுபத்
துங்காரசாரங்கள் முதலிருபத்தைந்து, பன்னவேமாஷாணமறுபத்து
நாலும் பாங்கானநவலோகம்நவாஷட்டின்மூட்டே. ௧௬௪

வட்டியேயிப்படிதான்சாரணையேசெய்யில் ஒன்றுச்சிக்கெவனம
துநூற்றுக்கோடி, மாட்டியேமறுகரந்தான்விடுவித்தாக்கால் மகத்தா
ன ஆயிரமாங்காதயோடும், நீட்டியேரவிதனிலே யீய்ந்தாயானால்கிக
ரானசிகாரவகைகாணலாகும், ஆட்டியேநாலுதரம்விடுவித்தேற அப்பா
னேலட்சமாங்காதம்போமே. ௧௬௫

போமெனவேஐந்துதரம்விடுவித்தேறப் பொருந்தஒருகோடிக்
கேயோடும்பாரு, தாமெனவேஆறுனல்பரிசைவேதை தாண்டியேயே
ழுதாங்கடந்துயேறு, ஆமெனவேலக்கினங்கள்சொல்லப்போகா அண்
டொணுலோகத்தில் தெரிசவேதை, நாமெனவேநாண்கிலேன் சித்தர்
வேதை நண்ணிய பேரீதுகில்வேதையாமே. ௧௬௬

வேதையாஞ்செப்பிடிலோருபவேதை விளங்கியேபழுக்கவென
றால் பழுக்கும் வேதை, சாதையாங்குளிகைதனைக்காதில் வைத்துக்
கடுகியேயுரைப்பாராகில் பொன்னுமாகுல், மாதையாம்பொன்னென்
றேஉன்னநெஞ்சில்மலைகளெல்லாம்பொன்னாதுமக்காள்பாரு, பாதை
யாபகலிரவுமொன்றாய்ப்போகும்பாராபரத்தாய்சிவன்வந்தாபூசிப்பாரே

பாருங்கள்உபசாரங்கள்நூற்றிரண்டுபத்தும்பாஷாண மூலிகையி
னசத்துகூட, கோருபேநவலோகம் பாஷாணங்கள் குறிப்பாகக்குளி
கைக்குக்கொடுத்துருக்கில், வீருமேமாற்றதுவுமிருபதாகும்வின்னு

லகிவிவ்வேதைகட்டப்போமோ, ஆருநீவிடுவித்தால்சதமுபாச்சு அரி
ந்திந்தப்படிசெய்வார்தானுவாமே. கசுஅ

ஆமிந்தமார்க்கமாய்சூதத்துக்கு அணைத்தணைசத்துகளை சேபா
ஞகில், போமிந்தக்கெவுனமோசித்துபொய்யாய்ப் போனமட்டுங்கண்
டலைந்து பழுத்துமாய்வான்,காமிந்தவுபசாரங்கள்பொன்னேபாச்சுகடு
ஞ்சூதாரயன் நிகேபதளித்தாக்கால், தாமிந்தநாகமுண்ட சூதங்கே
ளுதனிவேதையாத்தாளுமறியாள்கேளே. கசுகூ

கேளுகிபனிரண்டாம்குளிகைதன்னில் கெடியானசாபி யொடு
போகர்தன்னை, வாளுநீரண்டு நவலோகம்போதுமற்ற மற்றகுளிகை
தனைவிடுவித்தேற, வேளுநீசத்துகளை பூட்டிவூட்டிவிடுவித்துச்சார
ணையில்செய்யாவிட்டால், தாளுநீகெவுனமது எடுத்துஓடா தலித்து
மேபரிசத்தில் வேதையில்லை யென்னே. கஎ0

என்னவே சாரணையைத்தீர்க்கமாய்ச் செய்யில்எடுத்தோடுமண்
டமெல்லாம் பதமுந்தாண்டி, பன்னவேரவிகோடி பிடியோகோடிபரி
தியிலே கணங்களெல்லாமயங்கிப்போகும், தன்னவேகுளிகையினால்
மேற்கொண்டோடுஞ் சந்திரனிலோடையிலே நடுக்கங்காணும், மன்
னவே குளிகைதன்னால்குளிரும்போகுமாயமாஞ் சொரூபமெல்லாம்
வெளியாய்ப்போமே. கஎக

வெளியாகருதத்தைக் கட்டாவிட்டால் விரைந்தேறும் ஞான
மெல்லாம் பொய்யாய்ப்போகும், ஒளியானயோகமதுபாழாய்ப்போ
கும் உற்பனமாங்காயசித்தியொன்றுமாகும் அளியானஆதார குறியு
மில்லை அனுகையிலே வேதிக்கு மேமமில்லை, நெளிதானமனதாலே
யோகம்பார்பார் நிர்மூடஞானியென்று சொல்வார்பாரே. கஎஉ

பாரப்பாமுலவன்னி துலங்கினுக்கால் பளிச்சென்று ஆறுதலம்
வெளியாய்க்காணும், நேரப்பாமேலாறும்வெளியாய்ப்போகும்கோா
ணசாத்திரந்தானுறுங்காணும்,சேரப்பாபராபரையின்செயலுங்காணு
ஞ்சேர்ந்தநிஷ்களமதுதான் வெளியாய்ப்போகும், ஆரப்பாநிராகாரத்
தடங்கினோர்க்கு மாதியந்தநாமற்ற அந்தந்தானே. கஎங

தானென்றசிங்கியென்று சொல்லக்கேளு சாதகமாயிது லெக்
குமுன்னேபாரு, ஈனென்றவேழா யிரத்திலொன்றேமிஞ்சி யிதம்ான
வுடும்பாமை அழக்கினோடு,தானென்ன தாயிசல் மாட்டினுடகொழுப்
புகலந்தைந்து ஐங்கழஞ்சு கொழுப்புதூக்கி, பானென்றபுழுகைந்துச
ல்லாதைந்து பருவமுடனென்றுகப் பண்ணிக்கொள்ளே. கஎச



கொள்ளையிலேபரிச்சுன்னந்துரிசுசுன்னங் கொடிதானபூரமென்
றசுன்னமூன்றும்,விள்ளயிலேயொவ் வென்றுகழஞ்சிதூக்கி ரவியொ
ன்றாய்மத்தித்துக் கல்வத்திலப்பி,நள்ளவேரவியில்வைத்துக்காந்திகா
ட்டநலம் பெறவேதயில மாய்வழித்துவாங்கு, துள்ளவேநில்லாமல்
நன்றாய்வாங்கு துடியானபீங்கானில் வைத்துகொள்ளே கஎரு

வைத்தபின்பு கூடயிடமருந்துகேளு வளமானவெண்காரம் சார
ம்கெந்தி, கைத்தபின்புசவ்வீரம்அரிதாரம்பூரம்கருநாபி கஸ்தூரிதொ
ட்டிகூட, வைத்தபின்பு வகைபொன்று பணந்தானொன்று பண்பான
வொன்பதையுங் கல்வத்திட்டு, தைத்ததிலே யரைத்துநன்றாய்த் தயி
லத்தில்சேர்த்து சாங்கமாய்வைத்திடவேசிங்கியாச்சே. கஎசு

ஆச்சப்பாசூதமது கருத்துகொண்டு அழகாகுங்கல்வத்திற்கிறு
த்துவிட்டு, பாச்சப்பாசிங்கி யொருபொட்டு போடப் புதையாமல்சே
ருாசம்வெண்ணெயாகும், தேச்சப்பாகிளிபோலே கட்டிக்கொண்டுசி
றப்பான சூடனிடதீயில்வாட்டி, ஒச்சென்றகறண்டியிலே எண்ணெய்
குத்தியுருக்கிடவேவெள்ளி பொன்போலாடும் பாரே. கஎஎ

ஆடுகிறசூதமென்ற ஆனைபட்டுதானால் ஆகாசவாதமென்ன மச
கமாச்சு, நாடுவாரிச்சூதம் தாழ்வடமாய்க்கோர்த்து நலமாகச்சுாசன
த்திலிருந்துகொண்டு, ஊவிவார்சிவசிவாவென்றுமுட்டவுவந்து முன்
னேபஞ்சகர்த்தாள் நிற்பார்பாரு, தேடுவார்கேட்ட தெல்லாமீவாரீச
ன்செகசாலவித்தை யெல்லாந்தெளிந்துபோமே. கஎஅ

போமென்றசிங்கினால் கட்டுச்சூதம் புகழாகவோடைக்குத்தங்க
ம்ஙாலு, ஆமென்றசுண்ணாம்புக்குகையில்வைத்து அப்பனைபுடம்போ
டதங்கம்நீறும், நாமென்றநவலோக மாயிரத்துக்கோடும் நாமறியோ
மிதனுடைய வர்னந்தன்னை, ஓமென்னபரிதிபோல் நிறமேயாகும் உத்
தமனேவெகுசுருக்கு ஓடிப்பாரே. கஎகூ

ஓட்டுவதுசவர்க்காரச் சுன்னந்தொட்டு உப்பினுடவுறுதிதொட்
டுவுயர்ந்துஓடும், ஆட்டுவதுவர்ன மென்னசூதத்தாலே ஆச்சரியஞ்சிவ
ப்பென்னகெந்தியாலே, பூட்டுவதுதங்கத்தால் காரத்தாலே பூப்போ
லாஞ்சுன்னமென்ன வீரத்தாலே, நாட்டுவது விண்ணுன பூரத்தாலே
நலமானவாதமிதிலடங்கிப் போச்சே. கஅ0

போகாமல் சவர்க்காரச்சுன்னஞ் சொல்வேன் பொற்கொடிக்கு
மீசனன்றுபுகழ்ந்தவாறு, வேகாமல்பூநீறு பதக்குவாரி விரைந்துவொ
ருபாண்டத்தி லளந்துபோட்டு, ஏகாமல்மனிதனுட அமுரிதானுமித

மாகப்பதிறு படிதான்வார்த்து, சாகாமல்மூன்றுநாள் கலங்கிவைத் துச்சார்ந்த பின்புநாலாநாள் தெளிவைவாங்கே. ௧௮௧

வாங்கியந்தத் தெளிவிலேகல்லுச்சுண்ணம் வளமாகத்திகிறுந்த றைப்படிறண்டுபோட்டுத், தேங்கியதைமூன்றுநாள்கலக்கிவைத்துச் சிறப்பாகநாலாநாள் தெளிவைவாங்கி, ஒங்கியொருபடிதானுங் கல்லு ப்பைப்பொடித்து வொக்கவந்ததெளி விலேகரைத்துப்போடு, தாங்கி யே நாலாள் தெளிவைவாங்கிச் சமர்த்தாகவடிகனத்த சட்டியிலே யூற்றே ௧௮௨

அரைத்துமேமேருவென்ற கும்பிக்கேற்றி அப்பனேவாலுகையிலெரித்துமேதான், திரைத்துமேகுப்பியைத்தான் சில்லாகையிட்டுத்திறமுடனேபார்க்கையிலே சிவப்புமெத்த, பரைத்துமே தசங்காரப்பதனம்பண்ணு பாங்கானவெள்ளிசெம்பில்பத்துக்கொன்று, முறைத்துமேதானுருக்கிகுருவொன்றீய முதிர்வான மாற்றதுவு மெட்டதாமே ௫௭௨

எட்டான மட்டமதுநாலதாகும் யெழிலானதங்கமது வொன்றுசேர்த்து, தட்டானமூசை தனிலுருக்கிநீரு தாக்கானவாரடித்துப்புடத்தைப்போடு, கட்டானதங்கமது விரண்டுக்கொன்று கருவானபுடத்தங்கம் நயப்புகாணும், கிட்டானவேதையிதுசித்தர்வேதை செடியானரிஷிமுனிவர் செய்வார்தாமே. ௫௭௩

மிருதார்சிங்குவேதை.

தர்மமாமிருதாருசிங்கிசேர்த்தான் நயவானசெவ்வாலம்பழந்தான்கொண்டு, பூமானதேங்காய் போலரைத்துருட்டிப் பொலிவானசிங்கியைத்தான்பொதிந்துமூடி, காமானசீலையது வலுவாய்ச்செய்துகனமானபுடமதுதான் போட்டாயானல், வேதானசிங்கியதுகட்டிப்போகும் வெடியானயுப்பதுவுங்கூடகூட்டே. ௫௭௪

கூட்டியேதுருசலடயநன்னந்தானும் குணமானசிங்கி புடன் சமனுச்சேர்த்து, மாட்டிகமாய் தானரைப்பாய் செயநீரலே தாம்

வாகப்பில்லை தட்டிக்காயவைத்து, மட்டிகயாயோட்டில்வைத்துச்சீ லைசெய்து பகிழ்ச்சியுடன்காயவைத்து, புடத்தையோடு, நோட்டக மாயாநிகபின்னெடுத்துப்பாரு நொடிதானசெந்தூரங் காணலாச்சே.

காணவேசெந்தூரம்களஞ்சிதாக்கு கருவானவெண்காரம் கழஞ்சி, தோணவேயிரண்டு மொன்றாய்தானரைத்து தப்புரவாய்ர விதனிலேசரியாய்த்தூக்கி, மாணவேமூசைதனில் செம்புருக்கி மதிப்புடனே ஒராசமதுதானேயீவாய், பாணம்போல் செம்பதுவுமூறல்நீக்கி பசுமைநிறம் செயபொன் னுன்நிறமதாமே. ௬௭௬

நிறமானசெம்புதன்னை யெடுத்துப்பார்க்க நெடிதானஊறலது வற்றுப்போச்சு, நிறமானதங்கம்நிகர்செம்புசேர்த்து நிறலானமூசைதனிலுருக்கிப்பாரு, தறமானமாற்றதுவுமெட்டதாகுங் கருவானவெள்ளியதுகணக்காய்ச்சேர்த்து, உறவானவாறடித்துப் புடத்தைப்போடு உத்தமனேபசுமைநிறமாகுமாமே. ௬௭௭

பொன்னிமிளைவேதை.

ஆமப்பாசொல்லுகிறேன் நிமிளைவேதை அப்பனேமானுக்கள் பிழைக்கவென்று, தாமப்பாபடிகமென்ற நிமிளைதன்னை தாரணியில் தேர்ந்தெடுத்துதாம்பரத்தில், வேமப்பாருதமது கூடச்சேர்த்து விருப்பமுடன்றானரைத்து தாம்பூரத்தில்,போமப்பாபழச்சாற்றி லரைத்துமைபோற் பொங்கமுடன் சாந்தமதாய்ப் பூசிப்போடே. ௬௭௮

போடவேரவிதனிலே காயவைத்துப் பொங்கமுடன் வகல்தனிலேவைத்துமூடி, நீடவேசீலையது வலுவாய்ச்செய்து சேர்ப்பானபுடமதுநான்கோழியாக. காடவேகனலாறியெடுத்துப்பாரு கனமானசெம்பதுவுமூறலற்று, மூடவேதங்கநிறம்போலேயாகும்,முயற்சியாய்வேதையிது சொல்லொண்ணாதே. ௬௭௯

போல்லவேசெம்புதன்னை யெடுத்துப்பாரு சொக்கமுடன் சொருசாவிநிறம்போலாகும், வெல்லவேசெம்புவித்தை யெவர்தான் செய்வார் வேதாந்தாயினதுவருளினாலே, புள்ளவேகுளிகையது பூண்டுகொண்டு புக்கினேன்தேச தீவாந்தரங்கள், செல்லவேயான்சென்று கற்றவித்தைசெகத்திலே மானிடர்கள் பிழைக்கத்தானே. ௬௮௦

நீலவானத்தயிலம்.

பிழைக்கவேயின்னமொரு தயிலஞ்சொல்வேன் புகழானவாரமொன்றுபிடித்துவர்த்து,குழைக்கவேதருகூடனேகாரந்தானும் குண



மான கெந்தியுடன்தாளகந்தான், மழைச்சவேலிங்கமது வீரந்தானும் மகத்தானபூரமுடன்கெவுரிவெள்ளை, தழைக்கவே துத்தமதுசூதந்தானும் சார்பானசாரமது தானுங்கூட்டே. ௬௮௧

கூட்டவே சரக்கெல்லா மொன்றுப்கூட்டி குமுறவேகுழியம்மிதன்னிலாட்டி, காட்டிகமாய்தான் பொடித்துவராகந்தன்னில்தாக்காகத்தான் இறித்துவிதூவி, மாட்டிமையாய் வராகமதை சாடியிட்டுமெதிப்புடனே மேல்மூடிசீலைசெய்து நோட்டமுடன்மண்மறைவில்புதைத்துப்போடு நோக்கானமண்டலந்தான் சென்றபாரே.

சென்றபார் புழுவதுவுமிகவேயாகி சிரானபரும்புழுவும் சிறியதாகும், வென்றபார்புழுவெடுத்து சீசாவுக்குள் விருப்பமுடன்தானடைத்துச்சீலைசெய்து, பன்றாகவெந்நீரிற்பிடித்தாயானால் பாங்கானநீலநிறத்தயிலமாகும், சூன்றானதயிலமதையெடுத்துப்பாருகொற்றவனேடவனிலே தடவிப்போடே. ௬௮௨

போடவேசெம்பினிலே தடவிப்போடு பொங்கமுடன்மாற்றதுவுமேழதாகும், நீடவேவெள்ளிதனிலாறதாகும்நெடிதானமட்டமதுவன்னியீறும், கூடவேபொன்னதுவுமாற்று மெத்தக்குணமானதயிலமதுசொல்லப்போமோ, பாடவேபோகரிஷி சொன்னமாற்கம் பாங்கானமானிடர்கள்பிழைக்கத்தானே. ௬௮௩

வெள்வங்கம்நீர்வாங்க.

பிழைக்கவேயின்னமொரு கருமானங்கேள் போரானவங்கமது சேரைவாங்கு, தழைக்கவேபாஷாணகருமாவோடு தாக்கானஇரசமுடனேகார்டிக்காரம், எழைக்கவேவறுவலைசெயந்நீர்தன்னால் ஏற்றமுடன்தான்னரைத்துவங்கத்தின்மேல்,குழைக்கவேபூசியதை தட்டிப்பின்பு குமுறவேகரிபோட்டில்பொதித்துமூடே. ௬௮௪

மூடவேருக்குடமாம்புடத்தைப்போடு முனையானவங்கமது நீரைவாங்கி, நீடவேதுய்யானுக்கொப்பதாகும் நெடிதானவித்தையிது சொல்லப்போமோ, கூடவேவெள்ளிதனைநிலவுசெய்து குறிப்பாகநிஷ்டையிலேயிருந்துகொண்டு, தேடவேசின்மயத்தையாராய்ந்தோர்ந்து சிவானந்தலகிரியிலே நின்றதாக்கே. ௬௮௫

கரிவங்கவெட்டை.

தாக்கவேகரிவங்க வெட்டைகேளும் தயவானதாளகமும் பலந்தான்வாங்கி, நோக்கவேபிந்தாகுசிங்கிதானும் நொடிதாகத்தானரைத்து வங்கத்தின்மேல், தேக்கானரவிதனிலே காயவைத்து நிறமாக

வோட்டிவிட்டுச் சீலைசெய்து, போக்கானகோழி யென்றபுடமேபோ
டு பொங்கமுடன்வெட்டையதுபாகும்பாரே. ௯௮௭

பாரேதானிப் படியேபுடமேபத்து பங்காகப் போட்டுவாபல
னேக்கேளு, சீரேதான்வங்கமதுவெட்டையாகி சிறப்பாக சொருங்கி
யதுமீறிநிற்கும், தாரேதான்வெட்டையது வொன்றேயாகும் துடி
யானசெம்பொன்றுவெள்ளியொன்று, நேரேதான்தானுருக்கி யெடு
த்துப்பாரு கிலையானகளங்கம்போலாகுந்தானே. ௯௮௮

தானானவெள்ளி யென்றகளங்குதன்னை தாக்கானகரிபோட்டி
ஊதிப்போடு, வேனானவெள்ளியது களங்குநீங்கி விருப்பமுடன்மா
ற்றதுவுமாறதாகும், கோனானமட்டமதுநாலுங்கொண்டு குணமான
தங்கமதுவொன்றுகூட்டி, பானானமாற்றதுவு மிகுதியாகி பழுப்பா
னதங்கமது காணுந்தானே. ௯௮௯

காணவேவுப்புக்கும் காசிக்கேகா கனமானவங்கமது தங்கமா
கும், பூணவேசெகசோதிதன்னைப்பார்த்துப் பொங்கமுடன் சின்மய
த்திலிருந்துகொண்டு, வேணவேசுடரொளியின் லயிலையைப்பார்த்து
மிக்கானவஷ்டாங்க யோகஞ்சென்று, ஊணவேகுருபதத்தைவண
ங்கிப்போற்றி வுத்தமனேநடுமையம்பற்றிநில்லே. ௯௯௦

லிங்கசெம்பு.

நிற்கவேலிங்கமது பலமேவாங்கி நேராணமுலைப்பாலால் சுருக்கு
தாக்கு, கற்பமுடன்மேனிச்சார் நாலுசாமம்கருவானதும்பைச்சார்
நாலுசாமம், வற்கமுடன் பழச்சாறுநாலுசாமம் வாகானவராமுள்ளி
நாலுசாமம், சற்கமுடன்பழச்சாறுநாலுசாமம்சார்வான குமரிச்சார்
சாமம்நாலே. ௯௯௧

நாலான முசுக்கைச்சார்சாமம்நாலு நலமானதைவேளைச்சாமம்
நாலு, காலானமுள்ளங்கிச்சாமம்நாலு கறுத்தநோர் அளரியதுசா
மம்நாலு, பாலானமேதிப்பால் சாமம்நாலு பாங்கான தேங்காய்ப்பால்
சாமம்நாலு, வேலானதேனதுதான்சாமம்நாலுவின்னவேசெய்யதுதா
ன்ஜாமம்நாலே. ௯௯௨

சாமமாஞ்சுருக்குடனே கட்டிப்போகும்சார்வானலிங்கமதுமெ
ழுகிலோடும், தாமமாஞ்சரக்குவகை சொல்லக்கேளு நருக்கானவா
ப்பொடியுஞ்சிங்கிதானும், காமமாஞ்சுருமாவுங்காரந்தானும்கடிதான
படிகாரம் யுப்புமாகும், பூமமாம்வகைக்கொருபலமேவாங்கு பொங்
கமுடன் குழிக்கல்லில்பொடித்திடாயே ௯௯௩



பொடித்துமேவருவகை செயநீர்தன்னால்பொங்காமல்தானரை
ப்பாய்சாமம்நாலு, துடிப்புடனேதானரைத்து லிங்கந்தன்னில் தொ
குப்பாகக்கவசித்துக்காயவைத்து, கடிப்புடனேகாவிக்கற் சீலைசெய்
துகருவாகக்குழிவெட்டி ரூழந்தானேளம், மடிப்புடனேவுமிகொட்டி
லிங்கம்வைத்து மதிப்புடனேபுடம்போடக்கட்டிப்போமே. ௯௯௪

கட்டியதோர்லிங்கமதை தானெடுத்துக்கணக்காகவெள்ளிசெம்
பில்பத்துக்கொன்று இட்டமுடன்றான்கொடுத்துவுருக்கிப்பாரு தெ
ளிவானமாற்றதுவுமேழதாகும், நட்டமென்னபத்திலோர்தங்கஞ்சேர்
த்து நயமாகவாரடித்துபுடமேபோடு, சட்டமுடன்றானெடுத்து வெடு
த்துப்பாரு சார்வானபுடத்தங்கமாகும்பாரே. ௯௯௫

பாரேதான்தங்கமதைசிலவுசெய்து பாசமென்னுஞ்சாகரத்தை
விட்டொழித்து, சீரேதான்கும்பத்திலிருந்துகொண்டு சிறப்புடனே
வஷ்டாங்கஞ்சென்றுமேதான், கூரேதான்பீடமதிலிருந்துகொண்டு
கோடானகோடிவரைமேலேயேறி, தீரேதான்சொரூபமென்ற கலை
யில்நின்று தீவிரமாஞ்சுழிமுனையைப்பற்றியேறே. ௯௯௬

பூரக்கட்டுசிடிகைவேதை.

ஏறவேபூரமென்ற கட்டைசொல்வேன் யெழிலானகேசரியின்
பால்தானூழி, கூடவேசாமமதுசுருக்குத்தாக்கு குறிப்பானதொட்டி
யின்பாஷாணத்தால், தேறவேவருவகைசெயநீர்தன்னால் தேற்றமுட
ன்றானரைத்துக்கவசஞ்செய்து, மாறவேரவிதனிலேகாயவைத்துமா
க்கமுடன்புடம்போடக்கட்டிப்போமே, ௯௯௭

போமேதான்குக்குடத்திலகட்டிப்போகும் போக்கானசரக்கது
வும்புகைத்துநிற்கும், நாமேதான்சொன்னபடி பூரகட்டை நலமாகமட்
டமென்றபொன்தகட்டில்,வேமேதான்வுமிநீரால்தானிழைத்துவிருப்
பமுடன்தான்தகட்டில்பூசிப்பின்பு, காமேதான்காவிக்குள் கிழ்மேலி
ட்டு கருதாகபுடம்போடமாற்றுமாமே, ௯௯௮

மாற்றானசெம்பதனில் தாக்கிப்பாருமகத்தானசெம்பதுவும்களி
ம்புநீங்கி, கூற்றானகவளையதுபோலேகாணும் குணமாகுபழுப்புனிற
ம்குன்றிக்காட்டும், வேற்றானவெள்ளிதனில்வாதோகொஞ்சம்வினை
வானதேகமதுக்காயகற்பம், ஆற்றானவாயுவென்றதெண்பதும்போம்
அப்பனேபோகரிஷிகண்டதாமே. ௯௯௯

கண்டபடிமாணுக்கள் பிழைக்கவென்றுகாசினியில்வெகுதூரம்
சென்றுயானும், கண்டபடிமுறையெல்லாம்பார்த்துதேர்ந்து காசினி

மில்பிழைப்பதற்குவெகுவாய்ச்சொன்னேன், கண்டபடியென்னாலே மிகவும்பார்த்துக்கைகண்டமுன்னேனை கண்ணலாகி, கண்டபடி வுள வெல்லாம்பார்த்துத்தேர்ந்து பாரினிலெசெய்கிறவன்வாதியாமே. ()

வீரக்கட்டு,

வாதியாம்வீரம்துபலமேவாங்கி வகுப்புடனேவில்வமதுகாற்ப தாகும்,பாதியாம்வில்வமதுபழத்ததைக்கீறி பாங்காகத்தான்பொதிந்து சீலைசெய்து, ஆதியாம்மண்மறைவில்புடத்தைப்போடு அப்பனேபுட மதுங்கோழியாகும், வேமேதானிப்படியேபுடமேபோடு வெடியான நார்பது பழநுமாமே. ௬௦௧

பழமானகாயதுவும்நாற்பதாகும் பக்குவமாய்ப்புடம்போடக்க ட்டிப்போகும், கழமான்வீரமதைவுமிர்தன்னால் கருவானபொன்ம ட்டம்தன்னிற்பூசி, குழமானபூங்காவிகன்னிற்குள்ளே பொதிந்து மேபுடம்போடத்தங்கமாகும், மழமானவீரத்தின்போக்குகோடி மகி தலத்தில் மெத்தவுமதிக்கப்போமோ, ௬௦௨

தாளக்கட்டு.

மதிக்கவேதாளகமோர்பலமேவாங்கிமகத்தானதும்பைச்சாற்கு மரிச்சாரொக்க, கதிக்கவேபழச்சாற்றால்குழகைபாட்டி கவசமாய்தா ளகத்துக்கங்கிபூட்டி, அதிக்கவேபத்தெருவில் புடத்தைப்போடுதல க்கமுடன்தாளகமும்கட்டிப்போகும், விதிக்கவேயிப்படியேபத்துபு டம்போடு, விரைவானதாளகமும் கட்டிப்போமே. ௬௦௩

கட்டயதோர்தாளகமும்பலமொன்றாகும் கதிப்பானசூதமுடன் கெந்திகானும், இட்டமுடன்வறவகையாஞ்செயநீர்தன்னால்நிறமுட னேதானரைப்பாய்சாமம்நாலு, சட்டமதாய் பில்லையதாயவைத்து சார்வாகவில்லையதுலட்டிவிட்டு, மாட்டமுடன்கோழியென்ற புடக் கைதப்போடு மாற்கமுடன்செந்தூரபாதும்பாரே. ௬௦௪

பாரேதான்செந்தூரம் பத்தம்பண்ணுபடிகமென்றவெள்ளிசெ ம்பில்பத்துக்கொன்று, நேரேதான்றானுநக்கிச்செந்தூரத்தைநேர்பா கத்தான்கொடுக்கவாங்கிக்கொள்ளும், சீரேதான்கரியோட்டி ஊதிப் பேர்டுசிறப்பாசமாற்றதுவுமெட்டதாகும், கூரேதானுநற்கோர்தங்க ஞ்சேர்த்து குழிப்பாகப்புடம்போடத்தங்கமாமே. ௬௦௫

தங்கமதுபசும்பொன்னும்வர்ணமெத்த தயங்காதகைவிக்குழம் புக்கேகா, அங்கமுடன்வாதத்துக்கூறுதியாச்சு அப்பனேசித்தர்முனி செய்வாரப்பா, புங்கசித்திசெட்டேனே பெறுவதாகும் போதமெட்



டுக்கொள்ளுவதும் ஞானியாவான், சிங்கமென்றகுருபீடம் பிரமபீ டம் சிறப்பானசித்தருடமகிமைபாரே. ௬௦௬

துருசுகளங்கு

மகிமையாம்துருசுடையகளங்குமார்கம் மகத்தானஅவமுடனே வேதைபாரு, மகிமையாமயமதுவும்வொன்றேயாகும் மதிப்பானது ருசதுவுமெட்டதாகும், மகிமையாயிரண்டுமொன்றாய்க் சேர்த்துக் கொண்டு மாற்கமுடன்முரியினாலரைத்துக்கொண்டு, மகிமையாம்சல ந்தனிலேகழுவிப்போடு, மாசற்றவபஞ்சேர்த்துசிவக்கும்தானே. ()

சிலப்பானவயஞ்சேர் துருசுதன்னை செழிப்புடனே சட்டிதனி ல் பரப்பிப்போடு, தவப்பானவாழைநீரதிலேவிட்டு தயவாகமூன்று நாள் ரவியில்வைத்து, கயப்பறவேசூதமதுகாலுக்கொன்று கலறவே தானரைத்து மறுசட்டிட்டு, காப்புடனேமேற்சட்டி மூடிப்போடு நலமாகசீலையது வலுவாய்ச்செய்யே. ௬௦௮

செய்துமேயடுப்பேற்றி யெரிப்பாய்சாமம் செழிப்புடனேயாற விட்டு யெடுத்துப்பாரு, நைதுமேசெந்தூரமாகும்பாரு நலமானரச மதுதான் மேலேயேறும், சொய்துமேசெந்தூரம் காலுக்கொன்றி கொப்புடனேவெண்காரங் காலாய்க்கூட்டி, பெய்துமேமுலைசையிட்டு சீலைசெய்து பிலமாகக்காயவைத்து வுருக்கிடாயே. ௬௦௯

உருக்கியேசெம்பானகளங்குதன்னை வுத்தமனேவங்கமிட்டுஊதி த்திரு, நருக்கியேகாசமிட்டுவுருக்கிப்பாரு நயமானசெம்பதுவு மாகு ம்பாரு, பெருக்கியேவெள்ளியது காலுக்கொன்று போனசெம்பது வுவொன்றேசேர்த்து, பருக்கியேதானுருக்கியெடுத்துப்பாரு புதமா னமஞ்சளது மட்டர்தானே. ௬௧௦

மட்டமதுவைந்துக்கோர் தங்கஞ்சேர்த்து மயங்காமல்வாறடி த்துப் புடத்தைப்போடு, திட்டமுடன்மாற்றதுவு மிகவேயாகும் திற மானதுருசடைய களங்குவேதை, சட்டமதாய்கண்டருட வேதை மாற்கம் சாற்றவுமெவராலு முடியாதப்பா, நட்டமில்லையிவ்வேதை பரிசவேதை நாதாக்கள்செய்யுமின்ற மாற்கம்பாரே. ௬௧௧

மாற்கமாம்வேதையிது சுளுக்குவேதை மானிலத்தில்தவயோகி செய்வாரப்பா, நீற்கமுன்யோகநிலை தன்னிற்சென்று தெளிவாகசின் மயத்தி லிருந்துகொண்டு, பாற்கமுடன்பிராணனிலே சொரூபம்பற்றி பரகதிக்குநன்மனதாய் வொடுக்கம்பார்த்து, சேற்கமுடன் திவ்விய கலைதானியுத்தி சிதம்பரத்திடனவொளி காணுவீரே. ௬௧௨

### காந்தவேதை.

காணவேயின்னமொருமாற்கங்கேளு கருவானகாந்தமது வசிக் காந்தம், பூணவேதேன்விட்டு வரைத்துமேதான் பொங்கமுடன் மூசையிட்டு வுருக்கித்திரு, வேணவேசத்தெடுத்து சூதஞ்சேர்த்து விருப்பமுடன்கெந்தியது காலாய்க்கூட்டி, மாணவேவறுவகை செய நீர்தன்னால் மாட்டடாநாற்சாமமரைத்துப்போடே. ௪௧௩

போடவேரவிதனிலே காயவைத்துப் பூப்போலதானுதிர்த்து பொடித்துமேதான், நாடவேகாசியென்ற குப்பிகொண்டு நன்மை பெறசீலையது வேழுஞ்செய்து, கூடவேகுப்பிக்குள் மருந்தையிட்டு குழிப்பாகப்பலபத்தின் கல்லால்மூடி, சாடவேசட்டிதனில் மணலைக் கொட்டிச் சார்புடனேகுப்பிநடு மையம்வையே. ௪௧௪

வைத்துமேமணல்கொண்டு மேலேசெம்பி வளமாகசட்டிகொண்டுமூடிச்சீலை, சத்துமேபோகாமல்தீயைமூட்டி சாங்கமாய்தானெரிக்கச் செந்தூரந்தான், முத்தமுடன்வெள்ளிசெம்பில்பத்துக்கொன்று முயற்சியுடன்தான்கொடுக்க மாற்றுங்காணும், சுத்தமுடன்னூதிப் பார் மாற்றேழுயேழு சூட்சமுடன்போகரிஷி வரைந்ததாமே. ௪௧௫

வரைந்தாரேமானிடர்கள் பிழைக்கும்வண்ணம் வனந்திரங்கள் குகைமுதலும்கானுற்கண்டு, துறந்தாரேகுளிகையதுபூண்டுகொண்டு துறைமேகாடிமலைகளெல்லாங் கண்டாராய்ந்து, பறந்தாரேமேருகிரி மேலேசென்று பாராதகாட்சியெல்லாம் பார்த்துமெய்ச்சி, மறந்தாரேசித்தரிடம் விடைகள்பெற்று மருத்துவத்தைவெளியாக்கி மதிப்பிட்டேனே. ௪௧௬

### அயச்செந்தூரவேதை.

மதிப்பிட்டேனின்னமொரு கருமானங்கேள் மாசற்றமனகிரும்பு பலமோரைந்து,சுதிப்புடனேபொடிபொடியாஞ் சன்னமாககண்டிடைக்கு கெந்தியொருபலமோபத்து, வெறுப்புடனேகையானின் சாற்றினாலே விளங்கவேநாற்சாம மரைத்துப்பின்பு, குதிப்புடனே பில்லைதட்டிக்காயவைத்து துப்புரவாய்சட்டிதனில் பில்லைவையே.

வைத்துமேமேற்சட்டிக்குமரிச்சாற்றால் வப்பமுடன்தான்மூடி சீலைசெய்து, வைத்துமேதானெரிப்பாய்நாலுசாமம் மயங்காமல்லெடுத்துப்பார் செந்தூரந்தான் தத்துமேசெந்தூரந்தான்தனையெடுத்து தயங்காமல்மறுபடியும் கையான்சாற்றால், பெய்த்துமேபோகாமல் செந்தூரத்தைப்பொங்கமுடன் தானரைப்பாய் சாமம்நாலே. ௪௧௮



நாலானசெந்தூரம்பில்லைதட்டி நலமாகரவிதனிலேக்காயவைத்து மேலானசட்டிதனில்தான்பரப்பி விருப்பமுடன்பில்லைதனை மேலேவைத்து. பாலானசட்டிதன்னைகவிழ்த்துமூடிப் பாலகனேமுன்போல சீலைசெய்து, சீலானவடுப்பேற்றிநாலுசாமம் சிவக்கவேதானெரிப்பாய்க்கமலமாமே. ௪௧௯

கமலந்தானெரிப்பாயானபின்பு கருவாகயிப்படியேபத்துமுறைதானும்,விமலமாஞ்செந்தூரமிகவேசெய்து விருப்பமுடன்குப்பிதனில்பதனம்பண்ணு,புமலமாம்செம்புருக்கிநாலுக்கொன்று புகழுடனேசெந்தூரங்கொடுத்தூது, தமலமாம்ரவிதானுங்கட்டிப்போகும் தாக்கடாமதிதனிலேநாலுக்கொன்றே ௪௨௦

ஒன்றானமதியுடனேரவியுஞ்சேர்த்து வுத்தமனேயாற்றதுவும் பழுக்கும்பாரு, நன்றானதங்கமதுயிரண்டுக்கொன்று நயமுடனேதான்கொடுத்துபுடத்தைப்போடு, குன்றானபொன்னதுவு மேழதாகும் குணமான நயப்புடனேமின்னும்பாரு, அன்றானவயத்தினிட போக்கைச்சொல்ல அரனுமயனுமுடியாதன்றே. ௪௨௧

முடியானசெந்தூரம் வேதைப்போக்கு முனிகோடிரிஷிமுதலோர்செய்வார்கோடி, வெடியானசெந்தூரங் கொண்டபோது விருப்புமுடன்வாயுவென்றதெண்பதுபோம், தடியானதேகமதுமுருக்கேயேறி தாதுகளுமிகவுமுத்துயிரத்தமுண்டாம், குரியானசேத்துமத்தையடுத்துப்போடும் குணமாகும்தேகமதுயிறுகும்பாரே. ௪௨௨

### காயசிங்கிபற்பம்,

பாரேதானின்னமொருபற்பங்கேளு, பாங்கானசிங்கியொருபலமேவாங்கி, சீரேதான்கோமியத்திலூதிப்பின்பு செழிப்புடனேபசும்பாலிலரைத்துமேதான், நேரேதான்புடமதுவுங் கோழியாகநேர்ப்புடனே தான்போடபற்பமாகும், கூரேதான்பற்பமதுக் கிடையேகுதம்குழிப்பாகத்தான் சேர்த்துவரைத்திடாயே. ௪௨௩

அரைக்கவேவாரர்தாரச்சரக்கால் அப்பனேசெயநீராய் செய்துகொண்டு, திரைக்கவேநாற்சாமமரைத்தபோது திறமானபற்பமதுக் கினைவேறுண்டோ, நிரைக்கவேபில்லைதட்டிக்காயவைத்து நிறமாகப்புடம்போடபற்பமாகும், முறைக்கவேசெயநீரின் போக்கச்சொல்வோம் முழுமக்களானவருமறியத்தானே, ௪௨௪

அரியவேவாரதாரச்சரக்கை அன்புடனேயாமுறைப்போ மதிநமாக, தெரியவேகாரமுடனசாரந்தானும் திறமானதுருசுடனே சீனக்

தானும், புரியவேவெடியுப்புகரியுப்புமாகும் புகழானவித்தலையுமாரா தாரம், சரியேவமாணுக்காள்பிரமுக்கவென்று சாற்றினார்போகரிஷி தன்மைபாரே. ௬௨௫

தன்மையாய்ப்பமதுபணமேதுக்கு சார்பானவெண்ணையதுதன னிற்கொள்ள, வண்மையாங்காயமதுயிறுகிப்போகும் வாகனதேக மது மின்னல்தோன்றும், குண்மையாம்தங்கமது வலுத்துப்போகும் குணயாக்கும்சிங்கியது கூறப்போமே. நன்மையாய்காயமது கற்றா ணாதும் நாதாக்கள்செய்முறைதானுண்மைபாரே. ௬௨௬

## வீரமெழுகு

உண்மையாம்வீரமதுபலமேவாங்கு ஓங்காரமுள்ளதொரு விலா ங்கைத்தேடி சுண்மையார்தயிலமதுயிறக்கிக்கொண்டுகசடகற்றித்தயி லமதைசுறுக்குதாக்கு,பண்மையாம்நாற்சாமம்வறுக்குதாக்குபளபள த்தவீரமதுமெழுகுமாகும், தன்மையாம்பரியதுவும்பத்துக்கொன்று தாழ்ச்சியுடன்றான்கொடுக்கவாங்கும்பாரே.. ௬௨௭

வாங்கியதோர்மெழுகெடுத்துப்பதனம்பண்ணு வரிசைபெறவெ ள்ளிசெம்பில்பத்துக்கொன்று, ஓங்கியேகொடுத்தாக்காலேழுகாணு முத்தமனேதொண்டுபணிவேலைசங்கு, பாங்குபெறமட்டமதுகாணுக் கொன்று பக்குவமாய்பரியதுவுமிகவேகூட்டித் தாக்கியேதிரியாதே மைந்தாகேளு, சுத்தமுடன்செய்துமல்லேலவழலைபாரே. ௬௨௮

## போகர்சித்தர்வழலைமார்க்கம் தடுப்பது.

வழலையென்றால்வழலையதுசொல்லப்போமோ வளமாகநாதாக்கள் பாடிவைத்தார், வழலையென்றால்சுந்தரனார் வழலையல்ல, வாரிஷியுஞ் சொன்னதொரு வழலையல்ல, வழலையென்றால்மச்சமுனிவழலையல்ல வன்பானசட்டமுனிவழலையல்ல, வழலையென்றால்கோரக்கர் வழலைய ல்ல வால்மீகர்பாடினதும்வழலையாமே. ௬௨௯

ஆமேதான்கொங்கணரும்வழலையல்ல அப்பனேஇடைக்காட்டா ர்வழலையல்ல, தாமேதான்டமாகனார் வழலையல்ல தாக்கானசிவசிவாக் கியர்வழலையல்ல, வேமேதான்குதமுனிவழலையல்ல மிக்கானபுஜண்ட ரும்வழலையல்ல, நாமேதான்சொன்னபடி வழலைமார்க்கம், மற்றுமுன் ள்ளசித்தரெல்லாம்பாடினாரே. ௬௩0

பாடினாரிந்நூலில் சொன்னசித்தர் பழக்கமுடன்சொல்லவில்லை மறைத்துப்போட்டார், பாடினார்பலபலவாந்துறைகள்சொன்னார் பக் குவங்கள்யாதொன்றுங்கூறவில்லை, பாடினாரவரவர்கள் நூல்கள்தன



னில் பலபேர்கள்மறைப்புகளைக்காணவில்லை, பாடினார்துறைமுகமுஞ் சொல்லவில்லைபாடிக்கெட்டலைந்தார்கோடியாமே. ௬௩௧

கோடானகோடிபேர்நூலைப்பார்த்துக் குவலயத்தில்கெட்டுவிட் டார்சொல்லப்போமோ, கோடானகோடிபேர்சூதுக்குப்பானை குண முடனேசெய்யாமல்மாண்டுபோனார், கோடானகோடிபேர் காப்பேடு தன்னி குடிகெட்டுப்போனார்கள்கணக்கேயில்லை,கோடானகோடிபேர் கடையேபார்த்துக்குலைநாசமடைந்தவர்கோடியாமே ௬௩௨

கோடியார்தீட்சைவிதியறியமாட்டார் கோலமுடனுப்பெடுக்கு ம்வகையுங்காணார், தேடியதோர்பொருளெலாஞ்சிலவழித்து தேசம் விட்டுதேசம்போய்தெரியமற்றான், பாடியேசாத்திரத்தைப் பாடிக் கொண்டுபத்துபேரெட்டுபேரொன்றாக்கூடி, நீடியேகாலமதுதெரியா மற்றான் நிச்சயமாய்பூவெடுக்கப்போவார்பாரே ௬௩௩

போவாரேகானகமெலாந்திரிந்து பூக்காதநிலமெல்லாம்பூர்க்கு மென்று, ஆவலுடன்மலையோரம்பாறைபார்த்து யதுக்கப்பால்சாது வழிசென்றுதாமும், காவலுடன்நடுச்சாமவேளைதன்னில் கண்ணிரு ட்டுமுன்பாகமதிநோக்கில், காவலுடன்பசிகொண்டுபொழுதைநேயா திசமாதிகட்டித்தானிருந்தார்பலபேர்தாமே. ௬௩௪

பலபோராம்சாத்திரத்தைக்கையிலேந்தி காப்பேடுதடையேடுதெ ரியாமற்றான், சிலபேருங்கண்கெட்டுமுழுதும்பார்த்து சூட்சாதிருட் சமிடமறியாமற்றான், மலமுடனேமலையுனிழுப்பூவென்று மதிமயக்க ந்தெரியாமல் தியங்கியேதான், சலமுடனேகண்ணீருமாய்காலமதுநா ன்கழித்தார்கசடராமே. ௬௩௫

கசடகற்றிபுத்தியுள்ளவிளைஞானால் சாசினியிலெண்ணாலைக்கரு திப்பாரார், நிசமுடையசாத்திரமெல்லாமகற்றி நேரானசாத்திரங்கள் மெய்யென்றெண்ணி, விசமுடையமுப்பூவின்மண்ணினாலே வேண்டி யதோர்வளையல்களுஞ்செய்வார்கோடி, குசமுடையவளையல்கார்க்கா ர்க்காய்ச்சுமண்ணில் கூறவொண்ணாதஞ்சதுவுமிதக்கும்பாரே. ()

பாரேதானென்னுரலைப்பாராவிட்டால்பாங்கானமுப்பூவுங்காணா விட்டால், சீரேதான்வளையற்காற்நஞ்சாணுனுஞ் தீவிரமாய்தானெடுத் துப்பூமுடித்தால், நேரேதான்சரக்கெல்லாங்கட்டலாகும் நிலையாநச ரக்கெல்லாம்நிற்கப்பண்ணும், நேரேதான்வேதையிதுக்கோடிவித் தை விழலாகப்போகாதுவேண்டிச்செய்யே. ௬௩௭

நூல்தொகுப்பு.

செப்பவேயென்னூலேழாயிரம்பார் செகத்திலேமறைத்ததெல் லாம்வெளியாய்ச்சொன்னேன், பையவேசத்தகாண்டம் பார்த்தாயா னால் பாருலகில்நீயுமொருசித்தனுவாய், தொய்யவேபலபேர்கள்முனி வரானோர் தொல்லுலகில்பாடிவைத்தார் நூல்கள்பேதம், மெய்யவே பலதுறைகள்பார்க்கவேண்டும் மேதினியில்நூல்பார்த்தோர் சித்த ரமே. ௪௩௮

சித்தாமென்னூல்போ லாருஞ்சொல்வார் செகத்தினிலேகோ டானகோடிநூல்கள், பக்தியுடனுனுரைத்தேன்மண்டலத்தில் பாக முடன்யென்னூலைப்பார்த்தபேர்கள், முக்தியுடன்காண்பதற்கு வழி யுங்காண்பார் மூவுலகும்கிட்டவல்லோககிபுங்காண்பார், சக்தியுடன் பராபரியைத்தொழுதபோற்றிச் சட்டமுடன்சத்தகாண்டம் பாடி னேனே. ௪௩௯

பாடினேன் சத்தகாண்டமேழுகாண்டம் பாங்கானயெழுநூறு வொன்றுசொன்னேன், பாடினேனென்னூறு வைப்புசொன்னேன் பாங்கானதிரட்டுவெழுநூறுசொன்னேன், பாடினேன்முன்னூறுவொ ன்றுசொன்னேன் பதிவானஞானமொருநூறுசொன்னேன், பாடி னேன் சோடசமுமெட்டுஞ்சொன்னேன் பகரவேநிகண்டுபெருநூல தாமே. ௪௪௦

நூலானவாயிரத்திருநூறுசொன்னே னுணக்கமாஞ்சொச்சங்க ளனேகஞ்சொன்னேன், பாலானவைநூறு கருக்கிடையுஞ்சொன்னே ன்பாலகனே யென்னூல்போலாருஞ்சொல்வார் சேலானகருக்கிடை ரிங்குருக்கிடையுஞ்சொன்னேன் சிறப்பானசோதிடமுமுந்நூறுசொ ன்னேன். மூலானகாலாங்கிநாயர்தம்மை முடிவணங்கியடியேனுமொ ழிந்திட்டேனே. ௪௪௧

பாஷாணப் பதங்கம்.

மொழிந்திட்டபாஷாணம் பலமொன்றுங் முனையானரசமது வும் வொன்றேயாகும், வழிந்திட்டபூரமது பலமொன்றுங்வாகான யிம்மூன்று மொன்றாய்ச்சேர்த்து, கழுந்திட்டுக்கல்வமதில் பொடித் துக்கொண்டு கருவானவறுவகை செயநீர்தன்னால், பிழிந்திட்டுத்தா னரைத்துப்பில்லைதட்டிப் பிசகாமல்ரவிதனிலேகாயப்போடே. ()

போட்டுமேசட்டியிலேபில்லைவைத்துப் பொங்கமுடன்மேற்சட் டிக்கவிழ்த்துமூடி, சீட்டமுடன்சிலைப்பு வலுவாய்ச்செய்து சேரா



னவடுப்பில்வைத்து யெரித்துநேருய், வாட்டமுடன்சாமம் யெ ரிக்கும்போது வளமானபற்பமது பதங்கமேறி, சட்டமுடன் மேற்ப ட்டிமேலேநிற்கும் யெழிலானபற்பமது சொல்லப்போமோ. ௪௪௩

சொல்லவேபற்பமது தனையெடுத்தாசக்கமுள்ளசெம்புதனில் ப த்துக்கொன்று, வெல்லவேதானுருக்கி யெடுத்துப்பாருவேதாக்கா யினதுவருளினாலே, புல்லவேசெம்புதாவும் வெள்ளியாகி பூதலத்தில் மானிடர்கள்பிழைக்கவென்று, மெல்லவேபோகரிஷிமன மூவர்துமே தினியில்பாடிவைத்தாருண்மையாமே. ௪௪௪

சங்கால் பச்சைவேதை.

உண்மையாமின்னமொருகருமானங்கேள் வுரைக்கிறேன்மாணு க்கன் பிழைக்கவென்று, தண்மையாமயமதுவும் பலமொன்றும் த ளியானபச்சையது பலமொன்றும், கண்மையாம் ரசமதுவும் பல மொன்றும்காரமாம்வெண்காரம்பலமொன்றும், வெண்மையாம் வெடியுப்புசெயநீர்தன்னால்விருப்பமுடன்றானரைப்பாய்சாமங்காலே

காலானசெயநீராலாட்டிமைந்தா நாள்மூன்றுரவிதனிலே காய ப்போடு, காலானசெந்தூரஞ்சொல்லப்போமோகாசினியில்சித்தர்மு டிசெய்வாரப்பா, மாலானசெந்தூரம் விருகமென்று மதிப்பானவெ ள்ளியதுவிருகமென்று, சூலானவெள்ளிக்குச்சிமேலும் குட்டியே மூசைதனில் போதிந்திடாயே. ௪௪௫

பொதியவேமூசையிட்டுச்சீலைசெய்து புகழானவுலையிட்டு வூதி த்திரு, பதியவேவெள்ளிக்குச்சாயமேறி பழப்பானபொன்போலேயி ருக்கும்பாரு, மூதியவேகாலுக்கோர் தங்கஞ்சேர்த்து முயற்சியாய்ப் புடம்போடமாற்றேமெத்த, கதியவேபசுமைநிறஞ் சொல்லப்போ மோ கருத்துடனேபாடிவைத்தேன் கணக்காய்த்தானே. ௪௪௬

செப்புத்தொட்டிவேதை.

கணக்கானசிமிழ்கையென்ற வேதைசொல்வேன் கணக்குடனே செப்புயென்ற தொட்டியொன்று, வணக்கமுடன் மணவிரும்புவொ ன்றேயாகும்வளமானவெண்காரம்வொன்றேயாகும். இணக்கமுடன் கூட்டியொன்றாய்ப் பொடித்துக்கொண்டு யெழிலானதேன்விட்டு வ ரைத்துமைபோல், கணக்கயில்லாக்குகையிலிட்டு மூடிச்சீலை சகமுட னேதான்செய்துவுருக்கிடாயே. ௪௪௭

உருக்கியே யெடுத்துபாரென்னசொல்வேன் வுத்தமனேவய ஞ்சேர்ந்த தொட்டியாச்சு, கருக்கியேயின்னுமொரு குகையிலிட்டு

லம்பெறவே மூசையிட்டுச்சீலைசெய்து, பெருக்கியேதீமூட்டி புலி யிலேத்தி போனதுருத்திகொண்டூதித்திரு, பருக்கியேமூசைதனை யெடுத்துப்பாரு பாங்கானசெம்பதுவும் வெளுத்துப்போமே. சசகூ

வெளுப்பான செம்புதனையெடுத்துப்பாருவிருப்பமுடன்வெள் ளிதனில் நாலுக்கொன்று, தனுப்பான தங்கமுடனொன்று சேர்த்துத் தாட்டிகமாய்த்தாளுருக்கிவாரடித்துச், சுளுப்பானவுப்புடனேகாவி சேர்த்து சூட்சமுடன்புடம்போடவன்னிமீறும், பளுப்பானபொன் னதுவுமிகவேயாகும் பணிதிமுதலனைத்திறுக்கும்பான்மையமே.

புரன்மையாம்யாகிலே தவத்தில்நின்று பாக்குபெற நின்மயத் தைப் பணிந்துபோற்றி, காண்மையாங்காலாங்கி தனைநினைந்து கருத் துடனேயெப்போதும் கடாட்சிக்கத்தான், மேன்மையுடன்மனோன் மணியைமனதிலெண்ணியிந்தனகடோரனியைக்காணவென்று, வா ன்மைபெற பாரபரத்தை நிலையாராய்ந்து வாகுடனேகருதிநிலைநின் றுபோற்றே. சருக

போற்றவேவஷ்டாங்கந் தன்னிற்சென்று புகழாகயோகவாசா ம னதிலுன்னி, ஆற்றவே வம்பரத்தை மேலேநோக்கி ஆதாரத்தா லே அருவித்தாண்டி, சிற்றவேலாகிரியி லினைத்துக்கள்ளிச் சிராகந் பாசமதையுள்ளடக்கி, நாற்றமென்றுத் துருத்திநிலை சமாதியாக்கி நி வுநிலைபற்றியே தானமர்ந்துபோற்றே. சருஉ

வர்ணக்களிப்பு.

அமர்ந்துமேலிங்கமென்ற தாரந்தாளும் அப்பனே பூரமுடன் வீரந்தாளும், சமர்ந்துமேகெந்திபது அருகதாளுங்கடாணபாஷாண மிருதார்சிங்கு, தமர்ந்துமேருசமுடன் கந்தகந்தாளும் தாக்கான வெ டியுப்பு சீனந்தாளும், புமர்ந்துமேகெவுரியுடன் சாரந்தாளும்பூட்டி ஞர்சமயெடையாய் பூட்டினாரே. சருங

பூட்டவேயறுவகை செயநீர்தன்னால் பொங்கமுடன்தானரைப் பாய்சாஜாமம், நீட்டமுடன்சிமிழ்தனிலே பதனம்பண்ணுநிலையா னவெள்ளிதனி லிரண்டுக்கொன்று, காட்டிகமாய்தகடடித்துப் பூசி ப்பின்புசாங்கமாய் காசிக்குள் புடத்தைப்போடு, வாட்டமுடனயட மாறியெடுத்துப்பாரு மாசற்றவெள்ளிபது பழுக்கும்பாரே. சருச

பாரப்பாவெள்ளிபது பழுத்துமிக்கப் பாங்கானமாற்றதுவு மா றதாகும், சீரப்பாவெள்ளியிடை யிரண்டுக்கொன்று சிறப்பாகத்தங்க மது வொன்றுசேர, நாரப்பாயப்புடனேவேதிக்கும்பார்ப்பயரனப



சுமையதுசொல்லப்போமோ, கூரப்பாசிடு வசயிதுவேதைமாற்கங்கூ றினேன்போகரிஷி யுண்மைதானே. சருரு

லிங்கம்போக்கு.

உண்மையாமின்னமொரு போக்குகேளு ஓகோகோவுலகு தனி ல்யார்தான்செய்வார், கண்மையாம்ரிஷிமுனிவர்சித்தர்செய்வார்காசி னியில் நூல்பார்த்தோர்செய்வார்கள்தான், திண்மையாம் லிங்கமொ ருபலமேயாங்கு தெளிவானவரப்பொடியும் தாளகந்தான், வண்மை யாமிருதாருசிங்கிதானு மணக்குமுடன் துருசடனேகாரமாமே. ()

காரமாஞ்சாரமுடன் வீரந்தாளும் கருவானபூரீறுஞ் சாம்பிரா ணிபூரமாம் குடனுடன்மதியும்போடு புகழானசீனமுடன் கரியுப்பா கும், நிரமாமித்தனையுஞ் சரிநேரொக்க திகழவேகுழிக்கல்லில்பொடி த்துக்கொண்டு, சோரவேவறுவகைசெயநீர்தன்னால் சூட்டியரையெ ண்சாமம் புகலக்கேளே. சருஎ

கேளேநீமெழுகாலேகுகைதான்செய்து கெட்டியாய்லிங்கமதை யுள்ளேவைத்து, கோளேதான்வாராமல் சீலைசுற்றிக் கொப்பனவே ரவிதனிலே காயவைத்து, தாளேதான்வச்சிரமாஞ் சீலைசெய்து தாக் குடனே குழிவெட்டிவுமிதான்கொட்டி, மீளேதான் கரிநெருப்பைக் கொட்டியேதான் மிக்கானதீமூட்டியாட்டிடாயே. சருஅ

மாட்டவேமூன்றுநாட் சென்றபின்பு மயங்கியேதிரியாதே மை ந்தாகேளு, வாட்டமுடன் தீயாறிதானிருக்கும்வளமானலிங்கமது யி ருக்கப்போகும், தாட்டிகமாய்நீயெடுத்துப்பார்க்கும்போதுசாங்கமாய் லிங்கமது வுருக்குபோலாம், காட்டமுடன்றனெடுத்துமெழுகுசெய் யகலமானபோக்குவழி சொல்லக்கேளே. சருகூ

சொல்லவே வராகத்தின் நெய்யோடொக்கசுறுக்கானவெருக்க ன்பால்சமனதாக, வெல்லவேலிங்கமதையோட்டிவிட்டுவேகமுடன் சுருக்கிடவே மெழுகுமாகும், புல்லவேமெழுகதனைவெள்ளிசெம்பில் புகழாகத்தான்கொடுக்க மெழுகுமாகும், மெல்லவேவாறடித்துப்புட த்தைப்போடு மேலானபொன்னதுவு மாகுந்தானே. சசுo

பொன்னானமட்டமுடன்நாலுக்கொன்று பொலிவான தங்கமது வொன்றுசேர்க்க, மன்னானமன்னர்மெச்சும் பொன்னேயாச்சுகமத் தான வேதையிதுசித்தர்வேதை, வன்னானரிஷிமுனிவர்செய்யும் வே தைவாகுடனேமாணுக்கள்பிழைக்கவென்று, தென்னானுங்களுக்கு த்தெளிவாகத்தான் தேற்றமுடன்பாடிவைத்தேன்தெளிவைப்பாரே

தெளிவானவாதவித்தை வதீதமெத்த தேசத்தில்கிட்டாதுசில யோகிக்கு, ஒளிவானசித்தரெல்லாமறைத்துவைத்தார்ஓங்காரகோசதாக்கள் சூதார்கண்டார், செனிவாகசாத்திரத்தின்மறைப்புமார்க்கம் நேர்மையுடனானுரைத்தபாவலனைப்போல்,வழியாகச்சொன்னவர்களாருமில்லைவையகத்தில் போகரைப்போலவார்தானே. ௬௬௨

தானானபிர்மவித்தையறியவேண்டும் சதாகாலஞ்சமாதியிலே நிற்கவேண்டும், கோனான குருவருளைகாணவேண்டும் காணாட்டால்காயுமில்லைபூவுமில்லை, வேனான பரஞ்சுடரைநிர்த்தம்நிர்த்தம்விரும்பியே பேரின்பங்காணவேண்டும், பானான காயசித்தி யோகசித்திபாங்கான குளிகையுடசித்துதானே. ௬௬௩

காணவேவண்டபகிரண்டமெல்லாங் கடிதானவடிமூலங் காணவேண்டும், பூணவே பூரணத்தையறியவேண்டும் யோக்கானவஸ்துவெல்லாங்காணவேண்டும், தோணவேசுழுத்தியிலே நிற்கவேண்டும் சூட்சமுடனுடெல்லாமறியவேண்டும்,வேணவேவம்பரத்தை நாடவேண்டும் வெட்டவெளிசின்மயத்தைக்கூடநன்றே. ௬௬௪

கூடவேமனந்தேறிநிற்கவேண்டும் குவலயத்தில் தூரியம்விட்டுப்பிரியவேண்டும், நாடவேநடுமையமேறல்வேண்டும்நாதாக்கள்கூத்தெல்லாங்காணவேண்டும்,தேடவேவாலைதனைக்காணவேண்டும்தெளியாதமூன்றெழுத்தைப்பற்றவேண்டும், நீடவேசிதானந்தவழியில்நின்று நிட்களமாய்மேலவரைபோகநன்றே. ௬௬௫

நன்றானவர்ச்சனைகள் யாவுந்தேர்ந்து நாதாக்கள்பூசிக்கும் நிலைமையைப்பார்த்து, குன்றானபிராணயந்தன்னிற்சென்று கொடிதானகாமத்தை நிவர்த்திசெய்து, பன்றானபாபூசைசிவபூசையாவும்பாங்கான ஞானத்தின்சுடலைத்தாண்டி, வன்றானமாயசமுசாரத்தை மறந்தவனே சித்தரினிலொருவனாமே. ௬௬௬

பாஷாண மெழுகு.

ஆமப்பாவின்னமொருகருமானங்கேள் அப்பனேசங்குவென்ற பாஷாணந்தான்தாமப்பாதிருகுகள்ளிப்பாலைவாங்கிப்தப்பாமற்றுன் சுருக்குசாமம்நாலு, வேமப்பாகொடுத்தவுடன்கட்டிப்போகும் வேதக்குச்சொல்வோம் நாதாக்கள்மறைப்பையெல்லாம்கவில்வேன்பாரே

கவிலவேயாமை யென்னுவிலாங்குதன்னை நாட்டமுடன் காயிட்டுத்தயிலமாக்கி, குவிலவேசிற்றுண்டமஞ்சள்தானும் கூடவேதான் கூட்டிகலந்துகொண்டு, கவிலவேசங்கென்றபாஷாணத்தைக் கருவாகவூட்டி விட்டுசுருக்குதாக்கு, புல்லவேமெழுகாகும் பாஷாணந்தான் ட்டினூற்லோகத்துமாந்தற்காமே. ௬௬௮



ஆமேதான்மெழுகெடுத்து ரவியில்தாக்கு அப்பனேபத்துக்கொன்றுபோடு, தாமேதான்ரவிதானும்வெளுத்துக்காணும் தரித்தவேவெட்டைக்கிடைதான் வெள்ளிசேர்த்து, நாமேதான்சொன்னபடிவங்கஞ்சாரயமாகவெள்ளியதுவலுத்துப்போச்சு, போமேதான்திராவகத்துக்குயிருமாச்சு போக்கானசெம்பதுவும்கட்டிப்போச்சே. ௬௬௯

போச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு பொங்கமுடன்மெழுகெடுத்துவெள்ளியத்தில், பாச்சவேபத்துக்குஒன்றுதாக்குபதமுடனே நீரதுவும்நீங்கிப்போகும், மூச்சொன்றுவிடுகாதேயின்னங்கேளு மூக்கியமாய்மேற்சொன்னவெள்ளியத்தை, காச்சுடனே வறுவகைச்செயநீர்தன்னில்களிப்புடனேமூன்றுமுறைவுருக்கிச்சாயே. ௬௭௦

சாய்க்கவேவெள்வங்கம்வெள்ளியாகும் சாங்கமுடன்பத்துக்குரண்டுவெள்ளி, மாய்க்கவேதானுருக்குமகத்தாம்வேதை மானிலத்தில் சொல்லுவரோசித்தர்தாமும், காய்க்கவேபொன்வேண்டு மென்றுயாரால் கருவாகவென்னுடையநூலைப்பாரு, ஏய்க்குமேபின்னொருவர் நூலானுமென்போலும்யாருரைப்பார்சித்தர்தாமே. ௬௭௧

சித்தர்பழிப்பு

சித்தானசித்தர்முனியார்தான்சொல்வார்சிறந்தவையோகியருஞ் சொல்மாட்டார், முத்தானசாத்திரங்களனைமுன்டு முன்பின்னேப்பாடிவிட்டாசித்தர்தாமும், பாடிதான்வழிதுறையுங்காணார்மாண்பர்பாழாகிகட்டலைத்துகெட்டலைந்து, தெத்தானபித்தமதுவதிகமாகித்தெருதெருவாய்திரிவார்கள்மடையர்தாமே. ௬௭௨

மடையரானவர்கள்நூலைப்பாரார் மாசாட்டமாகவே கெடுத்தாரென்று, கடையானநூல்வழிகளறியாமற்றான் நாதாக்கள் கைமறைப்புயார்தான்காண்பார், மடைபோலபேசவல்லார்நூலைப்பாரார் மதிகுலைந்துநிலைவறிந்துவறிவுகெட்டு, கடையானசாத்திரங்கள்மிகவும்பார்த்துகருத்தெரியாமலிடர்கள்மெத்தவாமே. ௬௭௩

மெத்தவுண்டுமுழுமடையரென்னசொல்வார் முனையானசாத்திரங்கள்மிகப்பாருமல், சத்தமுடன்ரிஷிமுனிவர்சொன்னநூலைசூட்சதிருட்சங்காணுமற்றான், பத்தரென்னசித்தர்களைமெத்தப்பேசிபலபலவாம்சாத்திரத்தைமறைப்புசெய்வார், குத்தமென்றுதிட்டியல்லோசாபந்தன்னைக் குவலயத்தில்தேடிக்கொள்ளுமாண்பராமே. ௬௭௪

## போகர்வெழியாக்கம்.

வெளியானசாத்திரங்களைத்தான்கண்டேன் வேதாந்தத்தாயினதுயருளினாலே, ஒளியானகாலாங்கிநாட்சத்தன்னால் ஒளித்திருந்தசாத்திரங்கள்யாவுமறப்பை, தெளிவாகமானிடர்கள்பிழைக்கவென்றுதேசதேசங்கள்முதல்குளிகைபூண்டு, தெளிவானமலைகுகைகள்யாந்தரங்கள்நேர்ப்புடனேகுளிகையிட்டு பறந்தேன்தானே. ௪௭௫

தானானசித்தர்முனியிருப்பிடங்கள் தாக்கானசமாதிமுதலெல்லாம்புரந்து, கோனானகவலாயவர்கள்செய்தநூலைகுகைதனிலேமறைத்துவைத்தகருவையெல்லாம், பானுகசித்தரிடம்வாதுபேசிபழிபோட்டுசாத்திரங்களைத்தும்பெற்றேன், மானுகமறைத்துவைத்தநூட்பமெல்லா மதிப்புடனேயாறாய்ந்து நூல்செய்தேனே.

செய்தேனேபெருநூலேழாயிரந்தான்செப்பினேன்போகரிஷிசத்தகாண்டம், செய்தேனேசாத்தாக்களுனவைப்பார்த்து திறட்டினேன்குருநூலாய்க்காவியந்தான், செய்தேனேநூலினிடை வன்மைபார்த்து, சிறியேசித்தரெல்லாஞ்சினந்தாரென்னை செய்தேனேலோகமெல்லாஞ்சித்தாச்சென்றுசித்தரெல்லாமெனைச்சபிக்கவந்திட்டாரே.

வந்திட்டார்கோடானகோடிபேர்கள்வரைகோடி அனைகோடி தொந்தக்கோடி, கொந்திட்டுசித்தர்களைசெய்தேனென்று கொடிக்குள்ளேயெனைக்கொல்லவந்தாரையா, முந்திட்டுபான்பயந்துகாலாங்கிதன்னைமுறையிடவேனதையர்கிருபையாலே, தந்திட்டசாபமதைநிவர்த்திசெய்து தாரணியில்பிழையென்றுயென்னைவிட்டாரே.

## போகர்கமலமுனியைகண்டது.

விட்டவுடன்யானுமல்லோசீனதேசம் விரைப்பட்டுபோயிருந்துகமலர்தன்னைச், சட்டமுடன்சமாதியிலேயிருந்தாரங்கேசார்புடனேயவர்பாதம்தொழுதிட்டேதான், இட்டமுடனயானுமல்லோ சீனதேசம் யின்பமுடனகாணவென்றுகுளிகைபூட்டு, கட்டமுடன்யானவர்தேனென்றுசொல்லிக் கமலமுனிதன்பாதந்தொழுதிட்டேனே. ()

தொழுதிட்டபெருந்துக்கு முனிதான்சொன்னார்தொல்லுலகில்நீர்கற்றவித்தைதன்னை, பழுதிட்டமில்லாமல்சீனதனனில்பட்சமுடன்மாணுக்கள்பிழைக்கவென்று, முழுதிட்டதன்னுடனேமுனிதான்சொல்ல முயற்சியுடன்கற்றவித்தைப்பழுதில்லாமல், வழுதிட்டமுடன்றானுமறைப்பையெல்லா மானிலத்திற்கொட்டிவிட்டேன் வன்மையாரே. ௪௮௦



## வெள்வங்கவெட்டை

வன்மையாமின்னமொருமாற்கங்கேளு வளமானவங்கமொருபலமேதூக்கு, இன்மையாந்தாளகமும்பாஷாணந்தான் திறமானசவுக்காரஞ்சாரந்தானும், உண்மையாம்பூநீறுகிளிஞ்சிற்சுண்ணம் வுத்தமனேவகைக்குவொருபலமுமதுதூக்கு, நன்மையாங்கல்வத்திலாட்டியேதான் நலம்பெறவேகலசமென்றகுடுவைவாங்கே ௪௮௧

வாங்கியேமுன்னரைத்தசரக்கையெல்லா மார்க்கமுடன்கலசத்திலுள்ளேபோட்டு, தேங்கியேதிரியாதேமைக்காகேளு தெளிவானவங்கமதைசாக்கில்போட்டு, ஓங்கியேசில்லிட்டுச்சீலைசெய்து வுத்தமகோழியென்றபுடத்தைப்போடு, தூங்கியேதிரியாதேமைந்தாபாரு துடியானகளங்குபோலிருக்கும்பாரே. ௪௮௨

களங்கானவங்கமதுவொன்றேயாகும் கடிதானவெள்ளியதுவொன்றேயாகும், குளங்கானருகமதுவொன்றேயாகும்கொடிதானசாரமதுகாலேயாகும், பளங்கானமதிசேயநீர்தன்னுலாட்டிபாங்குபெரவிச்சிலையதுலேசாய்ச்சட்டி, முளங்கானவிதனிலேகாயப்போடுமுத்தமனேவெட்டிவிட்டுச்சீலைசெய்யே. ௪௮௩

செய்யவேகாடையென்றபுடத்தைப்போடு சேரவேவோடதுகான்குளிந்தபின்பு, வையவேநானெடுத்தும் பார்க்கும்போது பாங்கானபற்பமதுசொல்லப்போமோ, வெப்பவேறவிதனிலேபத்துக்கொன்று விதமுடன்றானூந்தக் கொடுக்கும்போது, துய்யவேதுய்யானுக்கிகொப்பதாகும் துரைராசர்மெச்சுகின்றமதிபுமாமே. ௪௮௪

மதியானவெள்ளிதனில்பத்துக்கொன்று மாற்கமுடன்றான்சேர்த்துவங்கத்தூது, நிதியானவெள்ளியதுதய்யருபாய் நிகரில்லைமாற்றில்லைகணக்குமில்லை, பதியானபதிதனிலேநின்றுகொண்டு பட்சமுடன்திரிபுரையைப்பணிந்துபோற்றி, துதியானவாலைதனைவணங்கிநித்தம்ருட்சமுடனிறங்குநிலைகண்டிடாயே. ௪௮௫

கண்டபின்புசமாதிக்கு நிலையைப்பாரு காலாங்கிஐயர்தம்மைக்கருத்திலுன்னி, அண்டாண்டம்தான்புகழுமெந்தனையாருளிக்கால்கதிபெறலாமன்பர்களே, தொண்டுசெய்துசித்தர்களை வணங்கிநித்தம்தொடர்ந்துமேயவரிடத்தில் பத்திவைத்தால், விண்டுபுகழ்மாலயனர்கிருபையாலே விட்டகுறைவுந்தனுக்குவாய்க்குந்தானே. ௪௮௬

## துருசுபற்பம்.

வாய்க்கவேவின்னமொருகருமானங்கேள்வளமானதுருசுவொருகட்டிவாங்கி, காய்க்கவேபொன்வேண்டுமானலப்பா கணைக்காகவெடி

யுப்புசரிநேராக, மாய்க்கவேபூநீறுசரியோடொக்கமாற்கமுடன்தான் கூட்டியரைப்பாய்நீதான், தோய்க்கவேயுறுவகைசெயநீர்தன்னால்து ப்புரவாய்தானரைப்பாய்சாமம்நாலே. ௪௮௭

காலானசாமமதுதானரைத்து நலமாகப்பில்லைதட்டிக் காயவை த்து,மாலானபுடம்போடப்பற்பமாகும் மகத்தான துருசுனிடபச்சை நீங்கி, சேலானவெளுப்புநிறம்திகங்காட்டும் செழிப்பானபற்பமது வந்துபோனால், காலானமின்னமொருபுடந்தான்போட்டுக் களிப்புட னேதானரைப்பாய்செயநீராலே. ௪௮௮

செயநீரைவிட்டுமல்லோயரைப்பாய்சாமஞ் சிறப்புடனேயில்லை தட்டிக்காயவைத்து, கயமுடனேதட்டிவிட்டு சீலைசெய்து நன்றாக வீதனிலேகாயவைத்து, பயமுடனேநீமூட்டுபுடத்தைப்போடுபக்கு வமாயாறினபின்னெடுத்துப்பாரு, மயமுடயபற்பமதுயென்னசொல் வேன் மாணுக்கள்பிழைக்கவென்று மதிப்பிட்டேன. ௪௮௯

மதிக்கவேபற்பமதுநேரேகுரு மாட்டடாகுழிக்கல்லில் செயநீ ராலே, கதிக்கவேதானரைப்பாய்நாலுசாமம் தன்மைபெறமூசையிட் டுப்புடத்தைப்போடு, விதிக்கவேபுடமாறியெடுத்துப்பாருவிசியமாம் பற்பமதுகாரமெத்த, துதிப்புடனேவெள்ளிதனில் பத்துக்கொன்று துறைபார்த்துகொடுத்துப்பார் மாற்றெட்டாமே. ௪௯௦

எட்டானமாற்றதுவுமென்னசொல்வேன்யெழிலாலபசுமையது மிகவேகாட்டும்காட்டானகுணமதுவெகுவிநோடும் கசடகற்றிமாற்ற துவுங்காணலாகும், மாட்டானபொன்னதனில் நாலுக்கொன்றுமாட் டடாதங்கமதுஒன்றுகூட்டு,திட்டானவராடித்துப் புடத்தைப்போடு திகழானபசுந்தங்கஞ்சொல்லப்போமோ. ௪௯௧

சொல்லவென்றால்நாவில்லையாவமில்லை குட்சாதிகுட்சமெல்லா ஞ்சூசுத்நாட்டு, மெல்லவேசிவனத்தைசெய்துகொண்டு மேதினியில் யோகத்துக்குருதிபாரு, வல்லவேஞானத்தைமிகவேவுன்னிவழியான முனைமூலத்துள்ளேபுக்கி, சொல்லவேஓங்காரமுள்ளடக்கி குழிப்புட னேசமாதிநிலையறிந்துபோற்றே. ௪௯௨

போற்றவேசிகாரத்தின்மீதிருந்து பொலிவானமகாரத்தை புன ளிப்பாரு, ஆற்றவேவகாரமா மனுதிபீடம் அப்பனேககாரமாம்பிரம பீடம், தூற்றவேயகாரமாம்லட்சுமிபீடம் துலையாதகர்மேத்திரியமை த்துக்குள்ளே, மாற்றவேமனோலயத்தைமருவிப்பாருமகத்தானநா க்கலாடுங்கூத்தே. ௪௯௩



கூத்தான பஞ்சகர்த்தாளாடுங்கூத்துகுடியானவீட்டுக்குள்ளேந்து போம், காத்தானவாசலது வெனப்பதாகும் கருவிகரணாதிமுதல் பொருந்துக்குள்ளே, மாத்தானும்வந்தவுடன்சாமிபூரணமும் மகத்தானதி ரேகமதுபொய்யாம்பாரு, ஆத்தாளைவணங்கிமிகவுபாசரித்து அப்ப னே சாயுச்சியபதத்தைதேடே. ௪௯௪

வெள்ளிவித்தை.

தேடையிலேயின்னமொருமாற்றங்கேளு தெளிவாகவெள்ளிவி த்தையார்தான்காண்பார், வாடையுள்ளபாஷாணம் பலமொன்றாகும் வகுப்பானகோழியென்றமூலிதானும், மேடையிலேதான்விளையும் மூலியப்பா மேன்மையுடன்கொண்டுவந்துசாற்றைவாங்கி, ஆடையி லேதான்பிழிந்துமைந்தாகேளு அப்பனேநாற்சாமஞ்சுருக்குதாக்கே. ௪௯௫

தாக்கவேபாஷாணம்புகையடங்கி சார்புடனேகட்டியதுபொரு மிக்கொல்லும், நோக்கவேபூநீறுவும்பெடுத்துஇறுக்கமுடன்றான்சே ர்த்துகவசம்செய்து,போக்கவேரவிதனிலேகாயவைத்துபொங்கமுட ன்கணும்புசீலைசெய்து,பார்க்கவேசட்டிதனில்மணல்தான்கொட்டி பாங்காகநடுமையம்வைத்திடாயே. ௪௯௬

வைத்துமேசட்டிகொண்டுமேலேமூடிவாகுடனே மண்சீலைவலு வாய்ச்செய்து,பொய்த்துமேபோகாமல்வடுப்பிலேற்றி புகழாகத்தா ளெரிப்பாய்நாலுசாமம், கைத்துமேயாறினபின்னெடுத்துப்பாருகன மானபாஷாணமுருக்கிக்கட்டும் மெய்த்துமேகட்டினதோர்பாஷாண த்தில் மேன்மையுடன்வங்கமதுகாலாய்க்கூட்டே. ௪௯௭

கூட்டியேவங்கத்தோரிடைதானுசம்கு முறவேவறுவகைசெயநீ ர்தன்னால், தாட்டிகமாய்தானரைப்பாய்நாலுசாமம் சார்பாகபில்லைத ட்டிக்காயவைத்து, நீட்டமுடன்வோட்டிவிட்டுச்சீலைசெய்துநேர்பா தக்காடையென்றபுடத்தைப்போடு, வாட்டமுடன் கோழியென்ற புடந்தானுகும்மைந்தனே நீயாறியெடுத்துப்பாரே. ௪௯௮

எடுக்கவேபற்பமதுயென்னசொல்வேன்என்மைந்தாநாதாக்கள் செய்யும்வேதைகொடுக்கவேசெம்புதனில்கொடுத்துப்பாரு, சொக்க முள்ளவெள்ளியதுகூறப்போமோ, மடுக்கவேபத்துக்குவொன்றுவெ ள்ளிமாற்கமுடன்றானுருக்கிகொடுத்துப்பாரு,விடுக்கவேவுப்புக்குகா ய்ப்புண்டாகும்விபரமுடன்செய்யும்வழியறிந்துபாரே, ௪௯௯

பார்க்கவேநாதாக்கள்கைமறைப்பு கருவாளிகண்டறிவான் மற் றோர்காணார், ஏர்க்கவேயவர்களிடம்தொண்டுசெய்து என்மகனேய

வர்கள்மனக்கனியவேண்டும், பூர்க்கவேமனதுவந்துவுந்தனுக்குபுசிச்சியுடன் வேதைமுகம்யாவுஞ்சொல்வார், தீர்க்கவேசாத்திரங்கள் முரைப்பார் தீர்க்கமுடனறிபவனேசித்தனுமே, ௫௦௦

சாரக்கட்டு

சித்தனுமின்னமொருமார்க்கங்கேளு சிவப்பானசாரமது கட்டு சொல்வேன், கித்தமுடன்காரமதுவொன்றேயாகும் கிகாரணசினமது வொன்றேயாகும், அத்தமுடன்பூநீறுவொன்றேபாகும் அடியானசிப்பியென்றதன்னைத்தானும், முத்தமுடன்சிப்பியுடசெயநீர்தன்னல் மூன்றுநாளரைத்து பாவகமேசெய்யே. ௫௦௧

செய்யவேமெழுக்காலேகுகையுண்டாக்கி செழிப்புடனேசாரமதுக்கங்கிபூட்டி, நையவேசண்ணம்புசீலைசெய்து நலம்பெறவேவாலிதனிலேகாயவைத்து, முய்யவேமுழப்புடந்தான் பூப்புடந்தான் முயானமணல்தனிலேநடுவேவைத்து, பையவேமணலாலேமேலேமூடி பாங்குபெறதீமூட்டி போட்டிடாயே. ௫௦௨

போடவேதீயாறியெடுத்துப்பாரு பொங்கமுடன்சாரமதுகட்டிப்போடும், நீடவேமுப்புடமிப்படியேதீறு நிலையானசாரமதுதங்கம்போலாம், நீடவேசாரமதனைதான்சொல்லக்கேளாய் கொடிதானகாயுருவிசாம்பல்தன்னில், மூடவேசாரமதைவுள்ளேவைத்துமுழுகவேசாம்பலையும் மேலேபோடே. ௫௦௩

போடவேசட்டிதனில்பொதிந்துமூடி பொங்காமல்சீலையதுவலுவாய்ச்செய்து, கூடவேதணல்மூட்டிமூன்றுநாளாய் சுகம்பெறவேதானெரிப்பாய்மைந்தாகேளு, நாடவேபாரினபின்னெடுத்துப்பாருதடியானசாரமதுக்கிணேலேறுண்டோ, ஆடவேசாரமதைபென்னசொல்வேன் அப்பனேகருவாளிசெய்வான்பாரே. ௫௦௪

பாரேதான்சாரமதுகட்டுமானல்படுமுன்னே சாக்கெல்லாங்கட்டிப்போடும், நேரேதான்காரமதைநொடியிற்கொல்லும் நோனசெம்பதுவுமூறல்போகும், சீரேதான்சாரமதுகட்டுமானல் சிறப்பானவினசாரத்தின் சேர்மைபாரே, கூரேதான்சரக்குதான்காலனுகும்கொடிதானசாரத்தின் சேர்மைபாரே, ௫௦௫

சேர்மையாஞ்சாரமதுகட்டிற்றனல் செந்தூரம்வேதைமுகம் காணலாகும், கூர்மையாம்சூதத்தைக்கொல்லுங்காலன் கொடிதானசுண்ணமதைசெப்பவென்றால், வார்மையாம்வுப்புக்குச்சத்துருமேயாகும்வாகானசெந்தூரகோடிவேதை, மேர்மையாஞ்சித்தர்முனிசெய்வாரப்பா மேதினியில்மற்றவரால்செய்யப்போமோ. ௫௦௬



போகுமேசாரமென்றசெந்தூரத்தை பொல்லாதவயிற்றுவலிகுன்மத்தொக்கும். ஏகுமேவாயுவென்றதென்பதுக்கு மெழிலானசோகைகாமாலை யேற்கும், பாகுமேகுதகத்தில்வாய்வுள்ளோர்க்கும் பாங்கானமகோதரமாம்பிலியோர்கும், வாகுடனேதேனதிலேகொடுத்தாயானல் வளமானதேகமதுகாப்பமாமே. ௫௦௭

காந்தகர்பம்.

கற்பமாமின்னமொருகருமானங்கேள் காசினியோர்பிழைக்கவென்றுலகுவாய்ச்சொல்வோம், அற்பமென்றுநினையாதே வன்பாகேளு அருங்காந்தமூசியென்றபிதழதாகும், தற்பாவாய்பலமதுதான்கொண்டுவந்து தடியானவறுவகைசெயநீர்தன்னல், சிற்பரம்போல்மெழுகாக்கிமூசையிட்டு சில்லிட்டுச்சீலையதுவலுவாய்ச்செய்யே.

வலுவாகச்செய்துமல்லோரவியில்வைத்து வாகுடனேதீமூட்டிப்புடத்தைப்போடு, சுலுவானபுடமதுதான் போட்டாயானல் சுறுக்கென்றகாந்தமதுயீயமாகும், பளுவானயீயமது சொல்லப்போமோ பதந்தெருந்துபொடுத்தவனே வாதியாவான், மெழுகானகாந்தமதுயீயமானல் மேதினியில்வெகுகோடி வேதையாமே. ௫௦௯

வேதையாங்காந்தமென்ற யீயந்தானும் விரைவானகெந்தியிடசத்துதானும், பாதையாம்நாகமென்றசத்துதானும் பாங்கானவயத்தினிடசத்துதானும். மேலதயாம்பூநாகச்சத்துதானு மிக்கானவப்பிரேகசத்துதானும், தோதையுடன்றனெடுத்து வொன்றாய்க்கூட்டி தொந்தமுடன் றனைடையாய்த்தங்கஞ்சேரே. ௫௧௦

தங்கமுடனிடையாக வொன்றாய்க்கூட்டித்தாழ்மையுடன்றனைப்பாய்கையான்சாற்றல், தங்கமுடன் நாற்சாமமரைத்துப்பில்லைதுப்புறவாய் பில்லைதட்டிகாயவைத்து, பங்கங்கள்வாறமல்லூட்டிவிட்டுப் பாங்குபெறசீலையது வலுவாய்ச்செய்து, அங்கமுடன்கோழியென்ற புடத்தைப்போடு அப்பனேசெந்தூரமாகுந்தானே. ௫௧௧

தானுகயிப்படியேபத்துபுடம்போடு தாக்கானமூலிகையாலரைத்துப்போடு, வேறுகசெந்தூரம் விரமெத்த வேதைக்கு வெகுதூரமெட்டியோடும், பானுகசெந்தூரம்பதனம்பண்ணு பத்துக்குவொன்றுகுருவெள்ளிசெம்பில், மானுகேன்கொடுத்திடவே வேதிக்கும்பார் மகத்தானமருந்தினிட போக்குத்தானே. ௫௧௨

போக்கானசெந்தூரக்குன்றியுண்ணு பொங்கமுடன்மண்டலந்தான்கொண்டாயானல், தாக்கானதேகமதுகற்றாணுகும் தலையாது

வைத்துமிகவூதிக்காணும், நோக்கானகரைதிரையுமற்றுப்போகும்நோய்தானுஞ் சடந்தனிலேமேவலாகா, பாக்கானகண்ணுரண்டு மொளியேவீசும் பார்வைக்குவருந்துதிபுங்காணலாமே. ௫௧௩

காணலாம்நட்சத்திரம் பகற்காலத்தில் கருவிழியுமொருக்காலுந்திரைதானில்லை, பூணலாம்தேகத்தைவுறுதிபண்ணு போக்கான சட்டையது தள்ளிப்பாரு, வேணலாம்வெகுகால மிருக்கலாகும் வேண்டியேதலகிலேக்குசமாகிதேட, நீணலாம்வாசிபதுமேல் நோக்காது நீணிலத்தில் நீயுமொருசித்தனாமே. ௫௧௪

போகர்கெடை கட்டிவித்தை.

சித்தனும்கெடையாட்டஞ்சொல்வேன்கேளு செழிப்பான நூலாக்கோலாமூங்கலொன்று, முக்தலாய் நூறடியாம்பருவநீட்ட முனையானகோம்புக்குயிர்தானநாலு, சுத்தமாய்வெட்டாரவெளியில்நின்று சுகமுடனேகால்நாட்டிபதங்குமாட்டி, சுத்தமுடன்முனையிடையில் காந்தம்வைத்து துறையானவிரும்பினிடசட்டைபூணே. ௫௧௫

பூணவேகைதனிலேமாத்திரைக்கோலும்புகழானசெற்றிதனிலே நேகாலமையும், காணவேமானிடர்கள்கடுக்கவென்று காதக்கள்மெச்சிடவேகச்சைபூண்டு, காணவேதலைதனில்கலசப்பானை கடினமுடன்பத்தொன்றுவொன்றேயொன்று, வணவேபானைதனில் காந்தம் பூசி வுத்தமனேகிடைதனிலேயேறலாமே. ௫௧௬

ஏறலாமுச்சிவரைக்கிடைமேல்நின்று ஏற்றமுடன் துத்தாரிவாயிலேந்தி, கூறலாமோடியென்ற வித்தைதன்னைகுவலயத்தில் மெச்சிடவேபோகர்தாமும், தேறவேமேல்நின்றுகாணத்தன்னில்திறமுடனே வாசியைத்தான்கீழ்நோக்காமல், மாரவேபிராணவத்தைமாறிமாறிமாற்சமுடன்நின்றுவிளையாடினாரே. ௫௧௭

ஆடினார்சீனமென்றதேசந்தன்னில் அன்புடனேமானுக்கள்பிளக்கவென்று, பாடினார்சித்தர்முனிசொன்னநூலைப் பரிவாகத்தானெடுத்துபாருலோர்க்கு, மூடினதோர் வுளவெல்லாமிகவேபார்த்து முயற்சியுடன்வெளியரங்கமாகச்செய்தேன், கூடினதோர் கருமானமெல்லாந்தேர்ந்து குறிகண்டுகிலேகண்டார்சீனத்தாரே. ௫௧௮

சீனபதிமானிடர்கள்செய்யுமார்க்கம் சித்தர்முனிரிஷிதேவர் முறைகளாகும், மானபதிமாண்பர் கருவாளியல்லோ மண்டலத்திலொருமில்லைபேருமில்லை, தானமுடன்கொச்சியென்றமார்க்கத்தாரும் சட்டமுடன்செய்வார்களிவர்போல மோவானமுடன்தேவதாரிஷிக்கொப்பாவார் மண்டலத்திற்சீனபதிமார்தர்தாமே. ௫௧௯



தாமேதான் சத்தியங்களுண்டு தாணிதனில்பொய்சொல்லார் மாண்பர்தாமும், வேதமேதான்நீதிமனுமுறைகளுண்டு வெகுகோடிவித்தைகளுஞ்செய்வாரப்பா, போமேதான்பொய் யொன்றுஞ்சொல்லமாட்டார் பொன்னுலகுக் கொப்பானமாந்தரப்பா, நாமேதான் கண்டபடி சொன்னேனப்பா நாட்டினிலே சீனத்துக்கிணையாகாரே. ௫௨௧

ஆகாதுகாலங்கி நாதர்தாமும் அவருடைய சீர்பாதகிருபையாலே, போகாததேசமெல்லாங்குளிகைபூண்டுபோனேனே சேரசோழபாண்டிநாடு, சாகாதசித்தர் முனியென்று சொல்லி சமாதியிலேயிருப்போமென்றமர்ந்தார்தம்மை, வேகாதவெயில்தனிலே, தவசிருந்தவேணசித்தப் பொய்ஞ்ஞானி கண்டிட்டேனே. ௫௨௨

கண்டிட்டேனவர்களிடம்வாதுபேசிக் கருவானமறைப்புமுதல் திறப்புங்கேட்டேன், விண்டிட்டசாத்திரங்கள் கற்றோர்போல விண்வார்த்தைபேசியல்லோ பொய்யைச்சொல்வார், துண்டிட்டுவவர்களிடம்துஞ்சிப்பேசி தூரானமாராட்டப்பேச்சரிந்து. பண்டிட்டசீனபதிவந்துசேர்ந்து பலபலவாம்வித்தை களைக்கற்பித்தேனே. ௫௨௨

கற்பித்த வித்தைகளும் கணக்கேயில்லை கால்மாடு தலைமாடுபிரட்டார்மாண்பர், அற்புத்திசற்றேனுமிலலாபாலர் துறைமுகமுமறுமுகங்கண்டதில்லை, விற்புத்தியான தொருமாண்பரப்பா விண்ணுலகில்சீனபதிக் கிணையாமோதான், சற்புத்தியுடைய தொருசித்தர்க்கொப்பாய் சாற்றலாஞ்சீனபதி தேசத்தாரே. ௫௨௩

தேசமென்றால்தேசமது சீனமாமோ செகத்திலேகண்டவர்கள் யாருமில்லை, பாசமென்றால் பிரமத்தின் பாசமாகும்பாருலகில்சதாகித்தம்தொழுவார் மாந்தர், நேசமென்றால் போகரிஷிதன்னைப்போற்றிசெடுங்ககலஞ்சமாதியிலே யிருந்தார்கோடி, வாசமுடன் சீனபதியாவுஞ்சண்டேண வளமாகமாந்த ருடவுண்மைபாரே. ௫௨௪

நாகவெள்ளி.

வண்மையா மின்னமொரு கருமானங்கேள் வுத்தமனேமானுக்கள் பிழைக்கவென்று, தண்மையாம் நாகமது சேர்தானொன்று தாக்கான பாஷாணம்சேர்தானொன்று, கண்மையாஞ்சுண்ணாம்புஞ்சேர்தான்பாதி கருவானம்திபுப்புசேர்தானகாலாம், நன்மையாமித்தனையுமொன்றாய்ச் சேர்த்து கலம்பெறவே சிப்பியென்றசாரத்தாட்டே.

சாரமென்றசெயநீரி லரைத்துமைந்தா சாங்கமுடன்காகத்துக் கல்லூட்டி, காரமென்றசுண்ணாம்புசீலைசெய்து கருத்துடனே ரவிதனிலே காயவைத்து, ஈரமென்ற சீலையதுகாய்ந்தபின்பு யென்மகனே

கோழியென்றபுடத்தைப்போடு, பாரமென்றகண்ணதுவும்நீங்கிப்பே தான் பளபளத்தவெள்ளியதுவாருந்தானே. ௫௨௬

தானானவெள்ளியதுசிவத்துக்கொப்பாம்சங்கரனார்பூசைக்குயுகந்தவெள்ளி, கோனானவெள்ளிதனைகடையில்மாற்றி கொப்பனவே பூசையர்ச்சனைகள்செய்வாய், பானானபரங்களுக்குவன்னமீவாய்ப்பட்பமுடன்கோயில்குளம்கட்டவேண்டும், வேனானவந்தனாம்குருக்கள்மாற்கு வேணவுபசாரமது செய்ய நன்றே. ௫௨௭

செய்யவே திரிவாமிபூசைவேண்டும்சிறப்பானமனோன்மணியைகனுகவேண்டும், பையவேசத்தியுடபூசைவேண்டும் பாருலகில்தேவதைகள் வணக்கம் வேண்டும், மூப்பவேசிதாகந்தம் போற்றிசெய்து மோட்சத்திற்கேரும்வழி தேடவேண்டும், மையவேகாலாங்கிதனை நினைந்து மண்டலத்தில்வாழ்பவனேயோகவானே. ௫௨௮

## போகர்சொர்னவயிரவபூசை.

யோகமென்றால்யோகமதுசொல்லப்போமோயொளிவானவயிரவன்றன் பூசைசொல்வேன், போகனென்னும்வடியேனுந்தான்வணங்கி யொங்கமுடன்காலாங்கி நாதர்பாதம், வேகமுடன்றுள்பணிந்து வணங்கிநின்று வேதாந்தத்தாயினது வருளும்பெற்று, சாகமுடன்நவகோணவாசலிட்டு சாந்தமுடன்கலசமதுவைத்திடாயே. ௫௨௯

வைத்திடவேகலசமது நாலேசுற்றி யாகுடனேதேங்காயைமேலேவைத்து, கைத்திடவேமாவிலையைக்கவசம்பூண்டுகலசத்தின்கிழவதானியங்கள், மெய்த்திடவேதான்பரப்பிகலசம்வைத்துமேன்மையுடன்கலசமது பெதிர்நேராக, பைத்திடவேமஞ்சளென்ற பிள்ளையாரைப் பக்குவமாய் எதிர்வாசல்வைக்கநன்றே. ௫௩0

நன்றானரீங்காரமோங்காரத்தைநலமுடனேவஷ்டதிசை வாசல்போடு, குன்றானவயிரவனைமுன்னேவைத்துகூறவாய்பங்கிவல்லென்றேயோது, பன்றானசதுர்வாசல் தூபதீபம்பாகுடனேபாணக்கம்பகுந்தவன்னம், வன்றானவுருதானும்லட்சமோது வயிரவனார்பூசையதுவகுத்தவாரே. ௫௩௧

வாரானவாதமது முடிந்தாறால் வளமுடனே வயிரவன் பூசைவேண்டும், சிறானதங்கமது பலிக்கும்பாருசெகத்திலேசித்தர்களுஞ்செய்வாரப்பா, கூறானபுத்தியுடன்குருபதத்தைக் கொப்பனவே தான்வணங்கிநிற்கவேண்டும், காறானகாலாங்கிநாதர்பாதம் கடாட்சித்துதொழுகவென்றுபாடினேனே. ௫௩௨



## முத்துவித்தை.

பாடினேன்முத்துயென்ற வைப்புசொல்வேன் பாங்குபெறமாறுக்கள் பிழைக்கவென்று, தேடியேமுத்தினிடசிப்பிவோட்டைதெளிவானவெண்மைநிறம்போன்றதாக, கூடியேவொருசேருதானெடுத்துக்குடிலமுடன்றூளிடித்துப்பிழிந்துகொண்டு, ஆடியேநவநீதம்வெண்ணைபோல அப்பனேதானெடுத்துவளமைசெய்யே. ௫௩௩

வளமையென்னசொல்லவென்றால்வயணங்கேளுவாகான நீதமுடன்குடோரிகாரம், பளமையாம்கட்டினதோர்காரந்தானும்படிகமாம்சீனமென்ற பதிவினுப்பு, மளமையாமிதுவெல்லாஞ்சரியாய்க்கூட்டி மார்க்கமுடன்மூசையிட்டுச், சீலைசெய்து, களமையாயுலையிலிட்டுவுருக்கிப்பாரு தளுக்கானமுத்துபோல்வெளுக்கும்பாரே. ௫௩௪

வெளுப்பானமுத்துதனை யுடைத்துப்பாரு வெருளாமல்சிறுமணியாங்கருவுகட்டி, பளுக்கானமூசையிட்டுவுருக்கித்திருபாலகனேகருக்களிலேதுவாரமிட்டு, சுளுக்கானகருக்களிலே வார்ப்பாயானால் சூட்சமுடன்முத்ததுவும்பாய்ந்துநிக்கும், தளுக்கானமுத்ததனையெடுத்துக்கொண்டு தன்மைபெறராஜரிடம்சென்றுபாரே. ௫௩௫

சென்றுமேயவர்களிடஞ்சிறக்கவேதான் சீரானமுத்ததனைக்கனிதமிட்டு,ருன்றுபோல் திரவியங்கள்மிகவும்பெற்று கோடானகோடிமரியாதைபூண்டு, நின்றுமேயவர்களிடம்விடைகள்பெற்று நீணிலத்தில்நீயும்மொருவரசனுவாய், நன்றுமேகாலாங்கிநாதர் பாதம்நலமுடனேயான்வனங்கிபாடினேனே. ௫௩௬

## போகர்செம்புவுருக்கு.

பாடியேதளமென்னசெம்புரசி பழுதுள்ளகாய்ச்சுக்கல்தன்னிலொப்பாய், ஆடியேசேறொன்றுவாங்கிமைந்தா அழுகானகுருந்தக்கல்லிலொன்று,தேடியேகட்டினதோர்காரமொன்றுதெளிவானபூநீறு நாலிலொன்று, கூடியேவறுவகைசெயநீர்தன்னால்குணமுடனேதானரைப்பாய்சாமம்நாலே, ௫௩௭

நலமானசாமமதுவரைத்துமைந்தா நலமுடனேமூசையிட்டுசீலைசெய்து, காலானரவிதனிலேகாயவைத்துக்களிப்புடனேவுலையிலிட்டு ஊதித்தீரு, சேலானசாரக்கதுவுமொன்றாப்சேர்ந்து செழிப்புடனேதானுருகிசிவப்புமெத்த, பாலானமூசம்விட்டுகெண்விட்டாடும் பாலகனேகருக்கட்டிவார்த்திடாயே. ௫௩௮

வார்க்கவென்றால்சிறுகருவாம்பொடியாய்ச்செய்துவளமாகத்தானெடுத்துவார்ப்பாயானால், நீர்க்கமுடன்மணிபோல யிறுகிக்கட்டும்

திறமானசெம்பினிடவனுவுகாணும், பார்க்கவேவேண்டுமென்று லதி தமெத்தப்பாகினிலேசித்தாசெய்யும்வேதைமார்க்கம், சேர்க்கவேபடி கமென்றசாணை தன்னிற்சிறப்புடனேதான்கொடுக்கவொளிதானுமே

ஒளிவானசெம்பினிடமகிமைமெத்த ஓகோகோவுலகுதன்னில் செய்வாருண்டோ, தெளிவானசெம்பெடுத்து ராஜர் மார்க்கம்சென் றுவெகுமதிப்புடனேலாபங்காண்பீர், தெளிவானவித்தையிதுபாரு ஞ்சொல்லார் நீணிலத்தில்மாணுக்கள்பிழைக்கவென்று, களிவுடனே காலாங்கிதன்னைப்போற்றிக் கருவாகப்பாடிவிட்டேன்போகர்தானே ௫௪௧

போகர்பச்சைக்கர்பூரவைப்பு.

தானனுடனதுபலமோவொன்றுதாக்கானசினமது பலமோ கால்தான், வேனனசாம்பிராணிபலமோகால்தான்மூக்கானமதியுப்பு பலமோகால்தான், பானனபூரீறுபலமோகால்தான் பாங்கானதாழை யுப்புபலமோகால்தான், கோனனகோரையிடகிழங்குதானும் குண மானவாடையென்றகாறமாமே. ௫௪௨

காமாங்கஸ்தூரிமஞ்சள்தானும் கருவானஏலக்காய்தன்னோ டொக்க, வீரமாமிலாக்காயின்சந்தனக்தான்விரைவானகினிபூறல்பட் டைதானும், கோரமாம்பச்சிலைக்கிச்சிலிதான்கூட்டி கோமகனேகவ னமுடன்கிருகன்சேரு, நீரமாமாவினிடநெய்யில்தானும் நிர்க்கமுட னுனரைப்பாய்சாமமெட்டே. ௫௪௩

எட்டானசாமமது வரைத்தபோது பெறிலானமெழுகதுபோ லாகும்பாரு, வட்டானபீங்கானுக்குள்ளேபோட்டு வளமுடனேமே ற்பீங்கான்புனுகுபூசி, திட்டானசட்டிதனில் மணல்தான்கொட்டி திறமுடனேபீங்கானும் நடுவேவைத்து, மட்டானமணல்தனைமேலே கொட்டி மாற்கமுடன்றுனெரிப்பாய்சாமம்வொன்றே. ௫௪௪

ஒன்றானசாமமதுயெரித்தபோது வுத்தமனேமேற்பதங்கநின்று மேதான், குன்றானபீங்கான்மேல்தேங்காய்ப்போல பிறைபோலவொ ளிவதுவாயேறிநிற்கும், தன்றானதகடதுதான்வெளியிற்காட்டும் தய வானபூரமதுபச்சைப்பூரம், பன்றானாசர்களுக்குகந்தபூரம் பாரினி லேசித்தர்செய்யுர்பூரமாமே. ௫௪௫

கஸ்தூரிவைப்பு.

பூரமாமின்னமொருவைப்புகேளு போக்கானரத்தமென்றபானர் தானும், வீரமாம்வேடீக்கைமாப்பிசனுங்கூட்டி விதற்பமுடன்பழந்தி ன்னும்வெள்வாலெச்சம், காமாங்கலைமானின்ரத்தந்தாட்டி கசகா



மல்தாழைமலர் கவசஞ்செய்து, தீரமாஞ்சட்டிக்குள் பொதிந்துமூடி திட்டமுடன்பூமிதனில்புதைத்திடாயே. ௫௪௬

புதைத்துமேமண்டலஞ்சென்றெடுத்துப்பாரு புகழானகஸ்தூரி யென்னசொல்வேன், சிதைத்துமேஜலந்தனிலேபோட்டுப்பார்த்தால் சிறப்பானரத்தமதுபோலேயோடும்; கதைத்துடனேசன்னிக்குகால னுக்கு கடிதானவைப்புமல்லோசீனவைப்பு; விதைத்துடனேயின்ன மொருமார்க்கஞ்சொல்வோம் விரைவுடனேகேட்பவர்க்குயினஞ்சொ ல்வேனே. ௫௪௭

சொல்லுதற்குநாவுமில்லை யாவுமில்லைதுரைகோடி முறைகோடி தொந்தங்கோடி, வெள்ளுதற்குகாண்டாமின்மிருகமப்பா வெழிலான வுதிரமதுபடிதானெட்டு, கொல்லுதற்கு கருங்காலிப்பட்டைத்தூளு ங்குணமானகாசியென்றகட்டிதானும், புல்லுதற்குகிராம்புடனேயே லந்தானும் புகழானகெவுளாவும்சரியாய்க்கூட்டே. ௫௪௮

கூட்டவேநாற்சாமமரைத்துமேதான் குணமானசாடியென்றபா ண்டத்துள்ளே, மாட்டவேமுதற்றிறமாம்பன்னீர்தானும் மயங்காமல் நிறையவிட்டுதாளிக்கேற்றி, தீட்டவேசீலைபதுமேலேசெய்து திட்ட முடன்பெரித்திடுவாய்மூன்றுநாளும், நீட்டமுடன்சரக்கெல்லாமொ ன்றாய்ச்சேர்த்து நேர்ப்பாகவுதிரமுடன்கட்டிப்போமே. ௫௪௯

போமேதான்பாண்டமதுதிறந்துபார்க்கப் பொங்கமுடன்சினம துவைப்புமார்க்கம், ஆமேதான்சரக்கினிடவேகமெத்த மப்பனேநாசி தனில்முகரும்போது, வேமேதான்வுதிரமதுகலக்கங்காணும் விரை வானகூடதுதான்கபாலத்தோடும், போமேதான்கஸ்தூரி யென்ன சொல்வேன் புகல்வரோசித்தர்முனிசொல்லார்தாமே. ௫௫௦

தாமேதான்போகரிஷிசொன்னமார்க்கம் தப்பாதுவொருக்காலு முறைபொய்யாது, வேமேதான்வேணபடிசித்தர்தாமும் வெகுவெகு வாய்ப்பாடிவிட்டார்நூல்கள்தோறும், நாமேதான்காலாங்கிநாதர்பாத ம்நற்கமலத்தாள்வணங்கிவடியேன்றானும், போமேதான்பிசகொன்று நேரிடாமல் பூதலத்தில்பிழைக்கவென்றுபூட்டினேனே. ௫௫௧

கஸ்தூரிவைப்பு

பூட்டினேனின்னமொருகருமானங்கேள் புகழானயிரத்தமென் றபானர்தானும், மூட்டினேன்கார்போக வரிசிதானும் முக்கியமாம் வாலுழுவையரிசிதானும், தாட்டிகமாம்நீலமென்றநகைநீறும் தாக் கானபன்னீராலரைத்துமைந்தா, நீட்டமுடன் பாண்டத்திலிடித்துப் போடு நேர்ப்பாகபூமிதனில்புதைத்திடாயே. ௫௫௨

புதைத்தவுடன் நீசெல்லாஞ்சுண்ணமேதான் பொங்கமுடன்கரு கிறமாயிருக்கும்பாரு, சிதைத்துமேநாசிதனில்முகர்ந்திட்டாக்கால்திக் காடுஞ்சுவாசமதுதிணறிக்காட்டும், பதைத்துமேமெய்யதுசிலிர்ப்பு காணும்படுஞ்சுறுக்கு கஸ்தூறிபகரப்போமோ, மிதத்திடனேமருந் துகளில்சேர்க்கவேண்டும் மிக்கானபோகருடவைப்புதானே. ௫௫௨

கஸ்தூரிவைப்பு.

வைப்பானமின்னமொருமார்க்கங்கேளு மகத்தான கமலமுனி சொன்னமார்க்கம், வைப்பானகாசியென்றகட்டிதானும் வாகானகரு வாயின்பிட்டைதானும், வைப்பான்வஷிரியுடசார்தான்கூட்டிவளமான ஒட்டகத்தினுதிரந்தானும், வைப்பானசரக்குடனே வுதிரவேக்கை வளமுடனேறுன்சேர்த்துவரைத்திடாயே. ௫௫௩

அரைக்கவேபன்னீராலரைக்கவேண்டும் அப்பனேசாடிதனில் பொதியவேண்டும், நிரைக்கவேபூமிதனில்புதைக்கவேண்டும்திகழா ணமண்டலந்தான்சென்றபின்பு, நிறைக்கவேகுழிதோண்டியெடுத்து ப்பாருயென்மகனேகஸ்தூரியென்னசொல்வேன், பரைக்கவே ராசபி டம்சென்றுமேதான்பாங்குடனேவெற்றியதுபெறலாம்பாரே. ௫௫௪

அபவெட்டு.

பாரேதான்வயமதுவும்பலம்பத்தாகும் பாங்கானதானகமும்பல மைந்தாகும், சீரேதான்பெரிகாலன்பாலாலாட்டி சிறப்புடனேவெண் காரம்பொரித்துப்போடு, கூரேதான்வச்சிரமாங்குகையில்வைத்து கு முறவேமேல்மூடிச்சீலைசெய்து நேரேதான்சரவுலையில்வைத்தூது நேர்ப்பானகளங்கமதுசொல்லொண்ணாதே. ௫௫௫

சொல்லவேசாரமென்றசெயநீர்தன்னால் சுறுக்குடனேதானுரு க்கிசாய்ப்பாயானால், கொல்லவேவயமதுவும் சவுடுசீங்கிகுணமாகும் கனிம்பூறலற்றுப்போகும். வெல்லவேசெந்தூரஞ்செய்தாயானால்மிக் கானகாயத்துக்குறுதியாகும், புல்லவேதேனதிலேயுண்டொருபுகமா னதாதுகளும்வலுத்துப்போச்சே. ௫௫௬

போகர்லிங்கக்கட்டு.

போச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு பொங்கமுடன்லிங்கமது பலந்தானொன்ற, பேச்சொன்றுமில்லாமல்பீங்கானுக்குள் போான பாலதனைவிட்டுமைந்தா, நீச்சென்றபாலதனால்சுறுக்குதாக்குநெடிதா னலிங்கமதுசத்தியாச்சு, மாச்சென்றபழரசமும்நாழியாகுமகத்தான தேனதுவும்நாழியாமே. ௫௫௭



நாழியாமேனிச்சாற்நாழியாகும் நலமானகையான்சாற்நாழியா கும், தாழியாமிலைச்சாறுநாழியாகும்தாக்கானவாதனையின்சாறுநாழி கோழியாமிலைமூலிச்சாறுநாழி கொடிதானமுசுக்கையுடன்சாறுநாழி வாழியாம்படர்மூலிச்சாறுநாழிவளமானகழற்சிக்காய்நாழியாமே. ()

ஆமேதான்பூலாவுஞ்சாறுநாரு அப்பனேவாதண்டைச்சாறுநாழி வேமேதான் கொடிக்கள்ளிச்சாறுநாழிவிரைவான தும்பைமலர்சாறு நாழி, காமேதான்வேலியிடசாறுநாழிகருவானவிளாவிலையுஞ்சாறுநா ழிபோமேதான் பூப்பனையின்சாறுநாழி பொலிவானகஞ்சாவின்சாறு மாமே. ௫௫௯

காருனகுமரிச்சார்நாழியாகுஞ் சதாவேரிமூலியது சாறுநாழி, வேருனமூசுட்டையுடசாறுநாழி மிக்கானகவுதும்பைச்சாறுநாழி, கூ ருனமத்தங்காய்ச்சாறுநாழிகுணமானசிவதைவேர்ச்சாறுநாழி, பாரு னதேட்கொடுக்குச்சாறுநாழி பாங்கானமுருக்கன்சாற்நாழிகூட்டே,

கூட்டவேமுடக்கொத்தான்சாறுநாழி குறிப்பானதக்காளிச்சா றுநாரு, மாட்டவேபழுபாகல்சாறுநாழி மதிப்பானகுவளைச்சாறுநா ழியாகும், நீட்டவேதிருகள்ளிச்சாறுநாழி நெடிதானபாலையுடச்சாறு நாழி, மூட்டவேபெருந்தாளிச்சாறுநாழிமுனையானபொன்முசட்டை சாற்தான்சேரே. ௫௬௧

சேர்க்கவேவிவையெல்லாமொன்றாய்ச்சேர்த்து சிறப்பாகலிங்க த்திற்சுறுக்குதாக்கு ஏர்க்கவேலிங்கமதுகட்டிப்போகும் எழிலானலி ங்கமது வுறுக்குபோலாம், பார்க்க வெட்டுருக்கு போலேகாணும் பாங்கானலிங்கமதுசொல்லப்போமே, தீர்க்கமுடன் கவசமதுசொல் வேன்பாருதெளிவானசரக்குகளுஞ்சாற்றக்கேளே. ௫௬௨

கேளேநீ வெடியுப்புபலமொன்றாகும் கெடிதானவிந்துப்புபல மொன்றாகும், சூளேதான்பூநீறுபலமொன்றாகும்சுடானதுருசதுவு ம்பலமொன்றாகும் வீளேதான்படிகாரம்பலமொன்றாகும் மிக்கானகா ரமதுபலமொன்றாகும், பாளேதான்கெந்தியது பலமொன்றாகும்பரு வமாம்வளையலுப்புபலமொன்றாமே. ௫௬௩

ஒன்றானவுப்புடனே சாரமொன்றாம் ஒளிவானதாளகமும் பல மொன்றாகும், குன்றானவீரமதுபலமொன்றாகும் குறிப்பான பூரமது பலமொன்றாகும் நன்குணங்கியதுபலமொன்றாகும் நலமானதொட் டியதுபலமொன்றாகும், அன்றானவாறுவகைசெயநீர்தன்னால் அப்ப ானாற்சாமமரைத்திடாயே. ௫௬௪

அரைக்கவேகைபோலேலென்னெய்யாகும் அப்பனே மெழுக
தனையெடுத்துக்கொண்டு, இரைக்கவே தசபங்காய் செய்துகொண்டு
தெளிவானலிங்கத்திற்கங்கிபூட்டி, மரைக்கவேசுண்ணம்புசீலைசுற்றி
மார்க்கமுடன்ரவிதனிலேகாயவைத்து, விரைக்கவேமணல்மறைவில்
புடத்தைப்போடுவீரமுடன்லிங்கமதுகட்டிப்போமே. ௫௬௫

போமேதானிப்படியேபுடமேபத்துப் பொங்கமுடன்மாறுமல்
புடத்தைப்போடு, வேமேதான்லிங்கமதுகவசம்நீக்கிமேன்மையுடன்
றான்பார்க்கவுருக்குமாகும், சாமேதான்லிங்கமதுயெடுத்துமைந்தாசா
ங்கமுடன்தங்கமதுபத்துக்கொன்று, நாமேதான்சொன்னபடி தங்க
ரேக்கை நயமாகலிங்கத்திற்கங்கிசுத்தே. ௫௬௬

சுத்திசெகுன்றிமனிபசையினாலே சூட்சமுடன்விராலிபிடதயி
லங்கேளு, பத்தியுடன்பீங்கானுக்குள்ளேவைத்து பாலகனேபெரு
க்கன்பால்சுருக்குதாக்கு, துத்தியுடன்நீரெருப்பையூட்டிக்கொண்டு
சுடரொளியின்மேல்வைத்துவாட்டுமார்க்கம், புத்தியுடன்விராலிபிட
தயிலத்தாலேபொங்கமுடன்சுறுக்கிடவேமெழுகுமாமே. ௫௬௭

மெழுகானபதம்பார்த்து மைந்தாகேளு மேன்மையுடன்யெருக்க
ன்பால்சுறுக்குதாக்கு, நழுகானவராகத்தின்னெய்யால்மைந்தா நலமு
டனேநாற்சாமஞ்சுருக்குதாக்கு, வழுகாதுமெழுகாகும்சித்துக்கொ
ப்பாம் வாகானமெழுகெடுத்துப்பதனம்பண்ணு, தொழுகாதவயிரவ
ரைப்பூசித்தேதான்தோற்றமுடன்கொடுக்கும்சித்தி சொல்லுவேனே.

சொல்லவேவெள்ளிதனில்நூற்றுக்கொன்று சூட்சமுடன்றானு
ருக்கிமாற்றைப்பாரு, வெல்லவேமாற்றதுவுமெட்டதாகும்மேன்மை
பெறசெம்பிலேகொடுத்துப்பாரு, சொல்லவேசெம்பினிடஊறல்நீங்கி
குருமருந்தால் செம்பினிலே நூத்துக்கொன்று புல்லவேகொடுத்தி
டமாற்றேபத்து குறையாதுவித்தையதுவதிதக்தானே. ௫௬௯

தானனசித்தர்முனிரிஷிகள்தாமும் தயவுடனேசெய்யுமிந்தவே
தையாகும், கோனனகுருவருளைப்பெறவேவேண்டும் பெறுவிட்டா
ல்வாதமதுவாய்க்குமோசொல்,தேனனமனோன்மணியைப்பணியவே
ண்டும்பணியாட்டால்வாதசித்திகிடைக்குமோசொல், பானனபராபரி
யைத்துதிக்கவேண்டும் துதியாட்டால்விட்டகுறைலபியாதாமே௫௭௦

ஆமேதான்சித்தர்முனிரிஷிகள்சாபம் அப்பனேமுன்னின்றுவக
ற்றவேண்டும்,போமேதான்குருபதத்தைவணங்கவேண்டும்வணங்கா
ட்டால்காயுமில்லைபூவுமில்லை, வேமேதான்சித்தருடன் வாதுபேசிவே



தாந்தத்தாயினதுவருளினாலே, நாமேதான்காலாங்கி வரமும்பெற்று
நாட்டினிலேமாணுக்கள் பிழைக்கத்தானே ௫௭௧

பிழைக்கவென்றுசினபதிசென்றுமேதான்பிழைமோசம்நேராம
ல்கருவாய்க்கண்டு, தழைக்கவேதாரணியில்பிழைக்கவென்றுதடுமாற்
றம்வாராமல்மைந்தாயானும், பழக்கமுடன்கிட்டிருந்துதொண்டுசெய்
துபலகாலுங் கைமறப்பைபழுதாராய்ந்து, வழக்கமுடன் விடைபெ
ற்றுசினம்விட்டுவந்தேனே தெட்சணத்தின்பாதைதாமே. ௫௭௨

பாதையால்வந்துனக்குப்பாகஞ்சொன்னேன் படுங்காளிமுழும
க்களானபேரை, வாதையுடன்றானகற்றிதூரத்தள்ளி வளர்ப்பமுடன்
கைமசக்குயாருங்காணார், வேழைமுகமுன்னிருந்து சித்தன்போல
மேதினியில்துஷ்டர்களையகலத்தள்ளி, கோதையென்னுஞ் சமுசார
மாய்கைநீக்கி குணமுடனேயிவ்வேதைசெய்வாய்தானே. ௫௭௩

செய்குவாய்பிராணயந்தன்னில்நின்று சிறப்புடனேசிதானந்தம்
பாசம்நீக்கி, உய்குவாய்சடாட்சரத்தையுச்சரித்து வுத்தமனேசுடரொ
ளியைக்கண்டுபோற்று, வைகுவார்தன்னைமனமெதிர்நோகாமல் வாச
வனேமுன்னிருந்துவம்பாள்பாதம், மைகுடனேவம்பரத்தைமேலே
கும்பிவாமுடனேவாழ்கவென்றுவசனித்தேனே. ௫௭௪

## பாஷாணமெழுகு.

வசனித்தேனின்னமொருகருமானங்கேள் வாகுடனேமாணுக்க
ள்பிழைக்கவென்று, துசனித்தபாஷாணம்பலமொன்றாகும் துடியான
சிப்பியென்றசுண்ணந்தாலும், பசனித்தசுக்கான்றன் சுண்ணந்தன்னை
பாகுடனேபாஷாணத்தங்கிபூட்டி, நிசனித்துசட்டியிலேமணல்தான்
கொட்டிநிறையவேமணலாலேமூடிப்போடே. ௫௭௫

போடவேநாற்சாமமெரித்தபோது பொங்கமுடன்நீயாறியெடு
த்துப்பாரு, நாடவேபாஷாணஞ்சுத்தியாச்சு நலமாககட்டிதனையெடு
த்துக்கொண்டு, மூடவேவெள்ளியென்றரேக்குதன்னால் முறைப்படி
யேபாஷாணத்தங்கிபூட்டி, மாடவேசாறையென்ற சர்ப்பந்தன்னால்
மார்க்கமுடன்றானெடுத்து கொழுப்பைவாங்கே. ௫௭௬

வாங்கியேகொழுப்புநிகர்வீரஞ்சேர்த்து வாகுடனேபாஷாணஞ்
சுறுக்குதாக்கு, தேங்கியேபோகாமல்மெழுகுபண்ணு தெளிவானசெ
ம்பதனைவெள்ளிபண்ணு, ஓங்கியேசெம்புநாலுக்கொன்று வுத்தம
னேமெழுகெடுத்துருவொன்றீய, வங்கியேதிரியாதேமைந்தாகேளு
யெழிலானவித்தையதுவதிதங்காணே. ௫௭௭

காணவேவெள்ளியென்றசெம்புதன்னில் கருவானவெள்ளியது நாலுங்கொன்று, பூணவேதான்சேர்த்துவுருக்கிப்பாரு புண்ணியனே துய்யனுக்கிணைவேறுண்டோ, தோணவேபாஷாணம்மிகவேதிக்கும் துறைகோடிமுறைகோடிதொந்தங்கோடி, நாணவேசித்தர்கள்தான் செப்புமார்க்கம் நலமுடனேமாநிலத்திலெசெய்யலாச்சே. ௫௭௮

தாளகயியம் செந்தூரம்.

செய்யவேயின்னமொருமார்க்கங்கேளு தெளிவானதாளகமும்பலமொன்றாகும், நையவேதுருசுடனேசாரநீரால் நவிலவேதானரைத்துமெழுகுபண்ணு, துய்யவேதாளகத்துக்கங்கிபூட்டித்துடியுடனேசுண்ணும்புச்சிலைசெய்து, பையவேகோழியென்றபுடத்தைப்போடு பாங்கானதாளகமும்கட்டிப்போமே. ௫௭௯

போமென்றுவிடுகாதேபூபாகேளு புகலுவேனின்னமொருமார்க்கம்பாரால், காமென்றகடுங்காரச்சீனமொன்று கலறவிட்டுச்செயநீராலரைத்துமேதான், வேமென்றதாளகத்துக்கங்கிபூட்டி விரைவுடனேசுண்ணும்புசிலைசெய்து, பாமென்றவெயில்தனிலேகாயவைத்துப்பாலகனேகோழியென்றபுடத்தைப்போடே. ௫௮௰

போடவேதாளகமுஞ்சிவந்துமின்னும்போக்கானசாக்கதுவுங்கட்டிப்போகும், நீடவேவங்கமதுபோலேகாணும் நீணிலத்தில்வாதிமெய்ச்சும் வங்கமாச்சு, கூடவேவங்கமதைதானெடுத்து குறிப்புடனேகாரமதுகாலாய்சேர்த்து, போடவேமூசைதனிலுருக்கித்திரு பொங்கமுடன்தாரத்தின்வங்கமாமே. ௫௮௧

வங்கமென்றால்வங்கமதுசொல்லப்போமோ வளவானதாரத்தின் வங்கமாகும், பங்கமொன்றுஞ்சொல்லாதவங்கமாகும்படுமுன்னேகுதத்தைக்கட்டிக்கொள்ளும், தங்கமென்றலோகமதை சரியாய்க்கூட்டிதாக்கிடவேதங்கமதுவங்கமாகும், அங்கமுடன்தங்கமது வங்கமானுலவனியிலேவாதவித்தைப்பார்க்கப்போமோ. ௫௮௨

போமென்றுவிடுகாதேமைந்தாகேளு பொங்கமுடன்கெந்திபதுநாலுக்கொன்று, வேமென்றசிலையதுவுமொன்றேயாகு மிக்கானகாரமதுவொன்றேயாகும், பாமென்றவீரமதுவொன்றேயாகும் சடுக்கானவளையலுப்புவொன்றேயாகும், யாமென்றபடிகாரமொன்றேயாகும் பாங்குடனேவிவையெல்லாமொன்றாய்க்கூட்டே. ௫௮௩

கூட்டியேதானரைப்பாய்செயநீர்கேளு குறையாதசாரமென்ற செயநீர்தன்னால், தாட்டிகமாய்தானரைப்பாய்நாலுசாமம் சட்டமுடன்ரவிதனிலேகாயப்போடு, நீட்டமுடன்சாக்கதனை பொடிதாக்கிநி



லவரமாய்குழிக்கல்லில்பொடித்துக்கொண்டு, வாட்டமுடன்காசியென்றகுப்பிகொண்டு வளமாகசிலையதுமேழுசெய்யே. ௫௮௪

செய்யவேகாசியென்றமேருதன்னில் சிறப்புடனே மருந்தெல்லாங்குகையிலிட்டு, பையவேமாக்காலால்கொண்டுமூடி பாங்குடனேசீலையதுவலுவாய்ச்செய்து, மையவேசட்டிதனில் மணல்தான்கொட்டிமார்க்கமுடன்மேல்சட்டிகொண்டுமூடு, துய்யவேசீலையதுவலுவாய்ச்செய்து தோராமவாலுகையிலேற்றிடாயே. ௫௮௫

ஏற்றவேசாமமதுயிருபதாகும் யெழிலானதீமூட்டியெரித்தாயானால், மாற்றமுடன்செந்தூரமென்னசொல்வேன் மயங்காதேவருண்மைந்தாபுகலக்கேளு, சீற்றமென்றசெம்புதனில்பத்துக்கொன்றுதிறமுடனேதானுருக்கிக்கொடுத்துப்பாரு கூற்றமென்றஆரலதுயெங்கே போச்சு குணமானசெம்பதுவுமாற்றுமாச்சே. ௫௮௬

மாத்தானபொன்னதுவும் பசுமைமெத்த மண்டலத்திலார்செய்யப்போறாரப்பா, நீத்தானசித்தர்முனிசெய்வாரப்பாநேர்மையுடன்கருவாளிசெய்வான்பாரு, கூத்தானகூத்துவிசித்தர்கூத்து குவலயத்தில்முழுமக்கள்செய்யமாட்டார், காத்தானநாதாக்கள்செய்யுமார்க்கம் நலமுடனேயுங்களுக்காயுரைத்திட்டேனே ௫௮௭

உரைத்திட்டேன்காலாங்கிதனைநினைந்து வுத்தமனேவொருகோடிநூலைப்பார்த்து, நிரைத்திட்டேன்சாத்திரத்திலுளவையெல்லாம் நேர்மையுடன்பிழைக்கவென்றுயாவுஞ்சொன்னேன், குறித்திட்டேன்சித்தர்சொன்னநூலையாவும் குவலயத்தில்பிழைப்பதற்குகாண்டஞ்சொன்னேன், உரைத்திட்டேனேழுலட்சங்கிரந்தந்தன்னை யேழைகட்காயிரக்கம்வைத்துப்பாடினேனே ௫௮௮

பாடினேன்யேழாயிரசத்தகாண்டம் பாங்குபெறசிமிழ்போலபாடிவைத்தேன், தேடியேபார்த்தாலுங்கிடைக்குமோசொல் தேசத்தில்கிட்டாதுசிவயோகிக்கு, நாடியேநூல்தானும்கிட்டும்பாரு நாகில்விழும்பாவியற்குகிட்டுமோசொல், கூடியேசிவபதிசென்றுயானும் குறிப்புடனேபாடிவிட்டேன்மர்மந்தானே. ௫௮௯

குடவன்செம்பு.

தானானவின்னமொருபோக்குகேளு தாக்கானபித்தளைதான்சேர்தானொன்று, கோனானவச்சமென்றநாகதாக்கிகோர்வையுடன்கடைசாக்குசொல்லக்கேளும், பானானபாஷாணம்பலங்காலாகும்பதிவானதாளகமும்பலங்காலாகும், வேனானலிங்கமதுபலங்காலாகு மிக்கானவீரமதுபலங்காலாமே. ௫௯௰

பலமானபூரமதுபலங்காலாகும் பாங்ானகெவுரியதுபலங்காலாகும், நலமானசூடனதுபலங்கால்ாகும் காற்றமுள்ளகெந்திபதுபலங்காலாகும்,சலமானரசமதுதான்பலங்காலாகும் காந்தமுடன்மதியுப்புபலங்காலாகும், சலமானபூரீறுபலங்காலாகும் சார்பானயிர்துப்புபலந்தான்கூட்டே. ௫௯௧

கூட்டியேவறுவகைசெயநீர்தன்னால் குமரவேசரக்கெல்லாமொன்றாய்க்கூட்டி, தாட்டிகமாய்தானரைப்பாய்நாலுசாமம் தகமையுடன்தகடெல்லாம்பூசித்தீரு, வாட்டமுடன்ரவிதனிலேகாயவைத்து வாகாகப்புடம்போடவிபரங்கேளு,நீட்டமுடன்ஒடதனில்தான்பரப்பி கிலேமையுடன்கோழியென்றபுடத்தைப்போடே. ௫௯௨

போடவேதியாறியெடுத்துப்பாருபொங்கமுடன்தகடுதுதான்வதரேபோகும், நீடவேகுடவனென்றதகட்டைதானும் நேர்பாகப்புடம்போடவூரல்போகும், கூடவேசரக்கதனைதசபங்காக்கி குழம்பாகத்தான்குழப்பிதகட்டிற்பூசி, சாடவேபுடம்போடகுடவன்செம்பாம்சாங்கமுடன்வெள்ளிக்குதாக்கிடாயே. ௫௯௩

தாக்குவாய்வெள்ளிக்குநாலுக்கொன்றுதகமைபெறசெம்பதனைகொடுத்துப்பாரு,நோக்கமுடன்வெள்ளியதுவாறுகாணும் நொடிக்குள்ளேவாதவித்தைகைகுள்ளாச்சு பார்க்கவேமட்டமதுசொல்லப்போமோ பசுந்தங்கமிரண்டுக்குமொன்றேசேரு. தாக்கமுடன்தகடித்துப்புடத்தைப்போடு துளிரானதங்கமதுமிரங்கும்பாரே. ௫௯௪

## தங்கசெந்தூரம்.

பாரேதானின்னமொருகருமானங்கேள் பசுந்தங்கமிரண்டுதுலாம்பகர்ந்தெடுத்து, சேரேதான்மாசியென்றபத்திரிதன்னால் செழுமையுடன்றனைத்துப்புடத்தைப்போடு, நேரேதான்பத்துமுறைபோட்டாயானால்கெடிதானசெந்தூரம்சொல்லப்போமோ, கூரேதான்செந்தூரங்குன்றியுன்னும் குண்மாகுமண்டலத்தில்வடிவுகாணே. ௫௯௫

காணவேதேகமதுமின்னல்தோன்றும் கடிதானரோகமெல்லாமகன்றுபோகும், பூணவேதாதுகளும்வலுத்துக்காணும் புளையோடுஞ்சில்விஷங்களற்றுப்போகும், தோணவேகரைதிரையுமாறிப்போகும் தொடாதுவாயுவென்றதெண்பதும்போம், மாணவேசெந்தூரம்வெள்ளிசெம்பில் மாட்டடாபத்துக்குவொன்றுபோடே. ௫௯௬

போட்டுமேதானுருக்கியெடுத்துப்பாரு புகழுடனேவேதிக்கும்பொன்றேமெத்த, ஈட்டமுடன்கரியோட்டிலூதிப்போடு கிலேயானதங்கமதுகூறப்போமோ, வாட்டமுடன்தகடித்துப் புடத்தைப்போடுவெளமானபசுந்தங்கமாகும்பாரு, காட்டமுடன் சிவயோகிக்குகந்தபொன்னும் நலமானசித்தர்செய்யும் வேதையாமே. ௫௯௭



வேதையிலே யின்னமொரு கருமானங்கேள் விதமான பெரியகன்னுகமப்பாபோதையிலே வெண்வங்கந்தன்னேடொக்க புகழானசூடனுடன் கெந்திதானும், தீதையிலே கெவுரியுடன் தாரந்தானும் திறமானபூரமுடன்சரியதாகும், பாதையிலேயித்தனையுங்கூட்டிமைந்தா பாங்குடனேகுழியம்மிலாட்டிடாயே. ௫௯௮

ஆட்டவே குமரியுடபாலினாலே அப்பனே யெண்சாமமரைத்தபோது, வாட்டமுடன் சரக்குடனே வங்கஞ்சேர்ந்து வளமானசெந்தூரத்தாகியாகும், நீட்டமுடன்காசியென்றகுப்பிகொண்டு நேர்மையுடன்சிலையதுவேழுசெய்து, மூட்டமுடன்மருந்தெல்லாங்குப்பிக்கேற்றிமுனையானமரக்கல்லால் கொண்டுமூடே. ௫௯௯

மூடவேகுப்பியென்றவாயிற்சிலை முயலவேதான்செய்துமுசியாமற்றான், நீடவேசட்டிதனில்மணலைக்கொட்டி நினைவாகக்குப்பிதனைநடுவேவைத்து, சாடவேமேற்சட்டிக்கவிழ்த்துமூடிசாங்கமுடன்சிலையதுவலுவாய்ச்செய்து, போடவேதீயதுதான் சாமம்பத்து புகழ்ச்சியாய் நீயெரிப்பாய் மைந்தாபாரே. ௬௦௦

பாரேதான் தீயாறியெடுத்துப்பார்க்கப் புதமானசெந்தூரமென்னசொல்வேன், சீரேதான்வெள்ளிசெம்பில்பத்துக்கொன்றுதிறமாகத்தானுருக்கிகொடுத்துதீரு, நேரேதான் கரியோட்டி லூதிப்போடு நேர்ப்புடனேதங்கமதுநாலுக்கொன்று, வாரேதான் சேர்த்துருக்கிப்புடத்தைப்போடு மகத்தானவேதையிது சொல்லொண்ணாதே. ௬௦௧

சொல்லவே சித்தர்செய்யும்வேதைமார்க்கம் செகத்தினிலே மானிடர்கள்செய்வாரோதான், பல்லவே கருவாளிசெய்வான்பாரு பூதலத்தில் முழுமக்கள்செய்யப்போமோ, வெல்லவேகாலாங்கிநாதர்பாதம் விருப்பமுடன் றான்பணிந்துசெப்பலுற்றேன், நல்லதொரு ஞானவானாகவென்றால் நாலுணர்ந்தநூலதனையறிவான்காணே. ௬௦௨

## அயக்களங்கு.

தானானபிரகாச மானபோகர் சதகோடிசூரியர்போல்பிரகாசிப்பார்,கோனானகுருவருளால்தன்னைப்பார்த்து, கூறுவேன்யின்னமொருகுருநலக்கேளாய்,வேறான அயமதுதான்ராவிமைந்தாவிபரமுடன்

பழச்சாற்றிலூறவைத்து, ஊறின அமுரியினால் சமூலிப்போட்டு வுத்தமனே பிதில்சேர்க்க மருந்தாகேளே. ௬௦௩

கேளடா அயப்பொடிக்குரெட்டிமைந்தாகெணிதமுடன் துருசுடனேகாரமாகும், வாளடாகெந்தகமும்கூடன்வீரம்மார்க்கமாய்ப் பொடிக்குகாலிலொன்று, கோளடாவாராமல்யெல்லாம்கூட்டி குமுறவேசம்பழத்தின்சாற்றாலாட்டி, காளடா வச்சிரமாங்குகையில் வைத்து கலக்காமல் வுலையில்வைத்து வூதிடாயே. ௬௦௪

வூதிடவேவயமதுதான் சரக்குச்சேர்த்து வுண்மையுடன் செம்பதுவாய்வுரிகிறிற்கும், நீதியாம் அயமதுதான்செம்பேயானால் நிலைத்துதடாவாதனித்தைநிசமதாச்சு, ஆதியாம் அயமதனால் சகலசித்தும் அப்போதேசித்திபடா தப்பேயில்லை, சோதியாங்குருபரந்தன்னருளினாலே சுத்தமுள்ள அயத்தினிட செம்பைவாங்கே. ௬௦௫

வாங்கியேசெம்புநிகர் தங்கம்சேர்த்து வரிசையுடன் நாவுருக்கி வைத்துக்கொண்டு, ஏங்கியேதிரியாதேமைந்தாநீதான் இன்பமுடன் வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று, ஓங்கியேதானெடுத்து வுருக்கிப் பாருவுறுதியாமாற்றுபனிரண்டதாகும், பாங்குபெற சோதிமயம் தன்னைக்காணில் பாலகனேசிவயோகம் பலிக்குந்தானே. ௬௦௬

நவகோடி சித்தர்வைப்பு.

தானென பொதிகைமலைவைப்புச்சொல்வேன் தாக்கான தென்பொதிகைதன்னிலோரம், வேனைமடாலயமண்டபந்தான்வெளியான சுனைகரைகளங்குமுண்டு, பானை வாயக்கால்மண்டபத்தில் படியோரம்வோராளின்மட்டந்தன்னில், கோனனைகுருகூட்டம் சித்தர்கூட்டம் கோடானகோடிபொருள் வைத்திட்டாரே. ௬௦௭

வைத்திட்ட திரவியங்கள்மெத்தவுண்டு மாநிலத்தில்சித்தர்வைப்புயார்தான்காண்பார், கைத்திட்டதிரவியத்தை யெடுக்கவென்றால் கதவுடனே தாளிணைத்துபூட்டி, மெய்த்திட்டகாப்பனென்றகாத்தாயன்மேல்வாசல்தனிக்காவல்நிற்பிருப்பான், மைத்திட்டவடபுரத்தில்பூதக்காவல் மானிடர்கள்யாரேனுஞ் செல்லார்பாரே. ௬௦௮

பாரேதான் திரவியத்தை யெடுக்கவென்றால் பாரசத்திகிருபையதுபெறவேவேண்டும், சீரேதானன்னடக்கைகொள்ளவேண்டும்சீர் தப்பி தீவினையை யகற்றவேண்டும், நேரேதான் மகேஸ்மணியாள் பூசைவேண்டும்நெறிமுறைமைதவறாதவருளேவேண்டும், கூரேதான் சிற்பரத்தைநாடவேண்டும் கோடியுகத்தானிருக்க கற்பந்தேடே. ()



போகர் மூலிகற்பம்.

தேடவே கையானின்மூலிதானும் தெளிவானநற்கையான் மூலிதானும், கூடவே மேனியிடமூலிதானும் குணமானசஞ்சாவின் மூலிதானும், நாடவேகருவேலிமூலிதானும் நலமானவெள்வேலி மூலிதானும், சாடவே பேய்மிரட்டி மூலிதானும் சாங்கமுடனேவிரலியான் மூலியாமே. ௬௧௦

மூலியாம்தைவேளைத் தழையுமாகும் முயலானகவுதும்பைத்தழையுமாகும், பாலியாம் பாவட்டையிலையுமாகும் பாங்கானவர் தொண்டைத்தழையுமாகும், சாலியாம் தும்பையிடயிலையுமாகும் சார்பான வழுதலையுமிலைதானாகும், வேலியாம்பருத்தியுட மூலிதானும் வேரானகொடிவேலி தழையுமாமே. ௬௧௧

தழையானசங்கனிட மூலியாகும் தாக்கானபுங்கனிட மூலியாகும், மழையானபேய்ச்சுரையாம் பனிநாக்கோடு மகத்தான பாற்சுண்டியிலைதானாகும், குழையானகொள்ளுக்காமூலிதானும்கோடானசுழிமூலி நிலைதானாகும், இழையான யிண்டியிலையுனிலையுமாகுமெழிலான கோரையிட வெலையுமாமே. ௬௧௨

இலையான விஷமூலியெலையுமாகுமெழிலானபம்மையுட பொன்முசட்டை, தலையானபரட்டையுட மூலிதானும் தனியானகுணமூலி வெளிச்சிமூலி, கலையானக்கியென்ற மூலிதானும் கடிதான பற்பாடமூலிதானும், வலையானசின்னியிட மூலிதானும் வகுப்பானகுறுந்தொட்டி மூலியாமே. ௬௧௩

ஆமேதான்செந்தொட்டாமூலிதானும் அப்பனே கருவாலிமூலிதானும், வேமேதான் விழிமிரட்டிமூலிதானும் வெடிப்பான காந்தியுட மூலிதானும், போமேதான் மலைதாங்கிமூலிதானும் போக்கான சிறுதும்பைமூலிதானும், தாமேதான தீக்கோட்டான் மூலிதானும் தாக்கான சூரியென்ற மூலியாரே. ௬௧௪

பாரேதான் தக்காளிகொன்றைமூலி பாங்கான வெண்ணொச்சியிலையுங்கூட்டு, சீரேதான்குட்டிவிளா மாவின்கொன்றை சிறப்பான கூர்மல்லிபாளைதானும், நேரேதான் செவ்வல்லிபத்திரிதானும் நெடிதான வெள்ளல்லிமூலிதானும், கூரேதான் பிரமாட்சதையுங்கூட்டி போரான நற்றும்பை தானுங்கூட்டே. ௬௧௫

கூட்டியேவொவ்வொன்றும் தனிலேயாய்வைத்துக்குறிப்புடனேவொவ்வொன்றும்பொடியாய்த்தெள்ளி, தாட்டிகமாய்சர்க்கரைதான் சமனாய்ச்சேர்

த்து சார்புடனே நெய்தேனிற்கொண்டாயானால் வாட்டமுடன் சேத்துமங்கள் தொண்ணூற்றாறும் வாகான வாயுவென்றதென்பதும் போம், தேட்டமுடன் பித்தமென்ற நாற்பதும்போம் தெளிவாகும் திரேகமது மிறுக்கானே. ௬௧௬

காணவேதேகமதுகற்றாணாகும் கருவானநரம்புகளு முறுக்கிக் காட்டும், தோணவே சதாகாலமிருக்கலாகும் துன்பமென்ற சாகாத்தைவிட்டொழித்து, மாணவேசதாநித்தம் பூசித்தேதான் மகத்தானகெவனமுதல்கொள்ளலாகும், வேணவே சமாதியிலே யிருக்கலாகும் வெகுகோடிகாலமட்டும் தேகம்போமோ. ௬௧௭

போகாதுகற்பாந்திரகாலமட்டும் பொலிவானதேகமது மிருப்பு போலாம், வேகாதிசடந்தானும் தீயில்தானும் விருப்பமுடன் கோடியுகங்காணலாகும், சாகாதுபூமிதனில்யிருந்துகொண்டுசதாகாலம்வாமியைத்தான்பூசிப்பாய்நீ, ஆகாது லோகமென்றமாய்கைநீக்கி வப்பனேயெனைப்போ லயாகுவீரே. ௬௧௮

அபினிவைப்பு.

ஆகவென்றுசின்னமொரு சருமானங்கேள் அப்பனேவபினியென்றவைப்புசொல்வேன், பாகமுடன்கடுகுடனேகசகசாவும்பாங்கானகஞ்சாவும்சரியாய்த்தூக்கி, வேகமுடன்மராட்டியமாமொக்குதானும் விசையுடனே யொழுமதுசெய்துகொண்டு, நேசமுடன் சாக்கதனையரைப்பாய்மைம்போல் தொவுரதனைதான்போக்க முறைதான்கேளே.

கேளீநீ சினமென்றவெல்லந்தன்னை கிருபையுடன் பாகுபதஞ்செய்துகொண்டு, கோளேதான்வாராமல் மைந்தாகேளு கொப்பெனவேசாக்கதனைகிளறிக்கொண்டு, பாளேதான்போகாமலமெழுக்கெடுத்துபான்மைபெறபாணிதனில்பதனம்பண்ணு, தாளேதான்பினியதுசொல்லப்போமோ தாரணியில்மானிடர்கள்பிழைக்கத்தானே ௬௨௦

தானானவபினிபதுமபக்கமெத்தத் தாரணியில்லாதாக்கட்குகந்தபோதை, வேனாயிடுமருந்துபாஷாணந்தான் மிக்கானபுத்திதனைமயக்கப்பண்ணும், கோனான குருவருளாலிந்தபாகம் குணமாகப் பாடிவைத்தேன்மாந்தர்க்காக, தேனான காலாங்கித்தன்னைப்போற்றி தேற்றமுடன் சதாகாலம் தவத்தில்நில்லே. ௬௨௧

போகர்வுப்புமணி.

நில்லவேபோகரிட மணியைக்கேளு நிலைபானமணியதுவும்சித்தர்வேதை, புல்லவேசாகரத்தின்சலமேயாகும் போக்கானபடிரண்டு



வளர்துவாரு, கொல்லவேசேர்த்துப்புபடியேயாகும் குணமானவளையுப்புபடியேயாகும், வெல்லவே விதுரண்டும்பொடியதாக்கி மேன்மையுடன் காச்சும்வகை செப்பக்கேளே. ௬௨௨

செப்பவென்றால் சலந்தனிலேவுப்பைக்கொட்டிசினமுடன்தான் கரைத்து தெளிவைவாங்கி, ஒப்பமுடன்சீலையது வேடுகட்டி வுத்தமனே அடுப்பேற்றியெரிப்பாயப்பா, தெப்பமுடன்நீரெல்லாம் சுண்டியேதான் தெளிவுபெறவுப்பது தான்வட்டுபோலாம், நெப்பமுடன்தானிருக்கும் வுப்பைத்தானும் நேர்பாகரண்டியதை யெடுத்திடாயே.

எடுத்துமே மறுசட்டிதானெடுத்து வெழிலானகடல்சலந்தான் படிரண்டப்பா, தொடுத்துமேமறுபடியும்வுப்பைக்கொட்டி தொடாவேதான்கரைத்து வடிதான்கொண்டு, விடுத்துமேமறுகவசம் சீலைகட்டி விருப்பமுடன் றானெரிப்பாய்சுண்டமட்டும், கொடுத்துமேதானிறக்கியெடுத்துப்பாரு குடிலமுடன்வுப்பதுதான்காமோமே. ௬௨௪

காடானவுப்புதனையெடுத்துக்கொண்டு கருத்துடனேமறுசட்டிகடற்சலந்தான், பிரட்டாதேயின்னுமந்தசட்டிக்குள்ளே போனகடற்சலந்தான்படிரண்டிட்டு, வரட்டுடனே வுப்பையெல்லாம் சீனிவாங்கிவளமாககடல்சலத்தில்கரைத்துக்கொண்டு, திரட்டுடனேவடிகட்டியெடுத்துக்கொண்டு திறமுடனடுப்பேற்றியெரிப்பாய்கேளே. ௬௨௫

நேரானவுப்பையெல்லாஞ்சுரண்டிவாங்கி நேர்ப்புடனேமறுசட்டிதன்னிற்போட்டு, கூரானநெருப்பிலெரிக்கும்போது குணமுடனேவுப்பெல்லாம்வுருகிக்கட்டும், போரானவுப்பதுவும்வயிரமபோலாம் பெரிதானவயிரமதை யெடுத்துக்கொண்டு, சேரானமண்ணுனைசட்டிதன்னில் தெளிவுடனே காச்சியல்லோ மூசைக்கேற்றே, ௬௨௬

ஏற்றவேவுப்பதனை மூசையிட்டுயெழிலானதன்பதத்தி லிருக்கித்தீரு, போற்றவேகருகட்டி சிலைதான்வார்ப்பாய் புகழானசிலையதுவும்பாய்ந்தபின்பு, சீற்றமுடன் சிலையதுவுஞ்சாரணிப்பாயசிறப்புடனே மேனியென்னுங் குப்பையேனி, தேற்றமுடன் சார்பிழிந்து காய்ச்சி தோய்ப்பாய் தேர்மையுடன் சிலையதுவு மிறுக்கும்பாரே. ௬௨௭

புரோதான் சிலையதுவுமிறுகிக்காட்டும்பாங்கானலிங்கமுடன்குருசுதானும்; சீரோதான்கெந்தியுடன் தாரந்தானும்சிறப்பானசூதமுடனிடையாய்ச்சேர்த்து, வேரேதான் மூலியதுவிராவிதானும்வேகமுடன்றான்பிழிந்து சாக்கைமைந்தா, கூரேதான் மைபோல வரைத்துப்பின்பு குணமானமருந்தையெல்லாஞ் சிலையிற்கேற்றே. ௬௨௮

சிலையானவுப்பினிடைகெந்தகத்தைவைத்தா சீர்பெறவேகவசித்துப்
பூசிப்பின்பு, மலையானவோரமதில் தானேபூர்க்குமகத்தானபூநீறுகவ
சஞ்செய்து, குலையானசித்தர்முனிரிஷிகளில்லாக் கொதுர்கூடவனர்
தனிலே புடத்தைப்போடு, விலையானவுப்பதுவும் இலங்குமேதான்
வின்னுலகர் தான்மதிக்கு மதிதம்பாரே. ௬௨௯

அதிதமாங் கெந்தியதனையெடுத்து மைந்தா அமுதுபெற குழை
விட்டில்பதனம்பண்ணு, துவிதமுடனந்தனுக்கு வறுமைவந்தால்
துடியானகெந்தியதனை சிவிமைந்தா, நதிதமுடன்செம்பதனில் நூற்
றுக்கொன்று காட்டிடவேமாற்றுபனிரண்டதாகும், பதியானசித்தர்
முனிசெய்யும்வேதை பாருலகில்யார் செய்வார்நம் பிடாதே. ௬௩0

சன்னிக்கு சுடரெண்ணை.

நிம்பவெண்ணைபடியாமூக்கரண்டியிட்டு நிலைவாகவெள்ளுள்ளி
தாரங்கொஞ்சம், தெப்புடனே விட்டெரித்துச்சூடுகண்ட திறமான
பருவமதில் சிரசிலூற்று, துன்பமது சன்னிதனிற்பிரட்டல் போகுஞ்
சுடிப்புள்ள சலவைகளுஞ் சொல்லாதோடும், நம்பியிட்ட பயிரைபோ
லே நலமதாகும் நாதாந்தமாகபோகர் நவின்றிட்டாரே. ௬௩௧

விஷபேதிக்கு.

கருத்துடைய மானிடர்க்குப் பேதிகண்டால் கைக்கடங்கப்பிடி
யெடுத்துமுளகாய்தன்னை, இருத்தியரை வெண்ணைபோல் மூன்றுதன்
னிலிதமாகப்பதித்திட்டுப் பின்புநீயும், பொருத்தமுள்ள வன்னிப்பற்
பமுடனேதாக்கு பேருலகிற் சன்னியற்றுப் பிழைப்பார்பாரு, வரு
த்தமில்லை கைகண்ட தொழிலுமாகும் வன்மையாய்போகமுனி வழு
த்தினரே. ௬௩௨

பேதிகண்டவுடனே தான்பத்து ஒத்துபேதமிலா வாக்கிருணம்
கலிக்கம்பற்பம், நீதியாய்மாத்திரைக ளன்னப்போக்கு நிலையாகவொ
ருநாளிற் செய்துகொள்ளு, சோதிபெறநா ளிரண்டிற்செய்ய வேண்
டாஞ் சுருக்கிலே குணமைவந்து முடிப்போகும், நாடிதானில்லாம
லுயிரும்போகும் நலமானபோகரிஷி நவின்றவாறே. ௬௩௩

திப்பிலியிடை யெட்டுவராகனிட்டு நேசமிடிபாணிரெட்டிசாதி
யிட்டு, தம்பமரவெட்டி லொன்றுய்க் காச்சிக்கொண்டு தனையெடுத்
துகிட்டி கட்டிப்பிழிந்துதன்னை, நிம்பியிடு அரசம்பீசப்பலமுமஞ்சதி
ரம்பிட்டு ஓட்டியெரிக்குமப்பதாக, நம்பியெடுகல்வமிட்டு அரைநேர்
சாமம்நாடியெடுமெழுகாகும் நாட்டுனோறதே. ௬௩௪



எண்ணை.

சாலெங்காயமது கழற்சிக்கொட்டை மிளைபிடிக்க இரண்டெ
டையும்படியுமிட்டு, காரமுள்ள முக்கெண்ணைபடியுமொன்று கருத்
தறிந்துதந்திவிரை பலமுங்கால்தான், கோலமுள்ளரசமெழுகு பல
மூங், கால்தான்கூட்டி பெரிலடிகட்டிப் பூசைசெய்து, பாரமுள்ள
யெண்ணையதுபணமும்விசம் பார்ச்சிடநோய்தீரும் பரிசுநேகளே. ()

பாரித்தயெண்ணைதனை மூன்றுபோது பாச்சிடவே பாரிசமாஞ்
சூலையெல்லாம், சாரியந்தப்படியோடு மேகமெல்லாந்தாக்கி கெப்பாடி
படுங்கான் மகோதரங்கள், கூறிக்கப்படிபோகும் வாதமெல்லாங்
கொள்ளையது தொண்டைப்போவெடிப்போகும், சொரிந்தமேகவெ
ட்டைநீர்களெல்லாஞ் சுவாரிடுங்கான் வாயுவெல்லாம் சூட்சமாமே. ()

சுவறிடுங்கால் பௌத்திரங்கள் மூலரோகஞ் சொல்லரியநீரும்
பல்துடிகள்போகும், கலறதுபோலாகி விடுமெண்ணைப்போக்கு கை
கண்டு போகரிஷி கருத்தில்வைத்து, தலமீடா தெனக்குரைத்தார்
ளோகத்தோர்கள் தான்பிழைக்கச் சொன்னதிந்த மார்க்கந்தன்னை
எவரிடத்தில் சொல்லாதே புளிப்புதள்ளு இனமாக வுண்டவர்க்கு
பிணிகள்போமே. ௬௩௭

காரிலாகபதங்கம்.

காரியெடை சேர்த்துமே கூடச்சேர்த்துக் கரண்டியிட்டு மிளு
ப்பைநெய்யி லுருக்கிமெள்ள, சாரிமீட்டுப்பத்திரண்டு தாமுஞ்சாச்சி
சரியாவேகரண்டியிட்டுவுருக்கிமெள்ள, கூறியநேர்சூதமிட்டு வுருக்
கத்தானே காற்றமறமுன்னெண்ணை நிறைபவிட்டு, பாரியது பத்து
மது யெரியவிட்டுப் பாகமதையெடுத்துநிறை யிடைபோகாதே. ௬௩௮

போகாதே அன்னமிட்டு வுடைத்துஅன்னம் பூட்டியரைவில்லை
கட்டுகெடத்திலிட்டு, பாகமாயெரித்திடவே யுயரவேறிப்பார்த்திடவு
மெடுத்துவைத்துமடியில்நின்ற, தாகமாய் வில்லையுரைசோறுவிட்டுத்
தாக்கியேவில்லைகட்டிப் புடமூன்றிட்டால், நாகமாம் வில்லையது இல
ந்துபோகும் நாதாக்கள்சொன்னதிந்த நாட்டந்தானே. ௬௩௯

எறிகின்றசூதமிடைபுகைநீர்விட்டு எரிபழலிற்றபணிடம்வை
த்துப்பாரு, கூறியதோர் காளாஞ்சிவந்தவில்லை கூட்டியரைசுடமிட்டு
எரிநேர்ப்பாக, மாறியெடுசிவந்துநிற்கும் ரவியில்நீறு மயமாகத் தாக்
கிடவேயொன்றதாகப், பாரியது ஏமமதுபத்துமாறும் பாலித்தரிஷி
போகர் பண்பதாமே. ௬௪0

தேனிவிசேகலகோயெல்லாக்திருந் செங்கதிருமேனியது இரும்புபோலாம்,வானிலேயிப்பாகம்பொய்யோவென்றால் வண்மையுள்ள ஆண்டவனும்பொய்யதாகும், ஞானிகளுக்கிவ்வேதை யெறக்கயிட்டு காட்டி யுள்ள நல்லவர்கள்செய்துகொள்வார், கூறுகிறாதவர்கள் செய்யமாட்டார் கொட்டிரையெப்போகர்குணமிதாமே. ௬௪௧

மகோதாரத்துக்கு.

வீரமுடன் பதங்கபற்பம் பலமும்மூனு விதமிடை யிளகுசுக்கு தக்கிகூட்டி, பாரமுள்ளநெல்லிமுள்ளி கடுக்காய்ரோப் பார்த்து அரைபுகைநீருற்சாமம்ரண்டு, கோரமதாயுத்தியளவாகவுண்டைகொடுத்துவிடு மகோதரங்கள் முப்பத்தொன்றும், நேரமில்லையோடிவிடு நிமிஷந்தன்னில் நிச்சயமாய் போகரிஷி நேர்சொன்னாரே. ௬௪௨

நல்லிரும்புயோடையாஞ் செம்புநேரே காட்டியரையொடியாக குகையிலிட்டு,மெல்லவதையுருக்கியிடப்புட்டுபோலாம் விரும்பியெடு ரண்டுமுக்கால் நாகத்துஞ்கூடன்செல்ல, நிறுவிரண்டுமரை நிறுத்திக் கொள்ளுசிறுகவ நாவிரமதாகயிரண்டுகாலாம், சொல்லவிக்கவைக்கூடனேநிறுத்துக்கல்வஞ்சருதியுடன் பாணியிட்டு அரைத்துக்கொள்ளே,

அரைத்துவில்லை யக்கியிடுபத்துர்தாமம் அதின்பேரு சயமக்கினியதைநிறுத்து, வரைத்துபலமொன்றுநிறுவேவிவேறு வகைகடுகு ஓமமொடுசிறுதேக்காரும், நிறுத்தளடு ஆனைத்திப்பிலி யிந்துப்புசேரானகோஷ்டமொரு [illegible]வொன்று, அரைத்துநிறுகாயங்காஸ் வசம்புகாலாங் குணமானகடுகுபொடி அரையும்போடே. ௬௪௪

அயக்காந்த லேகியக்குளிகை.

சங்குநிறப்பீநியதோர் சினச்சன்னஞ் சாதகமாயெடுத்துகே[illegible] துடிசாற்றக்கேளு, இங்கிதமாய்வன்னிரசம்உம்பியிட்டு இதமாக வெரித்திடவேபதங்கமேறும், அங்கவதை யெடுநிறுத்துமுன் சன்னைத்துசகமாகச்சேர்த்துகல்வமீதிலிட்டு, சங்கைபடப்பழச்சாற்றுற்சா[illegible] மாட்டிச் சதுருகவிட்டத்திலிட்டு மூடிக்கேளே. ௬௪௫

மூடியதைச் சீலைசெய்து எரிநால்சாமம் முத்தியதை யெடுத்த மண்டலமேயுண்ண, கோடியதுநோயெல்லாங் குஷ்டம்போகுங்குனமாகும்வாதவெடிசூலைபோகும், காடியதுமகோதரமுப்பதாகும்காட்டியுள்ளநீரிழிவுகடுங்கியோடும், வாடிமுகங்கனவில்கண்டவிருன்போலாரும் வகையாகபோகரிஷி சொன்னார்தாமே. ௬௪௬



பாஷாணக்கட்டு.

வச்சிரத்தின்பாலாமூக்குப் பீங்கானிலிட்டு வசமாகமுற்றிவெள்ளைக்கருநேரிட்டு, தச்செயலாய்த் திரிநால்லைமூரிந்து நீராந்தகைமைபெறஎலிகொல்லியோட்டிவிட்டு, னவச்சபடிமுன்னீரால்சுருக்குயிட்டு வங்கயாகநாற்சாமம்போட்டுத்தீரு, உச்சிதமாயண்டமென்ற சண்ணங்கட்டி யூரறியப்புடமிடவேகட்டுந்தானே. ௬௪௭

கட்டுகின்றபாஷாணங்கரியிலாடுங் காதலாயெடுத்ததைதலைத்துக்கொண்டு, வெட்டுநீவெள்ளீய நூற்றுக்கொன்று விரும்பியிடுரசிதமாகீர்களற்று, தட்டுநீநாதம்வரும் கடையில்விற்று தகமையுள்ளஞானத்தைத்தரித்துக்கொள்ளு, பட்டுநூற்சாயம்போற்பாகம்பாரு பதிவானபோகரிஷிபாலித்தாரே. ௬௪௮

சடைக்கஞ்சாய்நூருசட்டியிட்டுச் சலம்விட்டுகிரிநாள்வையலம்ம்பிவாங்கி, திட்டமாகபின்னுமொருசட்டியிட்டுச் சிறுகின்பால்படியும்பாணிநேரே, விடையாகவிட்டெரிநீக்கோணியிட்டு விதமாகப்பிழிந்துரசம்வாக்கிப்பின்பு, கிடமிட்டுஆவினெய்சிறுகவிட்டுக் கிருபையாய்வைத்துநீபகாக்கேளே. ௬௪௯

சக்கரையின்சுக்கேலமிளகுமாஞ்சி சாதிக்காய்பத்திரியுங்கிருப்புகோஷ்டம், மிக்கஅதிமதுரமுடன் அமுக்கராவும் விதமானவாள்மிளகுசசகசாவும், தொக்கவகைபலமிரண்டுதட்டியிட்டுச் சுருதியெனும்படலிட்டுப்பாகாய்க்காச்சி, பக்கமுளமூன்ரசத்தையதிலேயிட்டுப் பாகமாயிறுகபதம்பார்த்துக்கேளே. ௬௫௦

பார்த்தெடுநீசாறுயங்தேனுமட்டுப் பதமாகவுத்தியள்வாகசெய்து, சாற்றிடுவாயொருகுளிகை கொடுத்துப்பாருசதுரத்தில்வசனமுதற்பேதிநிர்க்கும், காத்துநல்லமூலத்திற் கிருணிநல்ல கடிதானசெறியாமைவாந்திநிற்கும், போற்றியேதேகத்தைபார்த்துதாக்கு புகலரியபோகரிஷிபுகன்றிட்டாரே. ௬௫௧

போகர்சீனபதியில் வெள்ளைமனுஷர்பிரதாபம்.

புகன்றிட்டாரின்னமொருகருமானங்கேள் புகழானபோகரிஷி கீர்த்திமார்க்கம், தகன்றிட்டசீனபதிசென்றயானும் தாம்வாகருளிகைகொண்டுபூமிதன்னில், மகின்றிட்டயானுமங்கேயிரங்கிப்பார்த்தேன்மனிதருடகிறந்தானுமேகவெள்ளை, பகின்றிட்டநிறமதுதான் வெள்ளையாகக் கண்டேனே பெண்களுடரூபந்தானே. ௬௫௨

தானுனரூபமதுவெண்மைகண்டேன் தாக்கானதரலசிவெல்லாம்சத்திவந்தேன், சோனனபெண்களெல்லாம்வானபேதம் குலைக்குறிகளனேகமதாய்தோற்றங்காணும், வேனைசீனபதிப்பெண்களெல்லாம்மேன்மையுடன் றானிருக்கக்கண்டேயாலும், பானைகாரரதுபூமிதன்னால் பாக்கியர்களெல்லவரும்வெண்மைதானே. ௬௫௩

வெண்மையாம்பெண்களுடன்போகஞ்செய்தேன் வேதாந்தநாயினதுவருளினாலே, கண்மையாம்காலாங்கிநாதனைநினைத்து களிப்புடனேயிந்திரபோகஞ்செய்தேன், தண்மையாம்பதினெட்டுத்தொப்பிக்காரர்தாரணியிலவதரித்தார் புகழ்ச்சிமெத்த, உண்மையாமானிடர்கள்பிறந்தாரப்பா வுற்பனமாம்கோடிவித்தைபெற்றோர்தாமே. ()

தாமேதான்சவுக்காரவழலைசெய்வார் தகைமையுள்ள கண்ணாடிகாய்ச்சுவார்பார், போமேதான்பூநீரைசுண்ணம்பாக்க புத்தியுள்ளமாந்தரப்பாசீனதேசம், காமேதான்மற்றதோர் தேசமெல்லாம்கருவலையல்பூநீரைக்காய்ச்சுவார்பார், நாமேதான்போகரிஷி கண்டமார்க்கம் நாதாக்கள்கைமறைப்பும் வெளியிட்டேனே. ௬௫௫

வெளியிட்டேன் கோடியுகவித்தையெல்லாம் வேணபடியுபதேசஞ்செய்தேன்யானும், பளியிட்டயெந்தனுக்குசாபமில்லை பாருலகில்சித்தர்முனிகைமறப்பை, தெளியிட்டவெள்ளையென்ற மனிதருக்குநேர்ப்புடனேகாட்டிவிட்டேன்காரணத்தை, துளியிட்டதேசமெங்குஞ்சுற்றிவந்தேன் சூட்சாதிசூட்சமெல்லாந்திறந்திட்டேனே. ௬௫௬

திறந்திட்டேன்வெள்ளையென்றமனிதர்க்கு செப்பவில்லைகருநீலமாந்தருக்கு, குறைந்திட்டவித்தையெல்லாம்கூறவில்லை கொட்டினால்மோசமதுவாகும்பாரு, முறைந்திட்டசாஸ்திரங்கள் சாபமெய்தும் மோட்சமென்ற விடிக்லைநரகம்போவார், வரைந்திட்டவாக்கியங்கள் பிசகாய்போகும் வாகுடனேபோகரிஷி பாடினேனே. ()

காந்தச்செப்பு.

பாடினேனின்ன மொருகருமானங்கேள்பாருலகில் சித்தர்முனிகூறுமார்க்கம், நீடியதோர்காந்தமதுபலமோவைந்துநேருனவெண்காரம்பலமோவைந்து, தேடியதோர்பூநீறுபலமோவைந்து தெளிவானகெந்திபதுபலமோகால்தான், கூடியதோர்சாரக்கெல்லாமொன்றாய்ச்சேர்த்துமுறையே குழிக்கல்லில் போட்டிடாயே. ௬௫அ

போடவேதேனதுவும் விட்டுமைந்தா பொங்கமுடன்றானரைப்பாச்சாமம்நாலு, நீடவேவச்சிரமாங் குகையில்வைத்து நேருடனே



சீல்லிட்டுச்சீலைசெய்து, கூடவேரவிதனிலேகாயவைத்து குணமாகவுலையில்வைத்தூதிப்பாரு, வாடவேகாந்தமதுசத்தேயாகும் வளமாகசத்தெல்லா மெடுத்துக்கொள்ளே, ௬௫௯

கொள்ளவேகாந்தமென்றசத்துதன்னைக் குமுறவேமறுபடியும்மூசைக்கேற்றி, விள்ளவேதானுருக்கியெடுத்துப்பாரு, வீரனமணியதுவாய்வுருகிநிற்கும், மெள்ளவேசத்தெடுத்துக்கல்வமிட்டு மேன்மைபெறவாறுவகைசெயநீர்தன்னால், அள்ளவேதானரைப்பாய்நாலுசாமம்துறையாக தானெடுத்தாவிபிற்பூசே. ௬௬௦

பூசவேசெம்பென்றதகட்டில்மைந்தா புடமாகபத்துக்குவொன்றேயாகும், காசென்றதட்டின்மேல்பூசிப்பூசிக் களமாகரவியில்வைத்துப்புடத்தைப்போடு, மாசென்றபுடமதுவும்பத்தேயாகும் மகத்தானசெம்பதுவுமூறலேகும்,பாசென்றகளிம்பதுவுமற்றுப்போய்பளிங்கான தம்பாக்குநிறம்போலாமே. ௬௬௧

நிற்மானசெம்பதுவுமொன்றேயாகும் நிறையான வெள்ளியதுவொன்றேயாகும், நிறமான தங்கமதுவொன்றேயாகும் திடமுடனேமூசையிட்டுவுருக்கித்தீரு, பாமானசாரதுவுமொன்றாய்ச் சேர்த்துபளபளத்தவர்ணமதுகாந்திமெத்த, உறமானமாற்றதுவுமெட்டாகுமுத்தமனேபோகரிஷியுரைத்தவாறே. ௬௬௨

வாறானபொன்னதுவும்வாரடித்துவளமுடனேபூங்காவிதன்னிற்போட, மாறான மாசியதுநீங்கியேதான் மகத்தானபசுமைநிறத்தங்கமாகும், தீறானகடைத்தங்க மிதுக்கொப்பாமோ கடந்தமுனி சித்தரிஷிசெய்யுமார்க்கம், பேறானகாலாங்கியடிவணங்கி பேருலகில்மாந்தர்கட்காய் செப்புனேனே. ௬௬௩

செப்பினேன்நாதாக்களருமைவித்தை செகத்திலேயாராலுங்கூறப்போமோ, ஒப்பவேமனோன்மணியாள் பாதம்போற்றி ஒழுங்குடனேசிதாபாசந்தன்னைநீக்கி, தப்பவேபூரணத்தைமனதிலுன்னி சதாகாலம்நிருவாணிமுன்னதாக, மெய்புடனேபராபரியை மன்னிப்பாகமேதினியில்தவசிருந்துநாளைப்போக்கே. ௬௬௪

போக்கவேதுஷ்டருடன்கூடவேண்டாம் பொலிவான வுளவையெல்லாங்காட்டவேண்டாம், தூக்கமுடன்சோம்பருடன் கூடிவார்த்தைதனைமுறைகள் யாதென்றுங்காட்டவேண்டாம், வாக்கிலுள்ளசித்தர்முனிரகசியத்தைவளப்பமுடன் விருதாவில்கொட்டவேண்டாம்நோக்கமுடன்றானிருந்து பொருளாராய்ந்து நெடிக்குள்ளேகாயசித்திக்கிடமுந்தேடே. ௬௬௫

வசியமை.

தேடயிலேயின்னமொருமார்க்கம்பாரு தெனிவானமையென்று செப்பக்கேளு, நீட்டயிலேவழுதண்ணி தொழுகண்ணியாகும்நீட்டானநீர்மேல்நெருப்புமாகும், கூட்டயிலேபசளையாங்கரும்பசளையாகும்குறிப்பானவாள்கர்ட்டினிலையுமாகும், வாடையிலேஅழுஞ்சியென்றமூலியாகும் வகுப்பானகருமூலி இருள்மூலியாமே. ௬௬௬

மூலியாம்பேய்மிரட்டிமுசுட்டையாகு முகிழானகருந்தும்பையினாத்தியாகும், வாலிவாம்கருடனிடமூலியாகும் பாங்கானகருங்குவளைபொன்முசுட்டை. மேலியாங்கருமூலிச்சாற்றுக்கூட்டு வெடிப்பானவாதளையின்பாலுங்கூட்டி, கோலியீம்கழற்சியிடமூலிதானும் துணைமானபசிமூலிபுன்னையாமே. ௬௬௭

புன்னையாமேசண்டமிரண்டதாகும் புகழானநரிமிரட்டிமூலிதானும், மன்னையாம்பேய்மூலிதினைப்பூண்டாகு மயமானவாளையுடனுமத்தையாகும், தொன்னையாங்கடம்பையுடன் முதியார்கூந்தல்தேரானவாள்மிரட்டிமூலிதானும், பன்னையாங்கருங்காலி சாறைபாகும் பாங்கானதிமிர்க்கோட்டான்மதிப்பூண்டாமே. ௬௬௮

பூண்டானகூத்தனிட குதம்பையாகும் புகழானநன்னாரிமூலிதானும், நீண்டாதவாடுதின்னாப்பாளைதானும் திறமானகருங்கோவைவிஷ்ணுர்வேம்பு, கூண்டானமாமல்லிசெவ்வல்லிதானும் கொடிதானவைபூரின்சிகைதானாகும், தூண்டானமூலியிடச்சாறுவாங்கி துறைபோலமையெடுக்கும்வகையைக்கேளே. ௬௬௯

கேளேநீசாறெல்லாமொன்றாய்க்கூட்டி கிர்த்திபெறசிலைதனிலாட்டிமைக்தா, பாளேதான்போகாமல் காயவைத்துப்பாக்குபெறசிலைமைபெறதானைத்துக் கொளுத்திப்போடு, கேளேதான்பிங்கர்ன்வைதயிலம்வீழும்கிருபையுடன்றானெடுத்துவகைகையைக்கேளே. ௬௭௦

வகையானவார்ந்தைப்புடபிச்சிதானும் வலுவானசெம்போத்துப்பிச்சுதானும், பகையானவல்லூறுப்பிச்சுதானும்பாங்கானகாட்டோணான்பிச்சுதானும், தகையானவாயசத்தின் பிச்சுதானும் தடிப்பானசாரையுடபிச்சுதானும், முகையானகாடையுடபிச்சுதானும் மூர்க்கமாம்கருங்குருவிபிச்சுதானே. ௬௭௧

பிச்சானமீன்குத்திபிச்சுதானும் போனதேவாங்குபிச்சிதானும் மூச்சானகருங்குரங்குபிச்சுதானும் முயலானசாரையுடபிச்சுதானும், வச்சானமாடப்புறாபிச்சுதானும் கொடியானபூனையுடபிச்சுதானும், நச்சானபாம்பாணிபிச்சுதானும்நலமானகருஞ்சாரைபிச்சுமாமே. ௬௭௨



ஆமேதானித்தனையு மொன்றாய்க்கூட்டி அப்பனேபுனுகுடனே பச்சைப்பூரம், போமேதான் கோரோசனை குங்குமப்பூபொலிவான சவ்வாதுதானுங்கூட்டி, காமேதான்கஸ்தூரிவாடைதானும்கருவானமூதற்றிட்டுசிலையோடு, காமேதான் வழிஞ்சியிட தயிலந்தாட்டிவிருப்பமுடன்பாணிதனில்பதனம்பண்ணே. ௬௭௩

பண்ணவேமையதனை யெடுத்துக்கொண்டு பதிவானவுருவுந்தனையேற்றியேதான், இன்னமுடனஞ்சனையர்வுருவமாட்டித்திரமுடனே லட்சமுரு போட்டுக்கொண்டு, வண்ணமுடன்லலாடமதில்மைபத்தீட்டிமயங்கிடவேலோகமெல்லாம்வசியமாவார், நண்ணமுடன் ராஜாதிராஜர் தாமும் நாட்டிலே சித்தர்களும்வசியமாமே. ௬௭௪

வசியமாமஷ்டசித்து யிதனலாகும் வனமானமோகனமு மிதனலாகும்வசியமாய்ஸ்தம்பனமுமிதனலாகும் வாகானகருவுகளு மிதனலாகும், வசியமாம் பேதனமுமிதனலாகும் மகத்தானகிரியைமுதலிதனலாகும், வசியமாமுச்சாடனமிதனலாகும் மார்க்கமுடனுருமாற்றமிதனலாமே. ௬௭௫

ஆமேதான்சித்தர் முனிசெய்யும்பாகம் அடவாகப்பலநூலுமாராய்ந்தேதான், நாமேதான்காலாங்கிநாதர்பாதம்நாட்டமுடன்றாள்பணிந்துகலைமுற்றேன், வேலேதானிக்கருவைவெளிவிடாதே விட்டாலேவெகு மோசமாகும்பாரு, நாமேதான்சொல்லுகிறோம் யாணைமார்க்கம் நாதாக்கள்பிடிவாதம் நவில்வோம்பாரே. ௬௭௬

பாரேதான்குருவாணைசுவாமியாணை பராபரியாய்தன்னுணைசிவனாணை, சீரேதானுமையாணை யும்பராணை சிவாலயங்கள்தன்னுணை தேவியாணை, கூரேதான்குருவாணைகணேசனுணைகுறிப்பானகன்னனிடவாணைகண்டீர், நேரேதான் சித்தரிடவாணைகண்டீர் நெரியானமுனிரிஷிகளாணையாமே. ௬௭௭

ஆமேதானுணையது கடக்கவேண்டா மப்பனேசாமமதுயெய்துவம்பாரு, நாமேதான்சொல்லுகிறோம்ரிஷிகள்போக்குநன்மையுடனுபசாரஞ்செய்யவேண்டும், வேமேதான்மனதுவர நடக்கவேண்டும் வேதாந்தத்தாயினதுவருளைவேண்டும், போமேதான்கற்பமதுகொள்ளவேண்டும் பொலிவானநன்னடக்கை வேண்டுந்தானே. ௬௭௮

தானனரிஷிகளிட பதாம்புயத்தைச்சதாகாலஞ் சிரசின்மேற்றுக்கவேண்டும், கோனனசாபத்திற்கிடங்கொடாமல குருநிந்தையணுகாமலிருக்கவேண்டும், மானனசித்தர்முனிதவசூக்குப்பட்சமுடன் மனதுவரநடக்கவேண்டும், மானனசாத்திரத்தையாருக்குந்தான் மாணிடர்க்கு கொடுத்தாக்கால் தீமையாமே. ௬௭௯

திமையாக்கலையதுதான் வெடித்துப்போகும்திகழானசாபமது மேவும்பாரு, சாமையாங்கோபமது வதிகமாகிசண்டாளதுரோகியெ ன்றுசபிப்பார்சித்தர், ஊமையாமுட்டனென்ற பெயர்தானுமூர்க்க முடன் தானுரைப்பார் வதீதமெத்த, ஆமைபோலுறுப்பெல்லாந்தா னடக்கி அவனிமீதிலேவாழுவது மதிதங்காணே. ௬௮௦

காணவேநல்லவழி போகாவிட்டால்கடிந்துரைப்பார்சித்தரெல் லாம்நாள்கடோறும், மாணவேசாபத்துக்கிடமுண்டாகு மாற்கமுட ன்யாதொன்றுங் காட்டவேண்டாம், வேணவேருந்திரசாத்திரங்க ளெல்லாம் விள்ளாதகைமறைப்பு வுளவுசொல்லி, நாணவேமுப்பூவுக் குறவுஞ்சொல்லிநாதாக்கள் தானெடுக்கும் வகையைத்தேடே. ௬௮௧

ஸ்ரீரங்குபூமிவளம்.

தேடையிலேபூம் பாறையானைக்கல்லாம், தேசத்தில்சோழனிட நாடேயாகும், ஓடையிலேவிராலிப்பிடமலைதானாகும் வுத்தமனேதிரு ப்பாண்டிநாடேயாகும், மேடையிலேநாகார்ச்சனமலையுமாகும்மேலா னநாமக்கல்பாறையாகும், வாடையிலேசுவாமியிடமலைதானாகும்வள மானசுரசிந்து யோராமாமே. ௬௮௨

ஓரமாம்நர்மதா பூமியாகுமுத்தமனே திருமாளிகைமாகும், கா ரமாமுகவைபதி கடலோரந்தான்கரியான பூமியிடம்படிகக் கல்லாம் தூரமாம் தாம்பர பரணிஸ்தலமுமாகும்தூக்கானவேகவதிர்த்தமா கும்பாரமாம் சித்தூராமாக்காடாகும் பசமலையும் சிரெங்கப்பதியு மாமே. ௬௮௩

பதியானகங்கைநதிக் கடலோரந்தான் பாங்கானவளர்பூமிதே தம்பாவும், நதியானவால்மீகர் பாளந்தன்னில் நயமானவிடப்பாகம் புத்தாருண்டு, விதியானசித்தர் முனிபிருக்குந்தானம்விவேகமதிபா சொன்றமைபவொன்று, சதியானமிருகங்களிருக்குந்தானம் சதகோ டிசூரியர்போல் ரிஷிகள்பாரே. ௬௮௪

பாரேதான்கல்லானை வாசஞ்செய்யும் பனிமூடும்தேசமது பகா ப்போமோ, நேரேதான்சுனையொன்று மலையுண்டுண்டுநெடிதானபூமி யெல்லாமளறேயாகும், சீரேதான்பாலிலே மென்பார்சித்தர்சிர்பாத ம்பட்டாலே வெந்துபோகும், ஊரேதான்பூண்டு முதலில்லைப்பாவு த்தமனேகாரமென்ற பூமியாச்சே. ௬௮௫

சுண்ணமென்ற பூமிதனில்பூரிப்பாசருதியுடன்றனெடுத்து மா ண்டார்கோடி, அண்ணலென்ற வாவடையார்கோயிலுண்டு அதன் ப க்கமென்றுபிரான் காதமப்பா, கண்ணபிரான்றனிருக்கு கோயிலு



ண்டு தருந்தூரமானிடர்கள் செல்லமாட்டார் தண்ணமுடன் மகா கோடிமுனிவர்சித்தர் சதாகாலவாசமது செய்வார்தானே. ௬௮௬

தானானகோயில்குள மதிகங்காணும் தாக்கான மானிடர்கள் காணாதேசம், பானானவூர்வனமு மில்லாத்தேசம் பாழான மலைகுகை கள் கண்டோரில்லை, தேனானதேன்விளையுங்கதண்டுக்காடு தெற்கான தேசமது கள்ளர்நாடு, மானானவழநர் மலைபுத்தூராகு மகத்தான வைகைநதி பூமியாமே ௬௮௭

ஆமேதானத்தி நகராசேர்மந்தான் அயோத்திநகரற்றோரங்கரை தானாகும், வேமேதான்விலாடபுரி குகையோரந்தான் வெளிக்காடு பூமியெல்லா மளறேயாகும், நாமேதான்கண்டபடி யின்னஞ்சொல் வோம்நாதாக்கள் தானெடுக்கும்வளமுஞ்சொல்வோம், போமேதான் பொன்னகரமேருபக்கம் பொலிவான ஸ்தளமுண்டு புகலக்கேளே.()

கேளேதான்ஸ்தலமதுவும் தேவதாஸ்தானம் கொடியானகோபு ரமும்தங்கமாகும், காளேதான் விக்கிரகங்கள்தங்கமாகும் கடலான மதிலெல்லாம்தங்கமாகும், ஆளேதான் கண்டறியாதேவதானம் ஆத் தானமண்டபமுந்தங்கமாகும், மீளேதான் வாசனங்களெல்லாம் தங் கம் மெழிலானபூமியெல்லாந் தங்கமாமே. ௬௮௯

தங்கமாம்தேவாதம் தங்கவர்ணம் தனியானபிரதமைகள் தங்க மாகும், அங்கமாலட்சுமியும் வாசஞ்செய்வாள் அந்நகரம்கண்டவர்க ளாருமில்லை, புங்கமாஞ்சித்தர்முனி ரிஷிகள்தாமும் பொலிவானகூட் டமெத்தகோயிலுள்ளே, சிங்கமுடன்கோபுரமாம்வாசல்தன்னில் சிற ப்புடனே காவலது கண்டேன்பாரே. ௬௯௦

கண்டேனேவன்ன காஞ்சிலதுகாலம் கவனமுடன்குளிகைதா னு பூண்டுகொண்டு, அண்டாண்ட முடையதொரு கோபுரத்தில் அப்ப னேயான்சென்றுபார்த்தபோது, திண்டமுடனவ்விடத்தில் ரிஷிகள ப்பா தேவாதிகோஷ்டமுடன் தியானஞ்செய்வார், தெண்டமுடனு வவரைக்கண்டபோது திடுக்கிட்டு மனங்கலங்கித் தியங்கிட்டேனே.

தியங்கிட்டவெடியேனும் காலாங்கிதன்னைத் தியக்கமுடன் தானி னைத்துவிழித்துப்பார்த்தேன், மயங்கிட்டவெந்தனையும் ரிஷிகள்பார் த்து மனமிறங்கிதிரமுடன் வதிதஞ்சொன்னார், தயங்கிட்டவெந்தனை யும்யாரென்றுகேட்கத் தாழ்மையுடன்சிரங்குனிந்து வணக்கஞ்சொ ன்னேன், நயங்கிட்டவெடியேனும் குளிகைபூண்டுநாட்டமுடன்பூமியை யும் தேசம்வந்தேன். ௬௯௧

வந்தேனேபூமி வளங்காணவந்தேன் வளமையுடன் ஈதாக்க ளெடுக்கும்ஸ்தானம், சந்தேகமில்லாதவனர்தனுடு சார்புடனே மலை குகைகள் யாவுங்கண்டேன், தொந்தமுடன்சதிகளைகள் பழுமையா வும் தோருமல்குளிகைகொண்டு சுத்திப்பார்த்தேன், எந்தனிட தை ரியங்கள்மிகவுமாகி யேகினேன் பொன்னகரங்காணத்தானே. ௬௯௩

காணயிலேதேவஸ்தானபெருமைகண்டேன் கைலங்கிரிவாசங்க ளிதற்கீடல்ல, வேணவேவதிசயங்களெல்லாம் பார்த்தேன் விளைகின்ற பூரீரும்காரமெத்த, தோணவேமானிடர்களெடுக்கமாட்டார் தொலை தூரதேசமுந்தொடரமாட்டார், மாணவேவந்தாலுமாண்டுபோவார் மகிதலத்தில் சித்தருடதேசந்தானே. ௬௯௪

தேசத்தைக்கண்டாலுமாண்டுபோவார்தெரிசித்தால்சித்தர்களு ஞ்சாபஞ்சொல்வார், பாசத்தைவிட்டொழித்துவந்திட்டாலும் பதை யாமற்காரத்தால்சாவா தாமும், வேஷத்தைபோட்டுமல்லோ வீணர் கூடி, வெகுவெகுவாய் வளம்பார்ப்பார் கோடிகோடி, நேசத்தைவிட் டொழிபார்மாய்கையாலே கெடுந்தூரஞ்செல்லார்கள் சண்டிமாடே.

மாடானசண்டிகளைவிட்டுநீங்கி மார்க்கமுடன் குளிகைகொண்டு பார்க்கவந்தேன், காடானவனாந்திரங்கள் குகைகள் கண்டேன் கன மானசித்தரிட மார்க்கம்பார்த்தேன், கோடானகோடிமுறை யாவும் பார்த்தேன் குறிப்புடனே பொன்னகரம் கண்டுவந்தேன், சேடான பகவானால்சொல்லவொசு சிறப்பான பொன்னகரங்கண்டேன்தானே.

கண்டேன் சதாசிவத்தின் கோயில்கண்டேன் கைலங்கிரிவாச ளை யான்கண்டதில்லை, தொண்டுசெய்யும் ரிஷிமுனிவர் பாதங்கண் டேன் தோராதவர்ச்சனைகள் யாவும்பார்த்தேன், அண்டரண்டசரா சரங்களிதற்கீடல்ல ஆதிசேடன்தன்னாலுங்காணவொசு, தெண்டமுட ன்மேற்புரவாசல்வந்தேன் தேவரிஷியென்றொருவர்முனிகண்டேனே,

முனியானரிஷிசித்தர்யாவுங்கண்டேன்மூலஸ்தானப்பெருமை கோயில்கண்டேன், கனியான வடவாசல்சேர்வைகண்டேன் தாக்கா னபொன்கோபுரவாசல்கண்டேன், தொனியானவாத்தியங்கள் வழங் கக்கண்டேன் தோராதகன்னை பிராணஞ்சலகண்டேன், இனியான தடாகங்கள்படிகளெல்லா மியலானதங்கமது வர்ணமாமே. ௬௯௮

ஆமேதான்வண்ணங்களெல்லாம்பார்த்தேன் அதற்கப்பால்பூமி யிடாதங்கேட்டேன், நாமேதானின்னகரம்பூரீரப்பா தாக்கானசித் தர்களுங்கண்டமார்க்கம், போமேதான் முந்நூறுகாதந்தானும் பொ லிவானபூரீறுவிளையும்பூமி, நாமேதான் கண்டுவந்தேன் பூரீர்தன்னை நாட்டிலே கண்டவர்களில்லைதானே, ௬௯௯



தானேதான்கண்டமட்டுங்குளிகைகொண்டேன் தயவுடனேமா னுக்கள்பிழைக்கவென்று, ஈனேதான்சித்தர்முனிசொன்னநூலைநல முடனேயாருய்ந்துவளமுங்கண்டு, மானேதான்தேர்ந்தெடுத்தேனி ந்தேசம் மகத்தானதேசங்களிதற்கீடல்ல, பானேதான்முன்சொன் னதேசமெல்லாம் பாங்கானபூரீறுக்காதியாச்சே. ௭௦௦

## பூரீரெடுக்க விதி.

ஆச்சப்பாபூரீறுயெடுக்குமார்க்கம் அப்பனேவிதிசொல்வேன்மதி யாய்க்கேளும், பேச்சப்பாசித்தருடசாத்திரத்தில்பிரட்டானகைமறை ப்புவதிதமெத்த, காச்சவேபூரீரையெடுக்குஞ்சைகை கருவாகச்சொ ல்லவில்லைசாத்திரத்தில், பாச்சலுடன்காலாங்கிவையர்பாதம் கருணை யுடன்றாள்பணிந்து கூறுவேனே. ௭௦௧

கூறுவேன்பங்குனியாம்பருவந்தன்னில் குறிப்புடனேசாதாக்க ள்சொன்னமார்க்கம், மாறுபடுபேதனங்கள்கண்டாராய்ந்து மகிதலத் தில்பூரீறுகாய்க்குங்காலம், வேறுடனேராக்காலஞ்சாமம்மத்தி விரு ப்பமுடன் காட்டகத்தேசென்றுமேதான், சாறுடனேகாடெல்லாம் திரிந்துபார்த்தால் சதிரானபூரீறுபூர்க்குந்தானே. ௭௦௨

பூர்க்குமேபூரீறுகதிர்போலாகும் பொங்கமுடன்றானெழும்பிம லர்போல்வீழும், நீர்க்குமேவிடியசாமந்தன்னில் நிலைபாதுபூரீறு காரம்போச்சு, நிர்க்கமுடன் காரமதுயில்லாவிட்டாலும் தெளிவான பூரீரைவாரிவந்து, மார்க்கமுடன்றான்கரைத்து தெளிவிறுத்து மயங் காமல் திட்சையதுபத்துசெப்பே. ௭௦௩

செய்யவேயின்னமொருவயணங்கேளு செழிப்பானசித்திரையா ம்பருவகாலம், பையவேபூரணையாம்பட்சந்தன்னில்பாங்கானநச்சா மவேளைபார்த்து, மெய்யவேபூரீறுவிளையுமாற்கம் மேன்மையுடன்க ண்டறிந்துயெடுக்கும்போது, தொய்யவேதேவதையின் பூசைவேண் டுந்தோராமல்வட்சரத்தைமாறிக்கொள்ளே. ௭௦௪

கொள்ளவேதிட்சைவிதிமார்க்கந்தன்னை குறிப்பாகத்தான்செய் துமுடிப்பாயானால், எவ்வளவுங்கோளாறுநேராதப்பா என்மகனேகு ருமுடிக்கும்வகையைத்தேடு, விள்ளவேபூமியிடவளமுஞ்சொன்னே ன்விருப்பமுடன்சாதாக்கள்துறையுஞ்சொன்னேன், மெள்ளவேயன் னாலேழாயிரந்தான்மேன்மையுடன்கண்டறிந்துயோகந்தேடே. ௭௦௫

தேடையிலேபோகரிஷிசொன்னமாற்கம் தெளிவாகயாருந்தான் சொல்லாரப்பா, நீடையிலேவாசனத்துக்குறுதிசொல்வேன் நெடிதா

ணாசாங்தோலாசனந்தானும், ஆடையிலேகாவிகாஷாயமாகு மப்ப
னேயடிவேட்டிமுழந்தானுது, மூடையிலேமேலங்கி முழங்கால்மட்டு
ம்முக்கியமாய்த்தானணிதல்முறைமையாமே. ௭௱௬

முறைமையாய்த்தானிருந்துயோகவெட்டிமுடிமீதுதானணிந்து
யோகஞ்செய்வாய், நிறைமையாய்கைகாலைமுடக்கவேண்டும் நித்திய
மும்வாசிதனைநடத்தவேண்டும், திறைமையாய்வட்சரத்தைமாறவே
ண்டும்தீர்க்கமுடன்சின்மயத்திலேலறவேண்டும், வறைமையாய்ருட்சா
திவாராதாரம்வகுப்புடனேயறிந்தவனேயோகியாமே. ௭௱௭

ஸ்ரீரெடுக்கமறுபாகம்

யோகியாமின்னமொருமார்க்கங்கேளு நொடிதானசித்திரப்பர்வ
முன்னே, ஆகியேபூமியயந்தன்னைப்பார்த்து அப்பனேயளர்பூமியரா
ய்ந்தேதான், பாகியேயோராளினுழமட்டும் பாங்குடனேயளர்களத்
தையாராய்ந்தேதான், மாகியேகிட்டனைகள் மிகவுஞ்செய்துமார்க்க
முடன்பன்றுடைமேலேசாத்தே. ௭௱௮

சாத்தவே மூன்றுநாள்சென்றபின்பு சாங்கமுடன்றான்சென்று
பார்க்கும்போது, ஏத்தமுளவளர்போலயிருக்கும்பாரு என்மகனே
வாரியதைபிங்கானிட்டு, தாத்தமுடன்பனிநீரால் கரைத்துமேதான்
தோராமல்சத்துமுறைதெளிவிறுத்து, மாத்தமேமறுசட்டிக்குள்ளே
வார்த்துமயங்காமல் பத்துமுறைகாய்ச்சுகாச்சே. ௭௱௯

காய்ச்சவேவுப்பதுவுமிகவேபூர்க்கும் கருவானவுப்பதுவுங் கார
மெத்த, மாய்ச்சலுடன்சரக்குர்குக்கடுங்காலனுரு மகத்தானவேதை
யிதுகோடிக்கொவ்வும், தீய்ச்சலுடன்வுப்புக்குநீட்சைசெய்துதிறமு
டனேகாயத்துக்குறுதிபண்ணு, பாய்ச்சலுடன்முப்பூவுந்தின்றுபானு
ல்பாங்குடனேதேகமதுயிறுகுந்தானே. ௭௱௰

தானனாயத்தைநிறுத்தவேண்டும் சதாகாலம்சுக்கிலத்தைதக்க
ட்டவேண்டும், வேனனமும்மலத்தையறுக்கவேண்டும் வெளியானசி
தாபாசம்நீக்கவேண்டும், பானனமுச்சுடரை யறுக்கவேண்டும் பா
மூனதூலமதைவெறுக்கவேண்டும், மானனபாரபரியை நிர்த்தஞ்செ
ய்துமானிலத்தில்வாழ்பவனேசித்தனாமே. ௭௱௰௧

மேருவுக்கு இடபாகத்தில். கன்னபிரான்
ஸ்திரீகள் லீலைமண்டபத்தை போகர்கண்டது.

சித்தனுங்காலாங்கிநாயர்பாதம் சிறப்புடனேபோகரிஷியடிபணி
ந்து, சுத்தமுடன்மேருவுக்குயிடபாகத்தில்சுடரொளிபோல்மடுவொ



ன்றுகதியொன்றுண்டு, மூத்தமுடன்மண்டபமுஞ்சுனையுங்கண்டேன்
முயலானமண்டபத்தினருகேசென்றேன் கர்த்தனெனுங்கன்னபிரா
ன்மாளிகண்டேன் கதிரொளிபோநயாத்தினைகசிதந்தானே. ௭௱௰௨

கசிதமா மண்டபத்தினடியோரந்தான் கதிரோனைக்கண்மறைக்
கும்சித்தாப்பா, கிசிதமுடன்தவநிலையில்வணங்கிநிற்பார் நீடூழிகாலவ
ரைக்கண்டதில்லை, உசிதமுடன்கன்னபிரானனவற்கு வுற்பனமாங்கு
ளிகையதுமிகவேசுவார், தசிதமூடன்குளிகையது பூண்டுகொண்டுதா
ரைராஜர்சதாநித்தம்கலவிசெய்வார். ௭௱௰௩

செய்வாரேபன்னிரண்டாயிரந்தான் சிறப்பானதேவதாபெண்க
ள்தானும், உய்குவாரெட்டெட்டுகலவியோடு வுற்பனமரம்நிசிதகளை
யார்செய்வார்பார், மொய்க்குழல்மார்தானிருக்குப்பளிங்குமாடம்மும்
மணியசம்தேவரிடவாசிர்மந்தான், நெய்தலுடன்கொட்டியலர்தாமரை
ப்போல் நேரானதடாகமதுகண்டேன்பாரே. ௭௱௰௪

போகர்ஸ்ரீகிருஷ்ணமண்டலத்தில் சித்தர்களைக்கண்டது.

பாரேநான்தடாகத்தில்கோடிசித்தர் பாங்கானயாதவத்தின் சித்
தர்கும், நேரேதான்தடாகத்தில்கீழ்பாகத்தில் நெடிதானசித்தர்க
ளோகுறும்பராசும், சேரேதான்தடாகத்தின்மேற்பாகத்தில் சிறப்
பானசித்தர்களோமூலவர்க்கம்,வடரேதான்தடாகத்தின்குணபாகத்தில்
வுத்தமனேகன்னாயர்சித்தராமே. ௭௱௰௫

ஆமேதான்சித்தருடவளமுங்கண்டேன் அதற்கப்பாலவருடைய
வளவுங்கண்டேன், தாமேதான்தவநிலையிலுறுதிகண்டேன் சாங்கமு
டன்வயதல்லோலக்கோயிலில்லை, போமேதான்குளிகையது பூண்டு
கொண்டுபொங்கமுடன்தவநிலையிலேநிற்கின்றேன், வேமேதான்சி
த்தர்களுமென்னைக்கண்டுவெகுவெகுவாய்மாருட்டஞ்செய்தார்பாரே.

செய்யவேயடியேனுங்குலைநடுங்கித் திடுக்கிட்டுமெய்மறந்துயே
ங்கினின்றேன், பையவேயெந்தனையாரென்றுகேட்கபட்சமுடன்காலா
ங்கிதனைநினைந்து, மெய்யுடனேயென்பேருபோகரென்றேன் மெய்ச்சி
யேயெனக்குயுபதேசஞ்சொன்னார், வலமையுடனேலலாடமதில்பூண்
டுகொண்டு மகத்தானகன்னபிரான்தனைக்கண்டேனே. ௭௱௰௭

கண்டேனேகன்னபிரானருகில்வந்தேன் கனமுடனேயவர்பாத
ம்போற்றிசெய்தேன், தொண்டனெனுமடியேனுந்தாள்பணிந்து அ
ரைராஜர்முன்பாகநிற்கும்போது, தெண்டமுடன்மண்டபத்தினருகே
நீதான்தீவிரமாய் போய்வரலாமோசித்தாவென்றார், பெண்டுகள்தாமி
ருக்குமிடம்தெரியாதோ போனபோகரிஷிசாபந்தானே. ௭௱௰௮

சாபமதுசொன்னவுடனடியேன்தானும், சாங்கமுடன்கண்ணபி
ரான்தன்னைநோக்கி, வேகமுடன்காலாங்கிதன்னைநினைந்து விகற்பமது
யெந்தனுக்குநேர்ந்ததென்று, சாகமுடனடியேனுஞ்சாபம்நீக்கித்தார
ணியில்பிழைப்பதற்குகெதிதானென்ன, பாகமுடன்கண்ணபிரான்மன
மும்வந்து பட்சம்வைத்துயெந்தனுக்குமொழிசொன்னாரே. ௭௧௯
சொன்னாரேகண்ணபிரான்மனமுவந்து சட்டெரிக்கபோகரையு
மனதிலெண்ணி, நன்னயமாய்குளிகைகொண்டபோகர்தன்னை நயமு
டனேதாமுரைப்பார்நீதமெத்த, பன்னகசாலையிலிருக்கும் பாங்கிமா
ரைப்பார்த்ததினாலுந்தனுக்குகெடுதியாச்சு, வன்னயமாயெந்தனையுமெ
டுத்துக்கூற வாகுடனேமறுபடியும்வணங்கிட்டேனே. ௭௨0
வணங்கிட்டேபோதையிலேசித்தரெல்லாம் வாகாகவோடிவந்து
யென்னைச்சூழ்ந்தார், பிணங்கிட்டயெந்தனையும்ரிஷிகள்பார்த்துபிரிய
முடனேடிவந்துபின்னுஞ்சொல்வார், தணங்கிட்டயெந்தனுக்கு சொ
ன்னதென்றால் தயவுடனேபோகரிஷிசொல்லக்கேளும், சுணங்கிட்டுக
ண்ணபிரான்மண்டபத்தில் குறைகோடிரிஷிமுனிவர்போனார்காணே.
காணேமேயிதுநெடுநாள்சித்தர்தம்மைக் காத்திருந்தோம்நெடு
நாளாய்நதியோரத்தில், நாணவேதேவாதிரிஷிகளெல்லாம்நலமுடனே
யன்றாடம்வருவார்போவார், வேணலேவுபசாரம்நடக்குமிங்கே விசை
யுடனேமண்டபத்திற்போனாரில்லை, ஆனவேயும்முடையவிறுமாப்பா
லேஆக்கினையைதான்கடந்துவந்திட்டீரே.
௭௨௨

போகருக்குச் சாபங்கொடுத்தது.

வந்திறாலுந்தனக்குச்சாபமப்பா வரைகோடியுகவருஷம் தக்
தோம்காணும், தொக்கமுடன்றான்கொடுத்தார்சித்தரெல்லாம் தொல்
லுலகில்போவதற்குயிடமுமில்லை, சந்தமுடன் கிருஷ்ணமண்டபத்தி
னோரம்சாங்கமுடன்றானிருந்தேன்சிலகாலந்தான், நந்தமுடன்பெண்க
ளெல்லாம்நதியோரத்தில்கலந்துமேசலக்கிரீடைசெய்யவந்தார்தாமே.
தாமேதானெந்தனையுங்கண்டாரப்பா சதகோடிசூரியர்போல்கண்
டேன்யானும், காமேதான்பெண்களெல்லாம்கிட்டிவந்தார் கண்டா
ரேயெந்தனையும்பெண்களெல்லாம், வேமேதான்யெந்தனையுயாரென்
றார்கள்மிக்கவுமேதாள்பணிந்துயடிவணங்கி, நாமேதானிவ்வூறுதேச
மல்ல நலமுடனேசீனபதியென்றிட்டேனே.
௭௨௪
என்றவுடன்பெண்களெல்லாமதிசயித்து எற்றமுள்ளசிறுபாலா
யேன்தான்வந்தீர், கன்றுடனேபசுநிற்குங்கதையைப்போல பாங்கிய



ற்குப்பரிதாபமெடுத்துச்சொன்னேன், நன்றுடனேகாலாங்கிசீஷனம
மாநாட்டிலுள்ள வளமெல்லாங்காணவந்தேன், தென்றிசையில்நானி
ருந்துகுளிகைபூண்டு சிறப்பானசீனபதிபோனேன்தானே. ௭௨௫
போனதினால்வதிசயங்கள் கெத்தவுண்டு பூதலத்தாருநான்
கண்டதில்லை, நானதினால்சிலகாலமங்கிருந்தே நயமுடனேபெண்க
ளெல்லாம்வெண்மைகண்டேன், நானவனும்கமலமுனியங்கிருந்தார்சா
ஷ்டாங்கதெண்டனிட்டுத்தாள்பணிந்தேன், ஆனதினாலெந்தனுக்குவு
பதேசங்களனேகமதாய்தானுரைத்தார்வதிசயந்தானே. ௭௨௬
தானானவதிசயங்களனேகஞ்சொன்னேன் தகமையானசீனபதிசிற
ப்புஞ்சொன்னேன், வேனானமேருகிரிபோனேனம்மா வெழிலான
விருவத்தோர்வரைதானுண்டு, கோனானயேழுவரைசொன்னேனம்மா
கோடிமுனிசித்தர்களைக்கண்டேனென்றேன், பானான்வடிவேலர்ஸ்தல
மொன்றுண்டு பாங்கானபொன்மானுங்கண்டிட்டேனே. ௭௨௭
கண்டேனேசித்தர்வர்க்கங்கோடாகோடி காணுதவனாதேசமன
ந்தமுண்டு, அண்டானமுனியறியாக்காடுங்கண்டேன், அங்குள்ளவ
திசயங்களெல்லாஞ்சோன்னேன், பண்டமுடன்கிடாரங்கள் வைப்பு
சொன்னேன்பாங்கியர்களெல்லோருமதிசயித்தார், தெண்டமுடனெ
ந்தனுக்குச்சாபந்தீர்த்து திகமுடனேயனுப்பவென்று விடைகேட்
டேனே. ௭௨௮
கேட்டவுடன்பெண்களெல்லாம் கிருபைவைத்துக் கிருபையுட
ன்கண்ணபிரான்பக்கல்வந்து, நோட்டமுடன் பன்னீராயிரங்கள்பே
ரும் நுணுக்கமுடன் றாமுரைத்தாரென்னைத்தானும், தேட்டமுடன்
சீனபதியிருந்தசித்தன் திறமுடனேலோகமெல்லாங்காணவென்றுவா
ட்டமுடன் குளிகையதுபூண்டுகொண்டு வந்திட்டானும்பாபதியென்
றிட்டாரே. ௭௨௯
என்னவேபெண்களெல்லாமொன்றாய்க்கூடி யெழிலாகவெந்த
னுக்குச்சாபம்நீக்க, நன்னயமாய்க்கண்ணபிரான்தன்றமக்கு நலமுட
னேதாமுரைத்தாரநீதமெத்த, சொன்னவுடன்கண்ணபிரான் கடாட்
சம்வைத்து சுகமுடனேசித்தர்தம்மைதாமழைத்து, பன்னயமாய்சாப
மதைநீக்கவென்று பட்சமுடனெந்தனுக்குவிடைதந்தாரே. ௭௩0
விடைதந்தார்சித்தர்களுந்தானுங்கேட்டு விரைவுடனேயோடிவ
ந்துவுண்மைகூறி, படையுடனேகூட்டமதாயொன்றாய்க்கூடிப் பரிவா
தவுபதேசம்பாலித்தேதான், சடையுடனேரிஷிமுனிவர்சித்தர்தாமும்

சமைத்திட்டார்சாபமதையெந்தனுக்கு, தடைநீங்கிகண்ணபிரான் விடைகள்பெற்றுச்சாங்கமுடன்சினபதிவந்திட்டேனே. ௭௬௧

கமலமுனியைக்கண்டது.

வந்தவுடன் கமலமுனிதன்னைக்கண்டேன்வருகுடனேகண்ணபிரான்வரமைச்சொன்னேன், நொந்துமனமுருகியல்லோ சித்தரெல்லாம்நொடிக்குள்ளேயெந்தனுக்குச்சாபம்சொன்னார், வந்தபெண்களெல்லாருமென்னைக்கண்டுகருணைபெறசாபமதைதீர்க்கவென்று, அந்தவுடன்கண்ணபிரான்பக்கல்சென்று அடிவணங்கிசாபமதைதீரென்றாரே

என்றையிலேகண்ணபிரான் முனிவர்தம்மை யெழிலாகத்தாமழைத்துவுறுதிசொன்னார், அன்றையிலேரிஷிமுனியர்சித்தர்கூடி அகமுடனேமுகமலர்ந்துசாபந்தீர்ந்து, இன்றையிலேசாபமறுதீர்ந்ததென்று யெழிலுடனேசினபதிபோகவென்று, சென்றுடனே போகவென்று விடையுந்தந்தார் சிறப்புடனேதம்பாதங்கண்டிட்டேனே. ௭௬௪

கண்டேனேகாலாங்கிகடாட்சத்தாலே கருணைபெறயெந்தனுக்குவிடைதாவென்ன, தெண்டமுடன்விடைபெற்று நிட்டதேசந்திரும்பினேன்குளிகைகொண்டு வெகுகாலந்தான், தண்டுலவுமாலயமலைத்தரிசித்தேதான்சாங்கமுடன்நளபதியைக்காணவென்று அண்டமுடன்குளிகை யிட்டுராஜதேசம் அப்பனேவந்திட்டேன்யாரும்பாரே.

போகர்நளபதியைகண்டது.

பாரேதான்ராஜாதிசக்கிரவர்த்திப் பரிவானமாளிகையுங் கோட்டைகண்டேன், சீரேதான்சித்திரதம்தங்கமாகும் சிறப்பானகோட்டைகளும்குருந்தக்கல்லாம், நேரேதான்வைடூரியமண்டபந்தான் நெடிதானவாகனங்கள்தக்கவன்னம், ஊரேதான்பொன்னகரங்கலையென்பார்வுத்தமனாநளபதிக்குயிடாகாதே. ௭௬௬

கூடானதேசமதுகண்டோருண்டோ யெழிலானமாபுரமும்நங்கவர்னம், கோடானகோடிபொருளங்கங்குண்டு குதிரையுண்டுகளையுண்டுதடாகமுண்டு, வடானமிருகங்களனேகமுண்டு வுத்தமனாபுலிபசுவுமொன்றேடொன்று, காடானமனுக்கிரத்திலுறவுகொண்டுகருணையுடனெப்போதும்குடியுமாமே. ௭௬௭

ஆமேதான்கோட்டைக்குள் குளிகைபூண்டு அப்பனேசுரங்கத்தின்வழியதாக, நாமேதான்சென்றல்லோபார்க்கும்போது நாட்டமுடனரசாட்சிக்கொலுக்கூடந்தான், போமேதான்கிட்டியல்லோ சென்றுநின்றேன் பொலிவானநவரத்தினங்கசித்ததாலே, யாமேதான்பிரதமைகள்சூழ்ந்து நிற்கமயக்கமுடன்சிம்மாதனங்கண்டேன்தானே.



தானானமேற்புறத்தில்பக்கஞ்சென்றேன் தாக்கானகொலுமாளிசலவைக்கூடம், வேனானகற்றூணும்வயிரக்கல்லாம் வெழிலானபக்கமெல்லாம்பச்சைக்கல்லாம், மானானதேவதச்சன்மயனினாலேமார்க்கமுடன்புஷ்பரதமொன்றுகண்டேன், கானானகைலாசமென்பார்தானுங்காசினியிற்கண்டவரைவிண்டிலேனே. ௭௬௮

விண்ணவேதலைவாசல்பக்கம்போனேன் விராஜனிடகாவல்கணமாயிரம்பார், இண்ணமுடனங்கிருந்தார்தவசியோர்கள் தீர்க்கமுடனெந்தனையுங்கண்டிட்டார்கள், எண்ணமுடன்யாருமல்லோ கண்டபோது எனைக்கொல்ல திருஷ்டித்துபார்த்தாரென்னை, அண்ணலென்றகாலாங்கிதனைநினைத்தேன் அப்போதே யெந்தனையுஞ் சூழ்ந்திட்டாரே. ௭௬௯

சூழவேயடியேனும்கிடுகிடுத்து துப்புறவாய்தாள்பணிந்துசரணஞ்சொன்னேன், தாழவேகாவற்காராயிரம்பேர் சார்புடனே யெந்தனையுமாரென்றார்கள், மீளவேயாருமல்லோ தீங்கொண்டு மேன்மையுடனவர்களுக்குவதிதஞ்சொன்னேன், ஆளவேயெந்தனையும்வாலார்கேட்டார்அப்பனே அடிமுதலு முரைத்திட்டேனே ௭௭௦

உரைத்தேனேவதிசயங்களெல்லாஞ் சொன்னேன்வுலகமெலாஞ்சென்றதொருகீர்த்திசொன்னேன், இரைத்தேதேனதேசத்திலுளவுமார்க்கமெழிலாகக்கேட்டவுடன்கிருபைகூர்ந்து, வரைத்துடனேயெந்தனையுமழைத்துமேதான் வாகாகக்கோட்டைக்குள்கொண்டுசென்று, நிரைத்துடனேசித்தர்முனிகாவற்காரர்நிறையுடனேகாண்பித்தாரதிதந்தானே. ௭௭௧

தானானநளபதியின் கிடாரங்கண்டேன் தாக்கானசுரங்கத்திலுளவுகண்டேன், வேனானபச்சையென்ற மாளிகண்டேன் வெழிலானசெம்பினிட மதிலுங்கண்டேன், மானானதன்வாசல் நான்குபக்கம் மன்னனிடகாவல்களாஞ் சிங்கமுண்டு, பானானமதிலோரங்காணுருண்டு பக்கமெல்லாந் தேக்கினிடக்காடுமாமே. ௭௭௨

காடானகோட்டைக்குள்மாளியேழுகருவானமண்டபங்களனேகமுண்டு, வீடானமாபுரத்தில்சித்தர்கோடி விடுதியாய்த்தாமிருப்பார்கூறம்போமோ, நீடானமலையுண்டு சுனையொன்றுண்டு நித்தியமும்சித்தர்முனிவாசஞ்செய்வார், நாடானமனிதர்களுங் காணமாட்டார் நாட்டிலேகண்டவர்களில்லைதானே. ௭௭௩

இல்லையேயின்னமொருமார்க்கங்கேளும்மியலானராஜனிடதேவிகோட்டை, பல்லையாம்வெகுதூரங்காந்தமாகும் பாரினிலேராசர்க

ட்குவிட்டுமோசொல்,மல்லவேதமயந்திபூரணாந்தான்மாற்கமுடன்கண்டுவந்துயேங்கிநின்றேன், சொல்லவேபூரணாந்தன்னைத்தானும் சூட்சமுடன்கண்டுவந்தேன்போகர்தாமே. எசச

தாமேதான்சித்தர்முனிரிஷிகள்தாமும்தயவுடனேயெந்தனுக்குவதிதஞ்சொன்னார், போமேதான்குகைமுதலும்விடாரந்தன்னை பொங்கமுடன் தான்கொண்டுகாண்பித்தார்காண், நாமேதான்கண்டுமனமுவந்துமெத்தநாதாக்கள்கிருபையகாமிகவும்பெற்றேன், ஆமேதான்விசுவாசமருளும்பெற்று அப்பனேசினபதியமர்ந்திட்டேனே. எசரு

போகர் அகஸ்தியர்மலைகண்டது.

அமர்ந்திட்டேனின்னமொருமார்க்கங்கேளு அப்பனேகுளிகையதுபூண்டுகொண்டு, தமர்ந்திட்டவகஸ்தியரை மலையைக்கண்டேன்தாக்கானமலையோரம்சென்றபோது, கமர்ந்திட்டசித்தர்முனி கோடானகோடிக்கண்டிட்டாரெந்தனையும்யார்நீயென்றார், அமர்ந்திட்டகாலாங்கிநாயர்பாதம் சுடரொளியின்பதாம்புயத்தை நினைத்தேன்பாரே

நினைத்துமேகாலாங்கிசீஷனென்றேன் நேரானபோகரிஷியென்பேரென்ன, முனைத்துமேசித்தரெல்லா மொன்றாய்க்கூடிமுனையானவகஸ்தியனார்பக்கல்சென்று, தினைப்புடனேவாய் பொத்திகாங்குனித்துதேகலனேசாஷ்டாங்கஞ் சரணமென்றார் பனைப்புடனேவகஸ்தியருங்கண்டுமேதான் பட்சமுடன்தானுரைப்பார் சித்தர்தாமே. எசள

சித்தர்முனிரிஷிமுதலோ ரொன்றாய்க்கூட்டி தெட்சணாமூர்த்திபிடம்வந்ததென்ன, சத்தமுடனெல்லவருமொன்றாய்ச்சேர்ந்துசதாசிவமேசுடரொளியேதயாளவானே, பத்தியுடன்காலாங்கிசீஷனென்றுபாரினிலேபேர்படைத்த சித்துவொன்று, முத்திபெற தங்களிடங்காணவென்று முறைமையுடன் குளிகைகொண்டு வந்திட்டாரே.

வந்திட்டாரென்றதுமே கும்பமுனி வாகுடனேவருகவென்றுவிடைதந்தாரே, பந்திட்டவெந்தனையும் பட்சம்வைத்துப்பாருடனேகுகைக்குள்ளே கொண்டுசென்று, மூர்கிட்டசாத்திரங்க|ளெல்லாங்கேட்டார்மோசமில்லையென் றென்னைக்கொண்டணைத்து, தந்திட்டாரெந்தனுக்குறா லுமீய்ந்தார் சதகோடிவித்தைகளுங் கற்பித்தாரே.

கற்பித்தார்பிரமமென்றவித்தைதானும் கருவானயேமத்தின்வித்தைதானும், உற்பித்தசாத்திரத்தி னுளவையெல்லாமொன்றாகத்தானெடுத்துவுபதேசித்தார், மற்பித்தகருவுகாணுதியெல்லா மார்க்கமுடன்றான்கொடுத்தாருவமையாக, தற்பித்து செய்துமல்லோபுத்திகூறி சகலகலைக்கியான மோதிட்டாரே. எஉ0



ஓதவேயடியேனுக்குறுதிசொன்னார் வுத்தமனே போகரிஷிசொல்லக்கேளும், நீதமுடன் சாஸ்திரங்களெல்லாங்கற்றீர் நிலையானகாயத்தை நிறுத்தக்கண்டீர், தோதமுடன்சித்தருட குளிகைகொண்டீர் தோராதகீர்த்தியுடன்சினம்சென்றீர், பாதமுடன் காலாங்கியருளும்பெற்றீர் பட்சமுடன்சித்தருட வரங்கொண்டீரே. எருக

கொண்டீரேபோகரென்ற பெயருங்கொண்டீர்குவலயத்தில்சித்தருடமகிமைகண்டீர், அண்டரண்ட சராசரங்களனைத்துங் கண்டீர் ஆகாயப்பூமி முதலுளவாராய்ந்தீர், திண்டமுடன் ராஜாதிராசர்சேர்வை திறமுடனேயவர்கள் வைத்தகிடாரங்கண்டீர், மண்டபங்கள் தடாகமுதல்குகையுங்கண்டீர், மன்னவர்கள் ராச்சியங்கள்கண்டீர்பாரே

கண்டதினால் கீர்த்தியுண்டுகுற்றமில்லை கைலாசநாதரைப்போல்சித்தரப்பா, மண்டபங்கள் கடலோரம் ரிஷிகள்தானும் மகாகோடிமகானுக்கள் மிகவுண்டப்பா, தெண்டமுடனுந்தனுக்கு சாபமீவார் தெளிவாகவவர்களிடஞ் சொல்லவேண்டாம், அண்டர்முனி போலவரும் வதிதங்கேட்பார் அப்பனே தாள்பணிந்து வுரைசொல்வீரே. ()

சொன்னதினால்சாபமதுகிட்டாது தொல்லுலகிலுன்னையொருசித்தனென்பார், நன்னயங்கள்தாமுரைத்து நலமும்பேசி நாட்டிலுள்ளவளப்ப மெலாங்கண்டாராய்ந்து, வின்னமிலா வர்முடனே சாபம்நீக்கி வேதாந்தத்தாயினது வருளும்பெற்று முன்னயமாய் பெரியோர்கள் வரமும்பெற்று முகைமையுடனுசிர்மவருள்தந்தாரே. ()

போகர் இரத்தினகிரிகண்டது.

அருள்பெற்றுபோகருமே சினஞ்சென்று அங்ஙனவேபோயிருந்துசிலதுகாலம், தெருளுடனே வித்தையெல்லாம் செய்துபார்த்துதேவதைக் கொப்பானமாந்தருக்கு, பொருளுடையகருவான வதிதவித்தைப்புகட்டினார் சினமென்றமாதருக்கு, இருளகலப்போதித்துப் போகர்தாமும் மெப்போதும்போலாகப் பறந்திட்டாரே. எருரு

பறந்திட்டார்சினடதிவிட்டுநீங்கி பாங்குடனேகுளிகையதுபூண்டுகொண்டு, மறந்திட்ட காலாங்கிதனைநினைந்து மார்க்கமுடன் இரத்தினகிரி மலைமேற்சென்று, துறந்திட்ட சித்தர்களைக் காணவென்று துரைராஜர்வீற்றிருக்கும் பக்கல்சென்று, நிரைந்திட்ட முனிவரிடம் நின்றுபேச நீனிலத்தில் போகரையாரென்றிட்டாரே. எருசு

என்னவே யடியேனுந்தாள்பணிந்தேன் யெழிலரனகாலாங்கிதனைநினைந்தேன், சொன்னதோர்சித்தர்கட்கு விடையுஞ்சொன்னேன்

சுடரொளியாங்காலாங்கி சீஷனென்றேன், நன்னயமாய் பெண்ணையழைத்
துகுகையிற்சென்று காதாக்களிருப்பிடமுங் காண்பித்தேதான், பன்
னயமாஞ்சித்தர்களின்மறபுஞ்சொல்லி பட்சமுடனெந்தனுக்கு வழி
சொன்னாரே. ௭௫௭

வழியுடனேயிரத்தினகிரிமேலே சென்றேன்வாருடனேரத்தின
மென்றகிரியிற்கண்டேன், அழிபாகவாஸ்தானகோட்டைகண்டேன்
அதற்கப்பால் திருமாலின் கோயில்கண்டேன், குழிபோலக் குகை
யுடனேபுனலொன்றுண்டு கூரானமச்சமுனிசித்தனுண்டு வழிபோக
க்காண்பதற்கு துரையுமில்லை மகத்தானசித்தமுனி காவல்தானே. ()

தானானகாவலிடம் சென்றுபோனேன் தவவாக வெந்தனையும்
கண்டிட்டார்கள், மானானமச்சமுனி யெங்கேயென்றேன் மகத்தான
சித்தர்களுங்கொண்டு சென்றார், வேனான மச்சமுனி கண்டபோது
வெகுவெகுவாயெந்தனிட மவர்சொன்னாரே, பானான திருமூலர் பா
ட்டரெங்கே பார்த்துகொடுநாளாச்சு யென்றிட்டேனே. ௭௫௯

போகர்திருமூலர்பாட்டரைசமாதியில்கண்டது.

என்றுரையிலே போகரிஷி சொன்னபோது யெடுத்துரைத்தார்
திருமூநங்களநோகமுண்டு, நின்றுரையிலேசமாதியிடங்கொண்டுசென்
றார் நிலையானரத்னகிரிமலை யோரந்தான், நன்மைபெற திருமூலர்
பாட்டர்தம்மைமகாதாந்தசித்தொளிவைக்காணவென்று, தன்மையுட
னவர்பாதம் தொழுதுநின்றேன் க்ஷணத்திலே சமாதியது வெடிப்
புண்டாச்சே. ௭௬௦

ஆச்சப்பாசமாதியது வெடிக்கக்கண்டேன் அப்பனே திருமூலர்
பாட்டர்கண்டேன், மூச்சப்பாதானடங்கி பூமிக்குள்ளே மூன்றுயுக
ந்தானிருந்தசித்துதன்னை, பேச்சப்பா வெகுபேச்சு பேசுதற்கு பிட
மில்லை நிலையானகற்பமுண்ட காயமாமே. ௭௬௧

காயமதுவாசனைகள் கூறப்போமோ கடும்பச்சைப் பூரமென்ற
வாடைவீசம், நேயமுன்னமல்லிகைப்பூ மணம்போலெங்கும் நெருங்
கவேவொட்டாது குகையினுள்ளே, சாயமென்றதேகமது குங்குமம்
போல் தரிசிரகமானிடர்க்கு கிட்டுமோசொல், மாயமென்ற சித்தொ
ருவர் மகிமைசொல்ல மாளாதுவையகத்தில் மாளாதாமே. ௭௬௨

மாளாதசித்தெந்தனைக்கண்டபோது மகிதலத்திலாரப்பா காண
வந்தீர், சூளாதசென மில்லாச்சமாதியுள்ளே சூட்சமுடன் வந்தது



வலென்னவென்றார், கோளானவார்த்தைகளும் பேசவேண்டாம்குறி
ப்புடனேயிரண்டொரு வார்த்தைகள்சொல்லி, தாளான சமாதிதனை
மூடிப்போடு தாணியுள்ளசித்தரெல்லாம் வருவார்தாமே. ௭௬௩

வந்தாரேயாமானால்கேள்விகேட்பார் வளமுடனேயவர்களுக்கு
விடைசொல்லவேண்டும், சிந்தனையை யான்மறந்து பேசவேண்டும்
பேசாட்டாலவர்களுக்கு மனநோயுண்டாம், பந்தான மூலவர்க்குக்
கோடியுண்டு பந்துபந்தாய்வருவார்கள் சமாதிபண்டை, தொந்தரவு
யெனக்கில்லையிருதிபாரும் துரைராஜசுந்தரனே சமாதிமூடே. ()

மூடென்றசொல்லுரைகையி லடியேன்தானும் முடிவணங்கி தெண்
டனிட்டு கெதியேதென்ன, நாடென்றபதிதனிலே வாழுஞ்சித்தர் நா
மிருக்குமிடந்தனையே யறியமாட்டார், மாடென்றமனிதரப்பா முழு
மக்கள் தாமுடையர்களோகோடானகோடிபேர்கள், கூடென்றகூடு
விட்டுப்பாய்ந்தேனென்று குவலயத்தில் கூக்குரலுமிகவுண்டாச்சே.()

ஆச்சதினாலெந்தனையுமனேகம்பேர்கள் அதிசயமாய்க்காணவே
வருவார்மாண்பர், மூச்சடங்கிமூன்றுயுகமிருந்தேனப்பா முனையான
காலாங்கிசீஷன்தானும், பாச்சலுடன் குளிகையது பூண்டுகொண்டு
பட்சமுடன்வந்ததொரு சோதிதன்னால், காச்சலுடன் மூடிருந்த
சமாதிதானும் கடுகெனவேவெடித்துமல்லோ காணலாச்சே. ௭௬௬

கண்டதினா லுந்தமக்குக்கருணைகூர்ந்து கடாட்சித்தேன் திருமூ
லர்பாட்டர்தானும், விண்டதிலையொருவருக்கும்ரகசியார்த்தம்வேதா
ந்தந்தாயினது கடாட்சத்தாலே, மண்டலத்திலுந்தனுக்கு வுபதேசித்
தேன்மாநிலத்தில் குளிகையது பூண்டுகொண்டு, தெண்டமுடன் சித்
தர்களைவணங்கிநீயும் தேசமெலாம் குளிகைகொண்டு திரிவாய்நீயே.

திரியென்ற போதையிலே விடையும்பெற்றுத் திரும்பினேன்
சீனபதிகுளிகைபூண்டு, செரியென்ற சத்தியத்தைக்கைவிடாத நேர்ப்
பானவெள்ளையென்ற மாந்தர்முன்னே, பரியென்ற கருவிகரணாதி
யெல்லாம் பாங்குடனே வுபதேசம்செய்தேன்யானும் சரியென்றுயெ
ந்தனையுமாசீர்மித்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்திட்டாரே. ௭௬௮

செப்பதின்புவடியேனுஞ் சீனந்தன்னில் சிறப்புடனே சிலகால
மிருந்தேனப்பா, மெய்யுடனே இன்னம்வெகு தேசம்காண மேதினி
யில்குளிகையது பூண்டுகொண்டு, கைதவமாய் சீனபதிவிட்டுநீங்கி
காலாங்கிநாயர்பாதம் மனதிலுன்னி, பையவேபானுமல்லோ பறந்
தேனப்பா பாரினிலே வயோத்திநகர்கண்டிட்டேனே. ௭௬௯

போகர் அயோத்தியில்திருச்சங்கு சமாதிகண்டது.

கண்டேனே திருச்சங்குசமாதிகண்டேன் கடலோரம்போயிற
க்கிறின்றேனப்பா, அண்டர்முனிராட்சதர்களிருக்குங்கூட்டம் அணி
யணியாயவர்பாட்டன் சமாதிகண்டேன், தண்டேனே ராட்சதாள்
கூட்டம்பக்கல் தாழ்மையுடன் போயிருந்து தெண்டஞ்செய்தேன்,
கொண்டென்னை தானணைத்து ராட்சதர்க்கள் கொண்டுபோய் சமாதி
யிடம் விட்டிட்டாரே. ௭௭௦

விட்டவுடனடியேனுந் தாள்பணிந்து விருப்பமுடன் காலாங்கி
தனைநினைந்தேன், கிட்டநின்றுபாலனுமேசிரங்குவித்துக் கிருபையுட
ன்திருச்சங்கைக்காணவென்று, திட்டமுடன் முழங்காலுசமாதியிட்
டுத்தீவிரமாயடிதொழுது போற்றினேன், சட்டமுடன்சமாதியது
தாள்திறந்து சடுக்கெனவேசத்தமது கேட்டிட்டேனே. ௭௭௧

கேட்டவுடனடியேனுங்கிடுக்கிடுத்து கிருபையுடன் சாஷ்டாங்க
ஞ்சமர்ப்பித்தேன், வாட்டமுட னெந்தனையாரென்றுகேட்க வள
முடனே சிறுபாலனுரைக்கலுற்றேன், பாட்டரென்ற திருச்சங்குரா
ஜன்தன்னை பாரினிலேகாண்பதற்கு மனமுவந்து, கோட்டமுடன ச
மாதியிடம்வந்தேனென்று நட்பமதாய்போகரிஷியுரைத்திட்டேனே.

உரைத்தேனே யெந்தனிடதிரத்தாலே வுத்தமனே காலாங்கி
கடாட்சந்தன்னால் திறப்புடனே காலாங்கிசீஷனென்றேன் திகழுட
னே சீர்பாதங்காணவென்று, மரைப்புடனே குளிகையது பூண்டு
கொண்டு மார்க்கமுடன் சினபதிவிட்டுநீங்கி, விரைப்புடனே சமாதி
யிடங்கண்டுவந்து விருப்பமுடனவந்தேனே போகர்தானே. ௭௭௩

திருச்சங்குபோகருக்குபுத்திகூறல்.

தானானபோகரென்ற போதேயப்பா தயவுடனே வென்மீதில்
பட்சம்வைத்துக், கோனான திருச்சங்குராஜன்தானும் கொற்றவனு
ரெந்தனுக்கு வுபதேசித்தார், பானானபுத்திமதிமிகவுரைத்து பாங்கு
டனே குளிகைகொண்டுபோயிடத்தே வேனானசித்தர்முனி ரிஷிகள்
தாமும் வேணுமென்றேசபித்திடுவார் தப்பிக்கொள்ளே. ௭௭௪

கொள்ளுவதவுந்தனுக்கு புத்திமார்க்கம் கோனாறுநேரமல்சித்
தர்முன்னே, எள்ளளவும் பிசகின்றி நடந்துகொள்வாய் என்போ
வுந்தனுக்குசாபமில்லை, கள்ளமனமுடையதொரு சித்தரப்பா கண்
டாலே வுன்னையுந்தான் சபிப்பார்சித்தர், உன்னபடிபோலாக வுறவு
பேசி ஒருகடிகைநேரமதில் சபிப்பார்பாரே. ௭௭௫



பாரென்ற போதையிலேயானடுங்கிப்பட்சமுடன்பாட்டரையா
ன்பரிவுகேட்டேன், வேரென்றகெதியெனக்கு பாட்டரென்றேன்வி
ருப்பம்வைத்துயெந்தனுக்குஞானேபித்தார், சீருடனேயடியேனும்
நடுநடுங்கி சிறப்புடனேவுபதேசம்பெற்றுக்கொண்டு, பேருடனேகா
லாங்கிதனைநினைந்து பேரின்பசாகரத்தை யடைந்திட்டேனே ௭௭௬

போகர் கமலமுனியைக்கண்டது.

அடைந்தபின்புகுளிகையது பூண்டுகொண்டு அரசனுந்திருச்சங்
குவிடையும்பெற்று, கடந்துமேயயோத்தினகர் தன்னைவிட்டுக்காலா
ங்கிநாதருடகிருபையாலே, தொடர்ந்துமேசீனபதிக்கேகியானுந்து
புரவாய்கமலமுனி பக்கல்சென்றேன், நடந்ததொரு சங்கிரகம்யானு
ரைத்தேன்நலமுடனே கமலமுனிமகிழ்ந்திட்டாரே. ௭௭௭

மகிழவேயடியேனும்விடைகள்பெற்று மார்க்கமுடன் வெள்ளை
யென்றமனிதர்பக்கம், நெகிழவேபோயிருந்து யாவுஞ்சொன்னேன்
நெடிதான கருவிகாணுதியெல்லாம், மகிழவேமுடித்திட்டேன் நலகி
மூரகச்சதாகாலம்வெள்ளையென்றமனிதருக்கு, புகழவேசினப்தியோ
ர்கள்மெச்சபுகட்டினேன்விநோதமென்றவித்தைதானே. ௭௭௮

தானானவிநோதமென்றவித்தையப்பா தாரணியில் செய்தவரும்
பார்த்தோரில்லை, கோனானகுருவருளால்குளிகைபூண்டுகுவலயங்கள்
சுற்றியல்லோ முழுதும்பார்த்தேன், மானானகற்றவித்தைவீண்போ
காமல்மாறாமல் சதாகாலமென்பேர்கூற, வேனானவித்தைகளைவிரும்
பியானும் விபரீதமாகவல்லோவிரித்திட்டேனே. ௭௭௯

விரித்துமேசீனபதிதன்னில்யானும் வெகுகாலம்நானிருந்தேன்
மைந்தாகேளு, செரித்துமேமறுபடியும் குளிகைபூண்டுநேராகசீனப
திவிட்டுநீங்கி, புரித்துமேசத்தியரிச்சந்திரன்றன்புகழான சமாதியிட
ங்காணவென்று, தெரித்துமேவயோத்திகர்வடபாகத்தில் தீறமுட
ன்சமாதிகண்டுபுறப்பட்டேனே. ௭௮௦

போகர் சத்திய அரிச்சந்திரன்சமாதிகண்டது.

புறப்பட்டேன்குளிகைகொண்டுபறந்தேனப்பாபொங்கமுடன்
யோத்திகர்வடபாகத்தில், துறப்புடனேசமாதிபுறம் காணவென்று
துப்புறவாய்நதியோரம்போனேன்யானும், முறப்புடனேகிங்கிலியர்
கோடாகோடிமூர்க்கமுடன்காவற்காரர்கிருந்தார், சிறப்புடனேயடி
யேனுங் காலாங்கிதன்னை சீர்பாதந்தனைநினைந்துகண்டிட்டேனே.

கண்டவுடன் கிங்கிலியாரென்றார்கள் காலாங்கி வையருடசீஷ
னென்று, தெண்டமுடன்திருச்சங்குபோனென்று தீவிரமாய்முறை

கொண்டுசெய்பதுற்றேன், மண்டலங்களயான்முழுதும் குளிகைபூண்டுமேதினிலத்தில் சத்திபல்லோரவரிசைபெற்றேன், குண்டலங்கள்சரப்பளிகள்பதக்கம்யாவும்குவலயத்திலெனக்களித்துபோவென்றாரே

என்றார்கள் மனுகோடிசித்தர்கூட்ட மெழிலுடனேரிஷிகள்முதலாசீர்மித்தார், குன்றனையலை நதிகள்குகைகள் போனேன்கோடிவரைவெகுகாலமிருந்துபார்த்தேன், பன்றனைசனபதி தலைமைபெண்ணுபாங்குடனேகுளிகையதுபறந்திட்டேன்பார், நன்றானகமலமுனிசித்தர்தம்மைநலமுடனேசினமதில் பார்த்திட்டேனே. ௭௮௩

பார்த்தேனேவெள்ளையென்ற மனிதரப்பாபரியாகபூமியெல்லாங்காரமாகும், சீர்த்தமுடன்பொய்கையொன்றுசுனையொன்றுண்டுதிகழானபடியோரம்சித்தொன்றுண்டு, ஊர்த்தமுடன்சமாதியிலேயிருந்தாரப்பாவலமையுடனவர்பாதங்கண்டுவந்தேன், ஏர்த்தமுடன்வாரிஷியாமவர்பேராகுமெழிலான மார்க்கமெனக்கோதிட்டாரே. ()

ஓதவேசிறுபாலன்விடைகள்பெற்று வுகமையுடனேகவித்நூல்கள்பார்த்தேன், நீதமுடன்வாரிஷியார் நூலில்சொன்ன நுட்பமாமரிச்சந்திரன்சமாதிகாணு, வேதமுதலாராய்ந்துங்காண வில்லைவெளியானவாரிஷியின்நூலிற்சொன்னார், பாதமுடன்சத்தியரிச்சந்திரன்றன்பாதம்புயத்தைக்காணவெனவந்திட்டேனே. ௭௮௫

எனவேயடியேனும் போகர்நாயன் பெழிலாகத் தானவர்ந்தேன்யிரக்கம்வைத்து, சொன்னபடிவிதிமுறையின் நானுக்காய்ந்துசுடரொளியின்காலாங்கிசிஷனென்றும், நன்னயமாய்ரிஷி முனிவர்சித்தர்தம்மால் நயமுடனேபலபேரின்வரமும்பெற்றேன், வன்னமுடனரிச்சந்திரன்சமாதிமார்க்கம் வகையுடனேகாணவென்று வழிகேட்டேனே. ௭௮௬

வழிகேட்டேன் துறைகேட்டேன்சமாதிகேட்டேன்வண்மையுடன்பெந்தனுக்குப்பட்சம்வைத்து, மொழியுடனேகாலாங்கிசிஷனென்றுமுறைகொண்டு வந்ததினால்போகருக்கு, பழியுண்டாமென்றல்லோபயந் தெல்லோரும்பாராளுமரிச்சந்திரன்சமாதிதன்னை, குழியுடனேதானிருக்குங் குகையினுள்ளே கொண்டுபோய் விட்டார்கள்ரிஷியர்தாமே. ௭௮௭

விட்டவுடன்போகரும்யான்முன்னேசென்று விரைவுடனேதான்பணிந்துகரங்குவித்து, பட்டமன்னன்கொலுவினிடசமாதிபக்கம்பாங்குடனேயிற்கையிலேசித்தர்கூட்டம், திட்டவந்துபென்னையாரெ



ன்றுகேட்க கீர்த்திபெற்றகாலாங்கி சிஷனென்றேன், திட்டமுடனென்னையவர்பட்சம்வைத்து சாங்கமுடனுசீர்மஞ்செய்தார்தாமே. ()

தாமேதானனேகவித தர்க்கஞ்சொன்னார் தாழ்வாக யானுமல்லோ வெடுத்துரைத்தேன், போமேதான் சமாதியிடம் செல்கவென்றார் போனேனே ஓங்காரஞ்சத்தங்கேட்டேன், வாமேதான் வாத்தியங்கள் கோஷ்டம்போல வளமையுடன் விநோதவகைவரிசை கேட்டேன் நாமேதா னிருக்குமந்த காலந்தன்னில் நலமாகச் சமாதியது திறக்கலாச்சே, ௭௮௯

சமாதி திறந்தது.

திறக்கையிலே சத்தியரிச்சந்திரன்றன் திறலானசமாதியது வென்னசொல்வேன், சாங்கமுடன் சுடரொளிபோல்காணலாச்சு சூக்குமமாந்தேகமது மின்னல்போலாம்,இரங்கவேமூன்றுபடிகடந்துபோனேன் இராஜனுமரிச் சந்திரனருகிற்சென்றேன், வரங்கொண்ட வரிச்சந்திரனென்னைப்பார்த்து யாரப்பாவந்தவனீயென்றார்பாரே. ௭௯௦

பார்க்கவே பாலனுமேகால்நடுங்கி பாராளும்ராசனுக்குப் பதிவுகூற, ஏர்க்கவே முடியாமல் மைந்தாயானும் பெழிலாகக் காலாங்கி சிஷனென்றேன், நீர்க்கமுடனவர்தானு மென்னைப்பார்த்து திறமுடனேயவரெனக்கு வுரைத்தவாறு, மார்க்கமுடனென்றகப்பன் திருச்சங்குதானு மகத்தானசமாதியிலே போனார்தாமே. ௭௯௧

போகையிலே காலாங்கிசமாதிதன்னைப் பொங்கமுடனவர்போய்க்கண்டதுண்டு, சாகையிலேயிடமவர்க்குத்தெரியும்பாலா சதகோடியுகமதுவுஞ் சென்றுபோச்சு, ஆகையினாலுந்தனக்கு யானுஞ்சொன்னேனப்பனே போகரிஷிவன்பதாக, வேகையிலேபுறங்காடு சுடுகாடப்பா வெகுகாலம் யானுமல்லோ காத்தேன்பாரே. ௭௯௨

காத்தேனேமேதினியில் மெய்யொன்றுக்காய் கனமழிந்து காடுறைந்துகடந்துநின்றேன், காத்தமுடன் சுடுகாடு காத்திருந்து நலமுடனேபிள்ளைமுதல் மனைவிதோத்தேன், பூத்தமலர் முச்சுருணைதேவிதன்னை பொற்காசுவி சுவாமிக்கடனுக்காக, தோத்தேனேநாடுமுதல் நகரமெல்லாந் தொலைத்தேனே சமுசாரதொல்லைதாமே. ௭௯௩

தொல்லைவிட்டு சமாதிக்குட் சென்றேனப்பா தொல்லுலகில்பற்றொன்றுமில்லைகண்டீர், அல்லலெனு மாசாட்சிவிட்டுநீக்கி அப்பனே சமாதியிடங்கண்டேனென்றார், மெல்லவே சதாகாலம் பூமிதன்னில் மேதினியிலிருந்தோர்க்குப்பலனொன்றில்லை, வெல்லவே பூலோகமாய்கைவிட்டு விருப்பமுடன் சமாதிதனிலிருக்கின்றேன். ௭௯௪

அரிச்சந்திரனிடம்போகர் வுபதேசம்பெற்றது.

இருக்கவென்றவார்த்தையதுகேட்டபோது வென்மகனேயென் புத்திலயித்துப்போச்சு, பொருந்தமுடிபோகவில்லை பூமியாசையெ ன்னுலகம் காண்பதுவே புண்ணியந்தான், திருந்தமுடனிவ்வுலகிலி ருந்துமென்ன திரள்கோடிவித்தைகளுங்கற்றுமென்ன, வருந்தமுட ன்குளிகையிட்டுபறந்துமென்னவாகுடனுலகமதி லொன்றுங்காணே எகூசு

காணேமேயென்றுமல்லோ கலங்கினேன்காலாங்கிநாதருட கிருபையாலே, தூணதுபோலங்கிருந்த விருட்சந்தன்னில் சடரொ ளிபோல் சோதியதுகாணலாச்சு, வீணையுடன்வாத்தியங்கள்முழங்க லாச்சு வேதாந்தத்தாயினது மகிமையப்பா, நாணமுடன் பார்த்து முனிசித்தரப்பா நடுக்கமுடன்றானடுங்கி பயந்திட்டாரே. எகூஎ

பயந்திட்ட சித்தர்களையான்வணங்கி பரிவாகசிரங்குவித்துவணக்கஞ்செய்து, நயமுடனே வதிசயங்கள் கேட்கும்போது நாதாந்தத் தாயினது பிரகாசந்தான், மயமுடனே சத்தியரிச்சந் திரற்குமகிமை யுடனேப்போதவங் காட்சியுண்டு, தயவுடனேவிர்வாணி ரூபவாணி சதாகாலங்காட்சியது தருவாள்பாரே. எகூஅ

தருவாளேமனோன் மணியுந்திரிகாலந்தான் தாணிபதியாளுமரி ச்சந்திரற்கு, குருவானசித்தர்முனிரிஷிகளப்பா கூறினேர்தனக்கு வண்மைமெத்த, திருவான வார்த்தையது மிகவுங்கேட்டு, தீரனும் ராஜனிடமொழியுங்கேட்டு, மருவானை வுபதேசமெல்லாம் பெற்று மாற்கமுடன் சீனபதிக்கேகினேனே. எகூகூ

போகர்சீனபதிக்குவந்தது.

ஏகினேன்சீனமென்ற பதிக்குநாந்தா னெழிலானகுளிகைகொ ண்டுபறந்தேனப்பா, பாகமுடனுபதேசம்பெற்றமார்க்கம் பாங்குட னே வெள்ளையென்ற மனிதரப்பா, வாகுடனே நால்படியே முறை யோர்நித்த வளமைபெறசமாதிக்கு வழியுஞ்சொன்னேன், வேகுட னே வெகுகாலமிருந்தேன்யானும் வேடிக்கை சிமிட்டுவித்தை செய் தேன் தானே. அOO

போகர் காத்தாடிவித்தைசெய்தது.

தானனபிரமகோடி வித்தைசெய்தேன் தாக்கானகாத்தாடிவித் தைவித்தை, மானனவித்தையிது மதிதவித்தை மானுக்கள் புகலுகி றேன்மகிமைகேளு, யேனைபட்டமதுகெஜமோபத்து, லேகமுடன் நீளமதுகெஜமோபத்து, பானவட்டமது நடுவட்டந்தான் பாங்கு டேவுளவட்டமுழந்தான் ரண்டே. அOக



இரண்டானபக்கவட்ட மூன்றேபாகு மெழிலான நெடுவட்டமு காலேயாகும், முரண்டானவெளிவட்டம் சக்கரம்போல் மூலத்தின் வுள்வட்டம்கமலமாகும், திரண்டானசற்றேரம்கம்பியப்பா திரளான கம்பிகளில் காதாரண்டாம், உருண்டானநெக்கம்பில் சூட்சாதாரம்வு த்தமனே புறவட்டம்வளையமாமே. ()

வளைவுடனே ஒவ்வொன்றில் கொலுசமாகும்வரிகளிலேகாந்த மது சத்தேபாகும், களையுடனேநாரென்றபட்டேயாகும் கம்பிகளில் தையல்களைவோட்டவேண்டும், துளையானகொலுசுகளில் குண்டே யாகுந்தோரா தகயறுகளில் சூட்சமாட்டி, மூளையுடனே பூமிதனில்க யிறைமாட்டி மூர்க்கமுடன் பறக்குகையில் கயிறைத்தட்டே. அOங

தட்டையிலேகாத்தாடி தான்பறந்துசந்திரனர் மண்டலத்தினள வுமட்டும், கெட்டையிலேதான்பறந்துநின்றுவாடும்நிலையானசூட்சா திசூட்சத்தாலே, மூட்டையிலேவுள்ளிருந்த கருவைப்போலுமொரு க்குடனேநின்றும் நெடுநேரந்தான், சட்டையிலேநாற்பட்டுக் காற் றைக்கொண்டு சடுதியிலே தானெடுக்கும்பான்மைபாரே. அOச

பான்மையாம்வாயுவது மேலாதாரம்பற்றுகையில்காத்தாடிமே லேநோக்கும், வான்மையுடனடுக்கம்பி வட்டந்தன்னில்நயமுடனே சூட்சாதிசூட்சந்தன்னை, மேன்மையுடன்கயிர்மாட்டிசுறுக்கும்போது மெல்லெனவேகாத்தாடி யிறங்கலாகும், தான்மையுடன் சக்கானின் சூட்சமப்பா தாரணியி லாரறிவார்விசவர்தானே. அOரு

விசவனும் தேவகம்மாளசித்தன் வேணபடிசெய்துமல்லோசூட் சங்காண்பான், பசவுடனே கண்சேர்ந்த கதையைப்போலகருத்தறி யார்முழுமூடர்காண்பரோதான், மூசருடையயிரும்பதனில்காந்தஞ் சேர்ந்து முடித்தார்கள்காத்தாடிவினோதவித்தை, நசறுண்டாய்சூட் சாதி சூட்சமார்க்கம் நாமுரைத்தபடியாரும் கண்டிடாரே. அOசு

கண்டபடிகருத்துடைய சித்தர்தாமுங்காசினியில்செய்தவருங் கண்டோரில்லை, கண்டபடிகாத்தாடிசூட்சாசூட்சங்காசினிக்கும் வழி யியார்துறையுங்காணர், கண்டபடிகருவூரார் செய்துபார்த்தார்கரு த்திலேயவர்தனக்குத்தோன்றவில்லை கண்டபடியெந்தனுடபுத்தியா லேகாத்தாடியான் முடித்தேனவனியோர்க்கே. அOஎ

முடித்தேனே சீனமென்றபதியில்தானும் மூனையானகாத்தாடி படிவாரத்தில், படித்தளமாம்தோணியதுமிகபோல்கட்டிபாங்கான

மாளிகைபோல்தானமைத்து, குடித்தனமாஞ்சனங்கள் பதினாயிரம் பேர்குடையடியில்தானேத்திக் கொண்டுசென்று, கடிப்புடனேதேவாதிதேவர்தானும் காணமுற்றுபார்த்திடவே நடத்தினேனே.

நடத்தினேன் சினபதிசனங்களெல்லாம்கலமுடனே காத்தாடித்தனிற்கொண்டு, திடத்துடனே சினபதிமூன்றுகாதம்திறமையுடன் சுத்திவந்தேன் சித்தர்மெச்ச, வடத்திடமாய் ருத்திரக்கயிர்திரட்டி வாகுடனே சினபதியிறக்கிவிட்டேன், தடத்துடனேசினபதிசனங்களெல்லாஞ் சந்தோஷித்தென்பேரிலன்புற்றாரே. ௮௦௮

கமலமுனி பரிவுகூறினது.

அன்புற்றார் கமலமுனிசேதிகேட்டு அப்பனேபோகரிஷிபுலக் கேளும், வன்புற்றயிதிகாசவித்தையெல்லாம்வளமுடனேகாட்டிவிட்டால் பூலோகத்தில்இன்புற்றயாரொருவர்மதிக்கப்போறார் யேகவெளியாகிவிடுமென்றுகேளு, துன்புற்றவெந்தனையுஞ்சபிப்பாரப்பாசூட்சாதிசூட்சமதை வெளிகாட்டாதே. ௮௦௯

காட்டினல்லோகமெல்லாஞ் சித்தரய்போகும் கசடருக்கு காட்டாதேகருணைபோகும், காட்டிதமாய்கல்லோர்க்குகருவிகாட்டுதனையுடனே யுபதேசம்பாவுங்கூறும், கோட்டமுடன்முழுமக்களொன்றாய்க்கூடிநொடிப்பார்கள் பகடிமெத்தக்கூறுவார்கள் நாட்டியுடன் புலவோர்க்குபுத்திகூறு சதாகாலம் தானினைப்பார்தன்மையாரே.

இரசசெந்தூரம்.

பாரேதானின்னமொரு மார்க்கங்கேளு பாங்கானசூதமது சேர்தாவென்று, சீரேதான்நாகமதுசேர்தான்பாதிசிறப்புடனேயூகமதாய்வொன்றாய்க்கூட்டி, நேரேதான் வட்டோட்டில்பில்லையூத்துநோப்பாகபில்லைக்கு சுறுக்குதாக்கு ஆரேதானுரநாதரச்சாக்காலப்பனேசெயநீர்தான் செய்துகொள்ளே. ௮௧௧

கொள்ளவேசெய நீரைசுறுக்குதாக்கு குணமுடனேசூதமதுமுருக்கிக்காட்டும், விள்ளவேகின்னமது சாற்றகேளும் வேடிக்கைகிமிட்டுவித்தைதவாதம் பாரு, மெள்ளவேசரக்குவகை யாமுரைப்போம் மேதினியிலார்செய்தாரிந்தபாகம், தள்ளவேயிறுதாருகின்னிதானும் துறையான தருகடனேகாரமாமே. ௮௧௨

காரமாம்வீரமுடன்பூரமாகும் கருவானசீனமுடன் பாஷாணந்தான், தாரமாம்கெந்தியுடன்லிங்கந்தானும்தாக்கானசூடனுடன்கெ



வுரிதானும், காரமாம்கார்தமுடன்காடிக்காரம்கடிதானசாரமுடன்பூநீராகும், நீரமாம்பவளத்தின்புத்துமாரும் திறமானசலாசத்துப்பலந்தான்தூக்கே. ௮௧௩

தூக்கவேசரக்கெல்லாஞ்சமனதாக துறையோடுமுறையோடும் மொக்கச்சேர்த்து, கோக்கவேகுழிபம்மிதன்னிலாட்டி நுட்பமுடன் பழச்சாற்றில்நாலுசாமம், தாக்கவேதானரைப்பாய் குமரிச்சாற்றால் தப்பாதுதானரைப்பாய்கையான்சாற்றால், வக்கமாய்வகைவகைக்கு நாலுசாமம் வுத்தமனேதானரைப்பாய்மூலியாமே. ௮௧௪

மூலியாம்கவுதும்மைச்சாறுதானும் முயலானமுசல்க்காதுசாறுதானும், நீலியாம்அவிரியிடச்சாறுதானும் கோரணயறமுள்ளிச்சாறுதானும், பாலியாம்குடசப்பால்மூலிதானும் பாங்கானதுளசியிடமூலிதானும், வேலியாம்முந்நாமணிச்சாறுநாழிவெளியானகள்ளிச்சார்தானுங்கூட்டே. ௮௧௫

கூட்டியேவகைவகைக்குநாலுசாமம்குறிப்புடனேதானரைப்பாய்மூலியாலே, நீட்டமுடனவெண்ணெயதுபோலேயாட்டி கினைவுடனேவகல்போலமூசைபண்ணி, வாட்டமுடன்மூசையிலே பில்லைவைத்துவாகாகமேல்மூசைதான்பொதிந்து,தேட்டமுடன் மாசிலைவலுவாய்ச்செய்து நேர்ந்துமேரவிதனிலேகாயப்போடே. ௮௧௬

போடவேசீலைபதுகாய்ந்தபின்பு பொங்கமுடன்சுண்ணம்புசீலையேழு, கூடவேசீலைபதுவலுவாய்ச்செய்து குமுறவேசட்டிதனிலமணலைக்கொட்டி, நீடவேசட்டிநடுகலசம்வைத்து கினைவுடனேமேலுமந்த மணலைக்கொட்டி, சூடவேமேற்சட்டிக்கவிழ்த்துமூடி, துப்புரவாய்ச் சீலையதுவலுவாய்ச்செய்யே. ௮௧௭

செய்யவேசீலைபதுகாய்ந்தபின்பு செம்மையுடன்சட்டிதனையடுப்பிலேற்றி, முப்பவேவாலுகையின்மேலேவைத்து முயற்சியுடன்தீபமதுகமலமெட்டு, தையவேதீபமதுகாடோபத்து நயமுடனேதீபமதுயெரிப்பாயப்பா, பையவேயாறினபின்னெடுத்துப்பாரு பளிங்கானசெந்தூரம்சொல்லொணாதே. ௮௧௮

சொல்லவோவேதுபாவுமேது சுடரொளிபோல்செந்தூரஞ்சொல்லப்போமோ, வல்லவேவருணனிடனிறம்போலாகும் வலுவானசூதமதுகாரமெத்த, மெல்லவேஒடதனைத்திறந்துபாருமேலானசெந்தூரம்நீதப்போக்கு, புல்லவேமுடியாதுசித்தர்தாமும் புகலார்கள்லோகத்துமார்த்தர்தாமே. ௮௧௯

ஆமேதான்செந்தூரம்பதனம்பண்ணு அப்பனேகாதாக்கள்கா
ண்பாராகில், போமேதான்விடுவாரோசெந்தூரத்தை போக்கோடே
கொடுபோகும்வழியைப்பார்ப்பார், காமேதானுந்தமக்குச்சொன்னே
மப்பா கட்டிலேயாரேனுஞ்சொல்வாருண்டோ, வேமேதான்செந்தூ
ரம்குன்றியுண்ணு வெகுகோடிகாலவரையிருக்கலாமே. ௮௨௦

இருக்கலாம்கற்பாந்திரகாலமட்டும் விளப்பில்லைதவிர்ப்பில்லைகளை
யில்லை, முருக்குடனே தேகமதுயிறுகிக்காட்டும் கூதண்டக்கொண்ட
வருமுமக்கிடுண்டோ, பொருக்கவேமுடியாதுவன்னிமீறும் பூதலத்தி
ல்நீயுமொருசித்தனுவாய், வெடுக்கவேசமுசாரபாப்பைதன்னை விட்
டொழித்துநிற்பதுவேசமாதியாமே. ௮௨௧

ஆமென்றுவின்னமொருவயணங்கேளு அடவானசெந்தூரங்கள
ஞ்சிதானும், போமென்றவிடுகாதேமைந்தாகேளு போக்கானருசம
துசெந்தூரத்தை, காமென்றவாக்கியமும்பொய்க்காமற்றான் கலமுட
னேவெள்ளிதனில்நாற்றுக்கொன்று, தாமென்றவுருக்குமுகர்தன்னி
ற்றானுந் தப்பாதுதான்கொடுக்கமாற்றெட்டாமே. ௮௨௨

எட்டானமாற்றதுவும்பசுமைமெத்தவேற்றமுடன்ரவிதனிலேநா
ற்றுக்கொண்டு, மட்டாகத்தானுருக்கிகொடுத்துப்பாரு மகத்தானவர்
ணமதுசிவப்புமெத்த, வட்டானமாற்றதுவுமெட்டரையுமாகு மகத்
தானவேதையிதுவிட்டுமோசொல் திட்டானவெள்ளிசெம்பில் கொடு
த்துப்பாரு திறளானசெகசோதிதெளிவைப்பாரே. ௮௨௩

தெளிவானமாற்றதுவுமொன்பதாகும் தேசத்திலெட்டாதுயார்
க்குக்கிட்டும், ஒளிவானசித்தர்முனிரிஷிகட்கப்பா வுத்தமனேகிட்டு
மதுசிவயோகிகட்கும், வளியானமுறைப்படியேகண்டாராய்ந்து வகுப்
புடனேசித்தரிடநானும்பார்த்து, செளிவானநால்கனென்னாமுனவா
ராய்ந்து நேர்ப்புடனேசோதித்தேன்மாந்தற்தாமே. ௮௨௪

மாந்தர்கள்பிழைக்கவென்றுவடியேன்தானும் வளப்பமுடன்கா
லாங்கிநாதர்பாதம், சாந்தமுடன்சிற்பாதம்தனைநினைத்துசாற்றினேன்
லோகத்துமாண்பருக்கு, வேந்தனெனும்ராஜாதிராஜர்கட்கும் வெகு
தூரம்கடந்துசென்றஞானிகட்கும், போந்தமுடன்போகரிஷியடியே
யானும் போதித்தேனவெள்ளையென்றமனிதற்தாமே. ௮௨௫

ஆமென்றவித்தகம்அருமையப்பா யாராலுங்கண்டறிவதெளி
மையாகும், நாமென்றகுருத்திறெட்டுதன்னை நயமுடனேகாரசாரங்க



ளாலே, காமென்றசத்துருமித்துருகளாலே கருவிகரணதியின் றன்
போக்கறிந்து, வேமென்ற குறுக்குவழிபோக்குப்பாதை வெகுதூர
மறிந்துமல்லோ சாற்றினேமே. ௮௨௬

சீனவிரவைப்புசெந்தூரம்.

போற்றினேமின்னமொரு கருமானங்கேள் பொங்கமுடன்வீர
மென்றசெந்தூரந்தான், மாற்றமுடன்விலவந்தின்றபிலத்தாலே மய
ங்காமல் சுறுக்கிடவே கட்டிப்போகும், கூற்றமுடன் மேற்போக்கு
புகல்வோர்கண்டீர் போக்கானசரக்குவகை நிற்கப்பாரும், தேற்றமு
டன்தாரமொன்றுதத்தமொன்று தெளிவானசிங்கியொன்று கெவுரி
யொன்றே. ௮௨௭

ஒன்றான அயமதுவுஞ்செம்புவொன்று வுத்தமனேபொடிபொடி
யாய்ராவிக்கொண்டு, பன்றானசரக்குகளுஞ்சரியதாகபண்பாகக்குழி
க்கல்லிலிட்டுமைந்தா, பொன்றாகத்தளரவிட்டுமாவதாக்கிப் பொங்க
முடன்காலனென்ற செயநீர்தானும், தன்றானவறுவகையாஞ்செயநீர்
தன்னால் தன்மையுடன் றானரைப்பாய் சாமம்நாலே. ௮௨௮

நாலானசெயநீரில் மைந்தாகேளு நலம்பெறவே தானரைப்பாய்
மைபோல்தானும், பாலானசெப்பகலும் வொன்றுசெய்து மார்க்க
முடனவ்வகலில் சரக்கைப்பூசி, வேலான ரவிதனிலே காயப்போடு
வெளுமையுடன்காய்ந்த பின்புவிபரங்கேளு, சாலான வகல்தனிலே
வீரம்வைத்துச் சார்புடனேசீலையது வலுவாய்ச்செய்யே. ௮௨௯

செய்துமோரவிதனிலேகாயவைத்துசெம்மையுடன்தனவாயாஞ்
சட்டிதன்னில், பெய்துமேவுப்பையவர்வாசியிட்டுப் போனவீரத்தை
நடுவேவைத்து, கைமுறையாய்மேலுமந்த வுப்பைக்கொட்டிக் கண
க்குடனே மேற்சட்டித்தன்னைமூடி, மெய்முறையாய்ச் சட்டிக்குச்
சீலைப்பா மேன்மையுடன்செய்துமல்லோ ரவியிற்போடே. ௮௩௦

போடவேசீலையது காய்ந்தபின்பு போற்றமுடன் மனோன்மணி
யாள்கிருபையாலே, நீடவே காலாங்கிதமைநினைத்து நீடூழிகாலம்
வரையிருப்பதற்கு, கூடவே சித்தர்முனி ரிஷிகள்பாதங் கும்பிட்டு
யடிபேணமிகத்தொழுது, மூட்டவேவாலுகையா மேந்திரத்தில் முடி
மீதில் தானிருத்தியெரித்திடாயே. ௮௩௧

எரிக்கையிலேகமலமென்றசிறுதீயப்பா யென்மகனேவாறுநாள்
பெரிசோப்பா, கரியில்லோ வுப்பெல்லாங்கறுத்துக்காணும் கனத

மென்றசெம்பது வுமக்கியல்லோ, நொரிக்கியே சாக்குடனே செம்பு
சேர்த்து நொடிதான வீரத்துக்காரமேறி, பரிக்கியே வுட்கொண்டு
காரசாரம் பாங்குடனேயேறிபல்லோ சிவக்குந்தானே. ௮௬௨

தானனசெந்தூர மென்னசொல்வேன் தகைமைபெறத்தானெ
டுத்து சிஷாவிற்றான், கோனான குருபதத்தை நனுகியேதான்சொற்
றவனைதானெடுத்து வைத்துக்கொண்டு, வேனான வெள்ளிசெம்பில்
நூற்றுக்கொன்று விபாமுடன்றானுருக்கி வூகிப்பாரு, பானான மாற்
றதுவும் யெட்டதாகும் பசுந்தங்கம்போலிருக்கும் பண்புதானே. ()

பண்பான பொன்னதுவும் பத்துக்கொன்று பான்மைபெறத்
தங்கமது வொன்றுசேர்த்து, திண்பானதகடடித்துப் புடத்தைப்
போடு தெளிவானதங்கமதுபிறவியாச்சு வண்பான தங்கமது லோக
மெய்ச்சும் வாய்க்காதுகுருமிகட்குவாய்க்குமேசொல், நண்பான்சித்
தர்முனி ரிஷிகட்கப்பா நலமுடனேவணங்கியல்லோ வேதைவாங்கே

வாங்கவென்றால்குருமொழியை மனதிலுன்னி வாகுடனேயவ
ர்வாசல்காத்திருந்து, ஆங்காமலவர்பணிக்கு தொண்டாறி துணை
யோடுகிட்டிருந்து யேவல்செய்து, தாங்கியேயவர்பாத மர்ச்சித்தே
தான் தாழ்மையுடன் கேள்விக்குமுதல்வனாக, ஏங்கியே யவர் முகத்
தின் முன்னேநின்று பெத்தொழிலுஞ்சோராமல் செய்பவன்றே ()

## குருவுபசாரம்.

நன்றுடனேசதாகாலங் காத்திருந்து நலமுடனேமுடிவுநாள்வ
ருகுமட்டும், சென்றல்லோசமாதியிடஞ்சென்றுநீயுஞ் செம்மைபெற
த்திருப்பணிகள் மிகவுஞ்செய்து, பன்றுடனேவாய்மொழிக்குப்பதி
லுங்கூறுப் பதிலாகப்பாத்திருந்து பேலழபோலே, கொன்றைமலர்
தானெடுத்துவர்ச்சித்தேதான்கோடித்துசிவபதத்தில்போற்றிகில்லே

போற்றியேயஞ்சலிகள்மிகவுஞ்செய்துபொருந்திமனமெப்போ
தும்புண்ணாகாமல், சேற்றியாய்மனதுவா நடந்துகொண்டு சேர்ப்புட
னேசகலகலைபறியலேதான், கூற்றனை ஐங்காலனுக்கு விடன்கொடா
மல் கூர்மையுடன் சித்தர்களைவணங்கிநித்தம், தோற்றமுடன் சதா
காலம்ரிஷிகள்தம்மைத் தொழுதுமிகவேபணிந்து வேதைவாங்கே.()

வேதைகளைவாங்கிநித்தஞ்சேர்த்துமென்ன வெகுகோடிவாதவி
த்தைப்பாடிவிட்டார், போதையுடன்பாடிவிட்டாரென்றுசொல்வார்
பூதலத்தில்ரிஷிகோடிமகிமைமெத்த, நீதைட்லேசாத்திரங்கள் தொ



யாமற்றான்சீர்கெட்டுநலைகெட்டுபாடல்கெட்டு, பாதையிலேபோகாம
ல்துறையுங்கெட்டுபாழாசச்சுட்டு கெட்டாரனந்தமாமே. ௮௬௮

அனந்தமுடன்வேதைமுகஞ்செய்வாரப்பா அதினுடையநுட்ப
வழிகாணுமற்றான், வனந்தனிலேநான் திரிந்துமூலிதேடி வாகுடனே
கெட்டவர்கள்லக்கோயில்லை, மனந்தனிலேநேர்நமட்டும்செய்துபா
ர்த்து மாணிக்கமுடன்சாக்கிறதைமறைத்தாரென்று, எனந்தனிலேகும்
புகுபலாகக் கூடியேளிதங்கள்செப்தாரேசண்டிமாடே. ௮௬௯

மாடானமாடுகள்தான்காணப்போனார் மகத்தானசித்தருடைய
மறைப்பை, கோடானகோடிபொருளிழந்துவிட்டார் குவலயத்தில்
கெட்டுவிட்டுவிடுவிட்டு, கேடானதிரவியங்களெல்லாந் தோர்த்து
தெருத்திண்ணைப்பரதேசியாகிநின்றார், கூடானகூடுவிட்டுப் பாய்வே
னென்று கூக்குரலால்பேசியல்லோபிழைப்பார்தானே. ௮௭௦

தானானபிழைப்புக்குயிடமில்லாமல்தட்டழிந்து கெட்டழிந்து
தாறுமாறாய்கோனான்போலாடுதன்னைத் தோளிலிட்டுவாடெங்கேயெ
ன்றுசொன்னகதையைப்போலே, தேனானசாத்திரத்தின் கருகாணா
மல்தேங்கியே கெட்டலைந்தார்கோடாகோடி, ஊனானதேகமதுபுண்
ணுமாகி வுடலழிந்துவுருண்டவர்களனேகந்தானே. ௮௭௧

அனேகமுடன்மருந்துவகைசெய்யுவார்கள் அப்பனேசித்தர்களை
நினைக்கமாட்டார், அனேகவிதசாத்திரத்தின்மருந்துசெய்வார்அந்நா
ளின்சித்தர்களைத் துதிக்கமாட்டார், அனேகவிதநூல்ப்படியேமரு
ந்துசெய்வார் அக்காலஞ்சித்தர்களைத் துதிக்கமாட்டார், அனேகவித
முறைப்படியே மருந்துசெய்து வவரவர்கள் குருபதத்தை நினையார்
தானே. ௮௭௨

## குருநிந்தைசாபம்.

நினையாதகுருவென்ற நிந்தையாலேநிலத்தில்சாபமது நேர்ந்
துமேதான், நினையானமருந்துகள் தான்பலிக்காமற்றான் திசைகெட்
டுத்தடுமாறி தேங்கிநின்றான், வினைபோலதுன்பமதுமிகவுமாகிமேதி
னியில்அசருண்டாய் மாண்டுபோனார், மனைவிட்டுபொருள் தோற்று
மாடுதோற்றுமனைவிமுதல்தானிழந்தார் சாபத்தாலே. ௮௭௩

சாபமதுவந்துமல்லோநேருமப்பா சதாகாலஞ்சித்தர்களை வண
ங்கிநித்தம், கோபமதுவாராமல் வுள்ளடங்கி குவலயத்திலிருந்துகொ
ண்டுவாசனாக, பாபமதுவிற்றுகன்றுபூமானாக பாலருமில்வாழுவனாத
ருமமப்பா, தர்பமுடன்சதகோடிசூரியன்போல் தாரணியில்வாழுப
வன்சித்தனாமே. ௮௭௪

சித்தனென்றுசொல்லிமெய்ச்சுவார்பார் செகதலத்தில்லெனைப்போலநீயுமாவாய், பத்தனயிருந்துகொண்டுபரமன்றன்னை பட்சமுடன்வெப்போதும்பாவித்தேதான், சித்தமுடன்குருபதத்தைப்போற்றிசெய்து நீடூழிகாலம்வரையோகஞ்செய்து, முத்திபெறவழியுனக்குத்தெரியுங்கண்டீர் முயற்சியுடன்பலநூலும்பாருபாரே. ௮௪௫

பார்க்கையிலேசின்மயத்தின்பொருள்கள்தோன்றும் பாருடனேயயவரவர்கள்துறையுங்காணும், ஏர்க்கையிலேசுடரொளியின்பரிவுதோன்றும் யென்மகனேசூட்சாதிசூட்சங்காணும், காக்கையிலேகருவிசாணுதியெல்லாம் கண்ணுக்குவொளியாகக்காணும்பாரு,சேர்க்கையிலேவஷ்டாங்கங்காணலாகும் செகத்திலேசடாட்சரத்தை மேவிப்பாரே. ௮௪௬

மேவுடனேவாராதாரங்கள்தோன்றும் வெளிக்கப்பால்முப்பாழுங்காணலாகும், பாவுடனேநிராமயத்தின்சோதிகாணும் பார்க்கையிலேசோதியதுதலைவாய்த்தோற்றும், காவுடனேவுள்மூலங்கடுக்கங்காணும் கடுக்கந்தால்தேகமதுதலைகீழ்போலாம், தாவுடனேமூலாதாரங்கப்பா தடுமாறிக்காணல்போல்தோற்றமாமே. ௮௪௭

தோற்றமாம்சிகாரத்தின்மகாரமிஞ்சும் தொகுப்புடனேமகாரத்தின்வகாரமிஞ்சும், கூற்றவாம்யகாரத்தில் வுகாரமிஞ்சும் குறிப்புடனேவுகாரத்தில்லகாரமிஞ்சும், தோற்றமாம்லகாரத்தில்ரகாரமிஞ்சும் சேர்ந்தவுடன்ரகாரத்தில் ழகாரமிஞ்சும், யேற்றமாம்ழகாரத்தில்னகாரமிஞ்சும்வெளிதல்லோசிவயோகிக் கெளிதிதானே. ௮௪௮

வெடியுப்புசெந்தூரம்.

எளிதானவின்னமொருமார்க்கம்பாரு எற்றமுள்ளவெடியுப்புநாலங்காய்ச்சல், தெளிதானசேதுதான்வொன்றேயாகும்சேர்த்தியாய்ப்புளியுடனேகாரமாகும், ஒளிவானதலைபண்டம்போண்டர்தான்வுத்தமனேசேரிரண்டுதூளதாக்கி, வளிவானசட்டிதனில்கீழேபோட்டுவளமாகவெடியுப்பை நடுவேவையே. ௮௪௯

வைக்கவேமேலுமந்தமாவைகொட்டி வகையாகமேல் மூடிசீலைசெய்து, மெய்க்கவேரவிதனிலேகாயவைத்து மேன்மைபெற வாலுகையில்யேரிப்பாய்தானும், பொய்க்கவேநாற் சாமமெரித்தபோது போக்கானவுப்பதுவும்கட்டிநிற்கும், மொய்க்கவேசட்டிதனைத் திறந்துபாரு மோசமில்லைகட்டியதுவுருக்கிப்போச்சே. ௮௫0

போச்சென்றுவிடுகாதேபுண்ணியாகேள் போக்கானவெடியுப்புவதிதமெத்த, நீச்சென்றபோண்டர்தன்னால்தானும்நிலையாகமதியுப்பு



க்கட்டலாச்சு, மாச்சலென்றவுப்பாலேச்சகலசித்து மாற்கமுடனுடலாங்கோடிவித்தை, பாச்சலுடன்துரைத்தனத்தார்க் கேற்றவுப்புபாருலகில்ராஜர்வெல்லுமுப்புமாச்சே. ௮௫௧

உப்பானவுப்பிதுதான்வீரமெத்த வுலகிலுள்ளவாதிகட்குகந்தவுப்பு, அப்பானசலமதிலேவளர்ந்தவுப்பு அதிலிருந்துபிறந்துமல்லோவெடியுப்பாச்சு,செப்பானசெம்புகளிம்பூரல்போக்குந் தேசத்தில்சிறந்தொருவுப்புமாச்சு, ஒப்பானவுப்பிதுக்குவொன்றுமொவ்வா வுத்தமனேயிதுவோடும்வழியைக்கேளே. ௮௫௨

கேளேதான்வுப்பதுவுங்கட்டிநின்றால் கெடியானவுப்பதுவுமெடுத்துமைந்தா, மாளவேநாகமொருபலமேதூக்கு மகத்தானசூதமொருபலமேதூக்கு, சூளவேவீரமொருபலமேதூக்கு சுத்தமுள்ளசாரமதுபலமேதூக்கு, மீளவேநாகரசமொன்றாய்ச்சேர்த்து மிகப்படவேதானுருக்கிசாய்த்திடாயே. ௮௫௩

சாய்த்திடவேசரக்கெல்லாமொன்றாய்ச்சேர்த்து சாங்கமுடன்றுனரைப்பாய்நாலுசாமம், மாயவேநாகசாரத்தினாலே மாண்டுமேசெய்நீருமாகும்பாரு, தோயவேசெயநீரைமதியுப்புக்கு தொகுப்புடனேசுறுக்குமிடக்கட்டிப்போகும், காயவேவுப்புக்குகவசங்கேளு கருவானவன்னமென்றபேதிதாமே. ௮௫௪

பேதியாம்வளையலென்றவுப்புமாகும் பேதமில்லையெடைசரியாயெடுத்துக்கொண்டு, வாதியாமறுவகைசெயநீர்தன்னால் மாட்டடாவெண்சாமமரைத்தபோது, சோதியாமெழுகதுவுஞ் சொல்லப்போமோசூட்சமுடனுப்புக்குகவசம்செய்து, மேதியாங்கொம்பதனைசீவிமைந்தாமேன்மைபெறபொடியாக்கிசெப்பக்கேளே. ௮௫௫

செப்பவென்றால்வறுவகைசெயநீர்தனால் செழிப்புடனேதானரைப்பாய்நாலுசாமம் ஒப்பமுடன்றுனரைத்துக்கவசஞ்செய்து வுத்தமனேரவிதனிலேகாயவைத்துசீலைசெய்து, தப்பறவேசட்டிதனில்மணலைக்கொட்டிச் சட்டமுடன்நடுமையம்வைத்துமைந்தா, மெப்படனேமேலுமந்த மணலைக்கொட்டி மேன்மைபெறசட்டிகொண்டுசீலைசெய்யே. ௮௫௬

சீலையுடன்ரவிதனிலேகாயவைத்து சீர்பெறவேவாலுகையிலடுப்பிலேற்றி, காலையுடன்றுனெரிப்பாய்சாமம்நாலு கடந்தபின்புதியாறிமற்றுநாள்தான், மாலையிலேயெடுத்துப்பாரென்னசொல்வேன் மகத்

தானசெந்தூரம்காந்திமெத்த,வாலையுடன்பூசைசைவேத்தியங்கள்வா
வாகுடனேதான்செய்து எடுத்திடாயே. அருஎ

எடுக்கவேசெந்தூரம்பதனம்பண்ணு என்மகனேவெள்ளிதனில்
பத்துக்கொன்று, கொடுக்கவேமாற்றதுவுமெட்டதாகும் குறைபாது
வாணிக்குமேலேகாணும், தடுக்குடனே தகடடித்துப்புடத்தைப்போ
டுதுகளாற்பசுந்தங்கம்புகலப்போமோ, விடுக்கவேகடைதனிலேமாறி
யுண்ண விரைவானசமூசாறிகானதன்றே. அருஅ

அன்றானவித்தையது அவனியோர்க்கு அப்பனேகிட்டாதயாரு
க்குந்தான்,தன்றானவிதியாளிவருவானானல் தாரணியிலிந்தவித்தைய
வர்க்கேயெய்தும், பன்றானசாத்திரங்கள்படித்தாலென்ன பலநூலுந்
துறைகொண்டுபார்த்துமென்ன, ஒன்றானகுருபிரானருளிருந்தால்
வுத்தமனேலபிக்குமடாபுண்ணியோர்க்கே. அருகூ

சுக்கான்கல்சுன்னம்.

புண்ணியனேபின்னமொருகருமானங்கேள் புகழானசித்தர்கள்தா
ன்செய்யுமாற்கம், திண்ணமுடன்சுக்கானின்கல்லையப்பா திறமுட
னேசேரொன்றுகொண்டுவந்து,வண்ணமுடன்வறுவகைசெயநீர்தன்
னால் மாட்டடாயெண்சாமம்சுறுக்குதாக்கு, கண்ணனிடமூவியப்பாத
ன்னைவாங்கி கருவாகபொதிந்துமேதவசஞ்செய்யே. அசு0

செய்யவேசிலையதுவேழுஞ்செய்துசிறப்புடனேரவிதனிலேகாய
வைத்து,பையவேகெசபுடத்திலமைந்தாகேளு பாங்காகப்புடம்போ
டஞ்சுண்ணமாகும்,வெய்யவேசுண்ணமதையெடுத்துக்கொண்டு விரு
ப்பமுடன்ரவிதனிலேபத்துக்கொன்று, தொய்யவேதானுருக்கிகொ
டுத்துப்பாரு தறையானசெம்பதுவுமூறல்போச்சே. அசுக

போச்சென்றுவிடுகாதேபுண்ணியாகேள் பொலிவானசெம்பது
வுமூறலேகி, நீச்சென்றசிலிம்பதுவுமிகவேநீங்கி நிலையானசொருசுகிற
ம்தன்னிலொப்பாய், போச்சென்றசெம்பதுவுமொன்றேயாகும் பே
ரானதங்கமதுவொன்றேயாகும், மாச்சென்றயிரண்டுருவும்வொன்று
ய்ச்சேர்த்து மகத்தானபொன்னிறமாகுந்தானே. அசுஉ

தானானபொன்னதுவுமாற்றுமாகும் சார்வாகப்புடத்துக்குவுறு
திதங்கம், மானான தங்கமதுபசுமைமெத்தை மார்க்கமுடன்சித்தர்கள்
தான்செய்யும்வேதை, பானானகருவாளிகாண்பானாகில் படிமுன்னே
சுக்கானச்சுன்னம்பண்ணி,தேனானசாக்குவகையாவுங்கொன்று தே
சத்தில்வாதிகட்குகுருவாவானே. அசுந



குருவானவாதிகட்குவழியுஞ்சொல்வான் குறிப்புடனேசமாதி
க்கு நிலையுஞ்சொல்வான், பருவானபூசைக் குறியுஞ்சொல்வான் பாரி
னிலே வயித்தியற்குணவுஞ்சொல்வான், திருவானமூலிவகை போக்
குசொல்வான் நிரளானகற்பத்துக் குறுதிசொல்வான் மூருவானசத்
துருமித் துருவுஞ்சொல்வான்முறையான சிமிட்டிவித்தைக் கருசொ
ல்வானே. அசுச

போகர்சுமாற்கம்.

சொல்வானேமாணக்கள்பிழைக்கவென்றருட்சாதிருட்சமெல்
லாம்பிரித்துச்சொல்வான், வெல்வானமின்னமொரு கருமானங்கேள்
மிக்கானவதீதமென்ற வித்தைதன்னை, பல்வானேசடொன்று புகலக்
கேளும் பொலுவானசீஷனுக்குமைந்தாகேளு, நல்லதொருசெவ்வட்
டைசெம்பூரகம் நலமானகுழியானைப்பூச்சியாமே. அசுரு

பூச்சியுடன்தம்பலமாம்பூச்சியாகும்புகழானபச்சோந்திபிச்சுதா
னும், காச்சியென்னுங்கருங்குருவிபிச்சுதானும் கெவுரியுடபட்சியின்
பிச்சுதானும், மாச்சியென்றகழல்வண்டுமொக்கசேர்த்துமகத்தானபு
னுகுடையபச்சைப்பூரம், பாச்சென்றகஸ்தூரிரோசனையுந்தானும்ப
ளிங்கானசுண்ண மென்றகாரமாமே. அசுசா

காரமுடன்தேனுடனுன்கருவாலாட்டி காட்சியுடன்சிமிழ்தனி
லேபதனம்பண்ணு, தீரமுடன்குளிகையொன்றுசெய்துகொண்டுதிக
ட்டாதேவறுசுவையார்தன்னோடொக்க,சாரமுடன்பலதாரம்வர்க்கந்
தன்னில்சார்பாகக்கொடுத்து விடமைந்தாபாரு, பாரமுடன்வுன்மீதி
லெந்நாளும் பட்சமுடன்வாழ்வதற்கு சொன்னோம்பாரே. அசுஎ

போகர்சித்திராதம் நடத்தினது.

பாரேதான்விநோதமென்றவித்தையப்பா பாரிலுள்ளசித்தர்மு
னிரிஷிகள்தானும், சீரேதான்மனமுவந்துவெந்தன்மீதில் சிறப்புட
னேபட்சம்வைத்துக்காப்பதற்காய், மேரேதான்விண்ணுலகம்காண்
பதற்குமிக்கானதேரொன்றுகட்டினேன்யான், நேரேதான்தங்கரதம்
செய்தமாற்கம் நேர்ப்புடனேயாமுரைப்போம்போகர்தாமே. அசுஅ

தாமேதான்சக்கரமும்பதினாறாகும்தக்கானயிரிசியதுயெட்டதா
கும், போமேதானிடது புரம்கெஜமோறாறு பொங்கமுடன்வலதுபு
ரம்கெஜமோறாறு, வேமேதான்நெடுக்குபுரம்சக்கரமும்நாலு வெளி
யானகுறுக்குபுரம் சக்கரமும்நாலு, தாமேதான்நடுமையம் சக்கரமு
மெட்டுதாழ்வாக வருளையென்றஇரிசியாமே. அசுகூ

இரிசியுடன்பாரும்துமெட்டதாகும்இணையானசட்டமதுமுப்ப த்திரண்டு, குறிசியுடன்நெடுஞ்சட்டமறுபத்தானாலுகுறுக்கானவுள்ச ட்டம்பதினாருமாகும், பரிசியுடன்மேல்வட்டம் நூற்றிருபத்தெட்டு பாங்குடனேபழுதுகளுமிருநூற்றன்பத்தாறு வரிசையுடனென்றுக் குள்ளிழுத்து மிகமாட்டி வலுமையுடனணிகளு மிகப்பொதிந்துமா ட்டே. அள0

மாட்டையிலேசக்கரத்திற்குருளையிருகம்பி மாராட்டமில்லாமல ணியுடனேமாட்டி, கோட்டையிலேசுத்தியல்லோ வளயமுள்ளகம்பி குறுக்குமுதல்நெடுக்குமுதல் குவிந்துமுனை மட்டும், வாட்டமுடநடுவு ருளைகொலுசுமிகமாட்டி வார்புரத்தில்சக்கரத்தின்முளையோரமட்டும் நீட்டமுடன்றலைப்பக்கம் சுக்காணிடகம்பிநெடுங்கம்பிபுறவட்டம்கிலக் கமிகபூட்டே. அளக

பூட்டையிலேதாளுடனேபிரிசிகம்பிமாட்டி புகழுடனேநடுவட் டம்வட்டமத்தி, கூட்டமுடன்சட்டமது வரிவரியாய்மாட்டி கூர்மை யுடன்சுழலாணிநடுவாணிதன்னில், தேட்டமுடனஞ்சுருளைசுருளைமி கப்பூட்டிதேர்மக்கியடிவாரம்பின்னலுடன் சட்டம், பூட்டகமாம் பல கையின்மேலாணிமிகத்தாங்கி புகழ்பெறவேசுற்றோம் கத்திரிப்பாய் செய்யே. அளஉ

செய்யவேகத்திரிப்பில்மணிகள்மிகமாட்டி சேர்ந்தவடிவாரமது பலகைமிகப்பூட்டி, தெய்யவேவுஞ்சலதுபோலமிகச்செய்து துப்புர தாய்மையூறுவாணிமிகமுடுக்கி, பையலேயிரிசிக்குவுள்ளுருளைமாட்டி பாங்குடனேவுள்ளசழி கடையாணிமாட்டி, மையவேசக்கரமும்சுழ லமிகச்செய்து மாண்மையுடன்நீளமது சமைத்திட்டேன்காண், ()

காணவேயடிவாரம் நங்கூரமுமாச்சு கயவானமேல் வாரம்பீடம துசொல்வோம், எணவேசட்டமதுகுத்துக்கால்நூறு யெழிலாககுறு க்குவரைபத்துசட்டமாகும். பூணவேநெடுக்குவரைபத்துசட்டமாகு ம்புகலானகாலதுவுமுப்பத்திரண்டு,தோணவேநடுக்கம்பிசோடசமு மாகும்தோரா த வுள்கம்பிவட்டமிசமாமே. அளச

அட்டமுடன்சட்டமது கெஜநீளம்பத்து அதன்மேலேசிம்மாடு கட்டையிருகெஜமாம் சட்டமுடன்மேல்வளைதளைகளிருநூராம்சாங் முடன் துளைகளிலேகம்பிமிகச் சொருகி, நெட்டமுடன்மேல்வரைவா ணிகொண்டுமுடுக்கு நெடிதானயடிமட்டும் ஊடுருகத்தாக்கி, குட்ட மென்றசட்டமது கீழ்ப்புரமும்மாட்டி குவலயத்தில்தாங்குகால்மிகக் கொண்டுசேர்த்தே. அளரு



சர்த்தியோகாற்புரமும்வரிசையுடன்மாட்டிச்சர்வாங்கக்காலுட னேசட்டமொன்றுபூட்டி, ஏத்தியேநடுமையம்திருகுசிம்மாடு யெழி லானசுற்றோரம்வளையமிகச்செய்து சூத்திரமாம்சட்டமதுபதினாறுச ட்டம் சுழலகின்றசட்டமதுமுப்பத்திரண்டு,நேத்தியுடன்றானமைத் துநெடுவுஞ்சல்போலநேர்மையுடன் செய்துவிட்டேன் விண்ணமிகக் கேளே. அளசு

கேட்க்கவேமேற்சதாம்வட்டமதுபத்துகெடியானசட்டமதுகு றுக்குநெடுபத்து, சூட்சமுடன்மேற்சிகரம்வட்டமதுவஞ்சுசுருளான நடுச்சிகரம்வட்டமதுநாலு, தாட்கவேமேல்வட்டம் நடுச்சிகரமூன்று தாழ்மையுடன்மேல்வட்டம்நடுச்சிகரம்ரண்டு, தாட்கமுடன்சட்டநடு ச்சிகரம்வென்று துடிப்பானவுச்சிபதுகூர்மையிகுவாவே. அளஎ

மிகுவானதோரதுதான்சூட்சமிகமாட்டி மேன்மைபெறசோடித் துவஞ்சுருனியாலே, தகுமானகொலுசுடனே யொன்றோடொன்று வாய்சார்புடனே யிறுக்கியல்லேசட்டமதில்பிகித்து, மிகுவானநடு வாணிதன்னில்மிகமாட்டி பேரானகாந்தமென்றசத்துமிகபூசே. ()

பூசியேதேரிலுள்ளயிரும்புக்கெல்லாம் புகழானகாந்தத்தின்சத் தேயூட்டி,வாசியென்றமேலாணிகாந்தவாணிவரையானகீழாணியிரு ம்புமாகும், மாசியென்றபலகையெல்லாசத்தேயாகும்மகத்தானயிரு ம்புடனேகாந்தஞ்சேரில், வசியென்றகாந்தமதுசத்துதன்னால் வுயற வேபறக்குமடாரதந்தான்பாரே. அளகூ

பாரேதான்நாலுபுரம்குத்துகாலில் பாங்கானவாளியுடன் சிம்ப மாகும், நேரேதான்புரவியதுமாட்டிருக்கும் கெடிதானபாதமதுயிரு ம்வேயாகும், சீரேதான்சிற்சிலதுகாந்தமாகும் சிறப்பான பீடமதுமு ப்பத்திரண்டு, கூரேதான்பீடமென்றபலகைதன்னில் குருமுனியாஞ் சித்தர்நழுமுனிவர்தாமே. அஅ0

முனியானநவகோடிரிஷிகள்தாமும் முனையானசினபதிசெனங் ளெல்லாம். தனியானசித்திரமாந்தேரிலேற்றித் தாக்குடையவிமைய கிரிபர்வதத்தில், பனியானமேலவரைகொண்டுசென்றபாராதகாட்சி யெல்லாம்பார்க்கவிட்டு, தொனியானவாத்தியங்கள்கேட்டும்கோயில் தோற்றமுள்ளவடிவேலர்சேர்வைதானே. அஅக

சேர்வையாம்வடிவேலர்தன்னைக்கண்டார் சேனைமுதல்சரிசனங் கள்யாவும்பார்த்தார், பார்வையாம்சித்தர்முனிரிஷிகள் தாமும்பட்ச முடனென்மீதில்கிருபைகூர்ந்து, நேர்மையுடன்வரமெனக்குயீந்தா

ரப்பாநெறியுடனேதேவரதம்நடத்திநேன்யான், கூர்மையுடன்மலேயோரம்சுத்திவந்துகுறிப்புடனேசினபதி யிறக்கிட்டேனே. ௮௮௨

இறக்கவேசித்தர்முனிரிஷிகள்தாமும்யிபலாகவென்மீதில்புட்சம்வைத்து, சிறக்கவேயெந்தனுக்குவுபதேசங்கள்சிராகத்தனேப்புகட்டிவிட்டாரப்பா, திறக்கவேசீனபதிமூன்றுகாதம்தெளிமையுள்ளவெள்ளேயென்றசெனங்களெல்லாம், பறக்கவேசித்திராதம்சூட்சாசூட்சம்பார்த்துமேபிர்மித்துமயங்கிஞரே. ௮௮௩

மயங்கிஞரென்மீதிலிச்சைகொண்டார்மானிலத்தில்பெண்களெல்லர்மோகமாஞர், தியங்கியேஎன்னிடத்தில்மோகித்தார்கள் திறளானபெண்களெல்லாஞ்சீனர்தன்னில், நயமுடனேநல்வார்த்தைப்பேசியேதான்நாட்டிலுள்ளவளப்பமெல்லாநன்காராய்ந்து,மயமுடனேதாமிருந்தார்சீனர்தன்னில்மாகபதிபட்சமதாயிருந்தார்பாரே. ௮௮௪

இருந்தாரேபூரணமாஞ்சந்திரபட்சம்யெழிலுடனேதேவரதமுடுக்கியேதான், திருந்தமுடன்கடலேழுஞ்சுத்திவந்தேன் திக்கெட்டில்வதிசயங்கள்யாவும்பார்த்தேன், பொருந்தவேவனாந்திரத்தில்ரதமிறக்கிப்பொங்கமுடனவர்களாசிர்மத்தில்,குருந்தமுடன்போனபின்புயடியேன்தானும் குளிகைகொண்டுசீனபதி வந்திட்டேனே. ௮௮௫

வந்திட்டேன்யிதிகாசவித்தையெல்லால் வாகுடனேமாணுக்கள்பிழைக்கவென்று, தந்திட்டேன்காலாங்கிக்கிருபையாலே சதாகாலமுள்ளமட்டும்தரணிமீது, பந்திட்டவென்பேருதான்விளங்கபாலித்தேன்லோகத்துமாந்தர்க்காக,முந்திட்டவித்தைகளும்கோடிவர்க்கம்முனேயாகக்காட்டிவிட்டேன் போகர்தாமே. ௮௮௬

போகரென்றால்வித்தையதுபொய்யாதப்பா பொங்கமுடன்சித்தர்கள்தான்வித்தையல்ல, சாபமுடன்சொல்வார்கள் முனிவர்சித்தர்சார்பாகயான்சொல்வேயதீதமார்க்கம்,தாபமுடன்காலாங்கிதனேதணங்கிசார்பாகச்செப்பிவிட்டேன் துறைகளெல்லாம், சேபமுடன்கருவாளியாவானுல் சுந்தரனேலபிக்குமடா புண்ணியவானே. ௮௮௭

நாகக்களங்குசெந்தூரம்.

புண்ணியனேவின்னமொருகருமானங்கேள் புகலுகிறேன்நாகமென்றசெந்தூரந்தான், திண்ணமுடன்நாகமொருபலமேவாங்குதிறமானசெம்பதுவும் பலமோகால்தான், வண்ணமுடன்வயமதுவும் பலமோகால்தான்வகுப்பானவங்கமதுபலமோகால்தான். நண்ணமுடன்தங்கமதுபலமோகால்தான் நலமானரசமதுவும் பலமும்ரண்டே. ()



இரண்டானகெந்தியதுபலமோரண்டு யெழிலானகானசமும்பலமோகால்தான், திரண்டானமனேசிலேயும்பலமேகால்தான் திகழானவீரமதுவராகன்கண்டு, மரண்டானவளேயலுப்புவிராகன்ரண்டு மகத்தானபூரீருவராகன்ரண்டு, சுரண்டானவிவையெல்லாமொன்றாய்கூட்டிசூட்சமுடன்குழியம்மிதன்னிலாட்டே. ௮௮௯

ஆட்டவேகையாளின்சாற்றிஞலே அப்பனேயென்சாமமரைத்தபோது, நீட்டமுடன்வெண்ணெயதுபோலேயாட்டி நெடிதானரவிதனிலேகாயப்போடு, வாட்டமுடன்காய்ந்தபின்புபொடியதாக்கிவளமாகக்காசியென்றகுப்பிதன்னில், தேட்டமுடன்தான் போட்டுமைக்தாகேளு தெளிவானமாக்கல்லால்கொண்டுமூடே. ௮௯0

மூடவேசிலேயதுவலுவாய்செய்து முசியாமல்ரவிதனிலேகாயவைத்து, நீடவேசட்டிதனில்மணலேக்கொட்டி விளேவாகச்சட்டிநடுருப்பிவைத்து,தேடவேகுப்பியின்மேல்மணலேக்கொட்டிதெளிவாகசட்டிகொண்டுகவிழ்த்துமூடி, சாடவேசிலேபதுவலுவாய்செய்து சாங்கமுடன்வாலுகையிலேற்றிடாயே. ௮௯௧

ஏற்றவேகமலமென்றதீயாலப்பா என்மகனேயென்சாமம்யெரித்தாரப்பா, போற்றவேயாறியபின்னெடுத்துப்பாரு பொங்கமுடன்செந்தூரம்சொல்லப்போமோ, வாற்றமென்றசெந்தூரம்பதனம்பண்ணுமகத்தானவேதையிதுகோடாகோடி, நாற்றமென்றசெம்பதனில்நாலுக்கொன்று நயமுடனே தானுருக்கிக்கொடுத்துப்பாரே. ௮௯௨

கொடுத்துப்பார்செப்பதவுமிரண்டுபோகும் குணமாகும்லூரலதுவடுத்துக்கொல்லும், தடுத்துமேகரியோட்டிலூதிப்போடு தாக்கானசெம்பதுவும்சொருசுமெத்த, தொடுத்துப்பார்செம்புதனேமதிராலுக்கு துப்புரவாய்தானுருக்கியெடுத்துப்பாரு, விடுத்துப்பார்மாற்றதுவுமேழதாகும் விரைவானபொன்னதுவும்புசமைகாணே. ௮௯௩

காணவேபொன்னென்றயேமமாச்சு கருவானதங்கமதுவைந்துக்கொன்று, பூணவேதானுருக்கியெடுத்துக்கொண்டுபுகழாகத்தகடடித்துப்புட்த்தைப்போடு, வேணவேபூங்காவிதன்னிலப்பா விருப்பமுடன்புடம்போடப்பசமையாகும், மாணவேசித்தர்செய்யும்வேதையாகும் மார்க்கமுடன்நாதாக்களதீதந்தானே. ௮௯௪

தானெனசெந்தூரக்குன்றியுண்ணு தயவுடனேவெண்ணெய்தனிலுபானந்தான், வேனைமண்டலந்தான்கொண்டபோதுமிக்கானதேகமதுகற்றாணாகும், கோனையகுருவருளால்தேகம்பொன்னும்குவலய

த்தில்கோடிவரைஇருக்கலாகும் பானுனகாலாங்கிகிருபைதன்னால்பா
டினேன்போகரிஷிபண்மையாமே. ௮௯௫

### போகர்மாற்றுயர்வு வேதை.

பண்மையாமின்னமொருகருமானங்கேள் பாங்கானசாரமதுபல
மரலாகும், திண்மையாங்கெந்தியதுபலமைந்தாகும்திடமானவெண்
காரம்பலமிரெண்டாகும், விண்மையாம்பூரமதுபலம்ரண்டாகும்வகுப்
பானவீரமதுபலமொன்றாகும், கண்மையாம்சரக்கெல்லாமொன்றா
ய்க்கூட்டிக் களிம்புபோல்தானரைப்பாய்சாமம்பத்தே. ௮௯௬

பத்தானசாமமதுவரைப்பாயப்பாபாங்குடனேவாடுதின்றுப்பா
லைமூலி, சித்தானசித்தருடமூலியப்பா செகத்திலேதானறிவார்யாண்
பர்தாமும், முத்தானகுழல்தனிலேகாயவைத்து முசியாமல்சீஷாவில
டைத்துக்கொண்டு, சுத்தானபுட்டிக்குச்சீலைசெய்து சுத்தமுடன்மண்
மறைவில்தயிலம்வாங்கே. ௮௯௭

வாங்கியேதயிலமதுபதனம்பண்ணுவாகுடனேதயிலமதையெடு
த்துமைந்தர், பாங்குபெறவாருமாற்றாணிக்கொப்பால்பசும்பொன்னு
ம்விராகனதுதகட்டித்து, தீங்கில்லாத்தயிலமதுகுன்றிதானும்திகழா
கத்தர்னெடுத்துப்பூசிமைந்தா, ஏங்கியேதிரியாதேபுடத்தைப்போடு
யெழிலானபொன்னதுவு மாற்றுப்பாரே. ௮௯௮

மாற்றானபொன்னதுவும் பசுந்தத்தங்கமத்தானநாதாக்கள்வே
தைகளாலும், காற்றானதயிலமதுகாரமெத்தக்கடுங்காரச்செயநீருமிது
க்கிடுண்டோ, சேற்றானதுருத்தியதுபிழைப்பதற்கு சூட்சமுடன்சித்
தர்முனிசெய்யும்வேதை, வேற்றானமாந்தர் கட்குயிந்தமார்க்கம்வெளி
யாகத்தாமுரைத்தோம் வண்மையாமே. ௮௯௯

### மாற்றுயர்வுவேதை.

வண்மையாமின்னமொரு கருமானங்கேள் மார்க்கமுடன்நாதா
க்களதீதவித்தை, உண்மையுடன் சொல்லுகிறேன்மைந்தாபாரு உவ
ப்பானகல்லுப்புபலமோகால்தான், திண்மையுடன்மதியும்புபலமோ
கால்தான்திறமானதுருசதுவும்பலமோகால்தான், நன்மைபெறசார
பதுபலமோகால்தானலமானசாரமதுபலங்கால்கூட்டே. ௯௦௦

கூட்டவேலிங்கமதுபலமோகால்தான்குணமானபூனீறுபலமோ
கால்தான், வாட்டமுடன்சீனமதுபலமோகால்தான்வகுப்பானதுத்த
மதுபலமோகால்தான்காட்டமுடன்சாரமென்றசெயநீர்தன்னால்நலம்



பெறவே தானரைப்பாய்பத்துசாமம், நீட்டமுடன் யாறுமாற்றாணிக்
கொப்பாய் நேரானபசும் பொன்னுதகடதாக்கே. ௯௦௧

தகடான ரேக்கதனை யெடுத்துமைந்தா தண்மைபெற மெழுகத
னைதகட்டிற்பூசு, நிகடான மெழுகதனைப்பூசியல்லோ நேர்ப்புடனே
பூங்காவிக்குள்ளேபோடு, சகடானசெம்பதுவுங் கட்டியேதான் சார்
பான தங்கமதுவாகும்பாரு, பகடான மாற்றுவகை கூறப்போமோ
பசுந்தங்கமிதுக்கீடுசொல லொண்ணாதே. ௯௦௨

சொல்லவென்றால் நாவேதுபாவுமேது சுருதிமுதல் யாராய்ந்து
படித்துமென்ன வெல்லவேசித்தர்கள் கைமறைப்பு மேதினியிலாரா
லுங்காணப்போமோ, புல்லவே காலாங்கிநாதர்பாதம் போற்றியே
சதாகாலம் பணிந்துநித்தம், நல்லவேமானிடர்கள் பிழைக்கவென்று
நாட்டினேன்போகரிஷி நவிலத்தானே. ௯௦௩

### வெள்வங்கக்களங்கு

நவிலவேபோகரிஷி சொல்லுமார்க்கம் நாட்டுளோர் கருவானிகா
ண்பான்பாரு, புவிலவேயின்னமொரு கருமானங்கேள் புகழானவெள்
வங்கம்பலமொன்றாகும், கவிலவே பாஷாணம்பலமொன்றாகும் கடி
தான வயமதுவுந்தூளேகாலாம் தவிலவேரசமதுவும் பலங்காலாகும்
தாழ்மையுடன் றானரைப்பாய் சாமம்நாலே. ௯௦௪

நாலானசாமமது வரைக்கும்போது நலமானமெழுகதுபோ லா
கும்பாரு, பாலானதேனதுவு மிரண்டுசாமம் பாகமுடன் றானரைப்
பாய் மைபோலாக, வேலானபசுநெய்பால் சாமம்நாலு மிக்கான வெ
ண்காரம் பொரித்துப்போடு, கோலானகரண்டியினால்க் கிண்டிக்கொ
ண்டு கொப்பனவேவச்சிரமாங் குகையிற்போடே. ௯௦௫

போடவேசீலையது வலுவாய்ச்செய்து பொங்கமுடன் ரவிதனி
லேகாயவைத்து, நீடவேகுகைதனிலேயுருக்கியேதான்நிலையான கள
ங்குதனையுடைத்துப்பாரு, நாட்டவே களங்குதனை சொல்லப்போமோ
நாதாக்கள்செய்யுமிது வதிதமார்க்கம், கூடவேகளங்குதனையெடுத்துக்
கொண்டு குழறிவெள்ளிசெம்பில் பத்துக்கொன்றே. ௯௦௬

பத்தானயிடைதனிலே குருவொன்றீய்ந்து பதமாகத்தானெடு
த்தூதிப்போடு, புத்தானகளங்கதுவும் நீங்கியல்லோ புகழானவெ
ள்ளியது மாற்றுகாணும், மத்தானவெள்ளியது பசுமைமெத்த மகத்
தானமட்டமதுநாலுக்கொன்று, சித்தானதங்கமதுவொன்றுகூட்டித்
தெளிவாக வாடித்துப் புடத்தைப்போடே. ௯௦௭

### கரிவங்கவெட்டை

போடவே மாற்றதுவும்பசுமையாகும் பொங்கமுடனின்னமொருமாற்கங்கேளு, நீடவேகரிவங்கம் பலமும்வாங்கி நிலையானதாளகமும்சரியதாக, மூடவேமுலைப்பாலால்தானரைத்து முசியாமல்வங்கத்துக்கங்கிபூட்டி, சூடவேசிலைமண்வலுவாய்ச்செய்து சூட்சமுடன் கெசபுடத்தில் போட்டிடாயே. ௬௦௮

போட்டவுடன்தீயாறி யெடுத்துப்பாரு பொங்கமுடன் களங்கமதுயென்னசொல்வேன், தாட்டிகமாய்களங்கமதையெடுத்துமைந்தா தாக்கடாரவிதனிலே பத்துக்கொன்று, நீட்டமுடன் கொடுத்துருக்கியூதிப்போடு நேரானசெம்பதுவுங்கட்டிப்போச்சு, வாட்டமுடன் செம்புதனைப்பதனம்பண்ணுவாகுடனேவெள்ளிதனில் நாலுக்கொன்றே

ஒன்றுடனேவாரடித் துப்புடத்தைப்போடு ஓகோகோபசுமையதுசொல்லப்போமோ. குன்றானமலைமீதிலிருக்குஞ்சித்தர் கூர்மையுடனாய்ந்த நூல்கள்தன்னில், நன்றானகைமறைப்பு யாவும்பார்த்து நலமுடனே தேர்ந்தெடுத்த விந்தபாகம், பன்றானமாணுக்கள் பிழைக்கவென்று பாடிவைத்தேன்போகரிஷி பண்பாய்த்தானே. ௬௧௦

### போகர் டோல்வித்தை,

தானானவித்தையது வசீதவித்தை தயவுடனேமாணுக்கள்பிழைக்கவென்று, மானானகாட்டகத்தில் சென்றுயானும் மார்க்கமுடன் மூலியொன்றுயாராய்ந்தேதான், கோனானயிடையர்களை யிடமுங்கேட்டு குறிப்பாக இடைக்காட்டார் சமாதிகண்டு, பானான்சமாதியிடம் சென்றுயானும் பரிவாகநானவரைக் கண்டிட்டேனே. ௬௧௧

கண்டிட்டபோதையிலே சித்தர்தாமும் கடுகெனவே யாரப்பாவென்றுகேட்க, மண்டிட்டு யடியேனுந்தாள்பணிந்து மகாதேவர் காலாங்கிசீஷனென்றேன், தெண்டிட்ட யெந்தனையும் கேள்விகேட்டார் தெளிவுடனேவுத்தாரஞ் சொன்னேனப்பா, விண்டிட்டு நானவரைவணங்கிமிக்க வேதாந்தஞ்சித்தாந்தம் கேட்டேன்பாரே. ௬௧௨

கேட்டேனேயென்மீதில் கிருபைவைத்துக் கீர்த்திபெற யெந்தனுக்குவுபதேசித்தார், மாட்டேனேயேண்ணுமல்சித்துதாமும் மனங்கொண்டுபோதித்தார், கோடிமாற்கம், தாட்டிகமா யானுமல்லோ கண்டாராய்ந்து தயவுடனே நானவரை கருவுகேட்டேன், வாட்டிகமாய் கருவெனக்கு வுரைத்தாரப்பா வாகுடனே வனந்திரத்தில் சென்றேன்காணே. ௬௧௩



கண்டேனேமூலியிட வனந்திரத்தை காடெல்லாந்தான்திரிந்தெடுத்தேனப்பா, விண்டேனேமதிமயக்கப்பூடுவொன்று விரைவானதிகைப்பூண்டுவொன்றுதானும், அண்டாதமரந்தனிலே யேறுங்கொட்டை அழிஞ்சியிடவித்தப்பாவதனோடொக்க, பண்டானபழத்தோடுஓடும்போக்கி பாங்குடனே குழித்தயிலம்வாங்குவாயே. ௬௧௪

வாங்கியே தயிலமதை பதனம்பண்ணுவாகு பெறசிஷாவிலடைத்துக்கொண்டு, ஏங்கியேதிரியாதே மாணுகேளு யெழிலானவித்தையிது ஜாலவித்தை, தூங்கியேதுஷ்டருடன் கூடாமற்றான் துணையானசீஷனென்று தேடிக்கொண்டு, பாங்குபெற ஜாலவித்தைபாடுயாய்நீ பாரினிலேசித்தனைப்போ லாவாய்பாரே. ௬௧௫

பாரப்பாதயிலமது மயக்கும்பார்வை பாரினிலேவித்தைக்குசாருதானாகும், ஆரப்பாமேதியின்றன் றோலினாலே அப்பனேடோலொன்றுவுண்டுபண்ணி, நேரப்பாயிருபுறமும்கச்சைபூண்டு நெடிதானதோல்வாருயிறுக்கிமாட்டி, சீரப்பாமுடிச்சி முப்பத்திரண்டு சிறப்புடனே தலைபுறத்தில் சுறுக்கிடாயே. ௬௧௬

சுறுக்குடனே சூத்திரமாங் கயிருமாட்டிசோடினைகள்மிக்கவது செய்துகொண்டு, குறுக்குடனே திரை மாட்டிகொம்புகட்டி குடியானபேர்களொருபக்கம்நிற்க, முறுக்குடனேகிடாவொன்று நேர்நிறுத்திமூர்க்கமுடன் கத்திகொண்டு வெட்டினேன்யான், தருக்குடனே சினபதிசெனங்களெல்லாம் சட்டமுடன் தான்பார்த்து பிரமித்தாரே.

பிரமித்துநிற்கையிலே யடியேன்தானும்போனகிடாவதனையெடுத்துமைந்தா, திரமுடனே டோலிக்குள் தானடைத்து திறமையுடனுள்ளிருந்த கிடாவைத்தானும், வரமுடனேதானழைத்துசெனங்கள் முன்னேமானிலத்தில்நடுநடுங்கிபிரமித்தேங்க, சூரமுடனேதானழைத்தேன்கிடாவையப்பா கொப்பெனவே கண்டுபயந்தொதுங்கினாரே.()

ஒதுங்கையிலடியேனு முன்னிருந்த வுயிர்போன கிடாவதனையடக்கஞ்செய்தேன், பதுங்கையென்ற டோலிக்குள் ளடைத்துப்போட்டேன், பார்வைக்குதிரைமறைவில் சாணு மற்றான்சதுங்கையுடன் கிடாவங்கே குதிக்கும்போது, சனங்களெல்லாம்பார்த்து மிகவாசரித்து மதுங்கையென்றமரம்போல் நின்றுவிட்டார் மன்னவனேசாலமென்ற மோடியாமே ௬௧௮

மோடியென்ற தொழிலதனைச் செய்யும்போது முன்செய்தகருத்தயிலம் லாடமிட்டு, ஓடியேதுலைதூரம் சென்றுபோயி வுத்தமனே

வேடமதுபூண்டுகொண்டு, தேடியேகுறத்தி யென்றபெண்ணைப்போ
லதெரியாமல் சாலமென்றமையைத்தீட்டி, நீடியே பெட்டியிலடக்கஞ்
செய்தேன் நீணிலத்தில் யெல்லவரும் பார்த்திட்டாரே. ௩௨௦

பார்க்கையிலே பெட்டிதனில் மூடிவிட்டேன் பாராளும் ராசர்
முன்னேயடக்கஞ்செய்தேன், மூர்க்கமுடன்கட்டாரி தன்னைநோக்கி
முயன்றுமேமேல்நோக்கிபூமிதன்னில், தீர்க்கமுடன்பெட்டியின்றன்
பக்கம்நின்று தீரமுடன்குத்தி விட்டேன்மாதுதன்னை, மார்க்கமுடன்
மாதினிடபக்கம்பட்டு மானிலத்தில்செனங்க ளெல்லாமயங்கினாரே.

மயக்கமுடனிற்கையிலே யடியேன்தானும் மறைப்புடைய மை
யதனையெடுத்துக்கொண்டு, தியக்கமுடன்நெற்றிதனில்பூசிக்கொண்டு
தியங்கவேயெல்லோரும்பிரமித்தேங்க, தயக்கமுடன்மறைப்புடனே
போயிருந்து சணத்திலேகுறமாது யானுந்தானும், துயக்கமுடன்வெ
ளியரங்கமாகிவந்தோம் துரைராஜர் மெச்சிடவே செய்தேன்யானே.

செய்தேனேமோடியிலே யனந்தம்பேர்க்கு சிறப்பானசாலத்தி
லனந்தம் பேர்க்கு, செய்தேனே பேதனங்க ளனந்தம்பேர்க்கு செழி
ப்பானகிண்ணவித்தை யனந்தம்பேர்க்கு, செய்தேனே சோளியிலே
யனந்தம்பேர்க்கு செடல்கட்டி வித்தைகளி லனந்தம்பேர்க்கு, செய்
தேனேபச்சிலையி லனந்தம்பேர்க்கு சோதித்தேன் கோடிவித்தை யதி
தம்பாரே. ௩௨௩

பார்த்திட்டேன் சாலமென்ற வித்தைதன்னைப் பரிவாகசீனபதி
னுற்றோர்தாமும், கார்த்திட்டவித்தைக்கு யென்தன்மீது கருணைபெற
வெகுபேர்களாசீர்மித்தார், ஏர்த்திட்டேனவர்களுக்கு யுபதேசித்தே
ன்யெழிலானவித்தைகளைக்கற்பித்தேதான் வார்த்திட்டுசீனபதிவிட்டு
நீங்கி வுத்தமனேகுளிகையது கொண்டேன்தானே. ௩௨௪

கொண்டேனேகுளிகையது பூண்டுகொண்டேன் கோடானவித்
தையெல்லாம்யானும்பார்த்து, கண்டவர்கள் பார்த்துமிகப்பிரமைகொ
ண்டு காசினியில்செய்வதற்கு கருவுஞ்சொன்னேன், விண்டபடி யொ
ருவருக்கும் சொல்லவேண்டாம், வேதாந்தத்தாயினது வருளும்பெ
ற்று, தொண்டனெனும்பெயர்பெற்று சதாகாலந்தான் தொல்லுலகில்
சித்தனைப்போல் வாழ்குவாயே. ௩௨௫

போகர்நீராவிக்கப்பல்செய்தது.

வாழவே யின்னமொருசூத்திரங்கேள் வையகத்தில் நாதாக்கள்
செய்யமாட்டார், நீழ்கவேகருவூராரனேசஞ்செய்தார்நிலையானவித்தை



யிதுவதிதவித்தை, மூழ்கவேகண்ணபிரான்பள்ளிகொண்டமுனியான
சித்தரிஷிதட்டமுங்கண்டேன், மாழ்கவேபாற்கடலின்மத்தியத்தில்மக
த்தானகப்பலொன்று செய்தேன்யானே. ௩௨௬

செய்யவேமராமரக் கப்பல்தானும்சிறப்பாகளாயிரம்கூட்டத்தோ
டும், பையவேகூத்திரமாமரக்கலந்தான் பாருலகில்சீனபதியார்கள்மெ
ய்ச்ச, மெய்யவேநீளமதுகெஜமெண்ணூறு மெதிரானவகலமதுகெஜ
மைநூறு, பெய்யவேசதுரமது தீர்மானித்துபிசகின்றி முடித்தவகை
கூறுவேனே. ௩௨௭

கூறுவேன்சட்டமது பலகைகொண்டு குறிப்புடனே வில்லாணி
தான்புனைந்து, வாறுடனேகயர்நீளமளவெடுத்து வகுப்புடனேநெம
புவைதன்னிற்சேர்த்து, காறுடையவடிப்பீடந்தான்புனைந்து கருவா
னவாணிமிகத்தான்முடுக்கி, பேறுடையவிட்டமதுகுறுக்கணிந்துபே
ரானகாலுடனே, மாட்டிடாயே. ௩௨௮

மாட்டவேதொட்டியென்றபிடமாச்சுமகத்தானயேழுவரையுண்
டுபண்ணு, நீட்டமுடன்காலாறுமண்டபத்தில் நிலையானதூணதுபோ
ல்செய்துமேதான், வாட்டமுடனுபாமதுகெஜநூறும் வாகுடனே
யேழுவரையுள்ளடக்கி, பூட்டகமாய்முதல்வரையில் பலகைபோட்டு
ப்புழாகமேல்மூடிவழிசெய்தேனே, ௩௨௯

வழியானவறுபத்துநான்கு வீடுவரையானஎழுவரையின்கீழய
ப்பா, நெறியானசன்னங்களுமனந்தமாக்கி கோனதெற்குமுகம்வடக்
குமாக்கி, விழிபானமேற்குமுகம்கிழக்குமாக்கி வீரானகோட்டையது
வுள்ளடக்கி, முழியானதெத்துடனேவாசலாக்கி முனையானயிருபுரமு
ம்சுக்கான்பாரே. ௩௩௦

பார்க்கவேமுதல்வரைக்கு மேலேயப்பா பாங்கானவிரண்டாங்
கால்மச்சியப்பா, ஏர்க்கவேபலகைபோல்சுவறுண்டாக்கியென்மகனே
நாற்புரமுங்கதவுண்டாக்கி தீர்க்கமுடன்சட்டமதுமேலேபோட்டுதிற
மானமாணிமிகப்பூட்டிமாட்டி, மாற்கமுடன்சிறுபாணிமேலேகட்டி
மகத்தானசுக்கானின்யாணிபோடே. ௩௩௧

போடவேகீழானிமேலாணிகொண்டுபொங்கமுடன் ருட்சமமா
ட்டிப்போடு, நீடவேமூன்றுங்கால்மச்சுவீடுநேர்ப்பானபலகைகொண்
டுமூடிப்போடு, கூடவேசத்தெங்கும்சன்னல்வைத்துக்கொப்பனவேவ
றுபத்துவாசல்தன்னில், மேடவேவாசலுக்குபலகைபோட்டு மேன்
மையுடன்சட்டமதாய் பதிந்துசாத்தே. ௩௩௨

சாத்தயிலேசூட்சமுடனுணிபோட்டு சார்பாகமூலயிடம் சுக்கா
ன்மாட்டி. காத்தடங்கும்பக்கமதில் சூட்சம்போட்டு பாங்குடனேசற்
றெங்கும்கதவுமாட்டி, நேத்திபதாய் மேல்வட்டம் கீழ்வட்டங்கொண்
டுநெடிதானவுள்வட்டந்தன்னில்சுக்கான், மாத்தியேதான்முடுக்கிவட
த்தைமாட்டிவகையுடனே நாலாங்காள்மச்சிதாமே, ௯௩௩

தாமேதான்மச்சியதுவறுபத்துநான்கு தாழ்வானவாசலதுநூற்
றிருபத்தெட்டு, போமேதானிருபக்கம்கதவுமாகும்போக்கானவாசல
துவுள்கதவுகொண்டு, வேமேதான்சங்கிலியுமள்ளுமாட்டி மேலான
சனல்களுக்குறிதியாணி, நாமேதானினைத்தவண்ணம் முடித்தேனப்
பாநலமாகசுற்றெங்கும்கிராதிதானே. ௯௩௪

கிராதிபாமிருமூலை சுக்கான்போட்டுக்கீர்த்தியுடனஞ்சாங்கால்ம
ச்சுமாக்கி, தராதிபரும்தானிருக்க மச்சுமாகிதாழ்வானயடிவாரம்சுரங்
கம்போலாம், நிராதியுடன்வறுபத்துநான்குமாளி நிர்மித்துபலகையு
டன்சட்டமாட்டி, பராதியுடன்சன்னல்களுமிகவுண்டாக்கி பக்கமெல்
ல்லாம்சூத்திரமாம்பலகைதானே, ௯௩௫

பலகையாமறுபத்துநாலுவாசல் பாங்குடனேசேர்த்திருத்திவுள்ளே
சட்டம், நிலகையுடன்யிருபக்கம்வாசல்விட்டுநிவர்த்தியுடன்சுற்றிலு
மேகதவமைத்து,பலகையுடன்சட்டமதால்பலகைமாட்டிமார்க்கமுட
ன்காற்றதுவும்வொடுங்கிநிற்க, சலகையுடன்கிராதிகளில்கண்ணாடியா
லேசாங்கமுடன்வாசல் வழிநூற்றிருபத்தெட்டே, ௯௩௬

எட்டானமேல்வாசல்சன்னலாகும் மெழிலானவைந்தாங்கால்ம
ச்சியாக்கி, திட்டானமாளிகையாமறுபத்துநாலுதிடமானகோட்டைய
துநூற்றிருபத்தெட்டு, மட்டானவழிகளிலேசூத்திரங்கள்மாட்டி மக
த்தானகிராதிகளில்பிரதமைகளமைத்து, வட்டானவாசலுநெடுவாசல்
வட்டம்வகுப்புடனேயிரும்புகம்பி யிருபத்துநான்கே. ௯௩௭

நாலானகுழாவதுவுமிருபத்துநாலு நலமாககீழுவரை லூணிமிக
நாட்டி, காலானகுத்துக்கால்யிரும் புவடசட்டம் கதிரானவாணிகளா
ல்கொண்டுமிகமுடுக்கி, மேலானநீளவரைமுக்காலுமட்டும்நெடுஞ்சட்
டம் கீழ்வட்டமிகக்கொண்டுநிறுத்தி, கோலானபக்கமெல்லாம்யிரும்
புக்கால்மாட்டிகொடிதான சுக்கானுங்குழைபக்கர்தானே, ௯௩௮



பக்கமுடன்மேலரைவூடுருகமாட்டிய் படியுடனேவாராங்கால்ம
ச்சிவீட்ப்பா, நிக்கயிடமிருப்பதற்குயிருபுரமுமாளி நிரமித்துசுக்கானை
வடங்கொண்டுதிருப்ப, சுக்கனிடனிருபக்கம்சங்கிலியால்மாட்டி சுழ
லானநடுமையமிருபக்கந்தானும், தக்கபடிவுள்ளுநுளையிரும்புகுழல்
தானுஞ்சமைத்திட்டேன்தலைபுரத்தில்வக்கினியுமாச்சே. ௯௩௯

ஆச்சப்பாயிடப்பக்கம்தண்ணியதுநிற்க அப்பனேகுழலொன்று
சமைத்திட்டேன்யானும், மூச்சப்பாபோகாமல் குழைகளிகும்புக்கு
முனையானதண்ணீரும்கொதிக்குமிகவேலை, வர்ச்சமுடன்தாள்திறந்
துதண்ணீருமாவிமற்றுமுள்ளகுழைகளுக்குதானருந்நியோட, காச்ச
நீராவிகுழல்தனிலேபுகுந்து கருவானசக்கரத்தைதிருப்பமிகலாச்சே.

திருப்புகையில்சக்காமும்சுக்கானும்கொண்டு திறமுடனேயே
ழாங்கால்மச்சியதுநின்றுபொருப்புடனேயாணிகளைத் தட்டிப்போட்
டேன்பொங்கமுடன்மறக்கலமுநிற்கலாச்சு, தருக்கமுடன்கள்ளாணி
கொண்டுமாட்டி தகைமைபெறமரக்கலத்தைநிறுத்தியானும், குருக்க
லுடன்புகையடக்கி நங்கூரத்தைக் குறுக்கிட்டேவகடைசிமுனைமாட்டி
னேனே. ௯௪௧

மாட்டினேன்சக்காமுமெட்டதாகும்மார்க்கமுடன்வுள்ளாணியச்
சியாணி, நாட்டியேதுளைகொண்டுதாள்முடுக்கிநலமாகச்சக்காம்சட்டி
பூட்டி, வாட்டமுடன்மாக்கலமத்திவாசல்வழியுடனேதாளனித்துவா
ணிமாட்டி, தேட்டமுடன்மேல்வரைகீழ்வரைமட்டும் தேரினதுசக்க
ரம்போல்சட்டமாமே. ௯௪௨

சக்கரமாம்வுள்வரிசைநெடுவரிசையாவும் சட்டமுடன்பிகுவெடு
த்துவாணித்தன்னால், பக்கமெலாம்குழாய்களுக்குகம்பிமாட்டிப்பாங்
குபெறவுள்ளாவிவூடுதாக்க, நெக்கவிடமில்லாமல் புகைகள்நிற்கநோ
கக்குழல்வினவில்முடுக்கிவிட்டு, தக்கபடிநீராவிநிதானம்பார்த்துதந்தி
ரமாய்சூத்திரமுண்டாக்கினேனே. ௯௪௩

ஆக்கமுடன்கப்பலொன்றுநேமித்தேதான் அதின்மேலேவெகு
சனங்கள்யேத்திவிட்டேன், பார்க்கமுடன்சித்தர்முனிரிஷிகள்தம்மை
பாங்குபெறமேலவரையேத்திவிட்டேன், நோக்கமுடன்மேல்வரையி
ல்தானிருந்தேன்நோட்டமுடன் சுக்கானைமுடுக்கிவிட்டு, சோக்கமுட
ன்கடலேழுஞ்சுத்திவந்து சூட்சமுடன்கப்பலைநிறுத்தினேனே.

நிறுத்தினேன்சீனபதிக்கடலோரந்தான் நேர்ப்புடனேசித்தர்மு
னிரிஷிகள்தாமும், நிருத்தமுடன்தானிரங்கியாசிர்மத்தில் சிறப்பாக

சென்றுவிட்டார்செனங்களெல்லாம், பெருத்தமுடன்சுக்கானைமுடுக்கியானும் பொங்கமுடன்சீனபதிக்கடலைவிட்டு, வருத்தமுடனிமையகிரியோரப்பக்கம் வாகுடனேசென்றுமல்லோநிறுத்தினேனே. ()

நிறுத்தினேன்யிமையகிரியோரந்தன்னில்நிலையானசித்தர்முனிரிஷிகளெல்லாம், திருத்தமுடன்கப்பலிலேயேத்தியானும்சென்றேனேயானுமல்லோகடல்மார்க்கந்தான், ஒருத்தமுடனுலகமெங்குஞ்சுத்திவந்தேன் ஓங்காரகோடிதாக்கள்மெய்ச்சயானும், நிருத்தமுடன்யிமையகிரியோரந்தன்னில் னேமமுடன்மறுபடியும்வந்திட்டேனே. ()

வந்திட்டேன்மேருகிரிபர்வதந்தன்னில் வாகுடனேசித்தர்களையிறக்கிவிட்டேன், தந்திட்டாரெந்தனுக்குமெய்ச்சியேதான் தாரணியில்நீதமென்றவித்தையெல்லாம், முந்திட்டயெந்தனுக்குகிருபைவந்துமோசமில்லையென்றுசொல்லியுபதேசித்தார், பந்திட்டயெந்தனுக்குபட்சம்வைத்து பாலித்தார்வெகுகோடிவித்தைதானே. கூஎ

தானானவித்தைகளுமனேகங்கொண்டேன் தாக்கானவினைதமென்றமார்க்கமெல்லாம்,, கோனானகுருவருளால்தன்னைப்போற்றி கூர்மையுடன்றான்வணங்கிநின்றேன்யானும், வேனானகாலாங்கிநாதர்தாமும்விருப்பமுடன்யென்மீதுபட்சம்வைத்து, தேனானவமிர்தரசகுளிகைதன்னை தெளிவுடனேயிருக்குமிடஞ்செப்பினாரே. கூஅ

செப்பினாரெந்தனுக்குகாலாங்கிதாமும் தேற்றமுடன்வளப்பமெலாமறிந்துகொண்டேன், ஒப்பமுடன்வமிர்தரசக்குளிகைசெய்துஒழுங்குபெறசீனபதிமாந்தருக்கு, தப்பிதங்களில்லாமல்முடித்துயானும் சார்புடனேதந்துவிட்டேன்மைந்தாகேளு, நெப்பமுடன்வெள்ளையென்றமாந்தருக்கு நேர்புடனேகற்பித்தேன்கோடிதானே. கூகூ

கோடானகோடிமுறையனந்தஞ்சொன்னேன் கூறினேன்நாதக்கள்கூராவண்மை, பாடானபாட்டர்திருமூலத்தார்கள் பாடினார்முன்பின்னாப்பாடிப்போட்டார், தேடானபொருளெல்லாம்தேடிக்கான தெளியாதுயவர்நூலில்வொன்றுங்காணார், மாடானமனிதரப்பாவறியாமற்றான் மானிலத்தில்சாத்திரத்தைப்பொய்யென்றாரே. கூடு0

பொய்யென்றார்சாத்திரங்கள்மறைவுகாணார் பூதலத்தில்கெட்டலைந்துநூலைக்காணார், மெய்யென்றநூலதனைக்காணார்மாண்பர் மேதினியில்மாண்பர்களைசொல்லப்போமே, கைகண்டசாத்திரத்தின்உளவுகாணார் காசினியில்நூல்பார்த்துச்சலித்துபோனார், நெய்யென்றருசியாகந்தெரியாமற்றான் கிம்பெண்ணையுண்டதொருகதைபோலாச்சே.



அபக்குடோரி.

ஆச்சப்பா இன்னமொரு கருமானங்கேள் அப்பனேயாம் கண்டமார்க்கஞ்சொல்வோம், பேச்சப்பா மணலிரும்பு கொண்டுவந்துபேரானசரவலையில் பழுக்கக்காய்ச்சு, நேச்சென்ற சம்மட்டி மட்டங்கொண்டு நெருப்பானவதடட்னே சரடுபோக்கி, கூச்சன்ற மணலிரும்பு காச்சடித்துக் குறையாமல்சேத்தளத்தில் பாதிகாணே. கூடுஉ

கணவேவயமதுதான் கவினைபோலாம் கசடற்றவெள்ளி தனக்கொப்பதாகும், மாணவேவாரடித்து நீட்டிப்பின்பு மார்க்கமுடன்சேராதுதான்ராவிமைந்தா, தோணவேசரக்கதுதான் சுத்திகேளும் துறையானபழச் சாற்றில்நாலுநாளும், வேணவேதிரிபலாநிகஷாயத்தாட்டி விருப்பமுடன்தானரைப்பாய் சாமமதாலே. கூடுங

நாலானசாமமது வாட்டிப்பின்பு நலமுடனேகுடோரியது வெண்காரந்தான், பாலானவயல் நண்டுவரப்புநண்டு பாகமுடன் பாலெடுத்து வெண்காரத்தை, நூலானநூல்படியேதெளிந்துயானும் நுணுக்கமுடன் தானரைத்து வயத்திலூட்டி, வேலானகுடோரியென்றகாரந்தனால் விருப்பமுடன்தான்பிசரி மூசைக்கேற்றே. கூடுச

ஏற்றவே வச்சிரமாங் குகையில்வைத்து யெழிலான சீலையதுவலுவாய்ச்செய்து போற்றியேரவிதனிலே காயவைத்துப் புகழாகசரவலையில் வைத்தூது நாற்றமென்றசகடதுவு மிகவேநீங்கி நலமானவயமதுவும் வட்டுபோலாம், கூற்றனையும் வெண்காரக்குடோரியாலே குணமானவயமதுவும் வெளுமைபாரே. கூடுரு

பாரென்றவயமதுவும் துய்யாறும் பாங்கான குடோரியதுகட்டுமார்க்கம், நேரென்றதுருசதுவுமயத்திற்பாதி கெடிதான துருசுக்குபாதிகெந்தி, மேரேதான் கெந்திக்குப் பாதிசூதம் மேலான சூதத்தில் பாதிவீரம், சேரென்றவீரத்தில பாதிபூரம் செய்மான பூரத்தில் பாதிதானே. கூடுசு

பாதியாம்பூரத்தில் பாதிதாரம் பாங்கானதாரத்தில் பாதிதுத்தம் சோதியாம்துத்தத்தில்பாதிசீனம் சுடரானசீனத்தில்பதிவாளம், வாதியாம் வாளத்தில்பாதியுப்பு வாகானவுப்பிலேபாதிபூநீர், நீதியாயித்தனையுமொன்றாய்க்கூட்டி நினைவாகவாறுவகை செயநீரூட்டே.

ஆட்டவென்றால் மெழுகதுவும்காலுசாமம் அப்பனேமைபோலவரைத்துமைந்தா, நீட்டமுடன்சிமிழ்தனிலேபதனம்பண்ணு நிலையானகுடோரியது சொல்லப்போமோ, வாட்டமுடன்வெள்ளிசெம்பில்

பத்துக்கொன்றவறுமையுடன் தானுருக்கி குடாரியொன்று,நேட்டமுடன்வுருக்குமுகந்தன்னிலிய நிகாரனகளங்கமதுபோலாம்பாரே.

பாரப்பா களங்குதனை யோட்டி யூதப் பாங்குபெறத் தகடடித்துப்புடத்தைப்போடு, நேரப்பாபுடமாறியெடுத்துப்பாருநேற்பான செம்பதுவும்நீங்கியேதான், வேரப்பாவெள்ளியது வெடையேநின்று விரைவானமாற்றதுவு மாறுகாணும், மாரப்பாதங்கமென்ற காசிதாணும் மகிழ்வாகநாணுக்கு வொன்றுசேரே. ௬௫௬

ஒன்றாகத்தான்கூட்டிமைந்தாபாரு வுத்தமனேவாரடித்துப் புடத்தைப்போடு, குன்றானபுடமதனில் மாற்றுகாணும் கூரானசெம்பொன்னைசொல்லப்போமோ, தன்றான பொன்னதுவும் சித்தர்வேதை சாங்கமுடன்மானிடரால் செய்யப்போமோ, பன்றான சாத்திரங்கள் மிகவாராய்ந்து பாடினேன்போகரிஷி பண்பாய்த்தானே. ()

உப்புசெந்தூரவேதை.

தானானவின்ன மொருவயணங்கேளு தயவானவெடியுப்புயிந்துப்பாகும், மானானகரியுப்பு வளையலுப்பு மகத்தானசவிட்டுப்புக் கல்லுப்பாகும், கானானகாய்ச்சுப்பு கெர்தியுப்புக் கருவான அட்டுப்பு பாறையுப்பு, வேனானபடிகாரம் வெண்காரந்தான் விதர்ப்பானபெரிகாலவுப்புமாமே. ௬௬௧

உப்பானமேனியிட வுப்புமாகும் ஒளிவானபூநீறுமுப்புமாகும், வைப்பான துருசுடனே துத்தமாகும் மார்க்கமுடனிதுவெல்லாமொன்றாய்க்கூட்டி, மெப்பானகல்வமதிலிட்டுமைந்தாமேன்மையுடன் சமனிடையாய்நிறுத்துப்போடு, ஒப்பானமேனியிட மூலிச்சாற்றால் ஒங்குபெறத்தானரைப்பாய் சாமமெட்டே. ௬௬௨

எட்டானசாமமது வரைத்தபோது வெழிலானபில்லையது செய்துகொண்டு, மட்டானவகலில்வைத்துச் சீலைசெய்து மயங்காமல் ரவிதனிலேகாயவைத்து, திட்டான கோழியென்றபுடத்தைப்போடு தீயாறி யெடுத்துப்பார் சிவப்போகொஞ்சம், வட்டானபில்லையது கல்வமிட்டு வளமுடனேமேனியின் சாற்றாலாட்டே. ௬௬௩

ஆட்டவென்றால் மேனிச்சார் புடமோபத்து அப்பனே முன்போலப்புடத்தைப்போடு, வாட்டமுடன் புடமதுவுந்தீர்ந்தபின்பு வாகான குமரியிடச் சாற்றாலாட்டு, ஏட்டமுடன் பத்துபுடம் குமரிச்சாற்றால் நலமுடனேபோட்ட பின்மைந்தாகேளு, நீட்டமுடன் கையானின்சாற்றாலப்பா நினைவாகப்பத்துபுடம் போட்டிடாயே. ()



போடவேமுப்பத்தும்தீர்ந்தபின்புபொங்கமுடன் புளியாரைச்சாற்றால்மைந்தா, கூடவேபத்துபுடம் முன்போல்போடுகுறையாமல் கோழியென்றபுடமேயாகும், நீடவே நொச்சியிலையின் சாற்றாலாட்டி நீட்டமுடன்பில்லையது செய்துகொண்டு, வாடவே சில்லிட்டுச்சீலைசெய்து வளமாகமுன்போல பத்துபுடம்போடே. ௬௬௫

போட்டவுடன் பில்லையது சிவப்புமெத்த போங்கான வுப்புடனே ரூதஞ்சேர்த்து, வாட்டமுடன்வாறுவகை செயநீர்தன்னால்வளமாகத்தானரைத்துப்பில்லைதட்டி, நீட்டமுடன் ரவிதனிலே காயவைத்து நேர்புடனேசில்லிட்டுச் செய்துகொண்டு தேட்டமுடன்கோழியென்ற புடத்தைப்போடு தெளிவானசெந்தூர மாகுந்தானே. ()

தானானசெந்தூரம் வெள்ளிசெம்பில் தாழ்மையுடன் பத்துக்கு வொன்றுபோடு, மானானகரியோட்டில் ஊதிப்போடு மயங்காதேவெள்ளியென்றயிடைதான்காணும், வேனானசெம்பதுவும்நீங்கியல்லோ விரைவானவெள்ளியது பசுமைகாணும், போனான குருவருளை சதாநித்தந்தான் குணமுடனேபோற்றிசெய்து வாழ்நுவாயே. ௬௬௭

வாழ்கவென்றாலின்னமொரு கருமானங்கேள் வாகானசெந்தூரமண்டலந்தான், நீழ்க்வென்றால் தேகமதுவுளுப்புராது நீணிலத்திலெப்போதுமிருக்கலாகும், தாழ்கவென்றால் தேகமதுமழியாதாகும் சதாகாலம் கற்பமுண்டோர்க் கொப்பாவார்பார், சூழ்கவென்றால் தயிலமதுசெப்பக்கேளும் முனையானபாகமது வுரைப்போம்தாமே.

காயகற்பத்தயிலம்.

தாமேதான்வெள்ளெண்ணைப் படிதானென்றுசரியான முத்தெண்ணைப்படிகாலென்று, காமேதான் பசுநெய்யும் படிதானென்று கருவானவழிஞ்சியிட தயிலம் கால்தான், வேமேதான் விராலியிட தயிலமப்பா வீரானசிவனாரின் தையிலம்கால்தான், காமேதான் வாலுழுவைத்தயிலங்கால்தான் நலமானகருஞ்சீரந் தயிலங்கூட்டே. ()

கூட்டவே மூலிவகைசொல்லக்கேளும் கொடிதான வேலியிட மூலிச்சாறும்,நீட்டமுடன் தைவேளைச்சாறுங்கூட்டிநெடிதானகுமரியிட்ச்சாறும்சேரு, காட்டமென்றவல்லாரைச்சாறுஞ்சேர்த்துக் கருவானகையானின்சாறும்கூட்டு, தேட்டமென்ற பொடுதலையின்சாறுங்கூட்டித் தெளிவான ஆதண்டைச் சாறுசேரே. அஉ

சேர்க்கவேசாறென்றுநாழியாகச் சேர்பெறவேதானிடி,களில்ச்சேர்த்து, ஏர்க்கவேயெண்ணையுடன்தான்கலந்து வெழிரமுப்பு

கைசொல்லக்கேளு, பார்க்கவேகடுக்காயுந்தான்றிக்காயும் பண்பான மாசியென்றகாயுங்கூட்டி, மார்க்கமுடன்மிளகுடனே நெல்லிக்காயும் மதிப்பான தேசாரமோமங்கூட்டே. ௯௭௧

ஓமமுடன்கற்கடக சிங்கியப்பா வுத்தமனே கஸ்தூரிமஞ்சளப்பா, நேமமென்ற செம்பூரான்பட்டைதானும் நேத்தியாய் பூலாவின் கிழங்குகூட்டி, தாமமென்ற கோஷ்டமென்னுஞ் சார்துயூரல் தனியானவேப்பரிசி யிருசீரங்கூட்டி, நாமமென்ற அகிற்கட்டை சந்தனமுஞ்சேர்த்து நலமுடனேதானரைப்பாய் பசும்பாலுதாமே. ௯௭௨

பாலானசரக்குகளில் பலமொன்றதாகப் பாகமுடன் ருனரைப் பாய்சரக்கெல்லாந்தான், மேலான வெண்ணைதனில் கலாவிட்டு விருப்பமுட்னடுப்பேற்றி தானெறிப்பாய் நூலானனூற்படியே முறைபோல்காய்ச்சி நனுக்கமுடன் மெழுகுபதமிரக்கியப்பா, சேலானசெம்பதமாவடித்துமேதான்,செய்வையுடன்தாளிதனையிறக்கிடாயே

இறக்கிடவேகாலங்கிதனைகினைந்து வென்மகனே சிஷாவிலடக்கஞ்செய்து,முறக்கமுடன் தயிலமது முழுகிவந்தால் மூட்டோடேவியாதிகளுமற்றுமேதான், திறக்கமுடன் கண்ணிரண்டும் வரிதிகூசா தெளிவுடனேவருந்தாதிபகலிற்றேன்றும், சிறக்கவே போகரிஷி பலனூல்பார்த்து சிறப்புடனே பாடிவைத்தேன் புவியுள்ளோர்க்கே. ()

மூடருக்கோதியபுத்தி.

புவியானமாந்தர்களில்கருவாளியுண்டு புத்தியுள்ளான்கண்டறிவான்திறப்புமாற்கம், கவியானபாடல்களின் மறைவுகாணுன்கண்டவன்போல்பேசுவான் கழுதைமாண்பன், நபியான கடவுளுக்கொப்பாஞ்சித்தர் நவின்றிட்ட னூல்களையேபழிப்புஞ்சொல்வான், அபிமானமில்லாமல் திட்டிப்பேசி யழிந்திடுவான்படுநரகில் பாவியாமே. ()

பாவியா முழுமூடப்பாவியப்பா பரிசுத்தவான்மாலைப் பகடிசெய்வான், காவியங்களுள்ளதொரு மறைப்புகாணுன் கண்டறிந்துகற்றவன்போல் பினத்துவான்பார், ஆவியுடன்தானடங்கும்வழியுங்காணுன் அகற்கப்பால் கடந்ததொரு ஞானிபோல, சாவியென்னும் பேய்பாக்கியத்தை கைவிடாமல் சதாகாலம் காசுபணப்பிசாசியாமே. ()

வாகா

ணங்கொண்டபாவியவன் மிகவும்பேசி பாங்கியர்மேலெண்ண

ரிச்சாற்ருல

ங்கொண்டு, பிணம்போல பிரண்டுழுதுபோவான்பாவியின்

கையானின்க

காணமாட்டான்பேடிமாண்பன்,மனங்கொண்டபெரியோ



ரைதூஷித்தேதான்மார்க்கமெல்லாங்கண்டவன்போல்அதிதப்பேச்சு குணமில்லாச்சண்டாளப்பாவியாவான் குடிகெடுத்துவெகுபேரைச்சுடச்சொல்வானே. ௯௭௭

சொல்வானே சித்தர்கள்மேல்தோஷஞ்சொல்வான்சுருதிமுதல் சூத்திரங்கள்குற்றஞ்சொல்லிவெல்வானேவெகுவாகப்பேசிப்பேசி வீணகதையாஞ்சாத்திரங்கள் பொய்யேயென்பான், புல்லானேசித்தர் முனிகைமறைப்பைபுத்தியுடன்படியாமற்ருறுமாருய், தொல்லுலகில் பாடல்முறையொன்றிருக்கசுட்டுகெட்டு நூலைமிகத்தப்பென்ருனே.

தப்பென்றுசொன்னதொருபாவிகட்குதப்பாமல்சிரசதுவும்வெடித்துப்போகும், ஒப்பமுடன்சித்தர்முனி நூல்கள்தானும் மொருக்காலும்பொய்யாது மெய்யேயாகும், செப்பரியரிஷிகளெல்லாம் நூல்கள்கோர்வைதேசத்தில் மானிடர்கள்பிழைக்கவென்று, மெய்பமுடன்ருமுரைத்தாருண்மையாகமேதினியில் மார்க்கர்கட்காயுரைத்திடாரே. ௯௭௯

உரைத்திட்டேன் போகரிஷி நூல்கள்பார்த்தால் ஒகோகோயாதொன்றும்பொய்புமாகா, நிரைத்திட்டேன் கோர்வைகளினைந்தஞ்சொன்னேன்நீடூழிகாலம்வரை நூலைப்பார்த்தால், குறையொன்றும் வாராதுபோகர் நூலில்குறைசொன்னுலப்போதேதலைகான்போகும், முறைபோலசெய்துமிகமுறையைப்பார்த்து மோசம்லரில்தோஷமதுமிகசொல்வீரே. ௯௮௦

சித்தர்கள் நூல்பார்க்கத்தொகுப்பு.

சொல்லவென்றால் நாவேதுயாவுமேது சூட்சமுடனின்னமொருவிபரங்கேளு புல்லவே வகஸ்தியனுர்சதுர்காண்டத்தில் பூட்டினுர்கருமானவுளவுமெத்த, வெல்லவேகாண்டம் பன்னிரண்டு காண்டம் விபரித்தார் பன்னீராயிரத்தில், மெல்லவேகொட்டிவிட்டார் கோடிபாணம்மேதினியிலாரறிவா ரன்னூல்தானே. ௯௮௧

தானேதான்சாத்திரத்திலெண்ணூர்கண்டேன் தனியானகாலுமறுநூறும்பார்த்தேன், மானேதான்காவியங்கள் வைந்தும் பார்த்தேன்மகத்தானவெண்ணூறுயதீதம்பார்த்தேன், வேனேதான்சௌமியங்களெட்டும்பார்த்தேன்வேதாந்தக்காவியங்களாறும்பார்த்தேன் தேனேதான் பலதிரட்டுக்கோர்வை நாலுந்தெளிவானசாலமதுஎட்டுவெட்டே. ௯௮௨

எட்டானதிருமந்திரம் நாலுகோர்வை கட்டான தீட்சைகளில் பத்துகோர்வைகருவாஞ்மாந்திரிகம்கோர்வைபத்து, வட்டானமுப்பு

வகை சாத்திரம்நூறு யசிப்பானவயித்தியத்தில்கோர்வைநூறு, திட்டானசொச்சசூத்திரத்தின்கோர்வைதிரட்டுதனில்நூறவகை பார்த்திட்டேனே. ௯௮௫

பார்த்திட்டேனிதுகளெல்லாஞ்சேர்த்துமல்லோபாடிவைத்தார் பாடல்களுமிரண்டுலட்சம், சேர்த்திட்டமூலாதாரத்தின்கோர்வை சிறப்புள்ள கோர்வையிதுகாரணங்கள், மார்த்திட்டவின்னமனேகங்கள் கோர்வைமார்க்கமுடன்பாடிவிட்டார்லெட்சமப்பா, பூர்த்திட்டமானகருமானமெல்லாம் புகழுடனேகண்டு தெளிந்தாராய்ந்தேனே.

ஆராய்ந்தேன்தன்வந்திரிநூலைக்கண்டேன் ஆகமங்கள்காவியமாமைத்துங்கண்டேன், பூராயமானதொருகாண்டம்நாலுபுகழானகோர்வையதுபதினாறாகும், தோராயமுள்ளதொருகிரந்தம்நூறு தொகுப்புடன் பாடல்வகை யிரண்டுலட்சம், நேரானசில்லரையி லனந்தங்கோர்வைநெடிதானதொகுப்புகளிலட்சமாமே. ௯௮௬

லட்சமுடனின்னம்வெகுபோக்குநூலாம் லக்கில்லைகணக்கில்லைமெத்தவுண்டு, பட்சமுடன்வவர்நூலில் பலவாங்கோர்வை பார்வையிட்டேன்வெகுகோடி நூல்களப்பா, மச்சமுனிசாத்திரங்கள்தொகுப்புச்சொல்வேன்மார்க்க மென்றமெண்ணூறளட்டுகோர்வை, சொச்சமென்ற சூத்திரங்கள்யிருநூறாகும் சருதிமுதல்பெருநூலாயிரந்தானாமே. ௯௮௭

காலானகாண்டமதுயெட்டுமாகும்கலமானகோர்வையதுபதினாறாகும், வாலானசிறுநூலாம் கோர்வைநூறு வகுப்பானதிரட்டுநூல் முப்பத்திரண்டு, சேலானஞானனூல்யிருபத்தினாலு சிறப்பானகாவியங்களெட்டுமாகும், நூலானனூல்களிது பலனூலாகும்நானுக்கமுடனாராய்ந்தேன்போகர்நானே. ௯௮௮

நானானசட்டமுனி னூல்கள்பார்த்தேன் நயமுடனேபெருனூலாமெட்டுகோர்வை, வேனானதிரட்டுகளில் கோர்வைபத்து வெளியானதீட்சைகளில் கோர்வைனூறு, பானானபாடல்களுமொன்று தவக்கிப்பாடினார் வெகுனூல்கள்வனந்தமார்க்கம், தேனானயிருனூறுயெட்டுசொன்னார்தெளிமையுடன்கருவூராருரைத்தார்பாரே. ()

பாரேதான்முன்னூறில்நாலுகோர்வை பாங்கானதிரட்டுகளில் யெட்டுகோர்வை, நேரேதான்காவியத்திலிரண்டுகண்டேன் நெடிதானசூத்திரத்தில் பத்துகோர்வை, மேரேதான்தீட்சைகளில் சோடசமுமாகும் மேலானசுருக்கமது கோர்வையிருபத்து, தீரேதான்சின்னனூலனந்தங்கோர்வை திறமுடனே கண்டேனேவதிதங்கள்தானே.



தானானரோமரிஷிநூல்கள்கண்டேன்தரக்கானபரிபாஷைகோர்வைநாலு, மானானபெருநூல்காவியங்களெட்டு மார்க்கமுடன்திரட்டுகளில்பதினாறாகும், வேனானதீட்சைகளில்யெட்டுக்காண்டம்வெளியானகாண்டத்துக்காயிரந்தான், பானானபலதிரட்டுபத்துக்கோர்வைபாடிவிட்டார்சில்லரையில் முந்நூறாமே. ௯௯௦

முந்நூறாங்கோர்வைகளிலனந்தஞ்சொன்னார் முனைதானதிரட்டுளில்கோர்வைபத்து, நந்நூறாம்கோர்வைகளில்நாலுகோர்வை நலமானதீட்சைகளில்பத்துக்கோர்வை,பந்நூலாம்சாத்திரங்கள்பலவுஞ்சொன்னார் பாடிவிட்டார்வெகுகோடி யனந்தமார்க்கம், அந்நூலுங்கண்டுதெளிந்தாராய்ந்தேதான் அன்புடனேபாடினே னேழாயிரந்தாமே ௯௯௧

தாமேதான்கொங்கணவர்நூலைக்கண்டேன் தாறுமாறாகவல்லோபாடிவிட்டார், போமேதான்பெருநூலுயெட்டுகண்டேன் பொங்கமுடன்தீட்சைநூல்பத்துகண்டேன், வேமேதான்கடைக்காண்டம்நாலுகண்டேன் மிக்கானதுக்காண்டமொன்றுகண்டேன், காமேதான்கண்டபடியாருங்காணார்நலமுடனேயின்னம்பலசித்தர்தாமே. ௯௯௨

சித்தானபுண்ணாக்கரனேகஞ் சொன்னார் சிறப்பானகமலமுனியனேகஞ்சொன்னார், முத்தானபுலத்தியருமனேகஞ்சொன்னார்முனையானசிவவாக்கியரனேகஞ்சொன்னார்,சுத்தானசுந்தரானந்தரனேகஞ்சொன்னார் சருதிமுதல்பெருநூலங்கண்டேன்யானும், சித்தானவிராமமுனியனேகஞ்சொன்னார் நீடுழிசாத்திரங்கள்கண்டிட்டேனே. ௯௯௩

கண்டிட்டேன்யாக்கோபுநூலுங்கண்டேன்கருவானடமாரனார் நூலும்பார்த்தேன், தண்டிட்டவரரிஷிபார்நூலும்பார்த்தேன்துரைராஜர்வேதமுனிநூலும்பார்த்தேன், கொண்டிட்டவள்ளுவனார்நூலுங்கண்டேன் கூரானசுந்திபுடநூலுங்கண்டேன், வெண்டிட்டசதானந்தர்நூலும்பார்த்தேன்வெளியானபிரமமுனிநூல்பார்த்தேனே. ௯௯௪

பார்த்தேனேயின்னம்வெகு சித்தர்நூலும் பலபலவாங்கண்டதிந்தேனுனுக்கந்தன்னை, தீர்த்தேனேவெகோடிருஷிகள்தாமும் திறமுடனேவனேகநூல் பாடிவிட்டார், சேர்த்ததொருபதினெண்பேர்சித்தர்தாமும் சிறப்புடையநூலெல்லாம்தெளிந்துபார்த்தேன்,சேர்த்தியுடன் காலாங்கிபாதம்போற்றி நேர்மையுடன்பாடினேன் யேழாயிரந்தானே. ௯௯௫

தானானகாவியர்தான் சத்தகாண்டம் தயவுடனேயேழுலட்சங்
கிரந்தந்தன்னை, வேனான நூல்பார்த்துவுளவுகண்டுவிருப்பமுடன்பா
டிவைத்தேன் ஏழுகாண்டம், மானான மறைப்புமுதலில்லாமற்றான்மா
ற்கமுடன் மனிதர்பேரில்பட்சம்வைத்து, கோனான குருவருளால்காலா
ங்கிதம்மைக் துதிப்புடனேசரணமிட்டுப்பாடினேனே. ௬௬௬

பாடினேன்நாலுயுகவதிசயங்கள்யாவும் பார்வைக்குவெளிமை
தனில்காண்பதற்கு, நீடியதோர்கருவெல்லாம்காணவென்றுநேர்மை
யுடன்சினபதியானுஞ்சென்று, கூடியதோர்விளையாட்டுவெலலாம்பா
ர்த்துக்கூறினேன் வெள்ளையென்றமார்தருக்கு, தேடியயலையாமற்
பொருள்களெல்லாம்திரவியங்கள்கிட்டுதற்குமொழிந்திட்டேனே. ()

மொழிந்திட்டேன்யேழாயிரக்கோர் வை னாலில்முறைப்படியே
யாம்சொன்னவதீதமார்க்கம், பழிந்திட்டசித்தர்களும்சொல்லவில்லை
பாரினிலேசொன்னாலுங்காணமாட்டார், வழிந்திட்டசூத்திரங்கள்கை
மறைப்புவளமுடனேபாடிவைத்தேன்மார்தற்காக, குழிந்திட்டசூட்
சாதிசூட்சமார்க்கம்குறையாமல்பாடிவைத்தேன்பண்பதாமே ௬௬௮

பண்பானயேழாயிரக்காவியந்தான் பானிலேசித்தர்முனிரிஷிக
ள்தாமும், கண்பாகமெய்ச்சியல்லோவதீதஞ்சொன்னார்நாதாக்கள்கை
மறைப்புநடுவீதியாச்சு, திண்பான நூலதனைகுகைக்குள்வைத்துசிறப்
புடனேபூசையதுமிகவுஞ்செய்தார், கண்பானபெருநூ லேழாயிரந்
தான் கனமுடனேசித்தரெல்லாம் விரும்பிட்டாரே. ௬௬௯

விரும்பவேகாண்டமது யேழுஞ்சொன்னேன் வெளியாகக்கரு
வெல்லாம்திரந்துபோட்டேன், துரும்புமுதலொளிக்கவில்லைசினத்தா
ற்கு துப்புரவாயுரைத்துவிட்டேன் பட்சம்வைத்துகரும்புபோலே
ழாயிரக்காவியந்தான்கருத்துடனேபாடிவிட்டேன்மார்தற்கப்பா, அ
ரும்பொன்மணிதனைப்போல்விரண்டாங்காண்டம் அப்பனேமுத்து
மதுமுற்றதாமே. ௰

போகர் சத்தகாண்டம்-யேழாயிரத்தில்

௨-வது காண்டம் முற்றுப்பெற்றது.

---

உ

கடவுள் துணை.

மஹாமகுத்துவம்பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# சத்தகாண்டம்-௭௲.

## மூன்றுவது காண்டம்.

### காப்பு.

அண்டபராபரமானமுதலேகாப்பு
அடியேனுங்காலாங்கிநாயர்பதங்காப்பு
புகன்றுநின்றகாலாங்கிகுருப்தமேகாப்பு
புகழானவல்லமுனிசித்தர்பதங்காப்பு
தகன்றபெரியோர்ஞானிதாள்பதமேகாப்பு
சதாசிவத்தின்சுடரொளியேதனிப்பதமேகாப்பு
நிகன்றசத்தகாண்டமதுயேழாயிரந்தான்
நிகழ்த்தினேன்மூன்றுவதுகாண்டமிதுதானே. ௧

தானானகாண்டமிது மூன்றுங்காண்டம்சதுர்யுகத்து வதிசயங்
கள்சாற்றலாகும், கோனானயென்னையர்காலாங்கிநாதர் கூறினார்திரே
தாயுகத்தினதிசயத்தை, வானானகாலாங்கிராயருக்குவ்யதல்லோவை
க்துரண்டுபத்துமாச்சு, தேனானயென்னையர்குருவாமையர் திரேதா
வினதிசயத்தைச் செப்பினாரே. ௨

செப்பினார்காலாங்கிகுருவாமையர் சிறந்ததொரு குளிகையது
பூண்டுகொண்டு, ஒப்பமுடன்கடலேழும்சுத்திவந்து ஓங்குபெறகை
லங்கிரிகாணவென்று, மெப்புடனேகைலங்கிரியாதிபீடம் மேன்மை
யுடனடிவாரத்தண்டைபக்கம்கொப்பெனவேகுளிகைகொண்டுயிறங்
கினாராம்கோடானகோடிமுனிரிஷிகண்டாரே. ௩

கண்டவுடன்ரிஷிகளெல்லா மோடிவந்து கடுகெனவேவதிசயித்துக்காணவந்தார், தெண்டனிட்டுயடிபணிந்து தாழ்ந்திட்டாராம்திறமானசித்துதனைக்கண்டபோது, அண்டமுனிராட்சதன்போல்சித்தர்கூடம்அங்கனவேகாலாங்கிகுருவைக்கண்டு, விண்டபடிசொரூபமென்றுசித்துதன்னைவிபரமுடன் கேட்டாராம்சித்தர்தாமே. ௪

தாமானசித்தர் முனிகேட்கும்போது சதாசிவமுந்திடுக்கிட்டு மனங்கலங்கி, நாமானகாலாங்கிகுருவாமையர்நாதாக்கள்சித்தர்களைக் காணவென்று, வேமானகுளிகைகொண்டுவந்தேன்சாமி வெகுகாலம் கோடிவரை தம்மைக்காண, காமானவார்த்தைதக்குச் சந்தோஷித்துக் கருத்துடனேநல்வார்த்தையுரைத்திட்டாரே. ௫

நவகண்டரிஷியைக்காலாங்கிகுருகண்டது.

உரைக்கையிலேநவகண்டரிஷிகள்தானும் வுயர்நாகமலையினது யடிவாரத்தில், திறக்கமுடன்சமாதியதுநிலையும்பண்டார் திறலானநவகண்டரிஷியுங்கண்டார், சிறக்கமுடனவகண்டரிஷியாசிரமம்சென்றுமெங்களையர்குருவாந்தேவர், இறக்கம்வைத்து வவரெனக்குவுபதேசங்கள் யெழிலாகத்தானுரைத்தார்கண்டார்தாமே. ௬

கண்டமாமுனிபோரும்வுபதேசிக்க காலாங்கிகுருதானும்களிப்புகொண்டு, மண்டலமெல்லாம்புகழும்நவகண்டதேவர் மார்க்கமுடனெந்தனக்குவநீதஞ்சொல்வீர், விண்டலத்தினதிசயங்கள் யாவுஞ்சொல்லிவேதாந்தத்தாயினதுரூபஞ்சொல்லி, கொண்டனைத்துவெந்தனுக்குருறைவைத்தீர்த்து கோடியுகங்காணவெனக்குறைதீர்ப்பீரே.

தீர்க்கவென்றுகேட்டவுடன்நவகண்டர்தாமும்திரளானநாலுயுகமதிசயங்கள்யாவும், பார்க்கவேயெடுத்துரைத்தார் குருநாதர்க்குபாங்குபெறயாவற்று மறிந்துகொண்டார், ஆர்க்கவேயென்னையர்காலாங்கிநாயர் அவருடையவிசுவாசவருளும்பெற்றார், மார்க்கமுடன்யென்னையர் ஞானம்பெற்று மாநிலத்தில் வெகுகாலம் யிருந்திட்டாரே. ௮

இருந்தமுனிகாலாங்கி வெகுகோடிகாலம் யெழிலானவித்தைகளுமற்புதங்கள்செய்தார், குருந்தமுடன்யெந்தனுக்கு ஞானவுபதேசம்கூறினார் சங்கற்பமனந்தம்பேர்க்கு, திருந்தவேவுபதேசமானபின்புநீரமுடன்சமாதிக்குயேதுகொண்டார், பொருந்தவேயடியேனும்வுபதேசம் பெற்றுபுறப்பட்டேன்சீனபதிதேசர்தானே. ௯



தேசமாமின்னம்வெகு தேசமெல்லாம் சிறப்புடனே குளிகையதுபூண்டுகொண்டு, ஆசையுடன்சத்த சாகரமுங்கண்டேன் அன்பாகப்பாடிவிட்டேன் சத்தகாண்டம், பூசையுடன் யேழாயிரக்காவியத்தை புகட்டினேன் லோகத்துமாந்தர்க்கப்பா, யாசையுடன்பரிபாஷையில்லாமற்றான் பாரினிலேபாடிவிட்டேன் பண்பதாமே. ௧௦

போகர்பாரிஷ்தேசம்கண்டது.

பண்பான குளிகையது பூண்டுகொண்டேன் பாங்கான பாரீசபதியைக்கண்டேன், திண்பான பச்சை யென்றமலையைக் கண்டேன் திகழானகந்தருவர் மனிதர்கண்டேன் நண்பானமனிதற்கு ரெக்கையுண்டு நாதாக்கள் குளிகைகொண்டு பறந்தாற்போல, கண்யானகந்தருவர் மாந்தரப்பா கடையானமலை மீதிலிருந்தார்பாரே. ௧௧

பார்த்தேனே கந்தருவர் தன்னைக்கண்டேன் பாருடனே யவர்பக்கல் சென்றயானும், நேர்த்தியுடன் மேலோகவதிசயத்தை நேர்ப்புடனேயானுமல்லோ கேட்டேன் மைந்தா, தீர்த்தமுட னிந்திரனார் கொலுச்சிறப்பைத்திறமுடனே யெந்தனுக்குத்தாமுரைத்தார், சார்த்தமுடன் அம்மலையில்சுனையுமுண்டு சட்டமுடன் சுனையோரஞ்சென்றிட்டேனே. ௧௨

கொங்கணரைக்கண்டது.

சென்றேனே சுனைகண்டேன் குகையுங்கண்டேன் சிறப்பான கொங்கணவர் பதியுங்கண்டேன், குன்றானமலையோரம் சமாதியுண்டு கூட்டமுடனங்கிருந்தார்சித்தர்கூட்டம், பன்றானபூசையதுஆசிரமத்தைப்பாங்குடனே கண்டுவிட்டேனடியேனப்பா, வன்றானதிரேதாயினுகத்திலப்பா வர்க்கமுடனெல்லவரும் பிறந்தார்தாமே. ௧௩

தாமான வர்க்கத்தோரனேகருண்டு சார்புடனே யவர்களிடம் சென்றயானும், காமானவஞ்சலிகள் மிகவுஞ்செய்து நடுக்கமுடனிற்கையிலேயடியேன்றன்னை, பூமானசித்தர்முனிகூட்டத்தார்கள்புத்தியுள்ளபாலா நீயாரென்றார்கள், காமான காலாங்கிதனைநினைந்து கர்த்தனிடசீஷனென்று வுரைத்திட்டேனே. ௧௪

உரைத்துமேயென்பேரு போகரென்றேன் வுறுதியுடன் சீனபுதிபோயிருந்தேன், திரைகடல்களேழுவரை சுத்திவந்தேன் தேசாதிதேசமுள்ள சித்தர்தம்மை, வரைமுறைகள் தப்பாமல்கண்டுவந்தேன் வளமுடனேகுளிகையதுவலுமையாலே, இரையவனார் கொங்கணவர் பாதங்காண யெழிலுடனே வந்திட்டேன் பாரிஷ்தானே. ௧௫

தானென்று சொல்லுகையில்சித்தர்கூட்டம் சடுக்கெனவேகொ ங்கணவர் பக்கஞ்சென்று, தேனான சமாதியிடம்வாசற்பக்கம் தே வாதிதேவருட சமாதியோரம், கோனான குருவான சாமிபாதம் குறி ப்புடனே யெல்லோருங் கூட்டமிட்டு, பஃனான காலாங்கிநாயர் சீஷர் பட்சமுடன் தன்பாதம் வந்திட்டாரே. க௬

வந்தாரேபோக ரிஷிபாலன்றானும் வண்ணமுடன்றுமுரைத்தா ர்சித்தரெல்லாம், அந்த முடனவர்சொல்ல கொங்கணவர்தாமும் அன்பான காலாங்கிபேரைக்கேட்க, சந்தோஷமுண்டாகி சமாதி தன்னில் சட்டமுடன் வருவதற்கு விடையுஞ்சொன்னார், கந்தருவர் போலவல்லோக் குளிகைபூண்டு கர்த்தரிடம் சென்றேனே போகர் நானே. க௭

போகரென்று சொன்னேனே யடியேனுந்தான் பொங்கமுட னெந்தனுக்குத்தீரமாகி, ஆவலுடன் கொங்கணவர் பாதம்போற்றி அப்பனேசரணமென்றுபணிந்திட்டேன்யான், காவலுடன்தான்கட ந்து வந்தபாலா பாரினிலே சித்தரப்பா ரிஷிகள்கோடி, சாபமுடன் னுந்தனையும்சபிப்பாரப்பா சாக்கிறதையவர்களிடம் சார்பாய்நில்லே

நிற்கையிலே வுத்தாரமெதிர் சொல்லாதேநிறைகுறைகள் நேர்ந் தாலும்பதரிடாதே, சிற்பரனார்காலாங்கிதனைநினைந்து சிருடனேயவ ர்களுக்குத் தொண்டுபண்ணி, அற்புதங்கள் யாவனைத்துங் கண்டறி ந்துஅவர்களிடம் விசுவாசமருளும்பெற்று, சற்பனையோடெக்காளுங் காலாங்கிதம்மைச் சதாகாலம் கருத்தினிலே நினைத்திடாயே. க௯

நினைக்கையிலே யெண்ணமெல்லாஞ் சித்தியாகும் நீடூழிகாலம் வரை யிருக்கலாகும், உளைப்புகழ்வார் லோகத்துமாந்தரெல்லாம் ஓ கோகோநாதாக்க ளிவர்போலுண்டோ, முனையான காலாங்கிசீஷனெ ல்லோமூதலகில் பேர்கொண்டசீஷனென்பார், இனையளவுயாம்சொ ன்ன வுபதேசங்கள் தீர்க்கமுடனென்னாளுங் கொள்ளுவீரே. உ௦

கொள்ளவென்றுவின்னமொரு வுபதேசங்கள்குவலயத்தில் யா ம்சொல்வே நுந்தமக்காய், விள்ளவே யெமைப்போல யாருஞ் சொல் லார்மேதினியில் யாமுரைத்தோம்பட்சம்வைத்து, உள்ளபடி ஞான வுபதேசமெல்லாம் வூடுருகவெந்தனுக்கு ஓதித்தேதான், எள்ளளவு யிடையூறுவாராமற் றனெந்தனுக்கு வரமதுவுங் கொடுத்தார்பாரே.

சீனபதிக்குவந்து கமலமுனிக்கு கொங்கணர்பிரஸ்தாபம்சொன்னது.

பாரேதான் சீனபதிதன்னில்வந்து பட்சமுடன் கமலரிடம்வந் தேனப்பா, சீரேதான்கமலருக்குவடியேன்தானும் சிறப்புடனே கொ



ங்கணவர் செய்திசொன்னேன், நேரேதான்கமலருமேசந்தோஷந்தா ர்நேர்மையுடன் விடைபெற்றுப் பதிக்குள்வந்தேன், லேரேதான் வி ஞேதங்கள் வதிதஞ்செய்தேன் மிக்கானசீனபதிக் குள்ளேதானே.()

சாரக்கட்டு செந்தூரப்போக்கு.

தானனவின்ன மொருமார்க்கங்கேளு தயவாகச் சொல்லுகிறே ன்மாணாக்கற்காய், பாலானசாரமது கட்டிவாங்கிப் பக்குவமாய்ப்பு டம்போட வரிசைகேளு, தேனான சீனமதுவொன்றேயாகும் தெளிவா னகாரமது வொன்றேயாகும், வேனான யிந்துப்புவளையலுப்பு வெடி யானவுப்பதுவு மொன்றுய்க்கூட்டே. உ௩

கூட்டவேசிப்பி யென்றசுண்ணந்தானும் குணமானபூநீறு வொ க்கச்சேர்த்து, நீட்டமுடன்வெண்கரு வாலரைத்துமேதான் நில்லயா னசாரமதுக்கங்கிபூட்டி, வாட்டமுடன்ரவிதனிலேகாயவைத்து வள மாகசீலையதுவலுவாய்செய்து, நாட்டமுடன்குழிவெட்டிமணல்தான் கொட்டி நலமாகப்புடம்போடப் பத்துமாமே. உ௪

பத்தானபுடமதுவு மிந்தபாகம் பாகமுடன் முன்போலப்போ ட்டுத்தீரு, புத்தானசாரமதுகட்டிப்போகும் போக்கானபுகையதுவு மடங்கியேதான், தத்தானதந்தம்போலாகும்பாரு மகத்தானசார மிது சித்தர்வேதை, சித்தான செந்தூரமென்னசொல்வேன் சிவன் தானு மாயிக்குத்தான் சொன்னாரே. உ௫

சொன்னவுடனாயிதானும் காலாங்கிக்குச்சூட்சமுடன்தானுரை த்த காலாங்கிதாமும், நனையமாய் யெந்தனுக்குச் சொன்னபாகம் நாட்டிலேஎாதாக்கள் கூறவில்லை, பொன்னான செந்தூரம் மார்க்கங் கேளு புகழானசாரமது கட்டிக்காப்பா, மன்னானபொன்னுவரையின் மூலி மயங்காமல்தேங்காய்போல் கவசஞ்செய்யே. உ௬

செய்யவேசிலையது செய்துபின்பு செழிப்புடனே ரவிதனிலே காயவைத்து, பையவேதளவாயின்சட்டிமேலே டாங்குபெற வுப்பத னைக்கொட்டிமைந்தர், மையவேகட்டி நடுமையம்வைத்து மறுவாம லுப்பதனை மேலேகொட்டி, மூய்யவேமேல்சட்டி தொண்டுமூடி மூசி யாமல் தானெரிப்பாய் சாமமெட்டே. உ௭

எட்டானசாமமது யெரிக்கும்போது யெழிலானசாரமதுசிவப் புயேறி, திட்டானகட்டியதுசிவந்துகாட்டும் திறமுடனேகவசமதுதி றந்துபாரு, மட்டானசிவப்புடனேமங்கல்காட்டும்மார்க்கமுடன்கட்

டித்தனைகாற்றில்வைநீ, கட்டானசெந்தூரம் பூர்த்துக்காட்டும் கடுஞ்சுறுக்கு வேதையிதுவோடுமாமே. ௨௮

ஓடவேசெந்தூரம் பதனம்செய்து வுத்தமனே செம்பதனில்தாக்கும்போது, கூடவே களிம்பதுவுமிகவுநீங்கி குணமுடனே மாற்றதுவுமெட்டதாகும், நீடவேபழுப்பான பொன்னுங்காணும் நேர்மையுடன் பத்துக்கு ரெண்டுவெள்ளி சாடவேதானுருக்கி வாரடித்துச் சட்டமுடன் புடம்போட பசுமைகாணே. ௨௯

காணவே சுடரொளியின் பசுமைதங்கம்பாருலகில் சித்தரல்லால் ஆர்செய்வார்கள், பூணவே கருவாளியாகவேண்டும் புத்தியுள்ளான் பாக்கியவானாகவேண்டும், மாணவேசாத்திரங்கள் கற்றோர்காண்பார்மடையனே வாய்வீணன் காணமாட்டான், நாணவே கல்லொழுக்கனாயிருந்து நாதாக்கள்கிருபையது பெற்றோர்தாமே. ௩௦

பெற்றாலும் பேரின்பம் பெறவேவேண்டும் பேடிபோல் மண்ணாசைபெண்ணாசைதன்னை, அற்றவர்க்கே லகிரியானந்தம் வாய்க்கும் ஆனந்தபாஞ்சுடருங் காணலாகும், மற்றுமொன்று மில்லை வையந்தன்னில் மயங்கினாலொன்றுமேகாணமாட்டார், பற்றற்ற ஞானியாயிருந்தாயானால் பாருலகில்சர்வசித்து மாடலாமே. ௩௧

ஆடலாஞ் சாரமென்றகட்டியாலே அப்பனேகட்டினதோர் சாரந்தன்னை, கூடவேசாரத்துக்குறுதிகேளு குணமுடனே சாரணைகள் செய்வாயப்பா, நீடவேசாரத்தில் குழிபோல்பண்ணி நேர்ப்புடனே சூதமதைவுள்ளேதாக்கி, போடவே நெருப்பதனில் கட்டிவைக்கப் பொங்கமுடன் சூதமதுவெண்ணையாமே. ௩௨

## சூதசெந்தூரம்.

வெண்ணையென்றசூதமதை யெடுத்துமைந்தாவிபரமுடன் சொல்லுகிறேன் சாற்றக்கேளு, கண்ணனிடமூலியதுக் குள்ளேவைத்துக் கருவாகச்சீலைபதுவலுவாய்ச்செய்து, திண்ணமுடன் கோழியென்றபுடத்தைப்போடு திருவானசூதமதுமடிந்துகொல்லும், எண்ணமுடன்சூதமதைசெந்தூரிக்க எனஞ்சொல்வேன்விபரமதாய்க்கேளுகேளே

கேளேதான்சூதமிடை யொன்றேயாகும் கெடியானவீரமிடை காலேயாகும், பாளேதான் துத்தமது துருசுதானும் பாங்கான கெந்தியதுகாலதாகும், வீளேதான்காந்தமதுசிலையுங்கூட்டிவிரிவானவளையலென்றவுப்புகூட்டி, துளேதான் மதியுப்புகாரத்தோடு துடியான இந்துப்பு காலதாமே. ௩௪



காலானபூநீறுவுப்புமாகும்கருவானசாரமுடன் பூரந்தானும்பாலானவரிதார மடலுப்பாகும், மகத்தான சீனமதுகாலாய்ச்சேர்த்து வேலானபொற்றலைபின்சாற்றாலாட்டி, விருப்பமுடன்ரவிதனிலேகாயவைத்து பாலாள பொடிசெய்துமாவதாக்கிப் பாலகனே செந்தூரமாக்கக்கேளே. ௩௫

கேட்கவே காசியென்ற குப்பிக்கேழு கெடிதான சீலைபதுவலுவாய்ச்செய்து, நீட்டமுடன் குப்பிக்குள் மருந்தைப்போட்டு நினைவாகமர்க்கல்லு கொண்டுமூடி, தாட்டிகமாய்சட்டிதனில் மணலைக்கொட்டிசாங்கமுடன்குப்பிநடுமையம்வைத்து, வாட்டமுடன் மேலுமந்தமணலைக்கொட்டிவகுப்புடனே மேல்சட்டி கொண்டுமூடே. ௩௬

மூடவே சீலைபதுவலுவாய்ச்செய்து முசியாமல் வாலுகையில் யேற்றிமைந்தா, நாடவே கமலாக்கினியெடுசாமம் நலமுடனே தானெரிப்பாய்மதிப்பதாக, நீடவேதீயாறியெடுத்துப்பாருநினைவுடனே குப்பியது கறுத்துக்காணும், சாடலேகுப்பியது வுடைத்துப்பாரு சாங்கமுடன்செந்தூரமதீதமாமே. ௩௭

அதீதமாஞ்செந்தூரம் பதனம்பண்ணு அப்பனேவெள்ளியதில் பத்துக்கொன்று, வதீதமுடன் தானுருக்கி குருவொன்றீய வளமுடனேகறுத்ததிதங்காணும்பாரு, சதீதமாம்வோட்டில்வைத் தூதிப்போடுசாங்கமுடன் பசுமையதுமாற்றேயெட்டு, கதீதமுடன் பத்துக்குவொன்று தங்கம் கருவாகத்தானுருக்கி சாய்த்திடாயே. ௩௮

சாய்க்கவேவாரடித்துப்புடத்தைப்போடு சட்டமுடன்பசுந்தங்கமாகும்பாரு, காய்க்கவேசெம்புதனில்பத்துக்கொன்றுகடின முடன்றானுருக்கி யெடுத்துபாரு, மாய்க்கவே கரியோட்டிலூதிப்போடு மகத்தானசெம்பதுவும்பழுப்புபொன்னாம், தேய்க்கவேபத்துக்கு வொன்றுதங்கம் தேற்றமுடன்றானுருக்கிப் புடத்தைபோடே. ௩௯

போடவே மாற்றதுவுமதிகமாகி புகழானபொன்னதுவும் காந்திமெத்த, நீடவேநாதாக்கள் செய்யும்வேதைநிலையானமாணாக்களறிவாரோதான், கூடவே கருவாளி காண்பான்பாரு குணமில்லான்குடிகெடுக்கும் பாவிகாணான், நாடவேகாலாங்கி பாதம்போற்றி நலமுடனே பாடிவைத்தேன் நன்மைபாரே. ௪௦

## தாம்பரச்சுன்னம்.

நன்மையாமின்னமொருகருமானங்கேள் நாட்டிலே யாரறிவாரித்தப்போக்கு, கண்மையாம் தாம்பூரத்தட்டுவாங்கி கருவாகவுப்பு

புளிகாரஞ்சேர்த்து, நின்மையாம்பழச்சாற்றால் தானரைத்துநிறமு டனே செம்புக்குகவசம்செய்து, நன்மையுடன் ஓட்டிலிட்டுச்சீலைசெ ய்துநலமுடனேபுடம் போடசுத்தியாமே. ௪௧

சுத்தியாமிப்படியேபத்து முறைபோடசுருக்கமுடன்செம்புக்கு பாதிமருந்தாகும், மத்தியேபுடம்போடசுத்தியாகும்மகத்தானசத்தி செய்து பொடியதாக்கி, துத்தமுடன்வெள்ளையென்ற பாஷாணந் தான் துடியானவீரமுடன்காரந்தானும், சத்தியுடன்ரூதமதுக்கூடச் சேர்த்துசதுராகபேரண்டம்சரியாய்க்கூட்டே. ௪௨

கூட்டியே தானரைப்பாய் யெருக்கம்பாலால் குமுறவேநாற்சா மமரைத்தபோது, வாட்டமுடன்மெழுகதனை யெடுத்துமைந்தாவள முடனேசெம்புதனைநாவிக்கொண்டு, நீட்டமுடன் தான்பிசரிமூசைக் கிட்டுநேர்புடனே சில்லிட்டுச்சீலைசெய்து, நாட்டிகமாய் சாவலையில் வைத்தூதுசாங்கமுடன் சுன்னமதுவாகுந்தானே. ௪௩

வாகானசுன்னமதை யெடுத்துமைந்தாவளமையுடன்முன்போ லசரக்குச்சேர்த்து, பாகானபதமுடனே ஊதஊதுபசப்பற்றபற்பம துவாய்க்கும்பாரு, வேகானபற்பமது வைத்துநாமூது வேகாதுபச் சையென்ற செம்புதானும், போகாது களிம்பதுவுமற்றுநீங்கி புகழா னபற்பமதுதவளமாச்சே. ௪௪

ஆச்சிதபற்பத்தைப் பின்னுமைந்தா அழகுபெற சிற்றண்டம் சவ்வுபோக்கி, பேச்சொன்றுமில்லாமல் சரியாய்கூட்டிப் போராகமூ சையிட்டு சீலைசெய்து, காச்சென்றபச்சையதுநீங்கிப்போக கடுந்தீயி ல்பின்னொருக் காலூதித்தீரு, மாச்சென்று மில்லாதபற்பமாச்சுமகத் தானபற்பமது பின்னுங்கேளே. ௪௫

பின்னுமேபற்பமதைக்கல்வமிட்டுப் போரானசாரமென்றசெய நீர்தன்னால், மின்னவேதானரைப்பாய்நாலுசாமம்மிக்கானசரக்கதனை மூசைக்கிட்டு, கன்னுனசீலையதுவலுவாய்ச் செய்துகருவாகவூதிடவே பற்பமாகும், மன்னுனபற்பமதை யெடுத்துமைந்தா மகத்தானரஸ் தாளிப்பழத்தில்தாக்கே. ௪௬

தாக்கவேபழமதுவுமிறுகிக்காட்டும் தனியானபசும் வெண்ணை தன்னிலப்பா, நோக்கமுடன் வரிசியெடையனுபானத்தில் நுட்ப முடன் தானருந்த தேகம்கற்றாண், சேர்க்கமுடன் நரைதிரையுமற் றுப்போகும் ரூட்சமுடன் கண்ணிரண்டுக்துலக்கங்காணும், ஆக்கை யதுயிறுகியல்லோ சட்டைதள்ளும் அவனிதனில்நீயு மொருசித் தனமே. ௪௭



ஆமேதான் வாலையது போலேதோற்றும் அப்பனே வ ம்பண்பாய்காட்டும், நாமேதான்சொன்னபடிபற்பங்கொண்டு வடபா டிலேயுன்னையொரு சித்தனென்பார், வேமேதான் பற்பமது ததுதா யத்தில்விருப்பமுடன்றானுருக்கி குருவொன்றிய, தேமேதான் ௯௦ துவும்யெட்டதாகும் தேசத்தில்சித்தர்செய்யும் வேதையாச்சே.

வேதையிலே தாம்பூரத்தில் வேதையப்பா வெகுகோடி வேதை யிதுதாம்பரவேதை, பாதையாம் சித்தர்செய்யும் வேதைமார்க்கம் பா ருலகில்கருவாளி செய்வான்பாரு, தீதையிலே சண்டாளத் துரோகி யோர்க்குநிசைகெட்டுமுறைகெட்டு தோசதொன்றும், ஆதமுடன்பற் பமென்றபற்பந்தன்னை அனுபானயெண்ணைதனில் கலந்திடாயே. ()

கலந்தஎண்ணை பணயெடைதானந்திசந்தி கவனமுடன்றானருந் தவாலைபாலாய், பலமதிகமுண்டாகும் பாலர்க்கப்பாபாரினிலே ராசா க்கள்காண்பாராகில், வலமுடனேயோடிவந்து ஆசீர்மித்து வரைகோ டி.திரவியங்கள்மெத்தயீய்ந்து, நலமுடனே பற்பமதைக் கைக்கொள் வார்கள் நாட்டிலேபற்பமது நவிலொண்ணாதே. ௫௦

தங்கசெந்தூரம்.

ஒண்ணான தங்க மென்றகாசுதன்னை வுத்தமனேகளஞ்சியது பத் ததாகும், கண்ணானரேக்கதுவும் கொண்டுவந்து கவனமுடன் மாசி யென்ற பத்திரிதன்னால், குண்ணானகாரமது பொரித்துப்போட்டு குன்றியிடைசீனமது வொக்கச்சேர்த்து, தண்ணானநாற்சாமமரைத்த போது தர்க்கானமெழுகுபோ லாகும்பாரே. ௫௧

பாரேதான் மெழுகதனைவட்டுசெய்து பண்பாகாவிதனிலேகாய வைத்து, நேரேதான் வோட்டிலிட்டுச் சீலைசெய்து நேர்பாகப்புடம் போடச் செந்தூரிக்கும், காரேதான் செந்தூரமெடுத்துப்பாரு கறுப் பானசெந்தூரம் போலேகாணும், நீரேதான் பத்துமுறைப் படியே போடு நிறமானசெந்தூர மாகுந்தானே. ௫௨

தானேதான் செந்தூரமெடுத்துமைந்தா தாரமுடன்கெந்தியது காலாய்க்கூட்டி, மானேதான் கட்டினதோர் சாரமொன்று மார்க்கமு டன் யெட்டிலோர்பாகஞ்சேர்த்து, நாமேதான்சொன்னபடி செய்நீர் தன்னால் நலமாகத்தானரைப்பாய் நாலுசாமம், வேமேதா னாறுவகை செயநீர்தன்னால் விருப்பமுடனரைத்துபில்லை விரைவாய்தட்டே. ௫௩

தட்டையிலேபில்லையது பணம்போலாக சாங்கமுடன் தட்டியல் லோசாயப்போடு, வட்டமென்ற வகல்தனிலே பரப்பிமைந்தா வளமு

வகல்மூடிசிலைசெய்து, மட்டமென்றகோழியதுபுடமதாக மதி னவோட்டிவிடசிவப்புமாகும், திட்டமுடனிப்படியே மூன்று ப்பா சிறப்பாகப்புடம்போடச் சிவக்குந்தானே. ௫௪

சிவப்பானசெந்தூரம் பதனம்பண்ணு தேசத்தில்கிட்டாது சிவ யோகிக்கு, தவக்கியானியானுக்கால் யெல்லாஞ்சித்தி தாரணியிலவன் போல சித்தனுண்டோ, பவமுடையோர்க்கிந்நூல்தான் வாய்க்காதப் பா பாரினிலே விட்டகுறையானவற்கு, சிவன்செயலால்கிடைக்குமே யிந்நூலப்பா தேசத்தில்மற்றவர்க்குக் கிடையாதன்றே. ௫௫

மிருத்துவரிஷிக்கும்காலாங்கிக்குஞ்சாபம்.

தானனமுன்யுகத்தில் காலாங்கிக்கு தாக்கானமிருத்துவரிஷியி ன்சாபம், கோனனபொன்னகரம் போயிருந்துகோடித் தார்க்கண்ணை பிரான்றன்னையப்பா, தேனனதிரேதாயினுகத்தில்தானும் தெளிவான சுத்தனுங் காலாங்கிவையா, பானனகுருசுவாமி சாபத்தாலே பாலனு ங்காலாங்கி சாபம்போச்சே. ௫௬

போனபின்பு காலாங்கி குருவாஞ்சாமி பொன்னகரம் போயிரு ந்துபட்டமாச்சு, தானவனுங் கருவூரர் கமலர்தாமும் தயவுடனேசீன பதிபோயிருந்து, வானவனுங்காலாங்கி சீஷனென்னை வரவழைக்க கியாபகத்தில் நினைத்தபோது, பானமுடனடியேனுங் குளிகைபூண்டு பறந்திட்டேன் சீனபதிதேசந்தானே. ௫௭

தேசமென்றால்தேசமது போயிருந்தேன் சிறப்பானகமலமுனி தன்னைக்கண்டேன், ஆசையுடன் அவர்பாதம்பணிந்தேனப்பா அப்ப வேகுருசாபம் நிவர்த்தியாச்சு, பூசையுடன் காலாங்கி நாயர்தம்மை பூசித்தேன் திரேதாயி னுகத்திலப்பா, நேசமுடன் யெந்தனுக்குகலி யுகத்தில் நேர்மையுடன் சாடமதுநிவர்த்தியாச்சே. ௫௮

ஆனபின்புகலியுகத்தில் நூற்றுபத்தில் அன்புடனே குளிகை கொண்டுபறந்துயானும், வானவனுக்கொப்பான போகரென்றுவைய கத்தில் கீர்த்தியுடன் பேரும்பெற்றேன், தேனனகாலாங்கி பாதஞ் சென்றுதெரிசித்து அவருடையவருளுங்கொண்டேன், கோனனயெ ன்னையர்குருவினாலே கோடியுகங்குவலத்தில் வாழ்ந்திட்டேனே ௫௯

மகவேவுக்குநான்குபாகத்திலிருக்கும்

அதிசயம்.

வாழ்கவே குளிகையதுபூண்டுகொண்டுவையகத்தில் சுற்றியெங் கும் பார்க்கவென்று, வீழாதகுளிகையுடன் மேருவ்சென்றேன் விருப்



பமுடன்நாற்றிசையும் காணும்போது, தாழ்கவே மேருவுக்கு வடபா கத்தில் தாக்கானமனிதரெல்லாம் தங்கவர்னம், மூழ்கவேவயததுதா ன்லட்சமாகும் முனையானதெய்வமது சத்தியாமே. ௬௦

சத்தியாம் மேருவுக்கு கிழக்கேயப்பா சார்பான மனிதால்லோ நீலவர்னம், நித்தியமாம்வயததுதான் ரண்டுலட்சம்நிலையான தெய்வ மதுவிஷ்ணுவாகும், புத்தியுடன் மேருவுக்குமேற்கேயப்பா புகழான மனிதரப்பா ரத்தவர்னம், சுத்தியுடன் கோறுவதுகைலையாகும் சொ ரூபமென்ற போதமென்னும் நிலைநிற்பாரே. ௬௧

நிற்பாரே வயததுதான் சண்டுலட்சம் நித்தியமுஞ் சொரூபமெ ன்றநிலையுங்காண்பார், சிற்பமுடன்மேருவுக்கு தெற்கேயப்பா சிறப் பானமனிதரப்பா மைனவர்னம், கர்மமென்றவயததுதான் நூறென் பார்கள் கலியுகத்தி லிருப்பதுவுமில்லைதானே, சொற்பமென்ற வயது தனில் மாண்டுபோவார்சுந்தரனே அக்கிரமங்கள் மிகவுண்டாமே. ()

உண்டானமனிதரப்பா கொடியசெய்கை வுற்பனமாமரியாதியில் லாமாண்பர், மிண்டானமுறைதப்புஞ் சண்டிமாண்பர் மீளாதகொடிய தொருபாவியாகும், சண்டாளமையல்கொண்டு தாறுமாறாய் சடுதியி லேசடமழிந்து போவாரப்பா, பண்டானசூதுகளும் பொய்யுமாகும் பாங்கானமனிதரப்பா நடத்தைபாரே. ௬௩

பாரேதான் சாத்திரங்கள் மெத்தவுண்டு பாங்கான பொய்ஞானி மெய்ஞானியுண்டு, சீரேதானுண்ணுவது வனேகவர்னம் சிறப்பான காய்கறிகள் பாலுங்கொள்வர், நேரேதான் பழவர்க்கம் கொள்வாரப் பாநிறையான லாகிரிகளனந்தங்கொள்வார், வேரேதான் மனிதரப்பா மூன்றுபாகம் முன்சொன்னமனிதரப்பா பழமுண்பாரே. ௬௪

வீரமெழுகு.

உண்பானவின்னமொரு மார்க்கங்கேளு ஒளிவானவீரமது கொ ச்சிவீரம், திண்பானசீனத்தின் வீரமப்பாதிறமானவீரமதுபலமொன் றாகும், பண்பானவீரத்தின்தயிலம்பாரு பாங்கான ஆனையென்ற விலா ங்குதானும், நண்பான விலாங்கதனைதயில்மாக்கி நலமாக கெந்தகத் தைவிட்டுதாக்கே. ௬௫

தாக்கவே சேரென்றகெந்திதன்னைதயவாகத்தானரைப்பாய் நா லுசாமம், நோக்கவேதானரைத்துப் பின்னுங்கேளு நூணுக்கமுடன்

குழித்தயில மிறக்கிப்பின்பு, தேக்கவேவீரமதுசுருக்குதாக்கு தெளி
வுடனேவீரமதுகட்டேயாகும், பாக்கவேமேற்கவசம்சொல்லக்கேளு
பதிவாக துருசுடனே சிங்கியாமே. ௬௬

சிங்கியென்ற மிருதாருசிங்கியப்பா செழிப்பானபூரமுடன் துத்
தமாகும், இங்கிதமாம்சாரமுடன் காரமாகும் மெழிலான காந்தமுட
ன்குருந்தக்கல்லாம், தங்கமுடன்சவ்வாதுபுனுக்குபூரம்தகமையுள்ள
வபினியுடன்கெந்திதானும், அங்கமுள்ள லிங்கமுடன் சீனந்தானும்
அப்பனேவகைவகைக்கு விராகனொன்றே. ௬௭

ஒன்றான யித்தனையும் சரியாய்க்கூட்டி வுத்தமனே தேன்விட்டு
மெழுகதாக்கி, புன்றானமெழுகுபதம் தன்னிலாட்டிபதமுடனே மெ
ழுகதனை யெடுத்துமைந்தா, நன்றானவீரத்துக்கங்கிபூட்டி நலமாகப்
புடம்போடக் கட்டும்பாரு, அன்றானமெழுகதனை வைந்துபங்காக்கி
அப்பனே வீரத்துக்கங்கிபூட்டே. ௬௮

பூட்டியே யிப்படியேயைந்து தரமப்பா புகழாகக்கலசத்தில்சீலை
செய்து, மீட்டமுடன் மணல்மறைவில்புடத்தைப்போடு நெடிதானவீ
ரமதுகட்டும்பாரு, வாட்டமுடன் மேற்கவசம் தன்னைப்போக்கி வள
முடனே யையந்துதரம்பூசியேதான், பூட்டமென்றபுடந்தனிலே போ
ட்டாயானால் புகழானவீரமது கட்டும்பாரே. ௬௯

கட்டானவீரமதுமணியெடுத்து கண்ணனகண்மணியேகருத்தா
ய்க்கேளு, மட்டானவுப்பதுவும் சேர்த்துப்பாரு மதிப்பானவெடியுப்
புவளையலுப்பு, தட்டானபாறையென்றவுப்புகூட்டி தளராதகல்லுப்பு
சமனாய்ச்சேர்த்து, வட்டானசட்டிதனில்போட்டுமைந்தா வளமுடனே
திருகுகள்ளிப் பாலையூத்தே. ௭௰

ஊத்தயிலே பாலதுவுமிகவும்பொங்கி வுத்தமனே சுண்டமட்டும்
யெரிப்பாயப்பா, நாத்தமுள்ள கள்ளியது பாலுஞ்சுண்டி நலம்பெற
வேகட்டியல்லோ சுண்டிருக்கும், வத்தமுள்ளமேல்சட்டி கொண்டு
மூடியெழிலாகச் சீலையதுமிகவுஞ்செய்து, போத்தமுடன் வாலுகையி
லடுப்பிலேத்திப் பொங்கமுடன்தானெரிப்பாய் சாமமெட்டே ௭௧

எட்டானசாமமது யெரிக்கும்போது யென்மகனே வுப்பதுவும்
வுரிகிக்கட்டும், மட்டானவுப்பதுவும்கட்டியல்லோ மார்க்கமுடன் பற்
பமதுபோலேகாணும், திட்டான வுப்பதுவும் பொடியதாக்கித் திற
லானசட்டிதனில்பாதிபோட்டு, கட்டானவீரமதை நடுவில்வைத்துக்
கருத்துடனேமற்றபொடி மேலேபோடே. ௭௨



போடேதான் சட்டிமேல்கொண்டுமூடி பொங்கமுடன் தானெரிப்
பாய்மூன்றுநாளும், நீடேதான் யெரித்தபின்பு யெடுத்துப்பாருநெற்
றிசிவன் தானெரித்த பற்பமாகும், வாடாத பற்பமது புகலப்போ
மோவளமையுள்ள பற்பமது பதனம்பண்ணு, தேடான செம்பெடுத்
துப்பத்துக்கொன்றுதெளிவுடனேதானுருக்கி கொடுத்திடாயே. ௭௩

கொடுத்தவுடன் செம்பதுவுமூறலேகி குணமாகும் ரவிதானும்
கட்டிப்போகும், தடுக்காமல் வெள்ளிதனில்நாலுக்கொன்று சாங்க
முடன்றானுருக்கிக்கொடுத்துப்பாரு, படுமூன்னே வெள்ளியதுபழுக்
கும்பாரு பாங்கானமாற்றதுவுமேழதாகும்,தொடுகுறிபோல்நாலுக்கு
ஒன்றுதங்கம் தோராமல்தான் கொடுத்து வுருக்கிடாயே. ௭௪

உருக்குமுகந்தான்கொடுத்து வாரடித்துவுத்தமனே புடம்போ
டப்பழுப்புமாகி, தடுக்கென்ற பொன்னதுவும் தங்கமாகி தாரணியில்
சித்தர்செய்யும் வேதையாகும், குருக்குமுதல் வனேகவிதவேதைகா
ணும் கோடானகோடி முறையிதுநாலாகும், பருக்கலென்றசிவப்புகி
றம்கவலையப்பா பாங்குபெறபற்பமதைபிசறிபூதே. ௭௫

ஊதையிலே மூசைக்குள் ளிட்டுமைந்தாவுறுதியுடன் சில்விட்டு
சீலைசெய்து, தோதமுடன்குகைவைத்து ஊதும்போது துப்புறவாய்
சுன்னமது புகலப்போமோ, நீதமுடன் சுன்னமதையனுபானத்தில்
நிலைமையுடன் வெண்ணெயதனில்கொண்டுபாரு, சாதமுடன்மண்ட
லந்தான்கொண்டுவந்தால் சார்பாகும் மேகவகைபோகுந்தானே. ()

போகுமே மேகவகையிருபத்தொன்றும் பொல்லாதநீரிழிவுகு
ன்மச்சூலை, ஏகுமேநீர்சொறிப்பு நீர்ப்பிணைப்பு யென்மகனே வாச
னத்தின்கடுப்புதீரும், யாகமுடன்வனுபானந்தன்னிலீயபறங்குமடா
நோயேது காந்தலேது, தாகமுடன் வுஷ்ணங்களெல்லாம் போகும்
சதாகாலம் தேகமது குளிர்ச்சியாமே. ௭௭

குளிருமேதேகமதுகற்றாணுகும்குடிகெடுக்கும் சயரோகமகன்
றுபோகும், நளிருடனேநரம்பு வலிசடலம்விட்டு நடுங்கியேகானசத்
தில்தானேபுக்கும், விளிருடனேகண்துலக்கமிகுதிகாட்டும்விரைவுட
னேசுவாசமது கீழேநோக்கும், களியுடனேயிருமலது சடலம்விட்டு
கண்ணுமேயெப்போது மனுகாதாமே, ௭௮

தாமேதான் தேகமதுகற்றாணுகும் தனியானவாதமதுகீழ்நோ
க்காகும், காமேதான் சேத்துமங்கள் தொண்ணூற்றாகும் கடல்போ
கும்தப்பாதுகருதிப்பாரு, வேமேதான்பத்தியங்கள் வொன்றுமில்லை

வெகுகோடிகாலமதுதேகம்போகா, நாமேதான்காலாங்கிநாதர் பா
தம் நான்வணங்கி போகரிஷிநவின்றவாறே. எசு

வாறான நூல்பார்த்து கால்கள்பார்த்துவளப்பமுட னடிமுடியுந்
தானும்பார்த்து, கூறானகடைபார்த்துக்குறிப்பும்பார்த்து கோடான
கோடிமுறை தானும்பார்த்து, சேறானகைபாகஞ் செய்யாகந்தான்
செழிப்புடனே செய்பவனேசித்தனுவான், நாறானபூவதுவில்மணஞ்
சேர்ந்தாற்போல்நாட்டிலே செய்பவன்யோகியாமே. அ0

### லிங்கதாரசெந்தூரம்.

யோகமுடனின்னமொருமார்க்கம்பாருமொளிவீசும்தாரமுடன்
லிங்கந்தானும், சாகமுடன்வானையுடதயிலத்தாலேசட்டமுடன்தாள
கத்தைவரைத்துமைந்தா, பாகமுடன்லிங்கத்தின் மேலேபூசிபக்குவ
மாய்ரவிதனிலே காயவைத்து, தாகமென்றமுலைப் பாலேச்சுருக்கு
தாக்க தகைமையுடன் தான்கருகிவுதிருமாமே அக

உதிர்ந்த தொருசரக்கதனை யெடுத்துமைந்தா ஓங்குபெறகல்வ
த்திலிட்டுமேதான், கதிர்ந்திடவே வாறுவகைசெயநீர்தன்னாலரைப்
புடனேதானரைப்பாய் நாலுசாமம், சதிருடனேபில்லையதுதட்டியே
தான்சாங்கமுடன்ரவிதனிலேகாயவைத்து, முதிராமல்ஒட்டிவிட்டுச்
சீலைசெய்து முசியாமற்புடம்போடச் சிவக்குந்தானே. அஉ

சிவப்பான செந்தூரம்யென்ன சொல்வேன் சிவசிவாவெள்ளி
செம்பில் பத்துக்கொன்று, நலமுடனேவொன்றுதள்ளிலூதிப்போடு
நாதாக்கள் செய்யுமிது வேதைகாணும், தவமுடையஞானிகட்குமெ
ட்டுகாணும் தப்பாது லோபிகட்கு வாய்க்காதப்பா, பவநீக்கி யிருப்
பவர்க்குயிந்தபாகம் பலிக்குமே தப்பாதுபண்புளோர்க்கே. அங

### லோகமாரணம் கூட்டுமுறைதொந்தம்.

பண்பான காலாங்கிபாதந்தொட்டுப் பாடுகிறேன்மாணுக்கள்பி
ழைக்கவென்று, நண்பான தங்கமது களஞ்சிபத்தேயாகும் நலமான
செம்பதுவும்களஞ்சிரண்டு, திண்பானவெள்ளியதுகளஞ்சிரண்டுதிற
முடனேநாகமது களஞ்சிகாலு, வண்பானவங்கமது குன்றியிரண்டு
வாகாகத்தானுருக்கி யெடுத்துப்பாரே. அச

எடுக்கையிலேமாற்றதுவு மெட்டதாகும் யென்மக்காள்லோகத்
துவாதிமார்க்கள், சடுக்கமென்னும்பத்தினால்றியமாட்டார் சட்டமு
டன்வரைதீர்ந்து வார்த்தைசொல்வார், துடுக்கானவேதைமுகம் கா
ணமாட்டார்துறைமுகமுங்காணு மல்வெருமையாவர்,படுக்காளியுடன்
கூடி பதமுங்கெட்டுப்பாரினிலேயலைவார்கள் தாங்கள்தாமே. ()



நாய்போலவலைவார்கள் சண்டிமாண்பர் நாதாக்கள்கைம்மறைப்பு
வொன்றுங்காணார், பேய்போன்ற பேயரல்லோவீணுப் கட்டுப்பி
சகின்றி கெட்டவர்கள்கோடாகோடி, தாய்போலபஞ்சலோகந்தானி
ருக்கச் சதாகாலம் சீவனத்துக் குறைவுண்டாமோ, மாய்கையென்னு
ங்கதை நீக்கிமைந்தாபாரில் மன்னவன்போல் வாழ்வது சித்தனுமே

சித்தனுமின்ன மொருமார்க்கங்கேளு சீர்பெறவேசெம்பதுவும்
வொன்றேயாகும். புத்தியுள்ளசிஷாநீபுகலவேண்டாம்புகழானவெள்
ளியது மூன்றேயாகும், புத்தமுள்ளதங்கமது வாறேயாகும் சூட்ச
முள்ள வெண்காரம்குன்றிரண்டு, மொத்தமுடன் குகையிலிட்டுத்தா
னுருக்கிமோசங்கள் வராமல் சாய்த்திடாயே. அஎ

சாய்க்கவே பொன்னதுமெட்டதாகும்சரியான நிறையுடனே
வூட்டங்காணும், ஏய்க்காதுபுடத்துக்குவுறுதிதங்கம்மெலராலுமிடை
பாகங்காணமாட்டார், மாய்க்கவேநாதாக்கள் கூட்டுபாகம் நாமல்லோ
மானிடர்க்குபட்சம்வைத்தேன், காய்க்கவேபொன்வேண்டுமானால்
பாகருத்துடனேயிப்படியே செய்துபாரே. அஅ

பாரப்பா கூட்டுமுறை யின்னங்கேளு பாளமென்றதங்கமது நா
லேகாலாம, சீரப்பாசுத்தமுளசெம்புதானும் சிறப்புடனேவொன்
றறையுமரிக்கலாகும், கூறப்பாவெள்ளியது வரிக்கால்முக்கால்குறை
யாமலிடைபாகங்குணமாய்க்கொண்டு, வாரப்பாநாகமதுகுன்றிரண்டு
வள்முடனே தானுருக்கியெடுத்துக்கொள்ளே. அகூ

கொள்ளவே மாற்றதுமெட்டறையுமாகும் கோளாறுநீங்கியல்
லோமாற்றுகாணும, எள்ளளவும் பிசகின்றிபுடத்துக்கேகா யெழி
லானபொன்னதுவும பகுமைமெத்த, தள்ளவேவேண்டாங்கா ணிந்த
பாகம் தாரணியில்கிடைப்பதுவுமரிதேயாகும், உள்ளபடிசொன்னே
மேகாலாங்கிதம்மைவுறுதியுடன் நான்வணங்கியுரைத்தேன்தானே.

தானானபஞ்சகர்த்தாளாடுங்கூத்து தாரணியிலின்னமுண்டுசாற்
றக்கேளு, பாரானபசுதங்கம் வாறேகாலாம்பாங்கான செம்பதுவு
மொன்றேமுக்கால், தேனானவெள்ளியது வரைக்காலாகும் தெளி
வான நாகமதுகுன்றிமூன்று, மானானசரக்கெல்லாம்வொன்றாய்க்கூட்
டி மாசிபெறகுகையிலிட்டுவுருக்கிடாயே. கூக

உருக்கியபின் றுமொடுத்து வுடைத்துபாரு வுத்தமனேபொன்
னதுவோமாற்றுமெட்டு, பெருக்கமுள்ளவேலைக்குகய...

ன்காகபிதற்கீடு புலப்போமோ, செருக்குடைய யித்தங்கம் பசுமை யாகுமஜெகதலத்தில் நாதாக்கள் செய்யும்வேதை, திருகனுடன்கை மறைப்புமெத்தவேண்டும் தேசத்தில்கிட்டாது யோகிக்காமே. ௯௨

யோகியென்றால் சமுசாரிக்காகும்வேதை யொருவரால்வுள்ளா ணிகழல்காணார்கள், தேவியுடன்றானிருந்துவாழும் வித்தைதேசத் தில் கிட்டாதுகர்மிகட்கு, ஆவியுடன்காயமது வழிந்திட்டாலும்அப் பனேயொருவருக்கும் விள்ளவேண்டாம், தேவிகளோமெத்தவுண்டு படுக்காளியப்பாபட்சமுடன்நேசிப்பார்தூரத்தள்ளே. ௯௩

தள்ளுவது பூதலத்தில் மெத்தநன்று தருமவான் கிடைப்பதுவு மரிதேயாகும், உள்ளபடி யின்னமொருமார்க்கம்பாருவுற்பனத்தையா ராய்ந்துவுருக்கித்தீரு, கள்ளியென்றுவிடுகாதே மைந்தாபாருசாத்தி ரமும்பொய்யாது மெய்யேயாகும், கள்ளமின்றிசெம்பதுவுமிரண்டே காலாம்கருவான வெள்ளியதுவரைநாலாமே. ௯௪

நாலானவெள்ளியது நாலரையுமாகும் நலமான செம்பொன்னு மிரண்டேகாலாம், கோலானநாகமதுவொன்றேகாலாம்குறிப்புடனே குகையிலிட்டுவுருக்கித்தீரு, பாலானவெள்ளியது பசுமையாகிபழுப் புடனேபொன்னதுவு மாற்றேழாகும், சூலானவர்னமது வுள்ளே நிற்கும் சூட்சமுடன்வாரடித்துப் புடத்தைப்போடே. ௯௫

போட்டதுவும் பொன்னதுவுமிகுதியாகி பொங்கமுடன்மாற்று யர்வுகாணும்பாரு, நீட்டமுடனின்னமொருகருமானங்கேள் நெடிதா ன தங்கமது நாலேகாலாம், வாட்டமுடன் செம்பதுவு மொன்றேகா லாம்வளமானநாகமது முக்காணியாகும், தேட்டமுடன்வெள்ளியது வரிக்கால்காலாய் தெளிவானவங்கமது குன்றிபாமே. ௯௬

குன்றியுடன்தானெடுத்தவொன்றாய்ச்சேர்த்துக் குறிப்புடனே குகையிலிட்டு வுருக்கிப்பாரு, கண்றானமாற்றதுவுமெட்டேயாகும் தாக்கானபொன்னதுவும் நயப்புமாகும், மன்றான பொன்னதுவை வாரடித்துப்பக்குவமாய்ப்புடம்போடபசுமைகாணும், வென்றானசித் தர் முனிரிஷிகள்பாகம் மேதினியிலதீதமென்ற வித்தைதானே. ()

தானென்ற வித்தையிதுயின்னஞ்சொல்வேன் சதாசிவமுமுமை யவட்குச் சொன்னபாகம், வேனென்றதங்கமதுவரிக்கால்ரண்டு வெ ளுப்பான செம்பதுவு முக்காலாகும், காமென்றகட்டியதோர்நாகம் கால்தான் கருவானவெள்ளியது வொன்றேபாதி, யாமென்ற வெண் காரங்குன்றிகாணும் பாகமுடன்குகையிலிட்டு வுருக்கிடாயே. ()



ஆனபின்புபொன்னதுவுமச்சங்கொண்டு அன்புடனேவாரடித் தப்புடத்தைப்போடு, பானமென்றபொன்னதுவுமாற்றுகாணும்பா ங்கானவேதையிதுசித்தர்வேதை, கானமென்றகருமானமின்ன மொ ன்றுகருத்துடனேசொல்கிறேன் மைந்தாகேளு, வானமென்றதங்க மதுவொன்றுகூட்டி வளமாகசெம்பதுவுங்காலுகூட்டே. ௯௯

கூட்டியேவெள்ளியதுவரிக்காலாகும்குணமானநாகமதுவரிக்கா லாகும், வாட்டமுடன்தானுருக்கியெடுத்துப்பாரு வளமுடனேமாற் றதுவுமொன்பதாகும்; நீட்டமுடன்வாரடித்துப்புடத்தைப் போடு நெடிதாகமாற்றதுவுமேழதாகும், தேட்டமுடன்சித்தர்களாம்செய் யும்வேதைதேசத்தில் சிவயோகிக்கானுவானே. ௱

அப்ரேக்குசெந்தூரம்.

கானுவான்கருவாளிகான்பான்பாரு காசினியில்புத்தியுள்ளான் விதியுள்ளோர்க்கும், மாணவேயின்னமொருமார்க்கம்பாரும கத்தான செந்தூரம்மகிமையப்பா, ஊணவேகிருஷ்ணபிரோகம்தானும்வுத்தம னேசேரதுவுநாலதாகும், கானனெண்ணெயது செய்துகொண்டு கருவாகமையின்மறையெடுத்துக்கொள்ளே. ௱௧

கொள்ளவேதீமதுசேர்தான்ரண்டு, கூரானவெடியுப்பு சேர்த் தான்பாதி, வில்லவேகெந்தியதுசேர்தான்காலாம் வீரனவயச்சத்து சேர்தானகாலாம், துள்ளவேமூறையுர்தான்வொக்கக்கூட்டி தோரா மல்குழிக்கல்லில்போடுமைந்தா, அள்ளவேளருக்கன்பால் விட்டரை த்து அப்பனேபில்லைபதுதட்டிடாயே. ௱௨

தட்டியேரவிதனிலே காயவைத்து சாங்கமுடன் ஓட்டிலிட்டுச் சீலைசெய்து, மட்டமென்றகெசபுடமேபோட்டுமல்லோ மார்க்கமுட னுவிட்டுயெடுத்துப்பாரு,திட்டமுள்ளசெந்தூரம்கறுப்பாய்காணும் திரும்பியேயிப்படியேபத்துமுறைபோடு. வட்டமுடன் செந்தூரம் கரியோடாகுமார்க்கமுடன் சிவப்பதற்குயின்னம்பாரே. ௱௩

பாரேதான்செந்தூரம்சிவப்பதற்கு பாகமுடனுறுவகைசெயநீர் தன்னால்,நேரேதான்சாரமதுவெட்டுசாமம்,நேர்ப்புடனேதானரைப் பாய்வெண்ணெய்போலே, வேரேதான்பில்லையதுதட்டிமைந்தாவிபர முடன்ரவிதனிலேகாயவைத்து, சீரேதான்வோட்டிலிட்டுச்சீலைசெய் து சிறப்பாகப்புடம்போடச்சிவக்கும்தானே. ௱௪

தாளுணசெந்தூரம் நூறுபுடமாகும் தாக்கான வருணைநம் சொல்லப்போமோ, வேளுனசெந்தூரம்சத்துக்கொன்றுவிபாமுடன் தங்கமதுவொன்றுசேர்த்து, சாளுனவாறுவகைசெயநீர்தன்னால் கருத்துடனேயில்லைதட்டிக்காயவைத்து, மாளுனகோழியெனறபுடந்தான் போடுமாசற்றசெந்தூரம்புகலொண்ணுதே. ௱௫

புகலவேசெந்தூரம்பதனம்பண்ணுபொங்கமுடன்வெள்ளிசெம்பில்பத்துக்கொணறு, நிகலவேதானுருக்குருவொன்றீய நிலையான மாற்றதுவுமெட்டதாகும், அகலவோனுக்குலொன்றுதங்கம் அப்பனேகூட்டுமுறைதன்னில்சேர்த்து, தகலவேதானுருக்கி யெடுத்துப் பாருதகைமையுடன்மாற்றதுவுமிகுதியாமே. ௱௬

ஆமேதான்செந்தூரஞ்சோதித்துப்பார் அப்பனேபச்சைமண்பாண்டந்தன்னில், தாமேதான்சலம்விட்டுதுயாஞ்செய்து சட்டமுடன்செந்தூரம்குன்றிதானும், போமேதான்போட்டவுடன்பாண்டந்தூக்குபோக்கானதுவாரங்களடைத்துக்காணும், காமேதான்சொன்னபடிவரைதப்பாதுநலமுள்ளசெந்தூரமதீதம்பாரே. ௱௭

அதீதமாஞ்செந்தூரக்குன்றியுண்ணு அப்பனேமேகவகையிருபதும்போம், கதீதமென்றமதுமேக மொழிந்துபோகும், கடல்போகும்நீரிழிவுகாணுதேகம், சதீதமென்றசெந்தூரமனுபானங்கள் சாற்றுகிறேன்வல்லாரைச்சூரணந்தான், பதிதமென்றவாலாரைச்சூரணந்தான்பட்சமுடனனுபானமுண்ணுவீரே. ௱௮

உண்ணயிலேதேனுகும் செய்யுமாகுமுத்தமனே பசுவெண்ணைதானுமாகும், நண்ணயிலேகிரதங்கள்லேகியங்கள் நலமானசூரணங்களனுபானந்தான், கொண்ணையுடன்பூவதுவுங்கிஷாயந்தன்னில் புகட்டவேமேகங்கள்போகும்பாரு, திண்ணையிலேகியாழவகைதன்னிலீயதெறிக்குமடாமேகவகைதிண்ணந்தானே. ௱௯

திண்ணமுடன்காயமதுயிறுகிக்காட்டும் இரிந்தானும்சுவாசமது மேல்கோக்காது, வண்ணமுடன்சதாகாலந்தேகம்கற்றாண் வளமையுடன்வெப்போதும்வாழலாகும், அண்ணலெனும்பராபரத்தையனுகவேண்டும்யனுகாட்டால்காயுமில்லைபூவுமில்லை, சுண்ணமுடன்காலாங்கிநாதனைவணங்கி தாழ்மையுடன்பாடிவைத்தேன்பண்பாய்த்தானே.

பண்பானகாண்டமது வென்னசொல்வேன் பாரினிலேநாதாக்கள்செய்யும்வேதை, கண்பானசர்மிக்குவாய்க்குமோசொல் கசடற்றமாண்பருக்குவாய்க்குமல்லால், திண்பானவிதியாளிகருவாளியானல் திறமுடனேயறிந்துகொள்வான்புண்ணியவானும், நண்பானபோகரிஷிசொன்னமார்க்கம் நாட்டிலேயாரேனுஞ்சொல்லார்தாமே. ௧௧௧



தாம்பரசெந்தூரம்.

சொல்லவேதாம்பூரவேதை சொல்வேன் சுத்தமுடன்தாம்பூரத்துட்டுகாணும், வெல்லவேசோதுதான்ரண்டதாகும்வெளியானகெந்தகமும்நாலதாகும், கொல்லவேதூளாக்கியெடுத்துமைந்தாகோளாறுநேராமல்சொல்லக்கேளு, புல்லவேதளவாயஞ்சட்டிதன்னில்பொங்கமுடன்தெந்தகத்தைக்கீழேபோடே. ௧௧௨

போடவேகெந்தகத்தைப்பாதிபோடு போக்கானகெந்தகத்தின் மேலேயப்பா, நாடவேவதின்மேலேதுட்டைவைத்து நலமாகமேலுமந்தகெந்திபோடு, கூடவேமேல்சட்டிகொண்டுமூடி குமுறவேசிலையதுவலுவாய்ச்செய்து, பாடவேவாலுகையாமடுப்பிலப்பா பாங்குபெறத்தானெரிப்பாய்சாமமெட்டே. ௧௧௩

எட்டானசாமமது யெரிக்கும்போது பென்மகனேதாம்பரமும் வெட்டையாகி, கட்டானவெட்டையது தொட்டியாகி கடுங்காரச்செம்பினதுதொட்டியாச்சு, முட்டாளாயிருக்காமல் மைந்தாகேளு முயலவேதாம்பரத்தையெடுத்துமைந்தா, திட்டமுடன்கல்வமதிலிட்டுமைந்தாதிறமுடனே பொடியதுவாம்நொறுக்கிடாயே. ௧௧௪

நொறுக்கியேசூதமதுசமனுய்ச்சேர்த்து நோக்கமுடன்றானரைப்பாய்சாமம்நாலு, பறுகவேமைபோலேயரைப்பாயப்பா பாலகனேவில்லைதட்டிக்காயவைத்து, திறமுடன்வகலிலிட்டுசீலைசெய்துசிறப்புடனேகுழிதோண்டிமணலைக்கொட்டி, பறுகமுடன்நடுமத்திவகலைவைத்துப்பாங்குடனே மேலுமந்தமணலைக்கொட்டே. ௧௧௫

கொட்டவேதிமூட்டிபுடத்தைப்போடு பொலிவாகயெருவதுதான்முப்பதாகும், சட்டமுடன்தியாறியெடுத்துப்பாரு சாங்கமுடன்களங்குபோலிருக்கும்பாரு, கட்டமுடனிப்படியே பழச்சார்விட்டுக்கதுமையுடன்தானரைப்பாய்நாலுசாமம், வட்டமுடன்முன்சொன்னமார்க்கம்பாரு வகையுடனேயப்படியேபத்துபும்போடே. ௧௧௬

பத்தானபுடமதுவும்தீர்ந்தபின்பு பாகமுடன்செந்தியதுகளஞ்சிரண்டு, புத்தானரசஞ்சேர்ந்ததாம்பரத்தில் பூட்டியேதானரைப்பாய்பழச்சாற்றுலே, முத்தமுடன்றானரைப்பாய்நாலுசாமம்முக்கியமாய்

பிள்ளைதட்டிகாயவைத்து, சித்தமுடன்ரவிதனிலேகாயவைத்துச் சீர்பெறவேவோட்டிலிட்டுசில்லுமூடே. ௧௧௭

மூடவேவெளிப்புடமாய்போடுமைந்தா முகிழவேவரட்டியது பத்ததாகும்சாடவேதீமூட்டிபுடத்தைப்போடுகாற்றில்லாவிடத்தனிலேபோடவேண்டும், காடவேதீயாறியெடுத்துமைந்தா சாங்கமுடன் பின்னுமந்தபாகம்போல, கூடவேகெந்தியைத்தான் களஞ்சிரண்டு கூசாமல்தான்போட்டுஅரைத்திடாயே. ௧௧௮

அரைக்கையிலே பழச்சாற்றாலரைக்கவேண்டும் அப்பனேகாற்சாமமரைக்கவேண்டும், குறைபாமல்முன்போலப்புடத்தைப்போடு குடிலமுடன்புடமதுவும்வன்பதாகும், நிறைபானநிறமதுவுமங்கிருந்தால், நினைவாகவின்னமொருவொன்பதப்பா கறைக்காணப்பாகமது பிசகிடாமல்கண்டிதமாய்ப்புடம்போடச்சிவக்குந்தானே. ௧௧௯

தானனசெந்தூரம்பதனம்பண்ணு தகைமைபெறவெள்ளிதனில் பத்துக்கொன்று, கோனனகுருவருளால்வணங்கியேதான் கொற்றவனேதானுருக்கிகுருவொன்றீய, தேனனகருபோலயிருக்கும்பாருசெம்மையாம்வோட்டிலிட்டுஊதிப்போடு, பானனமாற்றதுவு மெட்டதாகும் பான்மையுடன்பாடிவைத்தேன்போகர்தாமே. ௧௨௦

போகருடவாக்கனுவும்பொய்யாதப்பா பூகலத்தில்வாதிகளோகாணப்போறார், சாகமுடனிம்மருந்துவியாதிபோக சாங்கமுடன் சதாரூபவியாதிகசெல்லாம் பாகமுடனனுபானம்கொண்டபோது பறக்குமடாவியாதியெல்லாம்பஞ்சாய்த்தானும், வாகமுடன்தேகமது கற்றூணுதும்வல்லுடலமிறுகியதுமேனியாமே. ௧௨௧

மேனிடசம்காந்தியதுமிகவேயின்னும் மிக்கான்நரைதிரையுமற்றுப்போகும், காணிமையாய்கண்ணிரண்டுங்குளிர்ந்துகாணுமகடுங்காளைக்கொப்பானசூரனவாய், பாணிமையாம்பருவமதாசதாகாலந்தான்பாலிக்குமெட்போதுமாயுளுண்டாகும், காணிமையாய்காலாங்கிநாயர்பாதம் நண்ணியேசாற்றனுற்றேன்நவிலக்கேளே. ௧௨௨

கேளேதான்யோகமுறைநடத்தவேண்டும் கெடியானஸ்தூலத்தைநிறுத்தவேண்டும், விளேதான்போகாமல்வாசியாரு விண்காலம்போனாலேயோகம்பாழாம், தாளேதான்சிதாபாசய்கண்ணவேண்டும் சாதாகாலம்சிற்பரத்தைப்பற்றவேண்டும், ஆளேதான்மனோன்மணியைப்பணியவேண்டும் ஆத்தாளைப்பூசித்தால்வாமூலமே. ௧௨௩



## தாம்பரசெந்தூரம்.

வாழலாமின்னமொருகருமானங்கேள் வகையுடனேநாதாக்கள் கைமறைப்பு, நீழலாமெத்தவுண்டுகேள்மைபாரு நிலையானவாதவித்தைகூறுதமல்ல, காழலாம்வெகுகோடிசித்தர்வேதை மாண்பரோவொருபோதுளவுசொல்வார், தாழலாம்பலநூலுபார்த்திட்டாலும் தாரணியில்யெனைப்போலபகாரன்றே. ௧௨௪

அன்றானசாஸ்திரங்கள்யானும்பார்த்தேன் அடிமைப்போல்சொன்னவர்களாருமில்லை, குன்றானபர்வதம்போல்பாடிவைத்தார் கோடானகோடிநூலனேகமுண்டு, தான்றானநூலெல்லாமறைப்பேயாகும் தகைமையுடன்காண்பதுவுமெளிதேயாகும், பன்றானமானிடர்கள்சுட்டுகெட்டுப் பாரிலேமாண்டவர்கள்கோடிதாமே. ௧௨௫

கோடியாம்தாம்பரத்தின்தட்டேயப்பா கோளாறுவாராமல்சுத்தித்தேதான், வாடியேதிரியாதேமகிபாகேளு வணக்கமுடன்தாம்பரந்தான்சேர்த்தானானு, கூடியேதாளகமும்சேர்தாணெட்டு குணமுடனேபொடியாக்கிசெப்பக்கேளு, நாடியேதளவாயாஞ்சட்டிதன்னில் நாதாக்கள்சொன்னபடிநாட்டிடாயே. ௧௨௬

நாட்டவென்றால்சட்டியிலேதாம்பாதி நலமுடனேகீழ்போட்டு நவிலக்கேளு, வாட்டமுடன்தட்டுகளைமைபம்வைத்து வகையுடனே மேலுமந்தப்பொடியைப்போட்டு, தேட்டமுடன்மேற்சட்டிகொண்டுமூடி தெளிவுடனேசீலைபதுவலுவாய்செய்து, காட்டமென்றவாலுகையிலடுப்பிலேறிக் கனமுடனேபெண்சாமமெரித்திடாயே. ()

எரிக்கையிலேதட்டுதான்களங்கமாகி யெழிலானவெட்டைபதுபோலாம்பாரு, நெருக்கமுடன்களங்குதனையெடுத்துக்கொண்டு நெடிதானகளங்குக்குநேரேருகம், பருக்கமுடன்றான்சேர்த்துப்பகரக்கேளும், பாகம்போல்பழச்சாறுவிட்டுமைந்தா செருக்கமுடன்குழிபம்மிதன்னிலிட்டுச் சிதராமல்தானரைப்பாய்சாமமெட்டே. ௧௨௮

எட்டானசாமமதுபரைக்கும்போது யெழிலானவெட்டைபோலாகும்பாரு, கட்டானதாம்பரத்தைப் பிள்ளைதட்டி கருவாகாவிதனிலேகாயவைத்து, தட்டானதாம்பரத்தின்பிள்ளைதன்னைத் துறையுடனேவகல்தனிலேயிட்டுமைந்தா, சட்டமுடன்குழிதனிலே மணலைத்தொட்டிசாங்கமுடன்குழிநடுவில்பிள்ளைவையே. ௧௨௯

வைக்கவேமேலுமந்தமணலைக்கொட்டி வள்மாகத்தீமூட்டிபுடத்தைப்போடு, மெய்யக்கவேகோழியென்றபுடத்தைப்போடு மேன்மை

பெறத்தானெடுத்துப்பின்னுங்கேளு, சைக்கவேபத்துமுறையிப்படி யேபோடு சார்பாகச்செந்தூரங்கறப்புகாணும், மொய்க்கவேசெந்தூரமெடுத்துக்கொண்டு மொழிபெறவேதாரமதுகளஞ்சிறண்டே. ()

ரண்டானதாரமுடன்களங்குசேர்த்து நெடிதானபழச்சாறுயிட்டுமைந்தா, திண்டானசார்சாமரைத்தபோது திறமானம்யினம்போலாகும்பாரு, உண்டானபில்லைபதுலகுலாச்செப்து வுத்தமனேரகிதனிலேகாயவைத்து, கண்டானவகலிலிட்டுச்சீலைசெய்து கனமுடனேபத்துதெருவில்புடத்தைப்போடே. கஙக

போடவேசெந்தூரமேகவர்னம் பொங்கமுடன்றனெடுத்துப்பார்க்கும்போது, நீடவேசெந்தூரந்தானெடுத்து நீட்சியுடன்பின்னுமரிதாரங்கூட்டு, கூடவேதான்போட்டுப்பொடித்துமைந்தா குணமுடனேதானரைப்பாய்பழச்சாற்றாலே, வாடவேதானரைத்துப்பில்லைதட்டி வளமுடனேரவிதனிலேகாயப்போடே. கஙஉ

காய்ந்தபின்புமருந்ததனைப்புடமேபோடுக் கருவாகயிப்படியேவைந்துபத்துபோடு, சாய்ந்ததொரு கைபாகம்செப்பாகந்தான் தட்டாமல்போட்டுவரச்சிவப்புகாணும், மாய்ந்ததொருதாம்பரத்தான்சிவக்காவிட்டால் மறவாமல்பின்னுமஞ்சிபத்தேபோடு, தேய்ந்துமேசெந்தூரமென்னசொல்வேன் தேசத்திலகிட்டாதுசிவயோகிக்கே. ()

யோகமென்றால்பாகமெதைமறவாமற்றான் யொளிவாகப்புடந்தோறும்தாரம்காலாம், பாகமுடன்களஞ்சிரண்டுபோட்டரைத்துக்கருவாகப்புடம்போட்டச்செந்தூரிக்கும், சாகமுடன்செந்தூரமென்னசொல்வேன் சட்டமுடன்வெள்ளிதனில்பத்துக்கொன்று, தேகமுடன்தானுருக்கிகுருவொன்றீய வீரானசெந்தூரம் வேதைபாமே ()

வேதையாம்மார்க்கமதுவெட்டும்பாரு வேகமுடன்செந்தூரம்தேனிலுண்ண,பாதையாம்சூரணங்கள்லேகியங்கள் பலமானகிருதங்கள்வெண்ணைதன்னில், தாதையாம்தானருந்தவியாதிரூபம் சண்ணுமேதாம்பரத்தின்செந்தூரத்தால், பேதையாம்தேகமது கற்றாணுகும்பொங்கமுடனிம்மருந்துகுருவுமாமே. கஙரு

குருவானமருந்ததனைப்பதனம்பண்ணு குவலயத்தில்குஷ்டமுதல்ரோகிக்கப்பா, திருவானமருந்ததனைதின்றவப்பா திறமுடனேமண்டலந்தான்கொண்டபோது,பருவானதேகமடாகற்றாணுகிப்பாரினிலேவெகுகோடி காலம்வாழ்வாய், தருவானகாலரிஷி சித்தன்போலதாரணியில்நீயுமொருசித்தனுமே. கஙசு



சித்தானசித்தர்முனிசெய்யும்வேதைதேசத்திலேரோனுஞ்செய்யமாட்டார், யத்தியுடன்காலாங்கிநாயர்பாதம் பட்சம்வைத்துவடியேனுமுங்களுக்காய்முத்திபெறயடிவணங்கிசுவாமிதன்னை முடிவணங்கியிந்நூலைவெளியில்விட்டேன், புத்திமானுயிருந்தால் யெல்லாஞ்சித்திபூதலத்தில் முழுமக்களறியார்தாமே. கஙஎ

தாமானசாத்திரங்கள்மிகவுஞ்சொல்லி தாரணியில்சித்தனைப்போல்பினத்திக்கொண்டு, பேமானியாகவல்லோதிரிந்துகொண்டு யோனசாத்திரங்கள்பொய்யுமாக்கி,சாமானியவான்போலவாதுபேசிசதாகாலம்யோனியிடவாசையாலே, சாமானியசைதன்னியவாசையாலே கடைகெட்டு இடைகெட்டுகலங்கினாரே. கஙஅ

கலங்கியேபேடிபோல்நாமங்கொண்டு கதிதனக்குயிடைபூறுசெய்துகொண்டு, மலங்கியேதப்புரவாயெல்லாந்தோற்றுமானிலத்தில்மதிப்பற்றுமானங்கெட்டு,தவங்கெட்டுபதிகெட்டுபமுங்கெட்டுதாறுமாறுகவேகஞ்சாகொண்டு, புலம்பியேமதுபானமிகுதியாகி பூதலத்தில்கெட்டலைந்தார் கோடிதாமே. கஙகூ

கோடியாமிருந்தவரையானுமப்பா,பூதலத்தில்குளிகைகொண்டுபறக்கும்போது, வாடியேயிருந்தவரைகண்டேன்கோடி வாய்பிறப்பைக்கண்டறிந்தேன்லக்கோயில்லை, நாடியேகாலாங்கிநாயர்பாதம் நான்தொழுது பாடிவிட்டேன்மறைப்பையெல்லாம், தேடியேயலையாமல்மாணுகேளு தேசத்தில்சித்தனைப்போல் வாழ்குவாயே. சச0

நாகவெள்ளி,

வாழ்கவேநாகமதுசேரைவாங்கி நலம்பெறவேயினுப்பைநெய்யில்சுத்திசெய்து, மூழ்கவேகண்ணாடிக்கல்லினாலே முயலவேதானரைத்துக்கங்கிபூட்டி, தாழ்கவேகோழியென்றபுடந்தானப்பா தப்பாதுமூசைக்குள்நாகம்வைத்து, எழ்கவேபொடிதனையேதூவிமைந்தாயெழிலாகவுருக்குபோல் சீலைசெய்யே. கசக

செய்யவேசீலையதுகாய்ந்தபின்பு செப்பினேன்கோழியென்றபுடந்தானப்பா பையவேபோட்டபின்புயெடுத்துப்பாரு பாங்கானநாகம்துமஞ்சளேகி, மெய்யவேகண்ணதுவுமிகவொடுங்கி மிக்கானநாகமதுவெளுமையாகும், பெய்யவேயிப்படியேபத்துமுறைபோடுபோரனவெள்ளியதுபேசலாமே. கசஉ

பேசலாம்சுக்கானின் கல்லையப்பா பெருமையுடன்சேரதுவும்தானெடுத்து, ரசமுளாறுவகை செயநீர்தன்னால் நலம்பெறவேதா

னரைப்பாய்நாலுசாமம், பாசமுடன்பில்லைதட்டிக்காயவைத்து பாக முடன்வோட்டிலிட்டுசீலைசெய்துநேசமுடன்ரவிதனிலேகாயவைத்து நிதமுடனேசெபுடத்தில் போட்டிடாயே. ௧௪௩

போடவேபற்பமதுபென்னசொல்வேன் பொலிவானதவளமது நிறம்போலாகும், கூடவேகாகத்துக்கங்கிபூட்டி குமுறவேமூசையில் கீழ்மேலிட்டு, தேடவேகுழிவெட்டிப்புடத்தைப்போடு தெளிவாகு ம்நாகமதுதெளிமையாகும், நாடவேபத்துமுறையிப்படியே போடு நலமானதுய்யானுக் கொப்பதாமே. ௧௪௪

ஒப்பானவெள்ளியது பத்துக்கொன்று ஒங்குபெறசயவெள்ளி கூட்டியாடு, செப்பானபாத்திரங்களிதற்கீடல்ல சேனவிதவாபரண மிதனாலாகும், உப்பானகாய்ப்புக்குவெளுமைகாட்டும் ஓகோகோநா தாக்களதீதவித்தை, மெய்பானசாத்திரங்கள்வுளவுபார்த்துமேன்மை யுடன் பாடிவைத்தேன் பண்பாய்த்தானே. ௧௪௫

தானானசாத்திரத்தில்வனேகம்பேர்கள் சட்டமுடன்பாடிவைத் தார்வேண்டுமார்க்கம் வேனானவெகுநூலில் வெள்ளிசொன்னார்வெளி யாகச்சொல்லவில்லையிந்தயாகம், பானானகாலாங்கிதனைவணங்கிப்பா டினேன்சத்தகாண்டம்பண்பதாக, கோனானகுருவருளால் வடியேன் தானும்குவலயத்தில் யீரைத்துவிட்டேன்மாந்தற்காமே. ௧௪௬

ஆமேதானின்னமொருகருமானங்கேள் அப்பனே வெள்ளியென் றநாடிக்சாரம், தாமேதான் துலாமதுவுமொன்றேபாகும்சார்பான வேங்கையுடபாலாலாட்டி, வேமேதான் சாமமதுவரைத்துமேதான் விநயமுடன்பில்லைதட்டிக்காயவைத்து, நாமேதான்சொன்னபடிவ கலில்வைத்துநலமபெறவேசீலைபதுவலுவாய்ப்பண்ணே. ௧௪௭

பண்ணியேகோழியென்றபுடத்தைப்போடு பாகமுடன்பற்பம துபகரப்போமோ, வண்ணமுடன்பற்பத்தைவெள்ளீயத்தில் வாகா கக்கொடுத்திடவேநீரைவாங்கும், திண்ணமுடன்பத்துக்குவொன்று தாக்குதிரமானவெள்ளீயம் நீரைவாங்கி, வண்ணமுள்ளவெள்ளியது சொல்லப்போமேவளமையுடன் நாதாக்கள்கூத்துதானே. ௧௪௮

கூத்தானசைபர்கம்செய்பாகந்தான் குவலயத்தில்கோடியுண்டு யார்தான்காண்பார், மாத்தானசாத்திரத்திலமறைத்துவைத்தார் மா ர்க்கமுடனடியேனுந்தாள்பணிந்துவேத்தானகாலாங்கிநாயர்பாதம்வி ருப்பமுடன்போற்றியல்லோதெழுதேன்யானும், நேர்த்தியுடன்பாடி வைத்தேன்போகர்யானும்நேர்மையுடன்மாணக்கள்பிழைக்கத்தானே



தானானமுனிவர்களில் சித்தர்தாமும் தயவாகப்பாடிவைத்தார் வெகுநூலப்பா, கோனானகமலமுனிரிஷிகள்தானும்கொட்டினார்கோ டிமுறைஎன்னைப்போல, தேனானசாத்திரத்தில்யென்னைப்போல தெ ளிவாகச்சொல்லவில்லையாருமப்பா, வானானயென்னூலில் ஒன்றும் பொய்யா வளமையுடன்போகரிஷிவண்மைபாரே. ௧௫௦

வண்மையாம்போகரிஷிமார்க்கம்பாரு வாகாகதன்னுடையநூல் கள்யாவும், உண்மையாம்சித்தருக்குமரிஷிகளுக்கும் ஒருபோதும் பொய்யாதுமெய்யேயாகும், தண்மையாய்பாடிவைத்தேன்சத்தகா ண்டம் சதாகாலமானிடற்குவுறதிநூலாம் திண்மையாம்குருநூலா மேழாயிரந்தான் இரமாகவாய்த்ததுவேசீனத்தார்க்கே. ௧௫௧

சீனமென்றால்தேசமதுபுதுமைமெத்தசிறப்பான நூல்களெல்லா மங்கேயுண்டு, வானமுடன்தானிருக்குமதிசயங்கள் வாகானபூலோக மர்மமெல்லாம், ஞானமுடன்பாடிவைத்தார்கமலர்தாமுமாநிலத்தில் பாடிவைத்தார்கோடாகோடி, தானமதுயிருக்குமிடம்யாமும் கண் டோம்தாரதலத்திலேவமைபோலகாண்பாருண்டோ. ௧௫௨

போகர்வானத்துமீன்.

உண்டானவெள்ளியதுபோக்குச்சொல்வேன்ஓகோகோநாதாக் கள்பரிசவேதை, பண்டானவெள்வங்கம்சேர்தானொன்றுபாளமென் றநக்கார்கல்சுன்னம்போடு, திண்டானகாடியென்றசுண்ணம்போடு திறமாகதானுருக்கியெடுத்துப்பாரு, வண்டானவெள்வங்கம்நீரைவா ங்கியாகான வெட்டையதவாகும்பாரே. ௧௫௩

வெட்டையாங்ருநமதுவொக்கச்சேர்த்து வெடியுப்புசுண்ணமது நாலாய்ச்சேர்த்து, சட்டமுடன்தானுருக்கிஎடுத்துப்பாரு கசடற்ற துய்யானும்வெள்ளியப்பா, மட்டமென்றவெள்ளியதுலுக்கச்சேர்த்து, மதிப்புடனேசரியெடையாய்சேர்த்துப்பாரு திட்டமுள்ளரூபாய்க் குசரியதாகும் திறமானவெள்ளியதுபோக்குத்தானே. ௧௫௪

இரசசெந்தூரம்.

போக்கென்றவிடுகாதேபுண்ணியாகேள் புகலுகிறேன்சூதமெ ன்றசெந்தூரத்தை, தீயென்றகெந்தகத்தின்தயிலமப்பா திறமானபா ஷாணத்தயிலங்கூட்டி, காயென்றகருஞ்சூரைத்தயிலஞ் சேர்த்துகரு வாகத்தானரைப்பாய்சேரைசூதம், பேயென்றசைக்காயின்தயிலத் தாலே பிசகாமல்தானரைப்பாய்சாமமெட்டே. ௧௫௫

44

எட்டானசாமமதுவரைத்தபோது என்மகனேகூகமதுமடிந்துபோச்சு, கட்டானகூகமதுமாண்டபோதுகாணலாம்கோடிவித்தைச்சூதத்தாலே, இட்டமுடன்சூதத்தைபில்லைதட்டியெழிலானரவிதனிலேகாயவைத்து, மட்டானஓட்டிலிட்டுச்சீலைசெய்து மார்க்கமுடன்புடம்போட சிவக்குந்தானே. கருசு

சிவப்பானசெந்தூரம்பதனம்பண்ணு சிவசிவாவெள்ளிதனில்பத்துக்கொன்று, நயப்புடனேதானுருக்கிகொடுத்துப்பாரு நலமானமாற்றதுவுமெட்டதாகும், பயமுடனேபத்துக்குஒன்றுதங்கபாகமுடன்தானுருக்கிவாரடித்து, புவமுடனேபுடமதுவுமூன்றுபோடபுண்ணியனேமாற்றதுவும்பசுமையாமே. கருள

பசுமையாந்தங்கமதுயென்னசொல்வேன்பாரினிலேநாதாக்கள்செய்யும்வேதை, நிசமுடையபுண்ணியற்குவாய்குமல்லால் நிஷ்டூரப்பாவிகட்குவாய்க்குமோசொல், வசுவானபசுபதியோகியோர்க்குவாய்த்தாலேகுருபூசைக்கொவ்வும்வேதை, சிசுபாலற்கொப்பானசிவயோகிக்குசிறப்புடனே வாய்க்குமிதுதிண்ணந்தானே. கருஅ

## திரிகுளிகைசெந்தூரம்.

தானனதிரிகுளிகைசொல்லக்கேளு சாற்றுகிறேன்ரசமுடனேதாரங்கெந்தி, கோனனகுருபறன்றனருளினாலே கூறுவேறுறுவகைசெயநீர்தன்னால், வேனனநாற்சாமமரைத்தபோது மிக்கானசெயநீருல்கூதமாண்டு, பானனச்றக்கிரண்டுமொன்றாக்கூடி பதமுடனேமெழுகதுபோலாகும்பாரே. கருகூ

பாரேதான்மெழுகதனைவட்டுதட்டிபாகமுடன் ரவிதனிலேகாயவைத்து, சீரேதான்ஒட்டகலில்வைத்துமூடி சிறப்புடனேசில்லிட்டுச்சீலைசெய்து, நேரேதான்மணல்மறைவில்புடத்தைப்போடுநேர்ப்பாகவாறினபின்னெடுத்துப்பாரு, கூரேதான்செந்தூரமென்ன்சொல்வேன்கோடியதோர்மேகவன்னமாகுந்தானே. கசுo

வன்னமாஞ்செந்தூரமிப்படியேபத்துவளமுடனே போட்டுவரவியாங்கேளு, சுன்னமென்றகடுங்காரமிகவுமாகி சுடரொளியாங்காந்தியதுமெத்தப்பற்றி, வின்னமில்லாகரடுகளுமில்லாமற்றான் மிக்கானபூப்போலவுதிருங்கண்டீர்; சொன்னபடியின்னுமந்த செந்தூரத்தைச்சுகமுடனேதாரைத்துதங்கக்கூட்டே. கசுக

கூட்டையிலேபத்துக்குஒன்றுதங்கம்குணமாகத்தான் சேர்த்துவரைத்துமைந்தா, வாட்டமுடனுறுவகைசெயநீர்தன்னால் வளமாகத்தானரைப்பாய்நாலுசாமம், நீட்டமுடன்ரவிதனிலேகாயவைத்துநினைவாகப்பின்னுமதைப்பொடியதாக்கி, தேட்டமுடன்காசியென்றகுப்பிதன்னைத் தெளிவாகச்சீலையதுவலுவாய்ச்செய்யே. கசுஉ

செய்யவேகுப்பியதுகாய்ந்தபின்பு திறமுடனேசரக்கெல்லாம்குப்பிக்கேற்றி, பையவேமாக்கல்லால்கொண்டுமூடி பாங்குபெறசீலையதுவலுவாய்ச்செய்து, மெய்யுடனேதளவரையாஞ்சட்டிதன்னில் மேன்மையுடன்மணலதனைக்கொட்டிமைந்தா, உய்யவேகுப்பிநடுமையம்வைத்து உத்தமனேமேலுமந்தமணலைக்கொட்டே. கசுஉ

கொட்டையிலேகுப்பிவாய்தெரியமூடி குடிலமுடன்மேற்சட்டிக்கவிழ்த்துமைந்தா, திட்டமுடன்சீலையதுவலுவாய்ச்செய்து திறமுடனேவாலுகையாமடுப்பிலேற்றி, சட்டமுடன்தானெரிப்பாய்எட்டுசாமம்சார்பாகவாறினபின்னெடுத்துப்பாரு, வெட்டவெளிக்காருடாவிடத்திலப்பா விருப்பமுடன்குப்பியைநீவைத்துப்போற்றே.

போற்றவேமூன்றுநாளானபின்பு பொங்கமுடன்குப்பியைதிறந்துபார்க்க, ஏற்றமுள்ளசெந்தூரமிகவும்பார்த்து யென்மகனேகாந்தியதுபுகலப்போமோ, தேற்றமுடன்சேஷாவிற்பதனம்பண்ணு திறமுடையசெந்தூரமுபானந்தான், கூற்றனுக்கிடையின்றிதேனிலுண்ணக் குடிலம்விட்டேகுமடாதிண்ணந்தானே, கசுரு

திண்ணமாம்வெண்ணைதனில்கொள்ளலாகும் திறமானநெய்யிலும்கொள்ளலாகும், வண்ணமுள்ளசூரத்திலகொள்ளலாகும் வாகானலேகியத்தில்கொள்ளலாகும், எண்ணமுடன்பெய்தவனுபானத்தாலும் எழிலுடனேமண்டலங்கள்கொள்ளலாகும், உண்ணையிலேசகலரூபவியாதியெல்லாம் வுத்தமனேதேகம்விட்டுச்சுண்ணும்தானே. ()

சண்ணுமேமேகமென்றராஜனுக்கு சத்துருவாமிம்மருந்துசாற்றக்கேளு, குண்ணிவிடும்சில்விஷங்கள்யாவனைத்துங் குவலயத்தில்நிற்காதுபறந்தேபோடும், திண்ணமுடன்செந்தூரப்போக்குசொல்வேன் திறமுடையமக்களாயிருப்பாயானால், நண்ணமுடன்வெள்ளிசெம்பில்பத்துக்கொன்று நலமுடனேகொடுத்துருக்கமாற்றெட்டாமே.

மாற்றானவெள்ளிசெம்பையூதிப்போடு மகத்தானவெள்ளியதுமாற்றுமாகி, தேற்றானபசுமையதுவதிகக்கொண்டு தெளிவுடனேமாற்றதுவுமெட்டதாகும், சாற்றவேசிவயோகிசெய்யும்வேதை தாரணியிலாரேனுஞ்செய்யமாட்டார், போற்றவேபுத்தியுள்ளானுவானாகில் பொங்கமுடன்செய்துகொள்வான்வாதியாமே.. கசுஅ

வாதியாய்ச்கலவிதவன்மையெல்லாம் வாகுடனேகண்டறிந்து வளமாய்ச்சொல்வேன், சாதியிலேயொருவனப்பாசன்மார்க்கன்றன் தாரணியில்தானிருப்பான் ஒருவர்காணார், மாதிமையாம்துஷ்டருடன்கூடமாட்டான் மானிலத்திலடக்கமுற்றுவாழ்வானப்பா, சோதிமயங்காணுவான் சுந்தரன்ரான்சூட்சாதிமர்மத்தைவெளிவிடானே. ௧௭௦

விட்டானேயாமானால்தலைதெறிக்கும்வேதாந்தத்தாயவளுமுன்னேநிற்காள், தொட்டதொருவேலையெல்லாந்துகளாய்போகும் தொடருமேவினைதானும்துறத்திக்கொள்ளும், விட்டகுறைநேருமானால் தாமேயெய்தும் வின்னூலில்லாதாக்கள்செய்யும்வேதை, தட்டிபேபருபரியைத்தொழுதுபோற்றி தாரதலத்தில்சித்தனைப் பிறப்பாய்தானே. ௧௭௧

தானனிஷ்டையிலேயிருந்துகொண்டு சதாநிஷ்டைருத்திரநிஷ்டைபாலிநிஷ்டை, கோணனமயேஸ்பரியின்நிஷ்டைதானும் குறிப்பாயபிர்மநிஷ்டைதானேடொக்க, வேனுகையிருந்துகொண்டு சதாகாலந்தான் விருப்பமுடன்ரோசகபூரகமும்செய்து, மானுக்கும்பகத்திலிருந்துகொண்டுமார்க்கமுடன்மூலமதையழுத்திப்பாரே. ௧௭௨

அழுத்திபேகமலமதிலிருந்துகொண்டு அப்படியேபிரமத்தைதக்காணலாகும், வழுத்தவேகுண்டலியில்மூலந்தாக்கி வாகுடனேபிரமத்தைநிஷ்டைகொள்ளு, தொழுகமலினிடனிஷ்டையப்பா தோறுமல் வஷ்டாங்கப்செய்துக்கொண்டு, விழுகவேருப்பகத்தில் வாசிபூட்டிவிஷ்ணுவைசதாகாலம்காணலாச்சே. ௧௭௩

காணவென்றால்வஷ்டருத்திரத்தைக்கேளு கருவானபூரகத்தைக்கும்பகத்தில்பாட்டி, தோணவேவனுகதத்தில்வாசிபூட்டி தொழுதுமேறுத்திரைக்கண்டுபேசி, வினையேசகலபாக்பமும்பெற்று விண்ணிலேவலதுகாலைதூக்கிமைந்தா, கோணவேபாதத்தை நிலத்திற்றூக்கிகுப்புரவாய்கீழேநோக்கி, மாணவேவிசுத்தியிலேயிருந்துகொண்டுமாணிலத்தில்மகிபலைய்வழாலாமே. ௧௭௪

வாழலாமயேஸ்பரனு பாதங்கண்டுவகுப்புடனே நிஷ்டைவந்துமதிறமாய்த்தொட்டு, வீழலாம்சதாசிவத்தின்நிஷ்டைதன்னை விருப்பமுடன்கண்டறிந்துவீழல்போகாமல், தாழவேயோகதண்டைகையிலேந்தி, தளமுடனேவிபூதிதன்னைத்தளமாய்ப்பூசி மாழவேசதாசிவத்தைபணிந்துபோற்றி மயங்காமல்மனோன்மணியைதொழுதுகில்லே.

நிற்கையிலேமனோன்மணியாளமூர்த்மீவாள் நிகருணவமூர்த்தமது கொண்டபோது, துர்கையுடன்காளிமுதல்நின்குவார்கள் துடியா



ணதேகமதுகற்றானுகும், சற்பனைகள்மிகவுடனே வதிகமாகிசதாகாலப்பூரணத்திலகித்துகின்று, உற்புனமாம்மதியமூர்த்த லேகியத்தைவுண்டுமல்லோசதாநிஷ்டைப்பணிகுவாயே. ௧௭௫

மதியமூர்தலேகியம்

பணியவேமதியமூர்தம் சாற்றக்கேளுபாங்கான தெஞ்சாவின்விதைசாற்சேரு, கணிதமுடன்சாதிக்காய்சாதிபத்திரிகருவான கிராம்புடனேடமாட்டியமொக்கு, தணிபவேவமினியுடன் கசகசாவும் சாங்கமுடன்வகைக்குவொருசேர்தான்பாதி, மணிபோலதான் வறுத்துச்சூரணித்துமயங்காமல் தான்செய்யும்வகையைக்கேளே. ௧௭௬

கேட்கவேசர்க்கரையாய் பாகுதன்னில் கெணிதமுடன்சூரணத்தைகொட்டிக்கிண்டி, தட்டிகமாய்நெய்தேனும் விட்டுக்கிண்டிசார்பாகக்கிளறிபல்லோகுளிகைபண்ணி, வாட்முடனந்திசந்திதானருந்வளமுடனேதீபவொளிகண்ணிற்றோற்றும், நாட்டமுடன்சித்தர்முனிரிஷிகள்தாமுய்கானிலத்தில் போகுவதுந்தெரியுமாமே. ௧௭௭

தெரியுமாம்கேசரத்தில்போகுமார்கம்தேசத்தில் வினோதவகையாவுந்தோற்றும், அரியுடனேசிவன்முதலுங்காணலாகும் ஆகாயவதிசவங்கள்யெல்லாந்தோன்றும், பரியொளிபோல்கைலங்கிரிகண்ணிற்காணுப்பாருலகில்நீயுமொருசித்தனுவாய், சரியுடனேகாலாங்கிநாயர்பாதம்பணிந்து மேபோகரிஷிபாடினேனே. ௧௭௮

பாடினேன்சத்தகாண்டமேழாயிரந்தான் பாரிலுள்ளமானிடற்குபண்பதாக, தேடியேகிட்டாதுமிகவாருய்ந்து தெளியுடனேபாடிவைத்தேன்குருநூலாக, கூடியேநல்லோரிடமுஞ்சார்ந்து குவலயத்தில்பெப்போதுமிருந்துவாழ்வாய், வாடியேயலையாதே வுண்மைகண்டுவளமுடனே யென்றாலைவணங்கிபோற்றே. ௧௭௯

வல்லாரைக்கற்பம்

போற்றவேகற்பமொன்றுபுகலக்கேளு பொலிவானவல்லாரையார்காண்பார்கள், ஆற்றவேவல்லாரைக்கற்பந்தானும் வுவனிலேவுண்டவர்கன்மெத்தவுண்டு, நீற்றமுடன்கைபாகம்செய்பாகந்தான் நீனிலத்தில்கண்டவரும்யாருமில்லை, மாற்றமுடன்குருவருள்கள்பெறவேவேண்டும் பெறுவிட்டால்பூவில்லை காயில்லைதாமே. ௧௮௦

இரண்டாவது வல்லாரைக்கற்பம் கருபிண்ட மறிய,

தாமானபூரமதுஞன்றேயாகும் தாக்கானசெல்லமது சண்டேயாகும், காமானஎருச்கன்பால்தன்றைலட்டிக் கிரிவாகமைபோலயா

ட்டிமைந்தா, வேமானகற்புடையமதுக்கிய வெளியாகுமைந்தமாதி க்கற்பந்தானும், சாமானபின்றிவல்லாரைதன்னில்சட்டமுடனிக்கரு வைப்போட்டிடாயே. கஅக

போடவேகல்வமதில்பிட்டுமைந்தா பொங்கமுடன்தானரைப்பா ய்நாலுசாமம், நீடவேதானரைத்துவானபின்பு மினிவாகப்பரணித னிலடைத்துக்கொண்டு, கூடவேகுழிவெட்டிப்பூமிதன்னில் குடில முடன்றான்புதைத்துபின்புகேளு, ஆடவேமண்டலங்கள்சென்றுதா னுல் அப்பலல்லோகாயாதி ற்பமாச்சே. கஅஉ

ஆச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு அப்பனே மதியமூர்தங் கொண்டாயானல், மூச்சடங்கிதன்னிலைபக்காணலாகும் முயலான பூரணத்தைநன்னலாகும், பேச்சென்றவமுர்தவழிகாணலாகும்பே ரானசிவபூசையறியலாகும், பாச்சென்றசத்திசிவங் காணலாகும்பரா பரத்தின்சின்மபத்தின் பற்றநன்றே. கஅங

## செங்கடுக்காய் லேகியம்.

நன்றானபேரொளியைக்காணலாகும் நாதாந்தத்திரவுகோல் கா ணலாகும், குன்றானவேதாந்தக்கற்பமெல்லாங் கோடிக்கு கோடிவ ரைதாணலாகும், தன்றானசெங்கடுக்காய்சேர்தானப்பா தயவுடனே தானிடித்துச்சாற்தானீக்க, வென்றானபாகமிது பத்துமுறைதானும் விரும்பியேதானிடித்துச் சூரணங்கள்செய்யே. கஅச

செய்யவேசூரணத்தைஎடுத்துமைந்தா தினம்போது காடியிலு லரைத்துமேதான், பையவேகுன்றிபிடையுண்டு வந்தால்காலனுங்கி டமேதுசாவுமேது, நொய்யவேதேகமதுகற்றூணாகும் நோக்காடு வாராதுநறுக்கமெத்த, மெய்யவேகாலாங்கிநாயர்பாதம் விருப்புமு டன்றான்பணிந்து விளம்பிட்டேனே. கஅரு

விளம்பிட்டேன்கைபாகம் செப்பாதந்தான் வித்தியாசங்களது மிகவாராமல், குளம்பிட்ட நூல்களெல்லாமிகவாராய்ந்து குறிப்புட னேகண்டறிந்தகற்பமாகும், தளம்பிட்டசதாநூலும் பார்த்தாலென் னசாங்கமுடன்காணுபவன் யோகவானும், அளம்பிட்ட யிதிகாச வித்தையெல்லாம் அறியவனேலோகத்தில்சித்தனுகே. கஅசு

சித்தனுப்பிறந்தாலுங்கீர்த்தியுண்டு தேசத்தில் வெகுபேர்கள் மெச்சுமாண்பன், பத்தனுய்ப்பிறந்தாலும் பதவிண்டு பாருலகில்புனி தனுய்வாழலாகும், பித்தனுப்பிறந்தாலும் வொன்றுநானுன் பே சரியமாட்டாதபுலவனுவான், எத்தனைதான்கற்றாலு மென்னலாபம் நீடுழிசமாதியிலே யிருக்கநன்றே. கஅஎ



## காரிய பற்பம்,

நன்றானயிவ்வமொருமார்க்கம்பாரு நலமானகரியங்கம்சேர்த்தா னப்பா, பன்றானதகடாக்கி செப்பக்கேளுபாங்கான ஆவாரைபஞ்சா ங்கந்தான், குன்றான சாக்கதுவைக் குடுவைக்குள்ளேகுணமுடனே தான்போட்டு தகட்டை வைத்து, அன்றானபொடிமேலே தகடுவை த்து அப்பனே வதன்மேலே பொடியைப்போட. கஅஅ

போடையிலே கீழ்மேலும் பொடியைப்போட்டுப்புகழாகத்தா போட்டுசீலைசெய்து, நீடவேகெசமான குழியைவெட்டி மினிவாகப் புடம்போடக் கரிவங்கந்தான், கூடாதேவெந்ததுவும்காடுமாகிகுடில முடன்பற்பமது சோளம்போலாம், பாடவேயிப்படியேபத்துபுட ம்போடு பாங்கானபற்பமதுதவளமாச்சே. கஅகூ

ஆச்சப்பா பற்பத்தையெடுத்துக்கொண்டு அப்பனேபொரித்த ண்டஞ்சிற்றண்டந்தான், நீச்சப்பா சரியாகவெடுத்துக்கொண்டுநினை வாகவெண்கருவால் தன்னுலாட்டி, மாச்சலன்றிசிறுபில்லையாகத்தட் டிமதிப்புடனே ரவிதனிலே காயவைத்து,தீய்ச்சலென்றகரியோட்டி லிட்டுமைந்தா திரமுடனேகோழிபென்றபுடத்தைபோடே. ககூ

போடவே பற்பமது காறமேறிப்புகழ்ானவெண்மைநிறம்புகல ப்போமே, கூடவேபத்துமுறை யிப்படியேபோடுகுணமானபற்பம துகூறப்போமோ, நீடவேபற்பத்தை யனுபானத்தில்நேர்மையுடன் றானருந்த மேகமெல்லாம், ஓடவேகடல்போகுமென்றுசொல்லி வுத் தமனே போகரிஷி புகன்றவாறே, ககூக

வாறானகயரோகம் சயரோகங்கள் வாகுடனே கிரந்திமுதல்கா ணுதோடங், கூறான பாண்டுடனே வீக்கம்போகும் பொல்லாதசய ரோகம்காமாலைபோகும், கேறானப்வுத்திரங்கள்முளைமூலங்கள்நெடி தானகிரந்தி முதல் சண்ணலாகும், சேறானவெள்ளையொடு சில்விஷ ங்கள் சிறியேயொடுமடாதிண்ணந்தானே. ககூஉ

## மாற்றுயர்வு வேதை.

திண்ணமாமின்னமொருபாகங்கேளு தெளிவாககல்லுப்புபடி தானென்று, வண்ணமுடன் புளியாரை சாற்றினுலேவளமையுடன் றானரைப்பாய் நாலுசாமம் கண்ணமுடன் பில்லைதட்டிக்காயவைத் துக்கருட்குடனே வோட்டிலிட்டுசீலைசெய்து, நண்ணமுடன்பந்தெ ருவில் புடத்தைப் போடுநாதாக்கத்தாயெனக்குச்சொன்னவாறே.

சொன்னபடி யப்படியேரைத்துமைந்தா சுத்தமுடன்ரவியிலிட் டுக்காய்வைத்து நன்னயமாய் சீலைசெய்து புடத்தைபோடு நலம

பெறவேவைத்துபத்துவிப்படியேபோமுன்னுரைத்தபாகமதுபிசகிடாமல் முனையானவுப்பதுவும்சிவக்குமட்டும், பன்னவேபுடம்போடச்செந்தூரிக்கும் பாலகனேசெந்தூரம்பதனம்பண்ணே. க௯௫

பண்ணியேசரக்கொன்றைப்பூவினாலே பாங்குடனேகெந்தகத்தையரைத்துமேதான், நண்ணமுடன்தானரைப்பாய்நாலுசாமம்நலமுடனேவுண்டையதுபுன்னைக்காய்போல், நண்ணமுடன்தோண்டிவிட்டுதுவாரமிட்டு சட்டமுடன்சீலையதுவலுவாய்ச்செய்து, எண்ணியேநாறெருவில்குழித்தயிலமப்பா யெழிலாகவாங்கிடவேஎண்ணையாமே. க௯௬

ஆமேதான் தயிலமதைசெப்பக்கேளு அப்பனேமேற்சொன்னவுப்பைமைந்தா, தாமேதான் மட்டமென்றபொன்னுமேலேதகைமைபெறவாரடித்துப்பூசபூச, வேமேதான்செந்தூரத்தயிலத்தாட்டிவிப்பமுடன்பூசியல்லோபுடத்தைப்போடு, நாமேதான்சொன்னபடிமாற்றுகாணும் நாதாக்கள்செய்கின்றவேதையாமே. க௯௭

மாற்றுயர்வு.

வேதையிலேபின்னமொருபாகங்கேளு மேன்மைபெறலிங்கமதுகட்டிவாங்கி, போதையிலேகாகமொருகட்டிவாங்கி பொலிவாககாகத்தைச்சுத்திசெய்து, யாதையிலேருதமிடைநாகஞ்சேருபாங்காகநாகமிடைவீரஞ்சேர்த்து, ஊதையிலேதானுருக்கியெடுத்துமைந்தா வுத்தமனேசாரயிட்டுஅரைத்திடாயே. க௯௮

அரைக்கையிலேகாற்சாமம்செயநீராகும் அப்பனேவன்னீரைசெப்பக்கேளு, முறையுடனேலிங்கமதுசாறுக்குதாக்குமுனையானலிங்கமதுகட்டிப்போகும், திரையுடனேபாகமதுபிசகாவண்ணம் செப்புகிறேன்காகமதுகட்டிதாக்கி, வரைபோலலிங்கத்தைவுயிநீராலே வளமுடனேயெழைப்பாய்மைந்தாகேளே. க௯௯

தேனேநீலிங்கத்தைதகட்டிற்பூசகிருபையுடனே வோலையளவாகப்பூச, பாயேதான்போகாமல்ரவியிற்போபொலகனேவெள்ளிஎன்றேக்கடித்து, தூளேதாறுகாமல்தகட்டைவாங்கித் துப்புறவாய்காகத்தின்தகட்டின்மேல்சிம், சூளேதான்வைத்துமல்லோசீலைசெய்து துப்பாவாய்வைத்தெருவில்புடத்தைப்போடே,

போடவேகாகமதுவர்ணமிஞ்சி போக்கானலிங்கத்தைக்கட்டிக்கொண்டு, கூடவேலிங்கமதுவேடமற்றுன் குமுறவேவெள்ளியென்றேக்கின்மேலே, மூடவேவர்ணமதுதனலாயேறி மோசமில்லையாறுமாத்தாகும்பாரு, நாடவேரேக்கதனையெடுத்துமைந்தா நயமுடனேகாகருக்கியெடுக்கிடாயே.



எடுத்துமேவாரடித்துப்புடத்தைப்போடு எழிலாகப் புடமதுவும்முன்போலாகும், தொடுத்துமேமுன்போலப் புடத்தைப்போடுதுப்புரவாம்புடமதுவுமதிகமாகி, விடுத்துமேமாற்றதுவுமதிகங்காட்டுமிக்கானபொன்னதுவும்பசமையாகி, அடுத்துமேநாலுக்கோர் தங்கஞ்சேர்த்து அப்பனேவாரடித்து புடத்தைப்போடே. உ0க

புடமாறியெடுத்துப்பார்பொன்னேதங்கம் புஷ்பம்போல்குங்குமநிறமேயாகும், இடமானதங்கமதுபிறப்பேயாகும் தேசத்திலிட்டாதுசிவயோகிக்கு, சடமழியாக்கற்பமதுவுண்டுகொண்டு சதாகாலம் நிஷ்டையிலேயிருப்பாயப்பா, மடமானிறுசைதனை விட்டொழித்து மகிழ்ச்சியுடன் எப்போதும் வாழலாமே. உ0௨

போகர்சினபதியில் அஸ்வமில்லாமல் புகைரதம்ஓட்டியது.

வாழலாம்சித்தர்முனிரிஷிகள்மெச்ச வாகுடனேசினபதி மார்தற்கப்பா, நீழவேபூமிதனில் பரிகளில்லா நெடிதானரதமதுதான்போவதற்கு, தாழவேசூஸ்திரங்கள் சொல்வேனப்பாகருவூரார்சித்தர்முனிகமலர்தாமும், சாழவேயொருவருஞ்சொன்னதில்லை சாங்கமுடன்போகரிஷி சொன்னேன்பாரே. உ0௩

பாரேதான் ராஜாதிராஜர்மெய்ச்சப் பாரினிலேவஸ்வமில்லாவண்டியோட, நேரேதான்சங்கரமுமாரதாகும் நெடிதானபிரியதுமூன்றதாகும், கூரேதான்குறுக்கவட்டம்எட்டதாகும்குறிப்புடனேவடிவட்டம்நாலதாகும், தேரேதான்படிவட்டமூட்டிக்கொண்டு திறமானமேல்வட்டம்பூட்டக்கேளே. உ0௪

பூட்டவேவிரியதுவிட்டங்கொண்டு புகழானகள்ளாணியிரும்புமாட்டி, மாட்டியதோர்யிரும்புக்குவளையமிட்டுமார்க்கமுடன்சத்துபுரம்கம்பிமாட்டி, நீட்டமுடன்நாற்சதுரமத்திவட்டம்நெடியதொருகுழலொன்றுமுனையில்வைத்துவாட்டமுடன்மத்தகஜம் தலையுண்டாக்கிவளமுடனேதலை குழைபில்சில்லுபோடே. உ0௫

சில்லுதனைஎடுத்துமிகப் பூட்டிபார்க்கச் சிறக்கவேமறைகொண்டுதிருவல்பூட்டிப், பல்லுடனேசக்கரத்தில் திருவுபூண்டுபக்கமிருபுறமுமட்டும்குழைகள்விட்டு, மல்லுடனேமல்லணிந்து குழைசிபோட்டுமல்லினதுமேற்புறத்தில் குழைகள்சிற்க, தெல்லுபோல்தகடதனைவுருளைசெய்து தேர்வட்டம்போலாகத் தெரியபூட்டே. உ0௬

பூட்டுகையில்வில்லாணி கள்ளாணியப்பாபுகழான நடுச்சட்டம்திருகுசட்டந்தானும், நாட்டி கமாய்கயிர்போலத்திருகு கம்பிமாட்டி

சட்டங்களில்மூன் றுவட்டபிறை யோலுண்டாக்கி, நீட்டமுள்ளகெஜ நூறுவண்டிரதம்போலகெடிதானசட்டமது வளவுடனேமாட்டு, காட்டவேவகலமதுகெஜமுப்பதாகும் கருணையுடனங்குலங்கள்வரைதப்பா மாட்டே. உ0எ

தப்பாமல்மாட்டையிலே தேர்கொண்டசூட்சம் தாரணியில்போகுதற்குச்சட்டமுடன்கூட்டு, ஒப்பமுடன்காலில் ஒருபக்கமிகவாணி ஒங்குபுகழாணிமேலதிருவல்மிகமாட்டி செப்பமுடனடிவாரக்குழைதனிலேசில்லு, சிரகத்தானமைத்துக்கழுத்துக் கட்டைமாட்டி, செப்பமுடன்சிம்மாடுகட்டைதனில் மத்திரோகதிருவலதுசொருவல்மிகப்பூணே. உ0அ

பூணவேநெடுங்கம்பி யாறுவகைசட்டம் பூட்டியதோர்கம்பிகளிலாறுவகைக்குறுக்கு, தோரணவேமேற்புறமுமடிப்புறமுமப்பா துப்புறவாம்நடுக்குழலில்யிருபக்கமடைத்து, காணவேவாயுவென்றகாற்றதுவுமொடுங்கி, கடையாணிசுழலாணிசுள்ளாணி முடுக்கிமாணவே பின்பக்கம்சட்டிகுழல்வைத்து வதிப்புடனேகொப்பறைபோல்வருளைசெய்யே. உ0௯

செய்யவேகொப்பறையில் வக்கினியும்நிற்க சோரவேவப்புவென்றகொப்பறையின்பக்கம், உய்யவேசகலமதுவும் ஆவியோடொக்கவுற்பனமாய்வாவியது மேல்நோக்கிப்பாய, எய்யவேகணையாதேநெருப்பதனைமாட்ட,யெழிலானவுள்ளாவிமேலாவிகொண்டுபையவேசலமிருக்குமிடந்தனிலேபரவிபறக்குமேமுன்குழலில்பாவிமிகப்போமே.

போகவேகைசுழலல் மறைதிருவலப்பா பொங்கமுடன்ரோவிதன்னில்மிகச்சார்ந்து, பாகமுடனக்கினியின்காற்றதுவு மொடிங்கிபறந்துமேபெருங்குழாதன்னில் மிகச்சார்ந்து, சாகமுடன்சூத்திரங்கள்கண்டுமிகதிருப்பக்கர்ச்சலையா மாவியுடன்பறந்துமிகவோடும்,தாகமெனும்பாணியினால் பாவிழுந்தலெல்லாம்தட்டொடுங்கி குழல்தனிலே தவித்துமிகப்போமே. உகக

போமேதான்பஞ்சபூதமிதி லொடுக்கம்பாரு போக்கானவாயுதனில்தேயுமிகச்சார்ந்து, யேமேதாண்தேயுவிலே வப்புமிகக்கலந்துவேகமுடனுவிதலைவிளைவிக்கும்பாரு, தாமேதான்பிரிதிவினில் வாகாஷமொடுங்கி, தாரணியிலுள்ளடக்கபெட்டிமிகவாச்சுநாமேதான்சொன்னபடிபஞ்சகர்த்தாள் காட்டினேன்தேவரதம்காட்டினேனே. உகஉ



காட்டினேன் நாதாக்கள் கண்டதில்லை கலமுடனே நூலாதிநூல்களெல்லாம், வாட்டமுடன்கண்டறிந்துவுளவுபார்த்துவளமுடனே செய்துவைத்தேன் சினந்தன்னில், தாட்டிகமாய்சினபதி மூன்றுகாதம் தாரணியில் சுத்திவந்து விநோதஞ்செய்தேன், ஒட்டமுனிமையகிரியோராஞ்சென்றேன் ஓகோகோநாதாக்கள்ரிஷிகண்டேனே. ()

கண்டேனே கோடிமுனிசித்தரப்பா கைலங்கிரிவாசரைப்போல் கோடாகோடி, தெண்டமுடனடியேனுங் காலாங்கிதம்மைத் தெளிமையுடனுனினைத்து சித்தர்தம்மை,கொண்டபடிசெனங்களெல்லாமேத்திக்கொண்டுகோர்வையுடனுயிரமாம்ரதங்கள்மாட்டி, அண்டர்முனிராட்சதர்கள்கிடுகிடுக்க அவனியெல்லாஞ்சுத்திவந்தேனன்பாய்தானே. உகச

போகர் உரோமபுரி கண்டது.

தானனரோமபுரி சுத்திவந்தேன் தாக்கான யெண்ணுயிரங்காதமப்பா, வேனனசித்தர்களையேற்றிக்கொண்டு வேகமுடன்தானடத்திவந்தேனப்பா, கோனுன குருசாமி காலாங்கிநாதர்கொற்றவனும்ரோமபுரிராசர்தானும், பானுனசமாதியிடயிடமுங்கண்டேன் பட்சமுடனவ்விடத்திலிறங்கினேனே. உகரு

இறங்கினேன் ராசரிடசமாதி கண்டேன் எழிலானயேசுவிறன்சிஷர்கண்டேன், சுறங்கமுடனிம்மான்வேல்சமாதி கண்டேன்சுத்தனும்பரிசுத்தர்சமாதிகண்டேன், வரங்கொடுக்குமிசுரவேல்சமாதிகண்டேன்வளமுடனேரோமபுரிதேசத்தார்கள், திறமுடனே ரோமபுரிக்கோட்டைக்குள்ளேபோகுவதும்வருவதுங்கண்டேன்தானே. உகசு

கண்டேனே கோட்டை வழிசென்றபோது கடுங்காளையாயிரம்பேர் சூரரப்பா, தெண்டமுடன்யேசுவின்தன்பாதம்போற்றிதெளிவுடனேஞானவுபதேசஞ்சொல்வார்,பண்டிதங்களதி; விசேடமனைத்துமுண்டுபனிரண்டுசிஷவர்க்கச்சமாதியுண்டு, மண்டலத்தில்தானிருக்கும்யேசுதம்மைவணக்கமுடன் வரங்கேட்போர் கோடியாமே. ()

கோடிபேர் சமாதிநிலை தன்னைக்கண்டேன் கொற்றவனும் ரோமபுரிசமாதி யோரம், தேடியேபார்க்கவென்றுபோகும்போது தேர்வேர்தாசரப்பா யிசுரவேலர், நாடியேதபசிகளாயிரம்பேர் நலமுடனேசமாதியது லக்கோயில்லே, கூடியேபார்க்கையிலே விநோதமெத்தக்கூறவேமுடியாது திண்ணமாமே. உகஅ

திண்ணமாம்எழுபத்து தேசங்கண்டேன் திடமுள்ளமாதாவின்தேசம்போனேன், வண்ணமுடன்பூதாவில்கோடாநுகோடிவனந்தனிலேரிஷிகளப்பாசொல்லொணாதே, என்னவேஏசுவின்றன்மகிமை

மெத்தனபேத்துரைத்தார் சீஷர்வர்க்கமனேகம்பேர்கள், சண்ணனுடன் மலையெல்லாஞ் சுத்திவந்தேன் சாங்கமுடன் யீசர்க்குசமாதியுண்டே உண்டான சமாதியிடம் பேரயிருந்தேன் ஓகோகோ நாதாக்கள் சீஷவர்க்கம், கண்டனே வெகுகோடி வதிசயங்கள் கலியுகத்தில் கண்டதில்லை இதுபோலப்பா, தண்டவனந்தானதாண்டி சுத்திவந்தேன்சகலசனசீனபதி மார்க்கத்தாரை, கொண்டுமல்லோ வவரவர்கள் தேசம்விட்டுக் கொப்பனவே திரும்பிவந்தேன்சீனந்தானே. ()

போகர் எருசலேம்பட்டணம் கண்டது.

ஞானமார்க்கமது யின்னஞ் சொல்வேன் தகமையுள்ள எருசலேம்நகரத்திற்கு, வேஞானகாலாங்கி நாயர்பாதம்விருப்பமுடன்றான் வணக்கியடியேன்யானும், பாஞானகுருபரனை வணங்கியானும்பார்க்கவேஎருசலேசம் போகவென்று, மாஞானமாதாவைக் காணவென்றுவணங்கினேனவர்பாதம் தொழுதிட்டேனே. ௨௨௧

தொழுகையிலே வசரீரிவாக்கியந்தான்தொடர்ந்துமேயவரிடத்தில்பிறந்ததாச்சு, எழுந்துமே புகைரதத்தை நடத்திக்கொண்டு ஏகினேன்எருசலேம்நகரத்திற்கு, செழுமையுடன் தேசமெல்லாம்சுத்திவந்துசீர்பெறவே தானிறங்கி யடியேன்தானும், பழுதமிகநோமல் குளிகைபூண்டு பட்ச முடன்மலைமீதிற் சென்றேன் பாரே. ௨௨௨

சென்றுமிகப் பார்க்கையிலே குகைகள்வுண்டு சிறந்ததொருகுகைதனிலே மனுக்குமார்கள், குன்றின்மேல் கோடானகோடி பேர்கள்கொடுத்தபசி யங்கிருந்தார் லக்கோயில்லை, தன்றானநபியுடைய சீஷவர்க்கம்சார்பாகஒருபக்கம் தவமிருப்பார், பன்றானசீஷர்களுமனேகமுண்டு படைபொருத யென்மேலே வந்தார்தானே. ௨௨௩

வந்தாரேநபியுடையசீஷவர்க்கம்வளமையுடன் கோடிபேர்சூழ்ந்தாரப்பா, சுந்தரனேயாரென்றுகேட்கலுற்றார் சுடரொளிபோல்சொரூபமதைகாணும்போது, எந்தனுக்கு பயங்கொண்டுநடுக்கலாகின்மகனேகாலாங்கி சீஷனென்றேன், அந்தமுடன் எந்தனையும்பெரும்பாலாக வாதரித்து கோபமதைதணித்திட்டாரே. ௨௨௪

தணிந்தபின்பு எந்தனையு மெங்கேவந்தாய் தயவுள்ள சிறுபாலா கூறுமென்ன, கனிதமுடனடியேனும் புகைரதங்கள் காசினியில் யாரேனுமதிசயிக்க, துணிவுடனே சித்தர்முனிரிஷிகள்தம்மை சுகமுடனேதானேத்திசினந்தன்னில், அணியணியாய்க் கொண்டுசென்று அனியெல்லாமவரவர்க்கு வதிசயத்தைக் காட்டினேனே. ௨௨௫



காட்டிவந்தேன்சீனபதிதன்னிற் சென்றேன்கடவுளாமேசுவின்றன்காட்சிகண்டேன், வாட்டமுடனபிமார்கள் சீஷர்வர்க்கம் வகையுடனேகாணவென்றுதிரும்பிச்சென்றேன்நாட்டமுடன்புகைரதத்தைமாட்டிக்கொண்டுகலமுடனேயெருசலேமகாணவந்தேன், மாட்டிமையாய்க்குளிகையதுபூண்டுகொண்டு மாநபியைக்காணவென்று வந்திட்டேனே. ௨௨௬

வந்திட்டேநபிபாதங்காணவந்தேன் வாகானசீனவர்க்கள்என்னைநோக்கி, சொந்தமுடனுபசாரனைமெத்தசெய்து தேவனிங்கேயில்லையென்றுவாக்குரைத்தார், எந்தனுக்கும்மனஸ்தாபம்மிகவுண்டாக்கியென்சாமிநபிதனையேகாணவென்று, நொந்துமனந்தானிருக்க சீஷவர்க்கம்நோக்கமுற்றுஎந்தனுக்குவழிசொன்னாரே. ௨௨௭

போகர்மக்காபுரிகண்டது.

சொன்னவுடனடியேனுமடிவணங்கி துணையாகசீஷவர்க்கம்கூட்டிக்கொண்டு, நன்னயமாய்ப்புகைரதத்தில்யேத்தியேதான் நாதாந்தநபிதனைக்காணவென்று, மன்னர்மெய்ச்சுமக்காவாம்புரியைக்காணவகையுடனெநெடுந்தூரம்ரதந்திருப்பி, பன்னாகந்தனிலேராஞ்சென்றுயானும் பட்சமுடன்புகைரதத்தைநிறுத்தினேனே. ௨௨௮

நிறுத்தினேனங்கிருந்தார்சேனைவர்க்கம் நிலையானபுகைரதத்தைக்கண்டபோது, திருத்தமுடன்யோடிவந்தார்கோடிபேர்கள் திரளாளாநபிக்கூட்டமனுர்குவார்கள், பருந்தமலைதனையோரம்சமாதிபக்கம் பதுங்கியேகாத்திருப்பார்சமாதிதன்னில், வருந்தமுடனபிபாதங்காணவென்று வந்திட்டேன்என்றனுமேளனைப்பார்த்தாரே. ௨௨௯

பார்த்துமேநபிபாதம்காணவென்றேன் பட்சமுடன்நோரிக்குட்சென்றேனப்பா, நேர்த்தியாம்நவரத்தினசமாதிக்குள்ளே நேர்மையுடனபியிருக்கசொன்னாரப்பா, தீர்த்தமுடன்ரொட்டியொன்றுயீய்ந்தாரப்பா திறமுடையமனுயார்களாயிரம்பேர், காத்திருந்தேன்நெடுநோமடியேன்தானும், கண்ணெதிரேரூபமதுகண்டிலேனே. ௨௩௦

கண்டிலேன்நபிநாயகன்தன்னைநானேன் காதலேவதரீரிவாக்குண்டாச்சு, அண்டர்முனிராட்சதர்கள்திடுக்கிட்டேங்க அவனியெல்லாந்தாநடுங்கசப்தமாச்சு, தொண்டர்களெல்லாங்கூடியுத்தாலாவை தொழுதுமேபணிந்திட்டாரந்தநேரம், தெண்டனிடும்போதையிலே மனுக்கூடத் துணையாகயானுமொருமனுக்கானேனே. ௨௩௧

மனுக்கர்கந்தானிருந்தேன்வலதுகாலம் யாநபியைக்காணவென்றுஎண்ணங்கொண்டேன், கனுங்கபத்திமுதலானசீஷவர்க்கம் கரை

காணுர்கோடிமன்னர்காணியீவார், பலுங்குடனேபனிரண்டுவாண்டு வாண்டு பாரினிலேசமாதியின்றன்சத்தமுண்டு, பலுங்கையுடசத்த மதுசதாகாலந்தான் பாலிக்குமென்றனும்பண்பதாமே. ௨௩௨

பண்பானசெப்தியல்லோகண்டறிந்தேன் பட்சமுடநபிகாயந்த ன்னைக்காணேன், சண்பானசமாதியிலேமகிமைமெத்த காட்சியுடன் காணுவதுமிகவுமாச்சு, நண்பானநபிக்கூட்டம்கோடிகாவல் நலமான சமாதியிலேயிருப்பாரப்பா, திண்பானமுகம்மதுமார்க்கத்தார்கள் சிற ப்புடனேகண்டேனேகோடிபேரே. ௨௩௩

கோடியாம்பணியணியாய்ப்பார்த்துவந்தேன் கூறவேபோகாதுகு வலயத்தில், தேடியேதிரிந்தாலு மக்காவைப்போல் செகத்திலேவ நீத முள்ளதேசமுண்டோ, நீடியேமகிமைகளுமநேகமுண்டு நீணிலத்தில் யான்சென்றேன்தேசமெல்லாம்,பாடியேகுளிகையதுபூண்டுகொண்டு பாரெல்லாஞ்சுத்திவந்தேன்பண்பாய்தானே. ௨௩௪

பக்கிரியாக்கோபைக்கண்டது.

தானேதான்சினபதியேகவென்று தாழ்ச்சியுடன்உத்தாரங்கே ட்கும்போது, மானேதான்பக்கிரியாக்கோபுதானும் மகாதீட்சைபெ றுகவென்றுவணங்கிஎன்னை, தேனுனகாலாங்கிபாதங்காண தெளி வுடனேஎந்தனுக்குவரமுமீவாய், பானுனகமலமுனிதன்னைக்காண பட்சமுடனிருப்பிடமுஞ்செப்பிடீரே. ௨௩௫

செப்பவென்றுயாக்கோபுஎன்னைக்கேட்கதெளிவுடனேயானுமல்லோவிடையுஞ்சொல்லி, ஒப்பமுடன்புகைரதத்திலேற்றிக்கொண்டு உத்தமனேசினபதிசென்றேயானும், கப்பலெனும்ரோவிமார்க்கமா க்கடேந்தாந்திவுகளுஞ்சுத்திவந்து, மெய்புடனேசினபதி கரையிலப் பாமென்மையுடனிறங்கிவிட்டேன்பாலன்றனே. ௨௩௬

பாலனும்யாக்கோபிசித்தர்தாமும், பட்சமுடன்கமலமுனிதன் னைக்காண, சீலமுடன்றுசோபசாரந்தன்னுல் சிறப்புடனேசமாதியிட ந்தன்னிற்சென்ருர், கோலமுனியானதொருகமலர்தாமும் குவலயத் தில்சமாதியிலேயிருந்தார்ங்கே, ஞாலமுள்ளசித்தொளிவைக்காண வென்று மகிழ்ச்சியுடன்சமாதியிடத்தெருங்கினரே. ௨௩௭

நெருங்கியேகமலரிடசமாதிகண்டார் நேர்மையுடன் யாக்கோபு வணங்கிநின்ருர், கருங்கல்லுக்குள்ளிருந்தசித்தநம்மைக் கண்ணாலே தண்டாராம்யாக்கோபப்பா, உருகவேயடிபணிந்து பக்கிரிதானும்வு



த்தமனர்த்வமுனிபாதந்தொட்டு, தருகவேதாமெனக்குத்தயைசெய் யென்று தாழ்மையுடன் கேட்டாராம் சித்தர்தாமே. ௨௪௦

தாமன யாக்கோபு கேட்கும்போது தயையுடனே கமலமுனி சாற்றலுற்ருர், பூமானம் யாக்கோபு மைந்தாகேளு புகழ்ச்சியுடன் சொல்லுகிறேனுந்தமக்கு, நாமமுடன்தேசமெல்லாஞ்சுத்திவந்தீர் நச தாக்கள் சித்தர் முனிரிஷிகள்தம்மை, தாமமுட னவர்களிடம்வாது பேசிசமர்த்துடனே வென்றுவந்தபாலாகேளே. ௨௪௧

கமலர் யாகோபுக்கு புத்திகூறல்.

கேளப்பாவுலகத்தில் கொடியசித்தர் கோடானகோடியுண்டுயி ருப்பாரப்பா, தன்மையாய் அவர்களிடம்பேசியல்லோசாங்கமுடன் வுளவுகளையறியவேண்டும், ஞானமுடனவர்களுக்குத் தொண்டுசெய் துஎளிமுடன்ஞானத்தைதெரியவேண்டும், வேளாணமையாய் எதிர்த் துமிகவாயாடாதே வீண்வார்த்தை தாமிழுத்து சபிப்பார்தாமே.

சபிப்பாரே பக்குவமாய்நடந்துகொள்ளு சதாகாலமவர்களி டம்பூசித்தேதான், அபிமானம் தான்வரவே நடந்துகொள்ளு அப் போதேயுன்மீதில் கிருபைவைத்து, நபியுடைய மகிமைதனைப் பற்றி யேதான்காதக்கள் மரியாதைசெய்வாரப்பா, கபிலமுனிநெடுங்கால மிங்கேவந்தார் கண்டல்லோசித்தர்களுஞ் சபித்திட்டாரே. ௨௪௩

இட்டாரே சித்தர் முனிரிஷிகள்தாமு மிடையூறுபேசினதோர் தர்க்கத்தாலே, கெட்டாரேகபிலமுனிக்கல்லாய்ப்போனர்கொடியுட னேசித்தர்களுஞ் சமைத்தாரங்கே, கிட்டிருந்துமரியாதிவாவும்பெற் றக்கிருபையுடன் மக்காவுக் கேகுமென்ருர், சட்டமுனிமுதலானே ரிங்குவந்து சாங்கமுடனுபதேசமடைந்தார்பாரே. ௨௪௪

பாரேதான் போகரிடதிரம்வேண்டும் பண்பான விட்டகுறை நேசம்வேண்டும், சீரேதான் காலாங்கி பட்சம்வேண்டும்சிறந்தமுனி பலபேர்கள்கிருபைவேண்டும், நேரேதான்குளிகையது பூணவேண் டும் நீணிலத்தில்பெருமையது கீர்த்திவேண்டும், மேரேதான்கண்ண பிரானருளும்வேண்டு மில்லாட்டானவனியிலே வெல்லார்தாமே.

வெல்லார்க்கு ளென்றுசொல்லி யாசிர்மித்து விதவிதமாய் வேண தெல்தாந் தாமுரைத்து, சொல்லாதுமிகச்சொல்லி சுருபஞ்சொல் லித்துரையுடனே முறையோடுகதையுஞ்சொல்லி, வல்லானகாலாங்கி நாயர்பாதம் வணங்கியே எப்போதுமனதிலுன்னி, மெல்லாவேயுந்த னிடபதியைத்தேடி மேன்மையுடன போகவென்று வுரந்தந்தாரே.

தந்தவுடன் பங்கிரியாக் கோபுதானும்சார்புடனே தம்பதிக்குப் போனாங்கே, அந்தமுடன் காலாங்கி தாள்வணங்கி அப்பவே சீனபதி விட்டியானும், விந்தமுட னதிசங்காண வெளிபட்டேன்சீனபதி தன்னைவிட்டு, சொந்தமுடன் மேருவுக்கு கடைபாகத்தில் சூரியனார் தாமிருக்கும் மிடங்கண்டேனே. உசஅ

போகர் சூரியர்வனம் பார்த்தது.

கண்டேனே வனந்தனிலேமகிமைமெத்தக் கணடவர்கள் விண்டவர்களாருமில்லே, அண்டமுனி ராட்சதர்களசுரரள் கூட்டம் அணியணியாய் என்னைவந்துசூழ்ந்துகொண்டார், தண்டவனந்தன்னிலே யான்குளிகைபூண்டு தரணியிலிறங்கினதைப்பார்த்தாரங்கே, கொண்டல்வண்ணமேகங்கள் கர்ச்சிப்பாலே கோடானகோடிவதிசயங்கண்டேனே. உசகூ

அதிசயங்கள் மெத்தவுண்டு வங்கேதானும் அப்பனே வசுராக்கள் கூட்டமப்பா, பதியைவிட்டு பதிதேடி வந்தவன்யார் டாதகனையிருக்கிறனென்று சொல்லி, துரிதமுடன் யெந்தனிடமிட்டவந்துப்புரவாயரென்று வினவிகேட்க, நிதமுள்ள போகரிஷியடியேன் தானும் கலங்கியே திடுக்கிட்டு நின்றிட்டேனே. உரு0

நின்றேனே கிடுகிடுத்து பயந்து யேங்கிநெடுமூச்சுதமெறிந்து பயமுமுற்று, குன்றருகேநின்று விட்டேனடியேன்தானும் கூச்சலுடனசுரர்கள் கிட்டியேதான், சென்றுமேயென்னை எடுத்து விழுங்க வந்தார் சோருமல்யானுமல்லோவார்த்தைபேசி, வென்றுமேகாலாங்கிநாயர்பாதம் விருப்பமுடன் றாள்வணங்கி பணிந்திட்டேனே. ()

பணிந்தேனே எந்தனுக்குப்பட்சம்வைத்துப்பாரிலுள்ளவினைதமெல்லாம்கார்ணபித்தார்கள், துணிவுடனே சூரியனின்வனங்களெல்லாஞ்சுத்தியே வலசாரியாகவந்தேன், அணிபெறவேயாளியுடவனமுங்கண்டேன், கணிதமுடன் பூமிமுதலமுனையுங்கண்டேன்காலாங்கிநாதருடகடாட்சந்தானே. உருஉ

போகர் தாதுலேகியம்.

தானனவின்னமொரு மார்க்கம்பாரு தாக்கானதாதுபுஷ்டிகுளிகைகேளும், வேனைவபேரீச்சங்காய் தானசேரு மிக்கானவுமத்தின் விரைதான்சேரு, பானனகஞ்சாவின் விரைதான்சேரு பாகானமாதுளையின் விரைதான்சேரு, தேனைன கொட்டைவிரைசேர்தானப்பா தெளிவானவத்திவிரை சேர்தானென்றே. உருங



ஒன்றானவிரையுடனேயத்திவித்து ஒளிவான்ஆவின்றன்வித்துவாகும், நன்றானதுத்தியிடவித்துவாகும் நலமானசூரியிடவித்துவாகும், தன்றானவாவாரைவித்துவாகும் தாக்கானவெட்பாலைவித்துவாகும், பன்றானகார்போகவித்துவாகும் பாங்கானவாதுமையின்வித்துவாமே. உருக

ஆமேதான்காரையுடவித்துவாகும் அப்பனேகொன்றையிடவித்துவாகும், தாமேதான்புரசையிடவித்துவாகும தயவானகொத்மல்விவித்துவாகும், வேமேதான்நீர்முள்ளிவித்துவாகும் வியர்வானகுரையுடவித்துவாகும், காமேதான் பூனையிடவித்துவாகும் கறுப்பானபாளையிடவித்துவாமே. உருஉ

வித்தானவெள்ளரியின்வித்துமாகும் விதமானகாசியுயின்வித்துமாகும், சத்தானவரைக்கீரைவித்துமாகும் சார்பானகுலாமல்லிவித்துமாகும், சுத்தானவாலையின்றன்வித்துமாகும் சுடரொன்றதாய்ப்பாகல்வித்துமாகும், சித்தானதேற்றானின்வித்துமாகும் சிறப்பானகருங்கொள்ளுவித்துமாமே. உருங

தானனபூசனியின்வித்துமாகும் தனியானயெட்டியின்றன்வித்துமாகும், பானனமுருங்கையிடவித்துமாகும் பாகானமுள்ளங்கிவித்துமாகும், கோனைவரசினிடவித்துமாகும் குணமானசோகியிடவித்துமாகும், தேனைனதாமரையின்வித்துமாகும் தெளிவானவழிஞ்சியிடவித்துபாரே. உருச

பாரேதான்சாரத்தின்பருப்புகூட்டி பாங்கானகசக்சாதானுங்கூட்டி, நேரேதான்சாதிக்காய்சாதிபத்திரி நேர்பான வால்மிளகு சுக்கோடேலம், சாரேதான்கிராம்புடனேமிளகுகூடசார்பானலவங்கமென்ற பட்டைதானும், வேர்பானபூமிசர்க்கரையின்மூலம் விரைவானமருட்டியென்றன் மொக்குமாமே. உருரு

பிசினிவகை.

மொக்கானகருவேலம் பிசினியாகும் முனையானவெள்வேலம்பிசினியாகும், தாக்கானசாலன்றன் பிசினியாகும் தகையானமுருங்கையுடபிசினியாகும், செக்கானமாங்கனியின் பிசினியாகும் சிறப்பானவத்தியின்றன்பிசினியாகும், சுக்கானவிசுக்கோவின் பிசினியாகும் சுகமானவாலன்பிசினியாமே. உருசு

பிசினுடனேகருங்காலிபிசினியாகும் பிசக்கில்லாபூதத்தின் பிசினியாகும், நசிதமுள்ளகுங்கு மத்தின்பிசினியாகும் நலமானகாட்டா

த்திப்பிசினியாகும், உசிதமுள்ளபலாமரத்தின்பிசினியாகும் உத்தமனேவூஞ்சனுடபிசினியாகும், சுசிதமுள்ளவிளாவினுடபிசினியாகும் கருவானகசகசா பிசினுங்காணே. உருஎ

பூவகை.

காணவேபூவினிடமார்க்கம்பாரு கருவானமுருங்கையிட பூவுமாகும், தோணவேயாவாரைப்பூவுமாகும் திறையானதென்னம்பூசாமந்திப்பூ, மாணவேமல்லியிடபூவுமாகு மகத்தானவிலாவினுடபூவுமாகும், சாணவேதாழையுடபூவுமாகும்சார்பானதாமரையின்பூவுமாமே

ஆமேதான்விலாமிச்சுபூவுமாகும் அப்பனேமாதுளையின்பூவுமாகும், வேமேதான்வேம்பினிடபூவுமாகும் கடிதானசெவ்வல்லிப் பூவுமாகும், நாமேதான்பூவகையின்ரசமுஞ்சொன்னோம் நலமானசெம்பூரான்பூவுதாமே. உருக

மூலவகை.

தாமானமூலவகைசாற்றக்கேளு தாக்கான தண்ணீர்விட்டான் கிழங்குதானும், காமானபனையினிடமூலமாகும் கருவானகருபபினிடமூலமாகும், சாமானசெங்கொட்டிவேரினோடு சார்பான கருந்துளசிவேருமாகும், வேயானயிம்பூராவேருமாகு மிக்கானசெம்பாளைவேருமாமே. உசுo

மாமிஷவகை.

வேருனமாமிஷமாமடைக்கலந்தான் வேகமுள்ள உடும்புமுயல்கலைதானாகும், வாருனமுட்பன்றி மயிலுமாகும் வாகானசெம்புரவிவான்குறியுமாகும், தூரானகாடைகவுதாரியாகும் துறைமேயும்கொக்குடனேபுறாவுமாகும், தாராவாம்பெட்டையுடன் செஞ்சேவல்தானும்சாதாவாம்குறும்பாட்டு யிறைச்சிபாரே. உசுக

இறைச்சியாம்விலங்குடனே யித்தனையுங்கூட்டி எழிலாகவெயிலுலர்த்திச்சூரணித்து, முறையுடனேவொவ்வொன்றில் சேர்தானப்பாமுயற்சியுடன்தானெடுத்து சேர்க்கக்கேளு, குறையாமல்முன்சொன்னசரக்கைஎல்லாம் கூட்டுமுறைதப்பாமல்ஒன்றாய்க்கூட்டி, நிறையுடனேரசவகையுந் தப்பாவண்ணம் தினவுடனேநெய்தேனிற் கிண்டிடாயே. உசுஉ

கிண்டையிலேசர்க்கரையுஞ்சரியாய்ச்சேர்த்துக் கிருபையுடன்மெழுகுபதம்தனிலிறக்கிபண்டிதமாய்நெய்தேனும் கூடக்கூட்டிப்பாகமுடன்தானிறக்கிகுளிகைசெய்து கண்டிதமாய்மண்டலந்தானந்தி



சந்திக், கருவாகத்தின்றுமல்லோ கூடும்போது வண்டினம்போல்கலவியதுமிகவுமாகி மங்கையருமானிலத்தில் நடுங்குவாரே. உசுங

நடுங்குவார்மானிலத்தில் பெண்களெல்லாம் காணுவார்புருஷாளைக்கண்டபோது, கடுஞ்சோபவதிகமுடன் காதல்கொண்டுகர்ச்சனையுமிகவுண்டாய்கதிப்புகொண்டு, விடுமானும்கலையுடனேகலந்தமான்போல் விடாய்ப்பட்டு மன்மதன்போல்காதல் பூண்டு, தொடுமாதர்நான்குவிதசாதியோரைத்தோறுமலனுபவித்துப்பெயர் கொள்வீரே.

கொள்ளவென்றால்பத்தியங்களில்லையப்பா குணமுடனேவண்மையுள்ளபதார்த்தமெல்லாம், தள்ளவேபோகாது சதாகாலந்தான் தாரணியிலுண்டவற்குப்பலமேமூனே,விள்ளவேயுண்டாகுங்குளிகையப்பா, விண்டலமுமண்டலமுமிடங்கொள்ளாது, உள்ளபடியிக்குளிகையார்தான்செய்வார்உத்தமனே கருவாளிசெய்வான்பாரே. ()

போகர் அஷ்டகிரி பர்வதங்கண்டது.

பாரப்பாவின்னமொரு மார்க்கம்பாரு பாங்கானமகமேருகிழக்கேயப்பா, நேருகத்தானிருக்கும்பர்வதந்தான் நேர்மையுள்ளவஷ்டகிரியென்பார்சித்தர், சார்வாகயானுமல்லோ குளிகையிட்டு சட்டமுடன்சினபதிவிட்டுயேகி, காரானகதிரோனின்வனமுந்தாண்டி கடினமுடன்மலையோரம்சென்றேன்தானே. உசுசு

சென்றேனேயடிவாரத்தருகிலப்பா திரளானகோடிமுனிசித்தருண்டு, குன்றினிடம்வுட்சென்றேன்யானுமங்கே குறிப்பானகுத்துக்கால்ஒன்றுகண்டேன்,பற்றியெனும்பெருச்சாளியாகனத்தில் பாங்குடனேகணபதியும்வீற்றிருக்க, வென்றிடவேகுத்துக்கல்பிள்ளையாரைவேண்டினேன்போகரிஷிவேண்டினேனே. உசுஎ

கணபதி சமாதிகண்டது.

வேண்டியேநிற்கையிலே கணபதிதானும்விருப்பமுடன் போகரைதான்வளப்பங்கேட்டார், தாண்டியேவளமெல்லாந் தான்கடந்துதகமையுடன்வருவதற்குநீதியுண்டோ பூண்டமனதுறுதியினால்வந்தாய்நீயும், பூலோகபானிடனும்வரலாமோதான் மாண்டுமேபோவதற்கு சித்தர்தாமும், மன்னவனேதான்சபிப்பார்பெருமைபாரே. உசுஅ

பாரேதான்என்றதுமேகணபதிதானும் பாங்குடனே போகரிஷிதிடுக்கிட்டேங்கி,நேரேதான்கணபதியைச்சாஷ்டாங்கித்துநிலைமைபெறசுவாமி எனக்கெதியேதென்ன, சாரவேஎன்மீதில்பட்சம்வைக்

துச் சாங்கமுடன்எந்தனுக்கு உபதேசித்து, சூரு மிருக்குமிடங்காணவென்று சுந்தாரும் வாக்களித்தார் சூட்சந்தானே. ௨௬௯

சூட்சமுடனுபதேசமருளும்பெற்று சுடரொளியாம் பத்மாசுரனையுங்காண, தாட்சியுடனிரண்டாங்கால்வரையுமேறி தண்மையுடன் முதற்கோபுரவாசல்நின்றேன், காட்சியுடன் சூானதுஸ்தலமுங் கண்டேன், கைலாசசட்டமுனிசமாதிகண்டேன், மாட்சியுடன் கைலாசமுனிதானங்கே மார்க்கமுடன் சமாதிநிலையறிந்திட்டேனே. ௨௭௦

அறிந்திட்டேன் சட்டமுனிபாதங்காண அவ்விடத்திலசிலநேரம்நின்றேன்யானும், தறிந்திடவேசித்தர்முனி கோடாகோடி தகைமையுடன் கொலுக்கூடமங்கிருந்தார், செரிந்திடவேயடியேனைக்கண்டபோது சேனைதிரள்கூட்டமுடன்கிட்டிவந்தார், புரிந்திடவேசிறுபாலனெங்கேவந்தீர் புதுமையுடன் கேட்கலுற்றார் சித்தர்தாமே. ௨௭௧

தாமானசித்தர்முனிகேட்கும்போது சாங்கமுடன் காலாங்கிதனைநினைந்து, வாமமுடன்குருசாமிகாலாங்கிதம்மை வளமையுடன்தானினைத்துதிக்கலுற்றேன், ஓமெனவேநாதாக்கள் கேள்விக்கல்லோ உத்தமனுமடியேனுங்கால்நடுங்கி, சாமெனவேசினபதி தன்னில்யானும்சட்டமுடன் குளிகைகொண்டு வந்திட்டேனே. ௨௭௨

வந்திட்டேனென்றலுமே சித்தர்தாமும் வணக்கமுடனிரண்டாங்கால்வரையிற்கொண்டு, முந்திட்டுமூலரிடபாதங்காண முனையான சமாதிபீடம்நிற்கும்போது, கந்திட்ட தேவரிஷிக்கொப்பாஞ்சித்தர் கருவானதிருவாசர் படிகார்ப்பார்கள், தந்திட்டவாசலது திறக்கவென்றுதாட்சியுடன் தேவரிஷிவினவிட்டாரே. ௨௭௩

வினவையிலே சமாதியதுதான்திறந்து வேகமுடன்வசரீரிவாக்குண்டாச்சு, தினகரன்றன்னொளிபோலேவடிவங்கண்டேன் திகழானசட்டமுனிதன்னைக்கண்டேன், மனமுறிகிஎன்மீதில் கிருபைவைத்து, மாட்சியுடன்ஞானோபதேசஞ்சொன்னார், அனல்கண்டமெழுகதுபோல்நெஞ்சந்தானும் அப்பனேமனமுருகிவழுந்திட்டேனே. ௨௭௪

வழுந்திட்டபோதையிலேசட்டர்தாமும்வகையுடனேவாக்களித்தார்யடியேனுக்கு, தொழுதிட்டபாலாநீசினந்தன்னில்தோற்றமுடன் குளிகையது தலவாய்பூண்டு கழுகுடனேவல்லூறு பாந்தாற்போல கருணைபெறவெந்தனிடங்காணவந்தீர், தழுவியேசித்தரும்மைகண்டு பேசிதாரணியிற்கல்லாகசபிப்பார்தானே. ௨௭௫



தானனசித்தருடவுளவுகாணீர் தாரணியில்ரிஷிமுனிவர் மர்மங்கோடி, வேஷகநல்லவர்போல் நேசிப்பார்கள் விருதாவாய் வாதுமிகப்பேசியல்லோ, கோஷகருநிந்தை கூறுவார்கள் குடிகெடுக்குஞ்சித்தருண்டுதுவலயத்தில், தேஷனவமூர்தமது யீவாரப்பா தெறியாமல் கருவழியாற்கொல்லுவாரே. ௨௭௬

கொல்லுவாரவர்கள் பதிசெல்லவேண்டாம் கொடிமுடியுஞ்சித்தரப்பாகோடியுண்டு, வெல்லவேசமாதியிடந்தானழைப்பார் விருதுமிகப் பேசியல்லோசாபமீவார், செல்லவே ஞானத்தின் வழிகேட்பார்கள் சேருனமுப்பூவின் மார்க்கங்கேட்பார், புல்லவேநாதத்தின் முறைகேட்பார் புகழானவுறுக்கினத்தின் கிடங்கேட்பாரே. ௨௭௭

கேட்கையிலே தூாநின்றுவார்த்தைகேளு கெடியான கும்பகத்திலிருந்துக்கொண்டு,நீட்டமுடன் வஷகதத்தைமேலேநோக்கி நெடுந்தூரங் காணிறுத்திவூணிப்பாரு, பூட்கமல லட்சுமியும் பொருந்திநிற்பாள் புகழானவிசுத்தியிலே யெரிப்பாரு, தாட்கமலத்தாள் திறந்து யோகம்பார்த்துச் சதாகாலந்தாரணியிலகுவாய்வாழே. ௨௭௮

வாழவென்றால் வெகுகோடிகாலம்வாழ்வாய் வாகான கற்பமது தெரிந்துக்கொண்டு, நீழவேகாயசித்தி மாயசித்தி நெடுங்காலம் தானறிந்து நிலைத்துவாழ, மாழவேயோகநிலையறியவேண்டும்மகத்தானவிசுத்திதனை சுழுத்தியிலேமாட்டி, சாழவே சடாக்ஷரத்தை மேலேநோக்கி சதானந்தங் கணபதியை பூசிப்பாயே. ௨௭௯

பூசிக்கக்கணபதியுங் கந்தன்தானும் புகழாகவாணியுடன்மனமுவந்து, நேசித்துவாலையுடன் நிரூபிதன்னைநேர்மையுடன் கண்டறிந்து நிட்சயித்து, ஆசையுடன்பிர்மான லாகிரிதன்னில் அப்பனேவிசுத்தியிலிருந்துக்கொண்டு, காசையென்னும் பொன்னாசை தனைமறந்து காசினியில் சித்தனைப்போல் வாழலாமே ௨௮௦

சித்தான சித்தனைப்போல் வர்ழவென்றால் செகதலத்தி லின்னமுண்டுகாட்சியப்பா, கத்தனும்பிர்மாவின் பதியைக்காண பகருகிறன்மூன்றுங்கால் வரைதானப்பா, மூத்தமுடன்நீர்சென்று பார்த்துவந்தால் மோசமில்லையின்னம்வெகு கெவினியாவாய், சுத்தமுடன் கைலாசநாதர்தாமும் சூட்சமுடன்றுமுரைத்தார் திரும்பினேனே. ()

பிரமசமாதிகண்டது.

திரும்பியேகுளிகையதுபூண்டுகொண்டு தீரமுடனடியேனுமேலேசென்றேன், குரும்பான சித்தர்களாமநேகம்பேர்கள் கூடியேவெகுபேர்கள் வந்தாரப்பா, இரும்பான சித்தரப்பா யானும் கண்டேன்

எழிலாக எந்தனையுமாரென்றூர்கள், சுருப்புடனே காலாங்கிதனை நினைந்து துரிதமுடன்போகவென்று வசனித்தேனே. ௨௮௨

வசனித்த போதையிலேவடியேன்மீது வாகுடனே களிகூர்ந்து கூறலுற்றார், துசனித்து சமாதியிடம் கொண்டுசென்றார், தோற்றமுடன்பிரமாவின் வாசல்கண்டேன், நிசமுனேகோட்டைக்குள் சுரங்கம்கண்டேன்நெடிதானசுரங்கத்தின்வழியைக்கண்டேன், புஜமுடையகிங்கிலியருயிரம்பேர் புனிதமுடன்கொலுவிருந்தார் ரிஷிகள்தாமே

தாமானரிஷிமுன்னே சென்றேன்யானும் சதகோடிசூரியர்போல்சமாதிக்குள்ளே, பூமானும்பிரமாவு முள்ளிருந்துபிரியமுடன் எந்தனிடம்வார்த்தைசொன்னர், காமானமாகவல்லோ வடியேன்தானும் கைகட்டிமுன்னின்றுவார்த்தை சொன்னேன், தேமானபிரமாவுமெந்தனுக்கு தெளிவாகதானுரைத்தார் பிரமந்தானே. ௨௮௪

பிரமானசாமியார் எந்தன்மீது பிரியமுடன்பட்சமுற்று கேட்கும்போது, திரமுடனேவடியேனுங்கால்நடுங்கித்தெளிவாக யானுரைத்தேன்கோடிவண்ணாம், பரமானங்கண்டல்லோகுளிகைபூண்டு பட்சமுடன்தமதிடத்தில் வந்தேன்சாமி, சிரங்குவித்து நமஸ்காரமிகவுஞ்செய்து திடமுடனே உத்தாரங்கேட்டிட்டேனே. ௨௮௫

கேட்டேனே பிரமாவுமனமுவந்து கிருபையுடன் எந்தனுக்கு வழியுஞ்சொன்னர், கோட்டமுடன் சீனபதிதேசத்தாற்கு முனுக்கமுள்ளவதீதமென்ற வித்தைதன்னை, தேட்டமுடன் வுளவுமுதல் எல்லாஞ்சொல்லி தேசத்தில் சித்தியென்ற மர்மந்தன்னை, காட்டியேவிட்டதொரு வண்மைஎல்லாங்கண்டோரேயாமானுல்சபிப்பார்காணே.

காணவேலோக மெல்லாஞ் சித்தாய்போகும் கைலாசங் கானுவதும்சூட்சமாகும், நாணவேநாதாக்கள் கைமறைப்பை நாட்டமுடன் கொட்டிவிட்டாய் கோடாகோடி, மாணவே குளிகையதுபூண்டுகொண்டுமகத்தான தேசமெல்லாஞ் சுத்திவந்தீர் வேணவே விநோதமென்றகருவியெல்லாம் வெட்டவெளிபாயாகி வீணுய்போச்சே. ௨௮௭

போச்சென்று விடுகாதே புண்ணியாகேள்புகலுகிறேன் காலாங்கால்வரைதானப்பா, மாச்சென்ற வியாசர்முனி சமாதியுண்டு மகாகோடிரிஷிகளெல்லா மங்கிருப்பார், ஆச்சரியமானதொரு மகிமையுண்டுஅதுக்கப்பால் கிள்ளைவனந்தானுமுண்டு, பாச்சலென்ற தபகோடிரிஷிகளப்பா பாரவனந்தானிவிருப்பார் சொல்லொண்ணதே. ()



சொல்லவென்றால் நாவில்லைபாவுமில்லை சோதியுடன் மலைமீது தோற்றங்கானும், வெல்லவேசோதிரிஷி வியாசர்தானும் விநோதமுடனங்கிருப்பார் கொலுக்கூடந்தான், புல்லவேசித்தர்களின்கூட்டவர்க்கம் பூலோகமிடங் கொள்ளாததீதமெத்த, பல்லவே கொங்கணரின்கூட்டத்தார்கள் பகரவே முடியாதுபண்பதாமே. ௨௮௯

பண்பான நாலுபக்கம் கோட்டைவாசல் பளிங்குமணி மண்டபங்களங்கங்குண்டு, இன்பான தடாகங்கள் குகைகளுண்டு திடமான குண்ணுகளில் தவசிருப்பார், கண்பானதபசியிடம் யானுஞ்சென்றேன்கருத்துடனே சித்தரெல்லா மெனைக்கண்டார்கள் வண்புடனேயடியேனும்தான்பணிந்து வணக்கமுடன் குருவணக்கமோதிட்டேனே.

ஓதவே காலாங்கிதனைநினைந்தேன் உத்தமனே யடியேனும் வார்த்தைசொன்னேன், நீதமுடன்யானுரைத்தமொழியுங்கேட்டுநித்திலங்கும் வியாசர்முனியாரென்றூரே, வேதமுநிகூறினதோர்மொழியைக்கேட்டுவேகமுடன் காலாங்கி சீஷனென்றேன், போதமுடன் எந்தனுக்குவேதயாகும புகட்டினர்வேதரிஷிபுகலத்தானே. ௨௯௧

புகலவே வேதத்தின் சூட்சாசூட்சம் புகழானவஷ்டகர்மம் யாகமெல்லாம், நிகலவே யோகத்தின் மார்க்கந்தானும் நெடிதான குருபாதசேஷமந்திரம், சகலவே சூக்குமதின் சூட்சாசூட்சம தசாங்கமுடன்மேலேறி நிற்கலாகும், அகலே பரவெளியைக் காணலாகும் அப்பனே கேசரத்திலிருக்கலாமே. ௨௯௨

இருக்கலா மஞ்சாங்கால் வரைதானாகும் எழிலான கோட்டையதுருத்திரகோட்டை, பெருக்கமுடன் காறுகுகைகளுண்டுபேறுனகல்லாறுதீயாறுண்டு, சருக்கமெனும் நாதாக்கள் சங்கமுண்டு சாயுச்சியபதவியென்றுஞ் சொல்லலாகும், குருக்கதனில் ரசக்கிணறு கோடியுண்டு குருவான யீசுரன்றன்விந்துவாமே. ௨௯௩

விந்தானரசமதுதான் பொங்கிப்பொங்கி விசையுடனேதீயாற்றில்பாயும்போது, தொந்தமுடன் காறுற்றினேரமப்பா துறைமுகத்தில்சத்திஎன்ற கெந்தியுண்டு, விந்துடனேசத்தியது சேர்ந்துக்கொண்டுவீராகி தீயாற்றினக்கினியாலே, சந்தமுடனுறவாகி சிவப்புமாகி சார்பாகசெந்தூரஞ் செனிக்குந்தானே. ௨௯௪

செனித்ததொரு செந்தூரஞ்செல்லப்போமோ திறமான சித்தர்முனிரிஷிகள்காவல் பனித்தடங்கண்வேகமதுவ திகம்கொண்டுபாரி

லேமுப்பூவைப்போலேபூர்த்து, தனியாகக்காசமுடன் வீறுகண்டுதா
க்கானசெம்பினிட கோட்டையெல்லாம் வனிகனைப்போல் பழுத்துமி
கவீறுகொண்டு, வாகான தங்கமது போலேகாணும் கனியான கோட்
டையெல்லாந் தங்கமாகும் கதிரோன்போல்பிரகாசம் காணும்பாரே

காணுமே நாதாக்கள் சித்துதாமும் காட்டினார்மகிமைகள்மெத்
தவுண்டு, தோணவே வரைக்குள்ளே செல்லும்போது துறையான
சமாதிமுகம் கண்டுசென்றேன், வேணவே ருத்திரனார் சமாதிபக்கம்
விட்டார்க ளெந்தனையு முனிவர்தானும், நாணவே யடியேனும் காலா
ங்கிதம்மை நலமுடனேதாள்பணிந்து நவின்றிட்டேனே. ௨௯௬

நவின்றிட்டேன்ருத்திரர் சமாதிபக்கம் நயமுடனே தலைவாசல்
நிற்கும்போது, துவின்றிட்டசமாதியதுதாள்திறக்க துலங்கவே ருத்
திரனார்குருவைக்கண்டேன், புவின்றிட்டதிருமுகத்தை பார்க்கும்போ
துபொலிவான சோதியொளி மின்னல்போலாம் கவின்றிட்ட தேகம
துகூச்சவிட்டுகண்காணுசோதிதன்னில் சொக்கிப்போச்சே. ௨௯௭

போகையிலே ருத்திரனுங்கண்டுஎன்னைப் பெட்புடனே மனதி
ரங்கியெனையாரென்ன, சாகமுடன் காலாங்கி சீஷனென்றேன் சட்ட
முடன் சொல்கையில் ருத்திரர்தாமும், பாகமுடனெந்தனுக்குவரமு
மீய்ந்தார் பட்சமுடன்வரம்பெற்றுசித்தர்பக்கம், சோகமுடனிற்கை
யில்சித்தர்தாமும், சோதித்துமலைபோகச் சொன்னார்தாமே. ௨௯௮

சொன்னவுடனடியேனுங் குளிகைபூண்டு சோதித்துமலைமீதில்
சென்றபோது, அன்னமெனும்பட்சியைநான் கண்டேனங்கே அன்பு
டனேவன்னமது கண்டபோது, நன்மையாஎந்தனுக்கு வன்னந்தானு
ம்நலமுடனே ருத்திரர் மகிமைதன்னை, பன்னயமாய்தாம் உரைத்து
எந்தன்தன்னைப்பட்சமுடன் முதுகேற்றிப் போகலாச்சே. ௨௯௯

முதுகின்மே லெந்தனையு மேற்றிக்கொண்டு முனையான மலைமு
கவில்கொண்டுசெல்ல, கதும்புடனே யானுமங்கே யிறங்கினேன்யா
ன்திரவனார்தோற்றமது காணவில்லை, உதும்பானவிருள்மூடி பனிக
ள்நிற்கும், வுயர்ந்தமலைசுற்றிலுமேசித்தரப்பா கதும்பனுடன் நிற்கிற
தைக்கண்டேன்யானும் தாடகையாள் சமாதியது சொன்னார்தாமே.

தாடகையாள்சமாதி.

சொன்னாரேதாடகையாள் சமாதிதன்னைசொரூபமென்ற ருக்கு
மத்தைக்காணவென்று, நன்னயமாயாறுங்கால் வரைதானப்பா நலமு



டனேயான்சென்றுநிற்கும்போது, வன்னமதுவாய்திறந்து கூறிற்ற
ங்கேவளமையுடன் தாடகையின்மார்க்கந்தன்னை, வின்னமிலாதானு
ரைத்ததெந்தனுக்கு விகற்பமுடனுரைத்திடவே மயங்கினேனே. ()

மயங்கினேன் காலாங்கிதனைநினைந்தேன் மார்க்கமுடன் ராவண
ன்றன்ரணக்களத்தில், தயங்கமுடன்தாடகையாள் பங்கங்கெட்டுத்
தாரணியில்சமாதியதுபூண்டபோது, நயங்கமுடனஷ்டகிரிபர்வதத்
தில்சுரூபமுடன்தாடகையாள் சமாதிகண்டேன், தயங்கியே மேல்வ
ரையிற்சென்றபோனேன் தாக்கானசித்தர்களைகண்டேன்யானே.

கண்டேனேபலகோடிரிஷிகள்மார்க்கம் கருத்திலே தானினைந்
துபூசித்தேதான், மண்டலங்கள்சுற்றியல்லோகுளிகைகொண்டு மா
னிலத்தில்வெகுகோடிவதிசயங்கள், தண்டலங்கள் விண்டலங்கள்மு
ழுதுஞ்சுற்றிதாரணியில் குளிகைகொண்டு பறந்தேன்யானும், பண்
டேனேசமாதிபுரம் சுற்றிவந்தேன், பாரினிலேதாடகையாள் கதை
கேட்டேனே. ௩௦௪

கேட்டவுடனேழாங்கால் வரைதானப்பா கெடியாகமேல்வரை
சென்றபோது, நீட்டமுடன் சடாயுவனமங்கேகண்டேன் நேரானவ
னமுகத்தில்வீரபத்திரன், வாட்டமுடன்சமாதியதுதன்னைக்கண்டே
ன்வளமானதாள்வாசல் பூட்டிருக்கும், கூட்டமெனும் ராட்சதர்கள்
பூதகூட்டம் பெருமையுடன்சமாதியிடம் நிற்பார்பாரே. ௩௦௫

பார்க்கையிலேவீரபத்திரன்சமாதிதானும் பாங்குடனேவயிரக்
கல்பச்சைக்கல்லாம், தீர்க்கமுடன்சமாதியது திறக்கவென்றால் திற
னானகாவலுடன்திறக்கவேண்டும், மூர்க்கமுடன்ராட்சதர்கள் முன்
னேநின்றுமுடிசாய்த்துகாங்கவித்துவணங்கிநிற்பார், ஆர்க்கவேபோ
கர்தமுனிகளாலும் வஷ்டகிரிபர்வதத்தின் மகிமைதானே. ௩௦௬

மகிமையுடன்வீரபத்திரன்சமாதிதன்னில் மதிப்புடனேஓங்கார
ச்சத்தம்கேட்டேன், பகிதனும்சீஷவர்க்கம் பக்கம்நின்றார் பரிவான
வீரபத்திரன்வார்த்தைசொல்வார், சகிதமுடனுத்தாரஞ்சொன்னார்வ
கேசட்டமுனிபக்கமதுசமாதியுண்டு, துவிதமுடனெந்தனுக்குஞான
மார்க்கம் துப்புரவாய்போதித்தார்ரிஷிகள்தாமே. ௩௦௭

தாமேதான்போதனைகள்யாவுங்கேட்டு சாங்கமுடன் எட்டாங்
கால்தன்னிற்சென்றேன், வேமேதான்மேல்வரைசென்றபோது விய

ர்வானருத்திரகாலன் தவசிருப்பான், சாமேதான் தவநிலையைக்கண்ட
போது சாஷ்டாங்கம் நாள்பணிந்து கரங்குவித்து, காமமுடன்காலா
ங்கிநாதரைநினைந்து நாதரிஷிபதாம்புயத்தை நாடினேனே. ௩௦௮

நாடினேன் ருத்திரகாலன் றன்னைத்தானும் நாட்டமுடன் கண்ட
ல்லோ தெரிசித்தேதான், தேடியேயவர்பாதந்தொழுதுநின்று நீரமு
டன்காலனெதிர் நின்றேன்யானும், வாடியேநின்ற வெங்கைக்காலன்
தானுமதிப்புடனே சிறுபாலயாவென்றார்கள், கூடியே போகரிஷிபடி
யேன்தானுங்குளிகையிட்டு வஷ்டகிரிகாணலாச்சே. ௩௦௯

காணவேவஷ்டகிரி தன்னில்நின்றேன் கைலாசமிதற்கீடு சொல்
லப்போமோ, நாணவேகாலனவன் சமாதிபக்கம் நாதாக்கள் கோடி
பேர்தவசிருப்பார், வேணபடிவுபசார மதிகங்காட்டும் வெறிலான
காவனிடவதிதமெத்த, மாணவேகாந்தமென்ற கோட்டையுண்டு மக
த்தானசித்தர்களை சொல்லப்போமோ. ௩௧௦

சொல்லவென்றால் காஞ்சனமா மலையிற்றன்னை சுடரொளிபோ
ல்சித்தொருவர் யிருப்பாரங்கே, நல்லதொருசமாதியது வஞ்சனக்கல்
நலமானவஞ்சனத்தினுள்ளிருந்து, புல்லவேலோகத்தி னதிசயத்தை
ப்புகட்டிவார் முனிவர்க்கும் சித்தருக்கும், செல்லவே செந்தூரக்கர்
டொன்றுண்டு செகத்தினிலீசனன்றி காணார்தாமே. ௩௧௧

காணவென்றாலின்னம்வெகுவதிசயங்கள் கண்டேனே கல்லென்
றவெள்ளைக்கல்லில், மாணவேவுள்ளிருக்குமரவை தானப்பா மண்டல
த்தில்கண்டதில்லை மாந்தரங்கே, தோணவேபிரகாசமானசோதி சுட
ரொளிபோல்வயிரக்கல் கூறப்போமோ, நீணவேநாதாக்கள் காண்ப
தல்லால் நீணிலத்தில்காமிகட்கு கிட்டாதன்றே. ௩௧௨

அன்றானசடாயுவுட வனத்தில்தானும் அகிகாயன்சமாதியது
யிருக்கக்கண்டேன், தன்றானசமாதிமுன்னே நின்றபோது கடவுள்ள
வதிகாயன்வாக்குரைத்தார், குன்றானமலைதேடி குகைகள்தேடி குளி
கைகொண்டுமலை யேறிவந்ததென்ன, நன்றுகாணினியுந்தான் கேட்
டபோதுகலமுடனே யானுரைத்த வண்மைகேளே. ௩௧௩

கேட்டவுடனடியேனுங்கிருபையோடு கெவனமுடன்காலாங்கி
நாதர்தம்மை, நீட்டமுடன்தானினைந்து கூறலுற்றேன் நெடுர்ரும
ருத்திரனார்காலனுக்கு, வாட்டமுடனஷ்டகிரிகாணவென்று வாகுட
னேமலையேறிவந்தேனென்ன, மாட்டிமையாய்ருத்திரனார்பெர்தனுக்
[illegible] சொன்னார்தாமே. ௩௧௪



சொன்னவுடன்குளிகையது பூண்டுகொண்டு சுற்றியேபார்த்து
மங்கேயிருந்தபோது, மன்னனுமரிச்சந்திரன்பட்டன்தானும் மகப
தியான் கொலுக்கூடசமாதிதன்னை, பன்னவேபார்க்குகைக்கு வருகி
ற்சென்றேன் பாராளுஞ்சமாதியிலேவாக்குண்டாச்சு, நன்னமா எந்
தனுக்கு ஞானோபதேசம் நவின்றிட்டார்ராஜமன்னர் நவின்றிட்
டாரே. ௩௧௫

போகர்மோடிவித்தை.

நவிலவேவிநோதமென்றவித்தைதானும் நாதாக்கள் செய்ததில்
லைநாட்டிலேதான், புவியுடனேகாலாங்கி நாயர்பாதம் புகழ்ச்சியுடன்
தான்வணங்கிசாற்றலுற்றேன், பவிமதியாஞ் சந்திரன்போல் காரந்த
ன்னைபக்குவமாய்தான் பொரித்துமுட்டைபோல், குவியலுடன்தான்
சிவிவளவதாகசொற்றவனே முட்டைபோ லெடுத்துக்கொள்ளே.

கொள்ளவேமுட்டைதனையெடுத்துக்கொண்டு கோபாலாசொல்
லுகிறேன்குறிப்பாய்கேளு, விள்ளவேவாயிரம்பேர் கூட்டத்தார்கள்
விருப்பமுடன் றான்பார்த்துகளிப்புற்றேங்க, மெல்லவேமணலதனை
பூமிதன்னில்மென்மையுடன்கொட்டியேமேடைசெய்து, பள்ளமதாய்
குழியொன்று நடுமையத்தில்பாங்குடனே தான்பரவலாகச்செய்யே.

செய்துமேசெனங்களெல்லாம் பார்த்துயேங்க சிறப்புடனேபொ
ரிகாரமென்னுமுட்டை, கைதனிலேதானெடுத்து மைந்தாபாரு கரு
வாகமுட்டைதனை எடுத்துக்கொண்டு, வெய்தமுடன் மந்திரங்கள்மிக
வுங்கூறிவேதாந்த தாய்தனையேமனதிலுன்னி, பைதவமாய்முட்டை
தனைமணலிற்பாவிபட்சமுடன் சலமதனைவிட்டிடாயே. ௩௧௮

விட்டவுடன்முட்டையது கரைந்துபோகும் வேகமுடன்காரம
துவொன்றுங்காணார், சட்டமுடன்மெய்பான முட்டைதன்னைசார்
பாககூப்பிடுராமப்பா, தட்டாமல்மண்மறைவில்புதைத்துபோடுதா
ரணியில்ஒருவர்க்குந்தெரியவேண்டாம், திட்டமுடன்சீஷனைக்கொண்
டெடுக்கச்சொல்லு தீரமுடன்றானெடுத்துதருவான்பாரே. ௩௧௯

தருகையிலே சனங்களெல்லா மிகநடுங்கி தாரணியிலிவர்போல
சித்தனுண்டோ, கருமானமிகவறிந்த சித்துதாமும் காசினியில்மாந்தி
ரிகனிவனென்பார்கள், உருதெரியாமையுடையபாச யோகன்வுலகத்
தில்சித்தனிவன்வசியநாகன், பெருமைபுகழ்படைத்தொருநீரனுரும்
பேருலகில்சித்தனைப்போலுங்காணாரே. ௩௨௦

காணாமல்சனங்களெல்லா மிகத்தவிப்பார் கண்டவர்கள் விண்டவர்கள்யாருமில்லை, தோணாமல் கருவானமுட்டையெங்கே தேற்றமுடன்கண்டோமே கண்ணிற்காணோம், விணாகப்பேசியல்லோ மாந்தரெல்லாம் விருதாவாய்த்தாறுமாறாய்ப் புத்திகெட்டு, நாணமுடனிறந்தேங்கி நடுக்கமுற்றுசாதாக்கள் மாயவலை சிக்கினாரே. ௩௨௧

சிக்கவேமுட்டைதனை யாருங்காணாச்சிறப்புடனே தானெடுத்து காணமிந்தேதான், தக்கவே மந்திரங்களொன்றுசொல்லிச் சார்புடனேசமறைப்பு வதீதஞ்செய்வார், சொக்கவேமறைப்பெல்லாஞ்சூட்சமாகசூட்டினேன் மாந்தற்கு முறைத்தோம்பாமும், நிக்கவேலோகத்திலைகமறைப்பு நீசமாணவித்தை போலாகுந்தானே. ௩௨௨

வெச்சக்காய்கோட்டையிடிப்பது.

தாணாகழற்சிக்காய் வாயிரந்தான் சதமுடனே லோகமதுபொடியமைந்தா, வேணபொடிதனிலே மைபோலாட்டி விருப்பமுடன்பழச்சாற்றாலரைத்துமைந்தா, சோணகுருபரனைத் தனைநினைந்து குமுறவேகழற்சிக்காய் மேலேபூசி, பாணரவிதனிலே காயவைத்து பாங்குடனே கோட்டையதுகட்டிடாயே. ௩௨௩

கட்டவென்றால் கழற்சிக்காய் கோட்டையாகுங்கருவானகாரதமதுகுச்சிக்கேற்றி, திட்டமுடன்குச்சிதன்னால்கோட்டைதன்னைதிறமுடனே தானடிக்ககலைந்துபோகும், மட்டமென்றமண்மேலேஓடிப்பாயுமகத்தானகழற்சிக்காய் கிட்டிக்காணும், பட்டவுடன்காரதமதுதானிழுக்குமசுத்தானசித்துயிது வதீதந்தானே. ௩௨௪

அதீதமென்றவித்தையதுயாருங்காணார் ஆச்சரியங்கொம்புக்குள்காந்தவித்தை, அதீதமென்றகாந்தத்தால்சகலசித்தும் கருவாகவேதெற்குகாணியாகும், அதீதமென்றயிரும்புக்குக்காலனாகும் தாக்கானகாந்தமதுகருவுவேதை, அதீதமென்றகருவாளிகாண்பார்பாரு சூட்சாதிசூட்சத்தைக்காணுண்மாடே. ௩௨௫

மாடானமாடுகள்தான்சண்டிமாடு மாநிலத்தில்காண்பதுவுமருமைமெத்த, கோடானகோடிமுனிரிஷிகள்வேதை குவலயத்தில் கூறவுந்தான்முடியாதப்பா, பாடானவின்னமொருகருமானங்கேள் பாடுகிறேன்யாணுக்கள் பிழைக்கவென்று, நீடானமுட்டையதுகாற்றில்போக நீணிலத்தில்பறப்பதற்குவினோதங்கேளே. ௩௨௬



கோழிமுட்டை ஆகாயம்பறக்க.

கேட்கவேவினோதமென்றவித்தைசொல்வேன் கெவனமுடன்கருவாளியானால்கேளு, நீட்சமுடன்முட்டைதனில்கதிர்சில்லாக்கிநீடானபனிச்சலத்தையதற்குள்தாக்கு, நாட்கமலசெந்தாழம் பூரசத்தைதனினமுடன்றானெடுத்து வுளுந்துசீலை, ஆட்கமுடன்வலுவகத்தானமைத்து அப்பனேரவிதனிலேவைத்திடாயே. ௩௨௭

வைக்கவேகதிரொளின்சுடரினாலே வாகானமுட்டைக்குள்ளிருந்தநீரும், மெய்க்கவேசுடர்கண்டபோதேயப்பா மேலெழும்பிமுட்டையதுபறக்கும்பாரு, மொய்க்கவேபூமிவிட்டுப்பறக்கும்போது மேன்மையுடன்மாந்தரெல்லாம் நடுங்குவார்கள், செய்க்கவேவாச்சரியமிந்தப்போக்கு செகதலந்தில்கிட்டாதுசிவயோகிக்கே. ௩௨௮

யோகியென்றால்ஞானத்தின்மகிமைவேண்டும் யோசனைகள்மிகவேண்டும்வாசிவேண்டும், போகமென்றமாய்கைதனை விட்டொழிக்கப்பொருமையுடன்சிவயோகம் காணவேண்டும், பாகமதுவெப்போதும்கைவிடாமல் பார்த்திபனேசெய்குபவன்யோகியாவான், சாகமுடன்காலாங்கிதனைநினைந்து சாற்றினேன்போகரிஷிபண்பாய்த்தானே,

முளைக்கீரைவித்தை.

பண்பானவித்தையதுசாற்றக்கேளு பாரினிலேமாணுக்கள் பிழைக்கவென்று, கண்பானயீசலுமாககாலாகும் கருவானபுததீசல்தானெடுத்து, நண்பானபானைக்குள்சிலுபோட்டு நலமுடனேகுழித்தயிலமிறக்கிக்கொண்டு, திண்பானதயிலமதில்கீரைவித்தை தெளிவுடனேமுட்டைக்குள்ளூறப்போடே. ௩௩௦

போட்டுமேமண்டலந்தான் சென்றபோது பொருமையுடன்றானெடுத்துமைந்தாபாரு, வாட்டமுடன்சேஷவர்க்க மிகவழைத்துவாகுடனேபோசனங்களுண்பதற்கு, கூட்டமுடன்சித்தர்முனிநாதர்கூட்டங்குறிப்புடனே யாயிரம்பேர்சூழ்ந்திருக்க, வாட்டமுடன்மனைவதனைக்கொட்டிமைந்தா பட்சமுடன்விரைதனையேதெளித்திடாயே.

தெளித்தவுடன்சலமதனை விட்டுமைந்தா தேற்றமுடனிருசாமப்பொழுதில்தானும், கெளித்துமேவிரையெல்லா முளைகிளம்பிநேர்ப்புடனேசிறுசெடியாமங்குலந்தான், களிப்புடனேசித்தர்முனிரிஷிகளுக்கு கண்கொள்ளாக்காட்சியுடன்கருவுமாகும், துளிர்ப்புடைய கீரைவித்தை சொல்வாருர்தான் சுந்தரனே போகரிஷி சொல்விட்டேனே. ௩௩௨

## இருசவசியம்.

சொல்லவேவசியமொன்றுசொல்லக்கேளு சூரியின்றன்வடவேருக்காப்புக்கட்டி, வெல்லவேமுட்பொலிபுக்தான்கொடுத்து வேதாகதத்தாய்தனையேமனதிலுன்னி, செல்லவேதலைப்பிள்ளைமஞ்சத்தானும்சிறப்பானகருக்கொன்றைவடவேர்தானும், கொல்லனுடமுலிதன் வடவேர்தானும் கூறுணபேய்மிரட்டிவடவேர்தாமே. ௩௩௩

தாமானகருவாலிவடவேர்தானும் சார்பான வெள்ளெருக்கன் வடவேர்தானும், கோரானகண்ணனிடவடவேர்தானும் குறிப்பான வழிஞ்சிபிடவடவேர்தானும், வாமானகாட்டாதிவடவேர்தானும் வாதானபிராயனிடவடவேர்தானும், ஆமானகுமிழினிட வடவேர்தானும்துப்புறவைப்யெனியிடவடவேர்தாமே. ௩௩௪

வடவானவேறுடனேஒன்றுப்கூட்டி வளமையுடன்பெரும்பாண்டந்தன்னிலிட்டு, குடவானபானைக்குதுவாரமிட்டுக் கொப்பெனவேவேறெல்லாம்பாண்டத்திட்டு, திடமானசிலைபதுவனுவாய்செய்து தேற்றமுடன் குழித்தயிலம்வாங்கியேதான், திடமானதயிலமதையெடுத்துமைந்தா தாக்குடனேகலசத்தில்வைத்திடாயே. ௩௩௫

அடைத்துமேதயிலமதையுரைக்கக்கேளு அப்பனேஅமுல்வண்டுபூதவண்டு, படையானகுழியானைமரவட்டைதானும் பாகமுடன் செல்வட்டைமரவுனிதானப்பா, கடையானதம்பலமாப்பூச்சிதானும் கருவானவலனுறுபிச்சுதானும், சடையானசெயபோதது பிச்சுதானும்சார்வானதேவாங்குபிச்சுதானே. ௩௩௬

பிச்சானபச்சோனான் பிச்சுதானும் பீவானவாந்தையுட பிச்சுதானும்மச்சானசாரையுடபிச்சுதானும்மகத்தானமயிலுடபிச்சுதானும், கச்சானகருப்பூனை பிச்சுதானும் கருவானவெளவாலின் பிச்சுதானும், பச்சானபாம்பினிடபிச்சுதானும் பாங்கானவடீனையிடபிச்சுமாமே. ௩௩௭

ஆமேதானித்தனையுமொன்றுய்கூட்டியப்பனேமுன்சொன்னதயிலத்தாட்டி, வேமேதான்கபாலமென்றஓட்டிலப்பா விருப்பமுடன்மைபிடித்துச்செப்பக்கேளு, நாமேதான்சொன்னபடி மையின்மார்க்கம் நலமுடனேபானைதனில்பதனம்பண்ணு, போமேதான்கிர்வாணிபூசைசெய்து பொங்கமுடனுருவேற்றிபூசிப்பாயே. ௩௩௮

பூசித்துமைதனையே எடுத்துமைந்தா புகட்சியுடன்லாடமதில் திலதந்தீட்டி, நேசித்துராசரிடஞ்சென்றுயானுல் நேர்மையுடன் நி



னைத்ததெல்லாம்வசியமாகும், காசினியிலுன்னைப்போல் சித்தனுண்டோவைகலாசம்காணியது வுனக்கேயாகும், வாசியுடன்யோகங்களைநின்றுகொண்டுமகிழ்ச்சியுடன்சாதித்தமவாழுலாமே, ௩௩௯

## இலங்கைவேந்தன்குளிகை,

வாழவேவின்னமொரு மார்க்கம்பாரு மகத்தானவிலங்கைபுரிவேந்தனப்பா, நீழவேதான்செய்தகுளிகையப்பா நீணிலத்திலமானிடர்க்குகூறலாச்சு, தாழவேசெம்மண்ணுமபூமிதன்னில்தயவுடனேசென்றுமல்லோகுழிதான்வெட்டி, அழவேகுழிதனிலேசச்சன் வெல்லம் அப்பனேவாவுடைக்கல்கலந்துபோடே. ௩௪௦

பாடினேன்வின்னமொருபாகம்கேளு பாங்கானகோமேதம் புஷ்பராகம், தேடியேவப்ரேகம்பச்சைகெம்பு சிறப்பானவயிரமதுசங்கு முத்து, கூடியேபவளமதுநவதாதாகும் கொப்பெனவேவாறுவகை செயநீர்தன்னால், நீடியேசமனெடையாளடுத்துக்கொண்டு நேர்மையுடன்றானரைப்பாய்சாமம்நாலே. ௫௩௭

நாலானசாமமதுவரைத்துமைந்தா நலமுடனேயில்லையதுதட்டியேதான், கோலமுடன்ரவிதனிலேகாயவைத்துக் குறிப்பாகஒட்டிவிட்டுச்சீலைசெய்து, ஞாலமுடன்சீலையதுகாய்ந்தபின்பு நளினமுடன் கனயெருவிற்புடத்தைபோடு, தாலமுடன்புடமாறியெடுத்துப்பார்க்க தவளநிறபற்பமதுகாந்தியாச்சே. ௫௩௮

ஆச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு அப்பனேசொர்னமென்ற பற்பந்தானும், மாச்சலுடன்நாலுக்கோர் நவநீதவித்தைமாட்டாவிரண்டுமொன்றுய்க்கல்வமிட்டு, காச்சனுடனாறுவகைசெயநீர்தன்னால் கருத்துடனே தானரைப்பாய்நாலுசாமம், மூக்கடங்கத்தானரைத்து பில்லைதட்டிமுயலவே ரவிதனிலேகாயப்போடே. ௫௩௯

போடவேபில்லையதுகாய்ந்தபின்பு பொங்கமுடன்வோட்டிவிட்டுச்சீலைசெய்து, நீடவேகோழியென்றபுடத்தைப்போடு நீணிலத்தில் நீயுமொருசித்தனுவாய், தேடவேகாயாதி கற்பபற்பம் தேர்ந்தாலும் யாருந்தான்சொல்வதில்லை, பாடவேபலநூலுங்கண்டாராயந்துபாவித்தேன் லோகத்துயாந்தற்காமே. ௫௪௦

ஆமேதான்பற்பமுறையாருஞ்சொல்லார் அப்பனேமானிடர்கள் பிழைக்கவென்று, நாமேதான்பலநூலுங்கண்டாராய்ந்துநளினமுடன் பாடிவைத்தேன்சத்தகாண்டம், போமேதான்வீணிலே மனம்செல்லாமல்பொங்கமுடனிப்பாகம் செய்தாயானால், மாமானகாயகற்பமிது தானாகுமகத்தான பற்பமதுநவிலொண்ணாதே. ௫௪௧



ஒண்ணாதுபற்பத்தைப்பணவிடைதானு முத்தமனேவெண்ணெய்தனில்கொண்டாயானால், நண்ணாதுநோயேதுரோகமேது நாடாது காலனுமேநாடமாட்டான், திண்ணாலுங்காயகற்பமிதற்கொவ்வாது திறமையுடன்செய்துகொண்டோன்புத்திவானும், வண்ணாலுமுடியாதுபாரிலப்பா பாக்கியவான்செய்துகொள்ளும்வேதையாமே. ()

சூரணங்களனுபானம்.

வேதையிலேயின்னமொருபாகம்கேளு விருப்பமுடன்சூரணங்களெதுவானாலும், தீதையிலேவனுபானந்தெரிந்துகொண்டால் தேகமதுகற்றாணுமாகும்பாருபோதையிலேகாயாதிபற்பமாகும்பொங்கமுடனுண்டவற்குபலனுண்டாகும், பாதையிலேயேகமென்ற யிழிவுபோகும் பாரினிலேநீயுமொருசித்தனாமே. ௫௪௩

புட்டிக்குள்கோழிமுட்டை விடுகிறசாலம்.

சித்தனுமின்னமொருமார்க்கம்பாரு சிறப்பானபெருஞ்சாதிகோழியொன்று, முத்தலாய்க்கொண்டுவந்து வவயமிட்டுமுதன்மையாமுட்டைதனையெடுத்துமைந்தா, சுத்தமுள்ள பூநீராம்புட்டியென்றுசூட்சமுடன்சின்னவாய்க்கொண்டதாக, வெத்தியுடன்புட்டிக்குள்முட்டைபோகவிருப்பமுடன் சொல்லுகிறேன்பண்பாய்க்கேளே. ௫௪௪

பண்பானமுட்டைதனைசெப்பக்கேளு பாகமுடன்காரமென்றகாடிதன்னில், திண்புடனேமூன்றுநாள் முட்டைதன்னைத் திறமுடனே யூறினபின்னெடுத்துப்பாரு, நண்பானமுட்டையதுகாரமேறிநவிலவே வோடதுதான் சவ்வுபோலாம், தண்பானமுட்டையதுதளர்ந்துபோகும் தாக்கடாபுட்டியென்றசீஷாதானே. ௫௪௫

தானானசின்னவாய்ச் சீஷாக்குள்ளே தள்ளடாமுட்டைதனையுள்ளேபோகும், வேனான முட்டையது சென்றபின்புவிருப்பமுடன்பாணியென்றதண்ணீர்தானும், கோணான புட்டிக்குள்ரம்பவிட்டு குறையாமல்சீஷாவைமூடிப்போடு, கோணானமுட்டையது கல்லுபோலாம்தீவிரமாய்பாணிதனையூத்திடாயே. ௫௪௬

வூத்தியபின்புட்டிதனை மூடிபோடு வுத்தமனே ராசரிடம்சென்றுநீயும், சேத்தியுடன் புட்டிதனை கைகொடப்பா நேரானபுட்டிதனைப்பார்க்கும்போது, மாத்தலுடன் புட்டிக்குள் முட்டையப்பா மன்னவனேசென்றவழிவதிதவித்தை, சாத்தலுடனாச்சரியவித்தைதன்னைக் காண்கிலோராசரெல்லாமயங்குவாரே. ௫௪௭

மயங்குவார்வித்தையிதுமண்டலத்திலமாற்றானுங்கண்டறியான்
வினோதவித்தை, தயங்கியேசெய்தாலுங்காணமாட்டார் தகைமையுள்
ளகருவாளிகாண்பான்பாரு, புயங்கமுடன்தாரணியில் மற்றோராலும்
புகழ்ச்சியுடன்செய்யுவதுவருமையாகும், வயங்கமுடன்காலாங்கிநாத
ர்பாதம் வாகுடனேதாள்பணிந்துபாடினேனே. ௫௪௮

தங்ககிமிளைவேதை.

பாடியேயின்னமொருகருமானங்கேள் பாலகனேமாணாக்கள்பி
ழைக்கவென்று, தேடியேகிமிளையதுதங்கமப்பா தெளிவானகிமிளைய
துகூறக்கேளு, வாடியேதிரியாதேமன்னுபாரு மகத்தானசெம்புக்குத்
தகட்டின்மேலே, நீடியேரூதமதைமேனிச்சாற்றால் நேர்மையுடன்று
ணரைத்துபூசிடாயே. ௫௪௯

பூசியேகிமிளைதனைப் பொடித்துக்கொண்டு பொன்னவனேகரி
யோட்டில்துட்டுவைத்து, ஆசியேகிமிளைதனைசன்னமாக வப்பனேகீழ்
மேலும் பொதிந்தபின்பு, காசிக்குச்சிலையதுவலுவாய்ச்செய்து கருக்
குடனேகவுதாரிபுடந்தான்போடு, மாசிபோல்வர்ணமது மிகவுண்டாகி
பன்னவனேதாப்பரமும்பழுக்கும்பாரே. ௫௫0

பாரேதான்தாம்பரமும்பொன்னுமாகும்பாங்கானகிமிளையதுவா
ணமெத்த, சீரேதானுருக்கிப்பார் மாற்றெட்டாகும் சிறப்பானவாண
மதுதாம்பரவேதை, வேறேதான்காணவுமோவதீதவேதை வேடிக்
கையிட்டுவித்தைவித்தைசித்தர், கூரேதான்சீனபதிமார்க்கத் தார்கள்
குறிப்புடனே செய்வார்கள்கோடிதானே. ௫௫௧

கோடியாம்வேதையிது கோடாகோடி கொட்டினேன்மாணாக்க
ள்பிழைக்கவென்று, நீடியேகிமிளைதனைக் காணமாட்டார் கிமிளையில்
வாணமதையறியமாட்டார், மூடியேபித்தளைபோல் கல்லுமப்பாமுறு
க்கனுடன் சிட்டம்போலிருக்கும்பாரு, தேடியேயலைந்தாலும் கிட்டா
தப்பாதேசத்தில் வதீதமென்ற கிட்டம்பாரே. ௫௫௨

கிட்டமுடன்கல்லதனைசெந்தூரித்தால் சிவப்புடனே தங்கமது
செந்தூரந்தான், கிட்டமென்றகிமிளையது வர்ணமெத்தகெடியானசெ
ந்தூரங்குன்றியுண்ணு, குட்டமென்ற தேகமதுபொன்போலாகும் கு
றையாதுவயதுநூறான்கெவிளியாயாய், மட்டமுடன்வெள்ளிசெம்பில்
பத்துக்கொன்றுமயங்காமல்கொடுத்திடவேமாற்றெட்டாமே. ௫௫௩



எட்டான மாற்றதுவுமதிகமாகி யெழிலானபுடத்துக்குவுறுகித
ங்கம், மட்டானசங்கமது பசுமையாகு மகத்தானவேதையிதுசித்தர்
வேதை, கட்டானகிமிளையதுகருவுவேதைகாசினியிலாருந்தான்சொ
ல்லமாட்டார், சட்டமுடன்காலாங்கிதனைவணங்கிசார்புடனேபோக
ரிஷிபாடினேனே. ௫௫௪

பன்னியப்சா.

பாடவேமாற்றுயர்வு பகரக்கேளுபாங்கானதுருசதுவும்பலமோ
வொன்று, நீடவேதுருசுக்குசுண்ணாம்பப்பாநிலையானசுண்ணமதைக்
கவசம்செய்து, தேடவேமூன்றுநாள் காய்ந்தபின்பு தெளிவுடனே
காடையென்ற புடத்தைப்போடு, கூடவேகவசமதை பிரித்துபாரு
கொற்றவனே துருசதுவும்வெளுக்கும்பாரே. ௫௫௫

பாரேதான் துருசதுவுமொன்றேயாகும் பாங்கானலிங்கமது
வொன்றேயாகும், சீரேதான்ரசமது ஒன்றேயாகும் சிறப்பானகார
மதுவொன்றேயாகும், நேரேதான் எலிக்காலின்தழையினாலே நேர்ப்பு
டனே தானரைப்பாய் நாலுசாமம், தீரேதான்சிமிழ்தனிலேபதனம்
பண்ணுதிறமாகமட்டமென்ற பொன்னிற்போடே. ௫௫௬

போடவேமூன்றுபுட முபிரோலேபொங்கமுடன் தாட்டின்மே
ல்லேசாய்பூசி, தேடவேபூங்காவி தன்னிற்போடு தெளிவாகமாற்றது
வுமொன்பதாகும், நீடவேயுருக்கிப்பார் மாற்றேகாது நிலையானபுட
த்துக்குவலுத்ததங்கம், சாடவேமட்டமது பழுப்புமாகாசாங்கமுட
ன்பசும்பொன்னிற் போடக்கேளே. ௫௫௭

கேளேதானிவ் வேதைசிடிகைவேதை கெணிதமுடனுதாக்கள்
செய்யும்வேதை, கோளே தான்வாறுதுகுருவின்மார்க்கம்கூறுவேன்
இன்னமொரு மார்க்கம்பாரு, தானேதான்வுப்பினிட செந்தூரத்தை
தாக்குடனே செய்வதற்கு தகமைகேளு, வீணேதான்செந்தூரப்போ
க்குஞ்சித்தர் வீணிலே சொல்லியல்லோ மறைத்தார்தாமே. ()

உப்புசெந்தூரவேதை.

தாமானவுப்பதுவுஞ்சேர்தானொன்றுதாக்கானதுருசதுவும்சேர
தான்காலாம், வாகானதும்பலென்ற பூண்டினாலே வகையுடனேதா
னரைப்பாய்நாலுசாமம், காமானபில்லையது தட்டிமைந்தா கருவாக
நவிதனிலேகாயவைத்து, நாமானவோட்டிலிட்டுச் சீலைசெய்துநலமா
கப்புடம்போடக்கட்டிப்போமே. ௫௫௯

கட்டியதோருப்பதனை எடுத்துக்கொண்டு கருத்துடனே முன்போலமூலியாலே, திட்டமுடன்றனரைப்பாய்நாலுசாமம் திறமாகவிதனிலே காயவைத்து, சட்டமுடனேட்டிவிட்டுச்சீலெசெய்துசாங்கமுடன்கோழியென்ற புடத்தைப்போடு, சிட்டமென்ற வுப்பதுவும்காரமேறி கிருபையுடன்றன்சிவக்கும் பான்மையாமே. ௫௬௦

பான்மையாநிப்படியே வைந்துபத்துபாகமுடன்புடம்போடச்சிவக்கும்பாரு, வான்மையுடன் கரிப்பில்லைகசவுமில்லைவளமாகவுப்புக்குநாரமெத்த, தான்மையுடன்கரிதனிலேயுருகியாடும்தகமையுடன்மணிபோலவொளிவுவீசும், காண்மையுடன் மணிதனையேவுமிரோலேகருத்துடனே மட்டமென்றபொன்னிற்பூசே. ௫௬௧

பூசவே களஞ்சிக்குக்குன்றிதானும்பொலிவாகத்தானெடுத்துப்பூசிப்போடு, ஆசனுடன் பூங்காவிதன்னிற்குள்ளே வப்பனே புடம்போடமாற்றுகாணும், கூசாமல்மூன்றுபுடம்போட்டாயானால்குன்றயாதுசரிநிறையும் யேகாதப்பா, தாசமுடன் மூன்றமுலைநேபாட்டபோதுதப்பாது வாணிக்குப் பத்துமாத்தே. ௫௬௨

மாத்தான தங்கமது வாணித்தங்க மகத்தானதங்கமதுவுருகிப்பாரு, கூத்தானகாச்சலுக்கு சுலாய்ப்புகாணும் குவலபத்திலசித்தர்முனிசெய்யும்வேதை, சாத்தனுடன் கருவாளிகாண்டான்பாருசாங்கமுடன் பின்னொருவர் காணுவாரோ, நீத்தனுடன்விட்டகுறைநேர்ந்தோன்காண்பான் நீனிலத்தில்மற்றொருவர்காணாரமே. ௫௬௩

ஆமேதான் செந்தூரங் குன்றியுண்ணு அப்பனேகாயாதிகற்பமாச்சு, தாமேதான்சமாதிக்குபிடமுமில்லைதாக்கில்லைநோக்கில்லைதேகம்போகா, வாமேதான் வாசியதுமேல்நோக்காகும் வளமானயோகத்திலிருக்கலாகும், போமேதான் தேகமதுகற்றூணாகும் போக்கானமேனியது சண்ணுதன்றே. ௫௬௪

அயச்செந்தூரம்.

சண்ணுதயின்னமொரு பாகம்கேளு சார்வானலோகமதுசெந்தூரந்தான், பண்ணுது பண்ணுவார்மாந்தரப்பா பாரினிலே சித்தர்கைமறைப்பு காணார் தண்ணமுடன் காலாங்கிநாயர்பாதம்தாக்குடனேயான்வணங்கி கூறலுற்றேன், வண்ணமுடனயமதுவும்ராவிமைத்தாவளமையுடன்றன்செப்பவகைதான்கேளே. ௫௬௫

வகையான லோகமது சேர்தானப்பா வாகுடனேதானெடுத்துசாற்றக்கேளு, தொகையான சீனமென்ற காரந்தன்னால் துப்புரவாய்



தானரைத்து கழுவிப்போடு, தகையானபால்நண்டுசாமம்நாலுதாக்குடனே தானரைப்பாய் மைந்தாகேளு, பகையானபில்லைதன்னோரவியிற்போடுபாகமுடன் ஒட்டிவிட்டுச் சீலெசெய்யே. ௫௬௬

செய்யவே புடமதுதான் கோழியாகசெப்புகிறேன் மாணாக்கள்பிழைக்கவென்று, உய்யவே பத்துபுடமிப்படியே போடு வுத்தமனேபின்னாலே சாற்றக்கேளு, பையவே சூதமென்ற ராஜாதன்னைப்பாகமுடன்சரிகாலால் சேர்த்துக்கொண்டு, நையவேதானரைப்பாய்முன்மூலியாலே நயமுடனேபில்லைதட்டிக் காயப்போடே. ௫௬௭

காய்ந்தபின்பு தானெடுத்து மாணாகேளு கருவாகதளவாயாஞ்சட்டிதன்னில், ஆய்ந்ததொருவுப்பதனை மைபோலாக்கி வப்பனேசட்டிதனில் கீழேபோட்டு, மாய்ந்தனுடன் பில்லைதன்னை நடுமையத்தில்மாற்கமுடன் தானமைத்துமன்னுபாரு, பாய்ந்தனுடன்மேலுமந்தவுப்பைக்கொட்டிபதமுடனேசீலையது வலுவாய்ச்செய்யே. ()

செய்துமே வாலுகையி லடுப்பிலேற்றி செம்மையுடன்தானெரிப்பாயாறுசாமம்,பெய்துமே யாறினபின்னெடுத்துப்பாரு பேறானசெந்தூரமுருக்கப்பூவாம், நைதுமேசெந்தூரமெடுத்துப்பாருநாதாக்கள்முறைபதுதான் சொல்லப்போமோ, கொய்துமேசெந்தூரம்பதனம்பண்ணு கொப்பனவே வேதைமுகம் செப்பக்கேளே. ௫௬௯

செப்பவென்றால் செந்தூரம் வெள்ளியாறுசிவப்பான செம்பதுவும் செம்புநாலு, ஒப்பவேதங்கமது ஒன்றுகூட்டிவுவமையுடன்றானுருக்கி குருவொன்றீய, மெப்பவேகரிபோல யிருக்கும்பாரு மேன்மையுடன் காரமிட்டு ஊதிப்போடு, அப்பவே பொன்னுமதுமாற்றுகாணுமப்பனே யெட்டறையுமாகுந்தானே. ௫௭௦

அபரேக்செந்தூரம்.

அதிகமாமின்னமொரு கருமானங்கேள் அப்பனே மாணாக்கள்பிழைக்கவென்று, துதிதமுடன் நீதமது நவநீதந்தான் சுத்தமுடன்வெண்ணையதுவெடுத்துபாரு, கதிதமுள்ளவெண்ணையது சேர்தானென்று கருவாகவெடியுப்பு சேர்தானென்று, புதிதமுள்ள கெந்தியது சேர்தானென்று புகழான எருக்கன்பால் தன்னாலாட்டே. ()

ஆட்டவே பனிரண்டு சாமந்தானுமப்பனேவெண்ணெய்போல்பில்லைதட்டி, மாட்டடாபில்லையது ரவியிற்போடுமயங்காதேமன்னவனேஒட்டிவிட்டு, மூட்டடாசீலையது வலுவாய்ச்செய்துமூர்க்கமுடன்

கெஜமென்றபுடத்திற்போட்டு, திட்டடா பின்னுமந்த எருக்கன் பா
லால்திறமாகதானரைப்பாய் ]சாமம்நாலே. ௫௭௨

நாலானசாமமது வரைத்தபோது காயகனே பில்லைபது காய
வைத்து, தாலானரவிதனிலே காய்ந்தபின்பு தகைமையுடன் ஓட்டி
லிட்டுச் சீலைசெய்து, மேலானபுடமதுவும்கெஜமேயாகு மூத்தமனே
யாறினபின்னெடுத்துப்பாரு, பாலான பற்பம்போலிருக்கும் பாரு
பாலகனேயிப்படியே பத்துபோடே. ௫௭௩

போடையிலேதசபுடமுந்தீர்ந்தபின்புபொங்கமுடன்காரமென்
றதும்பப்பூண்டு, தேடையிலே தானரைப்பாயாறு சாமம்தெளிவாக
பில்லைபது தட்டிமைந்தா, மேடையிலே ரவிதனிலே காயவைத்து
மேன்மையுடன் ஒட்டிலிட்டுச்சீலைசெய்து, கூடையிலேபுடமதுதான்
கெசமேயாகும்கொற்றவனேபுடமாறியெடுத்துபாரே. ௫௭௪

பார்க்கையிலே பற்பமது சிவப்புகொஞ்சம் பார்த்திவனேயிதிற்
பத்துபுடமும்போடு, சேர்க்கையிலே புடமதுவுந் தீர்ந்தபின்பு செய
லானமூலியதுசொல்லக்கேளு,மூர்க்கமுடன் பொன்னுவாவரைதான்
மூடிமுயன்மையுடன் றானரைப்பாய்எட்டுசாமம், தீர்க்கமுடன்றான
வைத்துபில்லைதட்டி இறளாகரவிதனிலேகாயப்போடே. ௫௭௫

காய்ந்தபின்பு ஒட்டிலிட்டுச் சீலைசெய்து கனமாகநூறெருவிற்
புடத்தைப்போடு, மாய்ந்தபின்பு தியாறிஎடுத்துப்பாருமன்னவனே
சேந்தூரம் வர்ணம்காணும், சாய்ந்துடன் யிப்படியேபத்துபோடு
சார்பாகப் புடமதுவுந் தீர்ந்தபின்பு, ஏய்தலுடனுதாமாம் வேங்கை
தன்னுலெழிலாகதானரைப்பாய் சாமம்ரெண்டே. ௫௭௬

ரண்டானசாமமது வரைத்தபோது எழிலான பில்லைபதுதட்டி
மைந்தா, திரண்டானரவிதனிலேகாயவைத்துதிறமாக ஒட்டிலிட்டுச்
சீலைசெய்து, கண்டானபுடமதும் வராட்டிநூறு கவனமுடன்போட்
டுவரசெந்தூரிக்கும், தண்டானபுடமதுவும பத்துபோடு தாக்கான
செந்தூரம் சிவப்புகாணே. ௫௭௭

காணவேசெந்தூரமென்ன சொல்வேன்கடிதானரசமதுதான்ம
டியுமட்டுர், தோணவே புடமதுவும் செப்பக்கேளு துறையுடனே
சாரமென்றசெயநீர் தன்னால், மாணவே தானரைப்பா யாறுசாமம்
மாற்கமுடன்பில்லைதட்டிக்காயவைத்து, வணவேஒட்டிலிட்டுச் சீலை
செய்து வுத்தமனே நூறெருவிற்புடந்தான்போடே. ௫௭௮



போட்டவுடன்செந்தூரமருணன்போலாம் பொங்கமுடனிதிற்
பத்துபுடந்தான்போடு, நீட்டமுடன் செந்தூரங் குற்றம் நீங்க கிலெ
யானசில்லிதனை யடைக்கும்பாரு, நாட்டிகமாய் பரிட்சிக்கவிபரங்
கேளு தகைமையுடன்மண்பாண்டந்தன்னை வாங்கி, மாட்சிமையாய்
பாண்டத்தில் துவாரமிட்டு மாட்டடா தொட்டியென்ற பாண்டம்
வையே. ௫௭௯

வைக்கவேதொட்டியென்ற பாண்டந்தன்னில் மன்னவனே சில்
லியென்றபாண்டந்தன்னை, வைக்கவேசலம்விட்டுசெந்தூரத்தையய
ங்காமல்பணவிடைதான் பாண்டத்துள்ளே, வைக்கவே, செந்தூரம்
போட்டபோது வளமான துவாரமதுவடையும்பாரு, வைக்கவேசெ
ந்தூரம்பரிட்சைகாட்டி மாட்டடாரோகமென்றபிழிவுதானே. ௫௮௰

இழிவானநீரிழிவுமதுமேகந்தான் யெழிலான மேகமது யிருபத்
தொன்றும், பழியாடிலனுபான மெதிலுண்டாகும் பறக்குமடாரோ
கமென்ற கசரோகம்போம், வழியானசெந்தூரம் பரிட்சைகாட்டு
மயங்காமல்ராசரிடம் சென்றுநீயும், சுழியானசுழிமுனையும் வாசிபார்
த்துசந்தரனேவடகலையில் சென்றிடாயே. ௫௮௧

சென்றுமேராசரிடஞ் சென்றுநீயும் சிறப்புடனே செந்தூரம்ப
ரிட்சைகாட்டி, குன்றியதுயளவாகத்தான்கொடுத்து கொற்றவற்கு
பத்தியமுமில்லாமல்றான், வென்றுமேயவரிடத்திற்பிணிகள் தீர்த்து
வேணவுபசாரமுடன் நிதியும்பெற்று, நன்றஉடன்சோடசோவுபசா
ரந்தன்னால் நாயகனே தண்டிகையுந் தருவார்பாரே. ௫௮௨

தானேதான்சென்றவிடஞ் சிறப்புமுண்டுதாரணியில்மாந்தரெல்
லாம்பிர்மைகொள்வார், வேனுனசித்துமுனி ரிஷியென்பார்கள் வே
தாந்தசித்தாந்தகுருவென்பார்கள், கோனுனதத்துவத்தில்கடந்தஞா
னிகொற்றவர்க்கு வுகந்ததொரு மகத்துவென்பார், தேனுனமனோன்
மணியும்கடாட்சிப்பானே தேர்வேந்தராசரெல்லாந்தியங்குவாரே.

தியங்குவாராசமுடிமன்னரெல்லாம் திறமையுடன்கைகண்டபா
ண்டியன்றான், மயங்குவார்பூதலத்தில் ராசயோகன் மாநிலத்தில்
தன்வந்திரியிவனென்பார்கள், தயங்கவேவகத்தியஞாவதாரன்றான்
தாரணியில் யிவன்போல சித்தனுண்டோ,பயங்கமுடன்பலபலவாய்
ச்சொல்லிக்கொள்வார் பூதலத்தில் நீயொருசித்தனுமே. ௫௮௪

சித்தர்களுமுனைக்கண்டு பிர்மிப்பார்கள் சிறப்புடனேவுந்தனுக்
குயின்னஞ்சொல்வார், பத்தியுடன்ஞானோபதேசஞ் சொல்வார்பாக

முடன்கைமுறையு மனக்தஞ்சொல்வார், முத்திபெறும்வழிதனையே காட்டுவார்கள் முயலானசின்மயத்திலிருந்துகொண்டு, சத்தியத்தை மறவாமல்தருமவானல் தாரணியிலென்னுலுந்தழைப்பாய்தானே.

## உப்புக் கட்டு.

தழைக்கவேயின்னமொருகருமானங்கேள் தாரணியில்மானிடர்கள் செய்யமாட்டார், பிழைக்கவே வேண்டுதற்கு யின்னஞ்சொல்வோம் புகழானகல்லுப்புசேர்தானென்று, முழைக்கவேகுழிக்கல்லில்தன்னிலிட்டு முயற்சியுடன்தானரைக்கவிபாங்கேளு, மழைக்களிலேபூர்க்குமந்தகாளான்தன்னை மாற்கமுடன்கொண்டுவந்துசலத்தைவாங்கே. ௫௮௬

வாங்கியேசலமென்னுஞ் செயநீராலே வளமையுடன்றானரைப்பாய்பத்துநாள்தான், தூங்கியேதிரியாதேமைந்தாபாரு துரையுடனே மைபோலவரைத்துமேதான், எங்கியேபோகாமலயில்லைதட்டி எழிலாகாவிதனிலேகாயவைத்து; ஓட்டியேஒட்டியிட்டுச்சீலைசெய்து வுத்தமனேகோழியென்றபு டத்தைப்போடே. ௫௮௭

புடமதுதானறியபின்னெடுத்துப்பாரு புகழானகல்லுப்புக்கட்டிப்போகும், திடமுடனேயின்னுமந்தசெயநீராலே நீவிர்மாயதானைப்பாய்நாலுசாமம், தடமுடனேமைபோலயரைத்துபாலா சார்புடனேயில்லைதட்டிகாயவைத்து, மடமுடனேவோட்டியிட்டுச்சீலைசெய்து மயங்காமல்முன்போலபுடத்தைப்போடே. ௫௮௮

போடவேபுடமதுதானறிப்பின்பு பொங்கமுடன்றனெடுத்துபார்க்கும்போது, நீடவேபற்பமதுயென்னசொல்வேன் நிலையானநீருக்குமனலுமேகா; கூடவேயின்னுமந்தசெயநீராலே குட்சமுடன்பத்துபுடங்கிர்ந்தாயானல், தேடவேபற்பமதுயென்னசொல்வேன் தேசத்தில்கிட்டாதுசிவயோகிக்கே. ௫௮௯

## சிவயோகி பொய்த்தன்மை.

சிவயோகியென்றுமேலெமெத்தவுண்டுசிவன்தனையேகண்டவர்போல்வார்த்தைசொல்வார், தவயோகிபோல்ஒருவேஷம்பூண்டு சர்வகலையறிந்தொருஞானிபோல, பவங்கண்டரிஷியென்று பெயருக்கொண்டு பாரினிலேபசப்பியல்லோ பொருள்தான்கொள்வார், சவம்போலமூச்சிதனை யடக்கிக்கொண்டு தாரணியில்பிர்மைகொள்ள நடப்பார்தாமே. ௫௯௦



தாமானபற்பத்தைசெய்யமாட்டார் தாக்கானகருக்குருவைக்காணமாட்டார், பேமானிபோலவெகுபேச்சிசொல்வார் பேச்சிக்குமுன்பாகபாட்டுசொல்வார், சாமானியபுருஷனென்றுவார்த்தைசொல்வார்சாற்றலுடன்தூஷணைகள் மிகவுஞ்சொல்வார், நாமானசாத்திரங்களதிகம்பேசி நாணியேதலைகுனிந்துநடுங்குவாரே. ௫௯௧

நடுங்குவார்பற்பத்தின் னேர்மைகாணார் நாட்டிலேயாம்கண்டவளமையப்பா, அடுங்கவேபற்பத்தைகண்டாராய்ந்து அப்பனேநாமுரைத்தோமவனியோர்க்கு; தடுக்கவேபற்பத்தை செம்பிலீயசன்னுமேவூறலென்றநாற்றம்போகும், ஒடுங்கவேபத்துக்குஒன்றுநானுமுத்தமனேகுருதனையேதாக்கிடாயே. ௫௯௨

தாக்கவேரவிதானுங்கட்டிப்போகும்தகைமையுடன்செம்பதுவுமூறலேகி, நோக்கமுடன்செம்பதுவும்வரணங்காட்டும் நோரகசெம்புநிகர்வெள்ளிசேர்த்து, பாக்கவேவந்திடைக்குத் தங்கஞ்சேர்த்துப்பாண்மையுடன்தானுருக்கி யெடுப்பாயானல், தூக்கமுடன்மாற்றதுவுமிகவுமாகி துப்புறவாய்தங்கமதுகாணும்பாரே. ௫௯௩

காணவேபற்பத்தையனுபானத்தில் பணவிடைதான்மண்டலங்கள்கொண்டுவந்தால், தோணவேகுன்மமென்ற தெட்டும்போகும் தோற்றுதவாய்வென்ற தெண்பதும்போம், நாணவேபாண்டுவகையாறுந்தீரும்நாடாதருலைபதினெட்டும்போகும், வேணவேமகோதரம்பிலிகையும்போகும் விருப்பமுடன்வயிற்றுவலிவிம்மல்போமே. ()

போமேதான்குடற்பிறட்டால்வாய்நீருரல் குடல்வாதமனூர்வாதம்பட்சவாதம், ஏமேதான்கண்டவலிகவுசுகட்டி விக்கமுடன்நீரும்பல்விக்கல்போகும், தேமேகான்பித்தமென்றநாற்பதும்போம் திரளானமலட்டுலவிகுடைச்சல்தீரும், நாமேதான்சொன்னபடியுப்பின்மார்க்கம் நாதாக்கள்சொல்லவில்லை நாம்சொன்னோமே. ௫௯௫

சொன்னோமேசித்தர்முனிசித்தர்தாமும் சூட்சாதிசூட்சமதைமறைத்துப்போட்டார், என்னைப்போலுப்பினிட மார்க்கந்தன்னை எடுத்துரைத்தார்நாதாக்களாருமில்லை, தன்னைப்போல்வெகுளியதாய்சொல்லிப்போட்டு தாருமாருகவல்லோ மறைத்துப் போட்டார், இன்னம்வெகுகைமறைப்புகண்டுதேர்ந்து எடுத்துரைத்தே னுப்பினிடமார்க்கந்தானே. ௫௯௬

தானனவுப்புதன்னைக்கொண்டபோது தாக்கானதேகமதுகற்றூணாகும், கோனனயெனதையர் காலாங்கிநாதர் குருபதத்தையான்வ

ணங்கிபாடிவைத்தேன், தேனானவின் னூல்தான்குருநூலாகும் திரட்டிவைத்தேன் னேழாயிரக்காண்டமப்பா, பானானபராபரியைமனதினுன்னி பாடிவைத்தேன்சீனபதிதேசத்தாற்கே. ௫௯௭

தேசமென்றால்தேசமதுசொல்லப்போமோ தேசத்தில்சீனபதிக்கிணையூமுண்டோ, மோசமில்லைவரிடத்தில் மாந்தரப்பாமுடிசாய்ந்தமன்னர்முதல் குருக்கள்தாமும், பாசமுடன்பட்சமுண்டுவருளுமுண்டுபாரினிலே யவர்க்கீடுசொல்லப்போமோ, நேசமுடன்சத்தியத்தைகைவிடாதார் நீணிலத்தில்சீனபதிமாந்தர்தாமே. ௫௯௮

தங்கச்செம்பு.

நாமான இன்னமொரு சூட்சம்பாரு தன்மையுடன்சொல்லுகிறேன்மைந்தாகேளு, சேமானகெந்தகமும்சூதந்தானும் கொடிதானசாரமுடன்சிலைதானும், காமானகாரமுடனசீனந்தானும் கருவானகண்டருடன் தொட்டிதானும், நாமானசரக்கெல்லாஞ் சரியாய்த்தூக்கி நளினமுடன் தானரைப்பாய் பழச்சாற்றாலே. ௫௯௯

அரைக்கையிலேநாற்சாமமறைத்தபோது அப்பனேமெழுகதுபோலாகும்பாரு, நிரைக்கவேகலசமென்றபாண்டந்தன்னில்திறமுடனேதானடைத்துமைந்தாகேளு, கரைப்புடனேமேலதனில்ரவிபால்மூடிகளிப்பென்றமண்ணதனால் சீலைசெய்து, முறைப்படியேகவுதாரிபுடத்தைபோடு மோசமில்லைபதங்கமது யேறும்பாரே. ௬௦௦

பாரேதான்பதங்கமதுவென்னசொல்வேன்பாரினிலேகருவாளிசெய்வான்பாரு, நேரேதான்பதங்கமதைகுழுக்கல்லிட்டு நினைவாகவந்திடைக்கி கெந்திசேர்த்து, கூரேதான்வந்திடைக்கி பாதிசூதம்குறிப்பாகதானரைப்பாய்செயநீர்தன்னால் சாரேதான்மெழுகுபோலரைத்துபின்பு சட்டமுடன்மின்னுமந்தகலசமேற்றே ௬௦௧

ஏற்றவேகலசம்வாய் ரவியினாலே யெழிலாகமூடியல்லோ சீலைசெய்து, போற்றியேமனோன்மணியை தியானித்தேதான்பொலிவாகமுன்போலபுடத்தைப்போடு, காற்றில்லாவிடந்தனிலே புடந்தான்போடு கறுப்பானபதங்கமதுமேலேதாவும், ஆற்றியேபுடமாறியெடுத்துப்பாரு யப்பனேபதங்கமதுசொல்லொண்ணாதே. ௬௦௨

சொல்லவென்றால்நாவில்லைபாவுமில்லை சூட்சாதிசூட்சமெல்லாம்சூதத்தாட்டம், வெல்லவேபதங்கமதை எடுத்துக்கொண்டு விருப்ப



முடன்பாணைக்குள் புதனம்பண்ணு, கொல்லவேதங்கமது களஞ்சிபொன்று கூரானபதங்கமது சரிநேரொக்க, மெல்லவே மூசைதனிலடைத்துமைந்தா மேன்மையுடன்சில்லிட்டுச் சீலைசெய்யே. ௬௦௩

செய்யவேசீலையது வலுவாய்ச்செய்து செப்பமுடன்சாவலையில்வைத்தூது, பையவேதீயாரி யெடுத்துப்பின்பு பக்குவமாய் மூசைதனையுடைத்துப்பாரு, மெய்யானயேமமது செம்புமாகும் மேன்மையுடன்செம்புதனை யெடுத்துப்பாலா, துய்யவேபதினாலுக் கொன்றுசேரு துப்புரவாய்மாற்றாறு காணுந்தானே. ௬௦௪

காளவென்றால் வாதவித்தை லகுவிலாச்சேர கண்டவர்கள் விண்டவர்க ளாருமில்லை, தோணாதசாக்கெடுத்து ஆதியென்னதொல்லுலகில்கேட்டவர்கள் கோடாகோடி, சாணானகைப்பொருள்போல்வாய்க்குமோசொல் சண்டாளதுரோகிகட்கு வாய்க்காதன்று, வீணாகத்தானலைந்துசுட்டுகெட்டுவீணிலேமடிந்தவர்கள்கோடியாமே.

லிங்கக்கட்டு.

கோடியாமின்னமொரு கருமானங்கேள் கொட்டினேன் வாதமென்ற கட்டைதானும், தேடியேயலைந்தாலுங் கிட்டுமோசொல் தெளிவானலிங்கமது களஞ்சிபத்து, வாடியேதிரியாதேமன்னாகேளு வளமாகச்சொல்லுகிறேன் லிங்கப்போக்கு, நீடியேபாவைய்மூன்றுநாளு நினைவாகமுழுகிடவே யூறப்போடே. ௬௦௬

போடேதான் மூன்றுநாள்சென்றபின்பு பொங்கமுடன் தானெடுத்து தேனில்தானும், நீடவேமூன்றுநாளூறப்போடு நேர்மையுடன்லிங்கமதுசுத்தியாச்சு, கூடவேலிங்கமதை வினாலுமப்பா குமறவேவெள்ளுள்ளிச் சாற்றினாலே, ஆடவேமூன்றுநா ளூறப்போடு அப்பனேலிங்கமது சுத்தியாச்சே. ௬௦௭

ஆச்சென்றுவிடுகாதேமன்னாகேளு வப்பனேலிங்கமதை யெடுத்துக்கொண்டு, பாச்சலென்றயெரிகாலன் பாலினாலேபாங்குபெறநாற்சாமஞ் சுறுக்குதாக்கு, காச்சலுடன்லிங்கமது கட்டிப்போகும் கருவானலிங்கமது வேதையாகும், பேச்சில்லைவேதைமுகம் யாருங்காணார் போனலிங்கத்தின் போக்குதானே. ௬௦௮

போக்கானலிங்கத்துக் குறுதிசொல்வேன் பொலிவானவெள்ளியதுவாறுமாறும், தாக்கானசெம்பதுவும்நாலுமாகும் தகைமையுடன்

றுனுருக்கி குருவொன்றீய, தூக்கானநிலையுடனே பாரங்காணும் துறையோடும் முறையோடும் வூதிப்போடு, காப்பானவெள்ளியது நிற்கும்பாரு கனகமதுமாற்றதுவு மாறுமாமே. ௬0௯

ஆறுனமாற்றதுவுமிரவுமாகி அப்பனேபுடத்துக்கு வுறுதிதங் கம் வாறுனவாரடித்து புடத்தைபோட வளமையுடன்தங்கமதுயிறங் கும்பாரு, கூறுனதங்கமது யென்னசொல்வேன் கொற்றவனேசிவ யோகி முறுதிகாண்பான், நேரானதங்கமது பிறவியென்பார்நேர்மை யுடன் செய்பவனேவாதியாமே. ௬௧0

வாதியாமென்றதற்கு வகுப்புகேளு வாகானலிங்கமதைகொடுக் கக்கேளு, சோதியாமேனியது சாமுங்கண்டால் துப்புரவாம்சன்னி முதல்கொடுக்கலாகும், நீதியுடன்பத்தியமுமில்லைகண்டீர் நிலையான ரோகமுதல் வாயுபோகும், பாதிமதிசடையணிந்த தம்பிரான்மேல் பத்தியுடன் சத்தியமாய் சொல்லிட்டேனே. ௬௧௧

பூரக்கட்டுவேதை.

சொல்லவேபூரமென்ற கட்டைதானும் சூட்சமுடன் தாமரைப் போ மைந்தாகேளு, வெல்லவேபூரமது கொண்டுவந்துவேகமுடன் முலைப்பாலிலூறப்போடு, கொல்லவேமூலியது கேளுமைந்தா கொ டிதானவாடுதின்னு மூலிதானும், புல்லவேசுருக்குதா னுலுசாமம் புகழவேதான்கொடுக்கவிபாங்கேளே. ௬௧௨

கேளேதான்மற்றுநாள் பின்னுங்கேளு கெடியானயிண்டிலையுஞ் சாமம்நாலு, தாளேதான்பிரட்டியதை சுருக்குதாக்கு சாங்கமுடன் கட்டியது யிறுகிக்காட்டும், பாளேதான்போகாமல் தைவேளைச்சார் பாகமுடன்பின்னுமது சாமம்நாலு, விளேதான்சுருக்கிடவே பின் னுங்கட்டும் வேதாந்தத்தாயினது கடாட்கந்தானே. ௬௧௩

தானுனபூரமதுசாற்றக்கேளு தலையுடனே காரமென்றபடிகா ரந்தான், மானுனபூரத்துக்கிரட்டிமைந்தா மன்னவனே வாறுவகை செயநீர்தன்னால், பானுனவெண்ணெயது போலேயாக்கி பாலகனே பூரத்துக்கங்கிபூட்டி, கோனுனகவசமது வலுவாய்ச்செய்து கொற் றவனேரவிதனிலே காயப்போடே. ௬௧௪

போடவேசிலையது காய்ந்தபின்பு பொலிவாகப்பத்தெருவிற்புட த்தைப்போடு, நீடவேபுடமதுவுமாறிப்பாருநித்தமுடன்பூரமதுபொ ருமிக்கட்டும், கூடவேகட்டிதனை யெடுத்துக்கொண்டு கோளாறு



நேராமல்சட்டிக்குள்ளே,நீடவேயுப்புதனைசட்டிக்குள்ளே நிறையவே பாதிநடுமையம்வையே. ௬௧௫

வைக்கவேமேலுமந்தவுப்பைக்கொட்டி மறவாமல்மேற்சட்டிக் கொண்டுமூடி, துப்புரவாய்சீலைய்துவலுவாய்ச்செய்து துடியானவாலு கையிலெரிப்பாயப்பா,தப்பாமல்சாமமதுஎட்டுசாமம் சாங்கமுடன்று னெரிப்பாய் பான்மையாக, குப்புரவாயாறியபின் னெடுத்துப்பாரு குணமானபூரமதுபற்பமாச்சே. ௬௧௬

ஆச்சென்றுவிடுகாதேயன்பாய்கேளு அப்பனேவெள்ளியதுஎழு மாகும்,மாச்சலென்றசெம்பதுவுமூன்றேயாகும் மகத்தானகுகைதனி லேயுருக்கியப்பா, காச்சலுடன்பத்துக்குஒன்றுபூரம் கருவாகத்தானு ருக்கிகொடுத்துபார்க, பேச்சொன்றுமில்லையப்பாபொன்னேயாகும் பொன்னவனேமாற்றதுவுமாகும்பாரே. ௬௧௭

பாரேதான்கரியோட்டிலூதிப்போடு பாங்கானசெம்பதுவும்நீங் கியேதான், நேரேதான்வெள்ளியதுஎடைதானிற்கும் நேர்மையுடனி ரண்டுக்கோர்தங்கஞ்சேர்த்து,வேரேதான்வாரடித்துபுடத்தைப்போடு வாகானதங்கமதுயிறங்கும்பாரு, சீரேதான்பிறப்பென்றதங்கமப்பா தேசத்திற்கிட்டாதுபுண்ணியோற்கே. ௬௧௮

புண்ணியத்தாலிவ்வேதைவாய்க்குமல்லால் புகழானபூரமென்ற பற்பந்தன்னை, திண்ணமுடனுறுமாற்றுமாணிக்கப்பா திறமாகமட்டு மென்ற பொன்னுமாகும், வண்ணமுடன்தகடடித்து களிஞ்சியப்பா வாகுடனேகுன்றியதுவுமிரேலே, வண்ணமுடன்தான்குழைத்துதட விப்போடு தகைமையுடன்மாற்றதுவுமுயருங்காணே. ௬௧௯

காணவேபூரமதுகுன்றிதானும் கருவாகத்தானெடுத்துவனுபா னத்தில், தோணவேகொண்டாக்கால்வாய்வுபோகும் தோற்றமுடன் மேகமென்றதிருபதும்போம், வேணவேசூலையொடுவிம்மல்போகும் மிக்கானவயிறுவலிபொருமல்தீரும், சீனமுடன்வக்கினியாமந்தந்தீ ரும் சிறப்பானகுன்மமுதல்சொரிகள்போமே. ௬௨0

போகுமேகசரோகமெல்லாம்போகும் பொல்லாதசயரோகமேகு ம்பாரு, ஏகுமேசில்விஷபாகமனைத்தும்போகும் யெழிலானபாண்டு முதல்கவுசிபோகும், சாகுமேவீக்கமுதல்ரணங்கள்போகும் தாழவா னரோகமுதல்மூலம்போகும், வேகுமேபிணிகளெல்லாஞ் சடலம்வி ட்டு வேகமுடன்தீருமென்றுவரைந்திட்டேனே. ௬௨௧

## பஞ்சபூதசெந்தூரம்.

வறைந்திட்டேன்பஞ்சபூதம்சொல்லக்கேளு வகையானலோக மதுவஞ்சங்கூட்டி, துரைந்திட்டேன்தங்கமதுஒன்றேயாகும் துறை யானவங்கமதுவொன்றேயாகும், பரைந்திட்டசெம்பதுவுமொன்றே யாகும் பாலகனேயிரும்பதுவுமொன்றேயாகும், கறைந்திட்டநாகம துநான்கேயாகும் கருவானலோகமதுவஞ்சங்கூட்டே. ௬௨௨

கூட்டியேதானுருக்கியெடுத்துப்பாரு கூறுவேன்கிராசமதுசாற்றக் கேளு, தாட்டிகமாயரிதாரம்களஞ்சியாறு தாக்குவாய்கிராசமதுதன் னிலீவாய், வாட்டமுடன்களங்கமதுபோலேயாகும் வாசானகளங்க மதுசிவப்புசெய்ய, மாட்டிமையாய்சூதமென்றராஜாதன்னை மயங்கா மல்கெந்தியதுஒக்கக்கூட்டே. ௬௨௩

கூட்டியேசெந்தூரம் செய்யக்கேளும், குழிப்பானபாண்டமது கொண்டுவந்து, நாட்டமுடன்வப்புதன்னைக்கீழ்மேலிட்டு நளினமுடன் நடுமையம்காரமிட்டு, வாட்டமுடன்கெந்தியதுமேலேபோட்டு வள மாகநடுமையம்சூதமிட்டு, தீட்டமுடன்மேலுமந்த வுப்பைக்கொட்டி திறமாக்மேல்மூடிசீலைசெய்யே. ௬௨௪

செய்யவேரவிதனிலேகாயவைத்து சிறப்பாகவாலுகையினடுப்பி லேத்தி, உய்யவேதீமூட்டிஎட்டுசாம முத்தமனேதானெரிப்பாய்மைந் தாகேளு, பையவேயாறினபின்னெடுத்துப்பாரு பாகமுடன்செந்தூர மாகுமப்பா, தொய்யவேசெந்தூரங்களங்குபாதி துறையோடுமுறை யோடுமரைத்திடாயே. ௬௨௫

அரைக்கையிலேதும்பையென்றபூண்டிறுலே |அப்பனேநாற்சா மரைத்தபோது, நிரைக்கயிலேமனம்போலாகும்பாரு நேர்மையுடன் ரவிதனிலேகாயவைத்து, திரைக்கமுடன்கல்வத்திற்பொடியாய்செ ய்துதிறமுடனேகாசியென்றகுப்பிதானும்,வரைக்கமுடன்குப்பிக்குச் சீலையேழு வாகுடனேவாலைவிட்டுச்சீலைசெய்யே. ௬௨௬

சீலையதுசெய்துபின்பு பின்னுங்கேளு செழிப்புடனேமருந்தை யெல்லாங்குப்பியிட்டு,வாலையென்னுமனோன்மணியைத்தியானங்கொ ண்டு மறவாமல்மாக்கல்லுகொண்டுமூடி, பாலையுடன்சட்டிதனில்மண ல்தான்கொட்டி பாலகனேநடுமையம்குப்பிவைத்து, ஆலையென்னும் வாலுகையிலடுப்பிலேற்றி வப்பனேயேழுநாளெரித்திடாயே. ௬௨௭



எரிக்கையிலேசெந்தூர மருணன்போலா மெழிலானமுருக்கன் பூ நிறம்போலாகும், அரிக்கையுடன் செந்தூரமெடுத்துப்பாரு அப் பனே சீஷாவிற்பதனம்பண்ணு, தரிக்கமுடன் வெள்ளிசெம்பில் பத் துக்கொன்று தயையுடனே தானுருக்கி குருவொன்றீய,பறிகமுடன் தானுருகிவாங்கிக் கொள்ளும்பாலகனே கரியோட்டிலூதிப்போடே

ஊதிப்பார்மாற்றதுவு மாறுகாணு முத்தமனே தங்கமதுநாலுக் கொன்று, சாதியாங்குங்குமப்பூதங்கமப்பா சார்புடனேதான்சேர்த் துவாரடித்து,வாதியாம்புடமதுவு மாற்றுகாணும் மகத்தானவேதை யிது வுறுதித்தங்கம், பாதியாந்தங்கமது யிரண்டுக்கொன்று பாக முடன்மாற்றுறு சேர்த்துப்பாரே. ௬௨௯

சேர்க்கையிலேமாற்றதுவுஞ் சிவந்தபொன்னும் தெளிவானவர ணமது வதிகங்காட்டும், பார்க்கையிலேபிறவியதுபிரவிப்பொன்னும் பாரினிலேநாதாக்கள் ரிஷிகள்வேதை, தீர்க்கமுடன்கருவாளி செய் வான்பாரு, தீரமுடன்மற்றொருவர் செய்வாரோதான் மார்க்கமுடன் காலாங்கிபாதம்போற்றி மன்னவனேபாடிவைத்தேன் போகர்தாமே

தாமானபாகமது யாருஞ்செய்யார் தாரணியில்புத்தியுள்ளான் செய்வான்கண்டீர், சாமானவாதவித்தை வதிதவித்தை சாங்கமுடன் யோகவான் காணும்வித்தை, வாமானஞானவான் சிவயோகிக்கு வாகுடனே பலிக்குமல்லால் மற்றோர்க்கில்லை, தூமானமின்றிலார்க் குதவுமோசொல் லுப்புரவாய்வித்தையிது பலிக்காதாமே. ௬௩௧

பலிக்காதுகாமிகட்கும் கர்மிகட்கும் பாங்குடனேபாவியென்ற சண்டாளற்கும், சொலிக்காது ஏகமென்ற வித்தையப்பா சூட்சாதி சூட்சமதைக் காணமாட்டார், ஒலிக்கவேபூரணத்தை மனதிலுன்னி உத்தமனே எந்நாளுஞ் சிவயோகம்பார், கெலிக்கவேபிராணயந்தன் னிற்சென்று கெவனமுடன் குளிகைக்கு வழிதான்தேடே. ௬௩௨

தேடவேகுளிகையது பூண்டுகொண்டு தேசத்தில் வித்தையெல் லாம்கண்டுபாரு, நாடவேயிம்மருந்தைமைந்தாரு நளினமுடன்நெய் தேனிற் கொண்டுவந்தால், ஊட்டவேமேகமென்ற இருபதும்போமுத் தமனே யீளையதுகாசம்போகும், பாடவேபாண்டுவகை யாறுந்தீரும் பாங்குடனேகுன்மமெட்டுந் தீரும்பாரே. ௬௩௩

தீருமேபீலிகையும் கவுசிக்கட்டி தீங்குசெய்யும் சூலையதுவிட்டு போகும், கூருடனேவாயுவென்ற தென்பதும்போம் கொடிதானசய முதலும் நன்றுபோகும், நேருமேமூலமுதல் பவுத்திரம்போம்கொடி

தானமந்தார காசம்போகும், பாருமேமேல்மூச்சு வாதம்போகும் பட்சமென்ற வாதமது சுழன்றுமேபோமே. ௬௩௪

சுழன்றுமேபோகுமது சிலேத்மந்தானும் கண்ணினுள்ள வியாதியெல்லாங் கதிகெட்டோடும், தழன்றுமேதேகமது கற்றூணாகும் தகைமையுடன்எந்நாளு மிருக்கலாகும், பழன்றுமேசமாதிக்கு ளிருக்கலாகும் பாரினிலேயேயொரு சித்தனாவாய், அழன்றுமேபோகாதே விண்போகாதே அப்பனேதேகமது கற்றூணாமே. ௬௩௫

கல்லான தூணதுபோலாகும்பாரு கருவாகவின்னமொரு கருமானங்கேள், புல்லானவிருட்சமது சொல்லக்கேளும் புகலரியமேருவுக்கு வடபாகத்தில், கல்லானசித்தர்முனி வாசஞ்செய்யும்கரடானகாவென்று குகைதானுண்டு, செல்லானபுத்துகளு மனேகமுண்டு செயலானகானாறு வோடையுண்டே. ௬௩௬

சோதிவிருட்சங் கண்டது.

உண்டானவிருட்சமதுஎன்னசொல்வேன்உத்தமனேகானகத்துசோதியப்பா, திண்டானமரமதுதான் ரிஷிகள்பக்கம் திறளுடனேயம்மாமு மெத்தவுண்டு, சென்டானபுஷ்பமது நீலவன்னம் செகஜோதிநீலமப்பா கூறப்போமோ, வண்டானவண்டுகள்தான் கூட்டம்பாரு மகத்தானமரத்தினிட மேலேதானே. ௬௩௭

தானானவண்டதுவுங்கீதம்பாடும் தாக்கானகீதமது வோசைகாட்டும், கோனானகுருநாதர்சித்தர்தாமும் குடியிருப்புயெர்நேரம் விருட்சந்தன்னில், தேனானமுனிகூட்ட மெத்தவுண்டு வெளியானகானகத்தின் விருட்சந்தன்னை, பானானபாரிஷியும் கண்டுதேர்ந்து பாரினிலேசித்தர்களுக் குரைத்தார்தாமே. ௬௩௮

உரைத்தாரேசித்தர்களுங் கண்டுதேர்ந்து உத்தமனேமுனிகளுக்கு உரைத்தார்தாமும், நிரைத்தாரேசோதியின்றன்மகிமைஎல்லாம் நீனிலத்தில்கண்டறிந்து வுளவுசொன்னார், வரைத்துமேசித்தர்களுங் கண்டாராய்ந்து வளமுடனேமையொன்று செய்தார்பாரு, முறைப்படியேமையதனை சொல்லக்கேளு முத்தமனேமாணாக்கள் பிழைக்கத்தானே. ௬௩௯

சோதி விருட்சமை.

தானானவின்னமொரு கருமானங்கேள்தயவுடனே சொல்லுகிறேன் மைந்தாபாரு, கோனானகமலமுனி சொல்லவில்லைகுலயத்தில்



சித்தர்களு மனேகஞ்சொன்னார், வேனானவென்னூல்போ லாருஞ்சொல்வார் தேசத்தில்மானிடற்கு தெளிவாய்ச்சொன்னேன், பானானவிருட்சத்தின் பட்டைதானும் பாகமுடன்கொண்டுமே தயிலம்வாங்கே. ௬௪௦

வாங்கவென்றால்தயிலமது சொல்லக்கேளு வாகானமரவெட்டை சமனதாக, தூங்கியேதிரியாதேமன்னுபாரு துறையோடுமுறையோடு செப்பக்கேளு, வாங்கியேகுழித்தயில மிறக்கிக்கொண்டு மார்க்கமுடன்வதிலரைக்க விபரங்கேளு, ஏங்கியேபோகாமல் தயிலந்தன்னில் யென்மகனேபுழுகோடு உரமுங்கூட்டே. ௬௪௧

கூட்டியேசூதமுடன் குழியானைக்கண் கொற்றவனேகரும்பூனைகண்ணுதானும், மாட்டியேதேவாங்கு கண்ணுங்கூட்டி மயங்காமல் சுழல்வண்டுதானுஞ்சேர்த்து, காட்டிகமாய்கஸ்தூரிபூரந்தானும்தான் கலந்துதயிலமதி லரைப்பாயப்பா, வாட்டமுடன்றானரைக்கமைபோலாகு மன்னவனேமைபோலே யாகும்பாரே. ௬௪௨

பாரேதான்மையெடுத்து பதனம்பண்ணு பாகமுடன்போக்குவகை சொல்லக்கேளு, நேரேதான்மையதனை குன்றிதானும் நேர்மையுடன் வுள்ளங்கைதன்னில்வைத்து, தீரேதான்மனோன்மணியை தியானித்தேதான் திறமுடனேமையதனைப் பார்க்கும்போது, ஊரேதான் பூமிதளமுள்ளதெல்லா முத்தமனேகண்ணுக்கு தோற்றுந்தானே. ௬௪௩

தோற்றமுடன்மையதனை பார்க்கும்போது தோன்றுமேபாதலநிதிகளெல்லாம், வேற்றுமையாய்காண்பிக்கும் நிதிகளப்பா வெவ்வேறாய்பிரிவுமுத வுளவுகாட்டும், போற்றமுடன்மையதனை லலாடமீதில் பொங்கமுடன்றான்தீட்டி வருவாயானால், ஏற்றதொருபொருளுந்தனுக்கு கண்ணிற்றோன்று மென்மகனேபுத்தியுள்ளான் செய்வார்தாமே, ௬௪௪

தாமானமையதனை லலாடம்பூண்டு தாரணியில்ராசரிடஞ் சென்றாயானால், காமானமாகவல்லோ உந்தனுக்குகடாட்சித்துமரியாதியாவுஞ்செய்து, வேமானமாகவல்லோநிதியுந்தந்து விருப்பமுடன்சோடசோபசாரஞ்செய்து, தீமானமாகவல்லோ சதாகாலந்தான் திகழுடனேயவனுக்கு முன்னிற்பாரே. ௬௪௫

நிற்கையிலேஉந்தனுக்குவசியமாகி நேர்மையுடன்சரிபீடம்தான் கொடுப்பார், வற்கமுடன்கேட்டதெல்லாந் தான்கொடுத்து வாகுடனேநாடுவளம்பூமியீவார், நற்கைமுதல் காளிபலபிடாரியாவும் துப்

புரவாயுந்தனுக்கு நடுங்கும்பாரு, அற்பமென்றுநினையாதே மையின் வேகம் அப்பனேநாமுரைத்தோமுண்மைபாரே. ௬௪௯

இராக்காலம் ஆகாயத்தில் மண்டலங்காண்பது.

உண்மையாமின்னமொரு கருமானங்கேள் உத்தமனேசொல்லு கிறேன் மைந்தாகேளு, தன்மையாமையதனை எடுத்துக்கொண்டுதகை மையுடன்புருவத்தில் மைதான்தீட்டி, கண்மையுடன்வாகாஷம் பார்க்கும்போது கனிவாகவேழுமண்டலமுந் தோன்றும், பன்மையாமாகாஷவதிசயங்கள் பாங்குடனேயுன்தெரியும் பாருளோர்க்கே.

பாரிலேவதிசயங்கள்காணலாகும் பரிதிமதிவருந்ததிகள்பார்க்கலாகும், சீருடனேசத்தலோகங்களெல்லாம் சிறப்புடனேகண்ணிற்கு தோற்றுங்கண்டீர், தாருடனேயிதிகாச வித்தையெல்லாம் தாரணியிலென்னாளும் பார்க்கலாகும், கூருடனேகாலாங்கிநாதர்பாதம் குறிப்புடனேயான்வணங்கி கூறினேனே. ௬௪௮

கூறினேன்பலநூலுங்கண்டாராய்ந்து கொப்பனவேகளுக்குமுதலுளவுபார்த்து, தேறினேன்கைபாகம் செய்பாகந்தான் தெளிவாகக் கண்டறிந்து யிந்நூல்தன்னை, மாறியேபிழைப்பதற்கு வழியுஞ்சொன்னேன் மகத்தானவேதையிது கரையுஞ்சொன்னேன், மீறியேபோகாமல் விதியுஞ்சொன்னேன், மிக்கானகாண்டமேழாயிரந்தானே

தானானகாண்டமே ழாயிரந்தான் தாக்கானகருக்குருங் காணலாகும், பானுனமாற்கமுதல்றிபலாகும், பாலகனேயின்னூல்போல் லாருஞ்சொல்லார், தேனானவின்னூல்தான் குருநாலாகும் தேர்ந்தெடுத்தேன்காண்டமிது சத்தகாண்டம், மானனமனோன்மணியாள் தேவிநானும் மகிழ்ச்சியுடன்றான்கேட்டு மகிழ்ந்திட்டாளே. ௬௫௦

சாதிலிங்கக்கட்டு செந்தூரவேதை.

மகிழ்ந்ததொருசாதிலிங்கமின்னம்பாரு மகத்தானலிங்கமொரு கட்டிவாங்கி, தகிழ்ந்ததொருகட்டிக்கு கடகங்கேளு தாக்கானதாளகமுஞ் சிலையுங்கெந்தி, நெகிழ்ந்ததொருயெரிகாலன் பாலாலாட்டிநேர்மையுடன்றானரைப்பாயாறுசாமம், மகிழ்ந்துமேதானரைத்துக் கவசம்செய்து சாங்கமுடன்சீலையது வலுவாய்ச்செய்யே. ௬௫௧

செய்யவேயாவிதனிலேகாயவைத்து செம்மையுடன்கோழியதுபுடமதாக, துய்யவேதீமூட்டிப் புடைத்தைப்போடு துப்புரவாம்புடமதாறிப்பின்பு, பையவேயெடுத்துப்பார்சாதிலிங்கம் பாகமுடன்கட்டியது யுருகிப்போகும், மெய்யுடனேகட்டியது யெடுத்துமைந்தா மேன்மையுடன்செந்தூரஞ் செய்யக்கேளோ. ௬௫௨



கேளேதான்செந்தூரம் செயநீர்தன்னால் கெடியுடனேநாற்சாமம் சுருக்குதாங்கு, வீனேதான்வீரமென்ற செயநீர்தன்னால் வேகமுடன்றான்கொடுக்க காரமேறி, தாளேதான்சட்டிதனில்மணல்தான் கொட்டி சாங்கமுடன்கட்டிதனை நடுவேவைத்து, மீளேதான்மேலுமந்தமணல்தான்கொட்டி விளங்கவேமேற்சட்டிகொண்டுமூடே. ()

மூடியேதானெரித்துயெட்டுசாமம் முனையானவாலுகையிலெடுத்துமைந்தா, நீடியேதீயாறியெடுத்துப்பாரு நேர்மையுடன்செந்தூரமென்னசொல்வேன், கூட்டியேசெந்தூரம்பதனம்பண்ணு கொற்றனேவெள்ளிசெம்பில் பத்துக்கொன்று, வாடியேதிரியாதே மைந்தாகேளு மயங்காமல்கரியோட்டிலூதிப்பாரே. ௬௫௪

பார்க்கையிலேபொன்னதுவு மாற்றுகாணும் பாகமுடன்நாலுக்கோர் தங்கஞ்சேர்த்து, தீர்க்கமுடன்வாரடித்துப் புடத்தைப்போடு திறமானபொன்னதுவு மெட்டுமாகும், வார்க்கவேமறுபடியுமுருக்கியேதான் மறவாமல்செங்கல்லில் கம்பிசாய்த்து, ஆர்க்கவேதானெடுப்பாய்கம்பிதன்னை அப்பனேபிறவியது பொன்னுமாச்சே. ௬௫௫

ஆச்சென்றுவிடுகாதே மைந்தாகேளு அப்பனேகுன்றியிடைதேனிலுண்ண, மூச்சன்றிவாசியதுகீழ்நோக்கும் மூலமுதல்கபாலவரைவன்னிமீறும், காச்சலுடன்சன்னிபதி மூன்றும்போகும் கடிதானவாயுவென்ற தெண்பதும்போம், காச்சலுடன்பிரவிச்சுவுள்வீச்சேகும் நாடாதுநாவரட்சி நளினமாமே. ௬௫௬

நளினமாங்கவுசையொடு மேகம்போகும் நாட்பட்டசுரமுதலும் நாடாதப்பா, நளினமுடன்முறைக்காய்ச்சல் கத்தியோடும் கபாலவலிமுகசன்னி காடேபோகும், பளினமதாயிப்பாகம் யாருஞ்சொல்லார் பாரினிலேசித்தர்களு முனிவர்தாமும், மலினமுடன்பலநூலுங் கண்டாராய்ந்து மாற்கமுடன்பாடிவைத்தேன் காண்டமேழே. ()

ஏழானகாண்டமது பெருநூலாகும் யென்மகனேயின்நூல்போலாருஞ்சொல்லார், வாழான நூல்களெல்லாம் பார்த்துமென்னபார்த்துமே வுள்ளுளவுமறிந்துமென்ன, தாழானபெருநூலேழாயிரத்தில் தாரணியிலுள்ளதொரு பொருள்களெல்லாம், நீழானநோயறிந்து கண்டாராய்ந்து நேர்மையுடன்பாடிவைத்தேன் பெருநூலாமே. ()

லிங்கக்கட்டு.

பெருநூலாமின்னமொரு கருமானங்கேள் பெருமையுடன்மானுக்கள் பிழைக்கவென்று, கருவானபிரமதண்டுச்சாறுவாங்கி கவன

முடன்றானிடித்து பிழிந்துகொண்டு பருவானலிங்கமது பலமும் பாகமுடன்சுருக்கதுதான் எட்டுசாமம், தருவானசட்டிதனில்கட்டி வைத்து சாங்கமுடன்சுருக்கதுதான் தாக்கிப்பாரே. ௬௫௯

தாக்கினபின்கட்டிதனையெடுத்துப்பாரு தகைமையுள்ள கட்டியது யிறுகிக்காட்டும், நோக்கமுடன்தட்டிக்குபின்னுமந்த நுணுக்கமுள்ளமூலிதனை கவசஞ்செய்து, [illegible] து பாகமுடன்ரதவிதனிலே தா[illegible]க்கவேசீலை[illegible]ாய்ச்[illegible] மைந்தாகேளு சுந்தரனேமணல்[illegible]வைத்து, ரோக்கமன்றிதியா[illegible]லி[illegible]னை[illegible]. ()

போடவேபுடமதுவுமாறிப்பாரு பொங்கமுடன்கட்டியது வருக்குபோலாம, நீடவேகட்டிதனைபதனம்பண்ணு நீடானவெள்ளிசெம்பில் பத்துக்கொன்று, கூடவேகுருவதுதான் வருக்குதன்னில்குமுறவேதான்கொடுத்தூதிப்போடு, ஓடவேசெம்பதுவு மோடிப்போகவுத்தமனேகரியோட்டி லூதிப்போடே. ௬௬௧

ஊதினபின்னெடுத்துப்பார் யென்னசொல்வேன் வுத்தமனே மாற்றதுவுமாறுகாணும், சாதியிலேபிறந்ததொரு பொன்னைப்போ சட்டமுடன்றானிருக்கும் பசுமைமெத்த, வாதிகளோயிவவேண்காணப்போறார் வையகத்தில் சித்தர்செய்யும் வேதையாச்சு, மாகனுமிருந்தாலும் வேதைகாண்பான் மாநிலத்தில்விட்டகுறை வாக்கும்பாரே. ௬௬௨

பாரேதான்சித்தர்களுக் குகந்தவேந்தை பாரானும்ராசர்களு மெச்சுவார்பார், சீரேதானிவ்வேதை சிடிகைவேதை சிறப்புடனே நாதாக்கள் கண்டவேதை, நேரேதான்நாலுக்கோர் தங்கஞ்சேர்த்து நேர்மையுடன்வாரடித்து புடத்தைப்போடு, கூரேதான்மாற்றதுவு மெட்டதாகும் குணமானபோகரிஷி கூறினாரே. ௬௬௩

கூறவேமுடியாதிலிங்கப்போக்கு கொற்றவனே சன்னிசுரசன்னிவாதம், தீறவேவனுப[illegible]னிலீய திசைகெட்டுயிரகெட்டு தியங்கியோடும், மா[illegible]முறைக்காய்ச்சல் மதிகெட்டோடு மயங்காதேமூன்றுநா ளருந்திப்பாரு, வாரவேமேகமென்றீரும்போகு முத்தமனேசிவயோகம் வாய்க்குந்தானே. ௬௬௪

தானனசிவயோகம்வாய்க்கும்போது தாழ்வானதேகமது கற்றாணுகும், வேனன்வாசியது கீழ்நோக்காகும் வேகமுடன் நாம்பெல்லாம்வலித்துகாட்டும், கோனனையெனதையர்காலாங்கிநாதர்குருட



னைதத்தான்வணங்கி சத்தகாண்டம், தேனனமொழிபோல தோற்தெடுத்து தேவிபதமடிபணிந்து பாடினேனே. ௬௬௫

கெந்தகத்தயிலம்.

பாடினேனின்னமொரு மார்க்கங்கேளு பாலகனேஎன்மக்கள் பிழைக்கவென்று, நீடியேபலநூலுஞ்சுளுக்கறிந்து நேர்மையுடன் யீமுரைத்த தயிலமப்பா, தேடியே பூவரசன் சேர்தானென்று சிறப்பானகஞ்சாலின் விரைதானப்பா, வடியேயலையாதே கிழங்குசொல்வேன் வளமானதாம்ரையின் கிழங்குதானே. ௬௬௬

கிழங்கானவிரையுடனே கெந்திசேர்தான் கிளறியேகுழியம்மிதன்னிலிட்டு, பழங்கமுடன்தானிடித்து பாண்டமிட்டுப் பாகமுடன் பாண்டமதிற் சிலதுபோட்டு, தழங்கவே மேல்வாயக்குச் சீலைசெய்து தகைமையுடன் குழித்தயிலமிறக்கிக்கொண்டு,வழங்கவேதயிலமதை பதனம்பண்ணு வளமையுடன்ரவிதனிலே தாக்குவாயே. ௬௬௭

தாக்கவேதகடடித்துபூசிப்போடு தனியானசெம்பதுக்குப் புடமும்போடு, நோக்கமுடன்செமபதுவுமூரலேகி நெடிதானசெப்பதுவு மாற்றுகாணும, பார்க்கவேசெம்பதுவு மூன்றேயாகும் பாங்கான வெள்ளியது நான்கேயாகும், போக்கவேதானுருக்கி தகடடித்துப் பொங்கமுடன்றான்போட மாற்றுமாமே. ௬௬௮

மாற்றானபொன்னதுவு மாறேயாகு மகத்தானதங்கமது மூன்றுக்கொன்று, நீற்றானவிரண்டையுந்தான் ஒன்றாய்க்கூட்டி நிரையுடனேருணுருக்கி யன்னுபாரு, கூற்றானபொன்னதுவு மெட்டேயாகும் குணமானபசுந்தங்க மதிற்கீடாகும், தூற்றான்தயிலமது வேதிக்கும் பார்த் துறையானமுறையாதுதா னதீதம்பாரே. ௬௬௯

அதீதமாமித்தயிலங்கொண்டுபாரு அப்பனேகுஷ்டமது கடைலாக்கட்டோடும், துதிதமுடன்மேகமென்ற திருப்பதும்போம், தலையாத்தகவுசையொடு பொருமல்ன்னவும் வதிதமுடன்சூலையது விட்டேயோடும் வாகானகிரந்திமுதல் சிரங்குபோகும், கதிதமுடன்நரம்புவலிரணங்கள்போகும், கண்ணொளிவுகாட்டுமது தயிலமாமே. ()

ஆமேதான்தயிலமது காயசித்தி அப்பனேதேகமது கற்றாணுகும், காமேதான்காயாதிகற்பநூலைக் கவனமுடன்கண்டறிந்து பாடவற்றேன், நாமேதான்சொன்னபடி சத்தகாண்டம் காட்டினேனா

பிழைக்கவென்று நவின்றிட்டேன்யான், வேமேதான்காலாங்கிபாதம் போற்றி விருப்பமுடன்பாடிவைத்தேன் காண்டமேழே. ௬௭௧

ஏழானகாண்டமது யின்னங்கேளு யெழிலான நடுக்காண்டம் நாலாங்காண்டம், பாழானதேகமதுக் குறுதிசொன்னேன்பாலகனே தத்துவமுமதிகஞ் சொன்னேன், மீழானவயித்தியமும் வாதஞ்சொன்னேன் நிலையானயோகத்துக் குறுதிசொன்னேன், தாழானசிவயோகமெளிதிற்சொன்னேன் தாரணியிலதிதமென்ற வித்தைதானே

அபினிசெம்புவேதை.

வித்தையாமின்னமொருபாகம்கேளுவேடிக்கைசிமிட்டுவித்தை போக்குசொல்வேன், சுத்தமுள்ளஅபினியது பலந்தானொன்று கயமானகெந்தகமும் பலந்தானொன்று, சுத்தமுடன்றுருசதுவும் பலந்தானொன்று ஆடியானவீரமது பலந்தான்நாலு, சுத்தபத்தின்நீரதனை விட்டுயாட்டிக் கருத்துடனேமெழுகதுபோ லரைத்திடாயே ௬௭௩

அரைத்துமேசிமிழ்தனிலே பதனம்பண்ணு அப்பனேசெம்பது தானெடுத்துக்கொண்டு, வரையுடனேசெம்புநிசர் மெழுகெடுத்து வளமாகதானுருக்கி கிராசமீவாய், குரையாமல்செம்புருகி நிற்கும்போது குறிப்புடனேவரிசைபெறத் தன்னிலீவாய், நிரையுடனே செம்பதுவுஞ்சுத்தியாச்சு நிலையானகளிம்பதுவு மேகலாச்சே. ௬௭௪

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு அப்பனேசெம்பெடுத்து மூன்றுவெள்ளி, பாச்சலேசெம்பதுவு மொன்றேயாகும் பாலகனே தான்சேர்த்து வுருக்கிக்கொண்டு, மாச்சலென்றுயிடையாதேபின்னு மைந்தா மாற்கமுடன்தங்கமது ஒன்றுகூட்டி, பேச்சொன்றுந் தப்பாமல்வுருக்கிப்பாரு பேரானபொன்னதுவு மேழுமாமே. ௬௭௫

ஏழானபொன்னதுவுமென்னசொல்வேன்என்மகனேவாரடித்து புடத்தைப்போடு, ஆழானபொன்னதுவு மாற்றுமெத்த அப்பனே பிறவியது பொன்போலாகும், கூழானபொன்னதுவு மல்லகண்டீர் குணமானசித்தர்செய்யும் வேதையாச்சு, நீழானரிஷிமுனிவர்களுக்குவேதை நேர்மையுடன்காண்பவனே சித்தனாமே. ௬௭௬

சித்தனாப்பிறப்பதுவு மரிதேயாகும் சீருலகில்விட்டகுறை சாணவேண்டும், பத்தியுடன்சிவசத்தி ஞானம்வேண்டும் பாருலகில் பெரியோர்கள் கிருபைவேண்டும், வெத்தியுடன் சின்மயத்தில் சொ



ரூபம்வேண்டும் வேதாந்தத்தாயினது வருளேவேண்டும், நித்திலங்கும்பதாம்புயத்தின் சூட்சங்காண நிலையானவாசிவழியறிவாய்தானே

கெந்தகக் களங்கு.

தானானகெந்தகத்தின்மார்க்கங்கேளு தயவானகெந்தகமும் களஞ்சியொன்று, வேனான்தங்கமது களஞ்சியொன்று வெழிலானவேலனிட பிசினிதன்னால், பானானகெந்தகத்தின் மேலேயப்பா பாகமுடன் சத்தியல்லோவங்கிபூட்டி, தேனானதேனதுவுந் தானெடுத்து தெளிவுடனேசாரமதை பொரித்துப்போடே. ௬௭௮

போட்டுமேசாம்பிராணி பூரந்தானும் பொங்கமுடன் களஞ்சியதுசெப்பக்கேளு, தாட்டிகமாய்தேனதிலே யரைத்துமைந்தா சாங்கமுடன்கெந்திக்கு வங்கிபூட்டி, நோட்டமுடன்சுடாரவி தீபந்தனில் நோக்கமுடன்றூன்கொளுத்தி யெடுத்துப்பாரு, வாட்டமுடன் கெந்தியது தங்கஞ்சேர்த்து வாகுடனேகளங்கமது போலாம்பாரே.

பாரேதான்களங்கமது வுருக்கிப்பாரு பாகமுடன்பிரிதிலின்களங்குமாகும், சீரேதான்களங்கெடுத்து மன்னாகேளு சிறப்பானவெள்ளிசெம்பில் பத்துக்கொன்று, நேரேதான்றூனுருக்கி கொடுத்துப்பாரு நேரானமாற்றதுவு மாறுகாணும், வேரேதான்கரியோட்டிலூதிப்போடு வெளுமையாம்பசும்பொன்போல் தோற்றுந்தானே.

தோற்றவேபின்னுமந்த பொன்னைத்தானும் தோராமல்வாரடித்து புடத்தைப்போடு, மாற்றலென்றதிறைசவுடு களிம்புமேகி மன்னவனேபொன்னதுவும் பசுமைகாட்டும், நாற்றமென்ற செம்பதுவுங் கொஞ்சம்நிற்கும் நாயகனேபுடத்துக்கு யேகாதப்பா, கூற்றனென்னும்வங்கமது கொடுத்தூத கொற்றவனேசவ்ளையது பசும்பொன்னாமே ௬௮௧

பொன்னானபொன்னுக்குச் சரிநேர்தங்கம் பூட்டடாயெடைக்கிடைதான் தங்கஞ்சேரு, மன்னாகேள்மாற்றதுவு மெட்டரையுமாகும்மகத்தானபொன்னதுவும்சிவப்புமெத்த, தென்பொதிகைதனில் வாழும் சித்தர்பாவும் தெளிந்துமேகெந்தகத்தின் மார்க்கங்கொண்டார், வின்னமில்லாபொன்னதுவும் சித்தர்வேதை விருப்பமுடன்பாடிவைத்தேன் காண்டமேழே. ௬௮௨

வேதவியாசர் பாஷாணமெழுகு.

காண்டமாமின்னமொரு கருமானங்கேள் கருத்துடனே யாமுரைப்போ மாணாகேளே, தீண்டாதபாஷாணம் சேர்தான்வாங்கி திற

மானகொடிக்கள்ளிச் சார்தானப்பா, மாண்டுமேபாஷாண மெண்ணை போக மாற்கமுடன்சுருக்கதுவு மெட்டுசாமம், ஆண்டதுவும் நாறு வயதானவேம்பு அப்பனேபட்டையது சிவிக்கொள்ளே. ௬௮௫

கொள்ளவேபட்டையது தயிலம்வாங்கிகொப்பெனவேதயிலமது சுறுக்குதாக்கு, விள்ளவேசுருக்கதுவு மெட்டுசாமம் விருப்பமுடன் றூன்கொடுத்து எடுத்துப்பாரு, மெள்ளவேகட்டியது புகையடங்கி மேன்மையுடன் பாஷாணமிருக்கிக்காட்டும், தள்ளவேசிவனரின்வேம் புதானும் சாங்கமுடன்சுருக்கிட்டு நீற்றிப்போடே. ௬௮௬

நீற்றியபின்னவியெல்லாம் வெளிபோகாமல் நேர்பாகச்சட்டியால் மூடிப்போடு, ஆற்றியபின் மருந்தெடுத்துக் காயப்போட்டுஅப்பனேமறுசீலைக் குள்ளேவைத்து, சாற்றியபின்முன்போல நீற்று நீற்றுச் சாதகமாய்பதினொருக்கால் நீற்றுநீற்று, மாற்றியபின் மருந்தெடுத்து அண்டோட்டிவிட்டு வளமாகமேல்மூடி சீலைசெய்யே.

செய்திட்டுமையர்தெருவில் புடத்தைபோடு திரமாகச்சவர்க்காரச்சுன்னமாகக், கொய்திட்டசித்தரெல்லாம் வழலைதன்னைக் குவிர்தபடி சொல்லாமல்மறைத்துப்போட்டார், உலந்திட்டுப்பிள்ளைகள்தன்னைப்பார்த்து வுலகத்தோர்கரிகொள்லகாகில்லாமல், எய்திட்டு ஏங்கியேவறுமைபூண்டு இறந்திறந்துபோனவர்கள் கோடிதானே. ௬௮௭

தானென்றநூல்பார்த்துவுலகோர்தி தனித்துமேமனம்புண்ணாய் வெறுமையுற்று, வாவென்றவுலகத்தோர் சிரிக்கக்கேட்டுமருட்கொண்டபிசாசுபோல் வாயுலர்த்தி, ஊனென்றசொத்துக்குமிடமில்லாமலுண்பாரையுடைப்பாரை பார்த்துசங்கி, நானென்ற ஆணுவத்தால் கெட்டோமென்று நாய்போலதிரிந்துமண்ணுள் மாளுவாரே, ()

மாளாமலிருக்கவல்லோ வழலைதன்னை மறையாமல் சொல்லிவிட்டே னேழாயிரத்துள்ளே, கோளானசீஷருக்கு நாலியவேண்டாங் கொடுத்தாக்கால்ரவிகோடி நரகமெய்தும், தாளானஎன்னூலில் வழலைதன்னைச் சாற்றினேனொருசொல்லுந் தவறில்லாமல், நாளான அம்பரத்துக் கொப்பாய்ச்சொன்னேன் ஞானக்கள்பதமறியச் சொன்னேன்காணே. ௬௮௮

காணப்பாபுடம்போடவழலைதன்னைக் கடுங்காரச்செயநீரில் தோய்த்துப்போடு, பூணப்பாஏழுநாள் ஈஷிற்பேட்டுப் போனசுன்ன



மென்ற குகையிலூது, தோணப்பா எடுத்துடனே பூப்போல்நிற்குந் தொடுகுறிபோல் சரக்கையெல்லாந் துடியாற்கொல்லும், வீணப்பா கெடுக்காதே என்னூலைப்பாரு வேதாந்தமாயிதைத்தான்பூசிப்பாயே

பூரச்சுன்னம்.

பூசித்துவழலையைத்தான் சுன்னம்பண்ணு புத்திகெட்டவாதிகளே மற்றொன்றுகா, நேசித்துவழலையினி லுப்பைக்கட்டு நிலைத்தபின்புபூரணத்தைச் சுன்னம்புண்ணு, ஆசித்துப்பூரத்தால் தாளகத்தைப்பண்ணு அதிதமாந்தாளகத்தால் வங்கத்தைநீற்று, வாசித்து வாலைதனைப் பார்த்தாலாமோ வாதமென்ன கொஞ்சத்தி லாமோ சொல்லே. ௬௯0

சொல்லென்றவங்கத்தில் தாரிசதனைநீற்று தரிசியினால்சிங்கிபண்ணுருதங்கட்டு, மல்லென்றசூதத்தால் காயசித்தி மக்களேகெவனத்தி லெட்டெட்டுஞ்சித்தி, அலலென்றகேழ்வியினால் வாதஞ்சுட்டுஆற்றுமல்பொய்யென்று லென்னசொல்வேன், நில்லென்று லெறிந்தகல்லும் நிற்குமோசொல் நிர்மூடவாதிகளே வழலைநீபாரே. ௬௯௧

பாரென்றவழலையென்ற கன்னமொன்று பரிவாகச்சுன்னமொன்று கூட்டியாட்டே, நேரென்றசலமாகுஞ் சலத்திலுள்ளே நேர்ப்பாகக்கற்பூரம்வாரியிட்டுக், காரென்றகுவியில்வைத்துவுப்பாய்பண்ணிக் கடுகஇந்துசுண்ணமதில் வைத்துஊற்ற, நூரென்றமல்லிகைபூப்போலாஞ்சுன்னந் தரிசானசாரயிடை சுண்ணங்கூட்டே. ௬௯௨

சாரநீர் வுப்புக்கட்டு.

சாரமிடசெயநீரும் வீரம்போட்டு தயங்காதகல்லுப்புச் சூடன்தானும், ஆரமிட்டவெடியுப்பு சினக்காரங் ஐந்தையுந்தான் வகைக்கு ரண்டு பலமேகூட்டி, காரமிட்டசெயநீரு லரைத்துருட்டிகடுரவியிற் போட்டுவர தினந்தானேழு, தாரமிட்டசுண்ணாம்பு போலேயாகுந் தயங்காதகுழம்புபோல் பண்ணிக்கொள்ளே. ௬௯௩

பண்ணியதோர்குழம்புக்குள் பாறையுப்பு பலம்பத்து நிறுத்தெடுத்து பாக்குபோல, ஒண்ணியதோர் குழம்புக்குள் பிசரிவாட்டஉற்றுநன்றாய் குழம்பையெல்லாம் பிரட்டிபோடு, நண்ணியதோர் தியிற்குள்மூகிரவாட்டி நலமானவுவர்மண்ணும் கிளிஞ்சினீறும் கண்ணியதோரமுரிவிட்டு பிசைந்துகொண்டு கடுகவேகிழ்மேலு மடைபோல்மூடே ௬௯௪

முடியேசட்டியிலேயிட்டுகன்றாய் முடிந்தபின்பு அன்பதெருவடுக்கப்போடு. நாடியேகுளிர்ந்தபின்பு எடுத்துப்பாரு நலமான தங்கம்

போவிருக்கட்டும், சூடியேகவசமெல்லாந் தள்ளிப்போட்டு துடியானகட்டுகொடி யிலையைவாங்கித், தேடியேபழச்சாறு விட்டரைத்து திறமாகக்கவசித்து புடத்தைப்போடே. ௬௯௪

புடம்போட்டுவுப்புமணி பார்த்தால்மக்காள் பேருளமுத்துமணி போலக்காணும், விடம்போட்டசிவன்வந்து நிர்த்தஞ்செய்வார் வேதாந்தமாயிங்கே யட்டசித்தியாவாள், தடம்போட்டநிராதார வெளியுஞ்சொல்வாள் சதாசித்தம்குருபதத்திற் சரணம்பண்ணி, வடம் போட்டியுப்புமணி செபித்தாலையா மகத்தானசித்தியுமா மாட்டிப் பாரே. ௬௯௫

உப்புபாத்திரம்.

மாட்டிப்பார்மெழுகாலே கின்னியண்ணிமண்கட்டிமெழுகதனை தள்ளிப்போட்டு, ஊட்டிப்பாருப்புருக்கி யதிலேவார்த்துஉத்தமனே உப்பினுடகின்னிதன்னில், தீட்டப்பாரடித்தூரில்சீலைசெய்து சிறப்பானவாலுகையின் மேலேவைத்து, வாட்டிப்பார்சூதமது சிறங்கைவிட்டு மயிற்கொன்றைச் சாற்றினால் சுருக்குப்போடே. ௬௯௬

சுருக்கிடவேசூதமது வெண்ணெய்போலாந்துடியானகூடனுட தீயில்வாட்டி, உருக்கிடவே கரண்டிதனி லெண்ணெய்குத்தி யுருக்கமணிபோல்நின்றுடுங்கரியினுள்ளே, உருக்கிடவேசெம்பட்டில் தாழ்வடமாய்சேர்த்து உத்தமனேஐந்தெழுத்து மெட்டெழுத்தேோதி, நருகிடவேமனோன்மணித்தாய் முன்வந்துநிற்பாள் நாடினதெல்லாஞ் சொல்லி ரட்சிப்பாளே. ௬௯௭

ரட்சிக்கவுப்பைநன்றாக்கட்டியாடு நாதாந்த வழியினைத்தான் முன்னேபண்ணு, பட்சிக்கச்சூதத்தைச் செந்தூரம்பண்ணு பார்க்கவே வேணுமென்றால் சாரணையைத்தீரு, குட்சிக்குள்வாயுவெல்லா மறுத்துத்தள்ளு குடிலமாம்நாகத்தில் வழிலைவாங்கு, பிட்சையெடுத்துண்ணுமவிநம்பாட்டிப்பாரு பெண்மாயனுய் கைதனையறுத்துப் பின்பாய்நில்லே. ௬௯௮

நில்லென்றால்வாழ்வுனக்கு நிற்குமோடா நேராகவழியைதுசித்திறைக்கால், அல்லென்றகுபேரனைப்போல் வாழ்வுண்டாகுமாதித்தனுள்ளவுமுண் டுடுக்கலாகும், கல்லென்றகல்லுப்பு கட்டிற்றானல் காரமாஞ்சூதத்தை கவ்விக்கொல்லும், மல்லென்றசூதத்தி லெட்டெட்டுஞ்சித்தி வாய்வீணாய்த்திரிந்தால் மண்ணாய்ப்போமே ()

போகாமலுப்பைமுந்திக்கட்டியுண்ணு பொய்யொன்றுஞ்சொல்லாதேபுகழாய்பெண்ணே, ஏகாதேமனதுதன்னிலிச்சியாதேயெவ்வுயிருந்தன்னுயிர்போ லெண்ணிப்பாரு, வேகாததேதளென்று பாருபாரு



வெளியோடே மனந்திருந்தியொன்னைப்பாரு, பாகாமல்வாசியைத்தான்மூலத்திலுண்ணு பாராபரியைப்பூசித்துப்பானம்பண்ணே. ௭௦௦

பானமென்றால் வெகுபிரிய மென்தாய்க்கப்பா பரிவானசுத்திபொரிபலகாரமன்னம், ஊனமில்லாபுட்பமொடு வைத்துபூசி வுயர்ந்தமணிதாயார்க்குஊட்டிப்பின்பு, தானமென்றகுருவுக்குவுடல்பொருளுமாவி தயவுடனேகுருவுக்குத்தாரைவார்த்தி, வாவென்றமூலத்தில் வாசியைத்தான்மூட்டி சிவசிவாவென்றுசொல்லிபானம்பண்ணே.

பண்ணவேபோகமுனிஏழாயிரங்கோர்வைபாடினேன் சித்தர்க்காமென்றுசொல்லி, திண்ணமுடன்வயித்தியத்தின்சார்புநூலை திரட்டிவைத்தேனிந்நூலுக்குறுதிமெத்த, வண்ணமுடன்செய்பாகம்மறித்துசெய்தால் வலுவானநோயகன்றுபுனிதனுவாய், எண்ணமுடன்காவியமாய்ச்சத்தகாண்டம் இயற்றினேனேழாயிரக்காண்டந்தானே. ()

லிங்கக்கட்டு

தானுனவின்னமொருகருமானங்கேள் தாக்கானலிங்கமதுபலந்தானப்பா, வேனுனகட்டியொருலிங்கத்திற்கு வேகமுடன்மூலப்பாலில்சுருக்குசாமம், கோனுனசங்கன்சார்பலங்கார்சாமம் குறிப்புடனேசுருக்கிடவேகட்டிப்போகும், காணுமேற்போக்குமின்னங்கேளு கருவானவழிஞ்சியிடதயில்வாங்கே. ௭௦௩

வாங்கியேலிங்கமதுசுருக்குத்தாக்க வரிசைபெறலிங்கத்தின்சூதந்தானும், தேங்கியேயுள்ளடக்கியிருக்கட்டும் தெளிவானகெந்தியதுபுகையடங்கும், ஓங்கியேலிங்கமதுகட்டிற்றானல் ஓகோகோநாதாக்களதிகமென்பார், ஏங்கியேதிரியாதேமன்னுபாரு எழிலானலிங்கமதுயிருக்கிப்போமே. ௭௦௪

போமென்றுவிடுகாதேபுகலக்கேளு புத்தியுள்ளபாலகனேயின்னஞ்சொல்வோம், தாமென்றமேதியின்பால்கற்றூழம்பால் தயவாகசமனிடையாயெடுத்துக்கொண்டு, நாமென்றலிங்கமதைசுருக்குதாக்கு நாயகனேலிங்கமதுவுருக்குபோலாம், காமென்றலிங்கத்துக்கங்கிசொல்வேன் கருவானதாம்பரத்திற்களங்குசெய்யே. ௭௦௫

செய்யவேகளங்குடனேசூதந்தானும் சிறப்பானசிங்கியுடன்தாரங்கூட்டு, பையவேஅரைப்பொடியுங்கூடச்சேர்த்து பாகமுடன்நிம்பழத்தின்சாற்றாலாட்டி, பெய்யவேசோடசமாம்பங்கதாக்கி போரானலிங்கத்தின்மேலேபூசி, தய்யவேசிதனிலேகாயவைத்து துப்புரவாய்ன்னுைம்புசீலைமாட்டே. ௭௦௬

மாட்டியே யிப்புடமாம் தன்னிலிட்டு மயங்காதே மன்னவனே யெடுத்துப்பாரு, தாட்டிகமாய்ச் சோட்சமாய்ப்புடந்தானப்பா சாங்கமுடன் முன்சொன்னபடியேபோடு, நீட்டமுடன் லிங்கமது வுருதிக்கட்டும் நெடுங்கம்பி லிங்கமது வுருகிப்பாயும், வாட்டமுடன் செந்தூரஞ் செய்தாயானால் வாகான வேதைமுகங் காணலாமே. ௭௦௭

காணலாம் சதகோடி சூரியன்போல் தாக்கான பிரகாசமான சோதி, நீணவே லிங்கமது யென்னசொல்வேன் நிலையான கவன சத்தி குளிகையென்பார், தோணவே மதியுடனே யெழுக்கூட்டி தோராமல் செம்பது வுமூன்றுங்கூட்டி பூணவே தங்கமது வொன்றுகூட்டிப் புண்ணியனே மூசைதனி லுருகிடாயே. ௭௦௮

உருக்குமுகந்தானறிபார் மூடர்பாரி வுலகுதனில் மெத்தவுண்டு வுரைக்கக்கேளு, நெருக்கமுடன் லோகமது வுருகும்போது நேர்புடனே குறுவொன்று தன்னையீவாய், நெருக்கமுடன் கண்விட்டு ஆடும்போது தோரானகரமதை தப்பின்னுமீவாய், செறுக்குடனே கரிபோலயிருக்கும்பாரு செம்மைபெற வோட்டில் வைத்தூதிப்போடே. ௭௦௯

போடவே மூன்றுமுறை யூதிப்போடு பொன்னவனே பொன்போலே மாற்றுகாணும், நீடவே மாற்றதுகாணும் பாரு நிலைத்ததடாவாத வித்தை நிசமதாச்சு, கூடவே தங்கம் தானொன்றுகூட்டி குறிப்பாகவாரடித்துப்புடத்தைப்போடு, ஆடவே சீவனத்துக்கிடமே சென்று அப்பனே அறந்தவசில் நின்றிடாயே. ௭௧௦

நிற்கையிலே வாணிவந்து திர்த்தஞ்சொல்வாள் நிராமயத்தின் சோதியது சொரூபந்தோன்றும், நற்கையென்னுங்காளியவளொருங்கிநிற்பாள், துரைராசசுந்தரன்போல் சித்தனாவாய் பற்குணன்போல் வீரதிவீரனாவாய், பாருலகில் வுன்னையொருரிஷியாமென்பார் அற்பமென்றுநினையாதே வருள்மைந்தா கேள் அறந்தவசிலதனையே நாடிக்கொள்ளே. ௭௧௧

கொள்ளையிலே குருவர்க்கஞ் சிறுவனென்பார் குவலயத்திலுன் மகிமைகாணமாட்டார், தெள்ளுந்தமிழ் வடமொழியைப் பிரித்தாராய்ந்து திரட்டிவைத்த மாணாக்கனென்பார் கண்டீர், புள்ளிமயிலேறுஞ் சுப்ரமணியன் சுவாசம் பூரணத்தினிருகலைகள் அறிந்தானென்றுப், பள்ளுந்தமிழ்நாடகத்தைப் பற்றுமற்றான் பாருலகிலிருப்பவன் சித்தனாமே. ()

சித்தனைப்பிறந்தாலும் பிறக்கவேண்டும் சின்மயத்தின் சுடரொளியைப்பற்றவேண்டும், பத்தனாயிருந்தாலுமென்னலாபம் பரிபாகமிழதனையகற்றவேண்டும், முத்தமிழில்வல்லவராயிருக்கவேண்டும் மூதுலகில்கீர்த்திதனை யடையவேண்டும், வித்தகனாகத்தியற்குச் சீடனாக விண்ணுலகிலிருப்பவனை யேகியாமே. ௭௧௩



யோகமென்றால் யோகமதை நிறுத்தவேண்டும் யோகத்தினிரமயத்தை பரியவேண்டும், போகமெனுமாய்கைதனை யொழிக்கவேண்டும் பொங்கமுடன் பேரின்பந்தேடவேண்டும், சாக்கமுடனிருப்பதற்கு கற்பம்வேண்டும் சட்டமுடன் சமாதிநிலை யறியவேண்டும், வேகமுடன் காயமதை நிறுத்தவேண்டும் வெட்டவெளியம்பரத்தை யூனிப்பாரே

பார்க்கையிலே ஞானமது வந்துற்று பாரினிலே பரிசனங்கள் கெட்டார்கோடி, நீர்க்கமுடன் பொய்வேடங் கொண்டுமல்லோ திறமுடனே யோகமதைக் கண்டோமென்பார், நாக்கமலபீடமதில் வீற்றிருக்கும் நாதாந்தமனோன்மணியைக் கண்டோமென்பார், ஏர்க்கமுடன் பொய்யாது மிகவும்பேசி எழிலான சாத்திரத்தை யறியார்தாமே.

அறியாதமுழுமக்க ளனேகம்பேர்கள் அவனிதனில் கும்பகும்பலாகக்கூடி, நெறியானவழிதனையே கடந்து நித்தம் நேர்புடனே மதியழிந்துபோனார் கோடி, குறியானசாத்திரத்தை விட்டுவிட்டு குவலயத்தில் கெட்டவர்கள் கோடாகோடி, முறியனைப்போல்வாய் பினத்தல் மிகவும்பேசி மோசமுடன் பாலவழிக்கேகினாரே. ௭௧௬

ஏகினாரென்றனுமே யாமறிந்து யெழிலுடனே காலாங்கி நாதர்தம்மை, பாகமுடன் றான்வணங்கி பணிந்துபோற்றி பதாம்புயத்தை யென்னாளும் மனதிலுன்னி, வேகமுடனடியேனும் பலநூலபார்த்து வெளியானகருக்குருவும் வுரைக்கவெண்ணி, போதமென்னும் பெருநாலேழாயிரத்தில் பொங்கமுடன் பாடிவைத்தேன் கருக்கள்தானே

தானான பெருநூலேழாயிரத்தில் தாக்கான காண்டமிது மூன்றாங்காண்டம், தேனானகுருமொழிகளனந்தமுண்டு தேசத்தில் பரிபாஷையனேகமுண்டு, மானான மறைப்பும் தனுளவுமெத்த மண்டலத்தில் கண்டவரும் விண்டோரில்லை, காலாங்கி நாதர்தாமும் தனகமெனும் நவமணிபோல் கருதினாரே. ௭௧௮

கருதினார்வடியேனுங் கண்டாராய்ந்து காசினியில் மானிடர்களறியவேண்டி, கருதியெனும் பிரணவத்தை சினத்தார்க்குசூட்சமுடன் காட்டவென்று அடியேன்தானும், பருதியெனுங் குளிகை தனைப்பூண்டுகொண்டு பார்த்தேனே சீனபதிக்கடலோரந்தான், உறுதியுடனப்பதியிலிரங்கியானும் ஓரோர்கோவெகுகாலமிருந்திட்டேனே. ௭௧௯

இருந்திட்டேன் கோடிவரை யுகாந்தகாலம் யெழிலானசூட்சாதிவித்தையாவும், திருந்திடவேசினபதி யுலகுள்ளோர்க்குதிட்டமுடன்கைமறைப்புயாவுஞ் சொன்னேன், பொருந்திடவே யவர்களிடஞ் சேர்ந்துயானும்போகித்தேன்வெகுகோடிகாலமப்பா, செருந்திடவே போகமதுசெய்ததாலே சிறப்பானபோகனென் றுபேருண்டாச்சே

ஆச்சப்பா வென்னைப்போல்பெயருள்ளார்களப்பனே வையகத்திலாருமில்லை, மாச்சலென் னும்நவகோடி ரிஷிகளுண்டுமாநிலத்தில்பதினெண்பேர் சித்தருண்டு, கூச்சலென் னும்திருமூலவர்க்கத்தார்கள் கோடானகோடிபே ரனந்தமுண்டு, மூச்சடங்கி மாண்டசித்தர் கோடாகோடி முறைமையுடன் சமாதிதனில் கோடியாமே. எஉ௧

கோடியாஞ் சமாதிதனிலிருந்தோர்மெத்த கூறவேமுடியாதுருவலயத்தில், தேடியேசமாதிநிலை கண்டாராய்ந்து தெரிசனைகளில்லாமல் மாண்டார்கோடி, நீடியேசாத்திரத்தைப்பாராமற்றான் நெறிதப்பிமாண்டவர்கள் கோடாகோடி, நாடியேகாலாங்கிநாதர்பாதம் நான் பெற்றேன்கோடிமுறை வுண்மைதானே. எஉ௨

தாமான ராஜரெல்லாம் தாரணியில்தலையாறி நூலைப்பார்த்து, சாமானகருக்கமெல்லாங்காணாமற்றான் சார்பானநூலபடிக்கேவகையுங்கேட்டு, காமானதலையேடுங் கடையேடுந்தான் காணாமல் மதிகெட்டு மூப்பைவிட்டார், நாமானபடியாலே யுளவறிந்து நாதாக்கள் கைமறைப்பைதெளியிட்டேனே. எஉ௩

வெள்ளிசெந்தூரம்.

இட்டேனே யின்னமொரு மார்க்கங்கேளு பெழிலானமதிதனையோராவிமைந்தா, சட்டமுடன பலமதுதானிறுத்துக்கொண்டு சாங்கமுடன்கெந்தியதுகாலதாக, இட்டமென்றசிட்டமது காலுங்கூட்டி கவனமென் றுருதமது சரியாய்ச்சேர்த்து திட்டமுடன் வேங்கையது தயிலத்தாட்டி திரத்துடனே நாற்சாமமரைத்திடாயே. எஉ௪

அரைத்துமேயில்லைதட்டி காயவைத்து அப்பனேயோட்டிலிட்டுச்சீலைசெய்து, திரைப்புடனேரவிமுகத்தில்காயவைத்து திரமுடன் மணல்மறைவிற் புடத்தைப்போடு, முறைப்படியேமணலாறி யெடுத்துப்பாரு மூதண்டசெந்தூரமென்னசொல்வேன், குறையாமல் பத்துபுடமிப்படியேபோடு குறியானசெந்தூரம் சிவப்புமாமே. எஉ௫

ஆமேதான்செந்தூர மருணன்போலாம் அப்பனேபுடம்போடசிவப்புமெத்த, வேமேதான்முறையோடுசெய்தாயானால் விண்கொள்



ளாவேகமதுவீரங்காட்டும், போமேதான்செந்தூரம்வெள்ளிசெம்பில் போக்கோடுமுறையோடு கொடுத்துப்பாரு, நாமேதான்சொன்னபடியோட்டில்வைத்து நலமாகவீதிடவேபசுமைதானே. எஉ௬

தானானபசுமையதுயிடைதானிற்கும் தாக்கானசெம்பதுவுமற்றும்போகும், வேனானதங்கமதுநாலுக்கொன்று விருப்பமுடன்வாரடித்துப்புடத்தைப்போடு, தேனானபொன்னதுவு மாற்றெட்டாகும் தெளிவானபுடத்துக்குஉறுதிதங்கும், கோனானயெனதையர்காலாங்கிநாதர் குருபரன்றன்முறைப்படியேகூறினேனே. எஉ௭

கூறினேன்வெள்ளியென்றசெந்தூரத்தை குணமானதிரிகடுகுசூரணத்தில், மீறியேவனுபானமறிந்துகொள்ள மிக்கானரோகமெல்லாமகன்றுபோகும், சீறியேமேகமென்றபிணிகள்போகும்சிவப்பானதேகமதுவண்டுபோலாம், மாறியேவாசியதுகீழ்நோக்காகும் மகத்தானரோகமெல்லாமகன்றுபோமே. எஉ௮

அகன்றுபோம் வாயுதென்றவென்பதும்போம் அப்பனேகசரோகமகன்றுபோகும், தகன்றுமேமேல்மூச்சுகாணாதோடும் தாக்கானவாய்வூறல்விட்டுப்போகும், புகன்றுமேசில்விஷங்கள்காணாதோடும் புகழுடனேமதிமயக்கம்பொருமியோடும், சகன்றுமேபாண்டுவகைபோகும்போகும் சார்பானமேலிளைப்புதீர்ந்துபோமே. எஉ௯

தாளகக்கட்டு.

நாதாக்கள்சாத்திரங்கள் பொய்போலாக, நண்மையுடன் பாடிவைத்
தேன் கருவாகத்தான் காசினியில்யாருந்தான் சொல்லவில்லை, திண்
மைபெற வின்னம்வெகுகோடிகோர்வை கொட்டினே னென்றுசொ
ல்லி கூறினாரே. ௬௨௭

கூறினார் சாத்திரங்கள்சித்தர்பாலில் குறைக்குமுறை கெடுக்குமு
றை யனந்தங்கோடி, மீறினார் முன்பின்னாய்பாடிப்போட்டார் மின்னா



னசாத்திரத்தினேர்மைதானும், தூறினார்குற்றங்கள்மிகவாய்ச்சொல்
லி தூற்றினார்யாக்கோபுநூலைத்தானும், மாறினார்சித்தர்முனிசாத்திர
த்தைமாற்கமுடன்றான் கெடுத்தார்பாண்மையாமே. ௬௨௮

பாண்மையுடன் வெகுமார்க்கம்கெட்டுபோயி பாழாகி சாத்திரத்
தில் முழுகிப்போனார், வாண்மையுடன்யாக்கோபுசெய்தபாவம்வெகு
ண்டமவர்தனக்கு கேள்விமெத்த, மேன்மையுடன் சாபமது நேர்ந்த
தாலே மேலுக்குபின்னமொருபிறவிகாண, மாண்மையுடன் தண்டனை
கள்மிகவுமாகிமன்னருக்குமறுபிறப்பில்குறைவுண்டாச்சே. ௬௨௯

உண்டானமுறைகளை யான்கண்டுவந்தேன் உத்தமனேவுலகுத
னிற் சொல்லப்போனால், சண்டாளமானதொரு சிலதுமாண்பர்சார்
பானபொய்யென்று சாற்றுவார்கள், கண்டாலும்பொய்யென்று கத
றுவார்கள் சதாகாலங்கருமத்துக்கேதுவாவார், திண்டானமுறைமை
யிதுசொல்லவந்தேன் திறமானபோகரிஷி கண்டதாமே. ௬௩௦

கண்டதொருசேதி முறைபின்னஞ் சொல்வேன் கைலாசவைகு
ண்டபதியின்சேதி, அண்டமுனிசுபாலனவனுக்கு சீஷன் லவன
பேருசட்டைமுனியென்பாரப்பா, கொண்டல்வண்ணன் ராவணனுற்
கிடையேசெய்து கோடிமுறைதபசிகட்குவின்னஞ்செய்து, தண்டவ
மைதானிருந்து ரிஷிகள்சாபம் சாற்றினார் சாத்திரத்தின் தன்மை
தானே. ௬௩௧

தானான சாத்திரத்திற் கிடையே சொல்லித்தப்பிதங்களாகவே
தான் கெடுத்துப்போட்டு, கோணனயென்னையர் காலாங்கிதம்மைக்
கொண்டபடி யவர்பேரில் தோஷஞ்சொல்லி, வேறான கருவெல்லாம
றைத்துப்போட்டுவேதமுதல்சாத்திரங்கள்பொய்யாய்ச்சொல்லி, பா
னபலவிதமாய்ப் பாடிவிட்டார்பாருலகில்சட்டமுனிசரிதையாமே

சரிதையுடன் சித்தர்முனிகோர்வையாவும் தப்பென்றுதான்மி
கவும்வெகுசாய்க்கூறி, கருதிபொருளாராய்ந்துசூட்சசூட்சமத்த
முடன்றானறிந்து தன்தன் நூலை, விரிவுடனேபாடிவிட்டார் வனர்தங்
கோடியின் னுலகுமண்ணுலவுங்கொள்ளாதப்பா, பரிவுடனேசொன்
னதுபோல் தானுஞ்சொல்லிப்பட்சமுடன்றுமுரைத்தார் மாணாக்க
ராமே. ௬௩௨

மாணாக்கர் வின்னூலை மெய்யென்றெண்ணி மாநிலத்தில்வெகு
நாளாய்கண்டாராய்ந்து, வீணாகசாத்திரத்தின்கோர்வைபார்த்துவிரு
தாவாய்சட்டலைந்துபொருளுநாதோற்று, கோணாமல்பருந்தினதுபாக
ம்காணார்குவலயத்தில் மெய்ப்பொருளைபொய்ப்பொருளதாக்கினாரே
ணாதான்கழித்த மட்டிமாண்பர்மதிகெட்டு நின்றார்கள்மகிமையாமே

பாரேதான்முப்பூவைக் கெடுத்துப்போட்டார்பலபலவாம்நூல் தோறும்பாடிப்போட்டார், நேரேதான்விகிமுறைகள்யாவுங்கூறி விதிமுடிக்கு முறையினைத்தாங் குறைந்துப் போட்டார் ஓரேதான்சாத்திரத்தைமெய்யென் றெண்ணி சிறப்புடனேமுப்பூவைமுடிக்கவென்று கூரேதான் சட்டைமுனிமெய்யாய்ச்சொல்லிகுறிப்புடனே நூலகனைமாத்திட்டாரே. ௬௩௫

மாத்தியே கலவரங்கள்மிகவுண்டாக்கி மன்னவர்கள்தான்மயக்கமரைத்துச்சொல்லி, நேத்தியுடன் பாடல்களைமெய்போல்சொல்லி நேர்மையுடன் திரவியங்கள் பாழாய்ச்செய்து, ஆத்தியேவாதத்தை மெய்போல்செரல்லி முன்றயோடுபொய்சொல்லித்துகளகற்றி, சரித்திரத்தைப்பாடினதால் சட்டையோர்க்கு சாயமுடன்வைகுண்டப்பதியில்நீதே. ௬௩௬

நீதானசாத்திரத்தைக் கெடுத்தாலே நிங்குமிகநேர்ந்து தங்கே வைகுண்டத்தில், நீதமுடன்வாக்கினைகள் மிகவுண்டாகி நித்தியமும் வைகுண்டச் சார்புதன்னில், காதமது வாண்வாசல்கோட்டைக்குள்ளேகால்நடையாய் தநடந்து சத்திவந்து, போதமுடன்விசாரணைக்குத்தீமுன்பாகபொற்கமுடன் கொண்டுவந்து நிறுத்தினாரே. ௬௩௭

நிருத்தையிலே சட்டைமுனிக்காயனேகம் நிருதியுடன்றான்செய்தார்லூசியாலே, திருத்தமுடன்நாவதனிலூசிகொண்டு திகமுடனே வுள்ளுக்கில் காட்டாரப்பா, பருத்தமுள்ளவாக்கினைக ளில்லைதண்டேண்பாழ்நரகமவருக்குயில்லையப்பா, பொருந்தமுடனவர்தனக்குப் புத்திசொல்லிப் பொங்கமுடன்மறுவாசல் கொடுசென்றாரே. ௬௩௮

சென்றுமேபவர்தனக்குப் பதமமாத்தி சிறப்புடனே எக்காளுங் கைலைதன்னில், குன்றின்மேல்சாவலுடன் ரிஷிகள்பக்கல் கொற்றவனுமெமதர்மராஜன்பக்கல், வென்றிடவே தவயேகபுஷ்பசாங்கம்வேகமுடன் முனிவருக்கு பூசைமாற்கம், அன்றனுடன்சதாகாலமங்கிருக்கவவர்தனக்கு கட்டளைகள் விதித்திட்டாரே. ௬௩௯

விதிக்கையிலேயின்னமொருவதிசயங்கள் வினவுடனேயாமுரைப்போமின்னங்கேளு, அதித்தனுடன்மச்சமுனிதன்னைபாலும்துப்புரலாம் வைகுண்டப்பதியில்கண்டேன், மதிக்கவேசாத்திரத்தைமறைவுபேசு மகத்தானநூல்களையேகெடுத்துப்போட்டார், பதிக்கமுடன் பார்தர்கட்குப் பொய்பொய்யாகப்பாடிவிட்டபடியாலேகர்மமாச்சே



ஆச்சென்றபடியாலேநூல்களு தம்மை அப்பனேபலபேரும்சொல்லக்கேட்டு, கூச்சலுடன்சித்தர்முனி ரிஷிகள்வாக்கு குறையாமல் பாடிவிட்டாரனந்தங்கோடி, மேச்சலுடன் முன்பின்னாய் சொன்னதாலே மேதினியில் மாந்தரெல்லாஞ்சுட்டலைந்து, பாச்சலுடன்மாண்டார்கள் கோடாகோடி பலபலவாம் கெட்டலைந்தோர் கோடியாமே.

கோடிபேர்சாத்திரங்கள் பார்த்துமென்ன குவலயத்தில் கைமறைப்புயில்லாமற்றான், நாடியேசாத்திரங்கள்மிகவாறாய்ந்து நாணமுடன் மெய்போலப்பாடிவிட்டார், ஓடியேகோர்வைதான் மெய்யெனறெண்ணிஉத்தமர்கள்கெட்டவர்கள்கணக்கோயில்லை, தேடியே திகைத்துமிகவாடிப்போனார் தேசத்திலதிகமுண்டு தெளிவுதாமே. ௬௪௨

தெளிவானசாத்திரத்தை பாடியல்லோதேசத்தில்கீர்த்தியுடன் பெயர்தான்வேண்டும், தெளிவானநூலதனைச் செய்யாமற்றான் நூலுக்கமெல்லா மறைப்பொருளாய்ச் சொன்னதாலே, ஒளியானசித்தர் முனிதங்கள்பேரில் ஓகோகோமோசமென்று நாலுஞ்சொல்லி, பளியானசாத்திரத்தைப் பாடிவைத்தார் பாலருக்குப்பாபம்வந்து லபித்துதாமே. ௬௪௩

தாமானமச்சமுனி தன்னைத்தானும் தன்மையுடன் வைகுண்டப்பதியிலப்பா, கோமானுமெமதர்ம ராஜனுண்டே கொற்றவனைத் தானழைத்து கொடுதான்போனார், பூமானின்மச்சமென்ற முனிவர் தம்மை புகமுடனே கேட்கலுற்றாரந்தனேரம், வசமான மச்சமுனி கூறும்வண்ணம் வாகுடனேகிட்டிருந்து கேட்டிட்டேனே. ௬௪௪

கேட்கையிலேவுத்தார விடையுமில்லை கெடுதியுடன் வாக்கினைகள்கொஞ்சந்தானும், நீட்கமுடன்றான்கொடுத்து தீர்ப்புசெய்து நீதியுடன்யெமபுரத்து வாசலுண்டே, பூட்கமலதடாகமதில் காவல்வைத்து பொங்கமுடன் சங்கரற்குபூசைக்கப்பா, வாட்கமலபுட்பமது தான்பரித்து வளமுடனேறுனகொடுக்க நீதியாச்சே. ௬௪௫

ஆச்சப்பாயின்னமொரு வதிசயங்கேள் அப்பனேயானறிந்தவரைக்குஞ்சொல்வேன், வாச்சலுடன் தட்சணாமூர்த்திதன்னை வைகுண்டப்பதிதனிலே கண்டேன்யானும், கூச்சலுடன் கிங்கிலியர்தூதர் தாமும்குய்யோதான் முறையமென்றுவபயமிட்டு, பேச்சுடனே தட்சணாமூர்த்தியாரைப் பெருமையுடன் விசாரணையில்பார்த்திட்டேனே.

பார்க்கையிலே தட்சணாமூர்த்தியாரும் பாடல்களைவெகுசாகமுரைத்துப்போட்டார், சேர்க்கமுடன்வாதத்தைமுன்பின்னாகச் செப்பினார்திரட்டுமுதலுளவுமார்க்கம், மூர்க்கமுடன்மருந்துவகைபாஷாணத்தை முன்பின்னாய்பேர்மாற்றிபேருரைத்தார், தீர்க்கமுடன்சொன்னதினால் மாந்தர்யாவும் தேசத்தில் சட்டலைந்து கண்கெட்டாரே. ௯௪௮

கெட்டுமேபோனாலும் போவதன்றிக் கெடியானபாஷாண மாக்கந்தன்னை, தொட்டுமேதானடி மருந்துக்கேய தோராயமாகவல்லோ முழுதும்கெட்டு வட்டமுடன்நோய்புகலும் பாண்டமாகி மானிலத்திலிரந்தவர்கள் கோடாகோடி, மட்டமென்ற மருந்துகளுஞ் செய்துவல்லோ மன்னவரும் பயித்தியங்கொண் டேகினாரே. ௯௪௯

ஏகவென்றால்பாபமது வதிகமாகி யெழிலானநோயதுவும் சொல்லப்போமோ, பாகமுடன்செய்பாகம்கெட்டலைந்து பாங்குடனேசாத்திரமும் பொய்யதாகி, தாகமுடன்பாஷாண விதினாலே தாரணியில் சடலாறுயிழந்தாரங்கே, மோகமென்ற மருந்தினாலேவகத்தாலே மேனியெல்லாம் புண்ணாகிரோகமாச்சே. ௯௫௦

ஆச்சப்பாதட்சணாமூர்த்திசெய்த அரும்பவந்தையெமதர்மராஜன்தானும், மாச்சலுடன்கண்டறிந்து மூர்த்தியாற்கு மகாதீர்ப்புகொடுப்பதற்கு மனமுமானார், பூச்சலுடன் சாத்திரத்தைக் கெடுத்ததாலே புண்ணியனே வந்தனுக்குசொற்பதண்டம், தீச்சலுடன் சிவயோகிரிஷிகளுக்கு சிவாலயமடபதிக்கு காவல்தானே. ௯௫௧

தானானகாவலது யிருக்கவென்று தன்மையுடன் யெமதர்மராஜன்றானும், கோனானதட்சணா மூர்த்தியாற்கு கொடுந்தவசி முனியோற்குவாளதாக, பானானபரமசிவன் படசத்தாலேபாலித்தாரென்னாளும் வைகுண்டத்தில், தேனானதட்சணா மூர்த்தியாரும் தேவனிட கோட்டைக்குள்ளிருந்திட்டாரே. ௯௫௨

இருந்தாரே கைலகிரிவைகுண்டத்தில் யெழிலாக சுவாமிகட்குத்தொண்டனாகிப், பொருந்தவேயவர்களிடம்பூசித்தேதான் பொங்கமுடன் சதாகாலம் வைகுண்டத்தில், திருத்தமுடன் தாமிருந்தார் தட்சணாபன் தீரமுடன்கதைதனையே செப்பவென்றால், வெரித்திடவே லோகத்து மாண்பரெல்லாம் வெறும்பொய்யா மென்றுசொல்லி மேவுவாரே. ௯௫௨



மேவவேயின்னமொருதெரிசனங்கேள் மேன்மையுடன்யான்கண்டவரைக்குஞ்சொல்வேன், காவலுடன்ரோமரிஷிதன்னைக்கண்டேன்கருவாகவைகுண்டந்தன்னிலப்பா, ஆவலுடன்வவர்பக்கல்யானுஞ்சென்றேன் அப்பனேகேள்விகளநேகமுண்டு, பாவமெனும்புண்ணியங்களிரண்டைத்தானும் பாகரித்துகேள்விகளுங்கேட்கலாச்சே.

கேட்கவென்றால்வவர்மீதில்குற்றமெத்தக் கேள்விகளும்பங்குண்டுசொல்லொண்ணாது, நீட்கமுடன்சாத்திரத்தைவெகுவாய்ச்சொல்லி நீடாழியுலகமெல்லாமயங்கப்பண்ணி, தாட்டையுடன்ரோமரிஷிகோர்வையாவும் தன்மையுடன்முன்பின்னாய்பாடிவைத்தார், மீட்கமுடன்கோர்வைதனில்நாலுகாப்பு மாளவேமுன்பின்னாய்ப்பாடினாரே.

பாடினார்பரிபாஷையாவுஞ்சொல்லி பாடல்களில்கைமறைப்புவதிதஞ்சொல்லி, மூடியேகருவுளவுமுப்பின்மார்க்கம் மூதண்டபூரீன்போக்குபாவும், தேடியேபரிபாஷைதிரட்டையெல்லாம் தெளிவறவேசெய்யாதமார்க்கந்தன்னில், கோடிமனுசட்டலைந்துகெட்டுப்போனார் குவலயந்தில்பாவம்வந்துநேரலாச்சே. ௯௫௫

நேரவேபாவத்தால்கருமந்தங்கி நெடிதானவைகுந்தபதியிற்சென்று, கூரவேயெமதர்மராஜன்பக்கல் கொற்றவனாம்ரோமரிஷிதன்னைத்தானும், பாரமுடன்சாத்திரத்தைதலைமேல்வைத்து பாங்குடனேதூதர்கொடுசென்றுபோனார், மாரலுடன்வைகுண்டப்பதியில்தானும் மார்க்கமுடன்குற்றமதுநேமித்தாரே. ௯௫௬

நேமித்தார்குற்றமதைநேரதாக நெடுங்காலம்தானிருக்கவிடையுண்டாச்சு, சாமியுடபக்கலிலேயனேகஞ்சித்தர் சதகோடிசூரியர்போல்கொண்டுவந்தார், வாமியுடன்வைகுண்டப்பதியில்தானும் வாகுடனேயம்பாளும்தானிருக்க, பூமிபிடங்கொடுவந்தசித்தர்தாமும் புகழ்ச்சியுடன்கோடியுடன்லக்கில்லைதானே. ௯௫௭

தானானயின்னம்வெகுவதிசயங்கள் தன்மையுடன்சொல்லுகிறேன்தரணியோர்க்கு, வேனானவிலாடரிஷிதன்னைக்கண்டேன் வியாசமுனிசூதமினிதன்னைக்கண்டேன், கோனானகுருமுனிதன்னைக்கண்டேன்கொற்றவனார்போகரிஷிதன்னைக்கண்டேன்தேனானதிருமூலக்கூட்டத்தார்கள் தெய்வபுறப்திதனிலேகண்டேன்பாரே. ௯௫௮

பார்த்தேனேசிவவாக்கியர் தன்னைக்கண்டேன் பாலகனாமிடைக்காட்டார்தம்மைக்கண்டேன், மூர்த்தவனாம்வகப்பேயர்சித்துதம்மைமுடியோடுஞ்சடைப்போடும்பானுங்கண்டேன், தீர்த்தகிரிதனிலிருந்த

தகாசிகர்தர் நீறமுடன்கொண்டுவரக்கண்டேன்பாரும், ஏர்த்திடவே
வாரிஷிதன்னைக்கண்டேன் யெழிலானசுந்தரரைக்கண்டேன்தானே.

கண்டேனேயின்னம்வெகுசித்துதம்மை கைலாயபர்வதமாம்வை
குண்டத்தில், அண்டமுனிராட்சதர்கள்கோடாகோடி அவனியிலேயி
ருந்துவந்தோர்சொல்லொண்ணாது, கொண்டல்வண்ணன்மைத்துன
னும்கருமராஜன் கொற்றவனும்தம்பிமுதல்யாவுங்கண்டேன், பண்டு
வைமாலையணிசத்துருசங்காரன் பாவையெனும்சீதைதனைக் கண்டே
ன்தானே. ௯௬0

கண்டேனேராவணனார்சூர்ப்பனகைதானும் கைலங்கிரிவைகு
ண்டப்பதியிலேயாம், தொண்டரெனும் அறுபத்துமூன்றுபேர்கள்
கோராதபராவைச்சியர்ருங்கண்டேன், விண்டேனேவின்னுலகில்தே
தியெல்லாம் விருப்பமுடன்நானறிந்தேன்சிலதுகாலம், கொண்டல்வ
ண்ணனச்சுதனுமங்கிருக்க கோபாலன்றுயாருங்கண்டிட்டேனே. ௯௬௧

கண்டிட்டேன்வைகுண்டப்பதியில்தானும் கரியமால்சேனையது
கூட்டந்தன்னை, தொண்டிட்டஆழ்வார்கள்கூட்டந்தன்னில் தொடர்
ந்துமேயவரிடமாம்பக்கஞ்சென்றேன், பிண்டிட்டஆழ்வாரிசாத்திரங்
கள் வெகுமோசந்திருவனுடன்பின்பின்னாக, தண்டிட்டசாத்திரத்தி
ல்தோஷமுண்டு தாராதிசிவன்தனைதோஷித்தாரே. ௯௬உ

தோஷித்துசிவன்தன்மேல் தோஷஞ்சொல்லி தோராயமாகவல்
லோனூலைமாற்றி, பாஷியங்கள்தோருமல்லோபரமன்றன்மேல் பாடி
வைத்தார்தூஷணைகள்மெத்தவுண்டு, காசினியிலாயிரத்தெட்டுசிவால
யங்கள் கட்டினார்வெகுகோடிமாந்தரப்பா, பூசிதமாம்திருப்பதிநாற்
றேயெட்டு பொங்கமுடன்கட்டினார்சூட்சந்தானே. ௯௬௩

தானானசூட்சாதிதேவஸ்தானம் தாரணியில்சொற்பமதாய்கண்
டதுண்டு, பானானபரமசிவன்சிவாலயங்கள்பார்க்கவென்றால் கணக்கி
ல்லைக்கோயில்லை, தேனானவாதிசேடந்தன்னாலும்தெளியாதுநாவில்
லைபாவுமில்லை, மானானபரமபதிமெத்தவுண்டு மாளிலத்தில்வாழாது
மாந்தர்கேளே. ௯௬௪

கேளேதான்சிவன்றனையேபழித்ததாலும் கீர்த்தியுடன்சாத்திர
த்தைகூறலாலும், நீளேதான்வைகுண்டபதியிலப்பா நேர்ந்துதேவெ
குகோடிதெண்டந்தானும், மீளவேசொற்பனமாம்வாக்கினையும் மீண்
டுதேதுள்வார்வைசீஷவர்க்கம், சூளவேயவர்பக்கல்பாளிருந்து கந்த
ரனேயதிசயங்கள்பார்த்திட்டேனே. ௯௬௫



பார்த்திட்டேன்வைகுண்டபதியில்தானும் பாங்குடனேவதிச
யத்தைசொல்லப்போனால், பூர்த்திட்டபாரினிலேபொய்யென்பார்கள்
பொய்யென்பார்மெய்யன்பாராருமில்லை, சாத்திட்டவைகுண்டச்சரி
தைதானும் தேர்ந்தவரையானுரைத்தேன்தெளிவதாக, மார்த்திட்ட
மாகவேநான் கைலாதன்னில்மகாகோடிவாக்கினைகள்மெத்தவுண்டே

உண்டானவதிசயங்களின்னஞ்சொல்வேன் உம்பர்பிரான்பதியி
னதுகாதையாவும், திண்டானகிருஷ்ணவதாரந்தானும் திகழுடனே
வெகுகோடிமாதர்தம்மை, பண்டானவையகத்தில்கற்பழித்து பாவை
யரைலீலையது செய்ததாலும், கண்டேனேவைகுண்டப் பதியில்தம்
மைகரியமாலாக்கினைகள்சொற்பமாமே. ௯௬எ

சொற்பமாயெமதர்மராஜன்றானும் தொல்லுலகில்ஒருவரையும்
விட்டதில்லை, அற்பமாமக்கினைகள்செய்ததுண்டு அவனியிலேயாருந்
தான்மீண்டதில்லை, கற்பழிந்தமாதருக்குநீதநீதி கர்த்தனதுவைகு
ண்டப்பதியில்தானும், முற்பவத்தில்செய்தவினைபாவத்தாலே முனு
மேவைகுண்டநீதிதானே. ௯௬அ

காணவென்றால்பிரபஞ்சமாய்வையப்பா கண்டவர்கள்விண்டவர்
களாருமில்லை, வேணபடிசாத்திரதனைநம்பிகவரிந்து வேதமுடன்நாலா
ஞ்பாதமபோற்றி, நாணவேசித்தர்முனிதானடங்க நாதாந்தக்குளி
கையதுபூண்டுகொண்டு, கோணவேசொர்க்கபதியானுஞ்சென்றுதோ
ற்றமுடன்கண்டுவந்தேன்போகர்தாமே. ௯௬௯

தாமானவையகத்தில்மாண்டமாண்பர் தாரணியில்வைகுண்டப்
பதியில்தானும், கோமானும்அரசர்முதல்குருக்கள்தாமும் கோலமு
டன்ராஜாதிராஜர்தாமும், பூமானும்சிமான்களெல்லரையுந்தான்பொன்
னுலகப்பதிதனிலேகாணலாகும், நாமானசடலமதுமண்ணேயாகும்
நாதாந்தக்காற்றதுதானழியாதென்றே. ௯௭0

அழியாதுமாண்டவர்களெல்லாருந்தான் வப்பனுடபதிதனிலே
காணலாகும், அழியாதவாதமந்தாமனந்நாளும் அமராவபதிதனி
லேகாணலாகும், அழியாதுமாண்டவர்களொருகாலத்தான் அப்பனே
பொருநாலமெழுந்திருப்பார், அழியாதஒருகாலயவர்தமக்கு அப்ப
னேநீதியுண்டுகேள்வியுண்டே. ௯௭௧

கேள்விக்குயுத்தாரஞ்சொல்லவேண்டும் சொல்லாட்டால்நீதியு
டனுக்கிலையுண்டு, தாழ்வாயுடனேமதர்மராஜனுக்கு சாங்கமுடனே

திமொழியுரைக்கவேண்டும், எழ்மையுடன்போலிருந்தாநிபேசி நீதி யுடனவர்பாதம்பணியவேண்டும், வாழ்மையுடனுன்மீதில்கிருபைவை ப்பார் வாழலாம்சொற்கபதிவாழலாமே. கூஎஉ

வாழ்வுதான்வையகத்தில்பொய்யேவாழ்வு வாழ்ளுஞும்வீணு ளும்பாழ்நாளாகும், தாழ்வுடனேசாத்திரத்தைதமிகவாருய்ந்து சாங் கமுடன்ஞானேபமிகவுஞ்சொல்வார், சேழ்மையுடன்மாசானவைரா க்கியஞ்சொல்வார் கேடுவரும்பாவவினையறியார்தாமும், ஊழ்வினைகள் தாமறிந்தடைந்துகொள்வோர் உத்தமனேலோகத்துமாந்தராமே.

மாந்த்ராம்சடலத்தைமெய்யென்றெண்ணி மானிலத்தில்வெகு கோடிபாடுபட்டு,சாந்தமுடன்தேகமதைநிறுத்தவென்று சதாகாலம் வையகத்திலிருப்பதாக போந்தமுடன்காயாதிகற்பந்தன்னை பொங்க முடனுண்டுமெல்லோகற்பங்கொண்டு, வேந்தர்களும்விதிகரசவித்தை யெல்லாம் வேண்டியேவிருப்பமுடன்படித்திட்டாரே. கூஎச

படிக்கவேவஷ்டாங்கங்காணவென்றும் பாருலகில்வசியனுபாக வென்றும், துடிக்கவேவாதமதையறியவென்றும் துப்புறவாய்முப்பூ வைமுடிக்கவென்றும், மடிக்கவேசாக்குக்குச்சத்ருதானும் மார்க்க முடன்கண்டரிந்தசித்தனென்றும், வெடிக்கவேசமாதிக்குளிருப்பே னென்றும் வேதாந்தம்பேசியல்லோவிழலாய்போச்சே. கூஎரு

போச்சென்றுவிடுகாதேயின்னங்கேளு புதுமையுடன்கண்டவ ரையாமுஞ்சொல்வோம், மாச்சலுடன்மோகனங்களறியவேண்டு மா ராட்டமானதொருவெழுத்தைப்பாரு, கூச்சலன்றிசமாதிதனிலிருந் துமென்ன கோடானகோடியுகங்கண்டுமென்ன, மூச்சடங்கிபோனபி ன்புஒன்றுமில்லை முனிகோடிதவசிகளுமாண்டார்தாமே. கூஎசு

தாமானகோடியுகமிருவேயாகும் தாக்கானசித்தர்களுமிப்படியே யுண்டு, நாமானபடியாலேசத்தலோகம் நாதாக்கள்போக்குமுதல்பா வுமகண்டோம், நேமமுடன்சித்தரெல்லாமிப்படியேதானும்நேர்மை யுடன்நிஷ்டையிலேயிருந்துமாண்டார், வாமமுடன்பூலோகவதிசயங் கள் வகுத்துரைத்தார்வண்மைகளுமநேகந்தானே. கூஎஎ

தானேதான்ராஜாதிராஜரெல்லாம் தாரணியில்சாத்திரத்தைமிக வறிந்து, மானமுடன்சிவயோகநிஷ்டைநின்று மானிலததில்தவசபெ ரியோரைபபோல, தேனமிர்தங்கொண்டுமெல்லோவாசியூட்டி தேசத் திலிருந்தார்கள்சித்தரெல்லாம், மேனகையைகண்டுமெல்லோமையல் கொண்டு மேதினியிலாண்டவர்கோடியாமே. கூஎஅ



கோடியாஞ் சித்தர்முனிமாந்தரெல்லாம் குவலயத்தில் மண்ணு சைபெண்ணுசையாலே, தேடியேசெம்பொன்னுசையாலும் திடங்கு லைந்துமாண்டார்கள் மாந்தரெல்லாம், நாடியே நாதாந்தசித்தருக்கு நல்லவழி யொருவருக்குங் கிடைப்பதில்லை, பாடியே நூல்தனையே பார்த்துபார்த்து பாதவித்து யிருந்தார்கள் கோடிபேரே. கூஎகூ

பேரானதத்துவங்களறிந்து மென்னபேருலகில் ஞானிகளாயிரு ந்துமென்ன, நேரானநல்லவழி தெரிந்துமென்ன நேர்மையுடன் அறி யாமல்யிருந்துமென்ன, கூரானசாத்திரத்தை கற்றுமென்ன குவலய த்தில் வெகுகாலமிருந்துமென்ன, தூரான கெட்டவழிசென்று மெ ன்ன துறைபோடுகாலம் வரைபொன்றுங்காணே. கூஅ0

காணவே பிரபஞ்ச வாழ்மையாவும் கருத்துடனே கொண்டவ ர்க்குஒன்றுமில்லை, தோணவே நூலாதி நூல்கள்தோறும் தொடர்ந்து மேசடலமதை யிரக்கவென்று, மாணவேசித்தர்முனி ரிஷிகளெல்லா ம்மாராட்டமாகவல்லோ நூல்செய்தார்கள், வேணவே காலாங்கிநா தர்தம்மால் வேகமுடனடைந்த வார்சொல்வேனே. கூஅக

சொல்லவென்ருல் பூலோகமிடங்கொள்ளாது சுருதிபொருள்சாத் திரங்கள்மிகவும்பொய்யாம், வெல்லவேசெம்பொன்றும் புகலவில்லை வீணிலேசாத்திரத்தை பாடிப்போட்டார்,அல்லலுடனதேகாதிதேக காலம் அலைச்சலுடன சாத்திரத்தை பார்த்துமாண்டார், கொல்ல னதுவீதியிலேவூசிவிற்ற கொடிதான கதைபோல என்முன்னுச்சே.

ஆச்சென்றதேசமதுசித்பாசித்யம் அப்பனே யாமறிந்தவரைக் குஞ்சொல்வோம், மூச்சடங்கி எனதையர்காலாங்கிநாதர் மூன்றுயுக கோடிவரைசினந்தன்னில், பேச்சொன்றுமில்லாமல் சமாதிதன்னில் பிணம்போல யிருந்தாரேசிலதுகாலம், வாச்சலுடன்வாசிதனை அடக் கிக்கொண்டு வையகத்தில் சிலதுநாளாயிருந்திட்டாரே. கூஅங

இருந்திட்ட காலாங்கி தம்மைப்போல எழிலானசித்தர்முனி நாதரெல்லாம், பொருந்தியேபூவுலகில்வாசிகொண்டு பொன்னுலகநா ட்டுக்குப்போனார் தாமும், திருந்தியே யொருவருந்தானிருந்ததில்லை சிறப்புடனேவைகுண்டஞ்சேர்ந்தாரங்க, வருந்தியேயமைந்தானும் வருவதுண்டோ வருங்காலந்தானிருந்தால் வருகுந்தானே. கூஅச

## சீனபதியில்கமலமுனிசமாதிஅதிசயம்.

தானேதானின்னமொரு புராணஞ்சொல்வேன் தாக்கானசீன பதிதன்னில்யானும், காலானகமலமுனி சமாதிபக்கல் காத்திருந்

தேன் வெகுகோடிகாலமப்பா, தேனானகமலமுனி சிஷரென்பேர்தே வனிட சமாதியிடங்கண்டேன் யானும், பானானசமாதிக்கு முன்ன தாக பட்சமுடன்தாமிருந்தார் பண்பதாமே. ௯௮௫

பண்பான சிஷவர்கள்தன்னைக்கண்டேன் பட்சமுடனவரைக் கேள்விகேட்டேன், திண்பான சிஷர்களுமதிதஞ்சொன்னார் நிகழான வதிதமது என்னவென்றால், வண்பானமுதற்சிஷன் சொன்னமார்க் கம்பாருடனே வருஷமது தொண்டுசெய்தேன், கண்பானவிரண்டா ங்கால்சிஷன்தானும் கனமுடனேமுன்றாண்டுதொண்டனாமே. ௯௮௬

தொண்டனும் மூன்றாங்கால்சிஷன்தானும் சோர்வின்றிநாலாண் டுதன்னில்தானும், விண்டமுடன் நாலாங்கால சிஷன்றானும் விருப்ப முடன்நாலுவருஷமாண்டுமட்டும், கண்டிதமாய் ஐந்தாங்கால் சிஷன்தா னும் கருத்துடனேவருஷந்தன்னில்மட்டும், அண்டிடவே ஆறாங் கால் சிஷன்றானும் அப்பனே ஐயிரண்டுபத்துமாண்டே. ௯௮௭

பத்தான ஏழாங்கால்தன்னிலப்பா பாகமுடன்மூவைந்துமூண் டதாக, சித்தான எட்டாங்கால் தன்னில்தானும் சிறப்புடனேபஞ்ச தசம்மாண்டுதானும், சுத்தானசித்தர்களும் தொண்டுசெய்து சூழ் ந்துமே வெகுகோடிகாலம்பார்த்து, வந்தானசமாதியிடங் காத்திருந் தார் வாகுடனேகமலமுனி வாக்குகேளே. ௯௮௮

வாக்கான கமலமுனிசித்துதாமும் வாகுடனே சமாதிக்குபோ கும்போது, சோக்கமுடன்கமலமுனிசித்துதாமும் நானுங்கமுடன் தாமறிந்தவித்தையெல்லாம், பாக்கமுட னுபதேசஞ் செய்யவென்று பான்மையுடன் சித்தர்களையழைத்துதாமும், சோக்கமுடன் பவர்க் களிக்கவேண்டுமென்று சுந்தரரைத்தாமழைத்துகூறினாரே. ௯௮௯

கூறினார்சிஷர்களே கேளுமென்பார் குவலமுடி மன்னரெல்லா மென்னைக்காத்தார், தேறினதோர் சிஷர்களெட்டுபேர்கள் தெளிவு டையபாலர்களு மாசையாலே, காரியங்களானதொருவித்தைமார்க்க மகருத்துடனேகேளுமென்ன குருவுதானும், பாரினிலே இதிகாசத் தைவிட்டு பாழானவித்தைதனை கேட்டார்தாமே. ௯௯௦

கேட்கையிலே ஒருசிஷன் வசியங்கேட்டான் கேடுள்ள ஒருசிஷ ன்மோகனமுங்கேட்டான், நீட்டமுடனொருசிஷன் வாதங்கேட்டான் நினைவானவாதத்தை போதியென்றான், வாட்டமுடனொருசிஷன் பிரணவத்தைக்கேட்டான் வாகுடனே பிரணவத்தை வுச்சரிக்க, நா ட்டமுடனொருசிஷன் ஞானங்கேட்டான் நலமான குளிகையது கே ட்டார்தாமே. ௯௯௧



கேட்டாரேகுளிகையதுமார்க்கந்தன்னை செவனமுடன்குளிகை யதுவேண்டுமென்றான், நாட்டமுடனொருசிஷன் புனிதங்கேட்டான் புகழானலோகத்தின் வளவுகேட்டான், காட்டமென்றவொருசிஷன் நிதியுங்கேட்டான் கருவானமூலத்தின் மறைப்புங்கேட்டான், மா ட்டிமையொருசிஷன் தவத்தைக்கேட்டான்மார்க்கமுடன் பலபலவா ய்க் கேட்டார்பாரே. ௯௯௨

பாரேதான்சிஷவர்க்கங்கேட்கும்போது பலபலவாம்துறையோ முறைமையெல்லாம், நேரேதான் குருவான கமலர்தாமும் நேர்மை யுடன்சமாதிக்குச் செல்லுமுன்னே, கூறேதான் அவரவர்க்குதக்கயா கம்குறிப்புடனேதாம்கொடுத்தார் கமலர்தாமும், ஆறேதான்சிஷவர் க்கமான்பேர்க்கு உகமையுடன் ஞானோபதேசமோதிட்டாரே. ௯௯௩

ஓதவேயுகங்கோடி காலந்தானும் வுத்தமனும் சமாதிதனிலிருந் தாரங்கே, நீதமுடன்சமாதிக்கு பூசைமார்க்கம் நேர்மையுடன் நாள் தோறும் செய்திருந்தார், காதமெனும் சீனபதிமூன்றுசாதம் கமல முனி தன்னையவர்மாந்தரெல்லாம், வேதமுடன் சிவபூசை மார்க்கத் தோடு வேள்விகளுமநேகமதாய் நடத்துவாரே. ௯௯௪

நடத்துகையில்சீனபதி சென்றபோது நாதாந்தகாலாங்கிநாதர் தம்மை, திடத்துடனே குருதனையேகாணவென்று தீரமுடன்சமாதி க்குசென்றேன் யானும், மடபதியாமாயிரம்பேர் சிஷவர்க்கம் மகத் தானகுருதனையேகாணவென்று, வடகோடிகானகத்தில்மாந்தரெல் லாம் வளமுடனேசமாதியக்க விருந்தார்காணே. ௯௯௫

காணவென்று லவர்பெருமை யாருக்குண்டு காசினியிலேவரெல் லாலொருவர்க்குண்டோ, வேணபடி மகிமையது யாருக்குண்டு வேதா ந்த காலாங்கிநாதர்க்குண்டு, நீணமுடன் சமாதிதனைக்காணவென்று நேர்மையுட னங்கிருந்தேன் சிலதுகாலம், தோணவே யெனதையர் காலாங்கிக்கிசோடசமா முபசாரஞ் சொல்லொண்ணாதே. ௯௯௬

சொல்லவென்றால் ராஜாதிராசர்க்கில்லை சூரியாதி சந்திராதியவ ருக்கில்லை, வெல்லவென்று லிவர்போலும்சித்துமுண்டோ மேதினியி ல்கண்டதில்லைசமாதிசித்து, புல்லவே திரிகால பூசைமார்க்கம் போற் றுவார்காலாங்கி தம்மைத்தானும், அல்லவே யவர்கிருபை வேண்டு மென்று வனேகமாம் கோடிபேர்வருணிப்பாரே. ௯௯௭

தருணமுடன்சித்தா திசித்தரெல்லாம் வளமையுடனவர்தனக்கு வணக்கஞ்சொல்வார், அருணனைப்போல் ரிஷிகள்முனி சித்தரெல்லாம் அன்புடனே காலாங்கிச்ரணஞ்சொல்வார், கருணையுடனவர்பாதம் தொழுதுநிற்பார் காவலுடன்சித்தர்களுஞ்சமாதிபக்கம், தருணமது சமாதிக்கு முன்னதாக தாழ்மையுடன் காத்திருந்தசித்துதாமே. ()

சித்தானகாலாங்கிக் கிருபையாலே சென்றேனே குளிகையது பூண்டுகொண்டு, சத்தானலோகமெல்லாஞ் சுத்திவந்தேன் சங்கமுடன்காணாத காட்சியெல்லாம், மூத்தானகாண்டமது மூன்றுக்குள்ளே முடிவுபெறப் பாடிவைத்தேன் லோகமார்க்கம், நித்தமுமே காலாங்கியாமுந்தானும் நிதந்தோறும் பூசையிலேநினைக்கின்றேனே. ௧௧௬

நினைக்கையிலேகாரியங்களெல்லாஞ்சித்தி நீணிலத்திலவர்போலுஞ்சித்துமுண்டோ, வனைதோறுங்காலாங்கிநாதனைப்பார்த்து மார்க்கமுடன்வர்ச்சித்தே பூசிப்பார்கள், சினத்தவரு முதவாவார் காலாங்கிதம்மால்சீருலகில் கீர்த்தியுடன் வாழலாகும், வினைப்பயனும் விட்டுமல்லோ புண்ணியனவாய் வேதாந்தத்தாயினது வருளுமுண்டே ()

அருளானசெல்வமுண்டு கியானமுண்டு அப்பனே குருசாம்பிராயமுண்டு, பொருளுண்டுபுகழுண்டு போகமுண்டு பொன்னுலகப்பதிதனிலேயிடமுமுண்டு, இருளகன்று சூரியன்போல்விலாசமுண்டு எழிலான வஷ்டவித பாக்கியமுண்டு, மருளகன்று வைகுண்டப்பதியென்னும் வாழ்வுண்டாய் வாழ்ந்துமல்லோ யிருப்பார்முற்றே ()

போகர்சத்தகாண்டம்-எ௲

மூன்றாவது காண்டம்

முற்றுப்பெற்றது.



கடவுள் துணை.

மஹாமகுத்துவம்பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# சத்தகாண்டம்-எ௲.

## நான்காவது காண்டம்.

---

### காப்பு.

ஓடியேசதாசிவந்தான் பாதங்காப்பு
    வுரைத்திடுவேன்போக ரேழாயிரத்தில்
தேடியேசத்தசாகரமதாக
    திறமாகப்பாடிவைத்தேன் சத்தகாண்டம்
கூடியேகாலாங்கி நாதர்பாதம்
    குருவானநாதாக்கள் பாதம்போற்றி
ஆடிவோவயித்தியமாம் காலாங்காண்டம்
    அப்பனேவாதமது காப்பதாமே.

தானானசத்தசாகரமுங்கண்டேன் தாக்கானசத்ததீவுகளுங்கண்டேன், வேனனசத்தகிதானுங்கண்டேன் வேகமுடனஷ்டதிக்குதானுங்கண்டேன், கோனனவஷ்டபாலகரைக்கண்டேன் கொடிதானவஷ்டதேவாலயங்கண்டேன், பானனபராபரியைமனதிலெண்ணிபாங்குபெறபாடிவிட்டேன்காண்டம்பாரே ௨

### பூநீரெடுக்கவிதி.

பாரேதான்குளிகையதுபூண்டுகொண்டு பண்புடனேசீனபதிசென்றேன்யானும், நேரேதான்சீனபதிமேன்றாகாதம் நேர்மையுடன்சத்

திவர்நுவுளவுகண்டேன், சீரேதான்பூமிவளம்யாநும்கண்டேன் சிறப்பானயளர்பூமியிதுவேயாகும், கூரேதான்நாதாக்கள் கண்டதில்லை கொற்றவனேயான்கண்டேன்பூரோமே. ௩

ஆமேதான்பூநீரின்வளப்பங்கேளீர் அகிலமெலாம்பூநீர்கள்கள்மெத்தவுண்டு,தாமேதான்பாண்டிவளமெத்தநாடு தாக்கானயாவடையார் பிரம்மதேசம், நாமேதான்கண்டபடிசேரநாடு நாதாக்கள்சோழவளமெடுப்பார்பூமி, போமேதான்நெடுங்காலந்தன்னிற்சென்று பொங்கமுடன்தானெடுப்பார்பூநீராமே. ௪

பூநீரின்னம்வெகுதளமுஞ்சொல்வேன்புகழானகாளஸ்திரிசிவசெங்கைதானும், பூநீராம்பாலைவனம்பூம்பாரையாகும் புகழானதிண்டிக்கல்பசுமலையுமாகும்,சோநீராந்தில்லைவனம்காளிங்கமடுவு சொர்ணமென்றபூதியதுவடமதுரையாகும்,தெநீரான்தென்மதுரைவயோத்திநகராகும் தெளிவானபொன்னகரந்தானுமாமே. ௫

ஆமேதான்பாஞ்சாலன்பூமிவளமாகும் அப்பனேதென்புவனம்வடபுவனமாகும், தேமேதான்புல்லாணிதீர்த்தகரையாகும் தென்விலையும்நர்மதாவடமேருமாகும்,போமேதான்யித்தாதிதேசநாடு பொலிவானவளர்பூமியென்னலாகும், பாமேதான்பூநீருயெடுக்குங்காலம் பகருவேன்காலமதுசெப்பக்கேளே. ௬

கேளேதான்சித்திராபருவமுன்னும் கெணிதமுடன்பங்குனிக்குமுன்னதாக, தாளேதான் அமாவாசைபூர்ணவட்டம் நாள்தேடிபரிபாஷைதாமுணர்ந்து, பாளேதான்போகாமல்நாளைப்பார்த்து பாரினிலேயெல்லவரும்நூலாராய்ந்து, வேளேதான்சித்தர்நூல்நுணுக்கம்பார்த்து வேதாந்தத்தாயினுபவாசங்கொண்டே. ௭

கொண்டேதானுபவாசமிருந்துகொண்டு கோடானகோடிமலைதேசங்கண்டு,கண்டேதான்காணுறுதேசம்விட்டு காடுமலைதிவனமுந்தான்கடந்து, விண்டேதான்பூநீறுமெடுக்குங்காலம் விண்ணுலகில்சித்தர்முனிசொல்லைப்போல, அண்டர்முனிராட்சதர்களிருக்குங்காலம் அங்கனவேதாம்போனார்மாந்தர்தாமே. ௮

மாந்தராந்தவயோகிசிவயோகிதானும் மார்க்கமுடன்முப்புவளங்காணவென்று, வேந்தர்பதிமுதலானதேசராஜர் வெகுகோடிமாந்தரெல்லாமுப்பைக்காண, போந்தமுடன்நிலாப்பருவம்தன்னிற்சாமம்பொங்கமுடனடுசாமவேளைதன்னில், சாந்தமுடன்பிரணவத்தின் மாறல்கொண்டு சட்டமுடன்பூநீருமெடுப்பார்தாமே.



எடுக்கையிலேசீனபதிதேசந்தன்னில் யெழிலானபூநீருமெடுக்குமார்க்கம், அடுக்குடனேயோராளின்கீழ்மட்டாக அப்பனேயவர்பூமிதன்னைத்தோண்டி, இடுக்கமென்றகுழிதனிலேமண்ணைத்தானும் யெழிலாகத்தான்பறப்பிமூடிப்போடு, ஒடுக்கமுடன்கெட்டணைகளதிகங்கொண்டு வுத்தமனேபன்னுடைமேலேசாத்தே. ௧௦

சாத்தியேமூங்கலென்னும்குழல்கள்தன்னை சட்டமுடன்தானிருந்திசாற்றக்கேளு, நேர்த்தியுடன்குழல்தனையேபூமிதன்னில் நேர்மையுடன்தானடித்துசில்லுபோடு, பூர்த்தியுடன்மூன்றுநாள்வெடியச்சாமம் பொங்கமுடன்தான்திறந்துபார்க்கும்போது,காத்திரமாய்கதிர்கதிராய்பூநீர்தாமும்கதிரவன்போல்பூர்த்திருக்கக்கண்டிட்டோமே. ௧௧

கண்டிட்டோம்வாதிகளுமொன்றாய்க்கூடி கடுகெனவேபூநீரையெடுத்துவந்து, அண்டமெனும்கற்கண்ணமுடிப்பதற்கு அரகராபிண்டமென்றசெயநீர்தன்னால்,விண்டபடிமேகமென்றபனிநீர்தானும்விருப்பமுடன்தானெடுத்துபூநீர்தன்னை, கொண்டபடிபாண்டமதிலிட்டுமைந்தா கூறுவேன்காச்சலென்றவிபரங்கேளே. ௧௨

கேளேநீபூநீரைக்காச்சவேதான் கெணிதமுடன்தான்கறைத்துமைந்தாகேளு, மாளவேமறுபாண்டந்தெளிவிருத்து மார்க்கமுடன்காச்சிடுவாய்பூநீர்தன்னை, மாளவேதசதீட்சையிப்படியேசெயாகு மானிலத்திற்செய்வார்கள்யிர்தமார்க்கஞ், சூளவேயின்னமொருபாகங்கேளு சுட்டொளியாம்பரிதிமுகம்செய்வார்பாரே. ௧௩

செய்வாரேதினந்தினமும்தீட்சையப்பாசெம்மையுடன்பூநீரைரவியில்வைத்து, பெய்யவேபனிநீரைபூநீரில்விட்டு போரானரவிமுகத்தில்வைத்தபோது, துய்யவேபூநீராம்பூவேபார்க்கும் துகளற்றவெண்மையதுகதிர்போலாகும்,மெய்யுடனேயிப்பாகஞ்செய்வார்மாந்தர் மேதினியிலின்னமொருபாகங்கேளே. ௧௪

பாகமென்றால்பாகமதுசொல்லொண்ணாது பாவையுடகருவானசெயநீராகும், போமென்றசெயநீராம்பிண்டமாகும் பொங்கமுடன்பனிக்குடமாஞ்சலமேயாகும், வேகமென்றபூநீரைவிட்டுமைந்தா விருப்பமுடன்சலமதனில்கரைத்துநீயும் சாகமுடன்தசதீட்சை யிப்படியேயாகும் சட்டமுடன்செய்துவந்தால்பூர்க்கும்பாரே. ௧௫

பூத்ததொருபூவெடுத்துச்சொல்லக்கேளும் புகழானபூவுடனேபச்சைப்பூரம்,நேர்த்தியுடன்வீரமதுகால்தாகநேர்மையுடன்சேர்த்து

வரையதாகும் கிர்த்தியுடன்வெடியுப்புச்சமனதாக இருடையுடன்பூர மதுதாலுங்கூட்டி, மாத்திரையசரக்கெல்லாமொன்றாய்ச்சேர்த்து மன்ன வனேகல்வமதில்மாட்டிடாயே. ௧௬

மாட்டவேபிண்டமென்றசெயநீர்தன்னால் மயங்காமல்காற்சாமம ரைத்துநீரு, வாட்டமுடன்பில்லைதட்டிகாயவைத்து வளமாகவகல் தனிலேமூடிமைந்தா, நீட்டமுடன்சீலையதுவலுவாய்ச்செய்து நேர் மையுடன்ரவிதனிலேகாட வைத்து, நாட்டமுடன்தான்போடு கோழி யாகநாயகனேபில்லையதுபூர்க்குந்தானே. ௧௭

தானனபில்லையதுபூர்க்காவிட்டால் தகைமையுடன்புடம்தானும் பின்னும்போடு, கானனபில்லைய்துகறுப்போது கடுஞ்சுருக்குமொரு வேளைசிவக்கும்பாரு, மானனபில்லையதுமறுபடியுமப்பா மயங்காமல் செயநீரிலரைத்துக்கொண்டு,கோனனகுருவருளால்பில்லைதட்டி கொ ப்பெனவேரவிதனிலேகாயப்போடு. ௧௮

போடவேபில்லையதுசத்தமிட்டால் பொங்கமுடன்வோட்டிவிட் டுசீலைசெய்து, நீடவோவிமுகத்தில்காயவைத்து நேர்மையுடன்சீலை யதுவலுவாய்ச்செய்து, கூடவேகோழியென்றபுடந்தான்போடு கொப் பெனவேபில்லையதுபூர்க்கும்பாரு, தேடவேபூநீரம்சுன்னமாகும் தெ ளிவானசரக்கெல்லாம்தட்டிப்போடே. ௧௯

போமென்றுவிடுகாதேபின்னுங்கேளு போக்கானசரக்கெல்லாங் கட்டுதற்கு, வேமென்றசத்துருவுமித்துருவுஞ்சேர்த்து வேகமுடன் கவசமதுசெய்துகொண்டு, நாமென்றவாக்குமப்பாய்பாகாமற் றுன்நல மாகசட்டிதனில்மணல்தான்கொட்டி நாமென்றமேல்சட்டிகொண்டு மூடி சட்டமுடன்தானெரிப்பாய்சாமம்நாலே. ௨௦

நாலானசாமமதுயெரித்தபோது நலமானபில்லையதுபூர்க்கும்பாரு, காலானபில்லைய்துகாரமெத்த கடுங்காரச்சுண்ணமென்றேசெப்பலா கும், பாலானசுன்னமதைமஞ்சல்தன்னில் பாச்சினால்மஞ்சளதுசிவ ந்துபோகும், மேலானசரக்குக்குக்காலநாகும் மேன்மையுடன்சரக் களைத்தாங்கொல்லுந்தானே. ௨௧

கொல்லுமேபாஷாண முப்பத்திரண்டும் கொ, தானசரக்களைத் தும்நீற்றுப்பாரு, வெல்லுமேநவலோகம்நீறிப்போகும் வேகமுடன் சூதமதுதுடித்துக்கொல்லும்,புல்லுமேகாரசாரங்கள்தானும்புகழான முப்புவால்மடிந்துபோகும், கல்லுகளுமுப்புவால்நீறிப்போகும் கா டெல்லாந்தான்விளையும்மூலியாமே. ௨௨



மூலியாம்சாறுவாரதழைகளெல்லாம் முப்பூவில்லுவளவு பட்டி ட்டாக்கால்,கேவியாம்தழைகளெல்லாம்சலமாய்ப்போகும் கெவனமு டன்குளிகைக்குமுப்புவாகும், வாலியப்பெண்ருதுவாவாள்முப்புவா லே வளமுடனேகாயமதுகற்றாளுகும்,சாலியனும்வண்ணானும்காண மாட்டான் சட்டமுடன்முப்பூவின்வளமைபாரே. ௨௩

வளமுடனேமுப்பூவைக்கண்டபோது வாகுடனேயேமத்துக்கு றுதியாச்சு, பளமையுடன்வயித்தியமும்வாதயோகம் பலிக்குமடாமு ப்பூவின்மார்க்கத்தாலே, இளமையுடன்முப்பகலுமுப்புவாலே வெழி லுடனேநீயுமொருசித்தனுவாய், நளபதியுமுப்பூவை யுண்டபோது நரைதிரையுமற்றுமல்லோராஜனுமே. ௨௪

ராஜனும்ராசாதிராசனுமான் நலமானமுப்பூவின் தன்மார்க்கத் தால்,போஜனுமேயிவர்க்கிடுசொல்லப்போமோ பொங்கமுடன்முப்பு வின்பெருமையாலே, கோடிமீஜங்களாமுப்பூவாலே குவலயத்தில்கா யகர்ப்பம்முப்பூவாலே, பாசமுடன்சித்தர்முனிரிஷிகள்தாமும் பாரி லேகர்ப்பமுண்டுயிருந்தார்தாமே. ௨௫

இருந்தாரேகோடிரிஷிசித்தர்தாமும்யெழிலானமுப்பூவைமுடித் துக்கொண்டு,திருத்தமுடன்சமாதியினிலிருந்துகொண்டு சீர்பெறவே யனேகவிதசித்துசெய்தார், பொறுந்தவேபூமியிடப்பாகங்கண்டு புக ழானமுப்பூவைக்கண்டறிந்து, வருந்தியேமுடித்தவர்கள்கோடாகோ டிவளமுடனேபதங்கெட்டார்கோடியாமே. ௨௬

கோடியாஞ்சித்தர்களிலொருவருண்டு குவலயத்தில்குருமுடிப் போனொருவனுண்டு, தேடியேபார்த்தாலுங்கிடைப்பதில்லை தேசத்தி ல்விட்டகுறைநேருமானால்,கூடியேயவர்தனக்குக்கிட்டும்பாரு கிட்டா விட்டால் விட்டகுறையில்லையென்று, நாடியேகர்மானுபவத்தினாலே நாட்டமுடனறிந்துகொள்ளநீதியுண்டே. ௨௭

உண்டானசாத்திரத்தில்அனேகஞ்சொன்னார் உத்தமர்கள்ரிஷிகோ டிமுனிவர்தாமும், அண்டமுடன்பிண்டங்களையறிந்தமற்றோன் அனே கமதாய்சட்டலைந்துகெட்டார்கோடி, கண்டபடிசாத்திரங்கள்தானுமரா ய் காசினியில்தம்மனப்போல்பாடிவிட்டார், விண்டவர்கள்கண்டவ ர்களாருமில்லை விருப்பமுடன்பூநீரைகெடுத்தார்தாமே. ௨௮

தாமானபிண்டமது நடுப்பிண்டத்தை தாக்கானமடிப்பிண்டம்தலைப்பிண்டந்தான்; கோமானமாதர்களுங்கொண்டுவந்து கொப்பெனவேபூரீறுகாச்சவென்று,நாமானசாத்திரத்தினுளவுகாணார் நாட்டிலேமெந்நூலைப்பாராமற்றான், சாமானமானகவியேழாயிரத்தை சாங்கமுடன்பாராமற்செட்டார்தாமே. ௨௯

கெட்டானேகோடிமனுராஜரெல்லாம் கேடுகெட்டகருமிகளுமாந்தர்தாமும்,சுட்டரேமுப்பூவைக்காணுமற்றான் சுட்டதினாலாபமென்னவேலாபங்கண்டார், விட்டகுறைவிருந்ததினாலின்னூர்பார்த்து விருப்பமுடன்வாதமதைகாணலாச்சு, இட்டமுடன்சத்தகாண்டமேழாயிரத்தில் வெழிலாகப்பாடிவைத்தேன்மறைப்பில்லைதானே. ௩௦

மறைவானபொருளெல்லாங்கண்டாராய்ந்து மார்க்கமுடன்வாதமதைச்செய்யவேண்டும், குறைவானபொருளறிந்துசேர்க்காவிட்டால் குற்றம்வரும்வாதத்துக்குறுதியில்லை, நிறைவானபொருளையல்லோவிட்டார்மாந்தர் நீநிலத்தில்வெகுகோடிகெட்டார்விண்ணில், பறைவானசாத்திரத்தைமுன்பின்னுக பாடுபட்டுபாராமல்மடிந்தார்தாமே. ௩௧

மடிந்ததினால்மானிலத்தில்கர்ப்பமுண்டு மறைவாகமண்மேலேயிருந்தார்தாமும், முடிந்ததொருகாயாதிகற்பந்தன்னை மூதுலகில்பாடுபட்டுக்கிடையாமற்றான், படிந்ததொருகூடுவிட்டுக்கூடுபாய பாழானதேகமதைமெய்யென்றெண்ணி, வெடிந்தமட்டுமாயாதிசாகரத்தைவிட்டொழிக்கவகைதேடிமான்பர்தாமே. ௩௨

மாண்பானபயிர்களெல்லாமொன்றாய்க்கூடி மயக்கமுடன்சாத்திரத்தில்பிரிவுதோன்று, காண்பானவவரவர்கள்செய்தகாப்பு கடையேடுமுடியேடுநடுவேடுந்தான், வீண்பானமுப்புவகைமெய்யென்றெண்ணி விண்ணுலகில்சாத்திரத்தின்வழிபோகாமல், சாண்பாம்பையானுலுந்தடிகொண்டடிக்கத் தாரணியில்மறந்துவிட்டகாதையாமே. ௩௩

காதையாமிப்படியேதெளிவுகாணார் காசினியில்ஊசிகொள்ள திராணியற்று, பாதையாம்துலாங்கொண்டகணக்கைப்போல பாரினிலேகுருமுடிக்கரூட்சங்காணார், மேதையாம்பஞ்சணையிற்சுகங்கண்டாற்போல்,மேதினியில்சாத்திரத்தைப்பார்த்துமென்ன வேதையாம்பொருளறிந்துபோனவர்க்கு விருப்பமுடன்வாதமதுபலிக்கும்பாரே. ௩௪



பாரேதான்வண்டபிண்டமறியவேண்டும்பாரினிலேயண்டமதையாருங்காணார், நேரேதான்முப்பூவுபார்க்கும்போது நெடிதான அண்டமென்றகல்தானப்பா, கூரானபிரதிவினால்வுற்பத்தியாச்சு கொடிதானவிஷக்கல்லுஅண்டக்கல்லாம், சேரேதான்சிற்றண்டம்போண்டமாகும் சிறப்பானநடுவண்டமென்னும்பாரே. ௩௫

போரானசுக்காங்கல்பிரம்மக்கல்லாம் பெருமையுள்ளமூதண்டக்கல்லுமாகும்,சீரானபடிக்கக்கல்லென்றும்பேருசிறப்பானகுழியானையென்றும்பேரு, தாரானகுடுகுக்கல்லென்னும்பேரு தாக்கானகண்ணக்கலென்றும்பேரு, பாரானபச்சையென்றகண்ணக்கல்லு பாங்கானவுதகமென்றகல்லுமாச்சே. ௩௬

கல்லானகல்லதனைக்காணவேண்டும் காசினியிலாருந்தான்காணமாட்டார்,புல்லானபூநீரையறியமாட்டார்புகழானசோணக்கல்கண்ணமப்பா,மல்லானமன்கட்டியென்பார்பாரு வையகத்தில்தாமறியாற்மகிமைதன்னை, செல்லானபுத்துக்குள்ளிருக்குங்கல்லாம் ஜெகஜோதிமகிமைதனைகாணார்தாமே. ௩௭

காணுரேகருவாளிகான்பானால் காசினியில்விண்டிடுவான்கருத்துளோர்க்கு, தோணவேபூவுலகில்தொட்டாலுந்தான் தொல்லுலகில்மாண்டிடுவார்மாந்தர்தாமும், நாணவேசாத்திரத்தைமிகவாராய்ந்து நாதாக்கள்சொல்லுறையும்மிகவுங்கேட்டு, நீணவேகற்பாந்திரமிருப்பதற்கு நீணிலத்தில்கைமறைப்புயாவுங்கேளே. ௩௮

கேட்கையிலேசாத்திரமாம்யுகாந்தகாமங்கீர்த்தியுடனிருப்பதற்குவாசிநோக்கு, நீட்கமுடன்வாசியிலேயிருந்துகொண்டு நீடாழியுலகத்தைவெறுக்கப்பண்ணி, சூட்சமுடன்சின்மயத்தையறிந்துபோற்றி சுருதியுள்ளகருவிகரணாதியெல்லாம், தாட்கமலபீடமதை பணிந்துபோற்றி சதாகாலசமாதியிலேயிருக்கநன்றே. ௩௯

## முப்பூவினால் சரக்குசத்துருசங்கம்.

நன்றானசரக்குகளைக்கொல்லவென்று நாட்டமுடன்சத்துருமித்துருவும்கண்டு, குன்றானமலைகளிலேபாஷாணமுண்டு கொப்பெனவேகொண்டுவந்துபூநீர்சுண்ணம்,பன்றானவுமிழ்நீரால்மத்தித்தேதான் பாலகனேசுண்ணமென்றபாஷாணத்தில், தன்றானகட்டிக்குயங்கிபூட்டிதகைமையுடன்கோழியென்றபுடத்தைப்போடே. ௪௦

போடயிலேபற்பமதுகடுங்காரந்தான் பொலிவானகண்டர்தமைக்கொல்லும்பாரு, சாடவேமுன்போலவுமிழ்நீர்தன்னில் சட்டமுடன்

தான்குழைத்துபுடத்தைப்போடு, நீடவேகடுங்காரச்சன்னமாகும் நேர்மையுடன்சத்துருவுக்காலமித்ரன் வாடவேதிரியாதேமைந்தாகேளு வளமுடனேசுண்ணமதையெடுத்துக்கொள்ளே. சக

கொள்ளவேகுதமதுக்கனுவுபோடுகொடிதானயேமாசந்துள்ளிப்போகும்,விள்ளவேகுதமதுமடிந்துதானல் வேகமுடன்கவனமென்றகுளிகையாச்சு,மெள்ளவேகுளிகையதுகொண்டபேர்க்குமேதினியில்சதாகாலம்சாவேயில்லை, உள்ளபடிகாலாங்கிநாதர்பாதம் உத்தமனேநாம்வணங்கிபாடினேமே. சஉ

பாடினேம்போகரிஷிசொன்னமார்க்கம்பாருலகில்பொய்யதுமெய்யேயாகும், தேடியேயிவ்வேதைரூப்பின்மார்க்கம் தெளிவுறவேபாடிவிட்டேன்சத்தகாண்டம், நீடவேநான்காவதிந்தகாண்டம் நீடவேசாகாம்போலிதுவேயாகும், கூடவேயேழாயிரக்காண்டமப்பா கூறவேமுடியாதுதின்னந்தானே. சங

தின்னமுடனிப்பாகம்யாருஞ்சொல்வார் திறமையில்லாசுந்தரனூர்மறைந்தார்தாமும், வண்டமுடன்கொங்கணவர்கரிதிசொல்லி வளமையுடன்தாம்மறைத்தார்பிண்டப்போக்கை, சுண்ணமுடன்செய்வதற்குகொங்கணவர்பாதம் சுத்தமுடன்செயநீரைமறைத்துச்சொன்னார் எண்ணமுடனிடைக்காடார்தமராநந்தர் வத்தமுடனென்போலசொன்னார்பாரே. சச

சொன்னதினல் விதிமுறைகள் காணதப்பா துரைகோடிமுகங்கோடிதொந்தங்கோடி, வின்னமிலாசெய்வதற்குரிஷிகள்தாமும் விட்டகுறைவெட்டவெளியென்றுவிட்டார், நன்மையாய்நாதாக்களடிபணிந்து நலமுடனேபாடிவைத்தேன்முப்பூதீட்சை, பன்னவேயிந்நூலின் தீட்சைபார்த்து பாகமுடன்செப்பவனேவாதியாமே. சரு

## கேசரவித்தை.

வாதியாமின்னமொருமார்க்கம்பாரு யகத்தானவேதையிதுகளுக்குவேதை, சோதியாங்கேசரத்தின்வித்தையப்பாசுளுக்கிலேயெவருந்தான்சொல்லமாட்டார், நீதியுடன்சூதமென்றராஜர்தம்மை நேர்மையுடன்சோறுதான்கொண்டுசென்று,பாதியுமைதான்பணிந்துமைந்தா நீயும் பட்சமுடனுப்பூவில்ஒருமாபோடே சசு

போடயிலேமதபானிவிரடங்கி பொங்கமுடன்சூதமதுகட்டும்பாரு,கூடயிலேசூதமதுகுளிகையானல் கோடானகோடிவித்தையாடலாகும் வாடையிலேசிவனத்துக்கில்லாவிட்டால்வளமாகவங்கமதையுருக்கிக்கொண்டு மூடயிலேகுளிகையது போட்டுப்பாருமுனையானவங்கமது வெள்ளியாச்சே. சஎ



அச்சென்றவெள்ளியதுபூசைக்கப்பா அப்பனேநாதாக்கள்முனிவர்தாமும், மாச்சப்பாவாதவித்தைசெய்துமல்லோ மகதேவவாலயங்கள் பூசைசெய்தார், பாச்சவேதேவாலயங்கட்டுதற்குபாகமுடன் தங்கமென்றபோக்குச்சொல்வேன், காச்சவேசெம்புதனை யுருக்கிக்கொண்டு கருவானமுப்பூவைப் போட்டிடாயே. சஅ

போடவே செம்பதுவு முறவலி பொலிவான தங்கமதுவாகும்பாரு, நீடவேமுன்சொன்னக்குருவைத்தானும் கினவாகநவலோகந்தன்னிலிட்டால், கூடவேமாற்றதுவு மதிகங்காணும் குணமானயேமமதுவென்னலாகும்-தேடவேசிவனத்துக்கில்லாவிட்டால் திறமானமுப்பூவையறிந்துகாணே. சகூ

காணவேயின்னமொருகருமானங்கேள் கருத்துடனேசொல்லுகிறேன் மைந்தாநீயும், தோணவேபூசைசெந் சேர்தானப்பா தேரற்றமுடன் தானெடுப்பாய்செம்பையல்லோ, பூணவேசெம்புதனைபாணைபண்ணி போக்கானசூதமது உள்ளேவிட்டு, வேணவேபூநீரில்குன்றிபோடு வேகமுடன் மேற்பாணைகொண்டுமூடே. ருo

மூடவேமண்சிலை வலுவாய்ச்செய்து முனிநாதர் சொற்படியேபுடமேபோடு, கூடவேகோழியென்ற புடத்தைப்போடு குணமுடனே புடமாறியெடுத்துப்பாரு, வாடவேசூதமதுமடிந்துமேதான்வளமானகளங்கமது போலேயாகும், தேடவேசெம்புதனில் நூற்றுக்கொன்று தெளிவான களங்கமதை கொடுத்திடாயே. ருக

கொடுக்கையிலே மாற்றதுவுமெட்டேயாகும் குணமான பொன்னதுவுஞ்சவளிபோலாம், விடுத்துமேபொன்னதனைவாட்டித்து விருப்பமுடன் பூங்காவிபுடத்தைப்போடு, கொடுத்திடவேமாற்றதுவும் பத்தேயாகும் தோஷமல்பசுமைநிறச் செம்பொன்னுரூர், எடுத்துமேசிவாலயங்கள் கட்டநன்றுவெழிலானசூதமென்றருளுவுமாமே. ()

குருவானசூதமதை பின்னுமைந்தா கொப்பனவே ரவியெடுத்துபாணைகுள்ளே, திருவானபாணைதனில்வைத்துப்பின்பு திகமுடனே கெந்திதனை களஞ்சிபோடு, மருவானபாணைமூடிப்பின்புமார்க்க

முடன்புடம்போட கட்டிப்போகும், வுருவானகளங்கமதுவாகும்பா
ருவுத்தமனேகளக்கெடுத்து செப்பக்கேளே. ருஎ

செப்பவென்றால் காவில்லை பாவுமில்லை செம்மையுடன் வெள்ளி
தனில் நூற்றுக்கொன்று, ஒப்பமுடன் தானுருக்கி கொடுத்துப்பாரு
ஓகோகோநர்தாக்களிக்கதையாகும், அற்பமென்றவினையாதேமைக்
தாகேளு அரசர்களுமிந்தமுறை காணமாட்டார், சொற்பமுடன்
மாந்தருக்குவுண்மையாகதோற்றவேயிக்கமுறை தெளித்திட்டேனே.

தெளியவேயின்னமொருமார்க்கம்பாருதோற்றமுடன்காமுறை
ப்போமாந்தர்க்காக, ஒளிவுடனேசினபதி மார்க்கத்தார்கள் வொக்க
முடன் செய்துவரும் வித்தையாகும், வெளியாகசெத்தவரை காண்ப
தற்குவெட்கமுடன் ஜாலமென்று சொல்வேன்பாரு, வளிடானவட்
டாரந்தன்னிலேதான்வளமுடனேமாளிகையொன்று செய்தார்தாமே.

போகர் செத்தவரைக் காணுதலும் அவர்களிடம்
பேசுதலுமாகிய
குறளிஜாலமாளிகை.

தாமானமாளிகையாஞ் செப்பக்கேளு தடனீளம்சதுரமது சொ
ல்வேன்பாரு, வாமானகுறுக்கு வறைபிருபதாகும் யாகான நெடுக்கு
வரைநாற்பதாகும், காமானகணக்குவகைவிபசொல்வோம்மாற்சது
மெழுநூற்றுமிருபதாச்சு, சமானமாகவல்லோ துனைகள்தோறும்
சட்டமுடன் கண்ணாடிகதவுமாட்டே. ருக

மாட்டவேகண்ணாடிவாசலுக்குள் மார்க்கமுடன் குழலொன்று
நிருத்தியங்கே, நீட்டமுடனெழுநூற்று மிருபத்துக்கும் நெடிதான
குழலொன்று வெவ்வேறுகும், வாட்டமுடன்கண்ணாடிசுற்றோரந்தா
ன்வாகுடனேகாந்தமென்ற கம்பிதானும், தேட்டமுடன் தானமைத்
து நடுமையத்தில் தெளிவாககுழல்தனிலே பின்னிப்போடே. ()

பின்னவே காகமென்ற குழலில்தானும் போனகம்பியது சேர்
ந்தபோது, நன்மையாய்வேகமுடன்வாய்விளுலோளிமுடன் காற்ற
துவுமிகவேதங்கி,பன்னவேசப்தமதுமிகவுண்டாச்சு பாங்குடனேவா
சல்வழிதன்னிலப்பா, சொன்னதுபோல்செவிதனக்குகேட்கும்பாரு
சூட்சமதுகருவாளிகாண்பான்பாரே. ருஅ

பார்க்கவென்றால் வாசல்முகம் வொவ்வொன்றிக்கும் பாங்குட
னேபிரதமைகள்தானமைத்து,ஏர்க்கவேஆண்பெண்ணாய் ரூபமமைத்



து வெழிலானவாமைகளுக்கொண்டுசாத்தி, தீர்க்கமுடன் பூதமெ
ன்றகண்ணாடிக்குள் திறமையுடன்பூதமதைகாணலாகும், சேர்க்க
வேகண்ணாடிவருக்கந்தோறும் சிறப்பானகருமையை தீட்டிடாயே.

தீட்டவேகருமையை நாட்டிப்பாருதிறமான வஞ்சனமுமிதற்கி
டல்ல, நீட்டமுடனெழுநூற்றுசொச்சம்வீட்டில் நிலையானமமதனை
யேவமைத்தபின்பு, கூட்டமுடனொவ்வொரு கண்ணாடிதன்னில் குறி
ப்புடனேரூபமதைகாணலாகும், வாட்டமுடன்சிகாமது மேல்வட்ட
த்துள் வாகுடனேபரிதியது வொளிவுகாணே. சு0

காணவேவிழிதனிலே வஞ்சனமுமிட்டு கருத்துடனே பிரணவ
த்தைமாறிக்கொண்டு, தோணவேவெட்டவெளிதன்னில் நின்றுதோ
ற்றமுடன் பரிதிதனை கண்டபோது, மாணவே விழிதனிலே நிமை
யொட்டாமல் மாற்கமுடன்கடிகையது பத்தேயாகும், பூணவே பூமி
தனில் நின்று கொண்டு புகழானநடுநெற்றிமையம்பாரே. சுக

மையமாய்மட்டமது நின்றுகொண்டு மயங்காமல்விண்ணுலகம்
பார்க்கும்போது, பையவே தோற்றுவது ரூபங்காட்டும் பாண்மை
யுடன்சாயரூபந் தன்ரூபம்போல், மெய்யானதேகமது வடிவந்தோன்
றும் மிக்கானரூபமது வர்ணங்காணும், பொய்யானதரிசனமு மெய்
யேயாகும் போக்கானரூபமது மெய்போலாமே. சுஉ

ஆமேதானிப்படியேரூபங்காட்ட வினைகவிதயான்மைகளுமித
னுலாகும், காமேதான்சொன்னபடி நான்காங்காண்டம் நாட்டிலே
மானிடர்கள் பிழைக்கவென்று போமேதான் போகரேழாயிரத்தில்
பொங்கமுடன்மாண்டவரைக்காணவென்று, தாமேதான் மாளிகை
யொன்றுசெய்தேனப்பா சட்டமுடன்ஜெகஜால மாளியாச்சே. ()

ஆச்சப்பாஜகசாலமாளிதன்னில் அப்பனேயாம்கோடி வரைதா
ன்சொல்வோம், பேச்சப்பா பேசதற்கொன்னசொல்வோம் போன
செத்தவர்பேர் கேட்கச்சொல்லி, கூச்சலுடன்பின்னிருந்தபிரணவத்
தைக்குறிப்புடனே மாறியல்லோ குறளிதன்னால், மூச்சிருந்து பேசு
மதுபேச்சைப்போலமுன்னிருந்துபேசும்வகைமொழிசொல்வேனே

மொழிசொன்னவார்த்தைக்கு முன்னேநின்றுமூர்க்கமுடன் கு
றளியது பின்னேசென்று, வழிசெல்லும் பிரதமையின் வாசல்முன்
னேவழிமடக்கிவார்த்தையது முன்னேகூறும், பழியில்லாமாந்தருக்
குசெகசாலத்தை பாங்குடனேபூதமது கூறும்பாரு, முழியுடனேமு
கங்காட்டி பல்லைக்காட்டி மூர்க்கமுடன்கோபித்துப்பேசுந்தானே,

தானனகுறளியென்ற பூதந்தானும் தகமையுடன்நாம் நினைத்த காரியத்தை, வானகமாளிகையினுள்ளேசென்று மார்க்கமுடன்ஜால மென்றகண்ணாடிக்குள், பானமுடனுள்ளிருந்து பேசும்பாரு பால கன்போல்வார்த்தையது மிகவேசொல்லும், தேனமிர்தங்கொண்ட தொருசொல்லைப்போலதெளிவாகமுன்னின்றுபேசும்பாரே. ௬௬

பேசுகையில்ருபமதையாருங்காணார் பேருலகில் மாயவித்தை ஜாலவித்தை, காசுபணங்கேட்டாலுங் கொடுக்கும்பூதம் காசினியில் பூதமதைவசமேசெய்வார், தேசுலவுநாட்டுவளமெல்லாந் தோன்றும் தேசத்திலதிசமொன்றவித்தையப்பா, வீசுபுகழ்மண்டபத்தில் ஜாலவி த்தைவெகுவாகச்செய்புகிறனின்னங்கேளே. ௬௭

கேளேநான் பூதநாதி வித்தைசொல்வேன் கெடியானகுறளி யென்றபூதம்தானும், வீட்டதான்பிரணவத்தின் வசமதாக்கிவேகமு டன்ஜாலமென்றமாளிதன்னில்நாளேதான்போகாமல்சதிரோன்முன் னேகவினமுடன் பூதமதையேவல்செய்து, சூளேதான்ஜாலமென்ற மாளிதன்னில் சூட்சமுடன்குறளிதனைவசியமாட்டே. ௬௮

ஆட்டேதான்ராசாதிராசர்தானும்அங்கனவேதான் மயங்கிவார் த்தைசொல்வார், கேட்டேதான் காலாங்கிநாதர்தம்மால் கிருபையுட னசாலமென்றமாளிதன்னில், நீட்டமுடன்வாசல்வழி சென்றவர்க்கு நிலையானவட்சரத்தைமாறல்செய்துகூட்டமென்றகுழல்தனிலேஊதிப் பின்பு கூர்மையுடன் ஓசையது கேட்குந்தானே. ௬௯

ஓசையாமெழுநூற்றுயிருப்துக்குள்ஒப்பமுடன்சப்தமதுகேட் கும்பாரு, ஆசையுடன்தலை மாளிமுதலில்நின்று அப்பனே நடுமாளி மையமட்டும, பூசையுடன்கடமாளிநெடுகுமட்டும்பொங்கமுடன் தக் திமென்றகம்பியதனால், பாசையுடன் யிரும்புக்குகம்பிமாட்டி பாகமு டன்குழல்தனிலேசெல்லுபோடே. ௭௦

போடேதான்வாசல்வழிமுழுதுக்தோறும் போக்கனமையதனை த்திலதம்போடு, நீட்டேதான்திலதமதை பார்க்கும்போது நிலையான கோட்டைவழிமாளிதோன்றும், தேடவேவஞ்சனத்தின் மையினாலே தேசத்திலுள்ளதொரு அதிசயங்கள், கூடவேமாளிஜாலமென்றமா ளிதன்னில் குறிப்புடனே பார்ப்பதற்கு தோற்றமாமே. ௭௧

தோற்றவேமையாழிமாளிதன்னில் துப்புரவாய் நடுமையமிருந் துகொண்டு, ஏற்றமுடனெவ்வொருவறைகள்தன்னில் வெழிலானபி ரதமையின் பக்கஞ்சென்று, கூற்றனைபோல் குறளியிடந்திரத்தால்



கோடானகோடிவழி நடத்தலாகும், சாற்றவுடன்காலமென்றமாளி தன்னில் சதுராகத்தானடத்தவிதிகள்கேளே. ௭௨

விதியுடனே முடிப்பதற்கு இன்னஞ்சொல்வேன்வேதாந்தத்தா யினதுவருளினாலே, மதிப்போன்ற சந்திரனைப்போலேயொத்தமாது மையாளின்ன மொருபதுமைதானும், சதிரோனைத் தானெரிக்கும் சோதியப்பா காசினியிலொருவருந்தான கண்டதில்லை, ஆதியுடனே பூதமென்ற குறளிதானும்துப்புறவாய்வதிசயங்கள்சொல்லுந்தானே

சொல்லுவதிலவர்மனதில் தோற்றமெல்லாம் சூட்சாதிசூட்சம தைகண்டுதானும், வெல்லுவதுபிரணவத்தை சொல்வேன்யாரு விரு ப்பமுடன், அம்-இம் வங்கென்றேயோது, புல்லுதற்கு ஆங்ரீங்ரீயுஞ் சௌவும் புகழான உயிரெழுத்தைமாறல்செய்து, சொல்லுதற்குசோ டசமாம்வாலைசக்கரம்தெளிவுடனேபோட்டுமல்லை மாறிக்கொல்லு

உச்சாடனம்.

கொள்ளவே உச்சாடனம் வுரைப்பேன்கேளுகொடிதானபவம கற்றியுமைந்தாவிள்ளவேபரணமுடன்சத்திபூசைவிருப்பமுடன்தா வசெய்தாலெல்லாஞ்சித்தி, துள்ளவேவனுமாரைவரவழைத்துத் து றையுடனே வறுகோணச்சக்கரத்தில் எள்ளளவும்பிசகாமல் வழிசே ராமல்யெழிலானபிரணவத்தைமுன்னேகூறே. ௭௫

கூறயிலேயங், மங்-சிங்கென்றேயோது கொடிதானவுருவதுதா ன்லட்சமாகும், நீறமுடனிருலாணமாயிருந்து நிறமுடனேமுக்கோ ணவட்டத்துள்ளே, சிறவுடன்வாகிதன்னை வரவழைத்து சிறப்புட னேபூசையதுசெப்பக்கேளும், நேரமுடனேநடுச்சாமவேளைதன்னில் நேர்மையுடன் மசான கரையிருந்து செய்யே. ௭௬

செய்யவென்றால் பூசையது இன்னங்கேளு தெளிவுடனேமசா னமதில் சக்கரந்தான் மெய்யுருவங்கொண்டு மல்லோபுவனைவாலைமே தினியில் கைவசமாய் செய்துகொண்டு பொய்யுடலை மெய்யென்று நம்பியேதான் புகழானவஞ்சனத்தைமாற்றுதற்குவழியான்பாச மதைமிகவும் நீங்கி மார்க்கமுடன் தவநிலையில் நின்றிடாயே. ௭௭

நின்றுமேவாகமென்ற சிறசின்மேலே நிலையான பதிவிளக்கை யேற்றிவைத்து, தன்றுடனே மசானத்தின் சவத்தின்மே சட்டமுட ன்திரிர்துவேகும்போது, வென்றிடவேவாகத்தின்சிரசின்மேலே

வினையமுடன்பதிவிளக்கேயேற்றிவைத்து,சென்றிடவே குறளிதன்னை
வரவழைத்து சிறப்புடனே கொள்ளிதன்னை காவல்வையே. எஅ

வைத்தவுடன் கொள்ளிவாய்ப்பிசாசுதானும் வாகுடனேகுறளி
க்குகாவல் நின்று, செத்தவொருசவத்தின்மேலிருந்தபன்றிநேரவே
சிரசதுவும் பெயர்த்தானும், மெத்தவே ஓங்காரமிட்டுமேதான் மேன்
மையுடன் குறளிக்குஎதிர்முன்னுஎ, சத்தமுடன் கூச்சலிட்டேலாரக
ண்டானும் சதுர்முகமாய் குறளிமுன்பேசும்பாரே. எகூ

பாரேதான் மசானத்தில் பூசைசெய்துபட்சமுடன்குறளியைக்
தான்வசியஞ்செய்து, நேரேதான் ஜாலமென்ற மாளிதன்னில் நேர்
மையுடன் நாலுபுறங்காவல்வைத்து, சீரேதான் செத்தவர்பேர்கேட்
கும்போதுசிறப்புடனே குறளிவந்து முன்னேகூறும், வேரேதான்ச
ஞ்சாரமனிதரில்லை வினவுக்கு விடைகொடுக்கும் குறளியாமே. ()

குறளியாம்ஜாலமென்ற மாளிதன்னில் குமிப்பானதொவாசல்தி
ட்டுவாசல், திறமுடனே கூட்டமது வெட்டுபோராய் திறமுடனெண்தி
சையாந்திக்குபாலர், மறுநடையமேல்வாசல் முன்னேநின்றுமதிப்பு
டையாகமென்ற குழல்சந்தாலே, கூறனுடனே மேல்வட்டபரிதிமுன்
னே சூட்சமுடன்செத்தவரைக் காணலாமே. அக

காணலாமவரவர்கள் அடையாளத்தைகண்டுமேமுகத்தெதிரே
பேசலாகும் தோணவேபேசுதற்கு முன்னேதானும், தோற்றமுடன்
மயினமதுநிறம்போல்நிற்கும், பூணவே அந்தவண்ணமென்னலாகும்
புகழானரூபமதுதன்னிற்றோற்றும், வேணவேயுபசாரமிகவும்பேசும்
விருப்பமுடன் முன்னின்றுமறையும்பாரே. அஉ

மறையிலேயாம் நினைந்தருபந்தோற்றும் மன்னவனே மய்ங்கா
தேகமதி கொள்ளாதே, திரையுடனே முடியல்லோ கண்ணாடிக்குள்
திறமுடன்முன்னின்று வார்த்தைகூறும், முறையுடனே தான்புகலும்
முனிநாதாகேள் முன்னின்றுபேசுதற்குபின்னேசென்று, குறையன்
றிமுன்னடந்தகாரியத்தை கூறிடுமே மனிதரைப்போல் கூறுமாமே.

கூறவென்று லெழுநாற்றுயிருபதுக்குள் கோப்பனவேமந்திரத்
தையுச்சாடித்து, திறமுடன குறளிதன்னைகிட்டழைத்து திகழுடனே
ஞானோபதேசஞ்சொல்லி, கோறமுடன்கைதனிலே மையைப்பூசிக்
கொப்பனவே கண்ணாடிமேலேவைத்து, பாறமுடன்வட்டமொத்த
வின்னைப்பார்க்கபருவமுடனுருவமது தோணும்பாரே. அச



தோணுமே ஜெகஜாலமாளிதன்னில் தோற்றமுடன்கருவெல்
லாமிதற்குள்ளாடும், காணுமே கைபொளியில் வட்டந்தானும் களிப்
புடனே மையுருவாய் காணலாகும், ஏணவே கருமறைப்பைகாணலா
கும் வெழிலானசமயமது வாய்க்கும்பாரு, ஆணவேவட்டமென்றபக்
கம் நின்று உத்தமனேநுமையத் திலர்தந்திட்டேனே. அரு

திட்டையிலே கருமானமின்னமொன்று திறமுடனே செப்புகி
றேன்மைந்தர்க்காக, வாட்டமுடன்ஜெகஜாலகொள்ளிதன்னை வாகு
டனேதானமைத்துத்திட்டங்கூறி, தேட்டமுடன்பிரணவத்தைமுன்
பின்னுகதெளிவுடனே ஓதிவைத்தபடிநீதானும், குட்டியேகுறளிக்கு
பிரணவத்தைக்கூறி சூட்சமுடன் அட்சரத்தைசமுக்கிமாறே. ()

மாறப்பாவஞ்சமாய்வீட்டுக்குள்ளேமன்னவனேநடுமையம் நின்
றுகொண்டு, கூறப்பாசெத்தவரைகாணவென்றுகுறிப்புடனே பட்ச
ம்வைத்துகாண்பதற்கு, நேரப்பாவந்தவர்பேர்ஊர்தானென்னநிலைப
னயிருப்பிடமும் ரூபமென்ன, ஊரப்பாமுன்னிருந்த ரூபமென்ன அஎ
வுத்தமனேயிறந்தபின்புரூபங்கேளே.

கேளவேவடிவத்தின் வரணங்கேளு கெடியானவாடை யென்ற
ரூபங்கேளு, நீளவேவாயாணப்பெயருங்கேளு நிலையானதைத்தொழி
லைபின்னங்கேளு, மீளவேமர்பினிடதுலாச்சாரக்தான் மிக்கானவொ
மூக்கமென்றவாசாரங்கேள் மாளவேமாண்டதோர்வருஷங்கேளு மன் அஅ
னவனேமாதமென்றமுடிவுங்கேளே.

கேட்கையிலேயிறந்தோர் நாளுஞ்சொல்லும்கெவுனமுடன்கா
ழிகையும் முன்னேகூறும், நீட்கமுடனடையாளம்சொல்லும்போது
திஷ்களங்கமாகவல்லோ உண்மைதோன்றும், சூட்சமுடன் குறளிக்கு
திலகத்தைசந்தமுடன்சொல்லுகின்றதன்மையுண்டு, வேட்கமுடன்
பில்லிதன்னை வசியஞ்செய்து லோகமதில் வெகுசித்து வாடலாமே.

ஆடலாம் வெகுதந்திரம் குறளிக்குண்டு அப்பனேகுணியமுமித
னாலுண்டு, தேடவேகுட்டியதுமலைகுட்டிதானும்தெளிவுடனே நாப்
சொன்னகாரியத்தை, ஊடவேஒளித்திருந்து வதையச்செய்யும்வுத்
தமனேயிருள்மாளிகாணலாகும், நாடவேஜாலக்காள்மோகினியுந்தா
னும் நலமானகுட்டியென்ற வீரியனுந்தானே, கூ0

தானனவீரியனும் ஆரியனைவேண்டும் தகமையுள்ள வீரியனு
மிருப்பானானல், வேணுமந்திரத்தை மிகவேபேசும் மிக்கானகிரம
விதிதானடத்தும், பாகனகுருமுறைபோல்பாகஞ்சொல்லும் பால

கனேயாகமது குறதிகூறும், தேனுணவிரியனுக்குட்டிதன்னை தெளிவுபெறவேலாகமதில்வசியஞ்செய்யே. ௯௧

செய்யவேகுட்டியெனும் வசியமானல் ஜெகத்திலே கோடிவித்தையாடலாகும், பையவேமாந்தர்மேலேவதாகும் பாங்குடனேகல்லதனைவெறியலாகும், மெப்புடனே ஜெகஜாலவித்தையப்பா மேதினியிலாருந்தான்செய்யவில்லை, பெய்யவேசங்கலியன் கறுப்பன்தானும் பேரானவண்ணமாரேழுமாமே. ௯௨

ஏழானவண்ணமார்காவலாளர்எழிலான ஜாலமென்றமாளிதன்னில், பாழானவையன்மார்பிட்டாரிதானும் பச்சையென்ற தேவதையும் காளிபோடு, வாழாததுமரிகளஞ்சக்ககன்னி வளமுடனே பச்சையென்றபல்லக்குகன்னை தாழாமல்தோளதனிலெடுத்துக்கொண்டு தகமையுடன் காளிதனை தூக்குவாரே. ௯௩

தூக்கியேஜாலமென்றமாளிதன்னில் தப்புரவாய்காவலுடனிருந்துகொண்டு நேசமுடன் தேவதையை வசியஞ்செய்து கொடிக்குள்ளேகோடிவித்தையாடலாகும், பார்க்கவென்றுலோகமதில்மாந்தர்யாவும், பதபதைத்து நெகிழ்ந்திரங்குவார்கள், வாக்குடனேவாமுனைக்குபதமுற்றந்து வாகுடனேசெல்லுமென செப்புந்தானே. ௯௪

செல்லவென்றால் பின்னம்வெகுகூத்துகேளீர் செயலானநாதர்முனிரிஷிகள்தாமும், வெல்லவேபூதமதை வசியஞ்செய்து வேணவுபசாரமதுவதன்மையாலே, புல்லவேயேவல்தனைச் செய்யவென்று புகழாகவசியமது செய்துகொண்டு, மெல்லவே தம்பணிக்கு ஆனதாக்கு மேன்மையுடன் சித்துகளுமாடினாரே. ௯௫

ஆடினார்வெகுகோடிகாலமப்பா அவனிமிலேசித்தர்களுமுனிவர்தாமும், கூடியேபில்லியென்ற பூதந்தன்னை குணபடுத்திதம்வசமாய் செய்துகொண்டு, தேடியேவெகுகோடிநிதிகள்தன்னைதேசமதில் பூதத்தினைவசியத்தாலே, நீடியேகர்ப்பார்ந்தகாலமட்டும் நீணிலத்தில்தாமிருந்தார் சித்தர்தாமே. ௯௬

சித்தானசித்துவகையின்னஞ்சொல்வேன் ஜெகதலத்திலனேகநிதபூதமுண்டு, முத்தானவேதாளபூதமப்பா மூதலவில் ராஜர்களும் வசியஞ்செய்வார், நித்தமுடன்வேதாளமுந்தானும் நேர்மையுடன்விக்கிரமாதித்தனுக்கு, சுத்தமுடன் வாகனமாயிருந்துகொண்டு தொல்லுலகில் வெகுகால மிருந்தார்தாமே. ௯௭



இருந்துமே யின்னம்வெகு விநோதங்கேளு யெழிலானஜாலமென்றமாளிதன்னில், பொருந்தவேயெல்லவரும்பார்க்கவேதான் பொலிவான யெக்காளஜாலந்தன்னை, திருந்தவே யெழுநூற்றியிருபதுக்குள் திறமானமாளிகையாம்பக்கோரத்தில், வருந்தியே தானிருந்து ஜாலமாளி வாகுடனேகுடியிருப்பு கண்டோம்பாரே. ௯௮

கண்டோமேயின்னமொருகருமானங்கேள் கருவானநகார்ச்சுனசிர்மத்தில், தண்டுளவமாலையணிபூண்டுகொண்டு தக்கனுடயாகமதில்தானிருந்து, கொண்டல்வண்ணனச்சுதனும் கோமான்தானும் குடியிருப்பு, கோட்டைதனில் காவல்நின்ற தண்டரிகமானதொரு ராட்சதபூதம் துடியானதேவனுபூதமாமே. ௯௯

ஆமேதான் பூதமதுதன்னைத்தானும் அப்பனேஜாலமென்ற மாளிதன்னில், போமேதான்நடுமையம்மத்திவாசல் பொங்கமுடன்கருவீரன் பத்திரகாளி, வேமேதான்கருப்பண்ணன் டாகினிதானும்மிக்கான காட்டேரிசங்கிலிநாயன், தாமேதான்சொன்னபடி மசானவிதிசட்டமுடன் தெய்வங்களனேகமுண்டே. ௬00

உண்டான தெய்வங்களனேகமுண்டு வுத்தமனே சர்வகலைக்கியானமுண்டு, பண்டான பொய்களவு சூதுமுண்டு பண்பான விசுவாசமில்லைகண்டீர், திண்டான ராட்சதமாம் பூதந்தன்னில் திறளான நவகோடி ரிஷிகளெல்லாம், கண்டிதமாய்பித்தாதி பூதந்தன்னில் காணியிற் கோடிவித்தையாடலாமே. ௬0௧

ஆடலாம்பலபேத பூதந்தன்னால்வப்பனே வஷ்டகர்ம வித்தையாகும், நீடவேஜாலமென்றமாளிதன்னில் நேர்புடனே கோடிவரையாடலாகும், பாடவேபூதங்கள் தன்னினாலும்பாங்குடனே சங்கீதங்கூறலாகும், தேடவே எக்காளஜாலந்தன்னை தெளிவுடனே யாட்டிவைக்கும் பூதம்பாரே. ௬0௨

பூதங்கள்பலபேதவாத்தியங்களை வாசிக்கும்ஜாலம்.

பாரேதானஷ்டவிதமாளிதன்னில் பாங்குடனேவஷ்டவிதவாத்தியங்கள், நேரேதானொருமாளி சின்னமாகும் நேர்ப்புடனே ஒருமாளி திரிச்சங்காகும், வேரேதானொருமாளி பிரம்மதாளம் வேகமுடன்ஒருமாளி துத்தாரியாகும், சேரேதானொருமாளி தம்பூருமாகும் சிறப்பானவொருமாளி மத்தளமுமாமே. ௬0௩

ஆமேதானொருமாளி கைத்தளமுமாகும் வப்பனேயொருமாளி தம்பறையுமாகும், வாமேதானெட்டுவித மாளிதன்னில் வாகுடனே

பலபேதவாத்தியங்கள், நாமேதா னிருமித்தவண்ணமாகும் நலமுடனே மாளிதனில் சென்றுமேதான் பாமேதான், மந்திராட்சரத்தையோத பாடுமேபலவித வாத்தியங்கள்தானே. ௧௦௪

தானானவாத்தியங்கள்கேட்கும்போது தகமையுடன்மாந்தரெல்லாம்பிரமிப்பாகும், கோனானமாளிகனில்குடியிருப்புகொற்றவனேயாருந்தானில்லைகண்டீர், தேனானவமிர்தமதுபோலேபல்லோர தெளிவான வாத்தியங்கள்கூறலாகும், பானான பலபேத தொனிகள்தோற்றும் பாரினிலே மாந்தரெல்லாம் பிரமிப்பாரே. ௧௦௫

போகர்கோகர்ண ஜாலம்.

பாரேதான்யெழுநூற்றியிருபதுக்குள் பகருவேன்கோகர்ண ஜாலந்தன்னை, நேரேதான் நெடுஞ்சாலமாளிகைக்குள் நேர்மையுடன் கிடையொன்றுநாட்டியேதான், வாரேதான்நெடுங்கம்பி நாலுபக்கம் வாகுடனேதானிறுத்திவிட்டம்பூண்டு, சேரேதான் மேல்வட்டங்கயர்கள்மாட்டி சிறப்புடனேகீழ்வட்டம் மணிகள்மாட்டே. ௧௦௬

மாட்டவே நடுக்கம்பந்தன்னிலேதான்மகிழ்ப்புடனேமேற்சிகரம் நின்றுகொண்டு, ஒட்டமுடன்கயறுதனைப்பிடித்துக்கொண்டு ஓங்கார சபதமுடன் சுத்திவந்து நாட்டமுடன் தரணிதனை யன்னார்ந்துபார்த்து நயமுடனேகுளிகைதனைவாயிற்பூண்டு, தேட்டமுடன் துதிக்கையிலே சரணந்தன்னை தெளிவாகக்காணுதற்கு ஜாலங்கேளே. ௧௦௭

கேளேதான் வஞ்சனமாம் மையைத்தீட்டி கெவனமுடன்லாடமதில்வசியம்பூண்டு, பாளேதான்போகாமல் கருவுதன்னை பாங்குடனே தேகத்திற்பூசக்கேளு, நாளேதான் வானரூபங்கெஜரூபமாக்கி நானிலத்தின்மேலிருந்து குதிப்பாயானால், சூளேதான்சகஸ்திரமாம் யானைதோற்றம் சுந்தரனே பார்வைக்குவாதாயந்தானே. ௧௦௮

தானானசகஸ்திரமாம் யானைரூபம்தகமையுடன் மாந்தரெல்லாங்காணலாகும், பானானபராபரத்தை காணமாட்டார் பாரினிலே கோகர்ணவித்தைகாண்பார், தானானவித்தையது கோகர்ணவித்தை தேசத்தில்கிட்டாதுமாந்தருக்கு, வேனானசீனபதிதேசத்தார்கள் விருப்பமுடன்செய்கின்ற ஜாலமாமே. ௧௦௯

ஆமேதான் மச்சென்றமாளிதன்னில் அப்பனே கோகர்ணவித்தைசெய்வேன், தாமேதான் கயர்தனிலே மேலேநின்று தாக்கான ஊசியென்ற காந்தந்தன்னால், வாமேதான் வெச்சாணி தன்னிலப்பா



வேகமுடன் நின்றுகொண்டுகரந்தைவீச, சாமேதான் சகத்திரமாங் கரங்கள் தானும் சரஞ்சரமாய்வந்துவிழக் காணலாமே. ௧௧௦

காணலாம்வஞ்சனமாங்கருவினாலே காசினியில்வெகுகோடி வித்தைகாண்பீர், பூணலாம்மந்திரத்தின் வசியத்தாலும் போக்கான பிரணவத்தின் வாறலாலும், தோணவேதேவதையும் வசியத்தாலேதோற்றமுள்ள கருவியிடபேதத்தாலும், நாணவே சதாகாலம் மாளிசென்று நாட்டமுடன் ஜாலவித்தையாடலாமே. ௧௧௧

ஆடலாம்ஜெககோடி பதிகள்கோடி அப்பனேவெகுகாலமிருந்துகொண்டு, தேடலாம்சின்மயத்தின் கேசரமாம்வித்தை தெளிவுடனே ஆடுதற்குயின்னங்கேளு, கூடலாம் கேசரத்திலிருந்துகொண்டு கோடான கோடிவித்தையாடலாகும், நீடலாம் வானரத்தின் வித்தைகேளும் நெடிதான அங்குதனார்வித்தையாமே. ௧௧௨

வித்தையிலேயின்னமொருவித்தைகேளும் வீரனும் அங்குதனார்வனுமார்தானும், நித்தமுடன் வஞ்சனமாமையைத்தானும் நீடுறவேவுள்ளங்கைதன்னிற்றூக்கி, சுத்தமுடன் கேசரத்தி லிருந்துகொண்டு துப்புரவாய்வட்சரத்தை யோதும்போது, மத்திபத்தில் நடுமையமிருந்துகொண்டு மானிலத்தில் வஞ்சனத்தைப்போடுவாரே. ௧௧௩

போடையிலேஜாதிவர்ணஞ் சொல்லக்கேளும் பொலிவான நீலவிழித்தானுமாக, நீடயிலேபூனையென்றநேத்திரமாகும் நீடாழிவஞ்சனத்தைப்பார்க்கவென்றால், கூடயிலேகுபேரனென்றபட்டணந்தான் குவலயத்தின் நிதிகளெல்லாங்காணலாகும், தேடயிலே வனுமானும் முன்னேநிற்கும் தெளிவானதேவதையுங் காணலாமே. ௧௧௪

காணயிலேபிரணவத்தையோதும்போது கருவான மைதனிலே மகிமைகேளு, தோணவேவீரபத்ரன்முன்னேநிற்பான்தோற்றுகையிலனுமாருங் கொண்டுசெல்லும், பூணவே ஸ்ரீராமர்வைத்தபொன்னை பொங்கமுடன் பாதாளவஞ்சனத்தில், நாணவேயனுமாரும் மிகவே சொல்லும் நாட்டமுடன்நிதியெடுக்க ஜாலமாச்சே. ௧௧௫

போகர் அஞ்சனத்தில்ராமர்திரவியத்தையெடுத்தது.

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு அப்பனே யான்கண்டவரைக்குஞ்சொல்வேன், காச்சுடனெழுநூற்று சொர்ச்சம்வீட்டில் நடுவானமத்திமத்தில் சதுரம்போடு, வீச்சுடனே பதினைந்து வரைதான்போடு விவர்முடன் குறுக்குவரைபதினைந்தாகும், ஏச்சுடன் நெடுகுவரைபதினைந்தாகும் எழிலான நூத்தியம்பதரையுமாச்சே,

அறையானவிடுமுனேசூலம்போடு அப்பனே ரீங்காரங்கொண்டு மாறு,நிரையோமிஓங்காரமுள்ளடக்கிதிட்டமுடனெட்டியென்றபீடமீதில்,முறைபோடு மௌனமதா யிருந்துகொண்டு மூன்றெழுத்து மைக்தெழுத்தும்ஓதித்தீரு, சிறையானவைரவனும் முன்னேநிற்பான் சிறனுடன்பிரணவத்தை யோதுவீரே. ககஎ

ஓதுகையில் அஞ்செழுத்தையுள்ளடக்கி உத்தமனே யவ்வெழுத்தைமவ்வெழுத்தினூணி, தீதுரவேப்பகையாளிதன்னைநோக்கி திட்டமுடன்கற்பூரவொளிதான்கொண்டு, காதலுடன் வட்சரத்தை யுள்ளமர்த்திகருவாகச்செய்பவனேசித்தனாகும்,நோதலுடன்வஞ்சனத்தை கையில்நீட்டி நோக்கமுடன் செய்பவனேசித்தனுமே. ககஅ

ஆமேதான் பிரணவத்தையுச்சரித்து ஆண்டவனைத்தாங்கினைந்து வருளும்வோதி, தாமேதான் பாதாளவஞ்சனத்தை தாரணியிலெல்ல வருங்கண்டுமெச்ச, வேமேதான் சத்துருமித்துருவுதானும் வேகமுடன் சென்றுமல்லோ வுறவுபேசி, நாமேதான் ரீங்காரம் வுள்ளடக்கி நாட்டமுடனோங்காரம் உள்ளேபூட்டே. ககசு

பூட்டுகையில் பிரணவத்தையோதும்போது பொங்கமுடன்சத்துருமித்துருவுமாகும், நாட்டுகையில்சிமசிமசி யென்றேயோத நாசமடா வஞ்சனத்தின் தயிலத்தாலே, வாட்டுகையில்குறளிமுதல் பூதபேதம் வஞ்சனாதேவிமுதல் வசியமாகும், சூட்டுகையில்காலனவனை திரேநிற்கான் துரைராஜவஞ்சனத்தின் மையின்போக்கே. கஉ௦

போக்கான காலாங்கிநாதர்பாதம் பொங்கமுடன் யான்வணங்கி சினதேசம், நோக்கமுடன்காடுமலைவனந்திரங்கள் கொடிக்குள்ளேசென்றுமல்லோ வேதைபார்த்தேன், தாக்கவே சினபதிதேசத்தார்கள் சட்டமுடனென்தனையுங் குருவாயெண்ணி, வாக்குடனேகுருமொழியாஞ் சிஷனென்றுவசனித்தார் கோடியுகம் வசனித்தாரே. கஉக

வசனித்தார் சினபதி மாந்தரெல்லாம் வறைகோடி திசைகோடி வருக்கக்கோடி, நிதமுடனேயென்வாக்குமெய்யென்றெண்ணிபோழிபுலகமெலாம்வசனிப்பார்கள், தசமுடனே தாரணியிலஞ்சனத்தைத் தாக்குடனே வெகுமாந்தர்செய்துபார்த்து, பிசகில்லாப் பிரணவத்தை மெய்யென்றெண்ணி பேருலகில்மாந்தரெல்லாந்துதித்திட்டாரே

துதித்தாரேகாலாங்கிநாதர்தம்மை தோற்றமுடன்யென்னுளும் வாசிர்மித்து, மதிப்புடனே யவர்பாதம் தான்வணங்கி வகையுடனே



யெப்போதும்கருணைகூர்ந்து, கதிப்புடனே சமாதிதனிலிருந்துகொண்டு சதாகாலம்லாடமதில்மையேபூண்டு, விதிப்பயனைதானெண்ணி விண்ணின்மீதில் வெகுகாலம் தானிருந்தார் மாந்தர்தாமே. கஉ௩

வைத்தியசூட்சமுப்பு.

தாமானவின்னமொருமாற்கம்பாருதயவுடனேமானுக்கள்பிழைக்கவென்று, கோமானும் பங்குனி சித்திரையிலப்பா கொற்றவனே பூநீறுவிளையுங்காலம், மானான பூனீரைத்தானெடுத்து மாற்கமுடன் செப்புகிறேன்மைந்தாகேளு, பானான பூநீரைப்படிதானரண்டு பாகமுடன் வாரிவந்துசெப்பக்கேளே. கஉச

செப்பவென்றால்கற்சுண்ணம்படிதான்நான்கு தெளிவானவமுரியதுபடிதான்பத்து, ஒப்பமுடன்கல்லெண்ணைபடிதான்வைத்து வுத்தமனேயிரண்டையுந்தான்கலக்கிக்கொண்டு, செப்பமுடன்தெளிவிறுத்துப்பின்னுங்கேளு நேர்புடனேதான்காய்ச்சவுப்பேயாகும், அப்பறவேயுப்பதுவு மிகவேபூர்க்கும் அறையாசயுப்பதுவை பதமுறைகாச்சே. கஉரு

காச்சிடவே சாம்பலது செப்பக்கேளு கருவானசாம்பலதுஎருச்சாம்பலப்பா, நீச்சென்ற வெருச்சாம்பல் கொண்டுவந்து நிசமானகுழம்பதுவைத்தானெடுத்து, பாச்சியேசல்லாவை மேலேபோட்டுப் பாகமுடன்குழம்பதுவைமேலேயூத்து, எச்சலென்ற வுண்டைதனையெடுத்துக்கொண்டு யெழிலானரவிதனிலே காயப்போடே. கஉசு

காய்ந்தபின்பு பாண்டமதிலிட்டுமைந்தா கவனமுடன் வரைப்பாண்டம் போட்டுமேதான், தோய்ந்திட்டவே மல்லியென்ற யிலையைமைந்தா சுத்தமுடன் வதன்மேலே வைத்துக்கொண்டு, தோய்ந்திடவே மேற்சட்டிக்கொண்டுமூடித் தெளிவாக சீலையது வலுவாய்ச்செய்து, பாய்ந்திடவே தீயெரிப்பாய் நாலுசாமம்பதமுடனே தானெடுப்பாய் பின்னுங்கேளே. கஉஎ

பின்னுங்கேள் யேரியிலே வளர்ந்தபிண்டம் பேரான யிறச்சியுடன் வதிகங்கொண்டு, வின்னமுடன் துவாரமதுவிட்டுமைந்தா விவரமுடன்வீரமதுவொன்றேயாகும், கன்னலுடன்பச்சையென்ற பூரந்தானும் கருவானபூநீறும் சரியாய்ச்சேர்த்து, பன்னவே சிப்பிக்குத் துவாரமிட்டுப் பாலகனேயிம்மருந்தில் குன்றிபோடே. கஉஅ

குன்றியா மருந்ததுதான் போட்டபின்புகுமுறவேதளவாயாருசட்டிதன்னில், வென்றிடவேயடுக்கடுக்காய் பரப்பிமைந்தாமேல்மூடி

காற்றில்லாவொடுக்கந்தன்னில், பன்றிடவேவைத்தவுடன் சலமிறங் கும் பட்சமுடன்ஜெயநீரை யெடுத்துப்பால, தான்றிடவே மேற் சொன்ன பூநீற்சேர்த்து சாங்கமுடன்றானரைப்பாய் சாமம்நாலே ()

நாலானசாமமது வரைக்கும்போது நலமான வுரவண்டுகுழிய னைதானும், காலான சூதமுடன்பச்சைபூரங் கருவான வாறுபுள்ளி தண்டுஞ்சேர்த்து, பாலானசீனமுடன் சாரஞ்சேர்த்து பாகமுடன் தானரைப்பாய் லகுவதாக, வேலான பில்லைபது தட்டிமைந்தா வேக முடன் ரவிதனிலே காயப்போடே. கரு௦

போடேதான்பில்லையது காய்ந்தபின்பு பொங்கமுடன் போண் டஞ்சுத்திசெய்து, நீடேதான்வகல்தனிலே கீழ்பரப்பிநேர்மையுடன் பில்லைதனைமேலேவைத்து, தூடேதான்மேலுமந்தப்பொடியைப்போ ட்டு துப்புறவாய்மேல்மூடிசீலைசெய்து, காடேதான்ரவிதனிலேகாய் ந்தபின்பு கனமாகக்கோழியென்ற புடந்தான்போடே. கருக

புடமதுதான்தீயாறியெடுத்துப்பாரு பொங்கமுடன் சுண்ணம் பாமட்டிபோலாம், திடமுடனே பத்துமுறையிப்படியேபோடு திற மானசுண்ணமதுவாகும்பாரு, நடமானசுன்னமதுயெடுத்துக்கொண் டுதாளமையுடன்போண்டம் சிற்றண்டத்தோடு, கடமானசிப்பியொடு நண்டுதானும் கருவானநத்தையொடு சமனதாமே. கருஉ

நத்தையுடனிவையெல்லா மொன்றாய்க்கூட்டி நலம்பெறவேசிற் றண்டக்கருவாலாட்டி, முத்திபெற மூசையிட்டுஊதிப்பாரு வுத்தம னேசுண்ணம்பாயிருக்கும்பாரு, பத்தியுடன் வுலையில்வைத்து ஊதும் போது பாங்கானசுண்ணம்பாயிருக்கும்பாரு, வெத்தியுடன் சுண்ண மதையெடுத்துக்கொண்டு வேதாந்தத்தாயினது வருளைப்போற்றே.

போற்றியே சுண்ணம்பைத்தானெடுத்துப் புகழாகமூசையொ ன்றுபிடித்துமேதான், ஆற்றியேமுன்சொன்ன முப்புச்சுன்னம் அப் பனேதானெடுத்து மூசையிட்டு, தூற்றியேதேவதைக்குப் பூசைசெ ய்து துறைபோல முறைபோலசீலைசெய்து, மாற்றியே சுண்ணம்புச் சீலைசெய்து மயங்காமல்புடம்போட நீறிப்போமே. கருச

நீறியதோர்பற்பத்தையெடுத்துக்கொண்டு கிலைவாகயிப்படியே பத்துமுறைபோடு, கூறியதோர்பற்பமது குருபற்பமாச்சகுணமான காரமென்றகாலனாகும், மீறியதோர் சரக்கெல்லாங் கொல்லுங்காலன் மிக்கானபற்பமது குருவுமாகும், தேறியதோர் பற்பமதிலெக்தபாகம் தெளிவாகச்செய்தாலும் தாக்கிடவே. கருரு



தாக்கவென்றால்கிரதங்கள்லேகியங்கள் தலைமையுள்ளசெந்தூ ரம்பற்பம்யாவும், நோக்கமுடன்குளிகைகள்பாடம்யாவும் நூணுக்க முடன்மாத்திரைகள்கட்டுவகையாகும், சூட்சமுடன்தயிலங்களெண் ணைமுதல்யாவும் சுளுவானசூரணங்கள்ரசாயனங்கள்முதலாய், தூக்க முடன் கடுகளவுபட்டால்போதும் துரையானமருந்தெல்லாம் வீறு மாமே. கருசு

வீறானவவுஷதங்கள் முப்பூபட்டால்விட்டுபோகுமடாபிணி களேது, கூறானவவுஷதங்கள் காரமெத்த குடிலமுடன் நோயெல் லாஞ்சுண்ணும்பாரு, சீரானநேத்திரங்கள்சிவக்காகாட்டும் நெடிதான மேனியது சுறுப்புமாகும், தூரானநோயெல்லாங் கரடேபோகும் துப்புறவாய் முப்பூவின்மகிமைதானே. கருஎ

தானானமுப்பூவின்மகிமையாலே சட்டமுடன்சரக்கெல்லாங்கட் டும்பாரு, பானனசூதமது துள்ளியோடும் பாங்கானகெந்தியதுநீறி ப்போகும், தேனானலிங்கமது செந்தூரிக்கும் தேற்றமுடன் பூர மதைப்பொருமிக்கொல்லும், கோனானவீரமது பற்பமாகும் கொடி தான பாஷாணம் சாரும்பாரே. கருஅ

பாரேதான் நவதாதுமுப்பத்திரெண்டும் படுமுன்னேசரக்கெல் லாமடிந்துகொல்லும், நேரேதான் லவணவகை யிருபத்தைந்தும் நே ரானகற்பவகைமுன்னூற்றுச்சொச்சம், கூரேதான்சொன்னபடிசூட் சமுப்பு குன்றியிடைபட்டாக்கா லெல்லாமாளும், வீரேதான் சரக்கு க்கு நெடுங்காலனாகும் மிக்கானதுருசுக்கு குருவுமாமே. கருகூ

குருவான கண்டாதுகுருவுமானால் குவலயத்தில்கோடிவித்தை யாடலாகும், திரிவானவாயியவள்முன்னேநிற்பாள் திக்கெல்லாமெச் சுதற்குசித்தனாவாய், மருவானநாதாக்கள் ரிஷிகள்தாமும் மதிப்புட னேயுந்தனுக்கு வரமுமீவார், கருவானவுளவறிந்த சித்தனாவாய் கா சினியிலுன்னைப்போல் சித்தனுண்டோ. கசு௦

உண்டோதான் வையகத்தில்சித்தனுண்டோ ஓகோகோ யுந் தனையும்ரிஷிதானென்பார், திண்டானதேவமுனியுந்தனையென்பார்திற மையுள்ள நாதாக்கள்குருவேயென்பார், சண்டாளமானதொருகருமி மாண்பர் சட்டமுடன் பொய்காதனென்பார் கண்டீர், கண்டாலும் விடுவாரோ சித்துருபம் காசினியில்சபித்திடுவார்குண்மையாரே. கசுக

(சித்தர்கள் முப்பூவைக்கேட்குதல்.)

பார்க்கவென்றால்நாதாக்கள் சித்துருபம்பட்சமுடன் வுந்தனுட னருகில்வந்து, தீர்க்கமுடன்வருந்தியல்லோ முப்புகேட்பார் திகமுட்

னேகுருவெனக்குவேண்டுமென்றார், கார்க்கவென்றுமஞ்சாடிகுருகேட்டாலும் கர்த்தனே யுத்தனிடகடாட்சமென்று, மூர்க்கமது வாராமல் முன்னேநின்று முடிவணங்கியடிபணிந்து மொழிசொல்வீரே.()

மொழியான வார்த்தைக்கு முன்னேநின்று மோசமதுவாராமல் முடிவுசொல்லி; வழியான உரையோடு மார்க்கஞ்சொல்லி வகையுடனே யவர்தமக்குத்தொண்டுசெய்து, பழியான வார்த்தைக்கு யிடங்கொடாமல் பட்சமுடனவர்மீதில் கிருபைவைத்து, சழியானவாசிமுனை தன்னைநோக்கி சூட்சாதிசூட்சமதைக்கேட்டிடீரே. ௧௪௩

வேட்டளவினுன்மீதில் கிருபைவைத்து கேழ்விக்குத்தாரவிடையுஞ்சொல்லி, நாட்டமுடன் பரிபோகமிகவுஞ்செய்து நயமுடனேசாசமுறைதாமுறைத்து, தேட்டமுடன் மனதிறங்கச் செய்துகொண்டு தெளிவானகுருவதனையடைந்துகொள்ள, வாட்டமுடன்லகுவுடனே பின்னுங்கேட்பார் வகைமோசப்போகாதே மன்னுவேளே. ௧௪௪

சித்தர்கள்மகிழ லேகியம்.

கேட்கவேயவர்தமக்கு களிப்புகொள்ள கெவனமுடன்குளிகையென்றலேகியங்கேள், சூட்சமுடன் மானுர்கள் பிழைக்கவென்று தொல்லுலகிலடியேனுங்காணேநூர்ந்து, நீட்டமுடன் கோரக்கர்மூலிதன்னை நேர்மையுடன் தானெடுப்பாய் சேர்தான்ரெண்டு, வாட்கமலவட்டமென்றபாண்டந்தன்னில்வகையுடனேகாலாங்கிசொற்படிக்கே

சொல்லானசொல்லுக்கு குறைநேராமல் தோற்றமுடனுவின் பால்படிதான்கொண்டு, புல்லானசீலைதனைவேடுகட்டிபுகழானகெஞ்சாவைமேலேவைத்து, கல்லான பாண்டமதை மேலேமூடி கடியானவாலுகையாமேலேவைத்து, வெல்லவேதீயெரிப்பாய் சாமம்ரெண்டு விருப்பமுடன்சுண்டமட்டும் யெரித்திடாயே. ௧௪௬

எரிக்கவே யிப்படியே பத்துமுறைதானும் யெழிலானகெஞ்சாவைசுத்திசெய்து, வெரிக்கவசம்போவதற்கு யின்னுஞ்சுத்தி வேகமுடன்சொல்லுகிறேன்மைந்தாகேளு, பொரிக்கவசம் நிம்பழத்தின்சாற்றினாலே பொருந்தவேபத்துமுறை முன்போற்றீட்சை, சரியுமேசெய்யுகையில் செஞ்ஞாசுத்தி சட்டமுடன் காலாங்கி யுரைத்ததாமே.()

தாமானகெஞ்சாவை யெடுத்துக்கொண்டுசட்டமுடன்ரவிதனிலேகாயப்போடு, காமானகல்லுரலில் போட்டுமைந்தா கருவாகத்துளிடித்துப் பொடியாய்ச்செய்து, வேமானமானதொரு வபினிதன்னை வேகமது போவதற்குப்பின்னுங்கேளு, சாமானமாகவேதான் வெளநீர்தன்னால் சட்டமுடன்தீட்சையது பத்துசெய்யே. ௧௪௮



செய்யவேயபினுக்குதீட்சையப்பாசெப்புகிறேன்வருண்மைந்தாயின்னம்பாரு, துய்யவேபசும்பாலாம்பசுமோராகும்துப்பரவாய்சுத்தியதுநன்றாய்ச்செய்து, செய்யவேபத்துமுறைதீட்சைதானும் யோனவபினிக்குச்செய்யவேண்டும், உய்யவேதீட்சையதுயாராபின்பு உத்தமனே கடைசரக்கு செப்பக்கேளே ௧௪௯

கேளேதான்சுக்குடனேவால்மிளகுதானும் கெடியானகெசகெசாமாட்டிமொக்கு, வேளேதான்லவங்கமுடன்லவங்கப்பட்டைவேகமுடன் ஜாதிக்காய்சாதிப்பத்திரி, கோளேதான்நோமல் ஜஜிராவும்குணமானருமஸ்திபாஜிபந்து, பாளேதான்போகாமல்பேதாருவும்பாங்குபெறலவங்கமென்ற பட்டைதானே ௧௫௦

தானனபட்டையுடன் யிம்பூராவும்தாக்கானமாசிக்காய்தான்றிக்காயும், மானுனகடுக்காயும் மகரப்பூவும்மாசற்றயேலமுடன்நெல்லிக்காயும், கோனுனகுமட்டியின் விரையிநேடுகொடிகானலூமத்தின்விரையுந்தானும், பானுனகெஞ்சாவின் விரையுந்தானும்பளிங்கானகொடிவேலிமூலியாமே. ௧௫௧

ஆமேதான் மூலியொடு சூரைவித்து அப்பனே வேலியென்றபருத்திதானும், தாமேதான் வலம்புரியுமிடம்புரியுமாரும் தாக்கானவவழுக்கராவின்தோல் தானும், வேமேதான்தாதுமாதுளையின்வேறும் மிக்கான வாத்தலரிகருளிதானும், நாமேதான் சொன்னபடி யிருவேவிகூட்டி நயம்பெறவேசூரணமாய்ச்செய்து கொள்ளே. ௧௫௨

கொள்ளவே கற்கவகை யின்னஞ்சொல்வேன்கோளாறுநோமல்குருபதத்தால், விள்ளவேதக்கோலம் பரங்கிப்பட்டை விருப்பமுடன்வாலுளுவைதிப்பிலியுமாகும், மெள்ளவேயிருசீரங் காட்டுச்சீரம் மேலானவாய்விளங்கம்ஓமந்தானும், அள்ளவேராஜனையும்பூலாவாகும் அப்பனே பூமிசக்கரையுமாமே, ௧௫௩

சக்கரையுஞ்சிந்திலொடு சதாவேலிதானும் தாக்கானபெருவாகைசிறுவாகையாகும், ஒக்கவேதண்ணீரின்மிட்டானுதும் உற்பனமாம்தம்பலப்பூச்சிதானும், சிக்கவேபாதிரிமுல்லைதானும்சிராவாஞ்செங்கழுநீர்ப்பூண்டுமாகும், தக்கவே சிவகாந்தை விஷ்ணுகாந்தை சட்டமுடன் சாட்டணைக்கூடச்சேரே. ௧௫௪

சேரவேவசுவாசி மிளகுதானும் சிறப்பானவேரமுடன்ரேவல்சின்னி, தீறவேவிச்சியுடனலம்வித்துதிறமானபேயத்தி விரையுமாகும்

பாரமுடன் கடலாஞ்சியட்டைதானும்பாங்கானடுவண்ணைகண்பட்டை கூட்டி, வாரவேவிளாம்பழத்தின்வித்துக்கூட்டி, வகுப்பானகனுமிச்ச ன்வித்துவாமே. ௧௫௫

வித்தானகரிமிரட்டிவேறுங்கூட்டி விதமானகரும்பசலை செம்ப சலையாகும், முத்தானவெள்ளையென்ற குன்றிதானும்முலையானவராச னிடவித்துதானும், சித்தானகுறிஞ்சாவின் வித்துங்கூட்டி சிறப்புட னேயெட்டியென்ற வித்துமாகும், சுத்தானவித்தாதி சாக்கையெல் லாம் சூட்சமுடன் களஞ்சியது வெடுத்துக்கொள்ளே. ௧௫௬

எடுக்கவென்றால்சாக்கெல்லாமொன்றாய்க்கூட்டி எழிலானசூரண மாய்ச்செய்துக்கொண்டு, தொடுக்கவேமுன்சொன்ன சரக்கோடொ க்கதுறையோடும்முறையோடும்சேர்வைகண்டு, கொடுக்கவேசினியது பாவுசெய்த கொற்றவனே சூரணத்தைப்போட்டுமேதான், விடுக்க வேநெய்தேனும் விட்டுக்கூட்டி விருப்பமுடன் மெழுகுபதந்தன்னிற் கிண்டே. ௧௫௭

கிண்டையிலே மதுரமாம் திராட்சிதானும் இளையானகதலியிட தேனுமாகும், பண்புடனே கொடிமுந்திரிரசமுமாகும்பாங்கானகுங்கு மப்பூ கஸ்தூரிதானும், விண்டிடவேவாலுவைராமடுப்பிலேற்றி வீரா னஜலமதுவும் போகக்கிண்டி, கண்டுமேமெழுகுபதந்தனிலிறக்கிகண பதியை தானினைந்து கருத்தில்நில்லே. ௧௫௮

நிற்கையிலே கணபதியுங் கந்தன்றானுங்கிறுவாணி மயேஸ்வரியு மெதிரில் நிற்பாள், துர்க்கையெனும் பத்திர காளியம்மன் துரைமுக மாய்நின்றுகொண்டு காட்சியீவாள், பற்குணனும்சுனற்குதந்தகாட் சிபாலகனை யுந்தனுக்குமீவாள்பாரு, விற்பிடித்தமன்னரெல்லாக்கா ளிக்கல்லோ விண்ணுலகில் தாண்டுங்கி விடுபட்டாரே. ௧௫௯

பட்டாரோராஜர்முடி மன்னரெல்லாம் பத்திரகாளியம்மன்சாபத் தாலே, கெட்டலைந்துமாண்டதொருவேந்தரெல்லாம் கெடியானவெங் தனதுகுருவினாலே, விட்டகுறையிருந்ததொருநேர்மையாலேவேதாங் குகாலாங்கிநாதர்தம்மால், பட்டமுடிமன்னரெல்லாமீண்டுதாம்பாரினி லேநெடுங்காலம் வாழ்ந்திட்டாரே. ௧௬௦

வாழ்ந்திட்டகாலமது தன்னிலேதான்வாகுடனேமாந்தரெல்லா மொன்றாய்க்கூடி, தாழ்ந்திட்டரிஷிகோடிமுனிவருக்கு தகமையுடன் லேகியத்தைச்செய்யவென்று, ஆழ்ந்திடவேதம்கருத்தில்மனதினுன் னி அப்பனேசினபதி மார்க்கஞ்சென்று, சூழ்ந்திட்டபோகரைதானடி வணங்கிசூட்சமுடன்பாகமதை யறிந்தார்தாமே. ௧௬௧



அறிந்துமே காயகற்பலேகியத்தை அன்புடனே நாதாந்தரிஷிக ளுக்கு, செரிந்துமேபாகமுடன் செய்துமேதான் சிறப்புடனேயுன்ப தற்கு கற்பமீந்தார், முறிந்துமே யானந்தகற்பந்தன்னை முப்பொழுது முண்டுமல்லோ களித்துமேதான், வெறிந்துமே சினமதவு மொடிங் கியேதான் வெட்டவெளிதனிலிருந்து கும்பித்தாரே. ௧௬௨

கும்பித்துநிற்கையிலே சிவயோகிதானும்குவலயத்தில்மானிடர் மேலிச்சைகொண்டு, தம்பனங்கள்முதலான வசியமார்க்கம்ஜெகத்தி லேவஷ்டவித கருமம்யாவும், சும்பனமாம் கொக்கோகலீலையாவும் சூட்சாதிசூட்சமெல்லாஞ்சுளுவாய்ச்சொல்லி, சம்பகத்திலிருந்துகொ ண்டுசதாநிஷ்டையாவும் சட்டமுடன் தாமறிந்தார் புலமாந்தர்தாமே. ௧௬௩

தாமானசித்தர்களு முனிவர்தாமும் சதகோடி சூரியர்போல் பிர காசித்து, பூமானுங்கருவாளியானபேர்க்குபுகழுடனேயிப்பாதஞ்சொ ன்னாறல்லோ, காமானமாகவேதான்காயகற்பம்கருத்துடனேசெய்தார் கள் மனுக்கள்கோடி, நாமேதான் சொல்லிவிட்டோம் மறப்பையெ ல்லாம் நலமுடனே நாதாக்கள் செய்வார்பாரே. ௧௬௪

லேக்கியத் தத்துவம்.

பாரேதான் லேகியத்தின் பெருமைகேளு பாருலகிலறிந்தமட்டு ஞ் சொல்வேன்பாரு, நேரேதான் துதுளங்காய்ப்பிரமாணந்தான்நேர் மையுடன் வுண்டவர்க்கு முறமைசொல்வேன், சேரேதான் ஆவின் பால்கொள்ளவேண்டும் செம்மையுடனவர்தமக்குக் காட்சிமெத்த, கூ ரேதான் கெவுனமுடன் குளிகைகொண்டுகொற்றவனேலதிசயங்கள் சொல்வார்காணே. ௧௬௫

காணவே வானுலகில் போகுஞ்சித்தர்கண்ணுக்குற்றேற்றுவது மெய்போலாகும், பூணவேசூரியனுமெதிரேநிற்பான் பொங்கமுடன் சந்திரனும்துரேநிற்பான் வேணவேலாகிரிகளுண்டேயோது வெகு வானவினோதவகை சொல்லலாகும், தோணவேநேத்திரங்களிருந்து கொண்டு தொல்லுலகில் கண்டதெல்லாம் பின்த்துவாரே. ௧௬௬

பினத்துவார் ஆகாசமார்க்கந்தன்னை பெருமையுடன் அதிசயங்க ள் மிகவுஞ்சொல்வார், நினப்புடனேகண்ணுக்கு தோற்றம்யாவும் நி லையானவதிசயம்போல் கூறுவார்கள், புனப்புடனே பித்தமதுமேலே சொக்கி புகழானகபாலத்தை வாட்சிசெய்யும், தினப்புடனே சரீர மெங்கும தினவுண்டாகும் திரளானதேகமது சொக்கிப்போமே.

சொக்கவேகாயாதி பூரணத்தால்தொல்லுலகிலதிவகைமெத்த க்கூறும், திக்கவேமலைகுகைகள் வனாந்திரத்தில்சிறப்புடனேசித்தர்க

லைக் கண்டேனென்பார், ஒக்கவேயவர்களிடங்கூடிருந்து உத்தமனே காயகற்பங் கொண்டேனென்பார், தக்கவேகைலங்கிரிகண்டேனென் பார் சாயுச்சியபோதையிலே யிருந்தார்பாரே, கசுஅ

போதையிலே ஞானமுண்டு வருளுஞ்சொல்வார்பொங்கமுடன திசயங்கள் விநோதஞ்சொல்வார், தீதையிலே தற்பமது வுண்டபோ துதிரளான தத்துவங்கள் மிகவுஞ்சொல்வார், பாதையிலே யிருந்து கொண்டு கண்ணைமூடி பாரினிலேபரியாச வார்த்தைசொல்வார், வா தையிலேயன்னமது தேவையில்லை வைகுண்டபதிதனிலே கேட்பார் பாரே. கசுகூ

சேட்கையிலே லாகிரிகள்மிகவுமிஞ்சி கெடியானவடிதடிகள்மிக வுண்டாகி, மூட்கமுடன்கீழ்விழுந்து பிரண்டெழுந்துமுனையானகு ம்பகத்திலிருப்பேனென்று, தாட்கமலபீடமதில் வீற்றிருக்கும் தாயா னமயேஸ்வரியைக் காண்பேனென்றும், சூட்சமுடன் சுந்தரனார் தா னென்று சொல்லுவார் பலதுதியுஞ் சொல்லுவாரே. கஎ0

சொல்லுவார் பரிபூரணானந்தத்தை சூட்சமுடன் ஞானவெளி சோதியென்பார், வெல்லுவார் லாகிரியைக் கடந்தோ மென்பார் வே தாந்தவெட்டவெளி யறிந்தோமென்பார், புல்லுவார் பூவுலகைமறந் தோமென்பார், பூதலத்திலென்னைவிட குருவோவென்பார், அல்லல ற்று மாய்கைதனை மறந்தேனென்பார் அப்பனே குளிகையுட வேக ந்தானே. கஎக

போகர் சிறுகற்பம்.

தானானயின்னமொரு கருமானங்கேள் தகமையுடன்காயாதிகற் பந்தன்னை, பானானகாலாங்கி நாதர்பாதம் பாரினிலேதான் பணிந்து வடியேன்றானும், தேனானகற்பமது சிறுகற்பந்தான் தேசத்தில் மாந் தர்கள் பிழைக்கவென்று, மானானவபினியது சேர்தானப்பா மார்க்க முடன்கெஞ்சாவின் சேர்தானென்றே. கஎஉ

ஒன்றானயிரண்டையுந்தான் தேனையூட்டி வுத்தமனே கல்லூரலி லிடித்துத்தீரு, நன்றானபுகையிலையை மேலேசுத்தி பாங்குடனே பெ றுக்கிலையைவதன்மேல்சுத்தி, நன்றானபனைவெல்லங் கவசஞ்செய்து நலமாகபூமிதனில் புதைத்துப்போடு, வென்றிட்டவே மண்டலந்தான் சென்றபோது விருப்பமுடன்தானெடுத்து செப்பக்கேளே. கஎ௩

செப்பவென்றால் கவசமதை நீக்கிப்போடு தெளிவுடனேயபினி யதுகாரமாகி ஒப்பமுடன் கோரக்கர் மூலியாலே ஓகோகோமகிமை களுமிகவுண்டாகும், வெப்பமதுவபினிக்கு மிகவுண்டாகியீறுடனே பித்தமதுவதிகங்காட்டும், தப்பிதங்கள் நேராமல் வபினிக்கேதான் சாத்துகிறேன்சத்திவகை சொல்லக்கேளே. கஎச



சொல்லவென்றால்பன்னீரால் மைந்தாநீயும் சுத்தமுடன் தான ரைப்பாய் நாலுசாமம், வெல்லவே திராட்சியென்ற பழரசத்தால் மேன்மைபெற வெண்சாமமரைப்பாயப்பா, புல்லவேமலைத்தேனு மிரண்டுசாமம் புகழுடனே தானரைப்பாய் புதல்வாநீகேள், செல்ல வேமைபோல வரைத்துமேதான் சீர்பெறவே சிமிழ்தனிலே பதனம் பண்ணே. கஎரு

பண்ணவேகுளிகையது துூளங்காய் பாகமுடன்றானெடுத்து வருந்தும்போது, நண்ணவேகாயாதி கற்பமாகும் நலமானகண்ணி ரண்டுஞ் சொருவல்கொஞ்சம்,எண்ணவேமயக்கமது வதிகங்காணும் யெழிலானபுன்னகையுமிகுதியாகும், தண்ணமுடன்தேகமது காந்த லாகும் சதாகாலம் நிஷ்டையிலே யிருப்பார்தாமே. கஎசு

தாம்ரனசெபந்தனிலே யிருந்துகொண்டு சதாகாலநிஷ்டையிலே வழியுந்தேடி. சேமமுடனுந்தமக்கு மொழியுஞ்சொல்லி சிறப்புட னேயாசீர்மப்பேருரைத்து, வேமமுடன்சோடவுபசாரமோதி வேக முடன் பிரணவத்தை மனதிலெண்ணி, நாமமுடன் காலாங்கிதனை நினைந்து நவின்றிட்டேன் போகரிஷி நவிலத்தானே. கஎஎ

சாயகற்ப சூரணம்.

தானானயின்னமொரு கருமானங்கேள் சாற்றுகிறேன்மாணுக் கள் பிழைக்கவென்று, கோனானயெனதையர் காலாங்கிநாதர் குரு பதத்தைவடியேனுந் தாள்பணிந்து, வேனானகாயகற்ப சூரணத்தை விருப்பமுடன்யானுரைப்பேன் பின்னுங்கேளீர், மானானமகதேவ ரிஷிகள்தானும் மானிலத்தில்மறைத்துவைத்தார் பான்மையாமே.

பான்மையாம்கொங்கணரு மிந்தபாகம் பாரினிலேகளங்கமறச் சொல்லவில்லை, மேன்மையுடனகஸ்தியரும் புலஸ்தியருக்கப்பாமேதி னியில் விளக்கமறச் சொல்லவில்லை, வாண்மையுடன் புலிப்பாணிக் கிந்தபாகம் வசனித்தார் ஆயிரத்துவன்னூருக்குள், நோன்மையுட னெனைப்போலச் சொன்னாரில்லை நுட்பமதைமாந்தர்க்குச் சொன் னேனென்பாரே. கஎகூ

பாரேதான்சுக்குடனே வாய்விளங்கம் பாங்குடனேதிப்பிலியும் வசுவாசிதானும், நேரேதான்மிளகுடனே தான்றிக்காயும் நேரான கடுக்காயு நெல்லிக்காயும், கூரேதான்சித்திரமாம் மூலத்தோடுகொடி தானசிவதைவேர் சித்தாமூட்டி, வீரேதான்வாலுளுவை சோம்பு யேலம் விருப்பமுடன்செந்தோன்றி வேருமாமே. கஅ0

வேரானவெட்டிவேர்தத்திமூலம் வெளியானவாவாரை பஞ்ச மூலம், கூறானதாதுமாதுளையின்வேறுங் குணமானசேங்கொட்டை

சிவனார்வேம்பு, நாறுனசெங்காலிவேறிஞெடு நறுங்கந்தம்பிணறிபட்டைதானும், பாறுனபூதமாம் விருட்சத்தோடு பாங்கானகருங்குன்றிவேதுமாமே. கஅக

ஆமேதான்கருங்காலி பட்டைதானும்அப்பனேசெணுமஹறவேறிஞெடு தாமேதான்வெம்பாடம்பட்டைதானுங் தாக்கானகொழிஞ்சிவிட்டபட்டைமூலம், வேமேதான்விராலியிட மூலந்தானும் விரையானபேய்பிரட்டி பட்டைமூலம், நாமேதான்சொன்னபடி வகிற்கட்டைதானும் நலயானசந்தனமும் செஞ்சார்துமாமே. கஅஉ

சார்தானபூவந்திபட்டைதானும் சதுரானவெண்ணுவல்பட்டையோடு, காந்தமெனும்வேய்கையுட பட்டைதானும் கருவானவுதிரமாம் மூலத்தோடு, பாந்தலெனும் கொங்கலவன் மூலத்தோடு பனிங்கானவிராலியிட மூலந்தானும், வேந்தர்கைக்கோனுன்றி விருட்சமூலம் விரைவானபட்சையுட மூலந்தானே. கஅங

மூலமொடுகரும்பசளை செம்பசளைதானும் முஷ்டியுடன்கருவாகை பெருவாகைதானும், சிலமுடன்பற்படாம யிம்பூராவும் சிறியானின் நங்கையுடன்பெரியாநங்கை, காலமெனும்புளியாரை சிறியாரைதானும் தகமையுள்ளநிலவேம்பு கருவேம்புதானும்,பாலமெனும் பொடுதலையாஞ்சிந்திலோடு பசுமையாம்பொற் சிந்திறச்சிந்தியாமே.

சிந்திலொடுசெவ்வாழை கருவாழைதானும் சிறப்பானவுப்பதுவும்தானுமாகும், சாந்திமலர்நந்தியாவட்டமூலம் சார்புடனேகொன்றைவேர் புன்னைவேறும், தாந்திகழுஞ்செங்கழுநீர்ப் பூண்டுதானும் தகமையுள்ளவட்டாரி துத்திமூலம், எந்தலெனுமயிற்கொன்றையிருவாட்சிதானும் யென்மகனே வகைக்குறுரு பலமாய்த்தூக்கே. கஅரு

தூக்கையிலேதூக்கமது வதிகங்காணு தொல்லுலகில் மூலிவகைசமனதாக,எக்கமுடன்மூலவகை செட்டிப்பாக யெழிலானசூரணமாய் செர்துகொள்ள, கோக்கமுடன்ரவிதனிலே காயப்போடு றனுக்கமுடன்கல்லுரலில் மாவதாக்கி,பாக்கவேதான்சூரணத்தைச் சுத்திசெய்து பசும்பாலில்புட்டாவி செய்திடாயே, கஅசு

செய்யவென்றல்கைபாகஞ் செய்பாகங்கேள் செப்புகிறேன்தனவாயாஞ் சட்டிதன்னில், பையவேயாவின்பால் பாண்டமிட்டுபாகமுடன்சூரணத்தை சீலைமேலே, மொய்யவேபுட்டுபோல்பிசறிவைத்து மூசியாமல்மேல்சட்டி கொண்டுமூடி, வெய்யவேதானெறிப்பாய்கண்டமட்டும் யென்மகனே தானெறிப்பாய் புகலக்கேளே. கஅஎ



கேளேதான்ரவிதனிலே காயப்போடு கெணிதமுட னிப்பாகம்பத்துபோடு, கோளேதான்வாராமற்சூரணத்தை கொப்பெனவேதானெடுத்து செப்பக்கேளு, பாளேதான்நோமற் சினிசேர்த்துபதமுடனே மண்டலந்தான் கொண்டாயானால், நாளேதான்தேகமது கற்றாணும் நவினமுடன்போகரிஷி நவின்றவாரே. கஅஅ

வாரானகற்பமென்றசூரணத்தை வாகுடனேகொள்பவனுஞ் சித்தனுவார், நேறுனசீனபதிமாந்தருக்கு நேர்மையுடன் றுனுரைத்தகற்பமாகும், சீரானதற்பமது வுண்டபேர்க்கு தேசத்தில்வயதல்லோலக்கேயில்லை, காரானகடர்தமுனி சித்தனென்பார் காயாதிகற்பத்தின் பான்மைதானே. கஅகூ

தானானகற்பமது வுண்ணும்போது சதாகாலம் நிஷ்டையிலேயிருக்கலாகும், வேனானகற்பத்திற் குறிதிசொல்வேன் யெளியராங்கமாகவல்லோ திரியவேண்டாம், பானும்திசூரியனும் பார்க்கவொண்ணு பாலகனேயொடுக்கமதி விருக்கவேண்டும், தேனுணபுளிபுகையுந் தள்ளவேண்டும் தேசமதில்காயத்தை நிறுத்துவாயே. ககூ0

நிறுத்துகையிலஷ்டாங்க யோகம்வேண்டும் நிலையானசமாதிதனி லிருக்கவேண்டும், பொருத்தமே சிவயோகந் தன்னிற்சென்றுபோக்கானவாசியைத்தா னிருத்தவேண்டும், கனுந்துமேவாத்துமத்தின் நிலையைக்காண கலியுகத்தில்வெகுகால மிருந்தார்தாமும், மறுப்புடனேபிறவியதுகாணுமற்றுன் மானிலத்தில்மடிந்தவர்கள் கோடியாமே. ககூக

கோடியாஞ்சித்தர்களு முனிவர்தாமும்குவலயத்தேகற்பமுண்டுயிருந்தார்தாமும், பேடியாஞ்சிலமாந்த ரவரைப்பார்த்து பேரின்பநிலைதனையே யொழித்தாற்போலும், நாடியேயவர்களிடஞ் சென்றுமேதான் நயனமுடன்லகுவார்த்தை மிகவும்பேசி, வாடியேயவர்பதத்தில்கிட்டிநின்று வாகுடனேகற்பமதை முறைகேட்டாரே. ககூஉ

முறையுடனேகற்பமதை வாங்கிக்கொண்டு மூதலகில்வெகுபேர்கள் செய்யவெண்ணி,கறைகண்டவயித்தியன்போல்மனதிலெண்ணி காசினியில்மூறைகெட்டுத் தாருமாறுப், திசைமருவுதெரியாமல்தேர்த்தோன்போல திறமையுடனுபோகந் தெரியாமற்றுன், குறைமனதாய்சூரணத்தை செய்துமேதான் குவலயத்தில்கெட்டவர்கள் கோடியாமே. ககூங

கெட்டலைந்துபோனவர்கள் கோடாகோடி கெவனமுடன் செய்யாதார் கோடாகோடி, சுட்டலைந்துபோனவர்கள்கோடாகோடிகூட

முடன்வயிறுபத்தைக் காணுர்கோடி,பட்டலைந்துகெட்டவர்கள்பாடுப ட்டு பதமிழந்துபோனவர்கள் கோடாகோடி, திட்டமுடன்சாஸ்திர த்தைப்பாராமற்றுன் திடங்குலைந்து நலிந்துபோனுர்தாமே. ககூச

போனுரேமூதுலகில் பெரியோர்யாவும் பொலிவானசாஸ்திரத் தைப் பொய்யென்றெண்ணி, ஏனுேதான்மானிலத்தில்சுட்டுக்கெட்டு யேளிதங்களாகவல்லோ மாண்டுபோனுர், நானேதான்கண்டமட்டுஞ் சாஸ்திரத்தை நன்குடனேயாராய்ந்து பலநூல்கண்டு, பானுமதி சுடர்போலேதிரட்டியல்லோ பாடிவைத்தேன்சத்தகாண்டம் பண்பா ய்த்தானே. ககூரு

பண்பானசாஸ்திரத்தை பாடிவைத்தேன் பாரினிலேமாண்ப ரெல்லா மறந்துபோனுர், திண்பானசினபதி மார்க்கத்தோர்கள் திற முடனேகண்டறிந்து யெடுத்தாக்கொண்டார், நண்பானசாஸ்திரத்தை மெய்யென்றெண்ணி சுபமுடனேபலம்விளையுமென்றுகந்து கண்பான நூற்கோர்வையாவுங்கண்டு காசினியில்மாந்தருக்கு கருதினேமே.

செப்பிடுவித்தை.

கருதவேயின்னமொரு கருமானங்கேள்காசினியில்மானிடர்கள் பிழைக்கவென்று, அருதமுடன்ஜாலமென்ற வித்தைசொல்வேன் தொல்லுலகில்செப்பிடு வித்தைக்கண்டீர்,பருவமுடன்கன்னியென்ற பெண்ணைத்தானும் பாங்குடனேஜோடினைகள் மிகவேசெய்து, உருவ முடன்சைச்சிலையாங் கையிலீந்து உத்தமனேவாளுமொரு கையி லீயே. ககூஎ

ஈயவேலோகமென்றவாய்வினுலே யெழிலானபிரதமைகளொன் றுசெய்து, மெய்யுடனேரூபமதை தானமைத்து மேன்மையுடன்காந் தமென்ற சத்தைதானும், கைதனிலேதானுருக்கி சேர்வைகொண்டு கசடறவேயிரும்புக்குக் காரமேற்றி, பெய்யவேயிடைகண்டு யினமுங் கண்டு போனகருக்குருவுந் தானுங்காணே. ககூஅ

காணவென்றுல்பிரதமைக்கு வுயிரேயில்லை காசினியில்வாவென் றரூபமப்பா, தோணவேரூபமது வார்த்தையில்லை தோற்றமுடன் பார்வையது ஒளியேயில்லை, வேணவேகண்ணுக்கு விநோதவித்தை வேடிக்கைப்பார்த்தவர்க்குப் பகடியாகும், வணவேவடகாத்தில்பது மையேந்தி வுத்தமனேயிடகரத்தில் வாளையீயே. ககூகூ

வாளுடனேகேடகமுங்கையிலேந்தி வளமையுடனிடப்புறத்தில் வாளினுலே, தாளுடனேபூமிதனி லிருந்துகொண்டு தகமையுடன் கேடகத்தைப்பதுமைமீதில் மாளுவதுபோலாகவாளைவீசி வல்லுயி ரைவாங்குகின்ற வீரனைப்போல், கோளுகளுநோமல் குமரிதன்னுல் கொற்றவனே வாளுதனை சக்கரத்திலீயே. உ00



சக்கரமாம் வாளுதனைகேடகத்திலேந்தி சட்டமுடன் முன்பின் னுய்பிரட்டியேதான், மிக்கவுடல்கீழ்விழவே வாளும்மேலேமேலான வாளுமது பதுமைகீழே, தொக்கவுடல் பதுமையது மேலேயாகும் தொல்லுலகில் வாளுமதுகீழேயாகும், தக்கபடிசெப்பிடுமொஞ் சாலந் தன்னில் சட்டமுடன்பதுமையது தோரொண்ணுதே. உ0க

தோர்க்காது பதுமையதுவாளினுலே தொல்லுலகில் பதுமை யதுமேலேநோக்கும், பார்க்கவே லோகத்துமாந்தருக்கு பாங்கான செப்பிடு ஜெகஜாலந்தான், ஏர்க்கவே வதிசயத்தை மிகவேகாட்டும் யெழிலாக மிடிப்பார்மாந்தர்கண்டீர், மார்க்கமுடன்மாந்திரீக மென் பார்காணீர் யென்மகனே ஜாலமென்றவித்தைதானே. உ0உ

வித்தானவித்தையிது ஜாலவித்தை மேதினியில் ஜெகஜாலவித் தையப்பா, சித்தானசித்தர்முனி ரிஷிகள்தாமும் சிறப்புடனே பூவு லகிலாடும்வித்தை, சுத்தானகோட்டையிது யின்னஞ்சொல்வேன் கருபமென்றகாந்தமது கோட்டையப்பா, குத்தானகல்லுதான் நடு மையத்தில் கொற்றவனே சங்கிலிகளணியாய்மாட்டே. உ0௩

மாட்டையிலே நடுக்கம்பம்மீதிருந்து நடுவானகுத்துக்கால் மீதி ரங்கி, கோட்டையதுவாசலது காந்தக்கோட்டை கொப்பெனவேநடு வாசல்வந்துநின்று, நீட்டமுடன் கன்னிகையில்வாள்கொடுத்து நீள முடன் நெடுக்குவரை சுத்திவந்து, மூட்டமுடன் கேடகத்தை கோ ட்டைமீதில் முனைநடுனாம்மத்தியத்தில் முன்னேவையே. உ0ச

வைத்துமேதலைகீழாய் சுத்திவந்து வளமுடனேகுத்துக்கல்மீதி ருந்து, குத்துடனே பிரதமையைகேடகத்தால் குறிப்புடனே நேர் பார்த்துபாரின்மீது, எத்தலுடன் கேடகத்தைகையிலேந்தி யெழி லான பிரதமையைமேலேவைத்து, சுத்தியகோட்டைவழி தான்கட ந்து சூட்சமுடன் பிரதமையைகீழ்வையே. உ0ரு

கீழானபதிதனிலே பிரதமையும்நிற்க கீர்த்தியுடன் கேடகமுந் தமுவிவிளையாட, தாழானபூமிதனில்கேடகமுமின்னுசட்டமுடன்பிர தமையும் யெகிரிக்குத்த, சாழானகோட்டைக்குள் சண்டையதிலே கும் சாங்கமுடன்பத்மயுகம்சரிமுறிதலாக, நீழான செகஜாலவித்தை யிதுதானுர்நீணிலத்திலதிகமெனும் பதுமைவித்தைதானே. உ0சா

பதுமையாங்கோட்டைக்குள் காவலதிகாரிபாங்குடனேயெதிர் நின்றுபேசும் படைகன்னே, புதுமையுடன் பிரதமைதானெழுந்து

புகழ்ச்சியுடன் கேடகத்தின்கீழிருந்து, கதமையுடன் கேடகத்தை தலைமேல்கொண்டு களிவுடனேசதாகாலம் நடிக்கச்செய்யும், மதுரமுடன்யெசட்ணியால்பேசச்செய்யும் மகாகோடி விநோதங்களின்னங் கேளே. ௨௦௭

### பிரதமையைக்கன்னிப்பெண் பிரம்பாலடித்தது.

கேட்கையிலேகன்னிகையாள் பிரம்பெடுத்து கிருபையுடன்வசனிக்கும்போதுமங்கே, நீட்கமுடன்பிரதமையும்வாய்திறந்து நிட்சயமாய்முன்னின்றுபேசும்பாரு, வாட்கையுடன்கேடகத்தினுத்தங்கண்டுவளமையுடன் கைதொடுத்துவார்த்தைகூறும், வேட்கமுடன்குறளியின்றன்வசியத்தாலே வேடிக்கைவிநோதவித்தை பேசும்பாரே. ௨௦௮

பேசுகையில் மார்க்கரெல்லாம் பிரமைகொண்டு பேருலகில்செப்பிடுகைவித்தைபோல,வீசுதமிழ்க்கவிவாணர்முனிவர்தாமும்விண்ணுலகிலிம்முறைபோற் சொன்னதில்லை, காசுபணஞ் செலவழித்தோர்கோடியுண்டுகாசினியிலென்முறைபோற்செய்ததில்லை, மாசுமறையில்லாமல்போகர்தாமும் வசனித்தோம் மானிடர்கள்பிழைக்கவென்றே.

### மகாகாயகற்பசெந்தூரம்.

பிழைக்கவென்று லின்னமொரு கருமானங்கேள் போரானசினபதிமார்க்கருக்கு, தழைக்கவே காயாதிகற்பஞ் சொன்னேன் தாரணியில் திரேதாயினுகத்திலப்பா, முழக்கமுடன் காலாங்கி நாதர்தாமும் முனிவருக்கு தானுரைத்தகாயகற்பம், வழக்கமதுபிசகாமல் யானுமல்லோ வசனித்தேன்கலியுகமாய் முதலிற்றானே. ௨௧௦

தானானகலியுகத்திலடியேன்றானும் தகமையுடன் குளிகையது பூண்டுகொண்டு, கோனான யெனதையர்காலாங்கிதம்மை குருபதத்தையென்நாளுமனதிலுன்னி, தேனானசினபதி மார்க்கஞ்சென்று தெளிவுடனேயானுரைத்தேன் முறைமையோடு, வேனான வெளியரங்கமாகவல்லோ விருப்பமுடன்பாடிவைத்தேன் போகர்தாமே. ௨௧௧

தாமானசினபதி மார்க்கத்தோர்கள் தாரணியிலிவ்வேதையதிகமென்று, பூமானும்யோகிகளும்ரிஷிகள்தாமும் பொங்கமுடன் செய்வதற்குமனதிலுன்னி, காமானமாகவேதான் சத்துருவைக்கண்டு கவனமுடன் மித்துருவை யொன்றாய்ச்சேர்த்து, நாமேதான் சொன்னபடி சோதித்தல்லோ நலமுடனேசினக்கார்கண்டார்காணே. ௨௧௨



காணவென்றால் வெகுகோடிகாலந்தானும் கருவானநூலெல்லாமுளவுபார்த்து, தோணவே சரக்கெல்லாங்கண்டாராய்ந்து தோற்றமுடன்சோதித்தார்மித்துருதன்னால், நாணவேகுகைதோறும் சோதித்தல்லோ நலமுடனேசத்துருக்கள்மிகவாராய்ந்து,பூணவேயோராளவாய்ச்சத்தையெல்லாம் புகழுடனே தானெடுக்கும்விபரங்கேளே ()

### அயச்சத்து.

கேளேதான் அயத்தினுடசத்துசொல்வேன்கெவனமுடன் அயமதுதான்சேர்தாலொன்று, பாளேதான் போகாமலோகந்தன்னை பக்குவமாய்பொடியாகயெடுத்துக்கொண்டு, கோளேதான்நேராமல் நிம்பழத்தால்கொற்றவனேநாற்சாமமறைத்தபோது, வீளேதான்களிம்பற்று வெளுக்கும்பாரு விருப்பமுடனமுறியினால் கழுவிப்போடே.

போடேதான் அயப்பொடிக்கி திரட்டிமைந்தா பொங்கமுடன் சாரமதுகாரமாகும், நீடேதான்சினமதுகல்லுப்பாகும்கொடிதானசம்பழத்தின்சாற்றினாலே, கூடேதான் தானரைப்பாய் ரெண்டுசாமம் குமாரவேசலமதனாற்கழுவிப்போடு, பாடவே அயமதுவும் சுத்தியாச்சு பாலகனே சத்தெடுக்க வகையைத்தேடே. ௨௧௫

வகையானகாரமது பலம்பத்தாகும் வளமுடனே செவ்வல்லிப்பூச்சாற்றாலே, தொகையுடனேபத்துநாளரைத்தபோது துறையோடுவெண்காரமெழுகுமாகும், பகையான பெரிகாலன்பாலினாலே பாகமுடன் றானரைக்கவிபரங்கேளு, சிகையுடனேவரைப்பொடியு மொன்றேயாகும் சீரானகாரமது நேர்தான்சேரே. ௨௧௬

சேர்த்துமே பெரிகாலன் பாலினாலே சிறப்புடனே தானரைப்பாய்நாலுசாமம், பார்த்துமே வச்சிரமாங்குகையில்தானும் பாங்குடனேதானெடுத்துசீலைசெய்து, பூர்த்தியுடன் ரவிதனிலேகாயவைத்து புகழாகசரவுலையில்வைத்தூது, தீர்த்துமேவயமதுவு முருகியல்லோ திறமானசத்ததுவு மாகுந்தானே. ௨௧௭

தானானசத்துக்கு யின்னங்கேளு தகமையுடன் வெங்காரங்கூடச்சேர்த்து, பானானமுன்சொன்ன சத்தைதானும் பாகமுடன் தானரைப்பாய்பெரிகாலந்தான், தேனானதேனதுவுங் கூடச்சேர்த்து தெளிவாகமுன்போலவரைப்பாயப்பா, கோனானயெனதையர் காலாங்கிநாதர் குருசொன்னசொற்படியே செய்திடாயே. ௨௧௮

செய்யவேவச்சிரமாங் குகையில்வைத்துசெம்மையுடன் ஓட்டைவைத்துச்சீலைசெய்து, பையவேரவிதனிலேகாயவைத்து பான்மையுடன் சரவுலையில்வைத்தூது, துய்யநல்லவயமதுவுங் களங்குமாகும் துப்புரவாய் மூசைதனையுடைத்துப்பாரு, பொய்யல்லா வயமதுவும் மணிபோல்நிற்கும் பொலிவானசத்தென்ற மணியைவாங்கே. உககூ

வாங்கியே மணியெடுத்து யலையவேண்டாம் வளமுடனே மணிதனையேயுடைத்துப்பாரு, தூங்கியேதிரியாதேமாண்பாகேளு துய்யநல்லவயமதுவுஞ்சத்தேயாச்சு, ஓங்கியேமணிதனையேபதனம்பண்ணுவுத்தமனேயின்னமொருமார்க்கம்பாரு, ஏங்கியேநிற்காதேயின்னஞ்சொல்வேன் மெழுலானவப்ரேகசத்தைவாங்கே. உஉ௦

அப்ரேகசத்து.

சத்தானசத்ததுவு மின்னஞ்சொல்வேன் தாரணியில் காதாக்கள் முனிவர்தாமும்,சித்தானரிஷிதேவர்சொன்னதில்லை சீர்பெறவே தொகுப்புடனேவடியேன்றானும், மூத்தானநூலெல்லாம் கண்டாராய்ந்து மூதுலகில் கீர்த்தியுடன் சொன்னேன்யானும், புத்தானகிருஷ்ணதிரேகர்தன்னை புகலுகிறேன்மாணாக்கள் பிழைக்கவென்றே. ()

பிழைக்கவேநவநீதஞ் சேர்தான்ரெண்டு பிழைமோசம் வாராமலெடுத்துக்கொண்டு, தழைக்கவே முன்சொன்ன காரமப்பா சாங்கமுடன்நாலுக்குவொருபாகந்தான், கழைக்கவே குழிக்கல்லு தன்னிலிட்டுகருவானதேனதனிலாட்டிமைந்தா, உழைக்கவே வச்சிரமாங் குகையில்வைத்து உத்தமனேகுகையில்வைத்து சீலைசெய்யே. உஉஉ

சீலையென்றால்சீலையதுகாரச்சீலை சீரானசுண்ணம்புச்சீலையப்பா வேலையெனும்ரவிதனிலேகாயவைத்துவிருப்பமுடன் சரவுலையில்வைத்தூது, காலையதுசாமமதுதான்துவக்கி கருவுடனேசத்துதனையூதித்நீரு, மாலையிலேமூசைதனை யுடைத்துப்பாரு மன்னவனே சத்தென்ன வருணனுமே. உஉங

அருணனு மாதித்த னிதற்கொவ்வாது வப்பனேயப்ரேக சத்துமாச்சு, தருணமது தப்பாமல் பின்னுங்கேளு தகைமையுடன் சத்துதனையெடுத்துக்கொண்டு, கருணையுடன்முன்சொன்ன சத்துதானும் களிப்புடனேதானெடுத்துக்கல்வமிட்டு, வருணனுப்புகரியுப்பு பொட்டிலுப்பு வகையுடனேதான்போட்டு வரைத்திடாயே. உஉச



அரைக்கையிலே யாறுவகைசெயநீர்தன்னா லப்பனே தானரைப்பாய்காலுசாமம், திரைக்கையிலே மெழுகுபதந்தன்னிலாட்டி திறமையுடன் வச்சிரமாங் குகையில்வைத்து, குறைக்கையிலேசில்லிட்டுச்சீலைசெய்து கொற்றவனே ரவிதனிலே காயப்போடு, முறைப்படியே ரவிதனிலேகாயவைத்து முன்போலசரவுலையிலேத்திடாயே. ()

ஏத்தியேதீமூட்டிவுருக்கும்போது யெழிலான மூசையதுவமுகியேதான், நாத்தமுடன் நவநீதவாசம்வீசும் நலமானசரக்கதுவு முருகிப்போச்சு, காத்திரமாம் குகைதனையே யுடைத்துப்பாரு கருவானவப்ரேகசத்துமாச்சு, சூத்திரமாமிப்பாகங் கண்டறிந்து சுளுக்குடனே பாடிவைத்தேன் காண்டம்நான்கே. உஉசு

நாலானகாண்டமது யின்னங்கேளு நலமானசத்ததுவு முன்போலேதான், காலானகுழிக்கல்லிலிட்டுமைந்தாகருத்துடனேதேன்விட்டு யரைப்பாய்நீயும், பாலானவச்சிரமாங் குகையிலிட்டு பாலகனேசீலைய்து வலுவாய்ச்செய்து, மேலான ரவிதனிலே காயவைத்து மேன்மையுடன்தானெடுத்து செப்பக்கேளே. உஉஎ

செப்பவென்றால் சரவுலையில்வைத்தூது செம்மையுடன் நவநீதம்சத்துமாகும், ஒப்பில்லையுனக்கீடு ஒருவருண்டோ வுத்தமனேநீயுபொருசித்தனல்லோ, தப்பிதங்கள்வாராது சத்துதன்னால் தகைமையுடன்மூசைதனை யுடைத்துப்பாரு, மெப்புடனே சத்துமதுவெளியேவீசும் மேன்மையுடனிப்பாகம் பத்துமுறைநீரே. உஉஅ

நீரவென்றால்நவநீதசத்துமாகும் திறமையுடன் சத்துதனையெடுத்துக்கொண்டு, காரமுடன் பூனீருச்சரியாய்ச்சேர்த்து கருத்துடனே தேன்விட்டு யரைப்பாய்பின்னும், சாரமுடன்வச்சிரமாங் குகையில்வைத்துபாலகனேசில்லிட்டுசீலைசெய்து, சாமதுபோவதற்கு ரவியில்வைத்து யென்மகனேகாய்ந்தபின்பு யெடுத்துக்கொள்ளே. உஉகூ

கொள்ளவே சரவுலையில் வைத்தூது கொற்றவனே சத்ததுவையென்னசொல்வேன், மெல்லவேமூசைதனைவுடைத்துப்பாரு மேலான சத்ததுதா னென்னசொல்வேன், விள்ளவேசத்துதனை யெடுத்துக்கொண்டு விருப்பமுடன் பீங்கானிற் பதனம்பண்ணு எள்ளளவுங்குறையொன்று நோதப்பா யெழிலானசத்திதுடவேசந்தானே. ()

கெந்தகச்சத்து.

வேகமாமின்னமொருகருமானங்கேள் விருப்பமுடன்கெந்தியென்றசத்துசொல்வேன், பாகமாங் கெந்தியதுசேர்தானென்று பாங்கானபூனாகஞ்சேர்தானென்று சாகமுடன்பூனாகம் மண்ணைப்போக்கி

சட்டமுடன் யெரிகாலன்பாலாலாட்டு, மேகமென்றவர்ணம்போலிரு
க்கும்பாரு மேன்மையுடன் காரமதுகாலாய்க்கூட்டி. ௨௫௧

கூட்டியே தானரைப்பாய் நாலுசாமம் குமுறவேவச்சுரமாங் கு
கையில்வைத்து, மாட்டியேசில்லிட்டுச்சீலைசெய்துமயங்காமல்ரவிதனி
லே காயப்போடு, சூட்டியேவாலுகையாமேந்திரத்தில் சூட்சமுடன்
நடுமையம் மூசைவைத்து, நாட்டமுடன் சத்துக்குத் துருத்திநாலு
நயம்பெறவே யூதிடவே சத்துமாமே. ௨௫௨

சத்தான மூசைதனையுடைத்துப்பார்க்க சார்பான கெந்தியது
சத்துமாகி, வித்தானபூநாகச் சத்திறுலேவீறானகெந்தியது சத்துமா
ச்சு சுத்தான்கெந்தியதுசத்துமானால் சுந்தரனே வெகுகோடிவித்தை
யாடும் யுத்தான பூநாகந்தன்னிலப்பா பொன்னவனே கெந்தியது
சத்துமாச்சே. ௨௫௩

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு வப்பனேகாலாங்கிநாதர்
வாக்கு, போச்சென்று வுலகத்தில் பொய்யாதப்பா பொலிவாகசித்
தர்முனி ரிஷிகள்தாமும், நீச்சென்ற பூநாகம்மறந்தாரப்பா நீணிலத்
தில் காலாங்கிநாதனாராய்ந்து மாச்சலுட னிப்பாகஞ் சொன்னாரையா
மண்டலத்தில் கண்டவர்க ளில்லைதானே. ௨௫௪

தானானவேதமுனிரிஷிகள்தாமும் தாரணியிலனேகவிதஞ்சொ
ன்னாரையா, கோனானவெனதையர்காலாங்கிநாதர் குருசொன்னபடி
யளவாயானுஞ்சொன்னேன், பானானசத்துவகை சாத்திரத்தில் பா
டினார் பலபேதவன்னமாக தேனான யின்னூல்போலாருஞ்சொல்லார்
தெளிவாகப்பாடிவைத்தேன் காண்டம்நான்கே. ௨௫௫

காண்டமேழாயிரத்தில்நடுக்காண்டந்தான் காசினியில்மாண்பர்
கள்பிழைப்பதற்கு, தாண்டுகோல்போலவே யிந்நூல்தன்னை துறை
யோடுமுறையோடுஞ் சொன்னேன்யானும், வேண்டியதோர் கருமா
னமின்னூல்தன்னில்விருப்பமுடன்பாடிவைத்தேன் நான்காங்காண்
டம், ஆண்டகையாமெனதையர்காலாங்கிநாதர்அருளிருந்தால் பொ
ருள்வாய்க்கு மன்பாய்த்தானே. ௨௫௬

அன்பானகெந்தியது சத்துதன்னை யப்பனே யாமுரைப்போ
மின்னுங்கேளு, தென்பான பிரிதிவியின்விளைவுமார்க்கம் தேசமுடன்
செம்மண்ணும் பூநாகந்தான், முன்பாக முன்சொன்ன முறைபசற்
றேனும் முக்கியமாய் கெந்திபிடசத்தைத்தானும், சன்பாக பூநாகஞ்
சரியாச்சேர்த்து சட்டமுடன்தானரைப்பாய் சாமம்நாலே. ௨௫௭



காலானபெரிகாலன்பாலினாலே நயமுடனே தானரைக்கும்போ
துமங்கே, பாலானபாலதுவுங்கூடச்சேர்த்து பாகமுடன்சத்துதனை
வுறவதாக்கி, சேலானசெம்பினுட சத்துதன்னால் செம்பையென்ற
பூநாகங்கெந்திசத்து, மாலானகந்தியது சத்துமார்க்கம் வையகத்தி
லாரெடுப்பார் வதிதந்தானே. ௨௫௮

அதிகமாய்கெந்தியதுசத்துதன்னை வப்பனேவச்சிரமாங் குகை
யில்வைத்து, கதிதமுள்ளமூசைதனி லடைத்துமைந்தாகவனமுடன்
சில்லிட்டுச்சீலைசெய்து, பதிதமுள்ளரவிதனிலேகாயவைத்துபளிங்கு
பெறசாவலையில் நடுமையத்தில், துதிதமுடன்கரிபோட்டு வூதும்
போது துடிபானதுரித்தியது நாலுமாட்டே. ௨௫௯

மாட்டடாநாற்சாமமுருக்கித்தீரு மன்னவனே சத்தாரியெடுத்
துப்பாரு, நீட்டடாமூசைதனை யுடைத்துப்பாரு கிலையானகெந்தி
யதுசத்துமாச்சு, கூட்டடாயிப்படியே பத்துமுறைதீரு குணமான
பாகமிது சத்துபாகம், நீட்டடாகெந்தியுடசத்துதன்னை திறமுடன்
பிங்காளிற் பதனம்பண்ணே. ௨௬௦

நாகச்சத்து.

பண்ணவென்று மின்னமொருபாகம்பாருபாரினிலோர்தாக்கள்
செய்ததில்லை, கண்ணமுடன்மானிடர்கள் பிழைக்கவென்றுநயமுட
னேகாலாங்கிநாதர்பாதம், எண்ணமுடன்யான்வணங்கி பணிந்து
போற்றி யென்மகனேயுங்களுக்காய்ச் சொன்னேன்பாரு வண்ண
முள்ளநாகமது சேர்தானென்று வளமையுடன் தானெடுத்து செப்
பக்கேளே. ௨௬௧

செப்பவென்றால்நாகமது சேர்தானென்று சிறப்பானசூதமது
சேர்தானென்று, ஒப்பமுடன்காரமது சேர்தான்பாதி ஓகோகோ
பூனீர்தான் சேர்தான்பாதி, செப்பமுடன்குழிக்கல்லி லொன்றாய்ப்
போட்டு நேர்மையுடன்வாலுவகை செயநீர்தன்னால், தப்பிதங்கள்
வாராம லரைப்பாய்மைந்தா தகமையுடன்றானரைப்பாய் சாமம்
நாலே. ௨௬௨

ராலானசாமமதுவரைக்கும்போது நாயகனே நாகமதுவிடங்கி,
மாலானமயினமது போலேயாகும் மகத்தானதாளகமும் கூடச்சேர்
த்து, சூலானநாகமதுகற்பத்துள்ளே சூதமென்றராசாவும் கூடச்
சேர்த்து, காலானகதிர்மேகந் தன்னைப்போல கண்ணுக்குத்தோன்
றிடுமே மயினமாமே. ௨௬௩

ஆமேதான்மயினமதைதானெடுத்து வப்பனேவச்சிரமாங் கு
கையில்வைத்து, தாமேதான்சில்லிட்டுச் சீலைசெய்து தகமையுடன்

ரவிதனிலேகாயவைத்து, போமேதான்சரவுலேயில் வைத்தூதுபொ
ங்கமுடன் துருத்தியது ரெண்டேயாகும், நாமேதான்சொன்னபடி
நாகச்சத்து ராசாக்கள்கண்டதில்லை நளினந்தானே. ௨௪௪

நளினமாஞ்சத்துதனையெடுத்துப்பாரு நலமானநாகத்தின் சத்
தேயாகும், பளினமுடன்சத்துதனை முன்போல்மைந்தா பாலகனே
பின்னுமதைக்கல்வமிட்டு, துளிதமுடன் தாளகமுஞ் சூதம்சேர்த்து
துகளறவேபூநீறுக் கூடச்சேர்த்து, மளினமுடன்வாறுவகை செய
நீர்தன்னால் மார்க்கமுடன்றானரைப்பாய் மன்றுகேளே. ௨௪௫

மன்றுநீமயங்காதே யின்னுங்கேளு மதிப்புடனே தானரைப்
பாய் நாலுசாமம், தென்றுநீதிறமுடனே மெழுகதாக்கித தீரமுடன்
வச்சிரமாங் குகையில்வைத்து, பொன்றுநீசீலையது வலுவாய்ச்செய்
து பொங்கமுடன் ரவிதனிலேநாயவைத்து, என்றுநீசொன்னபடி
முன்போலப்பா யெழிலுடனேசரவுலேயி லேத்திடாயே. ௨௪௬

ஏத்தியேநடுமையம்தானிறுத்தி யெழிலுடனேசரவுலையை யூதும்
போது, சாத்திரத்திலுள்ளபடிதப்பாகாது தகைமையுடன் சத்தது
வும்வீயமாகும், கூத்தனுமேதானடுக்கும் வேலைதமாற்கம் குவலயத்
திலவொருவரால் கூறப்போமோ, சேத்தியுடன்சத்ததுவை யெடுத்
துப்பாரு யென்னசொல்வேன்மக்காள யின்னுங்கேளே. ௨௪௭

கேளேதான்நாகமது சத்துவாங்கி கெவனமுடன் முன்போல
வறைப்பாய்நீயும், கோளேதான்வாராமல்குற்றம்நீங்கி கொற்றவனே
நாகமதுசத்துவாங்கி, பானேதான்போகாமல் பின்னுங்கேளு பாக
முடன்முன்சொன்ன சரக்கையெல்லாம், தூளேதான்பொடிபண்ணி
கல்வமிட்டு துப்புறவாய்செயநீரி லரைத்திடாயே. ௨௪௮

அறைத்துமேயாறுவகை செயநீர்தன்னால் அப்பனேமயினம
போல்மெழுகதாக்கி, குறைத்துமேவச்சிரமாங் குகையில்வைத்து
கொற்றவனேசில்லிட்டுச் சீலைசெய்து, திறைத்துமோரவிதனிலேகாய
வைத்து திறமுடன் வாலுகையாமேந்திரத்தில், முறைத்திடவேநடு
மையந்தானிருத்தி முசியாமல்கரியதனைக் கொட்டிடாயே. ௨௪௯

கொட்டியேசத்துதனையூதும்போது குறிப்புடனே துருத்தியது
ரெண்டதாகும், திட்டமுடன்காற்சாம மூதித்தீரு திறமானகுகை
தனையே யுடைத்துப்பாரு, வட்டமென்றபில்லையதாம் வுருகிநிற்கும்
வளமான சத்ததுவுஞ் சொல்லப்போமோ, கட்டமில்லை நாகத்தின்
சத்துதானும் நலமானதாரத்தி னீயமாமே. ௨௫௦



ஆமேதான்நாகமதுவீயமானால் அப்பனேகோடானகோடிவித்
தை,நாமேதான்சொன்னபடியிந்தமார்க்கம் நலமுடனேபத்துமுறை
செய்யவேண்டும், தாமேதான்சத்தெடுத்துப்பதனம்பண்ணு சாங்க
முடன்பின்னமொருநுருமானங்கேள், வேமேதான்வங்கத்தின்சத்து
சொல்வோம்விபரமுடன்மாணாக்கள்பிழைக்கவென்றே. ௨௫௧

## வங்கச்சத்து.

பிழைக்கவேவங்கமதுசேர்தானொன்று பேரானசிங்கியதுசேர்
தானொன்று, வழக்கமுடன்மனோசிலையுஞ்சேர்தான்பாதி வாகுடனே
தானுருக்கிகல்வமிட்டு, பழக்கமுடன்தேனதுவைவிட்டுவாட்டி பளி
ங்குடனேவச்சிரமாங்குகையிலேந்தி, தழைத்திடவே சில்லிட்டுசீலை
செய்து தகமையுடன்ரவிதனிலேகாயவைவே. ௨௫௨

காய்ந்தபின்புவச்சிரமாங்குகையைத்தானும் கனமுடனேசரவு
லையில்வைத்தூது, தீய்ந்திடவேகுகையதுவுகமூகியேதான் திறமான
வங்கமதுவுருகிநிற்கும், பாய்ந்திடவேவங்கமதாகளங்குமாகும் பாரினி
லேசித்தர்செய்யும்வேதையாச்சு, தோய்ந்திடவேவேதைமுகம்பாரு
ங்காணுர் தொல்லுலகில்கருவாளிநாண்பான்பாரே. ௨௫௩

பார்க்கவேவங்கமதை யெடுத்துக்கொண்டு பரிவாககல்வமதில்
பொடியாய்ச்செய்து, ஈர்க்கமுடன்முப்பூவுங்காலதாக திறமுடனே
தேன்விட்டுயரைத்தாயானால், மார்க்கமுடன்மெழுகதுவும்வெண்ணே
போலாம் மயங்காமல்வச்சிறமாங்குகையில்வைத்து, ஏர்க்கவேமேல்
மூடிசீலைசெய்து, யெழிலாகரவிதனிலேகாயவையே. ௨௫௪

காயவேமூசைதனையெடுத்துக்கொண்டு கவனமுடன்சண்ணாம்
புச்சீலைபின்னும், தோயவேயேழுசீலைபின்னுஞ்செய்து தோராமல்ர
விதனிலேகாயவைத்து, நேயமுடன்சரவுலையில்வைத்தூது நேர்மை
யுடன்சத்ததுவும்மணியாய்போகும், உபாயமுடன்மூசைதனையுடை
த்துப்பாரு வுத்தமனேவெள்ளியென்றமணிபோலாமே. ௨௫௫

ஆமென்றமணியெடுத்துசொல்லக்கேளு வப்பனேசூதமதுநே
ரேயாகும், காமென்றபடாஷாணம்நேரேயாகும் கருவாகயிரண்டையுந்
தான்வரைத்துமல்லோ. நாமென்றவங்கத்துக்கங்கிபூட்டி நாயகனே
சுண்ணாம்புச்சீலைசெய்து, தாமென்றரவிதனிலேகாயவைத்து சட்ட
முடன்குழல்தனிலேவுருக்கிடாயே. ௨௫௬

உருக்கியேமூசைதனையுடைத்துப்பாரு வுத்தமனேகளங்கமது வென்னசொல்வேன், நருக்கியேபின்னுமதைமூசையிட்டு நயமுடனே வுருக்கிப்பார்களங்குமாகும், பெருக்கியேகளங்கெடுத்துப் பின்னுங் கேளு போனமூசைதனையுருக்கிப்பாரு, செருக்கமுடன்களங்கதுவு மென்னசொல்வேன் சிறப்பானபோகநாயகந்தானே. ௨௫௭

## தாம்பரச் சத்து.

பாகமாமின்னமொருகருமானங்கேள் பாலகனேமாணுக்கள்பி ழைக்கவென்று, யூகமாம்தாம்பரத்தின்சத்துசொல்வேன் யூப்பன மாம்தின்சுத்திபின்னுங்கேளு, நாகமென்றசில்விஷத்தைநீக்குதற்கு நலமாகப்பூநீரில்சுத்திசெய்து, சாகமுடன்தாம்பரத்தைசுத்திசெய்ய சார்பானமுறையோடுகதைசொல்வேனே. ௨௫௮

சொல்லவென்றால்தாம்பரமாங்கொடியகாலன் தொல்லுலகிலூா லதுபோவதற்கு, வெல்லுகின்றபூநீருசேர்காரனென்று விநோதமுள்ள செம்பதுவுஞ்சேர்காரன்ரெண்டு, கொல்லுகின்றவீரமதுசேர்தான்கா லாம் குணமானசீனமதுசேர்தான்காலாம், புல்லுகின்றகருங்குன்றி சேர்தான்காலாம் புகழானசிற்றண்டஞ்சேர்தான்காலே, ௨௫௯

காலானசாக்கெல்லா மொன்றுப்கூட்டி காட்சிபெறகல்வமதி லிட்டுமைந்தா, பாலானசெயநீராம்சாரநீராம் பக்குவமாய்தானரைப் பாய்சாக்கையெல்லாம் மேலானசெயநீராம்சாமம்நாலு மேன்மையுட ன்தானரைப்பாய்மைந்தாகேளு, கோலானமாத்திரைப்போல்செய்து கொண்டு கொற்றவனேயிம்பழத்தின்சாற்றாலாட்டே. ௨௬௦

ஆட்டவென்றால்விதிசொல்வேன்மதிபாய்க்கேளு வப்பனேசுத்தி த்ததாம்பரத்தை,நீட்டமுடன்மருந்தையெல்லாம்தாம்பரத்தில்நீயு டன்கீழ்மேலும்பூசிப்போடு, வாட்டமுடன்ரவிதனிலேகாய்ந்தபின்பு வகையுடனேவோட்டிலிட்டுசீலைசெய்து, தேட்டமுடன்கோழியெ ன்றபுடத்தைப்போடு தெளிவாகபுடமாறியெடுத்துப்பாரே. ௨௬௧

பார்க்கையிலேசெம்பதுவும்பொருமிக்காட்டும் பதமதுதான்ச ரியாச்சுதாம்பரங்கள், தீர்க்கமுடன்பனைதணிலேயடித்தபோது திற முடனேசெம்புக்குவதர்தான்போகும், மூர்க்கமென்றவூரலதையற்றுப் போச்சுமுழுமக்கன்தாமறிபுார்செம்புவூரல், சேர்க்கையிலேயிந்தமு றைபத்துபாகம் செய்வையுடன்புடம்போட்டுயெடுத்துப்பாரே. ()

எடுத்துமிகப்பார்க்கையிலேயென்னசொல்வேன் வெளிதமாஞ் செம்பதுவும் யேத்தமெத்த, அடுத்துகின்றபேர்களுக்கு மிந்தபாகம்



அறியாமற்செய்பவனேபுத்திபுள்ளான்தொடுத்தகுறிதன்முறைபோ ல்செய்யுமாசான்தோற்றுமல்கண்ணுக்குச்செய்வான்பாரு, கெடுத்து மேமுறைபோலச் செய்துகாட்டி கெவனமுடன் வுட்கருவைக் காட் டான தானே. ௨௬௩

தானுனதாம்பரத்தை யெடுத்துக்கொண்டு தண்மையுடன்குரு சொன்ன நேர்ப்பாகந்தான், கோனுனயெனதையர் காலாங்கிநாதர் குருசொன்னவாக்கதுபோல் தாம்பரத்தை, மானுனதாம்பரத்தைச் சேர்ந்தான்கொண்டுமாட்டடாவச்சிரமாங் குகையிற்றனும்,வேனுன செம்புகின்றுருகும்போது விருப்பமுடனதிற்போட சாக்குதேனே.

சாக்கென்றால் வீரமது வெள்ளையாகும் தாக்காணபாஷாணம் கெவுரியாகும், திரக்கமுடன்காரமது பூரமாகும் திகழான ரூதமது சரிநேராகும், உரக்கமுடன் சாக்கெல்லாஞ்சரியாய்த்தூக்கி வுத்தம னேகல்வமதில் பொடியாய்ச்செய்து, இரக்கமுடன் தாம்பரத்துக்கி வைசேர்பாதியெழிலுடனேகிராசமது நினைவாய்ப்போடே. ௨௬௫

போடவே செம்புருக்கிக்கிரசமீவாய் பொங்கமுடன்லகுவதா ய்தாக்கிக்கொண்டு, நீடவேசெம்புதனை யாறிப்பின்புநினைவாகமூசை தனையுடைத்துப்பாரு, கூடவேசெம்பதுவுங் களங்கமாகும் குணமா னவூரலதுயற்றுப்போச்சு, வாடவேதிரியாதேமைந்தாகேளு வருப்பு டனேயிப்பாகஞ் செய்துபாரே. ௨௬௬

பார்க்கையிலேசெம்பதுவுங்களங்கமாகி பரிசுத்தகளங்கமதுயெ ன்னசொல்வேன்,தீர்க்கமுடன்களங்கதனையெடுத்துக்கொண்டுநேரமு டன்கல்வமதிலிட்டுமைந்தா, ஏர்க்கவேபொடிசெய்து மைபோலாக்கி யெழிலானதேனதனில்வரைந்துமேதான், நேர்கமுடன் மூசைதனில டைத்துமைந்தா சிறப்புடனே சீலைசெய்துரவியில்தாக்கே. ()

தாக்கவேமூசையதுகாய்ந்தபின்புதகமையுடன் சாவலையில்வை த்தூதி,நோக்கமுடன்செம்பதுவும்வூறலற்றுகொடிக்குள்ளேகளங் கமென்றபேருமாச்சு, தூக்கவேசெம்பென்றகளங்குதானும்துரையா னவேதைமுகம் தன்னிற்சேரும், வாக்கதுதானதப்பாது போகர் தாமும்வாமுடனே பாடிவைத்த வண்மையாமே. ௨௬௮

## காயகற்ப செந்தூரசத்துவகை.

வண்மையாம் சத்தெல்லாஞ்சமனதாக வளமுடனேதானுருக்கி யெடுத்துக்கொண்டு, தண்மையுடன் தங்கமதுநாலுக்கொன்று தாக்க வேகளங்குடனேதங்கஞ்சேர்த்து, திண்மையாம் களங்கதுவும் ஒளியு

விசும்தீர்க்கமுடன் களங்குக்கு யெட்டிலொன்று, உண்மையாம்கெந்திபதுகூட்டியேதான் உத்தமனே தானரைப்பாய சாமம்நாலே. ()

பொற்றலை கையாந்தகரை.

நாலானசாமமது வரைக்கும்போது நலமானருதமதையெட்டிலொன்று, வேலானபொற்றலையின் சாற்றாலாட்டி விருப்பமுடன்பில்லையதுலேசாய்தட்டி,மாலான ரவிதனிலேகாயப்போடுமொர்க்கமுடன் வோட்டிலிட்டுச்சீலைசெய்து, தாலான கெஜபுடத்தில் போட்டாயானால்தளிர்ச்சியுடன் வெந்ததுவும் கறுப்புமாமே. உஎ0

கறுப்பானசெந்தூரந்தனையெடுத்து கருவாகரையாளின்சாற்றினாலே, உறுப்பாகதானரைப்பாய்நாலுசாமம் வுத்தமனேமுன்போலபில்லைதட்டி, தெறுப்பானபில்லையதுகாய்ந்தபின்புதேற்றமுடன்வோட்டிவிட்டுச்சீலைசெய்து, குறுப்பானகெஜபுடத்தில்போட்டாயானால் கொற்றவனே செந்தூரமாகுந்தானே. உஎக

தானானசெந்தூரஞ்சிவப்பதற்கு தன்மையுள்ளபுடமதுவுமைம்பதாகும், கோனானவெனதையர் காலாங்கிநாதர் குருசொன்னபுடியாகபுடமேபோடு, மானானபுடமதுமன்பதானால் மகத்தானசெந்தூரஞ்சிவப்புமெத்த, தேனானசெந்தூரந்தனையெடுத்து செப்புகிறேன் பின்னுமொருபாகங்கேளே. உஎஉ

பொடுதலைமூலி.

பாகம்போம்யென்னாதே கெந்திதாரம் பகருமந்தசெந்தூரம் நாலுக்கொன்று, வேகமுடன் சாரந்தனையொன்றாய்ச்சேர்த்துவிருப்பமுடன்ருதமதுயெட்டிலொன்று, சாகமுடன்சாக்கெல்லாமொன்றாய்ச்சேர்த்துசட்டமுடன்தானரைப்பாய்நாலுசாமம்,நேசமுடன்பொடுதலையின்சாற்றினாலே நேர்ப்பாகதானரைத்துபில்லைதட்டே ()

தட்டியேரவிதனிலேகாயவைத்துதகமையுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, சட்டமுடன் கெஜபுடமாய்போட்டாயானால் சார்பானசெந்தூரஞ்சிவப்புகாணும், நட்டமில்லாபுடமதுவு மைம்பதாகும் நயமுடனேபாகமதுதவறிடாமல், இட்டமுடன் புடம்போட்டச்செந்தூரிக்கும் யெழிலானசெந்தூரஞ் சொல்லொணாதே. உஎச

சொல்லவென்றால் நாவில்லைப்பாவுமில்லை சுந்தரனேசித்தர்செய்யும்வேதையாச்சு,வெல்லவேசெந்தூரமார்க்கந்தனைவிருப்பமுடன்காரமதுகொள்வதற்கு புல்லவேபின்னுமொருபாகங்கேளு புகழானசெ



ந்தூரஞ்சிவப்புகாண, கொல்லவேவிலாரியின் தயிலத்தாலேகொற்றவனே தானரைப்பாய் சாமமெட்டே. உஎரு

விலாரிமூலி.

எட்டான சாமமது வரைத்தபோது யெழிலானசெந்தூரம் மெழுகுபோலாம், திட்டமுடன்தானரைத்துபில்லைதட்டி தீர்க்கமுடன் ரவிதனிலேகாயப்போடு, கூட்டமதுபில்லைபதாய்தட்டியேதான்குறிப்புடனேசீலைசெய்ய வகையைக்கேளு, வட்டமென்ன வோட்டிலிட்டுச் சீலைசெய்து வளமைபெறகெஜபுடமாம் போட்டுத்தீரே. உஎசு

தீரவென்றால் புடமாறியெடுத்துப்பாரு திறலானசெந்தூரஞ் சொல்லப்போமோ, சாரவேசெந்தூரந்தனையெடுத்து சாங்கமுடன் விராலியிட்டதயிலத்தாலே, பாரமுடன் தானரைப்பாய்நாலுசாமம் பதாமல்மெழுகதுபோ லாகவேதான், நேரமுடன்பில்லையது லகுவாய்த்தட்டி நேர்ப்புடனே ரவிதனிலேகாயப்போடே. உஎஎ

போடவேவோட்டிலிட்டுச் சீலைசெய்து பொங்கமுடன் கெசபுடமாம்போட்டுத்தீரு, நீடவேயிப்படியே ஐந்துபத்து நினைவாகப்புடம்போடச்செந்தூரிக்கும் தேடவேசெந்தூரம்யெடுத்துப்பாரு தேசிகனேகாரமது கூறொண்ணாது, பாடவேயின்னம்வெகு மூலிசொல்வேன்பாலகனே பேறிவாய்ப் பண்பாய்த்தானே. உஎஅ

வல்லாரை மூலிகை.

பண்பானமூலிகைதான் சொல்லக்கேளு பாரினிலேமெத்தவுண்டு காயகற்பம், திண்பானமூலி வல்லாரைகற்பம் திறமான மூலியது சார்பிழிந்து, நண்பானசெந்தூரங் கல்வமிட்டுநயம்பெறவே மூலியிட்டசாற்றாலாட்டி, வண்பாகசாற்சாமமறைத்தபோதுவளமாகமெழுகதுபோ லாகும்பாரே. உஎகூ

பாரேதான்மெழுகதனை பில்லைதட்டி பாகமுடன் ரவிதனிலேகாயப்போடு, சீரேதான் வோட்டிலிட்டுச்சீலைசெய்து சிறப்பான கெஜவிடந்தான்போட்டுத்தீரு, நேரேதான் செந்தூரங் காரமேறி நெறியான காயகற்பகுருவுமாச்சு, நேரேதான்பின்னுமிந்த செந்தூரத்தை தீர்க்கமுடன்புடம்போட வகையைத்தேடே. உஅ0

தேடயிலேசெந்தூர மைம்பதாகும் தேற்றமுடன்புடமதுவுமதிகங்கொண்டால், கூடயிலே செந்தூரங்காரமேறி குறிப்புடனே காயாதிக்குறிதியாச்சு, நீடயிலேயிப்படியே தீர்ந்தயானால்நிலத்தில்

நீயுமொரு சித்தனவாய், பாடயிலேயொருவருந் தான்சொல்லவில்லை பாரினிலேயின்னால்போ லொருநூலுண்டோ. ௨௮௧

புளியாரைமூலி.

உண்டேதான் வையகத்தில் பலநூலுண்டுவுத்தமனே சாஸ்திரங்கள்கோடியுண்டு, கண்டேனேநானும்வெகு நூல்கள்தன்னை கவடற்ற நூலிதுதான்மெய்நூலாகும், திண்டானவேதமுனி நூல்கள் சொன்னார் திகழுடனேகாசினி லனேகமுண்டு, கொண்டானகொண்டபடி விநோதஞ்சொன்னார் குவலயத்தி லின்னூல்போலில்லைதாமே

தானான செந்தூரஞ்சாற்றக்கேளு தகமையுடன் புளியாரைச் சாற்றினாலே, பானனசெந்தூர மறைத்துமேதான் பதமுடனே பில்லைதட்டிக்காயவைத்து, வேனனவோட்டிலிட்டுச் சீலைசெய்து விருப்பமுடன்கெஜபுடத்தில்போட்டையானால், கோனனகுருநாதர் சொன்னவாக்கு குவலயத்தில் பொய்யாது மெய்யாம்பாரே. ௨௮௩

பாரேதான் செந்தூரங்காரமேறி பாகமுடன் காயாதிகற்பமாகும், வேரேதான்வைத்து த்து புடமேபோடு நெறியானபுடமதுவுந் தப்பாவண்ணம், கூரேதான்சொன்னபடி செந்தூரிக்கும் கூர்பானகாரமது சொல்லப்போமோ, வேரேதானின்னமொரு மார்க்கம் சொல்வோம் வேதாந்தத்தாயினது வருள்தான் காணே. ௨௮௪

பொன்னுவரைமூலி.

காணவென்று வின்னமொரு மார்க்கம்பாரு கருவானசெந்தூரப் போக்கு சொல்வேன், தோணவே செந்தூரந்தனையெடுத்து துறையுடனேகல்வமதிலிட்டுமைந்தா, பூணவேபூநீருமுப்புச்சுண்ணம் புகழாகத்தான்போட்டு யெட்டிலொன்று, வேணவே பொன்னுவரையாலே விருப்பமுடன் தானரைப்பாய் சாமம்நாலே. ௨௮௫

காலானசாமமது வரைத்தபோது நயமுடனே வெண்ணெயது போலேயாகும், பாலகனேவெண்ணெயதுயிதற்கொவ்வாதுபாலகனே சித்தர்முகம் வேதையாச்சு, சேலானவனமூலி தன்னையப்பா செம்மையுடன்தான்கூட்டி ளரைத்தபோது, மாலானசத்தெல்லாம் மடிந்துமேதான் மகத்தானசெந்தூர முடியலாச்சே. ௨௮௬

ஆச்சென்றுவிடுகாதே மைந்தாகேளு வப்பனே பில்லையதுதட்டியேதான், காச்சலென்ற ரவிதனிலே காயப்போடு கருவானவோட்டிலிட்டுச்சீலைசெய்து, பாச்சலுடன்கெசபுடமாம் போட்டுநீரு பால



கனேயாறியபின்னெடுத்துப்பாரு,மூச்சடங்கிப்புடமதுதான்வெந்தானால் மோசமில்லையாராதன்றே. ௨௮௭

வாராது தோஷமதுநோரதல்லோ வகுப்பானசெந்தூர முறுதிகாணும், கோரனசெந்தூரந் தனையெடுத்து நேர்மையுடனகல்வமதிலிட்டுப்பின்னும், சேரானபொன்னுவரைமூலிசேரவேதான் விட்டுவரைத்துமேதான்நேரமைபோலரைத்துமல்லோ வில்லைகளமாய்ப் பில்லையது தட்டிப்போடே. ௨௮௮

போடவேரவிதனிலே காய்ந்தபின்பு பொங்கமுடன் வோட்டிலிட்டுச்சீலைசெய்து, நீடவேகெசபுடமாய்போட்டையானால் நேரான செந்தூரமென்னசொல்வேன், கூடவேயிப்படியாய்ஐந்துபத்துகொற்றவனே புடமதுதான் தீர்ந்தாயானால், நாடவேசெந்தூரமென்ன சொல்வேன்நாதாக்கள் கைமறைப்புகண்டு பாரே. ௨௮௯

பாரேதான் சித்தர்முனிரிஷிகள் தாமும்பாருலகில்செய்வதுதான்வதிதமார்க்கம், நேர்மையுடன் பலநூலுங் கண்டாராய்ந்து சீரைதான்வனேகவித காயகற்பம்சிறப்புடனே தான்முடித்தார்லக்கோயில்லை, வேரேதான்வனேகநூல்யானுங்கண்டேன் வுற்பனத்தையுளவறிந்துசொல்லார்தாமே. ௨௯௦

தாமானகருவெல்லாமறைத்துப்போட்டார் தகமையுடன்திருமூலவர்க்கத்தார்கள் நாமேதான்சொன்னபடி நூலாராய்ந்து நாட்டினுள்ளவளப்பமெலாங்கண்டார்பாதி,தேமேதான்காயாதிகற்பசாங்கம் தெளிவாகச்சொன்னவர்களொருவரில்லை, பூமானுங்காலாங்கிநாதர்தாமும் புகழுடனேபாடிவைத்தார்கோடியாமே. ௨௯௧

கோடியாஞ்சித்தர்களிலொருவருண்டு கூறினார்பலபலவாய்கண்டாராய்ந்து, தேடியேமானிடர்கள்பிழைக்கவென்று தெளிவாகப்பாடிவைத்தார்சித்தர்தாமும், பாடியதோர்நூலெல்லாம்பழுகாராய்ந்து பாரினிலேபலபலவாம்பேதஞ்சொன்னார் நாடியேபோகரிஷி அடியேன்றானும் நயம்பெறவேயுலகமதில்நவின்றிட்டேனே. ௨௯௨

நவின்றிட்டேனின்னமொருகருமானங்கேள் நாட்டிலுள்ளமானுக்கள்பிழைக்கவென்று, நவின்றிட்டசாத்திரத்தின்யுத்தாயுத்தம் தன்மைபெறவெகுசுளுவயாராய்ந்தேதான், புவின்றிட்டேன்பொன்னினாமத்தைதன்னால் கருவாகதானரைப்பாய்சாமமெட்டே, ௨௯௩

பொன்னூமத்தைமூலி.

எட்டானசாமமது செந்தூரத்தை யெழிலாகத்தானரைப்பாய்
மைந்தாநீயும், திட்டமுடன்மைபோலே தானரைத்துதிர்க்கமுடன்
பில்லையது லகுவாய்த்தட்டிசட்டமுடன் ரவிதனிலேகாயவைத்துசா
ங்கமுடன் ஓட்டிலிட்டுச்சீலைசெய்துவட்டமென்றதுழிதனிலேயெரு
வடுக்கிவாகுடனேபுடமதுவும் போடுபோடே. ௨௯௪

போட்டவுடன் தீயாறியெடுத்துப்பாரு பொலிவான செந்தூர
மென்னசொல்வேன், நீட்டமுடன்செந்தூரங்காரமேறி நீனில்த்தில்
காயாதிகற்புமுரச்சு, வாட்டமுடன் செந்தூரமிந்தபாகம் வண்மையு
டன்வைத்துபத்துபுடந்தான்போடு, தாட்டிகமாய்செந்தூரமருணன்
போலாம் தாரணியிலொருவருந்தான்செய்யார்தானே. ௨௯௫

தானானசெந்தூரமதிநவித்தைதாரணியிலொருவருந்தான்செய்
ததில்லை, கோனானயெனதையர் காலாங்கிநாதர் கொற்றவனர் தம்ப
தியிலடியேன்சென்று, வேனானசாத்திரத்திலுளவுபார்த்து வேகமுட
ன்சீனபதிசென்றயானும், பானானகுளிகைதனைபூண்டுகொண்டுபறந்
திட்டேன்சீனபதிதேசங்காணே. ௨௯௬

காணவேசீனபதிசென்றேன்யானும் கமலமுனிசீர்பாதங்கண்டு
போற்றி, வேணவுபசாரமதுமிகவுஞ்செய்து வெற்றியுடன்குளிகை
யதுபூண்டுகொண்டு, பாணமதுபோலெழும்பிவடியேன்றானும் பக்க
லென்றசமாதியது நின்றேன்யானும், நாணவேதலைகுனிந்து நின்ற
போது நாதராங்கமலமுனிவிடைசொன்னாரே. ௨௯௭

விடையொன்றுசொல்லுகையிலடியேன்றானும் விருப்பமுடன்
வுத்தாரஞ்சொல்லலுற்றேன், தடையில்லாவாக்கதுவுங்கமலர்தாமும்
தாட்சியுடனெந்தனுக்குவுரைத்ததாலேமடைபோன்றசெறாக்காய
கற்பமமகதேவர் மகிட்சியுடன்செய்யலுற்றார், அடையூறுவாராமல்
யெந்தனுக்கு யெழிலானவாக்கதுவுங்கொடுவென்றேனே. ௨௯௮

கொடுவென்றுகேட்கையிலேசித்துதாமும் கொப்பெனவேயெ
ந்தனுக்குச்சாபந்தீர்ந்து, படிமுன்னேசரக்கெல்லாங் கட்டிப்போக
பாரினிலேகாயாதிகர்ப்பந்தானும், தொடுகுறிபோலெந்தனுக்குவுள
வுஞ்சொல்லி,தோஷமதுபோவதற்குமுறையுஞ்சொல்லி கிடுவகலும்
பிணிநீங்கக்காயகற்பம்விருப்பமுடன்வாக்களித்தார்முறையுந்தானே



தானானகமலமுனிநாதர்தாமும் தகமையுடனெந்தனுக்கு வாக்
களித்தார்,கோனானகாலாங்கிநாதர்பாதம்கும்பிட்டுவடியேனுந்தாள்
பணிந்து தேனானசாத்திரத்தைக்கண்டாராய்ந்துதிரட்டிவைத்தேன்
போகரேழாயிரந்தான், பானானகாலாங்கிதனைநினைந்துபாடிவைத்தே
ன்சத்தகாண்டம் பண்புாய்த்தானே. ௩௦௦

செந்தூரப்பெருமை ரோகநிதானம்

தானேதான் செந்தூரப்பெருமைதன்னை சாற்றுகிறேன்மாணு
க்கன்பிழைக்கவென்று, மானேகேள்வனுபானமினமறிந்துலயங்காம
ல்மானிடர்கள்கொள்வதற்கு, தேனேதான்பசும்வெண்ணெய்யுமா
கும் தேற்றமுடன் பாலாகுஞ்சூரணந்தான், ஊனானலேகியங்கள்கிர
தமாகும் வுத்தமனேயிஞ்சிரசம் முலைப்பாலாமே. ௩௦௧

ஆமேதான்சக்கரையுமெழுகுமாகும் அப்பனேயிந்தவித வனு
பானங்கள், நாமேதான்சொன்னபடிசிகிச்சைசெய்தால் நாடாதுதே
கம்வனுபிணிகள்போகும், போமேதான்பொல்லாதநோய்கள்போகு
ம் பொலிவானரோகத்தின் மார்க்கஞ்சொல்வேன், வேமேதான்பிலீக்
குறிப்பு வுளவுசொல்வேன் வேகமுடன்காயாதிகற்பங்கேளே. ()

தீரும் வியாதி.

கேளேதான்வரயுவென்றதெண்பதும்போம் கொடியானபித்தம
துநாற்பதும்போம், நாளேதான்கிரந்திபதினெட்டும்போகும்நாடாது
ஜன்னிபதின்மூன்றும்போகும், பாளேதான் பாண்டுவகையாறுந்திரும்
பாலகனேமூலமிருபதுவும்போகும், வீளேதான்அதிசாரரோகம்போ
கும் வீரானகிராணியென்றதாறும்போமே. ௩௦௩

ஆரானவாதமென்றரோகம்போகும்அப்பனேசிலேத்மமதுதொ
ண்ணூற்றாறும், காரானகெடியரோகம்பதினெட்டும்போம் கருவான
காசமென்றரோகமெட்டும், வேறானவுளமாந்தை ரோகம்போகும்
விருப்பமுடன்பிரமியங்களிருபதும்போகும்,கூறானமேகமென்றயிரு
பத்தொன்றும் கொற்றவனேசடலம்விட்டு யேகும்பாரே. ௩௦௪

பாரேதான்குட்டமது பதினெட்டும்போம் பாங்கானசோகை
யென்ற ரோகம்போகும், நேரேதான் மகோதரங்களெட்டும்போ
கும்நெடிதானவிஷபாகமாறும்போகும், சேரேதான் சூலைபதினெட்
டும்போகும் செழிப்பானகுன்மமென்றதெட்டும்போகும்,மேரேதா
ன் பெரும்பாடுரோகம்போகும்மேலானகல்லடைப்புவாறும்போமே

போமேதான் விப்புரிதிரோகம்போகும் பொலிவானகரப்பன் பதினெட்டும்போகும், வேமேதான் பவுத்திரங்களனைத்தும்போகும் விருப்பமுடன் நேத்திரநோய் தொண்ணூற்றாறும், நாமேதான்சொன்னபடிவதிரோகங்கள் நாட்டிலுள்ளவதிசூரியெல்லாம்போகும், தாமேதான்பிரிசங்களெட்டும்போகும் தாக்கானசிறகிநோயனைத்தும் போமே. ௫௦௬

சிறமானநோயுடனே யின்னஞ்சொல்வோம் சீரானதாகமென்றரோகம்போகும், வரமானவிக்கல்வலி ரோகம்போகும் வகையான சுவாசமென்றரோகம்நீங்கும். உரமானவாந்தியென்ற ரோகம் போகும் வுத்தமுனே மார்புநோய்தனைவிட்டோடுங்கும், பரமானகம்மலென்றரோகம்போகும் பார்த்திபனேசகலவிஷ ரோகம்போமே. ௫௦௭

போமென்றுவிடுகாதே யின்னஞ்சொல்வோம் பொலிவானவாண்குறியின் ரோகம்போகும், தாமெனவே பெண்குறியின் ரோகம் போகும் தாக்கான மருந்துவகை விரும்போகும், நாமெனவேமலட்டுவலிரோகம்போகும் நாடாது கசரோகமெல்லாப்நீக்கும், வேமெனவேகாயாதிகற்பமார்க்கம் விருப்பமுடன் செய்கின்றவீரந்தானே ()

வீரமாஞ்சில்லிஷங்களற்றுப்போகும் வேகமென்றபிளவையென்னுங்கட்டிப்போகும்சாரமாம்ரத்தவிஷமற்றுப்போகும்சதாகாலம் மேலிளைப்பு தீர்ந்துபோகும், தூரமாங்காதவழிநடக்கலாகும் நடந்தாலும் வாசியது கீழ்நோக்கும், பாரமாந்தேகமது கற்றாணுகும் பாரினிலே வெகுகாலமிருக்கலாமே. ௫௦௯

இருக்கலாங் கோடியுகற்பகாலம் யிருக்காலும்நரைதிரையும் ஒன்றுமில்லை, சுருக்கமுடன் மேனியது தளர்ந்திடாது தளர்ந்தாலும் நரம்புக்குவலுவுமுண்டு, பெருக்கமுடன்காயாதிகற்பகாலம் பேருலகில் நீயுமொருசித்தனுவாய் உருக்கமுடன்செந்தூரங்கொண்டபேர்க்கு வுலகத்தில்வயதுகணக்கில்லைதானே. ௫௧௦

கணக்கில்லைகாலன்வந்தணுகமாட்டான்காசினியில்வெகுகாலமிருக்கலாகும், பிணமாகிமூச்சடங்கியிருந்திட்டாலும் பேருலகிலுன்னையொருசித்தனென்பார், க்ஷணநேரம்வாசியைநீ நடத்திட்டாலும் சதாசிவன்தான் நீயென்றுசொல்லுவார்கள், மண்முடனேபூமிதனில் வாழலாகும் மண்ணுலகில் வேந்தரெல்லாம் நடுங்குவாரே. ௫௧௧

நடுங்குவார்வுனைக்கண்ட சீஷவர்க்கம் நாடோறும் வுந்தனுக்குப் பணியேசெய்து, ஒடுங்கியேயுந்தனிடபக்கஞ்சென்று வுபசாரவார்த்தைகளுமதிதம்பேசி, கொடுந்தவசியானதொருயுந்தனுக்குகோபமது



வாராமல் முன்னேநின்று, படுந்துயரமிகவாகிமனதிலெண்ணி பட்சமுடன்சதாநித்தஞ்சேவிப்பாரே. ௫௧௨

சேவிப்பார்தவநிலையிலொடுங்கிநின்று சேர்வையுடன்காட்சிதனைக்காணவென்று, கோவிப்புவாராமல்குருவைத்தானும் கொற்றவனும்மென்னுளும்பணிந்துநின்றுகாவிப்பாம்சோடசோபசாரத்தோடு தண்மையுடனேவனுக்குமுதலாய்நின்று, சாவிப்புவாராமல்புனிதவானுய் சதகோடிகாலம்வரைபணிசெய்வாரே. ௫௧௩

பணியானநீயுமொருசித்தனைப்போல் பாலகனேயென்னுளுமிருப்பதற்கு, அணியானசிவயோகந்தன்னிற்சென்று ஆத்தாளைசாதித்தம்பூசித்தேதான், துனிவேடுசமாதிநிலைநின்றுகொண்டு துய்புறவாய்மேல்மூச்சுதனையடக்கி, மணியானபூரகத்தைமேலேநோக்கி மார்க்கமுடன்வனுகத்தைப்பூட்டிப்பாரே. ௫௧௪

பூட்டிமிகப்பார்க்கையிலேபொலிவுதோன்றும் பொங்கமுடன் சுழுத்திதனைமேலிறுத்தி, பூட்டுமர்மைதனிவோனுய்ப்புகுந்தாப்போலவப்பனேயஷ்டாங்கந்தன்னிற்சென்றுகூட்டுமுறைவகையறிந்துசிவயோகிதானும் குணமுடனேயங்கசித்திபெற்றுக்கொண்டு, பாட்டுநயமறிந்துமல்லோபாரினமீது பாரமுடன்தவசிருத்தல்மெத்தநன்றே.

நன்றானயோகமதையறியவேண்டும் நாயகனேயென்னுளும்பூசைவேண்டும், குன்றானமாய்கைதனையறுக்கவேண்டும் கொடிதானபொருளாசைநீக்கவேண்டும். பன்றானசாத்திரத்தைப்பலவும்பார்த்து பாரினிலேகோளாறையறியவேண்டும், செவ்றுலும்ராசருடஞ்சொல்லவேண்டும் செயலானபாக்கியத்தைநீக்கனன்றே. ௫௧௬

நீக்கவேபொருளாசையவர்க்குச்சொல்லி நிதியெலாந்தானழிக்கமதியுஞ்சொல்லி, போக்கவேகர்மானுபவத்தைநீக்கிபொங்கமுடன் யென்னுளும்ஞானமோதி, வாக்கதுவும்பிசகாமல்வறியோருக்கு வண்மையுடன்தானமதுசெய்யச்சொல்லி நோக்கமுடனவரவர்கருத்தக்க பாகம் நண்மையுடன்கொடுப்பதுவேதருமமாமே. ௫௧௭

காயாதிகற்பமுண்டவர்கள் அஷ்டசித்திபெற.

தருமமாங்காயாதிகற்பமுண்டோர் சதாகாலஞ்சாயுச்சியம்பெருவதாகும், கருமமாம்வஷ்டாணபீடைதானும் காசினியில்வெறுப்பதுவேயோகமார்க்கம், சருமமுடன்காயமதுபூமிதன்னில் சட்டமுடனிருந்தாலுங்கரிப்பேறாது, மருமமுடன்சித்தாதிசித்தரெல்லாம மானிலத்தில்யிப்படியேவழங்கினாரே. ௫௧௮

வழக்கமுடன்தானிருந்தார்சித்தாசித்து வையகத்தில்காயாதிகற்பமுண்டுபழக்கமதாமிகவாகிபாரினிற்குள்பதிங்கிருந்தார்வெகுகோடி காலந்தானும் முழக்கமுடன் ஆண்டுக்கோர்கோஷ்டிகாட்டும், மூதலகில்கண்டவர்கள்பிரமிப்பார்கள், பழக்கமுடன்சிஷவர்க்கமிதுவேபாகந் தாரணியில்வெகுசித்தாடினாரே. ௫௧௯

சிஷர்கள் ஆசானுக்கு அஞ்சலிசெய்தது.

ஆடினார்சித்தர்முனிரிஷியைப்போல அவனிதனில்கோடிமனுதவசியோர்கள், தேடியேசமாதியிடநிலையைக்கண்டுதேற்றமுடன்பெரியோரையடுத்துமேதான், கூடியேகும்பல்கும்பலாய்ச்சேர்ந்துகுருவானதவநிலையைக்காணவென்றுநாடியேசொருபமென்றநிலையைக்காணநலமுடனேகர்த்திருந்தாரனேகம்பேரே. ௫௨0

பேரானவழிதனிலே வதிதம்பூண்டு பேருலகிலேயுமொருசித்தனைப்போல், தூரானகெட்டவழிசெல்லாமற்றான் துரைராஜசுந்தரன்போலிருந்துகொண்டு, வாரானசாத்திரத்தின்வன்மைபார்த்து வன்மையுடன்வாதமதையறிந்துகொண்டு, தேரானயோகமதைநிலைநிறுத்தி தேற்றமுடனயோகநிலைக்கிடமுந்தேடே. ௫௨௧

தேடையிலேவிட்டகுறைநேர்ந்ததானால் தெளிவுடனேயுந்தனுக்குலபிக்கும்பாரு, கூடயிலேவாசான்தானில்லாவிட்டால் கொற்றவனேகாயாதிகற்பம்போதும், பாடையிலேசென்றாலும்திரேகம்போமோபாரினிலேதெரியாமலிருந்தோர்கோடி, நீடையிலேகாயாதிசெந்தூரந்தான் நிலைத்துதடாதேகமதுகற்றானுச்சே. ௫௨௨

கற்றாலும்பொற்றாலுங்கருங்கல்லாகும் காசினியில்காயாதிகற்பமாச்சு, நற்றாலுங்காயாதிசெந்தூரந்தான் நாயகனேமுக்கோடிதவஞ்செய்தாலும், கற்குணமும்வீராதிவீரன்போலும் பாரினிலேசதகோடிசூரியன்போல், அறகுணங்கள் தானகன்று சித்தனாய்த்துரைராஜசிவயோகியாவாயே. ௫௨௩

ஆகையிலேசெந்தூர முண்டபேர்க்கு அவனிதனில் நரையில்லைதிரையுமில்லை, சாகையிலேசேத்துமங்களணுகிடாதே செத்தாலும்ஆவியதுவெளிபோகாது, போகையிலேதஞ்செயனும்சிரசுக்குள்ளேபொங்கமுடன்தான்வசிதுக்கற்பகாலம், வேகையிலேதீயதனில்வெந்திட்டாலும் வெகுசுறுக்காய்த்தேகமது தள்ளும்பாரே. ௫௨௪

பாரேதான்தேகமதுதள்ளும்போது பாரினிலேசெகஜாலவித்தையென்பார், நேரேதான்சவமுகத்தில்நிற்கும்போது நெருப்பானத



ணல்துவும்விந்துபோகும் கூறானமானிடர்கள்சொல்வதென்றால் குவலயத்தே ஜெகஜாலவித்தையென்பார், தூரேதான்மசானமதிலிருந்துகொண்டு துப்புறவாய்ச்சவமதனை பழிசொல்வாரே. ௫௨௫

பழியானசெந்தூரங் காயகற்பம்பூபாருலகிலுண்டவர்க்குக் காயம்போகா, வழியான செந்தூரம் யார்தான்செய்வார், வன்மையுள்ளசிவயோகிதானே செய்வான், மொழிவானகருவாளி யானமாந்தர்மோசமின்றி காசுதனை செலவுசெய்து, சுழியானசெந்தூரப் போக்குதன்னை கனமுடனேசெய்பவனே புனிதனாமே. ௫௨௬

புனிதனும் யின்னமொரு மார்க்கம்பாரு புகழானசெந்தூரஞ்செய்பக்கேளும், வனிதமுடன் வெள்ளிசெம்பில்பத்துக்கொன்று வாகுடனே தானுருக்கி குருவொன்றிய, கனிவானகரியோட்டிலூதிப்போடு கருவானசெம்பதுவுங் கொஞ்சம்நீங்கி, தனியான வெள்ளியது வரணமேறி தகமையுடன் பொன்னென்றமாற்றுமாச்சே ()

ஆச்சப்பா குடவனிலேபத்துக்கொன்று அப்பனேபாய்ச்சிட்டவே மாற்றெட்டாகும் மாச்சப்பாசெம்புதனில் பத்துக்கொன்று பாங்குபெறமாற்றதுவுமெட்டதாகும் பேச்சப்பாபிசகொன்று மில்லைதானும் போனதங்கமதுபத்துக்கொன்று மூச்சப்பாஸ்சோம ஓருக்கியேதான் முதன்மையுடன்தானெடுக்கக்களங்குமாமே. ௫௨௮

களங்கான தங்கமதை யெடுத்துக்கொண்டு கருணையுடன் வெள்ளிதனில் பதனுக்கொன்று விளங்கவே தானுருக்கி யெடுத்துக்கொண்டு வேகமுடன் வாரடிந்துப்புடதைப்போடு அளாகமுடன்தங்கமது விளையும்பாரு அப்பனே சிவத்துக்கு வுருக்கிதங்கம் நளங்கமுடசிவராஜயோகனுசென்றநாட்டிலே தாமிருந்தார் கோடியாமே

கோடியாந்தவகோடிரிஷிகள்கோடி குவலயத்தில்சத்துவகையறியாமற்றான் கோடியேசட்டலைந்து கெட்டார்கோடி தெரிசனங்கள்காணமல்மாண்டார்கோடி வாடியேமனந்தளர்ந்துவழிகாணமல்வகைகெட்டுநூல்பார்த்துமறந்தார்கோடி கூடியேயொருவரிடமமுறைகள்கேட்டு, கூர்மையுடன்பாராமல்கெட்டார்தாமே. ௫௩0

கொங்கணவர் சாயகற்பம்.

தாமானயின்னமொருகருமானங்கேள் தகமையுள்ளசித்தர்முனிகொங்கணவரப்பா சாமான்யமானதொருசாத்திரத்தை சதுரானசமதிற்கொண்டுசென்று பூமான்கள்சித்துவகையிருக்குங்கூட்டம்புகழ்ந்சியுடன்வழிபாடுசென்றுமங்கே சாமான்யமானதொருகொங்கணவர்தாமும் மதிப்புடனேசபைநடுவேசென்றிட்டாரே. ௫௩௧

சென்றிட்டகொங்கணவர்சித்துதாமும்சிறப்புடனேசித்தர்முனி
தம்மைக்கண்டு வென்றிட்டசாத்திரத்தைவாதுபேசி விருப்பமுடன்
சத்துவகைமிகவும்பேசி கன்றிட்டகருக்குருவை தெரிந்துகொண்டு
கருத்துடனேகுருமுடிக்கமனதிலெண்ணி பன்றிட்டசாத்திரத்தைத்
தோஷஞ்சொல்ல பாரினிமேலசத்துவகைமுடித்தார்காணே, ௫௫௨

காணவேபத்துவகையெடுக்குமார்க்கம்கடந்ததோர்ஞானிமுதல்
சித்தர்தாமும் தோணலேபாஷாணம்முப்பத்திரெண்டும் துறையோ
டும்முறையோடுஞ்செப்பக்கேளு பூணவேவகைவகைக்குப்பலமதாக
புகழுடனேதேனைதனில்நாலுசாமம் வேணலேதானரைப்பாய் மைந்
தாகேளு விருப்பமுடன்வெண்ணையதுபோலேயாட்டே. ௫௫௩

ஆட்டியேரவிதனிலேகாயவைத்து அப்பனேமூசைதனிலடைத்
துமைந்தா பூட்டியேவரலுகையாமேந்திரத்தில் புகழாகதானரைப்
பாய்மையோலாக நாட்டியேமூசைதனிலடைத்துமைந்தா கலம்பெ
றவேசில்லிட்டுசீலைசெய்து நீட்டமுடன்சரவுலையில்வைத்தவூது நே
ரானசரக்கெல்லாம்புகைந்துபோமே ௫௫௪

போகுமேசரக்கெல்லாஞ்சத்தேயாகிபொங்கமுடன்யியமதுபோ
லேயாகும் சாகுமேபாஷாணம்புகைந்துமல்லோ சத்துபோல்சத்தாகி
களங்கமாகி வேகுமேசரவுலையில்புகைடண்டாகி வேகமுடன்அஞ்ச
னத்தின்கல்போலாகும் பாகுடனேவுருக்கியதோர்மூசைதன்னை பத
முடனேதானெடுத்துவுடைத்துப்பாரே. ௫௫௫

பாரேதான்பாஷாணஞ்சரக்குசேர்ந்து பாகமுடன்தானுருகிகரி
யாய்நிற்கும் நேரேதான்பூநீகம்மண்ணைப்போக்கி நேர்மையுடன்சத்
துக்குநேர்சேராசகூரேதானவினயமுடனொன்றுச்சேர்த்துகொற்றவ
னேகல்வமதிலிட்டுப்பின்பு வேரேதான்ஆவின்னெய் தன்னாலாட்டி
வேகமுடன்மூசைதனிலடைத்திடாயே, ௫௫௬

அடைக்கவென்றால்வச்சிரமாங்குகையில்வைத்து அப்பனேசில்
லிட்டுசீலைசெய்துதடையறவேரவிதனிலேகாயவைத்து சாங்கமுடன்
சரவுலையில்வைத்தூது மடைபோன்றதீயதனால்வெந்துசத்தாய் மார்
க்கமுடன்னீயம்போலுருகிநிற்கும் இடைநடுவேகளங்கமதையெடுத்
துக்கொண்டு யெழிலானதங்கமதுநேர்தானகூட்டே. ௫௫௭

கூட்டியேதானுருக்கி யெடுத்துக்கொண்டு கொற்றவனேகல்வ
மதிலிட்டுமைந்தா தாட்டிகமாம்பொற்றலையின்சாற்றினாலே தண்மை



யுடன்தானரைப்பாய்நாலுசாமம் நீட்டமுடன்தானரைத்துபில்லை
தட்டி நேர்புடனேரவிதனிலேகாயவைத்து வாட்டமுடனேவோட்டி
விட்டுச்சீலைசெய்து வளமையுடன்சரவுலையிலேற்றிடாயே. ௫௫௮

ஏற்றியேவுருக்குமுகம்தன்னிலேதான் யென்மகனேதுருத்தியது
காலதாகும் போற்றியேவாலாம்பிகைதனைநினைந்து பொங்கமுடன்
மூசைதனைநெருப்பிலிட்டு தூற்றியேகரியதனைமேலேகொட்டி துப்புர
வாமூசையதுயழுகுமட்டும் நாற்றிசையும்தீபாக்கவூதவூது நாயக
னேசத்தெல்லாமுத்தமாமே. ௫௫௯

முத்தானசத்ததுவுஞ்சொல்லப்போமோ மூதலகில்யாரேனுங்
கண்டதுண்டோ சித்தானமுனிரிஷிகள்செய்யும்வேதை தேசத்தில்
மற்றவரால்செய்யப்போமோ வித்தானகளங்கமதுநாயகற்பம் விண்
ணுலகில்கருவாளிசெய்வான்பாரு சத்தானசத்ததனையெடுத்துமைந்
தா சார்புடனேமூசைதனையுடைத்துப்பாரே. ௫௬௦

உடைத்துமிகப்பார்க்கையிலேஎன்னசொல்வேன் ஓங்காரநா
தாக்கள்ரிஷிகள்வேதைபுடைத்துமேசத்துகளோதானெடுத்துபுகழாக
கல்வமதிலிட்டுமைந்தா புடைப்புடனேவீரமென்ற செயநீர்தன்னால்
களிப்புடனேதானரைப்பாய்சாமம்நாலு படைப்புடனேபில்லைதட்டி
காயவைத்து பாங்குபெறவோட்டிவிட்டுச்சீலைசெய்யே. ௫௬௧

சீலையென்றால்யெழுசீலைவலுவாய்ச்செய்து சிறப்புடனேசெம்ம
ண்ணைமேலேபூசிகாலைதனில்கெஜபுடத்தில்போட்டுமல்லோ கருவாக
மூன்றுநாள்பொறுத்தபின்பு மாலையென்னும்மூன்றுநாள்மாலையப்பா
மயங்காமல்தானெடுப்பாய் மைந்தாநீயும் வாலையென்னும்திரிபுரை
யாம்புவனைவாலை தன்மையுடன்தானினைத்துயெடுத்திடாயே. ௫௬௨

எடுத்துமிகப்பார்க்கையிலேயென்னசொல்வேன் யெழிலானசெ
ந்தூரமெத்தமெத்த அடுத்துநின்றபேர்களைநீதூரத்தள்ளி அப்பனே
செந்தூரமெடுத்துக்கொண்டு தொடுத்தகுறிதப்பாமல்பின்னுங்கேளு
தோராமல்கல்வமதிலிட்டுமைந்தா கொடுத்துமேமுன்சொன்னசெய
நீர்தன்னால் கொப்பனவேதானரைப்பாய்சாமமெட்டே. ௫௬௩

எட்டானசாமமதுவரைக்கும்போது யெழிலானவெண்ணையது
போலேயாகும் கட்டானகுதமதுகாலாய்ச்சேர்த்து கருவாகதானரை
ப்பாய்சாமம்ரெண்டு மட்டானபில்லையதுசிறுகத்தட்டி மதிப்பானரவி
தனிலேகாயவைத்து தட்டானபதிதனிலேகுழிதான்வெட்டி தகமை
யுடன்புடம்போடவிவசகேளே. ௫௬௪

வரிசையென்றால்வரிசையதுசெப்பக்கேளும் வாகுடனேகுழித னிலேமணல்தான்கொட்டி சரியானமண்மேலேவுப்பைகொட்டி சார் பாகபில்லேதனைமேலேவைத்து பரிவுடனேமேலுமந்த வுப்பைக்கொ ட்டி பண்புடனேமணல்தனைமேல்பரப்பி குறியானகுறிப்பதுபோல் வுமிதான்கொட்டி கொற்றவனேமேல்தனிலேயெறுவுபோடே. ௫௪௫

போட்டவுடன்தீமூட்டிப்புடந்தான்போடுபொன்னவனேமூன் றுநாளாறுமட்டும் தாட்டிகமாய்தனையெடுத்துபார்க்கும்போது சட் டமுடன்செந்தூரமருணன்போலாம் மாட்டிமையாய்யிந்தமுறைஐங் துபத்து மயங்காமல்தான்போடவரிசைகேளு பாட்டினதுமுறையே னும்பொய்யுமாகா பாரினிலேகொங்கணவர்பாகமாமே. ௫௪௬

பாகமாங்கொங்கணவர்பாகந்தானும்பாரினிலேயாரேனுஞ்செய் தனுண்டோ கேர்பமாய்முனிசொன்னவாக்குப்பொய்யோ கொற்றவ னேகொங்கணவர்வார்த்தைபொய்யோஏகலழித்தனைக்கடந்த ஞான வசித்து யேற்றமுடன்மானிடர்கள்பிழைக்கவென்று சாகமுடனசெ ய்துவைத்தார்யிந்தபாகம் சட்டமுடன்கொங்கணவானர்தாமே. ()

தானனசெந்தூர மென்னசொல்வேன் தாரணியில்மாமுனிவர் ரிஷிகள்தாமும் தேனனபாகமிதுனைபாகந்தான் தேற்றமுடனாராய் ந்துகேள்விகேட்டு கோனனயெனதையர்காலாங்கிநாதர் சொன்ன வளவாக்குணமுங்கண்டு பானனசெந்தூரப்பாகங்கண்டு பாரினிலே சந்தேகநீங்கினூரே. ௫௪௮

நீங்கினூர்கொங்கணவர்கைபாகத்தில்நீடாழிகாலம்வறைநனுக் கம்பார்த்து தூங்கியேதிரியாமல்சித்துதாமும்துறையோடுமுறையோ டுஞ்செய்துகொண்டார் ஒக்கியேபாகமதுகைவிடாமல் வுத்தமனே செய்துமல்லோகுளிகைபூண்டு ஏங்கியேபோகாமல்மைந்தாநீயும் வெ ழிலுடனேயிப்பாகஞ்செய்திடாயே. ௫௪௯

செய்யவென்றால்வெகுகோடிமார்தாமும் செம்மையுடன்செ ய்துமல்லோமுறைதான்காணூர் வையவேகருவாளிசெய்வர்ன்பாரு பாரினிலேமற்றவரோகாணூர்காணூர் நைடவருங்கோபத்தார்செய்ய மாட்டார் நாட்டிலுள்ளசாத்மீகர்செல்வார்பாரு துய்யவேவாதவித் தைசெய்வோர்தாமும் துப்புரவாய்செய்வதுவும்திண்ணமாமே. ௫௫௦



போகர்சினபதியில் நவவிதவர்ணஞ் செய்தது.

திண்ணமாமின்னமொரு கருமானங்கேள் திகழான வாணமெ ன்றபோக்குசொல்வோம், வண்ணமுடன்பஞ்சவர்ணவிதங்கள்சொல் வோம் வகுப்புடனேயதிற்பிறந்தவர்ணநான்காம், நண்ணமுடன்வாயு வென்றயிரும்புதன்னில் நலமானவர்ணமது ரூபபேதம்கண்ணபிரான் வர்ணமது போலேயாகும் காசினியில் சித்தர்செயும் வேதையாச்சே.

வேதையிலே யின்னமொரு போக்கைக்கேளும் வீறான சிறிய கண்ணுகந்தானு, நீதையிலேதானுருக்கிமதியுப்போடு திகழானகள ங்குபோனுருகும்பாரு, போகமுடன்சூதமதைக் கூடச்சேர்த்து பொ ங்கமுடன்தானரைப்பாய் நாலுசாமம், நாகமுடன் சாரமென்ற செய நீர்தன்னுல் களினமுடன் தானரைத்து செப்பக்கேளே. ௫௫௨

செப்பவென்றால் வளையலுப்பு கூடச்சேர்த்து சிறப்புடனேநிம் பழச்சார்தானும்விட்டு, ஒப்பமுடன் வென்னீரில் கலக்கிக்கொண்டு வோங்குபெற செம்பென்றதகட்டைதானும், செப்பமுடன் தகடி த்து சலந்திற்போடே கோரானவர்ணமது மேலேதாகி, துப்பாவா வொளிவீசுந் தகட்டின்மேலே சூரியன்போல் தங்கமென்ற வர்ணமா மே, ௫௫௩

ஆமேதான் வர்ணமொடு சிவப்புபச்சை அப்பனே லெமென்ற கறுப்புகானும், தாமேதான்ரசமதனைக்கூடச்சேர்த்து தன்மையுடன் சீசாவி லடைத்துமைந்தா, வேமேதான் தகடதனைதோய்க்கும்போது விதமானசஞ்சாயவர்ணங்காணும், நாமேதான் சொன்னபடி ரூபாவர் ணம் நயமுடனேதகடதனி லேறும்பாரே. ௫௫௪

பாரேதான் யிரும்புக்கு யிந்தமார்க்கம் பாகமுடன் செய்துவந் தால் பண்பதாகும், நேரேதான் வங்கமதுதகடடித்து நேரான முன் சொன்ன சரக்கிலேதான், வாரேதான்வங்கமதையுருக்கியேதான்வள முடனே காய்ச்சியல்லோ தோய்ச்சிப்பாரு, கூரேநான் துரிசியிடகா ரத்தாலே கொற்றவனே பலபேதம் விளையுந்தானே. ௫௫௫

விளையுமேசகலவிதரூபாபேதம் வேகமுடன் தோன்றுவதுயுண் மைபாரு, களையுடனே சூதத்தால் யெல்லாந்தோற்றும் காமரூபவடி வமெல்லா மிதிலேதோன்றும், தளைவுடனே தாளகத்தின் புகையினு லே தகமையுள்ள கெந்தியது காரத்தாலும், சுளையுடனே புத்தது போல் புகையெழும்பி சொர்ணமென்னுவேகமென்ற வர்ணமாமே.()

கருவங்கபற்பம்.

வாணமாயின்னமொரு போக்குச்சொல்வேன் வாகானகருவங்க பற்பங்கேளு, காணமாங் கருவங்கஞ் சேர்தானென்று தகமையுடன் தகடடித்துசெப்பக்கேளு, மூரணமாங்கருங்காலிகிழங்குதன்னை முதன்மையுடன்தானரைத்து மூசைசெய்து, திரணமாங்குகைக்குள்ளே தகடைவைத்து தீர்க்கமுடன்முன்சொன்ன ரூப்புபோடே. ௫௫௭

போட்டுமேசில்லெட்டுச் சீலைசெய்து பொங்கமுடன்ரவிதனிலே காயவைத்து, காட்டென்றயெருவதனை கெஜமதாக்கி கருவாகக்குழி வெட்டிப்புடத்தைப்போடு, மூட்டென்றபுடமாறி மூன்றுநாள்தான் முக்கியமாய் திருவாணிபூசைசெய்து, தாட்டிகமாய்ப் புடந்தனையே திறந்துபாரு தளுக்கற்றகருவங்க பற்பமாமே. ௫௫௮

ஆமேதான் பற்பமதை யெடுத்துக்கொண்டு அப்பனே சிற்றண்டம்செளவுபோக்கி, தாமேதான் பற்பமெடை சரியாய்தூக்கி தகைமையுள்ள சிற்றண்டங்கூடச்சேர்த்து, போமேதான் வெண்கருவால் மிகவேயாட்டி, பொங்கமுடன் தானரைப்பாய்நாலுசாமம், நாமேதான் சொன்னபடியில்லைதட்டி நலமாகரவிதனிலே காயவையே. ௫௫௯

வைத்ததொருயில்லைதனையோட்டிவிட்டு வண்மையுடன்சீலையது வலுவாய்ச்செய்து, நைத்ததொருகுழிதனிலேபுடமேபோடு நலமான கெஜபுடத்தில்வெந்துநீறும், தைத்ததொரு புடமாறியெடுத்துப்பாரு தளர்ச்சியுள்ளபற்பமது சொல்லப்போமோ, மெத்திடவேபற்பமதை பதனம்பண்ணு மேதினியில்சித்தர்செயும் வேதையாச்சே. ௫௬0

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு அருமையுள்ளபாலகனே பின்னுஞ்சொல்வேன், மாச்சமென்றகற்பமதை வனுபானத்தில் மார்க்கமுடன் பணவிடைதான்கொண்டபோது, மேச்சலென்றமேகமது யிருபத்தொன்று மேதினியில்கண்காணுதோடும்பாரு, வீச்சலென்று பிரவீச்சுசன்னிபோகும் வீரமுடன் தாதுவிர்த்தியதிகமாமே. ௫௬௧

அதிகமாங்குன்மமென்ற தெட்டும்போகும் ஆண்மையுடன்குறி நோய்களனைத்தும்போகும், சதிரானகுஷ்டமது பதினெட்டும்போம் சட்டமுடன் சீழிவுமாறும்போகும், மதிமேகமென்றதொரு ரோகம் போகும் மாசற்றதேகமது வன்னிநீரும், துதியுடனே தாரணியில் சதாகாலந்தான் துப்புரவாய்யோகநிலை சமாதிதேடே. ௫௬௨

தேடையிலேசமாதிநிலைதன்னைக்கண்டு தெளிவாககேள்விகளில் னேமங்கேட்டு, கூடயிலேசிவயோகநிலையினின்றுகுணமானவழிபாடு



தனையெடுத்து, மாடையிலேசினமென்ற கோபந்தள்ள மதிப்புடனே தாரணி லிருந்துகொண்டு, நீடையிலேகரிவங்க பற்பந்தன்னை நீனிலத்திலுண்பவனே சித்தனாமே. ௫௬௩

சித்தனாய்பிரந்தாலும் மதிகள்வேண்டும் சீறலென்ற சினமது வைத் தள்ளவேண்டும், பத்தியுடன்பாதாம்புயத்தை யெந்தனாளும் பட்சமுடன் மனந்தனிலே நினைக்கவேண்டும், நித்தியமும் பாவெளியில் நிற்கவேண்டும் நீடாழியுலகாசை யொழிக்கவேண்டும், முத்தியுடனஷ்டமா சித்திதன்னை மூனுலகில்பெறுபவனே யோகியாமே.

வெள்வங்க பற்பம்.

யோகமென்றால்போகமதைத் தள்ளவேண்டும் யொருவருடன் வீண்வார்த்தைக் கூறலாகா, போகமதைநீக்கிவிட்டு பூமிதன்னில் புகழாகவாசியோகந் தன்னிற்சென்று, தாகமுடன்காணப்பால் தன்னைக்கொண்டு சதாகாலம்னிஷ்டையிலே யநுமானித்து, வேகமுடன் விட்டகுறைவந்த[illegible] வெறுப்பன்றி பொறுப்புடன் மீள்வீர்தாமே. ௫௬௫

மீளுவதுயின்னமொரு கருமானங்கேள்! மிக்கானவெள்வங்க பற்பஞ்சொல்வேன், தாளுமையாய் வெள்வங்கஞ் சேர்தானொன்று தகமையுடன்சவுட்டுப்புச் சேர்தான்பாதி, கோளகற்றிதகடடித்து மேலேபூசி கொற்றவனேயாவாரைபஞ்சாங்கத்தில், மாளுறையாய் வெள்வங்கம்நீற்றுதற்குமானிலத்திற் பஞ்சாங்கப்புடத்தைப்போடே

போடவேவெள்வங்கம் பொருமினிற்கும் பொலிவான சோளமதுபோலாகும், நீளவேசோளமென்ற பொரியெடுத்து நீட்சியுடகல்வமதி லிட்டுமைந்தா, கூடவேயாறுவகை செயநீர்தன்னால் கொற்றவனேதானரைப்பாய் சாமம்நாலு, சாடவேமைபோலே வெண்ணையாக்கிச் சட்டமுடன்தானரைத்து பில்லைதட்டே. ௫௬௭

தட்டியேரவிதனிலேகாயவைத்து சதுராகவோட்டி விட்டுச்சீலை செய்து, திட்டமுடன்குழிவெட்டிப் புடத்தைப்போடு திடமானபுடமதுதான் கெஜமேயாகும், மட்டமென்றபுடமதுவும் ஒன்றேபாகும் மறவாமல்மூன்றுனாள் பொறுத்தபின்பு, சட்டமுடன்தானெடுத்துப் பார்க்கும்போது தவளனிறம்போலாக யிருக்கும்பாரே. ௫௬௮

பாரேதான்பற்பமதை தனையெடுத்து பாக்முடன்கல்வமதிலிட்டுப்பின்பு, நேரேதான்கிளிமூக்குகிழங்கு தன்னை நேர்புடனேசார்பிழிந்துசொல்லக்கேளு, சீறேதான்வெள்வங்கபற்பந்தன்னை சிறப்புடனே,

தானரைப்பாய் நாலுசாமம், கூரேதான்வெண்ணையது போலேமைந்தா குறிப்பாகதானரைத்து பில்லைதட்டே. ௫௬௯

பில்லையென்றால்பில்லையது காசதாக பெறுமையுடன் தட்டியல்லோ ரவியிற்போடு, கல்லுபோல்தானுலர்த்தி யெடுத்துக்கொண்டு கருதாகவோட்டிவிட்டுச் சீலைசெய்து, அல்லன்றிகெஜபுடத்தில்போட்டாயானால் அப்பனேபற்பமது தவளம்போலாம், வெல்லவேபற்பமதையெடுத்துக்கொண்டுவிருப்பமுடன்கிழங்குச்சார்தன்னாலாட்டே.

கிழங்கென்றால்கிழங்கதுவுங் கொல்லன்கோவை கெடியானசாறதனை பிழிந்துகொண்டு, பழக்கமுடன்தானரைத்து பில்லைதட்டிபாகமுடன்ரவிதன்னிலே காயவைத்து, மழுங்கவேவோட்டிவிட்டுச் சீலைசெய்து புகழாககெஜபுடத்தில் போட்டாயானால், விழுங்கவேபற்பநிறங் கொக்குபோலாம் விண்ணுலகில்செய்பவரும் அருமைதானே.

அருமையாம்பற்பமதை யெடுத்துக்கொண்டு அப்பனேசிமிழ்தனிலே பதனம்பண்ணு, பெறுமையுடன்பணவிடைதான் சர்க்கரையிற்கொள்ள பேரானநவமூலமொன்பதும்போம், சிறுமைபடச்செயரோக மெல்லாம்போகும், சேர்மானமானதொரு கசரோகம்போம், ஒருமையுடன்தேகமது கற்றூணாகும் வுத்தமனேயுனக்கீடு சொல்வாருண்டோ. ௫௭௨

உண்டோதான்வையகத்தில் வுனக்கீடுண்டோ வுத்தமனே ராராஜபதியுந்தான், கண்டபடிபலபலவாஞ் சாத்திரத்தை கருத்திலே சத்தேனும் வினையாமற்றான், விண்டபொருளொன்றிருக்க வொன்றைகொண்டு விட்டகுறைதொட்டகுறை யில்லையென்று,சண்டியென்னும்மானிடரைப் போலேநீயும் சதாகாலமிருப்பதுநன் கல்லதாமே.

நன்கல்லாசாத்திரத்தைத் தாறுமாறாய் நலமுடனேபாராமற்கெட்டலைந்து, புன்கவிகளொன்றிருக்க வொன்றைப்பார்த்து புராதனத்தின் பொருளறியார்மட்டிமாண்பர் வன்கொடுமைசெய்பவரோடிணங்கிச்சென்று வாதாடிபலவாறும் வார்த்தைபேசி, தென்பொதிகைதனிலிருக்கும் சித்தர்நூலைத் தெளிவாகப்பாராத மட்டிமாடே.

மாடானமாடிதுதான்சென்மமாடு மாநிலத்தில்நூலறியா மட்டிமாடு, கூடானகூடழியுஞ்சண்டிமாடு குவலயத்தில்மெத்தவுண்டுகூறப்போமோ,தேடானபாக்கியமுமிங்கிருக்க தேசத்தில்சுட்டலைந்தோர்கோடாகோடி, பாடானவழியறிந்துகாணமற்றான் பாரினிலேவிட்டகுறைக்காளாவாரே. ௫௭௪



## சூதச்செந்தூரம்

ஆவாரையின்னமொருகருமானங்கேள் அப்பனேசூதமென்றராசன்தன்னை,சாவானகள்ளியென்றமரத்தில்தானும் சட்டமுடன்தான்குடைந்துசொல்லக்கேளும், பூவானசூதமதைவதனில்விட்டு துப்புறவாய்யதின்துளைமேலேகொட்டி, நாவானசீலையதுவலுவாய்ச்செய்து நலமாகவாறுதிங்கள்கழித்துப்பாரே. ௫௭௫

பார்க்கையிலேசூதமதுகாரமேறி பாலகனேவெண்ணையதுபோலேயாகும், தீர்க்கமுடன்வெண்ணைதனையெடுத்துக்கொண்டு திறமுடனேகல்வமதில்விட்டுக்கேளு, ஏர்க்கவேமுன்சொன்னமுப்பூதானும் யெழிலாகக்களஞ்சியது கூடப்போட்டு,நீக்கவேசூதமென்றவெண்ணைதன்னில் நிலையானதுருசுபலந்தன்னைப்போடே ௫௭௬

போடவேபற்பமதுகூடச்சேர்த்துப் பொங்கமுடன்கெந்தியென்றசெயநீர்தன்னால், நீடவேதானரைப்பாய்சாமம் நாலு நீட்சமுடன்வெண்ணையதுபோலேமைந்தா, கூடவேபில்லையதுதெல்லுபோலே குணமாகத்தான்செய்துரவியில்வைத்து, தேடவேவோட்டிவிட்டுச்சீலைசெய்து தெளிவுடனேபுடம்போடபற்பமாமே. ௫௭௭

பற்பமாங்கெசபுடத்தில்நீறும்பாரு பாலகனேசிமிழ்தனிலேபதனம்பண்ணு, அற்பமென்றுவிடுகாதேபுண்யவானே வன்புடனேவெண்ணைதனில்குன்றியுண்ண, கெற்பமேரோகமதிலிருக்கும்நோய்கள் குலையோடேபோகுமடாபின்னுங்கேளு, துற்பலத்தைநீக்கியல்லோவலுவைக்காட்டும் துடியானபற்பத்தின்நேர்மைதானே. ௫௭௮

நேர்மையாம்மேகமென்றரோகம்போகும் மேனியதுபளபளக்கும்சிவந்துகாட்டும், கூர்மையாம்கபரோகம்சில்விஷங்கள் கொடிதானவயிற்றுவலிமேவிளைப்பு, நீர்மையாம்பௌத்திரமாம் முளைமூலங்கள் தீமைசெய்யுங் கண்டத்தின்மாலைபோகும், வார்மையுடன்கைன்னேசைகன்னக்குத்து தளமானசிரந்திமுதலற்றுப்போமே. ௫௭௯

அற்றுமேபீசமதினின்றரோகம் அப்பனேகால்வீக்கம்கைவீக்கம்போம், முற்றுமேநரம்புகளும்முறுக்குமீறி முனையானதாதுவிர்த்தியதிகமாகும், பற்றாதஅரையாப்புகொறுக்குமூலம் படருமேதாமரையுமற்றுப்போகும், வற்றுமேதேகமதுவலுத்துக்காட்டும் வண்மையுடன்மேனியதுமின்னுந்தானே. ௫௮௦

## மேகரோகத்தயிலம்.

தானானயின்னமொருகுட்சஞ்சொல்வேன் தகமையுடன்மானிடர்கள்பிழைக்கவென்று,கோனானயென்தையர்காலாங்கிநாதர்குருபதத்

தையடியே னுந்தாள்பணிந்து, பானுனபராபரியைமனதிலெண்ணி படினேன்காண்டமேழாயிந்தான், தேனுனயின்னூல்தான் குருநூலாகும் தேசத்தில்கிட்டாதுசிவயோகிக்கே ௫௮௧

சிவயோகியானவர்க்குயெல்லாங்கிட்டும் தேசத்தில்மற்றவர்க்குக் கிட்டாதப்பா, தவயோகியென்றுலேகற்பங்கொள்வான் தாரணியில்மற்றவர்கொள்ளமாட்டார், நலயோகம்பெற்றவரும்சிவயோகியாவார் நட்டிலேல்மற்றவருமாவாரோதான், பவமகற்றும்புண்ணியர்க்குயெல்லமெய்தும் பாரினிலேசித்தனைப்போல்வாழலாமே. ௫௮௨

ஸ்நானவிதி.

வாழவாம்வெகுகோடிகாலமப்பா வரிசைபெறத்தலை முழுகவிபரங்கேளு, நீழவேநெல்லியுடன்மிளகுதானும்நெடிதானகடுக்காயும்மஞ்சள்கூட்டி, காழவேபரிசிவைந்துங்கூட்டி கருவாகசமயெடையாய்யெடுத்துக்கொண்டு, தாழவேகையாஞ்சாற்பாலுங்கூட்டிச் சாங்கமுடன் தானரைப்பாய்சாமம்நாலே. ௫௮௩

நாலானசாமமதுவரைத்துமைந்தா நலமுடனேஸ்தானமதுசெய்யும்போது, காலான்காலனுக்குயிடமேயில்லை கண்ணிரண்டுங்குளிர்ச்சியதுமிகவேயாகும், பாலானவிழியிரண்டுமெரிச்சல்நீங்கி பாலகனேசிரசுவலிதானேபோகும், மாலானமண்டையிடிக்கபாலத்துக்கு மார்க்கமுடன்சடலம்விட்டேகும்பாரே. ௫௮௪

ஏதுமேகண்ணோய்கள்தொண்ணூற்றும் பெழிலானமண்டையிடிக்கபாலக்குத்து, போகுமேவாதபித்தந்தலைகெட்டோடும் பொலிவானவாசியதுகீழ்நோக்காகும், வேகுமேயாவியதுமயிர்க்கால்பற்றி வெளிதனிலேகாற்றோடேசேரும்பாரு,பாகுடனேதேகமதுகற்றாணாகும் பாலகனேகாயாதிகற்பமூழ்கே ௫௮௫

மூழ்கினபின்பெண்ணுகாமதுபானந்தான் முக்கியமாய்மூன்றுமண்டலந்தானப்பா, மாழ்கியேசேராதேமனங்கொள்ளாதே மன்னவனேமூன்றுமுறையிப்படியேகாரு, தாழவேகற்பமதுகொண்டபோது தாரணியிலுன்னைப்போலொருவனுண்டோ, வாழ்கவேகற்பகோடிகாலமப்பா வளமையுடன்தானிருந்துகற்பங்கொள்ளே. ௫௮௬

சாரணைகுருமூலி.

கொள்ளவேயின்னமொருகருமானங்கேள் கொற்றவனேயாமண்டவரைக்குஞ்சொல்வோம்,மெள்ளவேசாரணையாமூலியப்பா மேன்மையுடன்சேரதுதான்கொண்டுவந்து, துள்ளவேபொடியாக்கிமைந்தாநீயும் துரையுடனேனிழல்தனிலுலர்த்திகொண்டு,கள்ளவேசூரணமாய்செய்துக்கொண்டு சற்பனையாய்ச்சுத்தியதுசெய்துகேளே. ௫௮௭



கேளேதான்பிட்டாவி செய்துக்கொண்டு இருபையுடன்மூன்றுமுறை சுத்திசெய்து, பாளேதான்போகாமல் சூரணத்தைப் பாங்குபெறரவிதனிலே காயவைத்து, விளேதான்இபயிலியு மிளகுதானும் திருப்பமுடன்சீரகமு மொன்றுங்கூட்டி, நாளேதான் போகாமல் னிசேர்த்து நலமுடனே சூரணமாய்க் கொண்டுபாரே, ௫௮௮

கொண்டவுடன் வாயுவென்றகுன்மம்போச்சு கொடிதானசூலையாடு வாதம்போகும், பண்டுடனே கால்குடைச்சல் பறந்துபோகும் பாரினிலேயென்னாலே வெளியிடாதே, இண்டுடனேசித்து மதத்தை யறுத்துப்போடும் இறயானவுளைமாந்தை யேகும்பாரு, அண்டமுடன்காயாதி கற்பமாகும் அப்பனேமூலியிட வேகங்கரணே, ௫௮௯

தாம்பிரபற்பம்.

காணவென்றலின்னமொரு மார்க்கம்பாரு கருவானதாம்பிரத்தின் மார்க்கஞ்சொல்வேன், தோணவேதாம்பிரத்தின் துட்டுவாங்கி துப்பரவாய்லேசாகத் தகடுதட்டி மாணவேசெய்கொடுவேலிதன்னை மயங்காமல் தானரைத்து வுண்டைசெய்து, வேணபடிகுகைபிடித்து தாம்பரத்தை மெதுவாகவதிற்பொதிய விபரங்கேளே. ௫௯௦

கேட்கவென்றல்சிலைய்து வலுவாய்ச்செய்து கெவனமுடன்ரவிதனிலே காயவைத்து, நீட்டமுடன்குழிவெட்டி யெருவடுக்கி நேர்த்தளமாய்ப் புடம்போட வெந்துநீறும், பூட்கமுடன்பட்டாறி யெடுத்துப்பாரு பொன்னவனேதுட்டுதான் பொருமிவெள்ளை, தாட்கமலாயகியாள்பாதத்தாணை தப்பாதுபற்பத்துக் குறுதியாச்சே. ௫௯௧

ஆச்சென்றுவிடுகாதே பின்னுங்கேளு அப்பனேகல்வமதில்விட்டு மைந்தா, பேச்சொன்றும்பேசாதே பொடியதாக்கிப் பேரானமுன்சொன்ன முப்புசேர்த்து, மாச்சலென்றசாரத்தின் செயநீர்தன்னால் மாளவேமூன்றுநாள் நெழுகரைத்து, பாச்சனுடன்பில்லையது லகுவாய்த்தட்டி பாலகனேரவிதனிலே காயவையே, ௫௯௨

காய்ந்தபின்புசில்லோட்டில் சிலைசெய்துகனமானகெஜபுடமாய்ப்போட்டுத்தீரு, மாய்ந்துமேதாம்பரமு மூலற்று மாசற்றபற்புமதுநவளம்போலாம், தீய்ந்துமேஆரலது மாண்டுபின்பு திரமான பற்பமது குருவுமாகி, சாய்ந்தனுடன்வாதத்திற் குறுதியாக்க சார்பானநறுபற்ப மிதுவென்பார்கள், வேய்ந்துமேசிமிழ்தனிலேபதனம்பண்ணு வேதாந்தராய்நமக்கு வருள்சொல்வாளே. ௫௯௩

சொல்லவென்றல் வெள்ளிதனில் யெட்டுமாற்று சொர்ணமதுபிறவிக்கு யீடுமாச்சு, நல்லதொருபிறவியிட்டுத் தங்கமென்பார் காதாக்கள்செய்கின்ற வேதையாச்சு, புல்லறிவுடையதொரு புத்திமான்

கள் பூதலத்தில் செய்துமல்லோ யோகஞ்செய்வார், வில்லணிந்த வேந்தர்களுஞ் செய்யலாகும் விருப்பமுடன்வாதத்தின் பெருமை பாரே. ௨௯௪

பார்க்கவென்றால் தாம்பரத்தின் பற்பந்தன்னைப் பாங்குடனே நெல்லிடைதான் கொண்டபோது, தீர்க்கமுடன்வனுபான ஞ்மேறிந்து கொண்டால் திறமுடனேதேகமது கற்றாணுகும், சேர்க்கமுடன் வாயுவென்ற தென்பதும்போம், செயலானபித்தமது நாற்பதும்போம் மூர்க்கமுடன் சேத்துமங்கள் தொண்ணூற்றாறும், முட்டோடே போகுமடா முடிவுதானே. ௨௯௫

தானேகேள்பற்பமது கொண்டபோது தாக்கானவாசியது கீழ் நோக்காகும், மானேகேள்சிவராஜயோகங்கிட்டும் மன்னவனேநீயு மொருசித்தனுவாய், வேமேதான்சொன்னபடி யோகமார்க்கம்வெளி ப்படையாய் யெப்போதுங் காணலாகும், நாமேதானுரைத்தபடியே மூகாண்டம் கடுகாண்டமிதிலதிகங் காணலாமே. ௨௯௬

## தங்கபற்பம்.

காணலாமின்னமொரு மார்க்கம்பாருகனமான மாணுக்கள்பிழை க்கவென்று பூணலாம்தங்கமென்றகாசுதன்னைப் புகழாகத்தானெடுத் துச்செப்பக்கேளு, தோணவேமூலியது கவுழ்தும்பைத்தான் தோற் றமுடன் முன்சொன்ன முப்புசேர்த்து, வேணவேதானரைத்து மூ சைசெய்து விருப்பமுடன்காசதனை யுள்ளேவையே. ௨௯௭

வைத்துமேசீலையது வலுவாய்ச்செய்துவளமைபெறரவிதனிலே காயவைத்து, தைத்தமுடன்குழிவெட்டிப் புடமேபோடு தாக்குட னே கெஜபுடத்தில் வெந்துநீறும், பைத்தவிழாமூசைதன்னை யெடு த்துப்பாரு பாலகனே தங்கமென்ற காசுதானும், கைத்தவமாய் பொ ருமியதுநொறுங்கினிற்கும் காவலனேதானெடுத்து செபக்கேளே.

செப்பவென்றால்நாவில்லைப்பாவுமில்லை செயலானபாக்கியமுவித ஞலாகும், ஒப்பமுடன்தானெடுத்துக் கல்வமிட்டு வுத்தமனேகவு தும்பைச்சாற்றினாலே, கொப்பனவே தானரைப்பாய் நாலுசாமம் கொற்றவனே வெண்ணெயதுபோலேயாகும், எப்படியும்வெண்ணெ யதுபோலேயானல் யெழிலானபற்பத்துக் காரியாச்சே. ௨௯௯

ஆதியாம்பூமியுடனகத்தாலே அப்பனேதங்கமது பற்பமாகும், சோதியாம்தங்கமென்ற வெண்ணெதன்னைச் சுருதியுடன்பில்லையது லகுவாய்த்தட்டி, வாதிகள்செய்பாகம்போல மனதிலூணி மயங்கா மல்ரவிதனிலேகாயவைத்து, சாதியாமோராருவில் புடத்தைப்போடு தப்பாதுசெஜபுடத்தில் நீறுமாமே. ௩00



நீறியதோர்பற்பமதைபின்னுங்கேளு நேர்மையுடன்தானெடுத் துக்கல்வமிட்டு, கூறியதோர்வாக்கதுவும்பிசகாமற்றான்குணமாகதா னரைப்பாய் செயநீர்தள்ளுல், மாறியதோர்சாரமென்றகெந்திநீறு மார்க்கமுடன்றானரைப்பாய் மைபோலாக, மீறியேபோகாமல் வெ ண்ணையாக்கி மிதியுடன்பில்லைதட்டிக் காயப்போடே. ௩0௧

போடேதான்ரவிதனிலே காயவைத்துப்பொங்கமுடன் வோட் டிலிட்டுச்சீலைசெய்து, நாடேதான்குழிவெட்டிப் புடத்தைப்போடு நலமுடனேகெஜபுடத்தில் நீறும்பாரு, கூடேதான்புடமதுவைத்தி றந்து பார்க்க குணமானபற்பமதுதவளம்போலாம், தேடேதான் பற்பமதைப் பதனம்பண்ணு தேசத்தில்கிட்டாதுசிவயோகிக்கே. ()

கிட்டாதுபாவிகட்கும்கருமிகட்கும் கீர்த்தியுள்ளயுத்தமர்க்குப் பலிக்கும்பாரு, எட்டாதபொருளெல்லாமிதிலேதோற்றும் யெழிலா னவுடலாவிப்பொருள்களெல்லாம், விட்டாரும்விடுகுறைகளெல்லா ங்காணும் வெழிலானவிதியிருந்தால் லபிக்கும்பாரு, முட்டாளாயிரு க்காமல் முடிமன்னநீ முறையோடேசெய்துமல்லோமுடிவுகாணே.

## அநுபானம்.

காணவென்றால் பற்பமதையுண்ணக்கேளு கருவானலேகியங்க ள் கிரதமாகும், தோணவே நெய்தேனும் வெண்ணெயாகும் தோற்ற முடன் யிஞ்சிரசம்முலைப்பாலாகும், பூணவேயிந்தவித வனுபானங்க ள் புகட்டினல் காயகற்பமாகும், காணவேகைபாகம் செய்பாகங்கள் நலமுனேதாமறிந்துவுண்ணுவீரே. ௩0௪

உண்ணையிலேசேத்துமங்கள் தொண்ணூற்றாறும் வுத்தனேபித்த மது நாப்பதும்போம், நண்ணமுடன் வாயுவென்றதெண்பதும் போம் நயமானமேகவகையிருபத்தொன்றும், குண்ணவேகுன்மமெ ன்றதெட்டும்போகும் கூரானகிரந்திபதினெட்டும்போகும், வாகாக நீரழிவுயாறும்போமே. ௩0௫

ஆறானகலமேகம் அகன்றுபோகும் அப்பனேவுளமாந்தை கவி ஙிபோகும், வாரானகுஷ்டம்பதினெட்டும்போகும் வாகானவண்டத் தின் வாய்வுபோகும், தூறானமேகிளைப்புத் தீர்ந்துபோகும் துடியா ன நரம்பெல்லாம் முறுக்கேபோகும், சாறானமூலிகைகளிதற்கொவ் வாது சட்டமுடன்போகரிஷியுரைத்ததாமே. ௩0௬

உரைத்தோமேசீனபதி மாந்தருக்கு வுத்தமனேகண்காணு வு ணவையெல்லாம், கிரைத்துவிட்டேன் வெள்ளையென்றமாந்தருக்கு

விறையானசைமுறையும் முழுதுஞ்சொன்னேன், கரைத்துவிட்டே ன் காயாதிகற்பந்தன்னை, கருவாகவுளவுதனையறிந்துகொண்டார், ம லைத்துமேகற்பமதுயுண்டபோது பறக்குமடா நோயேது பிணிதா னேதே. ௪௦௭

ஏதானதங்கபற்பமுண்டபோது யெழிலானதேகமதுகற்றாளு கும், வாதானகமனுக்குஅருதியில்லை வந்தநோய்தீர்ந்துவிடும் வசனி த்தேனன், சூதானதங்கமதையுண்டபேர்கள் துரைகோடிகாலம்வ ரை யிருக்கலாகும், தீதானபிணிகளது யிதிலேதோயும் இரளான நோய்பிணியும் பரக்கும்பாரே. ௪௦௮

பாரேதான்தங்கமதைகொண்டபோது பாரினிலேயீயுமொரு சித்தனவாய், வேரேதான்சாத்திரத்தின்வுளவுபார்த்து தெளிவான கைமுறைகளறியவேண்டும், நேரேதான் அறிந்தாலும் வொன்றுமில் லை நேர்பான வழியோடுசெய்தால்சுத்தி, கூரேதான்குணங்கண்டு கு றியுங்கண்டு கொப்பெனவேசெய்பவனேஞானியாமே. ௪௦௯

ஆமேதான் தங்கபற்ப முண்ணும்போது அப்பனேபத்தியங்க ளுரைக்கக்கேளும், நாமேதானசொன்னபடி புளியுப்பாகா, நலமுட னேபாலன்னங்கொள்ளநன்று, தேமேதான்பதனொள் யிப்படியே கொண்டுதெளிவாக மண்டலந்தான கொள்ளக்கேளு, வேமேதான் சுட்டபுளிவறுத்துப்பாகும் வேகமுடன்மண்டலந்தான் வுண்டுகொ ள்ளே. ௪௧௦

கொள்ளவேபற்பமது வுண்டுகொண்டு கோடானகோடிமுறை சித்துசெய்வீர், விள்ளவேகன்னியெனற மாயாகற்பம் விணிலையனு போக மிகவுந்தள்ளு, மெள்ளவே கைபாகஞ் செய்பாகத்தை மே இனியில்கண்டறிந்துபின்னுங்கேளு, எள்ளளவுபிசகதுதான் வாரா வண்ணம் யெழிலுடனேசெய்துமலலேர வருள்தான்காணே. ௪௧௧

பொன்னுவாரை சூரணம்,

காணவேயின்னமொரு கருமானங்கேள் கவனமுடன் யானு ரைப்பேன்கடியமூலி, நாணவேபொன்னிவாரை தனனை நலமாகச் சமூலமதைக்கொணர்ந்து, பாணமெனும்ரவிதனிலே காயவைத்து பாகமுடன் சூரணித்துவடிறுன்கொண்டு, தோணவேபாண்டமதில் பாலைவிட்டு துப்புரவாய்வேடுகட்டிசீலைமூடே. ௪௧௨

மூடியதோர்சீலைதனில் சூரணத்தைமுதிராமல்பதமுடனேதான மைத்து, நீடியேமேற்பாண்டந்தன்னைமூடி கிணைவாகத்தானெறிப்பா ய்கண்டுமட்டும், சாடியேபாண்டமதைதிறந்துபார்த்து சட்டமுடன்



சூரணத்தையெடுத்துக்கொண்டு, வாடியேதிரியாமல்ரவியிற்றுணும வளமுடனேசூரணத்தைக்கொட்டியாற்றே. ௪௧௩

ஆற்றியே சூரணத்தைரவியிற்போட்டு அப்பனேகாய்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு, தேற்றியுடன்முன்சொன்ன முப்புசின்னம்நெ டிகாணகளஞ்சியது கூடச்சேர்த்து, ஆற்றியேசீனியது சரியாய்க் கொண்டு துப்புரவாய்திரிகடிகைதன்னையப்பா, மாற்றியேவெண்ணை தனில்கொண்டாயானால் மண்டலத்தில் போகுமடாபிணிகள்தானே

தானானபிணிகளது சொல்லக்கேளும் சர்பானயீளையுடன்பிரு மல்போகும், வேனானகுஷ்டம்பதினெட்டும்போகும்வேகமுடன்தழு வணையும்மாறிப்போகும், தேனானதேன தனில்கொண்டபோது தேற் றமுடன் சொரிசிறங்குவுத்திரம்போம், ஊனானகசரோகம் திரும் தீரும்வுத்தமனே சில்விஷங்களற்றுப்போமே. ௪௧௫

போகுமேகுலையொடுகரப்பன்போகும் பொல்லாத சில்விஷங்க ளனைத்தும்போகும், ஏகுமேதேகமதுகற்றாறுதும் யெழிலானசட் டயதுதள்ளும்பாரு, சாகுமேகுழிச்சிலந்திபிளவையாவும்சண்ணுமடா வுடலைவிட்டுக்காடேபோகும், பாகுடனேமேகிலைப்பு தீர்ந்துபோகும் பாரினிலேயிதுவுமொருகற்பமாமே. ௪௧௬

பேய்கள்ஆட.

கற்பமாயின்னமொருபாகஞ்சொல்வேன் கருவாகத்தான்கேட் பீர்கருத்துளப்பா, அற்பமென்று நினையாதேயிந்தபாகம் அப்பனே குரியென்றநத்தைச்சூரி, பொற்பமுடன்வெள்ளிநாள் வேர்பிடிங்கிச் சுத்தமுடன்பூசைதனில்குளிசமாடி, சற்பமென்றராஜவிடமையைத் தீட்டி சட்டமுடன்வருவேற்றித்தீபம்போடே. ௪௧௭

போடவேமாடனுமேயெதிரேநிற்பான்பொங்கமுடன்வருவது தான் லட்சமாகும், நீடவே பங்-சிங்-வங் கென்றேயோது நிலைக்கு மட்டாமாரணமுமிதனாலாகும், கூடவே நமசியென்றேயோதுகுடியோ ட்டுப்பூண்டுக்குக்காப்புகட்டி, தேடவேலட்சமுரு தன்னைப்போடு தெளிவானசித்திமுதலாகும்பாரே. ௪௧௮

பாரேதான்லட்சத்தையெழுதியோதிபாகமுடன்குளிசமதில்க ட்டுவாய் நீ, நேரேதான்லட்சமுருவோதிப்பின்பு நேர்மையுடன்தலை தனிலே நிரைவாரு, தேடேதான்லலாடமதில் கருமையைத்தான் தேற்றமுடன் தீட்டியல்லோருங்தலைத்து, ஊரேதான் இழக்குமுகந் தனிலிருந்திவுத்தமனே செபித்திடுவாய் பூதந்தானே. ௪௧௯

தானானபூதமது தலைசுழட்டி தாரணியில்நின்று விளையாடும்பாரு, கோனான யெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனார் தன்பாதம்வணங்கியல்லோ, தேனானமனோன்மணியைத்தாபித்தேதான் தேற்றமுடன்சக்கரத்தில்ஞுந்தவைத்தால், மானானவேதாளம்பிரமராட்சன்மண்மீதிலிருந்துகொண்டு வாடும்பாரே. ௪௨௦

ஆடுமேகைதாளமதிகம்போடும் அப்பனேவேணுமென்றவஸ்து கேட்கும், பாடுமேகொண்டாட்ட மிகவடிக்கும் பாத்தவரைக்கண்ணாலேமிகமயக்கும், ஓடுமேபஞ்சாட்சர மேலேபட்டால் வுத்தமனே சிரித்துவிளையாடும்பாரு, கேடும்கெடுதிகளு மிகவேபேசும் கேட்டதொருகேள்விக்கு யெதிர்சொல்லாமே. ௪௨௧

சொல்லதே பலபலவாய் வார்த்தைபேசி துரைமுகத்திலிருந்துகொண்டுகூத்தாமாடும், புல்லவேகருவாலேயனேகம்வித்தைபூதலத்தில்லெகுசாகயாட்டலாகும், கொள்ளவேபூதமது வினோதவித்தைக்கூறினார்பலபலவாம்சாத்திரத்தில், வெல்லவேநம்முடைய நூல்கள்யாவும்வெளிப்படையாய்க்காட்டினோ மூலகத்தோர்க்கே. ௪௨௨

பெருங்கொடிப்பைநெய்.

உலகத்தோர் பிழைக்கவென்றுயின்னஞ்சொல்வோமுத்தமனே யுறுதிமனங்கண்டுகேளு, பலவகையாஞ்சாத்திரங்கள்பலவும்பார்த்து பாரினிலே கெட்டவர்கள்கோடாகோடி, நிலவுபோல்ஏழைகள்பிழைக்கவென்று நீணிலந்தில் போகர்யாம் பாடிவைத்தோம், சிலகதைகள்வீணென்றுசொலலிவிட்டாலும் சிறப்புடன்வுட்கருவைவிடான்தான்பாரே. ௪௨௩

பார்க்கையிலேபெருங்கொடிப்பைகொண்டுவந்துபாலகனேசார்பிழிந்துசாற்றக்கேளு, தீர்த்தமுடன்சோதுதான்யெடுத்துமைந்தாதிறமுடனேசுக்கதுவும்சீரந்தானும், சேர்க்கவே திப்பிலியுங்கோஷ்டத்தோடு செம்மையுடன்கஸ்தூரிக்கூடச்சேர்த்து, ஆர்க்கமுடன்கூகைநீர்தன்னோடொக்க அப்பனே யெடைகாலாய் யெடுத்துக்கொள்ளே.

கொள்ளவேயாவிநெய்சரியதாக கொற்றவனேதான்சேர்த்துக்காய்ச்சிக்கொண்டு, மெள்ளவே மெழுகுபதம் வடித்துக்கொண்டுமேன்மையுடன்மண்டலந்தான் கொண்டுவந்தால், கள்ளமென்னுங்கோழையது யெங்கேபோச்சு, கடிதானசபரோகம் தியங்கலாச்சு, உள்ளபடிமேகமென்றரோகம்போகும் வுத்தமனே சில்விஷங்களற்றுபோமே. ௪௨௫

அற்றதொருவரையாப்பு புரைகள்போகும் அப்பனேகண்டத்தின்மாலைதீரும், உற்றதொருவகுலையென்றகட்டிதீரும்வுளமார்கை



குன்மமுதலகன்றுவோடும், பெற்றதொருமாதுக்குவயத்தில்ரோகம் பேசாமல்லோடுமடா யின்னங்கேளு, மற்றதொருமேகங்கள்கசரோகங்கள் மாநிலத்தில்நிற்காது திண்ணந்தானே. ௪௨௬

வல்லாரைநெய்.

திண்ணமாமின்னமொருகற்பம்பாரு திறலான வல்லாரைபெரியாவாரை, நண்ணமுடன் மூலிதான்சேர்தானாழி நலமுடனேகொண்டுவந்துசெப்பக்கேளு, வண்ணமுடன் திப்பிலியுங்கோஷ்டந்தானும்வளமரனமிளகுடனேமதுரந்தானும், எண்ணமுடன்சுக்குடனேகூகைநீறும்யெழிலான கிராம்புடனே சாதிக்காயே. ௪௨௭

காயானவால்மிளகு கூடச்சேர்த்து கருத்துடனேசாபத்திரிசரியதாக, மாயானவலம்புரியுமிடம்புரியுஞ் சேர்த்துமன்னவனேமயக்காமல் குங்குமப்பூ, தாயானகஸ்தூரிகோரோசனைத்தானும் தகமையுடன்வகைக்கவொரு களஞ்சதாக, தோயாதபாலுடனேயித்தனையும்போட்டு துப்புரவாய்தானரைப்பாய்செப்பக்கேளே. ௪௨௮

செப்பவென்றால் நெய்பதுவுஞ் சேர்தான்பாதி செம்மையுடனொன்றாகக்காச்சியேதான், ஒப்புடனேகடுகுபதம்தானிறக்கிவுத்தமனேகணபதிக்குப் பூசைசெய்து, தப்பிதங்கள்நேராமல் மைந்தாநீயும் தன்மையுடன்வடிபணிந்து சிரங்குவித்து, மைப்பதுவே சிஷாவிற்பதனம்பண்ணு மகத்தானநெய்யதுவுங் காணூர்தாமே. ௪௨௯

காணூரநெய்யதனை யார்தான்கண்டார் காசினியில் சித்தர்முனிரிஷிகள்வேதை, தோணவே காயகற்ப ரோகநெய்யாம் தொல்லுலகில் சீனபதி தேசத்தார்க்கு, வேணவேகாலாங்கி நாதர்தாமும் விருப்பமுடன் செப்பவென்ற நெய்யுமாச்சு, பூணவேயறிவுள்ளான் செய்துபார்த்துப் பொங்கமுடன் சேமித்தகாயமாமே. ௪௩௦

காயமாமிந்தநெய்வதிதங்கேளுகாயாதிகற்பங்களுண்டபேர்க்கு நேயமுடன் வாரத்துக்கிரண்டுமாற்கம் நேர்மையுடன் வந்திசந்திக்கொள்ளவேண்டும், மாயமெனுங்கள்ளாசை நீக்கவேண்டும் மதுபானம்விரும்பினால் காயமில்லை, தூயமுடன்நெய்யதனைக்கொண்டபோது தடியானரோகமெல்லாந் துலைந்துபோமே. ௪௩௧

துலைந்துவிடுங் காய்பனென்ற ரோகம்போகும்துறையான மதுமேகம்விட்டேயோடும், அலைந்துகெட்ட கசரோகமகன்றுபோகும் அப்பனே வரையாப்பு மேகம்போகும், தலைவலியிமண்டையிடிசன்

ணல் போகும் சண்டாளவபற்றுவலி காசியோடும், கலேந்துவிடுமகாது
நோய்கண்ணேப்போகும் கால்வலியுமேல்வலியும் தகைத்துபோமே.

தகைத்துமே வாய்ப்புண்ணுவாய்நாற்றம்போம் தாரணியில்லா
தமென்றரோகம்போகும், திகைத்துமேருன்மவலிதன்மரோகம்தீரா
தகவுசியென்றமகோதரங்கள், பகைப்புடனேபீசத்தின்வாயுவீக்கம்
யாங்கான குடைச்சல்முதல்வலிப்புதீரும், நகைப்புடைய மாதருட
ரோகம்போகும் நாட்டாதுபிணிமூப்பு நாடாதன்றே. சஙங

சதாவெரி நெய்.

நாடாது காயகற்பங்கொண்டபேர்க்கு நலமானநெய்யது தான்
கொள்ளவேண்டும், தேடானகாயத்துக் கிந்தநெய்தான் தேற்றமுட
ன்வாரத்துக்கிரண்டுமுறைப்பா, வீடானதேகத்துக்குறுதிநெய்யாம்
விருப்பமுடன்பாடிவைத்தேன் போகர்நாமும், காடானசதாவேரிச
மூலங்கொண்டு தளர்ச்சியுடன் சார்பிழிந்து சாற்றக்கேளே. சஙச

சாற்றவென்றால் சதாவேரி சேரதாகும் சார்பானமுசுமுசுக்கை
சேரதாகும், கூற்றனென்னுங் குதம்பைச்சார் சேரதாகும் குணமா
னமாதளேயுஞ்சேரதாகும், மாற்றமென்றவாவிநெய் சேரதாகும் மக
த்தானதேனதுவுஞ் சேரதாகும், சீற்றமுடன்சடைசரக்கு செப்பக்
கேளுசிறப்புடனேசேர்க்கும் வகைக்கூறக்கேளே. சஙரு

கேளேதான் திப்பிலியும் விசுவாசிதானும்கெடியானசுக்குடனே
வோமந்தானும், விளேதான் கூகைநீர்பாங்கிதானும்வுத்தமனேகரு
வாபின்பட்டைதானும், பாளேதான்போகாமல் மதுரந்தானும் பாங்
குடனேவில்வாணகசிவகைதேவறும், தாளேதான்வகைக்குவொருபலம
தாகச்சற்பனேயாய்ப் போட்டுமிகக்காச்சிடாயே. சஙசா

காய்ச்சிகையில் கஸ்தூரிகுங்குமப்பூ கருவானரோசனேயுங்கள
ஞ்சிசேர்த்து, மாய்ச்சலுடன் மெழுகுபதம் தாணிறக்கிமென்னவனே
வடிகட்டியெடுத்துக்கொண்டு, பாச்சலுடன்வாரத்துக்கிரண்டுமுறை
தானும் பாங்குடனேயக்கிசந்தி கொண்டாயானல், மேச்சலென்னும்
ரோகமதுவகன்றுபோகும் மேதினியி லெந்நாளுமிருக்கலாமே. ()

இருக்கலாம் கற்பாந்தகாலமட்டும் யெழிலுடனேவாசியோகங்
கொள்ளலாகும், பொருக்கலாஞ்சிலயோகந்தன்னிற்சென்று பொங்
கமுடன்வாசியைத்தான் மடக்கிக்கீழால், சுருக்கவேகர்மேந்திரிய
மனைத்தும்போக்கி சதாகாலஞ்சின்மயத்திலிருநதுகொண்டு, வெருப்
புடனே மர்யாதிரட்லைசதன்னே வெறுப்பதுவேயுந்தமற்கு புனித
மாமே. சஙஅ



புனிதமாம்நெய்யதனைக்கொண்டபோது புகழானகச்ரோகமக
ன்றுபோகும், வனிதமுடன்வாயுவென்றதெண்பதும்போம் வாகான
பித்தமதுநாற்பதும்போம், துனிதமுள்ளசூலேபதி னெட்டும்போகும்
துலையாதகுன்மமென்றரோகம்போகும், பனிதமுடன்பாரிசமாம் வா
யுபோகும் பறக்குமடாதேகத்தில் ரோகம்போமே. சஙகூ

போமேதான்கரப்பனென்றபதினெட்டும்போம் பொல்லாதவ
யிற்றுவலிபொருமல்போகும், வேமேதான்கால்வாதம்கைவாதம்போ
ம் மிக்கானகுடல்பிரட்டல்யாவும்போகும், நாமேதான் சொன்னபடி
சேத்துமங்கள் நாடாதுயென்னுளுநாடாதப்பா, வேமேதான்காச
மொடுயீளேபோகும் வேகமுடனவதுவையென்றகட்டிபோமே. ()

கட்டியென்றால்கொசியென்றகட்டியோகும் கருவானவுதிரத்தி
ன் கட்டிபோகும், அட்டியில்லாவனலதுவும்பறந்துபோகும் அப்ப
னே குடைச்சல்முதலகன்றுபோகும், துட்டமெனுங்கொடிரோகம்
மாந்தைரோகம் துடித்துமேகூடுவிட்டுக்காடுபோகும், திட்டமுடன்
காயாதிகற்பங்கொண்ட தேகத்துக்கிந்தநெய் வேண்டும்பாரே. ()

வேண்டுமேகாயாதிசெந்தூரத்தை விருப்பமுடன்கொண்டவற்
கும்பேதியாகா, தீண்டவுமேவிஷமதுவுமேறவாகா திகழானவானமது
சேரலாகா, காண்டிபனுயிருந்தாலும்காயகற்பம் காசினியில்கொள்
ளாவிட்டால் காயம்பாழாம, தூண்டுமிகக்குருபரனைதானறிந்து துப்
புரவாய்யுண்பவனே சித்தனுமே. சசஉ

சித்தனுப்பிறந்தாலும் யொன்றுமில்லைசெகதலத்தில் வுண்மை
தனையறியவேண்டும், மெத்தவேவழிபோடே காயகற்பம் வெகுபேர்
களுண்டுமல்லோ கெட்டுப்போனுர், சத்தேனுயறிவிருந்து நூலைப்
பார்த்துசதாகாலம் நேர்மையதுபாராமற்றான், பித்தனைப்போல்
கெட்டலேந்து பிசாசுபூண்டு பேருலகில் யாண்டவர்கள்கோடியாமே.

கோடியிலேயொருவருண்டுகருவாளியப்பா குணமுடையான்ம
னமுடையான் மானமுள்ளான், பேடிகள்போலவாய்வீணர் மெத்
தவுண்டு பேருலகில்யொன்றறியார் கழுதைமாண்பர், தேடியேவலே
ந்துமல்லோ காயகற்பம் திறமுடனேயுண்டவன்றுனென்றுசொல்லி
வாடியேபதிகெட்டுநிலேயுங்கெட்டுவாட்டமுடன்மாண்டவர்கள் கோ
டியாமே. சசச

### காயகற்பமுண்டவற்குபுகை.

கோடியாமின்னமொருகருமானங்கேள் கொற்றவனே புகையொன்றுகூறக்கேளும், நாடியேகருவூமத்தன்சமூலங்கொண்டு நலமானபேய்ப்பாகல்மூலிதானும், தேடியேசிரியானின்நங்கைதானும் தெளிவானகெஞ்சாவின்மூலிதானும்,பாடியேபொடுதலையின்சமூலந்தானும் பாங்கானசெருப்படையின்மூலியாமே. ௪௪௫

மூலியுடன்தைவேளைசமூலந்தானும் முனையானவழிஞ்சியிடமூலிதானும், சிவிபாங்கொடிவேலிமூலிதானும் வீறானகாட்டிஞமணக்கின்மூலம், சாவியாஞ்செம்பரித்திமூலிதானும் சாரானகதலிபிடசாருதானும்,வாலியாம்வழுதலையின்மூலந்தானும் வாசானகையானில்மூலிதாமே. ௪௪௬

தாமானபொன்னிஞவாரைமூலம் தாக்கானகுறிஞ்சாவின்மூலிதானும், காமானகருஞ்சூரிமூலிதானும் கருவானபேச்சுரையின்மூலிதானும், நாமானநத்தையென்றசூரிதானும் நலமானபேய்ப்பிட்டிமூலிதானும், பாமானமானதொருதிகைப்பூண்டுதானும் பண்பானபேயக்கொல்லிநாய்க்கொல்லிதானே. ௪௪௭

தானானகரும்பசளைசெம்பசளைதானும் தாக்கானகொடிவிரியன்செல்விரியன்தானும்,பானானசாட்டாணையெழில்மூலிதானும் பாங்குடனேமதிமயக்கமிகவேயாகும், கோனானயெனதையர்காலாங்கிநாதர் குருசொன்னபடியாகவனமூலிதனனே, தேனானமூலிகைகள்சமூலங்கொண்டு தேற்றமுடன்தானெடுக்கவைகைபக்கேளே. ௪௪௮

கேட்கவென்றுல்மூலிதனைசமூலங்கொண்டு கொடிதானரவிதனிலேகாயப்போடு,சேட்கமுடனகல்லுரலில்போட்டுக்குத்தி நேர்மையுடன்பொடியாக்கித்தூளதாக்கி,மீட்கமுடன வெள்ளாட்டின்பாலினாலே மேன்மையுடன்தானரைப்பாய்நாலுசாமம், வாட்டமுடன்தானரைத்துபில்லைதட்டி வளமாகரவிதனிலேகாயப்போடே. ௪௪௯

போட்டபின்புபில்லைதனைபதனம்பண்ணு பொங்கமுடன்நாதாக்கள்சொற்படிக்கி, தேட்டமுடன்பில்லைதனைப்பதனம்பண்ணு தெளிவானகாயாதிகற்பவுண்டை, நீட்டமுடன்காயகற்ப செந்தூரத்தை நீணிலத்திலகொண்டதொருஞானிகட்கு,மூட்டமுடன்கருவாதிமூலியுண்டை முனையானசிலும்புதனில்வைதனக்கேளே. ௪௫0



கேளேதான்சிலிம்புதனில்மூலியுண்டைகிருபையுடன்தான்வைத்துசொல்லக்கேளு, பாளேதான்போகாமல்அக்கினியைப்போடு பாகமுடன்சிலும்பிதனைக்குடித்தபோது, நாளேதான்நாதாக்கள்சொற்படிக்கு நலமானபுகையதுவுங்கபாலந்தன்னில், சூளேதான்புகையதுவும்மேலேநோக்கி சுருக்குடனேலாகிரியைக்காட்டும்பாரே. ௪௫௧

பாரேதான்சிலும்புதனில்புகையெழும்பி பண்பானலாகிரியைமீட்டும்போது, நேரேதான்காயாதிகற்பசெந்தூரந்தான் நீடாழிக்காலம்வரைப்பழுதாகாது, கூரேநான்நவகோடிரிஷிகள்தாமும் குறிப்பானசித்தர்முனியனேகம்பேர், சீரேதான்யிப்படியே சொல்லாமற்றான்சீரானசெந்தூரங்கெடுத்தார்காணே. ௪௫௨

காணவேகாயாதிசெந்தூரத்தை காசினியிலிப்படியேகெடுத்தார்தாமும், தோணவேகாயாதிகற்பத்துக்கு துறைகோடிமுறைகோடிதொந்தங்கோடி, பூணவேயிப்புகையைச்செய்யாவிட்டால் புகழானசெந்தூரங்கெட்டுப்போகும், வாணவேகாயாதிகொண்டபேர்க்குவளமுடனேலாகிரிகள்வேண்டும்பாரே. ௪௫௩

வேண்டியதோர்கருமான மின்னஞ்சொல்வேன் விருப்பமுடன்காயாதிகொண்டபேர்கள்,தூண்டியேமுன்சொன்னசூரணத்தை துப்புரவாய்கியாழமதுசெய்துகொண்டு, தாண்டியேயாவின்பால் சீனிதானும் சட்டமுடன்தூள்போட்டு கியாழஞ்செய்து, தீண்டியேவிஷம்போகவந்திசந்தி திறமாககுடிப்பதுவேயமுர்தமாமே. ௪௫௪

ஆமேதான்கியாழமதையுண்டபோது அப்பனேகாயாதிதேகந்தானும், நாமேதான்சொன்னபடிக்கிச்சைசெய்தால் நலமானசெந்தூரமேனியூறும், போமேதான்கியாழமதுகாயாதிக்குப் பொங்கமுடனனுபானமென்னலாகும், தாமேதான்யின்னமொரு வயுணஞ்சொல்வேன் தகமையுடன்கேட்பவனேசீஷனுமே. ௪௫௫

சீஷனும்மானிடர்க்குச்சொல்வேன்பாரு சிறப்பானகாயாதிகற்பத்துக்கு, பாஷமென்றபசுமூலியுண்டைதன்னை பட்சமுடன்நெய்தேனுங்கூடச்சேர்த்து, கோஷமென்றசக்கரையைப்பாகுசெய்து கொப்பெனவேசூரணத்தைபோட்டுகிண்டி, தோஷமதுநீங்கியல்லோமைந்தாகேளு துப்புரவாய்லேகியம்போல்கிண்டிடாயே. ௪௫௬

கிண்டியேலேகியத்தைப்பதனம்டண் ஊகிர்த்தியுடன்வாரத்துக்கிரண்டுமுறைதானும், தொண்டமுடன்அம்பாளைப்பூசித்தேதான் தே

சிக்காய்தானளவுகொண்டபோது, கொண்டவுடன்காயாதிதேகந்தா னும் கொற்றவனேசற்றானுமென்னலாகும், அண்டர்முனிதேவாதி ரிஷிகள்தாமும் வன்புடனேலேகியத்தைக்கொள்வார்பாரே. ௪௫௭

பாரேதான்காயாதிகற்பவிண்டை பாரினிலேகொண்டவர்க்குப் பலனைக்கேளீர்,நேரேதான்யேழானைப்பலனுண்டாகும்நேர்மையுடன் மானிலத்திலிருக்கலாம்பார், சீரேதான்சிவயோகந்தன்னிற்சென்றால் சின்மயத்தின்அஷ்டாங்கங் காணலாகும், வேரேதான்காண்பதுவும் வொன்றுமில்லை வேதாந்தசுடரொளியைகாணலாமே. ௪௫௮

காணலாம்ஞானவொளிப்பிரகாசந்தான் கடிதானயேழுவகைத் தோற்றந்தானும், பூணலாம்தேகாதிகாயத்துக்கு பூட்டலாம்வேதாந் தத்தாயின்சாரம், பாணமுடன்ஞானவுபசாரந்தன்னை பார்வையுடன் மனக்கண்ணால்காணலாகும், நாணமுடன்பரவெளியைக்கண்டபோது நாதாந்தச்சித்தர்களிலொருவனாச்சே. ௪௫௯

ஆச்சென்றபெரும்பாதைதன்னிற்சென்றால் அப்பனேதத்து வங்கள்தொண்ணூற்றாறும், மூச்சனுடன்மானிலத்தில்காணார்சித்தர் மனக்கண்ணாலேயொருவர் காண்பார்கண்டீர், மூச்சடங்கியோகங் கள்செய்தபேர்கள் மூதுலகிலொருலாபங்கண்டதில்லை, பேச்சனுடன் வெறுபேச்சுப்பேசியல்லோபேருலகில்வேந்தரெல்லாம்மண்ணானாரே

மண்ணானார்வொருவருந்தான்மண்டலத்தில்மகிட்சியுடன்வாழ்ந் தவர்களாருமில்லை,திண்ணமுடனிறந்தவர்களொழுந்ததுண்டோ தேச த்தில்கட்டுமொழியென்னலாகும், நன்னமுடன்நாதாந்தச்சித்துவெல் லாம்நலமுடனே வேதாந்தம்பேசியேதான், எண்ணமுடன் வெகு கோடிமனதிலெண்ணி யேற்றமுடன்மாண்டதுவுமுண்மையாமே.

தத்துவப்பிரட்டு.

உண்மையாம்வெகுகோடிநூல்கள்தாமும் வுற்பனமும்விற்பன முஞ்சொன்னார்பாரு, கண்மையுடன்மார்க்கண்டநாயர்தாமும் காசினி யில்வெகுகாலமிருந்தாரென்று வண்மையுடனவர்கூறும்சாத்திரத்தில் வயதுபதினாரென்றுகூறினார்பார், திண்மையுடனவருமல்லோ மண் ணின்மாண்டார் தேசத்திலிருந்ததுண்டோபொய்யுமாச்சே. ௪௬௨

பொய்யானசாத்திரங்களுளவுஞ்சொல்லிபூதலத்தில்விருந்ததுண் டோகண்டதுண்டோ, மெய்யானவார்த்தையைபோல்வினயஞ்சொ ல்லி.மேதினியில்கட்டுமொழிசொன்னார்கண்டீர்துய்யமுடன்மேதினி



யில்தருமராஜன்,துப்புரவாய்மேனியுடன்கைலாயத்தில் பையவேசெ ன்றெழுந்துபோனானென்று பாருனிலேயிதுவுமொருகதையுமாச்சே.

கதையானகவிவாணர்கட்டுரைத்தகதைதனையே மேதினியில்மெ ய்யென்றெண்ணி, பதைபதைத்துவச்சிராங்கம்பாண்டியன்தான் பாரி னிலேவெகுகோடிதவசிருந்தான், கெதையுடனேயீசனிடஞ்சென்று மேதான் கீர்த்தியுடன்பேருலகில்வந்தானென்று புகையொத்தமனம் போலக்கினவுகண்டு பூதலத்தில்நடந்தமொழிபொய்யுமாச்சே. ௪௬௪

ஆச்சேதான்யின்னமொரு வயனஞ்சொல்வேன் அப்பனேசெய முனியாம்ரிஷிகள்தாமும், பேச்சேதான்பேசாமல்சிலதுகாலம் பேரு லகில்மண்மீதுயிருந்திட்டாராம், மூச்சடங்கிசிலகால்பிணம்போல் தாமும் மூர்ச்சையதுபோலிருந்தால்சித்துதாமும், நேச்சனுடன்சமா திதனிலிருந்தாரென்று நீணிலத்தில்போச்சுசிவயோகிக்கே. ௪௬௫

யோகத்தைசாதிக்கவெகுகாலந்தான் வுலகத்திலிருந்தாராம்தே கத்தோடே, தேகத்தைதான்மறந்துவவருமாண்டார் தேகமதுமண் ணோடுமண்ணுமாச்சு, போகத்திலிருந்தவருமாண்டுபோனார் பொங்க முடன்தேகமதுநிலையேயில்லை, யாகத்தைசெய்துமல்லோசெயமுனி வர்தாமும் யாக்கதனையொழித்தாரேவுலகில்தானே. ௪௬௬

தானனயாகமதுகூறப்போமோ தாரணியில்வற்புதங்கள்மிகவுஞ் செய்தார், கோனனயெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனார்தானிரு க்குங்காலந்தன்னில். பானனசெயமுனியும்பாரிலேதான்பாடினார்வெ குகோடிகருக்கநூலாம், தேனனதேகமதைநிறுத்தவென்று செப்பி னார்பலநூலுபண்பதாமே. ௪௬௭

பண்பானநூல்களிலேதேகம்நிற்கும்பாரினிலேவெகுகாலமிருக் கலாகும், திண்பானசமுசாரவாழ்க்கைதன்னில் திகழுடனேகாயாதி கற்பகாலம், நண்பானகுடிவாழ்க்கைதனிலிருந்து நலமுடனேவெகு காலமாண்டார்தாமும், கண்பானலோகத்தில் வெல்லாம்பொய்யாம் காசினியோர்வாண்டார்களிப்படியேதாமே. ௪௬௮

தாமானகிரேதாயினுகத்திலப்பா தாரணியில்வஷ்டபாலிருந்தி ட்டாராம், கோமானும்கிரேதாயினரசன்றானும் கொற்றவனும்ராச் சியத்தையாண்டபோது, பாமானவஷ்டபாலர்யெட்டுபேரும் பாரினி லேசாகாதவரங்கொண்டோர்போல், நாமானமிருந்தவரை யனேகம் பார்த்தோம் நலமுடனேஒருவருந்தானில்லைகாணே. ௪௬௯

காணவென்றால்மண்ணுக்குபிறையுமானார் காசினியில்சித்தமுனிரிஷிகள்தாமும், மாணவேகோடிவரைதிரவியங்கள் மகாகோடிநிதிகளெல்லாந்தேடிவைத்து, நாணமுடன்பிழைப்பதற்குவழியுங்கெட்டு நாதாக்கள்காண்பதுவும்அருமையாகும், தோணவேதொல்லுலகில் சாத்திரத்தில் துறைகோடிமுறைகளெல்லாம்மறைந்தார்பாரே. ௬௭௦

மறைந்ததொருபொருளதனைமானிலத்தில் மாளாமல்சேர்த்து வைத்துமாண்டுபோனார், திரைப்புடனேசாத்திரங்களதிகங்கற்றுதீரா தபவவினையைக்கட்டறுத்து, முறைப்படியேஞானவரம்பெற்றேனென்று மூர்க்கமுடன்கோபமதைமறுத்தேனென்றும், குறைப்படியே குவலயத்திலெந்தநாளும் கூறியேமானிடர்கள்கெட்டார்தந்தே. ௬௭௧

வழலையறுக்கச்சூரணம்.

தந்திவிரைகட்டியெடுபலமிரண்டுதக்கதோர்மிளகிரண்டுகொம்பிரண்டு, முந்தியெடுகடுக்காயும்பலமுமெட்டு மூணேந்துநெல்லிமுள்ளியடைமுன்னிடையுங்கூட்டி, பந்தமுடன்சிந்தூரத்தாதிரோற் பதமாக அறைத்துமைபோற்கதிரில்வைத்து, சுந்தரமாய்ப்பொடியாக்கிவைத்துக்கொள்ளு சுருதிதனையாய்ந்துணர்ந்தயாதிச்சொன்னார். ௬௭௨

மூவிரற்றுளெடுத்துவைத்துமுன்சிந்தூர முற்றினதோரிலந்தைவிரையளவுவைத்து, தேவர்தலையிடுந்தயிலங் குழைத்துவுண்ணச்செப்பமிடத்திரிநாளாமறுநாள்தன்னில், காவிமுத்தினெண்ணைவிட்டுமூழ்குமுன்னேகருத்திலினைபுளிதள்ளு மோர்சோருண்டால், நாவிவருநாலெல்லாந்தானேபோகும்தாஷ்டிகமாய்ப்பித்தமருந்தன்மைதானே.

பித்தவெட்டைபாண்டுமகோதரமும்தீரும் பின்புதான்சொரிசிரங்குமேகவாயு, குத்தலண்டசூலைமுதல்வெட்டைபோகும் கூறரிதிதன்குணங்கள்கொள்கைமெத்த.நித்தநித்தமயக்குகின்றபித்தமாலை நீங்குமென்றுபோகரிஷிசொன்னநீதி, புத்தியுள்ளரிஷிமார்கள்சொன்ன நீதி புகட்டினேனெட்டினுரைபுகன்றவாறே. ௬௭௪

மகோதரங்களுக்கு.

பதங்கலிங்கபற்பமதுபலமுநாலு பதியவெடுகொம்புமிளகோடு கூட்டி, விதம்பெறவேதந்திவிரைசுத்திபண்ணி விதமிடுநெல்லிமுள்ளி கடிக்காய்நேராம், அதம்படவேவகையானீரரைத்துச்சாமம் அதையெடுத்துகுடுக்கைதனிலடைத்துக்கொண்டு, இதம்படவேபணவிடைநால் கொள்ளச்சொல்ல எந்தமகோதரமும்போமிதமதாமே. ௬௭௫



சூலைமகோதரம்போருமாம்பற்கட்டி துடர்ந்தபித்தமகோதரமுஞ்சொல்லாதோடும், வேலைதனிற்போயவிடுங்காணும்பற்கட்டி விடுபடுங்காண்சிலேட்டுமமகோதரமும்போகும், ஆலைதனிற்கரும்பாகுமுப்பைத்தள்ளு ஆறுநாள்சென்றபின்புஸ்நானம்பண்ணி, காலைநேரெல்லாமுங்கூட்டிக்கொள்ளு கருத்துரைத்தார்போகரிஷிகருணைபாரே.

பாரமுடன்பதங்கபற்பம்பலமுநாலு பதமிடைமிளகுசுக்குகந்திகூட்டி, பாரமுளநெல்லிமுள்ளிக்கடுக்காய்நேராய் பார்த்துஅரைபடி நீரார்சாமம்ரண்டு, கோரமுளவுத்தியளவாகவுண்டை கொடுத்துவிடு மகோதரங்கள்முப்பத்தொன்றும், நேரமிலையோடிவிடும்நிமிஷந்தன்னில் நிச்சயமாய்போகரிஷிநேர்சொன்னாரே. ௬௭௭

சூதபற்பம்கெந்திவெங்காரநேரே தூக்கியரைதேள்கொடுக்குகுமரியாலும், வீதமொருநாளரைப்பின்னெடுத்துருட்டி வியாதியறிந்தனுபானவிதத்திலீய, வாதமுதல்கணரோகம்ருதுதிரவாய்வு மார்வலியுங்குன்மவகைசூலையாறும், சீதமதைக்கொண்டுவருமந்தார்காசஞ் செல்லுமதுயிம்மருந்தின்திறமையாமே. ௬௭௮

கண்டுயெடுபணவெடைதான்தேனிலுண்ண கதிர்மதியாந்தேகமதுகற்றாணுகும், தொண்டுசெய்வாருலகத்தோர்சொல்லவேண்டாந் தோகையர்கள்வசமாவார்துலங்கத்தானும், பண்டுசெய்தபழவினைகள் தீர்ந்துநல்ல பதிவானபிணியகன்றுகடலேபுக்கும், வண்டுபோல்மயிராகும்பாகமாக வழுத்தினாரிஷிதேவர்வண்மைதானே. ௬௭௯

நாகப்பழம்போலாகுங்களங்குதானும் நற்சிவப்புசிந்தூரம்அலரிப்பூப்போல், பாகமதுசுன்னந்தான்மல்லிப்பூப்போல் பதிவானமெழுகதுதானிளக்குமாகும், தாகமதுதயிலந்தானிறக்கறுப்பு தாட்டிகமாய் நிறங்களறிமருந்துதன்னை, யோகமதுவந்திடுங்காண்பாகமாகுமித்தொழிலையறிந்தபதஞ்சொன்னவாறே. ௬௮௦

நல்லறிவாமுபரசங்கள்நவலோகங்கள் நாட்டிலேபாஷாணஞ்சாரங்காரம், சொல்லுமுன்னேசூதமுதல்சிந்தூரிக்கச்சுருதிபெறமால்தேவிசிலைதான்கெந்தி, கல்லானகெவுரியப்பிரகந்துத்தநாகம் கடிதானவெடியுப்புயிவைகள்சேரில், உல்லாசமாகயிதுசேர்தாகில் உண்மையெல்லாஞ்சிவந்திடுமென்தாய்சொன்னாளே. ௬௮௧

சாயமனஞ்சரக்கதுதான்சாற்றக்கேளு தடையற்றவுப்பினொடுகாந்தங்கம், வாயமதாமிரும்போடுமிளீசூதம் வடிவுபெற்றகவுரியுடன்

வர்ணமாகும், நாயமாரிதைப்பிரித்துச்சொன்னாரப்போ நான்பார்த்து உங்களுக்குநடத்தச்சொன்னேம், காயமதுநிலையில்லைகண்டுமுன்னே கணக்காகசித்தர்முண்டுதேறே, ௪௮௨

எச்சரக்குங்கட்டவொருசேதிகேளுஇனியவெடிசுன்னத்தால்ச ரக்குக்கட்டும்,தற்செயலாந்தயிலத்தாற்சாக்குகட்டுந் தடையற்றதிரா வகத்தாற்சரக்குகட்டும், இச்சைபடச்செயநீராற்சாக்குகட்டும் இதமா ன்மெழுகாலேசரக்குகட்டும், நச்சாவாமூலிகையாற்சாக்குகட்டா நா கரிகயரிதேவர்நலஞ்சொன்னாரே ௪௮௩

பித்தபாண்டுக்கு.

அங்குமூம்பலப்பத்துஅ௱மூநோாயதையரைத்துக்கையானற் புடமுமிட்டால்,இங்கிதமாச்சிவந்துவிடுஞ்சத்திருத மிதமாகமுன்கண் டயெடைக்குப்பாதி, தங்காமலரைத்துமுன்னீர்தன்னைவிட்டு தக்க தொருகுடத்திலிட்டுமேலேமூடி, பங்கம்வாராதெரித்தெடுக்கச்சிவந் றுபோகும் பதிவானகளிகூர்ந்துபலன்சொன்னாரே. ௪௮௪

கர்ப்பந்தரிக்க.

தட்டியிட்டுக்கொம்மட்டிவித்தெடுத்துதாட்டிகமாய்த்தர்திவிரை யிடையேசேர்த்து, மொந்தைதனிலடைநிறையதூரில்பொத்து முக் கியமாய்க்குழித்தயிலம்வாங்கிச்சட்டி, சட்டமதாயடைத்துகாங்காசு விட்டுச் சரியானமஞ்சளதுபொடித்துவுண்ண, வட்டவளைமாதவிடாய் த்தன்னிலுண்ண வையகத்தில்பாலநதுவுண்டாமபாரே. ௪௮௫

உரிக்குமடல்தாரமதை கன்னத்துள்ளே ஒருமூன்றுசாமமதை யெரித்துவாங்கி, முருக்கிலையுங்கரிசாலைபழச்சாற்விட்டு மெழுகுபட அரைத்துபழந்துணியிலூட்டி,அருக்கனிடகாய்ந்தகழிவெண்டிலேறி அங்கியிட்டுப்புகைவாங்கிமுக்கால்போக, கருக்கவேமறைப்பணமும் பிடிக்கவேதான் சுவாசமொடுமந்தாரக்காசம்போமே. ௪௮௬

சிறுகீரைவேர்தூக்குப்பதக்குப்பில்லும் சேர்த்தரைத்துவடித்தா வின்படிநெய்விட்டு, அரைத்தூக்குசக்கரையும்மிளகுஞ்சேரு அரைப் படிவந்திதனையோர்திறமாயாவி, மறக்காமலரைப்பலமோர்பொழுதவு ண்ணமார்பு உண்மைபதினெட்டுவாதம்நீங்கி, சுருக்கோடேகழந்துநீ சிறங்குமேகஞ் சுகமாகுங்கைகண்டதொழிலுமாமே. ௪௮௭

உள்ளியுடன்மிளகுசுக்குகல்லுப்போடு ஒருநூறுவெற்றிலையின் காம்புகூட்டி,கள்ளியின்சாற்விட்டரைத்துச்சார்ந்து நிம்மக்காயளவுயி



ருகோளஞ்சுநாளும்,கொள்ளுமிதையிநுபுரமுமிழுத்துக்கொண்டுருத் தவிட்டு அடிவயறுஅண்டம்வீங்கில், வுள்ளுநம்ஜவலிவீக்கம்வாங்கு மென்று மூன்னவர்கள்சொன்னதுண்மைமொழியிதாமே. ௪௮௮

காட்டினிடஆமணக்கினெண்ணெவாங்கிக் கசடகற்றிவச்சிரத்தி ன்பாலைவிட்டு, நீட்டுமெனநீர்க்கட்டுமலக்கட்டுத்தான் நோாகமெத்த வுந்தான்பேதியாகில். வாட்டிடுவாய்பாவின்பால்தனையேவுண்ண வை கைக்குணமாம்பேதியதுவடிந்திநிற்கும், கூட்டிடவேமலக்கட்டிவிது வேயாதிகுணமாகபோகரிஷிகுறித்தார்தானே. ௪௮௯

ஆமென்றதவமுறுதிக்கின்னமொன்றுஅன்பாகச்சொல்லுகிறே ப் நன்றாய்க்கேளு, நாமென்றசொல்லகத்திபூமிநாதம் நன்றானநாதம டாசத்திசத்தி,தாமென்றபிரிதிவியாந்தன்னேடொக்க தயவானகெவு ரியுடன்சிலையுங்கூட்டி, வவமென்றநாகரசங்கூட்டிச்சேர்த்து ஓர்நிறை யாய்க்கல்வமதில்நன்றாயாட்டே. ௪௯௦

ஆட்டுவதுசம்பளத்தின்சாறுலாட்டி அப்பனேகெட்டங்கன்று யாட்டி, கூட்டுவதுஒன்றுக்கிஎட்டுபண்ணிக் குண்டலமாஞ்சட்டிதனி ல்நடுவேவைத்து, பூட்டுவதுதாம்பரத்தின்கிண்ணந்தன்னால் பொருந் தவேமூடிநன்றாய்மண்ணுப்பும்போட்டு, தாட்டிகமாத்தீயெரித்துப் பாரு தயவானபதமதனைச்சொல்லுவேனே. ௪௯௧

சொல்லுவேன்சொரிந்தமணல்கருகிற்றானல் சுற்றமுள்ளபக்குவ மென்றெடுத்துக்கொள்ளு, வெல்லுவேனிதற்குசெட்டிதாம்பரத்தை விசையாகவுருக்குமுகந்தன்னில்மருந்தை, கல்சினேவாய்மருந்துத்தா நீவாயாகில் நாற்றமுள்ளசெம்பதுவுங்கட்டிப்போகும், சொல்லுவே னென்றுசொல்லிவெள்ளியேயழில்குணமுள்ளசெம்புமுன்றென்றாய்க் கூட்டே. ௪௯௨

கூட்டிநன்றாய்க்குகைதனிலேயுருக்கிப்பாரு குருவருளால்திருவ ருளால்மாத்தெட்டாகும், தாட்டிகமாய்ப்பத்திலொன்றுதங்கஞ்சேர் க்க தயவானதங்கமடாமென்னசொல்வேன், பூட்டிநின்றபூட்டனுக்கு சத்திசிவந்தன்னைப், பூரணமாய்க்கண்டுமனதறிவினாலே இட்டிமூனைம ருச்சுழிமுனையின்மீதே திருவானவருகுருவுந்தீபவொளியாமே ()

ஆமப்பாயின்னமொருகருவைக்கேளு ஆதியென்றலிங்கமுடன்துருசகூட்டி, தாமப்பாகண்டிகைக்குஆதிசேர்த்து சம்பளத்தின்சாற்றுலேகல்வத்தாட்டி, நாமப்பாசொன்னபடிவட்டுபண்ணி நன்மைபெறமண்மறைவில்புடத்தைப்போட்டு, சாமப்பாசரக்குவகைமூன்றுதானும் சமரமாய்க்கட்டவுந்தான்திட்டமாமே. ௫௯௪

இட்டமுடன்புடமாறியெடுத்துக்கொண்டு செம்மையுடன்செம்புருக்கிமருந்தையீவாய், இட்டமுடன்செம்பிடைக்குரட்டிசவாய் யிருண்டசெம்புவுருகியதுகட்டிநிற்கும், பட்டசெம்புநாலுடனேவெள்ளியாறு பக்குவமாயுருக்கிப்பார்மாற்றுகும்,நட்டமென்னபத்திலொன்றுதங்கஞ்சேர்த்து நலமாகவெட்டுவயதாகும்பாரே. ௫௯௫

பத்திட்டுக்கடுமையாயெரித்துஆற்றிபதியவெடுபிரித்திடவேமேலேயேறி, சத்துநிற்குமயிற்குச்சிதன்னுற்றேனே தனைச்சரண்டிபீங்கானிற்பனியில்வைக்க, நித்தியமாய்ச்செயநீராம்ஆறுபோலாம் நிலைக்கவெகுசீசாவில்டைத்துநீயும், முத்திபெறதுருசுதனைத்தோய்ச்சுவெட்டு முதன்பெறவெட்டுநாள்தோச்சுப்போடே. ௫௯௬

போட்டுமேசுண்ணும்புவீரம்நேரே பொருந்தமஞ்சளாந்துருசமேலேகட்டு, நாட்டவேகவசமிடு அங்கியிட்டு நலமாமக்குக்குடத்தில்நீறிப்போகும்,கூட்டுமேருதனிடைநீலம்போடு கூட்டியரைசாரநீர்தன்னிலே, வாட்டும்ரசகற்பூரநாவிலொன்று வகையாகநிறுத்திட்டுஅரைத்துக்கொள்ளே. ௫௯௭

நல்லாகவரைததுஎட்டிலொன்றுவீர நல்லபச்சைக்கற்பூரமெட்டிலொன்று,வில்லாசமுன்னீராலரைத்துச்சாமம் விருதுபடக்குக்குடத்தேபோட்டெடுக்க, செல்லவொறுகுருவேகுந்துருசுச்செம்பில் இடமாகவுருக்கியிடைகுருவைத்தாக்கு வெல்லுமதைவாங்கியது தட்டத்துளாம் வெள்ளியதில்நால்சேர்த்துவூதிப்போடே. ௫௯௮

கனகமதுயிரண்டிடைதானிற்குமந்தக் கனகத்தையெடுத்துமெள்ளவிற்றுக்கொள்ளு,இனமொத்தவிடந்தனிலேநின்றுவாழ மினமானஞானத்தையியல்புபாரு, உணவுடனேயாறுதலமேறிப்பாரு வுத்தமித்தாய்வந்துநிற்பாருலகந்தன்னில், சனகனருள்பெருவீராமிந்தபோக்குதாஷ்டிகவான்போகரிஷிசொன்னவாறே. ௫௯௯



மறுபடியும் தத்துவங்கூறல்.

சொன்னோயின்னமொரு மார்க்கங்கேளு சொல்லுகிறேன் பாரினிலேகணேசருண்டு, மன்னேகேள் திரேதாயிலுக்திலப்பா மகாதேவ்ரானவராங் கணேசர்தாமும், பன்னவேதும்பிக்கை ரூபங்கொண்டுபாரினிலே பிறந்தாராம்மனுஷரூபம், என்னவே வெகுகோடிகாலந்தானும் யெழிலான ஞானிபோலிருந்தார்தாமே. ௬௦௦

விநாயகர் உற்பவம்.

தாமானசமுசார வாழ்க்கையற்று தகமையுள்ள பேரின்ப வாழ்வுபெற்று, சாமானமானதொரு வுலகவாழ்வை சர்ச்சவர்க்கு வுபயோகவிருத்திபோகம், நாமானசாத்திரங்கட்குயிராய்னின்று நமஸ்கரித்து கணபதியாங் கணேசரென்றும், தாமான நூலுக்கு முதற்காப்பாக தாரணியில் மானிடர்க்குசத்திதானே. ௬௦௧

தானனசத்திக்கு முதல்வன்காப்பு தாக்கானயீஸ்வரிக்கு முதல்வன்காப்பு, பானைதிரிமூர்த்தி முதல்வன்காப்பு பாங்குபெற மானிலத்திற்செய்தவேதம், கோனனரிஷிமுனிவர் சித்துதாமும் கோடானகோடி நூல் செய்தார்பாரு, தேனான நூலுக்கு முதலாய்நின்ற தேர்ந்தபிள்ளையாருமென்ற பேருமாச்சே. ௬௦௨

ஆச்சென்ற நூல்களுக்கு யிவரேயாதி அரவோம்நமசிவயமிதற்குள்ளாகும், பாச்சலென்ற ஓங்காரமிதற்குள்ளாகும் பாருலகில் வேதமெல்லாம் யிதற்குள்ளாகும், மாச்சலென்றகவிவாணர் நூலுக்காதி மகுடமுடி மன்னவர்க்கு மிவரேயாதி, கூச்சலென்றவேதமகா கோஷ்டத்தார்க்கும் குவலயத்தில் விநாயகரும் முதலாம்பாரே. ௬௦௩

பாரேதான் விநாயகரைக் காப்பேடாக்கி பாரினிலே நூலெல்லாம்பாடினார்கள், நேரேதான் சர்வகோடிபாடலுக்கு நேர்மையுடன் விநாயகரைமுதல்வனாக்கி, சீரேதான்காவியங்கள்பாவினங்கள் சிறப்பானவசனமென்றரூபந்தானும், கூரேதான் யெழுந்தாணிக்கை ரூபத்தால் கோடானகோடி நூல் யெழுதலாச்சே. ௬௦௪

பாரேதான்பார்லோகந்தத்தளிக்கும் பாங்கானசமாதியதுவெடித்துதங்கே, நேரேதான்யாக்கோபுமுனிவர்தானும் நேர்மையுடன்செகசோதிபோலேவந்தார், சீரேதான் அல்லாவுத்தாலாவென்று சிறப்புடனேவாய் தனிலேகூறிக்கொண்டு, சேரேதான்வையகத்தில்வந்தாரப்பா சிறப்பானயாக்கோபுமுனிவர்தானே. ௮௭௯

முனியானயாக்கோபுசித்துதாமும் மூதுலகில்சமாதிவிட்டு வருகும்போது, கனியானவக்கனிகளொன்பதோடுங் கடிதானரொட்டியொன்றுகையிலேந்தார், தொனியானவாத்தியங்களோடுதானும் தோற்றமுடன்வையகத்தில்வருகும்போது, தனியானசிஷவர்தன்னைப்பார்த்து தண்மையுடன்ஞானேபமோதுவாரே. ௮௮௦

ஓதுவார்யாக்கோபுமுனிவர்தாமும் ஓகோகோநாதாந்தசிஷருக்கு, நீதமுடன்ஞானோபதேசந்தன்னை நேர்மையுடன்தானுரைத்துபுத்திகூறி, போதமுடன்சீடர்முகந்தன்னைநோக்கி பொங்கமுடன்யாக்கோபுகேட்கலுற்றார், சாதமுடன்சமாதிக்குச்சென்றபோது தாரணியிலதிசயங்களென்னென்றாரே. ௮௮௧

என்றுமேயாக்கோபுசொன்னதற்குயெழிலாகச்சிஷவர்தானுரைத்தார், குன்றானயென்தேவர்குருவேநாதா குவலயத்தைவிட்டுமல்லோசமாதிதனனில், அன்றுதான்போனவுடனவனிதன்னில் அனேகமாய்கூட்டமதுமிகவாய்க்கூடி, இன்றுதான்யாக்கோபுசமாதிசென்றார்யினிதிரும்பிவருவதில்லையெனவிட்டாரே. ௮௮௨

யாக்கோபுசமாதியிலிருந்து வந்தவுடன்பூலோகத்தில்.

நடந்தஅதிசயமென்னவென்று சீடனைவினவ.

இட்டாரேவெகுமான்பர் கும்பல்கூடி யெழிலாகவேளிதங்கள் மிகவுஞ்சொன்னார், திட்டமுடன்யாக்கோபுசமாதிசென்று திரும்பி



வருங்காலமது வில்லையென்றார், பட்டதொருதேகமது மண்ணைப்போச்சு, பாரினிலேயாக்கோபு மடிந்துபோனார், சட்டமுடன் யாக்கோபு மடிந்தாரென்று தாரணியில்பெருங்கூச்சல் மிகுதியாச்சே,

ஆச்சப்பாயென்தேவா சாமிநாதா அவனிதனிலடியேனுங்கேட்டிருந்தேன், பேச்சடங்கிப்போனதொருயாக்கோபுதானும் பேருலகில் வருவதவும்பொய்யேயாகும், கூச்சலுடன்வெகுமான்பர்கும்பல்கூடி குவலயத்தில்வேகமுடன் வார்த்தைசொன்னார், ஏச்சாகக்கூறினதோர்மொழிகட்கெல்லாம் யெதிராகயானென்றும்பேசேன்பாரே.

பாரேதான்வெகுகாலஞ் சமாதிபக்கல் பாரினிலேவருவாரும் போவாருண்டு, நேரேதான் அவர்களிடம் வார்த்தைபேசேன் நேர்மையுடன்சமாதியிடம் பள்ளிகொள்வேன், கூரேதான்சமாதியிடம் யிருந்துகொண்டு கொப்பெனவேதேவர்வருங்காலமட்டும், வேரேதான்போகாமல் காத்திருந்து உறுதியுடன்சேர்வைபதுகண்டிட்டேனே

கண்டிட்டேன்யென்தேவா குருவேயென்ன கருவானயாக்கோபுமனதுவந்து, பண்டிதங்கள்கொண்டதொருசீடனுக்கு பட்சமுடன்தானுரைப்பார் தாணிமீதில், வண்டதுவும்மதுதனையே கமிழ்ந்தாப்போலும் மானபிராம்யாக்கோபு முனிவர்தாமும், தண்டுடைமானதொருதேகந்தானும் தாரணியிலிருந்தென்னபலனுண்டாச்சே.

ஆச்சப்பாதேகமதுநிலையில்லாது வப்பனேலோகமெல்லாம் பொய்யேயாகும், மூச்சடங்கிசமாதிதனிலிருந்துமென்ன மூதுலகில்பேருண்டாய்வாழ்ந்துமென்ன, பாச்சலுடன்சீடர்களு மாயிரம்பேர் பக்கமதில்தேகமதைக்காத்துமென்ன, பாச்சலுடன்மகாகோடி நிதிகளெல்லாம் மானிலத்தில்யான்தேடி வொன்றுங்காணேன் ௮௮௭

காணேனேதேகமது காயகற்பக்கருவாக யான்கொண்டுபலனுமில்லை, தோணவேநாலுயுகமிருந்துமென்ன தொல்லுலகை யொருகுடையிலாண்டுமென்ன, வேணவேலாயமது வொன்றுங்காணேன் விண்ணுலகுகாணுவது மெத்தநன்று, பூணவேசமாதிகொள்வேனென்று புகழுடனேசீடனுக்கு வுரைத்தார்தானே. ௮௮௮

யாக்கோபு இரண்டாவது சமாதிக்கு ஏகல்.

தானனசீடனுக்குப்பின்னுஞ்சொல்வார் தன்மையுள்ளயாக்கோபுமுனிவர்தாமும், கோனானகயிகாயகஞ்சொன்னவாக்குகொப்பெனவேகுவலயத்தில்பொய்யாவண்ணம், பானனமனோன்மணியாள்கடாட்சத்தாலே பாரினிலேசமாதிக்குப்பின்னுஞ்சொல்வேன், தேனனகண்மணியேசீடாபாலா தேகமன்தம்பவில்லையென்றார்காமே.

தாமேதான்யாக்கோபுசித்துதாமும் சட்டமுடன்சமாதியிடம் பக்கல்வந்து, போமேதான்முன்சென்ற சமாதிதன்னில் பொங்க

முடன் அடைவதற்கு முனிவர்தாமும், சேமமுடன்குழிதனிலே யிறங்கிநின்று திட்டையென்னுஞ் சதாசிவத்தை மனதிலெண்ணி, நாமமுடன் அல்லாவுத்தவாளவை சாங்கமுடன்மனந்தனிலே எண்ணினாரே, ௮௯௦

எண்ணியேயாக்கோபு முனிவர்தாமும் யெழிலானசிஷனைத்தா னழைத்து, வண்ணமுடன்வையகத்தைத் தான்மறந்து வாகுடனே சிஷனுக்கு வுரைக்கவர்தாமும், கண்ணனைகண்மணியே சிஷபாலாகாசினியையன்றாமறந்தேன் பாறைதன்னை, திண்ணமுடன் மூடியல்லோ சமாதிதன்னை தீர்க்கமுடன்காத்திருக்க வென்றிட்டாரே. ௮௯௧

அசரீரி வாக்குகூறல்.

என்றதொருயாக்கோபு முனிவர்தாமும் யெழிலானவார்த்தையது சொல்லக்கேட்டு, நன்றுடனே சிஷனவர்பாறைதன்னை நலமாக மூடியல்லோ பக்கனின்றார், குன்றானயாக்கோபுவாக்குத்தந்தம்கூறுவார்சிஷனுக்கு வாசீர்தம்மை, வென்றிடவேரிஷிபாரும் மனதுவந்து விருப்பமுடன்முப்பத்து வாண்டுதானே. ௮௯௨

ஆண்டானமுப்பதுவருஷகாலம் லப்பனேசமாதிதனிலிருப்பே னென்றாம், மாண்டுமேதேகமது மண்ணிற்சென்று மறுபடியுஞ்சமாதிட்டு வருவேனென்று, கூண்டுவிட்டுக்கூண்டடைந்த கதையைப் போல கொப்பெனவேமேதினியில், வருவேனென்று, ஆண்டவையாந்தனைநினைந்து முனிவர்தாமும் வன்புடனேதாமுறைந்தார் வாக்குதானே. ௮௯௩

வாக்கானவாக்கதுவுங் கூறியல்லோ வையகத்தில்யாக்கோபு பின்னுஞ்சொல்வார், தாக்கானசமாதிதனி லிருந்துமேதான் தன்மையுள்ளசிஷனுக்குப் பின்னுஞ்சொல்வார், நோக்கமுடன்சமாதிமுன்சென்றபோதுநொடிதாலகபரிரைத்தசிஷவர்க்கம், ஆக்கமுடன் தாமுறைந்த சிஷரெல்லாம் அவனிதனில்குருடாக்க காணபீர்தாமே

யாக்கோபு சாபத்தால் சிஷர் குருடானது.

காணவேயின்னம்வெகு வதிசயங்கள் கலியுகத்து மாண்பருக்கு மகிமைசொல்வேன், பூணவேயான்வருங்காலந்தன்னில் புகமுடனே வந்தாங்கம் லெளிச்சங்காணும், காணவேநாதாக்கள் முனிவர்தாமும் நடுக்கமுடன்றமிதமக்கு வஞ்சியல்லோ, தோணவேயர்ச்சனைகள்மிகவுஞ்செய்து தோற்றமுடன்சமாதிக்கு முன்னிற்பாரே. ௮௯௫

முன்னின்றயாக்கோபுவருவதெப்போ மூவுலகில்சாபமதுதவிர்ப்பதெப்போ, மன்னவர்கள்மாண்பரிடம் வினையைநீக்கி மானிலத்தில்வாங்கொடுக்கும் காலமெப்போ சொன்னதொரு வாக்குமொழி பிசகாவண்ணம் தொல்லுலகில் மகிமையதைக்காண்பதெப்போ, நன்மையாய்நாதாந்தமுனிவர்தாமும் நயமுடனேயாக்கோபைத் துதித்திட்டாரே. ௮௯௬



துதித்ததொருசித்தரெல்லாமெச்சவேதான் துரைராஜசுந்திரநம்யாக்கோபாரும், மதித்திடவேசமாதிதனிலிருந்துமேதான் மார்க்கமுடன்செகசோதிபிரகாசம்போல், கதிப்புடனேசமாதிவிட்டுயேகியேதான் கனமானயாக்கோபுமுனிவர்தாமும், விதிப்படியேவாக்குரைகள்பொய்யாவண்ணம் விருப்பமுடன்நிறைவேற்றவந்திட்டாரே.

வந்ததொருயாக்கோபுமுனிவர்தாமும் வாகுடனேபகடுரைத்தமாந்தரெல்லாம், சிந்தனையாய்மனங்கலங்கிமெய்நடுங்கி சிற்பானுர்யாக்கோபுவந்தாரென்று, தந்தமக்குள்பயந்துமல்லோஒடுக்கமாகி தாரணியிலவர்மயங்கிநிற்கும்போது, நிந்தனையாய்வந்ததொரு சாபத்தாலே நீணிலத்திலெல்லவருங்குருடானாரே. ௮௯௮

குருடாய்ப்போனவர்கள்சிலதுமாண்பர் குவலயத்திலழிந்தவர்கள்சிலதுமாண்பர், இருட்ராயொளித்தவர்கள்சிலதுமாண்பர் தீர்க்கமுடன்வாய்குளறிசிலதுமாண்பர், இருளதனில்கண்ணொளிவுமயங்கியேதான் பிராக்காலந்தெரியாமற்போனபேர்கள், வாகடமாம்வெகுகாலமிக்கோலந்தான் வதைபட்டுவழிந்தாரேகோடியாரே. ௮௯௯

கோடியாஞ்சிலபேர்கள்ஞானவான்கள் குவலயத்தில்வெகுநாளாய்ப்பேருண்டாக, நாடியேசமாதியிடங்கிட்டிருந்து நாதாந்தப்பேரொளிபின்சமாதிமுன்னே, கூடியேவெகுகாலமிருந்தாரங்கே கொற்றவர்கள்சமாதியிடந்தன்னிலேதான், வாடியேகாத்திருந்தசித்தர்தாமும் வண்மையுடனுபதேசம்பெற்றார்தானே. ௯௦௦

தானானயாக்கோபுமுனிவர்தாமும் தகமையுடனுபதேசம்பின்னுஞ்சொல்வார், கோனானகுருகளையேமனதிலெண்ணி கொப்பெனவே தாமுறைப்பார்பின்னுஞ்சொல்வோம், வேனானரிஷிமுனிவர்சித்தர்க்கு மேதினியிலுபதேசஞ்செய்துமேதான், தேனானயாக்கோபுமுனிவர்தாமும் தீர்க்கமுடன்முடிவுதன்னைக்கூறுவாரே. ௯௦௧

யாக்கோபுகடைசிசமாதி.

கூறுவார்யக்கோபுசித்துதாமும் குவலயத்தில்தேகமதாயிருந்துமென்ன, மாறுபடுபேதங்கள்செய்துமென்ன யுகத்தானவசியமுதல்கற்றுமென்ன, நீறுபுகழ்மோகனங்களறிந்துமென்ன நீணிலத்தில்வாதமதுசெய்துமென்ன, தூறுடையவஷ்டமாசித்தை துறைமுதலுங்கற்றென்னவொன்றுங்காணே. ௯௦௨

காணவேபிரபஞ்சவாழ்க்கையற்று காசினியிலிருந்தாலுமொன்றுமில்லை, பூணவேநவகோடிதிரவியங்கள் பூவுலகில்தேடியென்னலாபமில்லை, நாணமுடன்வுலகுதனில்வாழ்ந்துமென்ன நாதாந்தப்பே

சொளியைக்கண்டுமென்ன, வேணபடியுலகமெலாம் ஒருகுடைக்கீழ் வுத்தமனேயாண்டாலும்ஒன்றுங்காணே. ௬௦௩

ஒன்றானதேகமதுபொய்யேவாழ்வு ஓகோகோகாதாக்களாரிருந்தார், குன்றானகல்லதுபோல்தேகந்தானும் குவலயத்திலிருந்தாலுமொன்றுமில்லை, தன்றானதேகமதாயிருப்பானாலும் தாரணியில்நில்லாது மெய்யேயாகும், சென்றாலுங்காயமதுபோவதுண்மை சடமழிந்துபோகுவதும்வுண்மைதானே. ௬௦௪

உண்மையாம்யாக்கோபுமுனிவர்தாமும் வுலகத்திலிருந்ததுவும்போதுமென்று, நன்மையாஞ்சீஷவர்க்கமானபேர்க்கு நாதாந்தயாக்கோபுமுனிவர்தாமும், வண்மையாம்லோகமதைமறந்தேனப்பா வாகுடனேசமாதிக்குப்பின்னுஞ்செல்வேன், எண்ணமுடன்சீஷருக்குவாக்குறைத்து யெழிலாகசமாதிக்குப்போவார்தாமே, ௬௦௫

போகவேயாக்கோபுமுனிவர்தாமும் பொங்கமுடன்சமாதிக்குச்செல்வேனென்றும், வாகடங்கள்விதிமுறைப்போல் தப்பாவண்ணம் வளமுடனேதானறிந்தசித்துதாமும், வேகமுடன்சமாதிதனிலிறங்கியேதான் வேதாந்தசித்தொளிவுசொரூபந்தம்மை யோகமுடன்தானிருந்துமுனிவர்தாமும் வுத்தமர்க்குவசரிரியுரைத்தார்பாரே. ௬௦௬

பாரேதான்யாக்கோபுசித்துதானும் பாருலகிலிதுவரையிலிருந்தகோலம், கேரேதான்சுகமறிந்ததேகந்தன்னை நேர்மையுடன்பிரிதிவினில்சேர்ப்பதற்கு, வீரேதான்விண்ணுலகவாசையற்று வேதாந்தயாக்கோபுசித்தருக்கு, சீரேதான்யுகமுடிவுகாலமாச்சு சிறப்பானதேகமதுமண்ணுய்ப்போமே. ௬௦௭

மண்ணாகிப்போனாலுங்காயகற்பம் மகத்தானதேகமதுவழியும்பாரு, திண்ணமுடன்நபிதானுமுடிவுநாளில் தீர்க்கமுடன்கேழ்விபதுகேட்கும்போது, எண்ணமதில்யாக்கோபுமுனிவர்தாமும் யெழிலாகவந்தும்ஸமக்ஷாண்பேனென்று, திண்ணயமாய்வாக்குரைத்தார்சித்துதாமும் நீடாழியுலகத்தின்நேர்மைதானே. ௬௦௮

புலஸ்தியருற்பவம்.

நேர்மையாமின்னமொருமார்க்கங்கேளு நேரானவகஸ்தியனார்க்குகந்தசீஷன், பார்மனதாய்யுலகுதனில்பெயர்வகுத்த பண்பானசிவராஜயோகியென்பார், தீர்மையுள்ளபுலஸ்தியராமென்றசித்து திகழானசமாதிதனைசொல்வோம்பாரு, வார்மையுடன்சினபதிமேற்கேயப்பா வளமானதென்பொதிகைசார்புமாச்சே. ௬௦௯

ஆச்சப்பாபுலிப்பாணிப்பாலாகேளு வன்பானயெனதையர்காலாங்கிதானும், முச்சடங்கிச்சினபதியிருந்தபோது முதுலகில்வளமை



யெல்லாஞ்சொன்னார்முன்பு, பாச்சலுடன்பொதிகமலைச் சார்புதன்னில் பாங்கானகடலோரம்பூமிவட்டம், கூச்சலுடன்சித்தர்முனிரிஷிகளோடுகுவலயத்தில்சமாதிக்குவந்தார்தானே. ௬௧௦

வந்தாரேசீஷனார்தேரையரோடு வளமாகசினபதிக்கடலோரந்தான், அந்தமுடன்பொதிகைமலைக்குண்ணின்பக்கம் வகஸ்தியனார்சீஷனதுபாலன்றானும், சொந்தமுடன்சமாதிதனிலிறங்கவென்று சுத்தமுள்ளபுலஸ்தியருங்கூறலுற்றார், வந்தவழிபோவதுவேயுண்மையென்று வளமுடனேசமாதியிடந்தேடினாரே. ௬௧௧

தேடியேசமாதியிடமருகிற்சென்று திறளானசீஷவர்க்ககூட்டத்தோடு, நாடியேசமுசாரவாழ்க்கையற்று நாதாந்தப்பேரொளியைக்கண்டுதேர்ந்து, கூடியேகுவலயத்தில்நேர்மையெல்லாங் கொற்றவனார்தான்வெறுத்துசமாதிக்கேக, நீடியேபுலஸ்தியருஞ்சீஷர்தம்மை நீட்சியுடன்தானழைத்துகூறுவாரே. ௬௧௨

கூறுவார்வாய்திறந்துசீஷவர்க்கம் குவலயத்தின்மகிமையெல்லாங் கண்டாராய்ந்தேன், சீருடனேசிற்றின்பவாழ்க்கையற்று சீரானபேரின்பநிலையைக்காண, நேருடனேவுலகுதனையான்மறந்து நேர்மையுடன்காயமதைநிலைநிறுத்தி, பாருள்ளேசமாதிதனிலிருப்பேனென்று பட்சமுடன் சீஷருக்குவுரைத்தார்பாரே. ௬௧௩

புலஸ்தியர்சமாதிக்குபோகும்போது தேரையருக்குப் புன்சொல்கூறல்.

பாரேதான்தேரையர்மைந்தாகேளுபாருளிலேசமாதிக்குப்போரேன்யானும், சீரேதான்யிருபத்துவாண்டுதானும்சிறப்புடனேசமாதிதனிலிருப்பேனென்று, நேரேதான்சமாதிதனிலிருந்துகொண்டு நேர்மையுடன்சரிரிவாக்குசொல்வேன், தீரேதான்யான்வருகுங்காலமட்டும் தீர்க்கமுடன்சமாதியிடமிருந்திடாயே. ௬௧௪

இருந்துமேசமாதியதுபூசைகொண்டு யெழிலாகநான்வருகுநாளுமட்டும், திருந்தவேயென்சீஷாபிராணநாதா தெருள்கலையில்தேர்ந்ததொருசித்துபாலா, பொருந்தவேவுபதேசம்மிகவுங்கேட்டுபொங்கமுடன்சமாதிதனிலிருந்துகொண்டு,வருந்தவேநான்வருகும்நாளையெண்ணி வளமுடனேநீநினைத்துநிற்பீர்தானே. ௬௧௫

தானானயென்சீஷாயின்னங்கேளு தகமையுள்ளசித்தர்முனியும்மைக்கண்டு, கோனானவுன்குருவுயெங்கென்றுக்கால் கொற்றவனேசமாதியிடஞ்சென்றாரென்று, தேனானபுலஸ்தியரும்வருநாள்மட்டும் தேர்வேந்தசித்தருக்குப் பணிதிபூண்டு, மானானமனோன்மணியைத்தொழுதுபோற்றி மலையோரஞ்சமாதியிடமிருக்கின்றேனே. ௬௧௬

இருக்குறேனென் றுரைத்துயிதவுசொன்னால் யெழிலானசித்தர் முனிபகடுரைப்பார், வெருக்கவேபுலஸ்தியரும்மடிந்தாரென்று வீண் ணுலகில்மறுபடி யுந்திரும்பாரென்று, பெருக்கமுடன்வகடுமிகக்கூறு வார்கள் பேரானகர் மியென்றசித்துதானும், உருக்கமுடன்நீயுரைக் கும்போதேயப்பா வுத்தமர்கள்பழிகூறுசொல்லுவாரே. கூகஎ

சொல்லுவாரவர்களிடம்வாய்பேசாதேசுந்தரனேசிவராஜயோகி பாலா, வெல்லுவாருந்தனிடஞ்சூதுபேசி வேகமுடன்கொள்ளவதற்கு மனமுங்கொள்வார், புல்லுவார்நானாவார்த்தைகூறி புகழானவுச்சி தங்கள்மிகவுஞ்சொல்லி, அல்லலுடனுந்தனிடஞ்சூதுபேசி வப்பனே வதைசெய்யவெண்ணுவாரே. கூகஅ

எண்ணுவார்தேரையர்பெருந்தன்சீஷா யெழிலானகண்மணியே யின்னஞ்சொல்வேன், திண்ணமுடன்ஞானமதைக் கேட்பார்போல தீர்க்கமுடன்ஞானோபதேசந்தன்னை, வண்ணமுடன்கரைகண்டசித்து போலே வாரானயெழுத்துக்கள்மாராட்டஞ்சொல்லி, நண்ணமுடன் செகஜோதிசொரூபங்காணநானுரைப்பேன்விதியதனைமகிழென்பாரே

என்பாரேபொய்சூதுகபடதந்திர மெழிலானவுன்குருவைதூறு பேசி, வன்பானவார்த்தைகளுமிகவுரைத்து வளமானசமாதிக்குயிடர் கள்தேடி, இன்பமுடன்மெய்போலேபொய்யுங்கூறி யெழிலாகவுந்த னுக்குப்புகட்சிசொல்வார், தென்பாகமகிழாதேசிஷபாலா நேர்மையு டனெப்போதுபுகழ்வாய்தில்லே. கூஉ0

புலஸ்தியர்சமாதியிலிருந்து வருகும்போதுவதிசயங்கள்.

நிற்கையிலேபுலஸ்தியரார்முனிவர்தாமும் நேரானசமாதிதனிலிரு ந்துகொண்டு, அற்புதங்கள்மிகவுரைப்பார்சீஷருக்குவன்பானமகிமை களுமெத்தவுண்டு, தற்பரனார்புலஸ்தியரும்வருகும்போதுதாரணியில திசயங்கள்மிகநடக்கும், கறபாறையானதொருபொதிகைதானும் கட ல்தனிலேபதிலுடன்யலையும்பாரே. கூஉக

அதிருமேநான்வருகுங்காலந்தன்னிலாகாயகோடையிடிபோலே சத்தம், சதிரானபொதிகைமலைச்சுழலுண்டாகும் சப்தரிஷிதவமுனி கள்நடுங்குவார்கள், மதிலோடகோட்டைமுதல்அலங்கம்பாவும்மாறி யேதலைகீழாய்கவிந்துபோகும், உதிருமேவானத்து மீன்களெல்லாம் வுத்தமனேவதிரலதுகாணும்பாரே. கூஉஉ

பாரேதான்சத்தசாகரமும்பொங்கும் பாரினிலேதேர்வேந்தராஜ ரெல்லாம், நேரேதான்போர்முகத்தில் நிற்பார்பாரு நேர்மையுடன் திசைமாறிதேவரெல்லாம், வேரோதானவரவர்கள்பதிகள்கெட்டு மே தினியிலரசுநிலையாள்வார்பாரு, கூறேதான்வாக்கதுவும்பொய்யாதப்பா குணமானதேரரிஷிசொல்லக்கேளே. கூஉங



புலஸ்தியர்சமாதியிலிருந்து வருதல்.

சொல்லவே தேரமுனி சித்துகேளும் சுகமான புலஸ்தியரும் வருநாளாச்சு, புல்லவேசமாதியது திறப்பதற்கு புகழானபுலஸ்தியரு ம்வருநாளாச்சு, வெல்லவே மேதினியில்சித்துதாமும் வேதாந்த ஞா னப்பிரகாசத்தோடு, நல்லதொருசமாதிதனில் பாறைதானும் நலமுட னே தான்வெடித்துவருகலாச்சே. கூஉச

வருகவேசித்துவரும் நாளுமாகிவாகுடனே புலஸ்தியரும்வந்து மேதான், பெருகவேபுலஸ்தியரும் வந்தபோது பேரானதேரையமு னிவர்தானும், திருதலுடன்புலஸ்தியரைக் கண்டபோது தீர்க்கமுட னமஸ்காரமஞ்சலித்து, தருகவெனவாசிர்மங் கொண்டனைத்து தக்க படிமனுமுறைகள் கேட்டிட்டாரே. கூஉரு

கேட்டவுடன்புலஸ்தியருட மகிழ்ந்துமேதான் கெடியானவார்த் தையதுமிகவுங்கூறி, நீட்டமுடன்லோகவதிசயங்களெல்லாம்நேர்மை யுடன்தானுரைத்தார் சீஷனுக்கு, வாட்டமுடன்பூலோகவதிசயங்கள் வளமையுடன்போச்சுதென்று மனதிலுன்னி, நாட்டிகமாய்த்தேரை யமுனிவர்தாமும் தமையேனைக்காக்கவென்று பணிந்திட்டாரே கூஉசு

பணிந்துமேதேரைய சித்துதாமும்பாங்குடனே குருபதத்தை த்தாள்பணிந்து, துணிவுடனே சொன்னதொரு மொழிக ளெல்லாந் துறைராஜ சுந்திரனேநடந்துபோச்சு, அணியணியாய்சமாதியிட பக் கம்வந்து வன்புடனே காத்திருந்தார்சீஷவர்க்கம், கனிவுடனே செக சோதிவருநாளாச்சு கர்த்தனே பதியைவிட்டுயேகினாரே. கூஉஎ

ஏகவேயதிசயங்க ளெல்லாங்கண்டு யெழிலானபரமகுரு சித்து தாமும், போகருடகுருவர்க்கங் காலாங்கிநாதர் பொங்கமுடன்செய்த தொருவதிசயம்போல், வேகமுடனகஸ்தியனார்சீஷர்தாமும் வேதாந் தப்புலஸ்தியனார் செய்தார்கண்டீர், சாகமுடன்சித்தரெல்லா பிரமித் தேங்கி சட்டமுடனவர்பதிக்குப் போனார்தாமே. கூஉஅ

போனாரேசித்தர்கள்தான் சென்றபின்பு பொங்கமுடன்தேரை யமுனிவருக்குத், தேனானபுலஸ்தியரும் பின்னுஞ்சொல்வார் தெளி வானயென்சீஷா மைந்தாகேளு, கோனானகுவலயத்தி லிருந்துமெ ன்ன சொப்பனவே தேகமதுநிற்பதில்லே, மானானவையகத்தினைசை விட்டேன் மன்னவனேசமாதிக்குப் போறேன்தானே. கூஉகூ

புலஸ்தியர் இரண்டாவது சமாதிக்கேகல்.

போகின்றேன்தேரை முனிசித்துகேளும் பொங்கமுடன்வைய கத்தையான்மறந்தேன், சாகின்றசடலமது யிருந்துமென்ன சுதாகா லநேமிட்டைக் கொண்டுமென்ன, தாஙின்ற பொன்மணியின்சோதி

போனுஞ்சதாகாலமெப்போதுந் துலங்கவேண்டும், வேகின்றநெஞ்ச மதையிதங்கவைத்து வேகமுடன்சதானித்தம் பணியநன்றே. ௯௱௦

பணியவேபதாம்புயத்தை நண்ணவேண்டும் பாங்கான மோட்ச மதைக்கருதவேண்டும், அணியவே மறுபடியுஞ் சமாதிக்கேக வப்ப னேயான்கொண்டவுறுதிதன்னை, துணிவுடனேஎன்சீஷா சித்துபால துணையாகநீயிருந்துசெல்லுமட்டும், கனிவுடனேவுபதேசம் பெற்று மல்லோ காசினியிலிருப்பவனே சித்துவாமே. ௯௱௧

சித்தானசித்துமுனி தேரையாகேள் சிறப்புடனே சமாதிக்குப் போறேனப்பா, புத்தானமண்மீதில்வருவதில்லைபுகழான தேகமதை மறந்துவிட்டேன், சத்தமதுதானடங்கி மண்ணுப்போறேன் சாகின் றதேகமது விழலாய்ப்போச்சு, பத்தியுடனுலகுவரை முடிவுநாளில் பாலகனேயெந்தனையுங் காணலாமே. ௯௱௨

தன்வந்திரிவுற்பவம்.

காணலாமின்னமொருமார்க்கஞ்சொல்வேன் காசினியில்தன்வந் திரியென்றசித்து, நீணவேகிரேதாயி னுகத்திலப்பா நீடானவிஷ்ணு வவதாரங்கொண்ட, பூணவே தன்வந்திரியானசித்து புகழானமகா விஷ்ணுவவதாரத்தால், வேணவேமேதினியில் சித்துமாகி வேதாந்த தன்வந்திரியென்னலாச்சே. ௯௱௩

என்னவேதன்வந்திரி யென்றசித்து யெழிலானகாயாதி கற்பங் கொண்டு, தென்பொதிகைதனிற்சென்று மேருதன்னில் தேற்றமுட னகத்தியனார் தன்னைக்கண்டு, வன்பானசாத்திரங்க ளுள்ளாராய்ந்து அவர்மீதிலபட்சம்வைத்து வன்புடனர்ந்து, சொன்னமொழிதப்பாமல் நயங்கள்பேசி சூட்சாதிசூட்சமெல்லா மறிந்தார்தானே. ௯௱௪

அறியவேயகஸ்தியனார் செய்தநூலாம் அகண்டமெனும்பெருங் கடலுக்கொப்பதாகும், முறியாமல்தன்வந்திரி செய்தநூலை மூன்றுல ட்சங்கிரந்தமென வகுக்கலாகும், சரியொத்தநூல்களுமே பாடிவைத் தார்சரியாகவகத்தியரு மதும்பாற்சொன்னார், தெரியவே லோகாதி மாண்பருக்கு தேற்றமுடன்பாடிவைத்தார் நூல்கள்தாமே ௯௱௫

பாடிவைத்தமூன்றுலட்சங்கிரந்தந்தன்னை பாரினிலேவெகுகோ டிசித்தர்தாமும், நாடியேமிகப்பார்த்துக் கண்டாராய்ந்து நலமுடனே பதினெண்பேர் சித்தரெல்லாம், கூடியேவெகுநூல்கள்செய்தார்பாரு குவலயத்திலெவராலுஞ் சொல்லப்போமோ, தேடியேதன்வந்திரிபக வான்றானும்தீர்க்கமுடன் சமாதிக்கெண்ணினாரே. ௯௱௬

எண்ணினார்காயாதி கற்பங்கொண்டு யெழிலாகத்தாமிருந்தார் வுலகுதன்னில், நண்ணமுடன் சீஷவர்க்கமனேகம்பேர்கள் நாடினார்



தன்வந்திரிபகவான்றன்னை, வண்ணமுடன் வெகுகாலமிருந்தசித்து வளமையுடன் சதுராதிமார்க்கமெல்லாம், கண்ணபிரான்தானறிந்த சொரூபசித்து காசினியிலவர்போலுஞ் சொல்லப்போமோ. ௯௱௭

தன்வந்திரிசீஷர்களுக்கு யோகமார்க்கங்கூறல்

சொல்லவேசீஷருக்கு ஞானமார்க்கம்செப்பினார் சரிகைகிரியோ கமெல்லாம், வெல்லவேவிடகம்பழ் பிரிதிமார்க்கம் வேதாந்த ஆகடி யம்சௌபாக்கியந்தான், புல்லவேசோபனமா மதிசண்டமார்க்கம் புகழானசுககர்மம்திரிதிபாதை, மெல்லவேசூலமொடுகண்டபத்திரம் மேதினியில் நேர்மையுடன் யிரைத்தார்பாரே ௯௱௮

பாரேதான் விருத்தியுடன் துருபம்யாவும் பாங்கானவியாகாதம் அரிஷணவேதம், சீரேதான்வச்சிரமாஞ் சித்தியோகம்சிறப்பானவிதி பாகமனந்தங்கோடி, நேரேதான்விரியாகம் பதிகம்யாவும் நேர்மையு டன்சிவகண்டஞ் சித்தபோதம், தீரேதான்சாத்திரங்கள் சுவாணகர மம்சித்தமுடன் சிவசுப்பிரம் பிரம்மந்தானே. ௯௱௯

தானான பிரம்மமொடு வபிந்திரபேதம்தாக்கான வைதிருதியோ க்கத்தானும், பானானயோகமதாயிருபத்தேழும் பாகமுடன்பாலித்தா ர்சீஷருக்கு, கோனானதன்வந்திரி பகவான்றானும் குவலயத்தில்சீஷர் மேல்பட்சம்வைத்து, தேனானயோகமென்ற மார்க்கந்தன்னைதெளிவு டனேதாமுறைத்தார் மந்திரியாமே. ௯௱௰

ஆமேதான் பலமுடனே பாலவமுந்தானும் வப்பனேகௌலமு டன்கைதுலையுமாகும், வேமேதான்காசியுடன்வணசிவமுமாகும் வெ ட்டவெனிபத்திரையாம் சகுனியிடமாகும், தாமேதான் சதுடாதம் நாகவமுமாகும் தாக்கானகிமஸ்துவுடன் காணமாகும், போமேதான் காணமதுபதினொன்றாகும் போக்கானயோகத்துக்குந்தியச்சே. ()

சீஷர்களுக்கு ராசிகூறல்.

ஆச்சப்பாயிராசியது சொல்வேன்பாரு வப்பனே மேடமுடன் ரிஷபமாகும், மாச்சலுடன்மிதுன மதாகடகந்தானும்மகத்தானசிங் மதுகன்னியாகும், வீச்சப்பாதுலாவுடனே விருச்சிகந்தான் விரைவா னதனுசுடன் மகரமாகும், பாச்சலுடன்கும்பமது மீனமாகும் பாங் கானராசியது பனிரெண்டுமாமே. ௯௱௰௨

ரெண்டுடனேதுலாராசி மெத்தநன்று யெழிலுடனேகன்னிசிங் கமிருந்தால்நன்று, பண்டானசாத்திரங்கள்யாவுமல்லோ பாங்குடனே கண்டறிந்தசித்துயோகன், கண்டாலும்விடுவார்கள்சித்துநான்காசினி

யில்தன்னோடே சேர்த்துக்கொள்வார், உண்டானபொருளல்லா மவர்க்கேயோதி வுத்தமனைசிஷர்களாய்ச் செய்வார்தானே. ௯௪௩

செய்தாரே தன்வந்திரி பகவான்றானும் செயலான பாக்கியமும் றாலுந்தந்தார், உய்யவேசிஷவர்க்கங் கண்டாராய்ந்து வுத்தமனை தேடினதோராயிரம்பேர், கையவேசிஷவர்க்க மாயிரம்பேர் நலமுடனே விட்டகுறையுள்ளபேர்கள், தய்யவே தேர்ந்தெடுத்தோரிவர்களாகும் துரைராசசுந்தரனே சொல்வேன்பாரே. ௯௪௪

பார்க்கவேயெனதையர் காலாங்கிநாதர் பட்சமுடனெந்தனுக்கு வுரைத்தசேதி, தீர்க்கமுடன்யானுமல்லோ குளிகைகொண்டு தேசாதிதேசமெல்லாந்தான்றிரிந்து, ஏர்க்கமுடன்லோகவதிசயத்தையெல்லாமெழிலாகத்தான்பார்த்துகண்டாராய்ந்து, மார்க்கமுடன்பாடிவைத்த சத்தகாண்டம் மகத்தான நடுக்காண்டமிதுதானாமே. ௯௪௫

தன்வந்திரிசமாதிக்கேகல்.

நடுவானகாண்டமதுவேழாயிரந்தான்நலமானகாவியத்துக்கிணை வேறுண்டோ, வடுவான தன்வந்திரிபகவான்றானும் மார்க்கமுடன் சமாதிக்கேகவெண்ணி. அடுமையாமானதொரு சிஷவர்க்கம் வன்புடனே தானைத்தார்வதீதமார்க்கம், படுகுழியில் சமாதிதனில் செல்லவென்று பண்புடனே தாமுரைத்தார் பகவான்றானே. ௯௪௬

சமாதியிடம்சிஷர்களுக்குபுத்திகூறல்.

தானான தன்வந்திரிபகவான்றானும் தண்மையுடன் சிஷருக்குத் தாமுரைப்பார், தேனானகண்மணியே சிஷவர்க்கம்தெளிவுடனே யெல்லவருங்கேட்டிருங்கள், பானனபாரின்மிசைபாசைவிட்டேன் பாங்கானசமுசார வாழ்க்கையற்றேன், மானனமனோன்மணியை மனதிலெண்ணி வையகத்தினாசையெல்லா மறந்திட்டேனே. ௯௪௭

மறந்திட்டேன் காயாதி கற்பங்கொண்டு மானிலத்தில் சிலகால மிருக்கவென்று, துறந்திட்டேன்சமாதிக்குச்சிலதுகாலம் தொல்லுலகையான்மறந்து மண்ணிற்சென்று, கறந்திட்டபாலதுபோல் வடிவமாகி காசினியில்மறுபடியும்வருவேனென்று, உறமுடனே ஞானோபதேசந்தன்னை வுண்மையுடன் போதித்தார்சீடர்தாமே. ௯௪௮

போதித்தநாள்முதலாய் பகவான்றானும் பொங்கமுடன்மேருகிரிதன்னிற்சென்று, ஆதித்தன்காணுகவதீதநாடு அங்ஙனவேசென்றாரம்பகவான்றானும், சாதித்து மனதாறிக்கொண்டுமல்லோ சட்டமுடன் சீடவர்க்கங் கூட்டத்தோடு, பாதிமதிசடையணிந்த தம்பிரான்போல் பதிதன்க்குலவினார் பகவான்றானே. ௯௪௯



ஏகவேபொதிகைமலைக் கடலோரந்தான் யெழிலான தீவுதனில் சமாதிதன்னை, பாகமுடன்படுகுழிகள் வெட்டினார்பார் பாங்குடனே நீரோடும்பாங்குமட்டும், ஏகமுடன் சமாதியதுகட்டினார்கள் யெழிலான தன்வந்திரிபகவானுக்கு, சாகமுடன்குழிதனிலே யிரங்கினாராம் சட்டமுடன் திறைகொண்டுமூடினாரே. ௯௫௦

தன்வந்திரிபகவான் சமாதியிலிருந்துசிஷர்களுக்கு வசரீரிவாக்குகூறல்.

மூடினார்சிஷவர்க்க மாயிரம்பேர் மூதுலரைக்காணாமல் மறைந்தார்சித்து, நாடியேசிஷரெல்லாஞ் சமாதிபக்கல் நலமுடனே காத்திருந்தார் கும்பலாக, வாடியேசிஷரெல்லா மிருக்கும்போது மகத்தான தன்வந்திரிபகவான்றானும், தேடியேசிஷருக்குச்சொல்லார் பாரு தெளிவுடனே கேட்டிருங்கள் மாணக்கரே. ௯௫௧

கேட்கவே தன்வந்திரிபகவான்றானும் கிருபையுடன் சிஷருக்குக் கூறினார்பார், நீட்கமுடன்வறுயதுவாண்டுமட்டும் நிலையான சமாதிதனிலிருப்பேனென்றும், வேட்கமுடன்சரீரி வாக்குதானும் விரமுடன் கூறினார்பகவான்றானும், தீட்கமுடன்சிஷவர்க்கங் கேட்டிருந்தார் திறைகோடிவறைகோடிகாலமாச்சே. ௯௫௨

ஆச்சப்பாயான்வருகுங்காலந்தன்னில் அவனிதனிலதிசயங்கள் மிகநடக்கும், மூச்சடங்கிப்போனதொருதேசந்தானும் மூதுலகில் வருவதற்கு முன்னதாக, ஏச்சலுடன்வதிசயங்கள் மிகநடக்கும் யெழிலானபொதிகைமலை சார்புதன்னில், கூச்சலுடன் தேவாதிரிஷிகளெல்லாங் கொற்றவனார்வருங்காலந்தானுமாச்சே. ௯௫௩

தானுமேரிஷிக்கூட்ட முனிவர்தானும் தன்வந்திரிபகவானும் வருநாளாச்சு, வானுலகுதேவரெல்லாம் வருந்தியல்லோ வருணமழைப் புஷ்பமதுபொழிந்தாரங்கே, தானுலகுராஜாதிராஜரெல்லாங் காணிக்கைகொண்டுவந்து பகவானுக்கு, தேனமுதுகனிவுடனே புட்பதீபம் தேர்வேந்தபகவானுக்கொடுசென்றாரே. ௯௫௪

தன்வந்திரிசமாதியை அகத்தியர்காணவந்தது.

சென்றாரேசமாதியிட பக்கந்தன்னில் சிறப்புடனே சித்தர்முனி நிற்கும்போது, குன்றானபொதிகைமலைக் கும்பயோனி குவலயத்திலதிசயத்தைப்பார்க்கவெண்ணி, தென்றிசையில்மலையைவிட்டு புகவன்றன்னைதேற்றமுடன் காண்பதற்கு முனிவர்தாமும், வென்றிடவே சமாதியிட பக்கந்தன்னில் வேதாந்த சித்தொளிவும் வந்திட்டாரே. ௯௫௫

வந்ததொருசேதி தன்னைநந்திகேட்டு வண்மையுடன் தன்வந்திரிபகவான்றன்னை, சிந்தையிலே நற்சீடனென்றறிந்து சீரானபகவானைக்காணவென்று, பந்தமுடன்நற்சீடனென்று சொல்லி பாரினிலேகண்டு நெடுநேரமாச்சு, அந்தமுடன்சமாதிவிட்டு வருதலுக்கு வன்பானநந்தீசர்வந்திட்டாரே. ௯௫௬

## தன்வந்திரிசமாதியைநந்தீசர்காணவருதல்.

இட்டாரேநந்தீசர்முனிவர்தாமும் யெழிலானசமாதியிட பக்கந்தன்னில், விட்டகுறை யிருந்ததினால் பின்னுங்காண விருப்பமுடன் வருவதற்கு வந்தாரல்லோ, பட்டதொரு தன்வந்திரி பகவான்றன்னை பட்சமுடன்காணுகைக்கு நந்திதாமும், கிட்டியேசமாதியிடவலபக்கந்தான கிருபையுடன்காண்பதற்கு நின்றார்பாரே. ௯௫௭

## தன்வந்திரியைக்காண அசுவனியும்விசுவனியும்வருதல்.

பாரேதான் அசுவனியாம்விசுவனியாந்தேவர் பட்சமுடன் தன்வந்திரிபகவான்றன்னை, நேரேதானசமாதியிடங்காணவென்று நேர்மையுடன்சென்றாராம் சமாதிபக்கல், கூறேதான்சித்தவரும் நாளுமாச்சு குவலயத்தில்சித்தரெலலாம் கும்பாய்நிற்க, சீரேதானபுவிமீதிலதிசயங்கள் சிறப்புடனே தானடக்கும் மகிமைதானே. ௯௫௮

தானானவருபது வாண்டுதன்னில் தாக்கானசமாதியின் பக்கல்தன்னில், மானானகுருடர் முதல்சப்பாணிதானும் மகத்தான ஊமைமுதல்பேசுவான்பார், தேனானதன்வந்திரி பகவான்றானும் தேற்றமுடன் சமாதிவிட்டு வெளியேவந்தார், பானானபகவானும்பாரின்மீதில் பரமவொளிசொரூபாய் வந்திட்டாரே. ௯௫௯

வந்தாரேபகவானும்பூமிமீதில்வண்மையுடன் சீடவர்க்கந்தன்னைக்கண்டு, சிந்தனையாய் சீடவர்க்கந்தன்னைநோக்கி சிறப்புடனேவுபதேசம் மிகவாய்ச்செய்து, தந்தமக்குவரமதுவும் பகவானானும் தண்மையுடன் தான்கொடுத்துவாசீர்மித்து, வந்தனையாய்வுலகினுடமகிமைதன்னைவாகுடனே தானகேட்டார் பகவான்றானே. ௯௬௦

தானேதான் கேட்கையிலே சீஷவர்க்கம் தகமையுடனுத்தாரம் கூறுகின்றார், தேனான தெள்ளமுர்தமயெந்தன்கோவே தேற்றமுடனாமுரைப்போம் பகவானுக்கு, பானானகுருடர் சப்பாணியாரும் பாங்குடனேகண்திறந்து நடக்கலாச்சு, வேனானயுலகுதனில் தங்கள்வார்த்தைவேணபடியதிசயங்கள் கண்டோம்தாமே. ௯௬௧



கண்டோமேயென்றவுமேசீஷர்தாமும்கருத்துடனே தாமுறைப்பார்பகவான்றானும், அண்டமூல களந்ததொரு ஆதிபாலன் அல்லவருங்கேட்டிருக்கத் தாமுறைப்பார், விண்ணுலகிலிருந்து மென்ன சீஷமாரேகேளுதேவலகமகிமையெல்லாங்கண்டுமென்ன, சண்டமாருதமானகாயகற்பம், சட்டமுடன்கொண்டென்னவொன்றுங்காணே. ௯௬௨

காணவேகாயாதிக் கொண்டுமென்ன கலியுகத்தில் கோடிவரையிருந்துமென்ன, வேணபடிவேதநூல் செய்துமென்ன விட்டகுறையிருந்தென்னபோயுமென்ன, பூணவேசமூசாரவாழ்க்கையற்று பூவுலகிலிருந்தென்ன மடிந்துமென்ன,தோணவே சின்மயத்தைக் கடந்துமென்னதொல்லையெல்லாமற்றது மொன்றுங்காணே. ௯௬௩

ஒன்றானதேகமது பொய்யேவாழ்வு வுத்தமனேலோகத்திலொன்றுமில்லை,பன்றானபொய்களவுயாவுமுண்டுபாரினில்விசுவாசமருளுமில்லை, குன்றானவிசுவாசமருள்கொண்டாலும் குவலயத்திலொன்றுமிலை பாருபாரே, தன்றானவையகத்து வாழ்க்கையெல்லாந் தாரணியில் இப்படியே மேவலாச்சே. ௯௬௪

## தன்வந்திரிமறுபடியுஞ் சமாதிக்கேகல்.

ஆச்சப்பாசீஷவர்க்கஞ் சொல்லக்கேளும் வப்பனே பின்னுமல்லோசமாதிசொல்வேன், மூச்சடங்கிசமாதிதனில் யிருப்பேனென்றும் பூதலகில் மறுபடியும்வருவதில்லை, மாச்சலுடன் வுலோகமதுமுடிவுகாலம் மகிட்சியுடன்சீஷர்களைக்காணலாகும்,வாச்சுதேவிட்டகுறைசேருமானல் வளமானசீஷரெல்லாங்காண்பேன்பாரே. ௯௬௫

பாரேதான் யென்றவுமேபகவான்றானும் பாரின்மிசை யாசையதுவிட்டொழித்து, நேரேதான்சமாதிக்குச்சென்றாங்கே நேர்மையுடன்பகவானும் மண்ணிற்சென்று, போரேன்யான பொன்னுலகப்பதியைத்தேடி பொங்கமுடன் யெந்தனதுவாசையற்று, சீரகதானிருங்கள் சீஷவர்க்கமசிற்பரனைற் பதிம்பாரேனென்றார்தாமே. ௯௬௬

## சுந்தரானந்த ருற்பவம்.

தாமானயின்னமொருசூட்சங்கேளு தகமையுள்ளசுந்தரானந்தசித்து, காமானசித்தினுட பெருமைசொல்வேன் காசினியிலிவர்போலுஞ் சித்துவுண்டோ, வேமானமானதொரு சித்துதாமும் வெகுகோடிகாலம்வரைதாமிருந்தார், நாமானமென்றதொரு காயகற்பம் நாதாந்தசித்துமுனி கொண்டார்தாமே. ௯௬௭

கொண்டதொரு சுந்தராநந்தர்தாமும் குவலயத்தில் வெகுமாண்பர்சித்தருக்கு, அண்டமுடியானதொரு சாத்திரங்கள் வனேகமாய்க் கற்பித்தார்சித்தர்தாமும், கண்டறிந்தசித்துவர்க்க மாயிரம்பேர் கருவாளிக்கூடிருந்தார் சிததுதாமும், தொண்டரெனும் சித்துமுனி சீஷவர்க்கம் துரைராசசுந்தரனைச் சூழ்ந்தார்பாரே. ௬௬௮

அயிராவதமருகிற்சமாதியடைதல்.

பாரேதான் சுந்தராநந்தசித்து பாரினிலே யிருந்தசுகம்போதுமென்று, நேரேதான்வடக்குமுகந்தன்னிலப்பா நெடுந்தூரமானவயிராவதந்தான், சீரேதான் யெண்ணூறுகாதமப்பா சிறப்பான வயிராவத மலைதானுகும், ஆரொன்று மலையோரந்தன்னிலுண்டு வழகான மண்டபந்தா னிருக்குந்தானே. ௬௬௯

தானானமண்டபந்தான்லட்சங்காலாம் தாக்கானவாய்க்கால் நடுமையத்தில், கோனானயெனதையர்காலாங்கிநாதர்கொற்றவனார்சொற்படிக்கிக் கண்டேன்யானும், தேனானமனோன்மணியாள் கடாட்சத்தாலே தேசமெல்லாஞ்சுத்தியந்தசொரூபசிதது, வானானவையகத்திலிருந்தசித்து வளமுடனேகாலாங்கி யென்னும்பாரே. ௬௭௦

பேரானசுந்தராநந்தசித்து பெருமையுடன்வுலகுதனில்வாழ்ந்தசித்து, சீரானசுந்தரநாதர்தாமும் சிறப்புடனே சமாதிக்குச்செல்லவெண்ணி, கூரான சீஷவர்க்ககூட்டத்தோடு கொடிமுடி கைலாசர்பேர்மேலதானும், சேரானவருங்கடலைத தேடியல்லோ சேனையுடன் வந்தாரே சித்துநாதனே. ௬௭௧

சித்தானசொரூபமென்ற சித்துதாமும் செழுமையுடன் சிலகாலமிருந்துமேதான, முத்தானபவக்கடலையொழிததுமல்லோ மூதுலகில்சமாதிக்குப்போகவென்று, பத்தியாய்சீஷருடன்பரமநாதர பாருலகுவாசல்தனைவிட்டொழித்து,நித்தியமுதானதொருகடவுடன்னை நிட்களமாய்த்தானினைந்து துதித்திட்டாரே. ௬௭௨

துதித்துமேஅயிராவதத்தின்பக்கல்துறையானவாற்றோரந்தனிற்சென்று, மதிப்பான சங்கநிதிபதுமநிதிதன்னை மாற்கமுடன் கண்டல்லோசித்துதாமும், விதிப்படியேசமாதிக்குயிடமுந்தேடி விருப்பமுடன் தானழைத்துசீஷர்தம்மை, ததியானமாண்பர்களேயின்னுங்கேளும் தண்மையுடன்சமாதிக்குச் சொல்வேன்பாரே. ௬௭௩

பாரப்பாசமாதிதனிலிரங்கியல்லோ பத்தாண்டுவரைமுடியிலிருப்பேனென்றும், சீரப்பாசிலகாலஞ்சென்றபின்பு சிறப்புடனேவையகத்தில்வருவேனென்றும், காரப்பா சமாதியிடம்வீற்றிருங்கள் காசினியில்வெகு கோடிவதிசயங்கள் ,நேரப்பாவதிசயங்கள் காணப்போறீர் நேர்மையுடன்சித்தனது வுரைபொய்யாதே. ௬௭௪



சீஷனுகியடமாராநந்தர் புத்திகூறல்.

பொய்யானவுலகத்தில்மாந்தாப்பாபொங்கமுடன்கருமிகளுமெத்தவுண்டு, மெய்யாகவவர்களிடம் வாய்பேசாதே வேதாந்த நுட்பமதைக்காட்டவேண்டாம், துய்யதொருகாயாதி கற்பந்தன்னை சூட்சத்து துறையதனைக்கூறவேண்டாம், வையவேவுறவுகண்டுவிடையுங்கேட்பார் பகராதே ஒருக்காலுமகிழ்ந்திடாதே. ௬௭௫

மகிழவேயுந்தனுக்கு யிதவுசொல்லிமாராட்டமாகவல்லோ கும்பல்கூடி, நெகிழவேஞானத்துக்குறுதிகேட்டார் நெடிதானபாலமூர்தபோதையுண்டு, மகிழவேதடுமாட்ட மிகவேகூறி தருக்கமதுசெய்துமல்லோகருவிகேட்பார், அகிழவேகருவதனை யுன்னைக்கொல்ல வப்பனே கபடதந்திரஞ்செய் வார்பாரே. ௬௭௬

பாரேதான்முழுமக்கள் கருமியோடுபகராதேயுன்னுக்குள் மருமவித்தை, தீரமுடன்சிவயோகநிலையிற்சென்றுதீர்க்கமுடன்சதாநித்தம்பருவமாகி, நேரேதான்தீவழியை விட்டுநீங்கி நேர்மையுடன் நல்வழிக்கியாளதாகி, கூரேதான்குவலயத்தி லடக்கங்கொண்டு கொற்றவனே வாழ்குவது புத்தியாமே. ௬௭௭

புத்தியாமின்னம்வெகு மார்க்கஞ்சொல்வேன்புகழானகண்ணிமயேபுகலக்கேளும், சத்தியத்துக்கொருநாளுங் குறைவாராது தாரணியில் நீயுமொருசித்தனாவாய், வெத்தியுண்டுவிசுவாசமருளுமுண்டுவேதாந்தப்பெருங் கடலைவெல்லலாகும்,\ எத்திசையுமுந்தனையே புகழ்வார்பாரு பெழிலானசீஷவர்க்க முதல்வனாமே. ௬௭௮

ஆமேதான்அறிவுள்ள டமராநந்தர்வவனியிலேநீயுமொரு புத்தியானாய், தாமேதான் யான்வருகுங்காலமட்டும்தண்மையுடன் சமாதியிடபக்கல்நின்று, நாமேதான்சொன்னபடிவிதியின்மார்க்கம் நாட்டமுடன்தானிருந்து பக்திகொண்டு, போமேதான் விண்காலங்கழியாமற்றுன் பொங்கமுடன்சமாதியிடம் நிற்பீர்தாமே. ௬௭௯

டமாராநந்தருக்கு சுந்தராநந்தர் சமாதியில் அசரீரிகூறல்.

நிற்கவேசுந்தராநந்தர்தாமும் நெடிதான வசரீரிவாக்குசொல்வார், விற்பனமாங்கொண்டதொரு சீஷர்தாமும் விண்ணுலகிலெல்லவருங்கேட்டிருங்கள், சொற்படியே தானடக்குஞ்சுந்தரன்சொல் தொல்லுலகில்பொய்யாது மெய்யேயாகும், கற்புதைதந்தப் பாறையதுவெடிக்கும்போது கைலாசசுந்தரரும் வருவன்றானே. ௬௮௦

தானானசுந்தரரும் வருகும்போது தாரணியில்வெகுகோடி வதிசயங்கள்,பானுனபாரயரியும் முன்னேநிற்பான் பாருலகந்தத்தனிக்கு

ஞ்சோதிகாணும், மாறனை வையகங்களிருண்டும்போகும் மகத்தான நாதாக்கள் நடுங்குவார்கள், கூறனைமொண்டிசப் பாணியெல்லாப் குறைநீங்கி பிணிநீங்கி யெதிர்நிற்பாரே, ௬௮௧

எதிரான சூரியனும் மங்கிநிற்பான் யெழுகடலுந் திலசமாறி பொங்கிநிற்கும், சதிரானநாலுயுகவதிசயங்கள்சார்புடனேயெக்கா ங்காணலாகும், மதிபோன்ற சந்திரனும் பெதிரேநிற்பான் மாசற்றவ குந்துதியும் நடுங்கும்பாரு, துதியான வஞ்சலிகள் மிகுவேசெய்வா தொல்லுலகந்தத்தளிக்கக் காணலாமே. ௬௮௨

காணலாங்கைலாச மேருதானுங்கண் ணுக்குத்தோற்றுமே கடினமில்லை, வேணபடியுபசாரமிகநடக்கும் மேதினியில்சுந்தரனார் வாக்குபொய்யா, தோணவே யித்தியாதிவதிசயங்கள்தொல்லுலகில் தானடக்குஞ்சத்தியசத்தியம், நீணவே யெந்தனது சமாதிபாறை நெடியதொருவதிசயங்களின்னங் கேளே. ௬௮௩

கேளப்பாயான்வருகுங் காலந்தன்னில் கெணிதமுடன் பாறையதுமீதிலப்பா, நாளப்பாவருகுநா ளெழுதலாகும்நாதாக்கள் புத்தியுள்ளோர்காணுவீர்கள், ஆளப்பா வாசகத்தைக்கண்டபோது வப்பனேசமாதியுள்சிலம்பினோசை, வீளப்பாசெவிதனி லேகேட்கும்பாரு விட்டகுறையிருந்தோர்க்கு லபிக்குந்தானே. ௬௮௪

தானேகேள் சித்துவரும் நாளுமாக்க தாரணியில் வெகுகோடி மகிமைமெத்த, மானேகேள்சொரூபமென்றசித்துதாமும்மகத்தான நவகோடி ரிஷிகள்முன்னே, கானமுடன் சமாதிவிட்டு வெளியேவந்தார் கைலாயமேருகிரி சொரூபம்போலே, பானமிர்தமுண்டுமல்லோ பாரின்மீது பட்சமுடன்சித்தொளிவைக் கண்டிட்டாரே. ௬௮௫

கண்டவுடன் ரிஷிவர்க்க மொன்றாய்க்கூடி கருத்துடனேவஞ்சலிகள்மிகவுஞ்செய்து, தெண்டமுடன்சாஷ்டாங்கமிகவும்பூண்டு தே ற்றமுடன் ஞானோபதேசம்பெற்று, பண்புடனே நவகனியுமமுர்த தாணும்பட்சமுடன்சித்துவுக்குக்கொண்டுசென்று, விண்டதொருவ தேசம்பெற்றுக்கொண்டு வுத்தமர்கள் தாமிருந்தாருண்மைபாரே.

உண்மையாமிப்படிதா னிருக்கும்போது ஓகோகோ நாதா சித்துதாமும், வண்மையுடன் வையகத்தில் வந்துமல்லோ மகோ வற்புதங்கள்செய்தார்பாரு, தன்மையாய்தானுரைத்தவாக்குபாவுய தாரணியில்நிறைவேறிப் போச்சுதல்லோ, நன்மைபெறச்ரிஷிவர்க்கம் காணலாச்சுநாடனைத்தும் சுந்தரனார்கீர்த்தியுண்டோ.



உண்டானசீர்த்தியதுமிகவுமாகி வுண்மையுடன் கிரியைமுதல் வசீர்தானும், தொண்டர்கட்குத் தாமுரைத்தவாக்கு போலதொல்லுலகில் வதிசயங்கள் மிகவுமாகி, மண்டலத்தில நாதாக்கள்சித்துதா மும் மதித்தாரே சுந்தரரைமதித்தார்பாரு, கண்டமுடி மாண்பரெல்லாந்தலைகுனிந்து கைலாசசுந்தரரைத் துதித்தாரபாரே ௬௮௬

சுந்தரா நந்தர்மறுபடியும் சமாதிக்கேகல்

பாரேதான்பின்னமொருமார்க்கஞ்சொல்வேன் பண்பானசுந்தரானந்தர்தானும், நேரேதான் நெடுங்காலம் வையகத்தில் நேர்மையுடன் தாமிருந்தார் ரிஷிரோடு, சேரேதான் சிலகாலஞ் சென்றபின்புசிறப்புடனே பூலோகவாழ்வுதன்னை, கூரேதான பொய்யென்று மனதிலெண்ணி கொப்பெனவே சமாதி செல்வேனென்றிட்டாரே()

இட்டாரே சுந்தரா நந்தர்தாமும்யெழிலாகச் சமாதிக்குச்செல்லவென்று, திட்டமுடன் மறுபடியுஞ் சமாதிக்கேக திறமுடன் ரிஷிருக்கு விடையுஞ்சொல்லி, சட்டமுடன சமாதிக்குப் போறனப்பா தாரணியில் சதாகாலம் நீங்களெல்லாம், கிட்டிருந்து நான்வருகுங் காலமட்டும் இருமையுடனெதிர்பார்த்து நிரீர்தாமே. ௬௯௦

நிற்பீரேசில காலஞ்சமாதிபக்கல் நீடூழிகாலம் வரைமுடிவு மட்டும், வற்பமென்றவாழ்வ தனைமெய்யென்றெண்ணி வவனியிலேமதிமயங்கிநிற்கவேண்டாம், சொற்படியேசமாதிவிட்டு வருவேனானால் சுநாதனே யென்றுநீர் துதித்துக்கொள்ளும், அற்பசுகதேகமது வழிந்துபோனால் ஆண்டவன்முன் கடைசிவரைக் காணலாமே ௬௯௧

காணலாம் வுலகமது முடிவுதன்னில் கைலாசநாதரிடம் நிற்பேன்யானும், தோணவேயெந்தனையுங் காணலாகும் தொல்லுலகுமுடிவுவரை நாளிலப்பா, வேணபடிநீதிமனு முறைகள்யாவும் விருப்பமுடன் தானடக்குந் தேவர்பக்கல, நீணவேசிட்டர்க்கமனைத்துமேதான் நீடூழி முடிவுதனில் காணலாமே. ௬௯௨

ஆமேதான் வுலகுதனில் யிருந்துமென்னவப்பனே தேகமதை மறந்துவிட்டேன், நாமேதான் பாசமதைத் துறந்துவிட்டேன் நாட்டினிலே நாதாக்களாசைவிட்டேன், போமேதான்வுலகத்திலிருந்தாலுந்தான் பொன்னுலகு மெயபோதுங் காணியாகும், தாமேதான் தேகமது பொய்யே வாழ்வுசதாநித்தம மோட்சமென்ற விடுதானே.

தானான லோகமதில் யெல்லாம்பொய்யே சட்டமுடனிருந்தவர்களாருமில்லை, கோனான குருசொன்ன நூலும்பொய்யே குவலயமு

மொரு காலமழிந்துபோகும், தேனானசத்தசாகர மும்மப்பாதிறைமே வேரை காணுதாகிப்போகும், பானனவுலகமது வழிந்துபோகும்பா ருலகை கண்டவர்க ளில்லைதானே. ௯௯௪

இல்லையே நாதர்க்கள் சித்துதாமும் மெழிஹுடனே யெல்லவரு மாண்டாரப்பா, தொல்லையெனும் பிறவியதயற்றுப்போச்சுதோற்ற மில்லைவண்ட சராசரங்களெல்லாம், வல்லதொருவாத்மாவும் காணப் போகாமகத்தானலோகத்துமார்க்கமப்பா, சொல்லவென்றுல்காவில் லைப்பாவுமில்லை தொல்லுலகை மறந்தவனே சித்தனுமே ௯௯௫

## போகர் திக்குவதிசயம்

சித்தனைப் பிறந்துமே பாலன்றானும் சிறப்புடனே காலாங்கி கிருபைதன்னால், சுத்தமுடன் கிழக்கு தென்கிழக்குதானும் சூட்ச முடன் தென்மேற்கு தெற்குதானும், பக்தியுடன் மேற்குவட மேற் குதானும் பாங்கானவட, கிழக்குவடக்குதானும்-வெத்தியுடன்சுத்தி வந்தேன் குளிகைதன்னால் வேதாந்தந்தாயினது வொளிகண்டேன்.

கண்டதொரு குளிகைதன்னால் கைலையெல்லாங் காசினியோர் தான் புகழுசுத்திவந்தேன், அண்டமுடனதிசயங்கள்யெல்லாம்பார்த் திவப்பனை காலாங்கி கடாட்சந்தாலே, விண்டிட்டவேலோகாதி வதி சயங்கள் விருப்பமுடன், பாடிவைத்தேன் சத்தகாண்டம் சண்டமா ருதம்போலவேழாயிரந்தான்சாற்றினேன் லோகத்துமாண்பருக்கே

மாண்பானபெருநா லேழாயிரந்தான் மகத்தானநூலிது தானு லாங்காண்டம், காண்பான சத்தகாண்டந் தன்னிலேதான் கருவிகர ணுதியெல்லாம், திரட்டிவைத்தேன், நீண்பானகாண்டமது யேழுக் குள்ளே நினைத்ததொரு, பொருள்களெல்லாங் காணலாகும், நாண் பான சினபதியுலகத்தார்க்கு தகமையுடன் செப்பினதோர் நூலி தாமே ௯௯௮

நூலான நூலிதுதான் நாலாங்காண்டம் நுணுக்கமுடன்பாடி வைத்த சத்தகாண்டம், பாலானநூலதுபோல் பாருஞ்சொல்லார்பா லகனே வாயிரத்துக் கொருகாண்டந்தான், சேலானகாண்டமது யே ழுமாகும் சிறப்பானகாவிய, மேழாயிரந்தான் மாலானகுருநூலாம் பொருநூலாகும் மகத்தானகாண்டமது நான்குமுற்றே. ௯௯௯

போகர்சத்தகாண்டம்-எ௲

௪-வதுகாண்டம்-முற்றிற்று.

கடவுள் துணை

மஹாமகுத்துவம்பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# சத்தகாண்டம்-எ௲.

## ஐந்தாவது காண்டம்.

---

### காப்பு.

ஆதியென்றசத்திபரா பரமேகாப்பு
அகிலமெலாம்பேர்படைத்த வுமையாள்காப்பு
நீதியெனும்பரஞ்சோதி சடரேகாப்பு
நீடாழியுலகனைத்துங் கொண்டோன்காப்பு
பாதிமதிசடையணிந்த பரமன்காப்பு
பதாளந்தனிலவாழுஞ் சேடன்காப்பு
சோதியெனுங்காலாங்கி பாதங்காப்பு
சுத்தமுடன்தாள்பணிந்தேன் பாதங்காப்பே. ௧

பணிந்தேனேகாலாங்கிநாயர்பாதம் பாங்கானதிருவடிக்கிநமஸ் கரித்தேன், துணிந்தேனேகாண்டமதுயேழுஞ்சொன்னேன் துறை யானவாயிரத்துக்கொருகாண்டந்தான், மணிபோன்றபோகரேழா யிரந்தான் மகத்தானநூலிதுகாண்பெருநூலப்பா, கணிதமுடன் காண்டமிதுவைந்துமாகுங் காசினியில்வெகுமதியையறியலாமே, ௨

அறியவேயைந்தாவதானகாண்டம் வவனிதனிலதிசயங்களிதில டக்கம், குறியானகாண்டமதுவைந்துக்குள்ளே குவலயத்தில்மலை குகைகள்சாகரங்கள், தெரியாதகாணுறகுண்ணூதானும் தெளிவான சத்தநதியிலடக்கம், சரியானசினபதியார்க்கமெல்லாஞ் சட்டமுடன் கூறுவேன்போகர்தானே. ௩

தானானகாண்டமது வைத்துக்குள்ளே சாகரத்தின்பெருமையெல்லாஞ்சாற்றலாருக், கோனானபெனதையர்காலாங்கிநாதர் குருபாதத்தைவணங்கியாவுஞ்சொல்வேன், பானனமினுமணியாள்முன்னேநிற்க பாடிவைத்தேன்போகரேழாயிரந்தான், மானனாதாக்களொன்பேரிற்றுன் மனங்கோபங்கொள்ளாமல்மன்னிப்பீரே. ௪

சத்தசாகரப்பெருமை.

கொள்ளவேபிரிதிவென்றபூமிதானுங் குவலயத்தில்சான்கிலோர்பங்குமாகும்,விள்ளவேசத்தசாகரமுமப்பா மிக்கானமூன்றுபங்கென்னலாகும், உள்ளவேகாலாங்கிகிருபையாலே உத்தமனாடியேனுங்குளிகைபூண்டு,தெள்ளமிர்தமானதொருசாகரந்தான் தேற்றமுடன்றிருப்பாலின்கடலுமாமே. ௫

கடலானயேழுவரைகோடிமட்டும்காசினியில்குளிகைகொண்டு சுத்திவந்தேன், மடலானசீனபதிக்கடலும்விட்டு மகத்தானதிருப்பாலின்கடலுங்கண்டேன், அடலாசவஷ்டதிசைசுத்திவந்தேன் அப்பனேமற்றசர்க்கரமுங்கண்டேன், திடலானநெய்க்கடலும்பாலுங்கண்டேன் தீர்க்கமுடனுவர்கடலுங்கண்டேன்தானே. ௬

கண்டேனேயுவர்கடலைக் கடந்தபின்பு கடிதானதயிர்க்கடலையானுங்கண்டேன், விண்டேனேமதுபானக்கடலுங்கண்டேன் விரிவானகருப்பஞ்சாகரமுங்கண்டேன், அண்டமெலாந்தான்புகழும்நன்னீரான வழுக்கானசாகரமுங்கண்ணிற்கண்டேன், தண்டுளவமாலையணிகிருஷ்ணன்கொண்ட சாகரமாம்மத்திபத்திலிறங்கினேனே. ௭

இறங்கினேன்கிருஷ்ணனவர்பள்ளிகொண்டயெழிலானகடலினதுநடுமையத்தில், அறங்குடைய ஆலிலையைகண்டேனங்கே வப்பனேகுளிகைகொண்டுவதின்மேல்நின்றேன், திறமுடையகுளிகையதுவலுவினாலே தீர்க்கமுடன்சென்றேறிவந்தேனப்பா, சிறகில்லாப்பட்சியதுபோலேயானும் கீர்த்தியுடன்குளிகையினால்பறந்திட்டேபே. ௮

இட்டேனேசத்தசாகரமுங்கண்டேன் யெழிலானசத்ததீவுகளுங்கண்டேன், திட்டமுடன்சம்புவென்றதீவுங்கண்டேன் திகழானபிலட்சமாந்தீவுகண்டேன், சட்டமுடன்சேத்தீவுயானுங்கண்டேன் சார்பானகிரவுஞ்சத்தீவுகண்டேன், வட்டமாஞ்சாகரத்தின்தீவுகண்டேன் வளமானசான்மலியுங்கண்டேன்பாரே. ௯



பாரேதான்சான்மலிக தீவுகண்டேன் பாங்கானபுஷ்கரத் தீவுகண்டேன். நேரேதான்சத்த தீவுகளுங்கண்டேன் நேரானகுளிகையதுபூண்டுக்கொண்டு, சீரேதான்காலாங்கி புஜபலத்தால் சிறப்புடனே லோக மெல்லாஞ்சுத்திவந்தேன், கூரேதான்சீனபதி யானுஞ்சென்றேன் குவலயத்திலிதுபோல ஒன்றுகாணே. ௧௦

போகர் சத்தரிஷியைக்கண்டது.

காணேனேசீனபதி தேசம்போல கண்டதில்லை ஒருதேசம்யானுமப்பா, பாலமுடன் சீனபதிகடலோரத்தில் பண்பானமலையொன்றுகுகைதானுண்டு, வானர்முதல் வந்திறக்கும் பொய்கையுண்டு வளமான மண்டபந்தானங்கொன்றுண்டு, மீதானவேகுளிகையதுபூண்டுகொண்டுதொல்லுலகை யான்மறந்து சென்றேன்பாரே. ௧௧

சென்றேனேமலைவிட்டு மண்டபத்தில் சேணநெடுங் காதவழிபோனேன்யானும், நின்றதொருரிடிமலையாமங் கொன்றுண்டு நிலையான சப்தரிஷிமலைதானுகும், குன்றானமலையோர்ங் குளிகைகொண்டுகொற்றவனார்காலாங்கிதனைநினைந்து, தென்றிசையில்பொதிகை முனிக்கார்த்தாப்போலதேர்வேந்தே யெந்தனையுங்காரென்றுரே. ௧௨

காரென்று சொல்லுகையில் காலாங்கிதம்மை கருத்திலேதானினைந்துநமஸ்கரித்து. ஆரென்றுநினையாமலையர்பாதம் வப்பனேவணங்கினேன் கார்க்கவென்று, பாரென்னைக்காத்தருள் வேண்டுமென்றுபட்சமுடனுதரிக்கமனதுவந்து, சிரென்றநாமமதுபோர்விளங்க சிறப்புடனே யான்தொழுதேன்போகர்தாமே. ௧௩

தாமானவளதிசயங்களின்னுஞ் சொல்வேன் தாக்கான மலைதனிலே ரிஷிகளப்பா, கோமான்கள் தாமறியார் ரிஷியார்தம்மை குவலயத்தில் சத்தரிஷி யானுங்கண்டேன், நாமானமரீசியென்ற ரிஷியார்தாமும் நவமானமுதல்வரையிலிருந்தாரப்பா, வேமானமாகவல்லோ அத்திரியார்தாமும் வேகமுடன் இரண்டாங்கால் வரைமீதுண்டே.

உண்டான அங்கிசய ரிஷியார்தாமும் வுத்தமனே மூன்றுங்கால் வரையிலப்பா, திண்டானதவபதி யிலிருந்துகொண்டு திறமானயோகநிஷ்டை செய்வாரப்பா, கண்டேனேநாலாங்கால்வரையிலப்பா

கணமான புலஸ்தியரைக் கண்டேன்யானும் ஐண்டமாருதம்போல வைந்தாங்கலாம் சங்கிதிமேல்வரையி லிருப்பார்பாரே. ௧௫

பாரேதான் புலகனு ரிஷியார்தாமும் பான்மையுடன் மேல்வரையிலிருப்பாரங்கே, நேரேதான் ஆறுங்கால்வரைமேலப்பா நேர்மையுடன்பிருகுமகாரிஷிதானுண்டு. சீரேதானேழாங்கால் வரைமேலப்பா சிறப்பான வசிஷ்டருங்கண்டேன்யானுஞ், தீரேதான்சப்தமகாரிஷிகள் தம்மை தீர்க்கமுடன் மலைதனில் கண்டேன்தானே. ௧௬

தானானசப்தரிஷி யேழுபேர்கள் தாக்கானமலைதனிலே தவசிருக்கும், கோனானகுகைகளையே கண்டேன்யானுங் கொற்றவர்களாசிரம மெல்லாங்கண்டேன், தேனானரிஷிகளும் சேர்வைகாண தீர்க்கமுடனேழுவகை குளிகைபூண்டு, மானானமனோன்மணியாள்கிருபையாலே மலைமீதில்யேழுவரை வென்றேன்காணே. ௧௭

காணவேரிஷிகளிடஞ் சென்றேன்யானுங் காலாங்கி நாதருடகிருபையாலே, பூணவேஞானோபதேசம் பெற்றேன் பொங்கமுடன் கருவிகரணாதியெல்லாம், தோணவேயென்தனுக்கு வுபதேசங்கள் துரைராச சுந்தரனார்சொன்னாரங்கே, வேணவேசகலகலைகியான மெல்லாம் விருப்பமுடன்பிழைக்கவென்று கொடுத்திட்டாரே. ௧௮

கொடுத்தாரே பூவுலகில் பிழைக்கவென்று குவலயத்திலென் மீதில்பட்சம்வைத்து, அடுத்ததொருகுளிகைக்கு வுறுதிசொல்லி அப்பனே சாரணைகள்மிகவுங்கூறி, வுடுத்துமே யென்தனையும் மலைவிட்டேகி வேதாந்தசித்த முனிரிஷிகளெல்லாம், ஓடுக்கம்வரபுத்தியது மிகவுங் கூற ஓகோகோசப்தரிஷி போவென்றாரே. ௧௯

என்றாரேசப்தரிஷி உரையும்பெற்று வெழிலான காலாங்கிகிருபையாலே, சென்றேனேகுளிகையது மிகவும்பூண்டு சீனபதிக்குள்ளாகவந்தேன்யானும், நின்றேனேயென்னுடைய காலாங்கிநாதர் நிலையானசமாதியிடஞ்சேர்வைசெய்தேன், குன்றானமலைதனிலேயேறியல்லோ கொப்பெனவேகல முனிகண்டேன்தாமே. ௨௦

தாமேதான்கமலமுனிசமாதிபக்கல் தன்மையுடன்பான்சென்று சேர்வைசெய்தேன், வேமேதான்சீனபதிக் கோட்டைக்குள்ளே, வேகமுடன்குளிகைகொண்டு யிறங்கினேன்யான், போமேதான் சீனபதிப்பெண்களெல்லாம் போகமுடனென்தனையு மணையவல்லோ, நாமேதான் நினைத்தபடி பெண்களெல்லாம் நாட்டமுடன் மோகித்து வணைந்தார் பாரே, ௨௧



சீனபதியில்சப்தரிஷிகளைப்போல் போகருக்கு புத்திருண்டாதல்

பாரேதான்நினைத்ததொருகலைதன்னால் பாங்கானசப்தரிஷிபோலேயப்பா, நேரேதான்நினைத்தவண்ணம்ரிசிகள்போலேநேர்மையுடன் தான்பிறந்தாரிஷிகளப்பா, சீரேதானவர்கொடுத்தவரத்தினாலே சிறப்பானசப்தரிஷிபிறந்தாரங்கே, கூரேதான்தேவரிஷி யென்னலாகுங் குவலயத்தில்அரசரைப்போல்பிறந்தார்தாமே. ௨௨

பிறந்தாரேசீனபதிவாசுசெய்ய யோரானசப்தரிஷி யரசரப்பா, துறந்ததொருஞானிகள்போல்அரசரப்பா துப்புறவாய்ச்சீனபதியாண்டதுண்டு, மறந்தாரேவெகுகாலமிருந்துமல்லோ வையகத்தில்வாழ்க்கைதனைவிட்டுநீங்கி, நறந்ததொருபால்போலேஞானம்பூண்டு காசினியில்வெகுகாலமிருந்தார்பாரே. ௨௩

இருந்தாரேகோடிவரையுகாந்தகாலம் யெழிலானசீனபதிக்கோட்டைதன்னை, பொருந்தவேயாசாட்சிசெய்திட்டதியேதான் பொங்கமுடன்காயாதிகற்பங்கொண்டு, திருந்தவேசமாதிதனிலிறங்கியல்லோ திட்டமுடன்தாமிருந்தார்சித்துதாமும், வருந்தவேகோட்டையதுயேழுசுத்து வாகாகத்தலைவாசலேழுதானே. ௨௪

ஏழானதலைவாசலோவ்வோர்சித்து யிறங்கியேசமாதியதுபூண்டுகொண்டார், தாழானதிருவாசலொவ்வோர்பக்கம் தன்மையுடன்சமாதியதுபெருமைமெத்த, வீழாமல்தேகமதுவழியாமற்றான் விரானகோட்டையதுவாசலமுன்னே, சாழானசமாதியதுயேழுங்கண்டேன் சட்டமுடன்சேஷவர்க்கம்நெருங்கினேனே. ௨௫

நெருங்கவேவெகுகோடிமாண்பாரப்பா நேசாகயென்தன்முன்வந்துநின்று, குருங்கையென்றதாரமதனைத்தானெடுத்து கொப்பெனவேமுடிமீதில்சமர்ந்துகொண்டு, கருங்கவேவாசிர்மம்மிகவுஞ்செய்து சட்டமுடனென்தனையுங்கேள்விகேட்டு, வருந்தியேயிக்காலமெங்கேசென்றீர் வண்மையுடன்வந்ததுவும்புதுமையாச்சே. ௨௬

ஆச்சென்றபுதுமைபதுமிகவுரைத்து வப்பனேயென்தேவாயிக்காலந்தான், போச்சென்றுதேகமதுமனதிலெண்ணி பொங்கமுடன்வந்ததும்புதுமையாச்சு, பாச்சலுடன்காயாதிகற்பங்கொண்டு பானமாதேகமதுயென்றுசொல்லி, விச்சலுடன்காலாங்கிகிருபையாலே விதித்துதேகாணவல்லோவென்றிட்டாரே. ௨௭

இட்டாரேவெகுமாண்பர்கும்பக்கூடி யெழிலாக வெந்தனிடம் வந்தாரப்பா, சட்டமுடன்யான்கண்டவதிசயங்கள் சார்புடனேயா னுரைத்தேன்யோகமெல்லாம் திட்டமுடன்மாண்பரெலாமதிசயித்து திரமுடன்வீற்றிருந்தார்சினந்தன்னில், பட்டமுள்ளஅரசருடசமாதி விட்டு பாங்குடனேகுளிகைகொண்டுபுறப்பட்டேனே. உஅ

புறப்பட்டேன் சீனபதிக்கடலோரந்தான் புகழானவதிசயங்க ளெல்லாம்பார்த்து, திறக்கவேவட்க்குமுகந்திருப்பால்தன்னில் தீறமு டன்குளிகைகொண்டுசென்றேன்யானும்,நிறமாறித்தானிருக்குமாண் பால்லோ நீடானசுவத்தின்முகத்தைப்போல,உறமானமாண்பர்களை க்கண்டேனப்பா வுத்தமனைசெகத்துக்குள்ளிருப்பார்தானே. உகூ

இருப்பாரேமலைமீதும்பாரைமீதும் யெழிலானவட்டமதில்யிறங் கினேன்யான், விருப்பமுடன்குளிகையதுபூண்டுகொண்டுவீரமுடன வர்களிடஞ்சென்றபோது, பொருப்பானமலையொன்று குகைதானு ண்டு பொங்கமுடனயிராவதமென்னலாகும், குருப்பானயெழுவரை வுயரங்காணும் குணமானமலையொன்றுகண்டேன்தானே. ௩0

சத்தகன்னிகளைக்கண்டது.

கண்டேனேயென்மனதில்சந்தேகத்தால் கவனமுடன்குளிகை கொண்டுசென்றேன்யானும், அண்டவொண்ணாப்பாறையதுமேலேயு ண்டு கவலமதுயோசனைதான்சொல்லப்போமே, தொண்டர்முனிசி த்தர்களுமநேகமுண்டு தோற்றமுடனெந்தனுக்குக்கண்ணிற்றோன்ற. சண்டமாருதம்போலவென்னைக்கண்டார் சட்டமுடனுனென்றுகேட் டார்தாமே.

கேட்டாரேசித்துமுனியெந்தனுக்காய் கிருபையுடன்யாரென்று கேட்கும்போது, நாட்டிகமாய்குளிகைகொண்டுவந்தவர்யார் தன் மையுள்ளசிறுபாலாவென்றபோது, நீட்டமுடன்காலாங்கிசீஷனென் றேன் நீடானசித்துமுனிரிஷிகளெல்லாம், வாட்டமுடனெந்தனையும் வாசிர்மித்து வளமுடனேஞானோபஞ்செய்தார்பாரே. ௩௧

பாரேதான்யானுமல்லோசிலதுகாலம் பாண்மையுடனங்கிருந்தே ன்சித்தர்பக்கல், நேரேதானவடகோடிகானகத்தில் நேரானதோப்பு ண்டுகுளமுமுண்டு, வைரேதானென்றறிந்து வுளவறிந்து வுத்தமனே யாசிர்மங்காணுதென்றேன், பேரென்னவூரென்னபதிதானென்றேன் பேரானசத்தகன்னிபதியென்றாரே. ௩௨



பதியென்று சொல்லுகையிலடியேன்றானும் பட்சமுடனெங்மீ தில்கிருபைவைத்து, அதிபுரியும்சத்தகன்னியாசிர்மந்தான் துப்புரவா யவ்விடத்திற் செல்லொணாது, மதிபோன்றசத்தகன்னியிருக்குந்தா னம்மகத்தான தேவதாவாசிர்மந்தான், கதிபெறவே சென்றவர்க்கு வெல்லாமுண்டுகோசினியில் போவார்தானில்லைதானே. ௩௪

இல்லையென்று போனாலுங்கன்னிமார்கள்யெழிலானமாண்பர்க ளைசபிப்பாரப்பா, கொல்லவேயமனுக்கு அறுதியர்கும் கோபந்தாஸ் சாபமது வாய்க்கும்பாரு, புல்லவேயவ்விடத்திற் செல்லவேண்டாம் புகழானசத்தகன்னிமார்களப்பா, எல்லைவிட்டுப்போகாதேயெந்தன் பாலாயெடுத்துரைத்தாரெந்தனுக்குமிகுதியாச்சே. ௩௫

ஆச்சென்றுபோகாமலடியேன்றானும் வன்புடனேமறுபடியுங் கேள்விகேட்டு, பாச்சலுடன் குளிகையது போட்டுக்கொண்டு பா ங்கிமார்சத்தகன்னியேழுபேரை, மூச்சடங்கிபோனதொரு தேகம் போலமெய்க்குழல்மார்தங்கள் முன்னடியேன்நின்று, வச்சியேயவ ளிடங்கண்டுபேசியயழிலாகயான் வருவேனென்றிட்டேனே, ௩௬

என்றேனேசிறுபாலன் சொன்னவார்த்தையெழிலானதவமுனி கள்ரிஷிகள்கேட்டு, நின்றதொருநெடுமூச்சுதானறிந்து நேர்மையுட னெந்தனுக்குபிசவுகூறி, குன்றின்மேல் செல்வதற்குவினபஞ்சொல் லிகொப்பெனவே யாசிர்மம்பிகவுங்கூறி, வென்றிடவே யடியேனைய னுப்பினார்கள் விடுபட்டுக் குளிகைகொண்டு போனேன்றானே, ௩௭

போனேனேயாசிர்மந் தன்னிலேதான் பொங்கமுடன்காவனைத் தையிறக்கினேன்யான், சோனைபோல் சுனையருகேயிறங்கி நின்றேன் சொர்னமென்றசத்தகன்னிமார்கள்கண்டார், தேனேதான் அகலிகை யாசிர்மந்தான் திகழானமுதற்பீடம் முதற்கலணந்தான், மானேதா ன்திரௌபதியாம்ரெண்டாம்பீடம்மகத்தானசீதையதுபீடந்தானே.

சீதையாம்பீடமது மூன்றும்பீடஞ்சிறப்பானதாரையாம் நான் காம் பீடம், வேதையாம்பண்டோதரி ஐந்தாம்பீடம் மிக்கானசாமா வியாறும்பீடம், பாதையாம்காந்திரௌதாசிறமாவியாகும்பாங்கான சத்தகன்னியேழுபேர்கள், கோதையாம் தேவகன்னியேழுபேர்கள் குளிகைகொண்டியானுமங்கே கண்டிட்டேனே. ௩௯

பஞ்சவர்களை சத்தகன்னி விசாரித்தல.

கண்டேனேயவர்களிடம் வார்த்தைபேசி கலியுகத்துவதிசயங்க ளெல்லாங்கேட்டேன், கொண்டல்வண்ணகச்சுதனார்செய்திகேட்டேன்கோடான கோடிபெண்கள் முறைமைசொன்ன, விண்டபடிவார்த்தையதுமிகவுமங்கேலேதாங்கத்தாயின துவருளும்பெற்று, தொண்டனெனுமைந்துனர்களைத்துபேரும் சுகமுடனே கேட்டுமல்லோ விசாரித்தாரே. ௪௦

கேட்டுமேகலியுகச்சேதிதன்னை கீர்த்தியுள்ளபஞ்சபாண்டவர்கள்தம்மை, வாட்டமுடன்கலியுக முதலில்தன்னில் வளமாகவெவ்விதத்தில்மடிந்தாரென்று, நீட்டமுடனெந்தனையுங்கேட்கும் போது நீடூழிகோடிவரையிருந்தாரங்கே, காட்டமதுகலியுகமுதலிலப்பா கண்காணுமண்மேலேபோனார்தாமே. ௪௧

போனதொரு செய்திதன்னை யானுரைத்தேன் பொங்கமுடனெந்தன்மேல்பட்சம்வைத்து, தானமொடுசித்தர் முனிரிஷிபார்தம்மால்தாரணியில் சாபமதுநேரிட்டாலும், தீனமொடுசாபமது சொல்லாமற்றான் தீர்க்கமுடனெந்தனுக்கு வாந்தந்தாரே. ௪௨

தந்தாரே சாபமதுநீக்கியல்லோ தாரணியில் சத்தகன்னிமார்கள்தானும், அந்தமுடனெந்தனுக்கு வாசீர்மித்துவவனியெல்லாஞ்செல்வதற்கு அதிகஞ்சொல்லி, சொந்தமுடனுபதேசமிகவுங்கூறி குட்சாதிருட்சமெல்லாந் தெளிவுரைத்து, யெந்தனுக்குமாற்றமென்றமைகொடுத்துவெழிலாகச்சீனபதி போவென்றாரே. ௪௩

என்றவுடன்காலாங்கி நாதர்தம்மை யெழிலாகத் தானினைந்து சீனம்போக, சென்றுமே குளிகைகொண்டு வடியென்றுனும் சிறப்புடனே சீனபதி வந்தேன்யானும், மூன்றுமேதானடந்தசேதியெல்லாம்முனையாளசீனபதிமாண்பருக்கு, நன்றாய்த்தானுரைத்தேனடியேன்றானும் நலமுடனேமனக்களிப்பு கொண்டார்பாரே. ௪௪

சத்தகன்னிசங்கதியைசீனத்தார்க்குகூறல்.

பாரேதான்சத்த கன்னிமார்கள்நேர்மை பாங்குடனே தானுரைத்தேன்சீனத்தார்க்கு, நேரேதானெந்தனுக்கு உறுதிசொல்லி நேர்மையுடன்சாபமதை தவிர்த்தாரென்றே, ஊரேதான்போகவென்று விடையுந்தந்து வுத்தமர்க்குவாதியக்கமுடிவுசொல்லி, பேரேதான் வாழ்கவென்று யெந்தாளும் பெருமையுடன்யிருக்க வென்றுவரந்தந்தாரே. ௪௫



தயிர்கடலுக்குவடகோடி.

தந்தாரேசீனபதிவிட்டுவந்தேன் தகமையுள்ளகுளிகையதுபூண்டுகொண்டு, வந்தேனே தயிர்கடலுக்கப்பாலப்பா வாகானவடகோடிகானகத்தில், சொந்தமுடன்யானுமல்லோசென்றேனங்கே சுத்தமுள்ளவாசீர்மங்கண்டேயானும், அந்தமுடனாசீர்மம்நடுமையத்தில் அழகானவாயக்கால்கூடந்தானே. ௪௬

தானனகூடமதுசித்ரகூடம் தண்மையுள்ளசித்தர்களும்மறியாரூடு, கோனனபௌதையர்காலாங்கிநாதர் கொற்றவனாரெந்தனுக்குவுரைத்தநீதி, மானனவடகோடிகானகத்தில் வளமானவாயக்கால் மண்டபந்தான், தேனாளமனோன்மணியாளிருக்குமஸ்தானம் தேவியென்றகூடமதுவிசித்திரமாமே. ௪௭

ஆமேதான்ஆயக்கால்மண்டபத்தில்அண்டவொண்ணாதேவரிஷிக்கூட்டமப்பா, தாமேதான்காலாங்கிசொன்னவாக்கு தாரணியில்மெய்யானவார்த்தைகொண்டு, போமெனவேவடகோடிகானகத்தில் பொங்கமுடன்குளிகையதுபூண்டுகொண்டு, வேமெனவேயாசீர்மந்தன்னிற்சென்றேன் வேதாந்ததாயினதுயிடங்கண்டேனே. ௪௮

போகர்வடகோடிகானகத்தில் மனோன்மணியைத்தெரிசித்தது.

கண்டேனேமனோன்மணியாள்வீற்றிருக்கும் கடிதானவாசீர்மந்தன்னைக்கண்டேன், அண்டவொண்ணாச்சேனையது ரிஷிகள்கூட்டம் அங்ஙனமேயான்கண்டுபயமுங்கொண்டு, தொண்டரெனும்ரிஷிமுனிவர்சித்தர்தாமும் தோற்றமுடனாசீர்மந்தன்னைச்சுற்றி, கொண்டல்வண்ணனச்சுதனும்முன்னேநிற்க கோடானகோடிவரைபார்த்திட்டேனே.

பார்த்தேனேமனோன்மணியாளாசீர்மத்தில் பலகோடிநவகோடிரிஷியார்தாமும், கார்த்துமேசதாகாலஞ்சூழ்ந்திருக்ககண்மணிநவரத்தினவாசீர்மத்தில், தீர்த்தமுடன்தடாகமென்றபொய்கைதன்னில் இகமானமனுக்கூட்டமனேகம்பேர்கள், சார்த்தகையாழ்வார்பன்னீராயிரந்தான் சட்டமுடன்தவசிருக்கக்கண்டேன்தானே. ௫௦

மனோன்மணியாள் தாமரைப்பொய்கை.

கண்டேனேமனோன்மணியாள்பொய்கைதன்னை காசினியில்மற்றெவரால்காணப்போமோ, தொண்டரெனும்ஆள்வார்கள்பொய்கைதன்னில் தேற்றமுடன்காவலதுபூண்டுநிற்பார், வண்டுழலாள்மனோன்மணியாள் நீர்த்தஞ்செய்வாள் வசந்தமணிமண்டபத்தின் பொய்கை

தன்னில்,தெண்டமுடனடியார்கள்கூட்டமெல்லாந்தெரிசிப்பார்மனோன்மணியைதெரிசிப்பாரே. ருக

பாரேதான்யடியேனுங்குளிகைகொண்டுபட்சமுடன்சிஷவர்க்கந்தன்னைக்கண்டேன், நேரேதானசிரமந்தன்னைச்சுற்றி நேர்மையுடன் கார்த்திருக்கும்ரிஷியார்பக்கல்,சீரேதான்குளிகையதுபூண்டுகொண்டு சிறப்புடனேபொய்கைதனில்நடுமையத்தில், கூரேதான்ரோழிமண்டபத்தில் கொப்பெனவேயிறங்கிவிட்டேன்பண்பாய்தானே. ருஉ

பண்புடனேரிஷிமுனிவரென்னைக்கண்டு பதிரியேயோடிவந்து யாரென்றார்கள், தின்பானகாலாங்கிநாதர்தம்மை திடுக்கிட்டுமனந்தனிலேதானினைந்து, நன்பாககாலாங்கிசீடனென்றேன் நாதாக்கள்தித்தெளிவுநடுங்கினார்கள், நன்பானமனோன்மணியைக் காணவென்று காசினியில்குளிகைகொண்டுவந்திட்டேனே. ருந

வந்திட்டேனென்றதுமேரிஷியார்தாமும் வணக்கமுடனெந்தனுக்குவாசிர்மித்து,தந்திட்டார்மனோன்மணியைக்காணவென்று தகமையுடனிடமதுவுங்காண்பித்தார்கள், அந்தமுடனெந்தனையுமழைத்துக்கொண்டு வன்பானவாசிரமந்தன்னின்முன்னே, சொந்தமுடனென்னைநிறுத்திவுளவுசொன்னார் சூட்சமுடன்தான்கண்டுதிரும்பினேனே. ()

போகர்மனோன்மணியைக் கண்டதைசீடர்க்குரைத்தல்.

திரும்பியேமனோன்மணியைக்காணவென்றுசிலகாலமங்கிருந்துவுளவுகண்டேன், அரும்பொன்மணிநவரத்தினவாசிரமத்தில் அழகானமனோன்மணியாள் பீடங்கண்டேன், சுரும்புடையபூந்துடையாள் சொரூபங்கண்டேன், தோற்றமுடன்கண்ணிற்குத்தோற்றலாச்சு கரும்பெனவுந்தேன்மாரிபொழியக்கண்டேன் கைலங்கிரிப்போலிருக்கும் பொய்கையாமே. ருரு

ஆமேதான்பொய்கையிடங்கிட்டிநின்றேன் வப்பனேமனோன்மணியைக்கண்டதில்லை, தாமேதான்மனோன்மணியாள்ரூபம்போல தற்சொரூபமானதொருஜோதிகண்டேன், போமேதான்பொன்னானவாசிரமத்தைப் பொங்குமுடன்நெடுந்தூரங்கண்டேன்யானும், தேமேதானவச்சித்திரபொய்கையப்பா, தெளிவானமண்டபத்தைப்பார்த்தேன்பாரே. ருசு

பார்த்தேனேரோழிமண்டபத்தைப் பளிங்கானபன்னகச்சாலைகண்டேன்,தீர்த்தமுடன்பூஞ்சோலைதன்னைக்கண்டேன் திகழானபொ



னனம்பலந்தன்னைக் கண்டேன்,சேர்த்துமே ரிடிகோஷிமுனிவர்தம்மை சேனைமுதல் நவகோடிசித்தர்கண்டேன், சார்ந்தகிரியாழ்வார்கள் கணக்கோயிலலை சட்டமுடன்வடகோடி மகிமைதானே. ருஎ

தானான யின்னமொருமார்க்கஞ்சொல்வேன் தகமையுள்ள புலிப்பாணிசொல்லக்கேளும், கோனானயெனதையர் காலாங்கிநாதர்குவலயத்தில் வெகுகாலமிருந்தாரப்பா, தேனானமனோன்மணியாள்காமரூபி தேவிதனையொருநாளுங்கண்டதில்லை, பானானபராபரியாள் சோதியல்லால் பாங்கியரையொருநாளுங் காணேன்தானே. ருஅ

காணேனேயென்றுசொல்லிக்காலாங்கிநாதர் கனமாக யெந்தனுக்குச்சொன்னதுண்டு, வேணபடி வெகுகாலங் காத்திருந்தார் வேதாந்தத்தாயினது வருளைக்காண, மாணவேவரைகோடி காலமப்பா வையகத்தில்மனோன்மணியாள் சொரூபங்காண, நீணவேகாயாதிகற்பங்கொண்டு நெடுங்காலந்தாமிருந்தார் தவசியாமே. ருகூ

தவசுடனே சின்மயத்திலிருந்துகொண்டு தாரணியில்மதியமுர்தம்வெகுவாய்ப்பூண்டு, பவமகற்றிசமாதிதனில் கோடிகாலம் சட்டமுடன்தாமிருந்தார்நாதர்தாமும், சிவக்கடலைக்காணுதற்கு வெகுவாயெண்ணி தீரமுடன்சமாதிதனிலிருந்தாரப்பா, அவமுடனே சமாதிவிட்டு யேகியுந்தான் வவனிதனில்மனோன் மணியைக்காணார்பாரே.

பாரேதானின்னமொரு மார்க்கங்கேளு பாருலகில் வெகுகோடிசித்தருண்டு, நேரேதான் மனோன்மணியைக்கண்டதில்லை நேர்மையுடன்சோதியென்ற வொளிவுகண்டார், வீரேதான் சொரூபநிலைக்கண்டபோதே விருப்பமுடன் சோதிமயர் தன்னிற்றோன்றி, கூரேதான் மனோன்மணியை நினைத்தவண்ணங் கொப்பெனவே தரிசனைபோல் தோற்றலாச்சே. சுக

போகர்தனகோட்டியென்னும் ராமேசுவரத்தைக்கண்டது.

தோற்றமுடன் புலிப்பாணிமைந்தாகேளு தொல்லுலகைசுத்திவந்து குளிகைகொண்டேன், காற்றில்லாராமேசுவரந் தானென்னுங்கனமானதனக் கோட்டிக்கடலைக்கண்டேன், மேற்றிசைக்குக் கிழ்பாகங்கடலோரந்தான் மேலான தென்பொதிகை சமீபமப்பா, நாற்றமுள்ள சங்கதுவும் பிறக்கும்ஸ்தானம் நடுக்கடலாந் திட்டொன்றுகண்டேன்பாரே. சுஉ

கண்டேனேநடுக்கடலாம்மத்திபத்தின் கனமானபாறையொன்றுதிட்டொன்றுண்டு,தண்டுளவமாலையணிகிருஷ்ணரூபன் தகமையுள்ளமண்டபந்தானங்கொன்றுண்டு,கொண்டல்வண்ணன்ஸ்ரீராமர்சீதாதே

வி குடியிருப்புவாசிர்மந்தன்னைக்கண்டேன், வெண்டாமரைப் பொய்கையுண்டு ஸ்தலமுமுண்டு மேன்மையுள்ள் குகையதுவும் பார்த்திட்டேனே. ௬௩

பார்த்தேனேசிதையென்றும் பெண்ணணங்கைபண்பானவச்சிரமாங்கல்லினாலே, நேர்த்தியுடன்கைச்சிலையா யமைத்துமேதான் நேரானமுகவையென்னுஞ் சாகரத்தில், பூர்த்தியாய்ச்சேதுபதி ஸ்நானஞ்செய்வோர்புகழானராமருடதேவிதன்னை, தீர்த்தமுடன் சீதாவின்பிராட்டியாரை தினக்கிரமவலங்காரஞ் செய்வார்தாமே. ௬௪

செய்வாரேராமலிங்கம் பூசைசெய்துஸ்ரீராமர்பிராட்டியார் ரூபங்காண, உய்யவேவோட்மது தன்னிற்சென்று வுத்தமனார் ஸ்ரீராமர்தேவிதன்னை, துய்யமுனி சித்தனவர்ரிஷிகளெல்லாம் சுத்தமுடன்வேடமதிற்சென்றுமேதான், பையவேவிக்கிரகம்பூசைசெய்ய பட்சமுடன்போவாரும் வருவார்தாமே. ௬௫

தனக்கோட்டிக்கி யிடபாகம்.

தாமானபின்னமொரு மார்க்கங்கேளு தாக்கான தனக்கோட்டியிடபாகத்தில், வேமானமென்றதொரு வாசிர்மந்தான் மிக்கானகாடுள்ளேகுகைதானுண்டு, கோமானுக்கொப்பானரிஷியார்தாமும் குருவானசாமியென்ற சித்துவுண்டு, நாமானமாகவல்லோ குளிகைபூண்டு நன்மையுடன்சென்றேனே வனந்தானுள்ளே ௬௬

போகர் குருபர்னமகாரிஷியைக் கண்டது.

உள்ளான வாசிர்மந்தன்னிற்சென்றேன் ஓகோகோ நாதாக்கள் சித்தருண்டு, கள்ளமென்ற சித்தரப்பாகனைக்கோயில்லைகாசினியிலவர் பெருமைமெத்தவுண்டு தெள்ளமூர்தமானதொரு சித்துமுன்னே சிறப்புடனே குளிகைகொண்டு யானுஞ்சென்றேன், மெள்ளவே சித்தர்முனிக்கண்டபோது மேதினியில்யாரென்று யெனைக்கேட்டாரே. ()

கேட்டவுடன்சித்தர்க்கு விடையுஞ்சொன்னேன் கொடியானகாலாங்கி சீடனென்றேன், நீட்டமுடன்தனக்கோட்டிக் காணவந்தேன் நீதியுடன் சிதையென்னுந் தேவிகண்டேன், வாட்டமுடனிடப்பாகங் குளிகைகொண்டேன் வாகான வாசிர்மமிங்கேகண்டேன், நாட்டமுடன்குளிகைகொண்டுயிறங்கியல்லோ நாதாந்தசித்தெனிவைக் கண்டிட்டேனே. ௬௮

கண்டவுடன்ரிஷிக்கூட்டமுனிவர்தாமும்கருத்துடனேயெந்தனுக்குவுறுதிசொல்லி, அண்டமுடன் ஆகாயரிஷிகள்தேவர்வப்பனே அதி



சயங்கள்சார்முறைத்து, மண்டலங்கள் தான்புகழும் ரிஷியார்தம்மைவாட்டமுடன் யான்கண்டேன்போகர்தானும், தண்டமிழ்சூழ் சித்தர்முனிரிஷிகள்கூட்டம்தன்மையுடனெந்தனுக்குவிதிசொன்னாரே. ()

விதியான வாசகத்தை யானுங்கேட்டு விருப்பமுடன் குளிகைகொண்டுவாசிர்மத்தில், பதியான குருபர்னரிஷியார்தம்மை பட்சமுடன்காணுதற்கு வருகிற்சென்றேன், நதியான ரிஷிப்பக்கஞ்சென்றபோது தகமையுள்ளரிஷியாருமென்னைப்பார்த்து, மதிபோன்ற திருமுகத்தைநோக்கியல்லோ மார்க்கமுடன் வார்த்தையது சொன்னார்பாரே. ௭௦

சொன்னாரே குருபர்ன ரிஷியார்தாமும் தோற்றமுடன் சிறுபாலாயெங்கேவந்தீர், மன்னவனே குளிகைகொண்டு வந்ததென்ன மாரட்டமாகவல்லோவந்தாயப்பா, வன்னனெடுங்கோபமுள்ளசித்தர்தாமும் வளமுடனே யுந்தனையுஞ்சபிப்பாரப்பா, இன்னெடுங்காலமில்லா இந்தகாலம் யிறையவனேயென்வந்தீரென்றிட்டாரே. ௭௧

இட்டாரே குருபர்னரிஷியார்தாமும் யெழிலான போகர்முகந்தன்னைப்பார்த்து, பட்டமரந் துளிர்த்ததுபோல்பாலாநீயும் பட்சமுடன்வந்ததினாலுந்தனுக்கு, சட்டமுடன் வரந்தருவேனென்றுசொல்லி சாங்கமுடனெனக்குரைத்தார் ரிஷியார்தாமும், அட்டதிசைப்புகழவல்லோ வரங்கள்பெற்றுவாசிர்மந்தான்கடந்து வந்திட்டேனே.

சம்புமகாரிஷியைக்கண்டது.

வந்திட்டேன் தனக்கோட்டிக் கடலோரந்தான் வாகானசம்புவென்றசங்கைக்கண்டேன், பந்திட்டமாகவல்லோ கடலோரந்தான் பாரினிலேகுளிகைகொண்டு செல்லும்போது, முந்திட்டகுருபர்னர்செய்தியெல்லாம் முனையான்சம்புவென்றசங்கர்தானும், தொந்திட்டமாகவல்லோசம்புதானும் தொன்மையுடன் தானுரைக்கக் கேட்டிட்டேனே. ௭௩

போகர் முத்தாசிர்மங்கண்டது.

கேட்டேனே முத்தினாசிர்மந்தானுங் கொடியான சாகரத்தைக்கிட்டிவந்தேன், நீட்டமுடன் முத்துரையுங்கடல்தானப்பா நீடாழிசாகரமுமளவுமெத்த, தேட்டமுடனணியென்ற முத்துதானும் தெளிவானகடல்தனிலே விளையுஞ்சிப்பி, நாட்டமுடன் சித்தர்முனிரிஷியார்தாமும் நவிலவேதானிருக்குங் கடல்தானமே. ௭௪

கடலானநடுமையம்பாறைமீதில்கனமானசம்புமகா ரிஷியார்சிர்மம், அடலானவாய்க்கால்மண்டபந்தான் அழகானகள்ளமுகர்கோட்டைதானும், மிடலானதேவதா ஸ்தலமுமுண்டு மிக்கானவடிவேலர்

கோயிலுண்டு, கூடஇசையாம்பக்கமதில்பொய்கையுண்டு குறிப்பான சம்புமகாபதிதானுமே. ௭௫

பதியானபாறையின்மேல் மகிமைமெத்த பாங்கான கோட்டையதுகள்ளர்கோட்டை, மதிபோன்ற சம்புமகாரிடியார்தாமும் மகத்தானவாசிர்மஞ் சொல்லப்போமோ, துதியுடனே மாண்பரெல்லாங் கோடாகோடி, துப்புறவாய்தெரிசித்து வருவார்போவார், கதிபெறவே வடிவேலர்கோயில்கானகாசினியில்வெகுகோடிவருவார்தானே.

வருவாரேயாசிர்மந் தன்னிற்சென்று வரமுடனேவெகுபேர்கள் கோடிமாண்பர், மருவான முல்லையிருவாட்சியோடு மகத்தான நமஸ்காரமஞ்சலித்து, குருவானசம்புமகா ரிடியைத்தானும் கோடிப்பார் திரிகாலபூசைமார்க்கம், உருவானவடிவேலர் தம்மைக்காண வுகந்துமேதான்போவார் கோயில்தாமே. ௭௭

தாமானவாசிர்மந்தன்னைவிட்டு தாக்கானவடிவேலர் கோயில்பக்கல், போமேதான் வெகுகோடி மாண்பரப்பாபொங்கமுட னர்ச்சனைகள் மிகவுஞ்செய்வார், பூமேவும்பன்னகச்சாலைதன்னில் புகழானபுட்பமதுமிகப்பறிப்பார், தேமேவும் நவதாது கனிகளோடு தெளிவாகதானழைத்துப் பூசிப்பாரே. ௭௮

பூசிக்கும் கிரியைதனை யானுங்கண்டேன் பொங்கமுடன் தனக்கோட்டியானும்வந்தேன், நேசித்து சம்புமகாரிடியார்தம்மால் நேசமுடன்பின்னும் யான்சென்றுவந்தேன், ஆசித்து ஆசிர்மந்தன்னில்வந்து யடியேனுந்தலைவணங்கி முடிவணங்கி, வாசித்துப்பிரணவத்தையோதியேதான் வணக்கமுடன்பின்னும்யான்தொழுதிட்டேனே.

சம்புமகாரிடிபோகருக்குவுபதேசங்கூறல்.

தொழுதேனே ரிடியாரின்சீர்பாதந்தான் தோத்திரங்கள் மிகச்செய்துகரங்குவித்து, பழுதாரு சாபமதுநேரிடாமல் பாலகனைமெத்தனையுங்காக்கவென்று, அழுதுமேவடியேனும் முடிவணங்கி வன்புடனேகாலாங்கித்தனைநினைத்து, நெழுகாமல்தான்பணிந்தே னடியேன்றானும் நேர்மையுடன்வரமெனக்குக் கொடுத்தார்பாரே. ௮௰

பாரேதான் குளிகையதுபூண்டுகொண்டு பாரினிலே சம்புவாம் பெற்றுவந்தேன், நேரேதான்முத்துறையும் நாடுங்கண்டேன் நெடிதான ஆழியதையானுங்கண்டேன், சீரேதான் சிப்பிதுறை முத்துதானும்சிறப்பானகடலதுவும் பார்த்துவந்தேன், வரேதான் குருபர்னரிடியாசிர்மம் வுத்தமனேயான்கண்ட வளஞ்சொல்வேனே. ௮௧



வளமான மார்க்கமது யின்னஞ்சேரு வன்மையுள்ள தனக்கோட்டி வடபாகத்தில், தளமான பதியென்றுபாறைகண்டேன் தன்மையுள்ளசம்பு, மகாரிடியைக்கண்டேன், குளமானபொய்கையது சித்தர்வாழ்க்கை, குவலயத்திலகற்கீடியாதொன்றில்லை, பளமானநவகனியும் நவதான்யத்தோடு பாறையதில்தான் விளையும்பாண்டினனே. ௮௨

நாடானபாண்டி வளநாட்டைகண்டேன் நவகோடிரிடிமுனிவராசிர்மந்தான், காடான தவமுனிக ளுறையும்நாடு காசினியில் மாண்பர்கள் தானறியானுடு, கோடானு கோடியிலே யொருவனப்பா குறையான விட்டகுறையிருக்குமானால், நாடாண்மைக் கொண்டதொரு தலமுங்காண்பார் தாரணியிலவனுமொரு சித்தனாமே. ௮௩

சித்தனைப் பிறந்தாலுமென்னலாபம் சீரானவிட்ட குறையிருக்கவேண்டுங், கத்தனது பதவிதனைப் பிறவேவேண்டும் காசினியில் விதியாளிப் பெருவானப்பா, சுத்தமுடன் ஞானோபதேசந்தன்னைசூட்சாதி சூட்சமதை, யறியவேண்டும், பித்தனைப்போலிருக்காமற் பேரின்பமத்தில் பேருலகில் வாழ்பவனே யோகியாமே. ௮௪

யோகமென்றால் யோகமது சொல்லொண்ணாது யொளியான பிரகாசமானசோதி, பாகமுடன் சின்மயத்தினிலையில்நின்று பட்சமுடன்சதாகால, மர்ச்சித்தேதான், சோகமது வாராமல் சமாதிதன்னில் தொல்லுலகில் மாய்கையது வாசையற்று, வேகமுடன் மனோன்மணியைமனதிலுன்னி வெட்டவெளியம்பரத்தேநிற்பீர்தாமே. ௮௫

நிற்பீரேநிலை தனிலேநின்றுகொண்டு நீடானபிரணவத்தை யுச்சரித்து, கற்பதித்ததுணைதுபோ லெந்தநாளுங் கலங்காமல் சமாதிதனில் நின்றுகொண்டு, சொற்படியே குருவினது மொழியுங்கேட்டு தோராமல், ஞானமதுபூண்டுகொண்டு, பற்பலபேதத்தின் பேதாபேதம் பாரினிலே சொல்லாதபான்மையாமே. ௮௬

பான்மையென்ற சதாநிலையில் நின்றுகொண்டு பட்சமுடன்யோகமதை நிலைநிறுத்தி, ஆன்மாவுக்கொருநாளு மழிவுமில்லை வங்னிதனில் நீயுமொரு, சித்தனைப்போல, மேன்மையுடன் தானிருந்துவையகத்தில் மெய்யான வழியறிந்த பதவிகண்டு, மான்மையென்றமோட்ச வழிக்காளதாகி மகிதலத்தி லிருப்பவனேபுத்திவானே. ௮௭

புத்தியென்றால் வாதமதுக் காண்பதற்கு புகழானயோகமதை நிறுத்துதற்கும், நித்தியமும் வாசியையுள்ளடக்கி நிகழான சுவாசமதை மேல்நோக்காமல், சத்தியென்ற சொரூபமதைக் கண்ணிற்

கண்டு சதாகாலம், கர்மவினை தனையகற்றி, மோக்ஷபெறவழிபாடுசெய்து கொண்டுமேதுலகிலிருப்பவனே தர்மவானே. ௮௮

தர்மமாமின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தாரணியில்காலாங்கிநாட்சத்தாலே, கர்மமென்ற பவக்கடலைவிட்டகற்றி கருவிகரணாதியுடன் தொந்தம்பார்த்து, வர்மமுடன் நடப்பவனே புத்திவானும் வரை கடந்துயிருப்பவனே கழுதைமாண்பன், கர்மவினை விட்டகற்றித்தாணிதனின்ல் சட்டமுடன்பேருண்டாய்வாழ்குவீரே. ௮௯

தனக்கோட்டியில் அலையில்லாமலிருப்பதைப் பற்றியோர்
புலிப்பாணிக்குக் கூறல்.

வாழ்கவே யின்னமொரு மகிமைகேளும் வாகான தனக்கோட்டி கடலிலப்பா, தாழ்கவேயலைகடலில் சத்தந்தானும் தண்மையுடனின்றதொரு வளப்புஞ்சொல்வேன், மாழ்கியதோர் கடல்தனில் பாறை மீதில் மகத்தான, குருபரன ரிடியார்தாமும், வேழ்வியுடனுசிரமந்தனை நடத்தி யிருப்பமுடன் தானடத்துங் காலந்தானே. ௯௦

சீதாதேவி யாகஞ்காணவந்தது.

தானனையாகமது நடத்தும்போதுதாக்கான லங்கையென்றபதியில்வாழும், தேனணமாதுமையான் சீதாதேவி தென்னிலங்கைப்பதியைவிட்டு வாசிரமத்தில், கோனனகுருபரனர் வேழ்வியாகம் கோதையருந்தான்பார்க்க வந்தபோது, பானன தனக்கோட்டி கடலில்தானும் பாரமுடன் சத்தமது கேழ்க்கலாச்சே. ௯௧

கேழ்க்க வென்றுவின்ன மொருமார்க்கங்கேளு கெடியானபற்பமென்ற பனியில்தானும், வேழ்க்கமுடன் காற்றோசைத்தன்னாலே வேகமுடன் அலைபனையும் விசலாச்சு, சூழ்க்கமுடன் சப்தமந்தமாது கேட்டுசுந்தரமுள்ள யாசிரமம்பாகந்தன்னில், தாழ்க்கமல நவரத்தின கசிதர்தன்னில் தவிக்கவொட்டாசப்தமதை கண்டார்தாமே. ௯௨

சீதைசாபத்தால்கடலின் அலைநின்றது

கண்டதொரு அலைகடலின் சப்தந்தன்னை காரிழையாள் ஸ்ரீராமர் தேவியப்பா, கொண்டல்வண் ணச்சுதனைத்தனை கிளைந்துகொடுத்ததொரு சாபத்தாலலையும்போச்சு, விண்டபடி கற்பகத்தருவுக்கப்பா மேதினியில்சப்தமது யில்லைகண்டீர், தண்டலெனும்பனைமாமுமழையுமில்லை தாரணியில் தனக்கோட்டிமார்க்கந்தானே. ௯௩

மார்க்கமுடன் தென்றிசையில் கடலில்தானும்மகத்தான ஸ்ரீராமர் தேவிதன்னால், ஏர்க்கவே கடலோசை நின்றுபோச்சு யெழிலான தனக்கோட்டி மகிமையப்பா தீர்க்கமுடன் சம்புமகா ரிஷியலத்தால்



ணசங்கதுவும்பிரக்கலாச்சு, வர்க்கமுடன் திரிச்சங்கு தன்னாலே வாகான கோட்டையது கட்டலாச்சே. ௯௪

போகர்திருச்சங்குகோட்டையைக்கண்டது.

ஆச்சென்றுபோகாம லின்னஞ் சொல்வேன் அப்பனே புலிப்பாணிமைந்தாகேளு, மாச்சலென்ற தனக்கோட்டிகீழ் பாகத்திலமகத்தான திருச்சங்கு கோட்டையுண்டு, நீச்சடனேகடல்தனில் பிறந்த சங்கு நிலைகோடிசங்கதனை யெடுத்துமல்லோ, வீச்சடவே காதவழிக்கோட்டைதானும்விருப்புடன் கட்டிருக்கக் கண்டேன்பாரே. ௯௫

கண்டேனே தனக்கோட்டி கடல்மையத்தில் கனமான திருச்சங்கு பாழிகோட்டை, அண்டர்முதல்தேவாதி ரிஷிகளெல்லாம் வன்புடனே வந்திருக்குங் கோட்டையப்பா, தண்டளகிருஷ்ணவதாரந்தானும் தகமையுள்ள வாசிரமமொருபக்கந்தான், கொண்டல் வண்ணனாசிரமமதற்குப்பின்னால் குறிப்பானயேழுசுந்து கோட்டைபாரே.

பாரேதான்எழுசுத்து கோட்டையப்பா பாங்கான ஆணிமுத்து மதில்தானாகும், கோப்பா ஆணிமுத்துதன்னாலே நிலையான கோட்டையது கட்டிருக்கும், சீரேதான்யேழுசுத்து கோட்டைக்குள்ளே சிறப்பான பிருங்கிமகா ரிஷியாசிரமம், கூரேதான்மாண்பர்களுங்காணப்போமோ குவலயத்தில் தனக்கோட்டி மகிமைதானே.

தானனையேழுசுத்துக் கோட்டைக்குள்ளே தவகோடி ரிஷிகளுமே சூழ்ந்திருப்பார், மானனமதில் தனிலே சித்துமாண்பர் மகாதவசி வீற்றிருப்பார் கோட்டைதன்னில், மோனன வாசிரமந்தன்னில் தானும் மகத்தானமுத்து சிம்மாதினந்தான், கோனன பிருங்கிமகா ரிஷியார்தாமுங்கொற்றவனார் வீற்றிருக்கும்பதிதானாச்சே. ௯௮

ஆச்சப்பாகுளிகையது பூண்டுகொண்டேன் வப்பனே வாசிரமந் தன்னிற்சென்றேன், கூச்சலுடன் ரிஷிமுனிவர் சித்தர்கூட்டம் கூறவொண்ணுகோஷ்டமது சொல்லப்போமோ, பேச்சரியமாண்பர்களோ காணப்போரார் பேரானபிருங்கி முத்தரிஷியாசிரமம், மாச்சலுடன் காண்பதற்கு முடியாதப்பா மகத்தான சித்தாது கோட்டையாச்சே. ௯௯

கோட்டையாந் திருச்சங்குகோட்டையப்பா குறிப்பான ஆணிமுத்துகோட்டைதன்னை, நீட்டமுடன் கோட்டைதனையறியமாட்டார் நீடான சாகரத்தில் செல்லமாட்டார், வாட்டமுடன் குளிகை

கொண்டு காலாங்கிநாதர் வகுப்பான மகிமையினால் கண்டேன்பாரு, தேட்டமுடன் எனதையர்சொன்னவாக்கு தெளிவான சொற்படி யேதாணலாச்சு. ௧௦௦

காணவேகலியுகத்துமுன்னேயப்பா காலாங்கிநாதர் சொன்ன திருவாக்குத்தான், தோணவே யென்தனுக்குயிப்போதல்லோ தோற்றமுடன் யென்தனுக்குக்காணலாச்சு, வாணர்முதல் சொன்னதொரு கோர்வையெல்லாம் வளமாகயிவ்வண்ணஞ்சொன்னதில்லை. பூணவே குளிகையது பூண்டுகொண்டு புகழான கோட்டைதனைப் பார்த்திட்டேனே. ௧௦௧

பார்த்தேனேபிரிங்கிமகாரி ஷியார்தன்னை பட்சமுடனடியேனு மஞ்சலிக்க, நேர்த்தமுடன்சோட சோபசாரத்தோடு திகழாக பிரிங்கிமகாரிஷியார் முன்னே, சேர்த்துமே கரங்குவித்து சிரமேல் வைத்து சிறப்புடனே தாள்பணிந்து வஞ்சலித்தேன், பூர்த்தியுடன் மனதுவந்து சாமிபாதம் பொன்னடியை மறக்காதுந் தொழுதிட்டேனே. ௧௦௨

தொழுதுமே முக்காலும் பணிந்துமேதான்தொல்லுலகையான் மறந்து துதித்தேனப்பா, பழுதுபடாத் திருமேனிக் காவலரே பாருலகில்பள்ளி கொண்டவையனை, முழுதுமேபாழியது கோட்டை சுத்தி மோனமுடன் குளிகைகொண்டு நிற்கும்போது, வழுவாகயாசிர்மமங்கே கண்டேன் வண்மையுள்ள கிருஷ்ணனுசிர்மந்தானே. ௧௦௩

கிருஷ்ணராசிர்மங்கண்டது.

தானானதுவாரகையாம் புருடனப்பா தாக்கானகிருஷ்ணரவராசிர்மகான், தேனனை திருச்சங்கு கோட்டைக்குள்ளே தெரிசித்தேன் முத்தினுசிர்மம்பின்னால், வானனைபிரிங்கிமகாரிஷியார்பக்கம் வகுப்பான வாணிமுத்துக்கோட்டையோரம், மானனமகதேயனுசிர்மந்தான் வையகத்தில் பார்த்தவர்களில்லைதானே. ௧௦௪

இல்லையே யொருவருந்தான் கண்டதில்லை யெழிலான பிரிங்கிரிஷிக்கோட்டைகண்டேன், புல்லனேயடியேனைப்பார்த்தபோது புகழான சிறப்பாலா வென்றுசொல்லி, வல்லதொரு காலாங்கி சீடபாலரான போகரென்று தானறைந்து, சல்லாபங் கொண்டல்லோ வென்னைப்பார்த்து சட்டமுடன்யாரென்று மதிப்பிட்டாரே. ௧௦௫

மதித்துமேயென்தனையுங் கேட்டபோது மகத்தான காலாங்கிச் சீடனென்றேன், துதிப்புடனே யென்தனையுமாசிர்மித்து அப்புறவாய் பட்சமதுகொண்டுயென்னை, கதிரோன்கன்காணுக யாழிகோட்டை கருவுடனேயுளவறிந்து குளிகைகொண்டு, விதிப்படியேவிட்டகுறையிருந்ததாலே விருப்பமுடனுந்தனையுங் காணலாச்சே. ௧௦௬



காணுதற்குகாலம்வந்து சேர்ந்ததென்றுகாலாங்கிநாதரது கிருபையாலே, வேணபடிபலாபலத்தின் மகிமையாலேவினையமுடன்கோட்டையது கண்டாயென்று, கோடுமல்மன துவந்து யென்னைப்பார்த்துகொற்றவனே காலாங்கிசீடாயென்று, நீணவேபிரிங்கி மகாரிஷியார்தாமும் நீட்சியுடன் சந்தோஷங் கொண்டார்தாமே. ௧௦௭

போகர் ஆணிமுத்துவிளையுந்துறையைக்கண்டது.

தாமானபிரிங்கிமகா ரிஷியைத்தானும் தகமையுடன்கண்டுவந்துவுறவுபேசி, ஆமானமானதொருஆணிமுத்து அலைகடலில்விளைகின்றவதிதங்கேட்டேன், நாமானவார்த்தைக்கி வன்புர்தாமும் நாதரதுகாலாங்கிகிருபையாலே;ஏமாந்துமுத்துறையும்வளமைசொன்னார் யெழிலானமுக்துவளங்கண்டிட்டேனே. ௧௦௮

கண்டேனே முத்துறையும்காடுங் கண்டேன்கருவான ஆணிமுத்துதானுங்கண்டேன், கொண்டேனே வெகுநூறுகுளிகைகொண்டுகொபபெனவே முத்துறையும்பதியுங்கண்டேன், விண்டிட்டகுளிகைபதுபலத்தினாலேவீரான ஆழிவரைசுத்திகண்டேன், உண்டதொருண்ணளவுமுத்துகண்டேன வுநமையுள்ள சிப்பிமுத்து கண்டேன்பாரே. ௧௦௯

பார்த்தேனே மலைமலையாய் முத்துதன்னைபாங்கான ஆழிக்குளனேகங்கண்டேன், நேர்த்தியுடன் முத்தெடுக்கும் பதமுங்கண்டேன் நேர்மையுடனுளவு தனையறிந்துகொண்டு, சேர்த்துமே ஆணிமுத்து கையிலேந்தி சிறப்புடனேசீனபதியானுஞ் சென்றேன், பூர்த்தியுடன் குளிகைதனை விட்டிறங்கிபுகழாகச் சமாதியிடமிரங்கினேனே.

சீனபதியில்காலாங்கிசமாதியைக்கண்டு போகர் அஞ்சலித்தல்.

இறங்கியேகாலாங்கி நாதர்தம்மை யெழிலானசமாதிதனைதெரிசித்தேன்யான், திறமானகாலாங்கி நாதர்தானும் திறமுடன்யான்வந்த செய்திகண்டு, வரமுடனே யென்தனுக்குவசரிரகவாக்களித்தார் யென்தனது குருபரன்முன்கரங்குவித்துமுடிவணங்கியடியேன்றானும் கர்த்தாவைத்தெண்டனிட்டுப் பணிந்திட்டேனே. ௧௧௦

சீனத்தார்க்கு நீதிபோகர் கூறல்.

பணிந்தேனேகாலாங்கிநாயர்பாதம் பட்சமுடன்தெண்டனிட்டுப்பதியிற்சென்றேன், அணியணியாய்சீனபதிமாண்பரெல்லாவன்புடனேயென்னைவந்துகண்டாரப்பா, துணிவுடனேகொண்டுவந்தமுத்தையெல்லாம் துப்புறவேசீனத்தார்க் கறியச்சொல்லி, மணியானமுத்துறையுங்கடலைதானும்மாண்பர்களேகண்டுவந்தேனென்றிட்டேனே.

இட்டேனேமுத்திருக்கும்பதியுஞ் சொன்னேன்பெழிலானதிருச்சங்குகோட்டை சொன்னேன்,வட்டமுடன் திருச்சங்குகோட்டைபக்கல் வாகானகிருஷ்ணவாசிர்மஞ்சொன்னேன், பட்டணங்கள்சினபதிமார்க்கமெல்லாம் பட்சமுடன்பான்வந்து சேதிகண்டு, திட்டமுடன்மாண்பரெல்லா மெந்தனுக்குதீரமுடனுசிர்மஞ்சொன்னார்பாரே.

பார்க்கவேயெந்தனுக்குப் பணிந்துமேதான்பட்சமுடன்முத்திருக்குந்தீவுதன்னை, தீர்க்கமுடன்போகவென்றவடையாளங்கள் தீரமுடன்கேட்டார்கள் மாண்பரெல்லாம், ஏர்க்கவேபாழி யென்னுங்கடலிலப்பாவெழிலான முத்தெடுக்கப்போகாதப்பா, மார்க்கமுடன் குளிகையது பூண்டுகொண்டு மகத்தானமுத்தெடுக்கவேண்டும்பாரே

சீனபதியார் நீராவிக்கப்பலால் முத்துக்கடல்கண்டது.

பாரேதான்குளிகையது யில்லாவிட்டால் பாங்கானநீராவிக்கப்பல்வேண்டும், நேரேதான் நீராவிக்கப்பல்தன்னில் நேர்மையுடன்நிமித்துநீங்களெல்லாம், ஊரேதான்நீராவிசப்பல்கொண்டு வுத்தமனேமுத்தாழி காணவேண்டும், சேரேதானுழிதடம் நடக்கும்போது சிரானயுத்தியதுவேண்டுந்தானே. ௧௧௫

தானானதனக்கோட்டி வடபாகத்தில் தாக்கான முத்தாழிதீவுமுண்டு, தேனானசித்தர்முனி கண்டதில்லை தேவதாரிடிகளெல்லாங் காணுமாழி, பானானபராபரியாள்வாசஞ் செப்பும்பாங்கான முத்துறையுந்தீவுமாச்சு, மானானமண்டலத்தில் யாருங்காணார் மகத்தான முத்துறையுந்தீவுமாச்சே. ௧௧௬

ஆச்சப்பா தீவுவழி செல்லும்போது வப்பனே கடல்தனிலேமுடக்குமுண்டு, நீச்சடையகடல்தனிலேபோகும்போது நீடானமலைப்பாறைக்குண்டுமுண்டு வீச்சுடனே நீராவி மரக்கலந்தான் விறுடனே யாழிதனிற்செல்லும்போது, மாச்சலென்ற மலைவளத்தாரிட ருண்டாகும் மகத்தானமரக்கலமுமுடைந்துபோமே. ௧௧௭

போகர்மரக்கலக்கண்ணாடி சொன்னது.

போமேதானீராகவிக் கப்பல்தானும் பொங்கமுடன் கடல்தனிலே செல்லும்போது, காமேதான் கண்ணாடிக் கைபிடித்து கனமுடனேயாழிதடம் பார்க்கும்போது, வேமேதான் கண்ணாடிக்கைபிடித்துவிருப்பமுடன் கப்பல்முனைத் தனிலிருந்து, தாமேதான்கண்ணாடிதன்னையப்பாதாரணியில் ஆழிதனைக்காணுவாயே. ௧௧௮



காணுகையி லுந்தனுக்குப் புத்திமானே கடலிலுள்ள மர்மமெல்லாங்கண்ணிற்றோற்றும், தோணுமே மலைப்பாறைக்கல்களெல்லாம் தோற்றுமே யுந்தன்கண்ணாடியாலே, பூணவே வழிதடத்தைக்கண்டு மல்லோ புகழானமலைப்பாறை பொதுங்கியேதான், நீணவேவெடுத்தூரஞ் செல்லலாகும் நீராவிக்கண்ணாடிக்கப்பல்தானே. ௧௧௯

தானானநீராவிக்கப்பல்கொண்டு தகமையுள்ளவாணிமுத்துவெடுக்கலாகும், தேனான ஆணியென்றமுத்தைதானும் தெளிவாகக் கடல்தனிலேயெடுக்கலாகும், கோனானகுருசொன்னவாக்குதானும் குறையாமலாழிதனில் நடத்தினக்கால், பானானபாதாள முத்தையெல்லாம் பாங்குடனேயெடுப்பதற்கு துறையுமாச்சே. ௧௨0

துறையானதுறைவழியே கண்டபோது துப்புறவாய்க்கனகமெல்லாங்கைக்குள்ளாச்சு, மறைவான பொருளெல்லாங் கண்ணிற்றோற்றும் மகத்தான நிதிகளெல்லா மெடுக்கலாகும், நிறைகடலில்நீராவிக்கப்பல்தன்னால் திரளானகளஞ்சியத்தைக்காணலாகும், குறையாமல் செல்வமது பெருநாளுந்தான் கொற்றவனே யுந்தனுக்குவாய்க்கும்பாரே. ௧௨௧

வாய்க்குமே மகமேருபருவதந்தான்வாகான குகைநாகிப்பர்வதந்தான், தீய்க்கவே தீவுகளுங் காணலாகும் திறைகோடி கடல்தனைசுற்றலாகும், வேய்ப்பானபதிதனிலே மகிமையெல்லாம் வேகமுடன்மாக்கலத்தால்காணலாகும், சாய்க்கவேசீனபதியுலகதாக்கு சட்டமுடன் தானமைத்தநூலிதாமே. ௧௨௨

நூலான போகரேழாயிரந்தான் நுணுக்கமுள்ள பொருளெல்லாமிதிலேதோயும் பாலானசாத்திரந்தான்சத்த காண்டம்பாலகனேயிக்காண்டமைந்தாங்காண்டம், மேலானகாண்டமிது யேழுக்குள்ளேமேதினியில் கருவிகாணுதியெல்லாம், மாதனசத்தசாகரமடக்கம் மகத்தான போகர் நூல்பெருநூலாமே. ௧௨௩

அகஸ்தியர்பன்னீராயிரத்தை போகர்சிறப்பித்தது.

பெருநூலாம்போகரே ழாயிரந்தான்பெருக்க முடன்பாடிவைத்தேன்சினத்தார்க்கு, விருநூலாயடியேனுஞ் சொன்னமார்க்கம்விருப்பமுட னகஸ்தியருமொருநூல்,செய்தார்குருநூல்காவியம் பன்னீராயிரந்தான் கும்பமுனிபாடிவைத்தார்காண்டமப்யா, திருநூலாங்காண்டமதுபனிரெண்டுமாகும் திறமானவாருயுறவேதந்தானே. ௧௨௪

போகர்பச்சைமலைக்கண்டது.

வேதமாம் பின்னொரு மார்க்கங்கேளுவிருப்பமுடன் புலிப்பாணிமைந்தாநீயும்,நீதமுடன்குளிகையதுபூண்டுகொண்டுநீதியுடன்

சினைபதி விட்டோனும், போகமுடன் வடகோடிகானகத்தை பெர்க்கமுடன் திரும்பிவந்தேனடியென்றானும், நாதமெனுங்கடலாழிதன்னிலப்பா கவனமுடன்குளிகைகொண்டு சென்றேனப்பாரே. ௧௨௫

பாரேதான்வடகோடியாழிதன்னில் பாங்குடனேகுளிகைகொண்டு யானுஞ்சென்றேன், நேரேதான்குளிகைகொண்டு செல்லும்போது நேர்மையுடனாசிரமமொன்றுகண்டேன், வரதுபோல கடலாழிநடுமையத்தில் ஓர்காதோதீவதுதான்கண்டேனப்பா, சேரேதான் குளிகையதுசென்றுயானும் சேர்ந்தேனேதீவுதனில் கிட்டினேனே. ௧௨௬

கிட்டவே தீவுதனிற் செல்லும்போது கெடியான தேவதாமலையொன்றுண்டு, குட்டவேபாசிபோலிருந்ததப்பா, முதலகில்மலையென்றுநினைந்துக்கொண்டேன், வட்டமுள்ளபாறைதனை சோதித்தேன்யான் வளமானபச்சையென்ற மலைதானப்பா, திட்டமுடன் கண்டறிந்தேன் பச்சையப்பா திடமானபச்சைமலை பார்த்திட்டேனே.

பார்த்தேனே மலையினிட மகிமைமெத்தபாருலகில் சித்தர்முனி கண்டதில்லை, தீர்க்கமுடன் மலைமீதில சுனைதானுண்டு திறமானபச்சையென்றநிறத்தைப்போல, கார்த்துமே காவலுடன் வெகுகோடி சித்தர்கதிர்காணுமலைதனிலேயிருப்பாரங்கே, பூர்த்தியாயவர்களிடஞ் சென்றேன்யானும்புகழாகவடிபணிந்து தொழுதிட்டேனே. ௧௨௮

தொழுதேனேசித்தர் வர்க்கந்தன்னைக்கண்டேன் தோற்றமுடன்குளிகைகொண்டுபக்கல்சென்றேன், பழுதுபடாமேனியதைப்பார்க்கும்போது பச்சையென்ற திருமேனியென்னலாகும், கழுகுடனேயிமாம்பட்சி யெல்லாமப்பாகாணுகைக்குப்பச்சைநிறமென்னலாமே

என்னவே யென்தேகம் பச்சையப்பாயெழிலான ஜலமெல்லாம் பச்சையப்பா, துன்னவேமண்டலமும்பச்சையப்பா துறையானபூமி முதல்பச்சையப்பா, பன்னவேபார்லோகம் பச்சையப்பா பாங்கானவிருட்சமுதல்பச்சையப்பா, சொன்னதொருமார்க்க மெல்லாம்பச்சையப்பாசடமொளியை யென்சொல்வேன்போகர்தாமே. ௧௩௦

பச்சையமலைசித்தர்போகரைக் கேழ்விகேட்டது..

தானானமலைவளத்தைக் கண்டேன்யானுந்தகைமையுள்ளசித்தர்களோசொல்லொண்ணாது, கோனானசித்தரென்னைக்கண்டபோதுகுவ



லயத்துமனிதாப்பாகுளிகைகொண்டு, ஏனோதானிம்மலையில்வந்தீரென்றார் யெழிலானசித்தரென்னைக்கேட்டபோது, நாமேதான்காலாங்கிசீடனென்றேன் நாதாக்கள்காணவல்லேலோவந்திட்டாரே. ௧௩௧

வந்தேனேகுருவினதுபதாம்புயத்தை வணக்கமுடன்காணுதற்குகுளிகைகொண்டேன், அந்தமுடன்பச்சையென்ற மலையைக்காணவன்புடனேயானுமல்லோவந்தேனென்றேன், சொந்தமுடன்யானுரைக்கும்வார்த்தைதனைகேட்டு சுந்தரனார்சித்தர்முனிரிடிகள்யாவும், எந்தன்மேல்பட்சமதுமிகவும்வைத்துயெழிலாககூறலுற்றார்சித்தர்தாமே

சித்தானசித்தாமுனிரிடிதானப்பாசிறப்புடனேயெந்தனையும்பார்த்துமேதான், பக்தியுடன்காலாங்கிபாகம்போற்றி பாகனேயிம்மலையில்வந்ததாலே, வெற்றிபெறவெந்தனையுஞ்சபிக்கலாந்த வேதாந்தசித்தரெல்லாமனமகிழ்ந்து, சுத்தியுடனிதிகாசப்புராணமெல்லாம் சூட்சாதிசூட்சமுடன்சொன்னார்பாரே. ௧௩௩

சொன்னாரேயெந்தனுக்குவேதஞானம் சொரூபமென்றகடோரரிஷியைக்காணவென்று, மன்னாகேள்காலாங்கிபோகநாதர்மகிமையுள்ளவாசிரமமிங்கொன்றுண்டு, தென்பாறைபச்சையென்றமீதிலப்பா தேர்வேக்கரிடியாருமொருவருண்டு, முன்னேதான்பெரியோர்கள்சொன்னதுபோல மோனமென்றஞானகுருசித்துவுண்டே. ௧௩௪

மோனமகாரிடியைக்கண்டது.

உண்டானசித்துமகாரிடியார்தாமும் ஓர்காதகோநாதாக்கள்வாசிர்மந்தான், கண்டேனேபச்சையென்றமலையின்மீதில் காவலர்களாயிரம்பேர்சூழ்ந்திருக்க, திண்டானவாசிர்மங்கண்டியேதான் தீரமுடன்குளிகைதனைபூண்டுகொண்டு, அண்டமதில்தான்பாய்ந்துமேலேநின்று வப்பனேகுளிகைகொண்டிறங்கினேனே. ௧௩௫

பிறங்கியேமோனகுருவெதிர்முன்பாகவெழிலாகக்குளிகைகொண்டுநின்றேனங்கே, திறமுடையசித்தர்களோராயிரம்பேர் தீரமுடனெந்தனையேசபிக்கவந்தார், நிற்மானபச்சையென்ற சித்துதாமும் நீருக்கியெந்தனையுஞ்சபிக்கவந்தார், மரம்போலநின்றுவிட்டேன்போகர்யானும் மார்க்கமுடன்தாள்பணிந்துதெரிசித்தேனே. ௧௩௬

தெரிசித்தேன்மோனமாகரிடியைநானும் தீரமுடன்வடகோடிகானகத்தில், பரிசித்தரிஷியாரும்பச்சைமீதில் பாங்குடனேவீற்றிருந்தவாசிர்மந்தான், வரிசையுடன்மோனமாகரிடியாசிர்மம் வண்மை

தனைக்காணவென்று வந்தேன்யானும், குளிகையென்றமோனகுருவர சிர்மத்தை குறிப்புடனேயான்கண்டுவணங்கினேனே. கஙஎ

மோனகுருபோகருக்கு வுபதேசங்கூறல்.

வணங்கவேரிடியாருமென்னைப்பார்த்துவாகுடனேயாரப்பாவென்றுகேட்க, இணங்கவேகாலாங்கிசீடனென்றேன் வெழிலானமோனகுருரிடியாசிர்மம், கலங்கமதுவாராமலடியேன்றன்னை சூட்சமுடன்தன்னருகில்வரவழைத்து, மனமுடனேயெந்தனுக்குஞானோபதேசம் மார்க்கமுடன்வரமதுவுங்கொடுத்தார்பாரே. கஙஅ

பாரேதான்வெகுகோடிகாலமப்பா பட்சமுடன்பச்சையென்றமலைதான்மீதில், நேரேதானக்கினியும்நவதாதோடு நேர்மையுடன்தானறிந்துயிருந்தேனங்கே, சீரேதான்சிலகாலஞ்சென்றபின்பு திகழுடனேமோனமகாரிடியையானும், சாரமுடன்ஞானோபதேசம்பெற்று சட்டமுடன்சீனபதியேகினேனே. கஙகூ

போகர்சீனபதிக்குவந்தது.

ஏகவேசீனபதிப்போகவென்று வெழிலானகுளிகைதனைப்பூண்டுகொண்டு, வேகமுடன்சீனபதிவந்தேன்யானும் வெட்டவெளி ஆகாயங்கோட்டைதன்னில், சாகமுடன்குளிகைவிட்டு யிறங்கியேதான் சட்டமுடன்மாண்பரெல்லாங்கண்டேன்யானும், சோகமுடன்சீடர்க்கங்கண்டபோது சுத்தியென்னையர்துமல்லோசூழ்ந்தார்பாரே. ()

சூழ்ந்தாரேயெந்தனையுஞ்சீடவர்க்கம்சூட்சாதியானதொருமார்க்கமெல்லாம், தாழ்ந்துமேயெந்தனையுங்கேட்கும்போது சட்டமுடன்யானுமைத்தேன்பச்சைதன்னை, ஆழ்ந்தவொருகடல்தனிலேமலைதானுண்டு அப்பனேவடகோடியாழிதன்னில், வாழ்ந்துமேபச்சமலைதன்னிலப்பா வாருடனேவெகுகாலமிருந்தேன்பாரே. கசக

ஆகாயமார்க்கமாய் கூண்டுகட்டிக்கொண்டுயிறங்கி.

பச்சையெடுக்கும்விதி.

பிருந்தேனேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன் வெழிலானமாண்பர்களேகேளும்கேளும், திருத்தமுடன்வடகோடியாழிதன்னில் தீரமுடன்பச்சையதுயெடுக்கவென்றால், பொருந்தவேநீருமிக்கப்பல்தானும் போகாதுகடலுக்குத்தட்டாவில்லை, வருந்தியேசமுல்துவுமெத்தவுண்டு வாகானபட்சிமுதல்மடிந்துபோமே. கசஉ

மடியுமேகடலுக்குமேற்பாகத்தில்வளமுடனே ஆகாயம்பறக்கும்பட்சி, கடியுமேதான்பறந்துசுழலுமாழி சுப்புறவாய்ச்சகமதிலேவிழுகும்பாரு, அடியுமில்கற்பாறைதனிமெத்தவுண்டு அலைகடலில்நடம



துவுங்காணப்போமோ, கொடியானவாகாயக்கூண்டுதன்னில் நோக்கமுடன் தீவுக்குச்செல்லலாமே. கசங

செல்லலாம் யானுரைத்த கூண்டினாலே சிறப்புடனே தீவுக்குப்போகலாகும், வெல்லவே ஆகாயமார்க்கந்தன்னில் விருப்பமுடன் கூண்டைவிட்டு யிறங்கியல்லோ, புல்லவே யான்சொன்ன வாசிர்மத்தில்புகழான வடகோடிகடலில்தானும், நல்லதொரு பச்சையென்றமலையைக்கண்டு நலமுடனேயிறங்கியல்லோ யெடுக்கலாமே. கசச

எடுக்கலாம் பச்சையென்றகளஞ்சியத்தை யெழிலான வடகோடியாருதன்னில், தொடுக்கவேகூண்டுவழிமார்க்கமாக தோராமல்பச்சைதனையெடுக்கவேண்டும், விடுக்கவேயாகாயங் தனிலெழும்பி விடுபட்டுச்சுழலதனைத்தாண்டியேதான், ஒடுக்கமுடன்சீனபதி கோட்டைக்குள்ளே வுத்தமனேயிறங்கவென்று வுரைத்திட்டேனே. கசரு

தனக்கோட்டிக்கு வடபாகத்தில்கெம்புளியும்

ஆற்றைக்கண்டது.

உரைத்தேனே யின்னமொருமார்க்கங்கேளு வுகமையுள்ள புலிப்பாணி மைந்தாசொல்வேன், கிரைப்படியேயெனதையர் காலாங்கிநாதர் நேராகவெந்தனுக்குச் சொன்னமார்க்கம், திரையானவடகோடியாழிதன்னில் தீர்க்கமுடனாசிர்மமங்கொன்றுண்டு, வடகோடிகானகந்தான் சொல்லொண்ணாது வாகானகுளிகைகொண்டுசென்றேன்பாரே. கசசு

பாரேதானாழி நடகும்யான்கடந்தேன் பாங்கானவாசிர்மந்தன்னிற்செல்ல, நேரேதான் குளிகையதுகொண்டுமல்லோ நேரானவடகோடிகானகத்தில், நீரேதான்குளிகை கொண்டுயிறங்கியல்லோ நேர்க்கமுடன் தீவுதனைக்கண்டேன்யானும், வரோதானொன்றிலேக்கடல்தானப்பா வுத்தமனேயாசிர்மம் நதியாருண்டே. கசஎ

உண்டானவாசிர்மந்தன்னிற்சென்று ஓகோகோரநாதாக்கள்பெருமைதன்னை, கண்டேனே வடகோடியாசிர்மத்தில் கனமான சித்துமுனிரிஷிகள்யாவும், தொண்டருடன் வாசிர்மந்தனைச்சுற்றி சொரூபமென்றசித்தொளிவுசொல்லொண்ணாது, அண்டர்முனிராட்சதர்கள் காணுடு வப்பனேகுளிகைகொண்டு சென்றேன்தானே. கசஅ

தானானகுருபதத்தைக்காணவென்றுதாக்கானமஞேன்மணியாளருளும்பெற்று, கோனானவெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனார்குருமொழியாஞ்சொற்படிக்கி,தேனானகுளிகைகொண்டு சென்றுமல்

லோ தெளிவுடனே யாசிர்மந்தன்னில்நின்றேன், பானுனகம்பிளியா ளுசித்தர்தாமும் பாற்கடலிலெந்தனையும் பார்த்திட்டாரே. கசசு

### போகர்கம்பிளிசித்தரைக்கண்டது.

பார்த்தாரே நடுக்கடலாசிர்மத்தில் பாங்கானசித்துமுனி ரிஷிக ளெல்லாம், வேர்த்து முகமாயிருக்க யானுங்கண்டேன் வீரானதேக மெல்லாம் ரோமமப்பா, சீர்த்தியுள்ள சித்தாப்பாவையகத்தில் சிறப் பானலோகமதிற்கண்டதில்லை, பூர்த்தியாமகிமையது சொல்லொண் ணாது பொன்னுலகுசித்தரென்று செப்பலாமே. கருo

செப்பவென்று லவர்களிடங் கிட்டிநின்றேன் செங்கதிரோன் போல்வீசும் சடலமப்பா, ஒப்பவேதேகமது ரோமந்தானும் உத்தம னே காடியென்றே செப்பலாகும், இப்புவியிலா ரேனுங்கண்டதில்லை எழிலான காடிமயிர்சித்தரப்பா, அப்பதியி லாசிர்மம் யாருங்காணார் அலைகடலில் வழிகாணார்மாண்பர்தாமே. கருக

மாண்பானவையகத்தில்யா னுமல்லோவளமுடனேகுளிகைகொ ண்டு சென்றேனப்பா, வீண்போகாக்காலமது யான்கடந்து விருப்ப முடனட்டதிசைகாணவென்று, காண்பான வடகோடித்தாண்டியப்ப் லோகைகலைபதிக்கொப்பான தீவுதன்னில், ஆண்மையுடன்சென்றுமல் லோசித்துதம்மை வன்புடனேயான்கண்டவளஞ்சொன்னேனே. ()

சொல்லவேயாசிர்மந்தன்னினின்று சடாரணசித்தர்முனிதன்னை க்கண்டு, வல்லதொருரோமமுள்ளசித்தாப்பாவண்மையுடனெந்தனை யாரென்றுகேட்க, புல்லறிவானதொரு வடியேன்றானும் புகழுடனே காலாங்கிச் சீஷனென்றேன், மெல்லவேயெந்தனையும் மாசீர்மித்துமே ன்மையுடன் பட்சமது கொண்டார்தாமே. கருங

கொண்டாரே காலாங்கிபேருரைக்க கொப்பெனவே ரோமமெ ன்றகாடிசித்து, சண்டமாருதம்போலக் கோபங்கொண்ட சகலரு மேயென்பேரிலாசிர்மித்து, கண்டுமே யுபதேசஞ்செய்வதற்கு கருத் திலே மனதுவந்து யடியேனுக்கு, விண்டதொரு ஞானோப தேசமெ ல்லாம் விருப்பமுடன்போதித்தார் சித்தர்தாமே. கருச

சித்தானசித்துமுனி ரிஷிதானப்பா சிறப்புடனேயெந்தனுக்கு யாமஞ்சொல்லி, முத்தானவாசிர்மம்பெருமைசொல்லிமூதுலகில் மகி மையெல்லாந்தானுரைத்து, எத்தலமுங்கண்டுவந்த சிறுபாலாகேள் யெழிலானவாசிர்மம்மகிமையெல்லாம், சுத்தமுடனுந்தமக்கு யாமு ரைத்தோம் சூட்சாதிசூட்சமெல்லாமறிந்துகொள்ளே. கருரு



### போகர் கெம்புநதி கேட்டது.

கொள்ளவென்று சொல்லுகையிலடி யென்றானும்கொப்பனவே கெம்புநதியெக்கேயென்றேன், விள்ளவேயெந்தனுக்குச்சொன்னாரப் பா விருப்பமுடன்வடகோடி கானகத்தில், அள்ளவே வயோத்திநகர் மேற்பாகத்தில் அழகானகெம்புநதியென்றுரைத்தார், மெல்லவே கெம்புநதிக்காணவென்று மேன்மையுடன் குளிகைகொண்டு விடை பெற்றேனே. கருசு

பெற்றேனே சித்தரிடம்விடைகள் பெற்றுபோனகுளிகைத னைப் பூண்டுகொண்டு சற்றமுடன் அயோத்திநகர் தன்னைநோக்கி சூட்சமுடன்மேற்பாகந்தனனிற் சென்றேன், வுற்றதொரு குளிகை கொண்டுமேற்பாகத்தில் ஒகோகோநாதாக்களிருக்கும்ஸ்தானம்,வெ ற்றியுடன் காலாங்கி தனைநினைந்து விருதுடனே வடியேனுமிறங்கி னேனே. கருஎ

இறங்கினேன் வயோத்திநகர் மேற்பாகத்தில் யெழிலானகெம் பா றுநடுமையத்தில் திறமுடையகெம்புகல் மண்டபந்தான் தெளி வானபதியொன்றுகுகைதானுண்டு, திறமானவெம்பென்றசித்தர்தா தானும் நீலவர்ணன்முகம்போலே சித்தொன்றுண்டு, உறமானமண் டபத்தில் தவசியாரும் வுற்பனமாய்த்தானிருக்கக்கண்டிட்டேனே.

கண்டிட்டேன்குளிகையது பூண்டுகொண்டுகடிதானகெம்பாறு நடுமையத்தில், தண்மனபமாலையணி கிருஷ்ணன்போல தவமுடைய சித்தொருவாங்கேயுண்டு மண்டலுகர் தானறியாதீவுதானும் மகத் தானகெம்பாறுமண்டபந்தான், அண்டமெல்லாம் தான்புகழும் நதி தானப்பாவப்பனேகெம்பாருபார்த்திட்டேனே. கருகூ

பார்த்தேனேரிஷியாரையடியென்றானும் பட்சமுடன்பக்கல்த னில்யானுஞ்சொன்னேன், தீர்த்தமுடன் கெங்காநதிபானத்தேடு திறமுடனேவஞ்சலிகள்மிகவுஞ்செய்தேன்;சேர்த்துமேயெந்தனையுங் கொண்டணைத்து சிறுபாலாயெங்கு வந்தீரென்றுரைத்தார் ஏர்க்க வேயெந்தன்மேல்பட்சம்வைத்து யெழிலான வாசிர்மஞ்சொன்னார் பாரே. கசுo

சொன்னவுடன் அடியேனுங்கால்நடுங்கி சுத்முடன்தலைகுனி ந்துசாஷ்டாங்கித்தேன், நன்னயமாய் காலாங்கி நாதர்தம்மால் நாடி வந்தேனுசிர்மந்தன்னையென்றேன், வுன்னிதமாய்க் கெம்புநதிகாண

வென்று உகந்ததொருகுளிகை தனைக்கொண்டுவந்து, பன்னவேயா சீர்மங்கிட்டிவந்தேன் பட்சமுடனெந்தனக்கு வருள்செய்வீரே, ()

அருளென்றுசொல்லுகையில் வடியேன்மீது வன்புடனே கிருபையதுமிகப்புரிந்து, தெருள்கலையிற் றெள்ளமுதேதேனே மானே தெவிட்டாத கண்மணியே போகர்பாலா, இருளகற்றுஞ்செந்தேனே சிங்கவேறே யெழிலான குணக்குன்றே யோகவானே, பொருளான ஞானோபதேசங்கேட்கும் பொன்னவனேயுந்தனுக்கு வருள் சொல்வேனே. கசுஉ

சொல்வேனேஞானோபதேசந்தன்னை சூட்சாதிசூட்சமதையுனக்குரைப்பேன், வல்லதொரு காலாங்கிநாதர்பாலா வளமையெல்லாமுந்தனுக்குயோதுவேன்யான், வெல்லவே ஞானோபதேசமெல்லாம் விருப்பமுடனெனக்களிப்பேனென்றுசொல்லி, புல்லவேபூதலத்தின் மகிமையெல்லாம் புகழ்ச்சியுடனெந்தனுக்கு ஓதுவாரே. கசுங

கெம்புரிடிபோகருக்கு ஞானோபஞ்சொல்லி
கெம்புவிளைவுகாட்டியது.

ஓதுவார்கெம்பாருநதியுஞ்சொன்னார் ஓகோகோநாதாக்கள்கண்டதில்லை, வாதுரைத்தயெந்தனுக்கு ரிஷியார்தாமும் வண்மையுள்ள ஞானோபமுரைத்தாரப்பா, மாதுமனோன்மணியாளின்கிருபையாலே மகத்தான மகிமைகளுஞ்சொன்னாரப்பா, சேதுபந்த மானதொருகடலி னேர்மைசெப்பினா ரெந்தனுக்குச்செப்பினாரே. கசுச

செப்பினார்கெம்புதனை யெடுக்கவல்லோ சேதுபந்தமவயோததிக்குமேற்கேயப்பா, ஒப்பவேகெம்பாறு வடமுகத்தில் ஓங்கியதோர் வோடையொன்றுகுகைதானுண்டு, வெப்புடனேவடகோடி யாற்றையப்பா விண்ணுலகில் கண்டவர்களாருமில்லை, செப்பமுடன் யெந்தனுக்கு வுளவுசொல்லி நேர்மையுடன் வோடைதனைகாண்பித்தாரே. கசுரு

காண்பித்தார் வயோத்திநகர்வோடைதன்னில் கனமான கெம்பினது அருவிகண்டேன், ஆண்பானகெம்பினது அருமைதன்னை வப்பனேநாதாக்கள்செல்லவாரோசொல், தூண்போலேகல்லதுதானயிருக்கும்பாருதுடியானகெம்பினதுவோடைதன்னை, சாண்போலே பாறையதுமிகவிருக்கும் கர்ண்பானசிறுகல்லுபொடியுமாமே கசுசு

பொடியான கல்லதுதான்மணல்தானப்பா பொங்கமுடன் கழற்சிக்காய்ப்போலிருக்கும், துடியானகெம்புதனை யெடுப்பாரப்பா தூண்போன்றகெம்புதனை யெடுக்கமாட்டார், படியான உடைக்குள்



சித்தர்காவல்பாங்கான மேற்புரத்தேசெல்லலாகா, அடிபோன்ற காறுவதிலேயுண்டு அற்புதமாமருவியென்ற வாழியாமே. கசுஎ

ஆழியாம் மேலருவில் தன்னிலப்பா வப்பனேகழற்சிக்காய்யளவுபோலும், காழியால்தான்கொண்டு கெம்பளுக்குமநாயகனே பெரிடிமணலாமருவிபாயும், நீழியுடன்கீழருவில் தூண்போல்கெம்பு நீடோணமலைபோலேயிருக்கும்பாரு, தாழினிடமிலைகின்றகெம்புமார்க்கம் தகைமையுடன் வெகுபேர்கள் காணார்தாமே. கசுஅ

காணாரேகெம்பினுட வாட்டின்மார்க்கம் காசினியில் காலாங்கிகிருபையாலே, தோணுங்கருவிகாணுகியெல்லாம் தோற்றமுடனெந்தனுக்குக்காண்பித்தாரப்பா, பூணுநதுறைமுதலுங் காணுந்தான் பொங்கமுடன் கெம்பினதுவருவிதானும், மாணமுறும் கெம்பினிடிவுதன்னை மார்க்கமுடன்கண்டுவந்தேன் தேசமாமே. கசுகூ

போகர்சீனபதிக்குவந்து கெம்புவிலைகூறல்.

தேசமாமின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் சிறப்பானசீனபதிவுலகத்தார்க்கு, மோசமதுதெரியாத மாண்பரப்பா முதலகில் சீனபதியாரைப்போல, பாசமுடன்மெய்யென்று நம்புமாண்பர் பாருலகில்சீனபதியுலகமப்பா, நாசமுள்ளமற்றதோர் தேசமெல்லாம் நலமானகருமிகள்தா னென்னலாமே. கஎ0

என்னவேசீனபதி யுலகத்தோர்க்கு யெழிலானகபடுகளுஞ்சூதுதானும், பன்னவேபழிபாவம் தெரியாதப்பா பாருலகிலம்மாண்பர்போலேயுண்டோ, துன்னவேயாம்கண்ட மார்க்கந்தன்னை துப்புறவாய்சீனபதியுலகத்தார்க்கு முன்னவேகாலாங்கி சொன்னாப்போல் முயற்சியுடனதானுரைப்பேன பதியுள்ளோர்க்கே. கஎக

பதிபானசீனபதி மாண்பரேகேள் பாருலகில்கடலேழுஞ்சுத்திவந்தேன், நிதியான நவகோடிதிரவியங்கள் நேர்மையுடன்தானிருக்கும் தவமுங்கண்டேன், துதியானசித்தர்முனி ரிஷிகள்தாமும் சூழ்ந்திருக்குங்கெம்பினுட நதியுங்கண்டேன், மதியாததவசமுனி சித்தர்சேர்மம் மார்க்கமுடன்கண்டுவந்தேன மகிமைபாரே. கஎஉ

பாரேதான்கெம்பாறு நதியுங்கண்டேன் பாங்கான வோடைமுதயருவிகண்டேன், நேரேதான் காநாறுயாழிகண்டேன் நேரான

கெம்புத்தூண் பாறைகண்டேன், சாரேதான்மேலருவி வுள்ளருவி கண்டேன் சாங்கமுடகெம்பினுட மண்டபந்தான், தீரேதான் வடகோடி மேற்பாகத்தில் தீரமுள்ளசித்தர்கள்தான் காவலுண்டே. ()

காவலாங்காணுறுபதியிலப்பா காத்திருப்பார் வெகுகோடிசித்தரங்கே, ஆவலுடன்கெம்பெடுக்கப் போகும்போது வப்பனே யவர் கருணை மிகவேவேண்டும், யேவலுடனவர்பணிக்கு முன்னேநின்று வெழிலானகெம்பதனை யெடுக்கலாகும், கோபமதுவாராமல்குருவின் முன்னே கொப்பெனவே யாசிர்மங்கொள்வீர்தாமே. களச

கொள்ளவேயாசிர்மங் கொண்டபோது கொற்றவனே யுத்தமக் குத்தடமுஞ்சொல்வார், விள்ளவேவதிதியிருக்குமிடமுஞ்சொல்லி விருப்பமுடன்கெம்பினுட நாடுஞ்சொல்லி, உள்ளதொருவுடல்பொருள் களாவியோடு உத்தமனே உந்தனுக்குத்தத்தமீய்ந்து, கள்ளமின்றி மனதுவாநடக்கவென்று கடாட்சமுடனருள்வளஞ்சொல்வார்பாரே

சொன்னதொரு விதிமுறைகளனைத்துங் கூறி சுத்தமுடன் ஞானோபதேசமோதி, நன்னயமாய் வையகத்தில்வாழ்கவென்று நாதாந்தக்கண்மணியி னருளைபெற்று, என்னுளுஞ் சித்தருக்கு மூத்தனாக வெழிலாக யிருக்கவென்றுவாசிர்மித்து, பன்னவேபரப்பிரம்மசோதி தன்னை ப்கட்டுவார்யுந்தமக்குப் பண்பாய்த்தானே. களகூ

போகர் யானைமலைகண்டது.

தானானயின்னமொரு மார்க்கங்கேளு தகமையுள்ளபுலிப்பாணி மைந்தாசொல்வேன், தேனானதென்மதுரை வடமேற்கப்பா தெளிவானயானமலை யென்றொன்றுண்டு, கோனானயெனதையர் காலாங்கி நாதர் கொற்றவனா ரெந்தனுக்குச் சொன்னமார்க்கம், பானானகுரு சொன்னமொழிப்படிக்கிப்பாலகனே குளிகையதுகொண்டேன்பாரே

கொண்டேனே குளிகையதுயானுங்கொண்டு கூரானயானைமலைக்காண்பதற்கு, அண்டமுடனாகாயம் தான்பறந்து அழகானயானைமலைமீதிற்சென்றேன, கண்டேனேவுச்சிதனில் மண்டபந்தான் காலானகாலமதுமூன்றுயோகம், உண்டானசித்தரப்பா யங்கேயுண்டு வுத்தமனே கல்லடியாஞ்சித்தராமே. களஅ

கல்லானசித்தரப்பாமனேகமாண்பர்காசினியிலிருந்தவர்தமலைமேற்சென்றோம், வல்லானயானைமலையுச்சிதன்னில் வளமுடனே ஆய



க்கால்மண்டபத்தில், கொல்லரெனுஞ்சிஷர்களா மாயிரம்பேர் கூட்டமிட்டுவந்திருக்கக் கண்டேன்யானும், வெல்லவேயோகாது சித்தர் தம்மை வேசமுடன்தான் சபிப்பாறு றுதியாமே. களகூ

உறுதியாமோனநிலை கொண்டசித்து மூதுலகில்பார்த்தவர்களாருமில்லை, மருமமாம்வதிதமூதல் மகிமைகோடி வண்மையுள்ள சித்தர்களுமங்கேயுண்டு, நறுமணங்கள் கொண்டதொருசித்துதம்மை நவிலவேமுடியாது மலைமேலப்பா, குறுமுனியாமகஸ்தியர்க்கு நேரான கொற்றவர்களங்கிருக்கக் கண்டேன்தானே. கஅகo

தும்புருமகாரிஷியாசிர்மம்.

தானான ஆயக்கால்மண்டபத்தில் தகமையுள்ளகல்லடியாஞ் சித்தரப்பா, கோனானமண்டபத்தில் சமாதியுண்டு கோமானும் தும்புரிஷியார்தாமும், பானானப்ளிங்குமா மண்டபந்தான் பாங்கானமலைமீதில் யிருக்கும்பாரு, தேனானரிடிமுனிவர் சித்தர்தாமும் தேற்றமுடன்கொலுக்கூடம் காப்பார்தாமே. கஅக

கொலுவனமண்டபத்திலடியேன்றானும்கொப்பெனவேகுளிகை கொண்டியிறங்கியல்லோ, வலுவானகல்லடியான் சித்தர்முன்னே வளப்பமுடன்குளிகைவிட்டு யிறங்கிநின்றேன், மெலுவானவார்த்தையது மிகவும்பேச மேன்மையுடனென்மனதி லெண்ணங்கொண்டு, அலுவானசமாதிபக்கல், நின்றேன்யானும் அங்கெனவே கண்டாரே முனிவர்தாமே. கஅஉ

முனியானசித்தர்முனிரிஷிகள்தாமும் மூர்க்கமுடனென்மீதிற்சினமுங்கொண்டு, தொனியானவார்த்தையதுசீறலாகி தோற்றமுடனெந்தனையுஞ் சபிக்கவென்று, பனிபோன்றமலைமீதில் யிருந்துமல்லோ பாங்குடனேபுறப்பட்ட ராயிரம்பேர், கனிவுடனேயவர்களை யான் கண்டபோது கால்விழுந்துசாஷ்டாங்கஞ் செய்திட்டேனே.

இட்டேனேசித்தர்முனிரிஷிகளுக்கு யெழிலுடனேயடிவணங்கி தெண்டனிட்டேன், கிட்டிநின்றயெந்தன்மேல் கிருபைவைத்துகீர்த்தியுடன்யாரப்பா வென்றுகேட்க, திட்டமுடன்காலாங்கிநாதர்தம்மை திறமுடனே மனந்தனிலே நினைந்துகொண்டு, வட்டமுடன் குளிகைகொண்டசேஷன்யானும்வாகுட்னே மலைதேடிவந்தேன்பாரே

பார்த்தேனேயானைமலைக்காணவென்று பாங்கானகுளிகைகொண்டு யிறங்கினேன்யான், தீர்த்தமுடன்காசிபதி சென்றுயானும் திகழானகாசிலிங்க தீர்த்தங்கொண்டு, ஆசையுடன் பூசைநைவேத்தியங்கள் வன்புடனே பதாம்புயத்தை யார்ச்சிப்பேன்யான், சேர்த்துமே காங்குவித்து வுரைத்தபோது சிறப்பானரிஷியாருமகிழ்ந்திட்டாரே கஅசு

மகிழ்ந்திட்டசித்தரென்னை யாசீர்மிக்கமகிழ்ச்சியுடனவர்பாதமஞ்சலித்தேன், நெகிழ்ந்திட்டரிடியாரும் யென்னைப்பார்த்து நேர்மையுடன்மலைமீதில் வாலாமோசொல், தகிழ்ந்திட்டசிறுபாலா யென்னையிப்போ தன்மையுடன் தெரிசிப்பேனென்றுரைத்து, மகிழ்ந்திடவே ஞானோபதேசஞ்சொல்லி சட்டமுடன் மலைவளத்தைச் சொன்னார்பாரே.

பாரப்பாகாலாங்கி நாதர்பாலா பட்சமுடன்மலைவளத்தையானுரைப்பேன், ஆரப்பாவென்னைப்போல சொல்லப்போரார் வப்பனேயானுனக்கு வுறுதிசொல்வேன், சீரப்பாவென்தனது போகநாதர்சிறப்புடனே யானைமலைமகிமைகேளும், நேரப்பாமலைதனிலே வதீதமெத்த நேர்மையுடன்யாம்கண்டவரை சொல்வேனே. கஅஎ

## தும்புரிஷிபோகருக்கு யானைமகிமைகூறல்

சொல்லவென்றால் நாவில்லைப்பாவுமில்லை துரைராஜ சுந்தரனே சொல்வேன்கேளும், வெல்லவேயானைமலை யடிவாரத்தில் மேன்மையுடன் சுனையொன்று குகைதானுண்டு, புல்லவேசுனையருகில் போகும்போதுபுகழான கல்லடியாஞ்சித்தரப்பா, மல்லர்கள்போல்நூறுபேர் கொலுவிருப்பார் மகத்தானசுனையருகே காவலுண்டே கஅஅ

உண்டானகாவலுக்குள்ளதிசயங்கள் வுத்தமனேசொல்லவென்றால்முடியாதப்பா, திண்டானகார்த்தவ ரூபனப்பா திகழானசுனையினது படிதளத்தில், சண்டமென்றவாயுதப் பாணியோடு சக்கரமும் வளைதடியுங் கைபிடித்து, துண்டரிகமானதொரு வீரியன்றான் துப்புரவாய்க்காவலது யிருப்பான்காணே. கஅகூ

காணவேகுளிகைகொண்டுசெல்லும்போது கண்மணியேயுன்னையவர் வழிமரிப்பார், பூணவேகார்த்தவனார் வீரியன்றான் புகழானவாயுதபாணியாக, வேணவேயுத்தமது செய்யவென்று விருப்பமுடன் வருவாரைக்கண்டபோது ஆணவங்களதிகரித்துயுன்னைக்கொல்லவம்பனே வருவாரேயுண்மைதானே. ககூ0



## தும்புரிஷி போகருக்கு சுந்திரமுறைத்தல்.

உண்மையாமின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வுத்தமனேகுகைக்குள்ளேசெல்வதற்கு, நன்மையுடன்பிரணவமாஞ் சக்கரந்தான் நலமுடனேயான்கொடுத்தேன்யுந்தனுக்கு, கண்மையாஞ்சக்கரத்தைக்கைபிடித்து கவனமென்றகுளிகைகொண்டு, செல்வாயானால்வண்மையுடன்யுந்தனுக்குவசியமாவார் வளமுடனேநாதாந்தசித்துதாமே

சித்தானசித்துமுனி தன்னைக்கண்டுசிறப்புடனே குகைதனிலே சென்றேன்யானும், சுத்தமுடன்கார்த்தவனை ரெங்கனைத்தான்சூருடனெனைவதைக்கத் துணிந்தார்பாரு, பத்தியுடனவர்பக்கல் நின்றுகொண்டுபட்சமுடன் பிரணவமாஞ்சக்கரத்தை, வெத்திபெற வுச்சாடம் செய்தபோது வீரபத்திரன்கைவசமு மானார்தாமே. ககூஉ

## போகர்பத்மாசூரனைக்கண்டது

ஆனாரே ரிடியாருமென்தனுக்கு வன்புடனேகைவசமு மானார்தாமும், போனேனேகுகைகடந்து சென்றேன்யானும்பொங்கமுடன் வீரபத்திரன்றனைக்கடந்தேன், வானோர்கள்தான்புகழும் பத்மாசூரன் வண்மையுள்ள குகைதனையேகண்டேன்யானும், ஞானோபதேசமது கூறிக்கொண்டுநயம்படவேசமாதி தனிலிருந்திட்டாரே. ககூங

இருந்தாரே பத்சூரனையுங்கண்டேன்யெழிலானசூரனவர்பக்கல் தன்னில் பொருந்தவேதாருகாரிஷிகள்தானும்பொங்கமுடன் கொலுவிருந்தார்குகைதானுள்ளே, இருந்தமுடன்குளிகையது கொண்டுயானும் தீரமுடன்சூரனது பக்கல்சென்றேன், சூரந்தமலைசோலையது குகைதானுள்ளே சூரபத்மாசூரனையுங் கண்டேன்தாமே ககூச

தாமான சூரனையுங் கண்டபோது தகமையுடனெந்தனையு மாசென்றேதான், கோமான்போல் வீற்றிருக்குஞ்சூரன்றானும் கோலமுடனெந்தனையுமுருட்டிப்பார்த்து, நேமமுடன் சிறுபாலாயாரென்றேதான்நேர்மையுடனிவ்விடத்தில், வந்ததென்ன பூபாலனேயென்றுசொல்லி யென்னைகேழ்க்க பொங்கமுடனடியேனுங்கூறினேனே ககூரு

கூறினேன்காலாங்கி நாதரையாகொற்றவரும் நற்சீஷனென்றுரைத்தேன், மாறிடவேசூரனவன் மகிழ்ந்துமல்லோமகிமையெல்லாந் தானுரைத்தாரெந்தனுக்கு, கோறிவந்தவினையங்கைகூடலாச்சே குவலயத்திலதிசயங்கள் தாமுரைத்தார், வேறிடமாம்மலை குகைகள்யாவுஞ்சொல்லிவிருப்பமுட னெந்தனுக்குவிடைதந்தாரே ககூசு

தந்தாரேயின்னமொரு மார்க்கங்கேளுதகமையுள்ளபுலிப்பாணி மைந்தாசொல்வேன், அந்தமுள்ளவகஸ்தியர்க்குவுகந்தசீஷன் அறிவுள்ளகண்மணியாம் தேரைதானும், சொந்தமுடன்வெகுகாலம் அகஸ்தியர்தானும் தோற்றமுடனற்சீஷனென்றுசொல்லி, விந்தையுள்ளவசதியங்கள் வையகத்தில் விருப்பமுடன்கண்டவரை சொன்னார்பாரே க௯௮

பாரேதான்கண்டவரை மார்க்கமெல்லாம்பாங்குடனே தாமுரைத்தார்தேரையர்க்கு, நேரேதான்சங்கத்தார் கூட்டமப்பாநேரானசித்தர்முனிரிஷிவர்க்கத்தில், சீரேதான்சமாதிதனிமுனியார் சீஷன்சிறப்பானதிரணாக்கியமுனிவருக்கு, நீரேதான்மூளைதனில் தலைநோக்காடு நேர்மையுடன்வுந்துமல்லோ வருத்தலாச்சே க௯௯

வருத்தமுடன்மூளைதனில் பத்திநின்றவாகான தலைநோக்கையென்னசொல்வோம், பொருத்தமுடன் நோய்களிலே வருந்தியல்லோ பொலிவான துன்பமதுமேலதாகி, திருத்தமுடன்நோயதனைத் தீர்ப்பதற்கு திறமான வகஸ்தியரை அழைக்கச்சொல்ல, அருந்தமதுதானறிந்தாகும் பயோனி அறிந்தாரேஞான மென்றதிஷ்டியாலே ௨௦௦

## சங்கப்புலவருக்கு அகஸ்தியர் பண்டிதஞ்செய்தது

ஆமேதான்வகஸ்தியரு முன்னேசெல்லவன்பானதேரையர்பின்னேசெல்ல, தாமேதான் அகஸ்தியனார் வுத்தாரந்தான்தகமையுள்ள மருந்துவகை ஆயுதங்கள், போமேதான்தேரையமுனிவர்தாமும்பொங்கமுடன் அடப்பமதுகொண்டுயேந்தி, நாமேதான்சொன்னபடியகஸ்தியனார் பின்வன்பாகவழி நடந்தார்தேரையாமே ௨௦௦

தேரையென்றமுனியானசித்தர்தாமும் தெளிமையுடன்வகஸ்தியனார்வுடன்சென்றேபின், பாரையென்றமலைமீதில் தானிருக்குப்பான்மையுள்ள சங்கத்தார் கூட்டந்தன்னில், ஆறையாஞ்சமுகமதுமுன்னேநின்று வகஸ்தியாரும் சீஷனுடன்போயிருக்க, கூறையென்றசங்கத்துபுலவரெல்லாம் குட்சமுடனகஸ்தியர்க்குவுரைத்திட்டாரே ௨௦க

இட்டாரேசங்கத்துப்புலவ ரெல்லாம்யெழிலான திரணாக்கியமுனிவர்நோயை, சட்டமுடன்தசவருடகாலமையா தலைவலியும் சன்னிமுதலதிகமுண்டு, தொட்டதொருபண்டி தங்கள்மெத்தவுண்டு துளைராஜசுந்தரர்க்கு லக்கோயில்லை, திட்டமுடன்தங்களது பண்டிதங்கள் திறமுடனேசெய்வதற்கு வறிந்திட்டாரே ௨௦௨



## அகஸ்தியர் ஞானதிருஷ்டியினால் சிரசில் தேரையிருக்குதென்று கூறல்.

வருந்தவேயகஸ்தியனார் முனிவர்தாமும் வல்லமையால் பண்டிதங்கள்மிகவுரைப்பார், பொருந்தியேதேரையது மூளைதன்னை பொலிவானநாசிவழி தன்னிற்சென்று, வருந்தியேமூளைதன்னைப் பற்றியல்லோவாகுடனே தேரையதுபொருந்திநிற்க, மருந்தியவென்றல்லோ மனதிலுன்னி மகத்தானயகத்தியருங் கவனித்தாரே. ௨௦௩

கவனிக்கும்வேளையிலே கத்திகொண்டுகருத்துடனேமூளைதனைத்திறப்பார்க்க, மவுனமென்றமூளைதனில் தேரைதானும்மார்க்கமுடன்கவ்வியல்லோ கொண்டுநிற்க, புவனமென்றகுறடாவில் யெடுக்கப்போனார்புகழானதேரையர்முனிவர்தானும், கவனமென்ற பாணியினால்நடுக்கதந்திரம் சாற்றினார்தேரையர் சாற்றினாரே. ௨௦௪

## அகத்தியர்க்குத்தேரையர் தந்திரஞ் சொன்னதினால் தேரையனென்றுபேர்பெற்றது.

சாற்றவே மண்பாண்டம்தன்னில்தானும் தண்மையுள்ளசலமதனைநிறையவிட்டு, ஆற்றலுடன் தேரைமுன்னெதிரேகாட்ட அங்ஙனவேமூளைவிட்டுகுதிக்கலாச்சே, நாற்றிசையும் மேவுபுகழ் அகஸ்தியனார்தாமும்நல்லறிவுகண்டுமல்லோ மனதுவந்து, போற்றியே யென்சீஷா பொன்னரங்கா பொலிவானதெள்ளமூர்த்த சிங்கமாமே. ௨௦௫

சிங்கமாம்சித்தர்முனிமெச்சும்பாலா சிவயோகாவருள்பாலாதேகாமோகா, துங்கமேமெய்ப்பொருளே ஞானதீபாசுடர்மணியே கதிரொளியேகுட்சபாதர், தங்கமே சடாட்சாரத்தின் மோனவானே தயாபரமேதயாநிதியே சாருந்தீபா, புங்கிசித்திமெட்டுரிய போகவானே புகழான மகமேரேயென்றார்தாமே. ௨௦௬

என்றுரேவகஸ்தியரும்மெச்சியல்லோயெழிலானதேரையமுனிவருக்கு, நன்றான பொருளெல்லாம் மிகவுரைத்து, நலம்பெறவேஞானோபதேசஞ்செய்தாரங்கே, குன்றானமலைதனிலே யிருக்குமூலி குவலயத்திலிறந்தவரையெழுப்புமூலி, வென்றிபிழைமூலிதனைத்தேரையருக்கு விருப்பமுடன்ஞானோபதேசஞ் செய்தார்பாரே. ௨௦௭

பாரேதான்பொன்மூலி யுளவுஞ்சொல்லி பாங்கானபொன்விளையும்நாடுஞ்சொல்லி, நேரேதான்கருவிகரணாதியெல்லாம் நேர்மையுடன்தேரைய முனிவர்தானும், சீரேதான் கற்றறிந்துக்கொண்...

சிறப்புடனேயிருமாப்புயதிகமாகி, வேரேதான் அகஸ்தியரை விட்டு நீங்கி விருப்பமுடன் மலைவளத்தைச்சென்றார்தானே. ௨௦௮

தேரையர் வாரணவாசிமலையிற்சென்றது.

தானானவாரணமாம் மலையைக்கண்டு தண்மையுடன்தேரையமுனிவர்தாமும், கோனானவகத்தியரைவிட்டுநீங்கி குருமொழியைத் தானக்கடந்தசித்துதாமும், தேனானவித்தையெல்லாமறிந்துகொண்டு,தேற்றமுடன் லோகமெல்லாஞ்சித்துசெய்ய, மானானகாசியென்றமலைவாரத்தில் மார்க்கமுடன்தான்சென்றார் முனிவர்தாமே. ௨௦௯

தேரையர் சீஷருக்குபதேசித்தல்.

மூனியான்தேரைய சித்துதாமும்மூர்க்கமுடன் தனக்கிசைந்த சீஷர்தம்மை, தனியாக ஞானோபதேசஞ்செய்துமல்லோ தகமையுடன் மூலியெல்லாங்காண்பித்தாரங், கனியான தேரையமுனிவர்தாமும் நலமானபொன்விளையும் மூலியெல்லாம், பனியானமலைமேலே பூசியேதான் பழுக்கவே துருத்திகொண்டு ஊதினாரே. ௨௧௦

வாரணவாசியை தேரையர்தங்கமாக்கினது.

ஊதவேமலையெல்லாம் தங்கமாச்சு வுத்தமனேவதிலிருந்ததவசிமார்கள், மாதவங்கள்செய்கின்ற ரிஷிகள்தாமும் மகத்தானவடவாக்கினியனல்கொள்ளாமல், காதவங்கள்மிகவாகிரிஷியார்தாமும்கைலங்கிரிமலைதானும் விடங்கொள்ளாமல், பாதவத்திலிருந்ததொரு வகத்தியர்முன்னே பொங்கமுடன்முறைய முதுசெய்திட்டாரே. ௨௧௧

முறையானசித்துமுனி ரிஷிகள்தாமும் மூர்க்கமுடனோடிவந்து அகஸ்தியனார்முன்னே, சிறைமீண்டசித்தனும் தேரைதானும் தேற்றமுடன்மலையடிவாரந்தன்னில், திறையானதீமூட்டி துருத்திகொண்டு திறமுடனேமலைதனையேதீபால்தாக்க,குறையானசித்தர்முனிரிஷிகள் தாமும் குடியிருக்கயெங்களுக்கு யிடமில்லைதாமே. ௨௧௨

தாமானதேரைமுனி சித்துதம்மால் தரணியெல்லாம்சித்து மயமாகிப்போகும், சாமானமலைகளெல்லாந்தங்கமானால்தாரணியிலொருவருக்கோர்மதிப்போருண்டோ, கோமான்கள் குருவேது சீஷரேது குவலயத்திலொருவருந்தான்யில்லைகண்டீர், நாமானவாகவல்லோகூறிவிட்டோம்நாதாந்த சித்தொளிவைக்காப்பீர்தாமே. ௨௧௩

காக்கவென்றுசொல்லியல்லோ காங்குவித்துகைலாசவகத்தியற்குயிதவுகூறி, ஆக்குவது அழிப்பதுவும்மாலாகும்வப்பனேகடாட்ச



மதுசெய்யவென்ன, நோக்கமது கொண்டுமல்லோ அகஸ்த்தியர்தாமும் ரொடிக்குள்ளேசினமதுவுமதிகமாகி, தூக்கியேதேரையசித்து தம்மை துப்புறவாய்க்கிழித்தெரிந்துபோட்டிட்டாரே. ௨௧௪

போட்டாரேயகஸ்தியனார்சித்துதம்மை பொங்கமுடன்தம்பதிக்குப்போனாரப்பா, நீட்டமுடன் அகஸ்தியரும்போனபின்பு நேரானதேரையசீஷரங்கேகூட்டமுடன்வந்திருந்துமூலிதன்னால்கொப்பெனவேயெழுப்பிவிட்டார்சித்துதம்மை, வாட்டமுடன்மறுபடியுஞ்சித்துதாமும் வளமையுடன்முன்போலவூதினாரே. ௨௧௫

ஊதினார்தேரையமுனிவர்தாமும்ஓகோகோநாதாக்கள்பின்னுமல்லோ, சாதிகெட்டபையலவன்பின்னும்வந்து சட்டமுடன்துருத்திகொண்டூதுரார்பார், பாதிமதிசடையணிந்ததம்பிரான்போல் பட்சமுடன்தாமுரைப்பார் அகஸ்தியர்தாமும், நீதிமுறையில்லையோதான் சித்தருக்குநிஷ்டூரந்தானதிகம்வுரைத்தார்பாரே. ௨௧௬

அகஸ்தியர்தேரையரை சமாதானப்படுத்தல்

பாரேதான்சித்தர்களுமுறைக்கும்போதுபான்மையுடனகத்தியனார்சித்துதாமும், சீரேதான்தேரையமுனிவர்தம்மை சிறப்புடனே செய்வதற்குநீதியுண்டோ,நேரேதான்முக்காலில்கண்டுமேதான் நேர்மையுடன் தனலதனைநிறுத்தவென்று,கூரேதான்விண்ணப்பம்மொழியனர்தம் குறிப்புடனேகேட்டாரேமுனிவர்தாமே. ௨௧௭

முனியானவகஸ்தியனார் முனிவர்தாமும் முறையோடுங்குறையோடுங்கேட்டசீஷன்,தனியானதேரையசித்துதாமும் தகமையுடன் சமாதிக்குப்போகுமார்க்கம்,பனியானநற்மதாமலையின்மீது பான்மையுடன்தேரையமுனிவர்தானும், நனியானசமாதிக்கு யேகவென்று நாட்டமுடன்தேரையர்வெளிப்பட்டாரே. ௨௧௮

பட்டாரேதேரையமுனிவர்தானும் பாருலகில்சமுசாரவாழ்க்கையற்று, விட்டகுறையிருந்ததொருநேர்மையாலே விருப்பமுடன்வுலகத்தில்வாசைவிட்டு, சட்டமுடன்சீஷர்களைத்தாமழைத்து சதாகாலம்வுனுகுதனிவிருந்துமென்ன, திட்டமுடன்குருவணக்கங்கொண்டுமென்ன திறளானவுபலேதமொன்றுங்காணே. ௨௧௯

காணேனேவுபதேசம்வொன்றுமில்லைகாசினியிலிருந்தாலும்பலனும்மில்லை. பூணவேவளர்கோடி மகிமைவித்தை புகழாகக்கற்றாலு

மொன்றுமில்லை, வேணபடியிதிகாசப்புராணவேதம் வெட்காமுடனு யுறுவேதந்தானும்,தோணவேகண்டாலுமொன்றுமில்லைதுப்புறவாய் சமாதிக்குப்போகநன்றே. ௨௨௦

நன்றானசமாதிக்குப் போரேனப்பா நலமுடனேநீங்களெல்லா மனதுவந்து,குன்றானநறமதாமலையைநாடிகொற்றவரேவருகவென்று விடையுந்தந்தார், வென்றிடவேதேரையசித்துதாமும் வீரமுடன்நற மதாமலையைத்தேடி, சென்றாரேமலையடிவாரந்தன்னில் சிறப்புடனே தானமர்ந்தார்முனிவர்தாமே. ௨௨௧

முனியானசித்துரிஷிசொரூபர்தாமும்,மூதுலகிறைசையதுவிட்ட கன்று, பனிபோன்றநாடுவளஞ் சென்றேயேகி பாங்கானமலைவளத் தையடுத்தசித்து,சனிபிடித்தகதையைப்போல்சொரூபர்தாமும் சாங் கமுடன்மனதுமிகத்தான்தளர்ந்து, நளியானசமாதிக்குச் செல்லவெ ன்று நாட்டமுடன்சித்தாவர்நின்றிட்டாரே. ௨௨௨

நின்றாரேசித்துமுனிசொரூபர்தானும் நிலையானசமாதியதுகுழி தான்வெட்டி, தென்றலுடன்வாயுவதுவுட்செல்லாமல் திறமானகல்த ரையுந்தானமைத்து, சன்னமதாய்ஒருபக்கந்துவாரமிட்டு சட்டமு டன்சமாதிக்குயிடமுந்தேடி,பன்னமேவரிஷியாருமுன்னேநின்றுபாரு லகில்சீஷருக்குமதிசொல்வாரே. ௨௨௩

மதியானசீஷவர்க்கமெந்தன்பாலாமகத்தானலோகமதுவதிசயங் கள், பதியானபாருலகில்சொல்லொண்ணாது பட்சமுடன்தேரைய முனிவர்தாமும், விதியானவிதிப்படியேசீஷருக்கு விருப்பமுடன்தா முரைப்பார்சித்தர்தாமும், துதியுடனேசீஷர்களும்வஞ்சலித்து தோ ற்றமுடன்யெதிராகநின்றார்பாரே. ௨௨௪

பாரேதான்சீஷவர்க்கம்நிற்கும்போது பாலகனேயென்தோழா பாக்கியவானே, நேரேதான்கல்லறைக்குளிறங்குவேன்யான் நேரான கற்பாறைமேலேமூடி, சீரேதான்சமாதியதுபூண்டபோது சிறப்புட னேபால்பழமுந்தருகவென்று,நீரேதான்மண்டலங்கடந்தபின்புநீட்சி யுடனவ்வழியைமூடிப்போடே. ௨௨௫

தேரையரிடம் அசரீரிவாக்கு பிறந்தது.

போடவேகற்பாறைமூடிப்பின்புபொங்கமுடன்சமாதியுடன்நிற் கவேண்டும், நீடவேநான்வருகுங்காலந்தன்னில் நிலையானபாறைதனி லெழுத்துதோன்றும், கூடவேவாண்டுவது பந்துக்குள்ளே கொப்



பணவேயான்வருகுங்காலந்தன்னில்,சாடவேநற்மதாமலைதானப்பா ச ட்டமுடன்தங்கநிறமாகும்பாரே. ௨௨௬

தங்கமாமதிலிருக்குஞ்சித்தரெல்லாம் சட்டமுடன்மலையைவிட் டுக்கீழிறங்கி, அங்கமுடனஞ்சலிகள்மிகவுஞ்செய்து வன்புடனேசமா தியிடம்வந்துநிற்பார், புங்கசித்தியெட்டுமதுபூண்டுகொண்டு புகழா னயோகமென்றஞானங்கொண்டு, சங்கமென்றஞானோபதேசத்தோ டும் சார்புடனேசமாதியிடம்நிற்பார்பாரே. ௨௨௭

பார்க்கவென்றுவின்னம்வெகுவதிசயங்கள் பாருலகில்தானடக் கும்மகிமைசொல்வேன், தீர்க்கமுடன்வடகோடியாருதானும் திகழு டனேதென்றிசைவிருந்துமல்லோ, மூர்க்கமுடன்வடகோடிகானகத் தில் மூத்தமுடன்கான்பாயுமென்றுசொன்னார், ஏர்க்கவேகானுறுநதி களெல்லாம் யெழிலுடனேயிப்படியேநடக்குந்தானே. ௨௨௮

தானானசித்துமுனிரிஷிகளெல்லாம் தண்மையுடன்சமாதியுடப க்கல்வந்து, கோனானயெனதையர்அகஸ்தியர்தம்மை கொற்றவனார்கு ருபதத்தைதாம்நினைந்து,தேனானசித்தர்முனிவருவதற்கோ தேசமெ ல்லாங்கண்டுமனங்களிப்பதெப்போ, பானானசமாதியதுபாரைதானும் பாருலகில்வெடிப்பதெப்போவென்றிட்டாரே. ௨௨௯

இட்டதொருகாலமதுசென்றபின்பு யெழிலானசித்துவரும்நாளு மாச்சு, சட்டமுடன்மலைகளெல்லாந்தங்கமாச்சு சார்பானபாறையின் மேல்எழுத்துண்டாச்சு, குஷ்டமுடன்நோயுள்ளபிணியோரெல்லாங் குறைநோயுந்தீர்ந்துமல்லோகுசலமானார், திட்டமுடன்சீஷவர்க்கமா னோரெல்லாஞ் சிறப்புடனேசமாதியிடம்யிருந்தார்பாரே. ௨௩௦

தேரையர் சமாதிவிட்டு வந்தது.

இருந்தாரேதசமாண்டுபத்துமாச்சு யெழிலானசித்துவருங்கால மாச்சு,பொருந்தவேசமாதியதுவெடித்துமல்லோ பொங்கமுடன்தே ரையசித்துதாமும், அருந்தவமுந்தான்தீர்ந்துவவளிமேலே வன்புட னேவெளியானார்சித்தர்தாமும், வருந்தியேசீஷரென்ற மாண்பரெல் லாம் வண்மையுடனவர்பாதம்தொழுதிட்டாரே. ௨௩௧

தொழுதாரேதேரையசித்துதம்மை தொல்லுலகைவிட்டதொரு மாண்பரெல்லாம், பழுதபடத்திருமேனிக்காயந்தன்னை பண்புடனே தான்களித்துவஞ்சலித்து,அழுதுமேயவர்பாதம்பின்வணங்கி ஐயனே

நாதாந்தசித்துருவே, வழுவாதுபொய்யுரையாக் காவலோனே வணங்கியேகடலஸ்கரித்துப்பணிந்திட்டாரே. உகூஉ

பணிந்திட்டமாண்பரெல்லாம்முகம்மலர்ந்து பாமவொளிநாதாந்தசித்துருவே, கனிந்திட்டவசரீரிவாக்குபோலே கர்த்தனேவர்ப்புதங்கள்முடிந்ததாச்சு, அணிந்திடவேலாக்கதுவும்பொய்யொன்றில்லைதப்புறவாய்வையகத்தில்மெய்யேயாச்சு, தணிந்திடவேசிஷவர்க்கம் மனதுவந்து சட்டமுடனுசீர்மஞ்செய்வீர்தாமே. உகூங

தேறையர் மறுபடியுஞ் சமாதிக்குப்போய்
இருபதாண்டுபோனால் வருவேனென்று சீஷர்களுக்குவுரைப்பதும்
சொற்பனங்கூறுவதும்.

தாமானயின்னமொருமார்க்கங்கேளும் தகமையுள்ளசிஷவர்க்கமான்பேரே, கோமானமெனதையர் அகஸ்தியனார்தம்மை கொற்றவனார்தம்மைவிட்டியான்பிரிந்து, சாமானமுள்ளதொருஞானோபதேசம் சட்டமுடன்யானறிந்துபிரிந்துவிட்டேன், நாமானமாகவல்லோசமாதிகொண்டு நாயகனேபத்தாண்டியிருந்திட்டேனே. உகூச

இருந்தேனேபின்னும்வந்துயானுங்கண்டேன் யெழிலானசிஷவர்க்கமென்னசொல்வேன் பொருந்தலேசொற்பனமும் யானுங்கண்டேன் பொங்கமுடன்மறுபடியுஞ்சமாதிக்கேக, வருந்தியேபராபரத்தின்செயலினாலே, வண்மையுள்ளசொற்பனமும் மெய்யேயானும்திருந்தியேயான்கண்ட சொற்பனத்தால் திறமாகநடப்பதுவும்வுண்மையாமே. உகூரு

உண்மையாம்சொற்பனமும்கண்டேனப்பா ஓகோகோநாதாக்களுகந்தசீஷர், வண்மையாம்சமாதிக்குப்போனேப்போதும் வகுப்புடனேயிருபதுவாண்டிருப்பனென்றும், கண்மையாம்மனோன்மணியாள் கடாட்சத்தாலே கண்டேனேசொற்பனங்களுண்மையாக, திண்மையாஞ்சமாதிக்குப்போனற்போதும் திறமானவதிசயங்கள் பார்த்திட்டேனே. உகூசு

பார்த்தேனேசமாதிக்குச்செல்லும்போது பாங்கானவெகுகாலஞ்சென்றசித்து,நேர்த்தியுடன்பூமிதனிற்சமாதிபூண நேர்மையுடன்சீஷர்களுமொன்றாய்க்கூட்டி, பூர்த்தியுடன்குழிதோண்டபோனபோது புகழானசித்தொருவரிருந்தாப்போதும், பார்த்திடவேபிரகாசமானஜோதி மகத்தானசித்தொருவர்கண்டேன்தானே. உகூஎ

தானானசொற்பனங்கள்கண்டேனப்பா தண்மையுள்ளசிஷர்களேயென்னசொல்வேன், கோனானயெனதையர் அகஸ்தியர்போல் கொ



ற்றவனார்சித்தொருவர் கண்டேனங்கே, கோனமனோன் மணியாள் கடாட்சத்தாலே, தெளிவுடனே கண்விழித்துப் பார்க்கும்போது, மானான சொற்பனத்தில் கண்டாப்போல மன்னவனே கண்விழிக்கிலொன்றுங்காணே. உகூஅ

காணேனே சொற்பனத்தில் சித்துதாமும் கைலாசநாதருடசோதிப்போதான், ஆணவேநிலவதுதான் நினைவுநாச்சோ பொங்கமுன் சொற்பனமும் மெய்யோபொய்யோ, தோணவேயெந்தனுக்கு ஒன்றுங்காணே துரைராஜசுந்தரனே மகிமையேதோ, மாணவேமறுபடியுஞ்சித்துதாமும் மகத்தானசமாதிக்கு யேகினாரே. உகூகூ

தேறையர் சமாதிக்குயேகுதல்.

ஏகினார் சீஷவர்க்க மனேகம்பேர்கள் யெழிலான கூட்டமுடன்யேகியல்லோ, சாகமுடன்நற்மதாமலைக்குமேற்கே சட்டமுடன் சமாதிக்குச்சென்றுமல்லோ, வேகமுடன்சமாதிபது தோண்டும்போது மேன்மையுள்ள சித்தொருவரங்கிருந்தார், போகமுடன் சித்தொருவர் தன்னைக்கண்டார் வொளிபானபிரகாசந் தோன்றலாச்சே. ()

ஆச்சப்பாபுலிப்பாணியின்னங்கேளு வப்பனேதேறையர் சென்றபோது, மூச்சடங்கி வெகுகாலஞ்சென்றசித்து மூதுலகைக்கடந்தொருசித்துமாச்சு, மாச்சலுடன் பூமிதனி லோராள்மட்டம் மண்தனைவாரியல்லோ கண்டபோது, பாச்சலுடன்பூமிதனில் நிலைகளெல்லாம் பார்தாள்நீர்மட்டும் வுருகலாச்சே. உசக

உருகவேநீர்மட்டம்நிலங்களெல்லா மூருகத்தான் பாய்ந்துவேர்கள்போல, பெருகவேசடைமுடியுந் தம்பிரான்போல் பேரானசமாதிதனி லிருந்தார்தாமும், வருகமுடன் கண்மூடி சித்துதாமும் வண்மையுடன் சமாதிதனி லிருக்கக்கண்டார், சருகமுடன் ரிஷியாரும் பூமிதன்னில் சட்டமுடன் தானிருக்கக் கண்டார்பாரே. உசஉ

பாரேதான்தேறைய முனிவர்தாமும் பண்மையுடன் சமாதிதனிலிருந்துகொண்டு, தீரமுடன்தேரையமுனிவர்தம்மை திறமுடனேயாரென்றுகேட்கும்போது, சேரேதான் சித்துமுனி ரிஷியைப்பார்த்து சிறப்புடனே தாமுரைப்பார் முனிவர்தாமும், நேரேதான் அகஸ்தியனார்சிஷனென்றார் சேர்மையுடன் தேறையமுனிவர்தானே. உசங

தானானதேறைய முனிவர்தானும் தகமையுடன் ரிஷியார்க்குவிடையுஞ்சொன்னார், கோனானகும்பமுனி கடாட்சத்தாலே குவலயத்

தில் வெகுகோடிமகிமைதன்னை, தேனான மனோன்மணியா ளருளினாலே தேசமதி லதிசயங்கண்டேன் யானும், மோனநேரையமுனிவர்தானும் மோதவேயடிபணிந்து துதிந்திட்டாரே. ௨௪௪

துதித்தாரேதேரையர் முனிவர்தானும் துப்புறவாய் யடிவணங்கி தெண்டனிட்டு, கதிப்புடனே காயகற்பங் கொண்டுயானுங் காசினியில்வெகுகோடிகாலந்தானும், மகிப்புடனேசமாதிமுகஞ் சென்றுயானும் மகதேவர் தசவருஷமிருந்தேன்யானும், விகிப்பயனுமமைப் பின்படிபின்னு மல்லோ வேதாந்தத்தாயினது வருள்பெற்றேனே. ()

பெற்றேனேமறுபடியுஞ் சமாதியே பெருமையுடன் யிருபதுவாண்டுமட்டும், கற்பறிந்தேன் ஞானோபதேசங்கேட்டு காசினியிலாசையற்றுசமாதிபூண, சிற்றறிவுவுடையதொரு பாலன்யானும் சீராகசமாதிக்குபாத்திரனுவாய், குற்றமில்லாவரைகடந்து யடியேன்யானும் குருபதத்தைநாடியல்லோவந்திட்டேனே. ௨௪௬

## தேரையரிஷியாருக்குவரலாறுகூறல்.

வந்தேனேசிஷவர்க்கந் தன்னோடொக்க வகையானகற்மதாமலையைத்தேடி, அந்தமுடன்சமாதிக்கு யிடமுங்கண்டார் வன்பான சிஷவர்க்கமானபேர்கள், சொந்தமதாய்க்குழிதோண்டுஞ் சமாதிதன்னை சுந்தரமே தாயிருக்கக்கண்டேன்யானும், முந்தவேயான்கண்ட சொற்பனம்போல் முடிந்ததே விட்டகுறையாய்க்கலாச்சே. ௨௪௭

ஆச்சென்றுதேரைய சித்துதாமும் வன்பாக ரிஷியார்க்குத்தாமுரைக்க, மூச்சடங்கி சிலகாலமெந்தன்பக்கல் முடியானவாண்டுவரு முடிவுமட்டும், வீச்சுடனேசமாதியது யிருக்கவென்று விருப்பமுடன் ரிஷியாரும் வாக்களித்தார், பாச்சலென்ற சுவாசமதுதானடக்கி பட்சமுடன் தானிருக்கவாக்கந்தாரே. ௨௪௮

வாமுடனே தான்கொடுத்து ரிஷியார்தாமும் வண்மையுடனே சீர்மஞ்சொன்னாரங்கே, சாமுடையவார்த்தையென்ற மொழிக்கித்தானும் தப்பாமல் சமாதிக்குட்சென்றாரங்கே, திறமுடைய தேரையர் சித்துதாமும் தீர்க்கமுடன் சிஷருக்கு வோதலுற்றார், குறமுடைய ரிஷியாருஞ் சிஷருக்குகூறுவார் அதிசயங்கள்மிகவாய்த்தானே.

தானேதான்சமாதியதுபூண்டபோது தகமையுள்ளவசரீரியாக்குண்டாகும், மானேதான்சீடவர்க்கம் மாண்பாகேளு மகிழ்ச்சியுடன் சமாதிதனிலிருக்கும்போது, தேனேதான்சிவயோகநிலையினின்று



தேற்றமுடன் மேதினியில்வருவதற்கு, மானேதான் வதிசயங்கள்மிக நடக்கும் மகத்தானசமாதியிடம்பக்கல்லில்லே. ௨௫௦

## தேரையர்சீடருக்கு சொற்பனஞ்சாதித்தல்.

கிற்கையிலேமனோன்மணியாள்கிருபையாலே நீடானவசரீரிகேட்கும்பாரு, அற்பமென்றுநினையாதேவன்பாகேளு லவனியிலேஞான் வருருங்காலந்தன்னில், சிற்பரன்போலுந்தனக்குசொற்பனங்கள் சீராகத்தானடக்கும்வருள்மைந்தாகேள், உற்பமுடன்சொற்பனத்தில்நான்வந்தாற்போல் வுத்தமனேவதிசயங்கள்நடக்குந்தானே. ௨௫௧

தானானலோகமதுயிருண்டுபோகும் தாக்கானகடலதுதான்பொங்கும்பாரு, மோனநாதாக்களிறந்தபேர்கள் மோனமென்றசமாதியதுவொளிக்கும்பாரு, தேனான மனோன்மணியாள்கடாட்சத்தாலே தெளிவாகக்கண்ணின்முன்நிற்பார்பாரு, பானனாயுகவதிசயங்கள் பட்சமுடன்தாமுறைப்பார்சித்தர்தாமே. ௨௫௨

சித்தானதேரையர்முனிவர்தானும் சிறப்புடனேகூறலுற்றாரிந்த வண்ணம், பத்தானரிஷியாருஞ்சமாதிவிட்டு பட்சமுடன்தானடக்கவழியுஞ்சொல்வார், முத்தானதேகமதையுலகிற்கான முனியானதேரையர்சமாதிதானும், புத்தானபாறையதுதான்வெடித்து புகழாகச் சமாதிவிட்டுவெளிவந்தாரே. ௨௫௩

ராஜாதிராஜன்போலும், பாசமுடன்பரம்பென்றதங்கக்காசு பலபல
வாக்கேசமதில்செய்யலாச்சு, மாசில்லாதங்கமதுதசமற்றுக மன்னவ
ராஞ்சினபதியமைந்திட்டாரே. ௫௦௨

அமைத்தாரேபலபலவாம்வர்ணமாகும் வப்பனேசினபதிமார்க்
கத்தோர்கள், சமைத்தாரேமதியாலேகாசுதன்னை சட்டமுடன்தான
மைத்தார்வினைகங்கோடி, இமையாமல்ரூபமதைத்தானமைத்து பெ
ழிலானராஜபதிமாண்பருக்கு, சுவைபோலுந்தங்கமென்றகாசுதன்னை
சூட்டினார்நாவில்லைசொல்லொண்ணாதே. ௫௦௩

ஜெபமுனிசமாதிக்குபோகல்.

ஒன்றானபின்னமொருமார்க்கஞ்சொல்லுவேன் ஓகோகோகாதா
க்கள்மருத்துவர்தான், என்றுநுபுலிப்பாணிமைந்தாகேளு பெரியலா
னகாலாங்கிசொன்னநீதி, தின்னமுடன்தேசமெல்லாஞ்சுற்றிப்பல்லோர
தேற்றமுடன்ஜெபமுனியைக்கண்டேன்யானும், வன்னமுடன்வெகு
காலமிருந்தசித்து மார்க்கமுடன்சமாதிதனைக்கண்டேன்பாரே. ()

காணவேபோகருஞ்சொல்லும்போது கருவானஜெபமுனியார்
சித்துவர்க்கம், பூணவேஜெபமுனியார்சித்துதாமும் புகழாகசிட்டவர்க்
கந்தனைபழைதது, தோணவேயெந்தனுக்குசமாதிகாணும் தபபுராவ
ப் பாதடையமனமுங்கொண்டேன், நீணவேகாசினியிலாசையற்றேன்
கிட்களமாய்சமாதிசெல்வேனென்றிட்டாரே. ௫௦௫

இட்டமேசெயமுனியார்சித்தர்மும்யெழிலானவடகோடிகா
ளகத்தில், திட்டமுடன்தென்பொதிகைச்சாரல்தன்யில் நிசமுடனே
சமாதிக்குயிடமுந்தேட, வட்டமுடன் சிஷவர்க்க மனதுவந்து மகத்
தானசமாதியது விடமுந்தேடி, அட்டமுடன்குழியதுவுந் தோண்டி
யேதான்அழகானசமாதியதுகட்டிட்டாரே. சசசு

கட்டவேசமாதியதுயென்னசொல்வேன் கைலாசசெயமுனியார்
சித்தர்தாமும், திட்டமுடன்சமாதிக்குச்செல்வேனென்று சிறப்புட
னேசீடவர்க்கந்தனையழைந்து, மட்டவிழ்கொள்மாண்பர்களேசீமா
னேகேள் மகத்தானசமாதிக்குசெல்லப்போறேன், இட்டமுடன்நீங்
களெல்லாமிட்டிருந்து வெளியானசமாதிதனைமுடிப்போடே. சசஎ

## செயமுனியார்சமாதியில் சென்றபோது அசரீரிவாக்கு.

போடென்றுசொல்லுகையில்சித்தர்தாமும் பொங்கமுடன்சீட
வர்க்கமிட்டிருந்து, கூடேதானுபவாசந்தானிருந்து கொற்றவனூர்
செயமுனியார்சித்துதாமும், வீடேதான்கற்பாறைமேலேமூடி விருப்
பமுடன்மண்ணதனை மேலேதாக்கி, சாடவேசமாதியதுபொதித்துமே
தான் சட்டமுடன்செய்யவென்றுமொழிசொன்னாரே. சசஅ

சொன்னாரேசெய்முனியார்சித்துதாமும் தோற்றமுடன்வசரீரி
கூறலாச்சு, மன்னுகேள்நான்வருகுங் காலந்தன்னில் மகத்தானவதி
சயங்கள்மிகநடக்கும், இவ்விலத்தில்குருட்டரெல்லாங் கண்திறப்பார்
யெழிலானஊமைபன்பேசுவான்பார், பன்னவேசப்பாணிநடப்பான்
பாரு பாருலகில்செவிட்டெனளிகேட்குந்தானே. சசகூ

தானானதேன்மாரிபொழியும்பாருதன்மையுள்ளபிராயங்களதி
கந்தானும், கோமானும்வேந்தர்களும்போரேசெய்வார் குவலயத்தில்
மாண்பரெல்லாம்போரில்மாள்வார், தேனானமேன்மணியாள்தேச
ம்மாறி திசைகெட்டுபறிகெட்டுதிரும்பிநிற்பார், பானனவுலகமெல்லா
மென்னைப்போற்றி பட்சமுடன்துதிசெய்வார்காண்பீர்தானே. சரு௦

காணவேயிருபதுவாண்டுமட்டும்காசினியையான்மறந்துசமாதி
நின்று, பூணவேநான்வருகுங்காலந்தன்னில் புகழானசீடவர்க்கமெல்
லாருந்தான், வேணவேசமாதிவிட்டுவருகும்போது விருப்பமுடனெ
ன்பக்கம்நின்றுமல்லோ,மாணவேசமாதியதுவெடிக்கும்போது மண்
டலத்தில்பாறையதுவெடிக்கும்பாரே. சருக

பாரேதான்சித்துவருங்காலந்தன்னில் பாருலகில்சீடவர்க்கமெல்
லாருந்தான்,கேரேதான்சமாதியதுவெடிக்குமுன்னே சேர்மையாக்தி



ருக்கூட்டமாண்பரோடும்,சீரேதான்சமாதியதுமுன்னேநின்று சிறப்
பானசித்துவருங்காலமென்று, நேரேதான்வெகுகோடிமாண்பராலே
தீர்க்கமுடன்சமாதியிடமிருந்தார்தாமே. சருஉ

இருந்தாரேகோடிவர்க்கசேனையோடு யெழிலானசமாதியதுமு
ன்னேநிற்க, பொருந்தவேசமாதியதுவெடித்துயல்லோ பொங்கமுட
ன்நாதாந்தசித்துதாமும், திருந்தவேகாயாதிகர்ப்பங்கொண்ட தேக
மதுஜெகஜோதிமின்னல்போல, வருந்தவேசித்துமகாரிஷியார்தாமும்
வையகத்தில்வந்தொருவன்மைபாரே. சருங

## செய்முனியார் இரண்டாவதுசமாதிக்கேகல்.

வண்மையாஞ்செயமுனியார்சித்துதாமும் வையகத்தைத்தான்
மறந்துவந்துயல்லோ,வுண்மையாய்த்தேகமதுயிருந்துமென்ன ஓகோ
சோகாதாக்கள்கோடிபேர்கள், திண்மையுடன்வையகத்தைமறந்தும
ல்லோ நிசமானசமாதிக்குச்சென்றார்தாமும்,பண்மையாய்நான்சிலது
காலந்தன்னில பட்சமுடன்சமாதிக்குப்போகன்றே. சருச

நன்மையுடன்சமாதிக்குப்பின்னுமோர் நாதாந்தசொரூபங்கே
மனதுவந்து,வன்மைசெறிபாக்கியமும்நாடுதானும் வளமானநன்னக
ரந்தான்மறந்து, துன்மையெனும்வையகத்தில்வாழ்க்கையற்று தூப்பு
ரவாய்சமாதிக்குபோறேனென்று, தன்மையாம்சித்துமுனிசொரூபா
னந்தர் சட்டமுடன்சமாதிக்கேயினாரே. சருரு

ஏகவேசெயமுனியார்சித்துதாமும்யெழிலானசமாதிக்குப்போ
கவென்று, சாகமுடன்திருப்பாலிகடலோரந்தான் சட்டமுடன்சமா
திக்குயேகவென்று,நாகமுடன்சீடவர்க்கக்கூட்டத்தோடுமலமுடனே
சமாதிக்குமுன்னதாக, பாகமுடன்செயமுனியார்சித்துதாமும் பட்ச
முடன்சிஷரொடுசென்றிட்டாரே. சருசு

சென்றாரேசெயமுனியார்சித்துதாமும் செழிப்பானசமாதியது
தோண்டவென்று, நின்றதொருசமாதியதுதோண்டியல்லோ திட்கமா
மாய்கல்லாலேஅறையுண்டாக்கி, வென்றிடவேகற்பாரைத்தானமை
த்து விருப்பமுடன்சீடவர்க்கமாண்பரோடு, கன்றுமல்செயமுனியார்
சித்துதாமுங் காசினியைத்தான்மறந்துபேசினாரே. சருஎ

ஏகவேசமாதிக்குச்செல்லவென்று யெழிலானசெயமுனியார்சி
த்துதாமும்,பாகமுடன்சமாதிதனிலிறங்கியல்லோபட்சமுடன்சீடரு
க்குக்கூறலுற்றார், வேகமுடன்கற்பாறைமூடிப்போட விருப்பமுடன்

சீடவர்க்கமுறைத்தபோது, தோகமுடன்சீடவர்க்க மெல்லாம்கூடி தோறுமல்பாறைதனைமூடிப்பாரே. சரு௮

மூடவேசெயமுனியார்சித்துதாமும் முனையானசமாதிதனிலிருந்துகொண்டு, நீடவேயசரீரவாக்குதானும் நிட்களமாய்த்தானுரைத் தார்சீடருக்கு, கூடவேமுப்பதுவாண்டுமட்டும் குறையாமல்பூமிதனி லிருந்துகொண்டு, ஆடவேவையகத்தையான்மறந்து அவனிதனில்வ ருவேனென்றுரைத்திட்டாரே. சருகூ

உரைத்துமேசிலகாலஞ்சென்றபின்பு ஓங்காரோசாதாக்கன்சித் தாதம்மால், நிரைப்புடனேமறுபடியும்வருவேனென்று திட்டமுடன் செயமுனியார்சொனவக்கு, நிரைப்புடனேமுப்பதுவாண்டுசெ ன்று நேர்மையுடன்சீடவர்க்கமவர்தநிற்க, மரைப்பில்லாசித்துமுனி நாதர்தாமும் மார்க்கமுடன்சமாதிவிட்டுவந்திட்டாரே. சசூ0

வந்தாரேசித்துமுனிரிஷியார்தாமும் மார்க்கமுடன்வையகத்தை க்காணவென்று, சொந்தமுடன்சமாதிவிட்டுவந்துமல்லோ தோற்றமு டன்சீடவர்க்கவாண்பதாச்சு,அந்தமுடனசீடாதிசீடரெல்லாம்வன் புடனேகுருதனையேவாழ்த்திவின்று, சிந்தனைகள்மிகத்தீர்ந்துகுருவி ன்பாதம் சிறப்புடனேமாண்பரெல்லாம்பணிந்திட்டாரே. சசூக

பணியவேசித்துமகாரிஷியார்தாமும் பாங்குடனேசீடவர்க்கர் தாமுரைப்பார், அணியுடனேவையகதநிறுசைதன்னை வன்புடனே யொழிப்பதுவுமெத்தநன்று, துணிவுடனேவையகத்தி லிருந்துமெ ன்ன துப்புரவாய்த்தேகமதைத்தொழித்தேனென்று,பணிவுடனேசமா திக்குப்போரேனென்று பண்பாகத்தாமுரைத்தார்சித்துநாமே. ()

சித்தானசெயமுனியார்ரிஷியார்தாமும் சிறப்புடனேவையகத் தைத்தானமறந்து, முத்தானசமாதிக்குப்போரேனப்பா மூதுலகில்ம றுபடியும்வருவதில்லை,பத்தாகசீடவர்க்கயானபேரே பாரைகொண்டு யெந்தனையும்மூடவேண்டும,சுத்தமுடன்சதாகாலம்பூசைவர்க்கம்சட ரொளியாந்தீபமதைவைக்கநன்றே. சசூ௨

நன்றானசமாதியிலேபூசைமார்க்கம் நாடோறும்டத்திவருங்கா லந்தன்னில், குன்றானகோவேந்தரென்னைத்தானுங் கொற்றவனார்செ யமுனியாரெங்கேயென்றால், மன்றானபரமகுருநாதர்தம்மின் பாதார விந்தமதுயடைந்தாரென்றும், வென்றிடவேயத்திசயங்கள் மிகவுரை த்து மேதினியிலாசையதையொழிப்பீர்தானே. சசூ௩



## போகர் செயமுனியார் வரலாறுகூறல்.

வானானபுலிப்பாணி மைந்தாகேளு தகமையுள்ள செயமுனியா ர்சித்துதாமும், பானானவையகத்திறுசையற்று பரமகுருநாதரது பாதஞ்சேர்ந்தார்,தேனான யெனதையர்காலாங்கிநாதர் தேற்றமுட னெந்தனுக்குசொன்னநீதி, கோனானகுருபரனார் செயமுனியார்தா மும் குவலயத்திறுசைதனை மறந்தார்பாரே. சசூரு

மறந்தாரே செயமுனியார்சித்துதாமும் மகத்தான வையகத்தி றுசையெல்லாம், துறந்தாரேபதினாறு பிரமாவைத்தான் துப்புரவா ய்புகங்கடந்துசித்துதாமும், திறமுடனே சகலகலையறிந்துமென்ன திக்கெங்குமொரு குடையிலாண்டுமென்ன, அறமதுவும் வழுவாமல் செய்துமென்ன அவனிதனில்செயமுனியும் மன்னறானே. சசூசூ

மன்னானப்போனாரே சித்துதாமும் மகத்தான வையகத்திறு சையற்று,கண்ணபிரான்முதலானோர் மன்னில்மாண்டார் காசினியி லாரிருந்தார்வுலகுதன்னில்,வண்ணமுடன் சித்துமுனிரிடியார்தாமும் வளமுடனே யிப்படியே மாண்டாரல்லோ, என்னமது கொண்டல் லோ வுலகுதன்னில் யெழிலானவாசையது வொழிந்திட்டாரே. ()

ஒழிந்தாரே யிப்படியோவனேகஞ்சித்து வொப்புரவே கலியுக த்திறுசையெல்லாம், வழிப்படவே யொழிந்தவர்கள் கோடாகோடி வைகுண்டபதவிதனை யடைந்தார்கோடி, பழிதனக்குயிடங்கொடா வண்ணமாக பாருலகில் சடமொழிந்தார் சித்துதாமும், அழியாத சடலமது வழிந்துபோச்சு வப்பமனயுலகமதில்லானறுகாணே. ()

காணவேயிப்பெரிய சித்துதம்மை காசினியில்சித்தர்முனியென் னலாகும், தோணவே தவங்கிடந்தரிஷியார்தம்மை தொல்லுலகில் தெய்வமென்று செப்பலாமோ, வேணபடி வையகத்துமாண்ப ரெல் லாம் விருப்பமுடனிப்படியேமாய்ந்தாரல்லோ, காணவேசித்தர்களி னவர்க்கமெல்லாம் நானிலத்திலிப்படியே பொய்வாழ்வாச்சே. சசூகூ

ஆச்சப்பாபுலிப் பாணிமைந்தாகேளு ஆரிருந்தார் வுலகுதன்னி ல் பொய்யேவாழ்வு, மாச்சலுடன சமாதகருச்செல்வேனென்று மா னிலத்தில்தவமழிந்து கெட்டார்கோடி, மூச்சடங்கி வாசியோகஞ் செய்தபேரும் மூதுலகிலிருந்தாரோ லக்கமாயில்லை, ஏச்சானவுலக மெலாமிப்படியேயாச்சு யெழிலானமாயசித்தி கிரியைதானே. சஎ0

## அசுவனிதேவர் சமாதிகண்டது.

தானானபுலிப்பாணிமைந்தாகேளு தண்மையுள்ள சினபதிவிட்டு யாதும், கோனானயெனதையர் காலாங்கிநாதர் குருசொன்னவர்க்கி

னது பிரகாரந்தான், தேனைகுளிகைபது பூண்டிபாறும் தேசமெ
லாஞ்சுத்தியல்லோ வருதும்போது, மானவடகோடி கானகத்தில்
மார்க்கமுடன்மலைபொன்று கண்டேன்பாரே. ௪௭௧

பாரேதான்வடகோடிகானகத்தில் பாங்கானதிருப்பாலின் கட
லின்பக்கல், சீரேதான்மலையொன்று குன்றொன்றுண்டு சிறப்பா
லை சுவனிபாம்பருவமப்பா, நேரேதான்மலைகாக்கேடினையத்தில் நேர்
மையுடன்குளிகையது கொண்டுமல்லோ, னேரேதான்குடிகளில்லா
மலைகள்நாடு வுத்தமனேயாறுமது யிறங்கினேனே. ௪௭௨

இறங்கியேமலைவளத்தைச் சுற்றுங்கண்டேன் பெருமலானமலை
சுத்திகாறுறண்டு,சிறயவேறுரிஷிமுனிவார்கேயுண்டு நேர்மையுடன்
பச்சைவன்னமாண்பாப்பர், திறமுடையசிஷவர்க்கஞ் சொல்லொ
ண்ணாது திர்க்கமுடன்வெகுபேரைக் கண்டேன்யாறும்,உறமானமா
ணுக்கரோடிவந்து வுத்தமனேயெந்தனையுங் கண்டிட்டாரே. ௪௭௩

கண்டாரேசிஷவர்க்கமோடிவந்து கரேமுடனெந்தனையு மாரெ
ன்றார்கள், விண்டதொருசீடவர்க்கந் தன்னைப்பார்த்து விடங்கிமெ
ய்நடுங்கி யடியேன்றாறும், தொண்டனைப்போலடிபணிந்து முடிகள்
சாய்த்து, தொழுதிறங்கிமிகப்பணிந்து ஐயாவென்றேன் அண்டர்
முதல்தான்போற்றுங் காலாங்கிநாதர் அவருடைய சிஷனென்று
வுரைத்திட்டேனே. ௪௭௪

அறைந்தேனேகாலாங்கிசிஷனென்றேன் அங்கனேவார்த்தை
யது வுரைத்தபோது, குறைபேசிவந்ததொரு சிஷவர்க்கம் குறிப்
புடனேயெந்தனையும் பார்த்தபோது, முறைபேசிகதைபேசி வுறவு
பேசி முதலில்சித்துமகாரிஷிதினைது, திறமையுடனஞ்சலிகள் மிக
வுஞ்செய்து தீர்க்கமுடன் ஆசிர்மஞ்செய்திட்டாரே. ௪௭௫

செய்தாரேயெந்தனுக்கு யிவிவுசொல்லி சிறப்புடனேவசுவனியா
ர்தேவருக்கு, பையவேகாலாங்கிசிஷர்தாமும் பாருலகைக்காண்ப
தற்கு பூபாலன்றான், துய்யவேகுளிகைகொண்டினம்விட்டு துப்புர
வேகமறாடையவாசிர்மந்தான்,வெய்யவேகாண்பதற்குவந்தாரென்று
விருப்பமுடன்வசுவனிக்கு வுரைத்திட்டாரே. ௪௭௬

## அசுவனிக்கு சிஷர்களுரைத்தது.

இட்டாரேயெந்தனையுஞ் சிஷவர்க்கம் பெருமலானவசுவனியார்
தேவருக்கு,சட்டமுடன்தாமுரைத்தாரென்னைப்பற்றிதன்மையுள்ள



வசிவனியார்தேவர்தாறும், வட்டமுடன்யெனையழைத்து யாரென்
றார்பார் வளமையுடன்காலாங்கிசீடனென்றேன், சட்டமதுவாராமல
டியேனுக்கு கைலாகுசெய்துமல்லோவனைத்திட்டாரே. ௪௭௭

அணைத்தாரேகாலாங்கிசீடனப்பா அவனியெலாங்குளிகைகொ
ண்டேபறந்தசித்தர். கணப்பொழுதுபூமிதனில்தங்காசித்து கைலாசம்
பறக்குகின்றகடிகைபாலா, சணப்பொழுதுபூமிதனில்நிற்காவேந்தர்
சாங்கமுடன்காலாங்கிக்குகந்தசீடர், வணக்கமுடனிணக்கமதுகொ
ண்டசித்தர் வண்மையுள்ளபாலகனேவாவென்றாரே. ௪௭௮

என்றுமேவசுவனியார்தேவர்தாறும் வெருமலானயெந்தனையுங்
கொண்டணைத்து, குன்றானமகமேரேகோனேகேளும் குவலயத்தில்
சித்தர்களுக்குகந்தசீடா, வென்றிடவேநாற்றிசையும்போற்றும்பாலா
வேதாந்தத்தாய்தமக்குவுகந்தபாலா, தென்றிசையிலகத்தியரும்மெச்
சும்நாதா தெளிவானகண்மணியேயென்றிட்டாரே. ௪௭௯

கண்ணான கண்மணியேபோகநாதா கைலாசரிஷிகள்முதல்மெச்சு
ம்பாலா, விண்ணுலகில்நவகோடிரிஷிகள்தம்மில் விருப்பமுடன்தேர்ந்
தெடுத்தகிரேதபாலா, தண்ணான சடர்மணியேருட்சாருட்சம்நார
ணியில்சற்றறிந்தலோகநாதாவன்னமுடன்மேதினியில்சேர்த்திபெற்ற
வைராக்கியபோகரென்றுமகிழ்ந்திட்டாரே. ௪௮௰

மகிழ்ந்தாரேயெந்தனையுந்தேவர்தாமும் மார்க்கமுடனெந்தன்மே
ல்பட்சம்வைத்து,காகிந்தாரோகாலாங்கிநாதர் தம்மை துப்புரவாயுஞ்
சலிகள்மிகவுஞ்செய்து, கதிப்பானசிவபதிவிட்டுநேரும் கண்மணியே
யென்வந்தீராசிர்மந்தந்தான், விதிப்புணர்குயிருந்துமல்லோவந்தீரோ
தான் விருப்பமுடன்விதியகலவந்திட்டீரோ. ௪௮௧

வந்ததொருவரலாற்றைக்கூறுமென்றுவண்மையுடன்தாமுரைத்
தார்தேவர்தாமும், சிந்தையாய்ச்செழ்ந்துநைசிலடியேன்றாறும் சிற
ப்புடனேவசுவனியார்தேவருக்கு, செங்கமுடன்தங்களதுவாசிர்மந்
தான் துப்புறவாய்க்காண்பதற்குவந்ததென்று, இந்தமுடனடியேனு
ம்பணிந்துமல்லோ வன்பாகவணங்கிட்டேன்பாதந்தானே. ௪௮௨

பாதத்தையான்வணங்கிபாமநாதா பாருலகில்குளிகைகொண்டு
வந்தேன்யாறும், நீதமுடன்தங்களது வாசிர்மத்தில் நிலையானவசு
வத்தின் மார்க்கந்தன்னை, நேசமுடன்காண்பதற்கு வந்தேன்யா
றும்நேராமுடன்பறக்குகின்றவசுவந்தன்னை, நீதமுடனடியேனுங்
காணவென்று நீதியுடன்தம்பதிக்குவருகலாச்சே. ௪௮௩

போகர் அசுவனிதேவரை ஆகாயபுரவிகேட்டது.

ஆச்சென்றுசொல்லுகைபி லடியேன்றானும் வன்புடனேமனது வந்த தேவர்தானும், பாச்சலுடன்தன்பதியி· லழைத்துக்கொண்டு பாங்கானகுன்னருகின் ;மேலேசென்று, வீச்சுடனேபறக்குகின்ற யசுவந்தன்னை விருப்பமுடனெந்தனுக்கு காண்பித்தார்பார், மூச்சட ங்கிக்குளிகைதனை கையிலேந்தி மூர்க்கமுடன்புரவியின்மே லேறி னேனே. சஅச

போகர்தன்குளிகையை கையில் மறைத்துக்கொண்டு ஆகாயபுரவியின் வேகஞ்சோதிப்பது.

ஏறினேன்கானகந்தைச்சென் றுயானும் பெழிலானசெம்புரவி யோண்டுமெல்லோ, தாறினேனாகாயமார்க்கமாக துப்புரவாய்வைய கங்களெல்லாஞ்சுத்தி, மாறிடவேயசுவனியா யாசீர்மந்தான் மகத் தானவல்சாரியிடசாரியாக, கூறியகோர்மொழிபடியே யடியேன்று னுங் கொடுவந்துசெம்புரவி நிறுத்தினேனே. சஅரு

நிறுத்தினேனாகாயபுரவிதன்னை நீதியுள்ளவசுவனியாந்தேவர்தா னும், கறுப்புடையசெம்புரவி போகநாதா கருவானகுளிகைக்குகரி யுமச்சோ, அறுப்புநிகர்பலங்குறைந்து தோர்க்கலாச்சே துப்புர வாய்க்குளிகையது மேலதாச்சோ, பொறுப்புடனே பொன்னுலகப் புரவியேலோ புகழானசீனபதி மார்க்கத்தோனே. சஅசு

மார்க்கமுடனசுவனியாந் தேவர்தானும் மகத்தானகுளிகைக்கு வாசீர்மந்தான், தீர்க்கமுடன்தானுரைத்தார் தேவர்தானும் தீரமுட னெந்தனது குளிகைக்கல்லோ, ஏர்க்கவேமெச்சிடவே ரிஷிபார்தா மும் பெழிலாகவெந்தனுக்கு வசுவந்தன்னை, பார்க்கவே சீனபதிக் கொண்டுபோக பரமகுருவசுவனியாம் விடைதந்தாரே. சஅஎ

விடையானதேவரது மொழியுங்கேட்டேன் வீரானபுரவியது மகிமைகண்டேன், நடையுடனேசுசம்புரவி பறக்கும்வேகம் நாதாக்க ளொருவருந்தான்கண்டதில்லை, தடையன்றிசெய்புரவி யடியேன்று னும்தன்மையுடன்பேசுவது மகிமைகண்டேன்,படைமுகமாம் புரவி யதுசெல்லும்வேகம் பாருலகில்சித்தர்களுங்காணார்தாமே. சஅஅ

காணாரோநாதாந்தசித்ததாமும் காசினியில்வெகுகோடி கண் டேன்யானும், தோணுதமகிமையெல்லாம்யானுங்கண்டு அப்புரவாய் வுலகுபதிசுத்திவந்தேன், நீணவேயசுவனியாந் தேவர்தம்மால் கிட் களமாய்வினைதவகை,யானுங்கண்டேன், பூணவேயிதிகாசவித்தை யெல்லாம் புகழாகவையகத்தில் கண்டிட்டேனே. சஅகூ



கண்டேனேபுலிப்பாணி மைந்தாகேளு காசினியிலசுவனியாமகி மைவித்தை, விண்டிடவே சீனபதிதேசத்தார்க்குவிருப்பமுட னுரை ப்பதற்குயானுஞ்சொல்வேன் சண்டமாருதம்போன்ற புரவிதன்னைசு ட்டமுடன் சைனத்தார்காணவென்று, கொண்டுமேயான் போறேனை ப்பாகேளு குவலயத்திலாச்சரிய மகிமைதானே. சகூ0

போகர் ஆகாயபுரவியின்மேல் சைனதேசப்போகிறது.

தானனைகாலங்கி சொன்னநீதி தப்பாமல் புலிப்பாணி மைந்தா கேளு, கோனனைபெனதையர் கடாந்தாலே கொற்றவனே ஆகாயபுர விகொண்டு, மானனைலோகமெல்லாஞ் சுத்தியேதான் மகத்தான செம் புரவி கடிவாளேந்தி, தேனனைசைனபதி தேசமல்லோ சிறப்புடனே யான்போறே னென்றிட்டாரே. சகூக

இட்டாரே புலிப்பாணி மைந்தருக்கு பெழிலான வார்த்தையது மிகவுங்கூறி, சட்டமுடன் செம்புரவிமேலேயேறி தாரணியெல்லாஞ் சுத்தி மகிமைபூண்டு, திட்டமுடன்சைனபதி தேசந்தன்னில் சிறப் புடனே செம்புரவியிறக்கினேன்யான், மட்டவிழ் பூங்கோதையர்க ளெல்லாருந்தான் மார்க்கமுடனெந்தனையே சூழ்ந்திட்டாரே. சகூஉ

போகரை சைனதேசத்துப் பெண்கள் காணல்.

சூழ்ந்தாரேசைனபதி பெண்களோடு சுத்தமுள்ள மாண்பர்களு மொன்றாய்க்கூடி, தாழ்ந்தயொரு ஆகாயபுரவிதன்னை சட்டமுட னெல்லவருங் கண்டுஏங்கி, வாழ்ந்தோமே வையகத்தில் வெகுகாலந் தான் வளமையுள்ள வதிசயங்க ளனேகங்கண்டோம், வீழ்ந்தயொரு ஆகாயந்தனிலிறங்கி விடுபுரவி மகிமையது கூறப்போமோ. சகூங

கூறவென்றால்நாவில்லைப் பாவுமில்லை குவலயத்தில் பொற்புரவி புதுமையாவும், மாறலுடன் வெகுகோடி வித்தைதானும் மன்னவ னே போகமுனிநாதர்நீயும், ஆறலன்றிபெங்களுக்கு வதிதமார்க்கம் அப்புர வாய்வுபதேசஞ் செய்வீரல்லோ, தேறலதுவாராமல் நாங்களுந் தான் சிறப்புடனே வுபதேசம் பெற்றோக்காவோ. சகூச

காணவேயுபதேசம் மதிகங்கொண்டு கருத்துடனே சைனபதி வாழ்ந்திருந்தோம், பூணவேவெகுதேச வதிசயங்கள் புகழாகத்தா முறைப்பீரெங்களுக்காய், ஆணவமாமசுவமதின் மகிமைதன்னை வன் புடனே வையகத்தில் கண்டதில்லை, நீணவேவாகாய புரவிதானும் நேர்மையுடன் கண்டதொரு மகிமைபாரே. சகூரு

கண்டாரேசெம்புரவி தன்னைப்பார்த்து கைலாயநாதருடபுரவி
யென்று, அண்டர்முனிராட்சதர்கள் புரவிதானோ ஆண்டவனார்மவே
ஸ்வரனார்புரவிதானோ, கொண்டுமேதன் மனதிலெண்ணங்கொண்டு
குறிப்புடனேபுரவியது போலமைத்து, சண்டமாருதம்போல புரவி
தன்னை சாங்கமுடனெந்தனுக்குத் தந்தார்தாமே. ௫௦௯

தந்தாரேசெம்புரவிக் குயிருந்தந்து தகமையுள்ள சீனபதிமாண்
பர்தாமும், அந்தமுடன் செம்புரவியமைத்துமேதான் அன்பாகத்தா
ன் கொடுத்தாரெங்களுக்கு, சொந்தமுடனசுவனியாந் தேவருக்குத்
தோறாமல்செம்புரவி கொண்டுசென்றேன், சிந்தனைகள்மிகத் தீர்ந்து
செப்பலுற்றேன்திறமான அசுபனியாந்தேவருக்கே. ௫௧௦

## சைனதேசத்துப் புரவியைக்கண்டு அசுவனிதேவர் ஆச்சரியப் படுதல்.

தேவராம்ரிஷி முனிவர்நாதர்தாமும் தேற்றமுடன் செம்புரவி
தன்னைப்பார்த்து, யாவலுடன் சீனபதிமார்க்கத்தோர்கள் வன்பாகச்
செய்து வைத்தபுரவிதன்னை, மேவவேகுளிகையது வேகந்தன்னை வி
ருப்பமுடன்கண்டல்லோ மிகக்களித்து, தாவலுடன்புரவிக்கு வுப
தேசங்கள் சட்டமுடன்தான்கொடுத்தார் ரிடியார்தானே. ௫௧௧

தானானபுரவிக்கு மகிமைசொன்னார் தன்மையுள்ள வசுவனியார்
தேவர்தாமும், கோனானவுபதேசம் யென்னவென்றால் கொற்றவனார்
போகரிடிவுத்தாரந்தான், தேனானசெம்புரவி கேட்பதற்கு செப்பி
னார் தேவரிடிமுனிவர்தானும், பானானவுலகமெலாம்சுத்தும் போது
பண்பாகநில்லென்றால் நிற்கவேண்டும். ௫௧௨

வேண்டுமே போவென்றால் போகவேண்டும் விருப்பமுடன்விடு
திதனில்நிற்கவென்றால், தூண்டுமிககருமானபஞ்சதானும் தொட்டம்
வுடனசைவற்றுநிற்கவேண்டும், தாண்டியேசெல்லாமல் போகர்வாக்
குதட்டாமல் மகிமை தன்னையறியவேண்டும் யாண்டுடனேவெகுகால
மிருக்கவென்று வன்புடனே வரமதுவுங்கொடுத்தார்பாரே. ௫௧௩

## போகர் சிக்கிந்தாமலையின் ரிடியைக்கண்டது.

பாரேதான்புலிப்பாணி மைந்தாகேளு பண்புடனே யுந்தமக்குச்
சொல்வேன்யானும், நேரேதான்தெற்குமுகந் தன்னிலப்பா நேரான
சிக்கிந்தாமலைதானுண்டு. கூரேதான்மலைதனிலே வதிசயங்கள் குறிப்



பானவடிவேர்கோயிலுண்டு, யாரேதான்வைகையென்ற நதியுமுண்டு
வனமானசுனையுண்டுகாணுமுண்டே. ௫௧௪

உண்டான மலைதனிலேசித்தரப்பா ஓகோகோநாதாக்கள்கோடி
யுண்டு, கண்டாலும்விடுவார்கள் முனிவர்தானும் காசினியில்மாண்பர்
கட்கு கண்ணிற்கிட்ட, பண்டுடனே கிழக்குமுகல் சரிகையாவும்
பாலமூர்தங் கொண்டல்லோ யிருப்பார்தாமும், பெண்டானமாய்கை
யது அறியாரப்பா பேரானசித்தர்முனி கூட்டந்தானே. ௫௧௫

கூட்டமாமலைதனிலே குளிகைகொண்டு கொப்பெனவே மலைமீ
திலிறங்கினேன்யான், நீட்டமுடன் மலைதனிலேயிருந்தசித்து நேர்
மையுடனெந்தனது புரவிகண்டார், தாட்டிகமாய்ப்புரவியிடங் கிட்டி
நின்று சாங்கமுடனெந்தனை யுங்கண்டிட்டார்கள், வாட்டமுடன் சிறு
பாலாபுரவியென்ன வந்தவகையாரெனக்குச் சொல்லென்றாரே. ()

## சிக்கிந்தாமலை சித்தரிடம் செம்புரவிபேசுவது.

சொல்லென்று கேட்கையிலேசித்துதாமும் தோறாமல்புரவியது
மகிமையோடு, வெல்லவேசித்துமுனிநாதருக்கு வெழிலான யெந்த
னது புரவிதானும், நல்லதொருவார்த்தையது மிகவுங்கூறி நன்மை
யுடன் தானுரைக்கும் புரவிதானும், புல்லவேகாலாங்கி சீஷர்தம்மின்
புகழான போகரிடி யென்னலாச்சே. ௫௧௭

என்னவே புரவியதுமகிமைதன்னால் யெழிலான வார்த்தையது
மிகவேகூறி, பன்னவே அசுவனியாந் தேவர்தானும் பாங்கானபோக
ரிடிநாதருக்கு, சொன்னமென்ற புரவியது தான்கொடுத்தார் துப்புர
வாய்சைனபதி கொண்டுசென்றா, அன்னமதுதன்போலே வாய்
திறந்து அழகான வார்த்தையது கூறலாச்சே. ௫௧௮

கூறவேசைனபதி மாண்பரெல்லாம் குறிப்பானபுரவியது மகி
மைகண்டு, மாறவேபஞ்சலோகந் தன்னிலேதான் மகத்தான புரவி
யது வுண்டுசெய்து, ஆறலுடன் பஞ்சபூதங்களைத்தான் வன்பாகத்
தான் கொடுத்துயென்னைத்தானும், வீறலுடன்போகரிடி நாதருக்கு
விருப்பமுடன் தான்கொடுத்துவனுப்பினாரே. ௫௧௯

அனுப்பவே செம்புரவியடியேன்றன்னை அழகானபோகரிடி மு
னிவர்தானும், மனுவுடனேயெந்தனையும் வசமதாக்கி மகிழ்ச்சியுடன்
குளிகையதுதானும்பூண்டு, தனூர்வுடனே ஆசீர்மங்கொண்டுமல்லோ
தகைமையுள்ள சிக்கிந்தாமலையைத்தேடி, கனவுடனேவந்தாரே போ
நாதர்கைலங்கிரி நாதரைத்தான் காணத்தானே. ௫௨௦

தானென்புரவியது கூறும்போது தன்மையுள்ள திருவேலதேவர் தானும், தேனென்செம்புரவி தன்தனக்கு தேற்றமுடன் ஞானோபதேசஞ்சொல்லி, பானுகாலாங்கிநாதர்தம்மின் பான்மையுள்ள சீஷனென்றுமனதுவந்து, தேனுனமருத்துவ மாங்கிரியைதன்னை தேற்றமுடனுபதேசஞ் செய்தார்பாரே. ௫௨௧

பாரேதான் செம்புரவியுபதேசத்தை பாங்குடனேகொண்டபின்புயடியேனுக்கு, நேரேதான் திருவேலரிடியாசிரமம் நேர்மையுடன் சீஷவர்க்கங்கொண்டுசென்று, தீரேதான்திருவேலரிடி யார்முன்னே தீர்க்கமுடன்யெந்தனையுங் கொண்டுசெல்ல, வேரேதான் சிக்கிந்தாமலைநாட்டுள்ளே விடுதிதனில்புரவிவிட்டு யிறங்கினேனே ௫௨௨

போகர் சிக்கிந்தாமலையில் திருவேலரிடியாரைக்கண்டது.

இறங்கினேன் சிக்கிந்தாமலைநாடுள்ளே யெழிலான சீஷவர்க்கந்தன்னைக்கண்டேன், சுறங்கமென்ற குகைதனிலே சீஷர்தாமும் குட்சமுடனென்தனையுங் கொண்டுசென்றார், மறங்களுடன் மலைதனிலேகோட்டையுண்டு மகத்தான கோட்டைக்குவாசல்நான்கு திறமுடையவாசல்வழி யென்னைத்தானும் திசமுடனேகொண்டு சென்றார் சீஷர்தானே, ௫௨௩

தானவே கோட்டைவழிதன்னிற்சென்று கருவாகமுன் வாசல் நிற்கும்போது, தோணவேதாளதுதான் திறந்ததங்கேதுப்புரவாய்லிங்கமென்ற சமாதிகண்டேன், பூணவேரெண்டாங்கால்வாசல் சென்று புகழாக யென்தனையுங்கொண்டுசென்றார், காணவே சோதிலிங்கஞ் சமாதிகண்டேன் நாதாந்தசித்தொருவர் கண்டேன்பாரே. ௫௨௪

பார்த்தேனே நாதாந்தசித்துதாமும் பாங்கானமூன்றாங்கால் வாசல்செனறேன், தீர்த்தமுடன் சிவலிங்கந்தன்னைக் கண்டேன் தீர்க்கமுள்ளசித்தொருவராங்கிருந்தார், ஆர்க்கவேநாலாங் கால்பதிதானப்பாவன்புடனே வாசல்வழிசென்றேன்யானும், நாற்கமலசமாதிதனில் வீற்றிருக்கும் நடராஜசுந்தரனைப் பார்த்திட்டேனே. ௫௨௫

இட்டேனே நான்குதிருகோட்டைவாசல் யெழிலானசித்துமுனிசமாதிகண்டேன், வாட்டமுடன்கோட்டையது வாசல்தாண்டி வன்மையுள்ள திருவேலரிடியார்முன்னே, தட்டாமலென்தனையுஞ் சீஷவர்க்கம்சட்டமுடன் யெந்தனையுங்கொண்டுசென்றார், திட்டமுடன்திருவேலரிடியார்தாமும் தீர்க்கமுடனென்தனையுங் கண்டிட்டாரே.

கண்டாரே திருவேல ரிடியார்தாமும் கடினமுடன் சீஷ்வர்க்கந்தனையழைத்து, அண்டமதில்குளிகைகொண்டு சிறுபாலன்றான் ஆகாய



செம்புரவிவிட்டிறங்கி, சண்டமாருதம்போல மலைதானுள்ளே சட்டமுடன்வந்தவரை யாரென்றென்ன, தண்டமீறுள்ளதொரு சீஷவற்கம் துப்புரவாய்த் தனையழைத்துக் கேட்டார்தாமே. ௫௨௭

திருவேலரிஷி கேட்கையில் சீடர் போகரைக் கல்லாய் சமைத்தது.

கேட்கையிலே திருவேலரிஷியார்தாமும் கெவனமுடன் சீஷவர்வர்க்க மோடிவந்து, விட்கமுடன்போகரிஷி நாதர்தம்மைமிரட்டியே மிகபேசிவாதுகூறி, தாழ்க்கமலந் தனிலிருக்கும்வேலான தகமையுள்ள ரிஷியாருமுந்தன்மீது, ஆட்கமுடன்சினமதுவும் நேர்ந்துமல்லோ அப்பனேயுன்மீதிற் சீறினாரே. ௫௨௮

சீறவேசீடவர்க்கநாங்களுந்தான் சிறப்பானதிருவேல ரிஷியார்வாக்கு, மீறியேவந்தொருமொழியினாலே மிக்கவேயுந்தனையுஞ்சபிக்கவென்று, ஆறியதோர்கோபமதை தனையகற்றி வப்பனேயுன்முன்னே வந்தோம்நாங்கள், மாறியதோர்கல்லோடே யுனைசபிக்க மகத்தானதேவர்முனி விடைதந்தாரே. ௫௨௯

விடைதந்தாரெங்களது சித்துதாமும் வேதாந்தரிஷியாருமனதுவந்து, தடையதுவும்போமல் யாங்களுந்தான் சாங்கமுடன் கல்லாகச் சமைப்போமென்று, சடைபோன்றசித்துமுனி சீஷ்வர்க்கம்சதுரானபோகரிஷி நாதர்தம்மை, படைவீரரொன்றாகக் கூடியல்லோபாரினிலேகல்லாகச் சமைத்திட்டாரே. ௫௩௰

சமைத்துமேபோகரிஷி நாதர்தாமும் தகமையுள்ளசிக்கிந்தாமலைதானுள்ளே. அமைந்துமேகல்லாகச் சமைந்தாரப்பா அங்ஙனேவேமாண்பர்களுங்கண்டதில்லை. இமைந்ததொருபோகரிஷி நாதர்தம்மை யெழிலானநாதவொளிசித்துதாமும், சமைந்ததொருபோகரிஷி நாதர்தம்மை சட்டமுடன் சித்தொளிவு மெழுப்பினாரே. ௫௩௧

நாதவொளிசித்து போகரை எழுப்புதல்.

எழுப்பினார் நாதாந்தசித்துதாமும் யெழிலானபோகரிஷி நாதர்தம்மை, வழுக்கில்லாநாதாந்தசித்துதாமும் வளமாகபோகருக்குவாசேர்மித்து, அழுக்கறவே அவனிதனி வெந்தநாளு வப்பனேசிரஞ்சீவிபட்டந்தந்தேன், ஒழுக்கமுடனுமதுபதிபோகவென்று வுத்தமனார்சித்தொளியும் விடைதந்தாரே, ௫௩௨

தந்தாரேநாதாந்தசித்துதாமும் தன்மையுள்ளபோகரிஷி நாதர்தம்மால், அந்தமுடன்தானெழுப்பி வினயங்கேட்க அழகானபோக

ரிஷி முனியார்தாமும், சொந்தமுடன்காலாங்கி சீடனென்றேன் சுந்தரனேயெனைப்பார்த்து மிகக்களித்து, விந்தையுடனுபதேசங் கூறியல்லோ விண்ணுலகில்போகவென்று வரந்தந்தாரே. ௫௩௩

தந்தாரேநாதவொளிசித்துதாமும் தகைமையுடன்போகரிஷிநாதருந்தான், சுந்தரமாந்திருவேலரிஷியார்தம்மைச்சுத்தமுடன்யான்கண்டபோதுமல்லோ, விந்தையாயெந்தனையும் பார்த்துமல்லோ விட்டகுறையிருந்ததினால் யெழுந்திசேதான், அந்தமுடன்காலாங்கி கிருபையாலே அவனிதனில் மறுபடியும் பிறக்கலாச்சே. ௫௩௪

பிறந்துமேசனனமது வொழிந்துமேதான் பேரானபோகரிஷி நாதர்கேளும், இறந்தவர்களிவ்வுலகில் பிறந்ததுண்டோ வெழிலான மகிமையிது கூறொண்ணாது, திறமுடையசித்துமகாரிஷியார்தாமும் தீர்க்கமுடனெந்தனுக்கு வுபதேசங்கள், வுறமாகத்தான்கொடுத்து வாசீர்மித்து வுற்பனங்கள்மிகவுமல்லோ ஓதினாரே, ௫௩௫

ஓதவேயடியேனுந்தாள்பணிந்துவுத்தமனார்திருவேலரிஷியாருக்கு, நீதமுடன் கரங்குவித்து சிரம்பணிந்து நீட்சியுடன் வுத்தாரஞ்சொன்னேன்பாரு, போதமுடன்யெந்தனையுங் கண்டதாலே புகழாகயுந்தனுக்குக் கிருபைசெய்வேன், தோதமுடன் சிலகாலமெந்தன்பக்கல் தோற்றமுடன்னீரிருந்தா லருள்சொல்வேனே. ௫௩௬

சொல்வேனேலோகமதி சயங்களெல்லாம் சுருக்கமுட னுந்தனுக்கு வுபதேசிப்பேன், புல்லவேதிருவேல ரிஷியார்தாமும் புகன்றிட்டாரெந்தனுக்கு வாக்குமல்லோ, வெல்லவேதசவருடம் யானுமங்கே விருணசிக்கிந்தா மலைதானுள்ளே வல்லதொருசித்தருடன் கூடயானும் வளமாகவனந்தனிலே யிருந்தேன்பாரே. ௫௩௭

பாரேதான்புலிப்பாணி மைந்தாகேளு பாங்கானகாட்டகத்தே சித்தர்கூட, நேரேதான்யானுமது வாசம்பூண்டு நெடுங்காலமங்கிருந்தேன் காட்டகத்தே, சீரேதான்சீஷருடன் கொண்டுசென்று சிறப்பாகவிருக்கையிலே ரிஷியார்தாமும், பேரேதான்கூப்பிட்டு திருவேலர்தாமும் போனமகிமைதனைக் கூறினாரே. ௫௩௮

கூறினார்சிக்கிந்தாமலைதானுள்ளே கூறுனகதவுமுண்டு மலைதான்பக்கல், மாறிடவேரிஷியாருஞ் சமாதிபூண்டு மகத்தானசமாதியது சொல்லொண்ணாது, நீறியதோர்சற்கண்ணைக் கூடமப்பா நிலையான சமாதியிடஞ் சென்றாயானால், தேரிடவேசிக்கிந்தா ரிஷிதானப்பா செயலானசமாதிக்குள் ளிருப்பார்காணே. ௫௩௯



சிக்கிந்தரிஷிசமாதி.

காணவேநாலுயுகங்கண்டசித்து கருவானபிரளயத்தில் நிதந்தனித்து, பூணவேலோகமது முடிவுதன்னில் பொங்கமுடனுநிலையைக்கடந்தசிக்க, தோணவேவாதாமின் யோவான்தன்னைத் தோறுமல் கண்டறிந்தசித்துவாகும் நீணவேபிரளயங்கள்வந்த பின்பு நிலையாகி நின்றதொருசித்தர்தாமே. ௫௪௦

தாமானசித்துமகாசொரூபரப்பா தாரணியில்வெகுகாலங்கடந்தசித்து, கோமான்களிருந்த தில்லைகொடியசித்துகொற்றவனே போகரிஷிபதியமாட்டாய், பூமானுமூனலதயர்காலாங்கிநாதர் புகழுடனே கண்டறிந்தசித்துவாகும், நாமாகவறிந்தபடி சொன்னேனப்பா நாட்டிலேயாரேனுஞ்சொல்லார்தாமே. ௫௪௧

சொல்லாரே சிக்கிந்தா மலைதானுள்ளே சொரூபமென்றசித்து மகாரிஷியார்தாமும், வெல்லவேவெகுகாலமலையின்மேலேவேழ்க்கையுடன்தாமிருந்தார் ரிஷியார்தாமும், புல்லவேசமாதிக்குபோகவென்று புகழானசீஷவர்க்கந்தன்னோடொக்க, அல்லல்படுத்வையகத்தினைவிட்டு வன்புடனே தாமெழுந்தார் ரிஷியார்தாமே. ௫௪௨

தானானசிக்கிந்தாரிஷியார்தாமும் தகமையுடன் சீஷவர்க்கந் தன்னைநோக்கி, கோனானவென்னையர் திருவேலரிஷியார் கொற்றவனுருத்தாரப்படியேதானும், பானானசமாதிக்குச்செல்வேனென்றுபட்சமுடன் சீஷருக்குத்தானுரைத்து, தேனானசிக்கிந்தாமலைக்கு மேற்கேதீரமுடன்புறப்பட்டார்சித்துதாமே. ௫௪௩

சிக்கிந்தாரிஷிசீடருக்கு விசேடமுரைத்தல்.

சித்தானசிக்கிந்தாமலை தான்சித்து சிறப்பானசீடருக்குத்தாமுரைப்பார், முத்தானதிருவேலரிஷியார்வாக்குமூதல்லைக்கடந்ததொருரிஷியார்தாமும், எத்தனையோ வகைகோடிகாலமப்பா ஏற்றமுடன் வையகத்திலிருந்தார்தானும். பத்தியுடன்லோகமதிலிருந்துமேதான் பாருலகில்லாபமதைக்காணார்பாரே. ௫௪௪

காணாரேதிருவேல ரிஷியார்தாமுங் காசினியில்நாலு யுகமிருந்துமென்னதோணுதகாய, கற்பங்கொண்டுமென்னதுப்புரவாயாசைதனை விட்டொழித்தார் வேணவே யானவர்களுக்குத்தொண்டுசெய்து

வெகுகாலம் வையகத்திலிருந்தேன்யானும், பூணவேபார்தனிலே வா
சையற்றுபுகழானசமாதிக்குயேகினேனே. ௫௪௫

ஏகுவென்சமாதிக்குசீடவர்க்கம் யெழிலான சிக்கிந்தாமலைக்கு
மேற்கே, ஆகுடனேசமாதிபது தோண்டவென்று வன்புடனே சீஷ
ருக்குவிடைகொடுக்க, பாகுமொழிதவறாமல்சீஷவர்க்கம்பண்புடனே
சென்றார்கள் மலையோரத்தில், வேகுடனேசமாதியது கட்டவென்று
வெளிப்படுத்தான் தொடர்ந்தார்மான்பர்தானே. ௫௪௬

மாண்பானசீடர்களுஞ் சமாதிகட்டி மார்க்கமுடன் சிக்கிந்தா
ரிஷியாருக்கு ஆண்பான சமாதியது கட்டியல்லோ அழகானபாறைய
துமே வமைத்து, காண்பான ரிஷியார்க்கு முன்னேநின்று கர்த்தா
வே சிக்கிந்தாமலைதான்சித்தே, நீண்பானசமாதியதுமுடிந்ததென்று
நிஷ்டை விட்டுவருகவென்றுபணிந்திட்டாரே. ௫௪௭

பணிந்துமேமாண்பரெல்லாம் தொழுகும்போதுபட்சமுள்ளசி
க்கிந்தாரிஷியார்தாமும், துணிந்துமே சிக்கிந்தாமலையைவிட்டு துப்பு
ரவாய்வெகுஜனங்கள்பின்னடக்க அணியணியாய்மாண்பர்களுங்கூட்
டத்தோடு வன்பான ரிஷியாரும்முன்னடக்க, கனிவுடனேசிக்கிந்தா
மலைக்கு மேற்கே கர்த்தாவும்சமாதி பதிவந்திட்டாரே. ௫௪௮

வந்தவொருரிஷியாருஞ்சமாதிகண்டுவெள்ளையுடன்மாண்பர்களை
நோக்கல்கொண்டு, அந்தமுடனடியார்கள்தன்னைநோக்கிவன்புடனே
மனதுவந்துவார்த்தைசொல்வார், இந்தவொருவையகத்தினைவிட்
டேன்யெழிலானசமாதிக்குச்செல்வேனப்பா, சொந்தமுடன்பாறை
தனைமுடியல்லோசத்தமுடன் காத்திருங்களென்றிட்டாரே. ௫௪௯

என்றுமேநாதாந்தசித்துதாமும்யெழிலானசமாதிதனிலிறங்கும்
போது, குன்றானமகயேசே மாண்பர்கேள்குறிப்பானசமாதிதனிலி
றங்குறேன்யான், வென்றிடவேபாறைதனைமூடவென்று வெழ்க்கமு
டன்குறுவார்க்குகூறும்போது, அன்றுரைத்தமொழிபோலே மாண்ப
ரெல்லாம் வன்பாகப்பாறைதனைமூடிட்டாரே. ௫௫௦

சிக்கிந்தாரிஷிசமாதியில் அசரீரிவாக்கு.

மூடினார்சீடவர்க்கமாண்ப ரெல்லாமூதுலகைக் கடந்தவொருசி
த்துதாமும், நீடியேவருவதற்கு முன்னதாக நிட்களங்கமானவொரு
வாக்குதர்னும், கூடியேநரன் வருகுங்காலமப்பா கொற்றவனே அறு
பத்துவாண்டுமாகும், தேடியேநீங்களெல்லாஞ்சமாதிபக்கல் தேற்ற
முடன்காத்திருங்களென்றிட்டாரே. ௫௫௧



என்றுமேகான்வருகுங் காலந்தன்னில் யெழிலானசப்பாணி நட
ப்பான்பாரு குன்றின்மேல்மேயுகின்ற மிருகமெல்லாங் கொப்பென
வேவாய்ஞானம் மிகவேகூறும், வென்றிடவேகுருடனவன் கண்திறப்
பான்வேதாந்தம் ஊமையன் மிகவேசொல்வான், நன்றானபட்சியது
ஞானங்கூறும் நாதாந்தசித்துவருங் காலமாச்சே. ௫௫௨

ஆச்சப்பாபுலிபசுவுமொன்றுப்கூடி அடர்ந்தவொருபொய்கை
தனில் நீரையுண்ணும், பாச்சலுடன் நரியந்து கரியைவெலலும் பாங்
கானபரியதுவும் அரியைவெல்லும், பேச்சுடன்சந்திரனுங் கலை
கள்மாறி மிக்கானநிலைதனையே நிற்பான்பாரு, காச்சலுடன்கதிரோ
னுந்திசைகள்மாறி கண்ணுக்குத்தோற்றமல் நிற்பானபாரே. ௫௫௩

பாரேதான்காலாங்கிசொன்னநீதி பட்சமுடன்யிவ்வுலகில்மெய்
யதாச்சு, நேரேதான்பூவுலகிலப்பா கேளு நெடிதானபட்டமாங் குளு
த்துநிற்கும், சீரேதான்பிரளயங்க ளதிதங்காணும் சிறப்பானசித்த
ரெல்லாம் முன்னேநிற்பார், கூரானயிவ்வண்ணாவதிசயங்கள்குவலயத்
தில் நடக்குமென்று சொல்லிட்டாரே. ௫௫௪

சொல்லவேசிக்கிந்தாரிஷியார்தாமும் சுத்தமுடன்சித்துவருங்
காலமாச்சு, வெல்லவே அறுபத்துவாண்டுமாச்சு வேதாந்தசித்துவருங்
காலமாச்சு, புல்லவேசமாதியிடமாண்பரெல்லாம்புகழானசித்துமுனி
கூட்டத்தோடும், வல்லவொருநாதாந்தமுனிவர்தானும் வளமையுட
ன்சமாதிவிட்டு வருநாளாச்சே. ௫௫௫

சிக்கிந்தாரிஷிசமாதிவிட்டு வருவது

வருமென்றநாளாச்சுசித்துதாமும் வண்மையுடன்சீஷவர்க்கமுன்
னேநிற்க, பெருகவேசமாதியின்றன் பாறைதானும் போனநாள்வ
ருகுங் காலந்தன்னில், வருவுடையபாறையது வெடிக்கலாச்சு ஓகோ
கோ நாதாந்தசித்துதாமும், சொரூபமென்ற செகசோதிமின்னல்
போல சுந்தரனாசித்தொளிவும் வந்திட்டாரே. ௫௫௬

வந்திட்டார்நாதாந்தசித்துதாமும் வையகத்தின் பவக்கடலைத்
காணுதற்கு, சொந்தமுடனசீஷவர்க்க மெல்லோருந்தான் சோர்ண
மென்ற சித்தொளியைக் கண்டாரங்கே, அந்தமுடன் சித்தொளிவு
சொன்னவாக்கு அவனிதனில்மெய்யாச்சோ பொய்யுமாச்சோ, சுந்
தரம்போல்வாய்திறந்து ரிஷியார்தாமும் சூட்சமுடன் சுந்தரனைக்
கேட்டிட்டாரே. ௫௫௭

கேட்டாரேசிக்கிந்தாமலையின்வேந்தன் சீர்த்தியுடனிவ்வுலகிலிரு க்கிறீரோ, நீட்டமுடன்யாருனைத்தவாக்குவண்ணம் நீடாழியுலக மதிலுறதியாச்சே, நாட்டிகமாய்ச்சித்தமுனி வுரைக்கும்போது தன் மையுடன் சிஷவர்க்க மாண்பரெல்லாம், மாட்டிமையாய் கிறைவேறி ட்போச்சுதென்றுமகதேவரென்று சொல்லிவணங்கிட்டாரே. ௫௫௮

வணங்கியதோர்சீடருக்கு வுபதேசங்கள் வளமாகத்தாமுரைத் தார் ரிஷியார்தாமும், இணங்கியேசிக்கிந்தாமலையின்மேலே யெழிலா ன சிக்கிந்தா ரிஷியார்தாமும், யணக்கமுஞ்சமாதிவிட்டு முனிவர் தானும் மார்க்கமுடன்சமாதிவிட்டுவந்துநின்றார். சுணங்கமதுவாராம ல் ரிஷியாருக்குச் சுத்தமுடன் ரிஷியாருஞ் சூழ்ந்திட்டாரே. ௫௫௯

சூழ்ந்துமே அஞ்சலிகளாசிர்மங்கள் சுத்தாதிமாந்தர்முதல் வே ந்தர்யாவும், தாழ்ந்துமே சிறந்துனிந்து வனங்கனிந்து சட்டமுடன் ரிஷியாரைத்தோத்தரித்து, வீழ்ந்துமேபதாம்புயத்தைப்போற்றிநின் று வீறுனவுபதேசம் பெறுவதற்கு, ஆழ்ந்துமேபவக்கடலை விட்டகற் றியன்புடனேகாத்தருளுமெனறிட்டாரே. ௫௬௦

போகர்சிக்கிந்தாமலை ரிஷியாரைக்கண்டது.

இட்டாரேமாண்பரெல்லா மிகயங்கூர்ந்து யெழிலானமனதுவந் துநிற்கும்போது, சட்டமுடன்காலாங்கி சீஷர்தாமுஞ்சதுரான சீனப் திவிட்டுமல்லோ, அட்டதிக்குகாணுதற்குகுளிகைகொண்டு அவனியெ லாஞ்சுத்திவருங் காலந்தன்னில், பட்டயதுபகர்க்காலமுச்சிதன்னில் பாரினிலே சிக்கிந்தாரிஷிகண்டாரே. ௫௬௧

கண்டாரேபோகரிஷிநாதர்தாமுங் காசினியில் சிக்கிந்தாமலையை க்கண்டு, அண்டமுடன்தேவாதிதேவரெல்லாம் வன்புடனேதானிறங் கு மலையென்றெண்ணி, கொண்டர்களுஞ்சித்தர்முனியிருக்கும் நா டு துரைராச சிக்கிந்தாமலையளத்தை, சண்டமாருதம்போலே போகர் தாமுஞ்சட்டமுடன் கண்டுமல்லோவிறங்கினாரே. ௫௬௨

இறங்கியேபோகமுனி ரிஷியார்தாமும்யெழிலானசிக்கிந்தாமலையி னுச்சி, சுறங்கமென்றமேற்சுனையில்வந்துநின்றுதுரைராசர்வடிவேலர் சுனையைக்கண்டு, காக்தட்டி காசிவிசுவநாதர்தம்மைகருத்தினிலேதா னிநினைந்து கூப்பிட்டேன்தான், வறமுடனே மச்சமென்ற மீனைத்தா னும் வாகுடனே காந்தட்டி யழைத்திட்டாரே. ௫௬௩



தட்டியேபோகரிஷிநாதர்தாமும் தகமையுடன்வடிவேலர்சுனையி ல்நின்று, எட்டியேசுனைதனையேபார்த்து மல்லோயெழிலானகாசியெ ன்றவிசுவர்தம்மை, அட்டில்லாதனையழைக்க மச்சந்தானும் வன்புட னேபோகரிஷிசத்தங்கேட்க, கொட்டியெனுஞ்சுனைதனிலே மட்சக்கூ ட்டஞ்சுந்தாரைக்காண வல்லோவருகலாச்சே. ௫௬௪

ஆச்சப்பாமோகரிஷி முனியர்தானும் வன்புடனேமச்சமென்ற சுனையைத்தாண்டி, பாச்சலுடன்ரெண்டாங்கால் வரையிலப்பாபாங் கானபோகரிஷி முனிவர்தானும், பாச்சலுடன் செவன மென்றகுளி கைதன்னை மகத்தான போகரிஷிமுனியர்தானும், வீச்சுடனே குளி கைசென்றுபோகும்போது வீறான தடந்தனிலே தனைக்கண்டாரே.

சுந்திரமூர்த்தியார் எழுப்பியமதலையின்முதலை.

கண்டாரேரெண்டங்கால் சுனையிலப்பாகருவாகபோகரிஷி நாதர் தாமும், கண்டாரேபடுமுதலைசுனையிலப்பாகருவாகசுந்தரனார்மூர்த்தி தன்னால், கண்டாரேவந்ததொருமுதலையப்பாகனமுடனேமதலைதனை விழுங்கிவிட்ட, கண்டாரேமுதலைதனைப் பார்த்துமல்லோ கனத்த தொருவிசாரமது கொண்டிட்டாரே. ௫௬௬

கொண்டதொருபோகரிஷி நாதர்தம்மைகுன்றுனமலைதனிலேயி ருக்குஞ்சித்தர், கண்டுமேபோகரிஷி நாதர்பக்கல் கனமுடனேசித்தர் முனிகூட்டமெல்லாம், மண்டலத்தில்காணுதவதிசயங்கள்மகத்தான மலைமீதிற் கண்டோமென்று, விண்டுமேதங்கள் தங்கள்மனதிலெண் ணிவிருப்பமுடன் போகர் பக்கல்வந்திட்டாரே. ௫௬௭

வந்துமேபோகரிஷிபக்கல் நின்றுமகத்தான முனிக் கூட்டத்தே வர்கூட்டம், அந்தமுடனாயிரம்பேரோடிவந்து ஆங்காரகோபமதுசிகா ரமிஞ்சி, இந்ததொருமலைமீதில்வந்தபாலன் யெழிலானவரலாற்றைய றிவோமென்று, சிந்தனையாய்த்திரள்கூட்டம் படைகளோடுதீர்க்கமு டன்போகர்பக்கல்வந்தார்தானே. ௫௬௮

தானனபோகரிஷி நாதர்தம்மை தண்மையுள்ளசிறுபாலரயாரெ ன்றார்கள், கோனனகாலாங்கிநாதர்தம்மை கொற்றவனார்போகரிஷி கனைத்துமல்லோ, பாலனையென்குருவே பெந்தன்னாதா பட்சமுட னிவ்வேளைப் பாதுகாத்து, தேனனமனோன்மணியாள் கடாட்ச த்தன்னாலேதர்வேந்தரெந்தனையும்ரட்சிப்பீரே. ௫௬௯

இரட்சித்துக்காத்தருள வேண்டுமென் றும்பியலானபோகரிஷிவணங்கியல்லோ, பரமவொளிகலங்கிராதபோதா பாருலகி லுன்னைவிட சித்துமில்லை, பிரந்தரமாய் நிரைத்தபரா பரமேபோற்றிநிட்களங்கமானவொருநிதியேபோற்றி, வாழ்ந்தன்றுயெந்தனையுங்காக்கவென்றுவாகுடனே போகரிஷி பணிந்திட்டாரே. ௫௭௦

பணிந்துமே சித்தர்முனிதன்னைநோக்கி பான்மையுடனவர்பாதந்தொழுதுமேதான், துணிந்துமேகாலாங்கி ரிஷியென்றார் அப்புரவாய்க்குளிகையது யானுங்கொண்டு, பணியானகுளிகையது பூண்டுமல்லோமகத்தான வையகங்கள்சுத்திவந்தேன், கனிவுடனே சிக்கிந்தாமலையைக்கண்டு கருவானமலையென்று யிறங்கினேனே. ௫௭௧

இறங்கியே வதிசயத்தைப்பார்க்கவென்று வெழிலானசித்தருக்குத்தாமுரைத்தார், திறமுடையசித்தர் முனிமனதுவந்து நீர்க்கமுடன்காலாங்கிசீடனென்று, அறமதுவுந்தோராமல் வாசீர்மித்துவன்புடனே போகருக்குயிதவுகூறி, உறமுடனேவுபதேசமிகவளித்துவுந்தமர்க்குவரமதுவுங் கொடுத்தார்பாரே. ௫௭௨

போகர் சிக்கிந்தாமலைவதிசயத்தை சித்துகளைக்கேட்டது.

பாரேதான்போகரிஷிமுனியர்தாமும் பாங்குடனே சித்துதமைக்கேட்கும்போது, நேரேதான்முகநாவில்போகருக்குநேர்மையுடன் தாமுரைத்தார்சித்துதாமும், தீரேதானிம் மலையிலதிசயங்கள்திறமானவெகு கோடி சித்தரப்பா, வீரேதான்மலைதானுஞ் சித்துகாடுகோகோகாதாக்கள் கூட்டந்தானே. ௫௭௩

கூட்டமாம் சுனைதனிலேமட்சமுண்டு கோடானகோடியுகமிருக்குமட்சம், நீட்டமுடன்சித்தர் முனிகாவலுண்டு நெடிதானமுதற்சுனையில்மைந்தாகேளு, தாட்டிகமாய்ரெண்டங்கால்சுனையிலெல்லாதாக்கான முதலையுண்டுசித்துமுண்டு, வாட்டமுடன்முன்யுகத்தில்குழந்தைதன்னை வாரியுண்டமுதலையின்றன் சுனையுமாமே. ௫௭௪

ஆமேதான்முன்யுகத்தில் சந்திரமூர்த்தி வன்புடனேவெழுப்பிவிட்டமதலையப்பா, தாமேதான்மதலைதனைவிழுங்கிவிட்ட தன்மையுள்ள முதலையிதுவென்றுசொல்லி, வேமேதானமுதலையின்றன்மகிமைதன்னைவிருப்பமுடன்தாமுரைத்தார் போகருக்கு, நேமேதான்கோசமல்சித்துதாமுஞ் சிறப்பானமுதலைமொழிகூறினாரே. ௫௭௫



போகர்முதலையைக் காணவரையேறினது.

கூறினார் சித்தர்முனிரிஷிகள் தாமும் குறிப்பானசிக்கிந்தாமலையினுச்சி, ஆறவே மேல்வரையிற் சென்றுமேதான் வன்பானபோகரிஷிமுனிவர்தாமும், சீறலுடன் சினங்கொண்டு வுறுதிகொண்டு சிறப்பான சுனையருகில் கிட்டிநின்று, தேறவேசுனை முகத்தைக்காணும்போது துப்புரவாய் சித்தொருவர் கண்டிட்டாரே. ௫௭௬

கண்டாரே போகரிஷிநாதர் தம்மை கனமானசிக்கிந்தமலையில் சித்து, விண்டதொரு சுனைவளத்தை போகருக்கு விருப்பமுடனுபதேசஞ் செய்யலுற்றார், மண்டலங்கள் தான்புகழுஞ் சந்திரனார்தாமும் மகத்தானமதலைதனை யெழுப்பிவைத்து, துண்டசிரமான வொரு முதலை தானுர்துப்புரவாய் யிச்சுனையைக் காணலாமே. ௫௭௭

காணலா மென்தனதுவுத்தாரந்தான் கனமான சிறுபாலர் சுனைபின்பக்கல், நீணவே வுத்தாரமன்றியல்லோ நீதியுடன்சுனையருகிற் செல்லலாகா, பூணவே வுத்தாரம் பெற்றுக்கொண்டு புகழானபோகரிஷி செல்லலாகும், வேணபடி தாமுரைத்தார் சித்தர்தாமும் விருப்பமுடன் கேட்டாரேபோகர்தாமே. ௫௭௮

தாமான போகரிஷிசித்துதாமும் தன்மையுடன் ரிஷியாரைவணங்கியேதான், பூமானுஞ் சந்திரனார் முதலைதன்னை புகழுடனேயடியேனுங்காணவென்று, வேமானமாகவல்லோ போகர்தாமும் விருப்பமுடன் ரிஷிதமையே, கேட்டபோது சீமானும் போகரிஷிவந்தாரென்று சிறப்புடனே முதலைதனை யழைத்தார்காணே. ௫௭௯

காணவே போகரிஷிநாதர்தானுங் கனமான முதலைதனைக் கண்டபோது, நீணவேபோகரிஷிநாதர்தாமும் நியாயமுடன் முதலைதனை கண்டபோது, வேணவேயுபசார மஞ்சலிகள்தானும் விருப்பமுடன் தான்செய்தார்போகர்தானும், மானவேசினங்கொண்டு போகர்தானும் மகத்தானமுதலைதனைக் கண்டிட்டாரே, ௫௮௦

முதலைபோகருக்கு வரலாறுகூறல்.

கண்டதொரு முதலையது மனதுவந்து கனமானபோகரிஷிநாதருக்கு உண்டானமுன்யுகத்தி லதிசயங்கள்வுத்தமர்க்குத்தானுரைக்கும் முதலைதானும், மண்டலங்கள்தான் புகழுஞ்சந்திரனார்தாமும்மகத்தான காவெளஞ்சுத்தும்போது, அண்டமெலாந்தான் புகழுமாதிநாடு அவ்வனத்தின்வூர் வழியேவந்திட்டாரே. ௫௮௧

வந்ததொரு சந்திரனார் மூர்த்திதானும் வளமுடனே பவ்விதிவருகும்போது, அர்தமுடன்மனுக் கூட்டஞ் சேரமூர்கூட்டம்வழகான

திருவாசல், வாயல்முன்னே சிந்தையாய் சோழனது கூட்டத்தார்கள் சிறப்புடனே மனங்கலங்கிப் புலம்பும்போது, விந்தையுடனெதிர்மாளி திருமணமாம்வாசல் விகல்பமுடன்கண்டாரே மூர்த்திதாமே

மூர்த்தியாஞ் சுந்தரனூர்மனதுவந்து முந்தத்தில் நின்றதொருமாந்தர் தம்மை, பார்த்துமே அழுகையென்ற சத்தமென்னபாங்கான சோழவர்க்கஞ் சொல்லுமென்ன, தீர்த்திடுவேனுந்தமது வபவாதத்தை திகழாகசெப்புமென்றார் மூர்த்தியாரும், ஆர்த்துமேசோழவர்க்கமாண்பரெல்லாம் வண்பாகத்தலை வணங்கிசொல்லிட்டாரே.

சுந்தரமூர்த்திக்கு சோழர்பிள்ளைவரலாறுகூறல்,

சொல்லுவார் சோழவர்க்க மாண்பரெல்லாம் துரைராஜ் சுந்திரனூர்மூர்த்தியார்க்கு, நல்லறிவுடைய தொருமைந்தன் சாமிகலமான பாலனவனொருவனுண்டு, புல்லவே தோழனுடன் கூடியல்லோபுகழான சாத்திரங்களோதும்போது, வல்லதொரு வாருராளென்றுசொல்லிவளமான விடுதிமுறை விட்டார்தாமே. ௫௮௫

விட்டாரேபாலனது குருவார்சுவாமிவிடுதிக்குப்போகவென்று விடையுந்தந்தார், சட்டமுடனிருவருமே பேசிக்கொண்டு தண்மையுடன் குளக்கரையில் படியில்நின்று, திட்டமுடன் ஸ்தானங்கள்செய்யும்போது திகழான வெங்களதுமைந்தன் தன்னை, வட்டமுடன் முதலைபதுவந்துமல்லோவாகுடனேமைந்தனைத்தான் விழுங்கிப்போச்சே

விழுங்கியே பதினறுவாண்டுமாச்சு விருனதிருக்குளமும் வற்றிப்போச்சு, மழுங்காமழுங்கூடிருந்ததோழனுக்குமகத்தான திருமணமும் புரியலாச்சு, ஒழுங்குடைய வெங்களது மதலைதானும் வுத்தமரேதாமிருந்தானுக்களுந்தான், தொழுங்கமுடன் திருமணமுஞ் செய்வோமல்லோ துரை ராசமதலையைத் தானினைந்திட்டோமே. ௫௮௬

இளந்தோமே மதலையைத்தானென்று சொல்லியெழிலான சுந்திரற்குத் தாமுரைத்தார், குளந்தனையேகாட்டவென்று மூர்த்தியாரும் தொப்பெனவே சோழவளநாடார்தம்மை, பளமையுடன் மூர்த்தியவர் கேட்கும்போது பாங்கான சோழர்வளநாடார்தாமும், வளமையுடன்வுரைக்கலுற்றார், மூர்த்தியார்க்கு வாருடனேமதலையாகஞ் செய்தார்பாரே. ௫௮௭

முதலைவாயிற் சுந்தரமூர்த்தி மதலைவாங்கினது,

பாரேதான்யாகமது செய்யும்போது பாங்கானசுந்திரனூர் மூர்த்தியாரும் கேளேதான், குளந்தனிலேசலமுண்டாக்கி நேர்மையுடனேதலையும் வரவழைத்து சிறேதான், விழுங்கியதோர் மதலைதன்னை சிறப்பாகத்தான்வாங்கி, வெளியில்விட்டார் கூறேதான் மைந்தனுஞ் சோழமாண்பர் குறிப்புடனேதா னெடுத்துக்கொடுபோனாரே ()



போனவுடனடியேனுஞ்சாமத்தாலே புகழானசுந்திரனூர்மூர்த்திதன்னால், வசனமுடன்தேவர்களும் வணங்கும்படி மகத்தானசிக்கிந்தாமலையினுச்சி, தேவாமிர்தமானதொருசுனையிலுள்ளேதேற்ற முடன்வெகுகோடிகாலமப்பா, ஞானமிர்தமுண்டல்லோசுனையில்யானும்மகத்தானமலைதனிலேயிருக்கின்றேனே. ௫௮௯

இருக்கிறேனென்றல்லோபோகருக்கு பெழிலான முதலையதுகூறியேதான், சுருக்கமுடன்சுந்திரனூர் மூர்த்தியாரின்கூட்சாதிவரலாற்றைக்கூறியேதான், பெருக்கமுடன்சுனையருகில் வந்தாலேபோரவவுந்தனுக்குச்சாயமகேரும், திருக்கமலவேலவனூர் கிடியார்தாமும்சிறப்பானபாதமதுபணிகுவீரே. ௫௯௦

முதலைசிக்கிந்தாமலையின் சித்தர்மகிமை போகருக்குகூறல்.

பணிந்துமேயெந்தனைத்தான் காண்பீராகில்யாருலகில் மருந்துவங்கள்யானுரைப்பேன், துணிந்துமேமுதலையது கானுரைக்க துரைமன்னரானதொருபோகர்தானும், அணியுடனேதிருவேலர் தேவஸ்த்தானம்வன்புடனே பதாம்புயத்தைநன்னுதற்கு, மணிபோன்றசிக்கிந்தாமலையினுள்ளமகத்துவமாங்கடிஸ் தலத்தைநண்ணினேனே. ()

போகர் சிக்கிந்தாமலையில் திருவேலரைக் கண்டது.

நண்ணியேகாலாங்கி நாதர்தாமும்நலமுடனே சிந்தொளிவைமனதிலெண்ணி, அண்ணலவர் பதாம்புயத்தைகாணுதற்கு வன்பானபோகரிடிசென்றாரங்கே, வண்ணமுடன் திருவேலரிடியார்தாமும்வளமுடனே போகரிடிதன்னைப்பார்த்து, கண்ணியேபோகரிடிநாதர்தம்மைநலமுடனேயாரென்றுவினவினாரே. ௫௯௨

வினவியே திருவேலரிடியார்தம்மை விருப்பமுடன்யாரென்று கேட்கும்போது, கனமுடனேகாலாங்கி நாதர்தம்மை கருத்துடையநற்சிஷனென்றுசொன்னார், தினகரன்போல் முகத்தொளிவைக் கண்ணிற்கொண்டுதிர்க்கமுடன் திருவேலரிடியார்தாமும், மனதுவந்துவக்கெனக்குவாசிர்மங்கள்வண்மையுடன் தானுரைப்பார்வேலர்தாமே.

தானான திருவேலரிடியார்தாமும்தகமையுடன் தானுரைப்பார் போகருக்கு,வேணைவிட்டகுறையிருந்ததாலேவிடுபட்டுவந்தீர்காண் மலையைத்தேடி, கோனானகாலாங்கிநிருபையாலே கொற்றவனேயெந்தனுக்குவாய்த்ததல்லோ, தேனான திருவினையாள்மனோன்மணியாள்தானும் சிரமதுவுச்சிமலை யசியர்காணே. ௫௯௩

காணவேமனேன்மணியாள்பார்த்ததில்லை கைலாசதிருவேலர்மலையினுச்சி, நீணவேநீசெய்த தவத்தினாலே நீதியுடன்மலைதனையேகாணலாச்சு, வேணதொருமகத்துவங்க ளறியலாச்சவேதாந்த சின்மயத்தின்பொருளுமேகண்டீர், வாணர்முதல்மதலைதனைக் கண்டதில்லைவன்மையுடன்வந்தனுநகருக் காணலாச்சே. ௮௯௫

ஆச்சப்பா போகரிஷிநாதாகேளும் வன்புடனேயுந்தமக்குவருளுஞ்சொல்வேன், மூச்சடங்கிப்போனதொரு வெகுகோடிசித்துமுசியாமல் மலையடிவாரந்தன்னில், மாச்சலுடன்சமாதிதனில் வெகுபேர்களுண்டுமகத்தானநாதாக்கள் சொல்லொண்ணாது, ஆச்சரியமான சித்துவனேகங்கோடி அடிவாரம் மலைதனிலேகாணலாமே. ௮௯௬

காணலாம் போகரிஷிமைந்தாநீயுங் கண்டாலேசித்தாது சாபமெய்தும், தோணவேசாபமது வந்திட்டாலும் தோற்றமுடனெந்தனையும்நினைப்பீரானால், வேணதொருவுபகாரமுந்தனுக்குவிருப்பமுடன்செய்வதற்கு ஐயமில்லை, பூணவேயுந்தனுக்கு சாபம்நீக்கிபொங்கமுடன்வரந்தருவேனென்பார்பாரே. ௮௯௭

பாரேதான்காலாங்கி சீஷநாதா பரிவுடையபெந்தனிருகண்மணின்வேலா, சீரேதானுசாயகுளிகைகொண்ட சிறப்புடனே கற்பமுண்டமாபதுபா, கேரேதானுந்தனுக்கோ வொருவருண்டோ கோரவகுளிகைகொண்டேயபாலா, வீரேதான்சைனபதிவிட்டமாண்பர்விருனபொன்மணியேயென்றிட்டாரே. ௮௯௮

என்றுமேதிருவேலர் சொல்லும்போது வெழிலானபோகரிஷிநாதர்தாமும், குன்றான பருவத்தின் மேலேசென்று கோடானகோடி மனுமகிமைகண்டு, தென்திசையில்கும்பமுனி மலையுங்கண்டு தேற்றமுடன் குளிகைபது கொண்டுசென்று, வென்றிடவே மலையடியாம் வாரந்தன்னில்மேன்மையுடன் போகரவிறங்கினாரே. ௮௯௯

இறங்கியேபோகரிஷிமனதுவந்து வெழிலான சமாதிபதிதன்னிற்சென்று, அறமதுவும்வழுவாமல் முனிவர்தாமும் வன்புடனேசமாதியர்ச்சனையுஞ்செய்து, திறமுடையகாலாங்கிதனைநினைத்துநேர்க்கமுடன் சமாதிதனில்முன்னே நின்று, குறவகற்றிமுனியாருங்கை குவித்து கோலமுடன்சமாதிதனைவணங்கிட்டாரே. ௯00

வணங்கியேயடிவாரசமாதிதன்னில் வன்மையுடன்போகரிடமுனிவர்தானும், இலங்கியேகரங் குவித்துநிற்கும்போது வெழிலான சமாதியதுதிறந்துதங்கே,மனமுடையசொரூபமென்றசித்துதாமும்



மகத்தான ரிஷியாருங் கண்திறந்து, சுணக்கமதுநேராமல் போகர் தம்மை சத்தமுடன்வாய் திறந்து கேட்டிட்டாரே. ௯0௧

கேட்டதொரு ரிஷியார்க்குமனதுவந்து கிருபையுடன்காலாங்கிசீஷனென்றார், நாட்டமுடன் போகரிஷிநாதர்தம்மை நாதாந்த சித்தொளிவுரிடியார்தாமும்,தேட்டமுடன் திருச்சங்கு அயோத்திமைந்தன் திகழானவரிச்சந்திரன் சுகமோவென்றார், வாட்டமுடன் போகரிடமுனிவர்தானும்வுளமுடனேயான் கண்டதில்லையென்றாரே.

என்றாரேபோகரிடமுனிவர்தானும்வெழிலான திருச்சங்குமைந்தன்றன்னை, குன்றானமலையிறங்கிகுளிகைபூண்டு குவலயத்தையான் சுத்திவரும்போது, தென்திசையில் திருப்பாலின கடலின்மேற்கே திகழான மயானமென்ற கரையில்தானும், தன்றுளவ கிருஷ்ணனைப் போல்கல்லாய்த்தானும் தாரணியில் கண்டேனே யென்றிட்டாரே.

போகர் அரிச்சந்திரனை மயானத்தில் கல்லாய்க்கண்டது.

இட்டாரேபோகரிடமுனிவர்தானும் வெழிலானவரிச்சந்திரன் தன்னைத்தானும், பட்டதொருமாண்பர்களின் கடலைதன்னில் பரவகுடனே காவலதுயிருக்கவென்று, கட்டதொருமாண்பர்கட்குக்கூலியாளாய்ச்சுடலைபதிக்காரத்திருக்கக் கண்டேன்யானும், கட்டவிழுஞ் சத்தியத்துக்காளதாகி காசினியில் சுடலைபதியிருந்திட்டாரே. ௯0௪

இருந்தாரேகல்லாக வெகுகோடிகாலம் வெழிலான திருச்சங்குமைந்தன்றானும், பொருந்தவே கல்லதனைக்கண்டேன் யென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டார் போகர்தாமும், திருந்தவே சமாதிகளிலிருந்தசித்து நேர்க்கமுடன் கலியுகமும் பிறந்ததென்ன, குருந்தமுடன்சைனபதிதுரைத்தனங்கள் குவலயத்திலமைத்துதோதானென்றிட்டாரே. ௯0௫

என்றுமேபோகரிட முனிவர்தம்மை வெழிலான நாதாந்தசித்துதாமும்,சென்றுமேசமாதிதனைமூடவென்று சினத்திலே போகருக்கு விடையுஞ்சொல்ல, நன்றுடனே போகரிடமுனிவர்தானும் நாதாந்த சித்தொளியை தெரியேதென்றார், குன்றுடைய காலாங்கி சீஷருக்கு கூறுவார்சித்தொளிவுங்கூறுவாரே. ௯0௬

போகருக்கு சித்தகூறுவது.

கூறுவார் காலாங்கிசீஷர் கேளும் கொற்றவனே சைனபதிவிட்டுநீயும், மாறலென்றகுளிகையது பூண்டுகொண்டு மகத்தான சித்தர்தாயமலையைத்தேடி, சாரலென்றமேற்பதியில்வந்துநீயும்சட்டமுடன்

சமாதிதனைக்கண்டுமேதான், சேரவேயெந்தனைநீபார்த்ததாலே செப்பமுடனுந்தனுக்குவருள்சொல்வேனே. ௬௦௭

அருளானமகிமையது வென்னவென்றால் வப்பனேகாலாங்கிரி ஷிகேளும்,பொருளானமூன்றுயுகங்கடந்துபோச்சு பொங்கமுடன் கலியுகமும்பிறக்கலாச்சு, இருளானகலியுகத்தின்முடிவுதன்னில் வெழிலாகவெந்தனைநீகாண்பாயானால். தெருளாகற்றியுந்தனுக்குவனேக போதம் தெளிவானகிரிகைகளுஞ்செப்புவேனே. ௬௦௮

செப்புவேனுந்தனுக்குவென்றுசொல்லி தேற்றமுடன்தாமுரைப்பார்சித்தர்தாமும், ஒப்பமுடன்போகரிஷிநாதருக்கு ஓகோகோநாதாந்தசித்தர்தாமும், இப்புவியிலதிசயங்கள்யாவுங்கூறி வெழிலாகத்தாமுரைத்துபோகருக்கு, எப்போதும்போலாகசமாதிதன்னை வெழிலாகமுடவென்றுவிடைதந்தாரே. ௬௦௯

போகர்சித்தினுடன்விடைபெற்று திருவேலரிஷியினிடஞ்சென்றது.

தந்தாரேவிடையதுவும்பெற்றுக்கொண்டு தகைமையுள்ளதிருவேலரிஷியார்முன்னே, அந்தமுடனபோகரிஷிமுனிவர்தானும் வன்பாகமலைமீதிற்சென்றுமல்லோ, சொந்தமுடனதிருவேல ரிஷியார்பக்கல் தோற்றமுடனபோகரிஷிமுனிவர்தானும்,விந்தையதுபெற்றுமல்லோ ரிஷியார்பக்கல் விருப்பமுடன்சிரங்குனிந்துநின்றிட்டாரே. ௬௧௦

நின்றதொருபோகரிஷிமுனிவர்தம்மை நேர்மையுடன்திருவேல ரிஷியார்பார்த்து, குன்றின்மேலேறியல்லோகுளிகைபூண்டு கொற்றவனேயெந்தனிடம்வந்தாயப்பா, நன்றானவதிசயங்களுந்தனுக்கு நலமுடனேயானுமல்லோவுபதேசிப்பேன, என்றுமேரிஷியாரும்வாக்களித்து வத்தமுடன்பச்சமதாய்சொல்லிட்டாரே. ௬௧௧

சொல்லவேதிருவேலரிஷியார்தாமும்சோராமல்போகருக்குமனது வந்து,வெல்லவேவசைனபதிவிட்டுமேதான் வேதாந்தகாலாங்கிவிடையும்பெற்று,அல்லலெனும்பவக்கடலைவிட்டகற்றி அவனியெலாங்குளிகைகொண்டுநிரித்துவமர்ந்த, வல்லதொருசிக்கிர்தாமலையைத்தேடி வந்ததினாலுந்தனுக்குததுறைசொல்வேனே. ௬௧௨

துறையானகாலாங்கிநாதர்பாதர் துப்புரவாய்ச்சமாதியிடஞ்சென்றுமேதான், மறையானவடிவாரமலைபாரத்தின் மருத்துவமாஞ்சித்துளனேகமுண்டு,சிறைமீளாசமாதிதனிலிருந்தசித்துசிரானநாதக்



ள்வெகுபேருண்டே, கறைபடுமாமாபுரத்தில்சமாதிமாண்பர் கனமானசொரூபசித்துகாணீர்தானே. [illegible]

கண்டீரோசமாதியென்றசொரூபசித்தை கைலாசசைனபதிபோகநாதா,விண்டதொருதிருவேலர்திருவாக்குக்கு விருப்பமுடன்போகரிஷியுரைக்கலுற்றார், சண்டமாருதம்போலசமாதிகண்டேன் சாங்கமுடனவ்விடத்தில்சித்துமுண்டு,தெண்டமுடன்சமாதியிடம்நின்றுயாமும் தெரிசித்துசமாதியிடம்வந்தித்தேனே. ௬௧௪

அரிச்சந்திரனுகத்திலிலங்கிய சித்துமகிமையை திருவேலருக்குக் கூறல்.

வந்தித்தேனஞ்சலிகள்மிகவுஞ்செய்தேன் வாருடனேசமாதியின்றன்சொரூபருக்கு, சிந்தனையாய்நெடுங்காலந்தாலிருந்து சித்துமகாபுருடனையும்வேண்டிக்கொண்டேன்,அந்தமுள்ளசமாதியதுபாறைதானும் அண்டரண்டங்கிடுகிடுக்கவெடிக்கலாச்சு, பந்துளவமாலையணிகிருஷ்ணன்போல பார்த்தேனேசித்தொளிவைவணங்கினேனே.

வணங்கவேசமாதிமுகந்தனிலிருந்து வளமானசித்துமகாரிஷியார்தாமும், இணங்கவேயெந்தனையுமனதுவந்து வெழிலானசிறுபாலாயாரென்றெனக்க, சுணங்கமதுவாராமலடியேனானும் துப்புரவாய்க்காலாங்கிசிஷனென்றேன், மணங்கமழுஞ்சித்துமகாசொரூபர்தானும் மனக்களிப்பாய்வார்த்தையதுகூறுவாரே. ௬௧௬

கூறுவார்வாய்திறந்துயெந்தனைத்தான் கூறானவரிச்சந்திரனெங்கேயென்றார், மாறுபடுயெந்தன்மனம்பேதலித்து வையகத்திலரிச்சந்திரன்கண்டதில்லை,வீறுபுகழ்சுடலைபதிதன்னில்யானும் விருப்பமுடனரிச்சந்திரன்கல்லைகண்டேன், ஆறுபுகழ்சூழ்நகரமாகவேந்தன் அவனிதனில்மாண்டிட்டாரென்றிட்டேனே. ௬௧௭

என்றேனேவரிச்சந்திரன்றன்னைக்காணேன் வெழிலானவரிச்சந்திரன்கூறும்போது, குன்றானமகமேருரிஷியார்தாமும் குவலயத்திலில்லையென்றமொழியுங்கேட்டு, சென்றுமேமூன்றுயுகங்கடந்துபோச்சே செயலானகலியுகமும்பிறக்கலாச்சே, என்றுமேரிஷியாருமனதுகொந்து வெழிலானவார்த்தையதுசொல்லிட்டாரே. ௬௧௮

சொல்லவேயடியேனைபாறைகொண்டு சோராமல்முடவென்று விடையுந்தந்தார், புல்லவேயடியேனுஞ்சமாதிதன்னை புகழாகமூடிய

ல்லோ சமாதிவாக்கம், அல்வைருங்கண்டதினு லோகமெல்லாம் அவ மானவார்த்தைக் குடையுண்டென்று, சொல்லிபேயெந்தனையு மூட ச்சொல்லி துப்புரவாய்வாக்கதுவுந் தந்திட்டாரே. ௬௧௧

தந்திட்டாரென்றுமே வாலாறுந்தான் தகமையுடன்\ பதிவே லர்க் குரைத்தேன்யானும், அந்தமுடன் திருவேலரிடியார்தானும் வன்புடனே மனங்களித்து யெந்தன்மீது, சொந்தமுடனென்மீதிற் பட்சம்வைத்து சுத்தமுள்ளகாலாங்கி கிருபையாலே, •விந்தைபுகழ் தேசாதிமகிமையெல்லாம் விருப்பமுடனெந்தனுக்கு வோதினாரே.

போகருக்கு திருவேலரிடி உலகமகிமை யுரைத்தல்.

ஓதியேதிருவேல ரிடியார்தாமும் ஒகோகோபோகரிடி நாதருக் கு, நீதியுடன்ஞானோபதேசங்கூறி திட்களங்கமானதொரு மகிமை யெல்லாம், வாதியாஞ்சித்தர்முனி சொரூபந்தானும் வளமானவதி சயங்கள் காணுதெல்லாம், பாதிமதிசடையணிந்தபோகருக்கு பட்ச முடனுபதேசஞ் செய்தார்பாரே. ௬௨௧

சிக்கிந்தாமலையில் வடிவேலர்வாகனம் போகரிடம் பேசுவது.

பாரேதான்காலாங்கிசிஷபாதா பரிவாகயுந்தனுக்குச் சொல்வே னப்பா, நேரேதான்சிக்கிந்தா மலையினுச்சி நெடிதான வடக்குபுரந் தெற்குவாசல், சீரேதான்வுதகமென்ற சுனையொன்றுண்டு சிறப்பா னபொன்மயிலு மங்கேயுண்டு, சேரேதானுவடியார்சமாதியுண்டுசெங் கண்மாசிசக்காமு மங்கேயுண்டே. ௬௨௨

உள்டானசக்காமுங் காவலுண்டு வுதகமென்றமலைமேலேசுனை யிலப்பா, அண்டர்தொழும்ஆவடியார் தன்றன்பக்கல் வழகானபொ ன்மயிலு மங்கேயுண்டு, கண்டுமேமனதுவந்து களிப்படைந்து கன முடனேவார்த்தையது மிகவுங்கூறி,]மண்டலத்திலதிசயங்கள்பாவுஞ் சொல்லி மார்க்கமுடன்வருகவென்று விடைதந்தாரே. ௬௨௩

விடையானவிடையதுவும் பெற்றுக்கொண்டு வீறானகுளிகை யது பூண்டுகொண்டு, தடையறவேசிக்கிந்த மலையினுச்சி தன்மை யுடன்வடக்குபுரம் மேற்குவாசல், சடைபோன்றபோகரிடி நாதர் தானும் சட்டமுடன் சிவலிங்கந்தன்னைக்கண்டு, கடையுடனேமேற் பதியிற் செல்லும்போது கலமானபொன்மயிலைக் கண்டிட்டாரே.

கண்டாரேபொன்மயிலை போகர்தானும் கனமுடனேயெதிர்நின் று முடிகள்சாய்த்து, தெண்டமுடன் பதாம்புயத்தைத் தான்வண ங்கி தேற்றமுடன் கூறலுற்றார் ரிடியார்தாமும்,பண்டதுபோல்தந்



மென்ற மயில்தானப்பா பாண்டவனேபோகரிடி தன்னைப்பார்த்து, ஓண்டியுடன் மலைமேலேவந்தபாலா வுத்தமனேயாரென்று கேட்க லாச்சே. ௬௨௫

தேவேந்திரன்சாபத்தால் திரேதாயுகத்தில் சிக்கிந்தாமலைரிடியார் சுப்பிரமண்ணியர்க்கு பொன் மயிலானது.

கேட்டதொருவடிவேலர் பட்சிதானல்லோ கிருபையுடன்போக ரிடி நாதர்தானும், வாட்டமுடன் பொன்மயிலாந் தன்னைக்கண்டு வளமாகவுத்தாரஞ் சொல்லலுற்றார், நீட்டமுடன்திருவேல ரிடியார் தாமும் நீதியுடன் அரிச்சந்திரன் சித்தாமுன்னே, நேட்டமுடன்அன் டமிர்துவந்தபின்பு செப்புவேன்விடையெனக்கு யென்றிட்டாரே.

என்றுமேதிருவேல ரிடியார்சொல்ல ஏத்தமுடன் வுத்தாரம் பெற்றுமேதான், வென்றிடவேமறுபடியுந் திருவேலர்முன்னே வேக முடன்வந்தல்லோ வணங்கினின்றேன், குன்றானமலைமேலேவுச்சிதன் னில் கொப்பெனவேயெந்தனையும் போகச்சொன்னார், நன்றாகவடி வேனும் விடையும்பூண்டு நலமாகயுந்தனையுங் காணலாச்சே. ()

காணவேநாளாச்சதென்றுசொல்லி கருத்துடனேதாள்பணிந்து கூறும்போது, பூணவேபோகரிடிநாதருக்கு பொன்மயிலும் மனது வந்து யேதுசொல்லும், தோணவேகாலாங்கிநாதர்சிஷர் துப்புரவா யெந்தனையுங் கண்டதாலே, வேணபடியுந்தனுக்கு வுபதேசங்கள் விருப்பமுடனுரைப்பேனென்று சொல்லலாச்சே. ௬௨௮

ஆச்சப்பாகாலாங்கிநாதர்பாதா அருண்மைந்தா சொல்லுகிறே னுந்தனுக்கு, விச்சடனேதிரேதாயி னுகத்திலப்பா விண்ணுலகு தெய்வலோகப் பதியில்யானும், மாச்சலுடன்மகாகோடி ரிடிகள்தன் னில் மகத்தானமகிமைகளுங் கிரியைபூண்டு, ஆச்சரியமாகவல்லோ யிந்திரன்பக்கல் அமர்ந்தேனேகொலுமேடை தன்னில்தானே. ()

தானானசித்தர்கூடமண்டபத்தின் தகமையுடனிந்திரனுர் கொ லுவிருக்க, தேனானரம்பையூர்வசியாள்தாமுஞ் சிறப்புடனேநாட்டி யங்கள் செய்துநிற்க, பானனஊர்வசியாள் தன்னைப்பார்த்து பட்ச முடன்கலவிக்கு யெண்ணங்கொண்டு, மானனமகத்துவமாம் ரிடியார் தாமும் மார்க்கமுடன்காதலது கொண்டிட்டாரே. ௬௩௦

கொண்டதொருகாதல்தனை யிந்திரனுங்கண்டு கொற்றவனூர்யிந் திரற்குக் கோபம்பொங்கி, அண்டர்முனிராட்சதர் தேவாதிமுன்னே அகங்கொண்டரிடியார்க்குச் சாபங்கொண்டு, மண்டலங்கள் தான்

புகழும் வடிவேலர்க்கு மகத்தானபொன்மயில் வாகனமுமாக்கி, துண்டரிகமாகவல்லோ யிந்திரன்றான் தப்புரவாப்ச்சாபமது கொடுத்தார்தாமே. ௯௧

தாமானசாபத்தால் மயிலுமானேன் தகமையுள்ள சிக்கிந்தா மலையின்மேலே, சேர்மான்கள்கோடிபேர் கண்டதுண்டு கொற்றவர் கள்சாபமதைத் தவிர்க்கவில்லை, பூமானுங்காலாங்கிநாதர்பாதாபொங்கமுடன்யெந்தனையுங் கண்டதாலே, சாமானமானதொரு காலாங்கிநாதர் சிட்டமுடன்பொன்சாபம் நீக்கொண்ணாதே. ௯௨

காலாங்கிநாதர் பொன்மயில்சாபம் நீக்கினது.

ஒன்றானசொருபமென்ற சித்ததாமும்வுலகபதிமுன்யுகத்தில் ரிடியாருமாய், எண்ணவேவெகுகாலந்தானிருந்து யெழிலான தேவபுரஞ் சென்றேன்யானும், கண்ணானவாயிரங் கண்ணிந்திரன்றான் கடுங்கோபமென்மேலே வதிகமாகி, திண்ணமுடன்சாபமது யெந்தனுக்கு தீர்க்கமுடன்றான்கொடுத்தார் பாருபாரே. ௯௩

பாரேதான்ரிடியான மயிலுமப்பா பாலனேனும் போகர்முகந்தன்னை நோக்கி, நேரேதான்காலாங்கிநாதருக்கு நேர்மையுடனேத்தனது வளப்பங்கூறி, சீரேதான்பொன்மயிலுஞ் சாபம்நீக்கிசிறப்பாக முன்போல ரிடியுமக்கு, சேரேதான்வையகத்தில் சித்துமாக சிறப்புடனேசெய்வதுவுன் பாரந்தானே. ௯௪

போகரிடியாகிய பொன்மயிலுக்கு கூறல்.

தானானதேவரிடி மயிலேகேளும் தன்மையுடன் வடிவேலர்க்குகந்தமாக, கோனானபெனதையர் காலாங்கிக்கு கொற்றவனேயுன் வளப்ப மிகவனைத்தும், தேனானதேவேந்திரன் வனப்பந்தானும் தேற்றமுடன்யானுரைக்க சாபம்நீங்கி, மானானவையகத்தில் ரிடியுமாக்கி மார்க்கமுடன்வுன்சாபந் தீர்ப்பேன்காணே. ௯௫

கானேபோகரிடி நாதர்தானும் கனமானவடிவேலர் மயிலுக்கல்லோ, தோனவேயுபசாரவார்த்தைகூற தோறும்பொன்மயிலும் மனதுவந்து, பூணவேதேவர்பதி மகிமையெல்லாம் புகழானபொன்னுலோக மர்மனைத்தும், வேணவேயமர்பதி சரித்திரங்கள் விருப்பமுடனுபதேசங் கூறலாச்சே. ௯௬

ஆச்சப்பாகைலாச மர்மமெல்லாம் அடைவுடனே போகரிடி முனிவர்தாமும், பேச்சுமொழிவாய்ஞானந் தன்னிற்றானும்போரான்வுபதேச மனைத்துங்கொண்டு, பாச்சலுடன்விடையதுவும் பெற்றுக்கொண்டு பாங்கானகுளிகையது பூண்டுமேதான், ஆச்சரியமாகவல்லோ சைனதேசம்வன்புடனே தம்பதிக்குவந்திட்டாரே



வந்தாரேசைனபதிதன்னிற் சென்றுளையோடனேமுக்காதக்கோட்டைக்குள்ளே, அந்தமுடன்போகரிடி முனிவர்தாமும் அங்கனித்துமனதுவந்துகுளிகைவிட்டு, சொந்தமுடன் காலாங்கிசெயர்பங்கல் சுத்தமுடன் மேற்புரத்தில்வாசல்நின்று, சிந்தனைபாய் வஞ்சலிகள்மிகவுஞ்செய்துசிறப்புடனே சிறங்குனிந்துவணங்கிட்டாரே. ௯௭

வணங்கியேயிருகரமுந் தான்குவித்து வளமுடனேபதாம் புயத்தைமிகவும்நண்ணி, இணங்கியேசமாதிபது கபாடவாசல்யினைக்கமுடனர்ச்சனைகள்புரியும்போது, சுணங்கமதுவாராமல் காலாங்கிநாதர்சடசொளியாஞ்சமாதியதுதிறந்துதங்கே, கனைமூட்னைவாத்திடங்களார் பரிக்கர்த்தாயாஞ்செக ஜோதிக்காணலாச்சே. ௯௮

வைக்கவேகலசமதில்கலசம்வைத்து மகத்தானகலசமதில்வோ
லெவைத்து,நைக்கவேயோட்டின்மேல்தலைதானப்பா நலமானசெம்மறி
யின்தலைதானும், பொய்க்காமல்தலைமேலேசாணம்வைத்துப் பொங்
கமுடன்சாணமதில்கலசம்வைத்து, மெய்க்கவேயகண்டமதில்நீபமே
ற்றி மேன்மையுடன்மந்திரங்களோதுவாயே. உ௦

ஓதுவாய்பஞ்சாட்சரவட்சரத்தை வுத்தமனேநூற்றெட்டுவுருதா
ன்போடு, வாதுபுகழ்செம்மறியின்முகத்திலப்பா வண்மையுடன்வா
டையென்றகஸ்தூரிதானும், நீதறவேகள்ளனைத்தா னறியவேண்டி
திகழானகஸ்தூரிதன்னையப்பா, சேதுபந்தமாகவல்லோமுகத்தில்பூசி
சம்முடன்பதனமதிசெய்குவாயே. உக

செய்யவேகஸ்தூரி தன்னைத்தானும் சிறப்புடனேபூசியல்லோ
மைந்தாகேளு, வெய்யவேமார்ளிதனில்கன்னம்போனால் வேகமுடன்
திருடர்களைப்பிடிக்குமார்க்கம், பையவேசர்தேகப்பட்டபேரை பாங்



குடனேயாவரையுங்கூட்டிவந்து, நையவேமச்சென்றமாளிதன்னில்
நலமுடனேசபைகூட்டிநிற்கச்செய்யே. உஉ

நிற்கவேயோகஜனஞ்சூழ்ந்துநிற்கவெழிலானகள்ளனைத்தானறிய
வேண்டி, நற்கையென்றகாளியதுமந்திரதால் நப்புறவாய்நவகண்ட
மோதும்போதும், அற்பமென்றுநினையார்கள்மாண்பரப்பா லப்போ
தேபெடுத்தவனுமேங்கிநிற்பான், சொற்பமென்றதந்திரமந்திரத்தினா
லே சோர்வடைந்துகள்ளனவன்முழிப்பான்பாரே. உ௩

பார்க்கையிலேகள்ளனவன்லருவாய்நிற்பான் கருத்தினிலேசதா
சிவமுந்திடுக்கிட்டேங்கி, நிர்க்கமுடன்வொவ்வொருவராகவல்லோ
நிரமுடன்மச்சென்றமாளிதன்னில், ஏர்க்கவேசோதினைக்கு மாளிக்
குள்ளேயென்தாயேயீஸ்வரியேநீண்டவில்லை,ஆர்க்கவேசத்தியத்தை
செய்துமல்லோ வப்பனைமுகமதனைத்நீண்டிடாயே. உச

நீண்டவேவேண்டுமென்றுசொல்லியல்லோ சோதனைக்குவுள்ள
கற்றித்துலையாய்நில்லு, ஆண்டகைமோதாலேயென்றுரைத்து அங்
கனவேயட்சதையைத்தூவுதூவு, மாண்டதொருசெம்மறியின்முகத்
தைத்தொட்டு மார்க்கமுடன்வொவ்வொருவர்வருங்காலத்தில்,வேண்
டியேயவர்காத்தைநீதானப்பா விருப்பமுடன்றனைந்து முகத்தி
லொத்தே. உரு

ஒத்தையிலேகஸ்தூரிமணந்தான்வீசும் ஓகோகோபொருளெடுக்
கவில்லையென்று,சத்தியமாய்சொல்வாய்மகனேயப்பா சாங்கமுடன்
பொருளெடுக்கவில்லையென்று,புத்தியுடன்பொருள்தொட்டோன்கரத்
தில்வாசம பொங்கமுடனிருக்கவேமாட்டாதப்பா, வெத்தியுடன்நீ
நினைத்துமாண்பர்தம்மை மேதினியில்சொல்லுவதுகருமமாமே. உசா

கருமமாம்பொருள்களவுகண்டுதேறி தண்மையுடன்சொல்லுவது
வேமநூதர்மமாகும், கருமதுசெய்யாதுவந்தவனுக்குக் காசினியில்யே
மொருந்தவனாய், பருமமுடன்வையகத்தில்மாண்பர்க்கெல்லாம் வள
மையுடன்குருசம்பிரபோதவானாய், அருமையாயெல்லவருமுந்தனைத்
தான் அப்பனேசதாகாலம்போற்றுவாரே. உஎ

போற்றுவாற்தந்திரமாஞ்ஜாலவித்தைப் பொங்கமுடன்யாருக்
கும்விள்ளவேண்டாம், ஏற்றிவேசர்பிகளும் பாவியோரும் பெதாஸ்
கும்விள்ளவேண்டாம், நாற்றிசையும்மிருப்பார்கள்புண்ணிய
தானசண்டாளரேனகருண்டு, நாற்றிசையும்மிருப்பார்கள்புண்ணிய
வான்கள் நவிலாதேயொருவருக்குநவில்வேண்டாம்,மாற்றியேமாந்
திரிகமென்றுரைத்து மகுத்துவமாய்ஞானிபோலிருந்திடாயே. உஅ

யிருக்கையிலேயெல்லவரும்போதக்கொண்டு யென்குருவேயென் சாமியென்றுமல்லோ, பொருக்கமுடன்பொருள் கொள்ளையிட்டபேர் கள் பொங்கமுடன்வுனைத்தேடிவருவார்பாரு, தருக்கமதுமிகப்பேசி மகனேயப்பா தருவித்துப்பொருள்தனைக்கொடுப்பேனென்று, அருட் கமலம்வீற்றிருக்குமம்பாள்தானு மப்பனேகூட்டிவைப்பா ளென்று சொல்லே. ௨௯

சொல்லுயிலேபெதிராளிவந்தபேர்கள் சொக்கியேயுன்வலையில் சிக்கியல்லோ, வல்லதொருகுருசாம்பிரதாயபூபா வளமையுடனெந்த னதுபொருளேயப்பா, மெல்லவேதருவித்துத்தந்தாயானால் மேன்மை யுடன்வுந்தமக்குப்பாதியீவேன், சல்லியங்கள்நேராதுசுவாமியென்று தப்பாமலடிபணிந்துசேவிப்பாரே. ௩0

சேவிப்பார்கடவுளென்றுவும்மைதானும் செகதலத்தில்மாண்ப ரெல்லாமபங்கியல்லோ, தாகியேசதாகாலம்பக்கலப்பா சட்டமுடன் காத்திருப்பார்கோடிமாண்பர், ஆவிபொருளுடலாதி யனைத்துமப்பா வப்பனேயுந்தமக்குத்தந்தமென்பார், பாவியென்றநாமமது படைக்கா மற்றான் பாருலகில்சத்திபனாய்வாழ்வாய்தானே. ௩௧

தானெனபுலிப்பாணிமைந்தாகேளு தப்பாமலெந்தனுக்குக்குருதா னப்பா, நேனுனகாலாங்கிநாயர்தம்மை தேற்றமுடன்சதாகாலமனதி லுன்னி, பானுனமனோன்மணியாள்பாதம்போற்றிப் பான்மைபெற வெப்போதும்தொழுதுமல்லோ, கோனானகுருக்கள்மாரிடிகள்தம்மை கொற்றவனைதானினைந்துநடத்துவாயே. ௩௨

நடத்துகையிலின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் ராஜாதிராஜ ரெல்லாமெச்சுதற்கு, திடமானதந்திரமாஞ்ஜாலப்போக்கு செப்புகி றேன்மாணாக்கர்புந்தமக்கு, அடலானதந்திரமாமாயதந்திரம் அப்ப னேயாருந்தானறியமாட்டார், சடலானகள்ளனைத்தான்பிடிக்கவல்லோ காசினியிலின்னமொருமதிசொல்வேனே. ௩௩

## பச்சரிசிஜாலம் கள்ளனைப்பிடிக்க.

மதியானஜாலமொன்றுசொல்வேனப்பா மகத்தானகாலாங்கிநா தர்தம்மை, அதியுடனேயான்வணங்கித்தய்யபாலா தப்புரவாயுந்தனு க்குக்கூர்வேன்யான், கதிபோனகள்ளனைத்தானறிவதற்கு நீதியுடன் தந்திரமாஞ்ஜாலவித்தை, பதியானகளவுசென்றமாளிதன்னில் பட்ச முடன்றானடுத்துசெப்பக்கேளே. ௩௪



செப்பவென்றான்கதிபோனமாளிதன்னில் சிறப்புடனேசென்று ஜாலஞ்செய்வாய், நப்பமுடன்கிருபெய்த்தமாண்பர்தம்மை ஓகோகோ யாவரையுந்தானழைத்து, தப்பிதங்கள்நோமல்மைந்தாகேளு தன் மையுடன்சந்தேகப்பட்டபேரை, செப்புடனேயவர்கையில்வரிசியப் பா மேன்மையுடன்றானெடுத்துச்சொல்லக்கேளே. ௩௫

கேளப்பாவவரவர்கள்கையிலப்பா கெடியானபச்சரிசி நிம்பழந் தான், ஆளப்பாதனித்தனியேகொடுத்துமைந்தாவப்பனேயவர்களுக்கு வலக்கல்கூறி, மாளப்பாமாண்பர்களை நீங்களெல்லா மபங்காமற் பொருளெடுக்கவில்லையென்று, கேளப்பாகொட்டினதுபோலேயப்பா தேற்றமுடன்யான்கூறுமொழியைக்கேளே. ௩௬

மொழியானவார்த்தையதுவென்னவென்றால் மோசமில்லைநீங்க ளுந்தானடுக்கவேண்டாம், வழிபுடனேபச்சரிசிவாயிலிட்டு வன்மையு டன்றான்மென்றுமைந்தாகேளு, சுழியானவாயில்மென்றவரிசிதன்னை சூட்சமுடன்பூமிதனில்முழியவேண்டும், பழியானஎலுமிச்சம்பழத் தையப்பா பான்மையுடன்வாய்தனிலேகடிப்பாய்தானே. ௩௭

கடித்துமேபுபசாத்தைமாணாக்காளே கருத்துடனேபூமிதனில் முழியவேண்டும், அடிப்புடனேபொருளெடுக்கவில்லையென்று ஆண் மையுடன்சத்தியங்கள்செய்யவேண்டும், நடித்துமேசோதனைகள்தங் குமல்லோ நலமுடனேசெல்கவென்றுவிடையுந்தந்து, முடித்துமே மந்திரங்களேதிறம்போல் முனைபானதலைவாசல்முன்னேயில்லே.

நிற்கையிலேமாண்பரெல்லாஞ்சோதினைகள்வந்து நிலைபானநிலை தனிலேநிற்கும்போது, அற்பமென்றுநினையாமல்வுவராவர்கள்தன்னை அன்புடனேநாவினைந்து வப்பாகேளு, சொற்படியேயுமிழ்ந்த வரிசி தன்னை சொந்தமுடன்காட்டவென்றுவினையங்கேளு, உற்பனமாயுமி ழ்ந்ததொருவரிசியப்பா ஓகோகோகுழம்புபோலிருக்கும்பாரே. ௩௯

பாரப்பாபொருளெடுத்தோன்வரிசிதானும் பான்மையுடன்பொ டிபொடியாயிருக்கும்பாரு, கோப்பாவெடுக்காதபேர்கட்கெல்லாம்நே ர்மையுடன்வரிசிபகுழம்பாய்நிற்கும், சீரப்பயழமதுவுமுமிழ்ந்த பேர்கள் சிறப்பானவாதனில்ரசமுண்டாகும், ஆரப்பாவெடுக்காதபே ர்கட்கெல்லா மப்பனேரசமதுவுமதிகங்காணே. ௪0

காணவென்றுலெடுத்தவர்கள் மாண்பருக்குகடிதானபழமதுவும் ரசந்தானப்பா, பூணவேரசமதுவுங்குறைந்துகாட்டும் புகழானபெறு பிச்சம்பழந்தானப்பா, தோணவேதிருஷ்டாந்திரங் கண்டுகொள்ளு தோராமல்சபையார்க்குகூறுகூறு, வேணதொருவுபசாக்கள்ளனைத் தான் வேகமுடன்கண்டறிந்துசெப்புவாயே. ௪௧

செப்பவென்றால் நாவில்லைபார்வையில்லை ஜெகதலத்திலுன்னைப்போல மருந்துமுண்டோ, ஒப்பவேசபயார்முன்கள்ளனைத்தான் ஓங்காரமிட்டல்லோயழைப்பாயப்பாரு, தப்பிதங்கள்நேர்ந்ததென்று மனதிலுன்னி தன்மையுடன்பொருளதனைத்தருவான்பாரு, இப்படியேஜால, தந்திரத்திலேயென்மகனேபொருளதனைவாங்குவாயே. ௪௨

மாட்சிமைகூறல்

வாங்கையிலேபுத்திமா னென்றுசொல்லி வார்த்தைசொல்வார் வையகத்திலுன்னையப்பா, தூங்கியேதிரியாதேமைந்தாகேளு துப்புரவாய்யுமொருதெவுளியாவாய், ஏங்கியேயுனைக்கண்டோரெல்லோருந் தான்வெழிலுடனேயுந்தமக்குவணக்கங்கூறி, பாங்கியர்கள்தன்முதலாப்பரிசயியார் பாரினிலேயேயுமொருசித்தனாமே. ௪௩

சித்தனென்றுசொல்லியல்லோவுன்னையப்பா சிதாபாசக்கட்டளையைமனதிலுன்னி, பத்திபாய்திரிகாலபூசைசெய்து பலகாலும்சிந்தித்துப்பணிவுகூறி, முத்திபெறநல்வழிக்குவாளதாவி முபன்றுமேயெப்போதுமுபற்சிலானாய், நத்தியேயுமதிடத்தில்சிஷனாக நாடோறும்பணிவிடைக்குநிற்பார்பாரே. ௪௪

பொரிஜாலம்.

பாரப்பாநெற்பொரியின்வித்தைசொல்வேன் பாங்கானநெல்லதுவுங்குறுணிகொண்டே, சேரப்பாசிலைதனில்முடிந்துதானும் நெடிதானகன்றுப்புக்காலோதன்னில், சீருடனேகிளிஞ்சிறுமையந்தானும் சிறப்புடனேவைத்துமல்லோகிளிஞ்சிமுடி, காருடனேதானவித்துவெடுத்துக்கொண்டு கவனமுடன்முடிச்சதனைபவித்திடாயே. ௪௫

அவிழ்க்கையிலேநெல்லதுவுந்தாமேறி அழகுடனேநெல்லதுவுங்கண்வழிந்தேறுந்தும், புளிதனிலேவெருசனங்கள்கூட்டத்தோடு பொங்கமுடன்றனழைத்துக் தும்பல்சேர்த்து, பனிமதிகள்போன்றதொரு மார்தருக்குப் பண்பானஜாலமென்றுசொல்வாயப்பா, தவிதமுள்ள நெல்தனைசபையோர்முன்னே துப்புரவாய்பூமிதனில்கொட்டிடாயே



கொட்டியேபலபேர்கள் பார்க்கவல்லோ கொப்பெனவே ஜாலந்தனை மெல்லியமேலே, திட்டமுடன்றான் தெளிப்பாய்மைந்தா நீயும் தீர்க்கமுடன் நெல்லெல்லாம் பொரியேயாகும், சட்டமுடன் பொரியெடுத்துப் பார்க்கும்போது, சார்பானநெற்பொரியும் மெய்பதாச்சு, வட்டமுடன் நெருப்பில்லாப் பொரியுமாச்சு மகத்தானவித்தையது ஜாலமச்சு. ௪௭

ஜாலமென்றால் நெருப்பில்லாப் பொரியுமாச்சு சாங்கமுடன்கண்டவர்கள் மயங்கலாச்சு, கோலமுடன் பொரியெடுத்துச் சபையோர் முன்னம் பொங்கமுடன்றான் கொடுத்துபரிசுவாங்கி, தாலமுடன்வையகத்தில், சித்தனைப்போல்சாலிதனில் வெருகாவமிருந்துகொண்டு, சீலமுடன் லோகவதிசயமுங்கண்டு, சிற்பரனைப் போலிருந்து பூசிப்பாயே. ௪௮

பூசித்துத்தானிருக்குங் காலந்தன்னில் பொங்கமுடன்மாந்தரெல்லா முன்னையப்பா, ஆசிதந்து வணங்கியேதான் அன்புகூர்ந்து அப்பனே பெண்களும்பதாம்புயந்தை, நேசித்துயுர்தமக்கு கருணைகூர்ந்து நெடுங்காலங் காத்திருப்பார்மாண்புமெல்லாம், காசமிகப் பொன்னையெல்லாம் தருவார்பாரு கடாட்சித்துமவர்களுக்கு கதிசொல்வாயே.

கசகசா மீன்ஜாலம்.

சொல்லவே புளிப்பானதி மைந்தாகேளு சொற்பெரிய காளாங்கிதனைநினைந்து, வெல்லவேசினை யுள்ளமச்சந்தன்னை விருப்பமுடன்றுணெடுத்துப புளிதவாமேனே, புல்லவே பனிநீரைத்தானெடுத்துப்புகழா கசினைதனக்கு நித்தியந்தான், செல்லவே ரவிதனிலேகாயுக்குதாக்கு செம்மனுடன் சூரியனும்வபேப்பான்பாரே. ௫௦

லபேத்துமே சினைதானும் பனிநீர்தன்னை வளமுடனேதான் குடித்து நிற்குமப்பா, பசிப்புடையசினை யெல்லாமுதிர்த்துக்கொண்டு பட்சமுடன் கசகசாவில் கலப்பாயப்பா, சமிப்பினதி பாவனிதனிலமைத்துமேதான்சட்டமுடன்பதனமதாய்செய்துகொண்டு, கவிதனிலே வெகுமாண்பர் கூட்டத்தோடு களிப்புடனே ஜாலமதுசெய்குவாயே.

செய்யவென்றால் ஜாலமது மாந்தர்கேளு செம்மண்ணுதோட்டியொன்றுபாண்டமப்பா, துய்யநல்ல சலமதுவும் பாண்டந்தன்னில் தும்புரவாய் நிறையவிட்டுபுகலக்கேளு, வையவேபாணிதனை திறந்து மைந்தா பாலகனேபாரினிலே வெகுபேர்காண்க, வையகங்களாரியதிக்கத் கசகசாவை வன்மையுடன்றனெடுத்துக் கொட்டுவாயே. ௫௨

கொட்டையிலே ஜனங்களெல்லாம் மயங்குவார்கள் கோடியிலே புத்தியாளொருவனுண்டு, சட்டமுடன் மற்றோர்கள்காணாப்பாதார

ணியில் காண்பதுவுமரிதேயாகும், திட்டமுடன்பாண்டமதை மூடிப் போடுதீர்க்க முடனேறை நாழிகைதானப்பா, வட்டமுள்ளபாண்டமதை திறந்துபார்க்க வளமானசிலையதுவுமீனுமாச்சே, ௫௩

ஆச்சப்பா சிலையெல்லா மீனுமாச்சு வப்பனேசகசாமின்று போச்சு,நீச்சப்பா சிறுமீன்கள்பொடிகளப்பா நிலையானபாண்டமதில் மேயலாச்சு, மேச்சப்பாபொரித்த தெல்லாஞ் சினைதான்கெட்டி மேன்மையுள்ளசகசா சொத்தையென்று, ஆச்சரியமாகவல்லோவுரைப்பாயப்பா வருண்மைந்தாமெய்யென்று நம்புவாரே. ௫௪

நம்பியேமாண்பரெல்லா மேக்கங்கொண்டு நடுங்கி பிரமித்து சோபித்தேதான், வெம்பியேமூசம்வாடி புளங்களித்து வேகமுடனே சிரமிகவுஞ்செய்து,நம்பியேயென்தன்குரு நாதாபோதா தாரணியில் ஆனைப்போலசித்தமுண்டோ, கும்பியேகைகுவித்து வுளங்களித்துக் கொப்பெனவே காலதனிலேபணிகுவாரே. ௫௫

பணிகுவார் யென்தன்குருநாதாவென்பார்பாரினிலேவெகுகோடிசித்தவென்பார், தணிவுடனேஞாலமல்லகிருஷ்டியென்பார்தோய்ந்தபொருளுள்ள தொருகருவேயென்பார், கனிவுடனே வாயாதிசரப் பங்கொண்ட கைலாசக்ரகமுனி கடவுளென்பார், மணிபோன்றலே கருகு விவர்தானென்பார் மாசற்ற சற்குருவாமென்பார்பாரே. ௫௬

எனுமிச்சம் பழவித்தை.

பாரப்பாயின்னமொரு கருமானங்கேள் பாரினிலேயெல்லவரும் பயந்தோட, ஆரப்பா வாச்சரியமானவித்தை வப்பனே கருவுள்ளான நிவான்பாரு, சீரப்பாசிரசிவாமெழுகினாலே சிறப்புடனே கத்திபொன்று செய்வாய்தானும், நேரப்பாசெர்பருத்தம் சப்பார்த்துப்பூசெடிதான செய்பசளைப்பழத்தை வாங்கே. ௫௭

வாங்கியேசார்ந்திமிர்த்து மன்னனேகேளு மகத்தானயிரும்பினிடத்திமேலே, தாங்கியேகிரியாதே புத்திவானே துடிப்புடனே சாறதனைப்பூசிப்பூசி, யாங்குபெறாவிதனிலே காயவைத்துப் பான்மையுடன் கத்தனைப் பதனம்பண்ணி, சாங்கமுடன்சபைகூட்டி மைந்தாகேளு சட்டமுடன் ஜாலம்விலைபாடுவாயே. ௫௮

ஆடுவாய் சபையார்முன்செப்பக்கேளு வப்பனேயோர் சிறுவன் புத்திவானைப், தேடிகொண்டுவந்து கூட்டத்துள்ளே தெளிவுடனே யவன்கழுத்தில் சீப்பதனை, சாடியேகழுத்திலே கிம்பழத்தைச் சட்டமுடன் றான்றரித்து கயறுபூண்டு, வாடியேதிரியாமல் மயங்கிடாமல் மன்னவனே கத்திகொண்டேரிகுவாயே. ௫௯



அரிவையிலே யெனுமிச்சம் பழாசத்தான் வப்பனே ரத்தமது போலேசாயும், கிரியையிதுமெய்க்கிரியை சாலவித்தை கீர்த்திவுள்ள வித்தையிதுவென்பார்பாரு, சரியானசெகஜால மிதுவேயென்பார்தரணியில் செய்பவர்களாரு முண்டோ, குரியானரத்தமது ஜாலவித்தைக் கொற்றவனே கழுத்தறியும் வித்தைதானே. ௬௰

தானான வித்தையிது சூட்சம்சூட்சம் தாரணியில் யாரேனும் காண்பதுண்டோ, கோனானகாலாங்கிநாதரப்பா கொற்றவனுரைத்தனுக்கு வுபதேசித்த, தேனானவித்தையிது தேசிவித்தை ஜெகதலத்தில் கோடிபேர் மயங்குவார்கள், பானானபராபரியாள் கடாட்சத்தாலே பாலகனேயுர்தமக்கு யோதினேனே. ௬௧

ஓதினேன்ஜாலமென்ற வினோதஜாலம் வுத்தமனேவையகத்தோர்பிழைக்கவென்று, நீதியுடனுர்தமக்குச் சொன்னேன்யானும் நிட்களங்கமாகவல்லோ வுரைத்தேனப்பா, பாதிமதிதானணிந்த தம்பிரானே பாருலகில் சித்தனைப்போலிருந்துகொண்டு, சோதிமயங் காணுதற்கு சூட்சாசூட்சம் தொல்லுலகில் காண்பதற்குவழிகொள்வாயே.

கொள்ளவென்றால் குருபதத்தின் கொள்கைவேண்டும் கோளாறுதானகற்றி நடக்கவேண்டும், எள்ளளவும்பொய்சூது கபடதந்திரம் யென்மகனே மனந்தனிலே நண்ணலொப்ப, புன்னியயிலேறிவரும் புனிதவானை புகழுடனே யெந்நாளும் நினைக்கவேண்டும், விள்ளவேயவருமக்கு வுபதேசிப்பார் வித்தகனேயெல்லோரும் போற்றுவாரே

பாண்டம் சலமில்லாமல் சாதம்சமைம்பது.

போற்றுவாரின்னமொரு கருமானங்கேள் பொங்கமுடனுர்தமக்குக் கூறுவேன்யான், ஆற்றலுடன் காலாங்கிநாதரோடு வன்புடனே வனஞ்சுத்திவருகும்போது, சாற்றுடனேவனந்திரங்கள் சுற்றும்போது கண்மணியேயென்தனுக்கு களையுண்டாச்சு, நீற்றலுடன் காலாங்கி யென்னைப்பார்த்து நீட்சியுடன் களைபோகவினைத்திட்டாரே.

கினைத்துமேவரிசிதனை கொண்டுவந்து நீதியுடன்காலாங்கி நாதர்தாமும், புனைப்புடனே சில்லதனிலரிசி கொட்டிப்புகழுடனே தோளாந்திரமாகவல்லோ, சினைப்பதற்குவரிசிக்கு நாலுகொண்ட சிறப்பான பிடமதுவுமதிகம்விட்டு, பனைப்புடனேதான் முடிந்து வாந்தோரான் தான்பட்சமுடன் மணல்தனிலேபதிந்திட்டாரே. ௬௫

பதிந்துமே முடிச்சிபின்மேல் மணலைக்கொட்டி பாங்குபெறதீபதனை மேலேமூட்டி, அதிந்திமேயோர் சாமமெரித்தபோது வப்பனே யாற்றுநீர் கசிந்துமேதான், துதிந்துமேயரிசியது பூறலாகுதப்பாளி

ன்னிறம்போலே சாதமாச்சு, முதிர்ந்துமேபோகாமல் பதத்தெடுத்து
முத்தமனே யெந்தனுந்ருந்தந்தார் தானே. ௯௬

தானான காலாங்கிநாதர்தாமும் தன்மையுடனெக்கமக்குகொடு
த்தஜாலம், கோனானகுருகொடுத்த ஜாலமப்பா கொற்றவனே யுந்த
னுக்கு பாலும்தந்தேன், பானனபராபரியாள் கடாட்சத்தாலேபாவி
த்தேனுந்தமக்கு மிந்தப்போக்கு, கோனானஜாலமது யிந்திரஜாலம்
தேற்றமுடனுலகுதனில் செய்வாய்பாரே. ௯௭

பாரப்பாவரிசியுற சாதமப்பா பண்புடனே கண்டவர்களதி
சயிப்பார்கள், நேரப்பா பாண்டமில்லா வித்தையப்பா நெடிதானதந்
திரமாஞ் ஜாலவித்தை, ஆரப்பாசெய்வார்க ளிந்தபோக்கு வப்பனே
யாமுனக்குச் சொன்னதீதே, சேப்பாவுலகுதனில் சித்தனைப்போல்சிற
ப்புடனே தாமிருந்து வாழ்வாரே. ௯௮

ஆடையிலேவையகத்து மாண்பரெல்லாம் பப்பனே யிந்திரமாஞ்
ஜாலமென்பார் கூடையிலே, வெகுபேர்கள் மாண்பர்தானும் குறிப்பு
டனே யிச்சாலஞ்செய்துபார்ப்பார், தேடையிலேபாண்ட மில்லாகல
மில்லா தேசதனில்வித்தையிது சொகுசுமெத்த, கூடையிலேசபைகூ
டிசெய்துபார்த்து நீதியுடனுந்தனையும் வணங்குவாரே. ௯௯

வணங்கியே யேவல்களு மிகவுஞ்செய்து வஞ்சலியாய்மிகச் செய்
துவன்பாயப்பா, இணங்கிய சோடசோபசாரஞ்செய்து யென்கு
ருவே யென் சாமியென்பார்பாரு, மணங்கமழுந்தாமரையை வடிப
ணிந்து வையகத்திலெப்போதும் சதாசித்தந்தான, பணங்காசுமித்
தந்துபல வாயிரத்துபாலகனை யெப்போதும்போற்றுவாரே. ௱

போற்றுவாருனைநித்தம் புண்ணியவானே பொங்கமுடன் சதா
காலம்பணிவார்பாரு, சாற்றலுடன் திரிகாலம் பூசைகொள்வார் சதா
நித்தம் யேவல்களு மிகவேகொள்வார், ஆற்றலுடனித்தனைப்போல்
நீயுமப்பா வப்பனே யெப்போதுமகிலபூண்டு, நீற்றலுடனேயோ
கம்பூண்டுமெல்லோ நீதியுடனிருந்துகொண்டு நிலையகாணே. ௱௧

ஆட்டுக்கடா பண்ணினஜாலம்.

காணவே யின்னமொருமார்க்கம்பாரு கருவானஜாலமப்பா வார
கஜாலம், பூணவேகடா வொன்றுவாகமொன்று பொங்கமுடன்கொ
ண்டல்லோ செப்பக்கேளு, தோணவேசபைகூட்டி வேந்தர்முன்னே
தோற்றமுடன் டோலியென்றமேனமப்பா, காணவே டோலிக்குள்வ
ராகந்தன்னை காட்டமுடன் வாய்கட்டியடைத்திடாயே. ௱௨



அடைத்துமேடோலிக்குயிருபக்கந்தான் அடவாக வாயிறுக்கி
க்கட்டிப்போடு, படைமுகமும்பார்த் திருக்கசேஷமென்றுபாலகனே
மனதிற்கு வுகந்தபாலன்பன், நடைகூடிசேஷப்பாபாலனுகசற்பனையவ
தெரிந்தவனும் தேர்ந்தெடுக்க, விடைதனக்குவுகந்தவனும் ஞான
மோதிவித்தகனே கழுத்திலிலேடோலிமாட்டே. ௱௩

மாட்டியேடோலிதனை யடிக்கச்சொல்லி மன்னவர்கள் பார்த்தி
ருக்க நீயுமப்பா, கூட்டமுடன்வாடகனை சபையோர்முன்னேகுறிப்
பாகக்கந் திகொண்டுவெட்டுவாய்நீ, தேட்டமுடன்வாடுதானவார
கமாகும் தெளிவாகவுதிரமதுபூமிதிற்குய்நீட்டமுடனவாடுதுவும்ரூப
மாதிநீலையான வாரகமதுவாரும்பாரே. ௱௪

பாரென்று சொல்லிபல்லோ பாலர்மெச்ச பாரினிலேதிரைசொ
ன்டுமைந்தாநீயும், நேரேதான் டோலிதனையடித்துக்கொண்டு திடீ
ங்கமாகவல்லோ சபையார்முன்னே, வேரேதான்வுள்ளிருக்கும் வார
கந்தன்னை விட்டல்லோவாடுதனை யுள்ளேபோடு, காரேதானவாரமே
யிறுக்கிக்கட்டி கலப்பெடுவெதிரையதனையவிழ்த்திடாயே. ௱௫

அவிழ்த்துமேசபையார்முன் வாரகந்தன்னை யக்மனேயவிட்டு
விடும்பாயிப்பார்கள், புவிதனிலேயிந்தவித்தை ஜாலவித்தை புகழான
வித்தையிதுகாணப்போகா, அவிதமுள்ளஜாலமது தந்திரஜாலமதுப்
புரவாய் காண்பதுவேமரிதேயாகும, குவிதமுள்ளடோலியது வித்
தைதன்னைக்குவலயத்தில் காணார்கள்மட்டிமாடே. ௱௬

மடோன வித்தையிதுமகிமையப்பா மகிதலத்திலெவராலும் கூ
றப்போமோ, கூடானகூடுவித்தை பாயும்வித்தைதக கூறிநேனவைய
கத்தில் நீதவித்தை, தாடாண்மையைகொண்ட தொருவாரகவித்தை தா
ரணியில் யாரேனுஞ்செய்வாருண்டோ, பாடாணதந்திரமாம ஜாலப்
போக்குபாலித்தேன் பாலருக்கள் பிழைக்கத்தானே. ௱௭

ஆஞ்சநேயர் ஜாலம்.

தானானயின்ன மோருகருமானங்கேள் தன்மையுள்ள வாஞ்ஜ
நேயர்பிடித்துவந்து, கோனானகுருதன்னையே நினைந்துகொண்டுகொற்
றவனே சிற்றுமனைக்குவிந்துதானும, தேனானவித்தையதை யெடுத்
துக்கொண்டு தேற்றமுடனாசனத்தின் வழிபதாக, மானானவயது வி
றைகொள்ளுமட்டுமகத்தான கொட்டைதனை பொதித்திடாயே.

பொதியவே குழிவெட்டிவாஞ்சநேயர்பொங்கமுடன் தான்போ
ட்டுமண்ணைமூடி, விதியானமார்க்கமதுபோலேயப்பாவித்தகனேநாள்

தோர்றும்ஜலத்தைவிட்டு, பதியானநாள்கடந்து பார்த்தாயானால்பால கனே செடியாகும்பண்பாய்கேளு, நதிபுடனேகாயதுவும் காய்த்த பின்புநூய்மையுடன் வித்ததனையெடுத்திடாயே. எகூ

எடுத்து மேதயிலமதுவாட்டியப்பா யெழிலானதயிலமதை பத னம்பண்ணு அடுத்துமே யழிஞ்சியின்றன்றயிலக்கூட்டிவப்பனேபா ணிதனி லடைத்துநீதான், விடுத்துமேவிடுதிபொன்று மச்சிபொன் றுவிரிவானமாளியதுவீட்டுக்குள்ளே, தொடுத்தகொருவிளக்கதனில் தீபமேற்றி தோற்றமடாவுன ரூபங்குரங்குமாமே. அ0

ஆமப்பாவெளிநின்றமாக்தற்கெல்லாமப்பனே!தோற்றமடாகு ரங்குரூபம், போமப்பாவுள்ளின்று பேசும்போதுபோனரூபமதுகு ரங்குபோலாம்,நாமப்பாவெளிநின்றுபேசினுக்கால்நாயகனேநீபுமொ ருமனிதனப்பா, தாமப்பாயிந்தபடிஜாலஞ்செய்துதாரணியில்பிழை ப்பதுவுமதிதமாமே. அக

அதிகமென்றவித்தையிதுயார்தான்காண்பார்அன்பான புத்தியு ள்ளாமறிவான்பாரு, துதிதமுள்ளகருவினதுஜாலப்போக்கு தூய் மையுடன் காணுபவன்சித்தனப்பா, பதிதனிலேயிந்தவித்தை செய் துமல்லோபாலகனேகீர்த்தியது கொண்டுமேதான், மதிமயங்கவெல் லவருங்கண்டுயேங்கமானிலத்தி லெப்போதும்துதிகொள்வாயே.

கொள்ளவே யின்னமொருமார்க்கம்பாரு கூறுவேன்பென தை யர்காலாங்கிநாதர், உள்ளபடிகண்டதொருவதிசயங்களுந்தமனையா னுமது வெகுவாய்ச்சொல்வேன், வள்ளலுறைதென்னிலங்கைப் பதி யிலப்பா வளமானவதிசயங்கள் கூறுவேனையான், தென்னுறைபாந்து வாபாத்திலிலங்கையப்பா தெளிவானபதியகிமைகூறுவேனே. அரு

கூறுவேனிலங்கை பதிமார்க்கந்தன்னைகொற்றவனேபுகிப்பாணி மைந்தாகேளு, தேறுபுகழ்ஈவகண்டந்தன்னிலப்பாதேர்வேந்தாஜர் களின் கோட்டைதன்னில், வீறுபுகழிராவணனுர் கோட்டையப்பா விண்ணுறி கோட்டையதுவிளம்பப்போமோ, மாறுபடாக்கோட்டை யதுவளப்பஞ்சொல்வேன் மகத்தானவதிசயங்கள மெத்தவுண்டே.

இலங்கையழிவுகூறல்.

உண்டான தேசமதுயிலங்கையப்பா வுததமனேவெகுகோடிகா லமுன்னே, கண்டேனேகுளிகையதுபூண்டுகொண்டுகண்கொள்ளாக் கோட்டையதுயாவுங்கண்டேன், அண்டர்முனிராட்சதர்களிருக்கு ங்கோட்டைவாசனது ராவணனுர்கோட்டையப்பா, சண்டமாருதம் போலக்கோட்டையுண்டுசாங்கமுடன்கற்கோட்டைகூரொன்றுதே



ஒன்றானதேசமது நூறுகாதமுந்தமனே காவென பூமியெல் லாம் அன்றூர்ந்து பார்க்கவொண்ணு கோட்டையப்பா வழகான கோபுறங்கள்மாபுரங்கள், கன்றும்பூமியது வையகந்தான் சுற்றி லும் சாகரமோவலைகள்மோதும், தன்மையுடன்யெங்காளும் வாடை க்காற்று சாங்கமுடனிருப்பதுவுங் கண்டிட்டேனே. அசு

கண்டதொரு தேசமதுயிலங்கைநாடுகாசினியி லப்பதிபோலெ ங்குமில்லை, உண்டானவதிசயங்கள் மெத்தவுண்டுவுலகந்தி லெங்கே னுங்கண்டதுண்டோ, திண்டானகோட்டைக்கு வகழிமத்தி திறளா னசாளரங்கவாசலுண்டு, தண்டானவகழிக்குங் கடலுக்குந்தான் நா க்கானவழிதட்டுமுண்டேபாரே. அஎ

பாரபபா சலமதுவும்போக்குவுண்டு பாங்கான கோட்டைக்கு வகழிக்குந்தான், சோப்பாசாகரமுவழியுமுண்டு நிலையானயிலங்கை பதி கோட்டைதன்னில், ஆரப்பாவெகுகாலமிப்படியேயுண்டு வப்ப னே வோடமதுபோவதுண்டு, கூரப்பாநெடுங்காலமிப்படியேயப்பா கூரானகோட்டையது யிருக்குந்தானே. அஅ

தானான கோட்டையதுவாசல்தன்னில் தார்வேந்தன் மன்னன துசெங்கோல்தன்னில், தேனானமனோன்மணியாள் ரூபம்போலதேர் வேந்தர் சபைமுன்னே தோற்றலாச்சு, மானானவசரீரியாக்கு தானும் மன்னவர்முன் தன்செவிக்குகேட்கலாச்சு, கோனான வேந்தனுமே திடுக்கிட்டேங்கி கொற்றவனும் பயந்தல்லோவிழுந்திட்டாரே. அகூ

இட்டாரே தேர்வேந்தராசர்தாமு மெழிலான கோட்டைக்கு ன் மத்தியானம், பட்டதொருராசர்முன்மாண்பரெல்லாம்பயந்தொ டுங்கி கண்கலக்கமிட்டபோது, அட்டதிசைதன்கலங்கி சாகாந்தா ன் வடியோடே யலையதுவுமேலேபொங்கி, சட்டமுடன்கோட்டைக் குள் சாகரந்தான் சடுதியிலே பொங்கியதுமுழுகலாச்சே. கூ0

ஆச்சப்பா கோட்டையதுமுழுகலாச்சு வப்பனேராஜாதி படை கள்தாமும், போச்சப்பாகோட்டையகு மண்மேடாச்சு பொங்கமு டன் மறுயுகத்தில் சாகாந்தான், பாச்சலுடன்பொங்கியல்லோ மண் ணுதல்கொண்குடனே நிலையாழிசாகரத்தில், வீச்சலுடன்கோபுரங் கள் மாபுரங்கள் விண்ணுறிக்குள்ளாக மறைந்துபோச்சே, கூக

மறைந்துமேயிலங்கையது போனபின்புமகத்தானகோட்டைக் குள்ளிருக்கும்வாசல், திறந்துமேகதவுகளும் கலசத்தோடு திரையா ழிக்கட லதனில் சொந்தானும், உறைந்ததொருகோபுரத்தின் கலச

மெல்லாம் வற்றவொருகறையமிழியேகாணலாச்ச, இறையோரவனுமிலக்கைதன்னிற் றிட்டமுடனிருப்பரெனப்பேருண்டாச்சே.

பேறுண்டாய்வையகத்தில் மாண்பரெல்லாம் பேருலகில் வெப்போதுமிலங்கைதன்னை, சீருடனேபோற்றியது மிகவுஞ்செய்து சிறப்புடனே யென்னாளுந்துதியேசெய்து, பாருலகச்சினகபதி யிருக்குதென்றுபாண்மையுடன் வையகத்தோர் துதிப்பார்கண்டீர், தாருலகமழிந்து மல்லோ சேனையெல்லாதப்பாமல் கடவுள்பதிசேர்ந்தார்காணே. ௯௫

அரிசிஜாலம்.

காணவே யின்னமொருமார்க்கம்பாரு கருவானஜால மென்றுலரிசிஜாலம், தோணவேயரிசிதன்னை யெடுத்துக்கொண்டு தோற்றமுள்ளபடியொன்று பாத்திரந்தான், மாணவேபடிநிறைய வரிசியிட்டு மன்னவனே கூவெழுத்தாணிகொண்டு, நீணவேவிட்டேனகன்செய்து மல்லோ நினவாக வெழுத்தாணிநன்னொவாங்கே. ௯௬

வாங்கியேசபை யோர்றன்னைபேரம்பேர் வளமாகக்காணவழைத்துசெப்பக்கேளு, எங்கியேயெல்லாரும்பார்க்கெதாடுக்க வெழிலான கூரெழுத்தாணிதன்னை, ஓங்கியே ரூக்தியல்லோ தூக்குவாய்நீவுத்தமனே படிதனைமேலேலாதும், தாங்கியேநிரியாதே மைந்தாகேளு தாப்புலாய்ஜலமது செய்துகாட்டே. ௯௭

காட்டையிலே யெழுத்தாணிதானுமப்பா கருவானவரிசிதன்னைப்பிடித்துக்கொண்டு, வாட்டமுடன் நிற்கின்றவண்மை தன்னை வையகத்தில் கண்டவர்கள் மயங்குவார்கள், கேட்டமுடனரிசிதன்னைக்கொட்டி காட்டச்சிறமுடனே கேட்பவர்களாமேயானால், நீட்டமுடன் கொட்டியதைக்காட்டுவாய்நீ நிஜமென்று ஜாலமதைமெய்யென்பாரே

பாரேராசன் லோகமெல்லாம் பிரமித்தேதக்க பாகதியேயுனைக்கண்டு வணாவிப்பார், சீரோதனுக்குநமக்கு சிறப்புமுண்டு சிற்பரனைப் போலாகவெண்ணியல்லோ, நேரேதான்திரிகாலபூசையோடு நேதியுடனுபசாரமெத்தவுண்டு, வீரேதான்சதாகால முனைப்பணிந்து விருப்பமுடனெப்போதும் துதிப்பார்தாமே. ௯௮

கோழிமுட்டைபுட்டிகளிலடைத்தல்.

ஆதியானயின்னமொருஜாலங்கேளு அப்புவாய்கோழியென்றமுட்டைதானும், பதியானவாணமது யேலேயேற்றிப் பாங்குடனே காரமென்றகாடிதன்னில், விதியானமூன்றுநாளூறப்போடு விருப்பமுடன் மூன்றுநாள்கழித்தபின்பு, மதிபோன்றதுனிராய் வொசுபாத்திரம் மதிப்புடனே போட்டடைக்க விதிதான்கேளே. ௯௯



கேளப்பா சின்னவாய்க் கொண்ட பாத்திரம் செடியான பாத்திரமாம் வாயினுள்ளே, பாளப்பாபோகாமல் முட்டைதன்னை பான்மையுடன் கையினுற்றள்ளமுட்டை, வீளப்பாதோல்போல வுள்ளேபோகும் விருப்பமுடன் மறுபடியும்பாண்டத்துள்ளே, நாளப்பா போகாமல் ஜலத்தைவிட்டு நாயகனே யொருநாழிபொருத்திடாயே.

பொறுத்துமே ஜலமதனை யிறுத்துப்போடு பொன்னவனே யெப்போதும்போலேயப்பா, நிறுத்துமே முட்டையது கல்லுபோலாம் நீமகனே பாண்டத்துள்ளுறுட்டிக்காட்டு, திருத்தமுடன் முட்டையதுமகிமைவித்தை தீர்க்கமுடன் யாரேனுங் காணமாட்டார், பொருத்தமுள்ள முட்டையென்ற வித்தைதானும் பொங்கமுடன் மாணுக்கன் பிழைக்கத்தானே. ௬00

பசுவுபால்கறக்காதிருக்க ஜாலம்.

தானை யின்னமொரு ஜாலமார்க்கம்தண்மையுடன் கூறுகிறேன் மைந்தாகேளு, தேனுனமனோன்மணியாள் கிருபையாலே செகதலத்திலனேகவித்தைச்செப்பக்கேளு, கோனுனகாலாங்கிநாதர்தம்மால் குவலயத்தில்கோடியுகமிருந்துமேதான், பானுனவதிசயங்கள்மிகவும் சொல்லிப் பாலித்தாரெந்தனுக்கு கோடியாமே. ௬0௧

கோடியாம்பசுமாடு யிருக்குங்கூட்டம் கொற்றவனே நீசென்று மைந்தாபாரு, தேடியே கரும்புலியின்கொழுப்புதன்னைத் தீவிரமாய் கொண்டல்லோ காற்றுவாடை, நாடியேயோரிடமா வைத்துகொண்டுநலம்பெறவே கோனினருகேசென்று, பாடியேபால்கறக்கச் சொல்வாயப்பா பாலகனேமாடெல்லா மோடும்பாரே. ௬0௨

ஓடியே பால்கறக்கமாட்டாதப்பாவுத்தமனே சமுசாரியவான்பாரு, தேடியேமாடெல்லாம் பிடிப்பான்பாரு தேசத்தில்மாடெல்லா மோட்டங்காட்டி, நீடியேயவனிடத்தில்வாராதப்பா நிட்சயகாலங்கிஜாலமப்பா, கூடியே ஜனங்களெல்லாம் கூட்டமிட்டுக் கொப்பனவே மயங்கியல்லோதியங்குவாரே. ௬0௩

தியங்கியே யேமாந்து நிற்கும்போது நீமுடன் கோனரின்பக்கல்வந்து, மயங்கியதோர் கோனனைக்கண்டல்லோதான் மார்க்கமுடன்தானழைத்து மன்னுகேளு, நயம்படவேயவன்றனக்குகுறிகள்சொல்ல, நன்மையுடன் செம்பொன்னைக்கேட்பாயப்பா, செயம்பெறவே காளியிட சாபத்தாலே செகதலத்தில் மாடெல்லா மோடலாச்சே.

ஆச்சப்பாசாபத்தைநிவர்த்திசெய்து வப்பனேகாளிபூசை செய்யவேண்டும், மூச்சடங்கிபோனதொரு மாடெல்லாந்தானுத்தமனே

மங்கைதவந்துசேரும்பாரு, பாச்சனுடன் வெங்கைபிடகொழுப்புதன்னைப்பாலகனே நீ மறைவாய்வைத்துவிட்டு, கூச்சனுடன் பாவைபாய் மங்கைமாட்டைக் கொப்பனவேதானழைக்க வருகும்பாரே. ()

பாரப்பாமங்கையெல்லாஞ்சேர்ந்தபின்பு, பரிவாகக்காளிக்குப் பூசைபோடு, நேரப்பா பூசையது சேரும்போதுகெடிதானசன்னதங்கள்மிகவுங்கூறி, ஆரப்பாபடர்ந்தவனந் தனிலிருக்குமப்பனேகோனேசொல்லக்கேளும், சீரப்பா யுந்தமக்கு குறைவுமில்லை சிறப்புடனேமாதமொரு பூசைசெய்யே. ௪௦௬

செய்யவே காளிக்கு காணிக்கைப்பா செப்பியதோ ருத்தாரப்படிதானப்பா, உய்யவே யெப்போதும் பூசைமார்க்க முத்தமியே போடுகிறேனென்றுகூறி, பையவே கைப்பணங்கள் கட்டியேதான் பான்மையுடன்காணிக்கைதருவேனென்று, வெய்யவேகற்பூரவாலத்திகொண்டு விருப்பமுடன் போற்றியது செய்வாய்தாமே. ௪௦௭

தாமானபூசைகொண்டகாளிதானுந் தன்மையுடன்சந்தங்கள் வந்தாற்போல, கோமானு மிடையன்முன் னெதிரேநின்றுகொற்றவனேகுறிசொல்லுங் காலந்தன்னில், சாமானமானதொருகுறிகளல்லோதாரணியிலிவர்போலுஞ்சித்துமுண்டோ, போமேதான்சகலசித்துங்கடந்தஞானிபொங்கமுடன் குறிசொல்லுஞ் சித்தென்பாரே.

என்பாரேகரும்புலியின் கொழுப்பின்மார்க்கம் யெழிலானவித்தையிது கூறப்போமோ, அன்பான தோழனவ னிருக்கவேண்டுமவனுக்கேமர்மங்கள் கூறவேண்டும், பன்மையாய்பலபேர்கள் கூடுவாரான்பூர்க்கையிலே கர்மிகளுதர்மிகளுமுண்டு, நன்மையுடன் வெகுவார்த்தை பேசியல்லோ நலம்பெறவேகருதனையேகேட்பார்காணே

தானவேமர்மத்தைக் கூறவேண்டாம்காசினியில்மகிமைகள்மெத்தவுண்டு, பூணவேமர்மத்தைவெளிகாட்டாமல் பொங்கமுடன்ஜாலமதை செய்துகொண்டு, நாணவே வையகத்தில் வித்தைசெய்து நன்மையுடன்பிழைப்பதுவேமெத்தநன்று, தோணவேயிப்பாகமைந்தாபாரு தோற்றமுடனுந்தமக்கு வுரைத்ததாமே. ௪௧௦

உரைத்தேனேபுலிப்பாணிமைந்தாபாருவுத்தமனே பின்னமொருபாகஞ்சொல்வேன், கரைக்கின்றமருந்தினிட ஜாலமப்பா கண்கண்டவித்தைபடாகழறப்போமோ, துரைத்தனத்தார் மெச்சுகின்றஜாலம்ப்பா தப்புரவாய் நானுரைப்பேன் தப்பபால, கரையானகுணங்கண்டுமேடுவுகண்டு கட்டழகாஜாலமது செய்வாய்தானே. ௪௧௧



தானான வித்ததுதான் பேன் கொட்டையப்பா தாக்கான ஜாதியதுபெருவித்தாக, மானானவித்ததுதான் கொண்டுவந்துமகத்தானவக்கினியில் வறுத்துப் போடு, தேனான வித்ததனை வறுத்தபின்பு தெளிவாகப்பொடியம்மி தனிலரைத்து, கோனான குருபதத்தை மனதிலெண்ணி கொற்றவனே யதிற்சேர்க்க வுகமைகேளே. ௪௧௨

கேளேதான் புலிப்பாணி மைந்தாகேளு கெடியான பூநாகமண்ணத்தோடு, பாளேதான் போகாமல் கிளறிப்போடு பாங்காகக்கொதிபிட்டுயெடுத்துக்கொண்டு, காளேதான்போகாமல் மத்தியானம் நலமானமடுவுதனில் மச்சங்கண்டு, ஆளேதா னம்மருந்தை நீரிலேதானப்பனே கரைத்துவிடு மைந்தாபாரே. ௪௧௩

பாரேதான் போதை யென்ற மருந்தினாலே பாங்கானமச்சமெல்லாந்தியக்கங்கொண்டு, சேரேதான் கரையோரம்வந்துசேரும் செயலானமருந்தினிடவேகத்தாலே, கேரேதான்ஜலந்தனைவிட்டு யெகிறிப்பாயும் கெடிதான மச்சமெல்லாங் கூறப்போமோ, வீரேதான் விஷமேறி மயக்கங்கொண்டு விழியட்டுபேருமல்லோ மச்சந்தானே. ௪௧௪

தானான ஜாலவித்தை யதிதவித்தை தாரணியில்சூட்சமதையறியாமாண்பர், கோனான காலாங்கிநாதர்வாக்கு குவலயத்திற் பொய்யாதுமெய்யேயாகும், தேனான ஜாலவித்தை செய்துமல்லோ தேசத்தில் பிழைக்க வல்லோமாணபருக்கு, பானானபராபரியாள் கிருபையாலே பாலித்தவித்தையதுபாண்மையாமே. ௪௧௫

பாண்மையா மிவ்வித்தை யறிந்துமைந்தா பாங்கானராசரிடஞ் சென்றுயானால், தேன்போன்ற ஜாலமதை மிகவாய்ச்செய்து தேற்றமுடனவர்மனதுங் களிப்புண்டானால், மேன்மையாமுந்தனுக்கு வேணதிவார் மேதினியி லுனைப்போலசித்துமுண்டோ, பாண்மையுடன் சிவராஜயோகஞ்செய்து பாலிப்பாய்வெகுகோடி வித்தைதாமே.

வித்தையாம் செகசாலவித்தையப்பா விருப்பமுடனுந்தனுக்கு வுபதேசித்தேன், சுத்தமுடன் ஞானுபதேசவித்தை சூட்சாதி சூட்சமெல்லாந் திறந்துவிட்டேன், நித்தமும்மே மதியமுமாதம் நிலையம்பூண்டு நீணிலத்தில் நீயுமொரு சித்தனைப்போல், சுத்தமாயேயென்னுரு மனதிலுன்னி கைலாயபதிபோலவாழ்ந்திடாயே. ௪௧௭

உடுக்கையுடைக்கஜாலம்.

வாழலென்று மின்னமொரு மார்க்கம்பாரு வளமான வித்தையது கருதானப்பா, தாழவே புலிப்பாணிமைந்தாகேளு தகமையுள்ள கண்மணியே புகல்வேன்பாரு, வேழ்மையாய் தேவதைகள் கூட்டத்தோடும் வெகுமாண்பருடுக்கோசைத் தன்னினோடும், சாழலெனும் வோசையது முறிந்துபோக சட்டமுடன்யாமுரைப்போம் வளமைகாணே. கக௮

காணவேபேயோட்டு மந்திரவாதி கனமானபத்துபேர் மாண்பர்கூடி, தோணவேசிலம்பங்கள் போடும்போது தப்புரவாய்க்கூச்சலுடன் போரேவந்தால், வேணவே மர்மங்கள் மனதிற்கொண்டு வேட்கையுடன் வுடுக்கைதனை வுடைப்பதற்கு, காணவேகெந்தகத்தின் திராவகத்தால் நலமாகக்குச்சிதன்னூற் கோடுபோடே. கக௯

போடேதா னெதிராளி காணுமற்றுன் போக்கான திராவகத்தைத்திட்டும்போது, நீடவே சவ்வென்றசர்மந்தானும் கிட்களங்கமாகவல்லோ வெந்துமேதான், கூடவே யிருக்குமந்த காலந்தன்னில் கொப்பெனவே யெதிராளிவந்துமல்லோ, சாடவேயுடுக்கைதனை யடிக்கும்போது சட்டமுட னுடுக்கதுவுங்கிழியுந்தானே. கஉ0

தானுனவுடுக்கையது கிழியும்போது தாக்கானயெதிராளிமாண்பரெல்லாம், கோனுன சற்குருவை மனதிலெண்ணி கொப்பெனவே மகதேவா வனிபயர்தான், தேனுனவுடுக்கையது கடிகைமுன்னே தெளிவான வோசையது பாடிற்றல்லோ, மானுன மயேஸ்வரியேயென்ன பாவம் மங்கையரே யெந்தனுக்குக் கூரென்றுரே. கஉக

பூசாலியின்பேரில்சன்னதம்வருதல்.

கூரென்றுசொல்லுகையில் பாலன்பேரில் கொம்பெனவே சன்னதங்களேகியல்லோ, ஆரென்றுயென்னுதேயெந்தன்மீதி லப்பனேசக்கலாதேவியப்பா, ஊரென்று யிந்தவூர்பதியுமல்ல வுத்தமனே வடகாசி வயோத்தியல்லோ, தேரென்ற பதிதனிலே விற்றிருக்கும் தேவியல்லோ சக்கலாதேவியாச்சே. கஉஉ

ஆச்சென்று சொல்லுகையில் பாலன்றனும் வன்பானதோழரெல்லாம்மொன்றுய்க்கூடி, பேச்சொன்றும்பேசாமல் பின்னோடாமல் பிரியமுடன் மனதுவந்து தேவியார்க்கு, கூச்சலுடன் குறைநீங்கி பெங்களுக்குகொம்பனேயே செய்தகுற்றங் கூறுமம்மா, பாச்சலுடன் மலைபேறிப்பதியைத்தேடிப் பாங்குடனே போகவென்று வரங்கேட்டாரே. கஉ௩



கேட்டதொருமாண்பருக்குத்தேவியாருங்கிருபையுடன்மனங்களித்துக்கூறும் வார்த்தை, நீட்டமுடன் யெதிராளிமந்திர தந்திரம் நேர்மையுடன் நீங்களல்லோ வறியாமற்றுன், வாட்டமுடன்பகையாளி செய்தகுற்றம் வண்மையுடனறிவதற்கு மனமிருந்தால், நாட்டிகமாய்ச் செம்பொன்னைத் தட்டில்வைத்து சட்டமுடன் கேட்டாலே விதிசொல்வேனே. கஉ௪

விதியான வழியதுவுங்கூறும்போது விருப்பமுடன் மாண்பரெல்லா மொன்றுய்க்கூடி, மதிமயங்கிச்செம்பொன்னை தட்டில்வைத்து மார்க்கமுடன் காணிக்கையோர்வையென்ன, பதிகடந்துமாண்பருக்குகருவின்மார்க்கம், பட்சமுடன் தாமுரைத்துபழியுந்தீர்த்து நிதியனைத்தும் பெற்றல்லோ ஜாலதந்திரம் நீதியுடன்சித்தனைப்போல்செய்வாய்பாரே. கஉ௫

பாரேதான் கருவறிவான் புத்திவான்தான் பாரினிலேமற்றவரோ காணப்போரார், நேரேதான்வுலகமதில் ஜாலதந்திரம் நேர்மையுடனிப்படியே செய்வார்பாரு, சேரேதான்கிட்டிருந்து கிகிகொடுத்து சேர்வையுடன் தேவதைகள் மார்க்கங்கண்டு, கூரேதான் வையகத்தில் சாலஞ்செய்து கொப்பெனவே மாண்பரெல்லாம் பிழைப்பார்காணே. கஉ௬

இதுவும் வுடுக்கைவுடைக்க.

காணவேயின்ன மொருமார்க்கம்பாரு கருவானபுலிப்பாணிமைந்தாகேளு, தோணவேவுடுக்கைதனை வுடைப்பதற்கு துப்புறவாய்க் கருமானமொன்று சொல்வேன், நீணவே வீரமென்றகாடிகாரம் நீதியுடன் தானெடுத்து மைந்தாபாரு, வாணமென்றவுடுக்கைதனைக்கையிலேந்தி வளமானகோடதுபோல் தீத்திடாயே. கஉஎ

தீத்துமே காடியென்றகாயந்தன்னால் தீரமுடன்கிறலது ஊறும்போது, வேத்துமேசவ்வதுவு வெந்துமேதான வேந்தாந்தத் தாயினது வுடுக்கைதானும், ஆத்துமேவெந்துனைந்து யிருக்கும்பாரு வப்பனே படுக்கைத்துமச்சந்தானும், சேந்தவுடன்கைதட்டியடிக்கும்போது கீர்த்தியுடன் வுடுக்கையது உடையும்பாரே. கஉ௮

உடைந்ததொரு வுடுக்கையதுகாணும்போது வுத்தமர்கள் மாண்பரெல்லாம் திடுக்கிட்டேங்கி, படைமுகமுந்தான்கலங்கி பொறிகலங்கி பாங்கான மாண்பரெல்லாம் மதிகெட்டேங்கி, கடையானமாந்திரீக தந்திரசாலம் கண்காணுவித்தையென்று கதறுவார்கள், விடையானபாலரெல்லாம் மெய்யெனறெண்ணி விருப்பமுட னதிசயித்து நின்றிட்டாரே. கஉ௯

பூசினிக்காய் சாலம்.

நின்றோரேயின்னமொரு மாற்கம்பாரு நிலையான புலிப்பாணி மைந்தாகேளு, வென்றிடவே மாணுக்கர் பிழைப்பதற்கு விருப்பமு

டன்சாலமது சொல்வேன்பாலும், குன்றனமலைக்கல்லு போலேப் பாகுழியானமண்பாண்டமொன்றுசெய்து, நன்றானவாபதுவுங்கலச ம்போலே நலமானசிறுவாயாய் செய்திடாயே. ௧௩௦

செய்யவேபாண்டமது கலசந்தன்னில் செயலான வித்தையது வெல்லோர்கான, பையவேபூசினியாம் புஞ்சதன்னை பாங்குடனே மண்பாண்டந்தன்னிலிட்டு, மெய்யுடனே சின்னவாய்க்கொண்ட பாண்டம் மெல்லெனவே பூசினிக்காய் வளர்ந்துமல்லோ, கொய்தபின்பு தன்னை யெடுத்துப் பாண்டந்தன்னை கொப்பெனவேரவிதனிலே வைக்கக்கேளே. ௧௩௧

கேளேதான் பாண்டமது ரவியில்வைக்க கொடியானகாயதுவும் பழமேயாகி, காளேதான்முத்தின தோர்பழமூர்தாலும் நலமானபாண்டமதிலுருளும்பாரு, சூளேதான் கலசமென்ற பாண்டந்தன்னை துப்புறவாய்ப் பதனமதுசெய்துகொண்டு, ஆளேதான்தலைமீதில்குடந்தலைவைத்து வன்புடனேசாலமது செய்வாய்தானே. ௧௩௨

தானனசபையேறி வேந்தர்முன்னே சட்டமுடன் மாணுக்கள் கூடிருக்க, கோனனவேந்தர்களும் திடுக்கிட்டேங்க சொற்றவனைபாண்டமதை முன்னிறக்கி, தேனனபூசினிக்காய் வேறங்கான்றதேற்றமுடன்சபையோர்முன் கொண்டுவந்து, பானனபாரபரியைமனதிலெண்ணி பட்சமுடன் சாலமதுசெய்துகாட்டே. ௧௩௩

காட்டவே தனக்குகந்தசிஷனுக கருவாகமர்மமதை யவனுக்கோதி, நீட்டமுடன் பாண்டமதையவன்கைதந்து நிறையவேசலமதனைக் கொடுவாவென்று, வாட்டமுடன் பாண்டமதில் சலமும்நிற்க வாகுடனே வனுவேந்தர்பார்த்திருக்க, நீட்டமுடன்மாமென்ற டோலிதன்னை நினைவாக யவன்கழுத்தில் மாட்டிடாயே. ௧௩௪

மாட்டியேதிரைவளைத்து மதியம்பூண மார்க்கமுடனெல்லவரும்பார்த்திருக்க, தாட்டிகமாய்ரவியதனி லிருந்துகொண்டு சட்டமுடன் பூசினிக்காய்த் தனையெடுத்து, நீட்டமுடன்டோலியென்ற கச்சைக்குள்ளே நினைவுடனே யாருமதுங்காணுமற்றன், பூட்டகமாய்ப் பூசினிக்காய்தனையெடுத்து பொங்கமுடன் டோலிக்குள் பொதிவாய் மூடே. ௧௩௫

மூடியேதிரை நீக்கிமைந்தாபாரு முனையான பூசினிக்காய்க்குடத்துள்ளேகி, ஒடியேகாயதுவும் பாண்டத்துள்ளே வுத்தமனையிருக்குகின்ற வயனம்பாரு, சாடியேசலமதனை யகற்றிப்போடு சட்டமுடன்பாண்டமதைத் திறந்துகாட்ட, வாடியேகுடத்துக்குள் காயைக்காட்டவன்மையுள்ள சாலமென்றுமயங்குவாரே. ௧௩௬



மயங்குவார் குடத்துக்குள் பூசினிக்காய் மார்க்கமுடன் சென்றதொருப்துமைகண்டு, தியங்கியே செகசாலயேந்திரசாலம் தீர்க்கமுடன்மாந்திரீக மிதற்கிடுண்டோ, நயம்படவேதாமுரைத்து மாண்பரெல்லாம் நாதாந்தசித்தனென்று நடுங்குவார்கள், செயம்பெறவேவித்தைபிது மதிகவித்தை செய்கிறதோர்வன்மைகண்டு பிரமிப்பாரே.

பாரேதா னிவ்வண்ணதந்திரசாலம் பாரினிலேசகுவாளி யறிவான்பாரு, வேரேதான் சாலவகைசெய்துமல்லோ நெடிதான பிரம்மலிகடந்தோன்போலே, சேரேதான்மாணுக்கர் கோடிமுன்னே செய்துமேதந்திரமாம்சாலம்போக்கில், நீரேதான்பணையமது மிகவேவாங்கி நீதியுடன்பிழைப்பதுவுந் தருமமாமே. ௧௩௮

தருமமாஞ் செகசாலதந்திரசாலம் தாரணியில்பிழைப்பதுவேநீதியாகும், கருமமாமற்றொருகை தொழிலினாலே காசினியில் வெகுபாவமெய்தும்பாரு, மருமமதுயாருக்கும் வெளியிடாமல் மார்க்கமுடன் ஜீவனத்தைச்செய்துகொண்டு, சொரூபமென ஞானேபதேசந்தன்னை சத்தமுடன்பெறுபவனேசித்தனமே. ௧௩௯

சித்தனய்ப்பிறந்தாலும் சீர்வைவேண்டும சிறுலகில்பலபேர்கள் மதிப்பேவேண்டும், கத்தனங்காலாங்கி போலேகீர்த்தி காசினியிலவர் போலேபெறவேவேண்டும், நித்தமுமேமனோன்மணியாளருளே, வேண்டும்நீங்காததவத்துறதிகொள்ளவேண்டும், பத்தியுடன்சித்துமனமுறுதிவேண்டும் பாரினிலேநீயுமொருநீதிவானே. ௧௪௦

கற்பூரவித்தை.

நீதியாபின்னமொரு மாற்கம்பாருநிலையான கருமானமொன்று சொல்வேன், சோதியே சுடரானமதிவிளக்கே தோற்றமுடன்யாமுனக்குவுரைப்பேன்பாராய், ஆதியாம்கர்ப்பூரமணிவிளக்கை யப்பனே சாலமென்ற மணிதான்சொல்வேன், சாதியினிலுயர்ந்ததொரு பூரமப்பா தன்மையுள்ளபூரமது ஆலாத்தியாமே. ௧௪௧

ஆமேதானு லாத்திகர்ப்பூரத்தையடைவுடனே தானெறிக்க வன்மைசொல்வேன், நாமேதான்சொன்னபடி மக்கமாவி நலமானமாளிகையில் நடுமையத்தில், போமேதான்குடவிளக்கு தன்னையப்பா பொங்கமுடன் பத்தடியாந்தூரந்தன்னில், வேமேதான்விண்போகா வண்ணமப்பா விருப்பமுடன்பதிதனையேவைக்கக்கேளே. ௧௪௨

கேளப்பா புலிப்பாணிமைந்தாகேளு கிருபையுள்ள யெந்தனிருகண்ணேயப்பா, பாலப்பாபோகாமல்புத்திமானே பாங்கானகால

மொன்று செய்வாயப்பா, நீளப்பாப்திமுகத்திலிருந்துகொண்டுநீதி யுடன் கார்த்தியதுபூசைமார்க்கம், வேளப்பாரோயர்ளி முன்னதாக வேள்வியுடன் வோமமதுசெய்திடாயே. கசங

செய்யவே ரோயாளிபடிநிதானம் சேர்ந்தியுடன் பாகருண்டம் வளர்த்தும்போது, பையவேபூசை மூகம்கர்ப்பூரத்தி பாங்குடனே சாலமதுசெய்யக்கேளு, துய்யநல்லநீமுறுகல்பாஷாணத்தை துப்புற வாம் சலமதனில்வைத்துக்கொண்டு, மெய்புடனேசலமதனைக்கைவி ற்றேய்த்துமேன்மையுடன் பாஷாணம்பதனங்கொள்ளே. கசச

கொள்ளவே நீமுறுகல்பாஷாணத்தை கொப்பெனவே வெண் ணீறில்தான்கலந்து, விள்ளவேஓம்நமசிவென்றுஓதி மிக்கவேகர்பூரம் மேனிற்போடு, திள்ளவேசீஷனுக்கு கூறும்வார்த்தைதுடியான கர்பூ ரம் விளக்கில்லாமல், அள்ளவேகுதிகொண்டு தீபம்போலே வார்த்தா னே யெறியவென்றுவபயஞ்சொல்லே. கசரு

சொல்லவே கற்பூரம்விளக்கில்லாமல் துப்புறவாய்சோதியுடனெ ரியும்பாரு, வெல்லவேதீபமது தூரநிற்கவேநாக்கத்தாயினது கடா ட்சத்தாலே மெல்லவேயெறிந்த வண்ணத்தன்னைப்பார்த்து மேதினி யில் மாந்தரெல்லாமெய்நடுங்கி, தொல்லவேவந்தொரு பூதந்தானும் கொப்பெனவே கற்பூரமெறியலாச்சே, கசசு

ஆச்சப்பா சாலமென்றதந்திரவேதைவதாணங்கள் தன்னாலே யெறியலாச்சு, மூச்சொடுங்கிப்போயிருந்தபூரந்தானும் முனைவான கொழுந்துவிட்டுயெறியும்வண்ணம், பாச்சலுடன்மாண்பர்களுங்கண் டுமல்லோ பாங்குடனேயிது புதுமைகாலமென்பார், ஆச்சரியமான தொருவித்தைதானுமவனியிலே யாரறிவார்புத்திமானே. கசஎ

திருவெண்ணீரில்லாமல்கேணியில் ஸ்நானஞ்செய்துசூரியனில்

நிற்கமேனியில்வெண்ணீர்கண்டது.

பக்தியுள்ள. புலிப்பாணிமைந்தாகேளு புனிதமுடனுந்தமக்குயி ன்னஞ்சொல்வேன், சத்தியமாய்கருமான மின்னமொன்று சட்ட முடன் யாமுரைப்பேன் மைந்தாகேளு, வெற்றிபெறமாண்பர்களி லாயிரம்பேர்வேடிக்கை சிமிட்டுவித்தைதனைநம்பாரு, தத்துவமாய் சபையோர்கள்முன்னதாக சார்புடனே காங்குவித்துநிற்பாய்பாரே,

பாரேதான்சபையோர்கள் பார்த்திருக்க பண்பாகக்கேணிதனி லிறங்கிமுன்னே, நேரேதான்எரிகாலன்பாலையப்பா நேர்மையுடன் காந்தனிலே குழப்பிக்கொண்டு, சீரேதான்மறவடமாய் நின்றுகொண் டுசிறப்புடனே வெண்ணீர்போல் குழைத்துப்போடு, நீரானபாலதுவு மாண்பருக்கு நிறமானவெண்ணீர்போல் தோற்றுதன்றே. கசஅ



அன்றான வெண்ணீரைப் பூசிக்கொண்டுவன்பானகேணிதனில் வந்துநின்று, குன்றானபருவதம்போல்கோடிமாண்பர்கொற்றவர்கள் திருமுகத்தைத் தானும்பார்த்து, வென்றிடவேயேகாந்தி நிஷ்களம் போல்விருப்பமுடன் சலமதனில் மூழ்கியேதான், சென்றுமேசலத் தைவிட்டுக்கேணியேறி சிறப்புடனே சூரியனில் நிற்பாய்தானே.

தானானசலமதுவுங் காய்ந்தபின்பு சட்டமுடன்திருவெண்ணீர் காணலாகும், கோனானகுருபரனார் பூசைசெய்து கொற்றவனேதேவ தாஸ்தலத்தைவிட்டு, தேனானமனோன்மணியாள் பாதங்கண்ட தேவி தனைப்பூசைசெய்த புனிதனென்பார், பானனபரஞ்சுடராய் மேனி யெல்லாம் பாங்கானபட்டையதுகாணலாமே. கருக

காணலாம் சிவயோகமாண்பன்போல கைலாயசித்தமுனி நீதா னென்பார், பூணவேபிர்மலைகடந்தசித்து புகழானகேணிதனிலிற க்கருள்சித்து, தோணவேயெரிகாலன்தந்திரசாலம் தோற்றமுடன் காண்பதற்குப்பிரம்மையாகும், நீணவே சாலமாந்தந்திரபோகு நீ தியுடன்செய்துமல்லோ பரிசுவாங்கே. கருஉ

வாங்கப்பா ராசரிடம் பரிசுவாங்கி வளமுடனே வையகத்தில் சித்தனைப்போல், தாங்கியேதிரியாதே தய்யபாலா துரைராசகந்த ரன்போல்போகஞ்செய்து, ஏங்கியேமாண்பரெல்லாந் திடுக்கிட்டே ங்கயெழிலானமாயவித்தை வெண்ணீர் வித்தை, சாங்கமுடன்செய் துமல்லோ தரணிமீதில் சட்டமுடன் காலாங்கி தன்னைப்போற்றே.

சங்கிலி சாலம்.

போற்றியேயின்னமொருகருமானங்கேள் புகழானகாலாங்கிநா தர்நம்மாசல், தேற்றமுடன்யெந்தனுக்கு வுபதேசித்த தெளிவானசா லவித்தைமாக்காணத்தான், ஆற்றலுடன் மணத்தலைநெய்யைவாங்கி வப்பனே வுடும்பினிடநெய்யுங்கூட்டி, சாற்றலுடன் விலாங்கினது பிணமுஞ்சேர்த்து சட்டமுடன் குழித்தயிலம் வாங்கிடாயே.

வாங்கியே தயிலமதையிறக்கிக்கொண்டுவன்மையுடன்சீசாவிற் பதனம்பண்ணு, பாங்குடனேசிங்கமும் பாண்டஞ்செய்து பதனமு டன்மேல்வாயாக் தளவாய்போல், தேங்கவேபாண்டமதில் கரியைக் கொட்டி தேற்றமுடன் தீயதனைப்போட்டுமல்லோ, ஓங்கவேசிறுகழி யாம்விறகுதன்னை ஒப்பமுடன் போட்டுமல்லோ யெறித்திட்டாயே.

எரிக்கையிலேகொழுந்ததுபோலெறியும்போதுயெழிலானசங் கிலியாம் விரமப்பா, முருக்கியதோர்சங்கிலியைத் தீயிற்போட்டு மு னையானதீயதனிற்காச்சிக்கொண்டு, பரிக்கியேபலபேர்கள் மாண்பர்

பார்க்கபட்சமுடன்செய்யதனைக் கையிற்றேப்த்து, செருக்கியேசங்கி லியை வருவும்போது, கெடிதான தீயதுவும்பற்றுதன்றே. ௧௫௬

அன்றானசங்கிலியைப் பார்க்கும்போது அடலானதீபமது சுடர் போல்தோற்றும், குன்றானமலைக்கல்லுகருங்கல்லப்பாகொப்பனவே யிதுபோலயெடுக்கலாகும், சென்றுமே ரசசிடம்சாலஞ்செய்துசிறப் பானபரிசுமுதல் யாவும்பெற்று, வென்றிடவேசாலமதுதந்திரசாலம் வினோதமுடன் செய்தாயல்லோ பரிசுகொள்ளே. ௧௫௭

கொள்ளவேவெகுபேர்கள் மெச்சும்பாலாகுவலயத்தில்யேமெச ருசித்தனைப்போல், எள்ளளவுங்குறையதுவும்சோரமற்றுன்யெழிலா னவித்தையதுசெய்துமல்லோ, வுள்ளபடிசிவயோகம் ராசயோகம்வு த்தமனேசமாதியிலே யின்றுகொண்டு, கள்ளமில்லாதேவரிடிதம்மைப் போல காசினியில்வெகுகாலம் வாழ்குவீரே. ௧௫௮

வாழ்கையிலே புமைக்கண்ட மாண்பரெல்லாம் வையகத்திலிவர் போலுஞ் சித்துமுண்டோ, தாழ்மையுடன் புமைப்பணிவார கோடி மாண்பர் தாரணியிலுனக்கிடு வொருவருண்டோ, ஆழ்வமயுள்ளமா ண்பாலா பத்தியானே வவனிதனிற்சாலவித்தை செய்துக்கொண்டு, மேழ்மையுடன் பூலோகவாழ்க்கைதன்னில் மேதினியில்யெப்போது ம்வாழ்குவீரே. ௧௫௯

## பேயாட.

வாழவேயின்னமொருகருமானங்கேள் வன்மையுள்ளபுலிப்பா ணிமைந்தாபாரு, தாழவேரெண்டகமாஞ் ஜாதியப்பா தாக்கான பூ சாலிசெய்யுமார்க்கம், ஆழவேபேய்கொண்டமாண்பர்தம்மை வன்புட னேதாமழைத்துச்சபையோர்முன்னே, சாழலுடன்பேயாட்டங்கொ ள்ளுமார்க்கம் சட்டமுடன் தேவதைகள் வரவுதானே. ௧௬0

தானானபேய்கொண்டமாண்பருக்குதாக்கானகருவொன்றுசொ ல்வேன்பாரு, தேனானதேவி மனோன்மணியாள்பூசைதோற்றமுடன் தானமைத்துக்கும்பம்வைத்து, கோனான குருபரனைத்தியானஞ்செ ய்துகொப்பனவே வுடுக்கோசைத்தனையெடுத்துமானமந்திரத்தை யுச்சரித்து மார்க்கமுடன் பேயாடவழிசொல்வேனே. ௧௬௧

வழியானதேவதையைத் தானழைத்துவளமையுடன் செபதப ங்கள்மிகவேயோதி, பழியானமுப்புலியுந் தான்கொடுத்து பான்மை யுடன்வோமமதுசெய்யும்போது, சுழிமாரிமயக்கமதுவதிகங்கொண் டுசெடொளியாங்கிபமுகம்பார்க்கும்போது, குழிபோன்ற கண்ணிர ண்டு மிருளூர்தோன்றி குப்புரவாய் லாடகவிபேசுவாரே. ௧௬௨



பேசியகூக்தலது வதிகமாகி பேரானமராட்டகமும் மிகவுங் டறி ஆசித்துப்பூசித்துக், காலகுவித்துவப்பனே தேகமதாடுங்கலாகி நாசிதனில்சுவாசமது மிகவேயோங்கி, நடுக்கமுடன் குறட்டையது வதிகமாகி, தூசிபடமேனியது பிரண்டுமல்லோ துள்ளியே பற்கடித் து யெழும்புவாரே. ௧௬௩

எழும்பியேவேதாள மார்க்கரித்து யெழிலான பிடாரிபலிகொ ண்டபேய்போல், தழும்புபடாமேனியது தழும்புமாகி தற்பாளுஞ் சொரூபமதைக் கண்டாற்போல், தொழும்படவே தலைவிரித்து ஆட் டங்கொண்டு தோற்றமுடன் வெகுபினத்திலதிகமாகி, அழுதுமேயா யாசயத்தியக்கமாகி வப்பனேகாங்குவித்து வாடும்பாரே. ௧௬௪

பாரேதான்சின்மயத்தைக் கண்டாற்போல பட்சமுடன்வுதிரம தைவாயாற்கக்கி, நேரேதான் பூசைமுகந் தன்னைக்கண்டு நேர்மையு ன் யேர்வையது யெனக்கொவ்வாது, சீரேதான் பிதுர்வனத்தைக் த் துமாண்டி சிறப்பான ஓங்காரபேய்தானல்லோ, கூரேதான்பூசையது மயானபூசை கொப்பெனவே யெந்தனுக்குத் தருவீர்தாமே. ௧௬௫

தாமானபேயாட்டங்கொண்டமாண்பர் தன்மையுடன்பூசைமு கம்யேர்வையில்லை, நாமானமாகவல்லோ வேதமோதி நடுச்சாமபூ சையது செய்வேனென்றும், யேமானலாடகவி முனிதானென்றும் விட்டகுறையிருந்ததினாலிங்கே வந்தேன், சாமான்னியமானதொரு முனிதானல்ல தத்துவத்திற்பேர்கடந்த முனிதான்பாரே. ௧௬௬

முனியானமுனியல்லோ பிரம்மராட்சிமுதலதைக் கடந்தநொ ருஞானசித்து, சனியானராட்சதனு மெனைத்தொடர்ந்து தாரணியில் கேணிதனில் விழுந்தபூதம், பனிபோன்றமலைவளத்தை சுற்றும்பூத ம்பட்சமுடன் பிடாரிகளைவணங்கும்பூதம், தனியானதத்துவங்களதி கங்கொண்ட தயாபரியைமறவாதபூதமாமே. ௧௬௭

பூதமாம்பேயாட்ட முப்பத்திரெண்டு பூதலத்தில்மிகக்கூறும்ம திதவிதனை, நீதமுடன் சற்பனையோடோயசாரம் நீதியுடன் நடப்ப துவுஞ் சிலதுபூதம், நீதமுடன்தலைவிரித்தலாட்டங்கொண்டு நிகழா ன வார்த்தைகளும் மிகவேகூறும், கோதகமாய்மலையிலேறிப்போவே னென்றும் தோற்றமுடன் சிலபூதங்கூறுங்காணே. ௧௬௮

காணவேயிந்திரஜாலமப்பா கருவான கருவிகளும்மையிறு லும், கோணவேயட்சரத்தின் பிட்டகந்தானசொலலும் யில்லாலுங்

காணத்தாலும், பூணவேகாஞ்சேரிப் பொடியினாலும் புகழானதிரு வெண்ணீர்கலப்பினாலும், ஆணவங்கள் தானொடுங்கிப்பேய்கள் தானும் வன்புடனே வாய்திறந்து கூறுந்தானே. கசுகூ

தானானபிரணவத்தையுச்சரித்து தன்மையுட னகஸ்தியனார் காண்டந்தன்னில், கோனானயென்பாட்டன் கும்பயோனிகுருசொன்ன காவியம் பன்னீராயிரந்தான், தேனானகாண்டமது பனிரெண்டுக்குள்ளே திறமான முதற்காண்டந்தன்னிலப்பா, மானான இலங்கைபதிவேந்தனுக்கு மகத்தானமையொன்று கூறினாரே. கஎ0

கூறியதோர் மையதனாலனேகசித்து குவலயத்திலாடலாம்பேய்தனக்கும், மீறியதோர்மையினா லஷ்டசித்து மேதினியில் வெகுகோடிமாண்பரப்பா, சீறியதோர்வேதாளம் பேயாட்டங்கள்சிறப்புடனே கருவென்றமையினாலே, வீறியதோர்கருமானந்தன்னைக்கொண்டுவிட்டகுறை தனையகற்றி செய்வாய்பாரே. கஎக

செய்யவேமையினுட பெருமைதானும் சிறப்பானபூதலத்திலெவாரலாகும், வெய்யவேவிட்டகுறையிருந்தவர்க்கு மேதினியிலம்மை தான்பலிக்கும்பாரு, துய்யநல்ல மையதுவுஞ்செய்வாரானால் துரைராசசுந்தரனைக்காணலாகும், மெய்யான மையினிடபோக்குதன்னை மேதினியில் காண்பவனேசித்தனாமே. கஎஉ

சித்தனாம்பூவுலகில் ரிஷிதானென்பார் சிறப்பானகருவிகாணதியுள்ளோன், முத்தனும்மூதுலகங் கடந்தஞானி முனியானபிரம்மவிகடத்தோனென்பார், சத்தியத்தைத்தவறாத வேள்வியோனும் தாணிபதியுலகாளும்ராசனென்பார், நித்தியமும் பிராணநிலைகலையில்நின்றநிட்களங்கமானசுட ரென்பார்தாமே. கஎங

சுடரானவையகத்துசித்தனென்பார் சூட்சாதிசூட்சமதைக்கடந்தஞானி, அடலானமாண்பரெல்லாம்வணங்குஞ்ஞானி வவனிதனில் விட்டகுறையிருந்துதானால், திடமானஞானியென்றுபேர்வகுப்பான் தீர்க்கமுள்ள ஜெகசாலமந்திரவாதி, மடலான தத்துவங்கள் தொண்ணூற்றாறும் மார்க்கமுடன் தானறிந்தமதியவானே. கஎச

மதியானமையினுடமார்க்கத்தாலே மகத்தானலோகமெல்லாம் வசியமாகும், கதியானமோட்சமென்ற மானிதானும்காணிக்கைபெப்போதுங்கழரொண்ணாது, விதியானவிதியிருந்தால் மையின்போக்கு விணிலேபோகாது சதாகாலந்தான், துதியான யிலங்கைமன்னன் மையினாலே தொல்லுலகோர் யெப்போதுந் துதிப்பார்காணே. கஎரு



இல்லாத்துப்நபுண்கள்தேவதா பொய்மசக்கல்.

காணவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கருவானபொய்மசக்கல்தலையாட்டந்தான், பூணவேகும்பமது கலசம்வைத்து பொய்கமுடன் பேயாட்டங்கொள்ளும்போது, தோணவே லாகிரிகள்வஸ்துவாலும் தொல்லுலகில்மாதர்மேல் சன்னதங்கள், வேணபடிதன்மீதில்வந்தாப்போலும் வெகுபிறட்டல்தலைசுழட்ட லதிகந்தானே. ()

தானானதெய்வமதுவனேகங்கொண்டு தாக்கானசன்னதங்களதிகமாகி, கோனானதன்புருஷன்றன்னைநோக்கி கொற்றவாயென்தனுக்கு யேர்வையில்லை, மானான மகத்துவங்களதிகங்கொண்டு மன்னவர்க்கு தெய்வமதுகூறினாற்போல், பானானகரங்குவித்து தலைமேற்கொண்டு பாலகனே பூசையில்லையென்பார்பாரே, கஎஎ

மாதுதெய்வத்தால் சமுசாரிமயக்கல்.

பாரேதான் கன்னியர்மேல்சன்னதங்கள் கைலாயவடிவேலன்தன்னைப்போல, வேரேதான் கிற்கிறவாரோ நீர்தான் நீதியுள்ளவாண்பிள்ளை கிளைவாய்க்கேளீர், சீரேதானுக்தனிடமாளிதன்னில் சிறப்பானபூவாடைக்காரியபபா, வேரேதான்கட்டுதற்குவாடையில்லை வித்தகனே மனங்கலங்கிநின்றாள்தானே. கஎஅ

திற்கவே பூவாடைக்காரிதானும் நிட்களங்கமாகவல்லோ வெகுகாலந்தான், துர்க்கையென்றபிடாரியது தானுமல்லோ துதியானகாட்டேரிசின்னாளப்பா, செர்ப்பமுவாராத கருப்பன்றானும் சுடரொளிபாஞ் சத்தகன்னிமாதுதானும், கற்பமதைஆவிகொள்ளும் ரத்தமுண்டி கருவழிக்கும் மாடனதுதானுந்தானே. கஎகூ

தானானதெய்வமடா பூவாடையப்பா நன்மையுடன்சித்தடிமேல்மையல்கொண்டு, கோனான தேவதைகள் வாடைகட்டி கொப்பெனவேசன்னதங்களதிகங்கொண்டு, தேனானநடுவீட்டு செல்லியத்தாள் தெளிவான வங்காளபூபதிதானப்பா, மானானயீஸ்வரியா ளெல்லைக்காத்தாள்மகத்தானதெய்வமது வந்திட்டோமே. கஅ0

வந்திட்டோமென்றல்லோ மையலாகி மகத்தானசன்னதங்களதிகங்கொண்டு, குன்றானபுருஷனையும் மிகவேநோக்கி குடிதனக்குவனர்த்தங்கள் நேர்ந்ததென்று, இன்றுமே யெந்தனுக்கு யிந்தபூசை யெழிலானபூசையது யேர்வையில்லை, நன்றுதான்பூசையது பரியேகொண்டு காணிக்கைவைத்தாலே யேர்வையாமே. கஅக

ஏர்வையாம் வையகத்துப்பெண்களெல்லாம் யெழிலான புருஷனையுந்தூஷணிப்பார், சேர்வையாம்சீனபதிப் பெண்களெல்லாம்சிறப்

புடனே புருஷனையும் போற்றுவார்கள், பார்வையாங்குளிகைபது
கொண்டுமல்லோ பாருலகம்பெழுகடலுஞ் சுத்திவந்தேன், நேர்மை
யாஞ் சினபதிப்பெண்களுக்கு நெறிமுறைகள் தத்துவங்கள்மிகவுண்
டாமே. கஅஉ

உண்டான தெய்வமது யாதுமில்லை வுத்தமனேகடவுளன்றிவே
றென்றில்லை, பண்டானபொய்கொலைகள் களவுமில்லை பாங்கானகா
மமதுவொன்றேயுண்டு, திண்டானவிசுவாசயருளுமுண்டு திறளான
பாவமதுயில்லையப்பா, கண்டேனே சைனபதிமார்க்கத்தோரை காசி
னியில் காலாங்கிகடாட்சந்தானே. கஅங

தானானகாலாங்கிகடாட்சத்தாலும் தாக்கானமனோன்மணியாள்
கிருபையாலும், மானானாலுயுகங் கடந்துவந்தேன் மகத்தானவைய
கத்திலெல்லாருந்தான், கோனானசினபதிப்பெண்கள்நீக்கி குவலயத்
திலெல்லோருமிருந்தமார்க்கம், வேனானவெட்டவெளிமயக்கத்தாலே
விருதாவாய் மாண்பரெல்லாமயங்கினாரே. கஅச

பிரதமை நடக்க.

மயங்கவே யின்னமொருமார்க்கஞ்சொல்வேன் மகத்தானபுலிப்
பாணிமைந்தாகேளு, தயங்கவே தந்திரமாஞ்ஜாலஞ்சொல்வேன் தாக்
கான மானிடர்கள்பிழைக்கவென்று, புயங்கமுடன் நோயாளிசாந்தி
யப்பா புகழானபிணிகொண்டமாண்பருக்கு, செயம்பெறவேசாந்தி
யது சொல்வேனப்பா செய்கின்றமார்க்கமது பண்பாய்க்கேளே. ()

பண்பானநோய்கொண்ட பிணியாளர்க்குப் பாகமது சொல்லு
கிறேன்பாண்மையாக, திண்ணமுடனமச்சென்ற மாளிப்பாதிறமு
டனே கிழக்குமுகமாகவல்லோ, நன்மையுடன்கொலுக்கூட மொன்
றமைத்து நாதாந்தக்கூடமது யேகவட்டம், வண்மையுடன்சோடச
தூணிறுத்திவாகும்பெற சின்மயத்தின் பூசைசெய்யே. கஅசு

செய்யவே மயானத்தின் பூசையப்பாசெப்புகிறேன் வருந்மை
ந்தாகேளுகேளு, ய்யடவேகும்பமென்ற கலசமப்பா வுத்தமனேநடு
மையம் தன்னில்வைத்து, பையவேநவகோணவாசல்விட்டு வாகமுட
ன்கலசமென்ற பாண்டமப்பா, மெய்யுடனே தானியமாமொன்பதா
கும் மேன்மையுடன் கலசமதில் கீழேவையே. கஅஎ

கீழானகலசமது தன்னிலப்பா கிருபையுடன்தானியங்கள்வைத்
தபின்பு, தாழானகுடுவைக்குநூலைச்சுற்று தகமைபெறகுச்சதுதான்



நாலதாகும், கீதானசரணமதுவொன்றேயாகும் நீதியுடன்நடுமையா
ம்தன்னில்வைத்து, சாழானதேங்காயைவதின்மேலப்பா சட்டமுட
ன் வைத்தல்லோ மஞ்சள்பூசே. கஅஅ

பூசியேகுங்குமமூர்த்தாணணிந்து புகழானமாயிலையும்புட்பஞ்சா
த்தி, ஆசியேஅவலுடனேகடலையப்பா வன்பாக முக்கனியுங்கொண்
டு போற்று, வாசியென்றபிரணவத்தை மனதில்மாறி மகதேவாயென்
தனையுங்காருமென்று, தேசியென்னும்பழமதுவே கிழியப்பா இக்
கெட்டும்போட்டுமல்லோசெப்பக்கேளே. கஅகூ

செப்பவென்றால்வத்துமுதல் மதுபானங்கள் செம்மலுடன் பல
காரவர்க்கமெல்லாம், ஒப்புமுடன்றாமமைத்து புண்ணியவானே ஓ
கோகோ நாதாக்கள்செய்யும்வண்ணம், தப்பிதங்கள்நேராமல் மன்
றுகேளு தண்மையுடன் சோடசமாம்பூசைமார்க்கம், செப்பமுடன்
றாமைத்துநீதிவானே நிட்களங்கமாகவல்லோ நேமிப்பாயே. ககூ0

நேமமுடன் செம்மறியின்தலைதானப்பாநேர்மையுடன் கொண்டு
வந்துமைந்தாகேளு, நாமமுடன்கலசத்திற் கெதிரேவைத்துச் சட்ட
முடன்வகண்டமது மேலேவைத்து, ஓமமுடன்யாகமது செய்வாயப்
பா வுத்தமனேயாயிருந்தானுருதான்போடு, சாமமதுநடுச்சாம வே
ளையப்பாசாந்தியதுசெய்யும வகைதன்மையாரே. ககூக

பாரப்பாசாந்தியது செய்யும்போது பட்சமுடன்பிரமை யது
போவதற்கு, நேரப்பாநோயாளிதன்னிலப்பா நேர்மையுடன் கிரகம
து போவதற்கு, சீரப்பாசடையதுவால் பொம்மையொன்று சிறப்
புடனே தானமைத்துவுபாயங்கேளு, ஆரப்பாகானறிவார் வுபாய
மார்க்க மப்பனே செல்லுகிறே னன்பாய்த்தானே. ககூஉ

தானான பிரதவமக்குவாண்டபூண்டு சட்டமுடன்வாபரண மெ
ல்லாம்பூண்டு, கோனானகாலாங்கிசொன்னவாக்கு கொற்றவனே பிச
காமலாமைதன்னை, பானானபாமையது கொண்டுவந்து பாலகனே பி
ரதமையின்பாதத்தின்கீழ், தேனானவுருத்தினிடமாவையப்பா இன்
மைபெறபாமையது ஒட்டிற்பூசே. ககூங

பூசியேபிரதமையின் பாதத்தின்கீழ் புகழாகபாமைதனைபொ
திந்துபோடு, காசியென்றபட்டினால்பாதந்தொட்டு பாங்குபெற வுடு
ப்பதுவுபணிந்துமல்லோ, தூசிபட்டபாதமது தெரியாமற்றான் துப்பு
ரவாய் பிரதமையைச் சாய்த்துவைத்து, கூசிடாவண்ணமது யோம
சாந்தி கொற்றவனேசெய்துமல்லோ சொல்லக்கேளே. ககூச

சொல்லவென்றால்பிரதமையை நோயாளிமுன்னே சுத்தமுடன்றானிறுத்தி வைக்கும்போது, வெல்லவேபிரதமைதான் சுத்தியல்லோ விருப்பமுடன் றானவருகும்போதிலப்பா, கொல்லவே வந்ததொரு கிரகமப்பாகொற்றவனே பிரதமையின்மேலேயப்பா, புல்லவே மை பலது பலியேகொண்டு கோபாலஈபோகுதடா வென்றுசெப்பே.

செப்பிடவே கிட்டிகுர்தமாண்பரெல்லாம் செம்மலுடன் பிரதமையைக்கண்டபோது, ஒப்பிடவே சாந்தியினால்கிரகந்நீக்கி ஓங்காரபலியதுவுங்கொண்டுதானும், செப்பிடவே கிரகமதுபோகுதென்று மேதினியில் யெல்லவருமயங்குவார்கள், தப்பிதங்களில்லாமல் பிணியானன்றான் சட்டமுடன் சுகமாவான்பாரீர்பாரே. ககூசு

பாரப்பா பிணியாளன்சுகமுமாகி மான்மையுடன்பிரம்மையது நீங்கியல்லோ, சீரப்பாபிரதமையின் ஜாலத்தாலே சிறப்புடனே பெக்நாளும்பிணிகள்நீங்கி, வேரப்பாசாந்திபது மகிமையாலும் வேதாந்தத்தாயினதுகிருபையாலும, ஆரப்பாபிரம்மையது நீங்கியல்லோ வவனிதனில்சுகமாக வாழ்வார்தானே. ககூஎ

தானான சடந்தனக்குநோய்கள்வந்தால் தகமையுடன் மாண்பரெல்லாஞ்செய்யுமார்க்கம், கோனான தன்தெய்வங்குலதெய்வந்தான் கொப்பெனவே ரெவம்மனென்றும் பிடாரியென்றும், பானானபலதெய்வ குற்றமென்றும் பாங்குபெற கப்பணங்கள்கட்டுவாரும், மானான முனிதேவர் முடங்கனென்றும்மகத்தானபலவிதமாம்வண்ணமாமே.

வண்ணமாமிப்படியே லோகமெல்லாம் வகுப்புடனே புத்தியதுமாறலாகி, எண்ணமுடன் தன்னறிவுநிலையுங்கெட்டு யெழிலான பதாம்பத்தை நினையாமற்றான், திண்ணமுடன்கடவுள்தனை மனதிலுன்னி தீர்க்கமுடன் யேகாந்தவுருவைவிட்டு, பண்ணியதோர் கோலமதை யென்னசொல்வேன் பாருலகில்மாண்பருடதன்மைதாமே.

போகர்புலிப்பாணிக்குசாயாபுருஷதரிசனக்காண்பிப்பது.

தன்மையாமின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் றன்மையுள்ள புலிப்பாணிமைந்தகேளு, பன்மையாம்பெர்தனது பாட்டனப்பா பாங்கானகாலாங்கிநாதரையா, வன்மையாம்வருமையசிஷனைய வளமானகாலாங்கிநாதர்தாமும், மின்மையாயெந்தனதுகுருதானையா மேன்மையுடனெந்தனுக்குவுரைத்தார்பாரே. உ00



பாரேதான் யெந்தனுக்குச்சொன்னமார்க்கம் பாருலகில் யாவருக்குஞ்சொன்னதில்லை, நேரேதான் வெகுகாலநோடியப்பா நேர்மையுடன்காலாங்கிநாதர்தாமும், தீரேதான்குருபாதங்காத்திருந்து தீர்மமுடன் வாங்கினதோர்வித்தையப்பா, சீரேதானுந்தனுக்கு யானுமல்லோ சிறப்புடனேயோதிவைக்கும் வண்மைகேளே. உ0க

கேளப்பா வையகத்தில் நன்மைதன்மை கீர்த்தியுடன் தானிருக்கும்வளமைதாமும், சூளப்பா தேகமது வழியா வஞ்ஞம் சுந்தரனே வெகுகாலமிருப்பதற்கும், நாளப்பாபோகாமல்கற்பஞ்சொல்வேன்நளினமுடன் கற்பமது யென்னவென்றால், ஆளப்பாவாகாய கற்பமாகும் வப்பனைசொல்லுகிறேன் வரிசைபாரே. உ0உ

வரிபான புலிப்பாணிகண்ணேகேளு வாகுபெற வாகாயதெரிசனந்தான், துரிதமுடன் வையகத்திலிருப்பதற்கு அப்புரவாய்ச் சாதனங்க ளுரைப்பேன்கேளீர், சரியானபூமிகளில் மேடுபள்ளம் சட்டமுடனாய்ந்து சரிகைகாண, பிரியமுடன் செங்கதிரோன்கிழக்குதிக்க பிசகாமல் மேற்குமுகந்தன்னைக்காணே. உ0ங

ஆகாயத்தில்ரூபங்காணல்.

காணவே சாமமது சென்டிக்குள்ளே கருவானகாயாதி கற்பங்கொண்டு, கோணமே போசனங்களுண்டுமேதான் கோறுமல்பூமிதனில் நின்றுகொண்டு, நாணவே முடிதனையே ரசைக்காமற்றான் நன்மையுட னிருகரமுந்தொங்கவிட்டு, பூணவே தன்னிழலைக் கண்ணுற்கண்டு பொங்கமுடன் நன்மைதன்மை யறிந்திடாயே. உ0ச

அறியவே நுட்பமது யென்னசொல்லே வைகாகாதாக்கள் கண்டதில்லை, முறியவேநேத்திரங்கள் நிமைகொட்டாமல் முனையான தன்சிரசைத்தானும்பார்க்க, குறியுடனேவாகாயந்தன்னைநோக்கி கொற்றவனே பார்க்குமந்தசமயந்தன்னில், நெறியுடனே யுமைப்போல ரூபங்காணும் நேர்மையுடன் ரூபமதில்வினயங்கேளே. உ0ரு

வினயமது யென்னவென்றால் செப்பக்கேளீர் வேதாந்தக் காயினதுசொரூபம்போல, நினைவதுவுந்தவாமல் மைங்காநீதான் நீதியுடனாகாயந்தன்னிற்றானும், கனவுகண்ட கதைபோலே சுடரானந்தன்னிற்குத் தோற்றுமப்பா சுடமேலதை, பனையளவு வுயரமப்பாவுந்தன்ரூபம் பாரினிலேதானிருந்து காணலாமே. உ0சு

காணவென்றால்சொரூபமது முறைமைசொல்வேன்கண்ணிற்கு வாகாயந்தன்னிலப்பா, தோணவேசுடரொளிபோலுந்தன்ரூபந்தோற்றுமப்பா கண்ணிற்குகூச்சங்காணும், சானளவுருபமது கொண்டு

மல்லோசட்டமுடன் பனியளவாய்த்தோற்றும்பாரு, ணேவே மாயா
இருபந்தானும் நிட்களங்கமாகவல்லோ தோற்றும்பாரே. உ0எ

பார்க்கையிலே சிரசதுவுந்தோன்றவிட்டால் பாலகனே வொரு
திங்கள்சாவான்பாரு, தீர்க்கமுடனிருகரமுங் காணவிட்டால் இன
மதுவும் மூன்று திங்கள்மறிப்பான்பாரு, சேர்க்கவேமார்பதனில்துவா
ரங்கண்டு செங்கதிரோன் கண்ணிற்குத் தோற்றுமாகில், ஆற்றவே
யறுதிங்கள்மரணமாவா னப்பனேசாயாவின் புருஷன்தானே. உ0அ

தானான தரிசனங்கள்காணும்போது தகமையுள்ள சொரூபமது
குறைவுகண்டால், கோனான காலாங்கி வாக்குபோலே கொற்றவனே
முடிவதற்குப் பிசகொன்றில்லை, தேனானமனோன்மணியாள் சொரூ
பம்போல தெளிவாக வுன்ரூபங்கண்டாயானால், பானானபாருலகில்
வெகுகாலந்தான் பாலகனேயிருப்பதுவும் வுறுதியாமே. உ0கூ

உறுதியாம் பனிரெண்டுவாண்டுதானும் வுத்தமனே தரிசனைகள்
காண்பாயானால், நிறுதியாய்வுன்ரூபங்கண்டரூபம் நிட்களங்கமாகவல்
லோபின்றொடர்ந்து, கூறுதியுடன் கருவிகரணாதியோடு சுக்கமுடன்
வுடலாவிகொண்டுமல்லோ, பரிதிவிட்டுயுந்தனிழல் கூடேகிற்கும் பா
லகனே சாயாவின் வண்மைபாரே. உக0

வண்மையாஞ் சொரூபந்தனைப் பின்றொடர்ந்து வாகுடனே யுத்த
னிடமலரவும்பாரு, திண்மையாய்சபனங்கள் செய்யும்போது தீர்க்க
முடன் பூமிதனில்நடக்கும்போது, தண்மையாயுளுக் கார்ந்திருக்கும்
போதும் தகமையுடனொருவருடன்பேசும்போது, உண்மையா யுத்த
னுக்குவருங்காலத்தை வுத்தமனேயுந்தமக்குக் கூறும்பாரே. உகக

கூறவே நன்மையென்ற திண்மையாவும் குறிப்புடனே யுந்தமக்கு
முன்னேசொல்லும், மாறுபடாமேனியதுவாசி கூறும் வளமான தேக
மதுகற்றானாகும், வீறுடனே வையகத்தில்கோடிகாலம்வித்தகனே
யிருப்பதுவும் நிட்சயந்தான், நாறுமுடலழியாது கோடிகாலம் நாணி
லத்தி லிருப்பதுவுஞ்சமாதியாமே. உகஉ

ஆமேதான் சாயாவின்றரிசனத்தை வப்பனேகண்டவர்க்கு யெ
ல்லாஞ்சித்தி, தாமேதானட்டமாசித்தியாவுந் தாரணியிலடைவதற்கு
வையமில்லை, போமேதான்பனிரெண்டுவாண்டுமட்டும் பொங்கமுடன்
கண்டவர்க்கேசித்தியாகும், வேமேதான்காணுதமாண்பருக்கு விட்ட
குறையிருந்தாலும் வாய்க்காதன்றே. உகங

அன்றானதரிசனத்தைக்கண்டமாண்பர் வவனியிலே தானுமொ
ருசித்தனைப்போல், குன்றானமலைகளிலேயிருக்கலாகும் குவலயத்தில்
நீயுமொருசித்தனைப்போல், வென்றிடவே தேவரிஷிகள் தம்மை



வின்னுலகில்காண்பதற்கு யிடமுண்டாகும், தென்றிசையில்கத்திய
னார் முனிவர்தானும் செப்பினார் யிந்தமுறை சொன்னார்பாரே. உகச

பாரேதான் சதநூலாம்பஞ்சபட்சி பாரினிலேமாணாக்கர் பிழை
க்கவென்று, நேரேதான்சாத்திரத்தைப் பாடிவைத்தார் நீதியுடன்சா
யாவின்தரிசனத்தை, சேரேதான்தரிசனத்தைக்காண்பதற்கு செம்ம
லுடன் வழிசொன்னார்மைதானில்லை, கூரேதான்மையினது மார்க்கந்
தன்னை கூறினேன்காலாங்கி கடாட்சந்தானே. உகரு

தானான சித்துமுனிகும்பயோனி தாரணியில் கருவுதனை மறை
த்துப்போட்டார், மானானகாலாங்கியெந்நாதர் மகாதேவர் கடாட்ச
மதுகிருபையாலே, தேனான கருக்குருவைபானுங்கற்று தெளிவாக
மாணாக்கள்பிழைக்கவென்று, பானானசாஸ்திரங்கள் யாவும்பார்த்து
பாருலகில் பாலகர்க்குப்பாலித்தேனே. உகசா

சாயாபுருஷதெரிசனமை.

பாலிப்பே னின்னமொரு மார்க்கங்கேளும் பாங்கான புலிப்பா
ணிமைந்தாபாரு, நீலியென்றகருங்காலி மூலிதானும் நீட்சியுடன்கண்
ணனுடமூலிவேரும், சூலியென்றநத்தையின் சூரியப்பார்சூரியனார் கா
ந்தியதுமூலிவேரும், வேலியென்ற பருத்தியப்பாயிருவேலிதானும்
வேகமுள்ள கருப்புவூமத்தைவேரே. உகஎ

வேரான சடையனதுமூலிதானும் வேகமுடன் பொன்னினுமம
த்தைவேரும், தூரானமையூரின் சிகையுங்கூட்டி அப்புறவாய்த்தான்
கருக்கிப்பொடியதாக்கி, சேரானபொடிதனிலே வைங்கோலத்தைச்
செப்பமுடன் தானுரைத்துசொல்லக்கேளு, கூரான புழுகுகோரசனை
யுஞ்சேர்த்து குறிப்புடனேமைசேர்த்து வரைத்திடாயே. உகஅ

சேர்த்துமே போண்டந்தன்னிலப்பா செம்மலுடன் மையதனை
ப்பிடித்துக்கொண்டு, கோர்த்துமேகுமரி யுடமையுங்கூட்டி கொற்ற
வனே தானரைத்துசிமிளில்வைத்து,பார்த்துமேநேத்திரமாம்புருவந்
தன்னில் பாலகனே மைதீட்டிவாகாயத்தை, தீர்த்துமேபார்க்குமின்ற
ஜாலந்தன்னில் திறமுடனே தரிசனமுந்தெரியுந்தானே. உககூ

தானானசூரியனைமேகந்தானும் சட்டமுடன்மேகமது மறைத்தி
ட்டாலும், பானானமேகமதுக்குள்ளிருக்கும் பாலகனே சூரியனுந்

கண்ணிற்றோற்றும், மானனசந்திரனைக்காணும்போது மகத்தானதரிசனையுங்கண்ணிற்றோற்றும், தேனனதேசொளிவின் மயத்தைப்போல ஜெகசோதிமின்னல்போல் தோற்றும்பாரே. ௨௨௦

பாரேதான் மையிருல்மேகசாலம் பாங்குடனே தரிசனையுங் காணலாகும், நேரேதானிக்கருவைசித்தர்தானும் நெறிமுறைமை தானறிந்துகூறுமற்றன், சீரேதான் கருக்குருவைமறைத்துவிட்டு சிர் தப்பித் தெரிசனதனைதப் பாடிவைத்தார், ஆரோதானெனைப்போல சொன்னாரப்பா வப்பனைவுண்மையது வுரைத்திட்டோமே. ௨௨௧

உண்மையாய்ச் சாத்திரங்கள்கண்டாராய்ந்து உவமையுடன் மர்ணுக்கள்பிழைக்கவென்று, திண்மையாய்க் காலாங்கி கிருபையாலே திறமுடனே யுந்தமக்குவோதிவைத்தேன், வண்மையாய் நீயுமொரு சித்தனைப்போல் வளமுடனே யுலகுதனிலிருந்துகொண்டு, நண்மையாய் நாதாக்கள்பாதம்போற்றி நாட்டமுடனெப்போதும் வாழ்வீர் காணே. ௨௨௨

போகர்சீனபதிக்குப்போவது.

காணவே போகரிடிநாதர்தாமும் கனமானகாலாங்கிநாதர்பாதம், பூணவே யவர்பாதந்தொட்டுமல்லோபுகழுடனே மதிபமுர்தம்பூண்டுமல்லோ, தோணவே குளிகைதனைப் பூண்டுகொண்டு துப்புரவாய் சீனபதிக்கேகியல்லோ, ஙணவேகாலாஙசமாதிபக்கல் நின்றாரே நெடுநேரம் நின்றிட்டாரே. ௨௨௩

நின்றதொருபோகரிஷிவந்தசேதி நீதியுள்ள காலாங்கி நாதருக்கு, சொந்தமுடன்மனலையத்திலறிந்துகொண்டுதோற்றமுடன் போகரிஷிநாதருக்கு, அந்தமுடனசரீரி வாக்கினாலே யங்ஙனவே சப்தமதுகேட்கலாச்சு, விந்தையுடன் சப்தமதைக் கேட்டபோது விருப்பமுடன் போகரிஷிவணங்கிட்டாரே. ௨௨௪

வணங்கியதோர் போகரிஷிநாதர்தாமும் வாகானஞானோபதேசங்கேட்டு, இணங்கியேசிரம்பணிந்து கைகுவித்துயெழிலான காலாங்கிநாதருக்கு, மணங்கமழும்வேதாந்ததாயருக்கு மகிழ்ச்சியுடன்யிருபாதந்தெண்டனிட்டு, சுணங்கமதுவாராமல் போகர்தாமும் துப்புரவாய் சீனபதிவந்திட்டாரே. ௨௨௫

போகர் சீனபதிபெண்களுக்குச்சாயாபுருஷ தெரிசனஞ்சொல்வது.

இட்டதொருபோகரிஷிநாதர்தாமு மெழிலானசீனபதிப்பெண்களுக்கு, சட்டமுடன்சாயாவின்றரிசனத்தைச் சாங்கமுடன்போதித்தர்போகர்தாமும், அட்டதிசைதான்புகழும் சாயாவின்றன் வன்பான தரிசனத்தைக்கூறும்போது, திட்டமுடன் மாதரெல்லாம் கண்டுமல்லோ திறமுடனேமனதுவந்து களிப்புற்றாரே. ௨௨௬



களிப்பான தரிசனத்தைப் பெண்களெல்லாம் கருத்துடனேபார்த்தல்லோசந்தோஷித்து, தளிர்போன்றகாமதனைக் கண்ணிலொத்திச்சார்புடனே சாயாவின் றரிசனத்தை, பளிங்குடனே பெங்களுக்கு போதித்தாலேபாங்குடனே தரிசித்துமனங்களித்து, அளியாமலெங்கள் துகாயந்தன்னை வவனியிலேதானிருக்கச்செய்வோம்பாரே. ௨௨௭

பாரேதான் காயாதிகற்பங்கொண்டு பாங்குபெற யெந்நாளும்பாரின்மீது, சீரேதான் தாமிருந்து யோகசாதம் சிறப்புடனே கண்டல்லோநாங்களுந்தான், நேரேதான் பனிரண்டு வாண்டுமட்டும் நேர்புடனேசாதனைகள் மிகவுஞ்செய்து, வீரேதான்விண்ணுலகுவதிசயத்தை விருப்பமுடன் காண்பமென்று வினவிட்டாரே. ௨௨௮

இட்டதொரு பெண்களுக்கு போகர்தாமும் யெழிலானவித்தையென்ற சாதனத்தை, தொட்டகுறிபோலல்லோ காண்பித்தேதான் தோராமலெப்போதும் காண்பதற்கு, பட்டதொரு குறிபோலதரிசனத்தைப்பாங்குபெறப்போதித்துப் பெண்களுக்கு, சட்டமுடன் குளிகையது கொண்டுமல்லோ சாங்கமுடன்மறுபடியும் வந்திட்டாரே. ()

வந்தாரேமேருவுக்கு தெற்கேயப்பா வளமுடனே நர்மதாநதிக்குப்பின்னால், அந்தமுடன்போகரிஷிநாதர்தாமு மன்பாககுளிகையதுபூண்டுகொண்டு, நிந்தனைகளில்லாமல் ரிடியார்தாமும் நீதியுடன்வேடிக்கைசெய்திட்டுவித்தை, சொந்தமுடன்செய்தல்லோ மாண்பருக்கு சூட்சாதிசூட்ச மெல்லாங்காண்பித்தாரே. ௨௩௦

பானையுடைக்கதண்ணீர்நிற்க.

காண்பித்தார்மாண்பருக்கு வினோதவித்தைக் களிப்புறவே போகரிடிநாதர்தாமும், ஆண்பிள்ளைபுலிப்பாணி யெந்தன்பாலா வப்பனே யுந்தனுக்கு வினோதஜாலம், நாண்பான பானையதுபாண்டமப்பா நவிலவேயானுரைப்பேன் மைந்தாகேளு, சாண்பானதவளமது கலசம்போலே சட்டமுடன் செய்துமல்லோ செப்பக்கேளே. ௨௩௧

செப்பவென்றால் நாவில்லை பாவுமில்லை ஜெகதலத்தில் நாதாக்கள்சொன்னதில்லை, ஒப்பமுடன்பாண்டமது செய்துமல்லோ ஒளிவான

நறுவளியாம் பழத்தையப்பா, இப்புவியில் மாண்பர்களுக் கறியமற்றுன்யெழிலானபழமதுவைப்பாண்டத்துள்ளே, அப்பியேபூசியல்லோ காயப்போடு அங்ஙனவே செய்யுமுறை வறையக்கேளே. ௨௯௨

கேளப்பாசலந்தனை பாண்டமிட்டு செப்புகிறேன் கட்டுயென்ற கொடிதானப்பா, பாளப்பாபோகாமல் யெனையுங்கூட்டிப் பாங்குபெற சார்பிழிந்து சலத்திலுள்ளே, நாளப்பாபோகாம லப்போதேதான் நலம்பெறவே சார்பிழிந்துசினிபோட்டு, ஆளேதான்யெல்லவரும் பார்த்திருக்க வப்பனேபாண்டமதை வுடைத்திடாயே. ௨௯௩

உடைக்கவே சலமதுதான் யிறல்போல வுத்தமனே யிறுகியல்லோவெண்ணைபோலாம், படைசேர்ந்தகொளுமுகத்தி லிந்தஜாலம் பாலகனேசெய்துமல்லோ வெண்ணையிவாய், தடையறவேமாண்பரெல்லாங் கண்டுயேங்கி தகமையுடன் பொசித்தல்லோ யுண்ணமெய்ச்சி, சடைபோன்ற தம்பிரான்மருத்துவந்தான் தாரணியி லிவர்போலுமில்லையென்பாரே. ௨௯௪

என்னவே வேணதொரு பொருளுமீவார் யெழிலானமாந்திரிகரென்றுமல்லோ, தன்னவேயுந்தனுக்குச்சோடசாரம் தோராமல்செய்தல்லோ தனமுமீவார், நன்னயமாய்வேதாந்தசித்துவென்று காட்டினிலேயுந்தமக்குப் பேருண்டாகும், பன்னவேபலபேரும் போற்றுவார்கள் பாலகனே நீயுமொருசித்தனாமே. ௨௯௫

கள்ளச்சைவம்.

சித்தனுமின்னமொரு மார்கஞ்சொல்வோம் சிறப்புள்ளபுலிப்பாணிமைந்தாகேளு, பக்தியுடன் குளிகையது பூண்டுமல்லோ பார்லோகம் சத்தகடல் சுத்திவந்தேன், முத்திபெற மாண்பரெல்லாங் கோடிகோடிமுயன்றுமே காஷிகாஷாயத்தோடும், சித்தமுமே செபதபங்களதிகமுண்டு நீநிலத்தில்வெகுபேர்கள் கோடியாமே. ௨௯௬

கோடியாம் சாதியிலே யனந்தஞ்சாதி கொற்றவனே பதினெட்டுசாதியுண்டு, பேடிகளுந் சூரர்களுமெத்தவுண்டு போானபதினிலே லக்கோயில்லை, தேடியேபலதேசங்கண்டாராய்ந்தேன் தேசத்தில் சைவமதுதானமில்லை; நீடியே வெகுமாண்பர் தேசமெல்லாம் நிலையான சைவமென்று சொல்வார்பாரே. ௨௯௭



சொல்லுவது வாக்கியத்தைக் கேட்டதுண்டு சொற்படியுள்ளவர்களைக்கண்டதில்லை, புல்லவே யிறைச்சிவகை புசிப்பமென்றும் புலால்வகைகள் புசிப்பதில்லை யென்றுகூறி, வெல்லவே மதாச்சாரபேதாபேதம்வெகுசாகப் பினக்கிபல்லோ திரிவார்பாரு, சொல்லவே நித்தியமும் புலாலைத்தின்று கூசாமல்சைவமென்று கூறுவாரே. ()

கூறுவார் பலபேதசாதிதன்னில் குறிப்புடனே பிரமமென்ற சாதியப்பா, மாறுகலாம் சைவத்தைக் கூறியல்லோ மருத்துவங்களாகமங்கள் மிகவுஞ்சொல்லி, தாறுமாறாகவல்லோ வேதங்கள்கூறி தாரணியில் வெகுமாண்பர் பிழைப்பாரப்பா, ஆறுதலம் கரைகண்ட யோகநிஷ்டை வப்பனே செய்வார்கள் மட்டிமாடே. ௨௯௯

மாடான மாடல்லோ மாண்பரப்பா வையகத்தில் ஜாதிகெட்ட சைவரப்பா, கோடானகோடிபேர் சைவமென்று கூறியதோர்மொழியதனைக்காதிற்கேட்டேன், காட்டானமாமிஷத்தைக் தின்பார்பாதிசட்டமுடன்நெய்யதனைக்குடிப்பார்பாரி, நீடானதயிர்பாலில் சைவமுண்டோ நிட்சயமாய் சைவமென்று நம்புவாரே. ௩௦௦

நம்பவென்றால் சைவங்களில்லையப்பா நாதாந்தசித்தர்களுஞ்சொல்லவில்லை, வம்பென்று மறைத்து வைத்தார் சைவந்தன்னை வளமுடனேபுலால்தின்னுசெவருமில்லை, வெம்பியேதாரோகபின் செம்மறிதானப்பா விருப்பமுடன் பொசிக்கின்றார் சூத்திரரப்பா, நம்பியுடன் பிரமகுலச்சத்திரியர்தாமும் துகளகற்றி நெய்மோரைக் குடிப்பார் தாமே. ௩௦௧

குடிப்பாரேபால்தயிர்கள் நெய்குடிப்பார் குற்றமென்று யிறைச்சிதனைநீக்கிவிட்டார், நடிப்புடனே சைவமென்று சொல்லலாமோ நாதாக்கள் கைமறைப்பாய் காட்டவில்லை, துடிப்புடனே மற்றதோர் ஜாதியெல்லாம் துப்புரவாய் புலால்வகைகள் மிகவுந்தின்பார், அடிப்படைதான்மாமிஷங்களென்னலாகு மப்பனே மேல்மிதக்கும் நெய்யுமாமே.

நெய்யானவகைகளெல்லாங் கொஞ்சமல்ல நிட்சயமாய் சேருக்குயெட்டிலொன்று. துய்யதொருமாமிஷங்கள் தின்போன்சைவன் துப்புரவாய்நெய்தின்போன்சைவனல்ல, வெய்யதொரு மாமிஷத்தில் நெய்யேயில்லை விருப்பமுடன்ரத்தமதுகண்டியல்லோ, பையவேபாலாகிலந்தநெய்தான் பாலகனேயிறைச்சிக்கு வதிகமாமே. ௩௦௨

அதிகமாம் காய்கரிகள் புழுவேயுண்டு வப்பனேயிலைவகையில் புழுவுமுண்டு, சுதிதமுடன் தண்ணீரிற்புழுவுமுண்டு கண்காணுயெச்ச

லது மலமுமுண்டு, துதிகழுடன் சுத்தமதபெதிலேயுண்டு சுகமுண்டோசைசக்திலே நிகழன்டோ, பதிகழுடன் பொய்ச்சைவமல்லாலப்பா பாரினிலேமெய்ச்சைவ முண்டோபாரே. உகச

பாரப்பாயின்னம்வெகுளிணுதமப்பா பாரினிலே மாணுக்கர்செய்யுமாற்கம், ஆரப்பாகற்பகக்கருவின்மூலம் வப்பனே யார்தின்றமெச்சலப்பா, சீரப்பாமாண்பரெல்லா மதாரந்தான் சிறப்புடைய கிழக்கென்று பெரசித்தாரப்பா. நேரப்பா பலபேரும் பெரசித்தமூலம் நிலைவழிந்து நின்றும்ல்லோ கெட்டார்மாண்பே. உகரு

கெட்டரோயிப்படியோ வைபகத்தோர் கோடிநிங்கசிழிந்துகை வங்கெட்டு, இப்படி பிறவியென்ற சைவமாகவெழிலுடனே மாண்பரெல்லாம் கம்புசார்கள், தொட்டதொருபொருளெல்லாம் சைவமில்லைதோராமல் மாண்பரெல்லாம் புலாலெதின்போர், சட்டமுடன்வெந்தன்குரு காலங்கிநாதர் சாங்கமுடனெந்தனுக்கு வுரைத்தாலே. ()

றாளைனநூலுக்குள்ள திறங்களாலும் நாட்டமென்ற பொருளெல்லாமிதிலேதோயும், காளான காலாங்கி சொன்னவாக்கு காசினியில் பொய்யாது மெய்யேயாகும், மாலான மாண்பரெல்லாம் சிற்றின்பத்தில் மதிகெட்டு தேவதாமங்கையோடு, கோலானவீலை துமிகவுமாடிகுவலயத்தில் யெல்லில்தனைவிரும்பினாரே. உகஎ

விரும்பியே கலவிதனி விஈவரெச்சை மெய்யுடலாவிபொருளெல்லாந்தந்து, கரும்பியளைகப்பொருள்கள் யாவுந்தந்து சுந்தரமே மோட்சமிதுயோனியென்று, கரும்புடனே மூத்திரக்குழியையப்பா கைலாசமேருகிறியென்றுநம்பி, அரும்பாகப் போனவர்கள் கோடாகோடி தூங்கியே மாண்டவர்கள் கோடியாமே. உகஅ

கோடியாம்ரிஷிதேவர்முதலாயுள்ளோர்குவலயத்தில்மாண்டவர்கள்கணக்கோயில்லை, தேடியேமாயவலைசிக்கியல்லோதேசத்தில்கெட்டவர்கள நிகமாண்பர், நீடியேவையகத்திலிருந்தோரில்லை நிட்சயமாய் காலாங்கிசொன்னநீதி, வாடியேபோகரிஷியடியேனப்பா வன்படனே தாமுரைத்தநீதிதானே. உகக

தானுனநீதியதயாருக்கென்றால் தாரணியில்சினபதியுலகத்தோர்கள், மானுனவாக்கியத்தை மெய்யென்றெண்ணி மகவதிலும் பதின்மடங்குவதிகமாக, கோனானகாலாங்கிநாதர்சொல்லை கொப்பெனவேமெய்யென்றுநம்பியல்லோ, வேனுனவொழுக்கமாசாரத்தோடும் மேதினியில் [illegible]ப்பதவுமுண்மையாமே.



சினபதியாருக்குச்சைவமில்லை.

உண்மையாஞ் சினபதிதோத்தோர்க்கு ஒகோகோ [illegible]யில்லையப்பா, தன்மையாய் பாவிதைக்கள் புலால்காவம் கட்டன்றி புசிப்பதுநீசியாகும், வண்மையுடன் செபதப்பங்கள்குளியலுன்றி வளமானரேபநிஷ்டையனேகமுண்டு, தின்மையாம்மாமிஷப்புலாதிவர்க்கம் திகழுடனே தின்பார்கள் சைவந்தானே. உடுக

சைவமென்பார் பேதாபேதங்களில்லை சாதுரிய பதார்த்தவகை பொசித்திட்டாலும், கைதவங்கள்பிசகாத சுழிகன்போலும் கைலாயநாதனைப்போல்தவமுஞ்செய்வார், மைதுனங்கள்மெத்தவுண்டு சினத்தார்க்கு மகாவிஷ்ணுகிருஷ்ணவதாரமென்பார், வெய்யதவம்பூண்டாலுஞ்சினத்தார்கள் விருப்பமுடன்சைவமதயில்லைதானே. உடுஉ

போகர்சினபதிதேசத்தாருக்கு சாஸ்திரமில்லை யென்றுகூறல்.

தானனபுலிப்பாணிமைந்தாகேளு தகமையுடனின்னமொருமார்க்கஞ்சொல்வேன், கோனனையனையர் காலாங்கிநாதர் கொற்றவனர் பாதமது கடாட்சத்தாலே, தேனனதேசமெல்லாங் குளிகைகொண்டு தெளிவுடனேயெழுகடலுஞ்சுத்திவந்தேன், மானனமாண்பரிட சைகைகண்டேன் மகத்தானசாஸ்திரங்கள் மெத்தவுண்டே. ()

உண்டானலோகபதி மாண்பரெல்லாம் ஓகோகோ நாதாக்கள் சொன்னவாக்கு, கண்டல்லோசாஸ்திரங்களதிகம்பார்த்துகாசினியில் தத்துவத்தில் மிகுந்தோர்போல, மிண்டானவார்த்தைகளும் மிகவுங்கூறி மேதினியில் கரைகண்ட வித்துவான்போல், அண்டர்முனி முதலானோர்கண்டுயேங்க வவனியிலேசித்தனைப்போல் பேசுவாரே. ()

பேசியே வெகுகோடி மாண்பரெல்லாம் பிரைத்தினர் சாஸ்திரத்தின்குப்பல்தன்னை, பூசிதங்கள் கொண்டல்லோ பகட்டுகாட்டி புகமுடனேசாஸ்திரத்தைமெய்போற்சொல்லி, ஊசிதமாக்கத்துவங்கள் தியானமார்க்கம் உறுதியுடன் நாதாக்கள் சொன்னதில்லை, வாசித்து நால்வேதமாறுசாஸ்திரம் வகையுடனேகதைகட்டிவுரைத்திட்டாரே.

உரைத்திட்ட கதையெல்லாம் பொய்யேயாகும் வுத்தமனே சாஸ்திரங்களதர்வணந்தான், கரைத்திட்டமாகவல்லோ மாண்பருக்கு காசினியில்தாமுரைத்தார் சாஸ்திரங்கள், நிறைத்திட்டமாகவல்லோயானுஞ்சென்று நீடுழியுலகுபதிசுத்திவந்தேன், வரைக்கமலம்விற்றிருக்குந்தபோர்பாதம் வணமையுட னென்றனும் பதங்கண்டேனே. உடுச

பதமானபசமகவுஞ் சாஸ்திரங்கள் பாங்குடனே மேதினியில் கண்டேன்யானும், மிதமுடனே தர்க்கங்கள்யாகாங்கள் மேதினியில் வெகுபேர்கள்சொல்வாரப்பா, நிதமுடனே சாஸ்திரத்தின் தொகுப்பையெல்லாம் நீதியுடன்மெய்போலே பேசுவார்பார், சதகோடிசாஸ்திரங்கள் கூறிட்டாலும் சட்டமுடன்சினபதிக்கிணையாகாரே. ௨௫௭

இணையான தென்காசிபதியிலப்பா வெழிலானதேசமது வனேகமுண்டு, சுணங்கிலே குளிகையது பூண்டுகொண்டு தாரணியில் சதகோடிதூரமட்டும், கணமதுவும்நில்லாமலடியேன்றானும் காசிபதிமாண்பரெல்லாங் கண்டுவந்தேன், பிணமதுவு மடிந்தாக்கால் சாஸ்திரங்கள் போனசாங்கியங்கள் மெத்தவுண்டே. ௨௫௮

உண்டான சமுசாரிகோடிமாண்பர் வுத்தமர்கள் வேதாந்திகடந்தஞானி, கொண்டான முறைமைகெட்டு மையல்கொண்டு ஜெகந்தனிலேமடிந்தவர்கள்கோடாகோடி, அண்டமுடனாயந்தன்னளவ்வாயகிலமெலாங்கொடிகட்டி வாழ்ந்தார்கோடி, புண்டரிகவிருஷ்ணவதாரனைப்போல் புகழான கீர்த்தியுடன் மடிந்தோர்தாமே. ௨௫௯

மடிந்தோர்மாறாங்கள்மாநிலத்தில் மகதேவர் பாதமதனையடைந்தோர்கோடி, கடினமுடன் வையகத்தில் வாழ்வுபெற்று காசினியில் சாத்திரங்கள்மிகவுங்கற்று, அடிபாளவு வேதமுதலாகமங்களறுபத்துநாலுகலைசாத்திரங்கள், முடியோடு முனிவர்பதந்தாள்பணிந்து மூதுலகில் கற்றோர்ன் ஒன்றுங்காணே. ௨௬0

காணவென்றால் மடிந்தவர்க்குசாத்திரங்கள் கைலாயஞ் சென்றவர்க்குப்பார்க்கலாமோ, தோணவே யுடல்பொருள்களாவியெல்லாம் தோற்றுமல்மண்ணோடே மண்ணாய்ப்போச்சு, வேணதொரு சாஸ்திரங்கள் பார்க்கவென்னபார்த்தாலும்வையகந்திலிருப்பாருண்டோ, பூணவே யாகாதநாளில் மாண்டோர் புகழானவாத்துமமு மிருந்ததுண்டோ. ௨௬௧

இருந்துமே வையகத்தில் மாளிகைகட்டுவெழிலான கிரகமதுபோவதுண்டோ, திருந்தவே வருடமது அறுதிங்கள் திறமானமாளிதனிலிருந்துகொண்டு, பொருந்தவே பெற்றோர்கள் குடும்பத்தாரை பொங்கமுடன்வம்புகளுக்கூர்வதுண்டோ, வருந்தியேமாண்டதொரு விரகந்தன்னை வளமுடனேதானடப்பார் பாருபாரே. ௨௬௨

பாரப்பாகலமானநாளில்மாண்டோர்பாருலகில்கிரகத்தைவிட்டுமல்லோ, போய்பாசமுதாபங் கைலாயத்தில் சேர்மையுடனடைக்கலமாகச்சென்றதென்றும், சிப்பாவாத்துமமுங்கைகாயத்திலசிறப்புடனே சென்றதென்பார்மாண்பரெல்லாம், ஆப்பாகண்டவர்கள்வையகத்திலாருமில்லை வுண்மையிதுபாருபாரே. ௨௬௩



பாரேதான் தேகமதுமண்ணாய்ப்போச்சு பாருலகிலாத்துமமுங்காணார்மாண்பர், சீரேதானெடுக்கனிலேயாருங்காணார் சிறப்பானபிரபஞ்சவாழ்க்கைனைத்தும், வேரேதான் மறுபிறப்புங் கண்டதுண்டோ வெட்டவெளியாகாய மொன்றுங்காணோம், நேரேதான் சென்றவிலைகாணமற்றுன்றிகைத்துமே மாண்பரெல்லாந் திகைப்பார்தானே. ()

தானானகாலாங்கியெந்தனாதா தகமையுள்ளவாக்கதுவும் பொய்யென்றோ, கோனானயென்குருவாம் சற்புருஷன் வாக்கு குவலயத்தில்பொய்யாதுமெய்யேயாகும், மானானமகதேவர்படிவிதானம் மார்க்கமுடன் வயததுவுங்கூறியல்லோ, தேனானதேவாது பாதங்காண தெளிவான சட்டைகளுண்டுபாரே. ௨௬௫

உண்டான சட்டைகளமைந்திருக்க ஓகோகோ சாஸ்திரங்கள் வேதமென்ன, திண்டான நல்லநாள் தீயநாளும் திகழுடனே மகதேவர் படைப்பாருண்டோ, சண்டாளமாண்பரெல்லாஞ் சாத்திரத்தை தக்கபடியுணராமல் மதியீனத்தால், கொண்டபடி யவரவர்கள் தியானத்தாலே குறிப்புடனே தீயநாளென்றிட்டாரே. ௨௬௬

இட்டாரே தீயநாள்நல்லநாளா மெழிலானசாத்திரங்கள் கூர்வதுண்டோ, விட்டகுறை யமைந்தபடி மாண்பர்க்கெல்லாம் மேதினியில்சாஸ்திரங்கள் மெய்யதாச்சு, கட்டமதுமாண்பர்தன்னால் நாதாக்கள் சாஸ்திரங்களேதுக்காச்சு, பட்டமதுதான்பிறந்த பாவனைப்போல் பாருலகில்சாஸ்திரமும் பொய்யதாச்சே. ௨௬௭

ஆச்சப்பாவையகத்தில்சாஸ்திரங்கள் வனேகமுண்டோதாக்கள் செய்தாலில், மூச்சடங்கிப்போனதொரு தேகந்தானும் பூதலத்தில் திரும்பிவந்தசேதியில்லை, பாச்சலுடன் சாத்திரங்கள் கற்றுமென்ன பாங்கானதத்துவங்களறிந்துமென்ன, ஆச்சரியமானதொரு தேகம்பாவவனியிலேயிருப்பதுவும் பொய்யுமாச்சே. ௨௬௮

பொய்யாதுதேகமது நிலையில்லாது பொங்கமுடன் சாஸ்திரங்கள்வேதமென்ன, மெய்யானவாத்துமமுமழியாதென்று மேதினியில் கட்டுமுறைவாக்கியந்தான், வெய்யவேசாஸ்திரத்திறுகமங்கள்விட்டகுறையிருந்தல்லோ வெளியுமாச்சு, பையவே யவரன்றி ஓராறுவுதானும் பாருலகிலசையாது மெய்யதாமே. ௨௬௯

ஆமேதான்கெட்டநாள்நல்லநாளாய் ஆகவைக்கவுன்றேலேயாகுமோதான், போமேதான்கதிரோனின்நாளையெல்லாம் பொங்கமுடன

நல்லநாளென்றிருக்க, வேமேதான் நாளெட்டும்நல்லநாளாய் வேதா
க்தத்தாயினது கிருபையாலே, ஆமேதாநாதரவர் செய்திருக்க வப்ப
னே நம்மாலேயாவதென்னே. உளo

எவ்வமேவேதவன தயெட்டுநாளு மெழிலாகமாண்பருக்குவமை
க்திருக்க, பன்னவே வெள்ளிதனில் திரவியங்கள் பாருலகிலீவதுவே
தருமமல்ல, சொன்னபடிகாரிதனில்சவளமாகா துப்புரவாய்அருக்க
னிக்கிருந்துமாகா, தன்மையாய் திங்களதுவாரநூலை நலமுடனே மா
ண்பருக்கு நாட்டினாரே. உளக

நாட்டமுடன் செவ்வாய்க்கு மேற்றுதானும் நலமுடனே பயண
மதுவாகாதென்றும், தேட்டமுடன்புதனுக்குவடக்கேதானும் செம்
மதுடன் பயணமதுவாகாதெனறும், நீட்டமுடன்குருவாரம்ஸ்நான
மாகா நிலையான நாளெல்லாந்தீயநாளாய், வாட்டமுடன் சாஸ்திரங்
கள் கூறிருக்கவளமுடனேநாளெந்த பலந்தான்காணே. உளஉ

காணவேநாளெல்லாம் முறைப்பாடாக காசினியில் சாஸ்திரங்
கள்பார்த்தநாளுக, தோணவேயெர்தநாள் நல்லநாளென் றுப்பு
லாய்தன்மனதிலெண்ணலாகும், வேணவே நாளெட்டும்நல்லநாளாய்
விருப்பமுட னம்பரனார்செயதிருக்க, நீணவேமதியின மாண்பரெல்
லாம் நிலைகெட்டுப்பதிகெட்டு நின்றிட்டாரே. உளங

சீனபதிப்பெண்களுக்குதீட்டில்லை.

நின்றாரே காலாங்கிநாதர் தம்மால் நீடுழிகாலம்வரை படியேன்
றானும், குன்றானவவர்பாதந்தொழுதுமல்லோ குளிகைகொண்டு கு
லகையேறியலைநான்கண்டேன், சென்றேனே சீனபதிக்கிடபாகத்தில்
சிறப்பான தேசமதுவனேகமுண்டு, வென்றிடவேபலஜாதி மாண்பர்
தாமும் விருப்பமுடன் கண்டல்லோவறிந்திட்டேனே. உளச

அறிந்தேனே சாஸ்திரங்களனேகமுண்டு வவர்களது பேதமை
கள்சொல்லொணாது, குறிந்துமே முழுநாள்தன்னிலப்பா கூறின
சாஸ்திரங்கள்மெத்தவுண்டு, முறிந்ததொருவுதிரமதுநீட்டேயென்று
முனைபானசலகந்தி முழுகவென்று, செறிந்துமே ஸ்நானமது செய்ய
வென்று சோரனவாற்றிறாரு செல்லார்பாரே. உளரு

பாரேதான் ஸ்நானமதுசெய்யநன்று பாங்கான சடங்குகளுஞ்
செய்டநன்று, கேரேதான் ஓமமதுசெய்யநன்று செடிதான தீட்டு



வைக்கழிக்கநன்று, சீரேதானசாஸ்திரத்தின் தொகுப்பைப்பேசேல
சிறப்பானவைதீகஞ்செய்யநன்று, தீரேதான்தீட்டினது மாக்கத்தா
லே திகழுடனேயொன்றுந்தான் காணார்பாரே. உளசு

காணாரே சூதகங்கள்சேர்ந்தபோதும் கடிதானவேலைமுகஞ்செய்
யும்போதும், நீணவே மண்பாண்டந்தனையெடுத்து நீதியுடனுலக்க
ைக்குப்போகும்போது, வேணபடியன்னமதுசமைக்கும்போதும்வே
ண்டியே விருந்தமுர்தங்கொள்ளும்போதும், ஆனவங்கள் தானெடு
க்கிதிட்டேகண்டால் அவனிதனில்விட்டெறிந்து போட்டார்தாமே.

போட்டாரே பாண்டமது வன்னந்தானும் பொங்கமுடன்கா
ய்ப்பதார்த்தங்கள்பேதம், நீட்டமுடன்சமைத்ததுவும் போட்டிட்டா
ரே நிலையான தீட்டதுவும் மெய்யேயாகும், தேட்டமுடனவர்பேர
ட்ட வேஷமெல்லாந்தெளிவானவேஷமென்றுசெப்பலாகும், வாட்ட
முடன் தீட்டதனில்பிறந்தோர்தாமும் வண்மையுடன் தீட்டதுவும்
மெய்யென்றாரே. உளஅ

மெய்யானதீட்டதுவுந்தபங்கியல்லோ மேதினியில்தேகமென்ற
வுருவுமாச்சு, கையுடனே கருவிக்ராணதிபோடும் காசினியில் மாதர்க
ளின்கெர்ப்பக்கோளில், பையுடனே வந்துதித்த சற்பாத்திரந்தான்
பாலகனே திரண்டுருவாய்வடிவங்கொண்டு, எய்யவே கடவுளது வர
த்தினாலே யெழிலானசடலமது பிறக்கலாச்சே. உளகூ

ஆச்சப்பா சதகோடிமாண்பரெல்லா மப்பனேபிறவியதுபிதனு
லாச்சு, மூச்சுடனேதேகாதிகற்பத்தேரடும் மூதுலகைக்கண்டதொரு
மானிடமுமாச்சு, பாச்சலென்றபிறவியது தீட்டேயாச்சு பாங்கான
ஐடலமதுமண்கூறாச்சு, மாச்சலுடன்மகதேவர் கடாட்சத்தாலே மா
னிலத்தில் சகலவுயிர்தீட்டாலாச்சே. உஅo

தீட்டென்று சொல்லுவதுதருமமாமோ திகழான லோகமதிமா
ண்பருக்கு, வாட்டமுடன் லோகாதிவையகங்கள் மானிலத்திலெல்ல
வரும்மதியேகெட்டு, தேட்டமுடன் சாஸ்திரத்தில் தீட்டேசொல்லி
தெளிவானமதபேதங்கூறியல்லோ, நீட்டமுடன்மாண்பரெல்லாமிந்த
பாகம் நிதிகெட்டுவழிகெட்டு மதிகெட்டாரே. உஅக

கெட்டாரே மானிலத்தில் மாண்பரெல்லாங் கீர்த்தியுடனித்துவ
ண்ணபாகத்தாலே, சட்டமுடன் சீனபதிப்பெண்களுந்து சாஸ்திரங்
கள்ஜாதியில்லைதீட்டுமில்லை, இட்டமதுபோலிருந்து போகருஞ்செய்து
யெழிலான பிறவிமக்களனேகமுண்டு, அட்டதிசைத் தான்புகழுஞ்
சீனத்தார்க்குவன்பானமதியநிலையதிகந்தானே. உஅஉ

## போகர்சிங்கிவிளையாட்டு.

தானையின்னமொரு மார்க்கம்பாரு தகமையுள்ள புலிப்பாணி மைந்தாகேளு, கோனையெனதையர்காலாங்கிநாதர் சொற்பவனூரெந்தமக்குச் சொன்னநீதி, பானைகடலேழுஞ் சுற்றும்போது பலகனே கருவிகளுந்தருவியுண்டு, மானகால்லவர்போல் சினைகிப்பார்கள் மர்மமதை மனதில்வைத்துகொல்வார்பாரே. ௨௮௩

கொல்லவந்த மித்துருவாஞ் சத்துருவின்மார்க்க குறிப்புடனே சொல்லிவைத்தசிங்கியப்பா, வெல்லவேயவனெனக்குகொடுத்தபாகம் விருப்பமுடனுந்தமக்குச்சொன்னநீதி, புல்லவேசெகஜாலஞ்சிங்கிகளைம்புகழானசத்துருவைக்கொல்லுஞ்சாலம், மெல்லவேமித்துருபோலிருந்துகொண்டு மேதினியில்ஜாலமதை செய்வார்தாமே. ௨௮௪

தாமானஜாலமது வென்னவென்றால் தன்மையுடன் சொல்லுகிறேன்கண்ணேபாராய், நாமேதான்செவ்ரியென்ற பாஷாணந்தான் நலமான வெலிப்பகையுந்தன்னுடனேசேர்க்க, போமேதான் வீரமென்ற காடிதானும் பொங்கமுடன்வெங்கோன்நிகளையுங்கூட்டி, தீமேதான் செய்யுகின்ற முருகல்தானும் சிறப்பாககளைவண்டு தானுங்கூட்டே;

கூட்டியேகருஞ்சோரா செஞ்சோரந்தானும் குடிகெடுக்குங்குமுனின்களையுங்கூட்டி, தாட்டிகமாய்ச் சேங்கொட்டைப் பூரந்தானும் தன்மையுடன் சரிபெடையாய் நிறுத்துக்கொண்டு, வாட்டமுடன்பாம்பினது விஷந்தானூட்டி வளம்பெறவே சிமிழ்தனிலே பதனஞ்செய்து, ஆட்டமது ஆடுதற்கு வயணஞ்சொல்வேன் வப்பனேயெந்தனது முறைமைபாரே. ௨௮௬

## சத்துருக்களுக்குச்சிங்கிதாக்குவது.

முறையானமுறைபதுவு மென்னவென்றால் மூர்க்கராங்கருமிகட்குஞ்சண்டாளர்க்கும், கறையானநேத்திரத்தில்கண்டபோது காம்பேசிநயம்பேசிகுடிகெடுக்கும், திறையானபாவிகட்குமிர்ந்தபாகம் திகமுடனேவுள்ளங்கால்தாக்குவாய்நீ, சிறைகொண்டு மானிலத்தில் கோபுக்கண்டு சோழிகதுகுழிவிழுந்து போவான்பாரே. ௨௮௭

போவானேதிரேகமெல்லாம்புண்ணுமாகிபொங்கமுடன் வைபகத்திறைசைவிட்டு, சாவானசடமொழிந்து ஆறுதிங்கள் சட்டமுடன்காலில்வந்துபணிவானானால், கேர்வான பிணியதுவுந்தீருதற்கு நட்பமுடன்வெள்ளையெனறகுன்றிதானும், தேவானதழையதுவும்பிடுங்கிவந்து தேற்றமுடன் பாதாளமூலிசேரே. ௨௮௮



மூலியென்றசிறுகிறை வேறுஞ்சேரு மூளையாகச் சரிபெடையாயெடுத்துக்கொண்டு, நீலியென்றமூலியப்பா சரிநிறாக்கநேமகனே நினைவாகப்பாண்டமிட்டு, சாலியனூர்பாண்டமதில்ஜலமேயிட்டுசாங்கமுடன்கியாழமதுசெய்துகொண்டு, நாலிலொருகியாழமது காய்ந்துதானால்நலமானகியாழமதையிறக்கிடாயே. ௨௮௯

இறக்கியேகியாழமது நாளொன்றுக்கு யென்மகனே நீநினைவாய் நாழியாக, உறக்கமது வாராமலந்திசந்தி யுக்தமனே யிருவேளைக்கொள்வாரானால், இறமுடைய கியாழமதுவேகத்தாலே திருமேகுழிவிழுந்த புண்ணுமாறும், திறமான முன்சொன்ன மூலியப்பா வித்துமேமேலரைத்துப்பூசிடாயே. ௨௯௦

பூசியேமண்டலந்தானிந்தபாகம் பொங்கமுடன்தான்குடித்துவருதும்போது, மாசிபடாதேகமதில்வந்தரோகம்வலுவழிந்துநாட்குநாள்குறைந்துமல்லோ, பாசிபதுபோல்படர்ந்த சில்விஷங்கள் பாலகனே மேனிவிட்டுபறக்கும்பாரு, காசினிபிலுன்னையப்பா கடவுளாககருத்தில்வைத்துகாவில்வந்துபணிகுவாரே. ௨௯௧

பணிகுவார்கருமிகளுமுன்னையப்பா பாங்குடனேகுடிகெடுக்கும் பாவிமார்கள், அணியணியாய்வுன்பாதந்தொழுவாரப்பா வப்பனேயுந்தமக்குத்தருமமுண்டு, துணிவுடனேநீபுபொருசித்தனாக துப்புரவாய் லோகமதிலிருந்துகொண்டு. மணிபோன்ற சின்மயத்தை மனதிலெண்ணி மகிட்சியுடன் லோகமதில்வாழ்குவீரே. ௨௯௨

வாழ்கவென்றால்பாவிகளுந்துரோகஞ்செய்தால் மார்க்கமுடன் மனந்தனிலே வையாமற்றான், தாழ்கவேவவர்களுக்குப்பின்னும் நீதி சட்டமுடன் தான்செய்யமெத்தநன்று, ஆழ்கவெவையகத்தில்சேர்த்திகொண்டு அடுத்தஜெனம் பகைபாவியெவர்வந்தாலும், வாழ்கவேயவர்களுக்குச்சேடசாரவண்டையுடன் செய்குவதும்தருமம்பாரே.

## போகர்நோயாளிக்குக்காயகற்பங்கூறல்.

பாரேதானின்னமொருபாகங்கேளு பட்சமுடன்சொல்லுகிறேன் பண்பாயப்பா, கோரேதான் காலாங்கிநாதர்பாதம்நெறிமுறைமைத்தான்வணங்கிநீயாக, சீரேதான்சிங்கியதுகொண்டமாண்பர் சிறப்புடனே நோயகலுங்காயமப்பா, திரேதான்தேகமது விறுபாக நேர்க்கமுடன் காயாதிகற்பஞ்சொல்வேன், கூரேதான்கற்பமதை செய்துமல்லோசொற்றவனே நீகொடுக்கத்தருமமாமே. ௨௯௪

தரு வமகத்திலொருமித்தபாகம் சட்டமுடன் பூரணத்திற்சொல் லவில்லை, சுருமதுவுரியாமல் மூலிகற்பம் சாங்கமுடன்சொன்னேனே வேரொன்றில்லை, திருமகளின்கடாட்சத்தால் காயகற்பம் திட்டமு டன் சொல்லவில்லை பூரணத்தில், குருவான பெண்ணையர் காலாங்கிநா தர் குறிப்புடனே சொன்னதொருநீதியாமே. ௨௯௬

நீதியால் பூமிசர்க்கரையின்மூலம் பிட்கனக்கமானதொரு பால் பெப்பட்டை, சாதியாம்கல்லசொற மாஞ்சில்தானும் தன்மையுள்ள தண்ணீரின்மிட்டாக்காளும், வேதியாம்முச்சாலை மூலந்தானும் வே கமென்ற கொடிவேலிமூலந்தானும், ஆதியாம்பொன்னிறுவாரை மூ லம் வப்பனே நிலப்பனையின் மூலங்கூட்டே. ௨௯௭

கூட்டவே கற்பமாந்தருவின்மூலம் குணமானவெங்கோன்றி மூலந்தானும், நீட்டமுடன் கன்னூர்மூலமப்பா நிலபான வெள்ளை யென்ற குன்றிமூலம், சட்டமுடன்மிதவென்ன மொன்றுபலலே களிமுடன் சரிபெடையாய்நிறுத்துக்கொண்டு, பூட்டகமாய்ரவிந னிலே காயப்போடுபேதமாக மூலமதை பொய்யாய்ச்செய்யே, ௨௯௮

செய்யவேகல்லுரலிலிட்டுமைந்தா செப்புகிறேன் பலத்தேனுங் கூடவிட்டு, மையவேமெழுகுதக்கனி யிடித்து பான்மையுடன் இ மிழ்தனிலேபதனம்பண்ணு, தய்யதொருமெழுகதனைய்திசத்திலப் புவாய்த்தானுமல்லோ கொண்டபின்பு, வெப்பவேயாவின் பாலுட னே கொள்ளுவேமென்ற விரதவுக்தனியுந்தானே. ௨௯௯

தனியுமே முன்போலதேகந்தானும் சட்டமுடன் காந்தியது மின்னலாரும், மணிபோன்றகாயாதிகற்பந்தன்னை மண்டலத்திலுண் டதொருமாண்பருக்கு, துணிவுடனேகளஞ்சிக்குமேலேயப்பா துப் புரவாய்க் கொள்ளுவதும் மெத்தநன்று, கனிவானதேகமதுயிறுதி யல்லோ நவமது பரிதிமுன்னேஜொலிக்கும்பாரே. ௩௦௦

ஜொலிக்குமே பரிதியதுமக்ஷப்போகும் கோருமருந்ததியுங் கண்ணிற்காணும், வலித்ததொருகேத்திரமுங் கீரேகுன்றிவளமையு டன் கண்ணொளிவு பிரகாசந்தான், ஒலிக்குமேவையகங்கள் கண்ணிற் றோற்றும் ஓகோகோகாலாங்கி காயகற்பம், பலிக்குமேபுரூலகில் பார்தான்செய்வார்பாலகரேபுண்ணியர்க்குவாய்க்கும்பாரே. ௩௦௧



பொன்மாற்றுபாவும்.

பாரேதானின்னமொருமார்க்கப்பாரு பாருலகில்மானுக்கள்பி ழைக்கவென்று, சீரேதான்கிடுகைபென்றவேதைசொல்வேன் சிறப் பானநாதாக்கள்சொன்னதில்லை, நேரேதான்பலபலவாஞ்சாத்திரத்தி ல்சேர்மையுடன்பாடிவைத்தார் சித்தரெல்லாம், நீரேதான்தானுக்க மென்றவேதைதானும்திறமுடனேபாடிவைத்தவுண்மையாமே. ()

உண்மையாய்மானுக்கள் பிழைக்கவென்று வுத்தமனே பேம மென்றகிடிகைவேதை, கன்மைபென்றபாஷாணஞ்சிங்கிதானும் கப மானதானகற்பூரங்கூட்டி, வெண்மைபெனுங்குசிபென்றவீரந்தா னும்வெளியானகெவுரிபென்றபாஷாணந்தான், தன்மையுள்ள தருச டனே தாளக்கூட்டிதகமையுள்ளவெடியுப்புக்கூட்டிசேரே.

சேர்க்கவேவெங்காரஞ்சீனந்தானுஞ்சிறப்பானநாகமுடன் குக் கூட்டி, ஏர்க்கவேமதியுப்புதானுஞ்சேர்த்து பெழிலான கெந்தமு ஞ்சாரங்கூட்டி, தீர்க்கமுடன்லிங்கமது வொன்றுப்சேர்த்து சிறப்பு டனேசரிபிடையாய்நிறுத்துக்கொண்டு, ஆர்க்கவேமூவகையின்ஜெய நீராலேயப்பனேயரைச்சாமமரைத்திடவே. ௩௦௩

அரைத்துமேவில்லைதலைகுவாய்ச்செய்துவன்பான ரவிதனிலே காயப்போடு, வலாக்கலம்போலகப் பிக்கான்தன்னை வளமுடனே தான்வைத்துப்பிக்கான்மூடி, நிறைபான சீலைதுவலுவாய்ச்செய்து திட்டமுடன்ரவிதனிலே காயவைத்து, கலைபோல பூமிதனில் குழி தானப்பாகத்தமுடன் சாணிகம்குழிதான்செய்யே. ௩௦௪

செய்யவேகுழிதனிலேமணலைக்கொட்டிசிறப்புடனேமேலதனி ல்பிக்கான்வைத்து, மையவேமேலுமந்தமணலைக்கொட்டி பாங்குப றபுடமதுவும்பெருவுபந்து, வெப்பவேகடாதிகுளிர்ந்தபின்பு மேவ தாங்கத்தாப்தனைமேமனதுன்னி, உப்பவேசெந்தூரந்தனை யெடுத் துவுத்தமனே குழிக்கல்லிற்றன்னிற்போடே. ௩௦௫

போடேதான் பின்னுமந்தசெபநீர்தன்னால்பொங்கமுடன் தான ரைப்பாய்காணுஜாமம், நீடேதான்சிறுபில்லைதட்டுபோலமடிக்கனக் கமாகவல்லோபில்லைசெய்து, காடேதான்ரவிதனிலேகாயவைத்து க லமாகமுன்போலப் பிக்கான்தன்னில், குடேதான்வில்லைதனையுன்னே வைத்து சுத்தமுடன் சீலைதது வலுவாய்ச்செய்யே. ௩௦௬

வலுவானசீலைதுரவியில்வைத்துவளமுடனே காய்ந்தபின்புமெ த்தமுன்போல், மறுவானபுடமதுவும் போட்டுமைந்தா மார்க்கமு

டன் தீயாறியெடுத்துப்பார்க்க, சலுவானசெந்தூரமென்னசொல்வே ன்சுந்தரனேசத்திசிவமதிலேகாண்பாய், வலுவானசெந்தூரமிதற்கீடு ண்டோ வையகத்தில்சித்தர்முனி சொல்லாரன்றே. ௬௦௭

அன்றானசெந்தூரமிந்தபாகம்வப்பனே புடம்பஞ்சதசமுமாகும் வென்றிடவேபுட்டாதுவும் போட்டுமைந்தா விருப்பமுடன்தானெடுத் துசிமிளில்வைத்து, குன்றானமகமேரு செந்தூரத்தை குறிப்புடனே பாச்சுதற்குவகையைக்கேளீர், தென்றிசையில் பொதிகைமுனிகும்ப யோனி செப்பவில்லையிந்தமுறைசெப்பார்தானே. ௬௦௮

தானானகுன்றியிடைசெந்தூரத்தைத் தகமையுள்ளவாறுமாற்றா ணியாக, கோனானென்குருவாங்காலாங்கிநாதர் கொற்றவனூர் சொ ன்னதொருநீதிபோலே, பானானபரிச்சுடு லேசாய்த்தட்டிபட்சமுட ன்களஞ்சிக்குக்குன்றிவீதம், மானான மூவகையின்ஜெயநீராலேமயங் காமல் செந்தூரங் குழைந்துக்கொள்ளே. ௬௦௯

கொள்ளவேசெந்தூரந்தன்னையப்பா குறையாமல்களஞ்சியென் றபொன்தகட்டில், மெள்ளவேபுத்திசலிறதுபோலே மேன்மையுடன் தான்தடவிசெப்பக்கேளீர், வள்ளலுடன்காவிக்கால் தானுங்கூட்டிவ ளமானபெருச்சாம்பல்தன்னிற்சேர்த்து,உள்ளபடிசெண்டையுந்தான் ரேசித்தல்லோ, வுத்தமனேதகடதனை வைக்கக்கேளே. ௬௧௦

கேளப்பாகாவிக்கல்லெருவுக்குள்ளே கெவனமுடன் பரித்தகட் டைமேலேவைத்து, நாளப்பாபோகாமல் தீயைமூட்டி நலம்பெறவே தகடதனை உள்ளயர்த்தி, சூளப்பாபுடம்போடவாணமாவிசுந்தரனே வாணமதுசொல்லொணாது, ஆளப்பாயிப்படியேவறுபுடமூர் தீர்த்தா ல் வப்பனேதங்கமென்றவாணயாச்சே. ௬௧௧

ஆச்சப்பாவாணமென்றயேமந்தன்னை வப்பனேமூசையிட்டுவுரு க்கிப்பாரு, மூச்சடங்கிவாணமதுவேரியல்லோ மூனியான யேமமது பசும்பொன்னாச்ச, மாச்சலென்றபிறவியதுதங்கயாச்சு மகத்தானசுய த்தங்கமிதற்கீடாமோ, பேச்சொன்றுங் கூறுர்கள்பிறவித்தங்கம் பெ ழிலானசாயமென்ற தங்கந்தானே. ௬௧௨

தானான தங்கமதுபிரகாசந்தான் சதகோடிசூரியருக்கொப்பே யாகும், கோனானசித்துமுனி ரிஷிகள்தேவர் குவலயத்திலெந்தனைப் போல்கூறவில்லை,தேனானமனோன்மணியாள்பூசைக்காகசெப்பியதோ ர்வித்தையதுவாணம்பொன்னும், மானானபொன்னிதுதானெவர்தான் காண்பர், மகத்தானசிவயோகிக்காண்பார்பாரே. ௬௧௩



குடவன்பொன்.

பாரேதான்பின்னமொரு மார்க்கங்கேளு பாலகனேபுவிப்பாணி மைந்தாபாரு, நேரேதான்செந்தூரந்தனையெடுத்து நேர்மையுடன் முன்சொன்னசேலாட்டி, சீரேதான்குடவனையேதகடுதட்டி சிறப் பாகமருந்ததனைமேலேபூசி, நேரேதான்சொன்னபடிமார்க்கமப்பா நிறு தியுடன் புடம்போடபொன்மாற்றாமே. ௬௧௪

மாற்றானபொன்னதுமென்னசொல்வேன், மகத்தான தங்கம துபிறவிக்கொப்பாம், நாற்றமுள்ளகுடவனதுகட்டிப்போச்சு நலமான நாதாக்கள்கண்டதில்லை, கூற்றமென்னுஞ்செம்பதுவும் வூறலெதுண மானநாகமதுசிறல்நின்று, ஏற்றமதுவாராமல் பெர்ன்னேயாகியெழி லானமாற்றதுவுங்காட்டுந்தானே. ௬௧௫

காட்டுமேகுடவனிலே பெட்டுமாற்று கண்காணு வித்தையடா ரிஷிகள்வித்தை, நீட்டமுடன்சமுசாரிக்கானவித்தை நிலையானவித் தையதுவேறுண்டோசொல், பாட்டனார்காலாங்கிக்குதனப்பா பண் டையுள்ள காலாங்கிநாதருக்கு, சூட்டியதோர்யிவ்வேதை சூக்கும் வேதைசூட்சமுடன்காட்டிவிட்டாரையர்தாமே. ௬௧௬

தாமானபாட்டனவர்காலாங்கிக்கு தயவுடனேகூறினதோர்வே தைமார்க்கம், நாமேதான்பட்சம்வைக்கு யெந்தன்நீதி சலமுடனே யோதிவைத்தசுளுக்குவேதை, போமேதான் வையகத்தில் பொய்யா காமல் பொங்கமுடன்மானுக்கர் பிழைக்கவென்று, வேமேதான் மேதினியில்பலநூல்பார்த்து வேகமுடன்வோதிவைத்தார் வையகத் தோர்க்கே. ௬௧௭

வையகத்தோர்பிழைக்கவென்று கருமானங்கள் வகையுடனே சொல்லுகிறேனமைந்தபாரு, பொய்பாகு யென்குருவாம் காலாங்கி வாக்குபூதலத்தில்மெய்யாகும்பொய்யேயில்லை, மெய்யானநூல்பார்த் துமாண்பருக்குமேதினியில்கண்டிருக்கசுளுக்குவேதை, செய்தாலுங் கைகூடுமேமவேதை செப்பினரெந்தன்காலாங்கிதானே. ௬௧௮

தம்பாக்குவேதை.

தானானயின்னமொருகருமானங்கேள் தகைமையுடனரைப்பேன் மைந்தபாரு, கோனானயென் குருவாங்காலாங்கிநாதர் கொற்றவனு ரெந்தனுக்குச்சொன்னநீதி, கேளுனசெப்பதுவுங் கலமோயாகும்தெ ளிவானசெம்பதனையெடுத்துக்கொண்டு மானனமனோன்மணியாள்சி த்தரூபி மகிழ்ச்சியுடன்தானரைத்து கவசம்போடே. ௬௧௯

போடேநீகவசமதுசெய்துமைந்தா பொங்கமுடன் ரவிதனிலே காயவைத்து, நீடேதான்கோழியென்றபுடத்தைபோடு நிட்களங்க

மாக்கியல்லோகத்திசெம்பாம், கூடேதான்செம்பதுவும் ஆறலேவிரு
ணமானதாந்திப நமிகவுண்டாச்சு, ஆடேதான்செம்பதுவு மென்ன
சொல்வேனப்பனே சத்திசிவமிதிற் காண்பாயே. ௩௨௦

காண்பாயேயிந்த முறைபத்துவிசைபோடு களிப்பானசெம்பது
வும்ஆறலற்று, ஆண்பானவல்லிமலர்போல்நிறந்தான்வப்பனேசுந்தா
மென்னசொல்வேன், வீண்போகாதிந்தமுறை செய்துமல்லோ விரு
ப்பமுடன் மூன்சென்னசெந்தூரத்தை; நாண்படவேரவிதனையேயுரு
க்கிகொண்டுகல்பெறவேசெந்தூரம் பத்துக்கொண்றே. ௩௨௧

ஒன்றானசெந்தூரமென்னசொல்வே னுத்தமனேபத்துக்குவெ
ன்றேயிய்ந்து, குன்றானசெம்பொன்றக்கூடச்சேர்த்து கொற்றவனே
வாரடித்துப்புடத்தைபோடு, வென்றிடவேசொருசாவின் கடைதான
ப்பாவித்தகனேசிவவேடம் பூண்டோர்க்கெல்லாம், நன்றானகவசகு
ண்டலத்துக்காதிநாயகனேயென்னசொல்வேன் வநிதம்பாரே. ௩௨௨

மெற்சொன்னசெந்தூரத்திற்குஜெயநீர்,

பாரேதான்முன்சொன்ன செந்தூரத்தைப் பட்சமுடன்செய்வத
ற்குமைந்தாகேளு, சீரேதான் நிபுப்புனத்தோடு சிறப்பானவுவரு
ப்புகூடச்சேர்த்து, நேரேதான்வாயென்றபாத்திரத்தில் நெடிதான
செயநீராகிறக்கிமைந்தா, நீரேதான் சீசாவிலடைத்துக்கொண்டு நிக
முனசெந்தூர் மரைப்பாய்தானே ௩௨௩

தானானசெயநீரின்போக்கைதானும் தன்மையுள்ள நாதாக்கள்
சொன்னதில்லை, கோனானயெனதையர் காலாங்கிநாதர் கொற்றவனார்
தாமுரைத்தமுறைப்பாடெல்லாம், பானனவையகத்தோர் பிழைக்க
வென்று பாருலகில்பாடிவைத்த குருநூலாகும், வேனனசாத்திரத்
தினுளவாராய்ந்துவிட்டகுறையிருந்தோர்க்குலபிக்கும்பாரே. ௩௨௪

செம்புகத்தி.

பார்க்கவென்றுவின்னமொரு கருமானம்பார் பாடுகிறேன் புலி
ப்பாணிமைந்தாகேளு, நீர்க்கமுடன்போண்டாந் தலைபண்டந்தான்நிற
மானஓடதுவுங்கொண்டுவந்து, ஆர்க்கவேவெடியுப்புக்கூடச்சேர்த்து
வப்பனேமூலிகையின்செயநீர்தன்னில், ஏர்க்கவேநாற்சாம மரைத்து
பாலாமெழிலாக வில்லைதட்டிக்காயவையே. ௩௨௫

காய்ந்தபின்புதனையெடுத்து வோட்டிலிட்டுகசகாமல்சிலையதுவ
லவாய்ச்செய்துதோய்ந்தமேலாரகமென்றபுடத்தைப்போடுதுப்பா



ரப்புடமாறியெடுத்துப்பாரு, மாய்ந்துமேவெடியுப்புச்சத்துருவுஞ்
சேர்ந்துமகத்தான பற்பமதையென்னசொல்வேன், தீய்ந்தசெருபற்
பமதையெடுத்துமைந்தா திறமானசிசாவிற்பதனம்பண்ணே. ௩௨௬

பண்ணவே ரவிதனையேபெடுத்தேயும் பான்மையுடன் தானுரு
கிராசமீவாய், எண்ணவேசெம்புக்குபாதியிவர் யெழிலானபற்பமம
தையென்னசொல்வேன், உண்ணவேசோறுதின்னவேண்டுமென்றால்
உத்தமனேசெம்புசுத்திப்போகாதோதான் வண்ணமுடன் செம்பத
னையுருக்கிமைந்தாமகதேவர்கவசகுண்டலஞ்செய்வாயே. ௩௨௭

செய்யவே சிவயோகிவேடம்பூண்ட தேசத்தோர் கண்பருக்குயி
தவேதை, உய்யவேதான்கொடுக்க மறுதர்மமாகுமேவுத்தமனேசமு
சாரிக்கானவித்தை, துய்யகொரு செம்புவித்தை யிதுதானப்பா து
றபுர வாய்கலசகுண்டலத்துக்காதி, பையவேயுந்தமக்கு வுபதேசிப்
பேன்பாங்குபெறகர்மிகட்குச்சொல்லாரன்றே. ௩௨௮

சொல்லான சொல்லிதுதான்சிவவேடந்தான் தப்புரவா மிருப்
போர்க்குயியகன்று, புல்லானமாண்பர்களில் தருமிகளுமுண்டு புக
ழானதருமிகட்குயியகன்று, கல்லானகருமிகட்கு கொடுக்கலாகாகப
டன்றிமெய்சொல்லுவோர்குயிக்ககன்று, வல்லகொருசித்துமுனிவே
தையப்பா வளமையுடன் செய்பவர்க்குசித்தியாமே. ௩௨௯

சூதவெள்ளி.

சித்தியாம் யின்னமொருபாகஞ்சொல்வேன் சிறப்பான நாதாக்
கள்சொன்னதில்லை, முத்திபெறகடுகளவு ரசமேயின்றால் மூனையான
மோசமதுப்பெறவேயாகும், சத்திசிவம் சூதமதிற் காணலாகும் தா
ரணியில்கண்டவனேவாதியாவான், வெற்றிபெறகெந்தமும் பலமை
ந்தாகும்விருப்பமுடன்பூரகம் பலமைந்தாமே. ௩௩௦

ஆமேதான் லிங்கமதுபலமைந்தாகும் வப்பனேயெரிகாலன் பா
லாலாட்டி, தாமேதான்கோளாறுநேரிடாமல் காட்சியுடன் ரவிதனி
லேகாயப்போடு, வேமேதான்மறுபடியும்பொடியாய்ச்செய்துவிருப்
பமுடன் செய்யுமந்தமுறமைகேளு, நாமேதான்மதியதுவுந்தலைமுறு
கும்நன்மையுடன்செய்யுகின்றவரிசைகேளே. ௩௩௧

தேளப்பாவெள்ளிதனை குகையிலிட்டுகெவனமுடன் வுருக்கியல்
லோ செப்பக்கேளு, தூளப்பாமுன்சொன்ன மருந்தையல்லோ தூப்
புரவாய்க்கிராசமதுயீவாய்தானும், காளப்பாபோகாமல் மூசை தன்

னை நலம்பெறவேவுடைத்தப்பார்களங்கேயாகும், பாளப்பாபோகமே
ல்களஞ்சூதன்னை பட்சமுடன்றானெடுத்துசெப்பக்கேளே. ௫௫௨

செப்பவென்றால்நாவில்லைப் பாவுமில்லைஜெகந்தனிலே ரஷிதமெ
ன்றகுளிகையாச்சு, ஒப்பமுடன்குளிகைதனை யெடுத்துபூர வத்தமெ
னேகலசமதில்சூதமிட்டு, தப்பிதங்கள் நேராமல் சூதந்தன்னில் நக
மையுடன்குளிகைதனைகலசத்திட்டு, ஒப்பனையாய் வாய்மூடிசீலைசெய்
துவுத்தமனேநெருப்பதனிற் காச்சிடாயே. ௫௫௩

காச்சியே கலசமதைத்திறந்துபாரு கனமானசூதமது வெண்
ணெய்போலாம், ஆச்சரியமானதொரு சூதவித்தை வப்பனே யாரறி
வார்மாண்பரப்பா, கூர்சலுடன்தானெடுத்து சூதந்தானும் கொற்றவ
னே கிழ்நிற்கும்வெண்ணெய்தானும், பாச்சலுடன்குளிகையது மே
லேநிற்கும்பன்பான குளிகைதனைப் பதனம்பண்ணே. ௫௫௪

பண்ணவென்றால் சூதவெண்ணெய் தானெடுத்து பட்சமுடன்
சாந்தமெனுமுகைதன்னை, எண்ணவேதானடைக்கச் சீலைசெய்து
பெழிலாகத்தானுருக்கியெடுத்துப்பாரு, நண்ணவேவானத்துமீன்கா
ணப்பா நலமானவெள்ளியதுவென்னசொல்வேன், திண்ணமுடன்வெ
ள்ளிதனை சிவயோகஞ்செய்து சித்தனைப்போல்தானிருந்துவருந்தி
டாயே. ௫௫௫

அருந்தவே வாரமைவருங்காலந்தன்னில் வப்பனேசிவயோகம்
வாறியுண்ண, இருந்தவேயொருவர்முக மேசவேண்டாம் தீரமுடன்
சினமதுவுங்கைக்குள்ளாச்சு, பொருந்தவேதனக்குகந்த சிஷன்தேடி
பொங்கமுடன்குணங்கண்டு குறியுங்கண்டு, மருந்தினுடக்கைபாகஞ்
செய்பாகத்தைமன்னவனே யவன்றனக்குப்போதிப்பாயே. ௫௫௬

போதித்து வெகுகாலஞ்சென்றபின்பு பொங்கமுடன் வுள்ளுணா
வும்மிகவே யோதி, சாதித்துவுபதேசங் கூர்ந்துமைந்தசட்டமுடன்
சின்மயத்திலிருந்துகொண்டு, ஆதிக்கன்சந்திரனுமறியாமற்றான்அப்
பனே தன்மனதிலொடுக்கமாகி, சாதித்துவரதமென்றவித்தைதன்னை
சட்டமுடன் தார்த்திருந்துசாதிப்பாயே. ௫௫௭

சாதிப்பாய் நல்லோர்கள்திபோருன்றுசற்பனைகள்கண்டல்லோ
மிகவாராய்ந்து, வாதியாந்தெரிக்கவர்போல் வாதுபேசி வந்தவன்னைக்
தடுக்கல்லோ தர்க்கங்கூறி, நீதியாய் நூல்தெரிந்த நிபுணனைப்போல்
நிஷ்டூர முனைப்பேசிகெழ்த்துவான்பார், பார்வதிசடையணிந்த தம்பி
ரான்போல்பலவேஷம் போட்டல்லோ பகட்டுவாரே. ௫௫௮



பகட்டுவாரவர்வலையில் சிக்கவேண்டாம் பாருலகில்வெகு கோடி
கவலையோடும் மூகமதுவின்முன்னின்று நீதிபார்த்து முனையானராசி
முதலுறவுகண்டு, இகபரமுமுள்ளளவும் வையகத்தில் யெழிலாக சி
ஷனென்றேவுறுதிகொண்டு, சகமுழுதும்சதாகாலமுன்னையப்பா சட்
டமுடன்துதிக்கும்வழி தேடிக்கொள்ளே. ௫௫௯

போகர்செம்புவித்தை.

கொள்ளவென்று யின்னமொருமாற்கங்கேளு கொற்றவனே
சரக்கதுதான்செப்பக்கேளு, விள்ளவேபூரமதுவொன்றேயாகும் வி
ந்தகனே வீரமதுவொன்றேயாகும், மெள்ளவே சூதமதுவொன்றே
யாகும் மேன்மையுடன்கெந்தியதுவொன்றேயாகும், உள்ளபடி லிங்
கமது வொன்றேயாகும் வுத்தமனேகெவுரியதுவொன்றுகூட்டே,

கூட்டியேகாரமது வொன்றுசேர்த்து கொற்றவனே நிம்பழத்
தின்சாற்றாலாட்டி, மாட்டியேநாற்சாம மரைத்தப்போது மன்னவனே
மெழுகதுபோலாகும்பாரு, தாட்டிகமாய்மாத்திரைகள் செய்துமே
தானசட்டமுடன் ரவிதனிலேகாயவைத்து, நீட்டமுடன்செய்யும் வ
கைவரிசைகேளு நீதியுடன்கைபாகங்கண்டிடாயே. ௫௪௧

கண்டதொரு செய்பாகஞ்சொல்வேன்கேளு கருத்துடனே செ
ம்புதனை யெடுத்துமைந்தா, விண்டபடி துலமதுவு மொண்டேயாகும்
விருப்பமுடன் தானெடுத்துக்குகையிலிட்டு, அண்டமுடன்றானுருக்கி
மருந்தையப்பாவப்பனே செம்புக்குப்பாதியாக, வண்டலதுபோவதற்
குவ்ராசமீவாய் வரிசையுடன்றானெடுத்துவண்மைபாரே. ௫௪௨

வண்மையாஞ் செம்பதனைத்தகடடித்து வளமைபெறபூங்காவிந
ன்னிலப்பா, சண்டமாருதம்போல லவணஞ்சேர்த்து சட்டமுடன்
நிம்பழத்தின்சாற்றாலாட்டி, கொண்டபடிமேலதனில் தகட்டிற்பூசி
கொற்றவனேபுடம்போட்டு யெடுத்துப்பாரு, பண்டியெகிருஷ்ணவ
தானைப்போல்பட்சமுடனலங்கியது மின்னும்பாரே. ௫௪௩

மின்னவே செம்பதுவுமென்னசொல்வேன் மேதினியில் நாதா
க்களாடுங்கூத்து, பன்னவேசெம்புதனை யெடுத்துமைந்தா பட்சமுட
ன்சுதிதனிலேநாலுக்கொண்டு, துன்னவேதானுருக்கி யெடுத்துப்பாரு
துப்புரவாய் மதியதுவுஞ்செம்புமாச்சு, கன்னபுரி யேர்தனிடஞ் செ
ன்றுமல்லோ கருவான வித்தைதனைக்காட்டிடாயே. ௫௪௪

காட்டவென்று அந்தனுக்குச்சோடசாரம் கனமுடனேசெய்து
மல்லோ மனந்தானகொள்வீர், ஆட்டவொண்ணுவாட்டமதுசெம்பி

நாட்டம்வப்பனேகூர்வதர்க்குமாவுமில்லை, தேட்டமுடன் செம்புதனை யெடுத்துமைந்தா தெளிவான தங்கமதுபத்துக்கொன்று, தாட்டிக மாய்த்தானுருக்கி யெடுத்துப்பாரு தங்கமென்றசெம்பதுவுஞ்சொல் லொணுதே. ௩௪௫

வொண்ணுது தங்கச்செம்பிதுவேயாகும் ஓகோகோநாதாக்கள் கூர்ந்ததில்லை, அண்ணுர்ந்துபார்த்தாலுங் கண்ணேகூசும்வப்பனேநட ராஜாவிக்கினர்தான், மண்ணுலேகருவதுங்கட்டியல்லோ மார்க்கமு டன்செய்து வைத்தார்கருவூரார்தான் திண்ணமுடன்பரிசனமாஞ்செ ம்புவேதைசெப்பினேன் லோகமதிமான்பருக்கே. ௩௪௬

மாண்பான மான்பருக்குயிந்தவேதை மார்க்கமுடன் யார்சொ ல்லப்போராரப்பா, வீண்போன்றகருமிகட்கு பாவிகட்கும் விள்ளாது சொன்னுலும்விள்ளாதப்பா சாண்கொண்டசிறு பாலர்புத்திமானோர் சட்டமுடன் சொன்னுலுங்கண்டுகொள்வார், ஆண்பான வித்தையதி வதிதவித்தைவப்பனே சிவயோகிக்காகுந்தானே. ௩௪௭

அபினிசெம்பு.

தானுனயின்னமொருபாகஞ்சொல்வேன் தகமையுடன்மானுக் கள்பிழைக்கவென்று, கோனுனயென்னையர்காலாங்கிநாதர் கொற்ற வனுரெத்தனுக்குவுரைத்தநீதி, மானுனமனேன்மணியாள்பாதப்போ ற்றி மகத்தானசெம்புதனைகூறுவேன்பார், தேனுனசெம்பென்றதோ ட்டிதனை தேற்றமுடன்றுமென்டுத்துசெப்பக்கேளே. ௩௪௮

செப்பவென்றால்முறையதனைசொல்வேன்பாருதெளிவானபுலிப் பாணிமைந்தாகேளு, துப்பமுடனபினியதுவொன்றேயாகு மொளிவான தொட்டியதுவொன்றேயாகும, செப்பமுடன்காரமதுவொன்றேயா கும் வெடிதானசாரமதுவொன்றேயாகும, செப்பவேகுழிக்கல்லில் தன்னிவிட்டு செயம்பெறவேதானரைத்துவரிசைகேளே ௩௪௯

வரிசையுடன்முறைபோடுங்குறைவில்லாமல் வளம்பெரியமூசை தனிலடைத்துமைந்தா, பரிசைபதுபுகைகொண்டுமேவிடாமல் பட்ச முடன்சீலைபதவலுவாய்ச்செய்து, கரிசலதுவாராமனுருக்கிமைந்தா கனமானமூசைதன்யுடைத்துபாரு, துரிசானகளிம்பதுவும்நீக்கியல் லோ துப்பற்றசெம்பதுவுமாகும்பாரே. ௩௫௦



பாரேதான் செம்பதுவுமென்னசொல்வேன் பாரினிலேநாதாக் கள்செப்பும்வேதை, சீரேதான்செம்பதுவை யெடுத்துமைந்தா செயம் பெற்றே யோடகனிஇராகிப்போடு, நேரேதான்செம்பதுவு மூறலேவி வெடிதான கவசகுண்டலத்துக்காதி, ஆரோதான் செய்வார்களிந்த பாகம் வப்பனே விதியாளிக்கமைக்கும்பாரே. ௩௫௧

விதியான செம்புதனை யெடுத்துமைந்தா விருப்பமுடன் தான் போகும் வழியைக்கேளு, மதியான வெள்ளிதனில நாலுக்கொன்று மகத்தான செம்புதனைக்கொடுத்தாயானல், பதியானமதியதுவும்பழு ப்பேயேறி பாங்கானசெம்பதுவுந் தங்கச்செம்பாய், துதியான சிவத் துக்கு வுறுதிசெம்பொன் துறைபானவழிபாடு முறைபாடாமே. ()

பாடானசெம்பதுவுமென்னசொல்வேன் பாரினிலேநாதாக்கள் செய்யும்வேதை, தாடாண்மைகொண்டதொருசித்துவேதை தகமை யுள்ள புத்திமானறிவான்பாரு, நாடானவையகத்தில் கருமிமாண்பர் நன்மையுடன்கதைபேசி முறைசன்பேசி, சாடானயம்பேசி காமும் பேசி சார்பானமுறைதனையே கேட்பார்பாரே. ௩௫௩

கேட்டாலும் முறைதனையே கொடுக்கவேண்டாம் நெடியான மாண்பருக்குக் கொடுத்தாயானல், வாட்டமுடனுன்றலேதான் தெரி த்துப்போகும் வளமுடனே நாதாக்கள் சொன்னவாக்கு, தேட்டமு டன் மாண்பருக்குக் கொடுத்தாயானல் தெளிவான சிவயோகம்விட் டும்பாரு, ஆட்டமது செம்பினது ஆட்டமல்லோ வவனிதனில் யார் காண்பார் வதிதம்பாரே. ௩௫௪

நாகக்கட்டுசெந்தூரம்.

பாரேதா னின்னமொரு மார்க்கங்கேளு பான்மையுள்ள புலிப் பாணிமைந்தாபாரு, நேரேதான்நாகமொரு சேர்தானுதும் கிலயான சிலுப்பை செப்தன்னிலப்பா, சீரேதான்நாகமதையுருக்கிக்கொண்டு சிறப்புடனே சாரமதைநிராசமீவாய், நீரேதான் நிராசமது கொடுத் துமல்லோ திறமுடனே யிலுப்பையெய்யி யுருக்கிச்சாயே. ௩௫௫

சாய்க்கவே நாகமதுசுத்தியாச்சு தகமையுடன்மூலைந்துநாமே சாய்க்க, வாய்க்கவேநாகமதுகண்ணேடுங்கி வளமானநாகமது சவனை போலாம், காய்த்துனசிரூலிதனை பரைத்துமைந்தா நலமான நாகத் துக்கள்கூட்டி, மாய்க்கவே சீலையது வலுவாய்ச்செய்து மறவாமல் தோழியதுப்புடமுந்தானே. ௩௫௬

தானுனபுடமதுவுமிப்படியேபோடு தண்மையுள் நாகமதுகண் ணடங்கி, வேனுனவெள்ளியதுவுருக்குபோலே வெருசோதி நாமெப்

பாயென்னசொல்வேன், கோனூளா முன்சொன்ன மூலிதன்னால் வெ
ற்றவனேபுடமூன்றுபோடுபோகே, மாறூனநாகமதுசிறலற்று மார்க்க
முடன் வெள்ளிபோலிருக்கும்பாரே. ஙுள

இருக்குமேவெள்ளியென்ற நாகந்தன்னையெழிலாகத் தானெடு
த்துசெப்பக்கேளீர், நொருக்கியேநாகமதை யெடுத்துமைந்தா நேசக்
கமுடன்குகமதுசரியாய்ச்சேர்த்து, பருக்கியேகெந்தகத்தின் தயிலத்
தாட்டிபாங்குபெற ரவிதனிலேகாயவைத்து, தெரிக்கவே குழியம்மி
தன்னிலிட்டு தெளிமையுடன்பொடிபண்ணி செப்பக்கேளே. ஙுஅ

செப்பவென்றால் காசியென்றகுப்பிதன்னில் சிறப்புடனே மரு
ந்தையெல்லாந்துலகயிலூட்டி, ஒப்பமுடன் மாக்கல்லால் கொண்டு
மூடி வுத்தமனேசீலைதுயேழுஞ்செய்து, தப்பிதங்கள் வாராமல் பா
ண்டந்தன்னில் தன்மையுடனயணலைதன்னக்கிழமைத்து, அப்போதே
மணலதனை மேற்பொதிந்து வண்புடனேபாண்டமதைசீலைசெய்யே.

செய்யவே சீலையதுவலுவாய்ச்செய்து திறமுடனே தானெரிப்
பாய்நாலுஜாமம், வெய்யவேநாற்சாம மெரித்தபோது வேதாந்தத்தா
யினது செந்தூரந்தான், தூய்யபுகழ் யிராஜாதி ராசர்தானும் துப்புற
வாய் வருணமென்ற செந்தூரதனை, பையவேசோதித்து வுந்தனைத்
தான் பட்சமுடனகேட்டுவழியறிவார்தாமே. ஙுசுo

அறிவானசெந்தூரமென்னசொல்வேன் வப்பனே குன்றியிடை
த்தாவெடுத்து, முறியாதவெள்ளிதனில் பத்துக்கொன்று முனையா
கத்தானுருக்கி கொடுத்துப்பாரு, குறியான மாற்றதுவுமேழதாகும்
கொற்றவனே நாலுக்கொர்தங்கஞ்சேர்த்து, மறிபோன்ற மூசைதனி
லுருக்கிக்கொண்டு மயங்காமல்புடத்தகடாய் வடித்துப்போடே. ()

அடித்துமே தகடதனை யருள்மைந்தாகேள் அப்பனேமுன்சொ
ன்னசெந்தூரத்தை, நடிக்கமலம் விற்றிருக்கும் மனோன்மணித்தாய்
நாதாந்த தேவியன்தாள்பணிந்து, படியானசெந்தூரம் பரித்தகட்
டில் பக்குவமாய்த்தான பூசிப்புடத்தைப்போடு, கடியானகடிசதுவும்
மிகவேநிகி கனகமென்றதங்கமது வாகும்பாரே. ஙுசுஉ

தங்கமாம் பிரிதியென்றபிறவிபாச்சு தாரணியில்நாதாக்கள் செ
ய்யும்வேதை, பங்கமதுநேராதவொருக்காலுந்தான் பாரினிலே தரு
மிகட்டுகிட்டும்பாரு, குங்குமப்பூதன்னிறமாந் தங்கர்தங்கம் குவலய
த்திலகாண்பதுவுமறிதேயாகும், சங்கமென்றகுகைதனிலேயிருக்குஞ்
சித்தர் சட்டமுடன்செய்கின்ற பாகந்தானே. ஙுசுங



திரிவங்கச்செந்தூரம்.

தானானபின்ன மொருபாகங்கேளு தன்மையுள்ள செந்தூரத்
திரிவங்கந்தான், கோனூனகரிவங்கம் வெள்ளீயந்தான் கொற்றவ
னே நாகமதுசரியாய்க்கூட்டி, மானூனஜெயநீரமென்னசொல்வேன்
மகத்தான வாறுவகைஜெயநீர்தன்னில், பானூனமூன்றுவகைத் திரி
வங்கந்தான் பட்சமுடன் குகைதனிலேவுருக்கித்தீரே. ஙுசுச

உருக்கியே ஜெயநீரில்தாக்குதாக்கு வுத்தமனேநாகமதுகண்று
றங்கி, பொருக்கமுள்ள கண்ணதுவுந்தானொடுங்கி போனசலவையது
போலேயாகும், கெருக்கமுடன்குகமது நிகராய்ச்சேர்த்து சேர்மை
யுடன் கல்வமதிலிட்டுமைந்தா. பொருக்கவேகெந்திபது நாலுக்கொ
ன்றுபொங்கமுடன் தான்சேர்த்து வரைக்கக்கேளே. ஙுசுரு

கேளப்பாகெந்தியுடன் தாரங்கூட்டி கெடியான மனோசிலையுந்
துருசுவீரம், காளப்பாபோகாமல் விடைதானொக்காரகனே கெந்
தியிடைத்தானுங்கூட்டி, ஆளப்பா வாறுவகைஜெயநீர்தன்னால்வப்ப
னே நாற்சாமமரைத்துமேதான், பாளப்பாபோகாமல் ரவிதனிற்க்கி
பாலகனே முன்போலப் பொடிசெய்வாயே. ஙுசுசு

பொடியானமருந்ததனை யெடுத்துமைந்தா பொங்கமுடன் காசி
யென்ற மோகன்னில், படியளவாய்க் குப்பிதனிற் பதிவிட்டு பால
கனே யேழுசீலை வலுவாய்ச்செய்து, வடியுடனேரவிதனிலே காயவை
த்துக்கனமானவாலுகையா மேந்திரத்தில், அடியாநாற்சாமமெரித்
தபோது அப்புரவாய்செந்தூர மாகும்பாரே. ஙுசுள

லோகப்பாய்ச்சல்.

பாரேதான் செந்தூரத்தனையெடுத்துபாங்குபெற வெள்ளிதெ
ம்பில்பத்துக்கொன்று, நேரேதான்தானுருக்கி தருவொன்றிய திறமா
னமாற்றதுவுங்காணும்பாரு, சீரேதான்வேட்டிவிட்டு ஓதிப்போடு
நிறப்பானமாற்றதுவுமெட்டதாகும், சேரேதான்பத்துக்கோர்தங்க
ஞ்சேர்க்க நிலையானமாற்றதுவுமாகும்பாரே. ஙுசுஅ

ஆகுமேதங்கமது யென்னசொல்வேனூதாக நாதாக்கள் செய்
யும்வேதை, ஏகுமேசெந்தூரத்தனையெடுத்து யெழிலானகுடவனி
லே கொடுத்துப்பாரு, போகுமேஹூறலது யேகியல்லோ பொங்கமு
டன் மாற்றதுவு மாணித்தங்கம், பாகுபெறதங்கமது சிவந்துக்காயி
பாரினிலேதவயோகி காண்பான்தானே. ஙுசுகூ

காண்பானேநாதாக்கள் தாள்பணிந்து சுருக்குரைவேமனது வர்ரு நடந்துகொண்டார், ஆண்பானவாதமது சித்திக்குந்தா னடோரன பெரியோர்களிருமைதன்ருல், மாண்பானசிவஞானங் கிட்டும் பாருமறவாமல் சின்மயத்தை மனதிலுன்னி, ஜாண்பாம்பேயானுலுந் தடிவேண்டல்லோ சட்டமுடன் தெருவழியில் நில்லாய்தானே.

நில்லவேகாலாங்கிநான்பணிந்தேன் நிலையானகுளிகையது பூண்டுகொண்டு, புல்லவேசினபதி சென்றேபானும் புகழானகாண்பர்களைக்கண்டுமல்லோ, வெல்லவே வாதமென்ற கடலைப்பப்பா வேதாந்த்தாயினது கிருபையாலே, செல்லவேனுனேபதேசங்கேட்டு தப்புறவாய்வாதமதை போதித்தேனே. ௫௭௧

போதித்தேன் சினபதிப் பெண்களுக்கு புகழானவாதமென்ற கடலைப்பப்பா, ஆதித்தன் சந்திரன்போலதிதவித்தை பலர்களிடம் பானசென்றுபோதித்தல்லோ, சோதித்துமனந்தேறிபுத்திகொண்டு சொற்பெரியவேலைதயெல்லாங் கடைந்தபற்றி, நீதிபாய்ப்பூநீரின்மார்க்கங்கண்டு நிலையானவுப்புமணி செய்தேன்பாரே. ௫௭௨

போகர் சினபதிபெண்களுக்குடப்புமணி பவளமணிபாலமணிபச்சைமணி நீலமணி கறுப்புமணி முத்துமணி முதலானவைகள் கூறல்

பாரேதான்பின்னமொரு மார்க்கங்கேளுபாலகனே புலிப்பாணிமைந்தாபாரு நேரேதான் சினபதி வடபாகத்தின் நெடியான கடலோரந்தன்னிலப்பா, வேரேதான்பூநீறுவிளையுமார்க்கம் விடங்கண்டு தலங்கண்டுவிதியுங்கண்டு, சீரேதான்வளர்பூமிவளமுங்கண்டு சிறப்பானபூநீரை யெடுத்தேன்ருனே. ௫௭௩

தானனபூநீரை யெடுத்துமைந்தா தன்மையுடன் மூசையென்ற பாண்டமிட்டு, கோணுனகவவாசல் துவாரமிட்டு கொற்றவனேபூநீரை பதிற்பொதிந்து, தேனனமனோன்மணியாள்பாதம்போற்றிதெளிவுபெற சினபதிமாண்பருக்கு பானனபூநீரை புருக்குதற்கு பட்சமுடன் தீமூட்டி வழிகொண்டேனே. ௫௭௪

கொண்டேனேபூநீரை யுருக்கியல்லோ கொற்றவனே மாண்பர்களும்பிழைக்கவென்று, கண்டேனே பூநீரின்மார்க்கமெல்லாம் கனம்பெறவே தானுருக்கிப் பலகையாக்கி, அண்டர்முனி தேவாதிரிஷிகளெல்லாமண்பாகக்கண்ணுடி காச்சுதற்கு,விண்டதொருவழிதனையுமறியாமற்றுன்விட்டாரேதேவசித்து முதலானோரே. ௫௭௫



### உப்புமணிவுற்பத்தி.

மூதலான மூப்புவென்ற பலகைதன்னை மூபர்ச்சியுடன் பிறதியென்ற மூசையிட்டு, பதமுடனே தானுருக்கியெடுத்து மைந்தாபாலகனே மயிர்க்கம்பி பிரும்பாலப்பா, சுகமுடையாசமதுபோல் துளைதிருத்திகசகாமல் பலகைதன்னைவுருக்கிச்சாய்த்து, இதமுடனேமண்கவசந்தன்னை நீக்கி யெழிலான மணியதனைக்கொட்டுவீரே. ()

### பாலாமணி வுற்பத்தி.

கொட்டவென்ருல் மணியதுவுஞ் சதகோடிகாணும் கொற்றவனே பூநீராம்பலகைதன்னை, திட்டமுடன்தானுடைத்து மூசையிட்டு திறமுடனே பாலமணி யமைக்கவில்லை, குட்டமுள்ள தொங்கலது நூறுகம்பம் குறிப்பாகமயிர்க்கோதித்தொங்கவிட்டு, பட்டதொருபூநீரின்பலகை தன்னைபாங்கு பெறகடல் நுரையால்சுத்திசெய்யே. ()

செய்துமேதானுருக்கி யெடுத்துமைந்தா செய்மதுடன்கருக்கட்டி வார்க்கும்போது, பையவேவிரும்பினது மயிர்ப்பாய்ச்சலப்பா பால்பெற பூநீறுவுருகிச்சென்று, மெய்யானகருவதனில் பாய்க்துமல்லோ மேன்மையுடன்சதகோடி மணிகளாகும், பொய்யாதுகாலாங்கிநாதர் வாக்கு பொங்கமுடன்செய்துவா வரிசைதானே. ௫௭௮

கேளேதான்கவசமது வுடைத்துப்பாரு கொடியானபாலமணி யென்னசொல்வேன், பாளேதான்போகாமல் மணியுமாமிப்பாங்கான பூநீறுமணியுமாச்ச, நாளேதான்கிட்டுகுறை பின்னமொன்று நலமானபச்சைமணிபுகலுவேன்பார், கூளேதான்பூநீறு பலகைதன்னை சுத்தமுடன்தானெடுக்க வரிசைகேளே. ௫௭௯

### பச்சைமணி வுற்பத்தி.

வரிசையாம்பின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் மகத்தானபுலிப்பாணிமைந்தாபாரு, பரிசையுள்ளபூநீறு பலகைதன்னைபாங்குபெறரங்கென்றபூநீர்தன்னை, விரிவுடனேதான்சேர்த்து வுருக்கியல்லோ விருப்பமுடன கருக்கட்டிவார்க்கும்போது, சரியானகருவதனில் பாய்ச்துமல்லோ சட்டமுடன்மயிர்ப்பாச்சல் நிறையலாச்சே. ௫௮௦

ஆச்சப்பாபூநீறு நூங்கினுலே வப்பனேபச்சையென்ற மணியுமாக்கமூச்சடங்கியிருந்ததொரு, கருவைத்தானும் மூங்கியமாய்வுடைத்துப்பார் யென்னசொல்வேன், பாச்சலுடன் பச்சையென்ற மணிதானங்கே பாங்குடனே சதகோடியென்னலாகும், மாச்சலுடன் சினபதிபெண்களுக்கு மார்க்கமுடனேதிவைத்தே னுண்மைபாரே. ()

### நீலாமணிவுற்பத்தி.

உண்மையாயின்னமொரு மார்க்கம்பாரு வுத்தமனேபுலிப்பாணி மைந்தாபாரு, வண்மையாஞ் சேனபதிப்பெண்களுக்கு வளமானநீலா மணி செய்வேனப்பா, தண்மையாம்பூநீராம் பலகைதன்னில் தகமையுள்ளநீலத்திராட்படிக்க, பண்மைபெறமூசையிட்டு வுருக்கியல்லோ பட்சமுடன் நீலமணிசெய்கான்றானே. ௩௮௨

செய்யவென்றாக்சிறுகம்பி மயிர்பாலந்தன்னில் சிறப்புடனேஸ்தம்பமது நிறுக்கியல்லோ, பையவேகருக்கட்டி துவாரமிட்டுபாங்குபெற மூசையிட்டு வுருக்கியல்லோ, வெய்யவேமூசையது வுருக்கியேதான்மேன்மையுடன் கருவதனில் பாயும்போது, துய்யதொருநீலமணியென்னசொல்வேன் துப்புரவாய்சதகோடி பெண்ணலாமே. ()

என்னவே காலாங்கிநாதர்வாக்கு யெழிலானவேதைமுகம்பெரியாதப்பா, பன்னவேசேனபதிப்பெண்களுக்கு பாலித்தவேதையது கோடாகோடி, மின்னவேபவளமணி சொல்வேன்பாரு வித்தகனே சித்தர்முனிசொன்னதில்லை, என்னவே நாதாக்கள்தாள்பணிந்துநவிலுகிறேன் பவளமணிநவிலத்தானே. ௩௮௪

### பவளமணி வுற்பத்தி.

நவிலவேமூண்பவள மென்னசொல்வேன் நாதாக்கள் சித்துமுனிவந்ததில்லை, சவிலுமுள்ளபூநீறு பலகைதன்னை சட்டமுடன்யியமென்ற செந்தூரத்தை, குவிலவே மூசையிட்டுத்தானுருக்கி கொற்றவனேமயிர்ப்பாலந்தானிறுத்தி, பவிலவேகருக்கட்டிவாய்தான்விட்டுபக்குவமாய் வுருக்கியதையெடுத்துவாரே. ௩௮௫

வாக்கவே கருவதுதான் பாய்ந்துமல்லோ வளமானசதகோடி மணியுமாக, ஏர்க்கவேமூசைதனை யுடைக்கப்பாருயென்ன சொல்வேன்பவளமென்ற மணிதானப்பா, நீர்க்கமுடன்நாதாக்கள் சொன்னதில்லை திறமானவேதைமுகங் கண்டுமல்லோ, ஆர்க்கவேசேனபதி மாண்பருக்குவன்புடனே போதித்தமணியுமாமே. ௩௮௬

### கறுப்புமணிவுற்பத்தி.

மலரியானமணியதுவு மென்னசொல்வேன் மார்க்கமுடனின்னமொருபாகங்கேளு, அணியான பூநீராம்பலகைதன்னி லப்பனேயிரும்பினிடசத்துவாங்கி, அணிவுடனேமூசையிட்டு வுருக்கிக்கொண்டு துப்புரவாய்துவாரமது விட்டுமேதான், கனிதமுடன்மயிர்ப் பாலங்கால்நிறுத்தி கணக்குடனே சிறுகம்பி ஸ்தம்பமாட்டே. ௩௮௭



நாட்டியேமூசைதன்னை யெடுத்துமைந்தா நலமுடனே கருவதனில் பாய்ச்சியேதான், வாட்டமுடன் கருவதனை யுடைத்துப்பாரு வளமான கறுப்புமணிசதகோடியப்பா, நீட்டமுடன் சேனபதிமாண்பருக்கு நியமித்தகறுப்புமணிபூநீர்தானும், ஆட்டமதையென்னசொல்வேன் பூநீராட்டமப்பனேசித்துமுனி சொல்லான்றே. ௩௮௮

### முத்துமணி வுற்பத்தி.

அன்றானயின்னமொரு மார்க்கம்பாரு வருமையுள்ள புலிப்பாணிமைந்தாகேளு, குன்றானகுளிகைகொண்டு சீனஞ்சென்றுகொற்றவனே யான்செய்தவேதையப்பா, நன்றானபூநீறு பலகைதலை நலமானநவநீதசத்துசோத்து, வென்றிடவேதானுருக்கி மூசைகட்டிவேகமுடன்காச்சதற்கு வகையைக்கேளு. ௩௮௯

வகையானமயிர்ப்பாலந் தன்னிலப்பா வளமானசிறுகம்பிஸ்தம்பநாட்டி, மிகையானகருவதுவும் வமைத்துமேதான் மேன்மையுடன்றானுருக்கி மூசைதன்னை, நகையெனவேகருவதனி லுருக்கியாருநலமானகருவதுவுப பாய்ந்துமேதான், பகையிலாமுத்துமணியென்ன சொல்வேன் பாலகனேசதகோடி யெண்ணலாமே. ௩௯௦

எண்ணவேமுத்துமணி சூரியன்போலெழிலான காந்தியதுவென்னசொல்வேன், பண்ணாவே ரிடிமுனிவர் சித்தாளும் பாருலகில் முடியாதுயிந்தவேதை, நண்ணவேகாலாங்கி கடாட்சத்தாலே நாட்டினேன் சேனபதிமாண்பருக்கு, வண்ணமுள்ளவேதையிது மகாசங்கதான்மார்க்கமுடன் பூநீரின்வேதையாமே. ௩௯௧

### கல்லுப்பு செந்தூரம்.

வேதையாம்பின்னமொரு மார்க்கங்கேளு விருப்பமுடன்சொல்லுகிறேன் வுகந்துபாரு, பாதையாம்முப்பென்ற செந்தூரத்தை பலபலவாஞ்சாத்திரத்தில் மிகவுஞ்சொன்னார், நீதையுடனுப்பென்ற செந்தூரத்தை நீட்சியுடன்களுக்கு முகஞ்சொன்னதில்லை, சோதையுடனபல பலவாஞ்சாத்திரத்தை தேராமல் கண்டல்லோ துணிவுற்றேனே. ௩௯௨

துணிவானலவணமென்ற செந்தூரந்தான் துப்புரவாயானுரைப்பேன் மைந்தாகேளு, கனிதமுடனுப் பென்றகல்லுப்பல்லோ கருத்துடனே சோதுதான வொன்றேயாகும், பணிவுடையகுழியம்பிதன்னிலிட்டு பாலகனே மூலிவகைசெப்பக்கேளு, கனிவுடனே செல்வக்லிப்பூச்சார்கொண்டு சிறப்புடனே நாற்சாமமரைத்திடாயே. ௩௯௩

அரைத்துமே நாற்சாமமானபின்பு வப்பனேயில்லையது தட்டியல்லோவரைத்ததொரு ரவிதனிலே காயவைத்து வளமானசில்லையது

வலுவாய்ச்செய்து, திரைத்துமே கோழியென்ற புடத்தைப்போடு தீரமுடன் செந்தூரமாகும்பாரு, பரைத்துமேயிப்படியே பத்துமுறைபோடு பாங்கானசெல்வல்லிமூலிதாமே. ௬௯௪

மூலியாமின்னமொரு பாகங்கேளு முனையானபுளியாரைச்சாற்றினாலே, சலியமல்த்தானரைப்பாய் நாலுசாமம் சட்டமுன் ரவிதனிலேகாயவைத்து, மாசியுடன் வோட்டிலிட்டுச்சீலைசெய்து மகத்தானரவிதனிலே காயவைத்து, ஆசியதுவாராமல் புடந்தானப்பா வப்பனே கோழியென்றபுடந்தான்போடே. ௬௯௫

போடவேசெந்தூர மென்னசொல்வேன் பொங்கமுடனுதாக்கள் சொன்னதில்லை, நீடவேயிப்படியே பத்துபுடம்போடு செடிதானசெந்தூரம்பாரு, தேடவேயின்னமொரு மூலிசொல்வேன் தெளிவான செந்தூரமாரும்பாரு, தேடவேயின்னமொரு மூலிசொல்வேன் தெளிவான பொன்னிறூமத்தையப்பா, கூடவேமூலியது தான்பிழிந்துகொற்றவனே தானரைக்கவகையைக்கேளே. ௬௯௬

கேளப்பாமூலியது சாற்றினாலேசெடிதானவுப்பென்ற செந்தூரத்தை, மாளப்பாநாற்சாமமரைத்துமேதான் மகத்தானவில்லையது தட்டியல்லோ, குளப்பாரவிதனிலே காயவைத்துசுத்தமுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, ஆளப்பாகோழியென்ற புடத்தைப்போடுவப்பனேசிந்தூரமாகுங்காணே. ௬௯௭

காணவேயிப்படியே பத்துமுறைபோடு கயிலாசநாதருட செந்தூரந்தான், தோணவேசெந்தூரத்தையெடுத்து துப்புரவாய்ஜெயகுருநமடக்கிபாதி, வேணபடித்தானெடுத்துக் கல்வமிட்டுவேதாந்தத்தாய்தன்னைமனதிலுன்னி, நீணவேகல்வமதிலிட்டு மைந்தாநீதியுடனரைப்பதற்கு வகைதான்கேளே, ௬௯௮

வகையானசெந்தூரமரைப்பதற்கு வண்மையுடனுறவகைஜெயநீரப்பா, தகையான துருசுவெடியுப்புக்காரம் தோற்றமுள்ளவருஞ்சாரங்கரியுப்புமாகும், பகையானசீனமதுவொன்றுங்கூட்டி பக்குவமாய்ஜெய நீருந்தானிரக்கி. மிகைபட்வேதானரைப்பாய் நாலுசாமம் மேன்மையுடன்வில்லையது லகுவாய்த்தட்டே. ௬௯௯

தட்டியேரவிதனிலேகாயவைத்து சாங்கமுடன்வில்லையதுவோட்டிலிட்டு, சட்டமுடன்சீலையது வலுவாய்செய்துசாங்கமுடன்புடமதுவுங்கோழியாகும், திட்டமுடன்தான் போட்டெடுத்துப்பாருதிற



மானசெந்தூரமாரும்பாரு, வாட்டமுள்ளசெந்தூரந்தனையெடுத்துவளமையுடன்முன்போலபத்துபுடந்தீரே, ௭௦௦

தீரேதான்செந்தூரமென்னசொல்வேன் திறமானவிசேடிசிஷிதனப்பா, பூரேதான் சொன்னார்களிந்தபோக்குவப்பனேயுமனக்குச்சொன்னேம்பாரு, சீரேகான்நாதாக்கள்சொன்னதில்லை திறமானகல்லுப்புமார்க்கவேதை, வீரேதான் பலபல்வாஞ் சாஸ்திரத்தில்விருப்பமுடன்பாடிவைத்தார் கோடியாமே. ௭௦௧

கோடியாம்லவணமென்ற செந்தூரத்தை கொப்பனவே மூலிவகைதன்னிலப்பா, நாடியேயாராய்ந்து சொன்னேப்பா நலமானசெபநீர்தான்சொல்லவில்லை, மூடியேகானமறைத்தார் ஜெபநீர்போக்கைமுதன்மையாயானுரைத்தேன் ஜெபநீர்தன்னை, வாடியே மயங்காமல் செந்தூரத்தைவளமுடனே செய்யவனேவாதியாமே. ௭௦௨

செந்தூரவேதைமூலம்.

வாதியாஞ்செந்தூரந்தன்னைத்தாக்கவளமுடனேசொல்லுகிறேன்வுண்மைபாரு, சோதியாம்ரசிகமென்றவெள்ளிதன்னில்துப்புரவாய்ப்பத்தக்குவொன்றேயீய, நீதியாய்மாற்றதுவுமொட்டேயாகும்நிலையானநாதாக்கள்செய்யும்வேதை, ஆதியாம்தேவரிஷிமுனிவர்தாமுமன்புடனேசெய்தசெந்தூரந்தானே. ௭௦௩

தானனசெந்தூரப்போக்கு தன்னைதன்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு, கோனனபெனதைபர் காலாங்கிநாதர் கொற்றவனுர்தாமுரைத்த நீதியாகப், பானனபாரபரிபைமனதிலுன்னியச்சப்பாசெம்புதனில பத்துக்கொன்று, மானனயாற்றதுவுமொன்பதாகும் மகத்தானவேதையிதுவதிதம்பாரே. ௭௦௪

பாரேதான்செந்தூரமேகும்போக்குபாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு, நேரேதான்குடவனிலேபத்துக்கொன்றுநேர்மையுடன்தான்கொடுக்கத்தங்கமாகும், சீர்தான்சுபத்தங்கம்பிறவித்தங்கம் சிறப்பானசித்தாநதங்கமாகும், ஆரேதான்செய்வார்கள் பிறவித்தங்கம் வப்பனேயறிவுளோன்செய்வான்காணே. ௭௦௫

காணவேசெந்தூரம்போகும்போக்குசுருவாகச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளும், பூணவேமட்டமென்றஆணிப்பொன்னும் பொங்கமுடன்களஞ்சியதுநாறதாகும், வேணபடிதாளெடுத்துமூசையிட்டுவிருப்பமுடன் தானுருக்கி குருவொன்றீய, நீணவேமாற்றதுவுமொன்பதாகும் நிலையானபிறவியென்ற பசும்பொன்னாமே. ௭௦௬

பொன்னான பொன்னல்லோ நாதர்வேதை பொங்கமுடன் பார்செய்வார் வையகத்தில், கன்னான கருவூரார் முன் ஜென்மத்தில் கைலாய நாதரென்ற கடைசருக்கு, தென்னவனாம் பாண்டியனின் வுத்தாரந்தான் தேர்வேந்தன் சொற்படிக்குக் கருவு செய்து, நன்னயமாய்த் தங்கமென்ற செம்பு செய்து நாதனைப் போல் கருவு செய்து நாட்டினாரே. ()

நாட்டினார் கருவூரார் தங்கமப்பா காயகனேயித் தங்கமொப்பதாகும், மேட்டிமையாய் அனேகம் பேர் சித்து தாமும் மேன்மையுடன் பலபல வாய்வாதஞ் செய்து, காட்டிகமாய்த் தரணி தனில் சிவபூசைக்கு தரணியில் வெகுபேர்கள் செய்தார் மாண்பர், வட்டமுடன் காலாங்கி முறைகள் போல வையகத்தில் கண்டதில்லை யாருந்தானே. ௪௦௮

தானான செந்தூரந் தன்னையப்பா தன்மையுடன் மண்டலந்தான் கொண்டபேர்க்கு, கோனான காலாங்கி நாதர் தாமுங் கொற்றவனார் குறிசொன்னவாக்கு போலே, பானான சட்டையது மிக வேலியிலே பளத்ததேகமது பின்னம் பாரு, மானான மயேஸ்வரியாள் நிர்த்தஞ் செய்வாள் மன்னவனே யுந்தமக்கு வழி சொல்வேனே. ௪௦௯

சொல்வேனே யின்னமொரு மார்க்கங் கேளு தப்புரவாய்ப் புலிப்பாணி மைந்தா பாரு, வல்லதொரு செந்தூரந்தனை யெடுத்து வளமுடனே கிருதங்களோக்கியங்கள், புல்லறிய செந்தூர மநுபானத்தில் பொங்கமுடன் தான் கொடுக்க காயகற்பம், இல்லையே மற்றொரு செந்தூரத்தாலெழிலான வர்ணமிதுயில்லை தானே. ௪௧௦

போகர் நீலாஞ்சனக்கல் கண்டது.

தானான இன்னமொரு மார்க்கஞ் சொல்வேன் தகமையுள்ள புலிப்பாணி மைந்தா கேளு, கோனான என்னுடைய காலாங்கி நாதர் கொற்றவனார் குருசொன்ன நீதியப்பா, தேனான மனோன்மணியாள் கடாட்சந்தானும் தெளிவான வஞ்சனமாஞ் சல்லியப் போக்கு, மானான வண்டமென்ற நாகமப்பா மகத்தான சதுர் யுவருஷமாமே. ௪௧௧

நானான வருஷமது கடந்த நாகம் நட்பமுடன் கண்டறிந்து மைந்தா கேளு, நானான வண்டமென்ற நாகமப்பா நலமான நாகமது கொண்டு வந்து, மானான வுபிரதாவும் போக்கியல்லோ மகத்தான ரசந்தனை சோதித்தாக்கால், கூறான நீலஞ்சனக் கல்லு தானும் கொற்றவனே யிருக்குமது பாருபாரே. ௪௧௨

பாரேதான் நீலாஞ்சக் கல்லுதன்னை பட்சமுடன் தானெடுத்து மைந்தா கேளு, சிறேதான் பதனமது செய்துமல்லோ சிறப்பான வையகத்தில் மார்க்கிவாளுப், கோனான ராஜாதிராசர் தானும் நேர்மையுடன்



சமாதிவைத்த நிதியனைத்தும், கூறேதான் சல்லியமாம் வித்தைதன்னால் குறிப்பான வஞ்சனத்தா லெடுக்கக் கேளே. ௪௧௩

கேளேதான் கருவென்றமை தானப்பா நெணிதமுடன் உள்ளங்கைதனிற் றேய்த்து, ஆளேதா னஞ்சனமாங் கல்லைத்தானும் சத்தமுடன் வுள்ளங்கை தனிலவைத்து, பாளேதான் போகாமலஞ்சனத்தை பட்சமுடன் தான் பார்க்க நிதிகள் தோன்றும், ஆளேதான் திரவியத்தையெடுக்கலாகு மப்பனே நீலாஞ்சமகிமை பாரே. ௪௧௪

மகிமையாம் இன்னமொரு மார்க்கங் கேளு மகத்தான நீலாஞ்சக்கல்லினாலே, அகிலமெல்லாம் நிதியெடுக்கயிதனாலாகு மப்பனே யஞ்சனமுமிதற்கீடல்ல, முகியாமல் சித்தர் முனிரிஷிகள் தாமும் மூர்க்கமுடன் சாஸ்திரங்களனேகஞ் செய்தார், தகிபுடனே நீலாஞ்சக்கல்லின் மார்க்கம் சாற்றவில்லை சித்தர் முனிரிடிகள் தாமே. ௪௧௫

தாமான சாஸ்திரத்தினளவு கண்டு தன்மையுடன் சீனபதிப்பெண்களுக்கு சாமானமாகவல்லோ குளிகை கொண்டு சட்டமுடன் சீனபதிக்கேகினேன் யான், நாமேதான் சொன்னபடி நீலாஞ்சனத்தை நாட்டமுடன் போதித்தேன் மாண்பருக்கு, சேமேதான் சீனபதிப்பெண்களெல்லாம் வேகமுடன் தெரிசனத்தைக் கண்டார் தாமே. ௪௧௬

கண்டாரே யின்னமொரு மார்க்கங் கேளு கனமான சீனபதி மாண்பரெல்லாம், தெண்டமுடன் காலாங்கிநாதருக்கு தேற்றமுடன் சீர்பாதந்தாள் பணிந்து, வண்டணிமார் பெண்களெல்லா மாலோசித்து வளமான வண்டமென்ற நாகந்தன்னை, கொண்டுவரத் தம்மனதிலாலோசித்து கொம்பனைமாரெந்தனுக்கு ஓதினாரே. ௪௧௭

ஓதவே சீனபதிப் பெண்களல்லோ வுத்தமர்களெல்லவரு மொன்றாய்க் கூடி, நீதமுடன் நாகமதைத் தேடும் போது நிலைபான நாகமது தானுமற்றான், வேதமுடன் வெள்ளையென்ற நாகந்தானும் வெட்டவெளிதானகத்தில் காணலாச்சு, ஆதமுடன் நாகமதைக் கண்டுமல்லோவப்பனே கல்லதனை யெடுத்தார் தானே. ௪௧௮

தானான கல்லதனை யெடுத்தபோது தன்மையுள்ள கல்லதுவும் வெண்மையாச்சு, கோனான குருசொன்ன வாக்கு போல கொற்றவனே நீலமென்ற கல்லேயில்லை, பானான மாண்பரெல்லாம் பலபேர் கோடி பண்பான யோசனைகள் செய்திட்டார்கள், மானான தேசமது வெண்மையப்பா மகத்தான நாகமது வெள்ளையாச்சே. ௪௧௯

ஆச்சப்பா நீலாஞ்சக்கல்லுதன்னை வப்பனே பரிட்சையது செய்யும்போது, மூச்சடங்கி முன்போன காகத்தின் கல் மூளையான நிலமென்றவாறதாலே, பாச்சலுடன் வையகத்தில் நிதிகளெல்லாம் பாங்குடனே யெடுப்பதற்குப் பணபதாச்சு, ஆச்சரியமானதொரு வெண்காகத்திலென்பான கல்லதுவும் வோடாதனறே. ௪௨௦

வன்பானகல்லதுவும் வெண்மையாச்சு வப்பனே திரவியங்களெல்லாச்சு, வென்றிடவே நீலாஞ்சகல்லினாலே யிருப்பமுடன் வையகத்தில் நிதியனைத்தும், குன்றுனமலைபோலே யெடுக்கலாகும், கொற்றவனே நீலமென்ற கல்லினாலே, வென்றிடவே வெகுகோடி ரிஷிகளெல்லாம் வேகமுடன் கண்டறிந்து மறந்தார்தாமே. ௪௨௧

சீனபதிப்பெண்கள் வெண்காகவஞ்சனக்கல்லால்
வானத்திலதிசயங்கண்டது.

மறந்தாரே வெகுகோடி ரிஷிகளப்பா மகத்தான சிடுகையென்ற வேதைதன்னை, துறந்தாரே காலாங்கிநாதர் தாமும் துப்புரவாய் வையகத்து மாண்பருக்கு, சிறந்ததொரு நூல்பார்த்துக் கண்டாராய்ந்து சிறப்புடனே சொன்னதொரு நீதியெல்லாம், கறந்ததொரு பால்போல யிருக்குமப்பா காலாங்கி சொன்னதொரு வாக்குயாசமே. ௪௨௨

வாக்கான சீனபதிப்பெண்களெல்லாம் வளமுடனே வெண்காகக்கல்லெடுத்து, மோககமுடன் வுள்ளங்கை சஞ்சனத்தில் நாலுக்குமுடன கல்லதனை கையிலவைத்து, ஏக்கமுடனாகாயந்தன்னைக்காண வெழிலானவதிசயங்களுள்ளதெல்லாம், ஆக்கமுடன் தோன்றிற்றுமாண்பருக்குவப்பனே வானவதிசயங்கள் தாமே. ௪௨௩

அதிசயமாம் வானத்துள் மார்க்கமெல்லாம் வப்பனே சப்தலோகமெல்லாம் தோன்றும், பதியானவையகத்தினதிசயம்போல் பான்மையுடன் வானத்தினதிசயங்கள் மதியானசந்திரனுஞ்சூரியன்றன் மகத்தானவருந்தான் துய்ங்கரவலாகும், அதியானகைபாகம் யார்தான் காண்பார் துப்புரவாய் சீனபதிமாண்பர்தாமே. ௪௨௪

மாண்பாமின்னமொருமார்க்கங்கேளு மகத்தான சீனபதிப்பெண்களெல்லாரு, காண்பானவெள்ளைவெள்ளைநாக்சுத்தன்னில கருந்நடைகல்லதனைக் கண்டாராய்ந்து, மாண்பான வையகத்தோர் பிழைக்கவென்று மார்க்கமுடனெந்தனுக்கு வுபதேசித்தார், ஆண்பானவுபதேசமப்பர் முமலல்லாவண்புடனே குளிகைகொண்டு வந்திட்டேனே

வந்தேனே சீனபதிவிட்டுமைந்தா மகத்தான குளிகையது பூண்டுகொண்டு, அந்தமுடன வையகத்துமாண்பருக்குவன்புடனேயான்



கண்டவித்தையெல்லாம், சொந்தமுடனுபதேசஞ்செய்ய வெண்ணி துப்புரவாய் பதிதமெல்லாமுரைத்தேனப்பா, பந்தமுடனென்னாளும் பதாம்புயத்தைப் பற்றியல்லோ பதவிழிநடந்திடாயே. ௪௨௫

போகர்சீனபதிப்பெண்களுக்கு ஈடுரைத்தல்.

நிற்கவே யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் நிலையானபுலிப்பாணிமைந்தா கேளு, வற்பமென்று நினையாதே யிந்தப்போக்குவருமையுள்ள சீனபதிப்பெண்களுக்கு, சொற்பதமாய் ஈடொன்று சிடுகைவேதைசெப்பினேன் சீனபதிப்பெண்களுக்கு, வுற்பனமாயானவரைத் தகைமைசக்கு வுத்தமனே ஈடுவகைசொல்வேன்பாரே. ௪௨௭

பாரேதான் மருளிநாமத்தைவித்துப் பாங்கானநாய்ப்பாகல்வித்துங்கூட்டி, நேரேதானசாதிக்காய் தன்னோடொக்க நேர்மையுடன் கொவ்வையுடவித்துதானும், சீரேதான் சமூலவண்டு தானுமப்பா சிற்பரனே குழியானைத்தானுங்கூட்டு, வீரேதான் காந்தமதுதானுங்கூட்டி விருப்பமுடனீப் புலியுங்கூடக்கூட்டே. ௪௨௮

கூட்டியே மதனபூவும் வயின்கிராம்பு கொற்றவனே பேய்க்கரும்பஞ்சாற்றாலாட்டி, வாட்டமுடன்தானரைப்பாய் நாலுசாமம்வகையாகவே சரியாய்த் தானரைப்பாய், நாட்டமுடன் பயிறுபோல் திரட்டிமைந்தா கம்பெறவே குளிகையதுசெய்துகொண்டுவாட்டமுடன பதிப்பெண்களுக்குயப்பனே கொடுத்துவிடவகைதான் சேதி.

வகையானகுளிகைதனைப் பதனப்பண்ணு வன்மையுடனறுவையார்தன்னிற்றுதும், சிகைபானபதார்த்தவகை தனிற்றுதும் சிறப்புடனே புனுகிற்கூடச்சேர்த்து, பகையானமாதர்க்கு கொடுத்தாயானால பண்பானமனதுவந்துபிரியமாகி, திகைடானமதுமயக்கங்கொண்டுமல்கோதிரமுடனுனைவந்தணைவார்காணே. ௪௩௦

காணவே கேட்டதெல்லாமுந்தனுக்கு கனமுடனே தானகொடுத்திடுவாரே கெயவார், பூணவே குருந்தாரைப்போலவே பாசமுடன மதனகலையைதீர்வாரப்பா, ஆணவேராஜாதி ராஜர்போலும் வப்பனே சிற்றினபவாசைதனை, காணவே வையகத்திலனுபவித்துக் காட்சியுடனென்னாளும பதமேகொள்வாயே. ௪௩௧

கொள்ளவேயின்னமொரு பாகஞ்சொல்வேன் கொற்றவனே புலிப்பாணிமைந்தா கேளு, வள்ளலவே சித்துமுனிரிஷிகள்தாமும் வெகுவெகுவாய்ப் பாடிவைத்தார் மீமாகமம், வமனாளவே வயவர்களுட சாத

திரங்கள் மேதினியில்வெகுபலவாய்க் கண்டேன்யானும், கள்ளமில்லாமுறையினைத்தான் கோடாகோடி காசினியில்விருப்பமுடன் பாடினாரே. ௪௩௨

அடைக்கலக்குருவியினீடு.

பாடினரனேகவித யிடுதானும் பண்பானமானுக்கள் பிழைக்கவென்று, தேடியேபுலிப்பாணிமைந்தரேளு தெளிவானயிடொன்று சொல்வேன்பாரு, நீடியேவடைக்கலமாங் குருவிதானும்நீண்மையுடன்கொண்டுவந்து செப்பக்கேளீர், ஆடியேமயிர் போக்கிக்குடல்கள் போக்கி வப்பனேருதமுடன் காந்தந்தானே. ௪௩௩

தானனபாஷாணஞ் செவிதானும் தாக்கானதாளகமுமொன்றாய்க்கூட்டி, மானனதெஞ்சாவின் வித்துஞ்சேர்த்து மகத்தானவெலிப்பகையுங்கூடச்சேர்த்து, தேனனகுடோரியது சமனதாக்கு தேட்டமுடனடைக்கலத்தின் வாயிலூட்டி, பானனகலசமென்ற குடுவைதன்னில்பாங்குபெறதானமைத்து வஸ்துவூட்டே. ௪௩௪

ஊட்டியேசாரயமென்றவஸ்துவுத்தமனேதான் சேர்த்ததீயில் வைத்து, தாட்டிகமாய்யூமத்தின் விறகினாலேதகமையுடன்றானெரிப்பாய்காதுசாமம், நாட்டமுடன் சாரயசண்டமட்டும் நலம்பெறவேதானெரித்து யெடுத்துமைந்தா, கூட்டியேகுழிக்கல்லில்தன்னிலிட்டு கொற்றவனேசாற்சாமமரைத்திடயே. ௪௩௫

அரைத்துமேபிரளவாய்க்குளிகைசெய்து வன்பானசிமிழ்தனிலேபதனம்பண்ணு, திரைகடலிலுள்ளதொருமாண்பர்தம்மில்திறளானகர்மிசரும்மர்மிகளுமூண்டு, வரையானகர்மிகட்கு சொல்லிவன்பாருமகத்தானகுளிகைதனைமீவாயப்பா, கரையான குளிகைதனைமீப்தபோது கனமானரோகமது பலிக்குந்தானே. ௪௩௬

தானனபரியாசஞ்செய்தபேர்க்கு தாக்கானதருமத்தைக்கெடுத்தபேர்க்கு, மானனசமுசாரவாழ்க்கைதன்னை மார்க்கமுடன்தான்கெடுத்தபாவிகட்கும், கோனனகுருதனையே துரோகஞ்செய்துகுடிகெடுத்தசண்டாளர்துரோகிகட்கு, தேனனஸ்திரீசங்கஞ்செய்துமல்லோ தெருதனிலேவலையிட்டபாவிக்காமே. ௪௩௭

பாவிப்பாஞ்சிசுவதைகள்செய்தபேர்க்கு பாருலகில்கருதனையேபழித்தபேர்க்கு, ஆவியுடன்காயமதை யழிக்கவல்லோ வழும்புமிகசெய்ததொருபாவியோர்க்கு, சாவிதனைப்பால்தனிலே கலந்தபேர்க்கும் நட்பானநேசமதைக் கெடுத்தபேர்க்கும், காவிகாஷாயமதுபூண்டஞானி கருவானசித்தர் தமைக்கெடுத்தோர்க்காமே. ௪௩௮



கெடுத்துமேநயம்பேசிக்காங்கள்பேசி கெடுவழிக்குயேதுவகைத்துரைகள்பேசி, அடுத்ததொரு சற்பாத்திர முள்ளபேரை அநட்டான வார்த்தைகளுநிகவுங்கூறி, கொடுத்ததொருபொருட்டினையே மோசஞ்செய்து கொற்றவர்க்குத் துரோகமது செய்தபேர்க்கும், தடுக்காமல் கொடுக்குமொரு புண்ணியோரை தவிர்க்கவே செய்வதற்கு மொழிதான்கேளே. ௪௩௯

கேளேதான்நம்பியே துரோகஞ்செய்த நெடுங்காலசண்டாளமாண்பருக்கும், நாளேதான் போகாமல் கூலிவாங்கி நலம்பெறவே தொழில்களையே கெடுத்தபேர்க்கும், பாவேதான்பார்த்தவுடன் நயங்கள்பேசி பண்பாகக்காணுட்டல் முறைகள்பேசி, ஆளேதான்கண்டவுடன்கூதுபேசி அவனிதனிலிருந்ததொருமாந்தருக்கே. ௪௪௦

மார்த்தாமன்னமிட்டபுண்ணியோரைமார்க்கமுடன்கன்னமிட்டபாவியோர்கரும், சாந்தகுணமுள்ளதொரு ரிஷிதம்மைசாங்கமுடனிபங்கனைகள் செய்தபேர்க்கும், போந்தமுடன் பிணியாளர்தம்மையல்லோ பொங்கமுடன் நிதிகேட்டுப்பிணிதீரார்க்கும், பாந்தளென்னும் பாணமதுகையிலேந்திபாராமல்விட்டதொரு பாவியோர்க்கே.

பாவியாஞ்சண்டாளமூடருக்கும் பாரினிலே வெகுகுடியைக்கெடுத்தபேர்க்கும், காதினில் யபலையைக் கேட்டுமல்லோகண்களித்துப்பாராமல் கொன்றபேர்க்கும், திசினையாலென்னுளும் மடித்தபேர் திறளான நிதிகொடுத்துக்கிராதுரோகி, பாவியெனும் பண்டிதர்கள் நிதியைவாங்கும் பண்பான கருமிகட்கும் வேண்டும்பாரே. ௪௪௨

பாரேதான்கோயில்தனையிடித்தபேர்க்கும் பாங்கானவாலயத்தில்தீபந்தன்னை, நேரேதான்விற்றல்லோ சிலைகள்தன்னை நேர்மையுடன் கொள்ளைகொண்ட துரோகிமார்க்கும், சீரான மடங்கள் குளமடைத்தபேர்க்கும் சிறப்பானபண்டிதரைப்பழித்தபேர்க்கும், ஆரோதான்கடுச்சாமவழிபிலப்பா அபகரித்துக்கொள்ளைகொண்டகருமிகட்கே. ௪௪௩

கருமியாந்தேவபூசைக்கெடுத்தபேர்க்கும் கலியாணமணமுகூர்த்தமழித்தபேர்க்கும், மருமமாய்வஞ்சனைகள்வதிகக்கொண்டு வையகத்தில் வியாபாரமோசங்கூறி, தருமமாய்பியாயமது மிகவேபேசி தகைமையுடன் வியாபாரமுடக்கல்செய்து, குரூரமது தன்மனதிலுள்ளடக்கி குடிகெடுக்குஞ்சண்டாளர்க்காகுந்தானே. ௪௪௪

னதிரேகப்போலாகும்பாரு,மணியானவுபதேசஞ்செய்துமல்லோ மா
ர்க்கமுடன்வாழ்கவென்று வரமீய்வாயே. ௪௫௭

## ஸ்ரீவசியவாடை.

வரமானவரமதுவு மென்னசொல்வேன் வகையானமார்க்கமது
சொல்வேனப்பா, உரமுடையபுலிப்பாணிமைந்தாகேளு வுத்தமனே
யுத்தமக்குச்சொல்வேனப்பா, சிரமானவசியமொன்றுபொடிதானப்பா
சிற்பரனேகாலாங்கிசொன்னவாக்கு, வரமதுவும்பொய்யாது மகிமை
மெத்த வண்மையுடன்சொல்லுகிறேன்பண்பாய்க்கேளே. ௪௫௮

பண்பானபொடியதுவுமென்னவென்றால் பாங்ானமசானமதிலி
றந்துபோன, நண்பானதந்தமதுமூன்றிரண்டு நலமானதந்தமதைக்
கொண்டுவந்து, இன்பானபிரேதமதுமேலேசாற்றும் திறமானமாலை
யதுபூவின்வாடை, கண்பானசட்டிதொருவெனும்புதன்னில் கலங்கா
மல் சாம்பல்தன்னையெடுத்திடாயே. ௪௫௯

எடுப்பாயேகாடற்றுமுன்னதாக எழிலானசாம்பல்தன்னையெடுத்
துமைந்தா, கொடுத்துமேமசானமதில்பறக்குகின்ற துப்புரவாய்த்து
ம்பிதனைக்கொண்டுவந்து, படுத்தநதொருவாத்மஜலந்தானுங்கூட்டி பா
ங்கானவாடையென்றசாற்றுதன்னில், அடுத்துமேபறக்குபாலிலேதான
ப்பா வப்பனேதான்சேர்த்துவெடுக்கநன்றே. ௪௬0

நன்றானகருவதனையொன்றாய்க்கூட்டி நாயகனேபொடியதுவா
ய்ச்செய்துகொண்டு, குன்றாமையனேமனித்தாய்கிருபையாலும் கோ
வேந்தர்காலாங்கி கிருபையாலும், பன்றாகசிமிழ்தனிலே யடைத்துக்
கொண்டு பாங்குபெறசின்மயத்தைமனதிலுன்னி, வென்றிடவேபூமி
தனில்விடமைந்தா விருப்பமுடன்நவகோணங்கீறிடாயே. ௪௬௧

கீறவேநவகோண மென்னவென்றால் கிருபையுடன்சொல்லுகி
றேன்மைந்தாகேளு, ஆறவேகோணமதில்நின்றுகொண்டு வப்பனே
ஓங்காரம்மனதிலுன்னி, மாறலென்றவட்சரமாம்வெளவும்செளவும்
மகத்தானரீங்ரீங்யேங்கிலியு மாறு, ஊறலதுவாராமலினியபாலா துப்
புரவாயட்சரத்தையோதிடாயே. ௪௬௨

ஓதையிலேலட்சமதுவுருவுபோடு வுத்தமனேமனோன்மணியாள்
நிர்த்தஞ்செய்வாள், நீதமுடன்தரிசனைகள்கண்டபோது ரினினைத்தகா
ரியங்கள்சித்தியாச்சு, சாதனைகள்செய்தாலேயெல்லாஞ்சித்தி சட்ட
மூடன்வையகத்தில்யாக்திரிகவானுப், தோதமுடன்தாமிருந்துவாழ்க்
கையூண்டு தோருமலஷ்டசித்தியாமேவாயே. ௪௬௩



ஆட்டவென்றால்கருவென்ன பொடிதானப்பா வப்பனே நினைத்
தமாதுதன்மேல், போடவேமனதுவந்து வசியமாகி பொங்கமுடன்பி
ன்னேயதுதொடருவாள்பார், நீட்டவேதொடர்ந்தவிதாரு மாதுதன்னை நீ
நினைத்தகலவிதனிலனுபவித்து, சாடவேயென்றுநம்பட்சம்வைத்து
சட்டமுடன்பாதுகொள்ள நினைப்பீர்தானே. ௪௬௪

தானானகாலாங்கிசொன்னவாக்கு தாரணியில்பொய்யாது மெய்
யேயாகும், கோனானகருக்கள்வித்தை கோடிசொன்னார் குவலயத்
தில் செய்வதற்குபாராலாகும், தேனானவித்தையிது சிடிகை வேதை
செப்பினேனுத்தமக்குக்கூர்ந்துபாரு, மானானவையகத்தில் சித்தனே
ப்போல்மாசற்றுமென்றுநம்வாழ்குவீரே. ௪௬௫

வாழ்கவென்றுவின்னமொரு மார்க்கங்கேளு வகையான புலிப்
பாணிமைந்தாபாரு, ஆழ்கடலுஞ்சத்தசாகரமுந்தாண்டி வப்பனே
காலாங்கிதாள்பணிந்து,மூழ்கியேசகலதீர்த்தமாடி முதலகில் கு
ளிகைகொண்டுவந்தேன்யானும், பாழ்நகர தேசமது வனேகமுண்டு
பார்த்தேதனேவெகுகோடிவித்தைதானே. ௪௬௬

## அடைக்கலபட்சிசாடு.

தானான வித்தைபதுகோடாகோடி தகமையுள்ள கண்மணியே
யின்னங்கேளு, கோனானபெனகைபர் காலாங்கிநாதர் கொற்றவனார்
தன்பாதகிருபையாலே, பானானபட்சியது வடைக்கலந்தான் பண்பா
ன ஆண்பட்சிக்கொண்டுவந்து, மானானமடமாதர்சுரோணி தந்தான்
மகத்தானவாத்மஜலங்கூடக்கூட்டே. ௪௬௭

கூட்டியேரெண்டையுந்தான் பட்சிதன்னில் குறிப்புடனேவாயினி
டதன்னிலூட்டி, நாட்டிகமாய்பண்கலசந் தன்னில்வைத்து தம்மை
யுடன்மண்சீலையெழுஞ்செய்து, வாட்டமுடன்வாலுகையாமேந்திர
த்தில் வளமுடனே தானெரிப்பாய்வைந்துநாளும், தேட்டமுடன் தீ
யாறி யெடுத்துப்பாரு தெளிமையுடன்தவளமென்றபற்பமாச்சே.

ஆச்சப்பா பற்பமது யென்னசொல்வேனறிவாரடைக் கலத்
தின்வசியமீடு, மூச்சடக்கிப்போன தொருதேகந்தானும் மூலையான
யிடுதன்றால்மோகமாகி, பேச்சதுவும் பேசதற்குமுன்னேதானும்
பேரின்பந்தனைமறந்துகலவிகேட்கும், ஆச்சப்பாடற்பமதையனுபான
த்தில்வப்பனேகொடுத்திடுகலசியமாமே. ௪௬௯

வசியமாமது பாணமேதென்றக்கால் வளமானபாணி யென்ற தண்ணீராகும், கசிதாமள்ள தண்ணீரில்சிடிகைதாக்கருவான பற்பத்தால்வசியமாவார், நிசமுள்ள மாதர்களும்வசியமாகி நிலையானகலவிந்து ஒவ்வலாகி, முசிதமுடனென்னுளு முந்தன்பக்கல் மோகித்து யுனையணைந்துவணங்குவரரே. ௬௭௦

வணங்கியே சதாநித்தமுந்தன்பக்கல் வளமான நிதியனைத்து முனக்கேயீவார், கணங்கமதுவாரமலெக்காளும் துப்புரமா யுனைப்பணிந்துபோற்றுவார்கள், மணங்கமழும்லீலா விநோதந்தன்னில் மார்க்கமுடனென்னாளும்பட்சம்வைத்து, இணங்கியே பாபுருஷர்முகமும் பாராசெழிலானவ்விடைக்கலந்தன்வசியம்பாரே. ௬௭௧

அண்டங்காக்கைவசியவாடை.

பாரேதான் பின்னுமொருகருமானங்கேள் பட்சமுடன் யாதுரைப்பேன்மைந்தாகேளு, சீரேதான்காலாங்கி நாதர்தம்மால் சிறப்பானவித்தையிது சிடிகைவேதை, நேரேதான்நூறாண்டு சென்றகாகம் செத்தான காகமதுகொண்டுவந்து, நேரேதான்காகமது வாயிலப்பா நிகழானகறுப்பனென்ற பூச்சிதானே. ௬௭௨

தானான காகமதுசொல்லக்கேளு தன்மையுள்ள புலிப்பாணி மைந்தாபாரு, வேனான காகமது தன்னிலப்பா விருப்பமுடன் பூச்சிதனையூட்டியேதான், கோணாமல்அண்டங் கலசமப்பா கொற்றவனேதானிட்டு சீலைசெய்து, தேனான வாலுகையா மேல்திரத்தில்தேற்றமுடன் தானமைத்துயெரித்திடாயே. ௬௭௩

எரிக்கவென்றால்விறகதுவு மென்னசொல்வேன் யெழிலான ஜாமத்தைவிறகேயாகும், தரிக்கியேநாற்சாமந் தீயைமூட்டி கலமாகத்தானெரிக்கபற்பமாகும், முரிக்கவேபற்பமதை யெடுத்துமல்லோ மூலையானபற்பமதைப்பதனம்பண்ணு, சிரிக்கவேபற்பமதை யெடுத்தே மைந்தாசிறப்பானவாத்மஜலந்தன்னிற்கூட்டே. ௬௭௪

கூட்டியேபற்பமதை யெடுத்துமைந்தாகொப்பெனவே மாண்பருடமேவிற்றாலும், நாட்டிகமாய்நூறி வரப்பலனைக்கேளும் சட்டமுடன் மாண்பரெல்லாம்வசியமாவர், வட்டமுடன்கேட்டதெல்லாமுனக்கேயீவார்வளமான வஷ்டசித்துசித்துமாகும், மாட்டிமையாயெந்நாளுமுந்தனுக்குமகிழ்ச்சியுடன்கேட்டதெல்லாந்தருவார்பாரே.



தருவாரேயுந்தனதுசொடியேபட்டால் தாரணியிலுள்ளதொரு மாண்பரெல்லாம், குருவான குருவிவர்தானென்றுசொல்லி கொற்றவனேயுந்தனையும்பணிகுவார்பார், திருவானமா முனியின்கடாட்சத்தாலே சித்திக்குமஷ்டசித்துவகைக்குள்ளாகும், நிருவாணிமயேல்வரியானெந்நாளும் நீதியுடன்வுன்பக்கல்நிற்பார்பாரே. ௬௭௬

நேத்திராஞ்சனமை.

நிற்பாரேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன் நிலையானபுலிப்பாணி மைந்தாகேளு, அற்பமென்றுநினையாதே தயாருள்மைந்தாபார் அருமையுள்ள காலாங்கிசொன்னநீதி, சிற்பானோர்யெந்தன்குருவாக்குதானும் சிருலகிலொருநாளும்பொய்யாதப்பா, அற்புதவாய்தகரமுடன் தாரஞ்சேர்த்து அகையானவெள்ளையென்றபட்டுதானே. ௬௭௭

தானானசீலைபதுதன்னில்மைந்தா தன்மையுடனிரண்டையுந்தானதனிற்சுற்றி, மானானவெள்ளையென்றநடுத்தானும் மகத்தானபாண்டமதிலிட்டுமைந்தா, பானானவெள்ளைகடுகெண்ணைதன்னால் பக்குவமாய்தானெரிப்பாய்நாலுசாமம், தேனானசிரசதுவாம்மோடுதன்னில் தேற்றமுடன்மையதனைவாங்கிடாயே. ௬௭௮

வாங்கியேமைதனிலேகூடச்சேர்க்கும் மகத்தானசரக்கதுவும் சொல்லக்கேளும், ஓங்கியேபச்சையென்றகற்பூரந்தானும் வுத்தமவேளாடையென்ற கஸ்தூரியப்பா, தாங்கியேதிரியாமல் புனுகுமைந்தா துடியானகுங்குமப்பூரோஜனையுஞ்சேர்த்து, சாங்கமுடன்சவ்வாதுந்தானுங்கூட்டி சட்டமுடன்தானரைப்பாய்பன்னீராலே. ௬௭௯

பன்னீரால்காற்சாமமரைத்துமேதான் பாங்குபெறமையதனைப்பதனம்பண்ணு, இன்னிலத்திலுனைப்போலார்ச்சித்து யெழிலானபூபதியமென்னக்கூறும், நன்னயமாயாவினதுவெண்ணைதன்னால் நயம்பெறவேதான்கூட்டிமத்தித்தேதான், சொன்னபடிமையதனைக் கண்ணிற்றீட்டி சுகியுடனேவையகத்தைச்சுற்றுவீரே. ௬௮௦

சுற்றுவீரேயுனைக்கண்டமாண்பரெல்லாஞ் சுகமுடனேமன்மதனென்றுசொல்லி, வெற்றிபெறயுனைவணங்கிபின்னேசென்று விருப்பமுடன்கேட்டதெல்லாமீவார்பாரு, சுற்றிசையுமுனைக்கண்டுவேந்தர்களெழிலானமையினதுவேகத்தாலே, நெற்றிதனில்மையதனையிட்டாயானால் நேர்மையுடன்சிவராஜனென்பார்பாரே. ௬௮௧

பாரேதான்சித்தர்முனிரிஷிகள்தேவர் பண்புடனேசாத்திரங்களனேகஞ்செய்தார், நேரேதான்சிடிகையென்றவேதையப்பா நேர்மையு

டன்கைகண்டவேதைதன்னை, திரேதான்வையகத்துமான்பருக்கு சிறப்புடனேபாடிபக்லோமறைத்துவைத்தார், கூரேதான்மாணுக்கள்பி ழைக்கவென்று கூறினேன்சிடிகையென்றவேதைதானே. ௪௮௨

காணவேமையசனுலேனகசித்தா காதத்தடனேலலாடமதில்ட்டுமைந்தா, சோணவேயந்தனுக்குவேண்டுமட்டும் துப்புறவாய்ராஜரி டகோட்டைதன்னில், பூணவேதிபிருக்கும்ஸ்தானந்தன்னில் பொங்கமுடன்சென்றல்லோமைந்தாகேளு, நீணவேகாவலவர் முன்னிருக்கும் நிதியனைத்துங்கண்ணு திரேயெடுக்கலாமே. ௪௮௩

எடுக்கலாம்கோடிதனமெடுக்கலாகும் யெழிலானவான்மனையின் நிதிகளெல்லாம், அடுத்தகதொருமான்பர்களும்பார்த்திருக்க வளவற்றதிரவியங்களெடுக்கலாகும், தொடுத்தகொருவசியமென்றமையிலே தோருமேலஷ்டசித்துமாடலாகும், விடுத்தகொருகாலங்கெடாட்சத்தாலே விருப்பமுடன்பாடினேதோர்வசியமாமே. ௪௮௪

## ஸ்ரீவசியம்.

ஆமேதானின்னமொருமார்க்கஞ்சொல்வேன் வப்பனேபுலிப்பாணிமைந்தாகேளு, நாமேதான்சொன்னபடிபோகர்வாக்கு நானிலத்தில்பொய்பாதமெய்யேயாகும், போமேதான்மாதரிடவசியமப்பா பொங்கமுடனின்னமொருவயணஞ்சொல்வேன், வேயேதான்தாரமென்ற சிலையுங்கூட்டு விருப்பமுடன்ரோசனையுந்தானுங்கூட்டே. ௪௮௫

கூட்டியேபச்சையென்றபூரந்தானும் கூறானகார்தமது தானுஞ்சேர்த்து, மாட்டியேவாஞ்சிகேசர்பலத்திறைலே மார்க்கமுடன்தானமைப்பாய்ராலுசாமம், வாட்டமுடன்தானரைத்து சிமிளில்வைத்து வளமாககஸ்தூரிபுனுகுசேர்த்து, நாட்டமுடன்கரந்தனிலேபூசிமைந்தா நலமாகஸ்ரீதலையில்பூசிடாயே. ௪௮௬

பூசியேசிமசியென்றேயோது புகழானகருவதுவும்வருவேமேறி, மாசிபடாமனத்துவங்கலங்கியேதான் மகத்தானசிந்தையும் வதிசமாகி, ஆசியுடன்வரும்போதுமைந்தாகேளு வப்பனேஆத்மஜலங்கூடச்சேர்த்து, வாசிபுடன்வருவதுவும்லட்சமோது வகையுடனேபெண்ணுருவய்வருவாள்பாரே ௪௮௭

வருவாளேமோகமதுகொண்டுமல்லோ மகத்தானகிறியனைத்துமீவாள்பாரு, உருகியேமனமதுவும்மிகவும்வாடி வுத்தமனையுன்பின்னேதுடருவாள்பார், கருகியேமுகம்வேர்த்துமனம்வேருகி கட்



டழகிபொன்மாது வருவாள்பாரு, திருவினைபாள் மனோன்மணியாள் முன்னேநிற்பாள் திரமுடனேஅஷ்டசித்திகைக்குள்ளாச்சே. ௪௮௮

ஆச்சப்பாகமலமுனியனந்தம்போக்கு வப்பனேசொல்லிவைத்தார்லக்கோயில்லை, மூச்சடங்கிவையகத்திற்சென்றுமேதான் முதலில் திரும்பிவந்துகண்டபின்பு, பேச்சொடுங்கிசிலகாலஞ்சமாதிநின்று பேரின்பநிலைதனிலேயிருந்துகொண்டு, பாச்சலுடன்சிடிகையென்ற வேதைகோடி பலபலவாய்பாடிவைத்தார்கமலர்தானே. ௪௮௯

தானுனவித்தையதுவதிதஞ்சொன்னார் தன்மையுடன்காலாங்கி வித்தைக்கொவ்வா, கோனுனபெனதையர்காலாங்கிநாதர் கொட்டிறுரிதுபோலசிடிகைவேதை, தேனுனமனோன்மணியாள்கிருபையாலே தெரிவித்தேனுந்தனுக்குச்சொன்னேனப்பாபானுனவித்தையெல்லாங் கூறப்போனுல் பாங்கானவேழாயிரமிடங்கொள்ளாதே. ௪௯0

## ஸ்ரீபுருஷாள்வசியம்.

கொள்ளாதுயின்னமொருமார்க்கஞ்சொல்வேன் கூறானவித்தையிதுசொல்லொண்ணாது, விள்ளவேயிருபிறப்பாளரப்பா விருப்பமுடன்யிறந்ததோர் சபத்தைகண்டு, மெள்ளவேமயானமதில் சென்றுபாலா மேன்மையுடன்கருமுடிக்கச்சொல்வேன்கேளு, தெள்ளியதோர்கோல்ரெண்டுமுழந்தான்ரெண்டு தேற்றமுடன்கைதனிலேபிடித்திடாயே. ௪௯௧

பிடித்திடவே மசானகரைசுத்திவந்து பேரானவுருவதுவும்லட்சம்போடு, நடித்திடவேவுருவதும்யேதென்றக்கால் நாதாந்தத்தபினதுபிஜாட்சரந்தான், கொடுத்திடவேவங்சிங்மங்கென்றேயோது கொற்றவனேலட்சமுரு குறையாதப்பா, விடுத்தகொருகழிதனக்குவுருவேமற்றி விருப்பமுடன்சொல்லுறேன்வண்மையரே. [illegible]

வண்மையாம்புழுகுடனே பூரந்தானும் வளமானகோசனையுங் கஸ்தூரிகூட்டி, நன்மையாமாத்மஜலந்தன்னிலாட்டி நலப்பெறவே கழிதனக்குப்பூசியல்லோ, இன்மையுடன்சவந்தனையேசுத்திவந்துநீர்க்கமுடன் சபம்மேருஞ்சமயந்தன்னில், உண்மையாம்தலையாடுகால் மாடாக வுத்தமனேகெல்லதனையுருட்டிடாயே. ௪௯௩

உருட்டவேகைபிடித்தகழிதானப்பா வுத்தமனேதானெடுத்து செப்பக்கேளு, பொருப்புடனேஸ்ரீதானும்யேதுப்போது பொங்கமுடன்வலதுபக்கம்தடியால்குத்து, கருவுடையநினைமதுவும்கழியில்

தாக்கு கருத்துடனேயிடதுபுறமிப்படியேதாக்கு, மருப்பனைபணை மதிவுங்கழிபில்தாங்கி மகத்தானமாத்திறைக்கோல்பிணறுமாச்சே.

ஆச்சப்பாகருவென்றகோலுமாச்சவப்பனேகோலதனைப்பதனம் பண்ணு, பாச்சலுடன்வையகத்திலிருந்துகொண்டு பாங்குடனேகிருஷ்ணவதாரனைப்போல்,மாச்சலுடன்கலிதனிலிருந்துகொண்டு மகத்தான ஸ்ரீக்களையனுபவித்து,வச்சலதுவாராமலெந்தாளுமெழிலான சித்துதனைபாடுவீரே. ௪௯௫

ஆடவென்றால்சித்ததுவு மேதென்றக்கால் வப்பனேபிடித்த சழித்தானப்பா, போடவேமாதர்களைகண்டபோது பொங்கமுடன் கழிதன்னால்தொட்டுபேச,நீடவேவலதுகைகழிதான்தொட்டால்நீதியுடன்புருஷனவன்வசியமாவான், சாடவேயிடதுகைகழிதான்தொட்டால் சாங்கமுடன்மங்கையருஞ்வசியந்தானே. ௪௯௬

தானனவசியமதுயேதென்றக்கால் தகமையுடன்கழிக்கொம்பேவசியமாச்சு, கோனனவித்தையிதுகருதான்வித்தை கூறுகிறேன் பிரம்மருலகருதான்வித்தை, வேனனவித்தையிது விநோதவித்தை வேடிக்கைகருவிதனையாருங்காணார்,பானனவித்தையிதுவையகத்தில் மார்க்கமுடன்சென்றல்லோ செய்துபாரே. ௪௯௭

செய்யவேஜெகதலத்திலுன்னையப்பா தேற்றமுடன்சித்தனென்றபுருஷனென்பார், பையவேயுந்தனிடம்கிட்டிவந்து பாங்குடனேகருவினுடவழியுங்கேட்பான், மெய்யானகருவினுடவழியுஞ்சொன்னால் மேன்மைபெறவுந்தனுக்கு நிதியுமீவாய், உய்யவேசதாகாலம்வூழியனுக வுத்தமனேகார்த்திருப்பார்வுண்மைபாரே. ௪௯௮

உண்மையாலோகமதில்சித்தனாக ஓகோகோகாதனைப்போல்வாழ்வாயப்பா, வண்மையுள்ளசித்தனென்றுவையகத்தோர் வளமையுடனென்னாளும்வாழ்த்துவார்கள், இன்மையுடன்ராஜாதிராஜர்பக்கல்தீரமுடன்யிக்கருவைகொண்டுசென்று, கண்மைபெறகருவாட்டமாடினக்கால் கனகமென்றநிதியனைத்துங்கொடுப்பார்தாமே. ௪௯௯

கொடுத்துமேயுந்தனுக்குச் சோடசாரம் கொற்றவனேமதிமந்திரியாகக்கொள்வார், அடுத்ததொருவேந்தர்களுமுன்னைக்கண்டால் வப்பனேசற்பாத்ரசித்தனென்பார், நடுக்கமுடன்வையகத்தோரெல்லாருந்தான் நடியேயுன்பாதம்பணிவாரப்பா, ஒடுக்கமுள்ளகருவிகாணுதிவித்தை ஓகோகோபோகரிடவித்தைதானே. ௫௦௦



ஸ்ரீவசியமை.

வித்தையாமின்னமொரு மார்க்கங்கேளு வேதாந்தப்புன்னியனேவிளம்புவேன்பார், சித்திபெறகாலாங்கிநாதர்வாக்கு சீருலகில்பொய்யாதுமெய்யேயாகும், சத்தியமாங்காலாங்கிசொன்னநீதி சதாகாலமெந்தனுக்குக்குருவாக்காகும்,நித்தியமும்அந்திசந்தியாதம்தொட்டு நினைக்கிறேன்போகரிஷிநினைக்கிறேனே. ௫௦௧

நினைக்கிறேன்ஸ்ரீலீலா விநோதந்தன்னை நிலையானகருமானமேதென்றக்கால்,சனையானமலையோரந்தேடிப்போனால் கருக்கானவாதலரிவேர்தானுண்டு, இனைபோலேவித்துள்ளமலைதாங்கியப்பா சிறப்பானதிருநீற்றுமூலியாகும், பனைபோன்றவோதனைவெள்ளிதன்னில் பட்சமுடன்காப்பதுவுங்கட்டிடாயே. ௫௦௨

கட்டியேகாப்பதுவுந்தீர்ந்தபின்பு கணைசருக்குப்பொங்கலிட்டு காவுந்தந்து, எட்டியுடவடவேரைத்தான்பிடுங்கி யெழிலாகபெரிதாலன்வேருங்கூட்டி, தட்டியேரழிஞ்சிமூலந்தானும் சாங்கமுடன்பொன்னிறுவானைக்கூட்டி, குட்டியென்றபிளருசாரணையுஞ்சேரு கூறுனசமனிடையாய்க்களஞ்சிதூக்கே. ௫௦௩

தூக்கியேதலைச்சுருளிமூலங்கூட்டி துப்புரவாய்ருதுகாலசிலைதன்னில், ஆக்கமுடன்தலைமைஞ்சங்கொடியுஞ்சேர்த்து வப்பனேசிலைதன்னில்வைத்தாருட்டி, நோக்கமுடனங்கோலத்தயிலத்தாட்டி நாலுக்கமுடன்பேரண்டந்தன்னிலப்பா, தீக்கமலமானதொரு கலசந்தன்னில் இகமுடனேதீபமதுயேற்றிடாயே. ௫௦௪

ஏற்றியேசாமயதனைவாங்குலாங்கு யெழிலானசிமிழ்தனிலேபதனம்பண்ணு, போற்றியேமனோன்மணித்தாய்பாதம்புயத்தை பொங்கமுடன்சதாகாலம்நிர்த்தஞ்செய்து, ஆற்றியேவைங்காலகருவின் மையை வப்பனேலலாடமதில்விட்டுமேதான், கூற்றனாலுங்காலனைவன்றனடுங்க குவலயத்தில்சாரியதுவருவாய்பாரே. ௫௦௫

பாரேதான்மையதனைத்திட்டியல்லோ பாருலகில்மங்கையரைக்கண்டபோது, நீரேதான்மன்மதனென்றுசொல்லி நினைவுதடுமாறியங்கேயுனைநினைத்து, ஆறுபுடைசூழ்ந்தகரம்நிதியும்விட்டு ஆங்கானவரண்பனையுந்தான்மறந்து, வீறுபுகழ்மன்மதனெனவென்னியல்லோ வீடுவிட்டோடிவருவார்காணே. ௫௦௬

சாலவேமையதனைக்கண்டபோது கடுங்காளையானதொருமானபரெல்லாம், பூணவேயுமிடத்திலபுத்திகூர்ந்து புகழானசித்தரவ

றென்றுகூறி, அனைவர்கள்தானொடுங்கியதிகைப்பா யப்பனையுன்னை வங்குவரைக்குருவர்கள்,காணரிபரஞ்சுடர்போல்கருதிஅன்னிகடாட் சித்தவர்தமக்குவதிதஞ்செய்யே. ௫௦௭

செய்யவேகட்பாலரெல்லாங்கூடி செம்மனுடன்மனதுவந்துயுமை ப்பண்ணிந்து, வெய்யதொருவிட்டகுறையிருந்ததாலே வேதாந்தசித்த தமைக்காணலாக்க, பையவேயுன்பாதங்கிட்டியல்லோ பராபரத்தின் பரவொளியைகாணவென்று,உய்யவேபிரணவந்தன்னில்நின்றுஞகோ கோவதிதமிகச்செய்வார்பாரே. ௫௦௮

பார்க்கையிலேயுந்தமக்குலோகந்தன்னில் பாரிலுள்ளராஜமுடி மன்னரெல்லாம், ஏர்க்கவேமகாசித்தயிவர்தானென்று வெழிலான வாசிர்மம்மிகவுங்கூறி, தீர்க்கமுடன்மையதனைத்தருகவென்று திரள ணிதியனைத்தும் கொடுப்பாரப்பா, அர்க்கசிம்மாதினர் தான்கொடு த்து வப்பனையஞ்சலிகள்செய்வார்பாரே. ௫௦௯

பார்க்கவேயஷ்டசித்துமனக்குள்ளாச்சு பாங்கானவையகமுங் கைகுள்ளாச்சு, ஏர்க்கவேசிற்றின்பநிலைமறந்து வெழிலானபேரின்ப சாகரத்தை, ஆர்க்கமுடன்மனந்தனிலேலயிட்சயித்து வப்பனைபதாம் புயக்கைமேலேநண்ணி, தீர்க்கமுடன்சமுசாரக்கடலைக்கி சிம்பரனை யறியும்வகைதேடிக்கொள்ளே. ௫௧௦

ஸ்ரீகளுக்குகூடுமுறை.

கொள்ளவேசினபதிப்பெண்களுக்கு கொட்டினேனிடுவகைய னந்தமுண்டு, மெள்ளவேகுளிகைகொண்டு யானுமல்லோமேதினியி லெழுகடலுஞ்சுத்திவந்தேன், தெள்ளவேபுளிப்பாணிமைந்தாகேளு தேர்வேந்தராசரிடஞ்சென்றுயானும், வள்ளலாம்வித்தையதுசிமிட்டு வித்தை வரைகோடிநிறைகோடிகறைகண்டேனே. ௫௧௧

கண்டதொருவேதைதன்னில்சிடிகைவேதை கன்னுக்குத்தோ ற்றுதகடினவேதை, விண்டதொருவேதையிலேகருவுவேதை வித்த களுயிருந்தாக்கால்கண்டுகொள்வாய், கொண்டதொருவுருப்பதனில் குறையிலானல்கூறியபத்திகளில்மிகுந்தவானுப், கண்டறிந்துவொ ருவனைநீதோழனாக காசினியில்சிஷபதியமைத்துக்கொள்ளே. ௫௧௨

சொள்ளவேசிஷனைத்தேடிக்கொள்ளுகொற்றவனேயுந்தமக்கு வுரியவாறாய், உள்ளபடிகபடுபொய்சூதுதந்திரம் வுற்றருமையில்லாத புத்திவானாய், எள்ளளவும்மனந்தனிலேகலக்கமில்லா வெழிலானசற் றறிவுபாலனா,தெள்ளுதமிழ்ப்பண்டிதத்திலதிகவானாய் தேற்றமுடன் சிஷன்றனைநாடுவாயே. ௫௧௩



நாடியேசிஷனைக்கொண்டுமல்லோ கற்பாலாயுந்தனுக்குத்தேவை யான, நீடியதோர்கருவிகாரணதிபெல்லாம் நீட்சியுடனுந்தமக்குத்தரு கவென்று, தேடியேகண்டுமிகலாசாயந்தல்லோ தெளிவானதோழ மைதான்கண்டுமல்லோ, வாடியேதிரியாமல்மனமேங்காமல் மார்க்க முடன்கருதொழிலைச்செய்திடாயே. ௫௧௪

செய்யவேகருமான மேதென்றக்கால் சிறப்புள்ளபெரிகாலவ் வித்துதானும்,பையவேமருளினாமத்தையித்தும் பாங்கானபொன்னி ருவாரையித்தும், வையகங்கள்புகழுங்கோரக்கர்வித்தும் வாகான சூரியனார்காந்திவித்தும், துய்யதொருகுடைக்காளான்பூவுஞ்சேர்த்து துப்புரவாய்ஆத்மஜலந்தன்னிலாட்டே. ௫௧௫

ஆட்டவொற்சாமமானபின்பு வப்பனேகுளிகையது செய்வா யப்பா, தேட்டமுடன்பயரளவாய்க்குளிகைசெய்து செம்மனுடன் நிழல்தனில்தானுலர்த்தி, நீட்டமுடன்பஞ்சாட்சரவுருவுதானும் நீதி யுடன்லட்சமது போட்டபின்பு, வாட்டமுடன்பரணிதனிலடைத்துக் கொண்டு வளம்பெறவேதானடத்துவண்மைகேளே. ௫௧௬

கேளப்பாமங்கையரைக்கண்டபோது கெவனமுடனவர்மனதுமுன் மனதுமானுல், பாளப்பாபோகாமலெந்தநாளும் பட்சமுடனுன்மீதில் மனம்லயிக்க, ஆளப்பாசொல்லுகிறேன்குளிகைதன்னை வப்பனே யறுசுவையாம்பதார்த்தந்தன்னில், மீளப்பாபோகாமல்தாம்பூலத்தில் மிகபடவேபாலதனில்கொடுத்திடாயே. ௫௧௭

கொடுக்கவேமங்கையருமனதுவந்துகுவலயத்திலென்னாளுமுன் தன்மீது, அடுக்கவேமற்றொருவர்தம்மைக்கண்டால் வப்பனேசத் துருவாய்மனதிலெண்ணி, ஒடுக்கமுடன்வுன்பக்கல் சதாகாலந்தான வுத்தமனேபட்சமது கருணைகூர்ந்து, நடுக்கமுடன்யேவலுக்குமுன் னேநின்று நாள்தோறுமகருணையதுபுரிவாள்தானே. ௫௧௮

சத்துருவைத் துன்பம்படுத்தல்.

தானையின்னமொருமார்க்கங்கேளு தயவானபுலிப்பாணிமைந் தாபாரு, கோனைசித்தர்களும்முனிவர்ரிஷிகளும் குவலயத்தில்கோடி வித்தைவினோதஞ்செய்தார், தேனானமனோன்மணியாள் கடாட்சத் தாலே தெளிவானவித்தையெல்லாமறைத்துப்போட்டார், மானான வித்தையிதுமாந்திரீகவித்தை மன்னவனேகண்மணியேசொல்வேன் ...டே ௫௧௯

சொல்லவேகாலாங்கி தாள்பணிந்து சத்தமுள்ளபெர்களுக்கு வுகந்தசேதை, வெல்லவேவையகத்தில்மாண்பர்தாமும் விருப்பமுடனிதிகாசவித்தைதனையெல்லாம், புல்லவேயுந்தனிடமருந்துகொண்டு புகழானகுருவென்றுமனதிலெண்ணார், அல்லல்படுந்துயரமதுமிகவாய்ச் செய்து வப்பனேதுரோகமதுசெய்வார்பாரே. ௫௨௰

பாரேதான்துரோகமதுசெய்தபேர்க்கு பண்பானகருமானமொன்றுசொல்வேன், நீரேதான்மனங்கொண்டேமனங்களித்து நீதியுடன் துரோமதுசெய்தபேர்க்கு, கூரேதானமாவாசைபருக்கநாளாம்குறிப்புடனேமாளிதனில் வாழுகின்ற, சீரேதான்மீஞ்சூருதனைப்பிடித்து சிறப்புடனேவயதிற்செய்யுமவகையைக்கேளே. ௫௨௧

வகையானமீஞ்சூரைக்கொண்டுவந்து வன்குடவிற்காயமதைச் சுத்திசெய்து,தொகையானவுருவதுவும் லட்சமோது சுந்தரனேயெதிராளிபேரைமாறு, சிகைதனிலேரோமமதுசேகரித்து சிறப்புடனே மீஞ்சூருக்காப்புகட்டி,பகையானயெதிராளிமூலங்கண்டு பட்சமுடன் கருதனையோடிப்பாரே. ௫௨௨

நாடியேயுந்தனுக்குதுரோகஞ்செய்த நலமானபடுபாவிசண்டாளன்றான், தேடியேயவனிருக்குமிடத்திற்சென்று தேற்றமுடன்சோஜத்தின்ஜலத்தின்மண்ணை,நீடியேயதனையெடுத்துக்கொண்டுவந்து நெடிதானகருமானமண்ணையப்பா, கூடியேபேதனங்கள்மிகவுங்கூறி கூசாமல்மீஞ்சூரின்வாயிலூட்டே. ௫௨௩

ஊட்டியேபிரிதிவென்றமண்ணைத்தானும் வுற்றதொருகருவிகாரணிமண்ணை, தாட்டிகமாய்மீஞ்சூரின்வாயின்மட்டும் தயங்காமல் கட்டளைகளைசெய்தபின்பு, வாட்டமுடனிருவாயைமூடியல்லோ வளமுடனேதான்தைத்துச்சீலைசெய்து, ஆட்டமுடனேமீஞ்சூரின்பயனிவாயை வப்பனேமேல்நோக்கிநிறுத்திடாயே. ௫௨௪

நிறுத்தியேதலைகீழாய்மீஞ்சூர்தன்னை நீதியுடன்நவகோணச்சக்கரத்தில், உறுத்தியேவாரசமென்றமுன்தானப்பா வுத்தமனேநாற்சதுரமாகநாட்டி, கருத்துடனேவாரசமென்றசவ்வைதானுங் கலங்காமல்நாற்சதுரமூலைமாட்டி,பொருத்தமுடன்நடுமையந்தொளாந்திரமாக பொங்கமுடன்வசிநாட்டிவுருவுமோதே. ௫௨௫

ஓதவேயெதிராளிப்பேரைமாறி வுத்தமனேபேதனத்தைச்செய்துமல்லோ, நீதமுடன்யாகங்கள்தானுஞ்செய்து நிஷகளங்கமாகவல்லேவோமகுண்டம், போதவேபிராணயந்தன்னிற்சென்று பொங்க



முடன்சின்மயத்திலேறிநின்று, சாதகமாய்வாசிதனை தியானித்தே தான் சட்டமுடன்பிராணவத்தைசாற்றுவீரே. ௫௨௬

சாற்றவே யெதிராளிதன்றனக்கு சட்டமுடன்மலஜலமுங் கட்டிப்போகும், கூற்றனுக்குவிடமுண்டு பின்னுந்துன்பம் குவலயத்திலார்படுவார் யிந்தபாடு, ஏற்றதொரு கருவிகாரணியாலேயெழிலான துன்பமதுக் கிடமேயாச்சு, மாற்றமுடன்கருமமென்ற பிரதிவுறைலே மகத்தானகோடிவித்தை யாடலாமே. ௫௨௭

ஆடலாம் புலிப்பாணிமைந்தா கேளு வவனிதனிலுனைப்பகைத்தடியோர்தானும், தேடியேவுன்றனைதான் மிகவேநாடி தேற்றமுடன்பாதகந் தொழுதிட்டாக்கால, நீடியேமுன்வைத்த கருமானத்தை நிகட்சியுடன்நிவர்த்திபது செய்துமல்லோ, கூடியேயுபசாரவார்த்தைகூறி கொற்றவனேதிருப்பிவிட்டால் தருமமாமே. ௫௨௮

தருமமாமுந்தனுக்கு மோட்சமுண்டு தாரணியில்குடிகெடுக்கும் பாவியோரை, கருவென்றகருவிகாரணியாலே கலக்கமவர் செய்தவனே இபக்கங்கொண்டு, பொருளதனையவனிடத்தி லபகரித்துபோங்கமுடன் சாந்தியதுமிகவேசெய்து, குருதனையே தானினைந்து கருமயோர்க்கு குவலயத்தில்புத்திமதி கூறுநன்றே ௫௨௯

பேர்சொல்லிவேர்பிடுங்கல்.

நன்றானயின்னமொரு போக்குசொல்வேன் நலமான காலாங்கி சொன்னநீதி, குன்றானமலைபோலே கோடிவித்தை கூறினேன்ரந்தனுக்குலக்கோயில்லை, வென்றிடவேசிலபாகஞ் சிடிகைவேதை யேதாந்தத்தாயினது கிருபையாலே, தென்றிசையிலடியேனுங் குளிகைகொண்டு தேற்றமுடன்வித்தைமிகக் கண்டேன்பாரே. ௫௩௰

மலையாளக்கறுப்பன் சிங்கமோகமணி.

பாரேதான் சினப்திவிட்டுமல்லோ பாங்கானகுளிகையது பூண்டுகொண்டு, நேரேதான்மலையாளங்குடகுநாடு நேர்மையுடன் வெகுதேசஞ்சுற்றிவந்தேன், சீரேதான்சிங்கணர் கொங்கணவர் தாமும்சிறப்பான மராட்டியபப்பரரைக்கண்டேன், கூரேதான்கன்னடையர்மலையாளரப்பாகுறிப்பான குசலவர்வேளாளர்தாமே. ௫௩௧

தாமான துலுக்கருடன்மலுக்கர்தாமும் தகமையுள்ள வேளாளமாண்பருண்டு, கோமானகுருக்களென்றும் ராஜனென்றும் குவலயத்தில்சித்துமுனி புருஷனென்றும், தேமானபலபலவாஞ் சாதிபேதம் தேசமதில் கண்டதலலோலக்கோயில்லை, பூமான்கள்கற்றதொருதொழிலையெல்லாம் பூவுலகில்கண்டறிந்தேன் போகர்தானே. ௫௩௨

## விலாடபுரத்து வசியம்.

தானான போகரிஷிமுனிவர்தானும் தகமையுடன் கண்டறிந்த அதர்வணத்தை, வேனனவிடலாமென்ற நகருக்கப்பால் வேந்தருடபதிதனிலே சென்றேன்யானும், மானானமகதேவர்காலாங்கி நாதர்மன்னவனார்கூறியதோர்வாக்குநீதி, கோனானகாலாங்கிவாக்குபோலே தேசமென்றவிலாடநகர் சென்றிட்டேனே. ௫௩௩

சென்றேனேவிலாடநகர் பதியிலப்பா செம்மலுடன் மாண்பருடவதிசயங்கள், குன்றானமலைபோலேகோடியுண்டு கொற்றவர்கள் பஞ்சவரின் சேனைகண்டேன், வென்றிடவேபலபல யுத்தந்தன்னில் வெகுகோடிமாண்புசெல்லாம் மடிந்தாரங்கே, அன்றுதிரியோதிரனர்சேனைவர்க்கம் அவ்வனத்தில் சமாதிபதிகண்டிட்டேனே. ௫௩௪

கண்டேனேசமாதியது கோடாகோடி காசினியில்யாரேனுங் கண்டதில்லை, அண்டர்முனிராட்சதர்கள் சமாதிவர்க்கம்அவ்வனத்தில் சுத்திவந்து காண்பாரங்கே, கொண்டல்வண்ணனச்சுதனர் போர்கள் செய்த கோடானகோடிவகையாயுதங்கள் பண்டுளவமாலையனி பூண்டமாதுபாங்கானகோயில்தனில் பார்த்திட்டேனே. ௫௩௫

பார்த்தேனேவில்லம்பு முப்பத்திரெண்டும் பாங்கான காளியுடதேவல்தானப், சேர்த்துமேமலை போலேவாயுதங்கள் சேனையொடுபடைகூட்டந்திரள்கூட்டங்கள், கோர்த்துமேவிலாட புறபதியிலப்பா கொற்றவர்கள் சமாதியதுபடியுங்கண்டேன், தீர்த்தமுடன் சிவலிங்க சமாதிகோடி திசைகோடிவரைகோடி தீரதானே. ௫௩௬

தீரவேசமாதி யிடஞ்சென்றேன்யானும் திரள்வீரர்பஞ்சவர்கள் போர்க்களத்தை, சேரமெனும்வீரதிவீரர்தாமும்சொற் பெரியஅரண்வாயல் அரக்குக்கோட்டை, நேரமுடன்குளிகையது கொண்டியானும் நெடுந்தூரம்பாஞ்சாலன் பதியின்மட்டும்சேரவேசென்றல்லோ வெற்றிகொண்டேன் செயமானசமாதியிடங்காவலுண்டே. ௫௩௭

காவலாங் கட்டென்னவதிகாரங்கள் கருதவென்றுலாதி சேடனிலுமாகா, ஆவலுடன்காலாங்கிதனைநினைத்து அதிகவழி நெடுந்தூரஞ்சென்றேனப்பா, போவதும்வருவதுவுஞ் சமாதிபக்கல் பொங்கமுடன் மாண்பர்களோ சொல்லொண்ணுதசாவதுவில்மாமடிபோர்க்களத்தில் சட்டமுடன்காவல்தனை பார்த்திட்டேனே. ௫௩௮



பார்த்தேனேமாண்பர்களையடியேன்றானும் பக்குவமாய்வாய்மொழியையறியவென்று, சேர்த்துமேகரங்குவித்துதாள்பணிந்து தேற்றமுடன்மாண்பர்களைக்கண்டேன்யானும், தீர்த்தமுடன்சமாதியதுவதென்றென்ன திறமானபடைவீரர்காவலாளி, பார்த்தனெனும்பஞ்சவர்கள்படுகளந்தான் பாரினிலேபோரிட்டவிலாடங்காணே. ௫௩௯

காணவேயெந்தனுக்குச்சொன்னாரங்கே கவனமுடன்குளிகை கொண்டுநின்றுமல்லோ, தோணவேதிடுக்கிட்டுமனதுயேங்கி தொல்லுலகில்துரியோதனன்களந்தானங்கே, பூணவேயெந்தனுக்குச்சொல்லவென்று புகழாகவடியேனுங்கேட்டேனங்கே, ஆணவம்பூண்டதொருபோர்க்களத்தை யன்பாகவேயெந்தனுக்குக்காண்பித்தாரே. ௫௪௦

காண்பிக்கவடியேனுமனதுவந்து கருத்துடனேமாண்பர்களைக்கேட்டபோது, விண்பானசிறுபாலர்போகநாதா விட்டகுறையிருந்ததினாலிங்கேவந்தாய், ஆண்மைகொண்டுவந்ததினாலுந்தனுக்கு வப்பனேசாபமதுதருவோமென்றும், நீண்பானவாக்கினைகள்செய்வோமென்று திறமையுடனெந்தன்பேர்கேட்டிட்டாரே. ௫௪௧

கேட்கவேயடியேனும்பிரமைகொண்டு கெவனமுடன்காலாங்கிசீஷனென்றேன், மீட்கவேயடியேனுங் குளிகைபூண்டு மேதினியெலாஞ்சுற்றியிங்கேவந்தேன், தாட்கவேவிலாடபுரங்காணவென்று தகமையுடன்போர்க்களத்தில்வந்தேனப்பா, ஆட்கொண்டுயெந்னையுமாசீர்மித்து வன்புடனேபாதுகாக்கவென்றிட்டேனே. ௫௪௨

இட்டேனேமாண்பர்களைக்கண்டியானும் யெழிலானவஞ்சலிகள் மிகவுஞ்செய்தேன், அட்டதிசைதான்புகழும்அதர்வணத்தை யன்புடனேயெந்தனுக்கேவோதினார்கள், சட்டமுடன்பிரணவத்தின் கலைகள் பூண்டு தாக்கானமார்கனிலேகாப்புகொண்டு, விட்டதொருவெயிலொளி பேரைமாறி விருட்சமென்மூலிதனில்காண்பித்தாரே. ௫௪௩

காண்பித்தார்விலாடபுரந்தன்னிலப்பா கண்மையுள்ளபோர்க்களத்திலதிதமாண்பர், ஆண்மையுடனேதிராளிபேரைச்சொல்லி அந்தவேமார்கிரிசுபிரணவத்தால், வீண்பழிக்குயாளாகவாகாமற்றான் விட்டகுறையிருந்ததொரு சாபத்தாலே, நீண்டவேமார்கிரிகதாந்திரிகத்தால் நிலையானபோர்க்களத்தைவென்றிட்டாரே. ௫௪௪

வென்றுரேமூலியிடவிருட்சத்தாலே வேகமுடன்சோடானகோ
டிபேரை, சென்றதொருவித்தைகளையெந்தனுக்கு சிறப்புடனேபோ
தித்துவதிதஞ்செய்தார், குன்றுனகோடிவித்தையாலுங்கண்டு கொற்
றவனேகுளிகையதுபூண்டுகொண்டு, தன்றுனகருமானவித்தையெல்
லாம் தண்மையுடனறிந்துவந்தேன்பாரே. ௫௪௫

## போகர் பேர்சொல்லி வேர்பிடுக்கும் வித்தையை.
## புலிப்பாணிக்கு கூறில்.

பாரேதானின்னமொரு கருமானங்கேள் பாங்கானபுலிப்பாணி
மைந்தாபாரு, நேரேதானுந்தனுக்குத்தீங்குசெய்த நோரனகருமிகட்
குயிர்தபாகம், தாரேதானிருந்தாலுமஞ்சவேண்டாம் தப்புரவாய்க்கு
டிகெடுக்கும்பாவிதன்னை, சீரேதான்பிரணவத்தின்மூலியாலே சிர்பத
த்தைமாற்றியல்லோபேர்தான்கொள்ளே. ௫௪௬

கொள்ளவேயெதிராளிபேரைக்கூறி கொற்றவனேநெல்விக்குக்
காப்புகட்டி,விள்ளவேயவன்பேரைதலைகிழாக விருப்புமுடன்மனோன்
மணியாளட்சரத்தை, உள்ளபடி-வங்-சிங்-யங்-கென்றபோது வுத்தம
னேலட்சமதுவுருவுகொண்டு, தெள்ளுதமிழ்ப்பாவாணர்சித்தர்வாக்கு
தேசமதிற்பொய்யாதுமெய்யாம்பாரே. ௫௪௭

மெய்யானபிரணவத்தின்மூலியாலே மேதினியில்பிணம்போலே
யிருப்பான்பாரு,வையவேயவர்சென்றுபெதிராளிதன்னை பட்சமுடன்
தானழைக்க வந்திட்டாலும், தய்யவேசவம்போலே யிருப்பான்
பாரு துப்புரவாய்வையகத்தைதான்மறந்து,உய்யவேபஞ்சபூதங்களெ
ல்லாம் ஒடுக்கமுடன்தானொடுங்கியிருப்பான்தானே. ௫௪௮

தானேயேவல்தொழிலொன்றுமில்லை தண்மையுள்ளபூலோக
வாசையில்லை, கோனேகேளேயந்தர்போருமில்லை கொற்றவர்க்குமெ
திராளிபடையுமில்லை. தேனேமாந்திரீகத்தாந்திரீகத்தால் தேசமெ
ங்குஞ்செயிப்பதற்குஐயமில்லை, பானேபாபமென்றதொழிலுமில்லை
பாருலகில்வேதைபண்பாய்ச்செய்யே. ௫௪௯

பண்பானவேதையெல்லாஞ்சித்தி பாருலகில்செய்வதற்குஐயமி
ல்லை,நண்பானமூலிகளிலனந்தம்வேதை நாட்டினிலேசெப்புமல்லோ
கீர்த்திகொண்டு, திண்மையுடன்செய்தல்லோவையகத்தில் தீர்க்கமு
டன்கருமிகளையெல்லாருக்கும்,வண்மையாமூலியுடயோக்கணந்தம் வை
யகத்திற்கோடியுண்டுசெய்வார்யாரே. ௫௫௦



## திலகப்பூண்டுக்கு காப்புகட்டல்.

பாரப்பா யின்னமொரு கருமானங்கேள் பாலகனே சொல்லுகி
றேன்மைந்தாபாரு, கோப்பாவையகத்தில் கோடிவித்தை கோர்மையு
டன் கண்டதுண்டுபார்த்தோருண்டு, சிரப்பாயிதிகாச வித்தையெல்
லாம் சிறப்புடனேசித்தர்முனி மறைத்துவைத்தார், ஆரப்பாவென்னை
ப்போலே சொல்வாருண்டோ வப்பனேகண்டவரை யுரைத்திட்
டேனே. ௫௫௧

உரைத்தேனே வையகத்துமாண்பருக்கு ஓகோகோராதாக்கள்
சொன்னதில்லை, நிரைத்திடவே கருமானவித்தையப்பா நீதியுடன்
பேர்கூறிவேர்பிடுங்கும், கரைத்திடவே பிரணவத்தை மாறல்செய்து
கருவுடனே பேர்மாறிவேர்பிடுங்கி, சிரைத்திடவே பூண்டுக்கு காப்பு
கட்டி சிர்பெறவேசொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. ௫௫௨

பண்பான வாரமது ஆதிவாரம் பகலானவுச்சியது மத்தியானம்,
திண்பானவுருவமது நடுச்சாமந்தான் திகழானமூலிக்கு காப்புகட்டி
தண்பான வெதிராளிபேரைக்கூறி, நமம்பட்டேவ-வங்-சிங்-யங்-கென்
றேதான், கண்ணான மனோன்மணியாள் பீஜமந்திரங் கருவான லட்சம்
வுருபோடுபோடே. ௫௫௩

போடப்பாதேவி மனோன்மணியாள்பீஜம் பொங்கமுடன் வுரு
வினைத்தாக்தீர்க்கபின்பு, நீடப்பாமாந்திரீகத்தாந்திரீகத்தால் விலைபா
னவாதமது கபாலஞ்சொக்கி, கூடப்பா சுவாசமதுவுள்ளேபுக்கி
குவலயத்தில் செத்ததொருசவத்தைப்போலும், ஆடப்பாபிரணவத்
தின் மகுத்துவத்தால் வப்பனேசவம்போலே செய்திடாயே. ௫௫௪

செய்யவென்றால் காலேதுப்பாவுமில்லை செகதலத்திலுனைப்போ
லேசித்துமுண்டோ, பையவேகர்மியென்ற எதிராளியப்பா பாருலகி
லுன்மீதிற் படையுமில்லை, மெய்யானஎத்தனங்கள் யாதொன்றில்லை
மேதினியிலிருந்தென்னபயனுமில்லை, ஐயதொருவாதம்வுஞ் சொ
க்கியல்லோ துப்புரவாய்பிரேதம்போ லிருப்பான்தானே. ௫௫௫

தானான பகையாளிதன்னையப்பா தயவுடனேமறுபடியும் பெய
ரைமாற்றி, கோனான மூலியிடசாபந்தீர்க்கி கொற்றவனே யெதிராளி
பகைவன்றன்னை, தேனான விலையமூர்தங்காப்புநீக்கி தேற்றமுடன்
வுருவுதனைமாறியல்லோ, பானானபாரபரியை ஸ்தோத்தரித்து பட்ச
முடன்காப்பாற்றல் தருமமாமே. ௫௫௬

தருமமாமுந்தனுக்குக்கீர்த்தியுண்டு கண்மையுள்ளராஜ சிவராஜ
போகா, கருமத்தையென்னளும் கீர்த்திசெய்து காப்பாற்றல் மனு

தர்மசீதியாகும், சொன்றபமென்ற விலபதனைக்காண்பதற்கு சூட்சாதி சூட்சமதை யறிந்துகொள்ளு, இருவைபதபுர்தன்மேல் வருவதற்கு சித்தியுடனென்றுனும் பதங்கொள்வீரே. ௫௮௭

## மலையாளபூபதி கருப்பண்ணன் மந்திரம்.

சொள்ளவேயின்னமொருமார்க்கம்பாரு கூறுணபுத்தியுள்ளமைக்காகேளு, வெள்ளமதனிறைந்திருக்குங் கால்வாய்தன்னில் வெட்டவெளி வளர்தாத்திற்சாரசோரம், தெள்ளுதமிழ்வேளாளர் குடியினைத்தும் தேற்றமுடன் காய்கறிகளனைக்கவர்க்கம், உள்ளபடி பரதெய்வசாட்சியாக வுத்தமர்கள்பயிரிடுவர் கோடிதாமே. ௫௮௮

கோடியாங் காய்கறிகள் பழவர்க்கங்கள் குவலயத்தில் மாண்பரெல்லாம் பயிரேசெய்வார், நீடியேவெகுநாள்கள்பயிர்கள்பக்கல் நேர்மையுடன் போகாமலிருப்பதுண்டு, கூடியே கருப்பண்ணன்காவல்வைத்து கொற்றவனே காமிருப்பார்மானிதன்னில், தேடியே வையகத்தில் சிலதுமாண்பர்தெரியாமல் கனிவர்க்கம் தீண்டுவாரே. ௫௮௯

தீண்டியேபோகிப்பதற்கு பெண்ணைக்கொண்டு திருடியேகன்னமிடமனதிலெண்ணி, வேண்டியேபேராசைக் கொண்டுமல்லோ விருப்பமுடன் கனிவர்க்கங்காய்கள்தம்மை, காண்டிபமாய் தோட்டமது வருகிற்சென்று காய்களைத்தான் தொட்டுமல்லோ கொள்ளைகொள்வோர், பாண்டியனார்கருப்பண்ண சாமிதானும் பட்சமுடன் தொட்டவரைப் பிடிப்பர்தாமே. ௫௯௦

தாமான பழவகைகள்தொட்டபேர்கள் தகமையுடன்கருப்பண்ணன்காவல்தன்னால், பூமான்களதிகார வார்த்தைபாலே புகழாகதொட்டதொரு காத்தைத்தானும், சாமான்னியமானதொரு கருப்பன்றானும் சட்டமுடன்கைதனையேபிடித்திழுப்பான், வேமானமாகவல்லோ வெகுநாளாக விருப்பமுடன்காயருகில் நிற்பார்காணே. ()

காணவே புலிப்பாணிமைந்தாகேளு கருவானமாண்பரெல்லாந் தொழிலேசெய்வார், பூணவே காவலாளியாரென்றுக்கால் புகழான கறுப்பண்ணசாமியாகும், தோணவேவீரியனுங் காத்தாரயன் தேருசஜீர்னுதேவதையுந்தானும், ஆணவமாங்காளியென்ற துற்கைதானும் அடைவானகானகத்தில் காவலாச்சே. ௫௯௨

ஆச்சப்பா யின்னமொரு மகிமைமகேளு அடவானபயிரிடுங் குடியாளர்க்கு, மூச்சடங்கிபோனதொரு கிரகந்தானும் முக்கியமாயேவலுக்குமுன்னேநின்று, பாச்சலுடன்பில்லிபென்றபசாசுதானும் பால்



கனே பிரணவத்தாலுச்சாடித்து, எச்சதுவாராமல் மாண்பரெல்லாம் பெழிலாகக் கைவசஞ்செய்திருக்கிறுமே. ௫௯௩

இருக்கிறதோர் பசாசியின்தந்திரத்தால் பெழிலானமந்திரங்கள் மெய்யேயாகும், மருட்கமலம் வீற்றிருக்கும் மனோன்மணித்தாய்மகத்தான வட்சரத்தைபோதுவோர்கள், இருட்கடலை முறுக்கிபசற்றிரவிபோலும் பெழிலுருவங்காட்டுமொளிவட்டம்போலும், அருட்கடலாமீஸ்வரியாளட்சரத்தா லவனிதனில் தாந்திரீகஞ் செய்வார்பாரே. ௫௯௫

பாரேதான் மூலிக்கொப்புநட்டி பாங்கானபிசாசுகை வசமேயானல், நேரேதான்வுலருகனில அருமோண்பர் நேர்மையுடன்வாய்பேசாகைபாடாமல், சீரேதான் யிவ்விதமாயிருப்பாரானல் சிறப்பான சித்தியதுலபிக்கும்பாரு, ஆரோதான் வையகத்தில் புத்திமான்கள் அவனிதனில் மாந்திரீகஞ்செய்தார்பாரே. ௫௯௬

பாரென்று சொல்லிபல்லோபாரில்தன்னில் பலவிதமாம் வார்த்தையதுகூறுவார்கள், நேரென்று பசாசினதுமந்திரத்தால் நேர்த்தியுடன்காவலது செய்வார்பாரு, வேறொன்றுமில்லையப்பா வெதிராளிபேரில் வியர்வான பசாசினதுதந்திரந்தான், ஆறொன்று மாண்பர்களும் வையகத்தில் அனியாயஞ்செய்வதற்கு முடியாதன்றே. ௫௯௭

முடியாதுமூலிபுடசாபமந்திரம் முக்கியமாய்பேயினிடவட்சரந்தான், குடியானமாண்பரெல்லாம் வையகத்தில் கொற்றவனே யேவலுக்குமுன்னதாக, மிடியான வருத்தமது தன்னேடொக்க மேதினியில்கருவிகாணுதியேயாடும், குடியானமாந்திரீகத்தாந்திரீகத்தால் குப்புரவாய்மாண்பரெல்லாம் பிழைப்பார்தானே. ௫௯௭

தானனயிவ்வகையாம் வண்ணமெல்லாம் தகமையுடன்தட்சணத்தார்செய்யும்வேதை, கோனான வெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனு ரெந்தனுக்குச்சொன்னநீதி, பானுவித்தையது பழுதுபோகா பாரினிலே வெகுகோடி வதிதஞ்சொன்னர், பானுமகாசங்கவித்தைசொல்வேன் மகத்தான வையகத்தோர் மாண்டோர்தானே.

## காலாங்கிநாதர் சமாதிக்குப்போகுமுன் இறந்தவர்கள் கணக்கு.

தானனபுலிப்பாணிமைந்தாகேளு தன்மையுடன் என்குருவாங் காலாங்கிநாதர், தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே தேசமெல்லாங்குளிகைகொண்டு சென்றபோது, கோனான குருதனக்கு வயதுசொல்வேன்கொற்றவனேமூன்றுறுப்பதிலைந்தாகும், பாழானவாண்டுமதுவஞ்சேயாகும் பாங்கானவாண்டுக்கு வறுபதாமே. ௫௯௮

ஆமேதான் வருபதுவும்பென்றவாக்கு வப்பனேதலைமுறைதா ஜென்றேபாரும், கோமான்கள் ஓராண்டு யிருந்ததில்லை கொற்றவ னேதேகமதைமெய்யென்றெண்ணி, வேமேதான்முன்னூறு வாண்டு சொச்சம் வேதாந்தத்தாயினது திருவைபயாமே, தாமேதான்முந்நூறு வாண்டுமட்டும் தகமையுடன்காலாங்கி யிருந்திட்டாரே. ௫௭௦

இருந்தாரேவெகுகாலம் காலாங்கிநாதர் யெழிலானவையகத்து மாண்பர்முன்னே, பொருந்தவேவதிசயங்களெல்லாங்கண்டார் பொங்கமுடனிறந்தவர் கணக்குங்கண்டார், திருந்தவேயவர்கண்டகணித மப்பா தீர்க்கமுடனெந்தனுக்கு அருளினார்பார், குருந்தமிழாமாசிரி யர் முனிவர்தாமும் கூறவில்லைநூல்தனில் கூறுகின்றே. ௫௭௧

இன்றான சாத்திரத்தின்கிருப்பமெல்லாம்யெழிலாகப்பாடிவை த்தார்சித்தர்தாமும், குன்றானமலைபோலே கோடிநூல்கள் கூறினார் வையகத்துவதிசயங்கள், சென்றதொரு வையகத்து சேதியெல்லாம் சிலருரைத்தார்சிலர்மறைத்தார் தேசமாண்பர், வென்றிடவே யடியே னும்மனதுவந்துவிருப்பமுடன் மறைத்ததெல்லாம்வெளியிட்டேனே. ௫௭௨

இட்டேனேகாலாங்கிசொன்னநீதி யெழில்பெறவே புலிப்பாணி மைந்தாகேளு, பட்டதொரு படுகளத்தின்மாண்பர்சேதி பாரினிலே விதியினால் மடிந்தோர்சேதி, சட்டமுடனென்றுபன் காலாங்கிநாதர் சாங்கமுடன்யெடுத்துரைத்ததொகையைத்தானும், வட்டமுடன்கவி புரைத்தேனப்புதன்னில்வளமானவையகத்துத் தொகையுந்தானே. ௫௭௩

தானானபிரான்சாத்திரத்தில் சாற்றினார்வெகுகோடி வதிசய ங்கள், கோனான யேசுவின்றன்வேதந்தன்னில் கூறினதோர் வையக த்துமாண்பர்சேதி, பாரான பார்லோகமடிந்தசேதி பட்சமுடனவர் நூலுங்கண்டாராய்ந்து, மானான யென்குருவாங்காலாங்கிசுவாமி மா ர்க்கமுடனெந்தனுக்கு வுரைத்தார்தானே. ௫௭௪

காணவே சீனபதிமாண்பருக்கு கருவாகவடியேனும் மனதுவந் து, தோணவே மூலமென்றபாஷைதன்னில் திரட்டியதோர் தொகை முழுதும்யானுங்கண்டு, வேணபடிபதினெண்பேர் நூலாராய்ந்து விரு ப்பமுடனுபதேசஞ் செய்தேன்யானும், ணவே யுந்தனுக்குயோத மல்லோ நீட்சியுடன்மனதுவந்து யெண்ணினேனே. ௫௭௫

## கிரேதாயுகத்துத் தொகை.

எண்ணினேனென்றுபன்காலாங்கிநாதர் யெழிலானகாயாதிகற் பங்கொண்டு, நன்னவேசிவியகாலமட்டும் கலமாகக் கிரேதாயினுகத்



திலப்பா, மண்ணிலேமடிந்தவர்கள் கோடிசங்கம் மகத்தானகோடியி லேசங்கமாறு, திண்ணமுடன்மகாசங்க மற்புசங்கமெட்டு திடமான வற்புதத்தில் பதினாறுதாமே. ௫௭௬

## திரேதாயுகத்துத் தொகை.

தானானதிரேதாயி னுகத்திலப்பா சாற்றுகிறேன் வையகத்தில் மடிந்தமாண்பர், மானானலட்சமது நூறுசங்கம் மகத்தானமகாசங்க ம்பதினாறுகோடி, தேனானவற்புதங்கள் நாலாறுபத்து தோதந்தில்மா ண்டவர்கள் தொகைதானப்பா, கோனானகுருவேந்தர் சொன்னநீதி கொற்றவனே தானிருந்தாள்வரைக்கும், வானான பராபரியாள் கடாட்சத்தாலே வளமுடனேதானறிந்த தொகையைக்கேளே. ௫௭௭

## துவாபரயுகத்துத்தொகை.

கேளேதான் துவாபரமாம்யுகத்திலப்பா கெடியான மாண்பர்க ளும்மாண்டசேதி, ஆளேதான்லட்சமது யெண்பத்திரண்டு வழுகான சங்கமதுயெட்டுபத்திரண்டு, கோளேதான்வாராமல் மகாசங்கமேழு கொற்றவனேயற்புதமாகாற்புதங்கண்டு, நாளேதான்வையகத்தி லிற ந்தமாண்பர் நலமானதொகையிதுதான் கண்டுகொள்ளே. ௫௭௮

## கலியுகத்துத்தொகை.

கொள்ளவேகாலாங்கியிருந்தமட்டும் குவலயத்தில் சமாதிக்குப் போகுமுன்னே, எள்ளளவுபிசகாமல் முன்னோர்தாமும் யெழிலான சாத்திரத்தின் தொகுப்பாராய்ந்து, உள்ளபடிகலியுகத்தி லிருந்தமட் டும் வுந்தமனைமாண்டவர்கள் தொகையைக்கேளீர், கள்ளவேலட்ச மதுநாற்பத்திரண்டு கவனமுடன்சங்கமது நாலுமாமே. ௫௭௯

நாலானசங்கமது மகாசங்கமெட்டு நலமான அற்புதங்களெண் பெத்தாறு, நாலானமற்றவர்கள் கணக்கையெல்லாம நானுக்குமு டன்சித்தாபுதான்கணக்கெற்கூறும், காலானகணக்குவையபாராற்கூறும் காசினியில யுகமுடிவிலிருந்தோர்மாண்பர், பாலான முன்னோர்கள் சொன்னநூலில பாலித்தகணக்கிதுதான் பண்மையபாரே. ௫௮௦

பண்மையாய் வையகத்தில்மடிந்தபேரை பாருலகில்ராஜாதி ரா ஜர்தாமும், வண்மையுடன்கலியுகத்துமாண்பர்தம்மில் வளமையுடன் ராஜாதிராஜரெல்லாம், நண்மைபெற தொகைகணக்கு கண்டதில்லை காணிலத்தில் மடிந்தவர்கள்சேதியப்பா, உண்மைபெறசீனபதிமாண் பரெல்லாம் வுற்றதொகை சற்றோர்கண்டார்தாமே. ௫௮௧

கண்டாரேசீனபதிமாண்பர்தாமும் காசினியில்துகைகணக்கைத் தாமறிந்தார், விண்டதொருராஜாதிராஜரெல்லாம் விருதாலாய்வைய

கத்தையாண்டுமென்ன, கொண்டல்வண்ணனச்சதனுங்காணுமற்றுன் குவலயத்தில் தான்மடிக்கார் மற்றொன்றில்லை, அண்டர்முனி ராட்சதர்களானபேரும் அவனிதனில்கணக்கதனை யறியார்காணே. ௫௮௨

காணவே வையகத்துக் கணக்கையெல்லாம் கண்டறிந்தார் எந்தன்குருநாதசாமி, தோணவேயவரிருந்த நாட்கள்மட்டும் தோறுமல் மாண்பரிட தொகைபைத்தானும், பூணவே யுகாந்தவரை சாத்திரத்தை புகழான காலாங்கிநாதர்தாமும, மாணவேதொகுப்பினது வரலாறெல்லாம் வளமுடனேகண்டறிந்து வகுததிட்டாரே. ௫௮௩

## போகர்பூமியளவும் சமுத்திரஅளவுங் கூறல்.

வகுத்தாரே புலிப்பாணிமைந்தாகேளு வளமையுள்ள கண்மணியேசொல்வேன்பாரு, தொகுத்ததொரு மாண்பர்களின்கணக்கு தம்மை தொல்லுலகில்தாமறிந்த மட்டுஞ்சொன்னோர், தகுந்திடவே வையகத்தினளவுதானும் தகமையுடன் பூமிவளமேதென்றக்கால், மிகுத்திடவே சத்தசாகரமுஞ்சேர்ந்து மேதினியில் மூன்றுபங்கு ஜலமுமாச்சே. ௫௮௪

ஆச்சப்பாபூமிவளம்காலிலொன்று வப்பனேகர்த்தாது யேற்பாடல்லோ, பாச்சலுடன்பூமிக்குப்பாதியல்லோ பாங்கான மலைவளங்களெல்லாகும், மாச்சலுடன் தீவுகளுமஷ்டதிக்கு மகத்தான திசைநான்குமெனலாகும், ஆச்சரியமானதொரு பட்டினங்கள் வதில்நான்கு ஓர்புரமுஞ்சொல்லலாமே. ௫௮௫

சொல்லவென்றால் முப்புரமுங்காடேயாகும் தோறுமல் பட்டினத்தின் தொகைதான்சொல்வேன, வெல்லவே பட்டினங்களறுபத்துநான்கு மேன்மையுடன்குரிச்சிகளோ லக்கோயில்லை, புல்லவேகதிபாகம் நூற்றிருபதாகும் புகழான சிறுநதிகளனந்தங்கோடி, மெல்லவேயேரிவகையிருநூற்றுப்பத்து மேன்மையுடன்கால்வாய்கள்கணக்கில்லைதானே. ௫௮௬

## ஸ்தலப்பெருமை.

தானென தேவதாஸ்தலங்கள்தன்னை சாற்றுகிறே னஷ்டதிக்குப் பூமிமட்டும், கோனனகாலாங்கிநாதர்தாமும் கொற்றவனுர் குளிகைபதுபூண்டுசென்ற, தேனன தேவாலயத்தொகையைச் சொல்வேன் தேற்றமுடன் நூற்றியிருபத்திரெண்டு, மானனமகாஸ்தலங்களிதுவேயாகும் மகத்தானசிறுஸ்தலங்கள்சொல்லொண்ணாதே. ௫௮௭

## மனிதர் பேதாபேதம்.

ஒண்ணாதமானிடர்கள் வளப்பஞ்சொல்வேன்வுத்தமனேகாலாங்கிகுருபாலே, திண்ணமுடன் வையகத்தில் திசைகளெட்டும்சுத்திவந்தேன்சத்தகடல்பூமியெல்லாம், அண்ணார்ந்துமலைவனத்தில் சிகரங்கண்டேன் அதிசிருக்தமாக்கமெல்லாந்தெரிந்தேன்யானும், வண்ணமுடன்மானிடரின் ரூபந்தன்னை வளமையுடன்சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே ௫௮௮



கேளப்பாசிலதேசமாந்தர்தானும் செடியானரூபமது அஸ்வரூபம், மாளப்பாசிலதேசமாந்தர்தானும் மகத்தானசிங்கமென்றமுகமேயாகும், ஆளப்பாசிலதேசமாண்பர்தாமும் வப்பனே ஆஞ்சநேயரூபமாகும், எப்விளப்பாசிலதேசமாண்பர்தானும் விகாரமுள்ளராட்சதரின்பேதமாமே. ௫௮௯

ஆமேதான்சிலதேசமான்பாப்பா வப்பனேயலைக்டவிருப்பார் தானும். காமேதான்சிலதேசமான்பர்தானும் கலமுடையமன்மதன் ரூபம்போலும், போமேதான்சிலதேசமாண்பரம்பா புகழானரூபமது பார்க்கொண்ணாது, தாமேதான்ரூபமதுவிகாரரூபம் தனியானஜலரூபஞ்சொல்லொண்ணாதே. ௫௯௦

வாழ்ந்தாரே யின்னமொரு மார்க்கங்கேளு வகுப்பான புலிப்பாணிமைந்தருக்கு, ஆழ்ந்தவேகாலாங்கிநாதர்கடாட்சத்தாலே வப்பனே வேங்கைதனி லேறிக்கொண்டு, தாழ்ந்திடவே ஜலந்திரட்டிப்புனிதவானம்சாங்கமுடன்தாரணியில்சுற்றிவந்தோன், சூழ்ந்திடவேவெகுகோடிகாலமப்பா பூதலத்திலிருந்ததொரு சித்துபாரே. ௭௭௮

பாரப்பா புலிப்பாணி பாலனான பட்சமுடனுந்தமக்கு வயது சொல்வேன், ஆரப்பா வயததுவுமறுநூறாண்டு வப்பனே வையகத்திலிருந்தசித்து, சேரப்பா சமாதிமுகஞ்சென்றதில்லை சேர்மையுடனே முன்காலமிருந்தசித்து, சீரப்பாசிவயோகந் தன்னிற்சென்று சிறப்புடனே சின்மயத்திலிருந்தசித்தே. ௭௭௯

இருந்துமேவெகுகாலமானசித்து வெழிலாகவெந்தனிடவுயதேசங்கள், பொருந்தவே தானடைந்து புனிதவானாய் பெருக்கமுடன் வையகத்திலிருந்தசித்து, திருந்தவே மலைகுகைகள் வனாந்திரங்கள் தீர்க்கமுடன் கண்டறிந்தசித்துவாகும், கருந்தமிழுஞ்செந்தமிழுங் கலந்தசித்து காசினியிலுபவாசசித்துமாமே. ௭௮௦

ஆமப்பா புலிப்பாணிமைந்தாகேளு வப்பனேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன், தீமப்பா நந்தியுடமார்க்கந்தன்னை புகலுகிறேன்வயததுவு மேதென்றக்கால், நாமப்பா வயததுவு மெழுநூறாண்டு நலமானவெகுகாலமிருந்தசித்து, வோப்பாசமாதிமுகங்கண்டசித்து வேதாந்தநந்தியென்று சொல்லலாச்சே. ௭௮௧

சொல்லவென்றால் நாவில்லைப்பாவுமில்லை சுந்தரனார்யுகங்கடந்த நந்திமூர்த்தி, வெல்லவேமலைபடியாம்வாரந்தன்னில் வேண்டியேசமாதிமுகமிருந்தசித்து, புல்லவே ஷேவர்க்க மில்லாமற்றான் பூதலத்தில் வெகுநாளாயிருந்தார்தாமும், நல்லதொரு தேவதால்தலங்கள் தன்னில் நலமுடனே நந்தியென்றபேருண்டாச்சே. ௭௮௨

உண்டாச்சுசித்துமுனி பாலனுக்கு வுற்றதொரு நந்திமுகந்தா
னுமாச்சு, கண்டதொரு மாண்பரெல்லாமாலயத்தில் கருத்தினிலே
முன்நின்றாநந்தினன்று, அண்டர்முனி ராட்சதரும் ரிஷிகள்தாமும்
அந்தரதுந்துமிமுதலுர் தேவராஞோர், மண்டலத்தில்தேவதா ஸ்தல
ங்கள்தன்னில் மகத்தானநந்தியென்று மதித்திட்டாரே. ௭௮௩

மதிக்கவே யின்னமொருமார்க்கங்கேளு மகத்தான புலஸ்திய
ரின்வண்மைசொல்வேன், அதிக்கவேஅகஸ்தியனார்வாசம்பெற்றதடி
யானபுலஸ்தியனென்னலாகும், விதிப்படியே காமமுனி கோத்தி
ரத்தில் வித்தகராய் வந்துதித்தமுனிவர்தாமும், கதிபெறவே யகஸ்
தியனார் பரகம்பெற்று காசினியில்வந்துதித்த சித்துமாச்சே ௭௮௪

ஆச்சப்பா புலஸ்தியரின்வயதேதென்றால் வப்பனே யறுநூற்று
அறுபதாகும், மூச்சடங்கிப் பிராணவத்தை மாறிமாறி மூதலகில்
வெகுகால மிருந்தசித்து, பேச்சறியா மாவின் சித்துவப்பா பேரின்ப
நிலைதன்னையே துறந்தசித்து, நீச்சனெனும் பஞ்சமரோ டிருந்தசித்து
நெடுங்காலவையகத்து சித்துமாச்சே. ௭௮௫

சித்தானபுலஸ்தியருஞ் சமாதிக்கேசிறப்பானதேரணமாமுனி
வர்தம்மை, பத்தியுடன் சிஷவர்க்கங்கொண்டுமல்லோ பாருலகில்ச
மாதிக்கேயேகவென்று, முத்திபெற சென்மபத்தைமனதினுன்னி மூது
லகில்சமாதிக்குசெல்கவென்று, சத்தியமாய் பவக்கடலை யொழித்து
மல்லோ சட்டமுடன்சமாதிமுகமேகினாரே. ௭௮௬

ஏகவேவையகத்தில் சமாதிதன்னில் யெழிலாகமுப்பதுவாண்டு
மட்டும், போகமென்னு மத்விதநிலையில்நின்று பொங்கமுடனு
னிருந்தமாயாசித்து, பாகமுடன்தேரணமாமுனியர்தன்னால் பாருல
கில்மறுபடியும வந்தசித்து சாகமதுவாராம லறுநூற்றுசொச்சம் கா
க்கமுடன்வையகத்தி லிருந்தார்பாரே. ௭௮௭

பாரேதான்பின்னமொரு வயணஞ்சொல்வேன் பண்பானவர்த
னதுநேசபாலா, சீரேதான் வேதமென்ற வியாசாப்பா சிறப்புடனே
வெகுகாலங்கடந்தசித்து, கோரமென்ற வயதுவும் ஆயிரத்துசொச்
சம்குவலயத்தில் வேதமதை யறிந்தசித்து, திரமுடன் நாலாதி ஸ்க
ளெல்லாம் திறைகடல்போலுண்டதொரு சித்துகாணே. ௭௮௮



காணவேவனுந்திரங்கள் குகைள்காடு கருவானமலையாறு குன்
றுதானும், வேணதொருவண்டர் முனிகூட்டத்தார்கள்வெளிகாணு
காடுமுதலுறைந்தசித்து, நீணவே சமயமென்றமார்க்கந்தன்னை நேர்
மையுடன் துகைபாடு செய்தசித்து, மாணமருங்கல்விதனிலுறைந்தசி
த்து மகத்தானமாண்பருக்குவுகந்தசித்தே. ௭௮௯

மாண்பானவையகத்துஜனங்களுக்குமார்க்கமுடன் வேதமதை
யோதுஞ்சித்து, ஆண்மையுடன் சாத்திரங்கள் புராணமெல்லா மவா
வர்க்குவுகந்தபடி செய்துவைத்தேன், தாண்மைபெற சைவாதிசமய
மெல்லாம்தாரணியில்கொடி நாட்டியிருந்தசித்து, நீண்மையுடன்கா
லாயர்திகற்பங்கொண்டு நெடுங்காலமிருந்ததொருதவசியாச்சே ௭௯௦

தவசியென்றால் மாண்பருக்கு வுகந்தசித்துதாரணியில்சமுசார
வாழ்க்கையோடும, பவக்கடலைந்தாஞெழித்துப் பாரின்மீதுபட்சமு
டன்றானிருந்த கொடியசித்து, தவப்பெருமைகொண்டல்லோரிஷிக
ளோடும் தயங்காமலரசர்முதல் வணங்குஞ்சித்து, நவகண்டவையக
மும்மதிர்தசித்து நலமானவியாசமுனியென்ற சித்தே. ௭௯௧

முனியானசித்து முனிவியாசர்தாமும் மூதுலகில்பெருமைதனை
யறிந்தசித்து, களிவோடும்பாலோடும் ரிஷிகள்தம்மை கண்ணினால்க
ண்டறிந்தசித்துவாகும், பனிபோன்றமலை காடுபார்த்தறிந்துபட்சமு
டன்சென்றல்லோ வுபதேசங்கள், தனியாகதானிருந்து பிராணவத்
தைதன்மையுடன்றானறிந்த சித்துதானே. ௭௯௨

தானானசித்துக்குசமாதியில்லை தாரணியில் வெகுகாலமிருந்தசி
த்து, கோனனகுருக்கள் மகாரிஷிகள்தேவர் சொற்றவனாசிஷவர்க்க
மாண்பர்தன்னை, மானனவையகத்திலறிந்தசித்து மகத்தானவியாச
முனிசித்துபோல, தேனனவேதமதை யறிந்தசித்து திறைகடலிற்க
ண்டதுண்டோவுண்மைதானே. ௭௯௩

உண்மையின்னமொரு மார்க்கங்கேளு வுத்தமனேபுலிப்பாணி
மைந்தாபாரு, வண்மைபெறும்தேறைய ரென்னுஞ்சித்து வளமான
ரோகமதைத்தீர்க்குஞ்சித்து, நண்மைபெற வயதுவுமேதென்றாக்
கால் காதாந்தசித்துமுளிகும்பயோனி, கிண்மையுடனெழுதிவைத்த
சாத்திரத்தில் தீர்க்கமுடன்வயதுமுன்னூறென்னலாமே. ௭௯௪

என்னவேவயதது மூன்னூறண்டு மெழிலானதேரையர்முனி வருக்கு, பன்னவேசாத்திரத்தின் வருப்பைப்போலே பட்சமுடன் கண்டறிந்துசொல்லலாச்சு, துன்னவே யிவர்தமக்குச்சமாதியில்லை துப்புரவாய் ஐந்தாசைவிட்டோர்தாமும், முன்னமே யகஸ்தியனு ருபதேசங்கள் முறைப்படியேகண்டறிந்த சித்தமாச்சே. ௭௯௫

முறையானகருவிசாரணையெல்லாம் முயற்சியுடன்தாமறிந்தமா யாசித்து, கறைபோன்றபதினெண்பேர் சாத்திரத்தை கருத்தினிலே யென்னாளும்மனதுவந்து, மறைவானபொருளெல்லாம் மாண்பருக் கும் கத்தாமுறைப்பாடிபேசவுங்கண்டு, குறையாமலுபதேசஞ் செய் தசித்தசொற்றவனார்தேரையமுனிவர்தாமே. ௭௯௬

முனியான தேரையமுனிவரப்பா மூர்க்கமுடன்சங்கமென்றச பையிற்சென்று, தனியாகவகஸ்தியரின் பின்றொடர்ந்து சட்டமுடன் பிணிதீர்க்கசித்துவாகும், பனிபோன்றவனுந்திரத்தி லிருக்குமூலிபா ங்கானசஞ்சீவிமூலிதனனை, மனிதர்களைத் தானெழுப்பு மமூர்தமூலி மார்க்கமுடன்கண்டறிந்தசித்துபாரே. ௭௯௭

பாரப்பாயேம மென்றவித்தைதன்னை பண்புடனேமனதுவர்து கண்டசித்து, ஆப்பாயிவர்போலுஞ் சித்துமுண்டோவவனிதனிலா ரேனுங்கண்டதில்லை, கோப்பாயேமமென்ற சித்தேபாகும்செடிதான மலையனைத்தும்பழுக்குஞ்சித்து, சிரப்பாவையகத்தில் நெடுநாளாக சி றப்புடனே தானிருந்தசித்துதாமே. ௭௯௮

தாமேகேளின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தயவானபாலக னேமைந்தபாரு, போமேதான்பக்கிரியாக் கோபுவென்றும் போக் கமுடன்சாத்திரத்திலுரைத்தவார்போல், சேமமுடன் வயதுவுமே தென்றுக்கால் நிலையானவாண்டதுவு மிருநூற்றுசொச்சம், காமமுட னகபிராயன்தன்னைக்காண நன்னயமாய்மக்கபுரிபோனார்தாமே. ()

போனாரேமலைநாடு குகைகடந்துபொங்கமுடன் நபிதன்னையேகா ணவென்று, கானமுபாதவழிசெல்லும்போது கடுக்கானைகபிக்கூட்ட ம் பிரவாய்க்கண்டு, மானாமகதேவர் பதியிலப்பாமார்க்கமுடன்வந் ததினாலுந்தமக்கு, நினை நின்பதியிலுந்தனைத்தான் திட்டமுடன் ச பித்திடுவோமென்றிட்டாரே. ௮௦௦



என்றவுடன்யாக்கோபுதாள்பணிந்து யெழிலானவார்த்தைபது கூறும்போது,சென்றுமேயாக்கோபுதன்னைக்கண்டு சிறப்புடனேசுன் னத்துசெய்துமல்லோ, தின்றிடவேரொட்டியதுதானுமீய்ந்து சிறப் புடனேயசேனுசேனென்றுகூறி,வென்றிடவேயுப்தேசபிரான்வத்தை விருப்பமுடன்மனுங்குமாரோகினாரே. ௮௦௧

ஓதவேநபினாயர்கூட்டத்தார்கள் வுத்தமர்கள்மனம்போலேமனது வந்து, நீதமுடன்மக்கபுரிகோட்டைக்குள்ளே நிஷ்களங்கபக்கிரியாக் கோபுதன்னை, தோதமுடன்கொண்டுசென்றாரன்பனைக்குள் தோரு மல்கொத்துபாயோதினார்கள், வீதமுபயனறிந்தசித்துதாமும் விடு பட்டுவந்தநொருயாக்கோபாச்சே. ௮௦௨

ஆச்சப்பாயின்னமொருவயனஞ்சொல்வேன் வப்பனைகொங்க ணவர்வயதுமார்க்கம், பாச்சலுடன்மெய்ன்னூறுவாண்டுமட்டும் பாரி னிலேயிருந்தசொருசித்துமாகும், மாச்சலுடன்சமாதிமுகஞ்சென்ற சித்து மகத்தானகொங்கணர்சித்துவாகும், ஓர்சலதுயில்லாமல்வுலகு தன்னில் வுத்தமனேவெகுகாலம்வழன்றசித்தே. ௮௦௩

சித்தானசித்துமுனிரிஷியார்தாமும் சிறப்பானகொங்கணவர்கா ண்டஞ்சொல்லி, முத்தானகடைக்காண்டம்மூன்றுஞ்சொல்லி மூது லகில்சமாதிக்குயேகலானார், பத்தியுடன்கடைக்காண்டம்நாலிலப்பா பாடிவைத்தார்லெகுசங்கை காணப்போமோ, புத்தியுள்ளமாண்பர் களுங்காண்பாரப்பா கண்டாலுமதிசங்கையின்னமுண்டே. ௮௦௪

உண்டானகடைக்காண்டம்பாடியல்லோ வுத்தமனுங்கொங்கண வர்முனியர்தானும், நண்பானவையகத்தில்மாண்பர்முன்னே நலமான ரிஷிமுனிவர்தனையழைத்து,வண்பானசாத்திரங்கள்பாடியல்லோ வள முடனேவெகுசித்தர்மறைத்துவைத்தார், இன்னமுடன்காயாதிகற் பங்கொண்டு தீரமுடன்சமாதிக்குச்செல்லேனென்றானே. ௮௦௫

சொல்லவேசமாதிமுகம் நின்றபோது செம்மலுடன்சீஷவர்க்க மனேகங்கோடி, மெல்லவேசமாதிக்குபிடமுந்தேடி மேன்மையுடன் வழிபாடுசெய்துமல்லோ, புல்லவேகொங்கணார்முனிவர்தானும்புக மானசமாதிமுகம்வுள்ளேசென்று, வல்லமையாய்முப்பதுவாண்டுதா னும் வளமுடனேயிருந்தசித்துதானே. ௮௦௬

தானானயின்னமொருவயனஞ்சொல்வேன் தாக்கானகண்மணி யேபுகலக்கேளு, கோனானதட்சணாமூர்த்தியப்பா குவலயத்தில்வெகு காலமிருந்தசித்து, மானானவயதுவுமேதென்றுக்கால் மகத்தானவா

யிரத்துசொச்சமப்பா, பாலனைப்படியேழுங்கடலுஞ்சுத்தி பாரினிலே
வுழன்றதொருசித்துகாணே. அ0எ

காணவேதட்சணா மூர்த்திபாரும் காசினியில்திருமந்திரம்பாடி
னோர்தான்,பூணவேசிவாலயந்தன்னிலப்பாபொங்கமுடன் வெகுகால
மிருந்தசித்து, தோணவேதிருமந்திரம்பாடியல்லோ தோற்றமுடன்
சமாதிக்குயேகவெண்ணி,ஆணவங்கள்தானொடுங்கிசித்துதானும் வன்
பானகாசிபதிசென்றிட்டாரே. அ0அ

சென்றனைகற்மநாகநதியின்பக்கல் சிறப்புடனேதட்சணாமூர்த்தி
னாபர், குன்றானகரையோரம்மண்டபந்தான் கொற்றவனார்சமாதிபுக
ஞ்சென்றுமல்லோ, வென்றிடவேஒருயுகமாம்வருபதாண்டு வுத்த
மனார்தானிருந்துவந்தசித்து, தென்றிசையில்தட்சணாமூர்த்தியென்று
தேசமதில்பேர்கொண்டசித்துபாரே. அ0கூ

பாரேதானின்னமொருமார்க்கஞ்சொல்வேன் பாங்கானபாலக
னேபகரக்கேளும், நீரேதான்கோரக்கர்வயதேதென்றால் நிஷ்களங்க
மாகவல்லோமாயாசித்து, சேரேதான்வயததுவுமென்பதாகும் செப்
பினாரவர்நூலிற்சூத்திரந்தான்,சீரேதான்பதினாறுசூத்திரத்தில் சிறப்
பாகப்பாடிவைத்ததன்மையாமே. அக0

உண்மையாங்குளிகையதுதானுமில்லைவுத்தமனேநரைதிரையும்
யாதொன்றில்லை, வன்மையாம்பிணியென்றரோகமில்லை வகுப்பான
காயாதிதானுமில்லை, தன்மையுடன்வையகத்துமாண்பரெல்லாம் தப்
பாமல்சிவயோகியென்பார்பாரு,திண்மையுடன்கோரக்கர்முனிதம்மை
தீர்க்கமுடனெப்போதுமின்பார்தானே. அகக

நிண்பாரேகோரக்கர்முனியாலே தீர்க்கமுடன்கோரக்கர் சித்து
மாச்சு, வன்பாகசமுசாரவாழ்க்கையில்லை வளமானபொருளின்மேலா
சையில்லை, என்னேரந்திரிகாலபூஜையேர்டும் யெழிலானகாவிகாஷா
யத்தோடும், சொன்னபடிமனோன்மணியாள்பிரணவத்தை தொல்லு
லகில்யெப்போதுஞ்சொல்வார்தானே. அகஉ

சொல்வாரேயின்னமொருமார்க்கங்கேளு தூய்தானநற்பாலாதீர
வானே, புல்லவேகொளபாலசித்துதானும் புகழானவையகத்திலிருந்
தசித்து,வல்லதொருபொன்னுக்குவாணியாற்று வகுப்புடனேகண்ட
றிந்தஞானசித்து, சம்விபமாம்வித்தைதனில்தேர்ந்தசித்து சட்டமு
டன்வுரைகல்லுக்குரியசித்தே. அகங



உரையான பொன்னுரைக்குங்கல்லைத்தானும் வுத்தமனேமலைத
னிலேகண்டுதேடி, திரையோடும் புரையகற்றிவயிரக்கல்லைதிட்டமு
டனாராய்ந்தஞானசித்து, வரையானசித்துக்குவயதேதென்றால் வள
முடனேகூறுகிறேனின்னங்கேளு, கரைகண்டசித்தல்லோ செவுனசி
த்து கௌபாலசித்தென்றுபேருண்டாச்சே. அகச

போரான சித்துக்குவயதேதென்றால் பெருமையுடன் கூறுகிறே
ன்கொற்றவாகேள், நேரானவயததுவும்இருநூற்றைந்து நெடிதான
காடுமலைதிரிந்தசித்து, ஊமேடுங்கூடியல்லோவுறவுபேசி வுகமையுட
ன்சாத்திரத்தைபறிந்தசித்து, சீரானகௌபாலசித்தருக்கு சிறப்புட
னேஞானமென்றதேசந்தானே. அகரு

தேசமாமுபதேசம்பெற்றுக்கொண்டு தேற்றமுடன் காயாதிகற்
பங்கொண்டு, வாசமதுமலைதனிலேயிருந்துகொண்டு வகுப்பானசித்
தாதுவுளவாராய்ந்து, நேசமுடன்சமாதிக்குயேக வெண்ணி நெடுங்
காலஞ்சிஷவர்க்கமாண்பரோடும், பாசமொடுதனக்குகந்தசிஷனைத்தா
ன்பட்சமுடன்கண்டறிந்து வுரைத்தார்தாமே. அகசு

உரைத்தாரேசிஷவர்க்கசெய்திதன்னை வுத்தமனே !சமாதிக்குப்
போரேனப்பா, வரையானசமாதிமுகஞ்சென்றபோது வளமுடனே
யெந்தனுக்குவயிரக்கல்லால், குறையாமல்சமாதிதனை மூடியல்லோ
கொற்றவனேகருவயிரக்கல்லில்தானும், மறைவாகக்கைகாட்டுச்சித்தி
ரந்தான் மன்னவனேயெழுத்துரையுமென்பார்தானே. அகஎ

என்றவுடன்கௌபாலசித்துதாமும் யெளிதானவயிரக்கல் மே
லேயப்பா, வென்றிடவேயெழுத்துமுகம் மாறியல்லோமேதினியிலெ
ல்லவர்க்குமறிவதற்கு, !குன்றானகல்லின்மேலெழுத்தலுண்றி கொற்
றவனேகௌபாலர்சமாதியென்று, நன்றாகவரைதீட்டிசிஷர்தாமுங்கல
முடனேசமாதிமுகஞ்செய்தார்பாரே. அகஅ

செய்யவேபதினொன்குவருஷமட்டும் செப்பரியசமாதி முகந்தனி
லிருந்து, பையவேவையகத்தில் வந்தசித்துபாங்குடனேயேமென்ற
சித்துவர்கும், துய்யதமிழ்பண்டிதர்கள்போற்றுஞ்சித்து அறைபான
வேமமாற்றறிந்தசித்து, வையகத்திற்சித்துமுனிரிடிகள்தேவர் வுள
முடனேயெவரறிந்தாராணிதானே. அககூ

ஆணிபாரின்னமொருவதிதஞ்சொல்லேன் வப்பனேபுலிப்பாணி
மைந்தாகேளு, நீணிலத்தில் சோதிமாமுனிவர்தானும் நீதியுடன்
வெகுகாலமிருந்தசித்து, வாணிபங்கள்செய்வதற்கு யேமமாற்றைவ
ளமுடனேகண்டிருந்தசித்துதாமும், காணிகளும்பூமிவளமெல்லாங்க
ண்டு கருவயிரக்கல்லெடுத்த சித்துதானே. ௮௨௦

தானானசித்துக்குவயதேதென்றால் தன்மையுள்ள வருடமதுநா
னூறாகும், பானனகாயகலைதன்முகத்தில் பாங்குடனேதானதிரிந்தசி
த்துமாகும், கோனானகுருக்கள்மார் ரிஷிகள்தம்மை கொற்றவனார்
தான்கண்டுவாவுபேசி, மானானபொன்மாற்றுஅறியவென்று மார்க்க
முடன்சென்றதொருசித்துபாரே. ௮௨௧

பாரப்பாசோதியென்றமுனிவர்தானும் பட்சமுடன் சமாதிமுக
மவுள்ளேசென்று, சீரப்பாமுப்பத்தாறுண்டு மட்டும சிறப்புடனே
வையகத்தைமறந்தசித்து, நேரப்பாதவசுநிலைதானகடந்து நேர்மையு
டன்சமாதிவிட்டு வந்தசித்து, ஆரப்பா அறிவார்கள் சோதிமார்க்கம்
அப்பனேயானறிந்து சொல்விட்டேனே. ௮௨௨

சொல்லவேயின்னமொரு மார்க்கம்பாரு தூய்தான பாலகனே
யென்னசொல்வேன், வெல்லவேடமாகனார்வயதேதென்றால் வுத்தம
னேமுன்னூற்றுசொச்சமாகும், புலவேயிருந்தகாலம் வையகத்துபு
கழானபாவைபருடன் கூடியல்லோ, நல்லதொரு வஷ்டகருவித்தையெ
லலாம நலமுடனேசெய்ததொருடமாரகனே. ௮௨௩

காணவேஜெகஜாலடமாகந்தான் காசினியிலதிதவித்தைசெய்த
சித்து, பூணவேபர்மமேலநடந்தசித்து புகழானவாசியைகடத்துஞ்சி
த்து, பூணவேகூடுவிட்டுகூடுபாய்ந்து தொலலுலகில்வித்தைதனை
செய்தசித்து, ஆவணங்கள்தானெடுங்கி காயந்தின்று வன்புடனேவீ
ற்றிருந்தசித்துதாமே. ௮௨௪

தானானடமாகனாரடுஞ்சித்து தகமையுள்ள சாத்திரத்திற்சொ
ல்லவில்லை, கோனானவாகாயந்தன்னிலமட்டுய கொற்றவனார் கெடை
கட்டியாமிஞ்சந்து, பானானபரிதிமதிதன்னைத்தானுமடி பக்குவமாய்த்
திசைமாற்றுசெய்தசித்து, மானானடமாகனாசமாதிதன்னில மார்க்க
முடனேயுகுதற்கு நணணினாரே. ௮௨௫



நண்ணவேசகலரிஷிசித்துதாமும் நலமுடனேவையகத்துசமாதி
தன்னில், மண்ணதனிலிருந்ததொரு சித்துமாச்சு மகத்தானவவர்
போன்றசித்துமல்ல, கண்ணைவிந்தகுருடனைப்போல் கேணிதன்னில்
காசினியிலிறங்கியல்லோ சித்துதாமும், தண்ணீரில் பனிரெண்டுவரு
ண்டுமட்டுந் தன்மையுடன் வீற்றிருந்தசித்துதாமே. ௮௨௬

சித்தான்சித்துஜல ஸ்தம்பனசித்து சிறப்பான டமாகர்போல்
சொல்லொண்ணாது, முத்தானகேணிவிட்டுவந்தசித்து மூதுலகிலிவர்
போலுமெங்குமுண்டோ, பத்திபுடன் வையகத்திலனந்தஞ்சித்துபா
ரினிலே வெகுமுனியரிருந்தாரல்லோ, சாத்திரங்கள் மறவாதசித்தா
ளும் ஜலஸ்தமபனசித்துபோலில்லைதானே. ௮௨௭

இல்லையே யின்னமொருகவிதைசொல்வேன் யெழிலானயெந்த
னிருமணியேகேளும், சொலலவே சுந்தரானந்தரப்பா தொல்லுலகி
ல்கேசரியாம் வித்தைதன்னை, புல்லவே வதிதமென்றமாணபருக்குபு
கழுடனேபுகட்டியவர்தாம் சித்துமாகும், வெல்லவேயவர்தமக்கு வய
தேதென்றால் விட்டகுறைதொட்டகுறை மிகுதியாமே, ௮௨௮

ஆமேதானவர்தமக்குவயது மெத்தவப்பனேயென்னூற்றுசொ
ச்சமாண்டு, நாமேதான் சொன்னபடி குளிகைபூண்டு நலமான கேசரி
மேல்சென்றசித்து, போமேதான்வையகத்திலிருந்துமல்லோ பொங்
கமுடன் சமாதிமுகஞ்சென்றசித்து, வேமதா னிருபத்தாறுண்டுமட்
டுமேவிட்டுபூமிதனில வந்தசித்தே. ௮௨௯

வந்ததொருசித்துக்கு சமாதிமார்க்கம் வையகத்திலமெத்தவுண்
டுசொல்லொணாது, சந்தமாஞ்சிஷவர்ககங்கோடிமாண்பர்தாமணி
யிலகணக்குண்டோலக்கோயில்லை, சொந்தமுடன் வெகுமாணபர்கிட்
டியல்லோ சுந்தரனார்பாதாரவிந்தந்தன்னை, அந்தமுடனதாள்பணிந்து
சிரங்குனிந்து வனபுடனேபோற்றிசெய்த சித்துமாச்சே. ௮௩௦

ஆச்சப்பாபுலிப்பாணி மைந்தாகேளுவன்புடனேசொல்லுகிறே
ன்வதிதமெத்த, மாச்சக்லனறவாரிஷியாஞ் சித்துதம்மை வளமுட
னேசொல்லுகிறேன் வண்மைபாரு, பாச்சலன்றவயதுவும் யெழு
நூற்றுச்சொச்சம பாருலகில்நெடுங்காலமிருந்தசித்து. மூச்சடங்கிசிவ
யோகமானசித்து மூதுலகிலிவர்போலுங் காணோர்தாமே. ௮௩௧

காணாரேதவசியென்னும் வரரிஷிபார்தானும் கருவாககாலிங்க
மடுவுதன்னில், வேணபடிதவயோகஞ் செய்யவென்று விட்டகுறைத
னைகற்றி மடுவிற்சென்று, தோணவே பனிரெண்டு வாண்டுமட்டும்

தொல்லுலகில்ஜலஸ்தம்பசமாதியாகி,மாண்பநம்வையகத்தோர்காண வென்று மார்க்கமுடன்வந்ததோர் சித்துதானே. அ௱௨

தானென்ற சித்தநவும் ஜலரூபசித்து தாரணியிலிவர் போலுஞ் சித்துமுண்டோ, வாமென்றதேவாதிரிஷிகள் தம்மால்வரத்தினுல்பே ருபெற்றசித்தேயாகும், கோனென்றவாரிஷியாசென்று சொல்லிக் கொற்றவர்க்கு குவலயத்தில்பேருண்டாச்சு, மானென்றசித்தர்களும் வணங்கியல்லோ மகத்தானரிஷியாரைப்போற்றுவாரே. அ௱௩

போற்றுவார் பூதலத்தாரெல்லாருந்தான் பொங்கமுடனின்ன மொருமார்க்கஞ் சொல்வேன்,தேற்றமுடன்வால்மீக ரென்றசித்து தெளியானமார்க்கமது செர்ல்வேன்பாரீர், மாற்றமயம் நீங்கியல்லோ வையகத்தில் வளமையுடன்வெகுகாலமிருந்தசித்து, ஆற்றலுடன்வா ல்மீகராமயணத்தை அவனிதனில்மாந்தருக்குச்செய்திட்டாரே.

செய்ததொருவால்மீகர் வயதேதென்றால்செப்பமுடன் எழுநூ ற்றுச்சொச்சமாகும், துய்யதமிழ்ப்பண்டிதனுங் கல்விவானும் துய்தா னவகப்பேருகொண்டசித்து, பையவேசமாதிமுகஞ் சென்றதில்லை பாங்குடனேகாயாதிகொண்டுதானும், வெய்யவெநெடுங்காலமிருந்த சித்து வேதாந்தவால்மீகர்தானுமாமே. அ௱௫

தானான வையகத்துமாந்தர்க்கெல்லாம் தகமையுள்ளவால்மீகர்ச ரிகைதன்னை, கோனான குருவானவால்மீகர்தானும் குவலயத்தில்பேர் கொண்டஞானசித்து, தேனானவைதீக சாத்திரங்கள தெளிவுடனே கட்டிவைததஞானசித்து, பானானபாரசரிஷிக்கொப்பதானபாங்கான யுடியென்றுசெப்பலாமே. அ௱௬

செப்பலாமின்னமொரு மார்க்கங்கேளு செபமான புவிப்பாணி மைந்தாபாரு, ஒப்பமுடனூர்வசியாள் வயதேதென்றால் வுத்தமனே நூற்றியிருபதம்தயாகும், தபதிங்கள்சோாமல்தரணிமீதில்சாங்கமு டன்வீற்றிருந்த மாதுசிந்து, இபபுவியிலூர்வசியாள் சுருக்காத்னம் யெழிலாகபாடிவைத்தமாதுதாமே. அ௱௭

மாதானவூர்வசியாள்காயகற்பம் மகத்தானவையகத்திலுண்டுமெ ல்லோ, தோதான காவியங்களொன்றுகூறி தோமுமல் பாடிவைத்த மாதுசித்து, தீதானமியாசரிடம் வுபதேசங்கள் நீதியுடன்பெற்றதொ ருமாதுதானும், கோதாவரிகரைதனிலேமடிந்தசித்து கொற்றவனே சமாதியது அங்கேவுண்டே. அ௱௮



உண்டானசமாதியதுமண்டபத்திலூகோகோராதாக்கள்கண்ட நிந்து, தின்பானவேதமாமாயுற்வேதம் தீரமுடன்கண்டறிந்தமாது சித்து,கண்டல்லோரிஷிமுனிவர்சித்துதானுங் காசினியில்பூசைமுதல் னைவேத்தியங்கள், சண்டமாருதம்போலேதானடித்து தாரணியில் கோடித்துவருகின்றாரே. அ௱௯

வருகிறார்பூவாடைகாரிசித்தை மார்க்கமாமின்னமொருமகிமை கேளு, கருமமதைவையகத்திற்றனைகற்றி காசினியில்நெடுங்காலமிரு ந்தசித்து, தருமமதுதானறிந்தகமலசித்து தாரணியில்தானறிந்தகொ டியசித்து, அருமையுடன்சீனபதிதேசந்தன்னில் வன்பாகசென்ற தொருசித்துபாரே. அச0

பாரேதான்கமலமுனி வயதேதென்றால் பாலகனேசொல்லுகி றேன்பண்பாய்க்கேளு, நேரேதான்வயததுவும்நாலாயிரந்தான் நேர் மையுடன்முன்னூற்றுசொச்சமாகும்,சீரேதான்சீனபதிதன்னிலப்பா சிறப்புடனேநெடுங்காலமிருந்தசித்து,தீரேதான்சமாதிமுகந்தன்னிற் சென்று தீர்க்கமுடன்இருநூறுவாண்டுதானே. அசக

ஆண்டானவருஷமது யிருநூறப்பா வப்பனேபூமிதனிலிருந்த சித்து,கூண்டானகூன்டோடுவந்தசித்து குவலயத்திலிவர்போலுஞ் சித்துமுண்டோ, தாண்டவம்போல்சீனபதிதேசந்தன்னில் சாங்க முடன்விநோதங்கள்செய்தசித்து, ஆண்டகையாமானதொருகமலர் தாமும் வப்பனேவையகத்துசித்துமாச்சே. அசந

ஆச்சப்பாயின்னமொருமகிமைசொல்வேன் வப்பனேயதிசயங் கள்பெத்தவுண்டு, மாச்சலுடன்வையகத்திலிருந்தசித்து மகத்தான அறிவானந்தசித்துதானும், பாச்சலுடன்வயததுவுமேதென்றுக்கால் பண்பானமுன்னூற்றுவறுபதாண்டு, மூச்சடங்கிசமாதிதனிலிருந்த சித்து மூர்க்கமுடன்பனிரெண்டுவருஷங்காணே. அசரு

காணவேபன்னிரெண்டாண்டுமட்டும் காசினியில்பூமிதனி லிருந்த சித்து, தோணவேகௌபாலர்சிஷனாகும் தொல்லுலகிலிவர்மகிமை மெத்தவுண்டு,பூணவேவையகத்துமாண்பருக்கு புகழாகமுன்னடந்த காரியத்தை,வேணபடிசன்னதங்கள்கொண்டாற்போலே விட்டகுறை யிருந்தபடிசொல்வார்பாரே. அசச

சொல்லவேயின்னமொருமார்க்கங்கேளு தூய்தானவகப்பேபர் சித்துதாமும்,வெல்லவேயவர்தமக்குவயதேதென்றால் விருப்பமுடன் சொல்லுகிறேன்வியளாக்கனும், புல்லவே நாற்றுப்பத்துமொன்றுமூன்று புகழானமரத்தடியிலிருக்குஞ்சித்து,நல்லதொருசமாதிமுகஞ்சென்ற தில்லை நாதாந்தஅகப்பைவெளிசித்துதானே. ௮௫௫

வெளிபானசித்துக்கு குருவேதென்றால் விருப்பமுடன்வியாச முனியென்னலாகும், ஒளிவாககாயாதிதானுமில்லை ஓகோகோவுலக மதில்வாழுஞ்சித்து, களிபானசோதியென்றவிருட்சந்தன்னில் கை லாசநாதரைப்போல்சமாதிகொண்டு,வளியானமாப்பொந்தில்தாமெ டுக்கு மகத்தாகயிருந்ததொருசித்துமாச்சே. ௮௫௬

சித்தானசித்துனுடமார்க்கஞ்சொல்வேன்சிரானபுலிப்பாணிமன் னுபாரு, முத்தானப்பாம்பாட்டிவயதேதென்றால் மூதுலகில்பெயர் கொண்டசெடியசித்து, புத்தியுள்ளசித்தர்க்குவயதுசொல்வேன் புண் ணியனே நாற்றியருபத்துமூன்று, சுத்தமுடன்பாம்பினதைவிஷத்தை வாங்கி துப்புரவாயருந்துகிறசித்துகேளே. ௮௫௭

கேளேதான்காயாதிகற்பங்கொண்டு கீர்த்தியுடன்சிலகாலமிருந் தசித்து,பாளேதான்போகாமல்தேகந்தன்னை பட்சமுடன்காப்பாற்றி பக்துகொண்டு,நீளேதான் திருவாத்திமரத்தின்கீழே நீதியுடன்கொலு விருந்தகாயசித்து, ஆளேதான்கோகரணசித்துமல்ல வப்பனேசின் மயத்தின்சித்துபாரே. ௮௫௮

பாரேதானின்னமொருமார்க்கம்பாரு பட்சமுள்ளயெந்தனது பாலாகேளு, சீரேதான்காலகண்டவயதேதென்றால் சிறப்பானவாயிர மாமிருநூறுண்டு,நேரேதான்நெடுங்காலமிருந்தசித்து நேர்மையுடன் குளிகைபதுபூண்டசித்து, வேரேதான்பெயரேது சொல்லவென்றால் வுத்தமனேசேஷனால்முடியாதென்றே. ௮௫௯

அன்றான ஆதிசேடன்றன்னினாலும் வப்பனேகூறுதற்குமுடியா தப்பா,நன்றானநெடுமலைகள்வனாந்திரங்கள் கொற்றவனேநெடுங்கால மறிந்தசித்து, தென்றிசையில்தட்சணாமூர்த்தியன் சிறப்பானசித்து மகாசிஷனுக்கு, வென்றிடவேயுபதேசஞ்செய்தசித்து விட்டுறை யிருந்ததொருகாலர்தாமே. ௮௬௦



காலனும்நெடுந்தூதகாலசித்து காசினியில்சமாதிமுகஞ்செல்வ தற்குபாலனுஞ்சிஷவர்க்கமாண்பர்தம்மைபட்சமுடன்தாமழைத்தசித் துதாமும், சிலமுடன்முப்பத்துவாறுயாண்டு சிறப்புடனேவையகத் திலிருந்தசித்து,கோலமுடன்முகமறியாபாலசித்து கொற்றவனேவெ குகாலமிருந்தசித்தே. ௮௬௧

சித்தானசித்தனிடமார்க்கஞ்சொன்னேன் சிறப்பானயின்னமொ ருவயணங்கேளீர்,முத்தானவடிவேலர்முருகாப்பா முயற்சியுடன்வய தநுவுமேதென்றக்கால்,சத்தியமாய்வயதநுவுங்கணக்கோயில்லை சார் பானநூல்தனிலுஞ்சொல்லவில்லை, சித்திபெறஞானவழிகொண்டசி த்து சிறப்பானசுப்ரமணியரென்னலாமே. ௮௬௨

என்னவேசிவசுப்பிரமணியரான வெழிலானசித்துக்குவயதோ யில்லை, பன்னவேபலசாஸ்திர நூல்கள்தன்னில் பாகமுடன்வயதநுவு ங்கூறவில்லை, சொன்னபடிசுருதிமுறைவேதாகமங்கள் தோற்றமுட னபலபெரும்பாடிவைத்தார், நன்னயமாய்சுப்பிரமணியர்காப்பேயெ ன்று நாட்டினார்நூல்களெல்லாம்நாட்டினாரே. ௮௬௩

நாட்டினதோர்நாயதைக்கண்டதல்லால் நாதாந்தவயதநுவைக்க ண்டதில்லை, தாட்டிகமாயின்னமொருவயணஞ்சொல்வேன் தயாளமு ள்ளசிறுபாலாசாற்றக்கேளீர், வாட்டமுடன்பூகியென்ற முனிவர்தா னும் வகுப்பானவயதநுவுமேதென்றக்கால், மாட்டிமையாய்வறுநூ ற்றுயைபதாண்டு மார்க்கமுடன்வையகத்துசித்துபாரே. ௮௬௪

பாரேதான்நீலகண்டரிஷியார்தம்பால் பாருலகிலுபதேசம்பெற் றசித்து, நேரேதான்சமாதிமுகந்தன்னிற்சென்று நேர்மையுடனிருப த்தோராண்டுமட்டும், தீரேதான்சமாதிமுகமிருதுமலலோ தீர்க்கமு டன்வையகத்தில்வந்தசித்து, பேரேதான்நூல்தனிலேபூகியென்றும் பேருலகில்கீர்த்திபெற்றசித்துதாமே. ௮௬௫

தாமானசாந்திரங்களடிந்தசித்து தாரணியில்நெடுங்காலமிருந்த சித்து, கோமான்களுபதேசம்பெற்றசித்து குவலயத்திலிவர்போலும் யாருமுண்டோ, பூமான்களானதொருமாண்பரெல்லாம் புகழ்ச்சியுட னிவர்பாதப்புகழுஞ்சித்து, சாமாசயமானதொருசித்துபோல சட்ட முடன்வையகத்திற்காணார்தாமே. ௮௬௬

தானானயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தகைமையுள்ளபூபா லாமணியேகேளீர்,பானானதிருணக்கியமுனிவர்தானும் பாருலகில்நெ

டுங்காலமானசித்து, கோணனவயததுவுமேதென்றக்கால் கொற்றவனேதுலாயிரத்துயெண்பதாண்டு, மாணனசமாதிமுகஞ்சென்றசித்துமார்க்கமுடனிருபத்திரண்டுதானே ௮௯௭

ஆண்டானவருஷமதுயிருபத்திரெண்டு வப்பனேசமாதிமுகமிருந்தசித்து,பாண்டவர்களாவருங்காணுமுன்னேபாருலகில்வெகுகாலமிருந்தசித்து, தாண்டவம்போல்ஜெமதக்கினிமுனிவர்தானும் தாரணியில்பெற்றெடுத்தசித்துவாகும், மாண்டதொருமாண்பரெல்லாம்வையகத்தில் வாழ்த்தியல்லோவஞ்சலிகள்செய்தசித்தே. ௮௯௮

சித்தானசித்துமுனியிவர்தானப்பா சீருலகில்ரிஷிவர்க்கூட்டத்தோடு, முத்திபெறநல்வழிக்குவுறுதிகொண்டு மூதலகில்சின்மயத்தைமனதிலுன்னி, "சத்தியுடன்மனோன்மணியை தியானித்தேதான் சதாகாலநிஷ்டைகுறிகளாங்கண்டு, புத்தியுடன்வையகத்தில்தவசிபாலி பொன்னுலகுட்டிதனிலேசேர்ந்தார்தானே. ௮௯௯

சோமேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன் செம்மனுடன்புலிப்பாணிமைந்தாகேளு, வாமுடன்சண்டேசுவரர்வளமைகேளும் வண்மையுடன்வயததுவுமேதென்றக்கால், தீரமுடன்காணூற்றியறுபதாகும் தீர்க்கமுடனவர்நாலிற்சொன்னநீதி, சாமுடன்சமாதிமுகஞ்சென்றசித்து சாங்கமுடன்வையகத்துசித்துதானே. ௯௦௦

காணவேசமர்திமுகம்பத்துரெண்டு கருவாகவன்றுடனேதானுங்கூட்டி, பூணவேபூமிதனிலிருந்தசித்து பொங்கமுடன்ஞானமென்றகிரியாசிதது, நீணவேநாலுயுகவதிசயங்கள் நேராழியுலகுபதிவறிந்தசித்து, சிணமதுயில்லாமல்நெடுங்காலந்தான் சிவனோடிருந்ததொருசித்துமாச்சே. ௯௦௧

ஆச்சப்பாயின்னமொருமுறைமைசொல்வேன் வப்பனேசெங்கணிவாய்க்கொண்டபாலா,யச்சலதுவாராமலிருந்தசித்து பெழிலானதிருமூலரென்னலாகும், பாச்சலென்றவயததுவுமேதென்றக்கால் பாரினிலேவாயிரத்தும்சாச்சமாகும், மூச்சடங்கிசமாதிமுகந்தன்னிலப்பா மூதலகில்நெடுங்காலமிருந்தசித்தே. ௯௦௨

நெடுங்காலஞ்சமாதிமுகந்தன்னிற்றானும் நேர்மையுடனறுபதுவருஷமாண்டு, கடுந்தவசியாயிருந்தசித்துதாமும் கண்டுகொள்ளாவதிசயங்கள்மெத்தவுண்டு, படிந்துயரந்தான்றியாமாண்பர்க்கப்பா பாரினிலேதிகொடுத்துவதீதஞ்செய்தார், சுவோதிதமைக்கண்டுநேர்த்தஞ்சொல்லி துப்புரவாய்விதியுரைத்துவழிசொல்வாரே. ௯௦௩



வழியானமுறைபாடுதாமுரைத்து வண்மையுடனுபதேசங்கூறியல்லோ,பழியானவார்த்தைக்குபாளாகாமல்பாருலகில்சித்துவிளாயாடச்சொல்லி, மூழியானவார்த்தையது வுபதேசங்கள் மூர்க்கமின்றிதானுரைக்கும்ஞானசித்து, சுழியானவாசிதனிலிருந்துகத்தமுடன்வைதகத்திலிறந்தார்தாமே. ௯௦௪

### போகர் புலிப்பாணிக்கு சித்தர்கள்பிறப்பும் இருநட்சத்திரமுங்கூறல்.

இறந்தாரேயின்னமொருமார்க்கங்கேளு யெழிலான பதினெண்பேர்முனிவர்தானும், பிறந்ததொருவளப்பங்கள்யாவுங்கண்டுபேரின்பநிலைதனிலேமனதிலுன்னி, சிறந்ததொருநட்சத்திர யோகங்கண்டு சிரானபாதங்கள்தான்வகுத்து, துறந்துபோனவனோடிரிஷிகள்தானும் துப்புறவாய்நாற்பத்தெண்பேர்தானுமே ௯௦௫

போனயிவர்களதுபிறப்புதானும் பேரின்ப நட்சத்திரகால்தான்கூட்டி, சீரானசினபதிமாண்பருக்கு தீர்க்கமுடனுபதேசஞ் செய்தநூலாம், கூரானவையகத்துமாண்பரெல்லாங் குறிப்புடனேதானறியமனதுவந்து வீரானபோகரேழாயிரத்தை விருப்பமுடனுபதேசஞ்செய்திட்டேனே. ௯௦௬

செய்தேனே புலிப்பாணிமைந்தாகேளு செங்கமலகாத்தானேயின்னஞ்சொல்வேன், மெய்யான வேதமிது சத்தகாண்டம் மேதினியில்சகலகலைக்கியானமெல்லாம், பையவேவலடநூலைத்தானபாசாய்த்து பாடினேன்காண்டமது யேழாயிரந்தான், தூய்பதமிழ்ப்பரிபாஷைத்தன்னைநீக்கி துப்புறவாய்வோதிவைத்தேன் காண்டந்தானே. ௯௦௭

காண்டமாமேழாயிரம்பெருநாலப்பா கருவிகாணுமுதலிலடக்கம், பூண்டமான தறுதிவரைலிந்தநூலைப் புகட்டினேன்காலாங்கிதெடாட்சத்தாலே, வேண்டியதோர்சினபதி கருமானங்கள் வேற்றுருவமில்லாமல் கூறினேன்யான், ஆண்டகையாமெந்தன்குருநாதன்றன்னுலப்பனேபாடிவைத்த நூலிதாமே. ௯௦௮

நாலானனூலிதுதான் நூனுங்கமெத்த நுட்பமுடன்காலாங்கிபிறந்தவண்ணம், பாலான சித்திரையாமாதமப்பா பாங்கானவகலனியாம்நாலாங்காலம், சேலானசெகதகுருமைந்தனப்பா செயகானபாத்தியமும்பெற்றமைந்தன், காலானகாலாங்கிநாதரப்பா நீகாசினியில்வந்துதித்தவுருவுமாச்சே. ௯௦௯

உருவானமார்க்கமது மின்னஞ்சொல்வேன் வுத்தமனேபோகா
தபிரப்புநேர்மை, உருவானமாதமது வைகாசிப்பா கருத்தானபரணி
யதுசென்டாங்காலாம், ருநுவானபஞ்சமைத்திலோருவனப்பா கொற்
றவனேவிசுவகர்மன்மைந்தனாகும், திருவானபோகரிஷி யென்றுமல்
லோ செப்பினார்பலநூல்கள் வேதமாமே. ௮௭௦

வேதமாமின்னமொருமார்க்கங்கேளு வெளியானபுலிப்பாணிமை
ந்தாபாரு, போதமாம்ரோமரிஷி பிறந்தநேர்மை புகலுகிறேன்மாணுக்
களறியவென்று, நீதமுடனானியாந்திங்களப்பா நிஷ்களங்கமான
கார்த்திகைதானாகும், விதமுடன்பயனறிய மூன்றுங்காலம் விற்பர்
னார்பிறந்ததொழி நாளுமாச்சே. ௮௭௧

ஆச்சப்பாசெம்படவன் தனைப்பா வெப்பினமாதுருவுங் குறத்தி
யாகும், மாச்சலுடன் பலநூலுங்கண்டாராய்ந்து பாடிவைத்தமாப
தவுமெய்யேயாகும், மாச்சலுடனிருகுலத்தார்பெற்றமைந்தன் மகத்
தானரோமரிஷிபென்னலாகும், மூச்சடங்கி சென்றதொரு காவினப்
பாமுதலில்சென்றதொரு சித்துமாச்சே. ௮௭௨

சித்தானமார்க்கமதுயின்னஞ்சொல்வேன் சீர்பாலாயெந்தனிரு
கண்ணேகேளும், பத்தியுள்ளமச்சமுனி பிறந்தநேர்மைபாக்குடனே
ளாடியாந்திங்களப்பா, சத்தியுடன்ரோகணியா முதற்காலப்பா சாங்க
முடன்பிறந்ததொருநாளுமாச்ச, புத்தியுள்ளஆதலமாங்குலத்ததித்
தபுகழானகன்னியுடமைந்தனாமே. ௮௭௩

ஆமேதான் மச்சமுனியடவுசொன்னேன் வன்பானபுலிப்பாணி
மைந்தாகேளு, நாமேதான்சொன்னபடிசட்டநாதர் நன்மையுடன்பி
றந்ததொருநேர்மைதானும், போமேதான் ஆவணியாந்திங்களப்பா
போங்கமுடன் மிருகசீரிடமுமாகும், வேமேதான்விட்டகுறை மூன்
றுங்காலாம் விருப்பமுடனவதரித்த பாலனாமே ௮௭௪

பாலனாஞ்சிங்களவதேவதாசி பட்சமுடன்பயின்றெடுத்த புத்தி
ரந்தான், சீலமுடன்சட்டமுனி யொன்றுசொல்லி சிறப்புடனேகுவல
யத்தில்பேருண்டாச்சு, கோலமுடன்பின்னமொருமார்க்கம்பாருகொ
ற்றவனேபுலிப்பாணிமைந்தாகேளு, காலமுடனிடைக்காடர்பிறந்த
நேர்மை சட்டமுடன்சொல்லுகிறேன் தன்மையாமே. ௮௭௫



தன்மையாம் புரட்டாசிமாதமப்பா தாழ்வாதபரணியதனைக்கொ
ண்டமாதம், வன்மையாந்திருவாதிரைரெண்டாங்காலம் வளப்ப
முடனவதரித்தசீபாலன்றான், பென்மையாங்கானருக்குறைஜாதியப்பா
போராணகானினன்பெற்றபிள்ளை, இன்மையாமிடைக்காடர்தானா
கும் தீர்க்கமுடன்பூவுலகிலிருந்தசித்தே. ௮௭௬

சித்தானபின்னமொருமார்க்கஞ்சொல்வேன் திரளானநவகோடி
ரிஷிகள்தன்னில், புத்தியுள்ளதன்வந்திரிபகவானென்றும் பூபாலரான
தொருமாயாசித்து, சத்தியுள்ளமகாவிஷ்ணுவென்றேசொல்வார் தார
ணியில்மானிடமாஞ்சித்தவராகும், முத்திபெறவைப்பசியாந்திங்களப்
பா மூலையானபுனர்பூசம்நாலாங்காலே. ௮௭௭

காலானதன்வந்திரிபிறந்தநேர்மைகாசினியிலவர்தாவிற்சொன்ன
வாறு, நூலானபலநூலிற்கண்டாராய்ந்து நுட்பமுடன்பாடிவைத்
தேன்குருநூலாகும், பாலானஇருப்பிரப்பாளாப்பா பாங்கான அநு
லோமன்பெற்றபிள்ளை, சாலானசாத்திரங்கள்யாவுங்கூறும் சகலவித
பண்டிதருங்காணார்தாமே. ௮௭௮

கண்டேனேநிர்வாணபாஷைப்பாகாசினியில்சமஸ்கிரதபாஷை
யாலும், விண்டதொருயித்ராவிபாளபந்து விருப்பமுடன்பாகவதபா
ஷையாலும், கொண்டேனேமனத்தருதிபடியேன்றும் கொற்ற
வனேகுவலயத்தில்கண்டாராய்ந்து, விண்டுமிகயானுவைத்தேன்விஷ்
ணுகாதை விளம்பிட்டேன்சத்தகாண்டமுண்மைதாமே. ௮௭௯

தானனயின்னமொருமார்க்கம்பாரு தயவானபுலிப்பாணிமகனே
கேளு, கோனனையென்குருவாங்காலாங்கிநாதர் கொற்றவனார்தானு
ரைத்தவுளவுகண்டேன், பானனமூலத்தினீசரப்பாபண்புடனேபிறந்
ததொருநேர்மைதானும், மானனகார்த்திகையாந்திங்களப்பா மகத்
தானபூசமதுமூன்றுங்காலே. ௮௮௦

மூன்றானபாதமதுமூலத்தீசர்முனையாகபிறந்ததொருநேர்மையப்
பா, சான்றவராமூலத்தினீசரப்பா சட்டமுடன்வந்துதித்தநாளுமா
கும், நன்றதொருஜாதியிலேபள்ளஜாதியெழிலானகன்னிகையும்பெற்
றபிள்ளை, மேன்மையுடன்தான்பிறந்தார்மூலத்தீசர்மேதினியில்ரிஷி
தனக்குப்பிரந்தார்தாமே. ௮௮௧

பிறந்ததொருபின்னமொருமார்க்கஞ்சொல்வேன் பேரானபுலிப்
பாணிமைந்தாபாரு, சிறந்ததொருஅகத்தீசருதித்தநேர்மை சிறப்பான

தனுர்மாதமென்னலாகும், துறந்தொரு ஆயிலியம்மூன்றும்பாதம் அப்புறவாயவர்பிறந்தநாளுமாச்சு, கறந்தொருபால்பசுவும்கன்னு மாதி காசினியிற்பிறந்தொருசித்துமாச்சே. அஅஉ

ஆச்சப்பா அகத்தியரின்பிறப்பநேர்மை அவனிதனிலாராலுமுடியாதப்பா, மூச்சடக்கியபின்மேல்நின்றவிக்கு மூலையானகமலமதில் பிறந்தசித்து, மாச்சலுடன்தேவரிஷிவாக்கினாலே மகாதேவர்வந்துதித்தநருவுமாகும், எச்சலதுகாராதநும்பயோனியெழிலானவகஸ்தியரென்றறையலாமே. அஅங

அறையவேயின்னமொரு வயனாஞ்சொல்வேன் வன்பானகண்மணியேசொல்லக்கேளீர், நிறையவேசிவவாக்கியர்பிறந்தநேர்மை நீதியுடன்சொல்லுகிறேன்நினைவாய்க்கேளு, குறையாதகைமாதம்மகத்திலப்பா கொற்றவனேரெண்டாங்காலென்னலாகும், மறைபவேதிருமூலநட்சத்தாரில் மகத்தானகன்னியதுபிள்ளையாமே. அஅச

பிள்ளைபாஞ்சிவவாக்கிய ரென்னலாகும் பேரானதிருமூலர்மரபிலுள்ள, வள்ளலெனுஞ்சேய்மடவார்கன்னிதன்னின் மகத்தானசிவவாக்கியராகும்பாரு, தெள்ளுதமிழ்க்கவிவாணரிவர்க்கிணையுண்டோ செந்தமிழின்சுவையறிந்தசிவவாக்கியர்தான், கள்ளமதுவாராதபுனிதபாலன் காசினியிலவதரித்தவுருவுமாமே. அஅரு

உருவான்னின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வுத்தமனேசிதாமணியேயுண்மைபாரீர், திருவானாமரென்றதேவரப்பாதீர்க்கமுடன்வந்துதித்தநேர்மைகேளீர், கருவானமாசியென்றதிங்களப்பா கடியதோர்பூரமதுரெண்டாம்பாதம், அருவநுள்ளாமரென்ற தேவர்தானும் வப்பனேவந்துதித்தநாளுமாச்சே. அஅகா

நாளானநாலாங்காலென்னலாகும் கலமானராமதேவர்பிறந்தநாளாம், ஆனானரோமரிஷிபாட்டனுக்கு அழகாகவந்துதித்தராமதேவன், கோளான நூல்களிலேகுற்றஞ்சொல்வார் குறையானமுறைப்பாடியேதுஞ்சொல்வார், பாளான நூல்தனிலேசொல்லாதாலே பட்சமுடன்யானுரைத்தேன்பண்பாய்க்கேளே. அஅஎ

பண்பானயின்னமொரு மார்க்கம்பாரு பாலகனேவைத்தறிவிற்சிறந்தபாலா, திண்பானபுஜண்டருடமார்க்கஞ்சொல்வேன் தீர்க்கமுடன்பக்குவியாங்திங்களப்பா, கண்பானவுத்திரமாமிரண்டாம்பாதம் காசினியில்வந்துதித்ததிருவுமாச்சு, மண்பானவாரிஷியின்சாபத்தாலே மார்க்கமுடனவதரித்தபாலனாமே. அஅஅ



பாலனுஞ்சந்திரகுலம் விளங்கவந்த பாரினிலேவெள்ளாட்டியெற்றமைந்தன், மாலானாதிசேவிமடந்தையாகும் மகத்தானவநந்தியுமென்னலாகும், சேலானபாக்கியமும்பெற்றபாலனை செம்மலுடன்சாபத்தால்வரத்தில்வந்து, தாலானதவசியென்ற நாமம்பெற்று தாரணியில்புஜண்டரென்ற பேருண்டாச்சே அஅகூ

போனயின்னமொருவழிதான்சொல்வேன் பேருலகிற்கீர்த்திபெற்றபுனிதவானே, சிரனகருவூரார்பிறந்தநேர்மை செப்புகிறேன் செம்பவளவாயாகேளீர், கூரானசித்திரையாமாதமப்பா குறிப்பானவந்தமதுரெண்டாம்பாதம், தேருனநாட்களிலே பிறந்தசித்துதேற்றமுடன்கருவூராரென்னலாமே. அகூo

ஆமேதான்தேவதத்தனென்றுசொல்லி வப்பனேயவன்மைந்தன்மயனென்பார்கள், நாமேதான்சென்னபடி மயனுக்கல்லோ நாடானக்கருவூரார்பிறந்தாரல்லோ, போமேதான்பொன்னுலகதேவதச்சர் பொங்கமுடன்கருவூரார்க்கிடமல்ல, ஆமேதான்பாண்டியற்கு வுருவுசெய்து வப்பனேதான்கொடுத்த சித்துமாமே. அகூக

தாமாகயின்னமொருவழிபாடல்லோ சாற்றுகிறேன்புத்தியுள்ள பூபாலர்கேள், கோமான்களறிந்ததில்லைசாத்திரத்தோஷம் கொற்றவனேயாம்கண்டவகைக்குஞ்சொல்வோம், சமானியமென்றொருபுண்ணாக்கீசர் தாரணியில்வந்துதித்தநேர்மைசொல்வேன், பூமான்களாரேனுமறிந்ததுண்டோ புகட்சியுடன்கூறுகிறேன்புனிதவானே. ()

புனிதமாம்வைகாசிமாதமப்பா புகழானபுண்ணாக்குயிசர்தாமும், வனிதமுடன்சித்திரையாமிரண்டாமாதம் மகத்தானபுண்ணாக்கர்பிறந்தநாளாம், சனியிராகுடன்கூடிபிறந்ததாலே சாங்கமுடனவதரிஷிதன்னைப்போல, மனிதருபவதாரந்தானெடுத்து மாட்டிடைச்சியமங்கலியன்பிள்ளையாமே. அகூங

பிள்ளையாமின்னமொருபாகஞ்சொல்வேன் போரானகண்மணியேபுகலக்கேளீர், எவ்வளவுபிசகாதபுலிப்பாணியும்மை யேற்றமுடன்சொல்லுகிறேன்யெழிலாய்க்கேளு, உள்ளபடிநீபிறந்தமாதமப்பா வுத்தமனேபுரட்டாசியென்னலாகும், கள்ளமிலாசோதியென்றநாலாங்காலாம் கருத்துடனேயவதரித்தசித்துமாச்சே. அகூச

ஆச்சப்பாவேடர்குலம் வந்துதித்தவப்பனே கன்னிகழிபாதமன்னி
கை, மூச்சடங்கி கானகத்தில்தவசிபாக மூர்க்கமுடன் முனிருந்தரிஷி
யாரோடு பேச்சிகளும், மிகப்பேசிவாதுகூறி போனதவகண்டரிஷி
தானப்பா, பாச்சலுடன்கன்னிகைதனைச் சேர்ந்துமல்லோ பாலகனே
பெற்றெடுத்த சிசுதானீயே. ௬௯௫

சிசுவானபாலகனேநீதானப்பா சிறப்புடனே காலாங்கிடாட்ச
த்தாலே, பசுபோலேவெங்கைதனை வாகனமுமாக்கிபாரினிலேகற்றி
வந்தபாலனுக்கும், நிசிதமுடன்யெந்தனுக்கு சீஷனுகி நிஷ்களங்கமான
தொருபுத்திவானுப், விசுவாசமுள்ளதொருபாலகனுக மேதினியில்
வந்துதித்தசித்துமாச்சே. ௬௯௬

சித்தானபின்னமொரு குறிதான்சொல்வேன் சிறப்பானபுலிப்
பாணிமகனேகேளாய், முத்தமுடன்நந்தீசர் பிறந்தநேர்மை முதல
கோர்தானறிய சொல்வேனப்பா, நித்தமதுவைகாசிமாதமப்பா நீடா
னவிசாகமதுகாலாங்காலாம், பத்தியுடன்தான்பிறந்தநந்திதேவர்பாரி
னிலேதேவஸ்தானகுருவுமாச்சே. ௬௯௭

குருவானதேவதாஸ்தலங்கள்தன்னில் கொற்றவனேநந்தியென்
றபேருண்டாச்சு, அருவானதேவேந்திரன்சாபத்தாலே வப்பனேபிர
ம்மகுலந்தனிலுதித்து, உருவாகியானிடஜென்மமாகி வுத்தமனேக
ன்னியதுவயிற்றிற்றங்கி, திருவானநந்திரூபங்கொண்டுமல்லோ சிறப்
புடனேவந்துதித்தசித்துதானே. ௬௯௮

சித்தானபின்னமொருமார்க்கம்பாரு சீருள்ளபுலிப்பாணிமைந்
தாகேளு, புத்தியுள்ளபுலஸ்தியனுர்பிறந்தநேர்மை பூதலத்திலேவார
லுங்கூறப்போமோ, முத்திதருமாவணிமாதத்திங்கள்தன்னில் முனியா
னஅனுஷமாம்நாலாங்காலில், பத்தியுடன்பிறந்தாரே புலஸ்தியர்தா
னும் பாரினிலேவந்துதித்தவுருவுமாச்சே. ௬௯௯

உருவானபுலஸ்தியரின்மார்க்கங்கேளு ஓகோகோநாதாக்களறி
ந்ததில்லை, கருவானதேவரிஷிதன்வரத்தால் கமலமுனிதன்வயற்றிற்
பிறந்தபோன், திருவானவகஸ்தியருக்குகந்தசீஷன் தீர்க்கமுள்ளசிவ
ராஜபுனிதயோகன், பருவானதிருமந்திரவுபதேசந்தான் பாருலகில்
புலஸ்தியென்றறையலாமே. ௭00



அறைபலாமின்னமொரு மார்க்கம்பாரு வப்பனேபுலிப்பாணி
மைந்தாகேளு, நிறைபனே வேதமென்றவியர்சுர்தாமும் நேர்மையு
டன்தான் பிறந்தசேதிவண்ணம், மறைபோன்ற வாணிமாதத்திங்கள
ப்பா மகத்தானகேட்டையது ரெண்டாங்கால்தான், நறைபோன்ற
நாள்தனிலுதித்தபாலன் கொற்றவனுர் வேதமென்றவிபார்தானே.

தானனபராசரது மைந்தனப்பா தாக்கான வியாசனென்றே
செப்பலானும், கோனானநூற்படியே யானுரைத்தேன் கொற்றவனுர்
மாண்பரிடமறியவேண்டி, பானனைபின்னமொருபதமுஞ்சொல்வேன்
பாரினிலேமாண்பர்களுந் தெரியவேண்டி, மானனபுலிப்பாணியுந்த
மக்கு மார்க்கமுடன் முறைபாடுசொல்லலாச்சே. ௭0௨

சொல்லவென்றால் தேரையர் மார்க்கஞ்சொல்வேன் சுந்தரனே
பங்குனியாந்திங்களப்பா, வெல்லவே மூலமது ரெண்டாங்காலாம்
மேன்மையுடனவதாரஞ் செய்தாராம், புல்லவே தேரையர் முனி
வர்தானும் புகழானபிரம்மகுலந் தன்னிலப்பா, வெல்லவேவவர்னரிஷி
தன்றனக்கு சிறப்புடனே பெற்றெடுத்தபாலனுமே. ௭0௩

பாலனுந்தேரையர்முனிவர்தானும் பண்பான வகஸ்தியருக்கு
கந்தசீஷன், சீலமுடனுபதேசம்பெற்று சிறப்புடனேயவனிதனிலே
யிருந்தசித்து, கோலமுடன்யமமென்றவித்தைதன்னை குவலயத்தி
ல்மாண்பர்களுக்காகவேண்டி, காலமுடனகஸ்தியர்க்குரூபந்தன்னை
தன்மையுடனெடுத்ததொருசீஷனுச்சே. ௭0௪

சீஷனுபின்னமொரு மார்க்கம்பாரு சீருள்ளபுலிப்பாணிமன்ன
வர்கேள், தோஷமதுநேராமல்யாக்கோபென்னுர் துப்புரவாய் ஞான
மென்றசித்துதானும், வேஷமதுதான்மாற்றி நபிநாயகத்தைதவிருப்ப
முடன்கண்டுவந்தயோகசித்து, பாசமுடன் றான்பிறந்த நேர்மைதே
னும்பாரினிலே பங்குனியா மாதந்தானே. ௭0௫

மாதமாம்பங்குனியாந்திங்களப்பா [illegible]சத்தான பூராடம்மூன்றாங்
கால்தான், தோதமுடன் பக்கிரியாக்கோ[illegible]னும் தொல்லுலகைத்
தான்மறந்து பிறந்தசித்து, சாதகங்கள் பொய்யாது விதியுந்தப்பா
தாரணியில் நெடுங்காலமிருந்தசித்து, கோதமென்னும்புலஸ்தியனுர்
தானுமப்பா கொற்றவனுமீன்றெடுத்தபுனிதனுமே. ௭0௬

புனிதமாமகமதுமார்க்கந்தன்னில் புகழானகன்னியவள்பெற்ற
பாலன், சனியுடனே ரேவதியுங் கூடச்சேர்ந்து சட்டமுடன்வந்துதி

த்காரக்கோயப்பா, மனிதனெனுஞ்சென்மமதுபெத்துமல்லோமகத்தானமகமது மார்க்கஞ்சென்று, தனியானமக்கமென்றதேசந்தன்னில் சட்டமுடன்போனதொரு சித்துமாமே. ௬௦௭

சட்டமுடனின்னமொரு மார்க்கங்கேளு சங்கரனே புத்தியுள்ள மணியேபாரு, திட்டமுடன்கொங்கணர் பிறந்தநேர்மை தீர்க்கமுடன்பராபரையேன் சுந்தமாரர, வட்டமுடன் சித்திரையாந் திங்களப்பா வளமானவுத்திராட முதற்காலந்தன்னில், அட்டதிசைதான்புகழ பிறந்தபாலன் வாரமதைகொங்கணவ ரென்னலாமே.

என்னவே யவர்பிறந்தநேர்மையப்பா வெழிலான சங்கரனுத்தவத்துதித்த, பன்னவேகாளினனை பெற்றபாலன் காசினிபில்வந்துதித்தநிருவுமிரும், பொன்னரங்கம் பூண்டதொரு புனிதவர்ளும்புகழானதேவதாசித்துமாரும், நன்னவனுக்கொப்பான கொங்கணவர்தானுங் காசினிபில்வந்துதித்த திருவுமாச்சே. ௬௦௯

ஆச்சப்பாயின்னமொருமர்மஞ்சொல்வேன் அப்பனேபுலிப்பாணிமைந்தாகேளு மூச்சடங்கிப்போனதொரு மாயாசித்துமுனையான தட்சணாமூர்த்தியாரும், பாச்சலுடன் தட்சணைப்பதியில்தானும் பாங்குடனே பள்ளிகொண்டசித்துவாரும், ஆச்சரியமானதொரு மாயாசித்து அவர்பிறந்தவன்மைதனைப் புகலுவேனே. ௬௧௦

புகலுவேன் ஆவணியாம் திங்கள்தானும் பூரணமாந்திருவோண முதற்காலப்பா, நிகலவே தட்சணாமூர்த்திநாயன் நீதியுடன்றான்பிறந்தாரும்மாச்ச, அகலவேசொல்லி மலோநதன்பேரன் வன்றான வைஷ்ணகுலசம்பிரதாயன், சகலமுமதிந்ததொரு ஞானசித்து தாரணியில் வந்துதித்த சித்துமாச்சே. ௬௧௧

சித்தானகுலசம்பிர தாயபூபன் சிறப்பான தட்சணாமூர்த்திநாயன், முதநானயின்னமொருமார்க்கஞ் சொல்வேன் மூதுலகைகடந்ததொரு புனிதனாதர், புத்தியுள்ளகோரக்கர் பிறந்தநேர்மை பண்பானகார்த்திகையாமென்னலாரும், சித்திபெற அபவிடமா மிரண்டாங்கால்தான் சிறப்பானநாளென்றேசொல்லலாமே. ௬௧௨

சொல்லவே கோரக்கர்பிறந்தநேர்மை சுந்தரனுர்வசிஷ்டமகாரிஷிபாருக்கு, புல்லவேகனகுருநாதியப்பா புகழான சன்னியவன் பெற்றபிள்ளை, வெல்லவே அனுலோமனென்னலாகும் வேதாந்தகோரக்கர் சித்துதாமும், நல்லதொருபிரகாசமானசித்து காதாந்தசித்தொளிவுமென்னலாமே. ௬௧௩



என்னவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வெழிலானபுலிப்பாணிமன்னுபாரு, துன்னவே கௌபாலசித்துதாமும் சடசோதியரம்பிரகாசமானசோதி, மின்னவேவைகாசிமாதமப்பா மிக்கானசதயமது ரெண்டாங்கால்தான், நன்னயமாயவர்பிறந்தநாளேயாரும் நலமானகௌபாலசித்துபாரே. ௬௧௪

பாரேதான் தேவதாதச்சனப்பாபாங்கானஜகதகுருநம்மாளன்ரூன், நேரேதான்தவத்துதித்தவென்றும் கெடிதானகௌபாலரிஷிதானென்றும், நீரேதான்வயிரக்கல்கண்டெடுத்து தீர்க்கமுடன்பொன்னுறைத்தசித்துவென்றும், சீரேதான்பலநூல்காப்பியங்கள்கண்டு செப்பினேன் கௌபாலசித்துகாணே. ௬௧௫

காணவேயின்னமொரு புதுமைசொல்வேன் காசினியில்லாதாக்கள்கூறகில்லை, தோணவேஜோதியென்றமுனிவர்தானும் துப்புறவாய்தானுதித்த வன்மைபாராய், பூணவேபுரட்டாசிமாதமப்பா புகழானபூரட்டாதியென்னலாகும், மாணவேநாலாங்கால் தன்னிலப்பாமகத்தானசோதிமுனி யுதித்தவாறே. ௬௧௬

வாராணபிரம்மரிஷிமைந்தனப்பா மகத்தான சூரியகுலந்தனிலுதித்த, ஆரானபெண்மாது மாயாஜாதி துகளானசோதிமா முனிதானுதம், வேரானமலைகுகைகள் ருண்ணுதேடி விளக்கமறகல்லதனைவாரய்ந்தேதான், கூறான வயிரக்கல்கண்டெடுத்த கொற்றவனாஞ்சோதிமாமுனிதானாச்சே. ௬௧௭

ஆச்சப்பாயின்னமொரு மர்மஞ்சொல்வேன் வப்பனேபுலிப்பாணியண்ணலேகேள், மூச்சடங்கி சென்றதொருமாடர்தானும் முனையுடனேதான்பிறந்தவண்மைகேளீர், மாச்சலென்றமார்கழியாந்திங்களப்பா மகத்தானவுத்திரட்டாதிதானும்,வீச்சுடனேநாலாங்காலென்னலாகும் விரைவானநாள்தனிலே பிறந்தார்தாமே. ௬௧௮

பிறந்தாரேடமாகர் யாரென்றக்காலபோரானசுந்தரனூர்மைந்தனப்பா, இறந்ததொருசுந்தரற்கு மைந்தனப்பாவெழிலானபிள்ளையது ரெண்டாம்பிள்ளை, அறந்தநேருஞானியப்பா சைவஞானி சுத்தமுள்ளவீரதிவீரனப்பா, மறந்ததொருமார்க்கமெல்லாம் மாந்திரீகத்தால் மகத்தானபுத்தியினலறிந்தசித்தே. ௬௧௯

சித்தானபின்னமொரு மகிமைசொல்வேன் சீர்பாலபுண்ணிய
னேபுகலக்கேளீர், முத்தான ஞானிஇது முயர்ந்தஞானி முனையான
சுந்தரனுர்சித்ததாமும், புத்தியுள்ளபூபாலன் தான்பிறந்தபுகழான
மாதமது கேதென்றாக்கால், சுத்தமுள்ள ஆவணியாந்திங்களப்பா க
டாான சுந்தரனுர்பிறந்தார்தானே. ௯௨0

தானனரேவதியா மூன்றுங்காலாம்தன்மையுடன்பிறந்தொரு
நாளுமாச்சு, கோனுனசுந்தரனு ருளவுகேட்டால் கொற்றவனேசிக்
கிந்தர்பலேபிறுச்சி, தேனுனைவகண்டரிஷியார்தம்மின் சிறப்பாகயவ
ர்தமக்குபோனாரும், மானுன மகத்துவங்களுள்ளசித்து மண்டலத்தி
ல் சிவஞானசித்துடாரே. ௯௨௧

பாரேதானின்னமொரு வதிதஞ்சொல்வேன் பாலகனேசிறுபா
லாபகரக்கேளும், கூரேதான் சொன்னார்களிதிநாசங்கள் வப்பனே
யார்தானுஞ்சொல்லவில்லை, நேரேதான்பின்னமொருமார்க்கஞ்சொல்
வேன் நெடிதானவாரிஷிபாமெனறசித்து, சிரேதானவர் பிறந்தவண்
மையப்பா சிறப்புடையசித்திரையாந்திங்கள்தானே. ௯௨௨

சித்திரையா மகவனிமூன்றுங்காலாம் சிறப்பானநாள்தனிலேபி
றந்தாரெனறும், பத்தியுடனவருடைய மார்கஞ்சொல்வேன் பண்
பானதிருக்கையமுனிவாம்பரா, முத்திவழிசெலுகின்ற சித்துவா
கும் முனைடான வாராவீபாமென்றும்பேரு, சத்தியங்கள் தவராதவி
சுவாமி தாரணியில்வாரிடியாமென்னலாமே. ௯௨௩

என்னவேயின்னமொரு வயணஞ்சொல்வேன் பெழிலானபெர்
தனதுபுத்திவானே, அன்னவேவால்மீகர்பிறந்தநேர்மை அப்புரவா
யவருடையவளமை சொல்வேன், மன்னவனுக்கொப்பானவால்மீகர்
தானும் மகத்தான லோகமதில் பெரியசித்து, சொன்னதொருபுரட்
டாசிதிங்களப்பா சொற்பெரியவனுஷமது நாலாங்காலே. ௯௨௪

காலானவால்மீகர் வேடனப்பாகன்னியாள்பெற்றதொருகுறத்
திமைந்தன், கோலான மாரமராவுபதேசங்கள் கொற்றவனார்பெற்ற
தொருசித்தமாச்சு, பாலானமாண்பருங்குஞானகாண்டம் பகுத்தறி
யவால்மீகர்சரிதையப்பா, மாலானவவர்பெருமையாருக்குண்டு மகத்
தானரிஷிகளுக்கில்லைதானே ௯௨௫



இல்லையேஇன்னமொருசரிதைசொல்வேன் பெழிலானபெர்த
னதுபுத்திமாரா, தொல்லுலகில்கீர்த்திபெற்றமாதுசித்து அப்புரவா
யூர்வசியாளென்னுமாது, எல்லவருந்தான்புகழுவைகாசிதன்னில் பெ
ழிலானபூரமென்றநாலாங்காலாம், வல்லமையாய்வந்துதித்த தேவ
மாது வையகத்திலூர்வசியாளென்றமாதே. ௯௨௬

மாதானஊர்வசியாள்மார்க்கந்தானும் மகத்தானகானகத்துரிஷி
தானப்பா, நீதானபிரிங்கிமாரிஷிபின்பேத்தி தீர்க்கமுடன்கானீனன்
பெற்றமாது, ஆதானசாத்திரங்கள்சித்துநூலில் அறிவுடையஊர்வசி
யாள்மாதுதானும், கோதானந்தான்கொடுத்துபிறந்தமாது குவலய
த்திலூர்வசியாஞ்சித்துகானே. ௯௨௭

கானவேயின்னமொருகவிதைசொல்வேன் கண்ணான கண்மணி
யேகமாக்கேண்மோ, பூணவேபுலிப்பாணிமைந்தாபாரு புகழானபெ
ந்தனிருமணியேகேளும், வேணவேயின்னம்வெகுவனேகசித்து வேட
மதுபூண்டுமல்லோயிருந்தாரப்பா, மாணமருங்கல்வியுள்ளசித்துகன்
னில மகத்தானசித்டகளைகூறலாச்சே. ௯௨௮

கூறவென்றால்கமலமுனிபிறந்தநேர்மை கூறுவேன்வைகாசிதிங்க
ளப்பா, மாறலுடன்பூசமதுரெண்டாங்காலாம்மகத்தானகமலமுனிபி
றந்தநாள்தான், சிறலதுவாராததேவசித்து தெளிவுடையமையகத்
துக்குகர்த்தசித்த, ஆறவேயொருவரால்கூறப்போமோவப்பனேஞான
வொளிசித்துபாரே. ௯௨௯

பாரேதான்சித்தொளிபின்மகிமைபாரு பாங்கானகாலாங்கிபாட்
டன்வர்க்கம், நேரேதான்வம்மிஷத்திற்பிறந்தசித்து நெடிதானசின்ம
யானந்தசித்து, வேரேதானின்னமொருமார்க்கஞ்சொல்வேன் வெளி
பரங்கமானதொருமாராகேண்மோ, சிரேதான்அறிவானனந்தசித்தர்
தீர்க்கமுடன்பிறந்தநொருநேர்மைகாணே. ௯௩0

காணவேமாசியென்றதிங்களப்பா கருவானரேவதியாமூன்றும்
பாதம், பூணவேயவர்பிறந்தநாளதாகும் புகழானமார்க்கமதுயேதெ
ன்றக்கால், வேணதொருடமாகனூர்மைந்தனப்பா வேதாந்தஅறிவா
னனந்தாரகும், தோணவேபிரதிலோமனென்றேசொல்வார் தொல்
லுலகிலிவர்போலுஞ்சித்துமுண்டோ. ௯௩௧

உண்டானபின்னமொருமர்மஞ்சொல்வேன் வுத்தமனேநாதாந்த
மணியேகேண்மோ, தொண்டனேவுஞ்சித்துமுனிரிஷிகளுக்குதே

றமுள்ளவகப்பேபர்சித்துவாகும், கண்டவர்கள்விடுவார்கள்சித்துந ம்மை காசினியிலுபதேசம்பெற்றசித்து, அண்டமெனும்வையகத்தில் பிறந்தநேர்மை வப்பனேயாவரைப்பேன்சொல்வேன்பாரே. ௯௯௨

ஆச்சப்பாகன்னியவள் பெற்றபிள்ளை பவதாரபுருஷனென்றே செப்பலாகும்,சூச்சட்டங்கிலெகுசாகமிருந்தசித்து முனியானவகப்பே பர்சித்துவாகும், மாச்சனுடனின்னமொருமார்க்கங்கேளு மகத்தான குதம்பையென்றசித்துதாமும், எச்சலதுவாராமல்தான்பிறந்தவெழி லானசித்தினிடமார்க்கங்கேளே. ௯௯௩

கேளேதானுடியாங்கிங்களப்பா கெவனமுடன்விசாகமென்றமூ ன்றுங்காலில், காளப்பாதான்பிறந்தகுதம்பைசித்துகலமுடனேதிரிகா லபூசைசெய்து, மேவளப்பாயாகமதுமுடித்துமல்லோ வேன்வியுடன் பாலமுர்தமுண்டசித்து, ஆளப்பாபெரியோர்கள்நேசம்பெற்று வப் பனேமரப்பொந்திலிருந்தசித்தே. ௯௯௪

சித்தானமர்தவமாங்குலத்துதித்த சிறப்பானகுதம்பையென்ற சித்துவப்பா,முத்தானபாலமுர்தமுண்டுமலேலோ முதலைத்தான்ப ழித்தசித்துவரும், பத்தியுடன்வையகத்திலநேகாலந்தான பண் பையுடன் வீற்றிருந்தபரமசித்து, சத்தியுள்ளதிருவாத்தி மரத்தின்கீ ழேசுந்தரம்போலிருந்ததொருமாயாசித்தே. ௯௯௫

மாயானசித்தல்லோமகிமைபாரு மகத்தானபுலிப்பாணிமைந்தா கேளு, தாயானபாம்பாட்டிசித்தரப்பா தாரணியில்நெடுங்காலமிருந் தசித்து, காயானமுப்பழமும்பாலுங்கொண்டு கலியுகத்தில்நெடுங்கா லமிருந்தசித்து, சேயானபாம்பாட்டிசித்துதாமும் சிருஷ்டியில்பிறந்த தொருசித்துதானே. ௯௯௬

தானானபாம்பாட்டிபிறந்தமாதம் தாக்கானகார்த்திகைபார்த்திங்க ளப்பா, கோனானமிருகசீரிடந்தானுங்கொற்றவனேமூன்றுங்காலெ ன்னலாகும், தேனானவலம்பிறந்தகள்தானப்பா தேசந்திலசித்தர்மு னிகண்டதுண்டோ, மானானபதினெண்பேர்நூல்பார்த்து மார்க்கமு டன்றனறிந்துசொல்லிட்டேனே. ௯௯௭

சொல்லவென்றால்பாம்பாட்டிமர்மந்தானும் தோற்றமுடனேஜோ திவென்றவம்மிஷத்தான், புல்லவேமகானகுறியோகியப்பா புகழ்பெரி யகுருடனுர்வெற்றபிள்ளை, வெல்லவேமாலைசுற்றிதான்பிறந்த வே தாந்தப்பாம்பாட்டியென்னலாகும், கல்லதொருசித்துமுனிவுபதேச ங்கள் கலம்பெற்றபாம்பாட்டியாமே. ௯௯௮



பாம்பானவின்னமொருமார்க்கங்கேளு பண்புள்ளபுலிப்பாணி நேசபாசா, தீப்பில்லாகாலகண்டரிஷிபார்தாமும் தீர்க்கமுடன்பிறந்த தொருவின்னம்பாரு, தாம்புகழுர்சித்திரையாந்திங்களப்பா தாக் தானவுத்திராடமிரண்டாம்பாதம், மாம்புலமாம்வட்டாரந்தன்னிலப் பா மகத்தானசிவவேடன்பூண்டசித்தே. ௯௯௯

பூண்டதொருகாலகண்டரிஷிபார்தாமும் புகழானபெரண்டமு னிதான்சித்து, ஆண்டமைபார்சித்துமுனிமைந்தனுக்கு வன்பான பேரனதுபேரனப்பா, தாண்டமைபாங்காலகண்டசித்துவாகும் தா ணிபதிசிவயோகசித்துவாகும்,வேண்டியதோர்கருமானமறிந்தசித்து வேதாந்தகாலகண்டரென்னலாமே. ௲

சன்னவேயின்னமொருமார்க்கஞ்சொல்வேன் வெழிலானபுலிப் பாணிகண்ணேகேளும், பன்னவேவடிவேலர்தாம்பிறந்த பதாப்புயத் தைச்சொல்லுகிறேன்பண்பாய்கேளும், துன்னவேமூன்றயுகங்கடந் தவேலர் அப்புரவாய்ப்பிறந்ததொருநேர்மையப்பா, சொன்னபடிபா வணியாந்திங்களப்பா சொல்லுகிறேன்முதற்பூசங்கால்தானென்றே. ௲௧

ஒன்றானகால்தனிலேபிறந்தாராளாம் வுத்தமனார்வடிவேல்பிறந் தாரென்று, குன்றானபலேபோலேசாத்திரங்கள் கூறினார்குவலயத் தில்சொல்லொண்ணாது,தென்றிசையிலகஸ்தியருக்குபதேசங்கள் செ ய்ததொருவடிவேலர்சித்துதாமும், பன்றிபெருச்சாளியின்மேல்சாரி பேகும் பண்பானவாயகர்க்குதம்பியாமே. ௲௨

தம்பியென்றுசாத்திரங்கள்சொல்லலாகு சதகோடிவடிவேலர் சித்துதன்னை, வெம்பியதோர்மான்பருக்குரோகந்தீர்க்கும் வெட்ட வெளிவடிவேலரென்றேசொல்வார், கும்பியேமனங்கொதித்து வந்த பேர்க்கு கோடானகோடிபொருளீவாரப்பா, தம்பியேயெந்தனுக்கு குருவுமாகும் தாக்கானவடிவேலர்தன்மையாரே. ௲௩

பாரேதானின்னமொருபதமுஞ்சொல்வேன் பாங்கானபுலிப் பாணிமகனேபாரு, சீரானபூகிமுனிபிறந்தவண்ணம் சிறப்புடனே சொல்லுகிறேன் திறமையுடனே, சீரானவாவணியாந் திங்களப்பா செடிதானபூசமதுமூன்றுங்காலாம், கூரானநாளதனிற் பிறந்தசித்து குறிப்பானபூகியென்றமுனிவர்தானே. ௲௪

தானானபூமிமுனிமார்க்கமென்றால் தகைமையுள்ள தன்வந்திரிக்
கூற்றபோன், கோனனசிங்களவருலக் கறிந்த சொம்பனியான்காளி
வன்பெற்றபிள்ளை, சேனைதிரவிட்டத்திற்சொன்னார்போலே திர்க்க
முடன்வடமொழியிற்சொல்லலாச்சு,மானைமாண்பருக்குபயோகத்
தால் மாட்சியுடன்சொன்னதொருதிபாமே. ௯௪௫

நீதியாமின்னமொருமர்மஞ்சொல்வேன்விஷ்களங்கமான புலிப்
பாணியப்பா, நீதிளஜெமதகினிமுனிவர்தானும் சிப்புடனேபிறந்த
தொருநேர்மைசொல்வேன், கோகிலவற்புசிமாகமப்பா கூறிப்பான
புசர்பூசமுன்றுங்கால்தான், பாதிமதிசடையணிந்தம்பிரான்போலி
பாரினிலேபவுதரிந்தசித்துதாமே. ௯௪௬

சித்தானஜெமதகினிமுனிவர்தானும் சிறப்பானபரத்துவமாம்ரிஷி
யின்போல், முத்தானவனுலோமன்பெற்றபிள்ளை முதலிக்கிர்த்தி
யுடனிருக்கசித்து, சத்தானபூதியென்ற சாக்கிரந்தான் சாங்கமு
டன்பன்னீராயிரந்தானுகும், சுத்தமுள்ளரிஷிநேதவர்சொன்னதில்லை
சுத்தானரிதிகாசங்கூறினாரே. ௯௪௭

கூறினேன்னமொருகுறிப்பைக்கேளு கூரானபுலிப்பாணிமைந்
தாபாரு, மீறியநேதார்நிறைக்கெமுனிவர்பாபிக்காவபிறந்தசொரு
வன்மையைச்சொல்வேன், ஆறுபுடைசிங்காரம்புரட்டாசிப்பா அப்ப
னேதிருவாதிரையெண்டாம்பாகம், விறைபுசழ்சாத்திரத்தை மனதி
லுன்னி விருப்பமுடன்பாடிவைத்தார்முனிதாமே ௯௪௮

நாலானமார்க்கமதுயேதென்றக்கால் நாணுக்கமுடன்ஜெமத
கினிபெற்றபாலன், கோலமானகுறத்தியுடசற்புத்திரர்காண் கூறிப்
பானபிதிலோமனென்னலாகும், பாலானபார்க்கமதுயேதென்றக்
கால் பட்சமுடன்சொல்லுகிறேன்பண்பர்க்கேளு, காலானபுலிப்
பாணிமைந்தாபாரு கடற்றபுத்திரனேபுகல்வேன்பாரே. ௯௪௯

புகழுவேன்சண்முகர் பிறந்தநேர்மை புகழானவைகாசிமாதமா
கும், நிகழுவேன்பூரமென்றமூன்றுங்கால்தான் நீதியுடன்முன்பிறந்த
காளேபாரும்சகலமுமறிந்தசொருசித்தாமும்சாகாலம்வையகத்
திலிருக்கசித்து, அகலவேபுலஸ்தியருக்குற்றபோன் அன்பானவேட
ருடனாதிதானே. ௯௫௦



சாதியாங்கானினன்பெற்றபிள்ளை சாங்கமுடனெடுங்காலமிருந்
தசித்து, சோதிமணிசுந்தரம்போல்குகைதானுள்ளே சுட்டெறிக்கும்
நிலாப்போலேயிருக்குஞ்சித்து, நீதிமனுமுறைதவறாயிருந்தசித்து
நீடாழியுலகபதியாண்டசித்து, நீதிலாசங்கமென்றபுலவருக்கு தீர்க்க
முடனுபதேசஞ்செய்தசித்தே. ௯௫௧

செய்யவேயின்னமொருமார்க்கம்பாரு செம்பவளகனிவாயா து
ய்யபாலா, உய்யவேதிருமூலரென்றேசித்து வுலகமதில்தான்பிறந்த
சேதிவண்ணம், பையவேபுரட்டாசிதிங்களப்பா பாலகனோர்வந்துதித்
தமாதமாகும், வெய்யவேயவிட்டமென்றமூன்றுங்கால்தான் மேதினி
யில்வந்துதித்தசித்துமாச்சே. ௯௫௨

ஆச்சப்பாதிருமூலவர்க்கத்தோர்கள் அவனியிலேசொல்லுதற்கு
நாவுமில்லை, மூச்சடங்கிபோனதொருபாண்டியர்கள்தாமும் முனையா
னசங்கமதில்வாதுசெய்தோன், பாச்சலுடன்சேர்னுக்குப்பெற்றபா
லன் பாரினிலேயனுலோமனென்னலாகும், வீச்சலுடனிதிகாசபுராண
மெல்லாம் விருப்பமுடன்பாடிவைத்துசித்தகாணே. ௯௫௩

போகர்தட்சணபதி மான்பரின்குறியை
சீனபதியாருக்குறைத்தல்.

காணவேயின்னமொரு கருமானங்கேள் கருவானபுலிப்பாணி
மைந்தாபாரு, தோணவேயெழுகடலுஞ்சுற்றிவந்தேன் தொகுமல்த
ட்சணமான்பர்தமமை, பூணவெடுங்காலமிருந்துமலேலோ மபாங்க
முடனிசயங்கள்மிகவுங்கண்டேன், வேணதொருதேவாதிதேவரல
லோ விருப்பமுடனனேகவிதகோயிலுண்டே. ௯௫௪

உண்டானவையகத்துமாண்பர்தம்மில் வுத்தமனேசன்னதங்கள்
மெத்தவுண்டு,கண்டாலும்மாண்பர்களைப்பார்ந்தபோது கருவானதெ
ய்வங்களுச்சாடத்தால், செண்டானமுறைமைகொண்டு வுறவுபேசி
செம்மலுடனருகிருந்துசிலதுமாண்பர், இன்மையுடன்குறிசொல்லவ
ந்தோனுக்கு தீர்க்கமுடன்தானுரைப்பார்வந்தந்தானே. ௯௫௫

அதிதமாஞ்சமுசாரிசெய்யும்வித்தை வன்போடுவாயிரம்பேர்கு
றிகேட்டாலும், கதிதமுடன்தேவதைகள்வசியத்தாலே கதிரானசுக
சேதிசொல்வோன்போல, மதிபோனறதேவதாகிருபையாலும் மத்
தானவுண்மைமொழிகூறிறபோல், சதியுடனேசன்னதங்கள்மிகவு
மாகி சட்டமுடன்கூறலுற்றார்மாண்பர்க்காமே. ௯௫௬

மாண்பான குறிசொல்லும்மார்க்கங்களும் மகத்தானபத்தபே ரெண்டுபேர்கள், ஆண்பிள்ளைத்தனமேறுபெபாலரோடும்,வழகானமா தர்களின்கூட்டத்தோடும், வீண்பேச்சுவார்த்தைகளுநிகவாய்ப்பேசி விருப்பமுடனயாதொன்றுந்தெரியாதபோதும், காணபோடுதுரை க்கும் மாண்பர்தாமும் நலமானமாந்தருடன் பேசுவாரே. ௮௫௭

பேசியேமான்பரோடுவுறவுபேசி போரணகுறிகேட்கவந்தோர்த ம்மை, காசினியிற்வந்தொரும்மாண்பர்களங்கள் கருவாகக்குறிசொல் லுமாண்பு தன்னை, பாசிபடாகுறியுரைப்பாரென்றுசொல்லி பட்சமு டன்வெகுஞாயங்கேட்டுவந்தோம், மாசியென்னும்மதிதனிலே குறிக ளகேட்டோம மகததானகுறியதுவுஞ்சொல்லலாச்சே. ௮௫௮

சொல்லுமென்றால்குறியதுவுமென்னசொல்வோம் சோடசத்தி லொன்றேனும்பொயம்யயிலை, வெள்ளாவேகுறிகேட்டோர்மெய்யை ப்போலே யென்மையுடனகூடிவருமாண்பரோடு புல்லவேவுறவுகொ ண்டுநயங்கள்பேசி புகழானபெதியின்றன்வார்த்தைதன்னை, மெல்ல வேயவருரைக்கும்வார்த்தைதன்னை மேன்மையுடனுபாயத்தாலறிவா ர்தாமே. ௮௫௯

தானுகளநிர்மாண்பர்கூறும்வார்த்தை தண்மையுடனுபாயமதா யித்தானறிந்து, கோனுணகுறியுரைக்குஞ்சங்கன்றனும் கொப்பெண வேயடையாளரூபத்தோடும், மானுகமயதியின்றவார்த்தையெல் லாம் மார்க்கமுடனறுனைத்துஆனைக்காட்டி, பானுபதிமேடைம றைந்துகொளவும் பாங்குடனே குறிசொல்வார்பின்னிற்பாரே. ௮௬௦

நின்றமேதாதுரைத்துஆங்காரமல் நேர்மையுடனேநேர்பக்கம்ம றைவாரினறு, சென்றதொருமாண்பருக்குக்குறியுஞ்சொலல செம்ம னுடன்ஐங்கமதுமவேடம்பூணம், நனயமாயங்குஷ்னமுடிதானும்பூ ண்டு நலமானவுபக்கைதன்னைகையிலேந்தி, பன்னவேபலபேர்கள்கூட் டத்தோடும் பாரினிலேபலகுறிகள்சொலவாரபாரே. ௮௬௧

சொல்வாரேபவரவர்கள்வார்த்தைகொண்டும் அப்புரவாய்முன் சொன்னதானதக்கொண்டும், புல்லவேகுறிமேடைதனிலிருந்து புக முனபரவசமவர்தாற்போல, மெல்லவேவாய்திறந்துபொன்றுங்கா லை மேன்மையுடனமென்றுதின்றுடமிநீர்தன்னை, கல்லதொருமதவு ண்டகாறறம்போல கயமுடனேஅமனமதுசெய்வாரன்பாரே. ௮௬௨

செய்யவேமதுபானங்கொண்டுமல்லோ செபலானதன்னிலேவுத னக்குமாறி, வையவேமயன்மீதில்வாடைகொண்டு பதறுதேதேகமது நிலைகொள்ளாது, உய்யவேபார்வந்துபெதுகேட்டாலும் உத்தமமே—



சித்தடியேன்சொல்வேன்பாரு, அப்புரம்பாண்டியன்போல்வுதார ய்பேசி அப்புரவாய்க்குறிசொல்வோன்கேட்பான்பாரே. ௮௬௩

பாரேதான்முன்சொன்னவடையாளம்போல் பாங்குடனேமா ண்பர்களையுநாட்டிப்பார்த்து, நேரேதானீசானியமூலையப்பா நெருக்க முடன்நடுபக்திதனிலிருக்க, சீரேதான்கட்டமுகமாததன்னை சிறப் பான சித்தடியைக்கூப்பிடென்று, ஆரேதானம்மம்மாகுறைகளொ ன்று ஆர்க்கமுடிபோதாதென்பான்பாரே. ௮௬௪

என்னவேயுக்தனுக்குக் குறைகள்மெத்த ஏர்க்கமுடிபோகாது ரோகம்மீறி, பன்னவேயுன்புதவுன்னைவிட்டு பாரினிலேவனசாரி சென்றாரம்மா, துன்னவேமைந்தனுக்குக்கண்ணூறுபோச்சு அப்புர வாய்ப்பாலாடையானுக்கு,மின்னவேகங்கணமுங்கட்டியல்லோ மிக் கானபொங்கல்சளுமிட்டீர்காணே. ௮௬௫

கானவேரிநபத்தேதார்வாரமம்மாவட்டமுகிசானிக்கைகொண்டு சென்று, தோணவேமுதற்பூசையன்னுமென்று அப்புரவாய்சொல்லி னதும்உண்டேகூறும், காணவேகுறுமுகத்திலாக்கியென்னை நன் மையோதுன்மையோவென்றுசொல்லி, பாணம்போல்மனதுருகிமன துவந்து பாலகனேகேட்கவந்தீ நன்மைதானே. ௮௬௬

உண்மையாமென்குறிகள்பொய்யாதம்மா வுக்கமேயகாதாக்கள் வணங்குவார்கள், வண்மைபாங்ககண்டாலேதானென்று வளப்ப முடன்கிழியெனக்கு கூடுப்பார்பாரு, இன்மைபாம்யாதகாணிக்கை யோடும் நீர்க்கமுடன்புஷ்பதாம்பூலத்தோடும், தண்மையுடன்வெண வுபசாரத்தோடும் தட்டாமலெனக்குத்தருவார்தாமே. ௮௬௭

